THE KUPPUSWAMY SASTRI
RESEARCH INSTITUTE,
64, R. H. ROAD, MADRAS-4
32181
Reprint.

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாபாரதம்.

வனபர்வம்.

(இரண்டாம் பாகம்.)

திரிசிரபுரம்,

ஸெண்ட் ஜோஸப் காலெஜ் ஸம்ஸ்கிருத தலைமைப் பண்டிதர்,

மஹாவித்வான், ஸாரஸ்வதஸார்வபௌம, கவிசிகாமணி,

ஸ்ரீ. உ. வே. T. V. ஸ்ரீநிவாஸாசார்யர்

அவர்களால் மொழிபெயர்க்கப்பெற்று,

பரோடா திவான், ஸ்ரீமான்

Sir V. T. கிருஷ்ணமாசாரியர் K. C. I. E. அவர்களுடைய

பேருதவியைக்கொண்டு,

கும்பகோணம் காலெஜ் ரிடயர்ட் தமிழ்ப்பண்டிதர்,

பாஷாபாரத துரந்தர, மறைமலைபாத்யாய

மணலூர், வீரவல்லி, இராமானுஜாசார்யரால்

பதிபிக்கப்பெற்றது.

1941.

விலை ரூபா 4-0-0. தபாற்கூலி வேறு.

(All Rights Reserved.)

Printed and Published
by
M. R. RAJAGOPALAN,
at THE SRI MAHABHARATA PRESS,
KUMBAKONAM.

ஸ்ரீ :

முகவுரை.

உயர்வற உயர்நலம் உடையவன் எவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் எவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி எவனவன்
தயரதன் சுடரடி தொழுதெழுவன் மனனே.

உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேகரண் நாங்களே.

அருமறை முதல்வனை ஆதி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கடலைக் கண்ணனைத்
திருமகள் கேள்வனைத் தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி ஏத்துவாம்.

விண்ணுலகத்தை கல்யாணகுண பரிபூர்ணனும் ஸ்ரீவைகுண்டநாதனும் ஸ்ரீமந்நாராயணனுமான ஸர்வேச்வரனுடைய பரமகருணையினால் ஸ்ரீமஹாபாரதம் பூர்த்தியாயிற்றென்கிற பரமஸந்தோஷத்தை ஸ்ரீமஹாபாரதாசார்யர்களாகிய ஸகலரும் ஸந்தோஷத்துடன் கொண்டாடுகிறார்கள்.

இந்த மஹாபாரதத்தைப் பற்றிய அபிப்ராயத்தைத் தெரிவிக்கவேண்டிய சில விஷயங்களை முன்னிட்டுக் கீழ்வருவனவற்றை முகவுரைகளில் தெரிவித்திருக்கிறேன். மஹாபாரத முழுதிற்கும் அபிதானங்களைக்கூறும் மற்றும் ஆராய்ச்சிக் குறிப்புகளும் சேர்க்கப் பெறவில்லை. அந்தப்புஸ்தகத்தில் மற்றும் தெரிவிக்கத்தக்க விஷயங்களைத் தெரிவித்துக்கொள்வேன். ஸ்ரீமஹாபாரதத்தை வெளியிடத் தொடங்கியதுமுதல் இதுவரையில் நடந்த நிகழ்ச்சிகளையும் இந்த வஸ்துக்களைப்பற்றிய விவரங்களையும் அவசியம் தெரிவிக்கவேண்டிய மற்றும் சில விஷயங்களையும்மாத்திரம் இங்கே ஒருவாறு சுருக்கமாகத் தெரிவிப்பேன்.

முகவுரை

நான் கும்பகோணம் நேடிவ் ஹைஸ்கூலில் தமிழ்ப்பண்டிதனாக இருந்தபோது பள்ளிக்கூடத்திற்குப் போய்வருகிற காலம் தவிர மற்றவேளைகளில் அவகாசம் நேரும்போதெல்லாம் மஹாவித்வான், ப்ரம்மஶ்ரீ, மஹாமஹோபாத்யாய, தாக்ஷிணாத்யகலாநிதி, ராவிடவித்யா பூஷணம், (டாக்டர்) வே. சாமிநாதையரவர்கள் ஸமீபத்திலிருந்து புஸ்தகங்களைப் படித்துக்கொண்டும் செவிக்கினிய செஞ்சொல் அமிர்தவர்ஷமாகிய அவர்களுடைய அரியஸம்பாஷணங்களைக் கேட்டுக்கொண்டும் இனிது பொழுதுபோக்கிக் கொண்டிருந்தேன். அந்தக்காலங்களில், ஐயரவர்கள், ஸம்ஸ்கிருதத்தில்சிறந்த பண்டிதர்கள்பலரை அடிக்கடி ஸந்தித்து ஸல்லாபஞ் செய்வதுண்டு. அவர்கள் மஹாபாரதத்திலுள்ள சில சிறந்த அரியவிஷயங்களைச் சொல்லக்கேட்டபிறகு, ஐயரவர்கள், 'வில்லி புத்தூராழ்வார் ஒப்புயர்வற்ற சிறந்த மஹாகவி. அவர் வடமொழி மஹாபாரதத்திலுள்ள விஷயங்களையெல்லாம் விடாமல் பாடியிருந்தால் மிகநன்றாயிருந்திருக்கும்' என்று பலமுறை சொல்வதுண்டு. மஹாபாரதத்தில் மிகப் பிரஸித்திபெற்ற மஹாவித்வான், மத்வசாஸ்திர ஸம்ப்ரதாயர், பாரதம் சாமாசார்யரவர்கள் ஒருஸமயம் இவ்வூரில் மஹாபாரதப் பிரஸங்கம் செய்துகொண்டிருந்தார்கள். அந்தப்பிரஸங்கத்தைக் கேட்ட சில் மஹாபாரதத்தைத் தமிழில் மொழிபெயர்க்கவேண்டுமென்று விரும்பித் தர் கருத்தை ஸ்ரீமத் ஐயரவர்களிடம் தெரிவித்தார்கள். மஹாபாரதம் முழுதும் மொழிபெயர்க்கக்கூடாவிட்டாலும் சாந்திபர்வ அநுசாஸனபர்வங்களையாவது மொழிபெயர்க்கவேண்டுமென்றும் அதனை ஐயரவர்களே மேற்கொண்டு செய்யவேண்டுமென்றும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்கள். ஐயரவர்களுக்குத் தமிழிலுள்ள சங்கநூல்களிலும் மற்றுஞ் சிறந்த காவியங்களிலும் பல்வகைப்பிரபந்தங்களிலும் உள்ளபயிற்சி சிலரறிவர். சிலரறிந்து கொண்டுசெய்ய இடந்தரவில்லை. ஆதலால், ஐயரவர்களைக் கொண்டே செய்விக்கவேண்டுமென்று சிலகனவான்கள் ஆவல் கொண்டிருந்தார்கள். அந்தக்காலத்தில் குப்பம்கோணம் காலேஜின் கணிதபோதகாசிரியராயிருந்த ஸ்ரீமான் R. சக்கரவர்த்தி ஐயங்காரவர்கள் பாரதம் சாமாசார்யரவர்களைக்கொண்டு சாந்திபர்வ அநுசாஸனபர்வங்களையாவது மொழிபெயர்க்கச்செய்து ஐயரவர்களைக்கொண்டு திருத்தி வெளியிடவேண்டுமென்று விரும்பி, ஒரு வருக்கு மாதச்சம்பளங்கொடுத்து, சாமாசார்யரவர்கள் சொன்ன

கிறதை எழுதும்படி ஏற்பாடுசெய்தார்கள். அப்படி எழுதியவர் கள் இப்போது திருவையாற்று ஸம்ஸ்கிருதகாலேஜில் தலைமைத் தமிழ்ப்பண்டிதராயிருக்கும் ஸ்ரீ. உ. M. S. ஸந்தானமையங்காரவர் கள். அப்படி எழுதியதில், சாந்திபர்வம் மாத்திரம் முடிந்தது. பிறகு, என்னகாரணத்தினாலோ நின்றுபோயிற்று. சில வருஷக் களின்பின், 1903-ம் வருஷக்கடைசியில், ஸ்ரீமத் ஐயரவர்கள், சென்னை, பிரஸிடென்ஸி காலேஜிற்கு மாற்றலாகி அங்கே சென் றார்கள்.

பிறகு, ஓருஸமயம் நான் சில நண்பர்களோடு வார்த்தைசொல் லிக்கொண்டிருக்கையில், சிலர், 'பெண்பாலாரும் சிறுபிள்ளைகளும் படிக்கக்கூடிய நல்ல வசன நூல்கள் தமிழில் இல்லை' என்றும், 'மஹாபாரதத்திலிருந்து சில சில உபாக்யானங்களை மொழிபெயர்த்து வெளியிட்டால் நலமாயிருக்கும்' என்றும் சொன்னார்கள். மற்றும் சிலர், 'மஹாபாரதத்திற்கே நேரான மொழிபெயர்ப்பு இல் லாமையால் அதனையே செய்யலாம்' என்று சொன்னதோடு அதன நானே மேற்கொண்டு செய்யவேண்டுமென்றும் வற்புறுத்திச் சொன்னார்கள். ஒருவித லௌகர்யமும் இல்லாத நான் இந்தப் பெருங் காரியத்தை எப்படிச் செய்வதென்று பயந்து அந்த வேலையை மேற்கொள்ளத் துணியவில்லை. அத்வைதஸித்தி, ப்ரம்மாநந்தீயம் முதலிய அரிய கிரந்தங்களைத் தக்க பண்டிதர்களைக் கொண்டு சோதித்து அச்சிட்டு வெளியிட்டவர்களும் அதற்காகவே தம்முடைய செல்வம் முழுவதையும் செலவு செய்தவர்களுமாகிய ப்ரம்மஸ்ரீ, கோனேரிராஜபுரம் ஸாம்பசிவ ஐயரவர்கள் அந்த ஸம யம் அங்கே வந்தார்கள். அவர்கள் நாங்கள் வார்த்தைசொல்லிக் கொண்டிருந்த விஷயத்தைக் கேட்டு மஹாபாரதம் தமிழில் மொழிபெயர்க்கப்படாதது பெருங் குறையே என்றும், அதனை நான் உடனே தொடங்கி நடத்தவேண்டுமென்றும் நிர்ப்பந்தித் துச் சொன்னார்கள்.

நான், இளமைமுதல், பெரியோர்கள் செய்த காரியங்களைக் காட்டிலும் அவர்களுடைய சரித்திரங்களை மிகுதியாகப் படிப் பேன். அவர்கள் மிக முயன்று பெரிய காரியங்களை நிறைவேற்றி னார்களென்றும், அதனால், உலகத்துக்குப் பயனுண்டாயிற்றென் றும் படிக்கும்போதெல்லாம், நானும் ஏதாவது உலகத்துக்கு உப யோகமான காரியத்தைச் செய்யவேண்டுமென்னும் விருப்பம் என் மனத்தில் அடிக்கடி உண்டாகும். நண்பர்கள் இந்த மஹா

பாரத மொழிபெயர்ப்பை மேற்கொண்டு செய்யுமாறு தூண்டி வுடன், இதனைச் செய்யலாமென்னும் விருப்பம் என் மனத்தில் உண்டாயிற்று; இதைச்செய்வதிலுள்ள பிரமாக்களை நினைத்து துணிவு பிறக்கவுமில்லை. இப்படி மனம் குழம்பிக்கொண்டிருந்தது. "காதலித்து ஒன்று உற்றார்முன் சோன்று உரு முடல்" என்றபடி, எப்படியிருந்தாலும் மேற்கொண்டு செய்வதென்னும் துணிபே வென்றது.

பிறகு, சென்னையில், ஸ்ரீமத் ஐயாவர்களுக்கு எழுதினேன். அவர்கள் இதனை உடனே தொடங்கிச் செய்யவேண்டுமென்றும், இதை வெளியிடுவதைக் காட்டிலும் தமிழுக்குச் செய்யக்கூடிய பேருதவியும் புண்ணியமுமான காரியம் இல்லையென்றும் எழுதிய தோடு மணியார்டர் மூலமாக ரூ. 30 அனுப்பியும் அனுக்ரகஞ் செய்தார்கள். இவர்கள் எனக்குப் பல நன்மைகளைச் செய்து வருவதோடு பின்னும் பல தடைவைகளில் பொருளுதவி செய்திருக் கிறார்கள். இவர்கள் எனக்குப் பல நல்ல நூல்களைப் பாடம் சொல் லியும் பல நல்லுபதேசங்களைச் செய்தும் என்னை நல்வழிப்படுத்தி னார்கள். என்னிடத்தில் ஏதாவது நன்மையிருக்குமானால், அது இவர்களால் கிடைத்ததே.

உடனே, இதைச் செய்வதென்ற நிச்சயித்து, நான் எண்ணி யதை, ஸதாசார ஸம்பன்னர்களும் ஸத்தர்ம பரிபாலகர்களும் அத்வைத வித்யாபாரங்கதர்களுமான ப்ரம்மஶ்ரீ Prof. K. ஸுந் தரராமையர், M. A அவர்களிடம் தெரிவித்தேன். அவர்கள், 'நீ இதனை நிறைவேற்றுவாய்' என்று அனுக்ரகஞ் செய்தார்கள். அவர்கள், சில ஸஞ்சிகைகள் வெளிவருதற்குள் ரூ. 200 கொடுத்து உதவினார்கள். பிறகு, ஸஞ்சிகைகள் வெளிவருங்காறும் ஸஞ் சிகை ஒன்றுக்கு ரூ. 10 வீதம் கொடுத்து ஆதரித்து வருகிறார்கள். நான், 'முன்னமே அதிகம் செய்துவிட்டமையால் இனி இந்த ப்ரயத்னம் வைத்துக்கொள்ளவேண்டாம்' என்று பலமுறைதெரிந்தும், அவர்கள், 'மஹாபாரதமாயிருப்பதோடு நாங்கள் செய்வதாகவும் இருக்கையில், நான் செய்யவேண்டியவிதம் வேறு; நான் சிறிதே கொடுக்கிறேன். நாங்கள் மறுக்கக்கூடாது' என்று நிர்ப்பந்தித் துக்கொடுத்து உதவிவருகிறார்கள். என்னிடத்திலுள்ள அன்பி னாலும் ஸ்ரீமஹாபாரதத்திலுள்ள பேரபிமானத்தினாலும் அவர் கள் செய்துவருகிற உதவிகள் பல. அவர்களைப்பற்றிச் சாந்தி பர்வம் இரண்டாம்பாக முகவுரையிலும் உத்யோகபர்வமுகவுரை

யிலும் தெரிவித்திருக்கிறேன். இந்த இரண்டுமஹாபுருஷர்களும் ஜபயஜ்ஞாதி உபாஸனங்களால் கடவுளை வழிபட்டு ஸித்திபெற்ற வர்களாதலாலும், இவர்கள், ஜபகாலங்களில் ஸ்ரீ மஹாபாரதம் பூர்த்தியாகவேண்டுமென்று பிரார்த்தனை செய்துவருகிறார்களாத லாலும், இவர்களுடைய அனுக்ரகமே இந்த அரியபெரிய கற்காரி யத்தை முற்றுப்பெறச்செய்தது.

பிறகு, யாரைக்கொண்டு எப்படி மொழிபெயர்ப்பதென்று ஆலோசித்தேன். ஸ்ரீ மஹாபாரதம் மிகப்பெரியதும் மிகக்கடின மான பல அரிய விஷயங்களடங்கியதுமாயிருத்தலாலும், ஒரு முறை படித்துமுடிப்பதற்கே பலவருஷங்களாகுமாதலாலும், மஹாபாரதம் முழுதையும் படித்து நன்கு தெரிந்துகொள்வோர் கள் மிகச்சிலரே உண்டு. மஹாபாரதம் மிகக்கடினமாகச் செய்யப் பட்டதற்குக் காரணத்தை ஆதிபர்வத்தில் கக-வது முதலியபக்கங் களில் காண்க. மஹாபாரதத்தை, மத்வசாஸ்த்ரஸம்பூர்ணர், மஹா வித்வான், பாரதம் சாமாசார்யரவர்களும், மத்வசாஸ்த்ர ஸம்பூர்ணர், மஹாவித்வான், பாரதஸிம்ஹம், (மஹாமஹோபாத்தியாய) கா. பெ. ராமசந்த்ராசார்யரவர்களுமே சொல்லவல்லவர்களென்றும், அவர் களில், ஸ்ரீமான், சாமாசார்யரவர்கள் அந்தச்சமயம் உள்ளூரில் இல் லாமையாலும் அடிக்கடி உபந்யாஸங்களுக்காக வெளியூர்களுக் குப் போய்வந்துகொண்டிருந்தமையாலும் அவர்கள் முன் ஒரு முறை மொழிபெயர்க்கத் தொடங்கி முற்றுப்பெறாமல் நின்று போனதால் திரும்ப மொழிபெயர்த்தலை மேற்கொள்ளுதற்கு ஸம்மதிப்பார்களோ என்று ஸந்தேகமாயிருந்தமையாலும், ஸ்ரீமத் ராமசந்த்ராசார்யரவர்களையே பிரார்த்திப்பதென்று நிச்சயித்து அவர்களிடம் தெரிவித்தேன். அவர்கள் என்னுடைய வேண்டு கோளைப் பரமப்ரீதியுடன் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால், தாம் வழக்கமாகப் புராணம் சொல்லுவதை நிறுத்தமுடியா தென்றும் ஓழிந்தநேரங்களில் சொல்லத் தடையில்லையென்றும் சொன்னார்கள். அப்படியே, முதலில் தசோபநிஷத்பாஷ்யத்தைப் பரீக்ஷார்த்தமாக மொழிபெயர்க்கத் தொடங்கினேன். காலை நேரங்களில் சிறிது அவகாசமே கிடைத்தமையால் ஒரு காலைக்கு ஏழு எட்டு ஸ்லோகங்களே நடந்தன. அவர்கள், அப்படிச் சிறிதுசிறிதாக நடந்தால் மஹாபாரதத்தைப் பலவருஷங்களி லும் பூர்த்திசெய்யமுடியாதென்றும், தமக்கு அதைக் காட் டிலும் அதிக அவகாசமில்லையாதலால் நம்முடைய தமையனாரும்

திவான்பஹதூர், ஸ்ரீமான், R. ரகுநாதராயர் C. S. I. அவர்களுடைய கோடர்லவிலாஸ புஸ்தகசாலைத்தலைவருமான மத்வசாஸ்திரஸம்பூர்ணர், ஸ்ரீமான், அ. வேங்கடேசாசார்யரவர்களுக்கு மஹாபாரதத்தில் மிக்க பரிசயமிருப்பதோடு அவகாசமுமிருப்பதால் அவர்களைக்கொண்டு விரைவாக நடத்தலாமென்றும் சொல்லி அவர்களுக்குச் சிபார்சும் செய்தார்கள். வேங்கடேசாசாரியரவர்கள் இந்தவேலையைப் பரம திருப்தியோடு ஏற்றுக்கொண்டு உடனே செய்யத் தொடங்கிவிட்டார்கள். அவர்களுக்குப் போதுமான அவகாசமிருந்தமையால் அவர்கள்சொல்லும்போதெல்லாம் கூட இருந்து எழுதும்படி ஒருகுமாஸ்தாவை நியமித்து எழுதச்செய்தேன். அவர்கள் விராடபர்வத்தையும் உத்யோகபர்வத்தையும் மொழிபெயர்த்தார்கள். இது எழுதத் தொடங்கிய சிலநாட்களுக்குள், அப்பொழுது கும்பகோணம் காலேஜில் ஸம்ஸ்கிருதபண்டிதராயிருந்த மஹாவித்வான், ஸ்ரீ. உ. வே. சதகாவதானம், தி. ஈ. ஸ்ரீநிவாஸாசார்யரவர்களை ஸந்தித்து மஹாபாரதமொழிபெயர்ப்புத் தொடங்கப்பெற்று நடந்துவருகிறதைத் தெரிவித்தபோது, அவர்கள் இந்தவேலையைச் செய்துகொடுப்பதில் தமக்கு விருப்பமிருப்பதாகவும் சிலபர்வங்களை மொழிபெயர்த்துக் கொடுப்பதாகவும் ப்ரஸ்தாபத்தோடு சொன்னார்கள். ஆதிபர்வம், ஸபாபர்வம், வனபர்வம், அனுசாஸனபர்வம் இந்த நான்குபர்வங்களையும் தாத்பர்யத்தையும் மொழிபெயர்த்துக்கொடுப்பதாக ஓர் உடன்பாட்டின்மேல் ஒப்புக்கொண்டு உடனே எழுதத்தொடங்கினார்கள். அவர்களுடன் கூடவே இருந்து எழுதும்படிக்கும் ஒருகுமாஸ்தாவை அமர்த்திக் கொடுத்தேன். அப்படியே வேலை நடந்துவந்தது. அப்பொழுது அச்சுப்புஸ்தகமாக இருந்த எல்லாப்பதிப்புக்களையும் வைத்துக்கொண்டு எது எதில் எது எது சிறந்திருக்கிறதோ அது அதிலிருந்து அதை அதை எடுத்துக்கொள்வதென்றும் அவஸ்யமான இடங்களில் எட்டுப்புஸ்தகங்களிலுள்ள பாட பேதங்களையும் சேர்த்துக் கொள்வதென்றும் நிச்சயித்து அந்தப்படி மொழிபெயர்த்தோம்.

1874–75–வது உண்டான பஞ்சத்தில் செங்கற்பட்டு ஜில்லா காரிச்சங்காலியிலுள்ள ஒரு செல்வவாணிடம் பல ஸம்ஸ்கிருத பண்டிதர்கள் வந்து அண்டினார்களென்றும் அந்தப் பிரபு அந்தப் பண்டிதர்களைக்கொண்டு மஹாபாரதத்தை மொழிபெயர்க்கச் செய்து ஏட்டுப்பிரதியாக எழுதிவைத்திருக்கிறதென்றும் கேட்-

டேன். அது உபயோகமாயிருந்தால் அதையே திருத்தி அச்சிடலாமென்று ஆதிபர்வத்தை வருவித்துப் பார்த்தேன். அது தக்க பண்டிதர்களால் ப்ரமப்பட்டுச் செய்யப்பட்டதாயினும் நாங்கள் செய்ய உத்தேசித்திருந்த முறைப்படி இல்லாமையால் அதைக் கொடுத்தவர்களிடம் திருப்பி அனுப்பிவிட்டேன்.

இந்த மஹாபாரதப்பதிப்புவெளியிடுவதாக ஸமாசாரபத்திரிகைகளின்மூலம் பிரசாரம்செய்தவுடன், சிலர் எந்தப்பதிப்பை அனுஸரித்து மொழிபெயர்க்கபடுகிறதென்று எழுதிக் கேட்டார்கள். நாங்கள் செய்துவருகிற முறையைத் தெரிவித்தபொழுது, அவர்கள், 'இப்பொழுது வெளிவந்துள்ள வடமொழி மஹாபாரதங்களெல்லாம் ஒன்றுக்கொன்று பல வேறுபாடுகள் உடையனவாயிருக்கின்றன. எல்லாவற்றையும் கலந்து நீங்கள் மொழிபெயர்ப்பீர்களானால் அது ஒரு மூலபுஸ்தகத்துக்கும் ஒத்ததாயிராதே. நீங்கள் பல புஸ்தகங்களையும் பார்த்து நிச்சயிக்கிற பாடப்படி வடமொழி மூலத்தையும் பதிப்பித்து மொழிபெயர்ப்பையும் வெளியிட்டால் உபயோகமாயிருக்கும்; அப்படியில்லாவிட்டால் மஹாபாரத கதையை ஒருவாறு தெரிவித்ததாகுமேயன்றி ஒன்றன் சோரான மொழிபெயர்ப்பு ஆகாது' என்று எழுதினார்கள். அதைப்பார்த்தபோது மனம் சிறிது கலங்கியது. பிறகு, தக்கவர்களுடன் ஆலோசித்ததில், கும்பகோணம் மத்வவிலாஸ புஸ்தகசாலைத் தலைவர்களாகிய ஸ்ரீமான் T. R. க்ருஷ்ணசார்யரவர்களுடைய பதிப்புத் தென்தேசத்துப் பாடத்தையும் தழுவியிருத்தலால் அதனையே மூல க்ரந்தமாக வைத்துக்கொண்டு மொழிபெயர்ப்பதென்பது நிச்சயமாயிற்று. அதன்மேல், T. R. க்ருஷ்ணசார்யரவர்களைக் கண்டு கேட்டேன். அவர்கள் சோரன் புடன் அனுமதியளித்தார்கள். அதன ஆதிபர்வமுகவுரையில் தெரிவித்திருக்கிறேன்.

இந்தமாதிரி நிச்சயிப்பதற்கு முன்னமே, சிவங்கைடாசாசார்யரவர்கள் விராடபர்வமும் உத்யோகபர்வமும், ஸ்ரீநிவாஸாசார்யரவர்கள் ஆதிபர்வத்தில் பெரும்பாகமும் மொழிபெயர்த்துவிட்டார்கள். T. R. க்ருஷ்ணசார்யரவர்கள் பதிப்புப்படி மொழிபெயர்க்க வேண்டுமென்று நிச்சயித்த பிறகு, முன்செய்த மொழிபெயர்ப்பு உபயோகப்படாமல் திருப்பச் செய்ய நேர்ந்தது.

இந்த ஸமயத்தில் இந்த மஹாபாரத மொழிபெயர்ப்பை வெளியிட உத்தேசித்திருப்பதை ஸ்ரீமான், திவான்பஹதூர்,

R. ரகுநாதாசாயர் C. S. I. அவர்களிடம் தெரிவித்தபொழுது, அவர்கள், 'இந்தக்காரியம் ஸாதாரணமானதன்று; பெரிய ஸாஹஸமானது. இது ஒருராஜகாரத்தில் மேற்கொண்டு நடத்தப்படவேண்டியகாரியம்' என்றுசொல்ல, நான், 'சிலநண்பர்கள் வேண்டிய உதவிகளைச் செய்வதாகவும் அவஸ்யம் நடத்தவேண்டுமென்றும் வற்புறுத்துகிறார்கள்' என்றும், 'இதுவரை ரூபா ஆயிரத்துக்குமேல் செலவாயிற்று' என்றும் தெரிவித்தபோது, அவர்கள், 'எல்லாரும் சொல்வார்கள். காரியம் வரும்பொழுது ஒருவரும் நெருங்கமாட்டார்கள். இதுவரையில் செலவாயிருக்கிற நஷ்டத்தோடு போகட்டும். மேலும், அதிகப்ரமத்தை அடையவேண்டாம்' என்று சுருத்தார்கள். இதே ஸமயத்தில் கும்பகோணம் காலேஜில் எனக்குமுன் தமிழ்ப்பண்டிதராயிருந்தவர்களும் பல வருஷங்களில் யூனிவர்ஸிடித் தமிழ்ப்பாட புஸ்தகங்களுக்கெல்லாம் உரை எழுதிவெளியிட்டு அதனால் பெரும்புகழையும் மிக்கபொருளையும் அடைந்தவர்களும் புஸ்தகப்பிரசாரசேவையில் பிறப்பிலேயே நிறமைவாய்ந்தவர்களும் என்னிடத்து மிக்க அன்புடையவர்களுமான ஸ்ரீ. உ. வை. மு. சடகோபராமாநுஜாசாரியரவர்கள், 'இது நம்மைப்போன்றவர்கள் செய்யக்கூடிய காரியமன்று; பலபண்டிதர்கள்சேர்ந்து பலவருஷங்களில் செய்யக்கூடிய பெருங்காரியம். நாம் நமதுகல்வியறிவையும் பரிச்ரமத்தையும்கொண்டு செய்யக்கூடியகாரியத்தைமாத்ரம் செய்யலாமேயன்றி இப்படிப்பட்ட பெருங்காரியத்தைத் தொடர்ந்தால் முடியாது' என்று என்னிடம் முன்றுமுறைவந்து வற்புறுத்திச் சொல்லிக் கூடாதென்றார்கள். எனது யோகக்ஷேமத்தில் பெரிதும் பொறுப்புள்ளவர்களும் என்னுடைய அப்பாவானான ராவ்பஹதூர் ஸ்ரீ. உ. முடும்பை, ஸ்ரீநிவாஸ ஐயங்கார்ஸ்வாமிகள், இது ஸாதாரணமாகச்செய்யக்கூடிய காரியமன்றென்றும் மிக்கபொருட்செலவுள்ளதென்றும் ப்ரமபடமானதென்றும் பலதும் சொல்லிக் கேட்டு மிக்ககவலையுற்று இந்தக்காரியத்தைச் செய்யவேண்டாமென்று என்னிடம் குறிப்பாகச் சொன்னார்கள். நான் இந்த வேலையை விடாமல் மேன்மேலும் செய்துகொண்டேயிருந்ததால், என்னுடைய தமக்கைபோல் வாத்ஸல்யத்தை நான் நட்டமாட்டேனென்று நினைத்து அவர்களிடம்சொல்லி எனக்குச் சொல்லச்செய்தார்கள். அப்படியே, அவர்களும் நிரம்ப வற்புறுத்திச்சொன்னார்கள். இவர்களெல்லாம் சொல்லச்சொல்ல

'இதனை எப்படியாவது செய்துவிடவேண்டும்' என்னும் எண்ணமே என்மனத்தில் வேரூன்றியது. 'காரியம் உத்தமோத்தமமான தென்று எல்லாரும் சொல்லுகிறார்கள். யாராவது ஒருவர் ப்ரமமெடுத்துக்கொண்டுதானே நல்லகாரியம் நிறைவேறவேண்டும். நல்லகாரியத்தை மேற்கொண்டுசெய்து அதனால் ப்ரமமேற்பட்டாலும் அறிவுடையோர் அவமதிக்கமாட்டார்கள். யார் என்ன தடைசெய்தாலும், என்ன ப்ரமமுண்டானாலும் இதனை விடாமற் செய்கிறது' என்றும், 'நான்செய்வது நல்லகாரியமாயிருந்து கடவுளுக்கும் திருவுள்ளமானால் எப்படியும் இனிது நிறைவேறும்' என்றும் என்னுள் நிச்சயித்துக்கொண்டு ஊக்கத்துடன் காரியத்தை நடத்திவந்தேன்.

முதலில் மொழிபெயர்த்திருந்த சிலபர்வங்கள் திரும்ப மொழிபெயர்க்க நேர்ந்தமையால், நிச்சயித்திருந்தபடி, அப்பொழுதே ஸஞ்சிகை அச்சிடத் தொடங்கக்கூடவில்லை. சில ஸஞ்சிகைகளுக்குக் கையெழுத்துப்பிரதி தயாரானவுடன் அச்சிடத் தொடங்கினேன். பலமாதங்கள் ப்ரமப்பட்டு ஸித்தம்செய்த கையெழுத்துப்பிரதி சிலவாரங்களிலேயே அச்சிடப்பட்டுவிட்டது. பிறகு, அப்போதப்போது மொழிபெயர்த்து உடனுடன் சோதித்து அச்சிடநேர்ந்தது. ஆதிபர்வத்தில் சில ஸஞ்சிகைகள் வெளிவந்தன. இதற்குள் மஹாபாரதமொழிபெயர்ப்புவேலை நடப்பது தெரிந்த சில பெரியோர்கள், 'இது முற்றுப்பெறுகாரியம்; சாந்திபர்வமும் அநுசாஸனபர்வமும் வரும்போழுது இதனுடைய ப்ரமம் தெரியும்; அங்கேவந்தவுடன் நின்றுபோகும்' என்று சொல்லுதாகக் கேட்டேன். Prof. K. ஸுந்தராராம ஐயரவர்கள் வேலை எப்படி நடக்கிறதென்பதைப்பற்றி விசாரிக்கும்போதெல்லாம், 'மஹாபாரதத்தில் சாந்திபர்வ அநுசாஸனபர்வங்கள் மொழிபெயர்க்கப்பட்டபிறகுதான் மஹாபாரதம் மொழிபெயர்க்கப்பட்டதாக எண்ணலாம்' என்று கவலையோடு சொல்வார்கள். என்னுடைய எஜமானுடைய திருவனந்தபுரம் போனபோழுது அங்கே ஒருதக்கனவான், 'ஐயங்கார் ஆசிரியரால் பெருங்காரியத்தைத் தொடங்கிவிட்டார். சாந்திபர்வம் வந்தவுடன் நிறுத்திவிடுவார்' என்று சொன்னார்களாம்.

இவற்றுக்குமுன்னமேலாய, முதல் ஸஞ்சிகை அச்சிடுவதற்கு வேண்டிய ஏற்பாடெல்லாம்செய்து வேலைதொடங்கியவுடன், மஹா

பாரதப்பதிப்பு விஷயத்தை ஸமாசாரபத்திரிகைகளால் தெரிந்து, பாலவநத்தம் ஜமீன்தார்களும் மதுரைத் தமிழ்ச்சங்கஸ்தாபகர்களும் தமிழ்ப்பாஷையையும் தமிழ்ப்பண்டிதர்களையும் மிக ஆதரித்தவர்களுமான ஸ்ரீமான், பொ. பாண்டித்துரைத்தேவரவர்கள், முன்னம் செந்தமிழ்ப்பத்திராசிரியரும் இப்பொழுது சென்னைத் தமிழ்லெக்ஸிகன் ஆபீஸில் பிரதம தமிழ்ப்பண்டிதராயிருப்பவர்களுமான ஸ்ரீமான், (ராவ்ஸாஹிப்) மு. ராகவையங்காரவர்களைக்கொண்டு ஒரு லிகிதம் எனக்கு எழுதுவித்தார்கள். அதில், 'இங்கேயுள்ள சில கனவான்கள், பிரதாபசந்திர ராயினுடைய இங்கிலீஷ் மொழிபெயர்ப்பிலிருந்து மஹாபாரதத்தைத் தமிழில் மொழிபெயர்த்து இவ்விடம் தமிழ்ச்சங்கத்தில் வெளியிட உத்தேசித்திருக்கிறார்கள். ஒரேவேலையை இருவர் செய்வதைக்காட்டிலும் தாங்கள் வேறு ஏதாவது நல்லவேலையை எடுத்துக்கொண்டுசெய்தல் நலமாகும். இந்தவிஷயத்தை ஸாமியவர்கள் தங்களுக்குத் தெரிவிக்கச் சொன்னார்கள்' என்றும், அவர்கள் இன்னதினத்தில் இன்னவண்டியில் சென்னைக்குப்போகிறார்கள். அவர்களைக் கும்பகோணத்தில் நேரில் அந்தவண்டியில் ஏற்றிக்க என்றும் எழுதியிருந்தது. நான் உடனே, அவர்களுக்கு, 'இங்கிலீஷில் அராபிக்கதை (Arabian Nights) முதலிய ஸாதாரணமான கட்டுக்கதைகளைத்தவிர வேறொரு கம்பெனியிலும் பலபல பதிப்புக்கள் உள்ளன. மஹாபாரதத்துக்குப் பங்காளிபாஷையில் தனித்தனியே மூன்றுமொழிபெயர்ப்புக்கள் உள்ளன. ஆகலால், தமிழில் இரண்டுமொழிபெயர்ப்பு இருப்பது அதிகம் ஆகாது. இரண்டையும் சங்காபதிப்பாகவேகருதி ஆதரிக்கவேண்டுமென்று நீங்கள் அவர்கள் எழுதுவதில் தெரிவிக்கவேண்டும்' என்று எழுதினேன்.

இரண்டுமூன்று ஸஞ்சிகைகள் வெளிவந்தபிறகு, சென்னை எ ஸிக்ஸுயுவ் நெளன்ஸில் ரிடையருட் மாஜிஸ்டிரேட்டும் ஸ்மால்காஸ் கோர்ட்டு ஜட்ஜுமாயிருந்த வேங்கடராமனையவர்களால் முதலிய பலகனவான்களால் ஏற்படுத்தித் தேசத்திற்குப் பிரயோஜனமாய்ப்பல புஸ்தகங்களைப் பிரசுரம்பண்ணுவதற்காக ஏற்பட்டிருக்கிற ஸ்ரீமான், V. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள் திருவிடைமருதூரில் வந்திருந்தபோது, அவர்களுக்கு, அவர்களுடைய ஸம்பந்தியும் எனக்குப் பரம ஆப்தர்களுமான ஸ்ரீமான், பச்சையப்பமுதலியார்திருவாடஸ்வாமி ஐயரவர்கள் மூலமாகத் தெரிவித்தேன். அவர்கள், 'இந்த மஹாபாரத மொழிபெயர்ப்பு முன்னரே பலர்தொடங்கி நடைபெறுமல்போயிற்று. இதில் எனக்கு நம்பி

கையில்லை. கo, கஉ-ஸஞ்சிகைகளாவது வெளிவந்தால்தான் கம்பலாம்' என்று சொன்னார்கள்.

வலங்கைமான் ஜோஸ்யம் கோவிந்த செட்டியார் எழுதிக் கொடுத்த ஆரூடத்தைப்பற்றி உத்தியோகபர்வம் முகவுரையிலும் இந்தவனபர்வம் முதற்பாக முகவுரையிலும் தெரிவித்திருக்கிறேன். தாம் சொல்வனவற்றையெல்லாம் நம்பும்படி எனக்கும் என்னுடைய நண்பர் பலருக்கும் அவர் பலமுறை ஆரூடம் சொன்னதுண்டு. அவர் சிலஸமயங்களில் என்வீட்டிற்கு வந்து வார்த்தை சொல்லிப் போவர். நான் மஹாபாரதத்தை வெளியிடத் தொடங்கிச் சிலவருஷங்களுக்குப் பின் அவர் ஒருமுறை என்னிடம் வந்திருந்தார். அவரைப்பார்த்து, 'ஓர் ஆருடம் சொல்லவேண்டும்' என்று கேட்டேன். அவர் ஒரு காகிதத்தில் சிலவிஷயத்தை எழுதி என்னிடம் கொடுத்தார். அதைப்படித்துப் பார்த்தவுடன், என் கவலை முன்னிலும் பலமடங்கு அதிகமாயிற்று. அதில் எழுதியிருந்ததை வெளியிற்சொன்னால், முன்னமே பாரதவேலையை மேற்கொள்ள வேண்டாமென்று சொல்லிய என்னுடைய வீட்டிலுள்ளவர்களும் மற்ற ஆப்தர்களும் வேலையை மேலே நடத்தவே கூடாது என்று நிர்ப்பந்தித்து நிறுத்திவிடுவார்கள். ஆகலால், அதனை அப்பொழுது வெளியிடாமல் ஒருகாகிதஉறையில் வைத்து அரக்கு முத்திரையிட்டு, அதன்மேல், 'வலங்கைமான் கோவிந்த செட்டியாரவர்கள் ஆரூடம்; இதனை ஸ்ரீமஹாபாரதம் பூர்த்தியான பிறகுதான் திறந்து பார்க்கவேண்டும்' என்று எழுதி ஜாக்ரதையாக வைத்திருந்தேன். வனபர்வம் இரண்டாம் பாகம் கடைசிப்பக்கம் பதிப்பு ஆகிவிட்டமையால், சென்ற டிஸம்பர்மீ 24உ வியாழக்கிழமை மாலை, பிரம்மஸ்ரீ Prof. K. ஸுந்தரராம ஐயரவர்கள் கிருகத்தில் அவர்களும் கும்பகோணம் அட்வொகேட் ஸ்ரீமான் M. K. வைத்யநாத ஐயரவர்களும், அட்வொகேட்டும் கும்பகோணம் ஸ்ரீசங்கராசாரியர்ஸ்வாமிகள் மடத்து ஏஜண்டுமான ஸ்ரீமான், K. குப்புஸ்வாமி ஐயரவர்களுமாகிய தக்கோர்கள் முன்னிலையில், அரக்கு முத்திரையிட்ட அந்தக் காகித உறையைப் பிரித்துப்பார்த்ததில், 'பாரதம் தமிழ்செய்யக் கேட்கிறது. வருஷம் மூணு செல்லு. இதில் கவலை அதிகம். முடிவாகிற முன்னிட்டு விஷ்ணுமித்ரசனம் கிடைத்து * * * * * *. அதிலிருந்து நிலது பாக்கி நின்றுவிடும். அதிக பிரபுக்கள் ஒத்தாசை ரொசம் கிடைக்கும் * * * * * *' என்று எழுதியிருந்தது. இதில்

எழுதாதுவிட்டபட்டனவை என் வருங்காலநிகழ்ச்சியைப்பற்றியதும் என்குடும்பஸம்பந்தமானதுமாகையால், அவற்றை இங்கே வெளியிடவில்லை. இப்படி எழுதியிருந்ததனால், முன்பு இதைப் பார்த்தபோது என்மனத்தில் ஸ்ரீமஹாபாரதம் பூர்த்தியாகாதென்ற எண்ணமே உண்டாயிற்றுணலும், 'இதுவரையில் நடக்கும்; இங்கே நிற்கும்' என்று தெரியாமையால், 'உறுதி பயப்ப கண்டபோகாவேனும், இறுவரை காறும் முயல்ப' என்றபடி நடந்தவரையில் நடத்தலாமென்றுதருதிநடத்திக்கொண்டேவந்தேன். ஆதியில், திவான் பஹதூர், ரகுநாதராயர் C. S. I. அவர்களும் ஸ்ரீமான், வை. மு. சடகோபராமானுஜாசார்யரவர்களும் பலகாரணங்காட்டித் தடுத்தார்கள். பிறகு, என் அம்மானும் தமக்கையாரும் தடுத்தார்கள். ஸ்ரீமான் V. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்களும் மற்றும்பலரும், 'இது முற்றுப்பெறாது' என்று சொல்லியிருந்தார்கள். அவற்றிற்று செட்டியாருடைய ஆதரவும் சேர்ந்து என்மனத்திற்கு இன்னகவலையை உண்டாக்கியிருக்குமென்பதை அறிஞர்கள் ஊகிக்கவேண்டும். சேகரிந்தசெட்டியார் எழுதிக்கொடுத்த ஆதரவுக்கடிதமென்றுகருதிநடத்திக்கொண்டேவந்தேன். இடையிடையில் பத்திரிகைகளுக்கும் சொல்லாமல் 22-வருஷகாலம் மனத்தில் வைத்துக்கொண்டிருந்தது ப்ரயோஜனமாகவே இருந்தது. சரீரத்திற்கு ஏதாவது சிறிது அஸௌகர்யம் உண்டாகும்போதெல்லாம் செட்டியார் ஆதரவுபடி மஹாபாரதவேலை நின்றுபோகுமோவென்று கவலைப்பட்டுக்கொண்டே பலவருஷங்கள் சென்றன. மறுபடிவேலையைச் செய்யத் தொடங்கியவர் அந்தவேலையை, 'முடிப்பேன்' என்று மனவுறுதியுடனிருந்தால் அந்தமனவுறுதியே (Will Power) அந்தக்காரியத்தை முடிக்குமென்று சொல்லுகிறார்கள். இங்கே காரியம் நிறைவேறுகின்றன நினைத்துக்கொண்டே செயற்கரிய இந்தப் பெருங்காரியம் பூர்த்தியானது. நூல் ஆரம்பம்தொட்டு அப்படி நினைத்துக்கொண்டிருக்கையில், 'உலைவிலாப் உபயகாரம் காண்பர் உலகின்றிக், காடாறு வாழ்வாரே பலர்' 'அல்லல்பட்டால், ஆனவரும் உண்டு சில' 'உலையா முயற்சி கலைகளை ஊழின், வலிசிந்தும் வண்மையும் உண்டே' என்னும் பொதியாக்குக்களை அடிக்கடி நினைத்துக்கொண்டு, 'சேகரிந்தசெட்டியார் சொல்லியபடி நின்றுவிடாமல் இந்தகாரியம் கடவுளருளால் இனிது நிறைவேறுமாம்; எந்தக்காரணத்தாலும் நம்முடையமுயற்சியைத் தளரவிடலாகாது' என்று எண்ணிக்கொண்டே வேலைசெய்துவந்தேன்.

கடவுளருளால் முற்றுப்பெற்றுவிட்டது. இதனால், ஒருவன் எவ்வளவு சக்தியற்றவனாலும் ஸஹாயமில்லாதவனாலும் எடுத்துக்கொண்டகாரியத்தில் உன்றிநின்று கடவுளாநம்பி உண்மையாக முயல்வானானால் பெருங்காரியத்தையும் முடிக்கவல்லவனவான் என்பது உறுதிப்படுகிறது.

•

ஆனாலும், இவற்றையெல்லாம் கேட்டபோது, எனக்கும் அதற்குள் இக்கக்காரியத்திலுள்ள பலவகையான ப்ரமங்கள் அனுபவத்துக்கு வந்துவிட்டமையால், 'இக்தக்காரியத்தை ஏன் எடுத்துக்கொண்டோம்? இது எப்படி பூர்த்தியாகும்?' என்ற கவலையும் உண்டாயிற்று. சிலஸஞ்சிகைகள் பூர்த்தியாகி வெளிவந்ததைப் பார்த்த பெரியோர்கள் மொழிபெயர்ப்பு மிகநன்றாக அமைந்திருக்கிறதென்று பெரிதும் பாராட்டியது என்காதில்விழுந்தது. அதுவாடிய பயிருக்கு மழைபெய்ததுபோல் ஆயிற்று. காளடைவில் ஆதிபர்வமும் ஸபாபர்வமும் பூர்த்தியாகி வெளிவந்தன. அவை வெளிவருவதற்குஆன காலஅளவையும் அதுவரைஉளைடான பொருட்செலவையும் பார்த்தபோது பாக்கியுள்ள உத்தேசம் நாற்பது ஸஞ்சிகைவரையில் வெளியிடுதற்கு எவ்வளவு காலமும் பொருட்செலவும் எற்படுமோ என்று என்மனத்தில் ஆலோசனை உண்டாகி, 'சாந்திபர்வ •அனுசாஸனபர்வங்களை வெளியிட்டுவிடுவோம். மற்றப் பர்வங்களைக் கூடுமானால் பிறகு வெளியிடலாம்' என்று நிச்சயித்தேன்.

மஹாபாரத மொழிபெயர்ப்பு விஷயமாக முதலில் ஆலோசித்தபொழுது, ஸ்ரீமான், சக்கரவர்த்தி ஐயங்காரவர்களுடைய முயற்சியினால் பாரதம் சாமாசாரியரவர்கள் மொழிபெயர்த்த சாந்திபர்வத்தையே நான் உபரிபோகித்துக் கொள்ளலாமென்று நினைத்தேன். உடனே, சக்கரவர்த்தி ஐயங்காரவர்களைக் கேட்டதில் அந்தமொழிபெயர்ப்புப்பிரதி தம்மிடமில்லையென்றும், ஆசாரியரவர்களிடமே கேட்கவேண்டுமென்றும் தெரிவித்தார்கள். ஆசாரியரவர்கள் அப்பொழுது சென்னையிலிருந்தமையால் அவர்களிடம் சில தக்கவர்களைக்கொண்டு கேட்கச்சொன்னபோது, ஆசாரியரவர்கள், 'இப்பொழுதுதான் ஆரம்பிக்கப்போகிறார்கள். சாந்திபர்வம் வெளியிடும்படியான ஸந்தர்ப்பம் வரும்போது பார்த்துக்கொள்ளலாம்' என்று சொன்னார்கள். பிறகு, சிலநாட்களுக்கெல்லாம் சில அன்பர்களுடைய தூண்டுதலின்மேல் அதனைத் தாமேவெளியிடுவதாக விளம்பரம் செய்துவிட்டார்கள். அப்

படியே சிலநாளில் இரண்டுபுத்தகமாக வெளியிடவும்செய்தார்கள். ஆதலால், அந்த மொழிபெயர்ப்பை நான் உபயோகித்துக்கொள்ளக் கூடாமற்போயிற்று. அதன்மேல், மஹாவித்வான், ப்ரம்மஶ்ரீ, மஹாமஹோபாத்யாய, வேதாந்தகேஸரி, பைங்காநாடு, கணபதி சாஸ்திரிகளவர்களிடம் சாந்திபர்வத்தை மொழி பெயர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அவர்கள் எனக்குப் பரம ஆப்தர்களானதாலும் பரமகுணசாலிகளானதாலும் பெருவிருப்புடன் இந்தவேலையை உடனே செய்யத்தொடங்கினர்கள். அவர்கள் சொல்லியதைக் கேட்டு எழுதும்படி ஒருகுமாஸ்தாவை அமர்த்திக்கொடுத்தேன். அவர்கள் அங்ஙனமே மொழி பெயர்த்து வந்தார்கள். அவர்கள் வரைவில் செய்துகொடுத்து விடுவதாக உறுதி கூறினமையாலும் அப்போழுது தொடங்திவந்த மாதிரியில் விரைவாக முடித்துவிடுமென்று தோன்றினமையாலும் ஸபாபர்வம் ஆனவுடன் சாந்திபர்வத்தையே அச்சிட்டு வெளியிடத் தொடங்கினேன். ஏழாவது ஸந்திகையில் ஸபாபர்வத்துடன் சாந்திபர்வத்தில் சிலபக்கங்களும் வெளிவந்தன. அவ்வளவே அதுவரையில் அவர்கள் செய்துகொடுத்திருந்தது. அந்தஸமயத்தில் அவர்கள் உபந்யாஸங்களுக்காக அடிக்கடி வெளியூர்களுக்குப் போகநேர்ந்தது. மொழிபெயர்ப்புவேலை விரைவாக நடைபெறவில்லை. குறித்தகாலத்தில் ஸந்திகைகள் வெளிவரக்கூடாமற் போயிற்று. ஆகலால், வெளியில் ஸந்தாரம்செய்துகொண்டிருந்த காலத்திலும் இந்தமொழிபெயர்ப்புவேலையைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டபடி அவர்களும் இயன்றவரை சிறிதுசிறிதாகச் செய்தனுப்பினர்கள். அவர்கள் தாம்செய்த மொழிபெயர்ப்புவேலைக்காக எண்ணிடத்தில் பிரதிப்ரயோஜனத்தை எதிர்பார்க்கவேயில்லை. ஆனாலும், மற்றவர்களுக்குப் போலவே அவர்களுக்கும் கௌரவம் செய்விக்கவேண்டுமென்றே நான் அதனைச் செய்விக்கும்போது, அவர்கள், 'தங்களுக்கு எத்தனையோ செலவிருக்குமாதலால் இந்தப்ரயாஸம் வைத்துக்கொள்ளவேண்டாமே. இந்தமொழிபெயர்ப்பை ஸ்வீகரித்துக்கொண்டதனால் நான் மஹாபாரதத்தைத் தொடர்ச்சியாக ஊன்றிப் பார்ப்பதற்கு ஸந்தர்ப்பம்வாய்த்தது மனத்துக்குப் பரமஸந்தோஷமாக இருக்கிறது. அதுவே எனக்குப் பரமப்ரயோஜனமாகும். மேற்கொண்டு தாங்கள் இந்தப்ரயாஸைகொடுப்பது கருமப்புதின்னக்கூலிபோலிருந்திறது' என்று பரமதிருப்தியுடன்

சொல்லி மறுப்பார்கள். நான், 'அங்கீகரிக்கவே வேண்டும்' என்று பலமுறை நிர்பந்தித்துச்சொல்லிக் கொண்டுத்துவருவேன். அவர்கள் மோக்ஷதர்மத்தைத் மொழிபெயர்த்துக்கொண்டிருந்த போது, அவர்களுக்குச் சரீரத்தில் அஸௌக்யம் உண்டாகத் தொடங்கியது. பிறகு, துறவறம்பூண்டு சிலகாளிருந்து ஸித்தி அடைந்தார்கள். மஹாமேதாவிகளும் சிறந்தபண்டிதர்களும் பரம குணசாலிகளுமான அவர்களுடையபிரிவு எனக்கு மிக்கவருத்தத்தை விளைவித்தது. அதுவரையில் அவர்கள்செய்துகொடுத்திருந்த சாந்திபர்வம் 240—அத்யாயங்களும் அச்சிடப்பட்டன.

சாந்திபர்வம் மோக்ஷதர்மத்தில் மேலுள்ளபாகத்தை யாரைக்கொண்டு மொழிபெயர்த்து வெளியிடுவதென்று ஆலோசித்துக்கொண்டிருந்தேன். அந்தஸமயம் அனுசாஸனபர்வத்தை வெளியிடலாமென்று நினைத்தபோது அதன்மொழிபெயர்ப்புப் பூர்த்தியாகவில்லை. அதுவரையில் உண்டான அனுபவத்தைக்கொண்டு பர்வம்பூர்த்தியாகிக் கைக்குவராமுன்னம் அதனை . அச்சிடத் தொடங்கினால் மிக்ககஷ்டநஷ்டங்கள் உண்டாகுமென்று தெரிந்தமையால் அதனைத்தொடங்கவில்லை. யுத்தபஞ்சகத்தைத் தொடங்கலாமென்றாலோ ப்ரதிஷ்டபர்வம் கைக்குவராமல் தூதாணைபர்வம் மட்டுமே வந்திருந்தது. ஆனதால், அதனையும் தொடங்கக்கூடவில்லை. விராடபர்வ உத்யோகபர்வங்களை வெளியிடலாமென்றுபார்த்தேன். அவை நீலகண்டவியாக்யானத்தோடுகூடிய பம்பாய்ப் பதிப்புப்படி மொழிபெயர்க்கப்பட்டிருந்தன; கிருஷ்ணசார்யர்பதிப்புப்படி புதிதாக எழுதவேண்டியிருந்தன. ஆதலால், சிலகாலம் ஸஞ்சிகைகள் வெளிவராமல் காலதாமதமாயிற்று. பிறகு, வேங்கடேசாசார்யாரவர்கள் செய்த விராடபர்வத்தைக் கிருஷ்ணசார்யரவர்கள் பதிப்புப்படி திரும்ப மொழிபெயர்க்கச்செய்து அதனை, திருவிதாங்கூர் வெஸ்ட் ஜோஸப் காலேஜ் ப்ரதம ஸம்ஸ்கிருதபண்டிதரும் யுத்தபஞ்சகத்தை மொழிபெயர்த்துக் கொடுத்தவர்களுமான மஹாவித்வான், ஸாரஸ்வதஸார்வபௌம, கவிசிகாமணி, (மஹாமஹோபாத்யாய) ஸ்ரீ. உ. வே. T. V. ஸ்ரீநிவாஸாசார்யரவர்களைக்கொண்டு திருத்தச்செய்து வெளியிட்டேன். அதற்குள், அநுசாஸனபர்வம் ஸித்தமாயிற்று. அதனை வெளியிட்டேன். இதற்கிடையில், கும்பகோணம் அத்வைதஸபாபண்டிதராயிருந்தவர்களும் இப்பொழுது சென்னை மயிலாப்பூர் ஸம்ஸ்கிருதகாலேஜ் ப்ரின்ஸிபாலாயிருப்பவர்களுமான வேதாந்த விபூஷணம்,

மஹோபதேசகர், சாஸ்திரரத்நாகரம், பிரம்மஶ்ரீ, மஹாமஹோபாத்யாயர், க்ருங்குளம் – கிருஷ்ணசாஸ்திரிகளவர்கள், நான் கேட்டுக்கொண்டபடி சாந்திபர்வம் மோக்ஷதர்மத்தில் பாக்கியுள்ளபாகத்தை மிகவிரைவாக மொழிபெயர்த்துக் கொடுத்தார்கள். முன்மொழிபெயர்த்த உத்யோகபர்வம் உபயோகிக்கப்படாமையால் திரும்ப மொழிபெயர்க்கநேர்ந்தது. அதனை, திருவியலூர், பிரம்மஶ்ரீ, மஹாமஹோபாத்யாய நீலமேகசாஸ்திரிகளவர்கள் தாம் செய்துகொடுப்பதாக ஒப்புக்கொண்டார்கள். அவர்களுக்கும் ஒருகுமாஸ்தாவை அமர்த்திக்கொடுத்தேன். சாஸ்திரிகளவர்கள் ஒருவருஷத்தில் கர்ண–அத்யாயம் எழுதிக்கொடுத்துச் சிலகாலத்துக்குப்பின் பரமபதமடைந்தார்கள். பிறகு, ஶ்ரீமான், கருங்குளம் கிருஷ்ணசாஸ்திரிகளவர்களிடமே கேட்டுக்கொண்டேன். அவர்கள் தமக்கிருந்த பலவேலைகளாலும் ப்ரமம் பாராமல் அதனையும் மொழிபெயர்த்து உதவினார்கள். இவர்களைப்பற்றிச் சாந்திபர்வம் இரண்டாம்பாக முகவுரையிலும் உத்யோகபர்வ முகவுரையிலும் விரிவித்திருக்கிறேன். இந்தமஹாபாரதத்தை மொழிபெயர்த்துக்கொடுத்த ஸம்ஸ்கிருதப்பண்டிதர்களுள் எனக்குச் சிறிதும் கவலையில்லாமலும் ப்ரமம்பாராமலும் விரைவில் செய்து உதவியவர்கள் இவர்களே. இப்படியே ஆச்வமேதிகபர்வமும் முதலில் மொழிபெயர்த்தவைகளே இரண்டாமுறை மொழிபெயர்க்கும்படி நேர்ந்தது. இப்படியாக சாந்திபர்வம் மோக்ஷதர்மம் அத்தியாயம் 1116 வரை ஜூலையாதத்தில் முடிவுபெற்றது. அதன்பின்பு ஸம்ஸ்கிருதத்தின் சிலபக்கங்கள் எழுதிவந்திருந்தன.

அந்தஸமயம் ஐரோப்பிய மஹாயுத்தம் தொடங்கியிருந்தது. காகிதவிலையும் மற்றச்சாமான்களின் விலையும் மிக அதிகமாயின. இரண்டரை அணாவுக்குவாங்கினகாகிதம் ஒரு ரூபாய்க்குக் கிடைக்கவில்லை. ஆகையால், சிலவருஷங்கள் வேலையை நடத்தாமல் இயலவில்லை. வேலை நடவாமல் சிலமாதங்கள் ஆகிக்கொண்டிருந்ததில் முன்னமேஏற்பட்டு வளர்ந்துவந்த ப்ரமம் பலமடங்கு அதிகமாயிற்று. அந்தநிலைமையிலும் மஹாபாரதத்தைத் தூர்த்திசெய்ய வேண்டுமென்னும் விருப்பம்பாதிராத்ரம் என் மனத்தைவிட்டகலவில்லை. சிலவருஷங்களில் ஐரோப்பிய யுத்தம் முடிவடைந்தது. பின்பும் காகிதவிலை இறங்கவில்லை; அணாவும் ரூபாய அச்

வேலையை நடத்தத்தொடங்கினேன். நடத்துவது ப்ரமமாகவே இருந்தது. சிலசமயங்களில் மிக்க மனத்தளர்ச்சியுடன் மொழி பெயர்ப்பின் கையெழுத்துப் பிரதியையோ புஸ்தகத்தையோ பார்த்துக்கொண்டிருக்கையில், ஏதாவது அநுமையான விஷயத்தைக் கண்டால், 'இப்படிப்பட்ட அரியவிஷயத்தைத் தமிழுலகத்துக்கு எளிதில் கிடைக்கும்படி செய்யக்கூடுமானால், இந்தமாதிரி ப்ரமமும் இன்னும் பலமடங்கு ப்ரமமும் அடைந்தாலும் நன்றே' என்று மிகமகிழ்ந்து உடன் இருப்பவர்களிடம் சொல்லிக் கவலையை நீக்கிக் கொள்வேன். இப்படியாக, உள்ளது ஸந்தோஷை வரையில் ப்ரமப் பட்டு நடத்தி வந்தேன். அப்பொழுது, கும்பகோணம்காலேஜி லிருந்து பென்ஷன் பெற்று விலகினேன்.

மேலேநடத்தமுடியாமல் பலபலவிதமாக ஆலோசித்தபின், சென்னபட்டணம் ராஜதானியாயிருந்தாலும் அங்கே பலபல்கலாசாலைகளிருந்தாலும் அங்கேபோனால் இந்தப்பதிப்புக்கு மிக்க உதவி கிடைக்குமென்றும், அச்சுவேலை அங்கே நடத்தலால் வேலையை விரைவாக நடத்தலாமென்றும், நிச்சயித்து, 1921 வது அக்டோபர்மாதத்தில் குடும்பத்துடன் சென்னைக்குப்போய் வஸித்துவந்தேன். அங்கேபோய்ச் சிலமாதங்களில் உள்வது ஸந்தர்ப்பம் விளங்கிவந்தது. அதில் ஒருபாகத்தில் தோணாபாவம் பூர்த்தியாயிற்று. அங்கேபோய்வஸித்ததில் நான் எதிர்பார்த்தபடி அதிகாலம் உதவிகள் கிடைக்கவில்லை. சென்னைமாகாணத்தார் பல நடத்துகிறவர்களையுடைய பெரிதுகளில் சிலரை ஒருவாறு நடத்திக்கொண்டுவந்தேன். அப்படி உபகாரம் செய்தவர்களுள் சென்னை அட்வொகேட்ஜெனரல் சில்காலம் மைஸூர்காரரான ஐட்ஜாக இருந்தவர்களும், ஸ்ரீவான்களைப் பரிபரிப்பு ஆசரிப்பவர்களும் பரம ஸஹிருதயர்களான ஸ்ரீமான், V. V. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்களும், சென்னைப்பட்டி, ஸ்ரீமான், Sir P. ராமராயர் K. C., C. M. G., M. L. C. அவர்களும் முக்கியமானவர்கள்.

அங்கிருந்த இரண்டுவருஷத்தில், உ-ம், உ-ஹ, ஈ.ம, ஈ.க ஆகிய ஸந்தர்ப்பங்கள் பிரஸுரமாயின. அந்த ஸமயத்தில் பலதடவை ஸந்தர்ப்பங்கள் கையில் பல இரண்டாமுறை பதிப்பிப்பதும் அவசியமாயிற்று. கடைசியாக, 1923வது ஸம்வத்ஸரத்தில் இனி நிறுத்து நடத்த முடியாதென்ற நிச்சயம் ஏற்பட்டது. அதன்மேல் நடத்துவதில்லை யென்று மனத்தில் நிச்சயித்துவிட்டேன். மேலும் நடவாமல்

அதிகச்செலவுள்ள இடத்தில் இருப்பதைக் காட்டிலும் சொந்த ஊராகிய மணலூருக்கு வந்துவிடலாமென்று நிச்சயித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தேன்.

அந்தஸமயத்தில், ராவ்பஹதூர், ஸ்ரீமான், (Sir) V. T. கிருஷ்ணமாசாரியரவர்கள் K. C. I. E., விஜயநகரம் ஸமஸ்தானத்தில் திவானுயிருந்து விலகி, சிலகாள் லீவளுதித்துக்கொண்டு, சென்னை மயிலாப்பூரில் வந்திருந்தார்கள். அவர்களுக்குச் சேர்ப்பிக்கவேண்டிய கர்ணபூர்வத்தை நேரில் கொடுத்துவரலாமென்று போனேன். அவர்கள் மஹாபாரதமொழிபெயர்ப்பைப்பற்றி அன்புடன் விசாரித்து அதன் சிறப்பைப்பற்றிப் பலபடப்பாராட்டி, ஸந்சிகைகள் காலதாமதமாக வருவதில் படிப்பவர்களுக்கு ஆவல் குறையுமதிகமென்றும் தொடர்ச்சியாகப்படிக்குப்படி யினால் வெளியிட வேண்டுமென்றும் நிர்பந்தித்தார்கள். நான் பிடித்த கடத்தை முடியாமல் நிறுத்திவிட்டதை விவரமாகத் தெரிவித்தேன். அப்பொழுது, ஈகுவது ஸந்சிகை வெளிவந்திருந்தது. அவர்கள் கேட்டு, 'தாங்கள் ப்ரமப்பட்டு இதுவரையில் கடத்திவந்திருக்கிறீர்கள். பெரும்பாகம் கடந்துவிட்டது. இனி கடக்கவேண்டியபாகம் சொற்பமே. தாங்கள் நிறுத்திவிட்டால், என்றபோன்ற ஆகும். வேறு ஒருவரும் பிடித்தபாட்டுக்கு இப்படிச் செய்யமாட்டார்கள். என்னுடைய வேண்டுகோளுக்கிணங்கி ஆவலைச்சிப்பேன்' என்று சொல்லி எனக்கு ஊக்கமளிக்கும்படியான வார்த்தைகளைச் சொன்னார்கள். பிறகு, அவர்களுடைய புகழ்ச்சியான வார்த்தைகளைச் சொல்லிச் சிலநாளைக் கழித்துத் தொடர்ந்து செய்யவேண்டுமென்று அந்தவிஷயத்தைச் சம்பந்தமுகமாகவே விவரமாகத் தெரிவித்திருந்தேன்.

அவர்கள் அதுமுதல் தொடர்ச்சியாக மிக்க உற்சாகமளித்துவருகிறார்கள். அவர்களுடைய பிரோத்ஸாஹத்தினால் வெளிவருவதற்கு முக்யகாரணம். அவர்கள் சிரமத்தையும் தட்சணைப்பணத்தையும் பாராமல், நிர்பந்தமான சில சமயங்களில் பிரதிகளை எனக்காக மேலெழுப்பப் போட்டுக் கடன்வாங்கி தொடர்ந்து உற்சாகமளித்திருக்கிறார்கள். இவர்களுக்கு இந்த மஹாபாரதத்தொழிற்பயிற்சி ஸமயத்திலுள்ள அபிமானத்தை அளவிட்டுச்சொல்ல முடியாது. ஸ்ரீ மஹாபாரதத்தைத் தெலுங்கிலும் வெளியிடுமாறு கேட்டுக் கொண்டு தூண்டிவருகிறார்கள். முதலிலும் இரண்டாவதும் கடைசி

லும் ஸ்ரீகிருஷ்ணசரித்திரத்தையே சொல்வதான ஸ்ரீமஹாபாரத கைங்கர்யத்தை நடத்திவருகிற பெரும்புண்யமே, ஸ்ரீகண்ணபிரா னுடைய ராஜதானியாகிய துவாரகையைத் தன்னகத்துக் கொண்ட பரோடா ராஜ்யத்தின் கலைமஸ்தானத்தை இவர் களுக்கு அளித்திருக்கிறதென்பதை முன்னமே தெரிவித்திருக் கிறேன். அஃது உண்மையென்பதை மீண்டும் தெரிவிக்கிறேன். இவர்களைப்பற்றி ஆரம்பமுதல்பர்வ முகவுரையிலும் உத்யோக பர்வ முகவுரையிலும் விராடபர்வம் முன்றும்பதிப்பு முகவுரை யிலும் விவரமாகத் தெரிவித்திருக்கிறேன்.

மற்றும் சில கனவான்களும் இந்தப் பாரதத்தைப்பற்றிக் கவனிக்கத் தொடங்கினர்கள். அவர்களுள், ஸ்ரீமான் Sir M. CT. முத்தைய செட்டியாரவர்களும், ஸ்ரீமான் திவான்பஹதூர், A. M. M. முருகப்ப செட்டியாரவர்களும் முதன்மையானவர்கள். அந்த இரண்டு கனவான்களும் பல தடவைகளில் ரூ. 5000 வரை யில் தாராளித்துக்கொடுத்து உதவினர்கள். முன் வெளிவந்த பர்வங் கள் பலவற்றில் சில சில ஸந்திகைகள் இல்லாமையால் தேடப்பவர் களுக்கு அந்தப் பர்வங்கள் தொடுக்கக்கூடவில்லை. ஆதலால், பழைய ஸந்திகைகள் பல• இரண்டாமுறை பதிப்பிப்பது அவ சியமாயிருந்தது. புதிய ஸந்திகையோடு பழைய ஸந்திகை பல வும் அச்சிட நேர்ந்தமையால், அந்தத் தொகையும் போதாமல் பொருள்முட்டுப்பாடு அதிகமாகவே இருந்தது. இப்படியாகக் கிடைத்த உதவிகளெல்லாம் அப்போதப்போது செல்வாயின.

முன் தெரிவித்தபடி, 1923வது ஜூன்மீ, நான் என்சொந்த ஊராகிய மன்னார்குடிக்கு வந்து 1928வது மார்ச்சுமீ வரையில் அங்கு வஸிக்கிறேன். அந்தக் காலத்தில் உ, ஊ, ஊ, ஊ, ஊ ஆகிய ரு ஸந்திகைகள் வெளிவந்தன. அவற்றோடு பழைய ஸந்திகை பலவற்றின் இரண்டாம் பதிப்பு சிலவும் கூடவந்தது. 1928வது மார்ச்சுமீ திரும்பச் சென்னை மயிலாப்பூருக்குப்போய் அங்கே 1929வது ஸெப்டம்பர்மீ வரையில் இருக்கிறேன். இதனை உத்யோகபர்வ முகவுரையில் தெரிவித்திருக்கிறேன். அந்தக் காலத்தில் ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமபாஷ்யமும் ஸ்ரீமஹாபாரதத் தில் ஊ, ஊ, ஊ, ஊ, ஆகிய ச ஸந்திகைகளும் வெளிவந்தன. அவை வெளிவருதற்கு வேண்டிய உதவியைச் செய்தவர்களில் முக்யமானவர்கள் ஸ்ரீமான், (Sir) V. T. கிருஷ்ணமாசாரியாரவர்கள்.

நான் இந்தமுறை சென்னையிலிருந்தபொழுது, சென்ன அட்வொகேட் ஜநீமான், திவான்பஹதூர், ஆஸ்திகரத்ன, கர்ம ரத்ன, T. R. ராமசந்திரஐயரவர்கள், அட்வொகேட் ஜநீமான், T. R. வேங்கடராமசாஸ்திரிகளவர்கள் C. I. E. சென்ன அட்வொகேட்ஜனரல் ஜநீமான், Sir அல்லாடி - கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள் C.I.E. அட்வொகேட் ஜநீமான், K. பாஷ்யமையங்காரவர்கள், P. W. லெக்ரெட்டி ஜநீமான், [1] திவான்பஹதூர், N. கோபாலஸ்வாமிஐயங்காரவர்கள், அட்வொகேட், ஜநீமான், (ராவ்பஹதூர்) K. V. கிருஷ்ணஸ்வாமிஐயரவர்கள், அட்வொகேட், ஜநீமான், ராவ்பஹதூர், (Sir) S. வரதாசாரியரவர்கள் ஆகிய கனவான்கள் உதவி செய்தவர்கள். ஜநீமான், T. R. வேங்கடராம சாஸ்திரிகளவர்களும் ஜநீமான், K. V. கிருஷ்ணஸ்வாமிஐயரவர்களும் ஜநீமான், K. பாஷ்ய மையங்காரவர்களும் தம் சிகிச்சை உதவிகளையளித்து தம் கண் பார்கள் பலரைக்கொண்டும் பலவுதவிகள் கிடைக்கச்செய்தார்கள். அப் பொழுது மயிலாப்பூரிலும் வேறிடங்களிலுமுள்ள சில கனவான் கள் சேர்ந்து கையெழுத்துச்செய்து இந்தவறியபாரதத்தின் உத விக்காக ஓர் அப்பீல் வெளியிட்டார்கள். அதில், முன்னரே பல மையங்களில் தம்மாலியன்ற உதவியைச் செய்துவருகிறதும் Excise Inspector உம் எனதுகண்பரும் டாக்டர் ஜநீ P. கோட ஐயரவர்கள் தவிர வேறு ஒருவரும் ஒன்றும் செய்யவில்லை. இப்படியே, முன்னர், 1914 ஆம் வருஷத்தில், ஓர் அப்பீல், மெட்ராச பத்திரிகைகள் மூலமாகவும், தனிப்பிரதிகளாகவும் பிரசுரஞ்செய்தார். அதனை, ஜநீமான், H. Le Fanu அவர்களும், கொழும்பு ஜநீமான், Sir P. ராமநாதம் அவர்களும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். சென்ன எக்ஸைஸ் அண்டு பப்ளிசிடிஏஜன்ஸி மற்றும் பலபிரமுகர்களும் அட்வொகேட்ஜனரல் ஜநீமான், S. முத்தைய முதலியாரவர்கள் இந்தவறியபாரதத்தின் நிலைமையை மனமிரங்கிச் செய்த ஆதரிப்பையும் கவனித்தபின்னரே, நான் சென்ன மயிலாப்பூரில் போய் வசிக்கத்தீர்மானித்து, ஜநீமறியபாரதத்தின் விஷயத்தை விளம்பரமாக்கினேன். மார்ச் 20 ஆம் கொழும்பு கத் தாமெரிசால்வி கம்பாரதத்திற்கு அதிகம் கொடுத்தவர் கள். பிறகு, அந்தவுவ்வாளும் மனைக்கும் வண்ணிப்புலவர் களுக்கும் சரீரத்திற்கு ஏற்றதுக்கொள்ளாடையும் வேறு சிலகாரணங்களாலும் திருநெல்வேலி 1921 ஆம் வெள்ளிடை பார்சீ வந்தேன். அங்கே, சுகசரீ, சுகஜீவ, சுக ஆகிய கனவான்களை

1 இப்பொழுது காஷ்மீர் திவானாக இருக்கிறார்கள்.

வெளிவந்து சுசுவது ஸஞ்சிகை வெளிவரவேண்டிய ஸமயமாயிருந்தது.

மணலூர், தென்னாட்டில் அத்வைத வித்தைக்கு ஊன்று கோலாயிருந்தவர்களும் பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்யர்களுமான ஸ்ரீமத், ஸ்வயம்ப்ரகாச ஸ்வாமிகள், ஸ்ரீமத், நாராயணானந்த ஸ்வாமிகள் முதலிய பலபெரியோர்கள் வஸித்த கம்ஸபுரமென்ற கஞ்சனூரைச் சேர்ந்தது; வடநாற்கடலில் நீலகண்டினார்க்க பல பெரியோர்கள் நிரம்பியிருந்தது. வேதவேதாங்கங்களில் நிரைகண்டவர்களும் சதுச்சாஸ்திரபண்டிதர்களும் ஸதாசாரஸம்பன்னர்களும் மன்னர்கோவில் ராஜாசாஸ்திரிகள் என்று பிரஸித்திபெற்றவர்களுமான ப்ரம்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய நியாகராஜ தீக்ஷிதரவர்கள் அவ்வூரில்வந்து ஸ்ரீமத் நாராயணானந்தஸ்வாமிகளிடம் வேதாந்தபாடம் கேட்டார்களென்றால் அதற்கு இதைக்காட்டிலும் சிறந்தபருமை என்ன இருக்கிறது? படமொழியில் சிறந்தகவியும் வேங்கடாத்வரி என்று பிரஸித்திபெற்றவர்களுமான வ்ருத்தகவி - வேங்கடபதி சாஸ்திரிகளும், படமொழிவ்யாகரணஸூத்ரங்கள் ஒப்பிவான்றுக்கும் உதாரணங்களை மஹாகவிப்ரபோதங்களிலிருந்து அறுபது வருஷகாலம் இரவுபகல்ஓய்வில்லாமல் உழைத்துத் தேடியெடுத்து * எழுதிக்கொடுத்தவரும் என்னுடைய மாதுலருமான ராமனாதை ஐயங்கார் என்று பிரஸித்தருமான ஸ்ரீமான் வீராகவ ஐயங்கார்ஸ்வாமிகளும் முதலிய பல சிறந்த பண்டிதர்களும் என்னுடைய முன்னோர்களும் வஸித்த இடம். ஆகையால், அவ்வூரினிருந்து என்னுள்ளத்தன்ற கல்லாரியங்களைச் சேர்த்துகொண்டு போழுதுபோக்கவே நாட்டினேன். அவ்வூர், வாஸஸ்தற்கு நன்றாயிருந்தாலும், இந்தஸமயம் ஸகவாஸத்திற்குச் சிறிதும் நன்றாயில்லை. இப்போழுதிருக்கிற நிலைமையில் இன்னும் பலவருஷங்களுக்கு ஒழுங்குக்குவருமென்று தோன்றவுமில்லை. கல்லாளகவாளரும் கல்லாபோழுதுபோக்கும் வேண்டுமானால் அந்த ஊரில்லாமல் வேறுஊரில்போய் வஸிக்கவேண்டுமென்பது நிச்சயமாக ஏற்பட்டுவிட்டபடியாலும், இந்தக் கும்பகோணம் முதலிய பலவருஷங்கள் வஸித்ததும் சிறந்த பல பண்டிதர்களும் நண்பர்களும் நிரம்பியதுமான இடமாதலாலும், இங்கு வஸிக்கவிரும்பி வந்திருக்கிறேன். ஸ்ரீமஹாபாரதம், முதலில்நிதாடங்கப்பெற்ற இடமாகிய இவ்வூரிலேயேவந்து பூர்த்தியாக

---

*இது இப்பொழுது சென்னை கவர்ன்மெண்டு கையெழுத்துப் புஸ்தகசாலையிலிருக்கிறது.

வேண்டுமென்பது எப்பெருமானுடைய திருவுள்ளம்போல. ஒப்தமாகப்போன திவ்யப்ரபந்தத்தை வெளியிட்டருளிய ஸ்ரீ ஆளவழுத ஆழ்வானை இந்தப்பெரியகிரந்தத்தையும் பூர்த்தியடையச்செய்து வெளியிட்டருளினான்.

வனபர்வம் பருவவரிசையில் மூன்றாவதும் அளவில் இரண்டாவதுமானது. மஹாபாரதமுழுதிலும் அடங்கியிருக்கிற கதா உபபர்வங்களில் இந்தவனபர்வத்தில் இருபத்திகாரு உபபர்வங்கள் அடங்கியுள்ளன. அவற்றுள், இந்திரலோகாபிகமனபர்வம், இந்தி ஜடாஸுரவதபர்வம், யக்ஷயுத்தபர்வம், நிவாதகவசயுத்தபர்வம், அஜகரபர்வம், மார்கண்டேயஸமாஸபர்வம், திரௌபதிஸத்யபாமாஸம்வாதபர்வம், கோவையபர்வம், மார்கண்டேயஸமாஸபர்வம், இந்திரத்யும்னோபாக்யானபர்வம், சூகரோபாக்யானபர்வம், குண்டலாஹரணபர்வம், ஆரணேயபர்வம் ஆகிய பதினைந்தும் உள்ளன. இந்தப்பர்வத்தின் கதைச்சுருக்கத்தை அநுபர்வம் அகாவது முதலிய பக்கங்களில் பார்க்க.

மஹாபாரதங்களும் கல்வி கேள்விகளில் சிறந்தவர்களுமான பாண்டவர்கள் வேறு வேலையில்லாமல் வனத்தில் பன்னிரண்டுவருஷம் வஸித்தவிஷயமாகவும், அவர்களுக்குப் பலபாக்யானங்களையும் தேவர்கள் ரிஷிகள் முதலியவர்களின் சரித்திரங்களையும் தெவிட்டிய அளவிசால்வதற்குத் தகுதிவாய்ந்த மஹான்களாகிய பல ரிஷிகள் இருந்தவிடமாகவும், இந்த வனபர்வம் பாண்டவர்கள் வனத்தில் வஸித்த காலத்து நிகழ்ச்சிகளைக் கூறுதலாலும், மற்றப் பர்வங்களைக்காட்டிலும் இந்தப் பர்வத்திலடங்கிய அநுகதிகள் மிகப்பல. இதில், பலநீளக்கதைகள் இருத்தலினாலேயே, அநேகபர்வத்தில் அனேகாதாயாயத்தில் ஸ்ரீ ஆளவந்தாரருளிச்செய்யாத ஒரு விசேஷமாக உரையாசிரியர் செய்திருக்கிற இடத்தில் இந்தவனபர்வத்தை மஹாபாரதத்தின் சிறு கிளைகளாக வருணித்திருக்கிறார். மஹாபாரதத்திற்கு அநேகளாவிருப்பதில் அநேகவிஷயங்களையும் பற்றுக்கோடாயிருப்பதால் காரணமாகும். மஹாபாரதம் எல்லாவிதமான ஸாரமுள்ளதாயினும் அதில் சிலவிஷயங்களில்லாவிடில் அதை முழுதும் சொல்லப்படாதென்பர். அதனால், மஹாபாரதத்திற்குச் சிறுகிளைகளான அநுபர்வங்களும் பெரும்பான்மையான்கும் காரணமானவிஷயமென்பது கண்டு விளங்குமே. இந்த வனபர்வமும் அநேக புண்யசரித்திரங்களையும் புண்யதீர்த்த தேசங்களையும் தன்

னிடத்துக்கொண்டு மஹாபாரதத்திற்கு அழகையும் புண்யமாகிய பயனையும் அளித்தலால், இது மஹாபாரதமென்கிற விருக்ஷத்துக்குச் சிறுகிளைகளென்பது மிகப்பொருத்தமானதே.

இதில்வந்துள்ள பலசரித்ரங்களும் நிகழ்ச்சிகளும் ஒவ்வொரு தர்மத்தையோ நீதியையோ விளக்குவனவாகவே அமைந்துள்ளன. அவற்றுள், மாதிரிக்காகச் சில இங்கே கூறுவேன். பாண்டவர்கள் காடுபுகுந்து வறுமைபுற்றகாலத்தும் கல்வழியினின்று தவமுனிவர்கள் செல்லமுற்றபோதும் கல்வழியினின்று தவறார் என்பதும், யுதிஷ்டிரர் ராஜஸூய உபாஸித்து வாங்கிவந்த இழந்தராஜ்யம் திரும்பக்கிடைக்கவேண்டுமென்றுவது செல்வம் வேண்டுமென்றுவது கௌரவர்கள் அந்தணர்களுக்காப் பாற்ற உபாயம் வேண்டினராதலால் பிரதியோர் தர்மத்துக்காகத் தடையளவை உபாஸிப்பரேயன்றித் தடை காமதியாகங்களுக்காக உபாஸியாரென்பதும், கன்னைமையச் சிசுபாலன் விதுரனைத் திருதராஷ்டிரன் சினந்து தூதுத்தியதனால் பூர்க்கர்களுக்கு உபதேசிப்பவர் தீங்குறுவரென்பதும், திருதராஷ்டிரன் தூரியோதனனிடம் பற்றுவைத்துத் தீமையடைந்ததனால் பரிக்ஷணிருந்தாலும் துஷ்டனிடம் பற்றுவைப்பது இம்மை மறுமைகளைக் கெடுக்குமென்பதும், அர்ஜுனனுக்குச் சம்பு பிரத்யக்ஷமானதால் வாஸுதேவ பக்தர்களுக்கு அரிய தரியபுரம் மனிதர்கள் வணங்கமுடியுமென்பதும், யுதிஷ்டிரர் ராஜசூயத்தைத் தொட்டதனால் தருக்குள்ளவன் அதை நிறைவேற்றிக் கெட்பதால் தருக்கடனைப் பற்படுமென்பதும், பரத சரித்ரத்தால் கல்லோர்களுக்குத் தவமுயற் செல்லுமுயர் சரித்ரத்தைப் பரிபாலகர்களுக்கு ஆமென்பதும், ஜடாசுரன் கதையால் சிவபூஜையன் பரிவாரங்கள் முதலியோரையும் கொள்ளலாமென்பதும், ஜந்தூபாக்யானத்தால் யாகத்துக்காகச் செய்யப்படுவன் தவறுகள் அந்தப் பாபம் அவனையே அடையுமென்பதும், சிபியின் கதையால் தன் சரீரத்தைக் கொடுத்தாவது சரணமடைந்தவரைக் காக்கவேண்டுமென்பதும், அஷ்டாவக்ரர் கதையால் சிறியவயதினரைக் கல்வியறிவற்றவரென்று எண்ணலாகாதென்பதும், யுதிஷ்டிரர் பரிவாரங்களை விட்டுவிட்டுத் தனியே சரீரத்துடன் சுவர்க்கத்துக்குப் போனதால் ஸ்வர்க்கத்தில் சரீரத்துடன் போகலாகாதென்பதும், ஜனமேஜயன் கதையால் ப்ரஹ்மஹத்யாதோஷம் ஸ்வர்க்கத்தை அடையாதென்பதும், உபரிசரர் கதையால் தன் சரீரத்தைக் கொடுத்தாவது தருமத்தைக் காக்கவேண்டுமென்பதும், ஸத்யவதி கதையால் ஸ்வர்க்கத்தில் சரீரத்துடன் போகலாகாதென்பதும், யுதிஷ்டிரர் ஸ்வர்க்கத்தில் சரீரத்துடன் போனதால் ஸ்வர்க்கத்தை அடைந்தவர்களுக்கும் ஸ்வர்க்கத்தை அடைவதற்கு முயல்பவர்களுக்கும் ஸ்வர்க்கத்தில் சரீரத்துடன் போகலாகாதென்பதும்,

யாகங்களின் பயனையும் தருவது பதிசுஸ்ருஷை என்பதும், தர்மவ்யாதோபாக்யானத்தால் தர்மத்துக்கு ஜாதி காரணமன்றி ஆர்ஜவம் (=உள்ளும்புறமும் ஒத்திருத்தல்) முதலியகுணங்களே காரணமென்பதும், ஸப்தரிஷிகள் குற்றமற்றமனிவிகளை விலக்கியதால் லோகாபவாதத்துக்கு அஞ்சவேண்டுமென்பதும், கோஷயாத்ரைக்கதையால் கெடுவான் கேடுநினைப்பானென்பதும், பாண்டவர்கள் துரியோதனனைக் கந்தர்வர்களிடமிருந்து விடுவித்ததனால் நல்லோர்கள் தம்மையலருத்தியவர்களுக்கும் நன்மையே செய்வரென்பதும், துர்வாஸர் துரியோதனனுடையசேர்க்கையால் பாண்டவர்களுக்குத் தீங்குசெய்ய இணங்கியதால் துஷ்டர்க ளுடையசேர்க்கையால் ஸாதுக்களும் அஸாதுக்களாவரென்பதும், கண்ணன் திரௌபதியினுடைய மானந்தீர்களுக்கிரங்கி விரைந்து வந்தமையால் அவருடைய கருணையும், அவர் சிறியதிரையை உண்டு திருப்தியடைய எல்லாவுலகும் திருப்தியடைந்தால் அவர் ஸர்வாந்தர்யாமியென்பதும், விரிஞ்சிநாமஜபத்தால் கல் வழியில்தடையிலாதுபோதல் கல்லடைத்தத்தால் திருப்தியாதி கொடுப்பது சிறிதானாலும் பெரும்பயனளிக்குமென்பதும், ஜயத்ரதன் சாத்திரகதால் ராமாயணமும் ஸாவித்ரியும் நளனையும் உண்டாக்குமென்பதும், ஸாவித்ரியின்கதையால் பதிவ்ரதைகள் இரண்டுகுலத்துக்குப் நன்மைசெய்து உண்டுபண்ணுவரென்பதும், யஜ்ஞயுதிஷ்டிர ஸம்வாதத்தால் ஸகலதர்மங்களின் தாற்பர்யமும் வெளியாகின்றன. இப்படியே, ஸ்ரீமஹாபாரதகதா பூமையினுள்ளுள்ள சரித்திரங்கட்சிகளும் கிளைக்கதைகளும் எதுவரை ஆராய்ந்தாலும் தர்மத்தையே பலவிதமாகவும் விரிவுபடுத்துவனவாகவே அமைந்துள்ளன என்பதைப் பலவிதமாகவும் எடுத்துக் காட்டியும் பலதலைப்புக்களில் இயற்றியுள்ளனர்.

ஸ்ரீமஹாபாரதத்தைப்பற்றியும், அதனுள், வரும் திரௌபதி பாஷைகளும் வேறு பாஷைகளும் அமைந்திருக்கும் கவர்மைகளைப் பற்றியும் எனது பூர்வாபிப்ராயங்களை விவரமாகத் தெரிவித்திருக்கிறேன். ஸ்ரீமஹாபாரதகர்த்தாவைப்பற்றியும் விவரங் களை அங்கே காண்பிக்கிறேன்.

மஹாபாரதத்தை மொழிபெயர்த்துக்கொடுத்த பண்டிதர் களைப்பற்றி முன்னமே தெரிவித்திருக்கிறேன். அவர்கள் மொழிபெயர்த்துக்கொடுத்த பர்வங்களை அவர்கள் பேரால் வெளியிட்டிருக்கிறேன். இந்த வரைபர்வத்தையும் சென்றுகொடுப்ப

தாக ஒப்புக்கொண்ட ஸ்ரீ. உ. சதாவதானம், T. E. ஸ்ரீநிவாஸா சாரியரவர்கள் இதனைச் செய்துகொடாமலே பரமபதமடைந்தார் கள். ஆதலால், இந்தப்பர்வம் வேறொருவரைக்கொண்டு மொழி பெயர்க்கவேண்டியதாயிற்று. வியாகரண வேதாந்த சாஸ்திர பாரங்கதரும் பாகவத பகவத்கீதாபங்யாஸகரும் சோதிடமந்திர சாஸ்திர வித்வானும் ஆர்யமத ஸம்வர்த்தனீ பத்ராதிபருமான பிரம்மஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகளவர்கள், ஸ்ரீமஹாபார தம் பிரஸித்தமான சிறந்த கிரந்தமாதலால் இதில் சிலகாலது சில பாகத்தைத் தாம் மொழிபெயர்க்கவேண்டுமென்னும் விருப் பத்தை ப்ரும்மஸ்ரீ Prof. K. ஸுந்தராமையரவர்கள்மூலம் தெரிவித்து, இந்தவனபர்வத்தைத் தாம் மொழிபெயர்த்துத்தரு வதாக ஒப்புக்கொண்டு விரைவாகவே செய்துகொடுத்துவிட்டார் கள். அதற்கு முன்னதாகவே யுத்தபர்வங்களின் பதிப்புவேலை தொடங்கியிருந்தேன். அவைகளைச் செய்துமுடித்தேன். அவற் றுக்குப் பின்னுள்ள சாந்திபர்வ அனுசாஸன பர்வங்கள் முன்னமே வெளிவந்துவிட்டன. மேலில், அந்த்யபஞ்சகமென்று சொல்லப் படுகிற ஆஸ்வமேதிகமுதலிய ஐந்துசிறுபர்வங்களையும் வெளி யிட்டுவிட்டால் பூர்த்தியானபர்வங்களின் எண் அதிகமாகு மென்றுநினைத்து அவைகளை வெளியிட்டேன். பிறகு, வனபர்வ மும் உத்யோகபர்வமுமே பாக்கியிருந்தன. அளவில் சிறிய தாகிய உத்யோகபர்வத்தை முதலில்வெளியிட்டுவிட்டு இந்த வனபர்வத்தை எடுத்துக்கொண்டேன்.

ஒவ்வொருபர்வத்தையும் மொழிபெயர்த்த பண்டிதர்கள், மொழிபெயர்த்தபிறகு, மூலத்தோடு ஒப்பிட்டுப்பார்த்துக்கொ டுப்பதும், அதனை வேறு இரண்டு பண்டிதர்கள் ஒப்பிட்டுப் பார்ப்பதும், அவர்களால் குறிக்கப்படுகிற ஸந்தேகங்களை, மொழி பெயர்த்தவர்கள் மறுபடியும் பார்த்துத் திருத்திக்கொடுப்பதும், பிறகு, நான் ஒருபண்டிதனை வைத்துக்கொண்டு மூலஶ்லோகத் தின் கருத்து வேறுபடாமலிருக்கிறதா என்றுபார்த்து இயன்ற வரை திருத்தியும், அவசியமான குறிப்புக்களை எழுதியும் அச் சிட்டுவெளியிடுவதுதான் வழக்கம். புதிய ஸஞ்சிகைவலையோ பழையஸஞ்சிகைகள் பலவற்றின் இரண்டாம்பதிப்புவலையும் சேர்ந்து நடந்துவருகையாலும், போதுமான உதவிகள் கிடை காமையாலும், வலங்கைநாயன் சேவிக்க சிட்டியார் எழுதிக் கொடுக்க ஆரு-க்கிணல் பாக்கியுள்ள பர்வங்கள் வெளிவராவே

என்று எனக்கே அடிக்கடி ஸந்தேகம் உண்டானமை யாலும், வன்பர்வத்தை முன்னமே ஒப்பிட்டுப்பார்க்கத் தொடங்கவில்லை. உத்யோகபர்வம் ஆனவுடன், வனபர்வத்தை எடுத்துப் பார்க்கத்தொடங்கினேன். நடேசசாஸ்திரிகளவர்கள் அந்தஸமயம் செயற்கரிய பெருங்கார்யமாகிய ப்ரம்மஸூத்ரம் சங்கரபாஷ்யத்தை மொழிபெயர்த்து வெளியிடத் தொடங்கியிருந் தார்கள். அதனால், அவர்களுக்குச் சிறிதும் அவகாசம் கிடைப்ப தில்லை. ஆதலால், அவர்கள் வனபர்வமொழிபெயர்ப்பை மூலத் தோடு ஒப்பிட்டுப் பார்த்துத் திருத்திக்கொடுக்கக்கூடவில்லை. அவர் கள் மொழிபெயர்த்ததை வேறொருவரைக்கொண்டு திருத்தச்செய் வதும் முறையாயில்லை. பின்பு, அவர்களோடு கலந்து ஆலோசித் தில், அவர்கள், தமக்குள்ள பலவேலைகளால் இதனை அதிகம் க வனிக்க அவகாசமில்லாமையாலும் இந்தப்பெருங்கார்யமும் சீக்கி ரம் பூர்த்தியாவது அவசியமாதலாலும் வேறு யாரைக்கொண்டா வது மொழிபெயர்த்துக்கொள்ளும்படி அனுமதி அளித்தார்கள். மஹாபாரதத்தில் பல பர்வங்களை மொழிபெயர்த்துக் கொடுத்தவர் களான ஸ்ரீ. உ. T. V. ஸ்ரீநிவாஸாசாரியரவர்கள் என்வேண்டு கோளுக்கிணங்கி எட்டாவது அத்யாயத்துக்கு மேலுள்ளபாகத்தை விரைவில் மொழிபெயர்த்துக்கொடுத்து உதவினார்கள். இந்த விவரங்களை இந்தப்பர்வம் முதற்பாகத்தின் முகவுரையில் தெரி வித்திருக்கிறேன். இவர்களுடைய பெருமையையும் மஹாபாரத மொழிபெயர்ப்பில் இவர்களுக்குள்ள உத்ஸாகத்தையும் முன் இவர்களால் மொழிபெயர்க்கப்பெற்று வெளிவந்துள்ள பர்வங்க ளின் முகவுரைகளில் தெரிவித்திருக்கிறேன்.

இந்தவனபர்வம் பலமாதங்களின்முன்னரே வெளிவந்திருக்க வேண்டும். இந்த மஹாபாரதமொழிபெயர்ப்பாகிய அரியபெரிய நற்காரியத்தின் ப்ரமத்துக்கும் பெருமைக்கும் தக்கபடி போது மான அளவு உதவிகள் கிடைத்திருந்தால், இந்த மஹாபாரதமொழி பெயர்ப்பு முழுதுமே பலவருஷங்களுக்கு முன்னமே முற்றுப் பெற்றிருக்கலாம். தொடங்கப்பெற்று இருபத்தைந்து வருஷத் துக்குப்பிறகாவது பூர்த்தியானது எல்லாம்வல்லகடவுள்து பரம கிருபையே. முதல்ஸஞ்சிகை 1905வது ஆகஸ்டுமீ 21உ வெளி வந்தது. அதற்குச் சிலவருஷங்கள்முன்னமே மொழிபெயர்ப்பு வேலை தொடங்கப்பெற்றது. கலியுகம் பிறந்தவுடன் பாண்டவர் கள் மஹாப்ரஸ்தானம் சென்றார்களென்றும் அர்ஜுனனுக்குப்

பரீக்ஷித்தின்மகன் ஜனமேஜயனுடைய யாகத்தில் மஹாபாரதம் சொல்லப்பட்டதென்றும் தெரிதலால், இது ஏறக்குறைய ஐயாயிரம்வருஷத்துக்குமுன் எழுதப்பட்டிருக்கவேண்டும். இவ்வளவு நீண்டகாலத்துக்குப்பிறகே, இந்தப் பெரிய இதிஹாஸம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு நிறைவேறவேண்டுமென்பது ஸர் வஜ்ஞனன் எம்பெருமானுடைய திருவுள்ளம்போலும்.

பெரியகிரந்தங்களை வெளியிடுவதில் பலவருஷங்களாவது இயல்பே. வடமொழி மஹாபாரதத்தைத் தெலுங்குபாஷையில் மொழிபெயர்த்தவர்கள் மூவராவர். அவர்களுள் நன்னயபட்டரென்பவர், ஆதிபர்வமும் ஸபாபர்வமும் வனபர்வத்தில் மூன்றில் இரண்டுபாகமும், அதாவது நருஷன்கதை முடியவும் பாடினர். சிலநூற்றாண்டுகளுக்குப்பிறகு, திக்கன ஸோமயாஜியார் என்பவர் விராடபர்வமுதல் மஹாபாரதம் கடைசிவரையில் இயற்றினர். அதன் பிறகு, ஒருநூற்றாண்டுக்குப்பின், எர்ரா ப்ரகடா என்ற பண்டிதர் முன் இருவரும் செய்யாதுவிட்ட வனபர்வப்பகுதியைப் பாடிமுடித்தனர். தமிழில் கம்பர் வில்லிபுத்தூராழ்வார் முதலானவர்களைப்போன்ற மஹாகவிகளும் பெரிய அரசர்களாலே ஆதரிக்கப்பெற்றவர்களும் மிக்கசெல்வவான்களுமான மஹாபண்டிதர்களாலே செய்யப்பட்டும், காகித விலை அச்சுக்கூலி முதலிய செலவுகளில்லாமலிருந்தும், அது பலரால் பலநூற்றாண்டுகளில் நிறைவேறியது. அப்படியே, இங்கிலீஷிலும் சில பெரியநூல்கள் பலபல வருஷங்களில் பூர்த்தியாயின (Gibbon) கிப்பன் என்பவருடைய Decline and Fall of Roman Empire என்னும் புஸ்தகம் 3800 பக்கங்களுக்கு உட்பட்டது. அது, உ வருஷத்தில் பூர்த்தியாயிற்று. (Carlyle) கார்லில் என்பவர்செய்த History of the French Revolution என்பது 800 பக்கங்களோபுடையது. அது, ச வருஷத்தில் முடிந்தது. அவரால் செய்யப்பட்ட Frederick the Great என்பது 3000 பக்கங்கள்கொண்டது. அது கச வருஷங்களில் பூர்த்தியாயிற்று. (Herbert Spencer) ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் என்பவருடைய Principles of Sociology என்பது 1669 பக்கங்கொண்டது. அது கஉ வருஷங்களில் பூர்த்தியாயிற்று. (Chapman) சாப்மன் என்பவருடைய Iliad மொழிபெயர்ப்பு 16,000 வரிகளையுடையது; Odyssey மொழிபெயர்ப்பு 12,000 வரிகளையுடையது. அவை இரண்டும் சேர்ந்து அவரால் கஉ வருஷங்களில் மொழிபெயர்க்கப்பட்டுப் பூர்த்தியாயின.

ரும் ஒருவிதத்திலும் ஒப்பாகா என்று வெளிப்படையாகச் சொல் லுகிறார்கள். இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த மஹாபாரதம் எங்கே? நான் எங்கே? வடமொழி தென்மொழிகளில் மிக்க பாண்டித்யமும் இந்த மஹாபாரத மொழிபெயர்ப்பைச் செய்ய எல்லாவிதத்தாலும் தகுதியுமுடையவர்களான பெரியோர்கள் பலர் இருக்க, எல்லாம் வல்ல கடவுள், ஒருவிதத்தாலும் தகுதியில் லாத என்னைக்கொண்டு இந்தக் கைங்கரியத்தை நிறைவேற்றிக் கொண்டது, அவனுடைய அகடித கடநா ஸாமர்த்தியமும், 'எம் பிரான் அருள் மேலில் ஒரு துரும்பும் படைத்தழிக்கும் அகிலாண் டத் தொகுதியையே' என்னும் உண்மையும் விளங்குதற்குப் போலும்.

மஹாபாரத மொழிபெயர்ப்பில் கடைசியாக வெளிவந்த இந்த வனபர்வத்தின் கடைசிப்பக்கம் அச்சிட்டு முடிந்தவுடன், எனக்கு உண்டான களிப்பின் மிகுதிக்கு ஓர்எல்லையில்லை. அசோக வனத்தில் துயரக்கடலில் மூழ்கியிருந்த பிராட்டிக்குப் பெருமா னுடைய மோதிரம் கண்டபோது உண்டான மகிழ்ச்சி இதற்கு ஒரு வாறு ஒப்பாகலாம். பலவகைத் துன்பங்களை அடைந்து திருப்பாற் கடல் கடைந்த தேவர்கள் அமிர்தம் உண்டானதைக் கண்டபோது அடைந்த தன்மையை அடைந்தேன். எல்லாம் வல்ல கடவுள் உரு—வருஷகாலமாக என்னை அளவில்லாத துன்பத்திற்கு ஆளாக்கி னையினும், இந்தப்பெருங் கார்யத்தை என்னைக்கொண்டே நடத்தி நிறைவேற்றியது, அவனுடைய அவ்யாஜமான பெருங் கருணையே. அந்தக் கருணையை மிகப் பாராட்டுகிறேன்; அவனுடைய திருவடி களில் திரும்பவும் திரும்பவும் பலமுறை வணங்குகிறேன்.

ஸ்ரீமஹாபாரதத்தில் அரிய பல விஷயங்களும் எளிதில் பொருள்விளங்காத கடினமான பலஸ்லோகங்களுமிருத்தலாலும், அவற்றுக்கு விளக்கமான வியாக்யானங்கள் இல்லாமையாலும், அவற்றைப் பல தக்கபண்டிதர்களிடம் கேட்டுத் தெரிந்து நிச் சயிப்பது அவஸ்யமாயிருந்தது. அந்தவகையில் உதவிசெய்த மஹாவித்வான்கள் பலர்.

ஸ்ருதிஸ்ம்ருதிகளிலும் இதிஹாஸங்களிலும் பூர்வோத்தர மீமாம்ஸாதிசாஸ்திரங்களிலும் பாரங்கதர்களான திருவியலூர், பிரம்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய ராமஸுப்ரம்மண்யசாஸ்திரிக ளவர்கள் எனக்குப் பல அரியவிஷயங்களைத் தெரிவித்தவர்கள்; ஸ்ரீமஹாபாரதத்தில் எனக்குண்டான பலஸந்தேகங்களையும்

தெளிவித்தவர்கள். அவர்களிடம் கேட்டவற்றையும் அவர்கள் சொல்லியவற்றையும் விவரமாக எழுதுவதானால் மிகவிரிவுமாதலால் இங்கே விவரிக்கவில்லை.

மஹாவித்வான், மதுவசாஸ்த்ர ஸம்பூர்ணா, பாரதஸம்மமம், (மஹாமஹோபாத்தியாய) கா. பெ. ராமசந்திராசார்யரவர்கள் நான் மஹாபாரதம் தொடங்கியதுமுதல் அதில் எனக்கு உண்டாகும் ஸந்தேகங்களையெல்லாம் போக்கிப் பேருதவி செய்துவருகிறார்கள். இவர்கள் பாரதத்தைப் பலமுறை படித்தவர்கள். பதினைருமுறை முழுமையும் படித்துஉபந்யஸித்துப் பட்டாபிஷேகம் செய்திருக்கிறார்களென்பது நிச்சயமாகத்தெரிகிறது. பாகவதத்தை எழுபது தடவைக்கு அதிகம் பிரஸங்கம் செய்திருக்கிறார்கள். அவற்றுள், நாற்பது தடவைகளில் ஏழு நாளில் படித்து முடித்தலாகிய ஸப்தாஹ முறையில் தாமே படித்து அர்த்தமும் சொல்லியிருக்கிறார்கள். ராமாயணம், விஷ்ணுபுராணம், ஹரிவம்சம் இவைகளில் ஒவ்வொன்றையும் பத்துப்பத்து முறைகளுக்குக் குறையாமல் பிரஸங்கம் செய்திருக்கிறார்கள். இவைகளை இத்தனைமுறை பிரஸங்கம் செய்திருக்கிறார்களென்றால் தாம் தனியே சிலசில முறையாவது படித்திருக்கவேண்டுமென்பது நிச்சயம். இவர்களைப்போல இதிஹாஸ புராணங்களில் ஸந்தேகமறச் சொல்ல வல்லவர்களை நான் பார்த்ததில்லை. ஸ்ரீ மஹாபாரத மொழிபெயர்ப்புவிஷயமாக இவர்கள் ப்ரதிப்ரயோஜனத்தை எதிர்பாராமலும் ஸ்வார்த்தத்தைச் சிறிதும் பாராமலும் செய்துவருகிற பேருதவிகளை ஆம்வமேதிகபர்வமுகவுரையிலும் இந்த வனபர்வம் முதற்பாகமுகவுரையிலும் தெரிவித்திருக்கிறேன். இவர்களுக்கு நான் செய்யும் கைம்மாறு என்ன இருக்கிறது? 'கைம்மாறு உகவாமல் கற்றறிந்தோர்மெய்வருந்தித், தம்மால் இயலுதவி தாம் செய்வர்' என்பதற்கு இவர்களே இலக்கியம்.

கும்பகோணம் கவர்ன்மெண்ட் காலேஜில் ஸம்ஸ்கிருதபண்டிதராயிருந்த மஹாவித்வான் ஸ்ரீ. உ. விசாகபட்டணம் பரவஸ்து, V. பட்டநாதஸ்வாமிகளவர்கள் இங்குஇருந்தபோது என்னிடம் ஒரு நிமிஷமும் பிரியாமல் என்றேறு பழகிக்கொண்டிருந்தார்கள். சாந்திபர்வம் மோக்ஷதர்மத்தையும் அநுசாஸனபர்வத்தையும் ஒப்பிட்டுத்திருத்தியபோது அவர்களுடைய உதவி மிகஅதிகம். அநுசாஸனபர்வத்தில் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமஉரையை முழுதும் அவர்களை ஒப்பிட்டுச் சோதித்து உதவினார்கள்

கும்பகோணம் கவர்ன்மெண்ட் காலேஜில் இப்பொழுது ஸம்ஸ்கிருதபண்டிதராயிருக்கிற மஹாவித்வான், அபிநவபட்டபாணர், (மஹாமஹோபாத்தியாய) ஸ்ரீ. உ. R. V. கிருஷ்ணமாசாரிய ஸ்வாமிகளவர்கள் எனக்கு இந்த மொழிபெயர்ப்புவிஷயத்தில் பேருதவி செய்துவருபவர்கள். அப்போதப்போது அங்கங்கே உண்டான ஸந்தேகங்களை நிவிர்த்திசெய்ததுமல்லாமல் ஆச்வமேதிக முதலிய ஐந்துபர்வங்களையும் மூலத்தோடு ஒப்பிட்டுப்பார்த்துத் திருத்திக்கொடுத்தார்கள். இவர்களைப்பற்றி ஆச்வமேதிகபர்வ முகவுரையில் தெரிவித்திருக்கிறேன்.

கும்பகோணம் நேடிவ்ஹைஸ்கூல் ஸம்ஸ்கிருதத்தலைமைப்பண்டிதர் மஹாவித்வான் ஸ்ரீமான், ஆலங்குடி, ஸுந்தரேசசாஸ்திரிகளவர்கள் பல சாஸ்திரங்களைத் தக்கபெரியோர்களிடம் முறையாகப் பாடங்கேட்டவர்கள்; சாஸ்திரங்களிலும் இதிஹாஸபுராணங்களிலும் மிக்க பரிச்ரமமுடையவர்கள்; இளமைமுதல் எனக்குச் சிறந்த நண்பர்கள். இந்தமஹாபாரதம் தொடங்கியதுமுதல் இதுவரையில் பல பர்வங்களை ஒப்புநோக்கிப் பரிசோதித்துக் கொடுத்திருக்கிறார்கள்.

குமாரமங்கலம் ஸ்ரீ. உ. நரஸிம்மாசாரியஸ்வாமிகளவர்கள் காவ்யநாடகங்களிலும் வ்யாகரண தர்க்க சாஸ்திரங்களிலும் சிறந்த பாண்டித்யமுடையவர்கள். மொழிபெயர்ப்பை மூலத்தோடு ஒப்பிடும்பொழுது விஷயங்களை ஆழ்ந்து நுணுகிப்பார்ப்பார்கள். ஸ்ரீமஹாபாரதத்தில் விராடபர்வமும், பீஷ்மபர்வமுதலிய யுத்தபர்வங்கள் ஐந்தும், ஸ்திரீபர்வமும், சாந்திபர்வமும், ஆச்வமேதிகமுதலிய ஐந்துபர்வங்களும் இவர்கள் ஒப்பிட்டுச் சோதித்துக்கொடுத்தவை.

பெருகவாழ்ந்தான் ஸ்ரீ உ. ராமபத்ராசாரியஸ்வாமிகளவர்களும், திருவிடையூர்ப் பாடசாலையிலும் தகிலிப்பாடசாலையிலும் ஸம்ஸ்கிருத பண்டிதராயிருந்த தேரழுந்தூர் பிரம்மஸ்ரீ-வேதஸுப்ரம்மண்ய சாஸ்திரிகளவர்களும், சென்னை மயிலாப்பூர் P. S. ஹைஸ்கூல்(Religious Teacher) வேப்பத்தூர் ஸ்ரீமான், ஸீதாராமசாஸ்திரிகளவர்களும், சென்னை அடையாற்றில் லைப்ரேரியனாயிருந்த திருவிடையூர் ஸ்ரீமான், வே. வேங்கடராம சாஸ்திரிகளவர்களும் திருவல்லிக்கேணி, Messrs. K. R. சாஸ்திரிகம்பெனிசெக்காரரும் வடமொழிஸுதஸம்ஹிதையைப் பதிப்பித்தவருமான ஸ்ரீமான், K. குப்புஸ்வாமிசாஸ்திரிகளவர்களும், தி

கோடிகாவல், ஸ்ரீமான் ராமஸ்வாமிசாஸ்திரிகளவர்களும் இந்த மஹாபாரதத்தில், சிலசில பாகங்களை ஒப்பிட்டு உதவியவர்கள்.

சண்பகபுரம், ஸ்ரீமான், C. N. துரைஸ்வாமி ஐயரவர்கள், ஸ்ரீமஹாபாரதப் பதிப்புவிஷயத்தில் எனக்குப் பல உதவி செய்து வருகிறார்கள். 1909வது வருஷத்தில் சுவதுஸந்ஸிகை வெளிவருமபோது இவர்கள் என்னிடம் வந்து, அதுமுதல் பெரும்பாலும் என்னை விட்டுப் பிரியாமல் தொடர்ச்சியாக என்னோடுகூட இருந்து மொழிபெயர்ப்பை மூலத்தோடு ஒப்பிட்டுப்பார்த்தல், அரும்பதங்களைப் பார்த்துத் திருத்தல் முதலிய எல்லா உதவிகளையும் செய்துவருகிறார்கள்; தம்பால் ஒப்பிக்கப்படும் வேலைகளை மிக நுணுகி ஊன்றிப் பார்த்து நம்பிக்கைக்கிடமாகச் செய்து வருபவர்கள்; எனக்குக் கண்போலவும் கைபோலவும் உதவுபவர்கள்; ஸ்ரீமஹாபாரதப் பதிப்பு வேலையை மிக்கபொறுப்புடன் பார்ப்பவர்கள். இவர்கள் சிலவருஷம் கும்பகோணம் வாணதுறை ஸ்கூல்களிலும் சென்னை மயிலாப்பூர் ராமகிருஷ்ண ஸ்கூல் ஸிடென்ஷியல் ஸ்கூல்களிலும் தமிழ்ப்பண்டிதராயிருந்தகாலத்தும் ஸ்ரீமஹாபாரத ஸம்பந்தமான வேலைகளை விடாமற்செய்துகொண்டே வந்தார்கள்.

திருவாவடுதுறை ஸ்ரீமான், T. பொன்னுஸ்வாமி ஐயரவர்கள், தமிழ்நாட்டில் பல்லில்லாக்களிலும் திருவனந்தபுரம், பெங்களூர், மைஸூர் முதலிய இடங்களிலும் சென்று பலபிரதிகளை ஸந்தர்த்துப் பல கையெழுப்பங்கள் சேர்த்து உதவியவர்கள். பலவகைகளில் ஸ்ரீமஹாபாரதத்தின் பெருமைகளைப்பற்றி மிக நிறமைபோதி எடுத்துச்சொல்லி இந்த மஹாபாரதத்தில் பலருக்கு ப்ரத்தை உண்டாகும்படி செய்தவர்கள். இவர்களுடைய நிறமைகளையும் எடுத்துக்காண்ட காரியத்திலுள்ள ஊக்கத்தைகளைப்பற்றி வெளியூரிலிருந்து பலகனவான்கள் பாராட்டி எனக்கு எழுதியிருக்கிறார்கள். இவர்கள் வெளியூர்களுக்குப் போகாதபோழுது என்னோடுகூடஇருந்து ஆபீஸ்வேலைகளைப் பார்த்துவந்தார்கள். இவர்கள் தொடர்ச்சியாக இந்த வேலையிலிருந்திருப்பார்களானால், இந்த மஹாபாரதப்பதிப்புக்கு கலமாகவே இருந்திருக்கும். ஆனால், இவர்களுக்கு வெளியூருக்குப் போய்வருதற்கும் என்னோடுவந்து வஸிப்பதற்கும் இவர்களுடைய குடும்பநிலைமை இடந்தரவில்லை.

பண்டிதர்களுடனிருந்து அவர்கள் சொல்லியபடி எழுதுதல், சுத்தப்பிரதி எழுதுதல், ப்ரூப்படித்தல், கடிதம்மூலம் எழுதுதல், கணக்கு எழுதுதல்முதலான பலவேலைகளை உடனிருந்து செய்தவர்கள்:—

ஸ்ரீமான் R. வேங்கடேச ஐயர் அவர்கள், திருக்கோடிகாவல்.

,, R. நாராயண ஐயர் அவர்கள், Head clerk, Advertisement Department, Hindu Office, Madras.

,, K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகளவர்கள், கோமல்.

,, V. ராஜகோபால ஐயங்கார் அவர்கள், கம்பர் விலாஸம், மயிலாப்பூர்.

,, L. வேங்கடராம ஐயர் அவர்கள், Messrs. Bombay Co., Madras.

,, D. ராமசந்திர ஐயர் அவர்கள், Manager, Tanjore Dt. Co-operative Central Bank, Kumbakonam.

,, பைங்காநாடு - வைத்யநாத சாஸ்திரிகள் அவர்கள், உதவிப் பண்டிதர், அத்வைத ஸபை, கும்பகோணம் வாணிதுறை வைஷ்ணவ ஸ்கூலில் தமிழ்ப்பண்டிதராயிருந்த

,, M. ராஜகோபால ஐயங்கார் அவர்கள், கும்பகோணம்.

,, G. செல்லமையங்கார் அவர்கள், காந்திக்கோட்டை.

,, தக்கம் கிருஷ்ணமாசாரியர் அவர்கள், கந்தர்வகோட்டை

,, S. குருஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள், Inspector Devasthanam Office, Kumbakonam

,, கணேச ஐயர் அவர்கள், காஞ்சிபுரம்.

,, கிருஷ்ணமூர்த்தி ஐயர் அவர்கள், காவாட்புரம்.

,, P. R. ரங்கநாதாசாரியர் அவர்கள், c/o Mr. R. Seth Madhava Rao, Post Office, Raichu

,, சுப்பிரமணிய ஐயர் அவர்கள், மேலக்காவேரி.

,, ஈக்காடு, ஸ்ரீநிவாஸராகவாசாரியர் அவர்கள், B. A. திருவல்லிக்கேணி

,, அ. சாமிநாத ஐயர் அவர்கள், கோட்டூர்.

,, சுப்பிரமணிய ஐயர் அவர்கள், திருக்கோடிகாவல்.

,, ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்கள், தேசவல்லிபெரும்பாள் ஸங்கீத பாடசாலை, மயிலாப்பூர்

,, T. R. ராஜகோபாலாசாரியர் அவர்கள், (சப்ஜட்ஜ் பேஷ்கார்) காட்டுக்கோட்டை சத்திரம், மாயூரம்

ஸ்ரீமான், R. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்கள், Headmaster, Muhamadan Higher Ele. School, Avaniapuram. இவர், குமாரமங்கலம், ஈரஸிம்மாசாரியரவர்களின் தமையனர்குமாரர்; இப்பொழுதும் வேண்டிய உதவிகளைச் செய்துவருகிறார்.

திருவாவடுதுறை ஆதீனமும் திருப்பனந்தாள் காசி மடமும் என்னுடைய இளமை முதற்கொண்டு எனக்குச் செய்துவருகிற பேருதவிகள் மிகப் பல. அப்படியே, இந்த மஹாபாரதப் பதிப்பு விஷயத்திலும் மிக ஆதரித்து வருகின்றன. இந்த விவரங்களை முன் வெளிவந்த பர்வங்களின் முகவுரைகளில் தெரிவித்திருக்கிறேன். இப்பொழுதுள்ள திருவாவடுதுறை ஆதீனத்துத் தலைவர்களான மஹாகனம்பொருந்திய ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிகரவர்களும், திருப்பனந்தாள் காசி மடத்துத் தலைவர்களான மஹாகனம்பொருந்திய ஸ்ரீலஸ்ரீ சாமிநாத சுவாமிகளவர்களும், என்னிடத்து மிகவும் அன்பு பாராட்டி எனக்கு வேண்டிய உதவிகளைச் செய்து ஆதரித்து வருகிறார்கள். இப்பெருந்தகையாளர்களுக்கு, மனமார நினைந்து வாயார வாழ்த்துதலன்றி, நான் வேறு என்ன கைம்மாறு செய்யவல்லேன்? 'கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு, என் ஆற்றுங் கொல்லோ உலகு' 'ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம், பேரறி வாளன் திரு' என்னும் பொய்யா மொழிகள் இவர்களுக்கே பொருந்தும்.

ஸ்ரீமான், Sir P. S. சிவஸ்வாமி ஐயர் K. C. S. I., C. I. E. அவர்களும், ஸ்ரீமான், Sir C. P. ராமஸ்வாமி ஐயர் K. C. I. E. அவர்களும், Law Secretariat, Under Secretary ஸ்ரீமான் ராவ்பகதூர் C. ராமானுஜாசாரியரவர்களும், மதுரை அட்மினிஸ்ட்ரேடர், ஸ்ரீமான், T. C. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்களும் ஆரம்பகாலமுதல் அப்போதப்போது இதுவிஷயமாகப் பெரிதும் ஆதரித்தவர்கள்.

ஸ்ரீமான், Sir. P. ராஜகோபாலாசாரியரவர்கள் திருவனந்தபுரத்தில் திவானாயிருந்தகாலத்தும் சென்னை கவர்ன்மெண்டு Law Secretary ஆகவும் Council Member ஆகவும் இருந்தகாலத்தும் அங்கங்கே இருந்து செய்யக்கூடிய உதவிகளைச் செய்தேதாடு கன் கொடையளித்தும் ஆதரித்தார்கள்.

கௌரவ ஸ்ரீமான், The Hon. Sir P. ராமநாதம் K. C., C. M. G., M. L. C. அவர்கள், மதுரைத் தமிழ்ச்சங்க வருஷாந்தரவத்தில் அக்காளனம் வகிப்பதற்காக ஒரு ஸமயம் ராமநாதபுரம்

வந்திருந்தபோது, என்னுடைய மஹாபாரத பிரகடனபத்திரிகையைப் பார்த்து எனக்கு எழுதி ரூ. 200 நன்கொடையும் அனுப்பினர்கள்; அடிக்கடி எனக்குக் கடிதம் எழுதிக்கொண்டே வந்தார்கள்; பிறகு, 1922-வது மைலாப்பூருக்கு வந்திருந்தபோது என் வீட்டிற்கு வந்து சேவலை நடப்பதை விசாரித்து, மேற்கொண்டு ரூ. 200 நன்கொடையும் அளித்து, மிக அன்பு பாராட்டிச் சென்றார்கள்; என்னைத் தங்கள் தேசத்திற்கு வரவேண்டுமென்றும், வந்தால் தம்முடைய நண்பர்களைக்கொண்டு இதற்கு விசேஷ உதவி கிடைக்கும்படி செய்வதாகவும் வாக்களித்தார்கள். அவர்கள் எனக்குப் பலமிகதங்கள் எழுதினதுண்டு. அவைகளில் சிலவற்றிலிருந்து சில வாக்கியங்களை இங்கே மாதிரிக்காக எழுதுகிறேன்.

Sivanadi, Mount Minakshi, Kodaikanal, 29th May, 1914:—

'At Ramnad, where I had gone from Colombo to preside at the last anniversary of the Madura Tamil Sangam, I was given a copy of your appeal for help in the completion of the Tamil Translation of the **Maha Bharatam**. Your work is of priceless value to all who speak and read Tamil, and I shall try to interest my Tamil friends in Ceylon, the Straits Settlements and Natal, in your patriotic enterprise. Please send me as many copies of your appeal (both in English and Tamil, with opinions expressed by scholars as regards the accuracy of the translation) as you can spare, for distribution.

* * * * *

I wish you every success, financialy and otherwise, in your noble undertaking.

Colombo, dated 11th October, 1914 :—

'The effects of the war are in the way of Tamil gentlemen readily extending their support to your noble enterprise, just now. But, I fully trust they will contribute later on.

Do not be disheartened. Money *will* come in due time and save you from financial trouble. With kind regards.'

11—6—1915 ;—

'I am glad to hear you have begun Bhishma Parva etc., and wish you success in your good work.'

29—1—17 :—

'Perfection of action, called *Kritha Krithyam* by our sages, which is so necessary for individual and social uplift (Uththaranam), necessitates your completing at least these volumes.

Hoping you are doing well and with best wishes for long life and prosperity to you.'

10—2—19 :—

'I appreciate deeply your noble work.

Praying that you may have health and long life granted to you for the completion of the translation.'

ஸ்ரீமான், R. கபாபதி ஐயரவர்கள் M.A., I.C.S. (Retired) Bar-at-Law * அந்நாள் டிஸ்ட்ரிக்ட் போர்டில் இந்த மஹாபாரத கத்திற்கு உதவிகிடைக்குமிடம் விசாரிபோழுது எனக்கு சேரில் பரிசயமேமில்லை. இதற்கு உதவி செய்பவரென்றுமன்று நான் சேரிலாவது பிரமைக்கிகாண்டிலாது அவர்களைக் சேட்டுக்கிகாண் டதுமில்லை. 'எல்லா முகமல் இயம்பாதவர்கள்ணும், சென்று பொருள்கொள்ளுப்' கித்தீரும்' என்பதற்கு உதாரணம் இவர் களே. அதன்பிறகு. முன்றுவருஷகாலம் சென்றபின் கீழ்கிரியில் இவர்களை முதல் முறை சந்தித்தேன். அப்போழுதுதான், இவர் கள் சொந்தத்திற்கு அதுவரை வெளிவந்த மஹாபாரத புஸ்தகங் களை வாங்கிக்கொண்டார்கள். அந்த முறை கும்பகோணம் காலேஜில் டேவதானிம் வாத்தியாராக, மஹாபாரதத்தைப் படித் துக்கொண்டு நான்காவது, சட்டை புஸ்தகங்களில் தமக்கு இருந்த சில ஸந்தேகங்கள் இதனால் நீங்கினதாகவும், இந்தப் பாரதம் தமக்குக்கிடைத்தது, Mine of Diamonds (= ஒரு ரத்னச்சுரங்கம்) கிடைத்ததுபோல் நான்தாகவும் மிகப்பாராட்டிச் சொன்னார்கள். அதுமுதல் வரவரை மிக்க அன்புபாராட்டிப் பலமுறை கன்

* இதன் விவரத்தை, இந்த முகவுரை 11-வது பக்கத்தில் பார்க்க.

கொண்டை அளித்து உதவிவருகிறார்கள். இந்த மஹாபாரதத்தை விரைவில் நடத்தி முடிக்கவேண்டுமென்று பல லிகிதங்கள் எனக்கு எழுதியிருக்கிறார்கள்.

கும்பகோணம் முனிஸிபாலிடியிலும் தாலூகாபோர்டிலும் தஞ்சை ஜில்லாபோர்டிலும் எனக்கு அனுகூலம் கிடைக்கும் படி முயன்றவர்களில், ராஜாங்கத்தில் பெரியஉத்தியோகங்களை வகித்தும் பென்ஷன் பெற்றுக்கொண்டபிறகு தேசநன்மைக்காக உழைத்தும் • கீதாபாஷ்யம்முதலிய பல அரியநூல்களை மொழி பெயர்த்து வெளியிட்டும் உலகத்துக்குப் பேருதவி செய்து வருபவர்களான ஸ்ரீமான், திவான்பஹதூர், V. K. ராமானுஜாசார்யரவர்களும், கும்பகோணம் அட்வொகேட் ஸ்ரீமான், T. K. சிவராமஐயர் அவர்களும், அட்வொகேட் ஸ்ரீமான், ராவ்ஸாகிப், C. R. லக்ஷ்மீவராகலுங்காரு அவர்களும் முக்கியமானவர்கள்.

ரிடயர்டு கோஆபரேடிவ் டிப்டி ரிஜிஸ்ட்ராரும் எனக்குப் பரம ஆப்தர்களுமான ஸ்ரீமான், G. ஸ்ரீநிவாஸராகவாசாரியரவர்களும், திருச்சிராபுரம், ரிடயர்டு டிஸ்ட்ரிக்ட் எஜூகேஷனல் ஆபீஸர் ஸ்ரீமான் K. கோடசஐயர் M. A., L. T., அவர்களும், கோயம்புத்தூர் விவசாயகாலேஜ் லைவ்ஸ் ப்ரின்ஸிபால் ராவ்ஸாஹிப், T. V. ராஜகோபாலாசாரியரவர்களும், மாயூரம் அட்வொகேட், ஸ்ரீமான் G. ஆராவமுத ஐயங்கார் அவர்களும் இந்த மஹாபாரதப்பதிப்பு விஷயமாகத் தம்மாலியன்ற உதவிகளைச் செய்து ஆதரித்து வருகிறார்கள்.

இளமைமுதல் எனக்குச் சிறந்த நண்பரும் கும்பகோணம் பெரியதெரு ஜவுளிவியாபாரிகளுமான ஸ்ரீமான் கோட்டூர், C. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்களும், பிரம்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய (டாக்டர்) சாமிநாத ஐயரவர்களுடைய அனுஜரும் சென்னை ஜனரல் போஸ்டாபீஸ் வி. டி. க்ளெய்ம்ஸ் டிபார்ட்மெண்டு ஹெட்கிளார்க்கும் எனக்குச் சிறந்த நண்பருமான ஸ்ரீமான், V. சுந்தரம் ஐயர் அவர்களும் இந்த மஹாபாரதப்பதிப்பு விஷயத்திலும் மற்றும் பல வகையிலும் எனக்குத் தாட்சண்யமின்ற உதவிகளைச்செய்து ஆதரித்துவருகிறார்கள்.

ஸ்ரீமான், மஹாமஹோபாத்யாய (டாக்டர்) ஐயரவர்களுடைய குமாரரும் சென்னை ஹைகோர்ட்டு ட்ரான்ஸ்லேடரும் எனக்குச் சிறந்த நண்பருமாகிய ஸ்ரீமான், S. கல்யாணஸுந்தர ஐயரவர்கள்

இளமைமுதலே என்னிடம் மிக்க அன்புடையவர்கள். நான் இந்த மஹாபாரதப் பதிப்புவேலையைத் தொடங்கியதுமுதல் எனக்குச் சென்னையில் ஆகவேண்டிய காரியங்களையெல்லாம் ப்ரமத்தைச் சிறிதும் பாராமல் தாமே பார்த்துவருகிறார்கள். அவர்களால் நான் அடைந்துவரும் உதவிகள் மிகப்பல.

1923ம் வருஷத்தில் நான்நிறுத்திவிட்ட மஹாபாரதப் பதிப்பு வேலையைத் திரும்பத் தொடங்கச்செய்து அப்போதப்போது வேண்டிய உதவிகளைப் புரிந்து ஆதரித்து இதனை நடத்திவருகிற ஸ்ரீமான், (Sir) V. T. கிருஷ்ணமாசார்யர் K. C. I. E. அவர்களுடைய குமாரர், ஸ்ரீமான், V. K. திருவேங்கடாசார்யர் M. A., B. L., அவர்களும், தமது தந்தையாரைப்போலவே, இந்த மஹாபாரதப்பதிப்பு விஷயத்தில் விசேஷ அபிமானமுடையவர்கள். சென்ற ஜூலைமாஸத்தில், ஸ்ரீமான் கிருஷ்ணமாசார்யர் அவர்கள் சென்னைக்கு எழுந்தருளியிருந்தசமயத்தில், நான், அப்போது வெளிவந்திருந்த சகடவ்யூஹ ஸஞ்சிகையை அவர்களிடம் நேரில் சேர்ப்பித்தேன். அவர்கள் மேல்நடக்கவேண்டியவற்றை விவரமாகக்கேட்டு அவற்றுக்குவேண்டிய ஸௌகர்யங்களையும் அமைத்துக் கொடுக்குமாறு தம்முடைய குமாரர், ஸ்ரீமான், V. K. திருவேங்கடாசார்யர் M. A., B. L. அவர்களிடம் தெரிவித்தார்கள். அவர்கள் அந்தப்படியே வேண்டியஸௌகர்யங்களை அமைத்துக் கொடுத்தார்கள். அவர்களுடைய பெருகவிடாமலே இந்த வளர்ச்சியும் பூர்த்தியாயிற்று.

ஸ்ரீமான், Sir M. CT. முத்தையச் செட்டியாரவர்களுடைய குமாரர் ஸ்ரீமான், M. CT. M. சிதம்பரம் செட்டியாரவர்களும் தமது தந்தையாரைப்போலவே, ஸ்ரீமஹாபாரத விஷயத்தில் மிக்க அபிமானம் வைத்திருக்கிறார்கள். ஸ்ரீமான் முத்தையச்செட்டியாரவர்கள், தாம் சேமமாகவும் தம்முடன்பிறந்தவர்களெல்லாரும் பெருநெறிதழைத்து நிலவியிருக்கவும் மஹாபாரதத்தில் நிலைபெற்றிருந்தபடியால் தாம் வாங்கிக்கொடுத்துமிருந்தார்கள். அதில் கடைசியாகப் போகியிருந்த ரூ. 10000—த்தையும் ஸ்ரீமான், சிதம்பரம்செட்டியாரவர்கள் தாமே கொடுத்துத் தீர்த்து வைத்ததும் பெருகவிசெய்தார்கள்.

இந்த ஸுஜன ஸுகவாஸிகளுள், 'அக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்,' 'மகனுக்குத் தந்தை

நலத்தை' என்னும் நீதிமொழிகளுக்கேற்பத் தந்தையர்க்குத்தக் தநயர்களாக விளங்குகிறார்கள்.

மற்றும் பொருளுதவிசெய்த கனவான்களுடைய பெயர்களை முன் விராடபர்வம் முதற்பதிப்பு, கடி மூன்றும்பதிப்பு, பீஷ்மபர்வம், சாந்திபர்வம் இரண்டாம்பாகம், ஆஸ்வமேதிகபர்வம் ஆகிய இவற்றின் முகவுரைகளில் தெரிவித்திருக்கிறேன். பின்னுள்ளவர்கொடையளித்து ஆதரித்த கனவான்கள்:—

ஸ்ரீமான் மாட்சிமை தங்கிய ராஜாராஜஸ்ரீ வரலெஸ்துபதி மஹாராஜா அவர்கள், Raja of Ramnad	...	ரூ. 500
,, திவான்பஹதூர், ராஜா, ஸர், அண்ணாமலைசெட்டியார் அவர்கள், Raja of Chettinad.	...	,, 750
,, மெ. சி. த. வைரவன் செட்டியார் அவர்கள், தேவகோட்டை (முன்கொடுத்த ரூ 500 தவிர மேற்கொண்டு)	...	,, 500
,, திவான் பஹதூர் A. V. P L. சிதம்பரஞ்செட்டியாரவர்கள், காரைக்குடி.	...	,, 300
,, M. S. M. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள், காரைக்குடி.	...	,, 400
,, சிறுவாலை ஜமீன்தாரவர்களாகிய P.C. முத்துச் செட்டியாரவர்கள், மதுரை	...	,, 500
,, ராஜாபஹதூர், கிருஷ்ணமாசாரியரவர்கள் M. L. A. ஹைதராபாத் (முன்கொடுத்த ரூ 250 தவிர மேற்கொண்டு)	...	,, 250
,, M. A. R. N. ராமநாதம் செட்டியாரவர்கள், தேவகோட்டை	...	,, 250
,, AL. SP. PL. சுப்பிரமணியசெட்டியாரவர்கள், தேவகோட்டை	...	,, 100
,, AL. AR. அருணாசலசெட்டியாரவர்கள், ஜமீன்தார், தேவகோட்டை	...	,, 350
,, PS. AR. AR. அருணாசல செட்டியாரவர்கள், தேவகோட்டை	...	,, 100
,, RM. AR. AR. RM. அருணாசல செட்டியாரவர்கள், தேவகோட்டை	...	,, 200

ஸ்ரீமான் AL. ST. AL. அழகப்பசெட்டியாரவர்கள், தேவகோட்டை ... ரூ 100

" திவான்பஹதூர் P. ஸோமஸுந்தரம்செட்டியாரவர்கள், தேவகோட்டை ... " 100

" ,ராவ்பஹதூர், M. R. ஸுப்பையசெட்டியாரவர்கள், காரைக்குடி ... " 1000

" R. ராம்ஜீ தாஸ் ஐயரவர்கள், கல்கத்தா ... " 150

" ராவ்சாஹிப் N. T. ரங்கஸ்வாமி செட்டியாரவர்கள், நாசிங்கன்பேட்டை ... " 100

S.A.C. Charities, Madras. For 8 Sets ... " 400

இப்பொழுது தூத்துக்குடி Circle Excise Inspector ஆக இருப்பவரும் என்னுடைய நண்பருமான ஸ்ரீமான், P. கேட்ச ஐயரவர்கள், நான் இந்த மறுபாரத்தை ஆரம்பித்ததுமுதல் அப்பொழுதப்பொழுது அபிப்பிராயங்களை உதவியைச்செய்தும் செய்வித்தும் வருகிறார்கள். பல்வேறுகாலங்களில் சிலநண்பர்களை அனுப்பி எனக்கு உதவிசெய்துவருகிறார்கள். மேலும் எனக்கு நெருங்கிய நேசரான ஸ்ரீமான், P. கேசவபிள்ளை அவர்களும், இப்பொழுது நாசிங்கன்பேட்டை, அவர்களும், அவருக்குப் பின்னர் இப்பொழுது திருக்காட்டுப்பள்ளி ஸப்ரிஜிஸ்ட்ராராக இருப்பவருமான ஸ்ரீமான், R. கிருஷ்ணஸ்வாமி சாஸ்திரிகளவர்களும் அந்தந்தப்பகுதிகளில் நான் சேகரித்தவிஷயங்களைமீது விசாரிக்கிறார்கள். எனக்கு இந்த நேரத்தில் இருக்கிறநிலைமையை அவர்களுக்குத்தெரிவித்தவர் எனக்கு மிகவுதவியாகவும் இப்பொழுது காரைக்குடி ஸப்ரிஜிஸ்ட்ராராக இருப்பவருமான ஸ்ரீமான், G. கோதண்டபாணி அவர்கள். 'உதவிசெய்தல் நிமித்தம் வரும்பொருள் தன்னைத் தரும்' என்னும் பழமொழியை இவர்களிடத்து உண்மையாகக் காண்கிறேன்.

நான் திருவாவடுதுறையாதீனம் பரிபாலகர்களாகிய ஸ்ரீலஸ்ரீ. சிவஞானதேசிக பரிபாலயோகருடைய குருபூஜை, ஸ-ள-ள-ஸ்ரீ. வீரபாண்டிய பரிபாலயோகருடைய குருபூஜை, ஸ-ள-ள-ஸ்ரீ. வீரபாண்டிய பரிபாலயோகருடைய குருபூஜை எனக்கு விசேஷ அநுகூலமாய் சேர்ந்துவந்தது. சிவஞானதேசிக பரிபாலயோகருடைய குருபூஜை, ஸ-ள-ள-ஸ்ரீ. T. S. வேலுசாமி பிள்ளை B. A. அவர்கள் ரூ. 500-ம், வீரபாண்டிய பரிபாலயோகருடைய கும்பி

யார் ம-ா-ா-ஸ்ரீ ஷண்முகம்பிள்ளையவர்கள் ரூ. 600-ம் இந்தமஹா பாரதப்பதிப்புக்காக நன்கொடையளித்து உதவினர்கள்.

இந்தமுறை மணலூரில் வந்து வஸித்தகாலத்தில் அப்போதப்போது எனக்கு வேண்டிய உதவியைச்செய்தவர்கள் டாஸ்கர ராஜபுரம் ரிடயர்ட் எஞ்சினியர், ஸ்ரீமான், V. கோபால ஐயரவர்களும், ஆடுதுறை மளிகை, ஸ்ரீமான், T. S. ராஜம்செட்டியாரவர்களும், ஆடுதுறை ரூரல் டிஸ்பென்ஸரி, டாக்டர், ஸ்ரீமான், K. கோவிந்த ஐயர் L. M. P. அவர்களுமாவர்.

திருவிந்தளூர், ஸ்ரீபரிமள ரங்கநாதஸ்வாமி ஸந்நிதி கார்ய நிர்வாஹகரும் எனக்குப் பரமபந்துவுமான ராஜாவையங்கார் என்று வழங்குகிற ஸ்ரீ. உ. ரங்கஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியும், சென்னை இந்தியன் பப்ளிஷிங் ஹௌஸ் Travelling Agent-உம் எனக்கு இளமைமுதற்கொண்டு சிறந்தநண்பருமான ஸ்ரீமான், V. S. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியும் இந்தமஹாபாரதப்பதிப்பு விஷயத்திலும் என் சொந்தக்காரியங்களிலும் தம்மாலியன்ற உதவிகளை யெல்லாம் சலிப்பின்றிச்செய்து உதவிவருகிறார்கள்.

சில ஐரோப்பிய கனவான்களும் இதுவிஷயத்தில் மிக்க அன்புடன் ஆதரித்தார்கள். அவர்கள் செய்த உதவிகளை இங்கே சுருக்கமாகத் தெரிவிக்கிறேன். 1915-வருடத்தில் இவ்விடம் காலெஜ் ப்ரின்ஸ்பாலாக இருந்தவர்களும் இப்பொழுது சென்னை பிரஸிடென்ஸி காலெஜ் ப்ரின்ஸ்பாலாக இருப்பவர்களுமான ஸ்ரீமான், * R. M. Statham துரை M. A., C.I.E. அவர்கள், நான் இந்த மஹாபாரதப்பதிப்புவேலையை ஆரம்பித்ததற்குப் போதிய உதவியில்லாமல் ப்ரமப்படுகிறேன் என்பதைத் தெரிந்துகொண்டு, அப்பொழுது இந்த ஜில்லா கலெக்டராயிருந்த ஸ்ரீமான், R. B. Wood துரை அவர்களிடம் இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்ததாகவும் அவர்கள் சத்திரம் ஐரவஜியிலிருந்து இதற்கு ஏதாவது உதவிசெய்யலாமென்று அபிப்பிராயப்பட்டதாகவும் என்னிடம் சொன்னார்கள். அதன்மேல், நான் ஜில்லாபோர்டுக்கு விண்ணப்பம் செய்துகொண்டேன். கலெக்டர் துரையவர்கள் இதுவிஷயத்தில் போதுமான பொருளுதவிசெய்தல் அவசியமென்று மிகப் பொறுத்து எழுதினர்கள். அந்தவிஷயம் மீட்டிங்குக்குவந்த பொழுது அக்ராசனம்வகித்த ஸ்ரீமான், R. நாராயண ஐயரவர்கள் I. C. S. இதைப்பற்றி மிகப்பாராட்டி வார்த்தைசொன்னர்கள்.

---

* இப்பொழுது Director of Public Instruction ஆக இருக்கிறார்கள்.

அதன்மேல், பாக்கியுள்ள ஸஞ்சிகை ஒவ்வொன்றுக்கும் ரூ. 100 வீதம் நன்கொடையளிக்கவும் புஸ்தகம் 13-பிரதிகள் வாங்கிக் கொள்ளவும் ஜில்லாபோர்டு தீர்மானித்தது. இந்தவிஷயத்தில் என் னுடையமுயற்சி சிறிதுமில்லை. இதற்கு, ஸ்ரீமான், R. M. Statham துரையவர்களே முழுதும் காரணம். இந்தப் பேருதவிக்காகத் தஞ்சை ஜில்லாபோர்டுக்கு நான் மிக்க நன்றி பாராட்டுகிறேன்.

ஸ்ரீமான், H. Le Fanu, I. C. S. (Retired) அவர்கள் இங்கே பல ஜில்லாக்களில் கலெக்டராக இருந்து பின் ரெவின்யூ போர்டில் மெம்பராகவுமிருந்தவர்கள். ஸ்ரீ மஹாபாரதப்பதிப்பு விஷயமாக ஸமாசாரபத்திரிகைகளில் பார்த்தபோது அவர்கள் தாமாக எனக்கு எழுதினர்கள். உடனே, அதுவரையில் வெளிவந் திருந்த புஸ்தகங்களை மாத்திரம் வாங்கிக்கொண்டு மஹாபாரதம் முழுதுக்கும் ஆகக்கூடியமிதாகையை முன்னதாக அனுப்பிவிட் டார்கள். பிறகு, என்னிடத்தில் அதிக அன்பு பாராட்டி அடிக்கடி லிகிதம் எழுதிக்கொண்டே வந்தார்கள். மாதிரிக்காக அவற்றி லுள்ள சில வாக்கியங்களை இங்கே எழுதுகிறேன்.

Saifabad, Hyderabad (Deccan); *dated* 18-3-1913:—

'I am glad to see from the review of the Madras Mail that the *Magnum opus* of translating and publishing the Mahabharata is nearing completion.

The General use of Tamil type is very trying to the eyes. It will be a great pity if your great work for which so many are waiting should not be printed in a fount worthy of it.'

31-1-1914:—'You perhaps may remember that I wrote to you in March last to which letter you replied on 24th do.

I had been waiting till I could get the whole Mahabharata in your edition, but, from a letter of yours which appeared recently in the Madras Mail, I see that the remaining portion may not be published for some time and as you seem to be in some difficulty just now, I write to ask you to send me whatever portions of The Mahabharata are complete, * * * and in the V. P. P. advice, you can charge me for the full edition.

It is on account of the binding that I wanted to wait for the complete work, but I see now that your friends must rally round you without further delay. '

* * * * "

11-2-1914 :—' You have my warmest sympathies. The thing had to be done and it was a gift of God that we had such able scholars to do it.

* * * * * '

4-3-1914 :—' Many thanks for the Anusasana Parvam. (Your Secretary's handwriting makes me envious) * * * * I am afraid that I shall never have the pleasure of meeting you but we can be and remain friends on paper. * * * * *
You have been so badly treated that it is hopeless to look to you for a revised Edition of the Ramayana.

Your countrymen have not yet been educated up to *buying their books.*

* * * *

29-3-1914:— ' * * * *

I think that your fellow country-men who are great talkers but slow to act have treated you very badly. If Government would subscribe for 200 copies, it would help you over the stile.

As it is, you will never add to your troubles by doing for the Ramayana what you have done for the Mahabharata.'

10-10-1914 :—' I have returned from home. Has the Madras Government done anything to help you since I went away in March last ? Has any new volume come out since I went away ? If so, you might kindly send it to me.'

29-8-1915 :—' It is very curious how shy our Indian Nobles are about supporting literary effort. When there is any matter before the public in which their subscription bills obtain publicity or the notice of Government they come forward readily enough.'

20-2-1916 :—' It was not because I forgot you that I did not write, but I was sorry not to have been able to be of any use, which you will see from enclosed, which please return.

I hope you are well and that the magnum opus is getting on as well as can be expected, under the unfavourable circumstances.

I agree with Mr. Stone that it is *your own* people who are to blame for not encouraging your work. There are a dozen men who could draw a cheque for the whole cost without missing the money.

I cannot imagine why Pratap Chandra Roy was helped, except that he is a Babu.

* * * *

20-1-1920 :—* * * *

I suppose the Mahabharata is nearing completion. In a way you will be glad that it must have been, also in a way, a labour of love for which the Dravida country is your debtor. Did Government give you no more help?

* * *

நான் கேட்டுக்கொள்ளாமலும் அவர்கள் எனக்குத் தெரிவியாமலும் என்னைப்பற்றி, டைரெக்டர் Mr. Stone துரையவர்களுக்கு எழுதினார்கள்; தமக்கு Mr. Stone துரையவர்கள் எழுதிய விருத்தாந்தப் பிரதியை அனுப்பினார்கள். அதில் Mr. Stone துரையவர்கள்,

Old College
28-11-15.

Dear Mr. Le Fanu

* * *

As regards Ramanujachariar, I don't think he has been badly treated over his book and since we adopt the plan of leaving local boards and other school Managers to buy the books they think they need, I am afraid I cannot do anything more for him. If the well-to-do people of the country won't support their own literature what can we do?

* * *

என்று எழுதியிருந்தார்கள். இவற்றால், ரூரீ மஹாபாரதத்தில் Le Fanu துரையவர்களுக்கிருந்த நேயத்தன்மை நன்கு விளங்கும். அவர்கள் மஹாபாரதத்தைப் பூர்த்தி செய்வதில் மிகுந்த ஆவலுள்ளவர்களாயிருந்தார்கள். அவர்களுக்கு இதனை பூர்த்திசெய்வதிலான கஷ்டம் எனக்கு இல்லாமற்போயிற்று.

ஸ்ரீமான், Thomas Brown துரையவர்கள், நீலகிரியைச் சேர்ந்த கூனூரில் பெரிய காபி டீத்தோட்டங்களுக்குச் சொந்தக்காரர். அவர்கள் இந்த மஹாபாரத விஷயத்தை Madras Mail இல் பார்த்து எனக்கு எழுதி அதுவரையில் வெளிவந்துள்ள புஸ்தகங் களை விலைக்கு வாங்கிக்கொண்டதுமல்லாமல், ரூ. 25 நன்கொடையு மளித்தார்கள். கூனூரிலிருந்த இந்துகனவான்களுக்கு இதைப் பற்றிச் சிபார்சுசெய்தார்கள். நான் நீலகிரிக்குப் போயிருந்த போது, என்னைத் தம்முடைய தோட்டத்திற்கு வருவித்து மிக உபசரித்து அனுப்பினார்கள். அவர்கள் இருந்தவரை இந்த மஹா பாரதம் நடைபெறுவதை அடிக்கடி விசாரித்து எழுதி எனக்கு ஊக்கமளித்து வந்தார்கள். அவர்களுடைய லிகிதங்களில் ஒன்று வருமாறு :—

'*Glendale Cottage; Coonoor:* 30-1-1914

* * * *

Please send me the 18 volumes now ready and book me for copy of the remaining volumes to be issued, for which I enclose cheque for Rs. 20 for credit against cost. Aside from this, I should be glad to donate Rs. 25.

* * * *

I will call the attention of my Indian friends in Coonoor, to the work and trust that the little station will not be behind others in supporting you.'

Rev. E. M. Macphail துரை C. I. E., C. B. E., M. A., D. D. அவர்கள், மயிலாப்பூர் அட்வொகேட் ஸ்ரீமான் (ராவ்பஹதூர்) K. V. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்களுடன் ஒருஸமயம் வார்த்தை சொல்லிக் கொண்டிருக்கையில் இந்த மஹாபாரதப் பதிப்பைப் பற்றிப் பிரஸ்தாவம் வந்ததாம். அப்பொழுது கிருஷ்ணஸ்வாமி ஐயரவர் கள் மஹாபாரதப் பதிப்பின் பெருமையையும் ஸ்ரமத்தையும் எடுத்துச் சொல்ல, துரையவர்கள், அவற்றை முழுதும் மனத்தில் வாங்கி அங்கீகரித்து, யூனிவர்ஸிடியிலிருந்து போதுமான பொரு ளுதவி செய்யவேண்டுமென்று சொன்னார்களாம். அதனை, கிருஷ்ண ஸ்வாமி ஐயரவர்கள் எனக்குத் தெரிவித்து, யூனிவர்ஸிடிக்கு ஒருவிண்ணப்பம் செய்துகொள்ளும்படி சொன்னார்கள். நான், 'முன்னொருமுறை, ஸ்ரீமான் Sir K. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்கள்

யூனிவர்ஸிடி Vice chancellor ஆக இருந்தபொழுது அவர்களைப் பார்த்தேன். அவர்கள், 'யூனிவர்ஸிடியில் ஏதாவது உதவிகிடைத்ததா?' என்று தாமாகக் கேட்டார்கள். நான், 'இல்லை' என்று சொன்னேன். அவர்கள், 'இதுஸமயம் மனுக்கொடுங்கள். நான் நிச்சயமாக, உதவிகிடைக்கும்படி செய்கிறேன்' என்று சொன்னார்கள். அவர்கள் நிர்ப்பந்தமாகச் சொன்னதன்மேல் யூனிவர்ஸிடிக்கு ஒருமனு எழுதிப்போட்டுவிட்டு, அதுவிஷயத்தை ஐயங்காரவர்களுக்கும் எழுதியிருந்தேன். அவர்கள் 15-7-1922இல் யூனிவர்ஸிடி ஆபீஸிலிருந்து ஓர் உத்தரவு அனுப்பினார்கள். அது வருமாறு :—

'The syndicate regrets that it has no funds available for the purpose of such a grant'.

நான் ஐயங்காரவர்களுக்கு நேரில் எழுதிய லிகிதத்துக்கு, சிலவாரங்கள் கழித்து, 6-8-22இல், அவர்கள் ஜானகியிலிருந்து,

'Dear Mr. Ramanujachariar,

I beg to acknowledge the receipt of a copy of a letter from you to the Registrar asking for aid of the University to complete the printing and publication of your Translation of the Mahabharatha. It will have the careful consideration of the syndicate.

Yours sincerely,'

என்று எழுதினார்கள். ஆகலால், யூனிவர்ஸிடியில் ஒருதவியும் கிடைக்காது' என்று சொன்னேன்.

ஸ்ரீமான் (ராம்பஹாதுர்) K. V. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள், 'அப்படியன்று. Rev. Macphail துரையவர்கள் இந்த விஷயத்தில் மிக்க அனுகூலங்களாக இருக்கிறார்கள். இதற்காக ஒரு பெருந் தொகை கொடுத்து உதவிசெய்யவேண்டுமென்று சொன்னார்கள். ஆகலால், இந்த முயற்சி வீண்போகாது' என்றும், 'அவரியம் விண்ணப்பம் செய்துகொள்ளுங்கள்' என்றும் வற்புறுத்திச் சொன்னார்கள். பிறகு, நான் முறுவிண்ணப்பம் செய்துகொண்டேன். அது மீட்டிங்குக்கு வந்தபோது, யூனிவர்ஸிடிமெம்பர்கள் நன்றாக ஆலோசித்து, ரூ. 1000 நன்கொடை கொடுப்பதென்றும் அதனை மஹாபாரதகர் தார்த்தியானபிறகு, கொடுப்பதென்றும் முடிவுசெய்தார்கள். இப்படியால், சென்றவருஷத்தில், அவர்கள், அனுமதிசெய்திருந்தும் நன்கொடை இந்த மஹாபாரதத்தின்

பெருமைக்குச் சிறிதும் போதாதென்றும் மேற்கொண்டு அதிக மான உதவிசெய்ய வேண்டுமென்றும் அதனை இந்த மஹாபாரதப் பதிப்பை நடத்துவதற்கு அனுகூலமாகும்படி இப்பொழுதே கொடுக்க வேண்டுமென்றும் யூனிவர்ஸிடிக்கு மனுச்செய்து கொண்டேன். திரிசிரபுரம் ஸெண்டு ஜோஸப் காலேஜ், Prof. Rev. P. Carty S. J., B. Sc., D. D. அவர்கள் இதைப்பற்றி Senate-இல் பிரேரேபணை செய்தார்கள். இந்தியகனவான்கள் பலர் இதனை ஆதரித்துப்பேச, பின்னும் ரூ. 1000 கொடுப்ப தென்றும் அதனை இப்பொழுதே கொடுத்து உதவுவதென்றும் உத்தரவளித்தார்கள். இந்தப்பேருதவி செய்ததற்காக யூனிவர் ஸிடிக்கு நான் மிகவும் நன்றிபாராட்டுகிறேன்.

இன்னமும் பல ஐரோப்பியப்பாதிரிமார்கள் தங்கள் பள்ளிக் கூடங்களுக்காகவும் தங்களுடைய சொந்தத்திற்காகவும் தனித் தனி புஸ்தகங்கள் வாங்கிக்கொண்டார்கள். Rev. எல்வின், Rev. ஷேமே, Rev. போஸிங்கர், Rev. பார்க்கர், Rev. ஞானப்பிரகாசம், Rev. கன்னிகேசர், Rev. மேரி ஆரோக்யநாதர் முதலான பலபாதிரிமார்கள் ஸ்ரீ மஹாபாரதத்தை மிகவிரும்பி வாங்கிக் கொண்டார்கள். இவர்களுள், Rev. எல்வினும் Rev. ஷேமேயும் Rev. பார்க்கரும் Rev. கன்னிகேசரும் நடக்காகவும் தங்களைச் சேர்ந்தவர் சிலருக்காகவும் சிலபிரதிகள் வாங்கிக்கொண்டார்கள். இவர்களுள் சிலர் அடுக்கடி லிகிதம் எழுதி விசாரிப்பார்கள்.

ஆதிதுரை தோற்கிடங்கு, ஜனப், M. G. முகம்மதுஹ அப்துல்லாஸாகிப் பஹதூர் அவர்கள் பலவிடங்களில் பொருளுதவி செய்தார்கள். சென்னை காருல்இஸ்லாம் பத்திராதிபர், ஜனப், B. காஜாஹுஸைன் ஸாஹிப் பஹதூர் B. A. அவர்கள் இந்த மஹா பாரதம் தொடங்கியகாலத்துத் தாம் கையெழுத்துச் செய்துள்ள பல் கையொப்பங்கள் சேர்த்துக்கொடுத்துதவி உதவினார்கள்.

இதிலிருந்து, இந்த மஹாபாரதப்பதிப்பு அந்தஸ்தையாதாகு உபயோகப்படக்கூடுமானால் அவர்களால் எவ்வளவு உதவி கிடைத் திருக்குமென்பதையும் அதனால் எனக்கு எவ்வளவு ப்ரயாஸம் குறைந்திருக்குமென்பதையும் நான் தெரிவிக்கவேண்டியதில்லை. இந்தக் கனவான்கள் மேலும் மேலும் உதவிபுரிந்துவர பிரார்த் தோகத்துடன் காரியத்தின் ப்ரயாசத்தையும் சிரமத்தையும் தினைத்து உதவி செய்தவர்களைப் பிரியத்துடன் பாராட்டுகிறேன்.

Hindu, Madras Mail, சுதேசமித்திரன் முதலிய பலஸமாசார பத்திரிகைகள் இதுவிஷயமாக ஆதரித்து வருகின்றன. அவைகளுள், ஹிந்துபத்திரிகையினுடைய உதவி மிகப்பெரிது. அதன் ஆசிரியர், ஸ்ரீமான் A. ரங்கஸ்வாமி ஐயங்காரவர்களும் சொந்தக்காரர்களாகிய ஸ்ரீமான் K. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்களும் ஸ்ரீமான் K. கோபால ஐயங்காரவர்களும் பத்திரிகையில் ஸ்ரீ மஹாபாரதத்தைப்பற்றி அடிக்கடி பாராட்டி விமர்சனங்கள் எழுதுவதும் விளம்பரம் செய்வதுமல்லாமல், நன்கொடையளித்தும் ஆதரித்துவருகின்றனர்.

இந்த மஹாபாரதப் பதிப்புவேலை, முதலில் வைஜயந்தி என்னும் அச்சுக்கூடத்தில் ஆரம்பிக்கப்பெற்று, பிறகு, பல அச்சுக்கூடங்களில் நடந்துவந்து, கடைசியாக, கேஸரி அச்சுக்கூடத்தில் நிறைவேறியது. இதன் முடிவுக்குப்பட்டணியம் இந்த அச்சுக்கூடத்தார்க்கு இருந்ததுபோலும். இந்தக் கேஸரி அச்சுக்கூடத்தலைவர் ஸ்ரீமான், C. ஸுந்தரமையரவர்கள் இந்த வேலையை மிக்க ப்ரயத்னத்துடன் நடத்திக்கொடுத்தார்கள்.

அப்படியே, இந்த மஹாபாரதம் பைண்டு செய்துகொடுத்த பைண்டர்களும் பலர். இப்போது, சில வருஷங்களாக, சென்னை ஜபகரம் கம்பெனி சொந்தக்காரர் ஸ்ரீமான் C. முருகேச முதலியாரவர்கள் புத்தகங்களை நம்பிக்கைக்கிடமாக நன்கு பைண்டு செய்துகொடுத்துவருகிறார்கள்.

மேலும் சிலவிஷயங்களும் உதவிசெய்தது ஆகையினாலும், ப்ரபலமாகிய மிக்க புண்யக்ஷேத்ரத்துடன் இந்த ஸங்கதியையுங்கூட சேர்த்துவிடவேண்டுமென்னும் ஆசையினாலும் நான் என் ஸ்நேஹிதர் ஸ்ரீமான் ராமகிருஷ்ணையரவர்களுக்கு ஸ்ரீ கண்ணாடி ராமையா என் சிநேஹிதர்களுள் சிலர் என்னுடைமையும் மேன் மேலும் விருத்தி உண்டாகவேண்டுமென்று பலமுறை ப்ரார்த்தித்திருக்கிறார்கள்.

எனக்குத்தெரிந்தவரை ஸாரமும் மிகப்பிரயாஸமும் சிரமுமுடைய இவ்வேலையை ஸாதாரணமாயிருக்கும். ஆயினும் நூற்றுக்கிருபதுவரையில் மொழிபெயர்ப்புக்காகவும் பண்டிதர்களுக்கிருக்கவேண்டிய சில பரிசுகளை இரண்டுமுறையும் மூன்றுமுறையும் மொழிபெயர்க்கையில் சோதிக்க

வும் சேர்ந்ததனுலுண்டான அதிகச்செலவும், மொழிபெயர்ப்பை மூலத்தோடு ஒப்பிடுகிற பண்டிதர்களுக்கும் கூட இருந்து உதவி செய்கிற மற்றவர்களுக்கும் கொடுக்கும் மாதவாரிச் சம்பளமும், காகிதவிலையும், அச்சுக்கூலியும், பயிண்டுக்கூலியும், விளம்பரச்செல வும், வெளியூர்களுக்குப்போய் மஹாபாரதத்தைப்பற்றிப் பிரசாரம் செய்து கையொப்பங்களைச் சேர்த்துவந்த ஏஜண்டுகளுக்குச் சம்ப ளம் படிச்செலவுகளும், வாங்கிய கடனுக்கு வட்டியும் முதலாகப் பலவகைகளிலும் பெருந்தொகை செலவாயிற்று. ஸுமாராகக் கணக்குப் பார்த்ததில், ரூ. 1,35,000-த்துக்குமேல் செலவு தெரி கிறது. இந்த வேலையைத் தொடங்கிச் சில வருஷங்களுக்குள், மொழிபெயர்ப்பு ஸித்தம்செய்வதற்கும் ஆரம்பச்செலவுகளுக்கும் சில ஸஞ்சிகைகள் அச்சிடுவதற்குமாக ரூ. 10,000-த்துக்குமேல் கடன் வாங்கவேண்டிற்று. அதற்கு, ஸுமார் 22 வருஷமாக ஸாதாரணமான வட்டி என்ன ஆயிருக்குமென்பது நான் தெரி விக்கவேண்டியதில்லை. நான் பெரும்பாலும் பாங்குகளிலேயே கடன் வாங்கி 3 மாதத்துக்கொருமுறை வட்டிகொடுத்து வந்தேன். இதனால், எவ்வளவு வட்டி வளர்ந்திருக்குமென்பது, பொருளை வட் டிக்குக் கொடுத்து வாங்கிப் பெருக்கியிருக்கிறவர்களுக்கும் என் னைப்போலப் பெருந்தொகை கடன்வாங்கிப் பலவருஷங்கள் வட்டி கொடுத்து நஷ்டத்தையடைந்தவர்களுக்குமே தெரியும். இதற்குப் புஸ்தகவிலையினாலும் நன்கொடையினாலும் என்னுடைய இதர வருமபடிகளாலும் ஈடானதுபோக, பாக்கி ரூ. 15,000 என் கைப் பொறுப்போடு இந்த மஹாபாரதம் பூர்த்தியாகியிருக்கிறது. மஹாபாரதப்பதிப்பை மேற்கொண்டது எனக்கு இவ்வளவு ப்ர மத்துக்கும் நஷ்டத்துக்கும் காரணமானாலும், அதனால், நான் பெறற்கரும் பேறு பெற்றவனுகிலை என்னை நினைக்கிறேன்.

‘ஞானந்த வைகுந்த நாடெய்தி வாழிலென் ஞாலத்தன்றி
ஈனந்த வாத நிரயத்து வீழிலென் யானடைந்தேன்
கோனந்தன் மைந்தனை நான்முகன் தந்தையைக் கோவிலெல்லா
தானந்த மெனவெனைக் காராவமுதை யளந்தனனே’

என்றபாடலை மனத்தினுள் அடிக்கடி நினைத்துப் பெரிதும் இன்புறு கிறேன்.

ஸமாசாரபத்திரிகைகளில் பிரசுரம் செய்தலாலும் ஏஜண்டு கள் வெளியூர்களுக்குப் போய்ச் சேர்த்தலாலும் பிறவழியாலும் சேர்ந்த கையொப்பக்காரர்களின் தொகை தொடர்ச்சியாக நூறு

மாதிரி இல்லை. ஒரு காலத்தில் 800 கையொப்பத்துக்குமேல் சேர்ந்தன. ஆனால், பலர் தொடர்ச்சியாக வாங்கிக்கொள்ளவில்லை; அதனை முன்னர்த் தெரிவிக்கவுமில்லை. அதனால், ஒவ்வொரு ஸஞ்சிகையும் வெளிவரும்போது நூற்றுக்கணக்கான V. P. கள், போஸ்டேஜ் கஷ்டத்துடன், திரும்பிவந்துவிட்டன. ஸமீபத்தில் அனுப்பிய சஉ-வது ஸஞ்சிகையைப் பலர் திருப்பியிருக்கிறார்கள். உரு வருஷகாலமாகப் பொறுமையோடு சஉ-வது ஸஞ்சிகைவரையில் வாங்கிவந்தவர்கள், சஎ-வது ஸஞ்சிகையில் திருப்பிவிட்டிருக்கிறார்கள். இந்தக் கடைசி ஸஞ்சிகையாகிய சரு-வது ஸஞ்சிகை அனுப்பும்போது எத்தனை கையொப்பக்காரர்கள் திருப்புவார்களோ தெரியவில்லை. கையொப்பக்காரர்கள் உறுதியாக இல்லாமையினாலுண்டாகிற அஸௌகர்யம் மிக அதிகம். இப்பொழுது ஸஞ்சிகையாக வாங்கிக்கொள்ளுகிற கையொப்பங்கள் 250-க்கு உட்பட்டும், பாதிண்டு புஸ்தகமாக வாங்கிக்கொள்ளுகிற கையொப்பங்கள் 250-க்கு உட்பட்டுமே இருக்கின்றன.

இந்த உத்தமோத்தமமான ஸத்காரியத்துக்கு இடையூறு செய்தவர்களும், நான் இந்த மஹாபாரதத்தை ஏதோ ஒரு லாபங் கருதிக் காமுகித்துவருகிறேனென்றுசொல்லி இதனை ஆதரிப்பவர்களுடைய மனத்தை மாறுபடுத்த முயன்றவர்களும் சிலர். அவர்களுடைய முயற்சி, இக்கைங்காரியத்தில் அபிமானமுள்ள உபகாரிகளுடைய மனத்தை மாறுபடுத்தாவிட்டாலும், அவர்கள் இந்த விஷயத்தைப்பற்றி என்னைக் கேட்கும்படிசெய்தது. அதற்கு விவரமான ஸமாதானம் இந்த வளபர்வம் முதற்பாகம் முகவுரையில் தெரிவித்திருக்கிறேன்.

இதுமாத்திரமன்றி, காமேகேட்டுப் புஸ்தகங்களை வாங்கிக் கொண்டு பணங்கொடாமல் என்னையும் என்னுடைய ஏஜண்டுகளையும் பலமுறை அலைபவைத்தவர்களுடம், கன்னிகாடையெரித்தல் முதலிய உபகாரங்களைச்செய்வதாகக் காமேசாஸ்வி, பிறகு கேட்டபோது, என்னையும் மஹாபாரதத்தையும் பலபடத் தூஷித்தவர்களுமாகிய சில கனவான்களுமுண்டு. தனித்தனி கையொப்பக்காரர்களல்லாமல், பொதுஸ்தாபனங்களான சில ஜில்லாபோர்டுகளும் தாலுகாபோர்டுகளும் முனிஸிபாலிடிகளும் முழுப்புத்தகமும் வாங்கிக்கொள்ளக் கொடுத்த உத்தரவை மாற்றி இடையிடையே நிறுத்திவிட்டன. மற்றும் பலவகையில் இடையூறுசெய்தவர்களுமுண்டு. உத்தமோத்தமமான இந்தப் பெரியகைங்கரியத்தில் அவர்

களின் பெயர்களை வெளியிட விருப்பமில்லாமையால் இங்ஙனே குறிக்கவில்லை. இப்படிச் சிலர் இடையூறு செய்த காலங்களில்,

'மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வேவர்தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும்கொள்ளார்
கருமமே கண்ணாயினர்'

என்னும் அருமைச் செய்யுளை அடிக்கடி நினைத்து மனத்தைத் தேறுதல் செய்துகொண்டு காரியத்தை விடாமல் செய்துவந்தேன். சிலர் பொறுமை காரணமாகச்செய்த இடையூறுகள் எனக்கு நன்மையாகவே ஆயின. அனுகூலகாலத்தில் கஞ்சகம் அழுகுமாகுமன்றே? இவ்வளவு அளவளாகியங்களையும் இடையூறுகளையும் இருந்தும் இந்த நற்காரியம் நிறைவேறியதனால், ஒருகாரியம் நிறைவேறக்கூடிய நற்காலம் வந்துவிட்டால், கடவுளருளால், எப்படியும் நிறைவேறவே செய்யுமென்பது நன்கு விளங்குகிறது.

இங்ஙனே தெரிவிக்கவேண்டிய மற்றொரு விஷயம் உண்டு. உண்மை கூறுவதில் அச்சமும் எஜ்ஜாயமும் அடைய வேண்டாவாகையால் அதையும் இங்ஙனே கூறுகின்றனன். எவர்க்கு எங்ஙனம் எவ்வளவிருந்தாலும் மனம் அமைதியாயிராவிடில் ஒரு பெரிய காரியத்தைத் தொடங்கி நிறைவேற்றுவது சிரமமாகும். சிறிதும் கவலையின்றி மன அமைதியோடு வேலைசெய்பவர்களை என் மனைவியும் சிரஞ்சீவி குமாரனும் குறிப்பறிந்து நடந்து வருகிறார்கள். அதனாலேயே, நான் இவ்வளவு இடையூறுகளுக்கும் ப்ரமங்களுக்குமிடையிலும் குடும்பக் கவலையின்றி இந்தப் பெருங் காரியத்தைச்செய்து நிறைவேற்றுவதற்குச் சக்தியுள்ளவனானேன். என் மனைவி, பெரும்பாலும் பெண்பாலார்க்கு இயற்கையாகச் சொல்லுகிறபடி, விலையுயர்ந்த ஆடையணிகள் வேண்டுமென்றும் எனக்கு ப்ரமம் கொடுத்ததில்லை. தன் தந்தையாரால் கிடைத்த நிலத்தின் வருமானத்தை இவ்வளவென்று தெரிந்துகொள்ளுதற்கும் விருப்பினதில்லை. அந்த வருமானத்தையும் நான் இந்த மறுபதிப்புக்கே உபயோகமாகும்படி செய்துவருகிறேன். என்னுடைய குமாரன் சிரஞ்சீவி **M. R.** ராஜகோபாலன், 1921-ஆம் வருஷத் தொடக்கத்திலிருந்து இந்த மறுபதிப்பில் தான் செய்யக்கூடிய வேலைகளைச் செய்துவருகிறான். அவன் சென்னையில் **Messrs.** லாங்மன்ஸ் க்ரீன் கம்பெனியில் ஒரு நல்ல

வேலையிலிருந்தவன்; 1929வது ஸெப்டம்பர்மீ நான் மயிலாப்பூரை விட்டு மணலூருக்கு வந்தபோது, என்னுடைய சரீரத்தளர்ச்சியைப் பார்த்து என் ஸமீபத்தில் இருக்கவேண்டுமென்று விரும்பித் தன்னுடைய வேலையை ராஜீநாமா செய்துவிட்டு, என்னோடுகூட வந்துவிட்டான். புஸ்தகப்பதிப்பு ஸம்பந்தமான காரியங்களை எனக்குச் சிறிதும் கவலையில்லாமல் தானே பொறுத்துப் பார்த்துக்கொள்ளுகிறான். நான் இவனுக்குச் செய்திருக்கிற அனுகூலம், இவனுடைய வேலையை விடச்செய்தீதாடு கடன்முதலிய சில அபிஸளகரியங்களுக்கும் உள்ளாக்கியிருப்பதே. இந்த இருவரும் நல்ல காரியத்துக்காகத் தங்கள் ஸௌகர்யங்களை விட்டவர்களாயிருந்தலால், ஸர்வேச்வரன், ‘நஹி கஶ்சித் கஶ்சித் ஜநயதி தாத மதி;’ என்று தானே சொல்லியதுடல்லாமல், தான் சொல்லியது தவறி வுமிடம் தன் பக்தன் சொன்னதைத் தவறுமல் நிறைவேற்று வதே தன்னுடைய கோட்பாடாதலால், ‘தத் தீஶோ நீஷீதெளஷதமுத’ என்று, முன்னைவிடவும்பிறவினையினும் பிரியோஜநத்தோன்றி புரிந்துவருகிற பரமபக்தனை அர்ஜுனனைக் கொண்டு உபதேசம் கூறுவித்தருளினதலால், இவர்களுக்கு ஸகல க்ஷேமங்களையும் அளித்துக் காப்பாற்றுவானென்றே நம்புகிறேன்.

இந்த மறுபாடகமொழிபெயர்ப்பின் வரலாறு முதலியவை ஆங்கிலத்திலுள்ள முகவுரையிலுள்ளது; கடைசிப்பகுதியுடைய முகவுரையிலுள்ளது இருக்கவேண்டும்; ஆனால், லஜ்ஜாவதியில் இந்த மாணவகம் கடைசியாக முடிக்கமையாதும், தான் முற்றுப்பெறுவதற்கு அதற்கு மேற்பட்ட முகவுரை விவரங்களைத் தெரிவிக்கவேண்டுமாதலாலும், இங்கே மறைக்கப்பெற்றன.

இப்படி மாணவகங்களை இங்கு வினவிக்கு எழுதியது அகவியம் என்று சிலருக்குத் தோன்றலாம். இதுமாத்திரமன்று. மறுபாடகமுறை இங்கிலாழிபெயர்ப்புப்பணியுமே அகவியமென்று சிலர் நினைக்கலாம். அவர்களைக்குறித்து இது எழுதப்பட்டதன்று. அவர்களுக்கு இவற்றின் விபரங்களை என்னதெரியும்? ‘சொற்குப் பொருளெங்கும் முற்றுப்பெறுதென்றும் பலரால் சொல்லப்பட்டதான இப்பிரபந்தம் எப்படித் தொடங்கப்பெற்றது; எப்படி நடக்கிறது; எப்படி முற்றுப்பெற்றது’ என்னும் வரலாறுதெரிந்துகொள்ளுதலில் விருப்பமுடைய அபிமானிகள் சிலர் இருக்கிறார்கள்; தீதகர் விசாரணைகளில் முற்றும் பலர்

இருப்பார்கள்; காலம் முடிவில்லாததாகையால் இனியும் பலர் உண்டாவார்கள். அவர்களுக்காகவே இது எழுதப்பெற்றது.

பல தக்கோர்கள் இதனை உள்ளபடி நன்குமதிக்கிறார்களென் பதே நானடைந்த ஸ்ரமங்களுக்குப் பரிஹாரமாயிருக்கிறது. பல பெரியோர்கள் எழுதிய கடிதங்கள் பலவற்றை அபிப்பிராயபுஸ்தகத்தில் தனியே பதிப்பித்திருக்கிறேன். ஸ்ரீமான், Right Hon'ble V. S. ஸ்ரீநிவாஸசாஸ்திரிகளவர்கள் P. C., (C. H., Ll. D.) எழுதிய லிகிதம் ஒன்றை மாதிரிக்காக இங்கே தெரிவிக்கிறேன்.

'MY DEAR MR. RAMANUJACHARYA,

I am highly honoured by your letter. But, how to answer it is a puzzle.

Your enterprise is great. In the literary world it would be hard to beat. If, being so near completion, it did not actually reach it, the Tamil speaking community would incur great censure. Nor could it escape blame wholly if you found yourself at the end a broken man, dependent on chance for your livelihood. In a world where desert and recompense were justly proportioned, service like yours would be rewarded by an adequate pension and the plaudits of a grateful and admiring public. Your expectations, however, are modest; and I would fain persuade myself they would be fully realised.

Believe me, in genuine appreciation of your courage, piety and self-sacrifice.

ROYAPETTA, MADRAS,
14—4—29.

Yours very sincerely,
V. S. SRINIVASAN.'

ஸ்ரீமதுராபாஷ்யம் உலகத்தில் மிகப்பிரசன்னமாது ஸ்லாகி
தாலும் ஸ்தோத்ரிக்கப்பட்டது. இதில், நூற்றுக்கணக்கான
ஸ்லோக்கணைகள் உள்ளன; தேவர்கள் முனிவர்கள் அரசர்கள்
முதலானவர்களுடைய பெயர்கள் ஆயிரக்கணக்காக வந்துள்ளன
ஒரேபெயர் பலருக்கு வழங்குகிறது. ஒருவருடைய சரித்திரம்
பல இடத்தில் வந்திருக்கிறது. ஓரிடத்தில் சொல்லியிருப்பதை
யும் மற்றோரிடத்தில் சொல்லியிருப்பதற்கும் சில வேறுபாடுகள்

உள்ளன. இந்தமஹாபாரதமுழுமையும் பலமுறைபடித்தாலும் விஷயங்கள் ஞாபகத்தில்நிற்பது அரிது. இவற்றையெல்லாம் ஒழுங்காக எளிதில் தெரிந்துகொள்ளுவதற்கு அபிதானவிளக்கமும் மற்றும் சிலகுறிப்புக்களும் இருப்பது பெரிதும் உபகாரமாகும். ஆனால், இந்தமஹாபாரதத்தினுடைய அபிதானவிளக்கம் முதலியன வேறு சிலபுஸ்தகங்களில்போலச் சிலநாளில் செய்யக்கூடியவையல்ல. ஒருநாலை மொழிபெயர்ப்பதாயின் சிறிது சிறிதாக மொழிபெயர்த்துக்கொண்டே வெளியிடலாம். இந்த அபிதான விளக்கம் முதலியனவை அகாதிவரிசையில் பதிப்பிக்கப்படவேண்டுமாகையால் முழுதும்செய்து ஸித்தமாக வைத்துக்கொண்டுதான் அச்சிடத்தொடங்கவேண்டும். அதற்கு, உருஷம்வரையில் செல்லும். அதற்குத்தக்க பொருளுதவியில்லாமல் அது நிறைவேறுவதன்று. நான் இந்தமஹாபாரதப்பதிப்பை மேற்கொண்டு பலவகை ப்ரமங்களை அனுபவித்தாலும் பொருள் நஷ்டத்தையும் அனுபவித்தாலும், இந்தவேலையை மேற்கொள்ள அசக்தனாக இருக்கிறேன். நமது கவர்ன்மெண்டாரோ ஸர்வகலாசங்கத்தாரோ, அல்லது, தேசாபிமானமும் பாஷாபிமானமும் வாய்ந்த கொடைபோன்களான செல்வவான்களோ அதற்குவேண்டிய பொருளுதவிசெய்து ஆதரிக்க முன்வருவார்களானால் அதிசீக்ரமாக இருந்த விடத்திலிருந்து நிறைவேற்ற ஸித்தனாக இருக்கிறேன். இந்த அபிதானவிளக்கம் முதலியனவை மஹாபாரதத்துடனாவது தனியாகவாவது, மற்ற இதிஹாஸபுராணங்களைத் தெரிந்துகொள்வதற்கும் மிக உபயோகமானவையென்பதை ஒருவரும் மறுக்கமாட்டார்கள். வித்தியாதிபதிகளும் மாதிபதிகளும் சுதேசமன்னர்களும் ஜமீன்தார்களும் பெரிய மிராசுதார்களும் கோடிக்கணக்கான செல்வம் வாய்ந்த வியாபாரிகளும் நினைத்த நமது தமிழ்நாடு முழுதிலும் பெரிய காரியமன்று. எல்லாம் வல்ல கடவுள் இதற்கானதும் கொடுத்தருளவேண்டும்.

தேசம் முழுதிலுமிருந்து இந்த அரிய பெரிய ஸுத்தகார்யத்தை செய்விக்கவும் எல்லோர்க்கும் நியாயவிலையுடன் தரமுள்ளதாக பலமுறை யோசனைசெய்து, இன்னும் சில செல்வவான்களிடமிருந்து ஸுத்தகார்யங்களை முடித்து இன்னும் நியாயவிலையும் சிலவும்செய்து பலமுறை பிரார்த்திக்கிறேன்.

வீற்றிருந் தேழுலகும் தனிக்கோல்செல்ல வீவில்சீர்
ஆற்றல்மிக் காள்ருமம்மானே வெம்மா பிளந்தான் தன்னைப்
போற்றியென்றே கைகளாரத் தொழுது சொல்மாலைகள்
ஏற்றவோற்றேற் கினியென் னகுறை யெழுமையுமே.

என்றும் ஒன்றுகி ஒத்தாருமிக்காக்களும் தன் தனக்கு
இன்றிநின்றானே யெல்லாவுலகும் உடையான் தன்னைக்
குன்றம் ஒன்றால் மழைகாத்தபிரானைச் சொல்மாலைகள்
நன்றுசூட்டும் விதியெய்தினம் என்ன குறைநமக்கே.

என்னெஞ்சத் துள்ளிருந்திங் கிருந்தமிழ்நூ லிவைமொழிந்து
வன்னெஞ்சத் திராணியனை மார்விடந்த வாட்டாற்றான்
மன்னஞ்சப் பாரதத்துப் பாண்டவர்க்காப் பணைதாட்டான்
நன்னெஞ்சே நம்பெருமான் நமக்கருள் தான் செய்வானே.

பிரியாதாட் செய்யென்று பிறப்பறுத்தா னடிக்கொண்டான்
அரியாகி பிரணியனை யாகங்கின் டானன்று
பெரியார்க்காட் பட்டக்கால் பெறுதபயன் பெறுமாறு
வரிவாள்வா யரவணைமேல் வாட்டாற்றான் காட்டுனரே.

(திருவாய்மொழி.)

60, டபீர் மேலத்தெரு,
கும்பகோணம்
15—2—1932.

இங்ஙனம்,
ப. வி. இராமானுஜாசாரியர்.
(மஹாமஹோபாத்யாயர்)

இந்த இரண்டாம் பதிப்பில் புதிதாகவந்த டைடில்கள் இச் ( ) வளவுக்குள் போடப்பட்டுள்ளன.

THE KUPPUSWAMY SASTRI
RESEARCH INSTITUTE,
64, R. H ROAD, MADRAS-4

ஸ்ரீ :

ஸ்ரீ மஹாபாரதம்.

வன பர்வம்.

விஷயஸூசிகை.

ஜடாஸுரவத பர்வம்.

அத்யாயம். பக்கம்.

158 ஜடாஸுரன் பாண்டவர்களிடம் கபடமாக வஸித்தது, ஸமயம்பார்த்து யுதிஷ்டிரர் முதலியவர்களைக் கவர்ந்தோடியதும் 565-566

ஸஹதேவன் தன்னைவிடுவித்துக்கொண்டு பீமனை அழைத்தது ... 566

யுதிஷ்டிரர் ஜடாஸுரனை நிந்தித்துப்பேசியதும், அதிக பராக்ரமுள்ளவரானதும் 566-567

ஸஹதேவன் அஸுரனைச் சண்டைக்கழைத்ததும், பீமஸேனன் வந்ததும் 568

பீமன் அஸுரனை நிந்தித்ததும், இருவரும் வீரவாதத்துடன் போர்தொடங்கியதும் 569-570

நகுலஸஹதேவர்கள் அஸுரனை எதிர்த்தோடிவந்ததும், பீமன் அஸுரனைத் தானே கொல்வதாகச் சொல்லியதும் 570

பீமனுக்கும் ஜடாஸுரனுக்கும் யுத்தமும், பீமன் அஸுரனது தலையைக் கொய்ததும் 570-571

யக்ஷயுத்த பர்வம்.

159 யுதிஷ்டிரர் தம்பிமார்களுடனும் அந்தணர்களுடனும் கலந்துகொண்டு ஹிமபர்வதவழியின் உச்சிக்குப் புறப்பட்டது 572-573

பாண்டவர்கள் இத்தனைநாளில் மலையுச்சியை அடைந்தனரென்பது 573

பாண்டவர்கள் பரிஜனமுதலியவர்களை விருஷபர்வாவினிடம் வைத்துச்சென்றதும், அவன் அவர்களுக்கு வழிகாட்டித் திரும்பியதும் 574

விஷயஸூசிகை.

அத்யாயம்.		பக்கம்.
	பாண்டவர்கள் பலவிடங்களில் தங்கி ஆர்ஷ்டிஷேணாச்ரமம் சென்றது	574-580
160	ஆர்ஷ்டிஷேணர் யுதிஷ்டிரரைக் குசலப்ரச்னஞ் செய்தது	581-582
	ஆர்ஷ்டிஷேணர் யுதிஷ்டிரருக்குக் கைலாஸமலையைப் பற்றிக்கூறி அர்ஜுனன்வரும்வரை அவர்களைத் தமதாச்ரமத்திலேயே வஸிக்கச்சொல்லியது	582-584
161	கருடனது சிறகின்காற்றில் மலர்கள்வந்ததும், திரௌபதி தாமரைமலர் கொண்டுவரும்படி பீமனுக்குச் சொல்லியதும்	585-587
	பீமன் மலையுச்சியில்ஏறிக் குபேரபட்டணத்தைக் கண்டதும், சண்டையில் மணிமான் முதலியவர்களைக் கொன்றதும்	587-591
162	பாண்டவர்கள் திரௌபதியை ஆர்ஷ்டிஷேணாரிடம் வைத்து மலையுச்சியில் ஏறிப் பீமனைக் கண்டது ...	592
	யுதிஷ்டிரர், ராக்ஷஸர்களைக் கொன்றது தகாதென்று பீமனுக்குச் சொல்லியது	592-593
	குபேரன் போருக்கு வந்ததும், பாண்டவர்களைக் கண்டு அன்புள்ளவனானதும்	594-595
	பாண்டவர்கள் குபேரனை வணங்கியதும், பீமன் அஞ்சாமல் நின்றதும்	595
	குபேரன் யுதிஷ்டிரருடனும் பீமனுடனும் முறையே பேசிப் பீமன் செய்கைக்கு மகிழ்ந்தது ...	595-596
	மணிமானுக்கும் குபேரனுக்கும் அகஸ்தியசாபம் வந்ததும், அதற்கு விமோசனமும்	596-597
163	குபேரன் பாண்டவர்களுக்கு உபதேசித்துச் சென்றது ...	598-601
	கார்ய வஸித்திக்குக் காரணமான ஐந்து	598
	இம்மை மறுமைப் பயன்களை அடைபவரும் அடையாதவரும்	598
164	தௌம்யர் மந்த்ரமலை முதலியவைகளைப்பற்றிக் கூறிக் கிரகங்களின் கதிமுதலியவற்றை யுதிஷ்டிரருக்குச் சொல்லியது	602-605
165	கந்தமாதன மலையில் பாண்டவர்களுக்குப் பகலிரவுகளுக்கு வேறுபாடு தெரியாமலிருந்தது	606-607
	அர்ஜுனன் தேவலோகத்தில் அஸ்திரங்களைக் கற்றுக் கந்தமாதன மலைக்கு வந்தது	607-608
	அர்ஜுனன் எத்தனை வருஷம் தேவலோகத்தில் வஸித்தானென்பது	608

விஷயவரிசை.

அத்யாயம்.		பக்கம்.
	நிவாதகவசயுத்த பர்வம்.	
166	அர்ஜுனன் பாண்டவர்களிடம் வந்தது	608-609
	அர்ஜுனன் திவ்யாபரணங்களைத் திரௌபதிக்குக் கொடுத்தது	609
	அர்ஜுனன் தான் திவ்யாஸ்திரங்கள் பெற்றதைச் சுருக்கமாகச் சொல்லியது	609-610
167	இந்திரன் பாண்டவர்களிடம் வந்து வாழ்த்திச் சென்றது...	610-611
	இந்திரன் பாண்டவர்களைச் சந்தித்ததைக் கூறும் அத்யாயத்தைப் படித்தலின் பயன்	611
168-176	அர்ஜுனன் தான்செய்த கிராதயுத்தம் தேவலோகவாஸம் நிவாதகவசயுத்த முதலியவற்றைப் பாண்டவர்களுக்குச் சொல்லியது	612-643
	அர்ஜுனனுக்கும் சிவவேடனுக்கும் யுத்தமும், அர்ஜுனன் பாசுபதாஸ்திரம் பெற்றதும்	613-616
	அர்ஜுனன் லோகபாலர்களிடம் அஸ்திரம் பெற்றது ...	617-618
	இந்திரன் அர்ஜுனனைத் தேவலோகத்துக்கு வரச்சொல்லிச் சென்றது	618-619
	அர்ஜுனன் இந்திரனது தேரில் அசையாமலிருந்ததும், மாதலி அவனைப் புகழ்ந்ததும்	619-620
	அமராவதி நகரின் சிறப்பு	620-621
	இந்திரன் அர்ஜுனனுக்கு அர்த்தாஸனங் கொடுத்தது ...	621
	அர்ஜுனன் ஸ்வர்க்கத்தில் அஸ்திரங்களையும் காந்தர்வித்தையையும் கற்றது	621-622
	இந்திரன் நிவாதகவச வதத்தைக் குருதக்ஷிணையாகக் கேட்டதும், அர்ஜுனன் போர்க்கோலங்கொண்டு புறப்பட்டதும்	622-624
	அர்ஜுனன் நிவாதகவசரது நகரம் சென்று அவர்களுடன் போர்தொடங்கியது	624-626
	அர்ஜுனனுக்கும் நிவாதகவசர்களுக்கும் யுத்தம் ...	626-629
	மாதலியினது தேர்த்தொழிலின் திறமை	627
	அர்ஜுனன் திவ்யாஸ்திரங்களால் அஸுரர்களுடைய மாயைகளை ஒழித்து அவர்களை வதஞ்செய்தது ...	629-631
	மாதலியும் அர்ஜுனனும் பயந்ததும், அர்ஜுனன் தான் தேறி அவனைத் தேற்றியதும்	630-631
	அர்ஜுனன் நிவாதகவசர்களைக்கொன்று ஸ்வர்க்கத்துக்குத் திரும்பியது	632-634

வி ஷ ய வ ரி சை க.

அத்யாயம். பக்கம்.

அர்ஜுனன் நிவாதகவசரின் நகரத்தில் தேவர்கள் புகா
மைக்குக் காரணங்கேட்டதும், மாதலியின் மறு
மொழியும் 634

அர்ஜுனன் ஹிரண்யபுரத்தைப் பார்த்து மாதலியை
வினவியதும், அவன் பௌலோம காலகேயர்களின்
வரலாறு கூறியதும் 635-636

அர்ஜுனன் ஹிரண்யபுரத்தை உடைத்துப் பௌலோ
மர்களையும் காலகேயர்களையுங் கொன்று இந்திரனிடம்
வந்ததும், இந்திரன் அவனை வாழ்த்தியதும் ... 637-642

அர்ஜுனன் பாசுபதாஸ்திரத்தைப் பிரயோகித்ததும்,
அதிலிருந்து பலபிராணிகள் தோன்றி அஸுரரை
அழித்ததும் 639-640

இந்திரன் அர்ஜுனனைப் புகழ்ந்து கவசம் கிரீடமுதலியன
கொடுத்தது 642-643

யுதிஷ்டிரர் எல்லாம் தெய்வாதீனமென்று கூறித் திவ்யா
ஸ்திரங்களைக் காணவிரும்பியதும், அர்ஜுனன் மறுநாள்
காட்டுவதாகச் சொல்லியதும் 643-644

177 அர்ஜுனன் பூமியை ரதமாகச் செய்துகொண்டு திவ்யா
ஸ்திரங்களை காட்டத் தொடங்கியதும், உலகங்கள்
கலங்கியதும் 644-645

நாரதர்வந்து அர்ஜுனனைத் திவ்யாஸ்திரங்களைக் காட்டக்
கூடாதென்று தடுத்தது 645-646

ஆ ஜ க ர ப ர் வ ம்.

178 பாண்டவர்கள் கந்தமாதனத்தில் இத்தனை வருஷம்
வஸித்தனரென்பதும், அதுவரை அவர்களுக்கு வன
வாஸம் இத்தனை வருஷங்கள் ஆயினவென்பதும் ... 647

யுதிஷ்டிரர் தம்பிமாருடன் ஆலோசித்துக் கந்தமாதனத்தி
னின்றும் இறங்கியதும், அவசியமான இடங்களில்
கடோற்கசன் அவர்களைச் சுமந்து சென்றதும் ... 647-649

லோமசர் பாண்டவர்களை வாழ்த்தி ஸ்வர்க்கம் சென்றது 649

179 பாண்டவர்கள் விருஷபர்வாவின் ஆச்ரமம் வந்தது ... 650

பாண்டவர்கள் பதரியில் ஒருமாதம் வஸித்துப் பின்
ஸுபாகுவின் நகரம்வந்து அங்குவிட்டிருந்த பரிஜனங்
களுடன் விசாகயூபம் வந்து ஒருவருஷம் வஸித்தது ... 650-651

பாண்டவர்கள் த்வைதவனம் வந்தது 652

180 பீமஸேனன் மஹிப்பாம்பினால் பிடிக்கப்பட்டது ... 654-655

அத்யாயம்.		பக்கம்.
181	மஹிஷப்பாம்பு தான் மஹிஷப்பாம்பானதற்குக் காரணத்தைத் பீமனுக்குச் சொல்லியது	656-658
	பீமன் மஹிஷப்பாம்பின் வாயிலிருந்து அசையமாட்டாமல் புலம்பியது	658-659
	யுதிஷ்டிரர் துர்நிமித்தங்களைக் கண்டு பீமனைத் தேடி அவன் மஹிஷப்பாம்பினால் பிடிக்கப்பட்டிருந்ததைக் கண்டது	659-660
182-183	யுதிஷ்டிரருக்கும் மஹிஷப்பாம்புக்கும் ஸம்வாதம் ...	661-662
	ஸர்ப்பத்தின் வினவும் யுதிஷ்டிரர் விடையும் ...	662-664
	யுதிஷ்டிரர் வினவும் ஸர்ப்பத்தின் விடையும் ...	665-669
	விமானம்வந்ததும், நஹுஷன் ஸ்வர்க்கஞ் சென்றதும் ...	669

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம்.

184	யுதிஷ்டிரர் முதலியவர்கள் கார்கூதிர்காலங்களை த்வைத வனத்தில் கழித்துக் காம்யகவனம் சென்றது ...	670-671
185	கண்ணபிரான் ஸத்யபாமையுடன் காம்யகவனம்வந்து பாண்டவர்களுடன் அளவளாவியது	672-676
	மார்க்கண்டேயர் வந்து பூஜிக்கப்பெற்றதும், கோவிந்தர் பூர்வகதைகளைச் சொல்லும்படி அவரை வேண்டினதும்	676
	நாரதர்வந்ததும், பாண்டவர் முதலியோர் அவரைப் பூஜித்ததும்	676
	நாரதர் மார்க்கண்டேயரைக் கதைசொல்லச் சொல்லியது	676-677
186-233	மார்க்கண்டேயர் யுதிஷ்டிரர் முதலியவர்களுக்குக் கதைசொல்லிடது	678-886
	பண்டைக்காலத்து மனிதரும் பிற்காலத்து மனிதரும் ...	678-679
	அஜ்ஞானிகளின்கதியும் ஞானிகளின்கதியும் ...	679-681
	அரிஷ்டநேமிமுனிவர் மரித்தவரைப் பிழைப்பித்ததும், மிருத்யுபயமில்லாமலிருத்தற்குரிய ஒழுக்கங்களும் ...	682-684
	பிருகுசக்ரவர்த்தியின் அஸ்வமேதயாகமும், அத்ரிக்கும் கௌதமருக்கும் விவாதமும்	685-688
	அத்ரிமுனிவர் பிருகுவினிடம் பொருள் பெற்றது ...	688
	தானம் அக்னிஹோத்ரம் மோக்ஷம் முதலியவற்றைப் பற்றித் தார்க்ஷ்யருக்கும் ஸரஸ்வதிக்கும் ஸம்பாஷணை ...	689-693
	முதலில் ஸ்வர்க்கம்போகிறவன்	689
	விஷ்ணு வைவஸ்வதமனுவுக்குப் புத்ரரானதாகிய மத்ஸ்யோபாக்யானம்	693-698

விஷய வரிசை.

அத்யாயம்.			பக்கம்.
மனுசரித்திரத்தைக் கேட்டலின்பலன்	...	...	698
யுகங்களின் காலஅளவுமுதலியன	...	...	700-701
பிரளயலக்ஷணம்	...	...	701-706
மார்க்கண்டேயர் ஹரியின் வயிற்றினுள் புகுந்து பிரம்மாண்டங்களைப் பார்த்துத் திரும்பியது	...	...	707-709
விஷ்ணு தமது மகிமையைக்கூறி மறைந்தது	...		710-714
மார்க்கண்டேயர் சொற்படி பாண்டவர்கள் கிருஷ்ணனை வணங்கியதும், அவர் அவர்களைத் தேற்றியதும்	...		715
கலியில் வருங்காலநிலைமை	...	...	716-723
கிருதயுகவரலாறும் கல்கிஅவதாரமும்	...	...	723-726
மார்க்கண்டேயர் யுதிஷ்டிரருக்குச் சில உபதேசங்கள் செய்தது	...	...	727
தவளையின் உபாக்யானம்	...	...	728-737
வாமதேவரின் மகிமை	...	...	732-737
ஸுகதுக்கங்களை நிரூபிப்பதான இந்திரனுக்கும் பகருக்கும் நடந்த ஸம்பாஷணை	...	...	738-740
க்ஷத்ரியனுடைய மகிமையைத் தெரிவிப்பதான ஸுஹோத்ரன் சிபி இவர்களின் வரலாறு	...	...	740-741
யயாதி பிராம்மணனுக்குக் கோதானம் செய்தது	...		742
ஸேதுகன் விருஷதர்ப்பன் இவர்களின் வரலாறு	...		743-744
சிபி புறுவைக்காத்த கதை	...	...	744-747
சரணமடைந்தவனைக் கைவிட்டவருக்கு வரும் தீமைகள்	...		745
புரு சிபிக்கு வரங்கொடுத்தது	...	...	747
நாரதர் அஷ்டகன், பிரதர்த்தனன், வஸுமான், சிபி இவர்களின் தாரதம்யத்தைக்கூறித் தானமகிமையைச் சொல்லியது	...	...	748-751
புகழும் வசையும் முறையே ஸ்வர்க்கவாஸத்துக்கும் நரகவாஸத்துக்கும் காரணமென்பதை விளக்கும் இந்திரத்யும்நோபாக்யானம்	...	...	752-754
ஸ்வர்க்கத்தையடைவதற்குக் காரணமான பொதுத் தர்மங்கள்	...	...	755-768
பயனில்லாத ஜன்மங்கள்	...	...	755
பயனற்ற தானங்கள்	...	...	756
பிராம்மணர்கள் கரையேறவும் கரையேற்றவும் ஸாதனங்கள்	...	...	757
ஸ்ராத்தத்தில் உபயோகிக்கத் தகாதவர்கள்	...		757
யமலோகம் செல்லும் வழியின் அளவு அதனைக் கடக்கும் உபாயம் முதலியன	...	...	760-761

விஷய ஸூசிகை. ஏ

அத்யாயம். பக்கம்.

தர்மங்களைக் கேட்டலின்பயன் 763

மூன்றுவித சௌசங்கள் 763

மனத்தில் களங்கம் நீங்காதவர்களுக்கு வேஷங்கள் மோக்ஷஸாதனமாகாவென்பது 764-766

ஞானகர்மங்களே மோக்ஷஸாதனமென்பது ... 766

துந்துமாரோபாக்யானம் 769-783

உதங்கர் ஹரியைத்துதித்து வரம்பெற்றது 770-772

பிருஹதச்வன் தவத்துக்குப் புறப்பட்டதும், உதங்கர் துந்துவைக் கொல்ல ஏவியதும் 772-775

பிருஹதச்வன் துந்துவைத் தன்புத்ரன்கொல்வானென்று சொல்விச் சென்றது 775

மதுகைடபர் வரலாறும் வதமும் 776-778

துந்துவின் வதமும் குவலாச்வன் துந்துமாரனானதும் ... 781-782

துந்துமாரோபாக்யானத்தைக் கேட்டலின்பயன் ... 782-783

பெற்றோர்களின் அருமைபெருமைகளும், அவர்களை உபசரித்தலின் இன்றியமையாமையும் 784-785

தர்மவியாதோபாக்கியானம் 785-830

கௌசிகன் கொக்கை எரித்தது 786

கௌசிகன் பதிவ்ரதையைப் பார்த்துக் கோபித்ததும், அவள் அவனைத் தர்மவியாதரிடம போகச் சொல்லியதும் 787-790

கோபம் உடலிலுள்ள பகைவனென்பது 788

எப்படிஎப்படி இருப்பவன் பிராம்மணனென்பது ... 788-789

தர்மவியாதர் கௌசிகனுக்கு உபதேசித்தது ... 792-829

தத்தமக்குரிய தொழிலே சிறந்ததென்பதும், மற்றும் பலதர்மங்களும் 792-796

ஐந்து பவித்ரங்கள் எவை என்பது 796

சிஷ்டர்களும் சிஷ்டாசாரங்களும் 796-800

எதுஎதற்கு எதுஎது ஸாரமென்பது 797

ஸாதுக்களின் லக்ஷணம் 799-800

ஹிம்ஸை விலக்கமுடியாததென்பதும், தத்தம் தொழிலே சிறந்ததென்பதும் 800-804

பொய் மெய்யாவதும் மெய் பொய்யாவதும் ... 804

எது ஸத்யமென்பது 804

முயற்சியினும் தெய்வமே வலிதென்பது 804-806

ஜீவன் சாச்வதனென்பதும், ஜீவன்பிறத்தலும், வினைகளின் பயனும் 806-809

விஷய வரிசை.

அத்யாயம்.		பக்கம்.
விருப்பு வெறுப்பு லோப மோஹங்களும், அவற்றால் வருந் தீமைகளும்	... ...	810
அவ்யக்தம் ஜடப்பொருள்களின் கூட்டமுதலியன	...	811
ஐந்துபூதங்களின் குணங்கள்	... ...	812
ஜீவர்களின் ஜனனமரணங்கள்	... ...	812-813
வ்யக்தாவ்யக்தங்களின் லக்ஷணம்	... ...	813
எவனே வினைப்பயன்கள் அணுகாவென்பது	...	813
பிரம்மலக்ஷணம்	... ...	813
தவம் ஸ்வர்க்கம் நரகம் இந்திரியநிக்ரக முதலியன	...	813-814
முக்குணங்களும் அவற்றை உடையவரும் ...	...	815-816
எப்படி எப்படியிருப்பவருக்கு எந்தவந்த ஜாதித்தன்மை உண்டாகுமென்பது	... ...	816
பிராணன்முதலிய வாயுக்களும் அவற்றின் செயல்களும்	...	816-818
ஜீவாத்ம பரமாத்ம லக்ஷணம்	... ...	818-819
யோகிகள் கடவுளைக் காண்பது	... ...	819-820
எது எதினின்று எதுவதைப் பாதுகாக்க வேண்டுமென்பது	... ...	820
ஸத்யத்தின் பெருமையும் லக்ஷணமும்	... ...	820
எப்படியிருப்பவன் தியாகியென்பது	... ...	820
வியோகம் யோகமாவது	... ...	820
பொதுவான சில ஒழுக்கங்கள்	... ...	820-821
மோக்ஷலக்ஷணம்	... ...	821
தர்மவ்யாதர் தம்பெற்றோர்களைக் கௌசிகனுக்குக் காட்டியது	... ...	821-822
தர்மவ்யாதர் பெற்றோரை வணங்கியதும், அவர்கள் அவரை வாழ்த்தியதும்	... ...	822
தர்மவ்யாதர் பெற்றோரின் பெருமையையும் தாம் அவர்களுக்குப் பணிசெய்யுமுறையையும் கௌசிகனுக்குச் சொல்லியது	... ...	823-824
தர்மவ்யாதர் தமது ஞானதிருஷ்டிக்குக் காரணத்தைக் கூறிக் கௌசிகரைப் பெற்றோர்க்குப் பணிசெய்ய ஏவியது	... ...	824-825
கௌசிகன் தர்மவ்யாதரைப் புகழ்ந்து அவரது முன்வினையைப்பற்றி வினவியதும், அவர் தமது முற்பிறப்பு முதலியவற்றைக் கூறியதும்	... ...	825-828
மனிதர் தொழிலால் ஜாதியை அடைவது ...	...	828
எது எதனால் எது எதனைப் போக்க வேண்டுமென்பது	...	828

அத்யாயம்.		பக்கம்.
	துக்கம், அதிருப்தி, திருப்தி முதலியன	828-829
	கௌசிகன் விடைபெற்றுச்சென்று பெற்றோர்க்குப் பணிசெய்தது	829-830
	ஆங்கிரஸோபாக்யானம்	831-886
	அங்கிரஸ் அக்னியானதும், அக்நி அவரைக்கண்டு பயந்ததும்	831
	அங்கிரஸ் அக்நிக்குத் தேறுதல்சொல்லித் தாம் புத்ரரானது	832
	தேவர்கள் அங்கிரஸின் சொற்படி பிருஹஸ்பதியைக் குருவாகக்கொண்டது	832
	அக்நிகளின் உத்பத்தி முதலியன	833-838
	யாகங்களைக்கெடுக்கிற பதினைந்து அஸுரர்களின் பிறப்பு ...	838-839
	அக்நிகளின் வம்சவிவரணம்	839-846
	அக்நிக்கு நேரும் தோஷங்களுக்குப் பிராயச்சித்தங்கள் ...	842-843
	மீன்கள் ஸஹாக்நி ஒளிந்த இடத்தைச் சொல்லியதும், ஸஹாக்நி அவற்றைச் சபித்ததும்	844
	தாதுக்கள், ரத்னங்கள், மரங்கள் இவற்றின் உற்பத்தி ...	844-845
	அத்ரி அக்நிகளை படைத்தது	845
	தேவஸேனை நாயகனை விரும்பியது	847
	இந்திரன் கேசியை அடித்ததும், அவன் தேவஸேனையை விட்டோடியதும்	847-848
	கன்னிகை தன்னையும் தன் விருப்பத்தையும் தெரிவித்தது	848
	இந்திரன் உற்பாதங்களைக் கண்டு, கன்னிக்குப் பதினைத் தரும்படி பிரம்மதேவரை வேண்டியதும், அவர் உண்டாவனென்றதும்	849-850
	அக்நி ஸப்தரிஷிபத்னிகளை விரும்பியதும், அவர்கள் கிடையாமையால் வனஞ்சென்றதும்	851
	ஸ்வாஹாதேவி ஸப்தரிஷிபத்தினிகளில் அருந்ததியல்லாத மற்றவர்களின் வேஷத்துடன் அக்நியை அடைந்தது	851-853
	ஸ்வாஹாதேவி கருடபக்ஷியாகி அக்நியின் வீர்யத்தை ஸ்வர்ணகுண்டத்தில் போட்டது	853-854
	அக்நியின் வீர்யம் ஸ்கந்தனானது	854
	ஸ்கந்தருக்கு வில்முதலியன வந்ததும், அவர் கிரௌஞ்ச கிரியைப் பிளந்ததும்	854-855
	ஸப்தரிஷிகள் அருந்ததியைத்தவிர மற்ற அறுவரைத் தள்ளியது	857

அத்யாயம்.		பக்கம்.
	விஶ்வாமித்ரர் ஸ்கந்தருக்கு ஜாதகர்ம முதலியன செய்தது	857
	தேவர்கள் ஸ்கந்தரைச் சரணமடைந்தது	860
	இந்திரன் ஸ்கந்தரை வஜ்ரத்தாலடித்ததும், விசாகன் உண்டானதும்	860
	இந்திரன் ஸ்கந்தரைச் சரணமடைந்ததும், அவர் அவனுக்கு அபயமளித்ததும்	860
	குமாரர்களும் கன்னிகைகளும் உண்டானது ...	861
	ஸப்தரிஷிகளும் இந்திரனும் ஸ்கந்தரை இந்திரனுக வேண்டினதும், அவர் மறுத்ததும் ...	863-864
	இந்திரன் மறுபடியும் வற்புறுத்தியதும், ஸ்கந்தர் மறுத்து ஸைந்யாதிபத்யமானதும்	864
	ஸ்கந்தர் ருத்ரபுத்ரரானது	865
	ஸ்கந்தர் தேவஸேனையை மணந்தது	866-867
	லக்ஷ்மி பஞ்சமியானதும், ஷஷ்டிதிதி மஹிமைபெற்றதும் ...	867
	அபிஜித் நக்ஷத்ரங்களைவிட்டு விலகியதும், கிருத்திகைகள் நக்ஷத்ரங்களில் சேர்ந்ததும்	868
	நிசுமாரகக்ரஹங்களும் அவற்றுக்குச் சாந்தியும் ...	870-872
	மனிதரைப் பீடிக்கும் க்ரஹங்களும் அவற்றால் பற்றப் படாதவர்களும்	872-873
	ஸ்வாஹாதேவி அக்நியோடு வஸிப்பவளானது ...	874
	மிஞ்சிகையும் மிஞ்சிகனும் வ்ருக்ஷகைகள் முதலியவர்களும் உண்டானது	874-875
	பரமசிவன் பத்ரவடத்துக்குப் புறப்பட்டதும், தேவ ஸேனைகளைக் காக்கும்படி ஸ்கந்தருக்குக் கட்டளையிட்டதும்	876-879
	தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் யுத்தமும், ஸ்கந்தர் மஹிஷாஸுரனைக் கொன்றதும்	879-882
	ஸ்கந்தோத்பத்தியைக்கூறும் உபாக்யானத்தைப் படித்தல் முதலியவற்றின் பலன்	883-884
	ஸ்கந்தருடைய நாமங்கள்	884
	ஸ்கந்தருடைய நாமங்களைப் படித்தலின் பலன் ...	884
	மார்க்கண்டேயர்செய்த ஸ்கந்த ஸ்தோத்ரம் ...	884-886
	ஸ்கந்தஜனனத்தைப் படித்தல் முதலியவற்றின் பலன் ...	886
	த்ரௌபதீ ஸத்யபாமாஸம்வாத பர்வம்.	
234	ஸத்யபாமை த்ரௌபதியிடம் பர்த்தாவை வசப்படுத்த உபாயங் கேட்டது	886-887

அத்யாயம். பக்கம்.

திரௌபதி பதிவ்ரதாதர்மத்தை ஸத்யபாமைக்குக் கூறியது 887-892

ஸத்யபாமை தன்னை மன்னிக்கும்படி திரௌபதியை வேண்டினது 892

235 திரௌபதி, கிருஷ்ணனிடம் நடந்துகொள்ளவேண்டிய முறையை ஸத்யபாமைக்குக் கூறியது 892-894

236 ஸத்யபாமை திரௌபதிக்கு இன்சொற்கூறியது ... 894-895

கிருஷ்ணன் ஸத்யபாமையுடன் துவாரகை சென்றது ... 896

கோஷயாத்ரா பர்வம்.

237 பிராம்மணன் பாண்டவர்களின் வரலாற்றைத் திருதராஷ்டிரனுக்குக் கூறியது 897

திருதராஷ்டிரன் பாண்டவர்களின் ஸ்ரமத்தைக் கேட்டுப் புலம்பியது 897-900

238 தன்செல்வத்தைக் காட்டிப் பாண்டவர்களுக்கு மன வருத்தத்தை உண்டுபண்ணுவதற்காக த்வைதவனத்துக் குப் போகும்படி கர்ணனும் சகுனியும் துரியோதனனை ஏவியது 900-902

239 துரியோதனன் த்வைதவனத்துசெல்ல உபாயங்கேட்டதும், கர்ணனும் சகுனியும் கோஷயாத்ரையை உபாயமாகக் கூறியதும் 903-905

240 துரியோதனன் கோஷயாத்ரைக்கு அனுமதிகேட்டதும், திருதராஷ்டிரன் மனமில்லாமலே அனுமதிகொடுத்த தும் 905-907

துரியோதனன் பரிவாரங்களுடன் த்வைதவனத்துசென்று தரத்தில் வசித்தது 907

241 துரியோதனன் பசுக்களைக் கணக்கிட்டதும், வேட்டை யாடியதும் 908-909

துரியோதனன் விடுதிகளமைக்கச்சொல்லியதும், வேலைக் காரர்களைக் கந்தர்வர்கள் தடுத்ததும் 909

துரியோதனன் கந்தர்வர்களை ஓட்டும்படி படைவீரர் களுக்குச் சொல்லியதும், அவர்கள்போய்க் கந்தர்வர் களின் சொல்லால் திரும்பி ஓடியதும் 910

242 கௌரவர்களுக்கும் கந்தர்வர்களுக்கும் யுத்தமும், கர்ணன் தோற்றோடியதும் 911-914

243 சித்ரஸேனன் துரியோதனனைப் பிடித்துக்கட்டித் தன் தேரிலேற்றியது 914-915

அத்யாயம்.		பக்கம்.
	மற்றக்கந்தர்வர்கள் துச்சாஸனன் முதலியவர்களையும் ராஜமஹிஷிகளையும் பிடித்தது	915
	சேனைவீரர்கள் யுதிஷ்டிரரிடம் வந்து முறையிட்டதும், பீமன் கந்தர்வர்களின் செயலைக் கொண்டாடியதும் ...	915-916
244	யுதிஷ்டிரர் கௌரவர்களை அவஸ்யம் விடுவிக்கவேண்டு மென்றது	916-917
	யுதிஷ்டிரர் பிறரால் அவமதிப்பு நேரும்போது, தாம் நூற்றைவரென்றதும், தங்களுள் பகைவந்தால் தாம் ஐவரும், துரியோதனாதியர் நூற்றுவருமென்றதும் ...	917
	பீமன் துரியோதனனுடைய அக்ரமங்களை எடுத்துக் காட்டி அவனுக்காக வருந்தவேண்டாமென்று யுதிஷ்டிரருக்குச் சொல்லியது	917-918
	துரியோதனன் தங்களை விடுவிக்கும்படி யுதிஷ்டிரரைக் கூவிப் புலம்பியது	918
	யுதிஷ்டிரர் கௌரவர்களை விடுவிக்கும்படி பீமன் முதலியவர்களுக்குக் கட்டளையிட்டதும், அர்ஜுனன் தான் அவர்களை விடுவிப்பதாகப் பிரதிஜ்ஞைசெய்ததும் ...	919
245 - 246	பீமன் முதலிய நால்வருக்கும் கந்தர்வர்களுக்கும் யுத்தம்	920-924
	சித்ரஸேனன் மாயாயுத்தம்செய்ததும், அர்ஜுனன் அவன் மீது அம்புதொடுத்ததும்	924
	சித்ரஸேனன் தான் நண்பனென்பதைத் தெரிவித்ததும், அர்ஜுனன் அஸ்திரத்தைத் திருப்பியழைத்ததும் ...	924
	மற்றப்பாண்டவர்கள் போரைநிறுத்தி க்ஷேமம் விசாரித்தது	924
247	சித்ரஸேனன் கௌரவர்களைக் கட்டினதற்குக் காரணங்கூறி அவர்களை யுதிஷ்டிரரிடம் கொண்டுவந்தது ...	925-926
	யுதிஷ்டிரர் கௌரவர்களை அவிழ்த்துவிடச் செய்தது ...	926
	சித்ரஸேனன் சென்று நடந்தவற்றை இந்திரனிடம் தெரிவித்ததும், இந்திரன் இறந்த கந்தர்வர்களைப் பிழைப்பித்ததும்	926-927
	யுதிஷ்டிரர் துரியோதனனுக்குப் புத்திகூறியதும், துரியோதனன் ஹஸ்தினாபுரத்துக்குத் திரும்பியதும். ...	927
248	துரியோதனன் நடுவழியில் தங்கியதும், கர்ணன் வந்து அவனைப் புகழ்ந்ததும்	928-929
249 - 251	துரியோதனன் தங்களைக் கந்தர்வர்கள் கட்டியதையும் பாண்டவர்கள் கந்தர்வர்களை வென்று தங்களை	

விஷய வரிசை.

அத்யாயம்.		பக்கம்.
	விடுவித்ததையும் தான் பிரரூயோபவேசம் செய்ய நிச்சயித்ததையும் கூறியது	929-933
	துரியோதனன் துச்சாஸனனிடம் ராஜ்யத்தை ஒப்பித்தும், அவன் அதனை மறுத்துத் துரியோதனனையே நாட்டையாளவேண்டி அழுததும்	933-934
	கர்ணன் துரியோதனனைத் திருப்புவதற்காக இன்சொற் கூறியது	934-936
	கர்ணன், குடிகள் அரசனுக்குச் செய்யவேண்டிய கடமையைப் பாண்டவர்கள் செய்தனரென்றது ...	935-936
252	சகுனி பாண்டவர்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்கும்படி துரியோதனனுக்குச் சொல்லியது	936-937
	துரியோதனன் பிராயோபவேசத்தில் உறுதியுடனிருந்தும், அஸுரர்கள் அவனைப் பாதாளத்துக்குத் தருவித்ததும்	938-940
253	தானவர்கள் துரியோதனனுக்கு உபதேசித்தனுப்பியது ...	940-943
	துரியோதனனுடைய சரீரம் ஈச்வரராலும் தேவியாலும் பாதிவஜ்ரமயமாகவும் பாதி புஷ்பமயமாகவும் அமைக்கப்பட்டதென்பது	940-941
	துரியோதனனுக்கு உதவிக்காக அஸுரர்களே அரசராகப் பிறந்தனரென்பதும், அஸுரர்கள், பீஷ்மர் துரோணர் முதலியவர்களிடத்தும் ஆவேசிப்பரென்பதும் ...	941
	ராகனுடைய ஆத்மா கர்ணனிடம் பிரவேசித்திருக்கிறதென்பது	942
	அஸுரர்களும் ராக்ஷஸர்களும் ஸம்சப்தகர்களாகப் பிறந்தது	942
	துரியோதனன் அஸுரர்களுக்கும் பாண்டவர்கள் தேவர்களுக்கும் முறையே கதியென்பது	942
	துரியோதனன் பாண்டவர்களை வெல்வதில் உறுதிகொண்டது	943
	கர்ணன் அர்ஜுனனைக் கொல்வதாகப் பிரதிஜ்ஞைசெய்ததும், துரியோதனன் பிராயோபவேசத்தைவிட்டு நகரடைந்ததும்	943-945
254	பீஷ்மர் துரியோதனனிடம் பாண்டவர்களைப் புகழ்ந்து அவர்களுடன் நட்புக்கொள்ளச் சொல்லியதும், கர்ணனை இகழ்ந்ததும்	945-946
	கர்ணன் திக்குவிஜயம்செய்ய விரும்பியதும், துரியோதனன் அவனைப் புகழ்ந்ததும்	946-947

வி ஷ ய வரி சி கை.

அத்யாயம். பக்கம்.

கர்ணன் திக்குவிஜயத்துக்குப் புறப்பட்டது ... 947-948

255 கர்ணன் எல்லா அரசர்களையும் வசப்படுத்தி ஹஸ்தினபுரம் வந்ததும், துரியோதனன் அவனைப் புகழ்ந்ததும் ... 948-950

கர்ணன் திருதராஷ்டிரனை வணங்கியதும், அவன் வாழ்த்தியதும் 951

256 துரியோதனன் கர்ணனுடன் ஆலோசித்து ராஜஸூய யாகத்தைச் செய்விக்கும்படி புரோகிதரை வேண்டினதும், அவர் அதனை மறுத்து வைஷ்ணவயாகம் செய்யச் சொல்லியதும் 951-953

257 விதுரர் யாகத்துக்கு வேண்டிய பொருள்கள் வித்தமானதைத் தெரிவித்ததும், திருதராஷ்டிரன் துரியோதனனுக்கு யாகஞ்செய்ய அனுமதிகொடுத்ததும் ... 953-954

துரியோதனன் யாகதீக்ஷையூண்டது 954

துரியோதனன் அரசர்களுக்குத் தூதர்களை அனுப்பியதும், துச்சாஸனன் பாண்டவர்களை அழைக்கச் சொல்லியதும் 954

தூதன் பாண்டவர்களை அழைத்ததும், அவர்களின் மறுமொழியும் 954-955

துரியோதனன் யாகத்தைமுடித்து ஹஸ்தினபுரத்திற் பிரவேசித்தது 955

258 கர்ணன் துரியோதனனைப் புகழ்ந்ததும், அவனுடைய மறுமொழியும் 957

துரியோதனன் ராஜஸூயம்செய்ய விரும்பியதும், கர்ணன் அர்ஜுனனைக் கொல்வதாகச் சபதஞ்செய்ததும் ... 957

யுதிஷ்டிரர் கர்ணனுடைய பிரதிஜ்ஞையை அறிந்து கவலையுற்றது 958

ம்ருகஸ்வப்நோத்பவ பர்வம்.

259 த்வைதவனத்திலுள்ள ம்ருகங்கள் தங்களைக் கொல்லாமல் விட்டு வேறுவனஞ்செல்ல வேண்டினதும், யுதிஷ்டிரர் ஸம்மதித்ததும் 959-960

பாண்டவர்கள உடன்வஸிப்பவர்களோடு காம்யகவனம் சென்றது 960

வ்ரீஹித்ரௌணிக பர்வம்.

260 பாண்டவர்களுக்கு வனவாஸத்தில் பதினொரு வருஷம் சென்றதும், வியாஸர் அவர்களிடம் வந்ததும் ... 961

விஷய வரிசை.

அத்யாயம்.		பக்கம்.
	வியாஸர் தவத்தின்சிறப்பு தானத்தின்பெருமை முதலிய வற்றை யுதிஷ்டிரருக்குக் கூறியது	962-964
	தவத்தின் சிறப்பு	962
	நல்வினை செய்பவர்களுக்குரிய ஸாதனங்கள்	962
	இம்மையில் செய்தது மறுமையில் அனுபவிக்கப்படுத லால் தவத்தையும் தானத்தையும் செய்யவேண்டு மென்பது	962-963
	இன்ன இன்ன நல்வினை செய்பவர் இன்ன இன்ன பயனை அடைவரென்பது	963
	தவத்திலும் தானம் சிறந்ததென்பது	963-964
	பொருளை நல்வழியில்தேடியே தானம் செய்யவேண்டு மென்பது	964
	தர்மத்துடன்கூடிய ஸ்ரத்தையின்பயன்	964
261 . 262	வியாஸர் முத்கலர்கதையை யுதிஷ்டிரருக்குக் கூறித் தேற்றிச் சென்றது	965-974
	முத்கலர் பதக்குநெல்லைச் சேர்த்து இஷ்டிகளைச்செய்து பதினைந்து நாளுக்கொருமுறை ஆகாரஞ் செய்து வந்தது	965
	முத்கலர் அதிதிபூஜை செய்ததும், அதிதிகளைக் காணுந் தோறும் அவருக்கு அன்னம் வளர்ந்துவந்ததும் ...	965-966
	துர்வாஸர் முத்கலரிடம் ஆறுபருவங்கள் தொடர்ந்துவந்து அன்னத்தை மிச்சமின்றிப் புசித்ததும், முத்கலர் சிறிதும் வேறுபடாமலிருந்ததும்	966-967
	துர்வாஸர் முத்கலரைப் புகழ்ந்து சரீரத்துடன் ஸ்வர்க் கத்தை அடைவீரென்றதும், தேவதூதன் விமானத் துடன் வந்ததும்	967-968
	பசியினால் வரும் தீமைகள்	967
	நாவின் தன்மை	967
	தவம் இன்னதென்பது	967
	தேவதூதன் முத்கலரை ஸ்வர்க்கத்துக்கழைத்தும், அவர் ஸ்வர்க்கத்தைப்பற்றி வினவியதும்	968
	தேவதூதன் ஸ்வர்க்கத்தினுடைய குணங்களையும் தோஷங் களையும் முத்கலருக்குக் கூறியது	969-972
	ஸ்வர்க்கம் செல்லாதவரும் செல்பவரும்	969
	நல்வினையே ஸ்வர்க்கத்தையடையக் காரணமென்பது ...	970
	பிரம்மலோகத்தின் சிறப்பு	970-971
	கர்மபூமியும் பலபூமியும்	972

அத்யாயம். பக்கம்.

முத்கலர் தோஷமற்ற உலகத்தை வினவியதும், தேவதூதன் விஷ்ணுலோகத்தைப்பற்றிக் கூறியதும் ... 972-973

முத்கலர் ஸ்வர்க்கஞ்செல்ல மறுத்துத் தேவதூதனை அனுப்பிவிட்டு யோகஞ்செய்து முக்திபெற்றது ... 973

த்ரௌபதீவறாண பர்வம்.

263 துர்வாஸர் துரியோதனனிடம் வரவித்ததும், அவன் அவரை நன்கு உபசரித்ததும் 975

துர்வாஸர் வரங்கொடுப்பதாகச் சொல்லியதும், துரியோதனன் வரம்பெற்று மகிழ்ந்ததும் 975-977

264 துர்வாஸர் சிஷ்யர்களுடன் அகாலத்தில் பாண்டவர்களிடம் வந்து அன்னங்கேட்டதும், யுதிஷ்டிரர் ஸம்மதிக்க அவர்கள் நீராடச்சென்றதும் 977-978

திரௌபதி கோவிந்தரைத் துதித்ததும், அவர் வந்ததும் ... 978-979

திரௌபதி துர்வாஸருடைய வரவு முதலியவற்றைக் கோவிந்தருக்குத் தெரிவித்ததும், கோவிந்தர் தமக்குப் போஜனம் வேண்டினதும் 979

திரௌபதி அன்னமில்லையென்றதும், கோவிந்தர் பாத்திரத்தைக் கொணர்ந்து காட்டச்சொல்லியதும் ... 979

கோவிந்தர் பாத்திரத்தின் கழுத்தில் ஒட்டியிருந்த கீரையையும் பருக்கையையும் புசித்து, ஹரியானவர் திருப்தியடையட்டுமென்றது 979

கோவிந்தர் முனிவர்களைப் போஜனத்துக்கு அழைத்துவரும்படி பீமனை அனுப்பியது 980

ரிஷிகள் நீராடும்போதே பசிதீர்ந்ததும், துர்வாஸர் பயந்து பாண்டவர்களைப் புகழ்ந்ததும், அவர் கட்டளைப்படி முனிவர்கள் ஓடிப்போனதும் 980

பீமன் தேடி முனிவர்கள் ஓடிவிட்டதை அறிந்துவந்து யுதிஷ்டிரரிடம் சொல்லியது 980-981

பாண்டவர்கள் துர்வாஸர்விஷயத்தில் கவலைப்பட்டதும், கோவிந்தர் அவர்களைத் தேற்றிச்சென்றதும் ... 981

265 பாண்டவர்கள் வேட்டைக்குச் சென்றதும், பரிவாரங்களுடன் ஸால்வதேசத்துக்குப் போகிற ஜயத்ரதன் ஆஸ்ரமத்தில் திரௌபதியைக் கண்டதும் ... 982

அரசர்கள் திரௌபதியைக் கைகூப்பிக்கொண்டுகண்டது 982-983

ஜயத்ரதன் திரௌபதியை யாரென்று அறிந்துவருதற்காகக் கோடிகாஸ்யனை அனுப்பியது 983

அத்யாயம். பக்கம்.

266 கோடிகன் தங்களைத் தெரிவித்துத் திரௌபதியை யாரென்று வினவியது 983-985

267 திரௌபதி தன்குலமுதலியவற்றைக் கோடிகனுக்குச் சொல்லி ஆச்ரமத்தினுட் சென்றது 985-986

பாண்டவர்களுள் யார்யார் எந்தெந்தத் திசையில் வேட்டைக்குச் சென்றனரென்பது 986

268 கோடிகன் திரும்பிவந்து திரௌபதியைப்பற்றி ஜயத்ரதனிடம் சொல்லியதும், ஜயத்ரதன் திரௌபதியிடம் சென்று பேசியதும் 987-988

திரௌபதி காலைத்தனைவளிப்பதாகச் சொல்லியதும், ஜயத்ரதன் அவளைத் தனக்கு மனைவியாக விரும்பியதும் 988-989

திரௌபதி ஜயத்ரதனை மறுத்து நீதிகூறியதும், அவன் அரசர்கள் யாரைடும் அடையலாமென்றதும் ... 989

269 திரௌபதி ஜயத்ரதனைக் கடிந்துசொல்லியது ... 990-991

ஜயத்ரதன் தங்களை உயர்த்தியும் பாண்டவர்களை இழித்துங் கூறித் திரௌபதியைத் தேரிலாவது யானையிலாவது ஏறச்சொல்லியது 991

திரௌபதி தன் பெருமையையும் பாண்டவர்களின் திறமையையும் கூறி ஜயத்ரதனை நிந்தித்தது ... 991-993

ஜயத்ரதன் திரௌபதியை இழுத்ததும், அவள் அவனைத் தள்ளித் தானே தேரிலேறியதும் 993

தௌம்யர் ஜயத்ரதனை நிந்தித்துத் தொடர்ந்துசென்றது ... 993

270 யுதிஷ்டிரர் தௌம்யரைத்தங்களைக்கண்டு தம்பிமார்களுக்குச் சொல்லி அவர்களுடன் திரும்பியது 994

யுதிஷ்டிரர் கரியின்பேச்சை அறிந்து, கௌரவர்கள் தீமை செய்துவிட்டனரென்றது 994

இந்திரசேனன் தாத்ரேயிகையைக்கேட்டதும், அவள் தேவி கவரப்பட்டனளென்று அலறியதும், அவன் அவளைத் தேற்றியதும் 994-995

தாத்ரேயிகை பாண்டவர்களை விவரவுபடுத்தியதும், யுதிஷ்டிரர் அவளை அதட்டியதும் 996-997

பாண்டவர்கள் ஜயத்ரதனைப் போருக்கழைத்தது ... 997

271 திரௌபதி ஜயத்ரதனுக்குப் பாண்டவர்களின் பெருமையைக்கூறி அவர்களை அடையாளங்களுடன் தனித்தனி குறிப்பிட்டுக் காட்டியது 998-1000

கஅ விஷயஸூசிகை.

அத்யாயம். பக்கம்.

பாண்டவர்கள் ஜயத்ரதனது சேனையில் சரமாரி பொழிந்
தது 1000-1001

272 பாண்டவர்களுக்கு ஜயத்ரதன் முதலியவர்களுடன்
யுத்தம் 1001-1004

கோடிகாஸ்யனின் வதம் 1003

ஸௌவீரவீரர் பன்னிருவரின் வதம் 1003

போர்க்களத்தின் வர்ணனை 1003-1004

ஜயத்ரதன் திரௌபதியை விட்டோடியதும், தர்மபுத்ரர்
அவனைத் தேரிலேற்றிக் கொண்டதும் ... 1004

பீமன் ஜயத்ரதனைக் கொல்வதாகச் சொல்லியதும்,
யுதிஷ்டிரர் கொல்லவேண்டாமென்றதும் ... 1005

திரௌபதி கோபித்து ஜயத்ரதனைக் கொல்லவேண்டு
மென்று பீமார்ஜுனர்களுக்குச் சொல்லியதும்,
அவர்கள் அவனைத் தேடிச் சென்றதும் ... 1005

யுதிஷ்டிரர் திரௌபதியுடன் ஆஸ்ரமத்துக்கு வந்தது ... 1005

அர்ஜுனன் ஜயத்ரதனுடைய தேர்க் குதிரைகளைக்
கொன்றதும், அவன் இறங்கி ஓடியதும் ... 1006

பீமன் அவனைத் துரத்தியதும், அர்ஜுனன் அவனைக்
கொல்லவேண்டாமென்றதும் 1006

ஜயத்ரத விமோக்ஷண பர்வம்.

273 பீமன் ஜயத்ரதனை மயிரில் பிடித்திழுத்துத் தள்ளித்
தலையிலுதைத்ததும், அர்ஜுனன் அவனை விலக்கிய
தும் 1007

பீமன் ஜயத்ரதனுக்கு ஐங்குடுமிவைத்துப் பாண்டவர்
களுக்கு அடிமையென்று சொல்லச்சொல்லியதும்,
அவன் சம்மதித்ததும் 1008

பீமன் ஜயத்ரதனைக் கட்டிக்கொணர்ந்ததும், யுதிஷ்டிரர்
அவிழ்த்துவிடச் சொல்லியதும் 1008

பீமன் ஜயத்ரதனை அவிழ்த்துவிட்டதும், அவன் யுதிஷ்
டிரரையும் முனிவர்களையும் வணங்கியதும் ... 1008-1009

யுதிஷ்டிரர் ஜயத்ரதனுக்குப் புத்திகூறி அடிமைநீங்
கிச் செல்லும்படி விடைகொடுத்தது ... 1009

ஜயத்ரதன் கங்காத்வாரஞ்சென்று தவம்புரிந்ததும்,
மஹாதேவர் வரங்கொடுத்ததும் 1009-1014

பிரளயமும், உலக உற்பத்தியும் 1010-1011

நாராயணரென்னும் சொல்லுக்குப் பொருள் ... 1011

அத்யாயம். பக்கம்.

பரமாத்மாவின் மூன்று மூர்த்திகளும், அவற்றின் செயல்களும் 1011
விஷ்ணுவின் அவதாரங்களும், கிருஷ்ணன் மகிமையும் 1011-1014
உலகம் வைஷ்ணவமானது 1013

ராமோபாக்யான பர்வம்.

274 யுதிஷ்டிரர் தமக்கொப்பான துயரமுள்ளவன் உலகத்திலிருக்கிறானென்று மார்க்கண்டேயரை வினவியது 1015-1016
275 - 293 மார்க்கண்டேயர் ராமோபாக்யானத்தைச் சொல்லி யுதிஷ்டிரரைத் தேற்றியது ... 1016-1086
ராமர், லக்ஷ்மணன், பரதன், சத்ருக்னன், ஸீதை இவர்களின் பிறப்பு 1017
குபேரனது பிறப்பு 1017
குபேரன் பிதாமஹரை அடுத்ததும், புலஸ்தியர் கோபங்கொண்டு விஸ்ரவஸைப் படைத்ததும் ... 1017
பிரம்மதேவர் குபேரனுக்கு அமரத்வமுதலியவைகளைக் கொடுத்தது 1017
குபேரன் விஸ்ரவஸுக்குப் பணிசெய்தற்காக மூன்று ராக்ஷஸிகளை அனுப்பியது 1018
ராவணகும்பகர்ணர்களின் பிறப்பு 1018
விபீஷணனது பிறப்பு 1018
கரன் சூர்ப்பணகை இவர்களின் பிறப்பு 1018
விபீஷணன் குணசாலியாயிருந்தது 1018
ராவணன் ராக்ஷஸ ராஜனானது 1018-1019
கும்பகர்ணன் மாயாவியும் மிக்கபலமுள்ளவனுமானது ... 1019
கரன் வில்லில் வல்லவனும் பிராம்மணரைப் பகைப்பவனுமானது 1019
சூர்ப்பணகை வித்தர்களுக்கு இடையூறு செய்பவளானது 1019
ராவணன் முதலியோர் தவம்புரிந்ததும், கரனும் சூர்ப்பணகையும் அவர்களுக்குப் பணிவிடையும் பாதுகாவலும் செய்ததும் 1019
பிரம்மதேவர் ராவணன் முதலியவர்களுக்கு வரங்கொடுத்தது 1019-1021
ராவணன் குபேரனை வென்று லங்கையையும் புஷ்பகவிமானத்தையும் கவர்ந்துகொண்டதும், குபேரன் அவனைச் சபித்ததும் 1021

அத்யாயம். பக்கம்.

விபீஷணன் குபேரனை அனுஸரித்ததும், அவன் விபீஷணனுக்கு யக்ஷராக்ஷஸ சேனைகளுக்குத் தலைமையை அளித்ததும் 1021
ராக்ஷஸர் முதலியோர் ராவணனை அரசனுக்கியது ... 1021
ராவணனென்னும் சொற்பொருள் 1021
ராவணன் தேவர்களுக்குப் பயத்தை உண்டுபண்ணியது 1021
பிரம்மரிஷிகள் முதலியோர் பிரம்மாவிடம் முறையிட்டதும், அவர் மறுமொழியும் 1022
தேவர்கள் முதலியோர் பூமியில் வானரங்கள் முதலியவற்றை உண்டுபண்ணியது 1022-1023
பிரம்மதேவர் கட்டளையிட்டதும், துந்துபி மந்தரையாகப் பிறந்ததும் 1023
ராமர் முதலியோரின் கல்வியும் மணமும் ... 1024
தசரதன் ராமருக்கு இளவரசப்பட்டங்கட்ட நிச்சயித்ததும், மந்தரை கைகேயியைக் கலைத்ததும் ... 1024-1026
ஸ்ரீராமருடைய லக்ஷணம் குணமுதலியன ... 1025
கைகேயி வரங்கேட்டதும், ராமர் காட்டுக்குப் புறப்பட்டதும், லக்ஷ்மணனும் ஸீதையும் உடன்சென்றதும் 1026-1027
தசரதன் மரணம் 1027
கைகேயி பரதனை நாடாளச் சொல்லியதும், அவன் அவளை நிந்தித்து ராமரை அழைத்துவரச் சென்றதும் 1027
பரதன் ராமரை வணங்கித் தந்தை இறந்ததைக் கூறி அவரை அரசாள அழைத்ததும், அவர் பிதாவுக்குத் தர்ப்பணம் செய்து தம்முடைய பாதுகைகளை நாடாளும்படி கொடுத்ததும் 1028
பரதன் பாதுகைகளைப் பெற்று நந்திக்ராமத்திலிருந்து நாடாண்டது 1028
ராமர் பதினாலாயிரம் அரக்கர்களையும் தூஷணனையும் கரனையும் கொன்றது 1028
சூர்ப்பணகை ராவணனிடம் சென்று முறையிட்டதும், அவன் சினந்து மாரீசனிடம் சென்றதும் ... 1028-1029
மாரீசன் ராவணனை உபசரித்து வினவியதும், ராவணன் காரியத்தைத் தெரிவித்ததும் 1030
மாரீசன் ராமனை அணுகலாகாதென்றதும், ராவணன் மாரீசனைக் கொல்வதாகச் சொல்லியதும் ... 1030-1031

அத்யாயம். பக்கம்.

ராவணனும் மாரீசனும் ராமாஶ்ரமஞ் சென்று முறையே துறவியும் பொன்மானும் ஆகியது 1031
ஸீதை மானை விரும்பியதும், ராமர் அதனைத் தூரத்தி ராக்ஷஸனென்றறிந்து கொன்றதும் 1031-1032
மாரீசன் ராமருடைய குரலோடு அலறியதைக்கேட்டு ஸீதை பயந்ததும், லக்ஷ்மணன் அவளுக்குத் தேறுதல் கூறியதும் 1032
ஸீதை லக்ஷ்மணனிடம் ஸந்தேஹித்துக் கடிந்து பேசியதும், அவன் ராமரைத் தேடிச்சென்றதும் ... 1032
ராவணன் ஸீதையைத் தனக்கு மனைவியாக வேண்டினதும், அவள் மறுத்ததும் 1033
ராவணன் ஸீதையைத் தூக்கிச்சென்றதும், ஜடாயு அவனுடன் போர்செய்து விழுந்ததும் ... 1034-1035
ஸீதை வானராதிபதிகளின் நடுவில் பீதாம்பரத்தை எறிந்தது 1035
ராமர் ஸீதையை விட்டுவந்ததற்காக லக்ஷ்மணனை நிந்தித்ததும், அவன் ஸீதைசொல்லியவற்றை அவருக்குத் தெரிவித்ததும் 1035
ஜடாயு ஸீதையை ராவணன் கொண்டுபோனதை ராம லக்ஷ்மணர்களுக்குத் தெரிவித்து உயிர்விட்டதும், ராமர் ஜடாயுவுக்கு ஸம்ஸ்காரத்தைச் செய்வித்ததும் 1036
கபந்தன் லக்ஷ்மணனைப் பிடித்ததும், ராமலக்ஷ்மணர்கள் அவனைக் கொன்றதும் 1036-1037
கபந்தன் தேகத்திலிருந்து வெளிப்பட்ட கந்தர்வன் தனக்குச் சாபம்வந்ததைக் கூறி ராமரை ஸுக்ரீவனை அடைடம்படி சொல்லிச் சென்றது 1037-1038
ராமர் ஸீதையை நினைத்து வருந்தியதும், லக்ஷ்மணன் தேற்றியதும் 1038-1039
ராமர் ஸுக்ரீவநேடு கட்புக்கொண்டதும், இருவரும் பிரதிஜ்ஞை செய்ததும் 1039
ஸுக்ரீவன் கர்ஜித்ததும், தாரை வாலியைத் தடுத்ததும் 1040
வாலி தாரையின் சொல்லை அலக்ஷ்யஞ்செய்து போருக்குச் சென்றது 1040-1041
வாலிக்கும் ஸுக்ரீவனுக்கும் யுத்தமும், வாலி ராம பாணத்தாலடிபட்டு இறந்ததும் 1041

அத்யாயம். பக்கம்.

ஸுக்ரீவன் கிஷ்கிந்தையையும் தாரையையும் அடைந்ததும், ராமர் மால்யவானென்னும் மலையில் வஸித்ததும் 1042

ராவணன் ஸீதையைச் சிறையில் வைத்ததும், ராக்ஷஸிகள் ஸீதையை அதட்ட அவள் மறுமொழியும் ... 1042-1043

திரிஜடை, ஸீதையைத் தேற்றுதற்காக அவிந்தியன் சொல்லியதையும் தான் கனவுகண்டதையும் அவளுக்குச் சொல்லியது 1043-1045

ராவணன் தன்னை அடையும்படி ஸீதைக்குச் சொல்லியதும், அவள் மறுக்க அவன் மறைந்ததும ... 1046-1048

ராமர் லக்ஷ்மணனை ஸுக்ரீவனிடம் அனுப்பினதும், அவன் திரும்பிவந்து ஸுக்ரீவன் ஸீதையைத்தேட வானரர்களை அனுப்பியதை ராமருக்குத் தெரிவித்ததும் 1048-1050

அனுமான் ஸீதையைத் தேடிக் கண்டதை ராமர் முதலியவர்களுக்குக் கூறியது 1051-1054

வானரர்கள் ஸம்பாதியைக் கண்டதும், அவன் தன் வரலாற்றையும் ராவணனிருப்பிட முதலியவற்றையுங் கூறியதும் 1052-1053

அனுமான் ஸீதையைக் கண்டு பேசியது ... 1053-1054

வானரசேனைகள் வந்து கூடியது 1054-1055

ராமர் வானரசேனைகளுடன் கடற்கரை சேர்ந்தது ... 1055-1056

ராமர் பிரதிசயனஞ்செய்ததும், ஸாகரன் அணைகட்டச் சொல்லியதும் 1057-1058

ராமர் அணைகட்டுவித்ததும், அதன் விஸ்தீர்ணமும் ... 1058

விபீஷணன் ராமரைச் சரணமடைந்ததும், அவர் அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்துத் தமக்கு மந்திரியும் லக்ஷ்மணனுக்குத் தோழனுமாக்கியதும் ... 1059

ராமர் ஸேனையுடன் லங்கை சென்றதும், சுகஸாரணர்களைப் பிடித்துச் சும்மா விட்டதும் 1059

ராமர் அங்கதனைத் தூதனுப்பியதும், அவன் அவருடைய கட்டளையை ராவணனுக்குத் தெரிவித்து மீண்டதும் 1059-1061

ராவணன் லங்கைக்குப் பாதுகாப்பமைத்தது ... 1060

அங்கதனை நான்கு ராக்ஷஸர்கள் பிடித்ததும், அவன் அவர்களைத் தூக்கிக்கொண்டு உயரக்கிளம்பிக் கீழே போட்டதும் 1061

விஷய ஸூசிகை.

அத்யாயம்.		பக்கம்.
ராமர் லங்கையின் மதில் முதலியவற்றை இடிக்கச் செய்ததும், வானரர்களுக்கும் அரக்கர்களுக்கும் சண்டையும், பின்பு போர் நிறுத்தலும்		1061-1063
ராவணன் சுக்ரநீதிப்படியும், ராமர் பிருகஸ்பதிநீதிப்படியும் அணிவகுத்துப் போர்புரிந்தது ...		1064
லக்ஷ்மணன் முதலியவர்களுக்கு இந்திரஜித்து முதலியவர்களுடன் யுத்தம்		1064-1066
விபீஷணன் பிரஹஸ்தனைக் கொன்றது		1065
அனுமான் தூம்ராக்ஷனைக் கொன்றது		1066
ராவணன் கும்பகர்ணனை எழுப்பி அனுப்பியதும், அவன் பலனையும் சண்டபலனையும் வஜ்ரபாகுவையும் தின்றதும்		1066-1068
கும்பகர்ணன் ஸுக்ரீவனைப் பிடித்ததும், லக்ஷ்மணன் கும்பகர்ணனை அடித்ததும்		1068
கும்பகர்ணன் மாயாயுத்தஞ் செய்ததும், லக்ஷ்மணன் அவனை மாய்த்ததும்		1068-1069
அனுமான் வஜ்ரவேகனைக் கொன்றது		1069
நீலன் பிரமாதியைக் கொன்றது		1069
ராமராவண ஸைனிகளுக்கு யுத்தமும், பெரும்பாலும் ராக்ஷஸர்களே கொல்லப்பட்டதும்		1069
ராவணன் இந்திரஜித்தை அனுப்பியதும், அவன் மாயப் போர் செய்து ராமலக்ஷ்மணர்களைக் கட்டியதும் ...		1070-1072
ராமலக்ஷ்மணர்கள் மயங்கி விழுந்ததும், ஸுக்ரீவன் விபீஷணன் முதலியவர்கள் அவர்களைக் களையாற்றித் தெளிவித்ததும்		1072-1073
குபேரன் மறைந்திருக்கிற பிராணிகளைக் காண்பதற்காகத் தீர்த்தமனுப்பியதும், ராமர்முதலியோர் அதனால் கண்களை அலம்பிக்கொண்டதும் ...		1073
லக்ஷ்மணனுக்கும் இந்திரஜித்துக்கும் யுத்தமும், லக்ஷ்மணன் அவனைக் கொன்றதும்		1074
ராவணன் ஸீதையைக் கொல்ல ஓடியதும், அவிந்தியன் தடுத்ததும்		1075
ராமராவணயுத்தமும், இந்திரன் தன் தேரையனுப்ப ராமர் அதிலேறி ராவணனை எரித்ததும் ...		1076-1078
ராமர் லங்கையை விபீஷணனுக்குக் கொடுத்தது ...		1079
அவிந்தியன் ஸீதையை ராமரிடம் அழைத்து வந்ததும், அவர் மறுக்க அவள் கீழே விழுந்ததும் ...		1079-1080

விஷயஸூசிகை.

அத்யாயம். பக்கம்.

ஹிதை தான் குற்றஞ்செய்திருந்தால் தன் உயிரை வாயு முதலியோர் போக்குகவென்றதும், அவர்கள் அவளிடத்துக் குற்றமின்மையை ராமருக்குத் தெரிவித்ததும் 1081-1082

ராமர் அவிந்தியனுக்கு வரத்தையும் த்ரிஜடைக்குப் பொருள் முதலியவற்றையும் கொடுத்தது ... 1082

பிரம்மதேவர் ராமருக்கு வரங்கொடுத்ததும், வானரர்கள் பிழைத்தெழுந்ததும் 1083

ஹிதை அனுமானுக்கு வரங்கொடுத்தது 1083

ராமர் ஹிதைமுதலியோருடன் கிஷ்கிந்தைக்குவந்து அங்கதனை இளவரசாக்கியது 1083-1084

ராமர் நந்திக்ராமம் வந்ததும், பரதன் ராஜ்யத்தைத் திருப்பிக் கொடுத்ததும். 1084

வஸிஷ்டரும் வாமதேவரும் ஸ்ரீராமருக்கு முடிசூட்டியதும், ராமர் நூறு அஸ்வமேதங்களைச் செய்ததும் ... 1084-1085

மார்க்கண்டேயர் யுதிஷ்டிரரைக் காரணங்காட்டித் தேற்றியது 1085-1086

பதிவ்ரதாமாஹாத்ம்ய பர்வம்.

294 - 300 மார்க்கண்டேயர் ஸாவித்ரி உபாக்யானத்தை யுதிஷ்டிரருக்குச் சொல்லியது 1087-1116

அஸ்வபதி நாள்தோறும் ஹோமஞ் செய்துவந்ததும், ஸாவித்ரீதேவி வரங்கொடுத்ததும் 1087-1088

அஸ்வபதிக்குப் பெண்பிறந்ததும், அவன் அவளுக்கு ஸாவித்ரியென்று பெயரிட்டதும் 1088-1089

ஸாவித்ரிக்கு யௌவனப்பருவம் வந்ததும், அஸ்வபதி வரன் தேடிக்கொள்ளும்படி அவளுக்குக் கட்டளையிட்டதும் 1089-1090

இகழப்படத்தக்க மூவர் 1090

ஸாவித்ரி போய்த்தேடி ஸத்யவானை வரித்ததாகத் தந்தையிடம் வந்து சொல்லியது 1090-1091

த்யுமத்ஸேனன் வரலாறு 1091

நாரதர் ஸத்யவானுடைய குணங்களையும் அவன் ஒரு வருஷத்தில் இறப்பனென்பதையும் அஸ்வபதிக்குச் சொல்லியது 1091-1093

ஸத்யவானென்னும் பெயருக்குக் காரணம் ... 1091

ஸத்யவான் சித்ராஸ்வனென்னும் பெயர் பெற்றது ... 1091-1092

அத்யாயம். பக்கம்.

அஸ்வபதி வேறு வரனை வரிக்கச்சொல்லியதும், ஸாவித்ரி மறுத்ததும் 1093

ஸாவித்ரிக்கும் ஸத்யவானுக்கும் விவாஹம் ... 1095

ஸாவித்ரி மரவுரிகளையும் காஷாய வஸ்திரங்களையும் தரித்துப் பணிவிடை முதலியவற்றால் எல்லாரையும் மகிழ்வித்தது 1095-1096

ஸாவித்ரி இராப்பகல் நின்றுகொண்டே விரதமனுஷ்டித்தது 1096-1097

ஸத்யவான் காட்டுக்குப் புறப்பட்டதும், ஸாவித்ரி உடன் சென்றதும் 1098-1099

ஸத்யவான் தலைவலிபொறுக்காமல் ஸாவித்ரியின் மடியில் தலைவைத்துப் படுத்ததும், ஸாவித்ரி யமனைக் கண்டதும் 1100

ஸாவித்ரி யமனை யாரென்று வினவியதும், அவன் தன்னையும் தான்வந்த காரியத்தையும் தெரிவித்ததும் 1100-1101

ஸாவித்ரி யமனை நேரேவரக் காரணங்கேட்டதும், அவன் விடைகூறி ஸத்யவானுடைய உயிரைக் கட்டிச் சென்றதும் 1101

ஸாவித்ரி யமனைத் தொடர்ந்துசென்றதும், அவன் அவளைத் திரும்பச் சொல்லியதும் 1101

ஸாவித்ரி ஆஸ்ரம தர்மத்தைப்பற்றிக் கூறியதும், யமன் வரங்கேட்கச் சொல்லியதும் 1101-1102

ஸாவித்ரி முதல்வரங்கேட்டதும், யமன் கொடுத்து அவளைத் திரும்பச் சொல்லியதும் 1102

ஸாவித்ரி தனக்குக் கணவனே கதியென்பதையும் ஸாதுக்களின் கூட்டத்திலேயே வஸிக்கவேண்டுமென்பதையும் சொல்லியதும், யமன் வரங்கேட்கச் சொல்லியதும் 1102-1103

ஸாவித்ரி இரண்டாவது வரங்கேட்டதும், யமன் கொடுத்து அவளைத் திரும்பச் சொல்லியதும் ... 1103

ஸாவித்ரி யமனைத் துதித்ததும், அவன் வரங்கேட்கச் சொல்லியதும் 1103-1104

ஸாவித்ரி மூன்றாவது வரங்கேட்டதும், யமன் கொடுத்து அவளைத் திரும்பச் சொல்லியதும் 1104

ஸாவித்ரி பின்னும் யமனைத் துதித்ததும், அவன் வரங்கேட்கச் சொல்லியதும் 1104

ஸாவித்ரி நான்காவது வரங்கேட்டதும், யமன் கொடுத்து

அத்யாயம்.		பக்கம்.
	அவளைத் திரும்பச் சொல்லியதும்	1104-1105
	சாவித்ரி பதிவிரதைகள் சாத்துக்கள் இவர்களின் நடையைக் கூறியதும், யமன் வரங்கேட்கச் சொல்லியதும்	1105
	சாவித்ரி சத்யவான் பிழைப்பதை வரமாகக் கேட்டதும், யமன் அவனை அவிழ்த்துவிட்டு அவனுக்கு நீண்ட ஆயுள் முதலியவற்றைக் கொடுத்துச் சென்றதும்	1105-1106
	சாவித்ரி திரும்பிவந்து தன் பர்த்தாவின் தலையைத் தன்மடியில் வைத்துக்கொண்டதும், அவன் உயிர் பெற்று அவளை வினவியதும், அவன் மறுமொழியும்	1106-1107
	சத்யவான் தான் யமனைக் கண்டது முதலியவற்றைப் பற்றி வினவியதும், சாவித்ரி மறுநாள் சொல்வதாகக் கூறி வீட்டுக்குப் போகலாமென்றதும் ...	1107-1108
	சத்யவான் தன்பெற்றோர்களைப் பாராமைக்கு வருந்தி அழுததும், சாவித்ரி தனது தவமுதலியவற்றால் மாமியார் மாமனார்கள் உயிரோடிருக்கவேண்டுமென்றதும்	1108-1110
	சத்யவான் இரவிலேயே ஆச்ரமத்துக்கு வரவிரும்பியதும், சாவித்ரி அவனை அழைத்துக்கொண்டு ஆச்ரமத்தைநோக்கி வந்ததும்	1110-1111
	த்யுமத்சேனனுக்குப் பலமும் கண்களும் வந்தது ...	1111
	த்யுமத்சேனனும் அவன் மனைவியும் சத்யவானையும் சாவித்ரியையும் தேடி வருந்தியதும், முனிவர்கள் அவர்களுக்குத் தேறுதல் சொல்லியதும் ...	1111-1113
	சத்யவானும் சாவித்ரியும் ஆச்ரமம்வந்ததும், அங்குள்ளவர்கள் தாமதத்துக்குக் காரணங்கேட்டதும், அவர்கள் விடைகூறியதும்	1113-1115
	ரிஷிகள் சாவித்ரியைப் புகழ்ந்து சென்றது ...	1115
	சால்வதேசத்து ஜனங்கள் வந்து த்யுமத்சேனனை அரசாள அழைத்ததும், அவன் நாடுசென்று பட்டாபிஷேகம் செய்யப்பெற்றதும்	1115-1116
	சத்யவான் இளவரசனானதும், அவனுக்கு நூறு பிள்ளைகள் பிறந்ததும்	1116
	அச்வபதிக்கு நூறு பிள்ளைகள் பிறந்தது ...	1116
	சாவித்ரி ஆறுவகையினரைக் கரையேற்றியது ...	1116
	சாவித்ரியின் உபாக்யானத்தைக் கேட்டலின் பயன் ...	1117

குண்டலாவராண பர்வம்.

301	இந்திரன் கர்ணனை யாசிக்கமுயன்றதும், சூர்யன்	

அத்யாயம்.		பக்கம்.
	இந்திரனுக்குக் கவசகுண்டலங்களைக் கொடுக்கக் கூடாதென்று கர்ணனுக்குஸ்வப்னத்தில் சொல்லியதும்	1117-1119
	கர்ணன் கவசகுண்டலங்களைக் கொடுக்கவே கொடுப்பேனென்றது	1119-1120
	கீர்த்தி அபகீர்த்திகளின் உயர்வுஇழிவுகள் ...	1119-1120
302	சூரியன் மறுபடியும் கர்ணனை மறுத்துக் கூறியது ...	1121-1122
	கீர்த்தியையும் அபகீர்த்தியையும்பற்றிய சூரியனுடைய அபிப்ராயம்	1121
303	கர்ணன் கவசகுண்டலங்களைக் கொடுக்க மறுபடியும் அனுமதிகேட்டதும், சூரியன் உடன்பாட்டுடன் கொடுக்கச் சொல்லியதும்	1122-1124
	கர்ணன் கனவின் விஷயத்தை மறுபகலில் சூரியனுக்குத் தெரிவித்ததும், அவன் அது உண்மையென்றதும்	1124
304	துர்வாஸர் குந்திபோஜனிடம் வந்து வஸிக்க விரும்பியதும், குந்திபோஜன் குந்தியை அவருக்குப் பணிசெய்யச் சொல்லியதும்	1125-1127
305 - 306	குந்தி அரசன் கட்டளையை ஏற்றுக் கருத்துடன் பணிசெய்து துர்வாஸரை மகிழ்வித்தது ...	1127-1130
	துர்வாஸர் குந்திக்கு மந்திரங்களை உபதேசித்தது ...	1131
307 - 308	குந்தி மந்திரத்தைப் பரீக்ஷிப்பதற்காகச் சூரியனை அழைத்ததும், அவன் வந்ததும்	1132
	சூரியனுக்கும் குந்திக்கும் ஸம்வாதமும், அவன் அவளைக் கலந்ததும்	1132-1137
309	குந்தி குழந்தையைப்பெற்றுப் பெட்டியில் வைத்துப் புலம்பிக்கொண்டே நதியில்விட்டது... ...	1138-1139
	குழந்தைவைத்தபெட்டி கங்கையில் சென்றது ...	1140
	இது இது குழந்தையை உயிரோடிருக்கச் செய்தனவென்பது	1140
310	அதிரதனும் ராதையும் பெட்டியை எடுத்துத் திறந்து குழந்தையை எடுத்து வளர்த்ததும், அவர்களுக்குச் சொந்தப்புத்திரர்களும் உண்டானதும் ...	1141
	பெட்டியில் வந்த குழந்தைக்கு நாமகரணம் செய்தது ...	1141-1142
	கர்ணனைக் குந்தி அறிந்ததும், ஸூதன் அவனை ஹஸ்தினாபுரத்துக்கு அனுப்பியதும்	1142
	கர்ணன் வில்வித்தை கற்றதும், துரியோதனனுக்கு நண்பனும் அர்ஜுனனுக்குப் பகைவனுமானதும் ...	1142

விஷயஸூசிகை.

அத்யாயம். பக்கம்.

இந்திரன் பிராம்மணனாகி வந்ததும், கர்ணன் அவனை நல்வரவு கேட்டதும் 1143

311 கர்ணன் என்னவேண்டுமென்று கேட்டதும், பிராம் மணன் கவசகுண்டலங்களை யாசித்ததும் ... 1143

கர்ணன் பலமுறை மறுத்தும் பிராம்மணன் கவச குண்டலங்களையே வேண்டினதும், கர்ணன் அவற் றுக்குப் பிரதியாகச் சக்தியாயுதத்தை விரும்பியதும் 1143-1145

சக்தியாயுதத்தைப்பற்றிய சில வரையறைகளும், கர்ணன் கவசகுண்டலங்களை அறுத்தலால் காய முதலியன உண்டாகாதபடி வரம்பெற்றதும் 1145-1146

கர்ணன் கவசகுண்டலங்களை அறுத்துக் கொடுத்ததும், பூமாரி பெய்ததும் 1146

ஆரணேய பர்வம்.

312 பாண்டவர்கள் த்வைதவனம் வந்து வஸித்ததும், பிராம் மணன் வந்து முறையிட்டதும் 1148-1149

பாண்டவர்கள் மானைத்தொடர்ந்து அடித்ததும், அது ஓடி மறைந்ததும் 1149

பாண்டவர்கள் களைத்து உட்கார்ந்ததும், நகுலன் சங்கடத்தை அடைந்தோமே என்றதும் ... 1149

313 யுதிஷ்டிரர் முதலியோர், சங்கடத்தை அடைந்ததைப் பற்றிச் சொல்லியது 1150

நகுலன் முதலியோர் தடாகத்தில் நீரைப்பருகி இறந்த தும், யுதிஷ்டிரர் தடாகத்துக்குச் சென்று பார்த்த தும் 1151-1154

314 யுதிஷ்டிரர் பலவாறு புலம்பி யக்ஷனுடன் பேசியது ... 1155-1159

யக்ஷன் வினாக்களும் யுதிஷ்டிரர் விடையும் ... 1159-1177

யக்ஷன் இறந்த நால்வருள் யார் பிழைக்கவேண்டு மென்று வினவ, யுதிஷ்டிரர் நகுலன் பிழைக்கவேண்டு மென்றது 1176-1177

யக்ஷன் எல்லாரும் பிழைக்கக்கடவரென்றது ... 1178

315 இறந்த பாண்டவர்கள் பிழைத்ததும், யுதிஷ்டிரர் வினவ, யக்ஷன் தன்னைத் தெரிவித்து அவருக்கு வரங்களைக் கொடுத்து மறைந்ததும் 1178-1180

பாண்டவர்கள் ஆஸ்ரமம்வந்து அரணீஸம்புடத்தைப் பிராம்மணனுக்குக் கொடுத்தது 1180-1181

ஆரணேயபர்வக் கதையைப் படித்தலின் பயன் ... 1181

வனபர்வம் விஷயஸூசிகை முற்றிற்று.

—:0:—

ஸ்ரீ :

ஸ்ரீ மஹாபாரதம்.

வன பர்வம்.

விஷயஸூசிகை.

ஜடாஸுரவத பர்வம்.

அத்யாயம்.		பக்கம்.
158	ஜடாஸுரன் பாண்டவர்களிடம் கபடமாக வஹித்தும், ஸமயம்பார்த்து யுதிஷ்டிரர் முதலியவர்களைக் கவர்ந்தோடியதும்	565-566
	ஸஹதேவன் தன்னைவிடுவித்துக்கொண்டு பீமனை அழைத்ததி	566
	யுதிஷ்டிரர் ஜடாஸுரனை நிந்தித்துப்பேசியதும், அதிக பாரமுள்ளவரானதும்	566-567
	ஸஹதேவன் அஸுரனைச் சண்டைக்கழைத்ததும், பீமஸேனன் வந்ததும்	568
	பீமன் அஸுரனை நிந்தித்ததும், இருவரும் வீரவாதத்துடன் போர்தொடங்கியதும்	569-570
	ஸகுலஸஹதேவர்கள் அஸுரனை எதிர்த்தோடிவந்ததும், பீமன் அஸுரனைத் தானே கொல்வதாகச் சொல்லியதும்	570
	பீமனுக்கும் ஜடாஸுரனுக்கும் யுத்தமும், பீமன் அஸுரனது தலையைக் கொய்ததும்	570-571

யக்ஷயுத்த பர்வம்.

159	யுதிஷ்டிரர் தம்பிமார்களுடனும் அந்தணர்களுடனும் கலந்துகொண்டு இமயமலையின் உச்சிக்குப் புறப்பட்டது	572-573
	பாண்டவர்கள் இத்தனைநாளில் மலையுச்சியை அடைந்தனரென்பது	573
	பாண்டவர்கள் பரிஜனமுதலியவர்களை விருஷபர்வாவினிடம் வைத்துச்சென்றதும், அவன் அவர்களுக்கு வழிகாட்டித் திரும்பியதும்	574

விஷயஸூசிகை.

அத்யாயம்.		பக்கம்.
	பாண்டவர்கள் பலவிடங்களில் தங்கி ஆர்ஷ்டிஷேணாச்ரமம் சென்றது	574-580
160	ஆர்ஷ்டிஷேணர் யுதிஷ்டிரரைக் குசலப்ரச்னஞ் செய்தது	581-582
	ஆர்ஷ்டிஷேணர் யுதிஷ்டிரருக்குக் கைலாஸமலையைப் பற்றிக்கூறி அர்ஜுனன்வரும்வரை அவர்களைத் தமதாச்ரமத்திலேயே வஸிக்கச்சொல்லியது	582-584
161	கருடனது சிறகின்காற்றில் மலர்கள்வந்ததும், திரௌபதி தாமரைமலர் கொண்டுவரும்படி பீமனுக்குச் சொல்லியதும்	585-587
	பீமன் மலையுச்சியில்ஏறிக் குபேரபட்டணத்தைக் கண்டதும், சண்டையில் மணிமான் முதலியவர்களைக் கொன்றதும்	587-591
162	பாண்டவர்கள் திரௌபதியை ஆர்ஷ்டிஷேணாரிடம் வைத்து மலையுச்சியில் ஏறிப் பீமனைக் கண்டது ...	592
	யுதிஷ்டிரர், ராக்ஷஸர்களைக் கொன்றது தகாதென்று பீமனுக்குச் சொல்லியது	592-593
	குபேரன் போருக்கு வந்ததும், பாண்டவர்களைக் கண்டு அன்புள்ளவனானதும்	594-595
	பாண்டவர்கள் குபேரனை வணங்கியதும், பீமன் அஞ்சாமல் நின்றதும்	595
	குபேரன் யுதிஷ்டிரருடனும் பீமனுடனும் முறையே பேசிப் பீமன் செய்கைக்கு மகிழ்ந்தது ...	595-596
	மணிமானுக்கும் குபேரனுக்கும் அகஸ்தியசாபம் வந்ததும், அதற்கு விமோசனமும்	596-597
163	குபேரன் பாண்டவர்களுக்கு உபதேசித்துச் சென்றது ...	598-601
	கார்ய ஸித்திக்குக் காரணமான ஐந்து	598
	இம்மை மறுமைப் பயன்களை அடைபவரும் அடையாதவரும்	598
164	தௌம்யர் மந்தரமலை முதலியவைகளைப்பற்றிக் கூறிக் கிரகங்களின் கதிமுதலியவற்றை யுதிஷ்டிரருக்குச் சொல்லியது	602-605
165	கந்தமாதன மலையில் பாண்டவர்களுக்குப் பகலிரவுகளுக்கு வேறுபாடு தெரியாமலிருந்தது	606-607
	அர்ஜுனன் தேவலோகத்தில் அஸ்திரங்களைக் கற்றுக் கந்தமாதன மலைக்கு வந்தது	607-608
	அர்ஜுனன் எத்தனை வருஷம் தேவலோகத்தில் வஸித்தானென்பது	608

விஷய வஸ்து சிகை.

அத்யாயம்.		பக்கம்.
	நிவாதகவசயுத்த பர்வம்.	
166	அர்ஜுனன் பாண்டவர்களிடம் வந்தது	608-609
	அர்ஜுனன் திவ்யாபரணங்களைத் திரௌபதிக்குக் கொடுத்தது	609
	அர்ஜுனன் தான் திவ்யாஸ்திரங்கள் பெற்றதைச் சுருக்கமாகச் சொல்லியது	609-610
167	இந்திரன் பாண்டவர்களிடம் வந்து வாழ்த்திச் சென்றது...	610-611
	இந்திரன் பாண்டவர்களைச் சந்தித்ததைக் கூறும் அத்யாயத்தைப் படித்தலின் பயன்	611
168-176	அர்ஜுனன் தான்செய்த கிராதயுத்தம் தேவலோகவாஸம் நிவாதகவசயுத்த முதலியவற்றைப் பாண்டவர்களுக்குச் சொல்லியது	612-643
	அர்ஜுனனுக்கும் சிவவேடனுக்கும் யுத்தமும், அர்ஜுனன் பாசுபதாஸ்திரம் பெற்றதும்	613-616
	அர்ஜுனன் லோகபாலர்களிடம் அஸ்திரம் பெற்றது ...	617-618
	இந்திரன் அர்ஜுனனைத் தேவலோகத்துக்கு வரச்சொல்லிச் சென்றது	618-619
	அர்ஜுனன் இந்திரனது தேரில் அசையாமலிருந்ததும், மாதலி அவனைப் புகழ்ந்ததும்	619-620
	அமராவதி நகரின் சிறப்பு	620-621
	இந்திரன் அர்ஜுனனுக்கு அர்த்தாஸனங் கொடுத்தது ...	621
	அர்ஜுனன் ஸ்வர்க்கத்தில் அஸ்திரங்களையும் காந்தர்வித்தையையும் கற்றது	621-622
	இந்திரன் நிவாதகவச வதத்தைக் குருதக்ஷிணையாகக் கேட்டதும், அர்ஜுனன் போர்க்கோலங்கொண்டு புறப்பட்டதும்	622-624
	அர்ஜுனன் நிவாதகவசரது நகரம் சென்று அவர்களுடன் போர்தொடங்கியது	624-626
	அர்ஜுனனுக்கும் நிவாதகவசர்களுக்கும் யுத்தம் ...	626-629
	மாதலியினது தேர்த்தொழிலின் திறமை	627
	அர்ஜுனன் திவ்யாஸ்திரங்களால் அஸுரர்களுடைய மாயைகளை ஒழித்து அவர்களை வதஞ்செய்தது ...	629-631
	மாதலியும் அர்ஜுனனும் பயந்ததும், அர்ஜுனன் தான் தேறி அவனைத் தேற்றியதும்	630-631
	அர்ஜுனன் நிவாதகவசர்களைக்கொன்று ஸ்வர்க்கத்துக்குத் திரும்பியது	632-634

அத்யாயம். பக்கம்.

அர்ஜுனன் நிவாதகவசரின் நகரத்தில் தேவர்கள் புகாமைக்குக் காரணங்கேட்டதும், மாதலியின் மறுமொழியும் 634

அர்ஜுனன் ஹிரண்யபுரத்தைப் பார்த்து மாதலியை வினவியதும், அவன் பௌலோம காலகேயர்களின் வரலாறு கூறியதும் 635-636

அர்ஜுனன் ஹிரண்யபுரத்தை உடைத்துப் பௌலோமர்களையும் காலகேயர்களையுங் கொன்று இந்திரனிடம் வந்ததும், இந்திரன் அவனை வாழ்த்தியதும் ... 637-642

அர்ஜுனன் பாசுபதாஸ்திரத்தைப் பிரயோகித்ததும், அதிலிருந்து பலபிராணிகள் தோன்றி அஸுரரை அழித்ததும் 639-640

இந்திரன் அர்ஜுனனைப் புகழ்ந்து கவசம் கிரீடமுதலியன கொடுத்தது 642-643

யுதிஷ்டிரர் எல்லாம் தெய்வாதீனமென்று கூறித் திவ்யாஸ்திரங்களைக் காணவிரும்பியதும், அர்ஜுனன் மறுநாள் காட்டுவதாகச் சொல்லியதும் 643-644

177 அர்ஜுனன் பூமியை ரதமாகச் செய்துகொண்டு திவ்யாஸ்திரங்களை காட்டத் தொடங்கியதும், உலகங்கள் கலங்கியதும் 644-645

நாரதர்வந்து அர்ஜுனனைத் திவ்யாஸ்திரங்களைக் காட்டக் கூடாதென்று தடுத்தது 645-646

ஆஜகரபர்வம்.

178 பாண்டவர்கள் கந்தமாதனத்தில் இத்தனை வருஷம் வஸித்தனரென்பதும், அதுவரை அவர்களுக்கு வனவாஸம் இத்தனை வருஷங்கள் ஆயினவென்பதும் ... 647

யுதிஷ்டிரர் தம்பிமாருடன் ஆலோசித்துக் கந்தமாதனத்தினின்றும் இறங்கியதும், அவசியமான இடங்களில் கடோற்கசன் அவர்களைச் சுமந்து சென்றதும் ... 647-649

லோமசர் பாண்டவர்களை வாழ்த்தி ஸ்வர்க்கம் சென்றது 649

179 பாண்டவர்கள் விருஷபர்வாவின் ஆச்ரமம் வந்தது ... 650

பாண்டவர்கள் பதரியில் ஒருமாதம் வஸித்துப் பின் ஸுபாகுவின் நகரம்வந்து அங்குவிட்டிருந்த பரிஜனங்களுடன் விசாகயூபம் வந்து ஒருவருஷம் வஸித்தது ... 650-651

பாண்டவர்கள் த்வைதவனம் வந்தது 652

180 பீமஸேனன் மஹிப்பாம்பினால் பிடிக்கப்பட்டது ... 654-655

விஷய ஸூசிகை. ஞ

அத்யாயம். பக்கம்.

181 மஹிப்பாம்பு தான் மஹிப்பாம்பானதற்குக் காரணத்தைப் பீமனுக்குச் சொல்லியது 656-658

பீமன் மஹிப்பாம்பின் வாயிலிருந்து அசையமாட்டாமல் புலம்பியது 658-659

யுதிஷ்டிரர் துர்நிமித்தங்களைக் கண்டு பீமனைத் தேடி அவன் மஹிப்பாம்பினால் பிடிக்கப்பட்டிருந்ததைக் கண்டது 659-660

182 - 183 யுதிஷ்டிரருக்கும் மஹிப்பாம்புக்கும் ஸம்வாதம் ... 661-662

ஸர்ப்பத்தின் விஞவும் யுதிஷ்டிரர் விடையும் ... 662-664

யுதிஷ்டிரர் விஞவும் ஸர்ப்பத்தின் விடையும் ... 665-669

விமானம்வந்ததும், நகுஷன் ஸ்வர்க்கஞ் சென்றதும் ... 669

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம்.

184 யுதிஷ்டிரர் முதலியவர்கள் கார்கூதிர்காலங்களை த்வைதவனத்தில் கழித்துக் காம்யகவனம் சென்றது ... 670-671

185 கண்ணபிரான் ஸத்யபாமையுடன் காம்யகவனம்வந்து பாண்டவர்களுடன் அளவளாவியது 672-676

மார்க்கண்டேயர் வந்து பூஜிக்கப்பெற்றதும், கோவிந்தர் பூர்வகதைகளைச் சொல்லும்படி அவரை வேண்டினதும் 676

நாரதர்வந்ததும், பாண்டவர் முதலியோர் அவரைப் பூஜித்ததும் 676

நாரதர் மார்க்கண்டேயரைக் கதைசொல்லச் சொல்லியது 676-677

186 - 233 மார்க்கண்டேயர் யுதிஷ்டிரர் முதலியவர்களுக்குக் கதைசொல்லியது 678-886

பண்டைக்காலத்து மனிதரும் பிற்காலத்து மனிதரும் ... 678-679

அஜ்ஞானிகளின்கதியும் ஞானிகளின்கதியும் ... 679-681

அரிஷ்டநேமிமுனிவர் மரித்தவரைப் பிழைப்பித்ததும், மிருத்யுபயமில்லாமலிருத்தற்குரிய ஒழுக்கங்களும் ... 682-684

பிருதுசக்ரவர்த்தியின் அஸ்வமேதயாகமும், அத்ரிக்கும் கௌதமருக்கும் விவாதமும் 685-688

அத்ரிமுனிவர் பிருதுவினிடம் பொருள் பெற்றது ... 688

தானம் அக்னிஹோத்ரம் மோக்ஷம் முதலியவற்றைப் பற்றித் தார்க்ஷ்யருக்கும் ஸரஸ்வதிக்கும் ஸம்பாஷணை ... 689-693

முதலில் ஸ்வர்க்கம்போகிறவன் 689

விஷ்ணு வைவஸ்வதமனுவுக்குப் புத்ரரானதாகிய மத்ஸ்யோபாக்யானம் 693-698

விஷயஸூசிகை.

அத்யாயம்.			பக்கம்.
மனுசரித்திரத்தைக் கேட்டலின்பலன்	...	...	698
யுகங்களின் காலஅளவுமுதலியன	...	...	700-701
பிரளயலக்ஷணம்	...	...	701-706
மார்க்கண்டேயர் ஹரியின் வயிற்றினுள் புகுந்து பிரம்மாண்டங்களைப் பார்த்துத் திரும்பியது	...	...	707-709
விஷ்ணு தமது மகிமையைக்கூறி மறைந்தது	...		710-714
மார்க்கண்டேயர் சொற்படி பாண்டவர்கள் கிருஷ்ணனை வணங்கியதும், அவர் அவர்களைத் தேற்றியதும்	...		715
கலியில் வருங்காலநிலைமை	...	...	716-723
கிருதயுகவரலாறும் கல்கிஅவதாரமும்	...	...	723-726
மார்க்கண்டேயர் யுதிஷ்டிரருக்குச் சில உபதேசங்கள் செய்தது	...	...	727
தவளையின் உபாக்யானம்	...	...	728-737
வாமதேவரின் மகிமை	...	...	732-737
ஸுகதுக்கங்களை நிரூபிப்பதான இந்திரனுக்கும் பகருக்கும் நடந்த ஸம்பாஷணை	...	...	738-740
க்ஷத்ரியனுடைய மகிமையைத் தெரிவிப்பதான ஸுஹோத்ரன் சிபி இவர்களின் வரலாறு	...	...	740-741
யயாதி பிராம்மணனுக்குக் கோதானம் செய்தது	...		742
ஸேதுகன் விருஷாதர்ப்பன் இவர்களின் வரலாறு	...		743-744
சிபி புறுவைக்காத்த கதை	...	...	744-747
சரணமடைந்தவனைக் கைவிட்டவருக்கு வரும் தீமைகள்	...		745
புரு சிபிக்கு வரங்கொடுத்தது	...	...	747
நாரதர் அஷ்டகன், பிரதர்த்தனன், வஸுமான், சிபி இவர்களின் தாரதம்யத்தைக்கூறித் தானமகிமையைச் சொல்லியது	...	...	748-751
புகழும் வசையும் முறையே ஸ்வர்க்கவாஸத்துக்கும் நரகவாஸத்துக்கும் காரணமென்பதை விளக்கும் இந்திரத்யும்நோபாக்யானம்	...	...	752-754
ஸ்வர்க்கத்தையடைவதற்குக் காரணமான பொதுத் தர்மங்கள்	...	...	755-768
பயனில்லாத ஜன்மங்கள்	...	...	755
பயனற்ற தானங்கள்	...	...	756
பிராம்மணர்கள் கரையேறவும் கரையேற்றவும் ஸாதனங்கள்	...	...	757
ஸ்ராத்தத்தில் உபயோகிக்கத் தகாதவர்கள்	...		757
யமலோகம் செல்லும் வழியின் அளவு அதனைக் கடக்கும் உபாயம் முதலியன	...	...	760-761

அத்யாயம்.		பக்கம்.
தர்மங்களைக் கேட்டலின்பயன்	... ...	763
மூன்றுவித சௌசங்கள்	... ...	763
மனத்தில் களங்கம் நீங்காதவர்களுக்கு வேஷங்கள் மோக்ஷஸாதனமாகாவென்பது	... ...	764-766
ஞானகர்மங்களே மோக்ஷஸாதனமென்பது	...	766
துந்துமாரோபாக்யானம்	... ...	769-783
உதங்கர் ஹரியைத்துதித்து வரம்பெற்றது	... ...	770-772
பிருஹதஸ்வன் தவத்துக்குப் புறப்பட்டதும், உதங்கர் துந்துவைக் கொல்ல ஏவியதும்	... ...	772-775
பிருஹதஸ்வன் துந்துவைத் தன்புத்ரன்கொல்வானென்று சொல்லிச் சென்றது	... ...	775
மதுகைடபர் வரலாறும் வதமும்	... ...	776-778
துந்துவின் வதமும் குவலாஸ்வன் துந்துமாரனானதும்	...	781-782
துந்துமாரோபாக்யானத்தைக் கேட்டலின்பயன்	...	782-783
பெற்றோர்களின் அருமைபெருமைகளும், அவர்களை உபசரித்தலின் இன்றியமையாமையும்	... ...	784-785
தர்மவியாதோபாக்கியானம்	... ...	785-830
கௌசிகன் கொக்கை எரித்தது	... ...	786
கௌசிகன் பதிவ்ரதையைப் பார்த்துக் கோபித்ததும், அவள் அவனைத் தர்மவியாதரிடம போகச் சொல்லியதும்	... ...	787-790
கோபம் உடலிலுள்ள பகைவனென்பது	... ...	788
எப்படிஎப்படி இருப்பவன் பிராம்மணனென்பது	...	788-789
தர்மவியாதர் கௌசிகனுக்கு உபதேசித்தது	...	792-829
தத்தமக்குரிய தொழிலே சிறந்ததென்பதும், மற்றும் பலதர்மங்களும்	... ...	792-796
ஐந்து பவித்ரங்கள் எவை என்பது	... ...	796
சிஷ்டர்களும் சிஷ்டாசாரங்களும்	... ...	796-800
எதுஎதற்கு எதுஎது ஸாரமென்பது	... ...	797
ஸாதுக்களின் லக்ஷணம்	... ...	799-800
ஹிம்ஸை விலக்கமுடியாததென்பதும், தத்தம் தொழிலே சிறந்ததென்பதும்	... ...	800-804
பொய் மெய்யாவதும் மெய் பொய்யாவதும்	...	804
எது ஸத்யமென்பது	... ...	804
முயற்சியினும் தெய்வமே வலிதென்பது	... ...	804-806
ஜீவன் சாஸ்வதனென்பதும், ஜீவன்பிறத்தலும், வினைகளின் பயனும்	... ...	806-809

விஷய வரிசை.

அத்யாயம்.			பக்கம்.
விருப்பு வெறுப்பு லோப மோஹங்களும், அவற்றால் வருந் தீமைகளும்	...	...	810
அவ்யக்தம் ஜடப்பொருள்களின் கூட்டமுதலியன	...	...	811
ஐந்துபூதங்களின் குணங்கள்	...	...	812
ஜீவர்களின் ஜனனமரணங்கள்	...	...	812-813
வ்யக்தாவ்யக்தங்களின் லக்ஷணம்	...	...	813
எவனே வினைப்பயன்கள் அணுகாவென்பது		...	813
பிரம்மலக்ஷணம்	...	...	813
தவம் ஸ்வர்க்கம் நரகம் இந்திரியநிக்ரக முதலியன		...	813-814
முக்குணங்களும் அவற்றை உடையவரும்	...	...	815-816
எப்படி எப்படியிருப்பவருக்கு எந்தெந்த ஜாதித்தன்மை உண்டாகுமென்பது	...	...	816
பிராணன்முதலிய வாயுக்களும் அவற்றின் செயல்களும்		...	816-818
ஜீவாத்ம பரமாத்ம லக்ஷணம்	...	...	818-819
யோகிகள் கடவுளைக் காண்பது	...	...	819-820
எது எதினின்று எதுவதைப் பாதுகாக்க வேண்டுமென்பது	...	...	820
ஸத்யத்தின் பெருமையும் லக்ஷணமும்	...	...	820
எப்படியிருப்பவன் தியாகியென்பது	...	...	820
வியோகம் யோகமாவது	...	...	820
பொதுவான சில ஒழுக்கங்கள்	...	...	820-821
மோக்ஷலக்ஷணம்	...	...	821
தர்மவ்யாதர் தம்பெற்றோர்களைக் கௌசிகனுக்குக் காட்டியது	...	...	821-822
தர்மவ்யாதர் பெற்றோரை வணங்கியதும், அவர்கள் அவரை வாழ்த்தியதும்	...	...	822
தர்மவ்யாதர் பெற்றோரின் பெருமையையும் தாம் அவர்களுக்குப் பணிசெய்யுமுறையையும் கௌசிகனுக்குச் சொல்லியது	...	...	823-824
தர்மவ்யாதர் தமது ஞானதிருஷ்டிக்குக் காரணத்தைக் கூறிக் கௌசிகரைப் பெற்றோர்க்குப் பணிசெய்ய ஏவியது	...	...	824-825
கௌசிகன் தர்மவ்யாதரைப் புகழ்ந்து அவரது முன்வினையைப்பற்றி வினவியதும், அவர் தமது முற்பிறப்பு முதலியவற்றைக் கூறியதும்	...	...	825-828
மனிதர் தொழிலால் ஜாதியை அடைவது	...	...	828
எது எதனால் எது எதனைப் போக்க வேண்டுமென்பது	...	...	828

அத்யாயம்.		பக்கம்.
	துக்கம், அதிருப்தி, திருப்தி முதலியன	828-829
	கௌசிகன் விடைபெற்றுச்சென்று பெற்றோர்க்குப் பணிசெய்தது	829-830
	ஆங்கிரஸோபாக்யானம்	831-886
	அங்கிரஸ் அக்னியானதும், அக்னி அவரைக்கண்டு பயந்ததும்	831
	அங்கிரஸ் அக்நிக்குத் தேறுதல்சொல்லித் தாம் புத்ரரானது	832
	தேவர்கள் அங்கிரஸின் சொற்படி பிருஹஸ்பதியைக் குருவாகக்கொண்டது	832
	அக்நிகளின் உத்பத்தி முதலியன	833-838
	யாகங்களைக்கெடுக்கிற பதினைந்து அஸுரர்களின் பிறப்பு ...	838-839
	அக்நிகளின் வம்சவிவரணம்	839-846
	அக்நிக்கு நேரும் தோஷங்களுக்குப் பிராயச்சித்தங்கள் ...	842-843
	மீன்கள் ஸுஹாக்நி ஒளிந்த இடத்தைச் சொல்லியதும், ஸுஹாக்நி அவற்றைச் சபித்ததும்	844
	தாதுக்கள், ரத்னங்கள், மரங்கள் இவற்றின் உற்பத்தி ...	844-845
	அத்ரி அக்நிகளைப் படைத்தது	845
	தேவஸேனை நாயகனை விரும்பியது	847
	இந்திரன் கேசியை அடித்ததும், அவன் தேவஸேனையை விட்டோடியதும்	847-848
	கன்னிகை தன்னையும் தன் விருப்பத்தையும் தெரிவித்தது	848
	இந்திரன் உற்பாதங்களைக் கண்டு, கன்னிக்குப் பதியைத் தரும்படி பிரம்மதேவரை வேண்டியதும், அவர் உண்டாவனென்றதும்	849-850
	அக்நி ஸப்தரிஷிபத்னிகளை விரும்பியதும், அவர்கள் கிடையாமையால் வனஞ்சென்றதும்	851
	ஸ்வாஹாதேவி ஸப்தரிஷிபத்நிகளில் அருந்ததியல்லாத மற்றவர்களின் வேஷத்துடன் அக்நியை அடைந்தது	851-853
	ஸ்வாஹாதேவி கருடபக்ஷியாகி அக்நியின் வீர்யத்தை ஸ்வர்ணகுண்டத்தில் போட்டது	853-854
	அக்நியின் வீர்யம் ஸ்கந்தனானது	854
	ஸ்கந்தருக்கு வில்முதலியன வந்ததும், அவர் கிரௌஞ்ச கிரியைப் பிளந்ததும்	854-855
	ஸப்தரிஷிகள் அருந்ததியைத்தவிர மற்ற அறுவரைத் தள்ளியது	857

அத்யாயம்.			பக்கம்.
விஸ்வாமித்ரர் ஸ்கந்தருக்கு ஜாதகர்ம முதலியன செய்தது	...	...	857
தேவர்கள் ஸ்கந்தரைச் சரணமடைந்தது	...	...	860
இந்திரன் ஸ்கந்தரை வஜ்ரத்தாலடித்ததும், விசாகன் உண்டானதும்	...	...	860
இந்திரன் ஸ்கந்தரைச் சரணமடைந்ததும், அவர் அவனுக்கு அபயமளித்ததும்	...	...	860
குமாரர்களும் கன்னிகைகளும் உண்டானது	...	...	861
ஸப்தரிஷிகளும் இந்திரனும் ஸ்கந்தரை இந்திரனுக வேண்டினதும், அவர் மறுத்ததும்	...	...	863-864
இந்திரன் மறுபடியும் வற்புறுத்தியதும், ஸ்கந்தர் மறுத்து னைபதியானதும்	...	...	864
ஸ்கந்தர் ருத்ராபுத்ரானது.	...	...	865
ஸ்கந்தர் தேவஸேனையை மணந்தது	...	...	866-867
லக்ஷ்மி பஞ்சமியானதும், ஷஷ்டிதிதி மகிமைபெற்றதும்	...		867
அபிஜித் நக்ஷத்ரங்களைவிட்டு விலகியதும், கிருத்திகைகள் நக்ஷத்ரங்களில் சேர்ந்ததும்	...	...	868
சிசுமாரசக்ரஹங்களும் அவற்றுக்குச் சாந்தியும்	...	...	870-872
மனிதரைப் பீடிக்கும் கிரஹங்களும் அவற்றால் பற்றப் படாதவர்களும்	...	...	872-873
ஸ்வாஹாதேவி அக்நியோடு வஸிப்பவளானது	...		874
மிஞ்சிகையும் மிஞ்சிகனும் வ்ருக்ஷகைகள் முதலியவர்களும் உண்டானது	...	...	874-875
பரமசிவன் பத்ரவடத்துக்குப் புறப்பட்டதும், தேவ னைகளைக் காக்கும்படி ஸ்கந்தருக்குக் கட்டளை யிட்டதும்	...	...	876-879
தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் யுத்தமும், ஸ்கந்தர் மகிஷாஸுரனைக் கொன்றதும்	...	...	879-882
ஸ்கந்தோத்பத்தியைக்கூறும் உபாக்யானத்தைப் படித்தல் முதலியவற்றின் பலன்	...	...	883-884
ஸ்கந்தருடைய நாமங்கள்	...	...	884
ஸ்கந்தருடைய நாமங்களைப் படித்தலின் பலன்	...		884
மார்க்கண்டேயர்செய்த ஸ்கந்த ஸ்தோத்ரம்	...		884-886
ஸ்கந்தஜனனத்தைப் படித்தல் முதலியவற்றின் பலன்	...		886
த்ரௌபதீ ஸத்யபாமாஸம்வாத பர்வம்.			
234 ஸத்யபாமை திரௌபதியிடம் பர்த்தாவை வசப்படுத்த உபாயம் கேட்டது	...	...	886-887

அத்யாயம். பக்கம்.

திரௌபதி பதிவ்ரதாதர்மத்தை ஸத்யபாமைக்குக் கூறியது 887-892

ஸத்யபாமை தன்னை மன்னிக்கும்படி திரௌபதியை வேண்டினது ... 892

235 திரௌபதி, கிருஷ்ணனிடம் நடந்துகொள்ளவேண்டிய முறையை ஸத்யபாமைக்குக் கூறியது 892-894

236 ஸத்யபாமை திரௌபதிக்கு இன்சொற்கூறியது ... 894-895

கிருஷ்ணன் ஸத்யபாமையுடன் துவாரகை சென்றது ... 896

கோஷயாத்ரா பர்வம்.

237 பிராம்மணன் பாண்டவர்களின் வரலாற்றைத் திருத ராஷ்டிரனுக்குக் கூறியது 897

திருதராஷ்டிரன் பாண்டவர்களின் ஸ்ரமத்தைக் கேட்டுப் புலம்பியது 897-900

238 தன்செல்வத்தைக் காட்டிப் பாண்டவர்களுக்கு மன

குப் போகும்படி கர்ணனும் சகுனியும் துரியோதனனை ஏவியது 900-902

239 துரியோதனன் த்வைதவனஞ்செல்ல உபாயங்கேட்டதும், கர்ணனும் சகுனியும் கோஷயாத்ரையை உபாயமாகக் கூறியதும் 903-905

240 துரியோதனன் கோஷயாத்ரைக்கு அனுமதிகேட்டதும், திருதராஷ்டிரன் மனமில்லாமலே அனுமதிகொடுத்த தும் 905-907

துரியோதனன் பரிவாரங்களுடன் த்வைதவனஞ்சென்று தூரத்தில் வஸித்தது 907

241 துரியோதனன் பசுக்களைக் கணக்கிட்டதும், வேட்டை யாடியதும் 908-909

துரியோதனன் வீடுதிகளைமக்கச்சொல்லியதும், வேலைக் காரர்களைக் கந்தர்வர்கள் தடுத்ததும் 909

துரியோதனன் கந்தர்வர்களை ஓட்டும்படி படைவீரர் களுக்குச் சொல்லியதும், அவர்கள்போய்க் கந்தர்வர் களின் சொல்லால் திரும்பி ஓடியதும் 910

242 கௌரவர்களுக்கும் கந்தர்வர்களுக்கும் யுத்தமும், கர்ணன் தோற்றோடியதும் 911-914

243 சித்ரஸேனன் துரியோதனனைப் பிடித்துக்கட்டித் தன் தேரிலேற்றியது 914-915

அத்யாயம்.		பக்கம்.
	மற்றக்கந்தர்வர்கள் துச்சாஸனன் முதலியவர்களையும் ராஜமகிஷிகளையும் பிடித்தது	915
	சேனவீரர்கள் யுதிஷ்டிரரிடம் வந்து முறையிட்டதும், பீமன் கந்தர்வர்களின் செயலைக் கொண்டாடியதும் ...	915-916
244	யுதிஷ்டிரர் கௌரவர்களை அவஸ்யம் விடுவிக்கவேண்டு மென்றது	916-917
	யுதிஷ்டிரர் பிறரால் அவமதிப்பு நேரும்போது, தாம் நூற்றைவரென்றதும், தங்களுள் பகைவந்தால் தாம் ஐவரும், துரியோதனாதியர் நூற்றுவருமென்றதும் ...	917
	பீமன் துரியோதனனுடைய அக்ரமங்களை எடுத்துக் காட்டி அவனுக்காக வருந்தவேண்டாமென்று யுதிஷ் டிரருக்குச் சொல்லியது	917-918
	துரியோதனன் தங்களை விடுவிக்கும்படி யுதிஷ்டிரரைக் கூவிப் புலம்பியது	918
	யுதிஷ்டிரர் கௌரவர்களை விடுவிக்கும்படி பீமன் முதலிய வர்களுக்குக் கட்டளையிட்டதும், அர்ஜுனன் தான் அவர்களை விடுவிப்பதாகப் பிரதிஜ்ஞைசெய்ததும் ...	919
245 - 246	பீமன் முதலிய நால்வருக்கும் கந்தர்வர்களுக்கும் யுத்தம்	920-924
	சித்ரஸேனன் மாயாயுத்தம்செய்ததும், அர்ஜுனன் அவன் மீது அம்புதொடுத்ததும்	924
	சித்ரஸேனன் தான் நண்பனென்பதைத் தெரிவித்ததும், அர்ஜுனன் அஸ்திரத்தைத் திருப்பியழைத்ததும் ...	924
	மற்றப்பாண்டவர்கள் போரைநிறுத்தி கேஷமம் விசா ரித்தது	924
247	சித்ரஸேனன் கௌரவர்களைக் கட்டினதற்குக் காரணங்கூறி அவர்களை யுதிஷ்டிரரிடம் கொண்டுவந்தது ...	925-926
	யுதிஷ்டிரர் கௌரவர்களை அவிழ்த்துவிடச் செய்தது ...	926
	சித்ரஸேனன் சென்று நடந்தவற்றை இந்திரனிடம் தெரி வித்ததும், இந்திரன் இறந்த சந்தர்வர்களைப் பிழைப் பித்ததும்	926-927
	யுதிஷ்டிரர் துரியோதனனுக்குப் புத்திகூறியதும், துரியோ தனன் ஹஸ்தினாபுரத்துக்குத் திரும்பியதும் ...	927
248	துரியோதனன் நடுவழியில் தங்கியதும், கர்ணன் வந்து அவனைப் புகழ்ந்ததும்	928-929
249 - 251	துரியோதனன் தங்களைக் கந்தர்வர்கள் கட்டியதை யும் பாண்டவர்கள் கந்தர்வர்களை வென்று தங்களை	

அத்யாயம்.		பக்கம்.
	விடுவித்ததையும் தான் பிராயோபவேசம் செய்ய நிச்சயித்ததையும் கூறியது	929-933
	துரியோதனன் துச்சாஸனனிடம் ராஜ்யத்தை ஒப்பித்தும், அவன் அதனை மறுத்துத் துரியோதனனையே நாட்டையாளவேண்டி அழுததும்	933-934
	கர்ணன் துரியோதனனைத் திருப்புவதற்காக இன்சொற் கூறியது	934-936
	கர்ணன், குடிகள் அரசனுக்குச் செய்யவேண்டிய கடமையைப் பாண்டவர்கள் செய்தனரென்றது ...	935-936
252	சகுனி பாண்டவர்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்கும்படி துரியோதனனுக்குச் சொல்லியது	936-937
	துரியோதனன் பிராயோபவேசத்தில் உறுதியுடனிருந்தும், அஸுரர்கள் அவனைப் பாதாளத்துக்குத் தருவித்ததும்	938-940
253	தானவர்கள் துரியோதனனுக்கு உபதேசித்தனுப்பியது ...	940-943
	துரியோதனனுடைய சரீரம் ஈச்வரராலும் தேவியாலும் பாதிவஜ்ரமயமாகவும் பாதி புஷ்பமயமாகவும் அமைக்கப்பட்டதென்பது	940-941
	துரியோதனனுக்கு உதவிக்காக அஸுரர்களே அரசராகப் பிறந்தனரென்பதும், அஸுரர்கள், பீஷ்மர் துரோணர் முதலியவர்களிடத்தும் ஆவேசிப்பரென்பதும் ...	941
	நரகனுடைய ஆத்மா கர்ணனிடம் பிரவேசித்திருக்கிறதென்பது	942
	அஸுரர்களும் ராக்ஷஸர்களும் ஸம்சப்தகர்களாகப் பிறந்தது	942
	துரியோதனன் அஸுரர்களுக்கும் பாண்டவர்கள் தேவர்களுக்கும் முறையே கதியென்பது	942
	துரியோதனன் பாண்டவர்களை வெல்வதில் உறுதிகொண்டது	943
	கர்ணன் அர்ஜுனனைக் கொல்வதாகப் பிரதிஜ்ஞைசெய்ததும், துரியோதனன் பிராயோபவேசத்தைவிட்டு நகரடைந்ததும்	943-945
254	பீஷ்மர் துரியோதனனிடம் பாண்டவர்களைப் புகழ்ந்து அவர்களுடன் நட்புக்கொள்ளச் சொல்லியதும், கர்ணனை இகழ்ந்ததும்	945-946
	கர்ணன் திக்குவிஜயம்செய்ய விரும்பியதும், துரியோதனன் அவனைப் புகழ்ந்ததும்	946-947

வி ஷ ய வ ஸ் சி ன க.

அத்யாயம்.		பக்கம்.
	கர்ணன் திக்குவிஜயத்துக்குப் புறப்பட்டது ...	947-948
255	கர்ணன் எல்லா அரசர்களையும் வசப்படுத்தி ஹஸ்தினபுரம் வந்ததும், துரியோதனன் அவனைப் புகழ்ந்ததும் ...	948-950
	கர்ணன் திருதராஷ்டிரனை வணங்கியதும், அவன் வாழ்த்தியதும்	951
256	துரியோதனன் கர்ணனுடன் ஆலோசித்து ராஜஸூய யாகத்தைச் செய்விக்கும்படி புரோகிதரை வேண்டினதும், அவர் அதனை மறுத்து வைஷ்ணவயாகம் செய்யச் சொன்னியதும்	951-953
257	விதுரர் யாகத்துக்கு வேண்டிய பொருள்கள் வித்தமானதைத் தெரிவித்ததும், திருதராஷ்டிரன் துரியோதனனுக்கு யாகஞ்செய்ய அனுமதிகொடுத்ததும் ...	953-954
	துரியோதனன் யாகதீக்ஷையூண்டது	954
	துரியோதனன் அரசர்களுக்குத் தூதர்களை அனுப்பியதும், துச்சாஸனன் பாண்டவர்களை அழைக்கச் சொல்லியதும்	954
	தூதன் பாண்டவர்களை அழைத்ததும், அவர்களின் மறுமொழியும்	954-955
	துரியோதனன் யாகத்தைமுடித்து ஹஸ்தினபுரத்திற் பிரவேசித்தது	955
57	கர்ணன் துரியோதனனைப் புகழ்ந்ததும், அவனுடைய மறுமொழியும்	957
	துரியோதனன் ராஜஸூயம்செய்ய விரும்பியதும், கர்ணன் அர்ஜுனனைக் கொல்வதாகச் சபதஞ்செய்ததும் ...	957
	யுதிஷ்டிரர் கர்ணனுடைய பிரதிஜ்ஞையை அறிந்து கவலையுற்றது	958

ம் ரு க ஸ் வ ப் ப ர் வ ம்.

259	த்வைதவனத்திலுள்ள மிருகங்கள் தங்களைக் கொல்லாமல் விட்டு வேறுவனஞ்செல்ல வேண்டினதும், யுதிஷ்டிரர் ஸம்மதித்ததும்	959-960
	பாண்டவர்கள உடன்வஸிப்பவர்களோடு காம்யகவனம் சென்றது	960

வீ ர வ் த் ர ர ண் க ப ர் வ ம்.

260	பாண்டவர்களுக்கு வனவாஸத்தில் பதினொரு வருஷம் சென்றதும், வியாஸர் அவர்களிடம் வந்ததும் ...	961

விஷய வரிசை.

அத்யாயம்.			பக்கம்.
	வியாஸர் தவத்தின்சிறப்பு தான்த்தின்பெருமை முதலிய வற்றை யுதிஷ்டிரருக்குக் கூறியது	... ...	962-964
	தவத்தின் சிறப்பு	... ...	962
	நல்வினை செய்பவர்களுக்குரிய வாதனைகள்	...	962
	இம்மையில் செய்தது மறுமையில் அனுபவிக்கப்படுதலால் தவத்தையும் தானத்தையும் செய்யவேண்டுமென்பது	... ...	962-963
	இன்ன இன்ன நல்வினை செய்பவர் இன்ன இன்ன பயனை அடைவரென்பது	... ...	963
	தவத்திலும் தானம் சிறந்ததென்பது	... ...	963-964
	பொருளை நல்வழியில்தேடியே தானம் செய்யவேண்டுமென்பது	... ...	964
	தர்மத்துடன்கூடிய ஸ்ரத்தையின்பயன்	... ...	964
261 . 262	வியாஸர் முத்கலர்கதையை யுதிஷ்டிரருக்குக் கூறித் தேற்றிச் சென்றது	... ...	965-974
	முத்கலர் பதக்குநெல்லைச் சேர்த்து இஷ்டிகளைச்செய்து பதினைந்து காலுக்கொருமுறை ஆகாரஞ் செய்து வந்தது	... ...	965
	முத்கலர் அதிதிபூஜை செய்ததும், அதிதிகளைக் காணுந் தோறும் அவருக்கு அன்னம் வளர்ந்துவந்ததும்	...	965-966
	துர்வாஸர் முத்கலரிடம் ஆறுபருவங்கள் தொடர்ந்துவந்து அன்னத்தை மிச்சமின்றிப் புசித்ததும், முத்கலர் சிறிதும் வேறுபடாமலிருந்ததும்	... ...	966-967
	துர்வாஸர் முத்கலரைப் புகழ்ந்து சரீரத்துடன் ஸ்வர்க்கத்தை அடைவீரென்றதும், தேவதூதன் விமானத்துடன் வந்ததும்	... ...	967-968
	பலியினால் வரும் தீமைகள்	... ...	967
	நாவின் தன்மை	... ...	967
	தவம் இன்னதென்பது	... ...	967
	தேவதூதன் முத்கலரை ஸ்வர்க்கத்துக்கழைத்ததும், அவர் ஸ்வர்க்கத்தைப்பற்றி வினவியதும்	... ...	968
	தேவதூதன் ஸ்வர்க்கத்திலுடைய குணங்களையும் தோஷங்களையும் முத்கலருக்குக் கூறியது	... ...	969-972
	ஸ்வர்க்கம் செல்லாதவரும் செல்பவரும்	... ...	969
	நல்வினையே ஸ்வர்க்கத்தையடையக் காரணமென்பது	...	970
	பிரம்மலோகத்தின் சிறப்பு	... ...	970-971
	கர்மபூமியும் பலபூமியும்	... ...	972

விஷயவரிசை.

அத்யாயம். பக்கம்.

முத்கலர் தோஷமற்ற உலகத்தை வினவியதும், தேவதூதன் விஷ்ணுலோகத்தைப்பற்றிக் கூறியதும் ... 972-973

முத்கலர் ஸ்வர்க்கஞ்செல்ல மறுத்துத் தேவதூதனை அனுப்பிவிட்டு யோகஞ்செய்து முக்திபெற்றது ... 973

த்ரௌபதீஹரண பர்வம்.

263 துர்வாஸர் துரியோதனனிடம் வஸித்ததும், அவன் அவரை நன்கு உபசரித்ததும் 975

துர்வாஸர் வரங்கொடுப்பதாகச் சொல்லியதும், துரியோதனன் வரம்பெற்று மகிழ்ந்ததும் 975-977

264 துர்வாஸர் சிஷ்யர்களுடன் அகாலத்தில் பாண்டவர்களிடம் வந்து அன்னங்கேட்டதும், யுதிஷ்டிரர் ஸம்மதிக்க அவர்கள் நீராடச்சென்றதும் 977-978

திரௌபதி கோவிந்தரைத் துதித்ததும், அவர் வந்ததும் ... 978-979

திரௌபதி துர்வாஸருடைய வரவு முதலியவற்றைக் கோவிந்தருக்குத் தெரிவித்ததும், கோவிந்தர் தமக்குப் போஜனம் வேண்டினதும் 979

திரௌபதி அன்னமில்லையென்றதும், கோவிந்தர் பாத்திரத்தைக் கொணர்ந்து காட்டச்சொல்லியதும் ... 979

கோவிந்தர் பாத்திரத்தின் கழுத்தில் ஒட்டியிருந்த கீரையையும் பருக்கையையும் புசித்து, ஹரியானவர் திருப்தியடையட்டுமென்றது 979

கோவிந்தர் முனிவர்களைப் போஜனத்துக்கு அழைத்து வரும்படி பீமனை அனுப்பியது 980

ரிஷிகள் நீராடும்போதே பசிதீர்ந்ததும், துர்வாஸர் பயந்து பாண்டவர்களைப் புகழ்ந்ததும், அவர் கட்டளைப்படி முனிவர்கள் ஓடிப்போனதும் 980

பீமன் தேடி முனிவர்கள் ஓடிவிட்டதை அறிந்துவந்து யுதிஷ்டிரரிடம் சொல்லியது 980-981

பாண்டவர்கள் துர்வாஸர்விஷயத்தில் கவலைப்பட்டதும், கோவிந்தர் அவர்களைத் தேற்றிச்சென்றதும் ... 981

265 பாண்டவர்கள் வேட்டைக்குச் சென்றதும், பரிவாரங்களுடன் ஸால்வதேசத்துக்குப் போகிற ஜயத்ரதன் ஆஸ்ரமத்தில் திரௌபதியைக் கண்டதும் ... 982

அரசர்கள் திரௌபதியைக் கைகூப்பிக்கொண்டுகண்டது 982-983

ஜயத்ரதன் திரௌபதியை யாரென்று அறிந்துவருதற்காகக் கோடிகாஸ்யனை அனுப்பியது 983

அத்யாயம். பக்கம்.

266 கோடிகன் தங்களைத் தெரிவித்துத் திரௌபதியை யாரென்று வினவியது 983-985

267 திரௌபதி தன்குலமுதலியவற்றைக் கோடிகனுக்குச் சொல்லி ஆஸ்ரமத்தினுட் சென்றது 985-986

பாண்டவர்களுள் யார்யார் எந்தெந்தத் திசையில் வேட்டைக்குச் சென்றனரென்பது 986

268 கோடிகன் திரும்பிவந்து திரௌபதியைப்பற்றி ஜயத்ரதனிடம் சொல்லியதும், ஜயத்ரதன் திரௌபதியிடம் சென்று பேசியதும் 987-988

திரௌபதி காலகாணவளிப்பதாகச் சொல்லியதும், ஜயத்ரதன் அவளைத் தனக்கு மனைவியாக விரும்பியதும் 988-989

திரௌபதி ஜயத்ரதனை மறுத்து நீதிகூறியதும், அவன் அரசர்கள் யாரையும் அடையலாமென்றதும் ... 989

269 திரௌபதி ஜயத்ரதனைக் கடிந்துசொல்லியது ... 990-991

ஜயத்ரதன் தங்களை உயர்த்தியும் பாண்டவர்களை இழித்துங் கூறித் திரௌபதியைத் தேரிலாவது யானையிலாவது ஏறச்சொல்லியது 991

திரௌபதி தன் பெருமையையும் பாண்டவர்களின் திறமையையும் கூறி ஜயத்ரதனை நிந்தித்தது ... 991-993

ஜயத்ரதன் திரௌபதியை இழுத்ததும், அவள் அவனைத் தள்ளித் தானே தேரிலேறியதும் 993

தௌம்யர் ஜயத்ரதனை நிந்தித்துத் தொடர்ந்துசென்றது ... 993

270 யுதிஷ்டிரர் துர்நிமித்தங்களைக்கண்டு தம்பிமார்களுக்குச் சொல்லி அவர்களுடன் திரும்பியது 994

யுதிஷ்டிரர் நரியின்பேச்சை அறிந்து, கௌரவர்கள் தீமை செய்துவிட்டனரென்றது 994

இந்திரசேனன் தாத்ரேயிகையைக்கேட்டதும், அவள் தேவி கவரப்பட்டனளென்று அலறியதும், அவன் அவளைத் தேற்றியதும் 994-995

தாத்ரேயிகை பாண்டவர்களை விரைவுபடுத்தியதும், யுதிஷ்டிரர் அவளை அதட்டியதும் 996-997

பாண்டவர்கள் ஜயத்ரதனைப் போருக்கழைத்தது ... 997

271 திரௌபதி ஜயத்ரதனுக்குப் பாண்டவர்களின் பெருமையைக்கூறி அவர்களை அடையாளங்களுடன் தனித்தனி குறிப்பிட்டுக் காட்டியது 998-1000

கஅ விஷயஸூசிகை.

அத்யாயம். பக்கம்.

பாண்டவர்கள் ஜயத்ரதனது சேனையில் சரமாரி பொழிந்
தது 1000-1001

272 பாண்டவர்களுக்கு ஜயத்ரதன் முதலியவர்களுடன்
யுத்தம் 1001-1004

கோடிகாஸ்யனின் வதம் 1003

ஸௌவீரவீரர் பன்னிருவரின் வதம் 1003

போர்க்களத்தின் வர்ணனை 1003-1004

ஜயத்ரதன் திரௌபதியை விட்டோடியதும், தர்மபுத்ரர்
அவனைத் தேரிலேற்றிக் கொண்டதும் ... 1004

பீமன் ஜயத்ரதனைக் கொல்வதாகச் சொல்லியதும்,
யுதிஷ்டிரர் கொல்லவேண்டாமென்றதும் ... 1005

திரௌபதி கோபித்து ஜயத்ரதனைக் கொல்லவேண்டு
மென்று பீமார்ஜுனர்களுக்குச் சொல்லியதும்,
அவர்கள் அவனைத் தேடிச் சென்றதும் ... 1005

யுதிஷ்டிரர் திரௌபதியுடன் ஆஸ்ரமத்துக்கு வந்தது ... 1005

அர்ஜுனன் ஜயத்ரதனுடைய தேர்க் குதிரைகளைக்
கொன்றதும், அவன் இறங்கி ஓடியதும் ... 1006

பீமன் அவனைத் துரத்தியதும், அர்ஜுனன் அவனைக்
கொல்லவேண்டாமென்றதும் 1006

ஜயத்ரத விமோக்ஷண பர்வம்.

273 பீமன் ஜயத்ரதனை மயிரில் பிடித்திழுத்துத் தள்ளித்
தலையிலுதைத்ததும், அர்ஜுனன் அவனை விலக்கிய
தும் 1007

பீமன் ஜயத்ரதனுக்கு ஐங்குடுமிவைத்துப் பாண்டவர்
களுக்கு அடிமையென்று சொல்லச்சொல்லியதும்,
அவன் சம்மதித்ததும் 1008

பீமன் ஜயத்ரதனைக் கட்டிக்கொணர்ந்ததும், யுதிஷ்டிரர்
அவிழ்த்துவிடச் சொல்லியதும் 1008

பீமன் ஜயத்ரதனை அவிழ்த்துவிட்டதும், அவன் யுதிஷ்
டிரரையும் முனிவர்களையும் வணங்கியதும் ... 1008-1009

யுதிஷ்டிரர் ஜயத்ரதனுக்குப் புத்திகூறி அடிமைநீங்
கிச் செல்லும்படி விடைகொடுத்தது ... 1009

ஜயத்ரதன் கங்காத்வாரஞ்சென்று தவம்புரிந்ததும்,
மஹாதேவர் வரங்கொடுத்ததும் 1009-1014

பிரளயமும், உலக உற்பத்தியும் 1010-1011

நாராயணரென்னும் சொல்லுக்குப் பொருள் ... 1011

அத்யாயம். பக்கம்.

பரமாத்மாவின் மூன்று மூர்த்திகளும், அவற்றின் செயல்களும் 1011

விஷ்ணுவின் அவதாரங்களும், கிருஷ்ணன் மகிமையும் 1011-1014

உலகம் வைஷ்ணவமானது 1013

ராமோபாக்யான பர்வம்.

274 யுதிஷ்டிரர் தமக்கொப்பான துயரமுள்ளவன் உலகத் திலிருக்கிறானென்று மார்க்கண்டேயரை வினவியது 1015-1016

275 - 293 மார்க்கண்டேயர் ராமோபாக்யானத்தைச் சொல்லி யுதிஷ்டிரரைத் தேற்றியது ... 1016-1086

ராமர், லக்ஷ்மணன், பரதன், சத்ருக்னன், ஸீதை இவர் களின் பிறப்பு 1017

குபேரனது பிறப்பு 1017

குபேரன் பிதாமஹரை அடுத்ததும், புலஸ்தியர் கோபங் கொண்டு விஸ்ரவஸைப் படைத்ததும் ... 1017

பிரம்மதேவர் குபேரனுக்கு அமரத்வமுதலியவைகளைக் கொடுத்தது 1017

குபேரன் விஸ்ரவஸுக்குப் பணிசெய்தற்காக மூன்று ராக்ஷஸிகளை அனுப்பியது 1018

ராவணகும்பகர்ணர்களின் பிறப்பு 1018

விபீஷணனது பிறப்பு 1018

கரன் சூர்ப்பணகை இவர்களின் பிறப்பு 1018

விபீஷணன் குணசாலியாயிருந்தது 1018

ராவணன் ராக்ஷஸ ராஜனானது 1018-1019

கும்பகர்ணன் மாயாவியும் மிக்கபலமுள்ளவனுமானது ... 1019

கரன் வில்லில் வல்லவனும் பிராம்மணரைப் பகைப்ப வனுமானது 1019

சூர்ப்பணகை வித்துக்களுக்கு இடையூறு செய்பவளா னது 1019

ராவணன் முதலியோர் தவம்புரிந்ததும், கரனும் சூர்ப் பணகையும் அவர்களுக்குப் பணிவிடைபுரியும் பாதுகாவலி யும் செய்ததும் 1019

பிரம்மதேவர் ராவணன் முதலியவர்களுக்கு வரங் கொடுத்தது 1019-1021

ராவணன் குபேரனை வென்று லங்கையையும் புஷ்பக விமானத்தையும் கவர்ந்துகொண்டதும், குபேரன் அவனைச் சபித்ததும் 1021

அத்யாயம். பக்கம்.

விபீஷணன் குபேரனை அனுஸரித்ததும், அவன் விபீஷணனுக்கு யகூராகூஸ சேனைகளுக்குத் தலைமையை அளித்ததும் 1021
ராகூஸர் முதலியோர் ராவணனை அரசனுக்கியது ... 1021
ராவணனென்னும் சொற்பொருள் 1021
ராவணன் தேவர்களுக்குப் பயத்தை உண்டுபண்ணியது 1021
பிரம்மரிஷிகள் முதலியோர் பிரம்மாவிடம் முறையிட்டதும், அவர் மறுமொழியும் 1022
தேவர்கள் முதலியோர் பூமியில் வானரங்கள் முதலிய வற்றை உண்டுபண்ணியது 1022-1023
பிரம்மதேவர் கட்டளையிட்டதும், நந்தபி மந்தரையாகப் பிறந்ததும் 1023
ராமர் முதலியோரின் கல்வியும் மணமும் ... 1024
தசரதன் ராமருக்கு இளவரசப்பட்டங்கட்ட நிச்சயித்ததும், மந்தரை கைகேயியைக் கலைத்ததும் ... 1024-1026
ஸ்ரீராமருடைய லக்ஷணம் குணமுதலியன ... 1025
கைகேயி வரங்கேட்டதும், ராமர் காட்டுக்குப் புறப்பட்டதும், லக்ஷ்மணனும் ஸீதையும் உடன்சென்றதும் 1026-1027
தசரதன் மரணம் 1027
கைகேயி பரதனை நாடாளச் சொல்லியதும், அவன் அவளை நிந்தித்து ராமரை அழைத்துவரச் சென்றதும் 1027
பரதன் ராமரை வணங்கித் தந்தை இறந்ததைக் கூறி அவரை அரசாள அழைத்ததும், அவர் பிதாவுக்குத் தர்ப்பணம் செய்து தம்முடைய பாதுகைகளை நாடாளும்படி கொடுத்ததும் 1028
பரதன் பாதுகைகளைப் பெற்று நந்திக்ராமத்திலிருந்து நாடாண்டது 1028
ராமர் பதிநாலாயிரம் அரக்கர்களையும் தூஷணனையும் கரனையும் கொன்றது 1028
சூர்ப்பணகை ராவணனிடம் சென்று முறையிட்டதும், அவன் சினந்து மாரீசனிடம் சென்றதும் ... 1028-1029
மாரீசன் ராவணனை உபசரித்து வினவியதும், ராவணன் காரியத்தைத் தெரிவித்ததும் 1030
மாரீசன் ராமனை அணுகலாகாதென்றதும், ராவணன் மாரீசனைக் கொல்வதாகச் சொல்லியதும் ... 1030-1031

விஷயஸூசிகை. உக

அத்யாயம். பக்கம்.

ராவணனும் மாரீசனும் ராமாஸ்ரமஞ் சென்று முறையே நிறவியும் பொன்மானும் ஆகியது 1031

ஸீதை மானை விரும்பியதும், ராமர் அதனைத் ராக்ஷஸனென்றறிந்து கொன்றதும் 1031-1032

மாரீசன் ராமருடைய குரலோடு அலறியதைக்கேட்டு ஸீதை பயந்ததும், லக்ஷ்மணன் அவளுக்குத் தேறுதல் கூறியதும் 1032

ஸீதை லக்ஷ்மணனிடம் ஸந்தேஹித்துக் கடிந்து பேசியதும், அவன் ராமரைத் தேடிச்சென்றதும் ... 1032

ராவணன் ஸீதையைத் தனக்கு மனைவியாக வேண்டினதும், அவள் மறுத்ததும் 1033

ராவணன் ஸீதையைத் தூக்கிச்சென்றதும், ஜடாயு அவனுடன் போர்செய்து விழுந்ததும் ... 1034-1035

ஸீதை வானராதிபதிகளின் நடுவில் பீதாம்பரத்தை எறிந்தது 1035

ராமர் ஸீதையை விட்டுவந்ததற்காக லக்ஷ்மணனை நிந்தித்ததும், அவன் ஸீதைபிரிவற்றை அவருக்குத் தெரிவித்ததும் 1035

ஜடாயு, ஸீதையை ராவணன் கொண்டுபோனதை ராம லக்ஷ்மணர்களுக்குத் தெரிவித்து உயிர்விட்டதும், ராமர் ஜடாயுவுக்கு ஸம்ஸ்காரத்தைச் செய்வித்ததும் 1036

கபந்தன் லக்ஷ்மணனைப் பிடித்ததும், ராமலக்ஷ்மணர்கள் அவனைக் கொன்றதும் 1036-1037

கபந்தன் தேகத்திலிருந்து வெளிப்பட்ட கந்தர்வன் தனக்குச் சாபம்வந்ததைக் கூறி ராமரை ஸுக்ரீவனை அடையும்படி சொல்லிச் சென்றது 1037-1038

ராமர் ஸீதையை நினைத்து வருந்தியதும், லக்ஷ்மணன் தேற்றியதும் 1038-1039

ராமர் ஸுக்ரீவனோடு நட்புக்கொண்டதும், இருவரும் பிரதிஜ்ஞை செய்ததும் 1039

ஸுக்ரீவன் கர்ஜித்ததும், தாரை வாலியைத் தடுத்ததும் 1040

வாலி தாரையின் சொல்லை அலக்ஷ்யஞ்செய்து போருக்குச் சென்றது 1040-1041

வாலிக்கும் ஸுக்ரீவனுக்கும் யுத்தமும், வாலி ராமபாணத்தாலடிபட்டு இறந்ததும் 1041

அத்யாயம். பக்கம்.

ஸுக்ரீவன் கிஷ்கிந்தையையும் தாரையையும் அடைந்ததும், ராமர் மால்யவானென்னும் மலையில் வஸித்ததும் 1042

ராவணன் ஸீதையைச் சிறையில் வைத்ததும், ராக்ஷஸிகள் ஸீதையை அதட்ட அவள் மறுமொழியும் ... 1042-1043

திரிஜடை, ஸீதையைத் தேற்றுதற்காக அவிந்தியன் சொல்லியதையும் தான் கனவுகண்டதையும். அவளுக்குச் சொல்லியது 1043-1045

ராவணன் தன்னை அடையும்படி ஸீதைக்குச் சொல்லியதும், அவள் மறுக்க அவன் மறைந்ததும் ... 1046-1048

ராமர் லக்ஷ்மணனை ஸுக்ரீவனிடம் அனுப்பினதும், அவன் திரும்பிவந்து ஸுக்ரீவன் ஸீதையைத்தேட வானரர்களை அனுப்பியதை ராமருக்குத் தெரிவித்ததும் 1048-1050

அனுமான் ஸீதையைத் தேடிக் கண்டதை ராமர் முதலியவர்களுக்குக் கூறியது 1051-1054

வானரர்கள் ஸம்பாதியைக் கண்டதும், அவன் தன் வரலாற்றையும் ராவணனிருப்பிட முதலியவற்றையுங் கூறியதும் 1052-1053

அனுமான் ஸீதையைக் கண்டு பேசியது ... 1053-1054

வானரஸேனைகள் வந்து கூடியது 1054-1055

ராமர் வானரஸேனைகளுடன் கடற்கரை சேர்ந்தது ... 1055-1056

ராமர் பிரதிசயனஞ்செய்ததும், ஸாகரன் அணைகட்டச் சொல்லியதும் 1057-1058

ராமர் அணைகட்டுவித்ததும், அதன் விஸ்தீர்ணமும் ... 1058

விபீஷணன் ராமரைச் சரணமடைந்ததும், அவர் அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்துத் தமக்கு மந்திரியும் லக்ஷ்மணனுக்குத் தோழனுமாக்கியதும் ... 1059

ராமர் ஸேனையுடன் லங்கை சென்றதும், சுகஸாரணர்களைப் பிடித்துச் சும்மா விட்டதும் 1059

ராமர் அங்கதனைத் தூதனுப்பியதும், அவன் அவருடைய கட்டளையை ராவணனுக்குத் தெரிவித்து மீண்டதும் 1059-1061

ராவணன் லங்கைக்குப் பாதுகாப்பமைத்தது ... 1060

அங்கதனை நான்கு ராக்ஷஸர்கள் பிடித்ததும், அவன் அவர்களைத் தூக்கிக்கொண்டு உயரக்கிளம்பிக் கீழே போட்டதும் 1061

விஷய ஸூசிகை.

அத்யாயம்.		பக்கம்.
ராமர் லங்கையின் மதில் முதலியவற்றை இடிக்கச் செய்தது, வானரர்களுக்கும் அரக்கர்களுக்கும் சண்டையும், பின்பு போர் நிறுத்தலும்		1061-1063
ராவணன் சுக்ரநீதிப்படியும், ராமர் பிருகஸ்பதிநீதிப்படியும் அணிவகுத்துப் போர்புரிந்தது ...		1064
லக்ஷ்மணன் முதலியவர்களுக்கு இந்திரஜித்து முதலியவர்களுடன் யுத்தம்		1064-1066
விபீஷணன் பிரஹஸ்தனைக் கொன்றது		1065
அனுமான் தூம்ராக்ஷனைக் கொன்றது		1066
ராவணன் கும்பகர்ணனை எழுப்பி அனுப்பியதும், அவன் பலனையும் சண்டபலனையும் வஜ்ரபாகுவையும் தின்றதும்		1066-1068
கும்பகர்ணன் ஸுக்ரீவனைப் பிடித்ததும், லக்ஷ்மணன் கும்பகர்ணனை அடித்ததும்		1068
கும்பகர்ணன் மாயாயுத்தஞ் செய்ததும், லக்ஷ்மணன் அவனை மாய்த்ததும்		1068-1069
அனுமான் வஜ்ரவேகனைக் கொன்றது		1069
நீலன் பிரமாதியைக் கொன்றது		1069
ராமராவண ஸேனைகளுக்கு யுத்தமும், பெரும்பாலும் ராக்ஷஸர்களே கொல்லப்பட்டதும்		1069
ராவணன் இந்திரஜித்தை அனுப்பியதும், அவன் மாயப் போர் செய்து ராமலக்ஷ்மணர்களைக் கட்டியதும் ...		1070-1072
ராமலக்ஷ்மணர்கள் மயங்கி விழுந்ததும், ஸுக்ரீவன் விபீஷணன் முதலியவர்கள் அவர்களைக் களபாற்றித் தெளிவித்ததும்		1072-1073
குபேரன் மறைந்திருக்கிற பிராணிகளைக் காண்பதற்காகத் தீர்த்தமனுப்பியதும், ராமர்முதலியோர் அதனால் கண்களை அலம்பிக்கொண்டதும் ...		1073
லக்ஷ்மணனுக்கும் இந்திரஜித்துக்கும் யுத்தமும், லக்ஷ்மணன் அவனைக் கொன்றதும்		1074
ராவணன் ஸீதையைக் கொல்ல ஓடியதும், அவிந்தியன் தடுத்ததும்		1075
ராமராவணயுத்தமும், இந்திரன் தன் தேரையனுப்ப ராமர் அதிலேறி ராவணனை எரித்ததும் ...		1076-1078
ராமர் லங்கையை விபீஷணனுக்குக் கொடுத்தது ...		1079
அவிந்தியன் ஸீதையை ராமரிடம் அழைத்து வந்ததும், அவர் மறுக்க அவள் கீழே விழுந்ததும் ...		1079-1080

விஷய வரிசை.

அத்யாயம். பக்கம்.

ஸீதை தான் குற்றஞ்செய்திருந்தால் தன் உயிரை வாயு முதலியோர் போக்குகவென்றதும், அவர்கள் அவளிடத்துக் குற்றமின்மையை ராமருக்குத் தெரிவித்ததும் 1081-1082

ராமர் அவிந்தியனுக்கு வரத்தையும் தரிஜடைக்குப் பொருள் முதலியவற்றையும் கொடுத்தது ... 1082

பிரம்மதேவர் ராமருக்கு வரங்கொடுத்ததும், வானரர்கள் பிழைத்தெழுந்ததும் 1083

ஸீதை அனுமானுக்கு வரங்கொடுத்தது 1083

ராமர் ஸீதைமுதலியோருடன் கிஷ்கிந்தைக்குவந்து அங்கதனை இளவரசனாக்கியது 1083-1084

ராமர் நந்திக்ராமம் வந்ததும், பரதன் ராஜ்யத்தைத் திருப்பிக் கொடுத்ததும் 1084

வஸிஷ்டரும் வாமதேவரும் ஸ்ரீராமருக்கு முடிசூட்டியதும், ராமர் நூறு அச்வமேதங்களைச் செய்ததும் ... 1084-1085

மார்க்கண்டேயர் யுதிஷ்டிரரைக் காரணங்காட்டித் தேற்றியது 1085-1086

பதிவ்ரதாமாஹாத்ம்ய பர்வம்.

294 - 300 மார்க்கண்டேயர் ஸாவித்ரி உபாக்யானத்தை யுதிஷ்டிரருக்குச் சொல்லியது 1087-1116

அச்வபதி நாள்தோறும் ஹோமஞ் செய்துவந்ததும், ஸாவித்ரீதேவி வரங்கொடுத்ததும் 1087-1088

அச்வபதிக்குப் பெண்பிறந்ததும், அவன் அவளுக்கு ஸாவித்ரியென்று பெயரிட்டதும் 1088-1089

ஸாவித்ரிக்கு யௌவனப்பருவம் வந்ததும், அச்வபதி வரன் தேடிக்கொள்ளும்படி அவளுக்குக் கட்டளையிட்டதும் 1089-1090

இகழப்படத்தக்க மூவர் 1090

ஸாவித்ரி போய்த்தேடி ஸத்யவானை வரித்ததாகத் தந்தையிடம் வந்து சொல்லியது 1090-1091

த்யுமத்ஸேனன் வரலாறு 1091

நாரதர் ஸத்யவானுடைய குணங்களையும் அவன் ஒரு வருஷத்தில் இறப்பனென்பதையும் அச்வபதிக்குச் சொல்லியது 1091-1093

ஸத்யவானென்னும் பெயருக்குக் காரணம் ... 1091

ஸத்யவான் சித்ராச்வனென்னும் பெயர் பெற்றது ... 1091-1092

அத்யாயம். பக்கம்.

அஸ்வபதி வேறு வரனை வரிக்கச்சொல்லியதும், ஸாவித்ரி மறுத்ததும் 1093

ஸாவித்ரிக்கும் ஸத்யவானுக்கும் விவாஹம் ... 1095

ஸாவித்ரி மரவுரிகளையும் காஷாய வஸ்திரங்களையும் தரித்துப் பணிவிடை முதலியவற்றால் எல்லாரையும் மகிழ்வித்தது 1095-1096

ஸாவித்ரி இராப்பகல் நின்றுகொண்டே விரதமனுஷ்டித்தது 1096-1097

ஸத்யவான் காட்டுக்குப் புறப்பட்டதும், ஸாவித்ரி உடன் சென்றதும் 1098-1099

ஸத்யவான் தலைவலிபொறுக்காமல் ஸாவித்ரியின் மடியில் தலைவைத்துப் படுத்ததும், ஸாவித்ரி யமனைக் கண்டதும் 1100

ஸாவித்ரி யமனை யாரென்று வினவியதும், அவன் தன்னையும் தான்வந்த காரியத்தையும் தெரிவித்ததும் 1100-1101

ஸாவித்ரி யமனை நேரேவரக் காரணங்கேட்டதும், அவன் விடைகூறி ஸத்யவானுடைய உயிரைக் கட்டிச் சென்றதும் 1101

ஸாவித்ரி யமனைத் தொடர்ந்துசென்றதும், அவன் அவளைத் திரும்பச் சொல்லியதும் 1101

ஸாவித்ரி ஆஸ்ரம தர்மத்தைப்பற்றிக் கூறியதும், யமன் வரங்கேட்கச் சொல்லியதும் 1101-1102

ஸாவித்ரி முதல்வரங்கேட்டதும், யமன கொடுத்து அவளைத் திரும்பச் சொல்லியதும் 1102

ஸாவித்ரி தனக்குக் கணவனே கதியென்பதையும் ஸாதுக்களின் கூட்டத்திலேயே வஸிக்கவேண்டுமென்பதையும் சொல்லியதும், யமன் வரங்கேட்கச் சொல்லியதும் 1102-1103

ஸாவித்ரி இரண்டாவது வரங்கேட்டதும், யமன் கொடுத்து அவளைத் திரும்பச் சொல்லியதும் ... 1103

ஸாவித்ரி யமனைத் துதித்ததும், அவன் வரங்கேட்கச் சொல்லியதும் 1103-1104

ஸாவித்ரி மூன்றாவது வரங்கேட்டதும், யமன் கொடுத்து அவளைத் திரும்பச் சொல்லியதும் 1104

ஸாவித்ரி பின்னும் யமனைத் துதித்ததும், அவன் வரங்கேட்கச் சொல்லியதும் 1104

ஸாவித்ரி நான்காவது வரங்கேட்டதும், யமன் கொடுத்து

அத்யாயம். பக்கம்.

அவளைத் திரும்பச் சொல்லியதும் 1104-1105

ஸாவித்ரி பதிவிரதைகள் ஸாதுக்கள் இவர்களின் நடையைக் கூறியதும், யமன் வரங்கேட்கச் சொல்லியதும் 1105

ஸாவித்ரி ஸத்யவான் பிழைப்பதை வரமாகக் கேட்டதும், யமன் அவனை அவிழ்த்துவிட்டு அவனுக்கு நீண்ட ஆயுள் முதலியவற்றைக் கொடுத்துச் சென்றதும் 1105-1106

ஸாவித்ரி திரும்பிவந்து தன் பர்த்தாவின் தலையைத் தன்மடியில் வைத்துக்கொண்டதும், அவன் உயிர் பெற்று அவளை வினவியதும், அவள் மறுமொழியும் 1106-1107

ஸத்யவான் தான் யமனைக் கண்டது முதலியவற்றைப் பற்றி வினவியதும், ஸாவித்ரி மறுநாள் சொல்வதாகக் கூறி வீட்டுக்குப் போகலாமென்றதும் ... 1107-1108

ஸத்யவான் தன்பெற்றோர்களைப் பாராமைக்கு வருந்தி அழுததும், ஸாவித்ரி தனது தவமுதலியவற்றால் மாமியார் மாமனார்கள் உயிரோடிருக்கவேண்டுமென்றதும் 1108-1110

ஸத்யவான் இரவிலேயே ஆச்ரமத்துக்கு வரவிரும்பியதும், ஸாவித்ரி அவனை அழைத்துக்கொண்டு ஆச்ரமத்தைநோக்கி வந்ததும் 1110-1111

த்யுமத்ஸேனனுக்குப் பலமும் கண்களும் வந்தது ... 1111

த்யுமத்ஸேனனும் அவன் மனைவியும் ஸத்யவானையும் ஸாவித்ரியையும் தேடி வருந்தியதும், முனிவர்கள் அவர்களுக்குத் தேறுதல் சொல்லியதும் ... 1111-1113

ஸத்யவானும் ஸாவித்ரியும் ஆச்ரமம்வந்ததும், அங்குள்ளவர்கள் தாமதத்துக்குக் காரணங்கேட்டதும், அவர்கள் விடைகூறியதும் 1113-1115

ரிஷிகள் ஸாவித்ரியைப் புகழ்ந்து சென்றது ... 1115

ஸால்வதேசத்து ஜனங்கள் வந்து த்யுமத்ஸேனனை அரசாள அழைத்ததும், அவன் நாடுசென்று பட்டாபிஷேகம் செய்யப்பெற்றதும் 1115-1116

ஸத்யவான் இளவரசனானதும், அவனுக்கு நூறு பிள்ளைகள் பிறந்ததும் 1116

அம்வபதிக்கு நூறு பிள்ளைகள் பிறந்தது ... 1116

ஸாவித்ரி ஆறுவகையினரைக் கரையேற்றியது ... 1116

ஸாவித்ரியின் உபாக்யானத்தைக் கேட்டலின் பயன் ... 1117

துண்டலாஹரண பர்வம்.

301 இந்திரன் கர்ணனை யாசிக்கமுயன்றதும், ஸூர்யன்

விஷய வரிசை.

அத்யாயம்.		பக்கம்.
	இந்திரனுக்குக் கவசகுண்டலங்களைக் கொடுக்கக் கூடாதென்று கர்ணனுக்கு ஸ்வப்னத்தில் சொல்லியதும்	1117-1119
	கர்ணன் கவசகுண்டலங்களைக் கொடுக்கவே கொடுப்பேனென்றது	1119-1120
	கீர்த்தி அபகீர்த்திகளின் உயர்வுதிழிவுகள் ...	1119-1120
302	சூரியன் மறுபடியும் கர்ணனை மறுத்துக் கூறியது ...	1121-1122
	கீர்த்தியையும் அபகீர்த்தியையும்பற்றிய சூரியனுடைய அபிப்ராயம்	1121
303	கர்ணன் கவசகுண்டலங்களைக் கொடுக்க மறுபடியும் அனுமதிகேட்டதும், சூரியன் உடன்பாட்டுடன் கொடுக்கச் சொல்லியதும்	1122-1124
	கர்ணன் கனவின் விஷயத்தை மறுபகலில் சூரியனுக்குத் தெரிவித்ததும், அவன் அது உண்மையென்றதும்	1124
304	துர்வாஸர் குந்திபோஜனிடம் வந்து வஸிக்க விரும்பியதும், குந்திபோஜன் குந்தியை அவருக்குப் பணிசெய்யச் சொல்லியதும்	1125-1127
305 - 306	குந்தி அரசன் கட்டளையை ஏற்றுக் கருத்துடன் பணிசெய்து துர்வாஸரை மகிழ்வித்தது ...	1127-1130
	துர்வாஸர் குந்திக்கு மந்திரங்களை உபதேசித்தது ...	1131
307 - 308	குந்தி மந்திரத்தைப் பரீக்ஷிப்பதற்காகச் சூரியனை அழைத்ததும், அவன் வந்ததும்	1132
	சூரியனுக்கும் குந்திக்கும் ஸம்வாதமும், அவன் அவளைக் கலந்ததும்	1132-1137
309	குந்தி குழந்தையைப்பெற்றுப் பெட்டியில் வைத்துப் புலம்பிக்கொண்டே நதியில்விட்டது... ...	1138-1139
	குழந்தைவைத்தபெட்டி கங்கையில் சென்றது ...	1140
	இது இது குழந்தையை உயிரோடிருக்கச் செய்தனவென்பது	1140
310	அதிரதனும் ராதையும் பெட்டியை எடுத்துத் திறந்து குழந்தையை எடுத்து வளர்த்ததும், அவர்களுக்குச் சொந்தப்புத்திரர்களும் உண்டானதும் ...	1141
	பெட்டியில் வந்த குழந்தைக்கு நாமகரணம் செய்தது ...	1141-1142
	கர்ணனைக் குந்தி அறிந்ததும், ஸூதன் அவனை ஹஸ்தினாபுரத்துக்கு அனுப்பியதும்	1142
	கர்ணன் வில்வித்தை கற்றதும், துரியோதனனுக்கு நண்பனும் அர்ஜுனனுக்குப் பகைவனுமானதும் ...	1142

விஷயஸூசிகை.

அத்யாயம். பக்கம்.

இந்திரன் பிராம்மணனாகி வந்ததும், கர்ணன் அவனை நல்வரவு கேட்டதும். 1143

311 கர்ணன் என்னவேண்டுமென்று கேட்டதும், பிராம் மணன் கவசகுண்டலங்களை யாசித்ததும் ... 1143

கர்ணன் பலமுறை மறுத்தும் பிராம்மணன் கவச குண்டலங்களையே வேண்டினதும், கர்ணன் அவற் றுக்குப் பிரதியாகச் சக்தியாயுதத்தை விரும்பியதும் 1143-1145

சக்தியாயுதத்தைப்பற்றிய சில வரையறைகளும், கர்ணன் கவசகுண்டலங்களை அறுத்தலால் காய முதலியன உண்டாகாதபடி வரம்பெற்றதும் 1145-1146

கர்ணன் கவசகுண்டலங்களை அறுத்துக் கொடுத்ததும், பூமாரி பெய்ததும் 1146

ஆரணேய பர்வம்.

312 பாண்டவர்கள் த்வைதவனம் வந்து வஸித்ததும், பிராம் மணன் வந்து முறையிட்டதும் 1148-1149

பாண்டவர்கள் மானத்தொடர்ந்து அடித்ததும், அது ஓடி மறைந்ததும் 1149

பாண்டவர்கள் களத்து உட்கார்ந்ததும், நகுலன் சங்கடத்தை அடைந்தோமே என்றதும் ... 1149

313 யுதிஷ்டிரர் முதலியோர், சங்கடத்தை அடைந்ததைப் பற்றிச் சொல்லியது 1150

நகுலன் முதலியோர் தடாகத்தில் நீரைப்பருகி இறந்த தும், யுதிஷ்டிரர் தடாகத்துக்குச் சென்று பார்த்த தும் 1151-1154

314 யுதிஷ்டிரர் பலவாறு புலம்பி யக்ஷனுடன் பேசியது ... 1155-1159

யக்ஷன் விஞ்சுக்களும் யுதிஷ்டிரர் விடையும் ... 1159-1177

யக்ஷன் இறந்த நால்வருள் யார் பிழைக்கவேண்டு மென்று வினவ, யுதிஷ்டிரர் நகுலன் பிழைக்கவேண்டு மென்றது 1176-1177

யக்ஷன் எல்லாரும் பிழைக்கக்கடவரென்றது ... 1178

315 இறந்த பாண்டவர்கள் பிழைத்ததும், யுதிஷ்டிரர் வினவ, யக்ஷன் தன்னைத் தெரிவித்து அவருக்கு வரங்களைக் கொடுத்து மறைந்ததும் 1178-1180

பாண்டவர்கள் ஆஸ்ரமம்வந்து அரணீஸம்புடத்தைப் பிராம்மணனுக்குக் கொடுத்தது 1180-1181

ஆரணேயபர்வக் கதையைப் படித்தலின் பயன் ... 1181

வனபர்வம் விஷயஸூசிகை முற்றிற்று.

—:():—

ஸ்ரீ மஹாபாரதம்.

வனபர்வம்

இரண்டாம் பாகம்.

நூற்றைம்பத்தெட்டாவது அத்யாயம்.

ஜடாஸுரவத பர்வம்.

(பிராம்மணவேஷம் பூண்டு பாண்டவர்களினருகில் நெடுங்காலம் வஸித்த ஜடாஸுரன் பீமஸேனனில்லாதபொழுது திரௌபதியையும் யுதிஷ்டிரர் முதலியவர்களையும் கவர்ந்தோடியதும், நடுவழியில் தற்செயலாக எதிரில் வந்த பீமன் அந்த ஜடாஸுரனைக் கொன்றதும்.)

அந்த ராக்ஷஸர்களும் பீமஸேனனுடைய புத்திரனை கடோத்கசனும் சென்றபிறகு, அந்தச் சிறந்த மலையில் அர்ஜுனன் வருவானென்கிற விருப்பத்தால் பிராம்மணர்களோடு கூட வஸிக்கின் றவர்களும் அந்த இடத்தில் மிக்க நம்பிக்கையுடனிருப்பவர்களும் ஒரு ஸமயம் தற்செயலாகப் பீமஸேனனைவிட்டுப் பிரிந்திருப்பவர் களுமான அந்தப் பாண்டு குமாரர்களான யுதிஷ்டிரரையும் நகுலஸஹ தேவர்களையும் திரௌபதியையும் ஓர் அரக்கன் தூக்கிக்கொண்டு சென்றான்" என்று சொல்ல, ஜனமேஜயர், "பிராம்மணரே! ராக்ஷஸன் தர்மராஜரையும் நகுல ஸஹதேவர்களையும் கிருஷ்ணையையும் எவ்வாறு கவர்ந்தான்? (இது) ஆச்சர்யமாக இருக்கிறது. ராக்ஷஸர் களுக்குப் பகைவனான பீமனும் எங்கே சென்றான்? பிராம்மணரே! தமரே! குற்றமற்றவரே! இதனை எனக்குத் தெளிவாகச் சொல்லக் கடவீர்" என்று வினவினர்.

வைசம்பாயனர், "தர்மாத்மாவும் பாவத்தில் புத்தியைச் செலுத் தினவனும் பெயரால் ஜடாஸுரனென்று பிரஸித்திபெற்றவனுமான

அவன், 'நான் எல்லா அஸ்திரங்களிலும் அவற்றின் மந்திரங்களிலும் ஸாமர்த்தியமுள்ள பிராம்மணன்; அஸ்திரங்களை அறிந்தவர்களுள் மிகச்சிறந்தவன்' என்று சொல்லிக்கொண்டு, பாண்டவர்களுடைய அம்புத் தூணிகளையும் வில்களையும் கவரக்கருதியவனும் திரௌபதியைக் கவர்வதற்கு ஸமயத்தை எதிர்பார்ப்பவனுமாக, பாண்டவர்களை எப்பொழுதும் உபாஸித்து வந்தான். ராஜஸ்ரேஷ்டரே! பாண்டவர்களை மகிழ்விப்பவரான யுதிஷ்டிரர் அவனைப் போஷித்துவந்தார்; பாவியான அவன் சாம்பலால் மூடப்பட்ட நெருப்பைப்போலிருந்ததைத் தெரிந்துகொள்ளவில்லை. மிகக்கெட்ட எண்ணம் கொண்டவனென அவன், பகைவரை அடக்குகிறவனென பீமஸேனன் வேட்டையாடுவதற்காக வெளியில் சென்றிருக்கையில் கடோத்கசனும் அவனுடன் வந்தவர்களும் பல திசைகளிலும் சென்றதைக் கண்டும், மனவடக்கமுள்ளவர்களும் தபோதனர்களுமான லோமசர் முதலிய அந்த மஹரிஷிகள் ஸ்நானத்திற்காகவும் புஷ்பங்களைக் கொண்டுவருவதற்காகவும் சென்றதைக் கண்டும், விகாரமாகவும் பயங்கரமாகவும் பெரிதாகவுமிருக்கிற வேறு உருவத்தை எடுத்து எல்லா ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டும் திரௌபதியைத் தூக்கிக்கொண்டும், மூன்று பாண்டவர்களையும் எடுத்துக்கொண்டும் ஓடினான். பாண்டுகுமாரனை ஸஹதேவனை அவனிடமிருந்து முயற்சியினால் (தன்னை) விடுவித்துக்கொண்டு, உறையிலிருந்த கத்தியைப் பகைவனை அவன் பிடித்திருந்ததிலிருந்து வலிந்து விடுவித்து, மகாபலசாலியான பீமஸேனன் சென்ற வழியைநோக்கி அவனைக் கூவி அழைத்தான். கொண்டுபோகப்படுகிற தர்மராஜரான யுதிஷ்டிரர் ராக்ஷஸனை நோக்கி, 'மூட! உன்னுடைய தர்மம் குறைவடைகிறது. இதனை நீ பார்க்கவில்லை. மனுஷ்யஜாதியை அடைந்தவர்களும் திர்யக்ஜாதியை அடைந்தவைகளும் ஆகிய எல்லாரும் தர்மத்தை நன்கு பார்க்கிறார்கள். முக்யமாக ராக்ஷஸர்களும் தர்மத்தை நன்கு பார்க்கிறார்கள். ராக்ஷஸர்கள் தர்மத்திற்கு மூலம். அவர்கள் உத்தம தர்மத்தை அறிகிறார்கள். நீ இவைகளெல்லாவற்றையும் ஆராய்ந்து ஸமீபத்தில் நிற்கத் தகுதியுள்ளவனல்லை. ராக்ஷஸனே! தேவர்களும் ரிஷிகளும் ஸித்தர்களும் பிதிருக்களும் கந்தர்வர்களும் உரகர்களும் ராக்ஷஸர்களும் பறவைகளும் அப்படியே பசுக்களும் மற்ற விலங்கு ஜாதியைச் சார்ந்தவைகளும் புழுக்களும் எறும்புகளும் மனிதர்களை அண்டிப் பிழைக்கின்றனர். ஆகையால், நீயும் (மனிதர்களை அண்டிப்) பிழைக்கிறாய். இந்த உலகத்தினுடைய சிதழிப்பினால்

உங்களுடைய உலகம் செழிப்படைகிறது. இந்த உலகமானது துக்கத்தை அடையும் தருணத்தில் தேவதைகளும் (இந்த உலகத்தின் துக்கத்தை) அனுஸரித்துத் துக்கிக்கிறார்கள். சாஸ்திரத்தில் சொல்லிய விதிப்படி ஹவ்யகவ்யங்களால் பூஜிக்கப்படுவார்களாகில் அந்தத் தேவர்கள் விருத்தியடைகிறார்கள். ராக்ஷஸ! நாங்கள் ராஜ்யத்தைப் போஷிப்பவர்கள். (ஆபத்துக்களிலிருந்து) பாதுகாப்பவர்களாகவுமிருக்கிறோம். ராஜ்யமானது பாதுகாக்கப்படாமற் போனால் ஸம்பத்து ஏது? ஸுகம் ஏது? குற்றமிருந்தாலன்றி ராக்ஷஸர்கள் அரசனை ஒருகாலும் அவமதிக்கலாகாது. மனிதர்களைப் பக்ஷிக்கிறவனே! எங்களிடத்தில் அபசாரமானது அணுவளவுகூட இல்லை. நாங்கள் எப்பொழுதும் ஸத்யத்துக்குக் கட்டுப்பட்டு [1]விகஸத்தைப் பூஜிக்கின்ற குருக்களையும் பிராம்மணர்களையும் தேவதைகள் முதலியவர்களின் ஸ்தானத்தில் சக்திக்குத் தக்கபடி ஏற்படுத்துகிறோம். ஒருவன் மித்திரர்களிடத்திலும் நம்பினவர்களிடத்திலும் அன்னமிட்டவர்களிடத்திலும் வலிக்க இடங்கொடுத்தவர்களிடத்திலும் ஒருபொழுதும் துரோகம் செய்யலாகாது. அப்படிப்பட்ட நீ எங்களுடைய வீட்டில் பூஜிக்கப்படுகிறவனாக ஸுகமாக வஸித்துவந்தவன். துஷ்டபுத்தியுள்ளவனே! எங்களுடைய அன்னங்களையும் புஜித்து எங்களை ஏவ்வாறு அபஹரிக்க விரும்புகிறாய்? இவ்விதமாகவே வீணன ஆசாரமுள்ளவனும் வீணக வளர்ந்திருப்பவனும் வீணன புத்தியையுடையவனும் வீணக மரணத்தை அடையத்தகுதியுள்ளவனுமான நீ இப்பொழுது வீணக மரிக்கப்போகிறாய். அல்லது, நீ துஷ்ட புத்தியுள்ளவனும் எல்லாத் தர்மங்களாலும் விடுபட்டவனுமாயிருந்தால் எங்களுடைய சஸ்திரங்களை எங்களிடம் கொடுத்துவிட்டு யுத்தத்தில் திரௌபதியைக் கொண்டு போ. அப்படியின்றி நீ தெரிந்துகொள்ளாமல் இந்தக் காரியத்தைச் செய்வாயாகில் அதர்மத்தையும் உலகத்தில் அபகீர்த்தியையும் மாத்திரம் அடைவாய். ராக்ஷஸனே! இப்பொழுது இந்த மானிடப் பெண்ணைத் தொட்டு உன்னல் இந்த விஷமானது நன்றாகக் கலக்கிக் குடத்தோடு குடிக்கப்பட்டது' என்று அந்த ராக்ஷஸனைப் பார்த்துச் சொன்னர். பிறகு, யுதிஷ்டிரர் அந்த ராக்ஷஸனுக்கு அதிக பாரமுள்ளவரானர். பாரத்தால் அழுத்தப்பட்ட தேகமுள்ளவனன அவனை முன் சென்றதுபோல விரைந்து செல்பவனாகவில்லை. யுதிஷ்டிரர், பிறகு, திரௌபதியையும் நகுலனையும் பார்த்து, 'மூடனன ராக்ஷஸனிடத்

---

1 தேவர்கள் முதலியவர்களுக்கு நிவேதனம் செய்த மிச்சம்.

ன்று பயப்படாதீர்கள். இவனுடைய கடையின் வேகமானது என்னல் குறைக்கப்பட்டது. புஜபலம் மிக்க வாயுகுமாரனை பீமன் அதிக தூரம் சென்றிருக்கமாட்டான். அவன் வந்தவுடன், ராக்ஷஸன் ஒரு முகூர்த்தகாலத்தில் உயிர் துறப்பான்' என்று சொன்னர். மன்னரே! ஸஹதேவனே, மூடபுத்தியுள்ள அந்த ராக்ஷஸனைப் பார்த்துவிட்டு, குந்தீபுத்ரரான யுதிஷ்டிரரை நோக்கி, 'அரசரே! க்ஷத்ரியனுக்கு யுத்தத்தில் (பகைவனை) எதிர்த்துநின்று உயிரை விடுவதோ, அல்லது, பகைவனை வெல்வதோ இதனைக்காட்டிலும் மேலான நல்ல காரியம் என்ன இருக்கின்றது? பகைவரைவாட்டுபவரே! போர்புரிந்து இந்த ராக்ஷஸனையது நம்மைக் கொல்லக் கடவன். அல்லது, நாமாவது இவனைக் கொல்லக்கடவோம். மிக்க பாஹுபலமுள்ளவரே! அரசரே! இது தக்க இடமும் காலமுமன்றோ? ஸத்ய பராக்கிரமமுள்ளவரே! க்ஷத்திரியதர்மத்திற்கு ஸமயம் வாய்த்திருக்கிறது. ஜயித்தோ கொல்லப்பட்டோ கற்கதியை அடைவதற்கு நாம் தகுதியுள்ளவர்களாக இருக்கிறோம். பாரதரே! இப்பொழுது ராக்ஷஸன் ஜீவித்திருக்கையில் ஸூர்யன் அஸ்தமயத்தை அடைவானகில் மறுபடியும் நான் க்ஷத்திரியனென்று ஒருகாலும் சொல்லத் துணியேன்' என்கிற வசனத்தைச் சொன்னன். பிறகு, ஸஹதேவன் ராக்ஷஸனைப் பார்த்து, 'ஓ! ஓ! ராக்ஷஸ! நில்; நான் பாண்டுவின் புதல்வனான ஸஹதேவன். என்னையாவது கொன்று இவனைக் கொண்டுபோ; அல்லது, நீயாவது கொல்லப்பட்டு இங்கே படு' என்று சொன்னன்.

அப்பொழுது, மாத்ரீபுத்திரன் சொல்லிக்கொண்டிருக்கையிலேயே, மிக்க தேஜோவலிமையுள்ள பீமஸேனன் வஜ்ரபாணியான இந்திரன்போலத் தற்செயலாகக் காணப்பட்டான். அவன் அந்த இடத்தில் பிராதாக்களையும், கீர்த்தியுள்ளவளான பாஞ்சாலியையும், பூமியில் நின்றுகொண்டு ராக்ஷஸனை அப்பொழுது அதட்டுகின்ற ஸஹதேவனையும், வழியினின்று (தவறி) மயங்குகிறவனும் காலத்தால் கெடுக்கப்பட்ட மதியுள்ளவனும் ஆங்காங்கு சுற்றுகிறவனும் தெய்வத்தால் மதிமயக்கமடையும்படி செய்யப்பட்டவனுமான ராக்ஷஸனையும் கண்டான். மகாபலசாலியான பீமன் அந்தப்பிராதாக்களும் திரௌபதியும் கொண்டுபோகப்படுவதைக்கண்டு கோபத்தை ஏறிட்டுக்கொண்டான். அவன் ராக்ஷஸனையும் பார்த்து, 'நீ ஆயுதங்களைப் பரீக்ஷிக்கும் விஷயத்தில் தவலைசெய்பவனாக என்னல் முன்பே அறியப்பட்டிருக்கிறாய். (உன்னைக்கொல்லும் விஷயத்தில்) எனக்கு

விருப்பமில்லாததுபற்றி அப்பொழுது நீ கொல்லப்படாமலிருந்தாய். பிராம்மணவேஷத்தால் மறைக்கப்பட்டவனாக இருந்துகொண்டு எங்களுக்கு அப்பியத்தை நீ சொல்லாமலிருந்தாய். பிரியமான விஷயங்களில் மகிழ்கிறவனும் அப்பியத்தையே செய்யாதவனும் பிராம்மணவேஷத்தைத் தரித்திருப்பவனும் குற்றம் செய்யாதவனுமான உன்னை ராக்ஷஸனென்று அறிந்திருந்தாலும் நான் கொல்லாமலே இருந்தேன். அப்படிப்பட்டவனை எவன் கொல்வானோ அவன் நரகத்தை அடைவான். மேலும், [1] காலத்தால் பக்குவமாகாத உனக்கு வதம் அப்பொழுது இல்லை. அத்புதமான செய்கையுள்ள காலமானது கிருஷ்ணனை அபஹரிக்கும் விஷயத்தில் இப்படிப்பட்டபுத்தியை உனக்குக் கொடுத்துவிட்டபடியால் இப்பொழுது நீ நன்கு பக்குவமாக இருக்கிறாயென்பது தெரிந்தது. நீ அப்படி பலசாலியாக இருந்தாலும் அப்படிப்பட்ட காலத்தை அடைந்து விட்டமையால் இப்பொழுது இருக்கமாட்டாய். காலமென்கிற நூலுடன் தொங்கவிடப்பட்டிருக்கிற இந்தத் தூண்டிலானது உன்னால் விழுங்கப்பட்டுவிட்டது. ஜலத்தில் தூண்டில்முள்ளினால் வாய்கோக்கப்பட்ட மீன்போல இப்பொழுது எப்படி (விடுபட்டு)ச் செல்லுவாய்? எந்த இடத்தைக் குறித்து நீ புறப்பட்டாயோ, எந்த இடத்தைக்குறித்து உன்னுடைய மனமானது முந்திச்சென்றதோ அந்த இடத்தை நீ அடையப்போகிறதில்லை. பகன் ஹரிடம்பன் ஆகிய இவர்களுடைய வழியை அடைவாய்' என்னும் இதனைச் சொன்னான். பிறகு இவ்வாறு சொல்லப்பட்டவனும் யமனால் தூண்டப்பட்டவனுமான ராக்ஷஸனை பயந்தவனாக அவர்களனைவரையும் விட்டுவிட்டு யுத்தத்திற்காக அருகில் வந்தான். கோபத்தால் உதடுகள் மிகத்துடிக்கிறவனாக மீண்டும் பீமனைப்பார்த்து, 'பாவி! எனக்குத் திசைகள் தெரியாமல் போகவில்லை. உனக்காகவே நான் காமகிக்கிறேன். யுத்தத்தில் எந்த எந்த அரக்கர்கள் உன்னால் கொல்லப்பட்டார்களென்று நான் கேட்டிருக்கிறேனோ அவர்களுக்கு இப்பொழுது உன்னுடைய ரக்தத்தால் ஜலதர்ப்பணம் செய்யப்போகிறேன்' என்றும் சொன்னான். ராக்ஷஸன் அப்பொழுது பீமனைப்பார்த்து இவ்வண்ணம் உரைத்துப் பயங்கரமான முகத்துடன் கோபத்தால் கருநாகம்போலப் பெருமூச்சுவிட்டுக் கொண்டு யுத்தத்திற்காக எதிர்த்து வந்தான். பிறகு, இவ்வாறு சொல்லக்கேட்ட பீமன், கடைவாய்களை கடிக்கிக்கொண்டும், கோபத்தால் சிரித்துக்கொண்டும், நிகரில்லாதிருக்கிற காலனுக்கும் அந்தக

1 மரணகாலம் சேராத என்பது.

ஐக்குமொப்பானவனுகி, 'நில், நில்' என்று சொல்லிக்கொண்டும், கோபத்தினுல் கண்கள் நன்குசிவந்தவனுகக் கைச்சண்டையையே விரும்பி ராக்ஷஸனை எதிர்த்தோடி வந்தான். ராக்ஷஸனும் அப்பொழுது அடிக்கடி வாயைத்திறந்துகொண்டும், இருகடைவாய்களையும் நக்கிக்கொண்டும், போரைவிரும்பி எதிரில் நிற்கின்ற பீமனை, பலனென்கிற அஸுரன் வஜ்ரத்தைத் தரித்த இந்திரனை எதிர்த்து ஓடியதுபோலப் பரபரப்புடன் எதிர்த்து ஓடினன். பீமஸேனனும் கைச்சண்டைக்கு ஆயத்தமாக நின்றனன். ராக்ஷஸனும் அதிக உத்ஸாஹத்துடன் கைச்சண்டையை விரும்பினன்.

அரசரே! அவ்விருவருக்கும் மிக்க பயங்கரமான கைச்சண்டை நடந்துவரும்போது, மாத்ரீகுமாரர்களிருவரும் அதிககோபத்துடன் எதிர்த்தோடிவந்தார்கள். குந்திபுத்திரனை பீமன் உரக்கச் சிரித்துக்கொண்டு, 'நானே ராக்ஷஸனை (க்ஷிகால்ல) வல்லவன்' என்று அவ்விருவரையும் தடுத்தான்; 'பார்த்துக்கொண்டிருங்கள்' என்றும் சொன்னன்; (யுதிஷ்டிரரைப் பார்த்து,) 'அரசரே! என்மீதும் பிராதாக்கள்மீதும் தர்மத்தின்மீதும் ஸுக்ருதத்தின்மீதும் யாகத்தின்மீதும் ஆணையிடுகிறேன். ராக்ஷஸனை நான் நாசம் செய்வேன்' என்று சொன்னன். (பீமன்) இவ்வண்ணம் கூறியபின், வீரர்களான அந்த ராக்ஷஸனும் பீமஸேனனுமாகிய இருவரும் ஒருவரோடொருவர் போட்டிபோட்டுக்கொண்டு கைகளால் கட்டிச் சண்டை செய்யத் தொடங்கினர்கள். யுத்தத்தில் (ஒருவரை யொருவர்) பொருதவர்களும் கோபங்கொண்டவர்களுமான அந்தப் பீமனுக்கும் ராக்ஷஸனுக்கும், இந்திரனுக்கும் சம்பரனுக்கும் நேர்ந்ததுபோல யுத்தம் நேர்ந்தது. அந்த வீரர்களிருவரும் மிக்க கோபங்கொண்டு ஒருவர்மீதொருவர் பாய்ந்தார்கள். மாரிக்காலத்து மேகங்கள்போலக் கர்ஜிப்பவர்களும் மிக்க பலசாலிகளுமான அவர்கள் மரங்களை ஒடித்தொடித்து (அவைகளால்) ஒருவரை ஒருவர் அடித்தார்கள். பலசாலிகளுள் சிறந்தவர்களான அவர்கள், ஒருவர்மீது ஒருவர் மிகுந்த கோபமுள்ளவர்களும் ஒருவரை ஒருவர் கொல்வதில் விருப்பமுள்ளவர்களுமாகித் தொடைகளால் பெரிய மரங்களை ஒடித்தார்கள். முற்காலத்தில் வானரர்களுள் சிறந்தவர்களும் பிராதாக்களுமான வாலிசுக்ரீவர்களுக்கு நடந்த யுத்தம்போன்ற அந்த மரச்சண்டையானது மரங்களை அழிப்பதாயிற்று. அந்த இருவரும் அடிக்கடி உரக்கக் கர்ஜித்துக்கொண்டு மரங்களைச் சுழற்றிச் சுழற்றி ஒருவரை ஒருவர் ஒரு முகூர்த்தகாலம் அடித்தார்கள். பாரதரே!

அந்த இடத்தில் எல்லா மரங்களுமே ஒருவரை ஒருவர் கொல்வதி லுள்ள விருப்பத்தால் நாறு நாருகப்பிடுங்கி (கொறுக்கிக்) சுழிக்கப் பட்டபின் கற்களை எடுத்துக்கொண்டு மகாபலசாலிகளான அவ்விரு வரும் பெரிய மேகங்களால் பொழியப்படுகிற இரண்டு பெரிய மலைகள் போல ஒரு முகூர்த்தகாலம் போர்புரிந்தார்கள். கோபமுள்ளவர்க ளான அவ்விருவரும் பயங்கரமான உருவமுள்ள பெரிய கற்களால் மிக்க வேகமுள்ள வஜ்ராயுதங்களால் அடித்துக்கொள்வதுபோல ஒருவரை ஒருவர் அடித்தார்கள். பிறகு, தந்தம் பலத்தினால் கர்வங்கொண்ட அவ்விருவரும் மறுபடியும் (ஒருவரை ஒருவர்) எதிர்த்தேதாடி இருகைகளாலும் கட்டிப்பிடித்து இரண்டு யானைகள் போல இழுத்தார்கள். அதிகப் பயங்கரமான முஷ்டிகளால் ஒருவரை யொருவர் எதிர்த்துக் குத்தினார்கள். மிக்க பலசாலிகளான அவர்க ளுக்கு அப்போழுது, 'கடகட' என்னும் ஒலிஉண்டாயிற்று. பிறகு, பீமனை ஐந்துதலைநாகம்போன்ற முஷ்டியைக் கன்றுகப்பிடித்து ராக்ஷஸனுடைய கழுத்தில் வேகத்தோடு குத்தினான். பிறகு, பீமனை னனுடைய கையினால் அடிக்கப்பட்டவனும் கலைத்தவனுமான அந்த ராக்ஷஸன் மிக்க பயக்கமடைந்ததைக் கண்டு, பீமஸனன் அவனை எதிர்த்து வந்தான். மிக்க புஜபலமுள்ளவனும் தேவனுக்கு ஒப்பான வனுமான பீமன், பிறகு, அந்த ராக்ஷஸனைத் தன்னிருகைகளாலும் வலித்து உயரத்தூக்கிப் பூமியில் நன்றுகத் தேய்த்தான். பிறகு, கோபம் மூண்டவனான பாண்டவன் இருகைகளாலும் அந்த ராக்ஷ ஸனை வலித்து நசுக்கி அவனுடைய எல்லா அவயவங்களையும் தொறுக் கினான். முஷ்டியினால் கழுத்தை நன்றுக நாற்புறங்களிலும் அடித்து நசுக்கித் தலையை உடலினின்றும் பறித்தான். உதடுகளைக் கடித்துக் கொண்டதும் பிதுங்கி வெளியில் வந்திருக்கின்ற கண்களுடன் கூடியதும் மரத்தினின்று கழுவின கனிபோன்றதுமான ஜடா ஸுரனுடைய தலையானது பீமனனுடைய பலத்தால் கவரப் பட்டதும் ரக்தத்தினால் எங்கும் பூசப்பட்டதுமாகப் பற்களால் உதடுகளை நன்கு கடித்துக்கொண்டு கீழே விழுந்தது. மகாவில்லாளி யான பீமனனன் அந்த ராக்ஷஸனைக்கொன்று தேவர்களால் இந்திரன் துதிக்கப்படுவதுபோலப் பிராம்மணரிஷிகளால் துதிக்கப்படுகின்றவனாகி யுதிஷ்டிரரருகில் வந்தான்.

ஜடாஸுரவதபர்வம் முற்றிற்று.

ஸ்ரீ மஹாபாரதம்.

நூற்றைம்பத்தொன்பதாவது அத்யாயம்.

யக்ஷயுத்த பர்வம்.

(யுதிஷ்டிரர் பரிஜனங்களுடன் மறுபடியும் நரநாராயணஸ்ரமத்தில் வஸித்ததும், வ்ருஷபர்வாவின் ஆஸ்ரமமுதலிய இடங்களில் ஸஞ்சரித்ததும், ஆர்ஷ்டிஷேணருடைய ஆஸ்ரமத்துக்குச் சென்றதும்.)

அந்த ராக்ஷஸன் கொல்லப்பட்ட பிறகு, ப்ரபுவும் அரசருமான குந்தீபுத்ரர் மறுபடியும் நரநாராயணஸ்ரமத்தை அடைந்து வாஸம் செய்தார். த்ரௌபதியுடனிருக்கும் அந்த யுதிஷ்டிரர், ஸமயத்தில் ப்ராதாவான அர்ஜுனனை நினைத்துக்கொண்டு அந்தத் தம்பிமாரனைவரையுமழைத்து, 'க்ஷேமமாக வனத்தில் ஸஞ்சரிக்கின்ற நமக்கு நான்கு வருஷங்கள் சென்றன. 'மலைகளைச் சிறந்ததும், பூத்திருக்கிற சாலைகளாலும் மத்திருக்கிற குயில்களாலும் வண்டுகளாலும் மயில்களாலும் சாதகங்களாலும் நித்யோத்ஸவம்போல அலங்கரிக்கப்பட்டதும், புலிகளாலும் பன்றிகளாலும் எருமைகளாலும் கவயங்களாலும் அப்படியே மான்களாலும் மதயானைபோன்ற துஷ்ட மிருகங்களாலும் புள்ளிமான்களாலும் அடையப்பட்டதும், மலர்ந்திருக்கின்ற [1] ஸஹஸ்ரபத்ரங்களாலும் [2] சதபத்ரங்களாலும் உத்பலங்களாலும் நன்கு மலர்ந்த [3] கமலங்களாலும் கருநெய்தல்களாலும் (விளங்குவதும்,) மிக்க புண்யமானதும், பரிசுத்தமானதும், தேவர்களாலும் ஸுரர்களாலும் அடையப்பட்டதும், பர்வத ராஜனுமான கைலாஸத்தைக் குறித்து ஐந்தாவது வர்ஷக் கடைசியில் நான் வருகிறேன்' என்று அர்ஜுனன் ஸங்கேதம் செய்திருக்கிறான். அர்ஜுனனுடைய வரவைக் காண எண்ணங்கொண்ட நம்மாலும் அந்த இடத்தில் (வந்து பார்ப்பதாக) ஸங்கேதம் செய்யப்பட்டிருக்கிறது. அளத்தற்கரிய ஆற்றலுள்ள அந்தப் பார்த்தனால், பூர்வகாலத்தில், 'அஸ்திர வித்தையை விரும்பினவனாக ஐந்துவர்ஷங்கள் (ஸ்வர்க்கலோகத்தில்) வஸிப்பேன்' என்று என்னிடத்தில் ஸங்கேதம் செய்யப்பட்டிருக்கிறது. அஸ்திரங்களைப் பெற்றவனும்

1, 2, 3 தாமரையின் வகைகள்.

பகைவர்களையடக்குபவனும் தேவலோகத்தினின்று இவ்வுலகத்திற்குத் திரும்பிவந்தவனும் காண்டீவமென்கிற வில்லைக் கையில் பிடித்திருக்கிறவனுமான அர்ஜுனனை இந்த இடத்தில் பார்ப்போம்' என்ற வசனத்தைச் சொன்னார். யுதிஷ்டிரர் இவ்வண்ணமுரைத்துப் பிராம்மணர்களனைவரையும் அழைத்தார்; தபஸிகளான அவர்களுக்கு அந்தக் காரணத்தையும் சொன்னார். உக்கிரமான தவமுள்ள அந்தப் பிராம்மணர்கள் மகிழ்ச்சியுடன் யுதிஷ்டிரரை வலமாகச் சுற்றிவந்து 'பரதர்ஷபரே! தர்மங்களை அறிந்தவனே! ஸுகத்தைப் பிறனை பயனுகக்கொண்ட இந்தத் துன்பத்தை க்ஷத்திரியனுக்குரிய தர்மத்தினால் விரைவாகத் தாண்டிப் பூமியைப் பரிபாலனம் செய்யப் போகிறாய்' என்று மங்களத்தோடும் க்ஷேமத்தோடும் சேர்ந்திருக்கும்படி அன்புடன் அந்தச் சொல்லை ஏற்றுக்கொண்டார்கள். பகை வரை வாட்டுபவரும் திரௌபதியுடனிருப்பவரும் ஸ்ரீமானுமான அரசர் அந்தத் தபஸிகளுடைய அந்த வசனத்தை ஏற்றுக்கொண்டு அப்பொழுது அந்தப் பிராம்மணர்களாலும் பிராதாக்களாலும் கடோத்கசன்முதலிய ராக்ஷஸர்களாலும் பின்தொடரப்பட்டவராகவும் லோமசரால் பாதுகாக்கப்பட்டவராகவும் புறப்பட்டார்.

மிக்க தேஜஸ்ஸுள்ளவரும் நல்ல விரதமுள்ளவருமான அவர் ஆங்காங்கே தம்பிமார்களுடன் சிலவிடங்களில் கால்களால் நடந்து சென்றார்; சிலவிடங்களில் அரக்கர்களால் தூக்கிச் செல்லப்பட்டார். பிறகு, யுதிஷ்டிரராஜர் பல துன்பங்களைச் சிந்தித்துக்கொண்டு சிங்கங்களாலும் புலிகளாலும் யானைகளாலும் நிரம்பின வடதிசையை நோக்கிச் சென்றார். அவர் கைலாசத்தையும் மைனாகமலையையும் கந்தமாதனத்தைச் சார்ந்த குன்றுகளையும் மேரு பர்வதத்தையும் மலையின் மேன்மேலான இடங்களில் மங்களகரமான பல நதிகளையும் பார்த்துக்கொண்டு பதினேழாவது நாளில் புண்ணியமான இமயமலையின் உச்சியை அடைந்தார். பரதசிரேஷ்டரே! பாண்டவர்கள், கந்தமாதனத்திற்கு அருகில், புண்யமானதும் பலவகை மரங்களாலும் கொடிகளாலும் சூழப்பட்டதுமான இமயமலையின் மேற்பிரதேசத்தில் நீர்நிலைகளில் முளைத்தவைகளும் புஷ்பித்திருப்பவைகளுமான மரங்களால் சூழப்பட்ட மிக்க புண்யமான விருஷபர்வாவினுடைய ஆச்ரமத்தைக் கண்டார்கள். பகைவர்களை அடக்குகிறவர்களான பாண்டவர்கள் ராஜரிஷியும் தர்மாத்மாவுமான அந்த விருஷபர்வாவை

அணுகிக் களைதீர்ந்தவர்களாகி நமஸ்கரித்தார்கள். ராஜரிஷியான அவன் பாதஸ்ரேஷ்டர்களான அவர்களைப் புத்திரர்களைப்போல வரவேற்றான். பகைவர்களை அடக்குகிறவர்களான அவர்கள் அவனால் பூஜிக்கப்பட்டவர்களாக அங்கே ஏழுநாள் வசித்தார்கள். எட்டாவதுநாள் வந்தவுடன், உலகத்தில் பிரசித்திபெற்ற அந்த விருஷபர்வா என்கிற ரிஷியிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட விரும்பினர்கள். அரசரே! பிறகு, அந்தப் பாண்டவர்கள் தங்களிடத்தில் அடைக்கலமாக இருப்பவர்களும் காலம் தவறாமல் பந்துக்களைப்போல் கன்று பூஜிக்கப்பட்டவர்களுமான அந்தப் பிராம்மணர்களை ஒவ்வொருவராக விருஷபர்வாவினிடம் தெரிவித்து மிச்சமிருக்கிற அந்தப் பரிஜனங்களை மகாத்மாவான அவனிடம் ஒப்பித்து யஜ்ஞபாத்திரங்களையும் ரத்தினங்களையும் ஆபரணங்களையும் விருஷபர்வாவின் ஆச்ரமத்தில் வைத்தார்கள். சென்றதிலும் வருவதிலும் சிறந்த ஞானமுள்ளவனும் திறமையுள்ளவனும் சுடமைகளனைத்தையுமறிந்தவனும் தர்மங்களை அறிந்தவனுமான அந்த விருஷபர்வா பாதஸ்ரேஷ்டர்களான அவர்களுக்கு, புத்திரர்களுக்கு உபதேசிப்பதுபோல உபதேசித்தான். அனுமதிபெற்ற வீரர்களான அந்த மஹாத்மாக்கள் கிருஷ்ணையுடனும் மகாத்மாக்களான பிராம்மணர்களுடனும் சேர்ந்து வடதிசையை நோக்கிச் சென்றார்கள். மிக்கதேஜஸ்ஸுள்ள விருஷபர்வாவானவன், அப்பொழுது பாண்டவர்களைப் பிராம்மணர்களுக்குத் தெரிவித்துப் புறப்பட்டுச் செல்லுகின்ற அரசர்களான அவர்களைப் பின்தொடர்ந்து சென்றான். விருஷபர்வாவானவன் குந்தீபுத்ரர்களைப் பின்தொடர்ந்து சென்று ஆசீர்வாதங்களால் மகிழ்வித்து வழியையும் சொல்லிவிட்டுத் திரும்பினான். ஸத்தியமான பராக்கிரமமுள்ளவரும் குந்தீநந்தனருமான யுதிஷ்டிரர் தம்பிமார்களுடன் கால்களால் நடந்தே பலவன்கமிருகக்கூட்டங்களால் அடையப்பட்ட வழியில் சென்றார். அந்தப் பாண்டவர்கள் பலவகை மரங்களால் நெருங்கிய மலையின் சரிவுகளில் வஸிப்பவர்களாகி நான்காவது நாளில் அந்தமலையில் பிரவேசித்தார்கள். அவர்கள் விருஷபர்வாவினால் சொல்லப்பட்ட வழியை அடைந்து பெரிய நீருண்டமேகம்போன்றதும் ஜலமுள்ளதும் மங்களகரமானதும் ரத்தினங்களாலும் பொன்னாலும் அழகியதும் பலவகைக்கொடுமுடிகளுள்ளதுமான மலையையும், பல குகைகளையும் அருவிகளையுமுடையதும் கற்பிளவுகளால் விசாலமாக இருப்பதும் கொடிகளாலும் மரங்களாலும் நெருங்கியதும் அழகியதுமான இமயமலையின் தாழ்வரையையும், பலவித மலைகளையும் பார்க்கின்றவர்களாகிக் குறிப்பிட்ட

இடத்தைநோக்கிச் சென்றார்கள். அவர்கள் மலையின் மேன்மேலான இடங்களில் அடைதற்கு மிக அரியவைகளான குகைகளையும் கடந்து செல்வதற்கு மிக அரியவையான மிகப்பல இடங்களையும் ஸுகமாகவே தாண்டிச் சென்றார்கள். தௌம்யரும் கிருஷ்ணையும் பார்த்தர்களும் லோமசமஹரிஷியும் ஒன்றுசேர்ந்தவர்களாகச் சென்றார்கள். அந்த இடத்தில் ஒருவராவது தளரவில்லை. மிக்க பாக்கியசாலிகளான அவர்கள் மிருகங்களாலும் பக்ஷிகளாலும் ஒலிக்கப்பெற்றதும் பல வகை மரங்களோடும் கொடிகளோடும் சேர்ந்ததும் குரங்குக் கூட்டங்களால் அடையப்பட்டதும் மனத்தை மிக மகிழ்விப்பதும் புண்யமானதும் காமரை ஓடைகளோடு கூடியதும் குட்டைகளும் பெருங்காடுகளுமுள்ளதுமான மால்யவானென்கிற பெரியமலையை அடைந்தார்கள். அவர்கள் அதற்கு அப்புறத்தில் கிம்புருஷர்களுக்கு இருப்பிடமும் ஸித்தர்களாலும் சாரணர்களாலும் அடையப்பட்டதும் வித்யாதரர்களாலும் கின்னரப்பெண்களாலும் ஸஞ்சரிக்கப்பட்டதும் யானைக் கூட்டங்களுக்கு இருப்பிடமானதும் சிங்கக் கூட்டங்களோடும் புலிக் கூட்டங்களோடுங் கூடியதும் சரபங்களின் பேரொலியினால் முழக்கப்பட்டதும் பலவித மிருகங்களால் அடையப்பட்டதுமான கந்தமாதனமலையை மயிர்புளகித்தவர்களாகிக் கண்டார்கள். மகிழ்ச்சி அடைந்தவர்களும் வீரர்களுமான அந்தப்பாண்டுபுத்ரர்கள் நந்தனவனம் போன்றதும் மனத்தையும் கண்களையும் மகிழ்விப்பதும் [1] வஸிக்கத் தக்கதும் அழகிய சோலைகளுள்ளதுமான அந்தக் கந்தமாதனவனத்தில் முறையே நுழைந்தார்கள். வீரர்களான அவர்கள் திரௌபதியுடனும் மஹாத்மாக்களான அந்தப் பிராம்மணர்களுடனும் சேர்ந்து கந்தமாதன மலைவெளிகளில் மகிழ்ச்சியை உண்டுபண்ணுகின்றவையும் அழகியவையும் மந்தமாகவும் தெளிவில்லாமலும் இனிமையாகவுமிருப்பவையும் மங்களகரமானவையும் காதுக்கினியவையும் மிக்க மதுரமானவையும் பறவைகளுடைய வாய்களால் வெளியிடப்பட்டவையுமான சப்தங்களைக்கேட்டுக்கொண்டும், எல்லாருதுக்களிலுமுண்டாகிற பழங்களின் பாரங்களால் நிறைந்தவையும் எல்லாருதுக்களிலுமுண்டாகிற புஷ்பங்களால் பிரகாசிக்கின்றவையும் பழங்களின் பாரத்தால் வளைக்கப்பட்டனவுமான பூத்திருக்கிற [2] மா, ஆம்ராதகம், தென்னை, திந்துகம், முஞ்சாதகம், ஆஞ்சீரம், மாதுளை, கொய்யா, பலா, எலுமிச்சை, வாழை, பேரீந்து, புளி, வஞ்சி, பரா, சண்பகம்,

1 வேறுபாடம். 2 சிலமரங்களின்பெயர் இரட்டித்து வருகின்றன.

மனத்துக்கு இன்பத்தைத் தருகின்ற கடம்பு, வில்வம், விளா, நாவல், காய்மரி, இலந்தை, இறலி, அத்தி, ஆல், அரசு, [1] சுஷீரிகம், சேமரம், நெல்லி, கடுமரம், தான்றி, புன்கு, காமர்த்தம், அதிகமான பழங்களுள்ள திந்துகம் ஆகிய பலவிதமான இந்த மரங்களையும் அம்ருதம் போன்ற ருசியுள்ள பழங்களால் நிறைக்கப்பட்டிருக்கிற அப்படிப்பட்ட மற்றவிருக்ஷங்களையும் பார்த்துக்கொண்டும் நடமாடினார்கள். அப்படியே, அந்தப் புருஷச்ரேஷ்டர்கள் கந்தமாதன மலைவெளிகளில் செவிக்கினிமையாகவும் மிக மதுரமாகவும் கூவுகின்ற சகோரங்களாலும் சதபத்ரங்களாலும் வலியன்குருவிகளாலும் கிளிகளாலும் குயில்களாலும் ஊர்க்குருவிகளாலும் பச்சைக்குருவிகளாலும் ஜீவஜீவகப் பறவைகளாலும் வல்லூறுகளாலும் சாதகபக்ஷிகளாலும் அப்படியே வேறு பலவகைப் பறவைகளாலும் அடையப்பட்ட சம்பகம், அசோகு, தாணை, மகிழ், புன்னை, ஏழிலம்பாலை, தாணைகளோடுகூடின தேகாங்கு, பாதிரி, அழகிய வெட்பாலை, மந்தாரம், நீலோதபலம், பாரிஜாதம், மலையகத்தி, தேவதாரு, ஆச்சா, பனை, பச்சிலை, திப்பிலி, பெருங்காயம், இலவு, பலாசு, அசோகம், சிம்சுபை, ஸர்ஜகம் ஆகிய மரங்களையும், ஜலத்தில் ஸஞ்சரிக்கின்ற பறவைகளால் நான்கு பங்கங்களிலும் மனத்தைக் கவர்கின்றவைகளும் அல்லிகளாலும் [2] புண்டரீகங்களாலும் [3] சோகந்தங்களாலும் கருநெய்தல்களாலும் செங்கழுநீர்களாலும் [4] கமலங்களாலும் நான்கு பக்கத்திலும் நிறைக்கப்பட்டவைகளும், [5] கலஹம்ஸங்கள், சக்கிரவாகங்கள், அன்றில்கள், நீர்க்கோழிகள், காரண்டவங்கள், வாத்துக்கள், அன்னங்கள், கொக்குக்கள், நாரைகள் ஆகிய இவைகளும் மற்றவைகளுமான நீர்வாழ் பறவைகளால் எங்கும் நிரம்பினவைகளுமான தடாகங்களையும், அவ்வாறே ஸந்தோஷமுள்ளவைகளும் தாமரை மலர்களிலுள்ள ரஸமாகிற மத்யத்தைப் பானம் செய்வதினாலுண்டான மதத்தால் ஆலஸ்யமுள்ளவைகளும் தாமரை மலர்களின் மத்தியினின்று நழுவி விழுகின்ற மகரந்தங்களாலும் சிந்சல்களாலுமுண்டான சிவப்பு நிறத்தால் அலங்கரிக்கப்பட்டவைகளும் இனிய குரலுள்ளவைகளுமான வண்டுகளால் ஒலிமிக்கவைகளும்

---

1 பாலுள்ள ஆல்முதலிய மரங்கள். 2, 3, 4 தாமரையின் வகைகள். 5 கூட்டமாக வலம்பவையும் இனிய குரலுள்ளவையுமான ஒருவகை அன்னங்கள். இவற்றுக்குக் காதம்பம் என்றும் பெயர்.

அவ்வாறே தாமரை மலர்களின் கூட்டங்களால் எல்லாப்பக்கங்களி லும் அலங்கரிக்கப்பட்டவைகளுமான தாமரை ஓடைகளையும் பார்த் தார்கள். கொடிகளடர்ந்த புதர்களின்மீது பெண்மயில்களோடு சேர்ந்திருப்பவைகளும், மேகமாகிற தூர்யவாத்தியத்தின் சப்தத்தி னல் விருத்தியடைந்திருக்கிற மன்மத விகாரத்தினால் மிகவும் மனங் கலங்கியவைகளும், இனிய குரலுடன் கேகா என்கிற த்வனியினால் மதுரமாயிருக்கிற பாடலைப் பாடிக்கொண்டே பல நிறங்களுள்ள தோகைகளை விரித்துக்கொண்டு விலாஸத்துடன்கூடியவைகளாகவும் மதத்தினால் ஆலஸ்யமுள்ளவைகளாகவும் ஆடுகின்றவைகளும், ஸந் தோஷமுள்ளவைகளும், வனங்களில் அதிக ஆவலுள்ளவைகளுமான மயில்களைக் கண்டார்கள். சில மயில்கள் பிரியமான பேடுகளோடு சேர்ந்து விளையாடுவதையும் சில மயில்கள் சிறுகொடிகளாலும் பெருங் கொடிகளாலும் நெருக்கமாகச் சுற்றப்பட்டிருக்கிற வெட்பாலை மரங் களிலிருப்பதையும் சில மயில்கள் வெட்பாலை மரங்களின் கிளைகளில் அதிகமதங்கொண்டவைபோன்றவைகளும் தோகைகளினால் அழகிய ஆடம்பரங்களால் கவரப்பட்டவைகளும் அந்த மரங்களுக்குக் கிரீடம் போன்றவைகளுமாக மரங்களின் சந்துகளில் அழகாக வீற்றிருப்ப தையும் அவர்கள் கண்டார்கள். அவர்கள் அப்படியே நன்றாகப் பிரகாசிக்கின்றவைகளும் மன்மதனுடைய தாமராயுதம்போன்ற வைகளுமான [1] ஸிந்துவாரங்களையும், மலைகளுடைய சிகரங்களில் பொன்னிறமான மலர்களுள்ளவைகளும் சிறந்த காதணிகள் போன்ற வைகளும் மலர்ந்திருப்பவைகளுமான கோங்குகளையும், அவ்வாறே வனவரிசைகளில் பூத்திருப்பவைகளும் காமவசப்பட்டவர்களுக்கு ஆவலை உண்டுபண்ணுகிறவைகளும் மன்மதனுடைய அம்புக்கூட்டம் போன்றவைகளுமான மருதோன்றிகளையும், அப்படியே வனவரிசை களாகிற ஸ்திரீகளுக்கு ஒழுங்காக நெற்றியிலிடப்பட்ட திலகங்கள் போல நன்றாக ப்ரகாசிக்கின்ற மஞ்சாடிமரங்களையும் கண்டார்கள். அரசரே! அப்படியே, மன்மதனுடைய பாணங்கள் போன்றவை களும் மனத்தை மகிழ்விப்பவைகளுமான மாம்பூக்களையும் பூங்கொத் துக்களோடு பிரகாசிக்கிற வண்டுகளையும் கண்டார்கள். மலையின் தாழ்வரைகளில் பூத்திருக்கிற மரங்கள், பொன்போன்றவைகளும் காட்டுத்தீப்போன்றவைகளும் சிவந்தவைகளும் மைந்நிறமுள்ளவை களும் வைடூர்யம்போன்றவைகளுமான புஷ்பங்களால் அதிகமாகப்

---

1 வெண்ணெய்ச்சி; 'ஒருவகைத் தாமரைகள்' என்பது பழையவுரை.

மேனகிலேயின் குகைகளும், சில இடங்களில் முயலிரத்தம்போலப் பிரகாசிக்கின்றவைகளும் வெண்மையும் கருமையுமான மேகம் போன்றவைகளும் பாலசூரியன்போன்ற ஒளி பொருந்தியவை களும் அதிக காந்தியுள்ளவைகளும் பலவிதமாயிருப்பவைகளும் மலையிலுண்டானவைகளுமான இந்தத் தாதுக்களும் மலையைப் பிர காசிக்கச் செய்கின்றன. பார்த்த! பயங்கரமான பராக்கிரமமுள்ள கந்தர்வர்கள் மலையுச்சிகளில் இஷ்டப்படி நாயகிகளுடனும் கிம்புரு ஷர்களுடனுங்கூடக் காணப்படுகிறார்கள். பீம! எல்லாப் பிராணிக ளுடைய மனத்தையும் கவருகின்ற ஸமமான தாளங்களுடன் கூடின கானங்கள் ஸாமங்கள் ஆகிய இவற்றின் ஒலியானது பலவாறு கேட்கிறது. புண்யமானதும் மங்களங்களை உண்டுபண்ணுகிறதும் கலஹம்ஸங்களுடைய கூட்டங்களாலடையப்பட்டதும் ரிஷிகளா லும் கின்னரர்களாலும் அடையப்பட்டதும் தேவநதியுமாகிய மஹா கங்கையைப் பார்ப்பாயாக. கௌந்தேய! பகைவர்களை அடக்குகி றவனே! எல்லாப்பக்கங்களிலும், தாதுக்களுடனும் நதிகளுடனும் கின்னரர்களுடனும் மிருகங்களுடனும் பறவைகளுடனும் கந்தர் வர்களுடனும் அப்ஸரஸுகளுடனும் அழகிய காடுகளுடனும் பலவித வடிவமுள்ளவைகளும் நூறு தலைகளுள்ளவைகளுமான ஸர்ப்பங்களுடனும் கூடியிருக்கிற, சிறந்த மலையைப் பார்ப் பாயாக' என்று இப்படிப்பட்ட அன்புள்ள வசனத்தை உரைத் தார். பகைவரை வாட்டுபவர்களும சூராகளுமான அவர்கள மனமகிழ்ந்தவர்களும் ஒப்புயர்வற்ற ஸ்தானத்தை அடைந்தவர் களுமாகி, சிறந்த அந்த மலையைப் பார்ப்பதில் (போதுமென்கிற) திருப்தியை அடையவில்லை. புஷ்பங்களாலும் பழங்களாலும் நிறைந்த மரங்களோடு கூடிய ராஜ ரிஷியான ஆர்ஷ்டிஷேண ருடைய ஆச்ரமத்தை அப்பொழுது கண்டார்கள். பிறகு, அவர் கள் கடுமையான தவமுள்ளவரும் இளைத்திருப்பவரும் நரம்புகள் நிறைந்தவரும் எல்லா வித்தைகளிலும் கரைகண்டவருமான ஆர்ஷ்டிஷேணரை அணுகினார்கள்.

நூற்றறுபதாவது அத்யாயம்.

யக்ஷயுத்தபர்வம். (தொடர்ச்சி.)

(ஆர்ஷ்டிஷேணர் யுதிஷ்டிரருக்குக் கைலாஸ மலையைப்பற்றிக் கூறி அவர்களை அர்ஜுனன் வருகிற வரையில் தம்முடைய ஆஸ்ரமத்திலேயே வஸிக்கச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், தவத்தினால் பாவத்தை எரித்தவரான அந்த ஆர்ஷ்டிஷேணரை அடைந்து, பிரியத்துடன் தமது காமோதயத்தைச் சொல்லித் தலையால் (வணங்கி) அபிவாதனம் செய்தார். பிறகு, கிருஷ்ணையும் பீமனும் நல்ல தவமுள்ள நகுலஸஹதேவர்களும் அந்த ராஜரிஷியை முடிகளால் வணங்கிச் சூழ்ந்து நின்றார்கள். அப்படியே தர்மங்களை அறிந்தவரும் பாண்டவர்களுக்குப் புரோஹிதருமான தௌம்யர் விரதங்களை நன்கு அனுஷ்டித்தவரான அந்த ரிஷியை முறைப்படி அணுகினர். தர்மங்களை அறிந்த அந்த முனிவர் ஞானக்கண்ணால் குருப்ரேஷ்டர்களான பாண்டுபுத்திரர்களை நன்றாக அறிந்துகொண்டார்; 'உட்காரலாம்' என்றும் சொன்னர். மிக்க தவமுள்ள அவர், கற்றறிந்தவரான கௌரவப்ரேஷ்டரைப் பூஜித்துத் தம்பிமார்களுடன் உட்கார்ந்த அவரை [1] அநாமயத்தை வினவினர். ஆர்ஷ்டிஷேணர், 'பொய்யில் எண்ணத்தைச் செலுத்தாமலிருக்கிறாயா? தர்மத்தில் செல்லுகிறாயா? பார்த்தனே! தாய்தந்தையரிடத்தில் உன்னுடைய பணிவிடை குறைவடையாமலிருக்கிறதா? குருக்களனைவரும் முதியவர்களும் கல்வியினால் பிரஸித்திபெற்றவர்களும் உன்னால் பூஜிக்கப்பட்டு வருகிறார்களா? பார்த்த! பாப காரியங்களில் மனத்தை வைக்காமலிருக்கிறாயா? குருப்ரேஷ்டனே! நன்மையைச் செய்வதற்கும் தீமையை விடு

1 'ஸந்தித்தபோது பிராமணனை, 'குசலம்' என்றும், க்ஷத்ரியனை, 'அநாமயம்' என்றும், வைச்யனை, 'க்ஷேமம்' என்றும், சூத்ரனை, 'ஆரோக்யம்' என்றும் வினவ வேண்டும்' என்பது மனுஸ்மிருதி 2வது அத்யாயம் 127-வது ச்லோகம்.

வதற்கும் முறைப்படி நீ தெரிந்துகொண்டிருக்கிறாயா? தற் புகழ்ச்சி செய்துகொள்ளாமலிருக்கிறாயா? ஸாதுக்கள் தகுதிக்குத் தக்கபடி உன்னால் பூஜிக்கப்பட்டு மகிழ்கிறார்களா? காடுகளில் வஸித்துக்கொண்டிருந்தாலும் தர்மத்தையே பின்பற்றுகிறாயா? பார்த்த! தெளம்யர் உன்னுடைய நடைகளால் மனவருத்தமடை யாமலிருக்கிறாரா? குந்தீநந்தன! தானத்தாலும் தர்மத்தாலும் தவத்தாலும் சுத்தியினாலும் உள்ளும் புறமும் ஒத்திருத்தலா லும் பொறுமையினாலும் தகப்பன்பாட்டன்மார்களுடையதான நடையை நீ அனுஸரிக்கிறாயா? பாண்டவ! ராஜரிஷிகள் சென்ற வழியில் நீ செல்லுகிறாயா? தத்தம் குலத்தில் புத்திரனே பௌத் திரனே பிறந்தால், பித்ருலோகத்திலுள்ள பித்ருக்கள், 'இவ னுடைய கெட்ட செய்கையால் நம்மால் எது அடையத்தக்க தாகுமோ? இவனுடைய நல்ல செய்கையினால் நம்மால் எந்த நன்மை அடையத்தக்கதாகுமோ?' என்று துக்கத்தையும் ஆனந் தத்தையும் அடைகிறார்கள். பார்த்தனே! எவனால் மாதாவும் பிதாவும் அப்படியே அக்னியும் குருவும் ஐந்தாவதான ஆத்மா வும் பூஜிக்கப்படுகிறார்களோ அவனால் இந்த உலகம் பரலோகம் இரண்டும் ஜயிக்கப்பட்டனவாகும்' என்று சொன்னார்.

யுதிஷ்டிரர், 'பகவானே! ஆரியரே! உள்ளபடி இந்தத் தர்ம நிச்சயத்தைத் தேவரீர் என்னை உத்தேசித்து உபதேசித்தீர். என் னால் சக்திக்குத் தக்கபடி நியாயம் தவறாமல் விதிப்படி (தர்மம்) செய்யப்படுகிறது' என்று சொன்னார். ஆர்ஷ்டிஷேணர், 'ஜலத் தையே ஆகாரமாகக்கொண்டவர்களும் காற்றையே ஆகாரமாகக் கொண்டவர்களுமான ரிஷிகள் ஆகாச மார்க்கமாகப் பறந்து வந்து மலைகளுள் சிறந்த இந்த மலையைப் [1] பர்வஸந்திகளில் அடை கிறார்கள். அரசனே! காதல்கொண்டவர்களான கிம்புருஷர்கள் தங்கள் காதலிகளுடன் ஒருவரை ஒருவர் அனுஸரித்தவர் களாகவும் மலையினுடைய சிகரங்களிலிருப்பவர்களாகவும் காணப் படுகிறார்கள். பார்த்த! அழுக்கில்லாத ஆடைகளையும், பட்டு வஸ்திரங்களையும் உடுத்த கந்தர்வர்கள் அப்ஸரஸ்ஸுகள் ஆகிய இவர்களுடைய கூட்டங்கள் பல காணப்படுகின்றன. மாலை களை அணிந்தவைகளும் காட்சிக்கினியவைகளுமான வித்யாதரர் களுடைய கூட்டங்களும் மஹாநாகர்களுடைய கூட்டங்களும்

[1] பூர்ணிமை அல்லது அமாவாஸ்யையும் பிரதமையும் ஸந்திக்கும் காலம்.

ஸுபர்ணர்களும் சாரணர் முதலியவர்களும் காணப்படுகிறார்கள். இந்த மலையினுடைய மேற்பிரதேசத்தில் பர்வஸந்திகளில் பேரீவாத்தியங்கள், பணவங்கள், சங்கங்கள், மிருதங்கங்கள் ஆகிய இவைகளின் சப்தமானது கேட்கப்படுகிறது. பரதஸ்ரேஷ்டர்களே! நீங்கள் இந்த இடத்திலிருந்துகொண்டே அவை அனைத்தையும் கேட்கவேண்டும். அவ்விடத்தை நோக்கிச் செல்வதில் நீங்கள் எவ்விதத்தாலும் புத்தியைச் செலுத்தலாகாது. பரதஸ்ரேஷ்டர்களே! இதற்குமேல் செல்வதும் இயலாது. அந்தஇடமானது தேவர்களுடைய விளையாட்டிடம். அது மனிதர்களால் அடைய முடியாததன்றோ? பாரத! இந்த இடத்தில் சிறிது சபலமான செய்கைகளையுடைய மனிதனையும் எல்லாப் பிராணிகளும் பகைக்கின்றன; ராக்ஷஸர்களும் அடிக்கிறார்கள். யுதிஷ்டிர! மிக்க ஸித்தியடைந்த தேவர்கள் ரிஷிகள் ஆகிய இவர்களின் ஸ்தானமானது இந்தக் கைலாஸசிகரத்துக்கப்பால் பிரகாசிக்கிறது. பார்த்த! பகைவர்களை அழிப்பவனே! [1] சாபல்யத்தால் அதற்கப்பாலுள்ள [2] வழியில் செல்பவர்களை ராக்ஷஸர்கள் இரும்பினால் செய்யப்பட்ட சூலம் முதலிய ஆயுதங்களால் கொல்லுகிறார்கள். அப்பா! இந்த இடத்தில் விஸ்ரவஸின் புதல்வனான குபேரனும், (செல்வப்பெருக்கினால்) மனிதர்களையே வாகனமாக உடையவனும் அப்ஸரஸ்ஸுகளால் சூழப்பட்டவனுமாகப் பர்வஸந்திகளில் காணப்படுகிறான். சிகரத்தில் வீற்றிருப்பவனும் யக்ஷர்களுக்கும் ராக்ஷஸர்களுக்கும் அதிபனுமான அவனை எல்லாப் பிராணிகளும் (உதயபர்வதத்தில்) உதித்திருக்கிற சூரியனைப்போலப் பார்க்கின்றன. பரதஸ்ரேஷ்டனே! மலையினுடைய இந்தச் சிகரமானது தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் ஸித்தர்களுக்கும் அப்படியே குபேரனுக்கும் உத்யானவனமாக இருக்கிறது. ஐயா! குபேரனை உபாஸிக்கின்ற தும்புருவினுடைய கானம்பண்ணப்படுகின்ற ஸாமங்களின் தொனியானது பர்வஸந்திகளில் கந்தமாதனத்தில் கேட்கப்படுகிறது. அப்பா! யுதிஷ்டிர! இந்த இடத்தில் இப்படிப்பட்ட இந்த ஆச்சர்யத்தை எல்லாப் பிராணிகளும் பர்வஸந்திகளில் பலவாறுகக் காண்கின்றன. பாண்டவஸ்ரேஷ்டர்களே! முனிவர்களால் புஜிக்கத்தக்க சுவையுள்ள பழங்களைப் புஜித்துக்

---

1 மனவுறுதியின்மை; அல்லது, முரட்டுத்தனம்; உத்யோகபர்வம் 174-ம் பக்கத்திலும் சாந்திபர்வம் 375-ம் பக்கத்திலும் குறிப்புக்களிற் காண்க. 2 வேறுபாடம்.

கொண்டு அர்ஜுனனைக் காண்கிறவரையில் (இங்கே) வாஸம் செய்யுங்கள். ஐயா! இந்த இடத்தை அடைந்தவர்கள் எவ்விதத்தாலும் சாபல்யமுள்ளவர்களாக இருக்கக்கூடாது. சபலனை மனிதன் எல்லாப் பிராணிகளுக்கும் விரோதியாகிறான். சிறப்புடையவனே! இந்த இடத்தில் இஷ்டப்படி வாஸம் செய்தும், மனக்கவலையைவிட்டு ஸுகமாக விளையாடியும், பிறகு, சஸ்திரங்களால் ஜயிக்கப்பட்ட பூமியைப் பரிபாலிப்பாய்' என்று கூறினர்" என்றார்.

நூற்றறுபத்தோராவது அத்யாயம்.

யக்ஷ யுத்த பர்வம். (தொடர்ச்சி.)

(திரௌபதி காரணமாக சிறுதுக்காற்றினால் கொண்டுவரப்பட்ட அத்புதமான ஒரு தாமரைமலரைக் கண்டு அப்படிப்பட்ட பல மலர்களைக் கொண்டுவரும்படியும் துஷ்டர்களான யக்ஷர்களையும் ராக்ஷஸர்களையும் கொல்லும்படியும் பீமனை வேண்டியதும், அவன் அதற்காகக் கந்தமாதன மலையின் சிகரத்தில் ஏறியதும், மணிமான் முதலியவர்களை யுத்தத்தில் கொன்றதும்.)

ஜனமேஜயர், "மகாத்மாக்களும் திவ்யமான பராக்கிரமமுள்ளவர்களும் என்னுடைய முந்தின பாட்டன்மார்களுமான பாண்டுபுத்திரர்கள் சந்தமாதன பர்வதத்தில் அந்த ஆர்ஷ்டிஷேணருடைய ஆச்ரமத்தில் எவ்வளவு காலம் வஸித்தார்கள்? மகாவீர்யமுள்ளவர்களும் வலிமையும் ஆண்மையும் மிக்கவர்களுமான அந்தப் பாண்டவர்களனைவரும் என்ன செய்தார்கள்? அங்கே வஸிக்கின்றவர்களும் மகாத்மாக்களும் உலகத்தில் பிரஸித்திபெற்ற வீரர்களுமான அவர்களுக்கு எனைகள் ஆகாரமாயின? ஸாதுக்களுள் உத்தமரே! அவற்றைச் சொல்லுவீராக. மிக்க புஜபலமுள்ள பீமஸேனன் அந்த இமயமலையில் எதை எதைச் செய்தானோ அந்த அந்தப் பீமஸேனனுடைய பராக்கிரமத்தை எனக்கு விரித்து உரைப்பீராக. பிராம்மணோத்தமரே! குபேரனால் வாஸம் செய்யப்பட்ட அந்தப் பர்வதத்தில் நித்யமாக வஸிக்கின்ற அந்தப் பீமஸேனனுக்கு யக்ஷர்களோடு மறுபடியும் யுத்தம் உண்டாகவில்லையா? அவர்களுக்கும் குபேரனுக்கும் ஸந்திப்பு நேர்ந்

தா? ஆர்ஷ்டிஷேணர் சொன்னவண்ணம் அந்தப் பர்வதத்திற்குக் குபேரன் வந்துகொண்டிருந்தானே? தபோதனரே! நான் இதனை விஸ்தாரமாகக் கேட்க விரும்புகிறேன். அவர்களுடைய செய்கையைக் கேட்கிற எனக்கு (ப்போதுமென்கிற) திருப்தியுண்டாகவில்லையன்றே?" என்று வினவினர்.

வைசம்பாயனர், "பரதர்ஷரேஷ்டர்கள், நிகரற்ற தேஜஸுள்ள அந்த ஆர்ஷ்டிஷேணருடையதும் தங்களுக்கு ஹிதமுமான இந்த வசனத்தைக் கேட்டு அப்படியே அவருடைய கட்டளையை எப்பொழுதும் செய்துவந்தார்கள். பரதர்ஷரேஷ்டர்களான அந்தப் பாண்டவர்கள் அந்த இமயமலையின் மேல் பாகத்தில் முனிவர்களால் புஜிக்கத்தக்க ஆகாரங்களையும் சுவையுள்ள பழங்களையும் சுத்தமான பாணங்களால் அடிக்கப்பட்ட மிருகங்களுடைய மாம்ஸங்களையும் புஜிக்கின்றவர்களாகவும் பரிசுத்தமான பலவகை மதுக்களைக் குடிப்பவர்களாகவும் இவ்வண்ணம் வஸித்தார்கள். லோமசரால் சொல்லப்பட்ட பலவித வாக்கியங்களைக் கேட்டுக்கொண்டு அவ்விடத்தில் வஸிக்கின்ற பாண்டவர்களுக்கு ஐந்தாவது வர்ஷம் சென்றது. பிரபுவே! கடோத்கசன், 'காரியகாலத்தில் வந்து சேருவேன்' என்று சொல்லிவிட்டு எல்லா ராக்ஷஸர்களுடனும் முந்தியே போய்விட்டான். ஆர்ஷ்டிஷேணருடைய ஆஸ்ரமத்தில் வஸிப்பவர்களும் மிக்க ஆச்சரியங்களைப் பார்ப்பவர்களும் மஹாத்மாக்களுமான அந்தப் பாண்டவர்களுக்குப் பல மாதங்கள் சென்றன. அவ்விடத்தில் விளையாடுபவர்களும் மனக்களிப்புள்ளவர்களுமான அந்தப் பாண்டவர்களால் அன்பு உண்டுபண்ணப்பட்டவர்களும் மிக்க பாக்கியசாலிகளும் பரிசுத்தமான மனமுள்ளவர்களும் விரதங்களை நன்கு அனுஷ்டிப்பவர்களுமான முனிவர்களும் அவ்வாறே சாரணர்களும் பாண்டவர்களைப் பார்ப்பதற்கு வந்தார்கள். பரதர்ஷரேஷ்டர்களான அந்தப் பாண்டவர்கள் அவர்களோடு திவ்யமான கதைகளைப் பேசினர்கள். பிறகு, சிலநாட்கள் சென்றபின், ஒரு பெரிய மடுவில் வாஸம்செய்துகொண்டிருந்த கொழுத்த ஒரு பெரிய ஸர்ப்பத்தைக் கருடன் வேகத்துடன் கவர்ந்தான். பெரியமலை மிக நடுங்கியது. பெரிய மரங்கள் நன்கு முறிக்கப்பட்டன. எல்லாப் பிராணிகளும் பாண்டவர்களும் அந்த ஆச்சர்யத்தைக் கண்டார்கள். பிறகு, பெரிய மலையின் உச்சியிலிருந்து பாண்டவர்களை நோக்கி, காற்றினது நல்ல மணமுள்ள மங்களகர

மான புஷ்பங்களனைத்தையும் அடித்துக்கொண்டு வந்தது. அந்த இடத்தில் அன்பர்களோடு கூடிய பாண்டவர்களும் கீர்த்தியுள்ளவ ளான பாஞ்சாலியும் ஐந்துவர்ணங்களுள்ள திவ்ய புஷ்பங்களைக் கண்டார்கள்.

பிறகு, கிருஷ்ணையானவள் மலையைச்சார்ந்த ஏகாந்த மான ஓரிடத்தில் சுகமாக வீற்றிருப்பவனும் மிக்க புஜபலமுள்ள வனுமான பீமஸேனனைப் பார்த்து, தக்க ஸமயத்தில், 'பரத ஶ்ரேஷ்டரே! கருடனுடைய சிறகுக் காற்றினால் வேகங்கொண்ட வாயுவினால் ஐந்து வர்ணமுள்ள புஷ்பங்கள் மிகவலிந்து உதிர்க்கப் படுகின்றன. பரதஶ்ரேஷ்டரே! திவ்ய வர்ணமுள்ளவையும் திவ்ய வாஸனையுள்ளவையுமான திவ்ய புஷ்பங்கள் வாஸனையினால் என் மனத்தைக் களிப்படைவிக்கின்றனபோலும். பகைவரைத் தனிக் கச் செய்பவரே! பார்ப்பதனாலும் தொடுவதனாலும் அப்படியே வாஸனையினாலும் என்னுடைய இந்த மனத்துயரத்தைப் போக்கு கின்றவையும் திவ்ய வாஸனையுள்ளவையும் மங்களமாயுள்ளவையு மான சிறந்த மலர்களால் தேவதைகளை அர்ச்சித்து நான் உம் மோடு சேர விரும்புகிறேன். புருஷஶ்ரேஷ்டரே! அவற்றுள்ளும் நறுமணம் நிரம்பினதும் என்னுடைய மனத்திற்கு உத்ஸாஹத்தை வளர்ப்பதும் மங்களகரமாயிருப்பதுமான இந்தத் தாமரைமலரை எல்லா உலகத்தாராலும் சேரில் பார்க்கப்பட்டிருக்குமென்று எனக்குத் தோன்றவில்லை. வாஸுதேவரைத் துணையாகக்கொண்ட வரும் வாஸுதேவருக்கு நண்பரும் சொல்தவறாதவரும் மகாத் மாவும் உம்முடைய பிராதாவுமான அர்ஜுனரால் காண்டவவனத் தில் கந்தர்வர்களும் உரகர்களும் ராக்ஷஸர்களும் இந்திரனும் தோல்வி அடைவிக்கப்பட்டார்கள்; கொடியவர்களான மாயாவி களும் கொல்லப்பட்டார்கள்; காண்டீவமென்கிற வில்லும் அடை யப்பட்டது. இந்திரனையொத்த பராக்கிரமமுள்ளவரே! உம் முடைய தேஜஸும் மிகப்பெரிது. உம்முடைய தோள்வலிமையும் பெரிது; பகைவரால் தாங்குதற்கரியது. அவமதிக்கவும் முடி யாதது. பீமஸேனரே! உம்முடைய கைவன்மையின் வேகத்தால் பயமுறுத்தப்பட்ட எல்லா ராக்ஷஸர்களும் மலையை விட்டுவிட்டுப் பத்துத் திக்குக்களையும் அடையக்கடவர். பிறகு, உம்முடைய நண்பர்கள் அச்சமும் மதிமயக்கமுமற்றவர்களாகப் பலவகை மலர் களைத் தரித்துக்கொண்டிருக்கிறதும் மங்களகரமாயிருப்பதுமான சிறந்த மலையினுடைய உச்சியைப் பார்க்கக்கடவர். பீமஸேனரே!

என்மனமானது நெடுங்காலத்துக்கு முன்னிருந்தே இவ்விதமான எண்ணத்துடனிருக்கிறது. உம்முடைய கைவன்மையை அடுத்து மலையின் உச்சியைப் பார்க்க விரும்புகிறேன். பரதர்களுள் சிறந்த வரே! நரஸ்ரேஷ்டரே! உம்மால் விரைவாகக் கொண்டுவரப்படுகின்ற இப்படிப்பட்ட மலரை நான் நேரில் காணவிரும்புகிறேன்' என்கிற வசனத்தைக் கூறினாள்.

பிறகு, பகைவர்களைத் தவிக்கச் செய்பவனும் மிக்கபாஹுபல முள்ளவனுமான அந்தப் பீமன் திரௌபதியினால் தன்னை அவமதிக்கப்பட்டவன்போலெண்ணிக்கொண்டு அந்த அவமதிப்பை, கல்ல யானையானது அடியைப் பொறுத்தது போலப் பொறுக்கவில்லை. பலசாலியும் சிங்கம்போலவும் காளைபோலவும் நடப்பவனும் சிறந்த காந்தியுள்ளவனும் உதாரமனமுள்ளவனும் பொன்போன்ற ஒளியுடையவனும் கம்பீரமான மனமுள்ளவனும் செருக்குள்ளவனும் தன்மதிப்புடையவனும் சூரனும் சிவந்தகண்களுடன் கூடியவனும் பருத்த சிறந்த தோள்களையுடையவனும் மதயானை போன்ற வலிமையமைந்தவனும் சிங்கத்தின் கோரப்பற்கள் போன்ற பற்களுள்ளவனும் காளையின் தோள்போன்ற தோள்களை உடையவனும் உயர்ந்து வளர்ந்திருக்கின்ற இளமையான ஆச்சா மரம் போன்றவனும் மகாத்மாவும் அழகிய எல்லா அங்கங்களுமுள்ளவனும் வலம்புரிச் சங்கம்போன்ற கழுத்துள்ளவனும் பருத்த மோவாயுள்ளவனுமான அந்தப் பீமலெனன் பொன்மயமான பின்புறமுள்ள வில்லையும் கத்தியையும் அம்புத்தூணிகளையும் தரித்துக்கொண்டு, கர்வமுள்ள சிங்கம்போலவும் மதப்பெருக்குண்ட யானை போலவும் அச்சமும் மதிமயக்கமுமற்றவனாக மலையின்மீதேறினான். கத்தியையும் வில்லையும் கையில் பிடித்தவனும் சிங்கம்போலவும் மதப்பெருக்குண்ட யானைபோலவும் வருகின்றவனுமான அந்தப் பீமனை எல்லாப்ராணிகளும் பார்த்தன. பாண்டவனான பீமன் திரௌபதிக்கு ஸந்தோஷத்தை விருத்தியடையச்செய்யும் பொருட்டுக் கதையை எடுத்துக்கொண்டு அச்சமும் மயக்கமுமற்றவனாகச் சிறந்த மலையில் ஏறினான். வாயுவினுடைய புத்திரனான பீமனை வாட்டமும் பயமும் ஊக்கமின்மையும் பிறராக்கம் பொறுமையும் ஒருபொழுதும் அணுகவில்லை. மகாபலசாலியான பீமலெனன் மேடுபள்ளமாக இருப்பதும் பயங்கரமான கோற்றமுள்ளதுமான அந்த ஒற்றையடிப்பாதையை அடைந்து பல பனைமரங்களளவு உயர்ந்திருக்கிற மலையின் உச்சியில் ஏறினான். மகா பலசாலியான

பீமஸேனன் கின்னரர்களையும் மகாநாகர்களையும் முனிவர்களையும் கந்தர்வர்களையும் அரக்கர்களையும் மகிழ்வித்துக்கொண்டு மலையின் உச்சியில் ஏறினான். பிறகு, பரதஸ்ரேஷ்டனான பீமன் ஸ்வர்ணமயமாயும் ஸ்படிகமயமாயுமிருக்கிற வீடுகளாலலங்கரிக்கப்பட்டிருப்பதும், எல்லா ரத்தினங்களுடைய காந்திகளுடனுங்கூடியதும், அப்படியே எல்லா உத்யானவனங்களுமுள்ளதும், மலையைவிடமேலான வளர்ச்சியுடையதாயும் மதில்களுக்கு ஆதாரவாகச் சுற்றிக் கட்டப்பட்டிருக்கிற அடிமேடைகளாலும் கொத்தளங்களாலும் விளங்குகின்றதாயும் உள்வாசல்களாலும் வெளி வாசல்களாலும் மரங்களால் கட்டப்பட்ட கொடுங்கைகளாலும் கொடிகளாலும் கொடிமரங்களை நாட்டுகிற மேடைகளாலும் பிரகாசிக்கின்றதாயுமிருக்கிற பொன்னாலாகிய மதிலால் எல்லாப்பக்கங்களிலும் சூழப்பட்டதும், எல்லாப்பக்கங்களிலும் அளவுகடந்து நர்த்தனம் செய்கின்ற பெண்களாலும் காற்றினால் அலைக்கப்படுகிற கொடிகளாலும் அலங்கரிக்கப்பெற்றதுமான குபேரனுடைய அரண்மனையைக் கண்டான். பீமன் விளங்கிருக்கிற கையினால் வில்லின் நாணியைப் பிடித்துக்கொண்டும் தனங்களுக்கு அதிபதியான குபேரனுடைய பட்டணத்தை மனவருத்தத்தோடு பார்த்துக்கொண்டும் ஸஞ்சரித்தான். அந்த இடத்தில் எல்லாப் பிராணிகளையும் மகிழ்விக்கின்றதும் எல்லா வாஸனைகளையும் கொண்டுவருகின்றதும் கந்தமாதனத்திலுண்டானதுமான காற்றானது மிக இனிமையாக வீசியது. அந்த இடத்தில் விசித்ரமானவைகளும் பலநிறங்களால் பிரகாசிக்கின்றவைகளும் விசித்ரமான பூங்கொத்துக்களைத் தரித்தவைகளும் சிந்திக்கமுடியாதவைகளும் நிகரற்றகாந்தியுள்ளவைகளுமான பலவகை மரங்கள் காணப்பட்டன. பரதஸ்ரேஷ்டனான பீமன் ரத்தினஸமூகங்களால் எல்லாப்பக்கங்களிலும் மிழைக்கப்பட்டதும் பலவித மலர்மாலைகளால் நன்கு அலங்கரிக்கப்பட்டதுமான குபேரனுடைய இருப்பிடத்தையும் பார்த்தான். மிக்க புஜபலமுள்ள பீமஸேனன் கதாயுதத்தையும் கத்தியையும் வில்லையும் கையில்பிடித்தவனாகவும் உயிரையும்விடத்துணிந்தவனாகவும் மலைபோல் அசைவற்றுநின்றான். பிறகு, பகைவர்களுக்கு மயிர் சிலிர்த்தலைச் செய்கிற சங்கத்தை ஊதியும் நாணொலியையும் தலத்வனியையும் செய்தும் பிராணிகளை பயக்கமடையச் செய்தான்.

பிறகு, யக்ஷர்களும் ராக்ஷஸர்களும் கந்தர்வர்களும் மயிர் சிலிர்த்தவர்களாக அந்த ஒலியை நோக்கிப் பீமனுடைய

ஸமீபத்தில் ஓடிவந்தார்கள். யக்ஷர்கள் ராக்ஷஸர்கள் ஆகிய இவர்களுடைய கைகளால் பிடிக்கப்பட்ட கதாயுதங்களும் பரிகங்களும் [1]நிஸ்த்ரிம்சங்களும் சூலங்களும் சக்திகளும் கோடாலிகளும் மிக விளங்கின. பாரதரே! பிறகு, அவர்களுக்கும் அவனுக்கும் யுத்தம் தொடங்கியது. மஹா மாயாவிகளான அந்த யக்ஷராக்ஷஸர்களால் பிரயோகிக்கப்பட்ட சூலங்களையும் சக்திகளையும் கோடாலிகளையும் பீமன் பயங்கரமான மிக்க வேகமுள்ள அர்த்த சந்திரபாணங்களால் துண்டித்தான். மகா பலசாலியான பீமன், ஆகாயத்தை அடைந்தும் பூமியிலிருந்தும் கர்ஜிக்கின்ற ராக்ஷஸர்களுடைய சரீரங்களை அம்புகளால் அடித்தான். பாரதரே! ராக்ஷஸர்களுடைய தேகங்களினின்று எல்லாப் பக்கங்களிலும் பெருகி வருகின்ற இரத்தத் தாரைகள் மேகங்களினின்று நீர்த்தாரைகள் விழுவதுபோல் விழுந்தன. [2]கதைகளையும் ஈட்டிகளையும் கையில் பிடித்தவர்களான ராக்ஷஸர்களுடைய சரீரங்களிலிருந்து உண்டான அந்தப் பெரிய இரத்த மழையானது மஹா பலசாலியான பீமன்மீது எல்லாப்பக்கத்திலும் பொழிந்தது. ராக்ஷஸர்களுடைய சரீரங்களிலிருந்து எல்லாப்பக்கங்களிலும் இரத்ததாரைகள் பெருகின. பீமனுடைய புஜபலத்தால் பிரயோகிக்கப்பட்ட ஆயுதங்களால் யக்ஷராக்ஷஸர்களுடைய சரீரங்களும் தலைகளும் அறுக்கப்பட்டனவைகளாகக் காணப்பட்டன. ராக்ஷஸர்களால் நன்கு மூடப்படுகின்றவனும் இனிய தோற்றமுள்ளவனுமான பாண்டவனை எல்லாப் பிராணிகளும் மேகக் கூட்டங்களால் மூடப்படுகின்ற சூரியனைப்போலப் பார்த்தன. நீண்ட கைகளுள்ளவனும் சிறந்த பலமுள்ளவனும் ஸத்யமான பராக்கிரமமுள்ளவனுமான பீமன், சூரியன் கிரணங்களைப் பாய்ச்சுவதுபோல, பகைவரை வீழ்த்துகிற அம்புகளை அனைவர்மீதும் பாய்ச்சினான். எதிர்த்து அடர்க்கின்றவர்களும் பரிதைச்சலிடுகிறவர்களுமான எல்லா ராக்ஷஸர்களும் பீமஸேனனுடைய ஸன்னஹத்தைக் கண்டார்கள். அவர்கள், எல்லா அங்கங்களும் காயம் பண்ணப்பட்டவர்களும் பீமஸேனனிடமிருந்து உண்டான பயத்தால் பீடிக்கப்பட்டவர்களும் மகாயுதங்கள் சிதறினவர்களுமாகிப் பயங்கரமான தீனஸ்வரத்தை வெளியிட்டார்கள். உறுதியான வில்லுள்ள பீமனால் பயமுறுத்தப்பட்ட அந்த ராக்ஷஸர்கள் கதாயுதங்களையும் சூலங்களையும் கத்திகளையும் சக்திகளையும்

---

[1] மூப்பது அங்குலத்துக்குமேல் நீண்ட கத்தி. [2] வேறுபாடும்.

கோடாலிகளையும் எறிந்துவிட்டுத் தெற்குத் திசையை நோக்கி ஓடிவந்தார்கள்.

அந்த இடத்தில் சூலத்தையும் கதையையும் கையில் பிடித்தவனும் அகன்ற மார்புள்ளவனும் நீண்ட கைகளுள்ளவனும் குபேரனுக்குத் தோழனுமான மணிமானென்கிற ராக்ஷஸன் இருந்தான். மகாபலசாலியான அவன் பீமனுடைய செய்கைக்குப் பரிகாரத்தையும் தனது ஆண்மையையும் காண்பிப்பவனாகி, திரும்பிவந்த அந்த ராக்ஷஸர்களைப்பார்த்து, சிரித்துக்கொண்டு, 'ஒருமனிதனால் பலராக்ஷஸர்கள் யுத்தத்தில் தோல்வியடைவிக்கப்பட்டார்கள். குபேரனுடைய அரண்மனையை அடைந்து அவனைப் பார்த்து என்ன சொல்லப்போகிறீர்கள்?' என்று சொன்னான். ராக்ஷஸன் அவர்களனைவரையும் பார்த்து இவ்வண்ணமுரைத்துச் சக்தியையும் சூலத்தையும் கதையையும் கையில் எடுத்துக்கொண்டு பாண்டவனை எதிர்த்து விரைவாகச் சென்றான். வேகத்தோடு வருகின்றவனும் மதத்தைப் பெருக்குகிற யானை போன்றவனுமான அந்த மணிமானைப் பீமசேனன் மூன்று வத்ஸதந்தமென்கிற பாணங்களால் விலாவில் கன்றுக அடித்தான். மகாபலமுள்ளவனான மணிமானும் மிக்க கோபங்கொண்டு பெரிய கதையை எடுத்துச் சுழற்றிப் பீமசேனன்மீது எறிந்தான். பீமசேனன் ஆகாயத்தில் மின்னல்போலப் பிரகாசிக்கின்ற மிக்க பயங்கரமான பெரிய கதாயுதத்தைச் சரணடைந்து தீட்டப்பட்ட அனேகபாணங்களால் அடித்தான். அந்த எல்லாப் பாணங்களும் கதையை அடைந்து திருப்பி அடிக்கப்பட்டன. வேகப்படுத்தப்பட்ட பாணங்கள் கதையில் மிக்க தோற்சியுள்ள மணிமானுடைய (கதையின்) வேகத்தைத் தாங்கவில்லை. அவனுடைய அந்தக் கதையபுணையை, கதாயுத்த முறைமையை அறிந்தவனும் நல்ல வீர்யமுள்ளவனும் பயங்கரமான பராக்கிரமமுள்ளவனுமான அந்தப் பீமன் வீணாக்கினான். பிறகு, திறந்த புத்தியுள்ளவனான அந்த ராக்ஷஸன் அந்த ஸமயத்தில் பிதாக்காமபுள்ளதும் பொற்காம்புள்ளதும் உருக்கினால் செய்யப்பட்டதுமான சக்தியைப் பீமசேனன்மீது எறிந்தான். பயங்கரமான சப்தத்துடன் கூடியதும் அக்னிஜ்வாலைகளுடன்கூடியதும் மகாபயங்கரமாயிருப்பதுமான அந்தச் சக்தியானது பீமனுடைய வலக்கையைப் பிளந்துகொண்டு விரைவாகப் பூமியில் விழுந்தது. சக்தியினால் மிக அடிக்கப்பட்டவனும் வெகு துயரத்தினின்றும் அம்புகளை வைப்பதனும் அளவுகடந்த பராக்கிரமமுள்ளவனும் கதாயுத்தத்தில்

ஸாமர்த்யமுள்ளவனுமான அந்தக் குந்தீநந்தனன் கதையைக் கையிலெடுத்தான். பிறகு, பீமன் பொற்பட்டங்களால் கட்டப்பட்டிருப்பதும் சத்ருக்களுக்குப் பயத்தை விருத்தியடையச் செய்கின்றதும் பகைவர்களை அவமதிக்கின்றதும் முழுதும் உருக்குமயமாயிருப்பதுமான அந்தக் கதையை எடுத்துக் கர்ஜித்துக்கொண்டு மகாபலசாலியான மணிமானைநோக்கி விரைவாக ஓடினன். மணிமானும் ஜ்வலிக்கின்ற பெரிய சூலத்தை எடுத்துக் கர்ஜித்துக்கொண்டு அதிவேகத்தோடு பீமஸேனன்மீது பிரயோகித்தான். கதாயுத்தத்தின் பாகுபாடுகளை நன்றாக அறிந்தவனான பீமன், சூலத்தைக் கதையின் நுனியினால் அடித்து நொறுக்கிக் கருடன் பாம்பைநோக்கி ஓடுவதுபோல அந்த மணிமானைக் குறித்து விரைவாக ஓடினன். மிக்கபுஜபலமுள்ள பீமன் யுத்தமுனையில் சிங்கநாதம் செய்து ஆகாயத்தில் எழும்பி விரைவாகக் கதையைச் சுழற்றி மணிமான்மீது எறிந்தான். இந்திரனால் பிரயோகிக்கப்பட்ட வஜ்ராயுதம்போன்ற அந்தக்கதாயுதமானது ராக்ஷஸனைக்கொன்று பூமியை அடைந்து பிசாசுபோலக் கீழேவிழுந்தது. பீமஸேனனுடைய பலத்தால் கொல்லப்பட்ட மகாபலசாலியான அந்த ராக்ஷஸனை, சிங்கத்தால் கொல்லப்பட்ட காளைபைப்போல எல்லாப் பிராணிகளும் கண்டன. கொல்லப்பட்டுப் பூமியில் விழுந்து கிடக்கிற அந்த மணிமானைப்பார்த்து மாண்டவர்கள்போக மிகுந்திருக்கிறராக்ஷஸர்கள் பயங்கரமானதீனஸ்வரத்தை வெளியிட்டுக்கொண்டு கீழ்த்திசையைநோக்கிச் சென்றார்கள்.

நூற்றறுபத்திரண்டாவது அத்யாயம்.

யக்ஷயுத்தபர்வம். (தொடர்ச்சி.)

(பீமனைக்காணுமையால் மனம்வருந்தின யுதிஷ்டிரர்முதலியவர்கள் மலையுச்சியில் ஏறி அவனுடைய ஸமீபத்தை அடைந்ததும், பீமனால் கொல்லப்பட்டவர்கள் போக மிகுந்திருப்பவர்கள் மணிமான் முதலியவர்களின் வதத்தைச் சொல்லக்கேட்ட குபேரன் யுத்தம் செய்ய விரும்பிப் பீமனை நோக்கி வந்ததும், அவ்விடத்தில் யுதிஷ்டிரர்முதலியவர்களைக் கண்டு கோபந்தணிந்து தனக்கு அகஸ்திய சாபம் வந்ததைச் சொல்லிப் பீமஸேனனுடைய காரியத்துக்கு மகிழ்ந்ததும்.)

பலவித சப்தங்களால் முழக்கப்படுகின்ற மலையின் குகையினின்று வெளிப்படும் சப்தத்தைக் கேட்டு, குந்தியுக்தரான

அஜாதசத்ருவும் மாத்ரீபுத்திரர்களிருவருரும் தௌம்யரும் கிருஷ்ணையும் பிராம்மணர்களும் அப்படியே எல்லா நண்பர்களும் பீமஸேனனைக் காணுமையால் எல்லோருமே மனமிழந்தவர்களாயினர். அப்போழுது, சூரர்களும் மகாரதர்களுமான பாண்டவர்கள் திரௌபதியை தௌம்யரிடம் அடைக்கலமாக ஒப்புவித்து, ஒன்றுசேர்ந்து ஆயுதங்களை எடுத்துக்கொண்டு மலையின் மீதேறினர்கள். பிறகு, மகாரதர்களும் சிறந்த வில்லாளிகளுமான அந்தப்பார்த்தர்கள் மலையுச்சியை அடைந்து பார்க்கின்றவர்களாகிப் பகைவரையடக்குபவனான பீமஸேனனையும் பீமஸேனனால் அடித்துக் கீழேதள்ளப்பட்டவர்களும் மிக்க பலமுள்ளவர்களும் மிக்க முயற்சியுள்ளவர்களும் பெரிய சரீரமுள்ளவர்களும் துடிக்கின்றவர்களும் உயிரை இழந்தவர்களுமான ராக்ஷஸர்களையும் கண்டார்கள். மிக்கதோள்வலியமைந்தவனும் கதையையும் கத்தியையும் வில்லையும் தரித்தவனுமான அந்தப்பீமன், யுத்தத்தில் அஸுரர்களை இந்திரன் கொன்றதுபோல ராக்ஷஸர்களைக் கொன்று விளங்கினான். பிறகு, அந்தப்பார்த்தர்கள் வழியைத்தாண்டிச் சென்று பீமஸேனனைத் தழுவி மிகச்சிறந்த ஓரிடத்தை அடைந்து அந்த இடத்தில் உட்கார்ந்தார்கள். தூரத்திலிருந்தே லக்ஷ்யத்தில் அம்புகளை எய்பவர்களான அந்த நான்குபாண்டவர்களும் வீற்றிருக்கிற அந்தமலையின் சிகரமானது, மகாபாக்கியமுள்ளவர்களும் தேவர்களுள் சிறந்தவர்களுமான லோகபாலர்களால் ஸ்வர்க்கம் பிரகாசிப்பதுபோலப் பிரகாசித்தது. பிராதாவான யுதிஷ்டிரர், குபேரனுடைய அரண்மனையையும் கீழே தள்ளப்பட்டிருக்கிற ராக்ஷஸர்களையும் பார்த்து, உட்கார்ந்துகொண்டிருக்கிற பிராதாவான பீமனை நோக்கி, 'பீம! ஸாஹஸத்தாலோ அநியாயமையாலோ இந்தப்பாவம் (உன்னால்) செய்யப்பட்டுவிட்டது. வீரனே! முனிவன்போலக் காட்டில் வஸிக்கிற உனக்கு நிஷ்காரணமான இந்த ராக்ஷஸக்கொலையானது தகுந்ததன்று. ராஜ்யவிஷயத்தை உண்டுபண்ணுகிற காரியம் செய்யத்தக்கதன்றென்று தர்மத்தை அறிந்தவர்கள் அறிகிறார்கள். பீமஸேன! தேவர்களுக்குப்பகையை உண்டுபண்ணுகிற இந்தக்காரியம் உன்னால் செய்யப்பட்டது. பார்த்த! அர்த்தத்தையும் தர்மத்தையும் விட்டுவிட்டு எவன் பாவத்தில் மனத்தைச் செலுத்துகிறானோ அவன் பாவச்செய்கைகளுடைய பலனை நிச்சயமாக அடைகிறான்; கஷ்டம். ஸாஹஸமானது தேவர்களுக்கும் அப்ரியமானது. உனக்கு மங்களம்.

எனக்கு ப்ரியத்தை விருட்டிகிறுயாகில் மீண்[illegible]துவிட்[illegible]ாறு செய்ய லாகாது' என்று சொன்னா. தர்மாத்மாவ[illegible]த்துவங்க களின் பாகுபாட்டை அறிந்தவ[illegible]ஸுள்ளவரும் குந்தீகந்தனருமான பிராதாவான அருதய்[illegible]கிருப்ப[illegible]பகைவரைக் கொல்லுகிற விரதத்தினின்று நழுவாதவனும் [illegible]பலமிக்கவனும் (பகைவர்களால்) அவமதிக்கமுடியாத பராக்கிரமமுள்ளவனும் பிரா தாவுமான பீமஸேனனைப்பார்த்து இவ்வண்ணம் உரைத்துவிட்டு, அதேவிஷயத்தை அதிகமாக நினைக்கின்றவராகிப் பேசாமலிருந்தார்.

பிறகு, பீமஸேனனால் கொல்லப்பட்டவர்கள்போக மிகுந்திருந்த ராக்ஷஸர்கள்ஒன்றுசேர்ந்து குபேரனுடைய இருப்பிடத்தைநோக்கி ஓடினர்கள். பீமஸேனனிடத்திலிருந்துண்டான பயத்தால் பீடிக் கப்பட்டவர்களும் அதிவேகமுள்ளவர்களுமான அந்த ராக்ஷஸர் கள் வேகத்தோடு குபேரனுடைய அரண்மனையை அடைந்து பயங் கரமான தீனஸ்வரத்தை வெளிப்பிட்டனர். வேந்தரே! சஸ்திரங் களையும் ஆயுதங்களையும் கீழேவைத்துவிட்டவர்களும் வாட்டமுற்ற வர்களும் ரக்தத்தால் நனைக்கப்பட்டிருக்கிற கவசம் வஸ்திரம் ஆயு தம் முதலியவைகளையுடையவர்களும் நன்குவிரிந்த தலைமயிர்க ளுள்ளவர்களுமான அந்த ராக்ஷஸர்கள் யக்ஷர்களுக்கு அதிபதி யாகிய குபேரனை நோக்கி, 'தேவனே! கதைகளாலும் ஈட்டிகளா லும் பட்டாக்கத்திகளாலும் தோமரங்களாலும் ப்ராஸங்களாலும் போர்புரிகின்றவர்களும் உனக்கு முந்திச்செல்பவர்களுமான எல்லா ராக்ஷஸர்களும் கொல்லப்பட்டார்கள். தனேஸ்வர! பலத் தினால் மலையை மிக அழித்து ஒரு மனிதனால் யுத்தத்தில் க்ரோத வசர்களென்கிற ராக்ஷஸர்களுடைய கூட்டங்கள் கொல்லப்பட் டன. நராதிபனே! தேவனே! ராக்ஷஸஸ்ரேஷ்டர்களுள்ளும் யக்ஷர்களுள்ளும் மிகச்சிறந்தவர்கள் ஆயுதங்களால் அடிக்கப் பட்டு ஆண்மையை இழந்தவர்களும் உயிரை இழந்தவர்களுமாகிப் படுத்திருக்கிறார்கள். மலை நொறுக்கப்பட்டது; நாங்கள் முறிய அடிக்கப்பட்டோம். உன்னுடைய தோழனை மணிமானும் கொல்லப்பட்டான். ஒருமனிதனால் இந்தக்கார்யம் செய்யப்பட் டது. அடுத்துச்செய்யவேண்டியதைச்செய்' என்று சொன்னர் கள். எல்லாயக்ஷகணங்களுக்கும் அதிபதியான குபேரன், அதைக் கேட்டு மிக்க கோபங்கொண்டவனாகவும், கோபத்தால் கண்கள் நன்குசிவந்தவனாகவும், 'எப்படி!' என்கிறவசனத்தை உரைத்தான். யக்ஷர்களுக்கு அதிபதியான தனேஸ்வரன் பீமன் இரண்டாமுறை

குற்றஞ்செய்தவனைத் தண்டிப்பதற்கு விருப்பங்கொண்டான். நீங்கள், என்னுடைய சமமாகவோ, என்னைப் போல [illegible] தேரில் இருப்பதும் மலையின்கொடுமுடி குதிரைகளைப் பூட்டியிருக்கள். எல்லாக்குணங்களும் அமைந்தவை களும் குற்றமற்ற [1] பத்துச்சுழிகளுள்ளவைகளும் தேஜஸோடும் பலத்தோடும் நற்குணங்களோடும் கூடியவைகளும் பலவிதரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டவைகளும் ரதத்தில் பூட்டப்பட்டவைகளும் பிரகாசிக்கின்றவைகளுமான அந்தக் குபேரனுடைய சிறந்த குதிரைகள் (ஆகாசத்தைத்) தாண்டப்போகின்றவைகள்போல வேகமாகச்சென்றன. பிறகு, அந்தயக்ஷாதிகாரிகள் தனேஸ்வரன் கோபமுற்றதைப் பார்த்து, வெற்றியை உண்டுபண்ணுகின்ற இங்கிதங்களால் ஒருவரை ஒருவர் ஸந்தோஷிக்கச்செய்தார்கள். சிறந்த ஐஸ்வர்யமுள்ளவனான அந்த ராஜராஜன் அந்தப் பெரிய ரதத்தின் மீதேறித் தேவர்களாலும் கந்தர்வர்களாலும் துதிக்கப்படுகின்றவனாகவும் மிக்க ஒளிபொருந்தியவனாகவும் சென்றான். ரதத்தின் மீதேறிச்செல்பவனும் [2] மகாத்மாவும் தனேஸ்வரனுமான அந்தக் குபேரனைப் பயங்கரமான தோற்றமுள்ளவர்களான எல்லா யக்ஷர்களும் பின்தொடர்ந்தார்கள். சிவந்த கண்களையுடையவர்களும் பொன்போன்ற காந்தியையுடையவர்களும் பருத்தசரீரத்தையுடையவர்களும் மிக்கவலிமையுள்ளவர்களும் ஆயுதங்களைத் தரித்தவர்களும் கத்திகளைக்கட்டிக்கொண்டவர்களும் நாற்புறக் கணைக்கான ஆயுதங்களையுடையவர்களுமான அந்த யக்ஷர்கள், மிக்கவேகமுள்ளவர்களாக ஆகாயத்தில் வேகத்துடன் பறந்துகொண்டு, ஆகாசத்தை நன்றாக இழுத்துக்கொண்டுவருகிறவர்கள்போலக் கந்தமாதனபர்வதத்தைநோக்கி வந்தார்கள். குதிரைகளுடைய பெருங்கூட்டங்களால் வியாபிக்கப்பட்டதும் குபேரனால் காக்கப்பட்டதும் அழகியதும் பாண்டவர்கள் இருக்குமிடமுமான கந்தமாதனபர்வதத்தின் சிகரத்தை அடைந்தார்கள். பாண்டவர்கள் மயிர்க்கூச்சலுள்ளவர்களாக மகாத்மாவும் யக்ஷராக்ஷஸர்களுடைய கூட்டங்களால் நாற்புறங்களிலும் சூழப்பட்டவனும் காட்சிக்கினியவனுமான குபேரனைக் கண்டார்கள். குபேரனை அப்பொழுது அதிகபலமுள்ளவர்களும் மகா

---

1 253-ம் பக்கம் பார்க்க.

2 இரட்டித்தலால் ஒரு சொல் விடப்பட்டது.

ர்தர்களும் விற்களையும் கத்திகளையும் கையிலெடுத்தவர்களுமான பாண்டுவின் புதல்வர்களைப் பார்த்துப் பிரீதியுள்ளவனானன். 'இந்திரனுக்குச் சமமான சௌர்யமுள்ள இந்தப் புருஷச்ரேஷ்டர்களனைவரும் தேவகார்யத்தைச் செய்யப்போகிறார்கள்' என்று மனத்தினுல் ஸந்தோஷித்தான். தனேச்வரனுக்கு முந்திச் செல்பவர்களான அந்தயக்ஷர்களும் கந்தர்வர்களும் அதிகவேகமுள்ளவர்களாகப் பறவைகள்போல மலையின் சிகரத்தில் வந்து இறங்கினர்கள்; அந்தப்பார்த்தர்களுடைய பக்கத்தில் வந்து நின்றார்கள்.

பாரதரே! பிறகு, பாண்டவர்களைக் குறித்து மனத்தில் ஸந்தோஷமடைந்த அந்தக் குபேரனைக் கண்டு யக்ஷர்களும் கந்தர்வர்களும் போர் முயற்சியின்றி நின்றார்கள். மகாத்மாக்களும் மகாரதர்களும் பாண்டுபுத்ரர்களுமான நகுலன் ஸஹதேவன் தர்மங்களை நன்றாக அறிந்தவரான தர்மபுத்ரர் இவர்களெல்லாரும் தங்களைக் குற்றம் செய்தவர்களைப்போல எண்ணிப் பிரபுவான குபேரனை நமஸ்கரித்துக் கைகளைக் குவித்துக்கொண்டு தனேச்வரனைச் சூழ்ந்து நின்றார்கள். குபேரன், சயனங்களுடனும் ஆஸனங்களுடனும் கூடியதும் காந்தியுள்ளதும் விச்வகர்மாவினல் உண்டுபண்ணப்பட்டதும் நாற்புறமும் விசித்திரமாயிருப்பதுமான புஷ்பக விமானத்தில் இருந்தான். பருத்தசரீரமுள்ளவர்களும் முளைபோன்ற காதுகளையுடையவர்களும் அதிகவேகமுள்ளவர்களுமான யக்ஷர்களும் ராக்ஷஸர்களும் விமானத்தில் வீற்றிருக்கின்ற குபேரனை அடுத்து ஆயிரமாயிரமாக வீற்றிருந்தார்கள். நூறுநூறாகக் கந்தர்வர்களும் அப்படியே அப்ஸரஸ்ஸுகளுடைய கூட்டங்களும் தேவர்கள் இந்திரனைத் துதிப்பதுபோலச் சூழ்ந்துகொண்டு துதித்தார்கள். பொன்னாலாகியதும் மங்களகரமுமான மாலையை முடியில் அணிந்திருப்பவனும் பாணங்களையும் கத்தியையும் வில்லையும் கையில் பிடித்தவனுமான பீமசேனன் தனதிபனை ஏறிட்டுப்பார்த்தான். ராக்ஷஸர்களால் நன்றாக அடிக்கப்பட்டிருந்தும் குபேரனைப்பார்த்தும் பீமசேனனுக்கு அந்தநிலைமையில் பயமும் உண்டாகவில்லை; வாட்டமும் உண்டாகவில்லை. குபேரன், கூர்மையுள்ள பாணங்களை எடுக்கிறவனும் யுத்தகட்பண்ணுவதில் விருப்பங்கொண்டு நிற்பவனுமான பீமசேனப்பார்த்து, தர்மபுத்திரரை நோக்கி, 'குந்தீநந்தன! எல்லாப் பிராணிகளும் உன்னைப் பிராணிகளுக்கு நன்மையைச் செய்வதில் பற்றுதலுள்ளவனென்று அறிந்திருக்கின்றன. நீ பந்துக்க

ளுடன்கூட மலையின் சிகரத்தில் பயமில்லாமல் வாஸம் செய்வாயாக. பாண்டவ! பீமஸேனன் விஷயத்தில் நீ கோபிக்கலாகாது. இவர்கள் காலத்தால் முந்தியே கொல்லப்பட்டார்கள். உன்னுடைய இளையஸஹோதரன் நிமித்தமாத்திரமாக ஏற்பட்டான். பீமனால் செய்யப்பட்ட ஸாஹஸமான இந்த விஷயத்தில் நீ வெட்கப்படலுமாகாது. தேவர்களால் முந்தியே யக்ஷர்கள் ராக்ஷஸர்கள் ஆகிய இவர்களுடைய அழிவானது கண்டறியப்பட்டிருக்கிறது. பரதர்களுள் சிறந்தவனே! நான் ப்ரீதியுள்ளவனாக இருக்கிறேன். பீமஸேனனிடத்தில் எனக்குக் கோபமில்லை. பீமஸேனனுடைய செய்கையினால் எனக்கு ஸந்தோஷமானது முந்தியே உண்டாகிவிட்டது' என்று சொன்னான். அந்தக் குபேரன் யுதிஷ்டிரராஜரைப் பார்த்து இவ்வண்ணமுரைத்து, பீமஸேனரைப்பார்த்து, 'கௌரவர்களுள் சிறந்தவனே! அப்பனே! இதை நான் மனத்தில் வைக்கவில்லை. பீம! உனது புஜபலத்தையே அடுத்து என்னையும் தேவர்களையும் அலக்ஷியம் செய்து திரௌபதிக்காக யக்ஷர்கள் ராக்ஷஸர்கள் இவர்களுடைய விநாசமாகிற நீ செய்த ஸாஹஸகாரியத்தினால் நான் உன்னிடத்தில் ப்ரீதியுள்ளவனாக இருக்கிறேன். விருகோதர! கோரமான சாபத்தினின்று இப்பொழுது நான் விடுபட்டேன். 'நான் முற்காலத்தில் கோபம் கொண்ட அகஸ்தியமகரிஷியினால் ஒரு குற்றத்துக்காகச் சபிக்கப்பட்டேன். அதற்கு இது ப்ராயச்சித்தம்; நிச்சயம். பாண்டவர்களை மகிழ்விக்கிறவனே! (யக்ஷராக்ஷஸ வதமாகிற இந்தத்) துக்கம் வருமென்பது என்னால் முந்தியே அறியப்பட்டிருக்கிறதன்றோ. பாண்டவ! எவ்விதத்தாலும் இந்த விஷயத்தில் நீ குற்றவாளியல்லை' என்று சொன்னான். யுதிஷ்டிரர், 'பகவானே! மஹாத்மாவான அகஸ்தியரால் எதற்காகச் சபிக்கப்பட்டாய்? தேவனே! இந்தச் சாபத்திற்குக்காரணம் ஏற்பட்டவிதத்தைக் கேட்க விரும்புகிறேன். சிறந்த புத்தியுள்ளவரான அந்த அகஸ்தியருடைய கோபத்தால் அப்பொழுதே தேசனையுடனும் பின்தொடர்ந்துவந்த பரிவாரங்களுடனும் நீ எரிக்கப்படாமலிருந்தாயென்னும் இது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது' என்று வினவ, தனஞ்ஜயன் சொல்லலானான்.

'நரேச்வரனே! தேவதைகளுக்குக் குசஸ்தலி என்னுமிடத்தில் மந்த்ராலோசனை ஸபை ஏற்பட்டது. நான் பலவித ஆயுதங்களைத் தரித்தவர்களும் கோரரூபமுள்ளவர்களுமான மூன்றாறு

[1] மகாபத்மஸங்கினை அளவுள்ள யக்ஷர்களால் சூழப்பட்டவனாக அந்த இடத்திற்குச் செல்லலானேன். பிறகு, பலவண்ணப் பறவைக் கூட்டங்களால் வியாபிக்கப்பட்டுப் பூத்திருக்கிற மரங்களால் விளங்குகின்ற யமுனையின்கரையை அடைந்து சுடுந்தவஞ்செய்கின்ற அகஸ்தியமஹரிஷியை நான் வழியில் பார்த்தேன். அரசனே! கைகளை மேலேதூக்கிக்கொண்டிருப்பவரும் சூரியனுக்கு எதிரில் நிற்பவரும் தேஜஸுகளின் குவியலாக இருப்பவரும் நன்கு மூட்டப்பட்ட அக்னிபோல ஜ்வலிப்பவருமான அந்த அகஸ்தியரைப் பார்த்தவுடனே, ராக்ஷஸர்களுக்கு அதிபதியும் ஐச்வர்யமுள்ளவனும் எனக்குத்தோழனுமான மணிமானென்பவன் ஆகாசத்திலிருந்துகொண்டு மூர்க்கத்தன்மையினாலும் (அகஸ்தியனென்று) தெரிந்துகொள்ளாமையினாலும் செல்வச் செருக்கினாலும் (செல்வம் நிலையற்றதென்று) அறியாமையினாலும் அந்த அகஸ்தியமகரிஷியினுடைய தலையில் எச்சிலை உமிழ்ந்தான். அதனால் கோபங்கொண்ட தபோதனரான அந்த அகஸ்தியபகவான், 'தனேச்வர! கெட்ட எண்ணமுள்ளவனும் உனக்குத்தோழனுமான இந்த மணிமான் என்னை அவமதித்து நீ பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே இந்த அக்கிரமத்தைச் செய்தானாதலால் அப்படிப்பட்ட இந்தச் சேனைகளுடன் மனிதனிடத்தினின்றுவதத்தை அடைவான். கெட்டபுத்தியுள்ளவனே! நீயும் இந்தச் சேனைகள் கொல்லப்படுவதனால் வருத்தத்தை அடைவாய்; அந்த மனிதனையே கண்டு பாவத்தினின்று விடுபடுவாய். உன்னுடைய இந்தச் சேனைவீரர்களுடைய புத்திரர்களோடும் பௌத்திரர்களோடும் கூடின சேனையானது கோரமான இந்தச் சாபத்தை அடையாது; போ. உன்னுடைய கட்டளையை அந்தச் சேனையானது செய்யும்' என்று சொன்னார். முற்காலத்தில் ரிஷிகளுள் மிகவும் சிறந்தவரான அந்த அகஸ்தியரிடத்தினின்று இந்தச் சாபம் என்னாலடையப்பட்டது. மஹாராஜனே! அந்தச்சாபத்திலிருந்து உன்னுடைய பிராதாவான பீமனால் நான் விடுவிக்கப்பட்டேன்.

---

1 ஸபாபர்வம் 276-ம் பக்கம் குறிப்பிற் காண்க.

ஸ்ரீ மஹாபாரதம்.

நூற்றறுபத்துமூன்றுவது அத்யாயம்.

யக்ஷயுத்தபர்வம். (தொடர்ச்சி.)

(குபேரன் யுதிஷ்டிரரைப்பார்த்துக் கட்டளையிட்டுவிட்டுத் தன் அரண்மனை சென்றதும், குபேரனுடைய கட்டளையினல் ராக்ஷஸர்களால் பூஜிக்கப்பட்ட யுதிஷ்டிரர் முதலியவர்கள் அன்றிரவு அவனுடைய மாளிகையில் ஸுகமாக வஸித்ததும்.)

யுதிஷ்டிர! தைர்யம், விடாமுயற்சி, தகுந்த இடம், காலம், பகைவர்களை அவமதிப்பதற்குக்காரணமான செய்கை ஆகிய ஐந்துவிதமான இவை உலகிலுள்ள ஜனங்களின் கார்யஸித்திக்குக்காரணம். பாரத! மனிதர்கள் க்ருதயுகத்தில் தத்தம்கார்யத்தில் தைர்யமுள்ளவர்களாகவும் விடாமுயற்சியுள்ளவர்களாகவும் பராக்கிரமத்தை உபயோகிக்கும்முறையை அறிந்தவர்களாகவுமிருந்தார்கள். ஸுதிருதியஸ்ரேஷ்டரே! தைர்யமுள்ளவனும் தேசகாலங்களை அறிந்தவனும் எல்லாத்கர்மங்களின் அனுஷ்டானமுறையையும் அறிந்திருப்பவனுமான ஸுதிருதியன் பூமியை நெடுங்காலம் ஆளுகிறான். பாரத! மீச! எல்லாக் கர்மங்களிலும் இவ்வண்ணமிருக்கும் மனிதன் இவ்வுலகத்தில் கீர்த்தியை அடைகிறான்; மறுமையிலும் நற்கதியை அடைகிறான். தேசகாலங்களுடைய அனுகூலத்தை எதிர்பார்த்திருந்து இந்திரன் பராக்கிரமத்தை வெளியிட்டு வ்ருத்ரனைக்கொன்று லக்ஷ்மியோடு கூட ஸ்வர்க்கத்தில் தேவராஜ்யத்தை அடைந்தான். எவன் வீணனிகாபத்தால் தனதுசக்தியை அறியவில்லையோ, எவன் கெட்டகாரியங்களில் மனத்தைச்செலுத்தினவனுமல்லனோ, பராக்ரமமுள்ளவனுகவும் பாபத்தைத்தீய அனுஸரிக்கிறானோ கர்மங்களுடைய பாகுபாடுகளை அறியாதவனான அந்த மனிதன் இம்மையிலும் மறுமையிலும் நாசமடைகிறான். காலத்தை அறியாதவனும் மிகவும் கெட்டபுத்தியுள்ளவனும் கார்யங்களுடைய விசேஷங்களை அறியாதவனும் வீணனிசெய்கையும் முயற்சியுமுள்ளவனுமான மனிதன் இம்மையிலும் மறுமையிலும் நாசமடைகிறான். ஸாஹஸத்தில் நிலைபெற்றிருப்பவர்களும் வெற்சனையில் முக்கியமான நோக்குள்ளவர்களும் சுறுசுறுப்புள்ளவர்களும் அர்த்தத்தில் போரவலுள்ளவர்களுமான எல்லாருக்கும் பாவத்தை விலக்கக்கூடிய நிச்சயம் உண்டாகிறது. புருஷவ்யாக்ரரே! இந்தப்பிரமனன்

தர்மங்களை அறியாதவன்; கர்வங்கொண்டவன்; சிறுபிள்ளையின் புத்தியுள்ளவன்; கோபமுள்ளவன்; பயமற்றவன். அப்படிப்பட்ட இந்தப்பீமனுக்கு உபதேசிப்பாயாக. ஆர்ஷ்டிஷேண னென்கிற ராஜரிஷியினுடைய ஆச்ரமத்தை நீ மீண்டுமடைந்து அந்த ஆச்ரமத்தில் [1] இருளடர்ந்ததும் ராக்ஷஸர்களுக்குரியதுமான பக்ஷிமுழுவதும் சோகமும் பயமுமற்று வஸிப்பாயாக. மிக்கபுஜபலமுள்ளவனே! நான் கந்தர்வர்களோடும் யக்ஷர்களோடும் கின்னரர்களோடும் அளகாபுரிக்குச் செல்வேன். நீயும் பதரிகாச்ரமத்தைக் குறித்துச் செல்வாயாக. நீண்டகைகளுள்ளவனே! அரசனே! என்னால் உத்தரவளிக்கப்பட்ட மலைவாஸிகளனைவரும் பிராம்மணர்களோடு சேர்ந்திருக்கிற உன்னைப் பாதுகாக்கக்கடவர். வேந்தே! தார்மிகர்களுள் சிறந்தவனே! மலையில் ஸாஹஸகார்யங்களில் நிலைபெற்றிருக்கிற இந்த விருகோதரனை நீ நன்கு தடுக்கவேண்டும். அரசனே! இதற்குப்பிறகு, காட்டில் வஸிப்பவர்கள் உங்களைப் பார்ப்பார்கள்; அரசனே! உங்களைத் துதிப்பார்கள்; உங்களை எப்பொழுதும் பாதுகாப்பார்கள். புருஷச்ரேஷ்டர்களே! என்னுடைய வேலைக்காரர்கள் அப்படியே சுவையுள்ள அன்னபானங்களை எப்பொழுதும் உங்களுக்கு மிகுதியாகக் கொண்டுவந்து கொடுப்பார்கள். யுதிஷ்டிர! அப்பா! அர்ஜுனன் மகேந்திரனுக்கும், விருகோதரன் வாயுவுக்கும், யோகமகிமையினால் உண்டுபண்ணப்பட்ட தன் புத்திரனை நீ தர்மதேவனுக்கும், ஆத்மகுணங்களால் நிறைந்த குமாரர்களான நகுலஸஹதேவர்கள் இருவரும் அச்வினீதேவர்களுக்கும் எவ்வாறு ரக்ஷிக்கத்தக்கவர்களோ அவ்வாறே எனக்கும் நீங்களெல்லோரும் இப்பொழுது ரக்ஷிக்கத்தக்கவர்கள். அர்த்தசாஸ்த்ரங்களின் முறையை அறிந்தவனும் எல்லாத்தர்மங்களுடைய விதிகளையும் நன்கு அறிந்தவனும் பீமஸேனனுக்கு இளைய ஸஹோதரனுமான பல்குனன் ஸ்வர்க்கத்தில் க்ஷேமமாக இருக்கிறான். ஐயா! உலகத்தில் எந்தச் சிறந்த ஸம்பத்துக்கள் ஸ்வர்க்கத்திற்கு ஹிதமானவையென்று எண்ணப்பட்டனவோ அவை அனைத்தும் தனஞ்சயனிடத்தில் பிறந்ததுமுதல் நிலைபெற்றிருக்கின்றன. அதிகமான பலமுள்ளவனும் அளவுகடந்த தேஜஸ்ஸுள்ளவனுமான அர்ஜுனனிடத்தில் ஐம்பொறி அடக்கல், தானம், பலம், புத்தி, அகார்யத்தில் வெட்கம், தைர்யம், உத்தமமான தேஜஸ்

1 வேறு பாடம்.

இவைகளும் நிலைபெற்றிருக்கின்றன. 'பாண்டுநந்தன! அர்ஜுனன் மதிமய்க்கத்தால் நிந்திக்கத்தக்க செய்கையைச் செய்கிறதில்லை. மனிதர்கள் வேறு மனிதர்களிடம், 'அர்ஜுனனுடைய வசனங்கள் பொய்யானவைகள்' என்று சொல்லுகிறதில்லை. பாரத! கௌரவர்களுக்குக் கீர்த்தியை விருத்திபண்ணுகிற அந்த அர்ஜுனன் தேவர்களாலும் பித்ருக்களாலும் கந்தர்வர்களாலும் அழைத்துவரப்பட்டு இந்திரனுடைய அரண்மனையில் அஸ்திரங்களைப் பயிற்சி செய்கிறான். பார்த்த! எவன் எல்லா அரசர்களையும் தர்மத்தால் தனக்கு வசப்படும்படி செய்தானோ மிக்கதேஜஸ்வள்ளவனும் உன்னுடைய பிதாவுக்குப் பாட்டனுமான அந்தச்சந்தனு மகாராஜன் ஸ்வர்க்கத்தில் காண்டீவத்தை வில்லாகக்கொண்டவனை பார்த்தனல் பிரீதி அடைகிறான். அதிகவீர்யமுள்ளவனை அந்தச் சந்தனுசக்கரவர்த்தியானவன் நன்னடையுடன் கூடியவனுகக் கௌரவவம்சத்தில் குலத்தைத் தாங்குபவன்போலிருந்தான். பெரும்புகழ் வாய்ந்த சந்தனுவானவன் பித்ருக்களையும் தேவர்களையும் ரிஷிகளையும் பிராம்மணர்களையும் பூஜித்து யமுனையினருகில் முக்கியமான ஏழு மகாயாகங்களைச் செய்தான். அரசே! சக்கரவர்த்தியும் ஸ்வர்க்கத்தை ஜயித்தவனும் இந்திர லோகத்திலிருப்பவனும் உன் பாட்டனுக்குத் தந்தையுமான அந்தச் சந்தனு சக்ரவர்த்தி க்ஷேமத்தை விசாரிக்கிறான்' என்று

குபேரனல் சொல்லப்பட்ட இந்தவசனத்தைக் கேட்டுப் பாண்டவர்கள் பிறகு அந்த வசனத்தினல் அதிக ஸந்தோஷமுள்ளவர்களானர்கள். பரதஸ்ரேஷ்டனான விருகோதரன், பிறகு, சக்தியையும் கதையையும் கத்தியையும் வில்லையும் வைத்துவிட்டுக் குபேரனுக்கு நமஸ்காரம் செய்தான். பிறகு, சரண்யனான தனஞ்சயன் சரணமடைந்திருப்பவனை பீமனைப் பார்த்து, 'பகைவர்களுடைய மானத்தையழிப்பவனுகவும் நண்பர்களுடைய செல்வத்தைப் பெருக்குகிறவனுகவுமிருப்பாயாக. அப்பா! மலையின் உச்சியில் பந்துக்களுடன் பயமில்லாதவனுக வஸித்துக்கொண்டு குருடனுக்கும் பித்ருக்களுக்கும் தேவர்களுக்கும் எப்பொழுதும் பூஜையைச் செய்பவனுக இருப்பாயாக. ருஜுவாகப் பாருங்கள்; கோணலாகப் பாராதீர்கள்; உண்மையைப் பேசுங்கள்; பொய்யைச் சொல்லாதீர்கள்; தீர்க்கமாகப் பாருங்கள்; குறுகலாகப் பாராதீர்கள்; மேலான பொருளைப் பாருங்கள்; கீழ்ப்பட்ட பொருளைப் பாராதீர்கள். பகைவரை வாட்டுபவர்களே! அழகிய நம்முடைய வீடுக

னில் வஸியுங்கள். பரதஸ்ரேஷ்டர்களே! உங்களுடைய விருப்பங்களை யக்ஷர்கள் குறைக்கமாட்டார்கள்; செய்யவே செய்வார்கள். 1 சோம்பலில்லாதவனும் அஸ்திரங்களில் நல்ல பயிற்சியுள்ளவனும் புருஷஸ்ரேஷ்டனுமான தனஞ்சயன் மகிமையுடையவனை இந்திரனுலனுப்பப்பட்டுச் சீக்கிரமாகவே வருவான்' என்று சொன்னன். குஹ்யகர்களுக்கு அதிபதியாகிய குபேரன் நல்ல செய்கைகளுடன் கூடின யுதிஷ்டிரரைப் பார்த்து இவ்வண்ணம் கட்டளையிட்டு ஸூர்யன் அஸ்தகிரியை நோக்கிச் செல்வதுபோல (அவனுடைய கையைக் குறித்து) ச் சென்றான். அப்படிச் செல்லுகின்ற குபேரனை யக்ஷர்களும் ஆயிரக்கணக்கான ராக்ஷஸர்களும் சித்ர கம்பளங்களால் செய்யப்பட்ட மேல் விரிப்புடன் கூடியவைகளும் பலவித ரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டவைகளுமான வாகனங்களுடன் பின்தொடர்ந்து சென்றார்கள். குபேரனுடைய வீட்டை நோக்கிச் செல்லுகின்ற உத்தமமான குதிரைகளுடைய கனைப்பானது இந்திரனுடைய நகரத்தைச் சார்ந்த இடத்தில் பக்ஷிகளுடைய சப்தம்போலத் தோன்றியது. அந்தத் தனபதியினுடைய குதிரைகள் மேகங்களை இழுக்கின்றவைகள்போலவும் காற்றைப் பானம்பண்ணுகிறவைகள்போலவும் ஆகாயத்தை அடைந்து விரைவாகச் சென்றன. பிறகு, உயிர்போன ராக்ஷஸர்களுடைய அந்தச் சரீரங்களைக் குபேரனுடைய கட்டளையினால் யக்ஷர்கள் மலையுச்சியிலிருந்து இழுத்தெறிந்தார்கள். அவர்களுக்குச் சிறந்த புத்தியுள்ளவரான அகஸ்தியரால் அது சாபம் (பலிக்கிற) காலமாக ஏற்படுத்தப்பட்டிருந்தன்றோ? அதனல், அவர்கள் யுத்தத்தில் கொல்லப்பட்டார்கள். அப்பொழுது சாபத்திற்கு முடிவு ஏற்பட்டது. மஹாத்மாக்களான பாண்டவர்கள் அச்சமற்றவர்களாகவும் பூஜிக்கப்பட்டவர்களாகவும் ராக்ஷஸர்களோடுகூட அந்தக் குபேரனுடைய மாளிகைகளில் அந்த இரவு முழுமையும் ஸுகமாக வஸித்தார்கள்.

---

1 'குடாகேச:' என்பது மூலம்.

நூற்றறுபத்துநான்காவது அத்யாயம்.

யக்ஞயுத்தபர்வம். (தொடர்ச்சி.)

(தெளம்யர் மேரு மந்தரங்களைப்பற்றிக் கூறிச் சந்திரன் ஸூர்யன் முதலிய கிரஹங்கள் செல்லும் முறையைத் தெரிவித்தது.)

பிறகு, ஸூர்யோதய காலத்தில் தெளம்யர் ஆர்ஷ்டிஷேணரோடு, ப்ராஞ்சாலியுடனிருக்கிற அந்தப் பாண்டவர்களை வந்தடைந்தார். அவர்களனைவரும் ஆர்ஷ்டிஷேணர் தெளம்யர் இவர்களுடைய பாதங்களில் தண்டனிட்டு, பிறகு, கைகூப்பி அந்தப் பிராம்மணர்களைப் பூஜித்தார்கள். பரதர்களுள் சிறந்த வீர! மிக்க தவமுள்ள அந்தத் தெளம்ய மஹர்ஷியானவர் புத்திரனைப் போல ஆர்ஷ்டிஷேணரைக் கட்டிக்கொண்டும் தர்மராஜரைக் கையில் கையினால் பிடித்துக்கொண்டும் கீழ்த்திசையை நோக்கி, 'மஹாராஜனே! இந்த மந்தரமென்கிற பெரிய மலையானது ஸமுத்திரத்தினால் சூழப்பட்ட பூமியைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது. பாண்டவ! நான்கு பக்கங்களையும் பிரகாசிக்கச்செய்கின்ற மந்தர கிரியானது இந்திரனும் குபேரனும் சேர்ந்திருக்கிற திசையைப் பாதுகாக்கிறது. ஐயா! எல்லாத்தருமங்களையுமறிந்திருக்கிற ரிஷிகளும் எல்லா வித்வான்களும் மலைகளோடும் காட்டு வெளிகளோடும் காடுகளோடும் பிரகாசிக்கின்ற இந்த மலையை மஹேந்திரனுக்கும் அரசனான குபேரனுக்கும் உரியதென்று சொல்லுகிறார்கள். பிரஜைகளெல்லாம் தர்மங்களை அறிந்தவர்களான ரிஷிகளும் ஸித்தர்களும் ஸாத்யர்களும் தேவதைகளும் இந்தமலையினின்று உதிக்கின்ற ஸூர்யனை மந்திரங்களால் துதிக்கிறார்கள். தர்மங்களை அறிந்தவனும் எல்லாப் பிராணிகளுக்கும் தலைவனுமான யமதர்மராஜன் மரித்த பிராணிகளால் அடையத்தக்க இந்தத் தென்திசையை அடைந்திருக்கிறான். புண்யமானதும் மிகவும் அத்புதமான காட்சியுள்ளதும் சிறந்த செல்வப் பெருக்குடன் கூடியதுமான இந்த ஸம்யமநீ நகரமானது ப்ரேதராஜனான யமனுக்கு வாஸஸ்தானம். அரசனே! ஸூர்யன், எதை அடைந்து ஸத்யத்தோடு நிலைபெற்றிருக்கிறானோ அப்படிப்பட்ட இந்தச் சிறந்த பர்வதத்தை அஸ்தகிரி என்று அறிஞர்கள் சொல்லுகிறார்கள். இவ்விதப் பர்வத ராஜாவான அஸ்தகிரியிலும் மஹாகதி என்கிற ஸமுத்திரத்திலும் வருண

ராஜன் வஸித்துக்கொண்டு பிராணிகளைப் பாதுகாக்கிறான். மிக்க பாக்கியமுள்ளவனே! புகழ்பெற்றதும் மங்களகரமானதும் பிரம்ம விக்துக்களுக்கு அடையத்தக்க ஸ்தானமுமான இந்த மகாமேரு வானது வடதிசையைப் பிரகாசிக்கச் செய்துகொண்டிருக்கிறது. இதில் பிரம்மனை இருக்கிறது. எல்லாப் பிராணிகளுக்கும் ஆக்மாவான பிரம்மாவானவர் ஜங்கமங்களாகவும் ஸ்தாவரங்களாகவுமிருக்கிற எல்லா வஸ்துக்களையும் படைத்துக்கொண்டு இங்கு நிலை பெற்றிருக்கிறார். தக்ஷரை ஏழாமவராகக் கொண்டவர்களும் பிரம்மாவினுடைய மானஸபுத்திரர்களாகச் சொல்லப்படுகிறவர்களுமான அவர்களுக்குங்கூட மகாமேருவானது மங்களகரமான ஆரோக்கியஸ்தானமாக இருக்கிறது. அப்பா! வஸிஷ்டரை முதன்மையாகக் கொண்ட ஏழு ரிஷிகளும் இந்தப் பர்வதத்திலேயே அஸ்தமிக்கிறார்கள்; மீண்டும் உதிக்கிறார்கள். எந்த இடத்தில் பிரம்மா ஆக்மத்தியானத்தினால் நியமத்தையடைந்த ரிஷிகளாதி வஸிக்கிறாரோ அப்படிப்பட்ட ரிஷிகுண ஸம்பந்தமில்லாத மேருவினுடைய உத்தமமான சிகரப்பிரதேசத்தைப் பார்ப்பாயாக. தேவரும் பிரபுவுமான எந்த நாராயணரைச் சராசரங்களனைத்துக்கும் மூலகாரணமான மூலப்ரக்ருதிக்கும் சாச்வதமான காரணமென்றும் ஆதியந்தமில்லாதவரென்றும் பரம்பொருளென்றும் சொல்லுகிறார்களோ அவருடைய ஸ்தானமானது பிரம்மரிஷிகளுடைய வாஸஸ்தானத்தைக்காட்டிலும் சிறப்புள்ளதாகப் பிரகாசிக்கிறது. எல்லாக்ரஹஸுகளின் உருவமுமாக இருப்பதும் மங்களகரமானதும் சூரியனையும் அக்கினியையும்விட அதிகமாகப் பிரகாசிப்பதுமான மகாத்மாவான விஷ்ணுவினுடைய அந்த ஸ்தானத்தைத் தேவர்களும் பெருமுயற்சியால் பார்க்கிறார்கள். தேவர்ஷே! ஐயா! எல்லாப் பிராணிகளுக்கும் அதிபதியும் எல்லாவஸ்துக்களுக்கும் மூலகாரணரும் தாமே தோன்றினவருமான ஸ்ரீமந்நாராயணரிடமல்ல காந்தியினால் எல்லாப்பிராணிகளையும் பிரகாசிக்கச் செய்துகொண்டு தாமும் பிரகாசிக்குமிடமும் கண்ணுடைய ஒளியினாலேயே தேவர்களாலும் அஸுரர்களாலும் பார்க்கமுடியாததுமான நாராயணருடைய ஸ்தானமானது மேருவில் கிழக்குச்சிகரத்தில் மிகப்பிரகாசிக்கின்றது. அப்பா! இங்கே மனத்தினால் பரமாத்மாவைத் தியானிக்கின்ற யதிகளால் அடையத்தக்க இந்த ஸ்தானத்தைப் பிரம்மரிஷிகளே அடைகிறதில்லை. அப்படியிருக்க, மற்றவர்கள் எப்படி அடைவார்கள்? பாண்டவ! அந்த ஸ்தானத்தை அடைந்து

எல்லாஜோதிகளும் பிரகாசிக்கிறதில்லை. தமக்குத்தாமே பிரபுவாக இருப்பவரும் இவ்விதமென்று நினைக்க முடியாத ஸ்வரூபத்துடன் கூடியவருமான நாராயணர் அந்த இடத்தில் மிகவும் பிரகாசிக்கிறாரன்றே? சிறந்த தவத்தையுடையவர்களும் மங்களகரமான செய்கைகளால் பகவானை ஆராதிக்கின்றவர்களும் யோகஸித்திபெற்றவர்களும் மகாத்மாக்களும் அஜ்ஞானத்தாலும் மயக்கத்தாலும் விடுபட்டவர்களுமான யதிகள் அந்த இடத்தில் பக்தியினால் நாராயணரான ஹரியை அடைகிறார்கள். பாரத! அந்த இடத்தில் ஸ்வயம்புவும் மகாத்மாவும் தேவர்களுக்கெல்லாம் தேவரும் சாஸ்வதருமான ஹரியை அடைந்தவர்கள் மீண்டு இந்த உலகத்துக்கு வருகிறதில்லை. 1 பெரும்பாக்கியமுள்ளவனே! இது நித்யமாயும் நாசமற்றதாயும் குறைவற்றதாயுமிருக்கிற ஈச்வரருடைய ஸ்தானம். யுதிஷ்டிர! எப்பொழுதும் இந்த இடத்தில் இதனை நமஸ்காரம் செய்வாயாக. குருநந்தன! சூரியனும் சந்திரனும் சாச்வதமாக இருக்கிற இந்தமேருவைத் தினந்தோறும் 2 வலமாகச் சுற்றிவருகிறார்கள். குற்றமற்றவனே! மஹாராஜனே! எல்லாச் சோதிக் கிரஹங்களும் மிகுதியின்றி மலைகளுள் சிறந்த மஹாமேருவை நாற்புறமும் வலமாகச் சுற்றிவருகின்றன. இருளைப் போக்குகிற செய்கையுடன் கூடிய ஸூர்ய பகவானும் எல்லாச் சோதிக் கிரஹங்களையும் இழுத்துக்கொண்டு இந்த மலையைப் பிரதக்ஷிணம் செய்கின்றான். பிறகு, திவாகரன் அஸ்தமயத்தை அடைந்து பிறகு ஸந்தியைக்கடந்து 3 பர்வஸந்திகளில் பலமுறை வடதிசையை அடைகிறான். பாண்டவ! எல்லாப் பிராணிகளுக்கும் நன்மையைச் செய்வதில் பற்றுதலுள்ள தேவனான அந்தச் சூரியன் கீழ்த்திசையைநோக்கினவனாக மீண்டும் ஸுமேருபர்வதத்தை அணுகிச் செல்லுகிறான். அப்படியே அந்தச் சந்திரபகவான் நக்ஷத்திரங்களோடுகூடக் காலங்களைப் பலவாறு பகுத்துக்கொண்டு பர்வஸந்திகளில் செல்லுகிறான். சந்திரனும் இவ்வண்ணம் இந்த மகாமேருவைத் தவறுமல் தாண்டிக் காலத்தைப் பலவாறு பகுத்துக்கொண்டு பர்வஸந்திகளில் எல்

1 வேறு பாடம்.

2 'இடமாகச் சென்றுசொண்டே ஜோதிச்சக்கர வேகத்தினால், சூயவனுடைய சக்கரத்தின் எதிர்த்துச் சுற்றும் எறும்புபோல வலமாகச் சுற்றிவருகிறார்கள் என்பது கருத்து' என்பது பழையவுரை.

3 582-ம் பக்கம் குறிப்பிற் காண்க.

லாப் பிராணிகளையும் பிரகாசிக்கச் செய்கின்றவனுகி மறுபடியும் ஸமுத்திரத்தை அடைகிறான். அப்படியே, இருளை நாசம்பண்ணுகிற ஆதித்யதேவன், கிரணங்களால் உலகத்தைப் பிரகாசிக்கச் செய்துகொண்டு, விசாலமான இந்த வழியில் சுற்றிவருகிறான். குளிர்காலங்களை உண்டுபண்ணவேண்டித் தென்திசையை அடைகிறான். அதனால், எல்லாப் பிராணிகளும் குளிர்காலத்தை அடைகின்றன. தென்திசையிலிருந்து திரும்புகின்ற அந்த ஸூர்யன் ஸ்தாவரங்களும் ஜங்கமங்களுமான பொருள்களுடைய தேஜஸுகளைத் தன் தேஜஸினால் நன்கு கவர்கிறான். அதனால், வேர்வையும் மனத்தளர்ச்சியும் சோம்பலும் உடல் தளர்ச்சியும் மனிதர்களை அடைகின்றன. பிராணிகளால் எப்பொழுதும் உறக்கமானது அடிக்கடி அனுபவிக்கப்படுகிறது. சூரியபகவான் இவ்வண்ணம் இந்த ஆகாசமார்க்கத்தில் சுற்றிக்கொண்டு பிரஜைகளைப் பிரகாசிக்கச்செய்கின்றவனுக மறுபடியும் மழைகளை உண்டுபண்ணுகிறான். மிக அதிகமான தேஜஸுள்ள ஸூர்யன் ஸுகத்தை உண்டுபண்ணுகிற மழைகளாலும் காற்றுக்களாலும் வெப்பத்தாலும் ஸ்தாவரங்களையும் ஜங்கமங்களையும் வளரச் செய்துகொண்டு மீண்டும் திரும்பி வருகிறான். பார்த்த! இவ்வண்ணம் இந்த ஸூர்யன் ஆலஸ்யமில்லாதவனுகக் காலசக்ரத்தில் ஸஞ்சரித்துக்கொண்டும் எல்லாப் பிராணிகளுடைய (ஆயுளையும்) அபஹரித்துக்கொண்டும் சுற்றிவருகிறான். பாண்டவ! இந்தச் சூரியனுடைய கதியானது ஓய்வில்லாதது. இவன் நிற்கிறதில்லை. பிராணிகளுடைய தேஜஸை எடுத்தே மறுபடியும் விடுகிறான். பார்த! எங்கும் வியாபித்திருக்கிற இந்த ஸூர்யன் எப்பொழுதும் எல்லாப் பிராணிகளுடைய ஆயுளையும் செய்கைகளையும் பகுத்துக்கொண்டு பகலையும் இரவையும் விநாடிகளையும் நாழிகைகளையும் உண்டுபண்ணுகிறான்' என்றுசொன்னர்.

நூற்றறுபத்தைந்தாவது அத்யாயம்.

ய க்ஷ யு த் த ப ர் வ ம். (தொடர்ச்சி.)

(இந்திரனிடம் அஸ்திரங்களைக் கற்றறிந்த அர்ஜுனன் ஸ்வர்க்கத்திலிருந்து கந்தமாதனமலையில் வசிக்கின்ற யுதிஷ்டிரர் முதலியவர்களிடம் திரும்பிவந்தது.)

அந்த மலையில் வாஸம்செய்பவர்களும் மஹாத்மாக்களும் கல்ல விரதங்களை அனுஷ்டிப்பவர்களும் அர்ஜுனனுடைய தர்ச

னத்தை விரும்புகின்றவர்களுமான அந்தப் பாண்டவர்களுக்கு ஆவலும் ஸந்தோஷமும் உண்டாயின. வீர்யத்துடன்கூடியவர்களும் மிகவும் சுத்தமான அந்தக்கரணத்தையுடையவர்களும் தேஜஸுள்ளவர்களும் ஸத்தியத்தையும் தைர்யத்தையும் பிரதானமாகக்கொண்டவர்களுமான அந்தப் பாண்டவர்களை நோக்கி நல்ல ப்ரீதியுள்ளவர்களான அனேக கந்தர்வர்களும் மஹரிஷிகளும் கூட்டம் கூட்டமாக வந்தார்கள். புஷ்பங்களும் பழங்களுமுள்ள மரங்களோடு சேர்ந்திருக்கின்ற அந்தச் சிறந்த மலையை அடைந்த மஹாரதர்களான பாண்டவர்களுக்கு ஸ்வர்க்கத்தை அடைந்த தேவகணங்களுக்கு மனத்தெளிவுண்டாவதுபோல நிகரற்ற மனத்தெளிவு உண்டாயிற்று. அவர்கள் மயில்களின் சப்தங்களாலும் அன்னங்களின் சப்தங்களாலும் ஒலியுள்ளவைகளாகச் செய்யப்பட்டவைகளும் புஷ்பங்களால் இறைக்கப்பட்டிருப்பவைகளுமான மிக்க காந்தியுள்ள மலையினுடைய சிகரங்களையும் தாழ்வரைகளையும் பார்த்துக்கொண்டு அதிக ஸந்தோஷத்தை அடைந்திருந்தார்கள். அந்தச் சிறந்த மலையில் மகிமை பொருந்திய குபேரனுலேற்படுத்தப்பட்டவைகளும் மரங்களின் நுனிகள் மறைக்கப்பட்டுக் கொடிகளடர்ந்த புதர்களுடன் கூடியவைகளும் [1] காதம்பங்களாலும் காரண்டவங்களாலும் [2] ஹம்ஸங்களாலும் அடையப்பட்டிருப்பவைகளும் தாமரைமலர்களால் நிறைக்கப்புட்டவைகளுமான ஓடைகளைக் கண்டார்கள். அழகு நிறைந்தவையும் மேடைகளோடு கூடியவையும் நன்றாக அமைக்கப்பட்டவையும் ரத்தினங்களால் நன்கு இழைக்கப்பட்டவையும் அரசனான குபேரனுடைய விளையாட்டிடங்கள்போல மனத்தை மகிழ்விக்கின்றவையுமான விளையாட்டிடங்களில் அவர்கள் வஸித்தார்கள். எப்பொழுதும் தவத்தைப் பிரதானமாகக்கொண்டு ஸஞ்சரிக்கின்ற பாண்டவர்கள் பலநிறங்களுள்ளவைகளும் நறுமணம் பொருந்தியவைகளுமான பெரிய மரங்களாலும் மேகங்களுடைய கூட்டங்களாலும் அடர்ந்திருக்கிற மலையினுடைய சிகரத்தை நினைக்கவும் சக்தியற்றவர்களானார்கள். [3] புருஷச்ரேஷ்டரே! அந்தச் சிறந்த மலையினுடைய ஒளியினாலும் அப்படியே மஹிமை பொருந்திய ஓஷதிகளின் பிரகாசத்தாலும் பகல்களுக்கும் இரவு

1 576-ம் பக்கம் 5-வது குறிப்பிற் காண்க.

2 வெண்மையான சிறகும் வட்டமான அங்கங்களுமுள்ள அன்னங்கள் 3 வேறுபாடம்.

களுக்கும் வேறுபாடொன்றும் உண்டாகவில்லை. அந்தப் பர்வ
தத்திலிருக்கின்றவர்களும் வீரர்களும் புருஷஸ்ரேஷ்டர்களுமான
அந்தப் பாண்டவர்கள், எந்த ஸூர்யனை ஆஸ்ரயித்து அக்னியா
னது ஸ்தாவரங்களையும் ஜங்கமங்களையும் (இராக்காலத்தில்) பிர
காசிப்பிக்கிறதோ அந்த ஸூர்யனுடைய உதயத்தையும் அஸ்த
மயத்தையும் அவ்விடத்திலிருந்து பார்த்தார்கள். அந்த வீரர்
களான பார்த்தர்கள் ஸூர்யனுடைய உதயாஸ்தமன ஸ்தானங்
களையும் அப்படியே உதயகிரியையும் அஸ்தகிரியையும் ஸூர்ய
னுடைய கிரண ஸமூகங்களால் சூழப்பட்டிருக்கிற திசைகளையும்
திக்கோணங்களையும் பார்த்து வேதாத்யயனத்தையும் இடை
யறாத கர்மானுஷ்டானத்தையுமுடையவர்களாகவும், தர்மத்தைப்
பிரதானமாகக்கொண்டவர்களாகவும், சுத்தமான விரதமுள்ளவர்க
ளாகவும், ஸத்யத்தில் நிலைபெற்றவர்களாகவும், ஸத்யத்தைக் கை
விடாதவனும் மகாரதனுமான அந்த அர்ஜுனனுடைய வரவை
எதிர்பார்க்கின்றவர்களாகவும், 'அஸ்திரங்களில் விசேஷமாகத்
தேர்ச்சியுற்ற தனஞ்சயனிடத்து சேர்க்கையைப் பெற்றவர்களாகி
நமக்கு இவ்விடத்திலேயே ஸந்தோஷமுண்டாகட்டும்' என்று
சிறந்த தங்களுடைய மனோரதங்களைச் சொல்லுகின்றவர்களாக
வும் தவத்தையும் யோகத்தையும் பிரதானமாக அனுஷ்டித்துக்
கொண்டிருந்தார்கள். மலையில் விசித்திரமான காடுகளைப் பார்த்துக்
கிரீடியை அடிக்கடி நினைக்கின்ற அந்தப் பாண்டவர்களுக்கு ஓர்
இரவும் பகலும் ஒரு வருஷத்தோடொப்பாகவே இருந்தன.
மகாத்மாவான அந்தஜிஷ்ணுவானவன் தெளம்யருடைய அனுமதி
யினால் சடையை அமைத்துக்கொண்டு சென்றபொழுதே, அவர்
களுக்கு ஸந்தோஷம் போய்விட்டது. அவனையே அடைந்த மன
முள்ள பார்த்தர்களுக்கு ஆனந்தம் எப்படி உண்டாகும்? யானை
போல நடப்பவனான அந்த அர்ஜுனன் பிராதாவான யுதிஷ்டிர
ருடைய கட்டளையினால் காம்யக வனத்தினின்று எப்பொழுது
சென்றானோ, அப்பொழுதே, அவர்கள் துக்கத்தால் துன்பமடை
விக்கப்பட்டவர்களானார்கள். பாரதரே! அப்படியே அஸ்திரங்
களைக் கற்கவேண்டி இந்திரனை அடைந்த அந்த ப்ரமேதவாகனனை
நினைக்கின்ற பாண்டவர்களுக்கு அந்த மலையில் 1 நீண்ட அந்தக்
காலமானது அரிதில்சென்றது. அர்ஜுனன் இந்திரனுடைய அரண்

1 'அப்பொழுது ஒரு மாதம் பிரயாஸத்தால் சென்றது' என்பது
வேறுபாடத்தின் பொருள்.

மணியில் ஐந்துவர்ஷகாலம் வாஸம்செய்து தேவராஜனிடத்தி னின்று ஆக்நேயமும் வாருணமும் ஸௌம்யமும் வாயவ்யமும் வைஷ்ணவமும் ஐந்திரமும் பாசுபதமும் பிராம்மமும் பாரமேஷ்ட் யமும் ப்ரஜாபதி, யமன், தாதா, ஸவிதா, த்வஷ்டா, வைஸ்ரவணன் ஆகிய இவர்களுடைய அஸ்திரங்களும் ஆகிய திவ்யாஸ்திரங்க ளனைத்தையும் இந்திரனிடத்தினின்று அடைந்து அவனை நமஸ் கரித்து அவனால் அப்பொழுது அனுமதி கொடுக்கப்பட்டு அவனைப் பிரதக்ஷிணமும் செய்து ப்ரீதியுடன்கூடியவனாகவும் ஸந்தோஷ முள்ளவனாகவும் கந்தமாதன வனையை வந்தடைந்தான்.

யக்ஷயுத்தபர்வம் முற்றிற்று.

நூற்றறுபத்தாருவது அத்யாயம்.

நிவாதகவசயுத்தபர்வம்.

(அர்ஜுனன் தான் ஸ்வர்க்கத்தில் வஸித்த விதத்தை யுதிஷ்டிரர் முத லியவர்களுக்குச் சுருக்கமாகச் சொல்லியது.)

பிறகு, ஒரு ஸமயத்தில் குதிரைகள் பூட்டப்பட்டதும் விரை வாக வந்ததும் மின்னலொளி போன்ற ஒளி பொருந்தியதுமான இந்திரனுடைய ரதத்தைப் பார்த்து, அர்ஜுனனை நினைத்துக் கொண்டிருக்கிற மகாரதர்களான பாண்டவர்களுக்கு ஸந்தோஷ முண்டாயிற்று. பிரகாசிக்கின்றதும் விரைவாக ஆகாசத்தைப் பிர காசிக்கச்செய்கின்றதும் மாதலியினால் நடத்தப்படுகின்றதுமான அந்த இந்திரனுடைய ரதமானது மேகத்தின் நடுவிலிருக்கிற பெரிய உற்கைபோலவும், ஜ்வலிக்கின்றதும் புகை இல்லாததுமான அக்னியின் ஜ்வாலைபோலவும் விளங்கியது. கிரீடியானவன் அந்த ரத்தில் வீற்றிருப்பவனாகக் காணப்பட்டான். மாலையை அணிந்த வனும் புதிய ஆபரணங்களைப் பூண்டவனும் வஜ்ராயுதத்தைத் தரித்த இந்திரனுடைய ப்ரபாவம் போன்ற ப்ரபாவமுள்ளவனு மான தனஞ்சயன் காந்தியினால் ஜ்வலித்துக்கொண்டு கந்த மாதன பர்வதத்தை நோக்கி வந்தான். கிரீடதாரியான அந்த அர் ஜுனன் மலையை அடைந்து அந்த மஹேந்திரனுடைய ரதத்தி னின்று இறங்கி முதலில் தௌம்யருடைய பாதங்களில் நமஸ் கரித்தும் அதற்குப் பிறகு அஜாதசத்ருவின் பாதங்களிலும்

விருகோதரனுடைய பாதங்களிலும் வந்தனம்செய்தும் மாத்ரீ புத்திரர்களால் வந்தனம் செய்யப்பட்டும் கிருஷ்ணனிய அடைந்து அவளுக்கு இன்சொல் கூறியும் பிராதாவான யுதிஷ்டிரரருகில் வணக்கத்துடன் நின்றான். அங்கே அளத்தற்கரிய மகிமையுள்ள அந்த அர்ஜுனனைக் சேர்க்கைபெற்று அந்தப் பாண்டவர் களுக்கு அதிக ஸந்தோஷம் உண்டாயிற்று. கிரீடதாரியான அவனும் அவர்களைப் பார்த்து யுதிஷ்டிரராஜரைப் புகழ்ந்து ஸந்தோஷித்தான். நமுசி என்கிற அஸுரனைக் கொன்ற இந்திரன் எந்தத் தேரிலேறித் தைத்யர்களுடைய ஏழு கூட்டங் களைக் கொன்றானே அந்த இந்திரனுடைய தேரினை அடைந்து தளராத மனமுள்ள பார்த்தர்கள் பிரதக்ஷிணம் செய்தார்கள். குருராஜபுத்திரர்களான அவர்கள், அதிக ஸந்தோஷமுள்ள வர்களாக, தேவராஜனுக்குச் செய்வதுபோல மாதலிக்குச் சிறந்த பூஜையைச் செய்தார்கள். உள்ளபடி, தேவர்களுடைய ஸமூக முழுமையையும்பற்றி அந்த மாதலியை முறைப்படி குசலப்ரச்னம் செய்தார்கள். அந்த மாதலியும் அந்தப் பார்த் தர்களுக்கு, தகப்பன் புத்திரர்களுக்கு உபதேசிப்பதுபோல உபதேசித்து மகிழ்ந்தான்; நிகரற்ற ஒளியுடன்கூடின ரதத் தோடு மறுபடியும் தேவராஜனிடம் சென்றான்.

இந்திரனுடைய குமாரனும் எல்லாப் பகைவர்களையும் அழிப்ப வனும் ஸாக்ஷாத் இந்திரன்போலப் பிரஸித்திபெற்றவனும் சிறந்த காந்தியுள்ளவனும் மகாத்மாவுமான அர்ஜுனன் அந்தச் சிறந்த தேவ ரதமானது சென்றபிறகு, இந்திரனால் கொடுக்கப்பட்டவை களும் அதிக விலைமதிப்புள்ளவைகளும் சிறந்த தோற்ற முள்ளவைகளும் சூரியனைப்போலப் பிரகாசிக்கின்றவைகளுமான பூஷணங்களைத் தன்னுடைய தேகத்தினின்று கழற்றி அன்புடன் ஸுதஸோமனுக்கு மாதாவான திரௌபதிக்குக் கொடுத்தான். பிறகு, அந்த அர்ஜுனன் அந்தக் குருபுங்கவர்களுக்கும் சூரி யனும் அக்னியும் போன்ற காந்தியுடையவர்களான பிராம்ம ணோத்தமர்களுக்கும் நடுவில் உட்கார்ந்து எல்லா விருத்தாந் தங்களையும் உள்ளபடி உரைத்தான். 'என்னால் இவ்வண்ண மாக இந்திரனிடத்தினின்றும் வாயுவினிடத்தினின்றும் ஸாக்ஷாத் சிவபிரானிடத்தினின்றும் அஸ்திரங்கள் கற்றுக்கொள்ளப்பட்டன. அப்படியே என்னுடைய நல்ல ஒழுக்கத்தாலும் ஸமாதியினாலும் இந்திரனோடு சேர்ந்த தேவர்கள் ஒன்றுகூடி என்விஷயத்தில்

பிரியத்தை அடைந்தார்கள்' என்று சொன்னேன். பரிசுத்தமான செய்கைகளுள்ள அந்தக் கிரீடியானவன் அவர்களுக்குத் தான் ஸ்வர்க்கத்துக்குச் சென்றதைச் சுருக்கமாகச் சொல்லி மாத்ரீபுத்திரர்களுடன்கூட அந்த இரவில் ஸுகமாக உறங்கினேன்.

நூற்றைம்பத்தேழாவது அத்யாயம்.

நிவாதகவசயுத்தபர்வம். (தொடர்ச்சி.)

(தம்பிமார்களுடனிருக்கிற யுதிஷ்டிரரிடம் இந்திரன் வந்து ஜயத்தைக் கொடுக்கிற ஆசீர்வசனத்தைக் கூறி மறுபடியும் ஸ்வர்க்கம் சென்றது.)

பிறகு, இரவு விடிந்தவுடன், எல்லாப் பிராதாக்களுடனும் சேர்ந்த தனஞ்சயன் தர்மராஜரான யுதிஷ்டிரரை வந்தனம் பண்ணினான். இந்த ஸமயத்திலேயே, ஆகாசத்தில் தேவர்களுடைய தான்குவித்தவாத்தியங்களின் தெருங்கிய ஒலியானது உண்டாயிற்று. பாரதரே! தேரினுடைய சக்கரத்தின் ஓசையும் மணியோசையும் இறைச்சியுண்ணும் மிருகங்கள் மற்ற மிருகங்கள் பறவைகள் இவற்றின் தனித்தனி ஒலியும் எங்கும் தோன்றின. குருவம்சத்தைத் தாங்குபவரே! சத்தம் வந்த வழியை நோக்கின அந்தப் பாண்டவர்கள் தேவர்களோடுகூட ஆகாயவழியால் வருகின்ற இந்திரனைப் பிரியத்துடன் பார்த்தார்கள். பகைவர்களை அடக்குகிற தேவராஜனை அந்தக்கந்தர்வர்களும் அப்படியே அப்ஸரஸுகளும் சூரியனுக்கு ஸமமான விமானங்களோடு தான்குபக்கத்திலும் தொடர்ந்துவந்தார்கள். பிறகு, பகைவர்பட்டணங்களை அழிப்பவனை அந்தத் தேவராஜன் குதிரைகள் பூட்டப்பட்டதும் பொன்னால் அலங்கரிக்கப்பட்டதும் மேகம்போல் ஒலிக்கின்றதுமான ரதத்தின் மீதேறி நிகரில்லாத காந்தியோடு ஜ்வலித்துக்கொண்டு பார்த்தர்களை நோக்கி விரைவாக வந்தான். இந்திரன் வந்து ரதத்திலிருந்து இறங்கினான். மகாத்மாவான அந்த இந்திரனைக் கண்டவுடனே, ஸ்ரீமானும் தர்மத்தால் பிரகாசிப்பவருமான யுதிஷ்டிரர் தம்பிமார்களுடன்கூடத் தேவராஜனை அவனை அடைந்தார். பிறகு, அதிகமான ஔதார்ய குணமுள்ள யுதிஷ்டிரர் அளவுகடந்த புத்தியுள்ளவனை இந்திரனைச் சாஸ்திரத்தில் சொல்லிய செய்கையினால் தக்கவாறு முறைப்படி பூஜித்தார். அதிக தேஜஸ்ஸுள்ள

தனஞ்சயனும் புரந்தரனை நமஸ்கரித்துத் தேவராஜனுன் அவனுடைய ஸமீபத்தில் வேலைக்காரன்போல வணக்கமுள்ளவனாக நின்றான். அதிக தேஜஸ்ஸுள்ள குந்தீபுத்திரரான யுதிஷ்டிரர் இந்திரனுடைய ஸமீபத்தில் வணக்கத்துடனிருப்பவனும் சடை கலாபத்தரித்தவனும் தவத்துடன்கூடியவனும் பாவமில்லாதவனுமான அந்தத் தனஞ்சயனை நேரில் பார்த்து அவனுடைய உச்சியை முகர்ந்து அந்தப் பல்குனனுடைய காட்சியினாலுண்டான அதிக ஸந்தோஷத்தால் கவரப்பட்டுத் தேவராஜனைப் பூஜித்து நிகரில்லாத பிரீதியுள்ளவரானார். புத்திமானான புரந்தரன், அவ்வாறு உறுதியான மனமுள்ளவரும் ஆனந்தத்தில் மூழ்கினவருமான அந்த யுதிஷ்டிரராஜரைப் பார்த்து, 'தேவ்தே! பாண்டுநந்தன! நீ இந்தப்பூமியை ஆளப்போகிறாய். குந்தீபுத்திர! நீ க்ஷேமமாக மீண்டு காம்யகவனத்திலுள்ள ஆச்ரமத்தை அடைவாயாக. அரசனே! பரிசுத்தனான அர்ஜுனனால் என்னிடத்திலிருந்து எல்லா அஸ்திரங்களும் அடையப்பட்டன. தனஞ்சயனால் பிரியமான காரியம் செய்யப்பெற்றவனாக இருக்கிறேன். இந்த அர்ஜுனன் மூன்று உலகங்களாலும் ஜயிக்க முடியாதவன்' என்று சொன்னான். இந்திரன் குந்தீபுத்திரரான யுதிஷ்டிரரைப் பார்த்து இவ்வண்ணம் உரைத்துவிட்டு மகரிஷிகளால் துதிக்கப்படுகின்றவனாகவும் ஸந்தோஷமுள்ளவனாகவும் ஸ்வர்க்கலோகத்திற்குச் சென்றான்.

கற்றறிந்தவனும் ஒரு வருஷம் பிரம்மசர்யத்துடனிருந்தவனும் நியமமுள்ளவனும் கநிமையான விரதமுள்ளவனுமான எந்த மனிதன் தேனைப்வரனுடைய மாளிகையிலிருப்பவர்களான பாண்டவர்களுக்கு இந்திரலோக சம்பந்தமான இந்தியைச் சொல்லுகிற இந்த அத்யாயத்தை மன அடக்கத்துடன் அத்யயனம் செய்வானோ அவன் துன்பமில்லாதவனும் நல்ல ஸுகமுள்ளவனுமாக நூறு வர்ஷகாலம் உயிர்வாழ்ந்திருப்பான்.

நூற்றறுபத்தேட்டாவது அத்யாயம்.

நிவாதகவசயுத்தபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் தனக்குச் சிவனிடமிருந்து யுத்தம் நடந்ததையும் பாசுபதாஸ்திரத்தைத் தானடைந்ததையும் சொல்லியது.)

இந்திரன் வந்தபடி திரும்பிச் சென்றவுடன், பீபத்ஸுவான அர்ஜுனன் பிராதாக்களோடும் திரௌபதியோடும் சேர்ந்து தர்மராஜ

ரைப் பூஜித்தான். நமஸ்கரிக்கின்ற அந்த அர்ஜுனனை உச்சியில் முகர்ந்து மிக்க மனக்களிப்புடன் ஸந்தோஷத்தால் தடுமாற்ற முள்ள வாக்கினால் அவனைப் பார்த்து, 'அர்ஜுன! இந்தக் கால மானது ஸ்வர்க்கத்தில் உனக்கு எவ்வாறு சென்றது? எவ்வாறு அஸ்திரங்கள் அடையப்பட்டன? தேவராஜனும் எவ்வாறு (உன்னால்) ஸந்தோஷப்படுத்தப்பட்டான்? பாண்டவ! அஸ்திரங்கள் உன்னால் நன்றாகக் கற்றுக்கொள்ளப்பட்டனவா? தேவராஜனும் ருத்திரரும் பிரீதியை அடைந்து உனக்கு அஸ்திரங்களைக் கொடுத் தார்களா? இந்திரனும் பிநாகத்தைத் தரித்திருக்கிற பகவானும் எவ்வண்ணம் உன்னால் பார்க்கப்பட்டார்கள்? எவ்விதம் அஸ்தி ரங்கள் அடையப்பட்டன? எவ்வாறு அவர்கள் உன்னால் ஆராதிக் கப்பட்டார்கள்? பகைவர்களை அடக்குகிறவனே! பகவானை இந்திரன், 'உன்னால் பிரியமான காரியம் செய்யப்பெற்றவனாக இருக்கிறேன்' என்று உன்னை நோக்கிச் சொன்னானே? அப்படிப் பட்ட எந்தப் பிரியமான காரியம் உன்னால் அவனுக்குச் செய்யப் பட்டது? மிக்க காந்தியுள்ளவனே! நான் இதை விஸ்தாரமாகக் கேட்க விரும்புகிறேன். தோஷமில்லாதவனே! மகாதேவரும் தேவராஜனும் எப்படி மகிழ்ந்தனர்? பகைவரை அடக்குபவனே! தனஞ்சய! இந்திரனுக்கு எந்தப் பிரியமானது உன்னால் செய்யப் பட்டதோ அஃதனைத்தையும் மிச்சமின்றி எனக்குச் சொல்வா யாக' என்று வினவினார்.

அர்ஜுனன், 'மஹாராஜரே! நான் எந்த விதியினால் தேவனான இந்திரனையும் பகவானான சங்கரரையும் கண்டேனோ அதனை ஸந்தோஷத்துடன் கேளும். அரசரே! பகைவரை அழிப்பவரே! உம்மால் உபதேசிக்கப்பட்ட அந்த வித்தையை அத்யயனம் செய்து உம்மால் கட்டளையிடப்பட்டுத் தவம்புரி வதற்காகக் கானகம் சென்றேன். பிறகு, காம்யகவனத்திலிருந்து ப்ருகுதுங்கத்தை அடைந்து தவம் செய்தேன். ஓர் இரவு அவ் விடத்தில் வஸித்து வழியில் ஒரு பிராம்மணனைக் கண்டேன். அவன் என்னைப் பார்த்து, 'குந்தீநந்தன! நீ எங்கே செல்லுகி றாய்? எனக்குச் சொல்வாயாக' என்று வினவினான். குருநந்த னரே! அவனுக்கு எல்லாவற்றையும் உள்ளபடி உரைத்தேன். ராஜ ஸ்ரேஷ்டரே! அந்தப் பிராம்மணன் என்னுடைய அந்த உண்மை யான வசனத்தைக் கேட்டு என்னைப் புகழ்ந்தான். அரசரே! என்னிடத்தில் அன்புள்ளவனுமானான். பிறகு, பிரீதியுடைய

வனன அந்தப் பிராம்மணன் என்னைப் பார்த்து, 'பாரத! தவத்தைச்செய்வாயாக. தவத்தைச் செய்கின்றவனன நீ விரைவில் தேவராஜனைப் பார்ப்பாய்' என்று சொன்னன். மகாராஜரே! பிறகு, நான் அந்தப் பிராம்மணனுடைய வசனத்தினல் பணிநிறைந்த மலையிலேறி ஒருமாதகாலம் கிழங்குகனிகளைச் சாப்பிட்டுக்கொண்டு தவம் புரிந்தேன். எனக்குத் தண்ணீரைப் பருகி இரண்டாவது மாதமும் சென்றது. பாண்டவர்களை மகிழ்விப்பவரே! பிறகு, மூன்றாவது மாதத்தில் ஆகாரமில்லாதவனாக இருந்தேன். நான்காவதுமாதத்தில் கைகளை உயரத் தூக்கிக்கொண்டு நின்றேன். அப்பொழுதும் எனக்குப் பலம் குறையவேயில்லை. அது ஆச்சர்யமாயிருந்தது. பிறகு, ஐந்தாவது மாதம் வந்து முதல் நாள் செல்லவே, பன்றிவடிவங்கொண்ட ஒரு பிராணியானது பூமியை மூக்கினல் கல்லிக்கொண்டும் கால்களால் பறித்துக்கொண்டும் வயிற்றினல் பூமியை நன்றாகத் தேய்த்துக்கொண்டும் அடிக்கடி [1] இங்குமங்கும் திரிந்துகொண்டும் என்பக்கத்தில் வந்தது. வேடவடிவம்கொண்டதும் வில்லும் அம்புகளும் கத்தியும் தரித்ததும் ஸ்த்ரீகளுடைய கூட்டங்களால் பின்தொடரப்பட்டதுமான வேறொரு பெரிய பூதமானது அப்பொழுது அந்தப் பன்றியைப் பின்தொடர்ந்து வந்தது. பிறகு, நான் வில்லையும் அப்படியே அக்ஷயமான பெரிய தூணீரங்களையும் எடுத்துக்கொண்டு, மயிர்க்கூச்சலை உண்டுபண்ணுகிற அந்தப் பன்றியைப் பாணத்தால் அடித்தேன். கோதமனே வில்லை வளைத்து இழுத்துப் பூமியை நடுங்கச் செய்துகொண்டு ஒரே ஸமயத்தில் அந்தப் பன்றியை மிக்க திடமாக அடித்தான். அந்த வேடன், என்னைப் பார்த்து, 'அரசனே! என்னல் முந்திக் குறிவைக்கப்பட்ட இந்தப் பன்றியானது, வேட்டை முறையை விட்டு, எதற்காக உன்னல் அடிக்கப்பட்டது? கூருள்ள அம்புகளால் உன்னுடைய கொழுப்பை அழிக்கிறேன். உறுதியாக நில்' என்று சொன்னன். பிறகு, பருத்த தேகமுள்ள அவன் சண்டைசெய்யும் விருப்பத்துடன் என்னை எதிர்த்தோடி வந்தான். பிறகு, அவன் மலைபோல நிற்கிற என்னைப் பெரியபாணங்களால் மிகமூடினன். நானும் அவன்மீது பெரிய அம்புமழையைப் பொழிந்தேன். பிறகு

---

1 'கெட்ட எண்ணத்துடனிருந்துகொண்டு எனினுமாம்' என்பது பழையவுரை.

நான் ஜ்வலிக்கின்ற வாயுள்ளவைகளும் வில்லில் பூட்டி இழுக்கப் பட்டவைகளுமான அம்புகளால், வஜ்ராயுதங்களால் மலையை அடிப்பதுபோல அவனைத் திருப்பியடித்தேன். அவனுடைய அந்த உருவமானது நூறு விதமும் ஆயிரம் விதமுமாயிற்று. நான் அவனுடைய அந்தச் சரீரங்களையும் அம்புகளால் அடித் தேன். பாரதரே! மறுபடியும் அந்தச் சரீரங்கள் ஒன்று சேர்ந்தவைகளாகக் காணப்பட்டன. மகாராஜரே! அவை களை நான் மறுபடியும் அடித்தேன். அரசரே! அவன் பெரிய தலையுள்ள சிறிய உருவமுள்ளவனும் சிறிய தலை யுள்ள பெரிய உருவமுள்ளவனுமாகி மறுபடியும் ஒன்று சேர்ந்து அப்பொழுது யுத்தத்தில் என்னை எதிர்த்தோடிவந்தான். பரத ஸ்ரேஷ்டரே! நான் அவனை யுத்தத்தில் அம்புகளால் தோற்கச் செய்யச் சக்தியற்றவனைபொழுது வாயுவைத் தெவதையாகக் கொண்ட மகாஸ்திரத்தை எடுத்தேன். வாயவ்யாஸ்திரத்தால் அவனை அடிப்பதற்குச் சக்தியற்றவனானேன். அது ஆச்சரியமா யிருந்தது. அந்த அஸ்திரமானது முறிய அடிக்கப்பட்டவுடன், எனக்குப் பெரிதும் ஆச்சரியமுண்டாகியது. மகாராஜரே! அந்தச் சமயத்திலும் நான் பெரிய அஸ்திரக்குவியலைப் பூதத்தின் மீது இறைத்தேன். பிறகு, ஸ்தூணகர்ணத்தையும் வாருணாஸ் திரத்தையும் [1] மிகுதியான அம்பு மழையையும் சலபாஸ்திரத்தை யும் அக்மவர்ஷத்தையும் ப்ரயோகித்துக்கொண்டு நான் எதிர்த் தேன். அரசரே! என்னுடைய அந்த எல்லா அஸ்திரங்களை யும் பலாத்காரத்தால் அந்தப் பூதம் விழுங்கிவிட்டது. அந்த அஸ்திரங்கள் விழுங்கப்பட்டவுடன், பெரிதான பிரம்மாஸ் திரத்தை நான் பிரயோகித்தேன். அதிலிருந்து நன்றாக ஜ்வலிக் கின்ற பாணங்களால் அவனை எல்லாப்பக்கங்களிலும் நிரப்பி னேன். மஹாஸ்திரத்தால் நிரப்பப்படுகிற அவன் அப்பொழுது விருத்தியடைந்தான். பிறகு, என்னால் உண்டுபண்ணப்பட்ட தேஜஸினால் மூன்று உலகங்களும் மிகவும் வாட்டப்பட்டன. ஒரு க்ஷணத்தில் திசைகளும் ஆகாயமும் எங்கும் நன்கு ஜ்வலிக்கும்படி செய்யப்பட்டன. மிக்கதேஜஸ்வியான அவன் அந்த அஸ்திரத் தையும் ஒரு கொடியிலே தணியச்செய்துவிட்டான். அரசரே! பிரம்மாஸ்திரமானது நாசம் பண்ணப்பட்டவுடன், என்னைப் பெரும்பயம் வந்தடைந்தது. பிறகு, நான் வில்லையும் அழகிய

1 வேறு பாடம்.

தூணீரங்களையும் எடுத்து விரைவாக அந்தப் பூதத்தை அடித்தேன். அது அந்த அஸ்திரங்களையும் விழுங்கியது. பூதத்தால் இந்த அஸ்திரங்களும் ஆயுதங்களும் பக்ஷிக்கப்பட்டவுடன், எனக்கும் அந்தப் பூதத்துக்கும் கைச்சண்டை நேர்ந்தது. முஷ்டிகளால் ஒருவனை ஒருவர் குத்திச் சண்டைசெய்து உள்ளங்கைகளால் மிக அடிக்கப்பட்டவர்களானேம். அந்தப் பூதமானது என்னைக் கீழே தள்ளியது. நானும் அந்தப் பூதத்தைப் பூமியில் தள்ளினேன். மகாராஜரே! பிறகு, ஆச்சரியமான அந்தப் பூதமானது உரக்கச் சிரித்துக் கொண்டு நான் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே, ஸ்திரீகளோடுகூட அந்த இடத்திலேயே மறைந்தது. மகாராஜரே! [1] பகவானும் தேவேஸ்வரருமான மஹேஸ்வரர், பிறகு, தம்முடைய முக்கியமான வேறு தேவரூபத்தை எடுத்துக்கொண்டு அற்புதமான வஸ்திரத்தை உடுத்தார்; கிராதவடிவத்தை விட்டுத் தமது திவ்ய ஸ்வரூபத்தை ஏற்றுக்கொண்டு அந்த இடத்தில் நின்றார். பிறகு, சிறந்த விருஷபத்தைக் கொடியாகவுடையவரும் அனேக ரூபங்களுள்ளவரும் பினாகத்தைத் தரித்தவரும் பகவானுமான அந்த ஸாக்ஷாத் பரமசிவன் [2] கையில் வில்லைப் பிடித்துக்கொண்டு நிற்பவராக அப்பொழுது காணப்பட்டார். பிறகு, சூலத்தைக் கையிலேந்தியவரான அந்தப் பரமசிவன் யுத்தத்தில் அப்படியே எதிரில் நிற்கின்ற எனக்கு எதிராகவந்து, 'பகைவனை வாட்டுபவனே! நான் ஸந்தோஷமுள்ளவனாக இருக்கிறேன்' என்று சொன்னார். பிறகு, ருத்ரபகவான் அந்த வில்லையும் அம்புகள் வற்றாத இரண்டு தூணிகளையும் எடுத்து எனக்கே கொடுத்தார். 'குந்தீநந்தன! உன்விஷயத்தில் ஸந்தோஷமுள்ளவனாக இருக்கிறேன். சொல்; உனக்கு நான் எதைச் செய்யக் கடவேன்? வீர! உன்னுடைய மனத்திலிருக்கிறதைச் சொல்வாயாக. வேண்டிய வரன்களை நீ வரிப்பாயாக. நான் அவைகளைக் கொடுக்கிறேன். சாவாமையைத் தவிர மற்ற உன்மனத்திலுள்ள விருப்பத்தைச் சொல்வாயாக' என்று சொன்னார். பிறகு, அஸ்திரங்களில் மனம் வைத்த நான் கைகூப்பி ஈஸ்வரரைத் தலையினால் வணங்கி, பிறகு, 'பகவானே தேவரீர் என் விஷயத்தில் பிரஸன்னராயிருந்தால் தேவர்க

---

1 இரட்டித்தலால் ஒரு சொல் விடப்பட்டது.

2 'உமையை ஸஹாயமாகக்கொண்டு ஸர்ப்பங்களைத் தரித்து' என்பது வேறு பாடத்தின் பொருள்.

னிடம் எந்த அஸ்திரங்களுண்டோ அவைகளை நான் அறிவதற்கு விரும்புகிறேன். இதுதான் என்னல் விரும்பப்பட்ட வரன்' என்று சொன்னேன். பகவானை முக்கண்ணரும் என்னை நோக்கி, 'அவைகளை நான் உனக்குக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்' என்றே சொன்னர். பிரபுவான அந்தப் பரமசிவன், 'பாண்டவ! என்னுடையதான ரௌத்ராஸ்திரமானது உன்னை அடையப் போகிறது' என்று சொல்லிப் பிரியத்துடன் பாசுபதாஸ்திரத்தை எனக்குக் கொடுத்தார்; மகாதேவர் சாஸ்வதமான அஸ்திரத்தை எனக்குக் கொடுத்துவிட்டு, 'அர்ஜுன! இந்த அஸ்திரமானது எவ்விதத்தாலும் மனிதர்கள்மீது பிரயோகிக்கத்தக்கதாகாது. அப்படி அல்பவீர்யமுள்ளவர்களிடம் பிரயோகிக்கப்பட்டால் இந்த அஸ்திரமானது உலகத்தையே எரித்துவிடும். தனஞ்சய! (பகைவர்களால்) மிகத்துன்பப்படுத்தப்படுகின்றவனல் இது பிரயோகிக்கத்தக்கதாகும். அஸ்திரங்கள் முழுமையும் அற்றபோது பிரயோகிப்பாயாக' என்று சொன்னர். பிறகு, விருஷபத்வஜர் பிரஸன்னரானவுடன், தடையற்றதும் திவ்யமானதும் எல்லா அஸ்திரங்களையும் தடுப்பதும் பகைவர்களை அழிப்பதும் பகைவர்களுடைய சேனையை அறுப்பதும் அடையமுடியாததும் தேவர்களாலும் தானவர்களாலும் ராக்ஷஸர்களாலும் தாங்கமுடியாததுமான பாசுபதாஸ்திரமானது உருவமெடுத்துக்கொண்டு என்னுடைய பக்கத்தில் வந்து நின்றது. நான் அந்தப் பரமேஸ்வரரால் அனுமதி கொடுக்கப்பட்டு அவ்விடத்திலேயே உட்கார்ந்தேன். மஹாதேவர் நான் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே அந்த இடத்திலேயே மறைந்தார்.

நூற்றறுபத்தோன்பதாவது அத்யாயம்.

நிவாதகவசயுத்தபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் நான் இந்திராலோகத்திற்குப் போனதையும் அங்கே வஸித்ததையும் இந்திரனிடத்தினின்று அஸ்திரங்களைப் பெற்றதையும் சொல்லியது.)

பாரதரே! பிறகு, தேவதேவரும் மஹாத்மாவுமான முக்கண்ணருடைய அருளால் பிரீதியுள்ளவனான நான் அந்த இடத்தில் அந்த இரவு முழுதும் வஸித்தேன். அந்த இரவு கழிந்து விடிந்த

வுடன், நான் காலையில் செய்யுத்தக்க வைதிக கிரியைகளைச் செய்து முடித்துவிட்டு, எந்தப் பிராம்மணஸ்ரேஷ்டனை முந்திப் பார்த்தேனே அந்தப் பிராம்மணஸ்ரேஷ்டனையே பார்த்தேன். பாரதரே! 'நான் பகவானை மகாதேவரை அடைந்தேன்' என்று அனைத்தையுமே அவனுக்கு நடந்தபடி தெரிவித்தேன். ராஜஸ்ரேஷ்டரே! ப்ரீதியை அடைந்த அந்த ப்ராம்மணோத்தமன் என்னைப்பார்த்து, 'ஒருவராலும் பார்க்கப்பட்டிராத மகாதேவர் உன்னால் பார்க்கப் பட்டார். தோஷமற்றவனே! யமன் முதலிய எல்லா லோகபாலர்களுடனும் சேர்ந்திருக்கிற தேவேந்திரனைப் பார்ப்பாய். அவன் உனக்கு அஸ்திரங்களைக் கொடுப்பான்' என்று சொன்னான். அரசரே! ஸூர்யனுக்குஸமமான அந்தப்ராம்மணன் இவ்வண்ணம் என்னைப் பார்த்துச் சொல்லி அடிக்கடி என்னைத் தழுவிக்கொண்டு தன் னிஷ்டப்படி சென்றான். பகைவரைக் கொல்பவரே! பிறகு, அந்தப் பகலின் பிற்பாதியில் பரிசுத்தமான காற்றானது இந்த உல கத்தை மறுபடியும் புதிதாகச் செய்கின்றதுபோல வீசியது. தேவ லோகத்திலுள்ள நறுமணம்பொருந்திய புதியமலர்கள் ஸமீபத்தில் இமயமலையைச் சார்ந்த தாழ்வரையில் தோன்றின. எல்லாப்பக்கங் களிலும் நல்ல சப்தத்துடன்கூடின தேவலோகத்திலுள்ள நான்கு வித வாத்தியங்களும் இந்திரஸம்பந்தமானவையும் மனத்தை மகிழ்விப்பவையுமான ஸ்தோத்திரங்களும் கேட்கப்பட்டன. அப் ஸரஸ்களின் கூட்டங்களும் அப்படியே கந்தர்வர்களின் கூட்டங் களும் தேவதேவனுக்கு எதிரில் எல்லாவிதமான கானங்களையும் பாடின. இந்திரனுடைய வேலைக்காரர்களும் தேவராஜனுடைய அரண்மனையில் வஸிக்கிற இந்திராணி ஜயந்தன் முதலியவர்களும் தேவர்களுடைய கூட்டங்களும் விமானங்களோடு அந்த இடத்தில் வந்தனர். பிறகு, இந்திரன் இந்திராணியுடன்கூடினவனாக ரதத்தில் பூட்டப்பட்டவையும் நன்றாக அலங்கரிக்கப்பட்டவையும் பசுமை நிறமுள்ளவையுமான குதிரைகளுடனும் எல்லாத் தேவர்களுடனும் அப்பொழுது அங்குவந்தான். அரசரே! இதே ஸமயத்தில் மணி தர்களை வாகனமாகக்கொண்ட குபேரன் ஒப்பற்ற காந்தியுடன் எனக்குக் காட்சிகொடுத்தான். தென்திசையில் நிலைபெற்றிருக்கிற யமனையும் தன்தன் ஸ்தானத்திலிருக்கிற வருணனையும் தேவராஜ னையும் பார்த்தேன்.

மஹாராஜரே! அந்தத் தேவஸ்ரேஷ்டர்கள் எனக்கு இன் சொற்கூறி, 'ஸவ்யஸாசியே! நேரில் நிற்கின்ற லோகபாலர்களான

எங்களை நன்றுகப்பார். தேவகார்யத்தின்பயன் கைகூடும்பொருட்டுச் சங்காரை நீ கண்டவனுக இருக்கிறாய். நீ எங்களிடத்தினின்றும் அஸ்திரங்களெல்லாவற்றையும் பெற்றுக்கொள்' என்று சொன்னார்கள். பிறகு, நான் பரிசுத்தனுக இருந்துகொண்டு தேவப்ரேஷ்டர்களைத் தண்டனிட்டு அப்பொழுது பலவித மஹாஸ்திரங்களைப் பெற்றுக்கொண்டேன். பாரதரே! அஸ்திரங்களைப் பெற்றுக்கொண்ட நான், பிறகு, தேவர்களால் அனுமதி கொடுக்கப்பட்டவனேன்.. பகைவர்களை அடக்குகிறவரே! பிறகு, தேவர்களனைவரும் வந்தவண்ணம் திரும்பிச் சென்றார்கள். அதிக கீர்த்தியுள்ள தேவனனை இந்திரபகவானும் என்னை நல்ல ஒளிபொருந்திய தேரிலேற்றினைத்துக்கொண்டு புன்சிரிப்புடன், 'தனஞ்சய! இங்கு வருவதற்குமுந்தியே நான் உன்னை அறிவேன். பரதஸ்ரேஷ்டனே! நானே இதற்குப்பின்னும் உன்னைப் பார்ப்பேன். முன்பு உன்னுல் தீர்த்தங்களில் அடிக்கடி ஸ்நானம் செய்யப்பட்டிருக்கிறது. பாண்டவ! இந்தப் பெரிய தவமும் செய்யப்பட்டது. ஸ்வர்க்கத்தைச் சீக்கிரம் நீ அடையப்போகிறாய். ஒருவராலும் அனுஷ்டிக்கமுடியாததும் கோரமானதும் உன்னுடைய அஸ்திரங்களுக்கும் தவத்துக்கும் வலிமையை உண்டுபண்ணக்கூடியதுமான உத்தமமானதவத்தை நீ மறுபடியும் செய்வாயாக. பகைவர்களை நாசம் செய்பவனே! நீ ஸ்வர்க்கத்துக்கு அவஸ்யம் வரவேண்டும். உன்னுடைய கட்டளையினல் மாதலியானவன் உன்னை ஸ்வர்க்கத்தை அடையும்படி செய்வான். பாண்டவஸ்ரேஷ்டனே! ஒருவராலும் செய்யமுடியாத தவத்தைச் செய்துகொண்டு நீ இங்கிருப்பவனுக மஹாத்மாக்களான தேவர்களாலும் முனிவர்களாலும் அறியப்பட்டிருக்கிறாய்' என்று சொன்னன்.

பிறகு, நான் இந்திரனை நோக்கி, 'பகவானே! என் விஷயத்தில் அனுக்ரஹம் செய்யவேண்டும். தேவராஜனே! நான் உன்னை அஸ்திரங்களைக் கற்பதற்காக ஆசார்யனுக வரிக்கிறேன்' என்று சொன்னேன். இந்திரன், 'ஐயா! பகைவர்களைத் தவிக்கச்செய்பவனே! குரூரமான காரியங்களைச்செய்கிற அஸ்திரங்களை அறிந்தவனுவாய். பாண்டவ! எதற்காக நீ அஸ்திரங்களை அடைவதற்கு விருட்புகிறாயோ அந்த விருப்பத்தை அடைவாயாக' என்று சொன்னன். பிறகு, நான், 'பகைவரைக் கொல்பவனே! மற்ற அஸ்திரங்கள் முறிய அடிக்கப்பட்டு வீணுகப்போனலொழியத் திவ்யாஸ்திரங்களை மனிதர்கள் மீது பிரயோகிக்கமாட்டேன். தேவர்களுக்கு அதிபதியே! அந்தத்

திவ்யாஸ்திரங்களை எனக்குக் கொடு. தேவர்களுள் சிறந்தவனே! பிறகு, அஸ்திரங்களால் ஜயிக்கப்பட்ட உலகங்களை அடையக் கடவேன்' என்று வேண்டினேன். இந்திரன், 'தனஞ்சயனே! உன்னைப் பரீக்ஷிப்பதற்காக என்னால் இந்தவாக்கியமானது உரைக்கப்பட்டது. என்னுடைய புத்திரனான உனக்கு இந்த வசனமானது மிகப் பொருத்தமுள்ளது. பாரத! என்னுடைய மாளிகையை அடைந்து என்னிடத்தினின்று எல்லா அஸ்திரங்களையும் கற்றுக் கொள். குருவம்சத்தைத் தாங்குபவனே! வாயுவினிடத்தினின்றும் அக்னியினிடத்தினின்றும் வஸுக்களிடத்தினின்றும் மருத்துக்களுடையகணத்துடன் கூடின வருணனிடத்தினின்றும் அடையத்தக்க அஸ்திரங்களையும் பிரம்மாஸ்திரத்தையும் காந்தர்வாஸ்திரத்தையும் நாகாஸ்திரத்தையும் ராக்ஷஸாஸ்திரத்தையும் விஷ்ணுவைத் தேவதையாகக்கொண்ட எல்லா அஸ்திரங்களையும் அப்படியே நிருருதியைத் தேவதையாகவுடைய அஸ்திரங்களையும் என்னிடத்திலுள்ள மற்ற எல்லா அஸ்திரங்களையும் அறிந்து கொள்வாயாக' என்று இவ்வண்ணம் என்னைப் பார்த்து உரைத்து அந்த இடத்திலேயே மறைந்தான்.

மேலும்! பிறகு, குதிரைகள் பூட்டப்பட்டதும் தேவலோகத்ததும் மிக ஆச்சர்யமானதும் புண்யமானதும் மாதலியினால் நடத்தப்பட்டதுமான இந்திரனுடைய ரதம் அருகில். வந்திருப்பதைப் பார்த்தேன். லோகபாலர்கள் சென்றபிறகு, மாதலியானவன் என்னைப்பார்த்து, 'மகாதேஜஸுடன் கூடியவனே! தேவராஜனான இந்திரன் உன்னைப் பார்க்க விரும்புகிறான். மிக்க புஜபலமுள்ளவனே! நீ நன்றாக ஸித்திபெற்று நிகரற்ற காரியத்தைச் செய்வாயாக. நல்வினையைச் செய்தவர்களாலடையத்தக்க உலகங்களைப்பார். சரீரத்துடனே ஸ்வர்க்கத்தை அடைவாயாக. பாரத! ஆயிரம் கண்களையுடையவனான தேவராஜன் உன்னைப் பார்க்க விரும்புகிறான்' என்று சொன்னான். மாதலியினால் இவ்வாறு சொல்லப்பட்ட நான் இமயமலையினிடம் விடைபெற்றுக் கொண்டு ஒப்பற்ற ரதத்தை வலமாகச்சுற்றிவந்து அதிலேறினேன். குதிரைகளின் இயல்புகளை உள்ளபடி அறிந்தவனும் மிக்க ஸமர்த்தனும் ஸாரதியுமான அந்த மாதலியானவன் வாயுவேக மனோவேகமுள்ள குதிரைகளை ஓட்டினான். பிறகு, அந்த ஸாரதியானவன் (ரதத்தில்) உறுதியாக இருக்கிற என்னுடைய முகத்தைப் பார்த்தான். அரசரே! ரதமானது அப்படிச் சுழலவே, ஆச்சர்யமடைந்

தவனுக என்னைப் பார்த்து, 'அர்ஜுன! திவ்யரதத்தில் வீற்றிருக்கிற நீ இருந்த இடம் விட்டுச் சிறிதும் அசையாமலிருக்கிறுயென்னும் மிக்க ஆச்சரியமான உன்னுடைய இந்த இருப்பானது இப்பொழுது எனக்கு விசித்ரமாகத் தோன்றுகிறது. பரதஸ்ரேஷ்டனே! குதிரைகள் முதலில் தாவும்போது இந்தரதத்தில் தேவராஜன்கூட அசைகின்றதை நான் தினமும் கண்டிருக்கிறேனன்றே? குருக்களைத் தாங்குகிறவனே! நீயோ சுழலுகின்ற இந்த ரதத்தில் அசைவற்றவனுகவே இருக்கிறுய். உன்னுடைய தான இதெல்லாம் இந்திரனுடைய செய்கையை மீறி இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது' என்று சொன்னேன். வேந்தரே! பாரதரே! மாதலியானவன் இவ்வண்ணமுரைத்து ஆகாயத்தில் பிரவேசித்து, தேவர்களுடைய மாளிகைகளையும் விமானங்களையும் எனக்குக் காண்பித்தான். புருஷஸ்ரேஷ்டரே! குதிரைகளுடன் பூட்டப்பட்டிருக்கிற அந்த ரதமானது அந்த இடத்தினின்று மேலே எழும்பிச்சென்றது. ரிஷிகளும் தேவதைகளும் பூஜித்தார்கள். பிறகு, விரும்பினபடி செல்லக்கூடிய தேவரிஷிகளுடைய உலகங்களையும் அளவுகடந்த சக்தியுள்ள கந்தர்வர்கள் அப்ஸரஸுகள் இவர்களுடைய பிரபாவத்தையும் பார்த்தேன். இந்திர ஸாரதியான மாதலியானவன் நந்தனம் முதலிய தேவர்களுடைய வனங்களையும் உபவனங்களையும் எனக்குச் சீக்கிரமாகக் காண்பித்தான். பிறகு, தேவலோகத்திலுண்டானவையும் இஷ்டமான பலன்களைக் கொடுப்பவையுமான மரங்களாலும் ரத்தினங்களாலும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருக்கிற இந்திரனுடையவாஸஸ்தானமான அமராவதியைக் கண்டேன். வேந்தரே! அந்த நகரியைச் சூரியன் [1] காய்கிறதில்லை. அங்கே சீதோஷ்ணங்களில்லை; வாட்டமில்லை. அந்த இடத்தில் ரஜோகுணமானது ஒருவரையும் துன்பப்படுத்துகிறதில்லை; மூப்பும் இல்லை. அந்த இடத்தில் சோகமாவது எளிமையாவது நிறம்மாறுதலாவது காணப்படுகிறதில்லை. மகாராஜரே! பகைவரை நொறுக்குபவரே! தேவர்களுக்குக் களைப்பு இல்லை. பிரஜைகளுக்கு நாதரே! அந்த இடத்தில் கோபமாவது லோபமாவது அமங்களமாவது இல்லை. வேந்தரே! தேவர்களுடைய வாஸஸ்தானமான ஸ்வர்க்கத்தில் அந்தத் தேவர்கள் நித்யம் மகிழ்ச்சியுள்ளவர்களாக இருக்கிறார்கள். அந்தஸ்வர்க்கத்தில் மரங்கள் எப்பொழுதும் புஷ்பங்களும் பழங்களுமுள்ளவை

1 வேறு பாடம்.

களாகவும் பசுமையான இலைகளுள்ளவைகளாகவும் இருக்கின்றன. பலவிதமான ஓடைகள் தாமரைமலர்களோடும் ஸௌகந்திகமலர்களோடும் என்றும் சேர்ந்திருக்கின்றன. அந்த இடத்தில் குளிர்ந்ததும் நல்ல வாஸனையுள்ளதும் 1 உற்சாகத்தைத் தருவதும் பரிசுத்தமுமான காற்று வீசிற்று. தரையானது எல்லா ரத்தினங்களாலும் பலநிறமுள்ளதாகவும் புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டதாகவுமிருக்கிறது. பல மிருகங்களும் பட்சிகளும் அழகியவைகளாகவும் இனிய குரலுள்ளவைகளாகவுமிருக்கின்றன. அந்த இடத்தில் அனேக தேவர்கள் விமானங்களால் ஸஞ்சரிப்பவர்களாகக் காணப்படுகிறார்கள். பிறகு, வஸுக்களையும் ருத்திரர்களையும் ஸாத்தியர்களையும் மருத்கணங்களுடன் கூடின தேவர்களையும் அச்வினீதேவர்களையும் கண்டேன். அவர்களனைவரையும் பூஜித்தேன். அவர்கள் என்னை, 'வீர்யத்தோடும் கீர்த்தியோடும் தேஜஸோடும் பலத்தோடும் அஸ்திரங்களோடும் யுத்தத்தில் விஜயத்தோடும் சேரக்கடவை' என்று அனுக்ரஹித்தார்கள். திவ்யமானதும் தேவர்களாலும் கந்தர்வர்களாலும் பூஜிக்கப்பட்டதுமான அந்த நகரியில் பிரவேசித்து ஆயிரம்கண்ணனான தேவராஜனைக் கைகூப்பித் துதித்தேன். கொடையாளிகளுள் சிறந்தவனான இந்திரன் மகிழ்ந்து எனக்குத் தன்னுடைய ஆஸனத்தில் பாதியைக் கொடுத்தான். இந்திரன் நன்மதிப்புடன் என்னுடைய சரீராவயவங்களைத் தடவிக்கொடுத்தான். பாரதரே! நான் அந்த ஸ்வர்க்கத்தில் மிக்க உதாரர்களான தேவர்களோடும் கந்தர்வர்களோடும் கூடி அஸ்திரங்களை அறிவதற்காக அவற்றைக் கற்றுக்கொண்டு ஸ்வர்க்கத்தில் வஸித்தேன். விச்வாவஸுவின் குமாரனான சித்திரஸேனன் எனக்குத் தோழனானான். அரசரே! அவன் என்னைக் காந்தர்வவித்தை அனைத்தையும் கற்றுக்கொள்ளும்படி செய்தான். அரசரே! நான் அஸ்திரங்களைக் கற்றுக்கொண்டும் நன்கு கௌரவிக்கப்பெற்றும் விரும்பிய எல்லாவற்றுடனும் சேர்ந்தும் ஸ்வர்க்கத்தில் இந்திரனுடைய அரண்மனையில் ஸுகமாக வஸித்தேன். பரதஸ்ரேஷ்டரே! பாரதரே! பாட்டொலியையும் சிறந்த தூர்யவாத்தியங்களின் முழக்கத்தையும் கேட்டுக்கொண்டும் சிறந்த அப்ஸரஸுகள் நடிப்பதைப் பார்த்துக்கொண்டும் அவை அனைத்தையும் அலட்சியம் செய்யாமல் உள்ளபடி புருஷார்த்தமென்று கருதிக் கிரகித்துக்கொண்டும் அஸ்திரங்களிலேயே நிலைபெற்றிருந்

1 வேறு பாடம்.

தேன். பிறகு, பிரபுவான ஆயிரங்கண்ணனை இந்திரன் எனக்கு அஸ்திரங்களிலுள்ள அந்த விருப்பத்தால் ஸந்தோஷமடைந்தான். வேந்தரே! ஸ்வர்க்கத்தில் வசிக்கின்ற எனக்கு இந்தக் காலம் இவ்விதம் சென்றது.

நூற்றெழுபதாவது அத்யாயம்.

நிவாதகவசயுத்தபர்வம். (தொடர்ச்சி.)

(அஸ்திரவித்தை கற்று முடிந்தவுடன், நிவாதகவசர்களுடைய வதத்தைக் குருதக்ஷிணையாகக் கேட்ட இந்திரனுடைய விருப்பத்தை நிறைவேற்றுதற்காக அர்ஜுனன் புறப்பட்டது.)

பிறகு, அதிக நம்பிக்கைகொண்ட மஹேந்திரன் அஸ்திரங்களைக் கற்றறிந்தவனென என்னை இருகைகளாலும் தலையில் நன்றாகத் தொட்டுக்கொண்டு, 'அர்ஜுன! நீ இப்பொழுது தேவர்களுடைய கூட்டங்களாலும் யுத்தத்தால் ஜயிக்கமுடியாதவன். அவ்வாறிருக்க, மானிடலோகத்தில் திவ்யாஸ்திரப்பயிற்சி பெறுத மனிதர்களால் எவ்வாறு ஜயிக்கத்தக்கவனுவாய்? நீ அளத்தற்கரிய சக்தியுள்ளவன். ஒருவராலும் ஜயிக்க முடியாதவன். அப்படியே, யுத்தங்களில் நிகரில்லாதவன். நீ யுத்தத்தில் தேவாஸுரர்களனைவராலும் ஜயிக்க முடியாதவனன்றோ?' என்று சொன்னன். பிறகு, மீண்டும், மகேந்திரன் மிக்க புளகமுற்று, 'வீர! அஸ்திர யுத்தத்தில் உனக்கு ஸமானனுக ஒருவனும் இரான். கௌரவர்களுள் சிறந்தவனே! நீ எப்பொழுதும் அஜாக்கிரதை இல்லாதவன்; ஸாமர்த்தியமுள்ளவன்; உண்மை பேசுகிறவன்; இந்திரியங்களை அடக்கினவன்; பிராம்மணர்களுக்கு நன்மையைச் செய்பவன்; அஸ்திரங்களை நன்கு அறிந்தவனுகவுமிருக்கிறாய்; சூரனுகவுமிருக்கிறாய். பார்த்த! உன்னால் பதினைந்து அஸ்திரங்கள் நன்கு அடையப்பட்டன. ஐந்துலிகளால் உனக்கு ஸமானனுன மனிதன் இல்லை. தனஞ்சய! நீ பிரயோகிப்பதையும், திருப்பியழைப்பதையும், திரும்பத் திரும்பப் பிரயோகித்துத் திருப்பியழைப்பதையும், [1] பிராயச்சித்தத்தையும் பகைவனுடைய அஸ்திரத்தினுலடிக்கப்

1 'அஸ்திராக்கினியினுல் எரிக்கப்பட்ட குற்றமற்றவர்களை மறுபடி பிழைப்பித்தல்' என்பது பழையவுரை.

பட்ட தன்னுடைய அஸ்திரத்தை மறுபடி மிகப் பிரகாசிக்கச் செய்தலையும் எல்லாவித்தாலும் அறிந்திருக்கிறாய். பகைவர்களைத் தவிக்கச் செய்பவனே! நீ குருதக்ஷிணை கொடுப்பதற்குக் காலம் இதோ சேர்ந்திருக்கிறது. அதைச் செய்வதற்கு நீ உறுதி கூறுவாயாக. நான் பிறகு செய்யவேண்டிய காரியத்தைத் தெரிவிப்பேன்' என்று சொன்னான்.

வேந்தரே! பிறகு, நான் தேவராஜனைப் பார்த்து, 'என்னால் எது செய்வதற்கு ஸாத்தியப்படுமோ அந்தக் காரியத்தைச் செய்யப்பட்டதென்றே நீ தெரிந்துகொள்' என்னும் இந்த வசனத்தைச் சொன்னேன். வேந்தரே! பிறகு, பலனையும் விருத்ரனையும் கொன்றவனை இந்திரன் உரக்கச் சிரித்து என்னைப்பார்த்து, 'மூவுலகங்களிலும் உனக்குச் செய்யத்தகாதது ஒன்றுமே இல்லை. ஒத்த உருவமும் பலமும் ஒளியுமுள்ளவர்களும் பிரசித்திபெற்றவர்களுமான எனக்குப் பகைவர்களுமான நிவாதகவசர்களென்கிற மூன்றுகோடி அஸுரர்கள் ஸமுத்திரத்தின் நடுவை அடைந்து பிரவேசிக்கமுடியாத இடத்தில் வசிக்கின்றார்கள். குந்தீநந்தன! அந்த இடத்திலிருக்கிற அவர்களைக் கொல்வாயாக. அது உன்னுடைய குருதக்ஷிணையாகும்', என்று சொன்னான். பிறகு, இந்திரன் மாதலியுடன்கூடியதும் மயில்நிறம்போன்ற நிறமுள்ள மயிர்களையுடைய குதிரைகள் பூட்டியதும் அதிக ஒளிபொருந்தியதுமான திவ்யரதத்தை எனக்குக் கொடுத்தான். என்னுடைய தலையில் இந்த உத்தமமான கிரீடத்தையும் சூட்டினான். தன் உருவத்திற்குத் தகுந்த அங்கபூஷணத்தையும் உடைக்க முடியாததும் தொடுதற்கினியதும் அழகியதுமான உத்தமமான இந்தக் கவசத்தையும் கொடுத்தான். பழையதாகாத இந்த நாண்கயிற்றையும் காண்டீவத்தில் நன்றாகக் கட்டிக்கொள்ளும்படி செய்தான். பிறகு, முற்காலத்தில் தேவராஜன் எந்தரதத்தால் விரோசனனுடைய புத்திரனை பலியை ஜயித்தானோ அப்படிப்பட்ட பிரகாசிக்கின்ற ரதத்தோடு நான் யுத்தத்திற்காகச் சென்றேன். பிரஜைகளுக்கு அதிபதியே! பிறகு, அந்த ரதகோஷத்தால் யுத்த யாத்திரையை அறிவிக்கப்பட்டவர்களான எல்லாத் தேவர்களும் என்னைத் தேவராஜனென்று எண்ணிவந்தார்கள். அவர்கள் என்னைப்பார்த்து, 'பல்குன! நீ என்ன செய்யப்போகிறாய்?' என்று கேட்டார்கள். நான் அவர்களைப்பார்த்து நடந்ததைச் சொன்னேன். 'யுத்தத்தில் இதைச் செய்யப்போகிறேன். மகாபாக்கியசாலிகளே! நிவாத

கவசர்களுடைய வதத்தை விரும்பிப் புறப்பட்டவனுக என்னைத் தெரிந்துகொள்ளுங்கள். தோஷமில்லாதவர்களே! எனக்கு மங்களத்தை விரும்புங்கள்' என்று சொன்னேன். பூமிக்குத் தலைவரே! பிறகு, பிரஜாபதிகளான அந்தத்தேவர்கள் சிறந்தவாக்குகளால் தேவனான புரந்தரனைத் துதிப்பதுபோல என்னைத் துதித்தார்கள். 'இந்திரன் இந்த ரதத்தால் யுத்தத்தில் சம்பரனையும் நமுசியையும் பலனையும் விருத்ரனையும் பிரஹ்லாதனையும் நரகனையும் ஜயித்தான். இந்திரன் யுத்தத்தில் இந்த ரதத்தால் ஆயிரக் கணக்காகவும் பதினாயிரக்கணக்காகவும் [1] அர்ப்புதக் கணக்காகவுமுள்ள அஸுரர்களையும் ஜயித்தான். குந்தீநந்தன! நீயும் இந்த ரதத்தால் முற்காலத்தில் பிரபுவான இந்திரன்ஜயித்ததுபோல யுத்தத்தில் பராக்கிரமத்தை வெளியிட்டு நிவாதகவசர்களை ஜயிப்பாய். எதனால் அஸுரர்களை ஜயிப்பாயோ அப்படிப்பட்ட சிறந்த சங்கம் இதோ இருக்கிறது. மகாத்மாவான இந்திரனாலும் இதனால் உலகங்கள் ஜயிக்கப்பட்டன' என்று சொன்னார்கள். அப்பொழுது தேவர்களால் துதிக்கப்படுகின்றவனுகித் தேவர்களால் கொடுக்கப்பட்ட தேவதத்தமென்கிற இந்தச் சங்கத்தை நான் பெற்றுக்கொண்டேன். அப்படிப்பட்ட நான் சங்கத்தைக் கையில் பிடித்தவனுகவும் சவசமணிந்தவனுகவும் பாணங்களுள்ளவனுகவும் விற்பிடித்தவனுகவும் யுத்தம் செய்யும் விருப்பத்தால் மிகவும் உக்கிரமான தானவர்களுடைய வாஸஸ்தானத்தைக் குறித்துச் சென்றேன்.

நூற்றெழுபத்தோராவது அத்யாயம்.

நிவாதகவசயுத்தபர்வம். (தொடர்ச்சி.)

(பார்த்தன் நிவாதகவசர்களுடன் யுத்தம்செய்ய விரும்பி மாதலியினுல் செலுத்தப்படும் இந்திராதத்துடன் அவர்களுடைய பட்டணம் சென்றதும், அர்ஜுனனுடைய சங்க முழக்கத்தினுல் ஸன்னத்தர்களான அவர்களோடு அவன் சண்டை தொடங்கியதும்.)

பிறகு, நான், ஆங்காங்கு, தேவர்களாலும் ரிஷிகளாலும் துதிக்கப்படுகின்றவனுகிப் பயங்கரமானதும் குறைவில்லாததும்

---

1 ஸபாபர்வம் 276-ம் பக்கம் குறிப்பிற் காண்க.

ஜலஙகளுக்கு நாதனுமான ஸமுத்திரத்தைக் கண்டேன். நுரை யுள்ளவையும் சிதறுகின்றவையும் மோதுகின்றவையும் மிக எழும் பினவையுமான அலைகள் அந்த ஸமுத்திரத்தில் அசைந்துகொண் டிருக்கின்ற மலைகள்போலக் காணப்பட்டன. அந்த ஸமுத்திரத் தில் ரத்தினங்களால் நிறைக்கப்பட்ட கப்பல்கள் ஆயிரமாயிரமாக ஆகாயத்தில் விமானங்கள் ஸஞ்சரிப்பதுபோல எங்கும் ஸஞ்சரித் துக்கொண்டு விளங்கின. அந்த ஸமுத்திரத்தில் திமிங்கிலங்களும் ஆமைகளும் திமிதிமிங்கிலங்களும் சுறுமீன்களும் ஜலத்தில் மூழ்கி இருக்கிற மலைகள்போலக் காணப்பட்டன. இரவில் மெலிவான மேகத்தால் மூடப்பட்டிருக்கிற நக்ஷத்திரங்கள்போல எல்லாப் பக்கங்களிலும் ஜலத்தில் முழுகி இருக்கின்ற ஆயிரக்கணக்கான சங்கங்கள் காணப்பட்டன. அப்படியே, அந்த ஸமுத்திரத்தில் ஆயிரமாயிரமாக ரத்னங்களின் குவியல்கள் மிதந்தன. பயங்கர மான வாயுவும் சுழன்று வீசியது. அது ஆச்சரியமாயிருந்தது. மிக்கவேகமுள்ளதும் எல்லாத்தீர்த்தங்களுக்கும் நிதியும் சிறந்தது மான அந்த ஸமுத்திரத்தைத்தாண்டி ஸமீபத்தில் தானவர்களால் வியாபிக்கப்பட்டிருக்கிற அந்த அஸுரர்களுடையபட்டணத்தைக் கண்டேன். மாதலியானவன் அந்த இடத்திலேயே ரதத்தின் கோஷத்தால் பூமியில் தானவர்களை விரைவாகக் கீழே விழும்படி செய்து அந்த நகரத்தில் விரைவாக ரதத்தை நடத்தினன். தான வர்கள் ஆகாயத்தில் மேகத்தின் இடிமுழக்கம்போன்ற அந்த ரதத்தின் சப்தத்தைக்கேட்டு என்னைத் தேவராஜனாக எண்ணிப் பயம் மிக்கவர்களானார்கள். எல்லாரும் பரபரப்புள்ள மனத் துடன் அம்புகளையும் விற்களையும் தரித்து அப்படியே கத்திகள் யும் சூலங்களையும் கோடாலிகளையும் கதைகளையும் உலக்கைகள் யும் கையில் எடுத்துக்கொண்டு நின்றார்கள். பிறகு, தானவர்கள் பயந்த மனமுள்ளவர்களாகி வாயில்களை மூடினர்கள். நகரத்தில் காவலை நன்றாக அமைத்துவிட்டு, ஒருவனும் வெளியேகாணப்பட வில்லை. பிறகு, நான் பேரொலியுள்ள தேவதத்தமென்கிற சங் கத்தை எடுத்து அதிக ஸந்தோஷத்தை அடைந்து அதை மெதுவாக ஊதினேன். அந்தச் சத்தமோ ஆகாயத்தில்பரவி எதிரொலியை உண்டுபண்ணியது. மிகப் பெரிய பிராணிகளும் அதிகமாகப்பயந் தன; ஒளிந்தன. பாரதரே! பிறகு, திதியின் புத்திரர்களான நிவாதகவசர்களனைவருமே ஸந்தர்களும் பலவிதக் கவசங்க ளுடன்கூடியவர்களும் விசித்திரமான ஆயுதங்களைக் கைகளில்

பிடித்தவர்களும் உருக்குமயமான பெரிய சூலங்களோடும் கதாயுதங்களோடும் உலக்கைகளோடும் பட்டஸங்களோடும் கத்திகளோடும் ரதசக்கரங்களோடும் சதக்ணிகளோடும் புசுண்டிகளோடும் பலஷ்டமானவையும் கண்கு அலங்கரிக்கப்பட்டவையும் கண்கு பிடிக்கப்பட்டவையுமான கத்திகளோடும் ஆயிரமாயிரமாகத் தோன்றினர்கள். பரதஸ்ரேஷ்டரே! பிறகு, மாதலியானவன் அந்தக் குதிரைகளை ரதமார்க்கங்களில் பலவாறுக நடத்தி ஸமமான இடத்தில் விரைவாக ஓட்டினன். அந்த மாதலியினல் நன்றுக ஓட்டப்பட்டு விரைவாகச் செல்லுகிற அந்தக் குதிரைகளின் வேகத்தால் அப்பொழுது [1] ஒன்றையும் நான் பார்க்கவில்லை. அது எனக்கு ஆச்சரியமாயிருந்தது. பிறகு, அந்தத் தானவர்கள் அந்த இடத்தில் விகாரமான குரலும் உருவமுமுள்ள போர்வீரக் ளுடைய கூட்டங்களனைத்தையும் பலவாறு யுத்தத்திற்காக மிகத் தூண்டினர்கள். அந்தச் சத்தத்தால் மலைபோன்ற லக்ஷக்கணக் கான மீன்கள் அறிவிழந்து ஸமுத்திரத்தில் பயந்தோடின. பிறகு, தானவர்கள் நூறுநூறுகவும் ஆயிரமாயிரமாகவும் கூர்மையுள்ள பாணங்களைப் பிரயோகித்துக்கொண்டு அதிவேகத்துடன் என்னை நோக்கி அருகில் ஓடிவந்தார்கள். பாரதரே! அவர்களுக்கும் எனக்கும் அதிகாரமானதும் நிவாதகவசர்களுக்கு முடிவைச் செய்கிறதுமான அப்படிப்பட்ட ஸங்குலயுத்தமானது நடந்தது. பிறகு, அந்த மகாயுத்தத்தைப் பார்ப்பதற்காகத் தேவரிஷிகளும் தானவரிஷிகளின் கூட்டங்களும் பிரம்மரிஷிகளும் ஸித்தர்களும் வந்து சேர்ந்தார்கள். ஜயத்தை விரும்புகின்ற அந்த முனிவர்கள் தகுதியான இனிய வாக்குக்களால் தாரகாஸுர யுத்தத்தில் இந்திரனைத் துதித்ததுபோல என்னைத் துதித்தார்கள்.

நூற்றெழுபத்திரண்டாவது அத்யாயம்.

நிவாதகவசயுத்தபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனனுக்கு நிவாதகவசர்களோடு யுத்தம்.)

பாரதரே! பிறகு, நிவாதகவசர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆயுதங்களை எடுத்துக்கொண்டு யுத்தத்தில் வேகத்தோடு என்னை எதிர்த்து ஓடிவந்தார்கள். மகாரதர்களான அந்த

---

1 வேறு பாடம்.

நிவாதகவசர்கள் ரதம் செல்லும் வழியை மறைத்துக்கொண்டும் உரத்த சிங்கநாதத்தைச் செய்துகொண்டும் நாற்புறங்களிலும் என்னைச் சூழ்ந்துகொண்டும் அம்புமழைகளைப் பொழிந்தார்கள். பிறகு, அநிக வீர்யமுள்ளவர்களான மற்றத் தானவர்கள் சூலங்களையும் பட்டஸங்களையும் கையில் பிடித்தவர்களாக என்மீது சூலங்களையும் புசுண்டிகளையும் பிரயோகித்தார்கள். அவர்களால் எப்பொழுதும் விடப்படுகின்றதும் மிகப்பெரிதும் கதைகளும் சக்திகளும் பரவினதுமான நெருங்கின ஆயுதமழையானது என் ரதத்தின்மீது விழுந்தது. கூர்மையான சஸ்திரங்களும் ஆயுதங்களுமுள்ளவர்களும் பயங்கரமானவர்களும் யமன்போன்றவர்களும் நன்கு அடிப்பவர்களுமான நிவாதகவசர்கள் சிலர் யுத்தத்தில் என்னை எதிர்த்து ஓடிவந்தார்கள். நான் யுத்தத்தில் அவர்கள் ஒவ்வொருவரையும் வேகமுள்ளவைகளும் நேராகச்செல்பவைகளும் காண்டீவத்தினின்று விடப்பட்டவைகளுமான பலவகையான பத்துப்பத்தம்புகளால் அடித்தேன். அவர்களனைவரும் என்னால் பிரயோகிக்கப்பட்டவையும் சாணையில் தீட்டப்பட்டவையுமான அம்புகளால் புறங்காட்டி ஓடுகிறவர்களாகச் செய்யப்பட்டார்கள். பிறகு, மாதலியினால் அந்தக் குதிரைகள் விரைவாகத் தூண்டப்பட்டு, பிறகு, வாயுவேகமுள்ளவைகளாகப் பல வழிகளில் ஸஞ்சரித்தன; மாதலியினால் நன்கு அடக்கி நடத்தப்பட்டுத் தைதயர்களை நன்றாகமிதித்துக் கொன்றன. அந்தப் பெரியரதத்தில் கட்டப்பட்டிருக்கிற பதினாயிரம் குதிரைகள் அப்பொழுது மாதலியினால் நடத்தப்பட்டவைகளாகிச் சிலவேளைபோல ஸஞ்சரித்தன. அந்த அஸுரர்கள் அந்தக் குதிரைகளுடைய கால்களின் மிதியினாலும் தேருருளையின் ஓலியினாலும் என்னுடைய அம்புகளின் விழ்ச்சிகளாலும் நூறு நூறுகக் கொல்லப்பட்டார்கள். பாண்டவர்களுள் சிறந்தவரே! அப்படியே, அந்த யுத்தத்தில் சில அஸுரர்கள் உயிரிழந்தும் ஸாரதி கொல்லப்பட்டும் குதிரைகளால் நன்கு இழுக்கப்பட்டார்கள். அடிப்பவர்களான அந்த அஸுரர்களனைவரும் திசைகளையும் திக்கோணங்களையும் மறைத்துக்கொண்டு பலவித ஆயுதங்களால் எதிர்த்தடித்தார்கள். அதனால், எனமனமானது துன்பமடைந்தது. பிறகு, வேகமுள்ள குதிரைகளைப் பிரயத்தனமின்றி அப்படி நடத்தினமையால் மாதலியினுடைய அற்புதமான வல்லமையை நான் நன்கு கண்டேன். வேந்தரே! பிறகு, யுத்தத்தில் ஆயுதங்களுடன் கூடின அந்த அஸுரர்களை நான் விரைவாகச் செல்லுகின்ற

பலவித அஸ்திரங்களால் நூறு நூறுகவும் ஆயிரமாயிரமாகவும் துண்டாடினேன். பகைவர்களைக் கொல்பவரே! அந்த யுத்தத்தில் இவ்வாறு முழுமுயற்சியுடன் ஸஞ்சரிக்கின்ற என் விஷயத்தில் வீரனும் இந்திரனுக்கு ஸாரதியுமான மாதலியானவன் பிரீதியுள்ள வனானன.

பிறகு, சில அஸுரர்கள் அந்தக் குதிரைகளாலும் அந்தரதத்தாலும் கொல்லப்பட்டு நாசமடைந்தார்கள். அப்படியே சிலர் திரும்பிச் சென்றார்கள். யுத்தத்தில் நிவாதகவசர்கள் எங்களோடு போட்டியுடையவர்கள்போல அம்புகளால் துன்பமடைவிக்கப்பட்ட என்னைப் பெரிய அம்புமழைகளால் தடுத்தார்கள். நான் பாணவேகங்களால் அம்புமழையை நாசம்செய்து அம்புகளைத் தடுப்பவைகளும் பிரகாசிப்பவைகளும் நிகரில்லாதவைகளும் விரைவாகச் செல்பவைகளுமான அஸ்திரங்களால் அந்த அஸுரர்களை ஆயிரமாயிரமாக அடித்தேன். பிறகு, நன்றாக அடிக்கப்படுகின்ற அந்த மகாஸுரர்கள் கோபத்தினால் மூடப்பட்டவர்களாகவும் ஒன்று சேர்ந்தவர்களாகவும் சக்திகள், சூலங்கள், கத்திகள் இவைகளின் மழைகளால் என்னைத் துன்பமடையச் செய்தார்கள். பாரதரே! பிறகு நான் தேவராஜனுக்குப் பிரியமானதும் [1] சிறந்ததும் கடுமையாக எரிப்பதுமான [2] மாதவமென்கிற அஸ்திரத்தைப் பிரயோகித்தேன். பிறகு, நான் அவர்களால் விடப்பட்ட சக்திகளையும் திரிசூலங்களையும் ஆயிரமாயிரமாகப் பிரயோகிக்கப்பட்ட தோமரங்களையும் அஸ்திர வீர்யத்தினால் நூறுதுண்டாகத் துண்டித்தேன். நான் அந்த அஸுரர்களுடைய ஆயுதங்களைத் துண்டித்துப் பிறகு அவர்களனைவரையும் கோபத்தால் பத்துப்பத்து பாணங்களால் திருப்பி அடித்தேன். அப்பொழுது, யுத்தத்தில் காண்டீவத்தினின்று வண்டுகளின் வரிசைகள்போல் பெரியபாணங்கள் புறப்பட்டன. அதை மாதலி புகழ்ந்தான். அந்த அஸுரர்களுடைய அந்தப் பாணங்களும் பலவாயிருப்பதால் விட்டிற்பூச்சிகள்போல என்னை மொய்த்துக்கொண்டன. நான் பலசாலியாயிருப்பதனால் அம்புகளால் அவைகளை நாசம் செய்தேன். பிறகு, கொல்லப்படுகின்ற நிவாதகவசர்கள் மீண்டும் பெரிய அம்புமழைகளால் என்னை நாற்புறங்களிலும் சூழ்ந்து அடித்தார்கள். நான் அஸ்திரங்களை அழிப்

---

1 வேறு பாடம்.

2 'மது என்னும் அஸுரனைக் கொல்வதற்காகச் செய்யப்பட்ட அஸ்த்ரம்' என்பது பழையவுரை.

பணைகளும் ஜ்வலிப்பனைகளும் சிறந்தனைகளும் விரைவாகச் செல் பணைகளுமான அஸ்திரங்களால் (அந்தப்) பாணிவேகங்களைத் தடுத்து அவர்களையும் ஆயிரமாயிரமாக அடித்தேன். அஸ்திரங்களால் பிளக்கப்பட்ட அவர்களுடைய சரீரங்கள் மழைக்காலத்தில் காற்புறங்களிலும் மேகங்களால் பொழியப்பட்ட மலைகளினுடைய சிகரங்கள் ஜலத்தைச் சொரிவதுபோல இரத்தத்தைச் சொரிந்தன. இந்திரனுடைய வஜ்ராயுதம்போலத் தாக்குகின்றனவையும் வேகமுள்ளனவையும் நேராகச் செல்லுகின்றனவுமான என்னுடைய பாணங்களால் அடிக்கப்படுகின்ற அந்த அஸுரர்கள் அதிக பயத்தை அடைந்தார்கள். நாது துணைக்காகப் பிளக்கப்பட்ட தேக முள்ளவர்களும் ஆயுதங்களும் சௌர்யமும் குறைந்துபோனவர்களுமான அந்த நிவாதகவசர்கள், பிறகு, என்னுடன் மாயையினால் போர்புரிந்தார்கள்.

நூற்றெழுபத்துமூன்றுவது அத்யாயம்.

நிவாதகவசயுத்தபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் திவ்யாஸ்திரங்களால் அஸுரர்களுடைய மாயையை ஒழித்து அவர்களை வதம் செய்தது.)

பிறகு, மலைகள் போன்ற கல்துண்டுகளோடு மிகவும் பெரிதான கல்மழையானது எல்லாப்பக்கங்களிலும் தோன்றியது. அது என்னை மிக்க துன்பத்தையடையச்செய்தது. நான் யுத்தத்தில் அதனை ஒவ்வொன்றையும் ஐந்திராஸ்திரமந்திரத்துடன் விடப்பட்டனவைகளும் வஜ்ராயுதம்போன்றனவைகளும் வேகமுள்ளவைகளுமான அம்புகளால் நாது துணுக்குக்களாகும்படி நொறுக்கினேன். கல்மாரியானது பொடிபண்ணப்படும்பொழுது நெருப்பு உண்டாயிற்று. அதில் நெருப்புக்குவியல்கள்போலக் கற்பொடிகள் விழுந்தன. பிறகு, கல்மழையானது அழிக்கப்பட்டவுடன், மிகப் பெரிய ஜலவர்ஷமானது தோரச்சின் அளவுள்ள தாரைகளோடு என்பக்கத்தில் தோன்றியது. ஆகாசத்திலிருந்து ஆயிரமாயிரமாக விழுகின்ற கடுமையான வேகமுள்ள நீர்த்தாரைகள் ஆகாயத்தையும் திசைகளையும் அப்படியே திக்கோணங்களையும் எங்கும் மூடின. தாரைகள் விழுவதாலும் காற்றின் மிகுதியினாலும் மேகங்களுடைய கர்ஜனத்தினாலும் ஒன்றும் அறியப்பட

ஷில்லை. ஆகாயத்திலும் பூமியிலும் எல்லா இடங்களிலும் தொடர்ச்சியுள்ளவைகளும் எப்பொழுதும் தரையில் விழுகின்றவைகளுமான நீர்த்தாரைகள் அந்த ரணகளத்தில் என்னை மயங்கச்செய்தன. அந்த ஸமயத்தில், இந்திரனால் உபதேசிக்கப்பட்டதும் ஜலத்தை மிகவும் வற்றச்செய்கிறதும் ஜ்வலிக்கிறதும் கோரமாயிருப்பதுமான திவ்யாஸ்திரத்தைப் பிரயோகித்தேன். அந்த அஸ்திரத்தினால் அந்த ஜலமானது வற்றியது. பாரதரே! என்னால் கன்மாரியும் அடிக்கப்பட்டு, ஜல வர்ஷமும் வறளச் செய்யப்பட்டபொழுது தானவர்கள் மாயாமயமான அக்னியையும் வாயுவையும் பிரயோகித்தார்கள். பிறகு, நான் வாருணாஸ்திரத்தினால் அக்னியை முழுமையும் நாசம்செய்தேன். பெரிதான சைலாஸ்திரத்தினால் வாயுவின் வேகத்தையும் தடுத்து நிறுத்தினேன். பாரதரே! அந்த மாயை அழிக்கப்பட்டவுடன், யுத்தத்தில் கெட்ட மதங்கொண்டவர்களான அந்தத் தானவர்கள் பலவித மாயையை ஒரே ஸமயத்தில் வெளியிட்டார்கள். பிறகு, மிகப் பெரியதும் மயிர்சிலிர்க்கச் செய்கிறதுமான கோரரூபமுள்ளவைகளான அக்னி வாயு சிலை இவற்றினுடைய அஸ்திர வர்ஷமானது தோன்றியது. அந்த மாயாமயமான மழையானது யுத்தத்தில் என்னைத் துன்பமடையச் செய்தது. பிறகு, கோரமாகவும் கடுமையாகவுமிருக்கிற இருளானது எல்லாப்பக்கங்களிலும் தோன்றியது. கோரமான கொடிய இருட்டினால் உலகமானது நன்றாக மூடப்படவே குதிரைகள் திரும்பினவைகளாயின; மாதலியும் [1] தடுமாறினான். அவனுடைய கையிலிருந்து பொன்னாலாகிய சுறடாவும் பூமியில் விழுந்தது. அவன் பயந்து என்னைப் பார்த்து, 'என்ன செய்யப்போகிறோம்?' என்றும் அடிக்கடி சொன்னான். அவன் புத்தியிழந்திருக்கும் தருணத்தில் தீவிரமான பயமானது என்னையும் வந்தடைந்தது.

அறிவிழந்தவனான அந்த மாதலியானவன் என்னைப் பார்த்து, 'பார்த்த! முற்காலத்தில் தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் அம்ருதத்திற்காக மிகப்பெரிய போர் நடந்தது. தோஷமற்றவனே! அதுவும் என்னால் பார்க்கப்பட்டிருக்கிறது. சம்பரனுடைய வதத்துக்காக மிகப் பெரிய கோரமான யுத்தம் நடந்தது. நான் அந்த யுத்தத்திலும் தேவராஜனுக்கு ஸாரத்யம் செய்தேன். அப்படியே, விருத்ரனை

---

1 'ப்ராஸ்கலத்' என்பது வேறுபாடம்; 'விழுந்தான்' என்பது இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு.

வதம் செய்வதற்காக நடந்த யுத்தத்திலும் என்னல் குதிரைகள் பிடித்து நடத்தப்பட்டன. மிக்க பயங்கரமான பலியினுடைய யுத்தமும் என்னல் பார்க்கப்பட்டது. மிக்க பயங்கரமான இந்த யுத்தங்கள் என்னல் நேரில் அனுபவிக்கப்பட்டிருக்கின்றன. பாண்டவ! இதற்குமுன் நான் எக்காலத்திலும் பிரஜ்ஞை தப்பினவனுனதில்லை. பிரம்மதேவரால் பிரஜைகளுக்கு ஸம்ஹாரமானது ஏற்படுத்தப்பட்டுவிட்டது நிச்சயம். உலகத்துக்கு நாசகாலத்தைத் தவிர மற்ற ஸமயத்தில் இந்த யுத்தம் பொருந்தாதன்றோ?' என்று மிக்க பயத்துடன்கூடின இதனைச் சொன்னன். அவனுடைய அந்த வசனத்தைக்கேட்டு நான் என்னை நானுகத் திடப்படுத்திக் கொண்டு அஸுரர்களுடைய பெரிய மாயாபலத்தை வீணக்க விரும்பி, பயந்திருக்கிற மாதலியைப் பார்த்து, 'இப்பொழுது என் கைகளுடைய பலத்தையும் அஸ்திரங்கள் காண்டீவமென்கிற வில் இவற்றினுடைய பிரபாவத்தையும் பார். இப்பொழுது அஸ்திர மாயையினல் இவர்களுடைய மிகவும் பயங்கரமான இந்த மாயையையும் கொடிய இருளையும் நாசம்செய்கிறேன். ஸாரதியே! பயப்படாதே. உறுதியாக இரு' என்று சொன்னேன். வேந்தரே! இவ்வாறு சொல்லிவிட்டு, நான் எல்லாப் பிராணிகளையும் மயங்கச்செய்கிற அஸ்திர மாயையைத் தேவர்களுடைய நன்மையின்பொருட்டு உண்டுபண்ணினேன். அந்த அந்த மாயைகள் அழிக்கப்படவே, அஸுரஸ்ரேஷ்டர்கள் அளவு கடந்த கௌரியத்துடன் மீண்டும் பலவிதமான மாயைகளை வெளியிட்டார்கள். மறுபடி பிரகாசமுண்டாயிற்று. மறுபடியும், இருளால் உலகம் விழுங்கப்பட்டது. உலகம் கண்ணுக்குப் புலப்படாததாயிற்று. மீண்டும் ஜலத்தில் முழுகியது. பிரகாசமுண்டாகவே மாதலியானவன் மாயிர்பொடிக்கச்செய்கிற யுத்தத்தில் குதிரைகள் நன்கு நடத்தப்படுகின்ற சிறந்த ரதத்துடன் ஸஞ்சரித்தான். பிறகு, கொடியவர்களான நிவாதகவசர்கள் என்மீது எல்லாப்பக்கங்களிலும் தாக்கினர்கள். நான் அவர்களை ஸம்யம்பார்த்து யமலோகத்திற்கு அனுப்பினேன். நிவாதகவசர்களுக்கு நாசத்தை உண்டுபண்ணுகிற அப்படிப்பட்ட யுத்தம் நடந்துவரும் தருணத்தில், திடீரென்று மாயையினல் மூடப்பட்ட எல்லா அஸுரர்களையும் நான் காணவில்லை.

ஸ்ரீ மஹாபாரதம்.

நூற்றெழுபத்து நான்காவது அத்யாயம்.

நிவாதகவசயுத்தபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் நிவாதகவசர்களைக் கொன்றபிறகு மீண்டும் ஸ்வர்க்கத்திற்குப் போனது.)

அந்தத்தைதியர்கள் மாணபாணல் கண்ணுக்குப் புலப்படாதவர்களாக இருந்துகொண்டு போர்புரிந்தார்கள். காணும் (அவர்களால்) பார்க்கமுடியாத அஸ்திர வீர்யத்தால் அவர்களுடன் போர்புரிந்தேன். காண்டீவத்தினின்று விடுபட்டவைகளும் அஸ்திரமந்திரத்தினல் நன்கு பிரயோகிக்கப்பட்டவைகளுமான பாணங்கள் அவர்களிருந்த இடங்களில் அவர்களுடைய தலைகளை அறுத்தன. பிறகு, என்னல் யுத்தத்தில் கொல்லப்படுகின்ற நிவாதகவசர்கள் மாணயணய அடக்கிக்கொண்டு வினைவாகத் தங்களுடைய பட்டணத்தில் நுழைந்தார்கள். தைத்யர்களும் ஓடி, வெளிச்சமும் ஏற்படவே, அந்த ரணகளத்தில் தானவர்கள் லக்ஷக்கணக்காகக் கொல்லப்பட்டிருக்கிறதைப் பார்த்தேன். அந்த இடத்தில் நன்கு நொறுக்கப்பட்ட அந்த அஸுரர்களுடைய சஸ்திரங்களும் ஆபரணங்களும் சரீரங்களும் கவசங்களும் நூறு நூறுகக் காணப்பட்டன. குதிரைகளுக்கு ஓரடியிலிருந்து மற்றோரடி நகருவதற்குக்கூட இடைவெளி இல்லை. அதனல், வினைவாக மேலே எழும்பி ஆகாயத்தில் செல்பவைகளாக இருந்தன. பிறகு, நிவாதகவசர்கள் ஆகாயத்தைதமாத்திரம் நன்றுக மூடிக்கொண்டு கண்ணுக்குப்புலப்படாதவர்களாகவும் மலைகளைப் பிரயோகிக்கின்றவர்களாகவும் என்னை எதிர்த்து வந்தார்கள். பாரதரே! பிறகு, பயங்கரமான தானவர்கள் சிலர் பூமிக்குள் இருந்துகொண்டு குதிரைகளின் கால்களையும் தேருருளைகளையும் இறுகப் பிடித்தார்கள். சிலர் யுத்தம் செய்கின்ற என்னுடைய குதிரைகளையும் ரதத்தையும் நகரவொட்டாமல் பிடித்து, ரதத்துடனிருக்கிற என்னை மலைகளால் எல்லாப்பக்கங்களிலும் அடித்தார்கள். விருத்தியடைகின்ற மலைகளாலும் அப்படியே விழுகின்ற வேறு மலைகளாலும் நானிருந்த இடம் குகைபோலாயிற்று. மலைகளால் மூடப்பட்டவனும் நடக்கமுடியாதபடி தடுக்கப்பட்ட குதிரைகளுள்ளவனுமான நான் அதிகத்துன்பத்தை அடைந்தேன். அதை மாதலி கண்டான். அவன், நான் பயந்திருப்பதைக்கண்டு

'அர்ஜுன! அர்ஜுன! நீ பயப்படாதே. வஜ்ராஸ்திரத்தைப் பிரயோகம் செய்' என்கிற இந்த வசனத்தைச் சொன்னேன். வேந்தரே! பிறகு, நான் அவனுடைய அந்த வசனத்தைக்கேட்டுத் தேவராஜனுக்குப் பிரியமான வஜ்ராஸ்திரத்தைப் பிரயோகித்தேன். அசைவில்லாத ஸ்தானத்தை அடைந்து காண்டீவத்தை அபிமந்த்ரணம் செய்து இடிபோல் தாக்குகின்றவைகளும் நீண்டவைகளும் கூருள்ளவைகளுமான அம்புகளைப் பிரயோகித்தேன். பிறகு, வஜ்ராஸ்திரத்தினால் பிரயோகிக்கப்பட்ட அந்தப்பாணங்கள் வஜ்ரங்களாகி அந்த எல்லாமாயைகளையும் அந்த நிவாதகவசர்களையும் நன்றாகத் தாக்கின. வஜ்ரவேகத்தாலடிக்கப்பட்ட மலைபோன்ற அந்தத்தானவர்கள் ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு பூமியில் விழுந்தார்கள். பூமிக்குள் எந்தத் தானவர்கள் தேரையும் குதிரைகளையும் நகாமல் பிடித்தார்களோ அவர்களையும் அந்தப்பாணங்கள் உள்ளே புகுந்து யமலோகத்திற்கு அனுப்பின. கொன்று தள்ளப்பட்டவர்களும் மலைபோன்றவர்களுமான அந்த நிவாதகவசர்களால் அந்தஇடமானது, சிதறிக்கிடக்கிறமலைகளால் மூடப்படுவதுபோல நன்றாக மூடப்பட்டது. குதிரைகளுக்காவது ரதத்திற்காவது மாதலிக்காவது எனக்காவது அப்பொழுது ஒருவித்தமான கெடுதியுண்டானப்படவில்லை. அது ஆச்சர்யமாயிருந்தது. அரசரே! பிறகு, மாதலியானவன் உரக்கச் சிரித்துக்கொண்டு என்னைப் பார்த்து, 'அர்ஜுன! உன்னிடத்தில் காணப்படுகிற இந்த வீர்யம் தேவர்களிடம் இல்லை' என்று சொன்னான். அஸுரக்கூட்டங்கள் கொல்லப்பட்டவுடன், அவர்களுடைய மனைவிகளனைவரும் சரத்காலத்தில் ஸாரஸபட்சிகளின் பேடுகள்போல அந்த நகரத்தில் உரக்க அலறினார்கள். பிறகு, நான் மாதலியுடன்கூடியவனாக ரதத்தின் சப்தத்தால் நிவாதகவசர்களுடைய மாதர்களைப் பயமடையச் செய்துகொண்டு அந்தப்பட்டணத்தை நோக்கிச் சென்றேன். மயிலுக்கு ஒப்பான நிறமுள்ள அந்தப் பதினாயிரம் குதிரைகளையும் ஸூர்யனுக்கொப்பான ரதத்தையும் பார்த்து, ஸ்த்ரீகள் கூட்டம் கூட்டமாக ஓடினார்கள். பயமுறுத்தப்பட்ட அந்த மாதர்களின் ஆபரணங்களால் உண்டுபண்ணப்பட்ட ஒலியானது அப்பொழுது மலைகளின்மீது விழுகின்ற கற்களின் ஒலிபோலாகியது. அதிகமாகப் பயந்திருக்கிற அந்த அஸுரஸ்த்ரீகள், பிறகு, அனேகரதங்களால் விசித்ரமாகவும் ஸ்வர்ணமயமாகவுமிருக்கிற தந்தம் வீடுகளில் புகுந்தார்கள். ஆச்சர்யமான வடிவமுள்ளதும் தேவர்

களின் நகரத்தைக்காட்டிலும் அதிக மேன்மைவாய்ந்ததுமான அந்த உத்தமமான நகரத்தைப் பார்த்து, பிறகு, நான் மாதலியை நோக்கி, 'இப்படிப்பட்ட இந்த நகரத்தில் யாதுகாரணத்தால் தேவதைகள் பிரவேசிக்கிறதில்லை? இந்த நகரத்தை இந்திரனுடைய நகரத்தைக்காட்டிலும் மேன்மைபெற்றதினைக் காண்கிறேன்' என்று சொன்னேன். மாதலியானவன், 'பார்த்த! முற்காலத்தில் இந்த நகரமானது நம்முடைய தேவராஜனது நகரமாக இருந்தது. பிறகு, நிவாதகவசர்களால் தேவர்கள் இந்நகரத்திலிருந்து துரத்தப்பட்டார்கள்; பெரிய கடுந்தவத்தைச்செய்து பிரம்மதேவரை மகிழ்வித்து, வசிப்பதற்காக இந்நகரமும் யுத்தத்தில் தேவர்களிடத்திலிருந்து பயமின்மையும் வேண்டப்பட்டன. பிறகு, இந்திரன், தனக்கு ஹிதத்தைத் தேடிக்கொள்வதில் விருப்பத்தால், 'இந்த விஷயத்தில் பகவானான தேவரீர் தகுந்த பரிஹாரம் செய்யவேண்டும்' என்று பகவானான பிரம்மதேவரை வேண்டிக்கொண்டான். பாரத! பிறகு, பகவானான பிரம்ம தேவர், 'விருத்திரனைக் கொன்றவனே! இந்த விஷயத்தில் நீயே வேறுதைரியத்தால் இந்த அஸுரர்களுக்கு நாசத்தை உண்டுபண்ணுகிறவனுவாய்' என்று சொன்னார். அதனால், இவர்களைக் கொல்வதற்காக இந்திரன் உனக்கு அஸ்திரங்களைக் கொடுத்தான். உன்னால் கொல்லப்பட்ட இந்த அஸுரர்கள் தேவர்களால் கொல்வதற்கு ஸாத்தியப்படாதவர்கள். பாரத! இவர்களழியுங்காலம் வந்ததாதலால் நீ இந்த ஸமயத்தில் இவர்களுக்கு நாசத்தை உண்டுபண்ணுகிறவனுக வந்தாய். உன்னாலும் அது அப்படியே செய்யப்பட்டது. புருஷஸ்ரேஷ்டனே! தானவர்களை அழிப்பதற்காக மகாஸ்திரங்களுடைய பெரிதான அந்தச் சிறந்த பலத்தை இந்திரனால் நீ பெற்றுக்கொள்ளும்படி செய்யப்பட்டாய்' என்று சொன்னான். பிறகு, நகரத்தை நன்கு அடக்கி அந்தத் தானவர்களையும் கொன்று மீண்டும் மாதலியுடன் அந்தத் தேவராஜனுடைய இருப்பிடத்தை நோக்கிச் சென்றேன்.

நூற்றெழுபத்தைந்தாவது அத்யாயம்.

நிவாதகவசயுத்தபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் ஸ்வர்க்கத்தைக்குறித்து திரும்பிவருகையில் நடுவழியில் ஹிரண்யபுரத்தைப் பார்த்ததும், அதில் வஸிக்கின்ற பௌலோமர் களையும் காலகேயர்களையும் கொன்று ஸ்வர்க்கத்துக்கு வந்ததும்.)

அந்த இடத்திலிருந்து திரும்பிவருகின்ற மன்னர் பெரிதும் நினைத்தவண்ணம் செல்லுவதும் ஆகாயத்திலுள்ளதும் அக்நியும் ஸூர்யனும்போன்ற காந்தியுள்ளதுமான மேலொரு பட்டணம் பார்க்கப்பட்டது. வேந்தரே! பலவகை ரத்தினமயமான மரங் களாலும், [1] இனிய குரலுள்ள பக்ஷிகளாலும் எப்பொழுதும் ஸந்தோஷமுள்ள பௌலோமர்களாலும் காலகேயர்களாலும் அடையப்பட்டதும், கோபுரங்களோடும் [2] அட்டாலகங்களோடும் சேர்ந்திருப்பதும், நான்கு வாயில்களுள்ளதும் அடைய முடியாத தும், எல்லா ரத்தினங்களாலும் இழைக்கப்பட்டதும், திவ்யமான தும், ஆச்சர்யமான காட்சியுள்ளதும், புஷ்பங்களோடும் பழங்க ளோடும்கூடினவைகளுமான எல்லா ரத்னங்களாலும் இழைக்கப் பட்டனவைகளுமான மரங்களால் சூழப்பட்டதும், அப்படியே திவ்ய மானவையும் மிக அழகியவையுமான பறவைகளோடு கூடியதும், என்றும் ஸந்தோஷமுள்ளவர்களும் சூலங்களையும் ரிஷ்டிகளையும் உலக்கைகளையும் ஆயுதமாக உடையவர்களும் வில்லையும் குண்டா ந்தடிகளையும் கையில் பிடித்தவர்களும் மாலைகளை அணிந்தவர்களு மான அஸுரர்களால் எல்லாப்பக்கங்களிலும் சூழப்பட்டதும், அற்புதமான காட்சியுள்ளதுமான தைத்யர்களுடைய அந்தப் பட் டணத்தைப் பார்த்து, நான், 'காணப்படுகிறதே இதென்ன?' என்று மாதலியைக் கேட்டேன்.

மாதலி, 'புலோமை என்றும் காலகை என்றும் சொல்லப்படு கிற திதியின் புத்திரிகளான இரண்டு பெரிய அஸுரஸ்த்ரீகள் தேவ வர்ஷத்தில் ஆயிரம் வர்ஷகாலம் சிறந்த தவத்தைச் செய்தார்கள். பிறகு, தவத்தின் முடிவில் பிரம்மதேவர் அவ்விருவருக்கும் வரத் தைக் கொடுத்தார். ராஜஸ்ரேஷ்டனே! அந்த இரண்டு அஸு

---

1 வேறுபாடம். 2 மேல்மாடி.

அஸுரபட்டணமானது மிக உடைபட்டுப் பூமியில் விழுந்தது. அரசரே! வஜ்ராயுதத்தின் வேகம்போன்ற வேகமுள்ள உருக்கிளைகிய என்னுடைய பாணங்களால் அடிக்கப்படுகின்ற அந்த அஸுரர்கள் காலத்தால் தூண்டப்பட்டவர்களாக எல்லாப் பக்கங்களிலும் சுழன்றார்கள். பிறகு, மாதலியானவன் உயர எறி கேரில் விழுகிறவன்போல ஸுர்யனுடைய காந்திபோன்ற காந்தியுள்ள ரதத்தோடு ஆகாயத்தினின்று விரைவாகப் பூமியில் இறங்கினான்; பாரதரே! பிறகு, கோபமுள்ளவர்களும் என்னோடு சண்டைசெய்வதில் விருப்பமுள்ளவர்களுமான அந்த அஸுரர்களுடைய அறுபதினாயிரம் ரதங்கள் என்னைச் சூழ்ந்துகொண்டன. நான், அவைகளைக் கழுகிறகுகளால் பிரகாசிக்கின்ற கூர்மையுள்ள பாணங்களால் அடித்தேன். அவர்கள் கடலின் அலைகள் திரும்புவதுபோல யுத்தத்தில் என்னிடத்தினின்று திரும்பிவிட்டார்கள். பிறகு, நான், 'இவர்களை மனிதர்களால் செய்யத்தக்க யுத்தத்தால் ஜயிப்பதற்கு ஸாத்தியப்படாது' என்று நன்கு ஆலோசித்து, பிறகு, விசையாகத் திவ்யாஸ்திரங்களைப் பிரயோகித்தேன். பிறகு, என்னுடைய திவ்யாஸ்திரங்கள் சித்திரயுத்தம் செய்கின்ற அந்த ஆயிரக்கணக்கான ரதிகர்களை மெதுவாக எதிர்த்தடித்தன. மிக்கபலசாலிகளான அந்த அஸுரர்கள் விசித்திரமான ரதமார்க்கங்களில் ஸஞ்சரிக்கின்றவர்களாகி யுத்தத்தில் நூறு நூறுகளும் ஆயிரமாயிரமாகவும் காணப்பட்டார்கள். விசித்திரமான கிரீடங்களைத் தலையிலணிந்தவர்களும் விசித்திரமான கவசத்துடனும் த்வஜத்துடனும்கூடியவர்களுமட் விசித்திரமான ஆபரணங்களை அணிந்தவர்களுமான அஸுரர்கள் எனக்குப் பிரீதியை உண்டுபண்ணுகிறவர்களானார்கள். நானோ, யுத்தத்தில் திவ்யாஸ்திரமந்திரங்களால் பிரயோகிக்கப்பட்ட அம்புமழைகளால் அவர்களைத் துன்புறுத்துவதற்குச் சக்தியற்றவனானேன். அவர்களோ, என்னைத் திருப்பித் துன்புறுத்தினார்கள். அஸ்திரங்களில் பயிற்சியுள்ளவர்களும் யுத்தத்தில் ஸமர்த்தர்களுமட் அனேகர்களுமான அந்த அஸுரர்களால் துன்புறுத்தப்படுகின்ற நான் துன்பமடைந்தவனானேன். பெரும்போரில் அதிக பயமுண்டாயிற்று என்னை அடைந்தது. பிறகு, நான் மிக்க முயற்சியுள்ளவனான மாதலியைப் பார்த்து, 'திவ்யாஸ்திரங்களால் அபிமந்திரணம் செய்யப்பட்டவைகளும் மிக்க கோரரூபமுள்ளவைகளுமான என்னுடைய அம்புக்கூட்டங்களால் இந்த அஸுரர்கள் என் கொல்லப்

படவில்லை? கேட்கின்ற எனக்கு உண்மையை உரைப்பாயாக' என்று வினவினேன். பரதஶ்ரேஷ்டரே! அவன் என்னைப்பார்த்து, 'நீ இவர்களைக்கொல்வதில் போதுமான திறமையுள்ளவன். ஆகலால், அவர்களை மர்மங்களில் குறிவைத்து அடித்தலைச் செய்வாயாக' என்று சொன்னான். ராஜஶ்ரேஷ்டரே! இந்த வசனத்தைக் கேட்டு நான் மிக்க மனக்களிப்படைந்து அந்த மாதலியைப்பார்த்து, 'ரதத்தைச் சிக்கிரம் திருப்பு; என்னால் இவர்கள் அடித்துத் தள்ளப் படுவதைப் பார்' என்று சொன்னேன். இவ்வாறு சொல்லப்பட்ட மாதலியானவன் அந்த இடத்தில் தேரைத் திருப்பினான்.

மகாராஜரே! பிறகு, தானவர்கள் யுத்தத்தில் என்னைத் தோற்றவனாக எண்ணி மிக்க மனக்களிப்புற்றவர்களாக, 'எவராலும் போர்த்தலையில் தோல்வி அடைவிக்கப்படாத இந்தப் பாண்டவன் நம்மால் யுத்தத்தில் தோல்வியடைவிக்கப்பட்டான்' என்று இவ்விதம் அப்பொழுது கூட்டம் கூட்டமாக உரத்த குரலுடன் அடிக்கடி கத்தினர்கள். பிறகு, நான் தேவதேவரும் அவ்யக்தமூர்த்தியும் மகாத்மாவுமான ருத்திரரை நமஸ்கரித்துப் பரிசுத்தனாகவும் வணங்கினவனாகவுமிருந்து, 'பூதங்களுக்கு மங்களம்' என்று சொல்லி ரௌத்திரமென்று பிரசித்திபெற்றதும் எல்லாச் சத்துருக்களையும் நாசம்பண்ணுவதும் திவ்யமானதும் எல்லா உலகத்தாராலும் நமஸ்கரிக்கப்பட்டதுமான பாசுபத மஹாஸ்திரத்தைப் பூட்டினேன். பகைவர்களைக் கொல்பவரே! பிறகு, மூன்று தலைகளுடன்கூடியவனும் ஒன்பது கண்களுள்ளவனும், மூன்று முகமுள்ளவனும், ஆறணைகளுள்ளவனும், ஜ்வலிக்கின்றவனும், ஸூர்யனைப்போன்றதும் அக்னியைப்போன்றதுமான தலையிருள்ளவனும், கடைவாய்களை அடிக்கடி நக்குகிற பெரிய ஸர்ப்பங்களால் அணையாளமிடப்பட்டவனுமான ஒரு புருஷனைப் பார்த்தேன். பரதஶ்ரேஷ்டரே! பாரதரே! பிறகு, நான் பய மற்றவனாக நிராமயமாகவும் சாஶ்வதமாகவுமிருக்கிற அந்த ரௌத்ராஸ்திரத்தைக் கண்டு அதைக் காண்டீவத்தில் தொடச் செய்து சர்வரும் அளவுகடந்த தேஜஸ்ஸுள்ளவருமான த்ரியம்பகருக்கு நமஸ்காரம் செய்து தானவஶ்ரேஷ்டர்கள் அழிவதன்பொருட்டு அந்தப் பாசுபதாஸ்திரத்தை விடுத்தேன். அரசரே! அந்த அஸ்திரமானது விடப்பட்டவுடன், மான்கள், சிங்கங்கள், புலிகள், கரடிகள், ஓநாய்கள், ஸர்ப்பங்கள், பசுக்கள், சரபங்கள், யானைகள், கூடம் கூடமான குரங்குகள், காளைகள், பன்றிகள்,

பூனைகள், செந்நாய்கள், பிசாசங்கள், புருண்டங்கள், கழுகுகள், கருடன்கள், சுவரிமான்கள், தேவர்கள், ரிஷிகள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், பிசாசங்கள், அஸுரர்கள், குஹ்யகர்கள், ராக்ஷஸர்கள், பாம்புமுகமுள்ள மீன்கள், கோட்டான்கள், மீன்களுக்கும் குதிரைகளுக்கும் ஸமமான ரூபமுள்ளவர்களும் பலவித ஆயுதங்களையும் கத்திகளையும் கையில்பிடித்தவர்களும் கதைகளையும் முத்காரங்களையும் தரித்திருப்பவர்களுமான ராக்ஷஸர்கள் இவைகளுடைய உருவங்கள் ஆயிரமாயிரமாகத் தோன்றின. அப்பொழுது அந்த அஸ்திரம் பிரயோகிக்கப்பட்டவுடன், உலகமனைத்தும் இவைகளாலும் பலவித ரூபங்களைத்தரித்த மற்ற அனேகம் பிராணிகளாலும் வியாபிக்கப்பட்டதாயிற்று. மூன்று தலைகளையுடையவைகளும் நான்கு தெற்றிப் பற்களையுடையவைகளும் நான்கு முகங்களுள்ளவைகளும் நான்கு கைகளுள்ளவைகளும் பல ரூபங்களுடன்கூடியவைகளும் மாம்ஸத்துடனும் கொழுப்புடனும் ஊனீருடனும் எலும்புடனும் கூடினவைகளுமான பூதங்களால் அடிக்கடி கொல்லப்படுகிற அந்தத் தானவர்கள் [1] நாசத்தை அடைந்தார்கள். பாரதரே! சூரியனும் அக்னியும்போன்ற தேஜஸுள்ளவைகளும் வஜ்ராயுதத்திற்கும் அசனிக்கும் ஸமமான ஒளியுடையவைகளும் எஃகினாலானவைகளும் அழிக்கிறவைகளுமான மற்றப் பாணங்களாலும் ஒரு முகூர்த்தகாலத்திற்குள்ளாகவே எல்லா அஸுரர்களையும் வதம் செய்தேன்: அஸுரர்கள் காண்டீவத்தினின்று புறப்பட்ட பாசுபதாஸ்திரத்தினால் தாக்கி எறியப்பட்டு உயிர் துறந்து ஆகாயத்திலிருந்து கீழே விழுந்ததைப் பார்த்து, நான், முப்புரங்களை அழித்தவரான பரமசிவனை உத்தேசித்து மறுபடியும் வந்தனம் செய்தேன். திவ்யாபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட அஸுரர்கள் அவ்வாறு பாசுபதாஸ்திரத்தால் பொடிபண்ணப்பட்டதைப் பார்த்துத் தேவஸாரதியானவன் அதிக ஸந்தோஷத்தை அடைந்தான். இந்திரஸாரதியான மாதலியானவன் ஸஹிக்கமுடியாததும் தேவர்களால்கூட எவ்விதத்தாலும் நாடமுடியாததுமான அந்தக் காரியம் என்னால் செய்யப்பட்டதைக் கண்டு என்னைப் புகழ்ந்தான்.

என்னால் யுத்தத்தில் அந்தத் தானவர்கள் ஆயிரமாயிரமாகக் கொல்லப்பட்டதைப் பார்த்து மகிழ்ந்த மாதலியானவன், கை குவித்துக்கொண்டு என்னை நோக்கி, 'உன்னால் செய்யப்பட்ட இந்

---

1 வேறு பாடம்.

தக் காரியம் தேவர்களாலும் அஸுரர்களாலுங்கூடச் செய்ய முடியாததன்றோ? தேவராஜன்கூட யுத்தத்தில் இதனைச் செய்வதற்கு வல்லமையுள்ளவனல்லன். தனஞ்சய! அஸுர பட்டணத்தை அழித்தவனே! உன்விஷயத்தில் இந்திரன் பிரீதியை அடைந்துவிட்டான்; நிச்சயம். வீர! தேவர்களாலும் அஸுரர்களாலும் நாசம்செய்யத்தகாததும் ஆகாயத்தில் ஸஞ்சரிப்பதும் பெரிதுமான இந்தப் பட்டணமானது உன்னுல் சொந்தமான வீர்யபலத்தாலும் தபோபலத்தாலும் நன்குநொறுக்கப்பட்டதன்றோ?' என்னும் இந்த வசனத்தைச் சொன்னன். அந்த ஆகாச பட்டணமானது நாசம் செய்யப்பட்டுத் தானவர்களும் கொல்லப்பட்டபொழுது, பெண்களனைவரும் அதிகமாக அலறிக்கொண்டு நகரத்தினின்று வெளியில் வந்தார்கள். கூந்தலை விரித்துக்கொண்டவர்களும் மனவருத்தமுற்றவர்களும் அன்றிற்பேடுகள்போலத் துக்கித்தவர்களும் புத்திரர்களையும் தகப்பன்களையும் பிராதாக்களையும் குறித்துத் துக்கிப்பவர்களும் அழுகிறவர்களும் தீனமான குரலுள்ளவர்களும் உரக்க அலறுகின்றவர்களும் நாதர்கள் கொல்லப்பெற்றவர்களுமான அஸுர ஸ்திரீகள் மாலைகளும் பூஷணங்களும் நழுவக் கைகளால் மார்புகளில் அடித்துக்கொண்டு பூதலத்தில் விழுந்தார்கள். சோகத்துடன் கூடியதும் அழுகிழந்ததும் துக்கத்தாலும் தைன்யத்தாலும் தாக்கப்பட்டதுமான அந்த அஸுர பட்டணமானது ஒளி கெடுக்கப்பட்டதும் தலைவரை இழந்ததுமாகிப் பிரகாசிக்கவில்லை. அந்த நகரமானது (ஆகாயத்தில் தோன்றி மறைகிற மேகக் கூட்டமாகிய) கந்தர்வ நகரம் போலவும் [1] நாகம்பிடுக்கப்பட்ட மடுப்போலவும் மாங்கள்பட்டுப்போன காடுபோலவும் பார்க்கத்தகாததாயிற்று. மாதலியானவன் மனம் மிகக்களித்தவனும் காரியத்தை முடித்தவனுமான என்னை யுத்தரங்கத்தினின்று தேவராஜனுடைய அரண்மனைக்குச் சீக்கிரம் அழைத்துவந்தான். ஹிரண்யபுரத்தை அழித்தும், மகாஸுரர்களையும் நிவாதகவசர்களையும் கொன்றும், பிறகு, நான் இந்திரனை அடைந்தேன். மகாகாந்தியுள்ளவரே! மாதலியானவன், ஹிரண்யபுரத்தை அழித்ததும், மாயைகளைத் தடுத்ததும், யுத்தத்தில் மிக்க பலசாலிகளான நிவாதகவசர்களுடைய வதமும், அற்புதமானதும் மயிர்சிலிர்க்கச் செய்வதுமான காலகேயர்களுடைய வதமும் ஆகிய என்னுடைய

1 'யானை' என்பது இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு.

அந்தச் செய்கைகளனைத்தையும் நடந்தபடி தேவராஜனுக்கு விஸ்தாரமாகச் சொன்னன்.

பிறகு, ஆயிரம் கண்களையுடையவனும் தேவர்களுடனிருப்பவனும் ஸ்ரீமானுமான இந்திரபகவான் அதனைக்கேட்டு மகிழ்ந்து புன்னகையுடன் என்னை அன்போடு தழுவியும் உச்சியில் முகர்ந்தும், 'நல்லது! நல்லது!' என்று கூறினன். பிறகு, தேவராஜன் தேவர்களுடன்கூட என்னை அடிக்கடி இன்சொற்கூறி, 'பார்த்தா! யுத்தத்தில் தேவாஸுரர்களுடைய செய்கைக்கு மேற்பட்ட செய்கையே உன்னால் செய்யப்பட்டது. என்னுடைய பெரும் பகைவர்களைக் கொன்று உன்னால் குருதக்ஷிணையும் கொடுக்கப்பட்டது. தனஞ்சய! நீ இவ்வண்ணமே எப்பொழுதும் யுத்தத்தில் உறுதியாயிருக்கவேண்டும். மயங்காமலிருந்துகொண்டு அஸ்திரங்களைப் பிரயோகிக்கவேண்டும். நீ யக்ஷர்களுடனும் [1] அஸுரர்களுடனும் கந்தர்வர்களுடனும்கூடியவர்களும் பக்ஷிகளின் கூட்டங்களாடும் பன்னகர்களாடும்கூடினவர்களுமான தேவர்களாலும் தானவர்களாலும் ராக்ஷஸர்களாலும் யுத்தத்தில் ஜயிக்கமுடியாதவனன்றே? குந்திநந்தன! தர்மாத்மாவும் குந்திபுத்திரனுமான யுதிஷ்டிரன் உன்னுடைய புஜபலத்தால் ஜயிக்கப்பட்ட பூமியைப் பரிபாலிக்கப்போகிறன்' என்று சொன்னன்.

நூற்றெழுபத்தாறுவது அத்யாயம்.

நிவாதகவசயுத்தபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன், இந்திரன் தனக்கு அனுக்ரஹத்துடன் கவசம் கீரீடம் முதலியவைகளைக் கொடுத்ததை யுதிஷ்டிரருக்குச் சொல்லியதும், அவர் திவ்யாஸ்திரங்களைப்பார்க்க விரும்பியதும், அர்ஜுனன் மறுநாள் காட்டுவதாகச் சொல்லியதும்.)

பிறகு, அதிக நம்பிக்கைக்குரியவனும் தேகத்தில் பாய்ந்த அம்புகளால் மிகக் காயப்படுத்தப்பட்டவனுமான என்னைத் தேவராஜன் அனுக்ரஹித்து, ஸமயத்தில், 'பாரத! திவ்யாஸ்திரங்கள் அனைத்தும் உன்னிடத்திலிருக்கின்றன. பூமியில் மனிதனொருவனாவது உன்னை அவமதிப்பதற்குச் சக்தியுள்ளவனல்லன். புத்திர!

[1] அஸுரர் தானவர் என்று வருதலால் அஸுரர் தனுபுத்ரரல்லாதமற்றவரென்று கொள்ளவேண்டும்.

பீஷ்மர், த்ரோணர், கிருபர், கர்ணன், சகுனி ஆகிய இவர்கள் (மற்ற) அரசர்களோடு சேர்ந்தும் யுத்தத்தில் நிற்கின்ற 'உன்னுடைய பதினேறில் ஓர் அம்சத்துக்கும் ஈடாகார்' என்னும் இந்தவசனத்தை உரைத்தான். பிரபுவும் தேவனுமான இந்திரன் சரீரத்தைக் காக்கிறதும் உடைக்கமுடியாததுமான இந்தத் திவ்யகவசத்தையும் பொன்மயமான மாலையையும் பேரொலியுள்ள தேவதத்தமென்கிற சங்கத்தையும் 1 எனக்குக் கொடுத்தான். இந்திரன் தானே இந்தத் திவ்ய கிரீடத்தையும் (என்தலையில்) சூட்டினன். இந்திரன், பிறகு, அழகியனவையும் பெரியனவையுமான இந்தத் திவ்ய வஸ்திரங்களையும் திவ்யாபரணங்களையும் எனக்குக் கொடுத்தான். வேந்தே! இவ்வண்ணம் நன்றாகப் பூஜிக்கப்பட்டுப் புண்யமான அந்த இந்திரனுடைய அரண்மனையில் கந்தர்வச் சிறுவர்களோடுகூடி ஸுகமாக வஸித்துக்கொண்டிருந்தேன். பிறகு, தேவர்களோடுகூட மகிழ்ந்த இந்திரன் என்னைப் பார்த்து, 'அர்ஜுன! உனக்குச் செல்வதற்கு இது ஸமயம். ஏனெனில், உன்னுடைய ப்ராதாக்கள் நினைக்கிறார்கள்' என்று சொன்னான். பாரதரே! அரசரே! சூதாட்டத்தாலுண்டான துன்பத்தை நினைத்துக்கொண்டு நான் இப்படி ஐந்துவர்ஷகாலம் இந்திரனுடைய அரண்மனையில் வஸித்தேன். பிறகு, ப்ராதாக்களால் சூழப்பட்டிருக்கிற உம்மை இந்தக் கந்தமாதனமலையை அடைந்து இதனுடைய சிகரத்தில் கண்டேன்' என்று சொன்னான்.

யுதிஷ்டிரர், 'பாரத! தனஞ்சய! பாக்கிய விசேஷத்தால் உன்னால் அஸ்த்ரங்கள் அடையப்பட்டன; தேவர்களுக்கு ஈச்வரனும் ப்ரபுவுமான தேவராஜனும் பாக்கிய விசேஷத்தால் ஆராதிக்கப்பட்டான்; பகைவர்களை வாட்டுபவனே! பகவானான ஸ்தாணுவும் பார்வதியுடன்கூடப் பாக்கிய விசேஷத்தால் நேரில் காணப்பட்டார்; குற்றமற்றவனே! உன்னால் சொர்க்கத்திலுள்ள மகிழ்விக்கப்பட்டார். பரதச்ரேஷ்டனே! பாக்கிய விசேஷத்தால் நீ லோகபாலர்களின் தேஜஸ்களைப் பெற்றாய். பார்த்த! பாக்கிய விசேஷத்தால் விருத்தி அடைகிறாய். பாக்கிய விசேஷத்தால் நீ திரும்பிவந்தாய். சுத்தகர்மா! பட்டணங்களுடைய வரிசைகளுள்ள இந்தப் பூமியையும் முழுமையும் ஜயித்து எனக்குக் கொடுத்துவிட்டதாக இப்பொழுது நான் பார்க்கிறேன். திருதராஷ்ட்ரருடைய புத்ரர்களையும் வஞ்சிக்கப்பட்டவர்களாக

1 இரண்டாம் தலையில் ஒரு சொல் விடப்பட்டது.

நான் எண்ணுகிறேன். பாரத! எந்தத் திவ்யாஸ்திரங்களால் அப்படி வல்லவர்களான அந்த நிவாதகவசர்கள் கொல்லப்பட்டார்களோ அப்படிப்பட்ட இந்தத் திவ்யாஸ்திரங்களை நான் பார்க்கவும் விரும்புகிறேன்' என்று சொல்ல, அர்ஜுனன், 'தேவர்களான நிவாதகவசர்கள் என்னால் எந்த அஸ்திரங்களால் நாசம்பண்ணப் பட்டார்களோ அந்தத் திவ்யாஸ்திரங்களையும் நீர் நாளைக் காலையில் பார்ப்பீர்' என்று சொன்னான். தனஞ்சயன் அவ்விடத்தில் இவ்வண்ணமாகத் தன்வரவைச் சொல்லிவிட்டு, அந்த ராத்திரி எல்லாப் பிராதாக்களோடும் வஸித்தான்.

நூற்றெழுபத்தேழாவது அத்யாயம்.

நிவாதகவசயுத்தபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் யுதிஷ்டிரருக்குத் திவ்யாஸ்திரங்களைக் காட்டியதும், அஸ்திரங்களின் தேஜஸினால் உலகங்களுக்குக் கலக்கம் உண்டாகவே, இந்திரனுடைய நாண்டுதலால் நாரதர் அர்ஜுனனைக்கண்டு அஸ்திரங்களைக் காட்டக்கூடாதென்று தடுத்ததும்.)

அந்த இரவு சென்றவுடன், தர்மராஜரான யுதிஷ்டிரர் எழுந்திருந்து பிராதாக்களோடுகூட அவசியமாகச் செய்யத்தக்க காரியங்களைச் செய்தார். பிறகு, அந்த யுதிஷ்டிரர் மாதாவுக்கு ஸுகத்தை உண்டுபண்ணுகிற அர்ஜுனனை நோக்கி, 'குந்தீநந்தன! உன்னால் எந்த அஸ்திரங்களால் தானவர்கள் ஜயிக்கப்பட்டார்களோ அந்த அஸ்திரங்களைக் காண்பிப்பாயாக' என்று கட்டளையிட்டார்.

அரசரே! பாரதரே! பிறகு, பாண்டுவின் புதல்வனை தனஞ்சயன், தேவர்களால் கொடுக்கப்பட்ட அந்தத் திவ்யாஸ்திரங்களைக் காட்டலானான். மகாதேஜஸ்வியும் பாண்டுவின் புதல்வனும் பிரகாசிப்பவனும் நீண்டபுஜங்களுள்ளவனும் கெளந்தேயனுமான அந்தத் தனஞ்சயன், அதிகமான சுத்தியைப் பெற்றவனாக நியாயப்படி த்ரியம்பகருக்கும் இந்திரனுக்கும் நமஸ்காரம் செய்து மலைகளாகிற மூக்கணையுடனும் சக்காங்களுடனும் அச்சுடனும் கூடியதும் மங்களகரமான மூங்கில்களையுடையதும் 1 த்ரிவேணு

---

1 'அச்சையும் மூக்கணையையும் சேர்க்கும் முப்பட்டையான மரம்' என்பது பழைய உரை.

வ்ள்ளதுமான மனத்தினால் ஏற்படுத்தப்பட்ட பூமியாகிற ரதத்திலேறி விளங்குகிறவனாகவும் நல்ல ஒளி பொருந்திய அங்கத் திவ்ய கவசத்தால் நன்கு மூடப்பட்டவனாகவும் காண்டீவ மென்கிற வில்லையும் தேவதத்தமென்கிற சங்கத்தையும் எடுத்து மிக விளங்குகிறவனாகவும் வரிசையாக அந்தத் திவ்யாஸ்திரங்களைக் காண்பிக்கத்தொடங்கினான். பிறகு, அந்தத் திவ்யாஸ்திரங்கள் பிரயோகிக்கப்படும்பொழுது, (அர்ஜுனனால்) கால்களால் திட மாக மிதிக்கப்பட்ட பூமியானது மரங்களுடன்கூட நடுக்கமுற்றது; நதிகளும் கலங்கின; அப்படியே பெருங்கடலும் தத்தளித்தது; மலைகளும் வெடித்தன; காற்று வீசவில்லை; ஸூர்யன் பிரகாசிக்க வில்லை; நெருப்பு ஜ்வலிக்கவில்லை; பிராம்மணர்களுக்கு என்ன பிரயாசைப்பட்டும் வேதங்கள் நினைவுக்கு வரவில்லை; ஜனமேஜ யரே! பூமிக்குள்ளிருந்த பிராணிகள் துன்பப்படுத்தப்பட்டு மேலே எழுந்து பாண்டவனைச் சூழ்ந்துகொண்டன. நடுக்கமுற்ற வைகளும் அஸ்திரங்களால் எரிக்கப்படுகின்றவைகளும் முகம் வேறுபட்டவைகளுமான அந்தப் பிராணிகளனைத்தும் கைகுவித் துக்கொண்டு அப்பொழுது தனஞ்சயனை (உயிருக்கு) வேண்டிக் கொண்டன. பிறகு, பிரம்மரிஷிகளும் ஸித்தர்களும் மஹரிஷி களும் ஜங்கமங்களான எல்லாப் பிராணிகளுமே சேரில் வந்தனர். சிறந்த தேவரிஷிகளும் தேவர்களும் யக்ஷர்களும் ராக்ஷஸர்களும் கந்தர்வர்களும் அப்படியே பக்ஷிகளும் ஆகாயத்தில் ஸஞ்சரிக் கின்ற எல்லாப் பிராணிகளுமே சேரில் வந்தனர். பிறகு, பிரம்ம தேவரும் எல்லா லோகபாலர்களும் ப்ரமதகணங்களுடன்கூடின பகவான் மஹாதேவரும் அப்பொழுது சேரில் வந்தார்கள். மஹா ராஜரே! பிறகு, தேவலோகத்திலுண்டான புஷ்பங்களோடுகூடின காற்றானது அர்ஜுனன்மீது காற்புறங்களிலும் விசித்திரமான புஷ்பங்களை வாரி இறைத்தது. தேவர்களால் ஏவப்பட்ட கந்தர் வர்கள் பலவிதக்காதைகளைப் பாடினர்கள். தேவந்தரே! அப் ஸரஸுகளின் கூட்டங்கள் கூடிக்கூடி நடித்தன.

அரசரே! அப்படிப்பட்ட அந்த ஸமயத்தில், தேவர்களால் ஏவப்பட்ட நாரதர் வந்து அர்ஜுனனைப் பார்த்து, 'பாரத! அர்ஜுன! அர்ஜுன! திவ்யாஸ்திரங்களைப் பிரயோகம் செய் யாதே. இந்த அஸ்திரங்கள், குறிவைத்தடிக்கத்தக்க லக்ஷ்யமில் லாமலிருக்கும் சமயத்தில் எவ்விதத்தாலும் பிரயோகிக்கத் தக்கவைகளல்ல. குருநந்தன! லக்ஷ்யத்திலும் ஆபத்தான அடை

யாதவன் ஒருபொழுதும் பிரயோகிக்கக்கூடாது. அப்படி அஸ்திரங்களைப் பிரயோகித்தால் பெரிதான தோஷம் நேரும். தனஞ்சய! இந்த அஸ்திரங்கள் சாஸ்திரப்படி ரக்ஷிக்கப்படுமாகில் நல்ல பலமுள்ளவைகளும் ஸுகத்தை உண்டுபண்ணத் தக்கவைகளுமாகும்; ஸம்சயமில்லை. பாண்டவ! இவைகள் ரக்ஷிக்கப்படாமற்போனால் மூவுலகங்களுடைய விநாசத்திற்கும் காரணமாகும். மீண்டும் இவ்வண்ணம் ஒருபொழுதும் செய்யாதே. 'அஜாத சத்துருவே! அர்ஜுனனால் பகைவர்களைக் கொல்வதற்காகப் பிரயோகிக்கப்படுகின்ற அந்த அஸ்திரங்களை யுத்தத்தில் நீயும் பார்ப்பாய்' என்று சொன்னார். பரதஸ்ரேஷ்டரே! பிறகு, எல்லாத் தேவர்களும் மற்றும் அங்கு வந்திருந்தவர்களும் பார்த்தனைத் தடுத்துவிட்டு வந்தபடியே சென்றார்கள். குருவம்சத்தில் உதித்தவரே! அவர்களனைவரும் திரும்பிப்போனபிறகு, அந்தப் பாண்டவர்கள் ஸந்தோஷத்துடன்கூடினவர்களாக அதேவனத்தில் திரௌபதியுடன் வாஸம்செய்தார்கள்" என்று கூறினார்.

நிவாதகவசயுத்தபர்வம் முற்றிற்று.

நூற்றெழுபத்தேட்டாவது அத்யாயம்.

[1] ஆஜகர பர்வம்.

(அர்ஜுனன் வந்தபின் யுதிஷ்டிரர் கந்தமாதனமலையினின்று இறங்கு முயன்றதும், லோமசர் பாண்டவர்களுக்கு ஜயத்தைக்கொடுக்கிற ஆசீர்வசனங்களைக்கூறி ஸ்வர்க்கம் சென்றதும்.)

ஜனமேஜயர், "அஸ்திரங்களில் தேர்ச்சிபெற்றவனும் ரதிகர்களுள் சிறந்த வீரனுமான அந்த அர்ஜுனன் இந்திரனுடைய மாளிகையிலிருந்து திரும்பி வந்தபிறகு, பார்த்தர்கள் சூரனான தனஞ்சயனுடன் சேர்ந்து, அதற்குப்பின்பு என்ன செய்தார்கள்?" என்று வினவ, வைசம்பாயனர் சொல்லலானார்.

"குபேரனுடைய உத்யானவனத்தை அடைந்த வீரர்களான அந்த அரசர்கள் இந்திரனுக்கு நிகரான அர்ஜுனரோடு அந்த வனங்களிலும் மிக அழகிய அந்தச் சிறந்த மலையிலும் விளையாடினார்கள். வில்லாளியும் அஸ்திரங்களில் எப்பொழுதும் முயற்சியுள்ளவனும் அரசனுமான அந்தக் கிரீடியானவன் இணையில்லாதவைகளான அந்த வீடுகளையும் பலவகை மரங்

---

[1] அஜகரம் = மலைப்பாம்பு.

களால் சூழப்பட்ட விளையாட்டிடங்களையும் பார்த்துக்கொண்டு பலவாறு ஸஞ்சரித்தான். அரசரே! ராஜகுமாரர்களான பாண்டவர்கள் அரசனான குபேரனுடைய அனுக்ரகத்தாலுண்டான வாஸஸ்தானத்தைப்பெற்றபின் மனிதர்களுடைய ஐச்வர்யத்தை விரும்பவில்லை. அவர்களுக்கு அந்தக்காலம் மங்களகரமாயிருந்தது. பாண்டவர்கள் அந்தக் கந்தமாதனத்தில் அர்ஜுனனோடு சேர்ந்து நான்கு வருஷகாலம் ஒருதினம்போல் ஸுகமாக வஸித்தார்கள். வனங்களில் வஸிக்கின்ற பாண்டவர்களுக்கு முந்தின ஆறுவருஷங்களும் பிந்தின நான்குவருஷங்களுமாகச் சேர்ந்து பத்துவருஷங்களும் மங்களகரமாகச் சென்றன. பிறகு, பலசாலியான பீமஸேனனும் அர்ஜுனனும் தேவராஜனுக்கு ஸமானர்களும் வீரர்களுமான நகுல ஸஹதேவர்களும் அரசரான யுதிஷ்டிரருடைய ஸமீபத்தில் உட்கார்ந்து ஏகாந்தமான ஸமயத்தை அடைந்து கூறலாயினர்.

'குருராஜரே! உம்முடைய பிரதிஜ்ஞையை உண்மையாகச் செய்யக்கருதியும் உம்மை அனுஸரித்து உமக்குப் பிரியத்தைச் செய்ய விரும்பியும் நாங்கள் பரிஜனங்களுடன்கூடின துர்யோதனனைக் கொல்வதற்காகக் காடுகளைவிட்டுச் செல்லவில்லை. ஸுகத்துக்குத் தகுந்தவர்களான நாம் துர்யோதனனால் ஸுகம் கவரப்பட்டவர்களாக இந்தப் பதிமூன்றாவது வருஷத்தில் வனத்தில் வஸிக்கிறோம். அதமமான புத்தியும் நடையுமுள்ள அந்தத் துர்யோதனனை வஞ்சித்து அஜ்ஞாதவாஸத்தை ஸுகமாக அடைவோம். மஹாராஜரே! உம்முடைய கட்டளையினால் சங்கையற்றவர்களாகக் கௌரவத்தைவிட்டுக் காடுகளில் ஸஞ்சரிக்கிறோம். ராஜ்யாஸனபவத்தில் ஆசையுள்ளவர்களான அந்தக் கௌரவர்கள் ஸமீபத்தில் வாஸம்செய்தால் நம்மை அறிந்துவிடுவார்கள்; தூரதேசத்திலிருந்தால் நம்மை அறியமாட்டார்கள். அப்படிப்பட்ட தூரதேசத்தில் ஒருவருஷகாலம் மறைந்து ஸுகமாக வஸித்துச் சத்துருவதமாகிற புஷ்பத்துடனும் ராஜ்யப்ராப்தியாகிற பழத்துடனும்கூடின வைரத்தை அரசர்களுள் அதமனும் பரிஜனங்களால் சூழப்பட்டவனுமான அந்தத் துர்யோதனனுக்குத் 1 திருப்பிக்கொடுத்து மனிதர்களுள் அதமனை அந்தத் துர்யோதனனை ஸபையில் ராஜ்யத்தினின்று எடுத்துவிடுவோம். தர்மராஜரே! பிறகு, பூமியை அடைவீராக. ராதேயரே! ஸ்வர்க்கம்

---

1 தீமை செய்தவனுக்குத் தீமையே செய்க என்பது கருத்து.

போன்ற இந்த இடத்தில் ஸஞ்சரிக்கின்ற நாம் சோகத்தைப் போக்கிக்கொள்ளலாம். பாரதரே! ஆனால், புண்யஸம்பந்தம் பெற்ற உம்முடைய கீர்த்தியானது ஜங்கமங்களும் ஸ்தாவரங்களுமான உலகங்களில் அழிந்துபோய்விடுமன்றே? ஆகையால், கௌரவஸ்ரேஷ்டர்களுடைய ராஜ்யத்தை அடைந்து, பிறகு, பெரும்புகழையும், அதற்குமேல், நல்ல க்ரியைகளையும் அடைதல் கூடும். அரசரே! குபேரனிடத்தினின்று அடைகிற இந்த ஸுகமோ உம்மால் எப்பொழுதும் அடையக்கூடியது. பாரதரே! குற்றம் செய்தவர்களான பகைவர்களைக் கொல்வதிலாவது அவர்களைச் சிறைசெய்வதிலாவது புத்தியைச் செலுத்தும். வேந்தரே! வஜ்ராயுதத்தைக் கையில் தாங்கின மஹேந்திரன்கூட நேரில் யுத்தரங்கத்தை அடைந்து உம்முடைய உக்ரமான தேஜஸைத் தாங்கமாட்டான். தர்மராஜரே! உம்முடைய கார்யஸித்தியின்பொருட்டு முயற்சியுள்ளவர்களான அந்தக் கிருஷ்ணனும் ஸாத்யகியும் யுத்தத்திற்காகத் தேவர்களால் எதிர்க்கப்பட்டாலும் ஒருபொழுதும் மனவருத்தத்தைப் பாராட்ட மாட்டார்கள். அரசரே! கிருஷ்ணன் எப்படி பலத்திலில் நிகரில்லாதவரோ அப்படியே ஸாத்யகியும் நிகரில்லாதவன். ராஜஸ்ரேஷ்டரே! கிருஷ்ணன் எவ்வாறு அந்த யாதவர்களோடு கூடி உம்முடைய கார்யஸித்தியின்பொருட்டு முயற்சியுள்ளவரோ அவ்வாறே வீரர்களும் அஸ்திரப்ரயோகத்தில் ஸமர்த்தர்களுமான இந்த நகுலஸஹதேவர்களும் முயற்சியுள்ளவர்களாக இருக்கிறார்கள். உம்முடைய தனலாபத்தையும் ஜ்ய்யத்தாலுண்டான மேன்மையையும் பிரதானமாகக்கொண்டவர்களான நாங்கள் பகைவர்களை எதிர்த்துப் போர்புரிந்து வைரசாந்தியைச் செய்யப் போகிறோம்' என்று ஹிதமாயும் ப்ரியமாயுமிருக்கிற வசனத்தை உரைத்தார்கள்.

பிறகு, பெரிய மனமுள்ளவரும் மிகச்சிறந்தவருமான தர்மபுத்திரர், அவர்களுடைய அந்த அபிப்ராயத்தைத் தெரிந்துகொண்டு, அரசனை வைப்ரவணனுடைய வாஸஸ்தானத்தை அடைந்து வலமாகச் சுற்றிவந்தார். தர்மராஜர் வீடுகளையும் நதிகளையும் தடாகங்களையும் எல்லா ராக்ஷஸர்களையும் கேட்டு விடைபெற்றுக்கொண்டு வந்தவழியை நோக்கலானார். பிறகு, பெரிய மனமுள்ளவரும் பரிசுத்தமான புத்தியுள்ளவருமான அந்த யுதிஷ்டிரர் மலைகளுள் சிறந்த மலையை மறுபடியும் நோக்கி, 'பர்வதராஜனே! காரியங்களை முடித்தவனாகவும் ஸுஹ்ருத்துக்களுடன்

சேர்ந்தவனுகவும் சத்துருக்களை ஜயித்து ராஜ்யத்தையும் திருப்பி யடைந்து தவம்புரிவதற்காக மனத்தை அடக்கினவனுகவும் உன்னை நான் மறுபடியும் பார்ப்பேன்' என்று சொல்லிவிட்டுப் பிரயாணத் தில் புத்தியைச் செலுத்தினர்; எல்லாத் தம்பிமார்களாலும் பிராம்மணர்களாலும் சூழப்பட்டவராக மீண்டும் அந்த வழியிலே லேயே திரும்பினர். இவர்களைக் கூட்டம் கூட்டமாக மலை அருவி களில் கடோற்கசன் முன்போலவே சுமந்தான். மனமகிழ்ந்தவ ரும் நிலைத்த பிரம்மதேஜஸுள்ளவருமான அந்த லோமச மஹரிஷி யானவர், புறப்பட்ட அந்தப் பாண்டவர்களனைவருக்கும் தகப்பன் புத்திரர்களுக்கு உபதேசிப்பதுபோல உபதேசித்து அப்பொழுது அவர்களுக்கு விஜயத்தையும் சொல்லி ஸ்வர்க்கத்தை அடைந்தார். புருஷச்ரேஷ்டர்களான பாண்டவர்கள் அந்த ஆர்ஷ்டிஷேணரா லும் அவ்வாறே உபதேசிக்கப்பட்டவர்களாக அழகிய தீர்த்தங் களையும் தர்மாரண்யங்களையும் மற்றப் பெரிய தடாகங்களையும் பார்த்துக்கொண்டு சென்றார்கள்.

நூற்றெழுபத்தொன்பதாவது அத்யாயம்.

ஆஜகரபர்வம். (தொடர்ச்சி.)

(பாண்டவர்கள் கந்தமாதனத்தினின்று இறங்கி முறையே கைலா ஸத்தையும் வ்ருஷபர்வா ஸுபாது முதலியவர்களின் இருப் பிடத்தையுமடைந்து திரும்பவும் த்வைதவனம் வந்து ஸரஸ்வதீநதியின் கரையில் ஸுகமாக மகிழ்ந்திருந்தது.)

மலை அருவிகளாலும் திக்கஜங்களாலும் கின்னரர்களாலும் பறவைகளாலுங்கூடியதும் ஸுகமான இருப்பிடமுமான சிறந்த கந்தமாதன மலையை விட்டு அகலுகின்ற பரதச்ரேஷ்டர்களான அந் தப் பாண்டவர்களுக்கு மகிழ்ச்சி உண்டாகவில்லை. பிறகு, குபேர னுக்குப் பிரியமானதும் மேகங்களால் பிரகாசிப்பதுமான கைலாய மலையைப் பார்த்துப் பரதச்ரேஷ்டர்களான அவர்களுக்கு மறுபடி யும் பெருமகிழ்ச்சி உண்டாயிற்று. வீரர்களும் ப்ரஸித்திபெற்ற வர்களும் வில்லாளிகளும் கத்தியைப் பிடித்தவர்களுமான அந்தப் புருஷச்ரேஷ்டர்கள் மிக மேடான இடங்களையும் மலைக்கணவாய் களையும் சிங்கங்களிருக்குமிடங்களையும் மலைக்குகைகளையும் ஆங்

காங்குப் பலவிதமான பள்ளத்தாக்குக்களையும் நன்றுகப் பார்த்துக்கொண்டும் அப்படியே மிருகங்களாலும் பறவைகளாலும் யானைகளாலும் வியாபிக்கப்பட்ட மற்றப் பெரிய காடுகளையும் பார்த்துக்கொண்டும் சென்றார்கள். அழகிய காடுகள், நதிகள், தடாகங்கள் மலைகளிலுள்ள சிறிய குகைகள் மலையிலுள்ள பெரிய குகைகள் இவைகள் அடிக்கடி இரவு வந்தபொழுது அந்தப் புருஷ ஸ்ரேஷ்டர்களுக்கு இருப்பிடமாயின. அவர்கள் பலவாறான தூர்க் கங்களில் வாஸம் செய்து நினைத்தற்கரிய உருவமுள்ள கைலாஸத் தைத் தாண்டி, மிக அழகியதான விருஷபர்வாவினுடைய அந்தச் சிறந்த ஆஸ்ரமத்தை அடைந்தார்கள். அந்தப் பார்த்தர்கள் அரசனை விருஷபர்வாவுடன் சேர்ந்து அவனால் உபசரிக்கப்பட் டுக் களைதீர்ந்து மங்களகரமான தேசாந்தரப் பிரயாணத்தை விரி வாக உள்ளபடி அந்த விருஷபர்வாவுக்குச் சொன்னார்கள். வீரர்க ளான அந்தப் பாண்டவர்கள் தேவர்களாலும் மகரிஷிகளாலும் அடையப்பட்ட அவனுடைய புண்யாஸ்ரமத்தில் ஓரிரவு ஸுகமாக வஸித்து மறுபடியுமே வாஸத்தை (விரும்பி) விசாலையென்னும் பதரியை நோக்கி ஸுகமாக வந்தார்கள்.

பிறகு, மஹானுபாவர்களும் நாராயணருடைய ஸ்தானத்தை அடைந்தவர்களுமான பாண்டவர்களனைவரும் குபேரனுக்குப் பிரி யமானதும் தேவர்களாலும் ஸித்தர்களாலும் அடையப்பட்டதுமான காமரை ஓடையை நன்குபார்த்துத் துக்கம் நீங்கினவர்களாகி அந்த இடத்தில் வஸித்தார்கள். எல்லா மனிதர்களுள்ளும் சிலைமைவாய்ந் தவர்களான பாண்டுவின் புதல்வர்கள் அந்தக் காமரைஓடையைக் கண்டு சோகம் நீங்கி நந்தனவனத்தில் வாஸத்தைப்பெற்று மனமா சற்றவர்களான பிரம்மரிஷிகள்போல மகிழ்ந்தார்கள். நரஸ்ரேஷ்டர் களான பாண்டவர்களனைவரும் ஸுகமாக ஒருமாதகாலம் பதரி காஸ்ரமத்தில் மகிழ்ந்திருந்து, பிறகு, முன்போனவழியிலேயே அடைவில் கிராதர்களுக்கு அரசனை ஸுபாகுவினுடைய தேசத்தை நோக்கி வந்தார்கள்; சீனதேசத்தையும் துஷாரதேசத் தையும் கரததேசத்தையும் மிக அழகிய குளிந்தனுடைய தேச மனைத்தையும் பிரவேசிக்கமுடியாத இமயமலையைச் சார்ந்த பிர தேசங்களையும் தாண்டி ஸுபாகுவினுடைய நகரத்தைக் கண்டார் கள். அந்த ஸுபாகுவென்கிற அரசன் ராஜபுத்திரர்களும் ராஜ பௌத்திரர்களுமான அந்தப் பாண்டவர்களனைவரும் தன் தேசத்தில் வந்திருப்பதைக் கேட்டு அன்புடன் அவர்களை எதிர்

கொண்டு வரவேற்றான். கௌரவஸ்ரேஷ்டர்களான பாண்டவர்களும் ஸுபாகுவை மகிழ்வித்தார்கள். அந்தப் • பாண்டவர்களனைவரும், ஸுபாகுவென்கிற அரசனும் 1 விசோகன் முதலிய புத்திரர்களோடும் இந்திரசேனனுடன் சேர்ந்த பரிசாரகர்களோடும் சமையல் கட்டிலிருந்த 2 சமையற்காரர்களோடும் சேர்ந்து, அந்த இடத்தில் ஓர் இரவு ஸுகமாக வாஸம் செய்து, ஸாரதிகளையும் எல்லா ரதங்களையும் அழைத்துக்கொண்டு, அனுசரர்களோடுகூடின கடோத்கசனை அனுப்பி விட்டு, பிறகு, யமுனையின் உத்பத்திஸ்தானமான சிறந்தமலையை நோக்கிச் சென்றார்கள். புருஷர்களுள் சிறந்த வீரர்களான பாண்டவர்கள் அருவிகளுடன்கூடியதும் பனியாகிற உத்தரியத்தையும் வெளுப்பும் சிவப்புமான தாழ்வரையாகிற (தலைப்பாகையையும்) உடையதுமான அந்த மலையில் விசாகயூபமென்கிற ஸ்தலத்தை அடைந்து அப்பொழுது வாஸம் செய்தார்கள். வேட்டையில் அதிகப்பற்றுதலுள்ள பாண்டவர்கள் பன்றிகளாலும் பலவகை மிருகங்களாலும் பலவகைப் பறவைகளாலும் வியாபிக்கப்பட்டதும் குபேரனுடைய உத்யானவனம்போலப் பிரகாசிக்கின்றதுமான பெரிய காட்டை க்ஷேமமாக அடைந்து அங்கே ஒரு வருஷகாலம் மகிழ்ந்திருந்தார்கள். அந்த இடத்தில் அதிக பலமுள்ளதும் பசியினால் பீடிக்கப்பட்டதும் யமன்போலப் பயங்கரமானதுமுள்ளதும் மலையினுடைய குகையில் இருப்பதுமான பெரும் பாம்பின்வாயில் அகப்பட்டுப் பீமஸேனன் வ்யஸனத்தாலும் மதிமயக்கத்தாலும் துன்பமுற்ற மனமுள்ளவனானான். அங்கே, தர்மவான்களுள் சிறந்தவரும் முடிவற்ற தேஜஸ்ஸுள்ளவருமான யுதிஷ்டிரர் மஹாபாம்பினால் உடம்புமுழுவதும் சுற்றப்பட்ட பீம

1 'ஸுதை:' என்பது கிருஷ்ணசார்யர் பதிப்பின் பாடமும் நீலகண்ட வியாக்யானம் பம்பாய்ப் பதிப்பின் பாடமுமாம்; 'விசோகன் முதலிய தேர்ப்பாகர்களோடும்' என்பது இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு. அதற்கு, 'ஸுதை:' என்னும் பாடம் இருக்கவேண்டும். பாண்டவபுத்ரர்களில் விசோகனென்னும் பெயருடையவன் காணப்பட்டாமையாலும் அவர்கள் பாண்டவர்களுடன் வனம் வந்தது சொல்லப்பட்டாமையாலும் பீமஸேனனுடைய தேர்ப்பாகனுக்கு விசோகனென்ற பெயரிருத்தலாலும், 'ஸுதை:' என்ற பாடமே பொருத்தமுடையதென்று தோன்றுகிறது.

2 'பௌரோகவை:' என்பது மூலம்; 'கூடார முதலியவற்றைச் சுமந்து முன்னே செல்பவர்களுடன்' என்பது பழைய உரை.

ஸேனனுக்குத் திட்டுப்போலாகி அவனை விடுவித்தார். பிரஸித்தர்களான அந்தக் கௌரவர்கள், பிறகு, ஸமீபித்து வருகின்ற பன்னிரண்டாவது வருஷம் முழுவதும் வனத்தில் ஸுகமாக மகிழ்ந்து வஸிப்பதற்காகக் குபேரனுடைய உத்யானம்போலப் பிரகாசிக்கின்ற அந்த வனத்தினின்று காந்தியினால் ஜ்வலிப்பவர்களாகவும் தவத்துடன்கூடியவர்களாகவும் புறப்பட்டார்கள். பிறகு, எப்பொழுதும் வில்வித்தை பயிலுதலையே முக்கியமான பொழுதுபோக்காகவுடைய பாண்டவர்கள் அந்த இடத்தினின்று பாலவனங்களின் ஓரமாகச்சென்று வலிக்கவிரும்பி ஸரஸ்வதீ நதியை அடைந்து அங்கிருந்து த்வைதவனத்தை நோக்கி வந்தார்கள். அந்தப் பாண்டவர்கள் த்வைதவனத்தில் வஸிப்பதற்காக வந்ததைக் கண்டு, தவத்தையுடையவர்களும் ஐம்பொறியடக்கினவர்களும் ஆசாரமுள்ளவர்களும் ஸமாதியுள்ளவர்களும் தர்ப்பத்தையும் தீர்த்தபாத்திரத்தையுமுடையவர்களும் கற்களால் பொடிபண்ணப்பட்ட தான்யங்களைப் பக்ஷிப்பவர்களுமான மஹரிஷிகள் அங்கே பாண்டவர்களை நோக்கி வந்தார்கள். இறலிமரங்களும் ருக்ஷராக்ஷமரங்களும் [1] ரௌஹீதகமரங்களும் வஞ்சிமரங்களும் அப்படியே இலந்தைமரங்களும் கருங்காலிகளும் வாகைமரங்களும் பில்வமரங்களும் புன்கமரங்களும் பீலுவிருக்ஷங்களும் வன்னிமரங்களும் மூங்கில்களும் ஸரஸ்வதி நதியின் கரையில் முளைத்து வளர்ந்திருந்தன. ராஜகுமாரர்களான பாண்டவர்கள் யக்ஷர்களாலும் கந்தர்வர்களாலும் மஹரிஷிகளாலும் ரமணீயமானதும் தேவர்களுக்கு வாஸஸ்தானம்போலிருப்பதுமான அந்த ஸரஸ்வதிநதியின் கரையில் ப்ரீதியுடன்கூடியவர்களாக ஸஞ்சரித்துக்கொண்டு ஸுகமாக மகிழ்ந்திருந்தார்கள்" என்று கூறினர்.

நூற்றெண்பதாவது அத்யாயம்.

ஆஜகரபர்வம். (தொடர்ச்சி.)

(பீமன் வனத்தில் வேட்டைக்காகத் திரிகையில் பெரிய மலைப்பாம்பினால் பிடிக்கப்பட்டது.)

ஜனமேஜயர், "மஹரிஷியே! பதினாயிரம் யானைகளின் பலமுள்ளவனும் பயங்கரமான பராக்கிரமமுள்ளவனுமான பீமன் அந்த

---

[1] ஆல் அரசு முதலிய சில மரங்களின் பொதுப்பெயர்.

மலைப்பாம்பினிடத்தினின்று எவ்வாறு மிக்க பயத்தை அடைந்தான்? சுர்வமுள்ளவனை எவன் தாமரைஓடையில் சண்டை செய்து யக்ஷர்களையும் ராக்ஷஸர்களையும் கொன்று புலஸ்தியவம்சத்தில் பிறந்தவனை குபேரனை யுத்தத்திற்காக அழைத்தானோ பகைவர்களைக்கொல்பவனை அந்தப் பீமஸேனனைப் பயத்தால் சுவரப்பட்டவனைகவும் ஆபத்தை அடைந்தவனைகவும் சொல்லுகிறீர். நான் இதைக் கேட்க விரும்புகிறேன். எனக்கு ஆவல் அதிகமாக இருக்கிறதன்றோ?" என்று வினவ, வைசம்பாயனர் சொல்லலானர்.

"அரசரே! அநேக ஆச்சர்யங்களுள்ள காட்டில் வஸிப்பவர்களும் உக்ரமான விற்களுள்ளவர்களுமான அந்தப் பாண்டவர்கள் ராஜரிஷியான வ்ருஷபர்வாவினுடைய ஆச்ரமத்தை அடைந்திருக்கும்போது, விற்பிடித்தவனும் கத்தியைக் கட்டிக்கொண்டவனுமான பீமஸேனன், அழகியதும் தேவர்களாலும் கந்தர்வர்களாலும் அடையப்பட்டதுமான அந்தக் காட்டைத் தற்செயலாகக் கண்டான். அந்தப் பீமஸேனன் அப்பொழுது தேவர்களாலும் ரிஷிகளாலும் ஸித்தர்களாலும் ஸஞ்சரிக்கப்பெற்றவையும், அப்ஸரஸுகளுடைய கூட்டங்களால் அடையப்பட்டவையும், சகோரங்களாலும் சக்ரவாகங்களாலும் ஜீவஜீவகங்களாலும் குயில்களாலும் பிருங்கராஜங்களாலும் ஆங்காங்கு ஒலிக்கப்பெற்றவையும், எப்பொழுதும் புஷ்பங்களோடும் பழங்களோடும் கூடிய வைகளும் குளிர்ந்த பரிசத்துடன் மெத்தென்று நடப்பவைகளும் அதிக நிழலுள்ளவைகளும் உள்ளத்தையும் கண்களையும் மகிழ்விப்பவைகளுமான மரங்களோடுகூடியவையுமான இமயமலையைச் சார்ந்த மங்களகரமான இடங்களைப் பார்த்தான். மஹாபலசாலியான அந்தப் பீமஸேனன் வைடூர்யமணிபோன்ற ஜலத்துடனும் பனிபோன்ற நிறமுள்ள பதினாயிரக் கணக்கான அன்னங்களுடனும் காரண்டவங்களுடனுங்கூடிய மலையருவிகளையும் மேகங்களுக்கு வலைகள்போன்ற தேவதாருமரங்களுடைய காடுகளையும் ஹரிசந்தன மரங்களோடு கலந்திருக்கின்ற துங்கமரங்களும் காளீயகமரங்களுமுள்ள காடுகளையும் பார்த்துக்கொண்டும் மேடு பள்ளமில்லாதவையும் தண்ணீரில்லாதவையுமான மலைவெளிகளில் வேட்டையைக் குறித்து அலைந்துகொண்டும் சுத்தமான அம்புகளால் மிருகங்களை அடித்துக்கொண்டும் திரிந்தான். அநேக யானைகளின் பலமுள்ளவையும் அதிக பலசாலியும்

பருத்தமேகாள்களுள்ளவனும் பயங்கரமான பராக்கிரமத்தை யுடையவனும் பிரஸித்திபெற்றவனும் பயங்கரனுமான பீமலேனன் அந்தக் காட்டில் பெரிய பன்றியை அடித்துப் பன்றிகளுடன்கூடின மான்களையும் எருமைகளையும் ஆங்காங்கு அடித்தான். அநேக யானைகளின் பலமுள்ளவனும் அநேக மனிதர்களைத்தடுத்து யுத்தம் செய்யக்கூடியவனும் சிங்கமும் புலியும் போன்ற பராக்ரமமுள்ளவனுமான அந்தப் பீமலேனன் பூமியின் பிரதேசங்களையும் காடுகளையும் ஒலிக்கச்செய்துகொண்டு அந்தக் காட்டில் மரங்களை வேரோடு பறித்தான்; வேகத்தால் அவைகளை ஒடிக்கவும் ஒடித்தான். அச்சத்தைச் செய்பவனும் அஞ்சாதவனும் நெடுநாளாகச் சேர்ந்த கொழுப்புள்ளவனுமான பீமலேனன் மலையினுடைய சிகரங்களை நொறுக்கிக்கொண்டும் ஒலிக்கச்செய்துகொண்டும் கவலையற்று மரங்களைக் கீழே தள்ளிக் கொண்டும் நாதத்தினால் பூமியை எங்கும் நிரப்பிக்கொண்டும் அடிக்கடி தோள்களைத் தட்டிக்கொண்டும் சிங்கநாதம் செய்துகொண்டும் கைத்தாளம்போட்டுக்கொண்டும் அப்பொழுது வனத்தில் வேகத்தோடு திரிந்தான். அதிக பலமுள்ள சிறந்த யானைகளும் அதிக பலமுள்ள சிங்கங்களும் பீமலேனனுடைய சத்தத்தால் பயத்தினால் குகைகளை விட்டன. மிக்க பயங்கரமான காட்டில் மிருகங்களை அடைய விரும்பமுள்ள பீமலேனன் பயமில்லாமல் ஓரிட்டத்தில் ஓடுகிறவனுகவும் ஓரிடத்தில் நிற்கிறவனுகவும் அப்படியே ஓரிடத்தில் உட்காருகிறவனுகவும் ஸஞ்சரித்தான். மனிதர்களுள் சிறந்தவனும் காட்டில் ஸஞ்சரிக்கின்ற வேடன் போன்றவனும் மஹாபலசாலியுமான அந்தப் பீமலேனன் அந்தக் காட்டில் எங்கும் கால்களாலேயே நடந்து சென்றான். அதிக மனைதைர்யத்துடனும் பராக்ரமத்துடனும்கூடிய அந்தப் பீமலேனன் பெரிய காட்டில் பிரவேசித்து, எல்லாப் பிராணிகளையும் நடுங்கச் செய்துகொண்டு அத்புதமான நாதங்களைச் செய்தான். பிறகு, பீமனுடைய சத்தத்தினால் பயந்தவைகளும் குகையில் படுத்துக்கொண்டிருப்பவைகளுமான ஸர்ப்பங்கள் வேகத்தோடு வெளியில் சென்றன. பிறகு, தேவஸ்ரேஷ்டன்போலப் பிரகாசிப்பவனும் மஹா பலசாலியுமான பீமலேனன் மெதுவாக அவைகளைப் பின்தொடர்ந்து சென்றான்.

அந்தப் பீமலேனன், பருத்த தேகமுள்ளதும், மாயிர் சிலிர்த்தலைச் செய்கிறதும், உடலினால் குகை முழுமையும் வியாபித்

துக்கொண்டு கிரிதுர்க்கத்தில் வஸிப்பதும், மலைபோலப் பெரி கான தேகமுள்ளதும் 1 தேகத்துக்குமிஞ்சின பெரிய பலமுள்ள தும், உடலிலுண்டான பலவிதப் புள்ளிகளால் விசித்ரமான தேக முள்ளதும், மஞ்சளுக்கொப்பான காந்தியுள்ளதும், குகைபோன்ற தும் நான்கு தெற்றிப்பற்களுடன்கூடியதும் பிரகாசிக்கின்றது மான வாயைபுடையதும், மிகச் சிவந்த ஜ்வலிக்கின்ற கண் களுள்ளதும், அடிக்கடி கடைவாய்களை நக்குகிறதும், எல்லாப் பிராணிகளுக்கும் பயத்தை உண்டுபண்ணுகிறதும், காலனுக்கும் அந்தகனுக்கும் யமனுக்கும் ஒப்பாயிருப்பதும், விஷமயமான மூச்சுவிடுகிற காற்றின் ஓசையினல் அதட்டுகிறதுபோலிருப்பது மான ஒரு ஸர்ப்பத்தைக் கண்டான். மிகப்பசித்திருக்கிற அந்த மலைப்பாம்பானது விரைவாக எதிரில் வந்து பீமஸேனனை இரண்டு கைகளிலும் வலிந்து பிடித்துக்கொண்டது. அந்தப் பாம்புக்குக் கொடுபட்டிருக்கிற வரத்தின்படி அந்தப் பாம்பினல் சரீரம் நன்கு பிடிக்கப்பட்ட பீமஸேனனுக்கு அப்பொழுது அறி வானது உடனே மயங்கியது. பதினுயிரம் யானைகளுக்குள்ளதும் மற்றவைகளோடு ஒப்பிடக்கூடாததுமான பலமானது பீமஸேன னுடைய இருகைகளுக்குமிருக்கிறது. அந்தப் பாம்பினல் அவ்வாறு வசப்படுத்தப்பட்ட பராக்ரமசாலியான அந்தப் பீமன் மெதுவா கத்துடித்துக்கொண்டு அசைவதற்குச் சக்தியற்றவனனன். பதினு யிரம் யானைகளுக்குச் சரியான தேகபலமுள்ளவனும் சிங்கத்தினு டைய தோள்போன்ற தோள்களையுடையவனும் மிக்க தோள் வலியமைந்தவனுமான பீமஸேனன் பிடிக்கப்பட்டு ஸர்ப்பத்திற்கு ஏற்பட்டிருக்கிற வரதானத்தினல் மதிமயங்கிப் பலத்தை இழந் தான். வீரனன அந்தப் பீமஸேனன் தன்னை விடுவித்துக்கொள் வதில் தீவ்ரமான பிரயத்தினத்தைச் செய்தான்; எவ்விதத்திலு லும் அந்த மலைப்பாம்பைத் திருப்பி அடிப்பதற்குச் சக்தியுள்ள வனகவில்லை.

1 வேறு பாடம்.

நூற்றெண்பத்தோராவது அத்யாயம்.

ஆஜகரபர்வம். (தொடர்ச்சி.)

(மலைப்பாம்பானது பீமனை நோக்கித் தான் மலைப்பாம்பானதற்குக் காரணத்தைச் சொல்லியதும், கேட்ட நிமித்தங்களைக் கண்டு மனவருத்தமடைந்த யுதிஷ்டிரர் பீமன் சென்ற வழியைத் தொடர்ந்து சென்று அவன் மலைப்பாம்பினால் பிடிக்கப்பட்டிருக்கிறதைக் கண்டதும்.)

சௌர்யமுள்ளவனான அந்தப் பீமஸேனன், அப்பொழுது ஸர்ப்பத்திற்குவசப்பட்டு, அந்த ஸர்ப்பத்தினுடைய வல்லமையை மிகவும் ஆச்சரியமானதென்றும் பெரிதென்றும் எண்ணினான். அவன் பெரும்பாம்பைப் பார்த்து, 'பன்னக! உன் இஷ்டப்படி சொல். ஓ! புஜகச்ரேஷ்ட! நீ யார்? என்னைக்கொண்டு என்ன செய்யப்போகிறாய்? பாண்டுவின் புதல்வனும் தர்மராஜரை அடுத்துப் பிறந்திருப்பவனும் பதினாயிரம் யானைகளுக்குச் சமமான பலமுள்ளவனுமான பீமஸேனன் என்கிற நான் உன்னால் எவ்வாறு வசப்படுத்தப்பட்டேன்? யுத்தத்தில் எதிர்த்துவந்த பிடரிமயிருள்ள சிங்கங்களும் புலிகளும் எருமைகளும் யானைகளும் பலமுறை என்னால் கொல்லப்பட்டிருக்கின்றன. ஸர்ப்பங்களுள் மிகச் சிறந்தவனே! ராக்ஷஸர்களும் பிசாசங்களும் அதிக பலமுள்ள ஸர்ப்பங்களும் என்னுடைய புஜவேகத்தைத் தாங்குவதற்குச் சக்தியுள்ளவைகளாகா. முயற்சியைச் செய்கின்றவனாக இருந்தும் நான் உன்னால் வசப்படுத்தப்பட்டவனாக இருக்கிறேன். இது விதியா பலமா? அல்லது, உனக்கு ஏற்பட்டிருக்கிற வரதானமா? நாகமே! என்னுடைய பெரிதான இந்தப் பலமானது உன்னால் தோல்வியடைவிக்கப்பட்டதாதலால் மானிதர்களுக்கு உடல் வலிமை நிலையற்றதென்ற எண்ணம் எனக்கு உண்டாகிவிட்டது' என்று சொன்னான்.

இவ்வாறு சொல்லுகின்றவனும் கார்யங்களை ஸாதிக்கச் செய்பவனும் வீரனுமான பீமனை அந்த ஸர்ப்பமானது தன் பெரிய உடலினால் எல்லாப் பக்கத்திலும் நன்றாகக்கட்டிச் சுற்றிக்கொண்டது. பிறகு, அந்த ஸர்ப்பமானது அப்பொழுது மிக்க புஜபலமுள்ள அந்தப் பீமனை அடக்கி அவனுடைய பருத்த இருகைகளையும் விட்டுவிட்டு அவனைப்பார்த்து, 'மிக்க புஜபலமுள்ளவனே!

பசித்திருக்கிற எனக்கு, நீ, என்பாக்கிய விசேஷத்தால், நெடுங்காலத்திற்குப்பிறகு, இப்பொழுது, தேவர்களால் ஆகாரமாகக் கொடுக்கப்பட்டாய். பிராணிகளுக்குப் பிராணன் பிரியமானதன்றோ? பகைவரை அடக்குபவனே! என்னால் இந்த ஸர்ப்பரூபம் அடையப்பட்டவிதத்தை நீ என்னிடத்தினின்று அவசியம் கேட்கவேண்டும். என்னுடைய அதனை நீ கேட்பாயாக. நான் மஹரிஷியினால் கோபத்தினால் இந்த நிலைமையை அடையும்படி செய்யப்பட்டேன். சாபத்தினுடைய முடிவை அடையவேண்டுமென்கிற எண்ணமுள்ளவனாக அவை அனைத்தையும் உனக்குச் சொல்லுகிறேன். உன்னுடைய முன்னோர்களுக்கெல்லாம் மூத்தவனும் வம்சத்தைத் தரிப்பவனும் ஆயுவின் புத்ரனுமான நகுஷன் என்கிற ராஜரிஷியானவன் உன்னால் தெளிவாகக் கேட்கப்பட்டிருக்கலாம். அப்படிப்பட்ட நான் பிராம்மணர்களை அவமதித்து அகஸ்தியருடைய சாபத்தால் இந்த நிலைமையை அடைந்தேன். என்னுடைய இந்த விதியைப் பார். இங்கு வந்துகொண்டிருக்கிறவனும் மிக்க பிரியமான தோற்றமுள்ளவனும் கொல்லத்தகாதவனுமான உன்னை நான் இப்பொழுது ஆஹாரமாக உபயோகிக்கப்போகிறேனென்றால் விதியானது எவ்விதமிருக்கிறதென்பதைப் பார். புருஷச்ரேஷ்டனே! தினத்தினுடைய ஆறுவது பாகத்தில் யாதொரு எருமைக்கடாவோ ஏதொன்று என்னால் பிடிக்கப்படுகிறதோ அது எவ்விதத்தாலும் என்னால் விடப்படுகிறதில்லையன்றோ? குருகுலத்தில் பிறந்தவர்களுள் உத்தமனே! தீர்யக்ஜாதிகளில் பிறந்திருக்கிற ஸாமான்யமான ஸர்ப்பத்தினால் நீ பிடிக்கப்படவில்லை. இது எனக்குக் கொடுக்கப்பட்ட வரதானம். இந்திரன் வீற்றிருக்கிற விமானத்தின்மேலிருந்து விரைவாகக் கீழே விழுகின்ற என்னால், 'சாபத்துக்கு முடிவை ஏற்படுத்தும்' என்று சொல்லப்பட்டவரும் ரிஷிகளுள் மிகச் சிறந்தவரும் தேஜஸ்ஸுள்ளவருமான அந்த அகஸ்தியபகவான் கருணையினால் மூடப்பட்டு என்னை நோக்கி, [1] 'அரசனே! சிலகாலஞ் சென்றபின் உனக்கு (ச் சாபத்தினின்று) மோக்ஷம் உண்டாகும்' என்று சொன்னார். பிறகு, நான் பூமியில் விழுந்தேன். என்னை ஞாபகமானது விடவில்லை. (சாபமானது) நெடுங்காலத்துக்கு முன்கிய தானுலும் அடையப்பட்டபடியே எனக்கு நினைவிலிருக்கிறது. அகஸ்தியமஹரிஷியானவர் என்னைப்பார்த்து, 'ஆக்மா, ஆத்மாவல்

1 பொருத்தாமையால் அதிக பாடமான அரைஸ்லோகம் விடப்பட்டது.

ஸாதது இவற்றின் பாகுபாட்டை அறிந்த எவன் உன்னல் கேட்கப்பட்ட வில்க்களுக்கு விடை கூறுவனேனை அவன் உன்னைச் சாபத்தினின்று விடுவிப்பான்'.என்று சொன்னர்.

தையபுள்ளவர்களும் என்னிடத்தில் இரக்கமுண்டான வர்களுமான அந்தப் பிராம்மணர்களுடைய, 'வேந்தே! உன்னல் பிடிக்கப்பட்ட பிராணிகள் (உன்னிலும்) அதிக பலசாலிகளாக இருந்தாலும் அவைகள் எல்லாவற்றுக்கும் பலக்குறைவானது விரைவாக உண்டாகும்' என்ற வசனத்தையும் நான் கேட்டேன். பிறகு, அந்தப் பிராம்மணர்கள் மறைந்து போய்விட்டார்கள். அதிக காந்தியுள்ளவனே! நிகரற்ற தீமையைச் செய்த அப்படிப்பட்ட நான் இந்த ஸர்ப்பப்பிறப்பை அடைந்து காலத்தை எதிர்பார்த்துக்கொண்டு, அசுத்தமான நரகத்தில் வஸிக்கிறேன்' என்று கூறியது. மிக கைவலிமையுள்ள பீமஸேனன், அந்த ஸர்ப்பத்தைப் பார்த்து, 'மஹாஸர்ப்பமே! நான் உன்விஷயத்தில் கோபிக்கவில்லை. என்னையும் நிந்திக்கவில்லை. மனிதன் ஸுகத்தையோ துக்கத்தையோ வருஷிப்பதிலோ போக்குவதிலோ சில ஸமயம் திறமையுள்ளவனும் சில ஸமயம் திறமையில்லாதவனும் ஆகிறன். ஆகலால், அந்த விஷயத்தில் மனத்தை வருத்தக்கூடாது. எந்த மனிதன் தன் வல்லமையினல் தெய்வத்தை வஞ்சிப்பதற்கு ஸமர்த்தியமுள்ளவனுவான்? தெய்வத்தையே சிறந்ததாக நினைக்கிறேன். மனித முயற்சியோ பயனற்றது. பாகுபலத்தை ஆதாரமாகக் கொண்டவனும் காரணமின்றி இவ்விடத்தில் வந்து இப்பொழுது துரதிர்ஷ்டத்தினல் இந்த நிலைமையை அடைந்திருக்கிறவனுமான என்னைப் பார். எவ்வாறு ராஜ்யத்தினின்று துரத்தப்பட்டவர்களும் காட்டில் வஸிக்கும்படி செய்யப்பட்டவர்களுமான பிராதாக்களைக் குறித்துத் துக்கமடைகிறேனே அவ்வாறு நான் அழிவதைப்பற்றி இப்பொழுது நான் துக்கிக்கவில்லை. யக்ஞர்களும் ராஜஸூயர்களும் நிரம்பியிருக்கிற இந்த இமயமலையானது செல்லுதற்கு மிக அரியது. அந்தப் பாண்டவர்கள் மனவருத்தமுற்று என்னைப் பார்க்க விரும்பி முயலுவார்கள். பிறகு, நான் அழிந்ததைக்கேட்டு முயற்சியற்றவர்களாவார்கள். ராஜ்யத்தை அடைவதில் போராவலுள்ள என்னிலை தர்மசீலர்களான அந்தப் பாண்டவர்கள் துன்புறுத்தப்படுகிறார்களன்றே? அல்லது, எல்லா அஸ்திரங்களையும் அறிந்தவனும் தேவர்களாலும்

கந்தர்வர்களாலும் ராக்ஷஸர்களாலும் ஜயிக்கமுடியாதவனும் சிறந்த புத்தியுள்ளவனுமான அர்ஜுனன் விசனமடையமாட்டான். மிகுந்த பலமுள்ளவனும் நீண்ட கைகளையுடையவனுமான அந்த அர்ஜுனன் ஒருவனையிருந்தாலும் தேவராஜனைக்கூட ஸ்தானத்தினின்று விரைவாக நழுவச்செய்யத் திறமையுள்ளவன். அப்படியிருக்க, கெட்ட சூதாட்டத்தை விளையாட்டாகக்கொண்டவனும் உலகத்தாரனைவராலும் பகைக்கப்பட்டவனும் டம்பத்திலும் அறியாமையிலும் பற்றுள்ளவனுமான திருதராஷ்டிரருடைய புத்திரனை ராஜ்யத்தினின்று நழுவும்படி செய்வானென்பதில் ஸந்தேகமென்ன? எங்களுக்குப் பகைவர்களைக்காட்டிலும் அதிகமான மேன்மையைத் தினந்தோறும் விரும்புகிறவளும் புத்திரர்களிடத்தில் பேராவலுள்ளவளுமான இரக்கப்படத்தக்கவளுமான என் தாயைப்பற்றியும் விசனமடைகிறேன். ஸ்ப்பமே! நாதனற்றவளான அந்தக் குந்திதேவி என்னால் நிறைவேறுமென்று நினைத்திருந்த அந்த எல்லா விருப்பங்களும் நான் நாசமடைந்தால் எவ்வாறு நிறைவேறினவையாகும்? பெரியோர்களுக்கு வசப்பட்டவர்களும் என் புஜபலத்தால் நன்றுகப் பாதுகாக்கப்பட்டவர்களும் எப்பொழுதும் ஆண்பிள்ளைகளென்கிற கர்வமுள்ளவர்களும் இரட்டைப்பிள்ளைகளுமான நகுலஸஹதேவர்கள் என்னுடைய விஷயத்தினால் உத்ஸாகத்தை இழந்தவர்களும் வீர்யமும் பராக்கிரமமும் நழுவினவர்களும் விசனமுற்றவர்களும் ஆவார்களென்பது எனது எண்ணம்' என்று சொன்னான்.

பீமஸேனன் ஸ்ப்பத்தினுடைய உடலினால் நன்றுக இறுக்கப்பட்டவனாகி அப்பொழுது இவ்வண்ணம் மிகப் புலம்பினான்; கைகாலை அசைப்பதற்குச் சக்தியற்றவனுமானான். குந்தீபுத்திரரான யுதிஷ்டிரரோ, அனிஷ்டத்தைத் தெரிவிக்கின்ற கோரமான உத்பாதங்களை நன்றுகச் சிந்திக்கின்றவரும் கல்ல நிலைதப்பின புத்தியுள்ளவருமானார். எரிச்சலுடன் கூடின திசையில் குள்ளநரியானது அவருடைய ஆச்ரமத்திற்குத் தென்புறத்தில் நின்றுகொண்டு அதிக பயமுள்ளதாகிப் பயங்கரமும் அமங்களகரமுமான சப்தத்துடன் ஊளையிட்டது. ஒரு சிறகும் ஒரு கண்ணும் ஒரு காலுமுள்ளதும் கோரமான காட்சியுள்ளதும் பிரகாசமில்லாததுமான விச்சுளி என்கிற பக்ஷியானது சூரியனுக்கு எதிரில் ரக்தத்தைக் கக்குகின்றதாகக் காணப்பட்டது. வறண்டதும் அதிவேகமுள்ளதும் பரற்கற்களை அடித்து வருகின்

றதுமான காற்றும் வீசியது. மிருகங்கள் பறவைகள் ஆகிய இவற்றின் சப்தங்களனைத்தும் அமங்களகரமாக இருந்தன. கறுத்த காக்கையானது பின்புறத்தில் இருந்துகொண்டு, 'செல்; செல்' என்று கரைந்தது. அப்படியே, இவருடைய வலக்கையும் அடிக்கடி துடித்தது. இவருடைய மனமும் இடக்காலும் சோர்வை அடைந்தன. அனிஷ்டமான இடக்கண் துடித்தலும் ஏற்பட்டது. பாரதரே! மேதாவியான தர்மராஜரும் பெரும்பயம்சேர்ந்ததாக ஸங்கேதித்துத் திரௌபதியைப் பார்த்து, 'பீமன் எங்கே?' என்று கேட்டார். பாஞ்சாலியானவள், பீமஸேனன் நேர்த்திற்கு முந்தியே (வெளியே) சென்றதாக அவருக்குச் சொன்னாள். மஹாபாகுபலமுள்ள அந்தத் தர்மராஜர் தௌம்யரோடு கூடியவராகப் புறப்பட்டார். தனஞ்சயனைப் பார்த்து, 'த்ரௌபதியின் ரக்ஷணமானது உன்னால் செய்யப்படத்தக்கது' என்று சொன்னர். நகுலனையும் ஸஹதேவனையும் பிராம்மணர்களைப் பாதுகாக்கும்படி கட்டளையிட்டார். குந்தீபுத்ரரும் பிரபுவுமான அந்தத் தர்மராஜர் அந்த ஆச்ரமத்திலிருந்தே பீமஸேனனுடைய காலடியை உற்றுப்பார்த்துக்கொண்டு பெருங்காட்டில் அவனைத் தேடினர். அந்த யுதிஷ்டிரர், கீழ்த்திசையை அடைந்து பெரிய கஜயூதபதிகளையும் பீமனுடைய காலடிகளால் பூமி எங்கும் அடையாளமிடப்பட்டிருக்கிறதையும் கண்டார். பிறகு, அரசர், வனத்தில் கொன்றுதள்ளப்பட்டிருக்கிற ஆயிரக்கணக்கான மிருகங்களையும் நூற்றுக்கணக்கான சிங்கங்களையும் மிருகங்களுக்காக ஓடுகின்றவனும் காற்றின் வேகம்போன்ற வேகமுள்ளவனும் வீரனுமான அந்தப் பீமஸேனனுடைய தொடையினால் உண்டுபண்ணப்பட்ட காற்றினால் முறிக்கப்பட்டு வழியில் நிலைகுலைந்து கிடக்கின்ற மரங்களையும் கண்டு அவனுடைய வழியில் சென்றார். அந்த யுதிஷ்டிரர், அப்பொழுது அந்த அடையாளங்களால் சென்று, வறள்காற்று மிகுந்ததும் இலைகளில்லாத மரங்களால் நெருங்கியதும் உலர்ந்திலமுள்ளதும் ஜலமில்லாததும் முண்மரங்களால் அடர்ந்ததுமான ஓர் இடத்தில் கற்களாலும் மொட்டை மரங்களாலும் சிறிய மரங்களாலும் எல்லாப்பக்கங்களிலும் வியாபிக்கப்பட்டதும் செல்லுதற்கு மிக அரியதும் மேடுபள்ளங்கள் மிகுந்ததுமான மலையின் குகையில் பெரும்பாம்பினால் பிடிக்கப்பட்டு அசைவற்றிருக்கிற கம்பியான பீமனை அப்பொழுது கண்டார்.

நூற்றெண்பத்திரண்டாவது அத்யாயம்.

ஆஜகரபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரருக்கும் மலைப்பாம்புக்கும் ஸம்வாதம்.)

சிறந்த புத்தியுள்ள யுதிஷ்டிரர் ஸர்ப்பத்தின் உடலினால் சுற்றப்பட்டிருக்கிற அந்தப் பிரியமான தம்பியை அடைந்து, 'குந்தியைத் தாயாராக உடையவனே! நீ இந்த ஆபத்தை எவ்வாறு அடைந்தாய்? மலைபோலப் பருத்த உடலுடன்கூடின இந்தப் பன்னக ச்ரேஷ்டன் யார்?' என்னும் இந்த வசனத்தைச் சொன்னர். ஸகாகரனை அந்தப் பிமலினன் தமையனரான தர்ம ராஜரைப் பார்த்து, 'அண்ணை! பக்ஷிப்பதற்காக என்னைப்பிடித்துக்கொண்டிருக்கிறதும் ஸர்ப்பம்போலிருப்பதும் அதிக பலமுள்ளதுமான இந்தப் பிராணியானது நகுஷன் என்கிற ராஜரிஷி' என்று தன்னைப் பிடித்தது முதலான அந்தச் செய்கைகளனைத்தையும் கூறினன்.

யுதிஷ்டிரர், ஸர்ப்பத்தைப் பார்த்து, 'ஆயுஷ்மானே! அளவு கடந்தவல்லமையுள்ள என்னுடைய இந்த ப்ராதாவை விட்டுவிடு. நாம் உனக்குப் பசியைப் போக்கக்கூடிய வேறு ஆகாரத்தைக் கொடுப்போம்' என்று சொன்னர். ஸர்ப்பம், 'என் வாயில் வந்து விழுந்திருக்கிற இந்த ராஜபுத்திரன் என்னால் ஆகாரமாக அடையப்பட்டான். நீ போகலாம். இந்த இடத்தில் நீ இருக்கக்கூடாது. இருந்தால், நாளைத்தினம் எனக்கு நீயும் ஆகாரமாகிவிடுவாய். அதிக பாகுபலமுள்ளவனே! இது என்னுடைய விரதம். எவன் நான் இருக்குமிடத்தை அடைகிறானோ அவன் எனக்கு ஆகாரமாகவேண்டும். அப்படியே! நீயும் என்னுடைய இருப்பிடத்தில்வந்து சேர்ந்துவிட்டாய். நெடுங்காலம் கழித்து எல்லாம் உன்னுடைய இந்தத்தம்பி இப்போது ஆகாரமாக அடையப்பட்டான். நான் இவனைவிடமாட்டேன். வேறொன்றையும் விரும்பமாட்டேன்' என்று சொல்லினது.

யுதிஷ்டிரர், 'ஸர்ப்பமே! நீ தேவனோ? அல்லது, அசுரனோ? அல்லது, ஸர்ப்பமோ? உண்மையான வசனத்தைச் சொல். யுதிஷ்டிரன் உன்னைக் கேட்கிறான். ஸர்ப்பமே! பிமலினன் உன்னால் எதற்காகப் பிடிக்கப்பட்டான்? ஸர்ப்பமே! எனக்கு ஆஹாரமாகக் கொண்டால், அல்லது, எனக்கு அரிக்கால் உனக்கு ப்ரீதியுண்டாகும்? நான் உனக்கு எந்த ஆஹாரத்தைக் கொடுப்பேன்? எப்படி

நீ இவனை விடுவாய்?" என்று வினவினர். ஸர்ப்பம், 'தோஷமில்லாதவனே! அரசனே! நான் பிரஸித்திபெற்றவனும் சந்திரனிலிருந்து ஐந்தாமவனும் ஆயுவின் மைந்தனும் உன்குலத்தில் முந்தினவனுமான நகுஷன் என்கிற அரசனாக இருந்தேன். யாகங்களாலும் தவத்தினாலும் வேதாத்தியயனத்தினாலும் இந்திரிய நிக்ரஹத்தினாலும் விக்ரமத்தினாலும் மூவுலகங்களுடையஆட்சியையும் கவலையற்று அடைந்தேன். அந்த ஐச்வர்யத்தைப் பெற்றதனால் அப்பொழுது கர்வமானது என்னை வந்தணுகியது. ஆயிரம் பிராம்மணர்கள் என் பல்லக்கைத் தூக்கினர்கள். பிறகு, நான் ஐச்வர்யமதத்தால் இறுமாப்படைந்து பிராம்மணர்களை அவமதித்து அகஸ்தியரால் இந்நிலைமையை அடைவிக்கப்பட்டேனென்று எனக்கு நினைவிருக்கிறது. அரசனே! 1 பாண்டவ! மஹாத்மாவான அந்த அகஸ்தியருடைய அனுக்ரஹத்தினாலேயே பிரஜ்ஞை இதுவரையும் என்னை விடவில்லை. பகலினுடைய ஆறுவது பாகத்தில் உன்னுடைய இளைய ஸஹோதரன் என்னால் ஆஹாரமாக அடையப்பட்டான். நான் இவனை விடப்போகிறதில்லை. மற்றொன்றையும் நான் விரும்பவில்லை. என்னால் இப்பொழுது கேட்கப்படுகிற வினாக்களுக்கு விடைகூறுவாயாகில் அதற்குப் பிறகு உன்னுடைய ப்ராதாவான பீமஸேனனை விடுவேன்' என்று சொல்லியது.

யுதிஷ்டிரர், 'ஸர்ப்பமே! உன்னிஷ்டப்படி வினவுவாயாக. ஸர்ப்பமே! உனக்குப் ப்ரீதியை உண்டுபண்ணுவதற்கு நான் சக்தியுள்ளவனாக இருந்தால், உன் கேள்விகளுக்கு மறுமொழி உரைப்பேன். இவ்வுலகில் பிராம்மணனால் எது அறியத்தக்கதோ அதை நீ முழுமையும் அறிகிறாய். ஸர்ப்பராஜனே! ஆகையால், உன் வசனத்தைக் கேட்டு உனக்கு மறுமொழி உரைப்பேன்' என்று சொன்னார். ஸர்ப்பம், 'வேந்தே! எவன் பிராம்மணனாகிறான்? யுதிஷ்டிர! எது அறியத்தக்கது? சொல். உன்னுடைய வாக்கியங்களால் உன்னை அதிகடுத்திசாலி என்று ஊகிக்கிறேன்' என்று சொல்லியது.

யுதிஷ்டிரர், 'நாகேந்திர! எவனிடத்தில் உண்மை, கொடை, பொறுமை, நல்லொழுக்கம், இரக்கம், தவம், கருணை இவைகள் காணப்படுகின்றனவோ அவன் பிராம்மணனென்று கருதப்படி

---

1 வேறு பாடம்.

கிறான். ஸர்ப்பமே! எது விசேஷங்களில்லாததாயும் தேசத்தாலும் காலத்தாலும் வஸ்துக்களாலும் அளவிட முடியாததாயும் துக்கமில்லாததாயும் ஸுகமில்லாததாயும் இருக்கிறதோ, அகண்ட ஏகரஸமாக இருக்கிற எந்த வஸ்துவினிடத்தில் சென்று மனிதர்கள் மீண்டு ஸம்ஸாரத்தை அடைகிறதில்லையோ அது அறியத்தக்கது. நீ இன்னும் எதைச் சொல்ல விரும்புகிறாய்?' என்று சொன்னார். ஸர்ப்பம், 'யுதிஷ்டிர! பிரமாணமும் ஸத்யமும் வேதமும் நான்கு வர்ணத்தார்களுக்கும் ஹிதமாயிருக்கின்றன. சூத்திரர்களிடத்திலும் உண்மையும் கொடையும் கோபமின்மையும் மன இளக்கமும் அஹிம்ஸையும் கருணையும் இருக்கின்றன. அரசனே! இவ்வுலகில் துக்கமில்லாததும் ஸுகமில்லாததுமான எது அறியத்தக்கதென்று சொல்லப்பட்டதோ ஸுகம் துக்கம் இரண்டினாலும் விடப்பட்ட அவ்வானந்த அறியத்தக்க வேறுவஸ்துவானது இருக்கிறதென்று நான் காணவில்லை' என்று சொல்லிற்று.

யுதிஷ்டிரர், 'சூத்திரனிடத்தில் எந்த அடையாளமிருக்கிறதோ அது பிராம்மணனிடத்திலில்லை. சூத்திரஜாதியில் பிறந்தவனுக்கு சூத்திரன் சூத்திரனாகான். பிராம்மணஜாதியில் பிறந்தவனுக்கு பிராம்மணனும் பிராம்மணனாகான். ஸர்ப்பமே! எவனிடத்தில் இந்தச் சமதமாதிகுணங்கள் காணப்படுகின்றனவோ அவன் பிராம்மணனாக எண்ணப்படுகிறான். ஸர்ப்பமே! எவனிடத்தில் இந்தச் சமதமாதிகுணங்களில்லையோ அவனைச் சூத்திரனென்று குறிக்கவேண்டும். ஸர்ப்பமே! அறியத்தக்கதில்லையென்றும் ஸுகதுக்கங்களால் விடுபட்ட ஸ்தானமானது இந்த இடத்தைக்காட்டிலும் வேறிடத்தில் இல்லை என்றும் எது உன்னால் கூறப்பட்டதோ இந்த உன்னபிப்ராயம் இவ்வண்ணமே. ஸுகம் துக்கம் இரண்டினாலும் விடுபட்டிருக்கிற ஸ்தானம் இல்லை. எவ்வாறு சீதவஸ்துவின் நடுவில் உஷ்ணமும் உஷ்ணவஸ்துவின் நடுவில் சீதமும் இராதோ அவ்வாறே ஸுகமுள்ளவஸ்துவில் துக்கமும் துக்கமுள்ளவஸ்துவில் ஸுகமும் இரா. இவ்வாறான (பிராகிருத) ஸுகதுக்கங்களால்விடுபட்ட (ஆனந்தமயமான) ஸ்தானம் ஒரிடத்திலிருக்கிறது. இது எனது எண்ணம். ஸர்ப்பமே! நீ எப்படி எண்ணுகிறாயோ?' என்று கூறினார். ஸர்ப்பம், 'அரசனே! ஆயுஷ்மானே! உன்னால் ஒழுக்கத்தால் ஒருவன் ப்ராம்மணனென்று சொல்லப்படுவானாகில் அப்படியாயுது பிராம்

மணனுக்குரிய செய்கை இல்லாதவரையில் ஜாதி பயனற்றது' என்று சொல்லியிருக்கிறது.

யுதிஷ்டிரர், 'மகாஸர்ப்பமே! பேரறிவாளனே! இந்த மனித ஜாதியில் இப்பொழுது எல்லாப் புருஷர்களும் எல்லா ஸ்த்ரீகளிடமும் குழந்தைகளை உண்டுபண்ணுகிறார்கள். ஆகையால், எல்லாவர்ணங்களும் கலந்துபோவதால் ஜாதியானது எவ்விதத்தாலும் பரீக்ஷிக்கத்தகாததென்பது என்னுடைய எண்ணம். மனிதர்களுக்கு வாக்கும் ஆண்பெண்களின் சேர்க்கையும் பிறப்பும் இறப்பும் ஸமமானவை. 'நாங்கள் பிராம்மணர்களாயிருக்கிறோமோ அப்பிராம்மணர்களாயிருக்கிறோமோ எப்படியிருந்தாலும் யாகம்செய்கிறோம்' என்கிற பொருளுள்ள (யேயஜாமஹ என்கிற) வேதவாக்யமும் (ஜாதி, பிறப்பினால் நிச்சயிக்கத்தக்கதன்று) என்னும் விஷயத்தில் பிரமாணம். ஆகையால், தத்துவத்தைக் கண்டறிந்தவர்கள் ஆசாரமே (இந்தவிஷயத்தில்) முக்யமாகக் கருதப்பட்டதென்று அறிகிறார்கள். தொப்புள்கொடி அறுப்பதற்குமுன்னம் புருஷனுக்கு ஜாதகர்ம ஸம்ஸ்காரமானது விதிக்கப்படுகிறது. அப்படியே, இருபிறப்புடையவர்களான மூன்றுவர்ணத்தார்களுக்கும் முறையே உபநயனம் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த உபநயன ஸம்ஸ்காரத்தில் இவனுக்கு ஸாவித்ரி மாதாவாகிறாள்; ஆசார்யன் பிதாவாகச் சொல்லப்படுகிறான். பிராம்மணன் வேதத்தை தொடங்குகிறவரையில் செய்கையினால் சூத்ரனுக்கொப்பானவன். இப்படிப்பட்ட அந்த ஸம்சயத்தில் ஸ்வாயம்புவமனுவானவர், 'வைதிக ஸம்ஸ்காரமில்லாவிட்டால் மூன்று வர்ணத்தார்களும் சூத்ரர்களுக்கு ஸமானர்களாவார்கள்' என்று இவ்வர்ணம் கூறியிருக்கிறார். ஸர்ப்பராஜனே! ஸம்ஸ்காரமில்லாத விஷயத்தில் வர்ணஸாங்கர்யமே முக்யகாரணமென்று காணப்பட்டிருக்கிறது. ஸர்ப்பராஜனே! மகாஸர்ப்பமே! எவனிடத்தில் இக்காலத்தில் வைதிக ஸம்ஸ்காரத்துடன் கூடின நல்லாசாரமிருக்கிறதாக எண்ணப்படுகிறதோ அவனையே பிராம்மணனாக முன்னே சொல்லியிருக்கிறேன்' என்று கூறினார். ஸர்ப்பம், 'யுதிஷ்டிர! அறியவேண்டியதை அறிந்திருக்கிற உன்னுடைய வாக்கியமானது கேட்கப்பட்டது. நான் உன்னுடைய ப்ரதாவான ப்ரமதிஸனாவை என் பகுதிப்பேன்' என்று கூறியது.

———

நூற்றெண்பத்துமூன்றுவது அத்யாயம்.

ஆஜகரபர்வம். (தொடர்ச்சி.)

(தன் வினைக்கயநுக்கு உத்தராமளித்ததனல் மகிழ்ந்தவனும் மலைப் பாம்பு வடிவத்துடனிருப்டாவனுமான நதுஷன் தனக்கு அவ்வு ருவம்வரக் காரணத்தை யுதிஷ்டிரருக்குக் கூறிப் பீமனை விட்டுவிட்டு மீண்டு ஸ்வர்க்கம் சென்றது.)

யுதிஷ்டிரர், 'இப்படிப்பட்ட நீ உலகத்தில் வேதங்கள் வேதாங் கங்கள் இவற்றின் கரையை அடைந்தவன். எந்தக் கர்மாவைச் செய்தவனுக்கு அதனிலும் சிறந்ததில்லாத கதியானது ஏற்படும்? சொல்' என்று வினவ, ஸர்ப்பம், 'பாரத! பாத்திரத்தில் கொடுத் தும் இனியவை கூறியும் உண்மையைப் பேசியும் அஹிம்ஸையில் பற்றுதலுள்ள மனிதன் ஸ்வர்க்கத்தை அடைவானென்பது என் னுடைய நிச்சயம்' என்று சொல்லிற்று.

யுதிஷ்டிரர், 'ஸர்ப்பமே! தானத்தைக்காட்டிலும் ஸத்யமா, ஸத்யத்தைக்காட்டிலும் தானமா எது பெரியதென்று காணப்படு கிறது? அஹிம்ஸை இன்சொல் இரண்டனுள் எது பெரிது? எது சிறிது? சொல்லுவாயாக' என்று வினவ, ஸர்ப்பம், 'தானம் [1] ஸத்யம் அஹிம்ஸை இன்சொல் இவைகளுள் பயனல் பெருமை யும் சிறுமையும் காணப்படுகின்றன. சில ஸமயத்தில் தானம் செய்வதைக்காட்டிலும் ஸத்தியமே மேலாகிறது. ராஜேந்திர! சில ஸமயத்தில் ஸத்தியவாக்கியத்தைக்காட்டிலும் தானமே மேலாகி றது. பெரிய விர்ரிடத்தவனே! அரசனே! இவ்வண்ணமே, சிலசம யம் இன்சொற்கூறுவதைக்காட்டிலும் அஹிம்ஸையானது பெரி தாகக் காணப்படுகிறது. சிலவேளை அந்த அஹிம்ஸையைக்காட் டிலும் இன்சொல் பெரிதென விரும்பப்படுகிறது. மேலும்! இவ்வாறு, இவற்றின் இத்தப்பெருமை சிறுமைகள் பயனைப்பொறுத் தனை! இன்னும் வேறு கேட்க விரும்பியதைச் சொல். நான் மறுமொழியுரைப்பேன்' என்று சொல்லிற்று.

யுதிஷ்டிரர், 'ஸர்ப்பமே! சரீரத்தை விட்டவனுக்கு ஸ்வர்க் கத்தில் கதியும் கர்மங்களுடைய பலன் அழியாமலிருப்பதும் விஷயானுபவமும் எப்படி காணப்படும்? எனக்குத் தெளிவாகச் சொல்' என்று வினவ, ஸர்ப்பம், 'அரசனே! தன்னுடைய கர்மங்

1 பொருள் இடைச்சொல் ஒரு சொல் விடப்பட்டது.

களால் உண்டாகிற கதிகள் மனிதனுகப் பிறப்பது, ஸ்வர்க்கத்தில் வஸிப்பது, திர்யக்ஜாதியில் பிறப்பது என மூன்றவிதமாகக் காணப்பட்டிருக்கின்றன. அவைகளுள், அஹிம்ஸையுடன்கூடின அநாதியான தானம்முதலிய காரணங்களால் (தேஹியானவன்) மானிட உலகத்தினின்று ஸ்வர்க்கத்தை அடைகிறான். ராஜேந்திரனே! (இவற்றுக்கு) மாறுபட்ட காரணங்களால் மனிதனுகவும் அப்படியே விலங்காகவும் பிறக்கிறான். ஐயா! விலங்குப்பிறவியில் விசேஷத்தைச் சொல்லுவேன். காமக்ரோதங்களுடன்கூடின வனும் ஹிம்சையுடனும் பொருளையுடனும்கூடினவனுமான மனிதன் மானிடப்பிறவியிலிருந்து தவறி விலங்குஜாதியில் பிறக்கிறான். மனிதப்பிறப்புக்காக விலங்குஜாதியிலிருந்து வேறுபாடு (=உயர்தல்) வேதத்தில் விதிக்கப்படுகிறது. யாகங்களில் உபயோகிக்கப்படுகிற சோம முதலியவற்றுக்கும் குதிரைகளுக்கும் (அந்த விலங்குப்பிறவிகளிலிருந்தே) தேவனுதலும் காணப்படுகிறது. ஐயனே! இருவினைகளுள்ள அப்படிப்பட்ட இந்த ஜீவன் (பிறப்பிறப்புக்களாகிய) இந்தக் கதிகளை அடைகிறான். இருவினைகளில்லாத பிரம்மணன் நித்யமான பிரம்மத்தினிடம் ஆத்மாவைக் கலக்கச்செய்கிறான். தேகாபிமானியான ஜீவாத்மாவானவன் அத்ருஷ்டத்தால் கவரப்பட்டுப் பிறந்து பிறந்து லோகத்தில் விருப்பமுள்ளவனுகித் தேகஸம்பந்தத்தாலுண்டான பலனை அனுபவிக்கிறான். பயனில் பற்றில்லாதவன் பிரஜைகளுக்கு அநிகுறிகளான ஜனனம் மரண முதலியவைகளைத் தோஷங்களாகப் பார்க்கிறான்' என்று சொல்லியது.

யுதிஷ்டிரர், 'ஸர்ப்பமே! சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் ஆகிய இவைகள் அநியப்படும் ஸமயத்தில், அநிகிற ஜீவனுக்கும் அறியப்படுகிற அந்தவிஷயங்களுக்கும் ஆதாரத்தை ஒருவழிப்பட்ட மனத்துடன் உள்ளபடி கூறுவாயாக. அதிக புத்தியுள்ளவனே! நீ ஏன் விஷயங்களை ஒரே ஸமயத்தில் அறிகிறதில்லை. பன்னகங்களுள் மிகச் சிறந்தவனே! கேட்கப்பட்ட இவையனைத்தையும் சொல்லுவாயாக' என்று வினவ, ஸர்ப்பம், 'ஆயுஷ்மானே! ஸுகம் துக்கம் முதலிய குணங்களுக்கு ஆதாரமாயிருக்கிற ஆத்மவஸ்துவானது தேஹேந்த்ரியாதிகளான உபாதியுடன் கூடியதாகவும் காரணங்களால் அடையப்பட்டதாகவுமிருந்துகொண்டு தன் வினைகளுக்குத் தக்கபடி போகங்களை அனுபவிக்கிறது. பரதஸ்ரேஷ்டனே! அந்த ஆத்மாவின் போகங்களுக்கு ஆதாரமான இந்தத்

தேஹத்தில் ஞானமும் புத்தியும் மனமும் காரணங்களென்று என்னிடத்திலிருந்து தெரிந்துகொள். ஐயனே! ஜீவன், விஷயங்களை அறிவதற்கு ஸாதனமான இந்திரியங்களில் நிலைபெற்றிருக்கிற மனத்தின் வழிபாய்ந்து தேகத்தினின்று வெளிப்படுமுறையே, இந்த விஷயங்களை அடைகிறான். புருஷர்ரேஷ்டனே! ஜீவனுக்கு அந்த விஷயத்தை அறியவேண்டியபொழுது, மனமானது புத்தியினால் வேலையுடன் [illegible]டியதாகச் செய்யப்படுகிறது. ஆகலால், இந்த ஜீவனுக்கு [illegible]ந்தச் சரீரத்தில் ஒரே ஸமயத்தில் எல்லா விஷயங்களுடைய [illegible]பரிவும் பொருந்துகிறதில்லை. புருஷோத்தமனே! அந்த ஜீவாத்மா[illegible]வனவன் புருவங்களுடைய மத்தியத்தை அடைந்திருக்கிறான். ரூபம் [illegible]ரிய குணங்களுடன் கூடின பலவித வஸ்துக்களை அறியவேண்டியபொழுது உயர்ந்ததும் தாழ்ந்ததுமான புத்தியை ஏவுகிறான். ராஜஸ்ரேஷ்டனே! புத்தியுண்டானதற்கு அடுத்த காரணத்தில் ஸாக்ஷிரூபமாய் யோகிகளால் காணப்படுகிற ஞானம்தான் ஆத்மாவைப் பிரகாசப்படுத்துகின்ற ஸ்வயம்பிரகாச ஞானம்' என்று சொல்லிற்று.

யுதிஷ்டிரர், 'மனம் புத்தி இவற்றின் சிறந்த லக்ஷணத்தை எனக்குச் சொல். இது அத்யாத்ம சாஸ்திரத்தை அறிந்தவர்களுக்குச் சிறந்த காரியமாக விதிக்கப்படுகிறது' என்று வினவ, ஸ்ப்பம், 'புத்தியானது ஆத்மாவை மிகவும் ஒற்றுமையை அடைந்து விஷயங்களில் காண்டிச் செல்லுதலால், ஆத்மாவை வசப்படுத்துகிறது. அந்தப் புத்தியானது அந்த ஆத்மாவைச் சார்ந்திருப்பதாக அறியத்தக்கது. அந்தப்புத்தி தன் ஸ்வரூபம் ஸித்திப்பதன்பொருட்டு அதிஷ்டானமாக ஆத்மாவை விரும்புகிறதாகும். புத்தியானது விஷயேந்திரியங்களுடைய ஸம்பந்த ரூபமான காரியத்தால் உண்டாகிறது. மனமோ முந்திய நிலை பெற்றிருக்கிற காரணவஸ்துவாயிருக்கிறதன்றோ? புத்தியை மனத்துக்குக் குணமாகச் சொல்லியிருப்பதால், மனமானது அந்தப் புத்தியைக் குணமாகவுடைய தாயாக இருக்கிறது. ஐயனே! மனம் புத்தி இவ்விரண்டிற்குமுரிய லக்ஷணத்தைத் தெளிவுக்காட்டுகிற லக்ஷணம் இது. இந்த விஷயத்தில் நீயும் விசேஷமான அறிவுடையவன். நீ என்னவாறு நினைக்கிறாய்?' என்றுசொல்லியது.

யுதிஷ்டிரர், 'புத்தியுடையவர்களுள் சிறந்தவனே! மங்களகரமான உன்னுடைய இந்தப் புத்தியானது அற்புதமாக இருக்கிறது. நகுலா! அறியத்தக்கது உன்னால் அறியப்பட்டிருக்கிறது.

ஏன் கேட்கிறாய்? இவ்வாறு அற்புதமான கர்மங்களுடன்கூடிய வனும் எல்லாமறிந்தவனும் ஸ்வர்க்கத்தில் வஸிப்பவனுமான சுஷ்ணை எவ்வாறு மோஹம் வந்தடைந்தது? இந்த விஷயத்தில் [illegible] பெரிய ஸம்சயம்?' என்று வினவினர். ஸர்ப்பம், [illegible] மனிதனை நல்ல விவேகமுள்ளவனும் சூரனு [illegible] செய்கிறது [illegible] ஸுகத்திலிருப்பவரான [illegible] என்பது என்னுடைய [illegible] நான் ஐஸ்வர்யத்தினை [illegible] கவரப்பட்டவனாக [illegible] பூகம்தன். மீண்டும் அறிவடைந்த [illegible] 'நிச்சயிக்கிறேன். மஹாராஜனே! பகைவரை [illegible] உன்னால் என்னுடைய காரியம் செய்யப்பட்டு [illegible]. மிக்க கஷ்டத்தை உண்டுபண்ணிக்கொண்டிருந்த என் [illegible]டைய சாபமானது ஸாதுவான உன்னுடன் ஸம்பாஷித்ததனால் நாசம் அடைந்தது. நான் முற்காலத்தில் ஆகாயத்தில் திவ்ய விமானத்தினால் ஸஞ்சரிப்பவனும் அகங்காரத்தினால் மதமுள்ள வனுமாகி ரிஷிமுதலியவரையும் மதிக்கவில்லை. முல்லோகங்களிலும் வாஸம்செய்கின்ற ப்ரம்மரிஷிகள், தேவர்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், ராக்ஷஸர்கள், பன்னகர்களாகிய அனைவரும் என[illegible]குக் [1] கப்பங்களைக் கொடுத்தார்கள். பூமிக்கதிபதியே! கன்னல் எந்தப் ப்ராணியைப் பார்க்கிறானோ அந்தப் ப்ராணியி னுடைய் வல்லமையை விரைவில் கவர்ந்திறன். என்று பார் வையின் பலம் அப்படிப்பட்டதன்றோ? அரசனே! அபரம் ரிஷிகள் என் பல்லக்கைத் தூக்கினார்கள். அந்த அகஸ்தியனை என்னை ஸம்பத்தினின்று நழுவப்பண்ணி. செல்லுகிற. அந்த ஸமயத்தில் பல்லக்குத் தூக்குகின்ற அகஸ்திய மஹரிஷியானவர் (என்னால்) காலால் தொடப்பட்டார். அதனால் உண்டான கோபத்தினால் அகஸ்தியரால், 'நீ ஸர்ப்பமாகி நாசமை..' என்று சொல்லப்பட்டேன். பிறகு, அந்தச் சிறந்த விமானத்தினின்று நழுவி (மனித)லகஷணங்கள்போய்க் கீழே விழுகின்று நான் என்னைப் பாம்பாகித் தலைகீழே விழுபவனாகத் தெரிந்துகொண்டேன். நான் அந்தப் ப்ராம்மணரை, 'பகவானே! கருணைகொண்டு [illegible] என்னைப் பொறுத்தருளவேண்டும். சாபத்திற்கு முடிவு பெறுமாறு செய்யவேண்டும்' என்று வேண்டினேன். பிறகு, அந்த அகஸ்தியர் கீழே விழு

---

1 வேறு பாடம்.

கின்ற என்னைக் கருணையுடன் நோக்கி, 'தர்மராஜனை யுதிஷ்டிரன் சாபத்தினின்று உன்னை விடுவிப்பான். அரசனே! மஹாராஜனே! அப்படிப்பட்ட அகங்காரத்திற்கும் பலத்துக்கும் பயனனது கூசீணித்தபிறகு புண்யபலனை அடைவாய்' என்னும் இதனைச் சொன்னர். பிறகு, அந்தத் தவத்தினுடைய வலிமையைக் கண்டு எனக்கு ஆச்சர்யமுண்டாயிற்று. அதனால், உன்னைப் பிரம்மதத்தைப்பற்றியும் பிராம்மணத்தன்மையைப்பற்றியும் வினவினேன். அரசனே! சாதுக்களுக்கு ஸத்தியம், தமம், தவம், யோகம், அஹிம்ஸை, ஞானத்திலேயே எப்பொழுதும் நிலைபெற்றிருத்தல் ஆகிய இவைகள் (நற்கதிக்கு) ஸாதனங்கள். ஜாதியும் குலமும் ஸாதகங்களாகா. நீண்ட கைகளுள்ளவனே! உன் பிராதாவான இந்தப் பீமன் க்ஷேமமுள்ளவனாகவே என்னால் விடப்பட்டான். மஹாராஜனே! உனக்கு க்ஷேமமுண்டாகட்டும். நான் மீண்டும் ஸ்வர்க்கம் செல்வேன். புருஷஸ்ரேஷ்டனே! அப்படிப்பட்ட நற்காலமும் இதோ வந்துவிட்டது. பார்த்த! இந்தக் காரணத்தினால் [1] அப்படிப்பட்ட பெரிய காரியம் உன்னால் என் விஷயத்தில் செய்யப்பட்டது' என்று கூறியது.

பிறகு, அந்த முகூர்த்தத்தில், இஷ்டப்படி செல்லுகிற அப்படிப்பட்ட உத்தம விமானமானது அர்ஜுனனிடம் வந்தது. அந்த நகுஷ மஹாராஜன் இவ்வாறு சொல்லி, அந்த மஹிமையுடனிருந்து திவ்ய சரீரத்தைப் பெற்று ஸ்வர்க்கத்தைக் குறித்துச் சென்றான். தர்மராஜனும் பீமனுடனான யுதிஷ்டிரனும் பிராதாவான பீமனைத் தேர்ந்து தனஞ்சயனுடன் இன்புற்று ஆச்ரமத்துக்குவந்தார். பிறகு, தர்மராஜனான யுதிஷ்டிரர், அவை அனைத்தையும் ஒன்று சேர்ந்திருக்கிற ஸஹோதர பிராம்மணர்களுக்குள் உள்ளபடி சொன்னார். தேவர்ஷே! அந்த ஸஹோதர பிராம்மணர்களுடைய இவருடைய அந்த மூன்று பிராதாக்களும் கீர்த்தியுள்ளவர்களான பாஞ்சாலியுடன் அதனைக்கேட்டு மிக மகிழ்ச்சியடைந்தார்கள். பிராம்மணர்களான அவர்களனைவரும் பாண்டவர்களுடைய துக்கத்தைச் சொல்லுகிறவர்களான விருப்பத்தினால் பீமனைப் பார்த்து அவனுடைய புராதனக்கதைகளைப்பற்றி நிற்கத்தது. 'இனி இவ்வாறு செய்யவேண்டாம்' என்று சொன்னார்கள். பாண்டவர்களோ, பயத்தினின்று விடுபட்டிருக்கிற மிக்க மகிழ்ச்சியான பீமனைப்

[1] இரட்டிக்கலால் ஒரு சொல் விடப்பட்டது.

பார்த்துக் களிப்படைந்தார்கள்; ஆனந்தத்துடன் ஸுகமாகி வஸித்தார்கள்.

ஆஜகாபர்வம் முற்றிற்று.

நூற்றெண்பத்துநான்காவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம்

(வ்ருத்ரது சாக்ரதுக்களின் வ்ருத்தாந்தமும், யுதிஷ்டிர முதலியவர் கந்த்வைதவனத்தினின்று ரதாயுதம் காம்யகவனம் வந்ததும்.)

றது. அன்றில்களாலும் அன்னங்களாலும் நிரம்பியதும் புற்கள் மிக முளைத்திருக்கிற காடுகளும் மலைச்சரிவுகளுமுள்ளதும் ஜலம் தெளிந்த நதிகளுள்ளதுமான சரத்காலமானது மிக்க மகிழ்ச்சியை உண்டுபண்ணுகிறதாயிற்று. அந்த மஹாத்மாக்களுக்கு ஆகாசமும் கங்கூத்திரங்களும் மாசற்றிருப்பதும், மிருகங்களும் பறவைகளும் நிரம்பியதுமான சரத்காலமானது மங்களகரமாயிற்று. இரவுகள் பூரித்தெளிந்தவைகளும் மேகத்தினால் குளிர்ந்தவைகளும் கிரஹங்களாலும் கங்கூத்திரங்களுடைய கூட்டங்களாலும் சந்திரனாலும் பிரகாசிக்கிறவைகளுமாகக் காணப்பட்டன. அவர்கள் குளிர்ந்த ஜலத்தையுடைய மங்களகரமான நதிகளிலும் அல்லிகளாலும் தாமரைகளாலும் கலந்து அலங்கரிக்கப்பட்ட ஓடைகளிலும் கண் டார்கள். ஆகாசம் போலத் தெளிவான ஜலமுள்ளதும் கரைகளில் வளர்கிறமரங்களாலடர்ந்ததும் புண்யதீர்த்தங்களையுள்ளதுமான லோஹித நதிக்கரையில் வந்தடைந்த அந்தப் பாண்டவர்களுக்கு லக்ஷ்மிகரமாயிற்று. உறுதியான விற்பிடித்த அந்த வீரர்கள் தெளிந்த ஜலமுடையதும் மங்களகரமானதும் நிறைந்து ருபபதுமான லோஹித நதியைப் பார்த்து மகிழ்ந்தார்கள். ஜனமேஜயரே! பர்வதங்களில் மிக்க புண்யமானதும் சரத்காலத்தைச்சார்ந்ததுமான காம்பில்யபர்வதத்தில் பூர்ணிமையாத்திரியானது, அவர்கள் அவ்விடத்தில் வளர்கிறமரங்களையும் கண்டார்கள். பரதஸ்ரேஷ்டரே! புண்யமானதும் ரிஷிகளால்கூட அதிகரான லக்ஷ்மிகரமுடையவர் களுமான சித்தர்களாலும் பாண்டவர்கள் வருகையை அறிந்து வாகனங்களில் அதில் பாண்டவர்கள் அந்தப் பர்வதத்தில் வாதிகளாலும் சங்கங்களாலும் சப்தம் செய்தார்கள்.

நூற்றுஎண்பத்தைந்தாவது அத்யாயம்.

மார்க்கண்டேயமஹர்ஷியாடல்யம். (தொடர்ச்சி.)

(பாண்டவர்கள் பிரயாகம் முதலிய புண்ணிய தீர்த்தங்களைக் கண்டு தரிசனைசெய்யவந்ததும், நாரதரும் மார்க்கண்டேயரும் வந்ததும், ஸ்ரீ கிருஷ்ணனுடைய தூண்டுதலால் மார்க்கண்டேயர் புராணகதைகளைச் சொல்லத் தொடங்கியதும்.)

ஜனமேஜயரே! பிறகு எல்லாம் ஒருங்கே! புண்ணியமான நதிக்கரையில் தெளிவான ஜலத்தையுடைய அடர்ந்த முனிவர்

களின் கூட்டங்களால் ஆதித்யம் செய்யப்பெற்றுத் திரௌபதியுடன் வீற்றிருந்தார்கள். பிறகு, அங்கே நம்பிக்கையுள்ளவர்களாக வலிக்கின்ற அந்தப்பாண்டவர்களை அனேகம் பிராம்மணர்கள் அந்த இடத்தில் எல்லாப் பக்கங்களிலும் சூழ்ந்திருந்தார்கள். பிறகு, அர்ஜுனனுக்கு இனிய தோழரான ஒரு பிராம்மணர் பாண்டவர்களைப் பார்த்து, 'குருவம்சத்தைத் தாங்குபவர்களே! மிக்க தேஜஸ்வலிமையுள்ளவரும் பிரபுவும் போரறிவாளருமான அப்படிப்பட்ட வாஸுதேவர் வரப்போகிறார். நீங்கள் இங்குவந்துவிட்டது, அறியான அவருக்குத் தெரியுமன்றோ? ஸ்ரீ கிருஷ்ணன் எப்போழுதும் உங்களைப் பார்ப்பதில் விருப்பமுள்ளவர்; உங்களுடைய நன்மையைத் தேடிக்கொண்டிருப்பவர். அதிக வர்ஷகாலம் ஜீவிப்பவரும் பெரிய விரதமுள்ளவரும் சுவதாத்தியயனத்தோடும் தவத்தோடுங்கூடியவருமான மார்க்கண்டேயர் விசேஷமாக உங்களை வந்தடைவார்' என்று சொன்னார். அந்தப்பிராம்மணர் அவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கும்போழுதே, தேவாளிகளுள் சிறந்தவரான தேவவர் லோகபாலரும் ஸுதர்மனென்கிற குதிரைகள் பூட்டின ரதத்தோடு காணப்பட்டார். தேவகீபுத்திரர் அந்தக் கௌரவஸ்ரேஷ்டர்களைப் பார்க்க விரும்பி, இந்திரன் இந்திராணியுடன் சேர்ந்துவருவதுபோல் ஸத்யபாமையுடன் சேர்ந்து வந்தார். சிறந்த புத்தியுள்ளவரான கிருஷ்ணபகவான் ரதத்தினின்று இறங்கி விதிப்படி தர்மராஜரையும் பலசாலிகளுள் சிறந்த பீமனையும் மகிழ்ச்சியுடன் வந்தனம்பண்ணினார். தருவை ஸஹதேவர்களால் நமஸ்கரிக்கப்பட்டவராகித் தௌம்யரையும் பூஜித்தார். [1] அர்ஜுனனைத் தழுவிக்கொண்டு திரௌபதிக்கு இன்சொல் கூறினார். பகைவர்களை அழிப்பவரான அந்தக் காசார்ஹர் நெடுங்காலம் கழித்துவந்தவனும் வீரனும் நண்பனுமான அர்ஜுனனைப்பார்த்து அடிக்கடி கட்டிக்கொண்டார். அப்படியே கிருஷ்ணனுடைய அன்புள்ளமனைவியான ஸத்யபாமையும் பாண்டவர்களுடைய அன்புள்ள மனைவியான திரௌபதியைத் தழுவிக்கொண்டாள். பிறகு, அந்தப் பாண்டவர்களனைவரும் பார்யையுடனும் புரோஹிதருடனும் கூடியவர்களாகி, சுத்தாடையைக்கண்ணாரைப் பூஜித்து எல்லாப்பக்கங்களிலும் சூழ்ந்திருந்தார்கள். கற்றறிந்தவரான கிருஷ்ணரை, அஸுரர்களை அழித்தவனும் குந்தியின் புதல்வனுமான தனஞ்சயனைத் தொட்டு, மாதுலரான பலவானும் பகவானும் பூதபதியுமான

1 வேறு பாடம்.

ஸாக்ஷாத் சிவபெருமான் ஸுப்ரம்மண்யரோடு சேர்ந்து பிரகாசிப்பதுபோலப் பிரகாசித்தார். பிறகு, அர்ஜுனன் கூகனுக்கு மூத்தவரான கிருஷ்ணனிடம் வனங்களில் நடந்த எல்லா விருத்தாந்தங்களையும் உள்ளபடி சொல்லிவிட்டு, மறுபடியும், அவரிடத்தில் ஸுபத்ரையைப்பற்றியும் அப்படியே அபிமன்யுவைப்பற்றியும் வினவினான். தசார்ஹர்களுள் சிறந்தவரான கிருஷ்ணனும் நகுல ஸஹதேவர்களையும் திரௌபதியையும் யுதிஷ்டிரரையும் நகுல ஸஹதேவர்களையும் பீமனையும் பார்த்து, 'உங்களுடைய பாக்கிய விசேஷத்தால் அர்ஜுனன் அஸ்திரங்களில் தேர்ச்சியடைந்து ஸந்தோஷத்துடன் க்ஷேமமாகவந்து சேர்ந்தான்' என்று சொன்னார். அந்த மதுஸூதனர், தக்கபடி பார்த்தர்களையும் திரௌபதியையும் புரோஹிதரையும் பூஜித்து யுதிஷ்டிரராஜரை நேரில் புகழ்ந்துகொண்டு அவருடன்கூட உட்கார்ந்து, 'பாண்டவரே! அரசரே! ராஜ்யலாபத்தைக்காட்டிலும் தர்மம் சிறந்தது. அதற்குத் தவத்தையே மூலமாகச் சொல்லுகிறார்கள். ஸத்யத்துடனும் உள்ளநம்புறமும் ஒத்திருந்தலுடனும் ஸ்வதர்மத்தை அனுஷ்டிக்கின்ற உம்மால் இந்த உலகமும் பரலோகமும் ஜயிக்கப்பட்டன. முற்காலத்தில் ப்ரம்மசர்ய விரதங்களை அனுஷ்டிக்கின்ற உம்மால் அக்நியயனத்தைச் செய்து, கனுர்வேதம் முழுவதையும் கன்கு அடைந்து, க்ஷத்திரியனுக்குரிய தர்மத்தினால் தனங்களைத்தேடி, புராதனமான யாகங்களனைத்தும் கன்குசெய்யப்பட்டன. அரசரே! சாம்ய தர்மங்களில் உமக்குப் பற்றுதலில்லை. காமத்தினால் ஒன்றையும் நீர் செய்கிறதில்லை. பொருளிலுள்ள பிரபாவத்தால் தர்மத்தை நீர் விடுகிறதில்லை. அந்தப் பிரபாவத்தால் தர்மராஜராக இருக்கிறீர். குந்தீகர்ப்பரே! அரசரே! நீதங்களையும் தனங்களையும் போகங்களையும் அடைந்திருக்கிறீர். உடற்கு, தானம், ஸத்யம், தவம், பொறுமை, சாந்தி, இந்திரியநிக்ரஹம், மநோநைர்மல்யம் இவைகளிலெல்லாம் எப்பொழுதும் இப்படிப்பட்ட சிறந்தபற்றுதலிருக்கிறது. பரம்பரரே! [1] உம்மைக்காட்டிலும் மேலான எவன், குருஜாங்கலதேசத்தில் பலதவாக்களைப்பட்டதையும் மலைபில் திரௌபதி பரமசாதனையையும் பார்த்துக்கொண்டு சாஸ்திரத்துக்கும்

1 'குரு ஜாங்கலதேசத்து ஜனக்கூட்டமானது மலைபில் திரௌபதி பரமசாதனமாயிருந்ததைப் பார்த்தபொழுது உம்மைக்காட்டிலும் மேலானவன் சாஸ்திரத்துக்கும் ஸத்சுத்துக்கும் விலக்கான அந்தக் கெட்ட கடையைப் பொறுப்பான்' என்பது வேறு பாடத்தின் பொருள்.

வழக்கத்துக்கும் விலக்கான அந்தக் கெட்டகனவைப்பொறுப்பான்? நீர் ஐயமின்றி எல்லா விருப்பங்களும் நிறைவேறி விளைவில் பிரஜைகளை நன்கு பரிபாலிக்கப்போகிறீர். உம்முடைய பிரதிஜ்ஞையானது முடிக்கப்பட்டுவிட்டால், கௌரவர்களைச் [1] சிக்ஷிப்பதில் இதோ நாங்கள் வித்தகராயிருக்கிறோம்' என்று சொன்னர்.

தசார்ஹர்களைப் போஷிப்பவரான ஸ்ரீகிருஷ்ணன், கண்டர்களோடு கூடியவராக யஜ்ஞசேனனுடைய குமாரியான கிருஷ்ணையைப் பார்த்தும், 'பாக்ய விசேஷத்தினல் தனஞ்சயரைநிசமாகச் சார்ந்து (விருப்பம்) நிறைவேறினவளாகிறாய். கிருஷ்ணையே! யஜ்ஞசேனனுடைய குமாரியே! உன்னுடைய குமாரர்களான அந்தச்சிறுவர்கள் கனுர்வேதத்தில் முக்கியமான பற்றுள்ளவர்களும் கல்விஒழுக்கத்தையுடையவர்களுமாகிப் பெரியோர்களால் எப்பொழுதும் அனுஷ்டிக்கப்பட்டுவருகிற ஸமாதியை அனுஷ்டிக்கிறார்கள். கிருஷ்ணையே! உன்னுடைய பிள்ளைகள் உன் பிதாவான த்ருபதராஜனிலும் உன்ஸஹோதரர்களானதிலும் அபிசாட்சியையும் காரிகளையும் சொந்தத்து அழைக்கப்பட்டதில் யஜ்ஞசேனனுடைய அரண்மனைகளிலும் அப்பாட்டன்மார்களுடைய ராஜதானிகளிலும் மகிழ்ச்சியை அடைபவில்லை. கிருஷ்ணையே! உன்னுடைய குமாரர்கள் கனுர்வேதத்தில் முக்கியமான பற்றுள்ளவர்களாகி ஆனந்தசந்தோஷமாகச் சென்று கிருஷ்ணனுடைய பட்டணமான த்வாரகையில் பிரவேசித்தபின் தேவர்களாலும் அசுரர்களாலும் சேவிக்கப்படவில்லை. அவர்களிடம் நீயும் சிறப்புடையவளான குந்திதேவியும் கடந்துசென்றதுபோலவே வாத்தையும் கனமுமல் கடந்துவருகிறாள். கிருஷ்ணையே! துக்கினியின் புத்திரனான ப்ரதிவிந்தன், அரிந்தமனுக்கும் அபிமன்யுவுக்கும் ஸுதனுவுக்கும் அல்லதவித்தையைக் கற்பித்ததுபோலவே உன்புத்திரர்களுக்கும் அல்லதவித்தையைக் கற்பிக்கிறான்; பரதகாலையிலிருந்து[2] ப்ரதிவிந்தன் கதைகளையும் கத்திகளையும் கேடகங்களையும் பிரயோகிப்பதிலும் அஸ்திரங்களிலும் ஆயுதசிக்ஷைகளிலும் ரதங்களையும் குதிரைகளையும் கடந்துவதிலும் சூரர்களான அந்த உன்குமாரர்களையும் அபிமன்யுவையும் காப்பொழுதும் சொல்லின்றிக் கற்பிக்கிறான். அந்தப் ப்ரதிவிந்தனும், இவர்களுக்கு நன்கு பயிற்சியைச் செய்வித்து

---

1 வேறு பாடம்.

2 'ராஜகுமாரனென அபிமன்யு,' என்பது வேறுபாடத்தின் பொருள்.

விதிப்படி சஸ்திரங்களையும் கொடுத்து உன் குமாரர்களும் அபிமன்யுவுமாகிய இவர்களுடைய பராக்கிரமங்களால் ஸந் தோஷமடைகிறான். யஜ்ஞஸேனனுடைய குமாரியே! உன் புத் ரர்கள் விளையாட்டிடங்களைப் பார்ப்பதற்காக வெளியில் செல்லும் பொழுது அங்கே இவர்களுள் ஒவ்வொருவரோடும் ரதங்களும் வாகனங்களும் யானைகளும் பின் தொடர்ந்து செல்லுகின்றன' என்று சொன்னார்.

பிறகு, கிருஷ்ணன், கர்மராஜனைப் பார்த்து, 'அரசே! இந்த யுத்தவீரர்களான காசார்ஹர்களும் குகுரர்களும் அந்தகர்களும் எந்த இடத்தில் நீர் விரும்புகிறீரோ அந்த இடத்தில் உம்முடைய கட்டளையைப் பரிபாலனம் செய்கின்றவர்களாக இருக்கக்கடவர். சிலந்தீ! நிற்களுடைய சௌகத்தால் காற்றை உண்பவனும் வதம் பலராமனைத் தலைவராகக் கொண்டதுமான படுதலையான கருடனுடைய சின்னமானது, குதிரைவீரர்களோடும் காலாட்களோடும் குதிரைகளோடும் ரதங்களோடும் யானைகளோடும் கூடினதாக உம்முடைய காரியங்களில் முன்னத்தடாயிருப்பதாகுக. பாண்ட வரே! பானிகளுடன் மிகச்சிறந்தவனும் கிருதாஷ்டபுத்திரனு மான அக்குரூரனோ, பந்துக்களுடனும் கண்பர்கட்டங் களுடனும், கதகாலரான சிலாதிசாதியான மற்ற வீரர்களின் சரீரத்தை அணைந்து செல்லுங்கள்' என்றார்கள். பிறகு, மறுநாள் காலை அரசர்களுக்குள் முதலானவர்கள் எல்லாரும் சென்ற பின் அக்ரூரர் வந்து சேர்ந்தார். அவர் வந்ததும் கிருஷ்ணன் அவரை வரவேற்று, 'சிகண்டீ! எல்லாரும் சென்ற பின்னர் நீ வந்திருக்கிறாய். பார்த்தர்கள் உம்மையே சரணமாகக் கொண்டார்களன்றோ? காலம் வருவதை அந்தக் காரியத்தைக் கண்ணால் நீ செய்வாய். அதில் எல்லையில்லை. ஜன மேஜயரில்லாத காண்டவத்தில் பிரஜ்ஜுவாலை செய்தபடி பன்னிரண்டு வருஷங்கள் முழுமையும் வனவாசம் செய்கிறார்கள். சிகண்டீ!

பாண்டவர்கள் அஜ்ஞாதவாஸத்தை விதிப்படி நிறைவேற்றியபின் உம்மை அண்டவார்கள். கேசவரே! உம்மை அடைந்திருக்கிற பாண்டவர்களுக்கு எப்பொழுதும் இதுவே எண்ணம். பாண்டவர்கள் ஸத்தியத்திலிருப்பவர்கள். தானதர்மங்களுடனும் ஜனங்களுடனும் மனைவிகளுடனும் பந்துக்களுடனும்சேர்ந்தவர்களான பார்த்தர்கள் உம்மை ரக்ஷகராகக்கொண்டவர்களன்றோ?' என்று சொன்னார்.

பாரதரே! பிறகு, கிருஷ்ணனும் தர்மராஜரும் அவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் தருணத்தில், தவத்தினல் முதிர்ந்தவரும் பல்லாயிரம்வருஷங்களாக ஜீவித்திருப்பவரும் தர்மாத்மாவும் பெருந்தவமுள்ளவருமான மார்க்கண்டேயர் காணப்பட்டார். மூப்பில்லாதவரும் மரணமில்லாதவரும் ரூபத்தையும் ஔதார்ய குணத்தையும் உடையவருமான அந்த மார்க்கண்டேய மஹரிஷியானவர் இருபத்தைந்து யுகத்துள்ளவர்போலக் காணப்பட்டார். முதிர்ந்தவரும் பல்லாயிர வருஷங்களாக ஜீவித்திருப்பவரும் வந்தவருமான அந்தரிஷியை அந்தப்பாண்டவர்கள் எல்லாரும் யாதவர்களோடுகூடியவர்களாக நன்கு பூஜித்தார்கள். அர்ச்சிக்கப்பட்டவரும் நல்ல விஸ்வாஸமுள்ளவரும் வீற்றிருப்பவருமான அந்தரிஷிஸ்ரேஷ்டரைப் பார்த்து, கிருஷ்ணன், பிராம்மணர்களும் பாண்டவர்களுமாகிய இவர்களின் அபிப்ராயத்தின்மேல், 'மார்க்கண்டேய மஹரிஷியே! பாண்டவர்களும் கூடியிருக்கின்ற பிராம்மணர்களும் திரௌபதியும் ஸத்யபாமையும் அப்படியே காணும்பொழுது நிகரற்றவசனத்தைக் கேட்க விரும்புகிறோம். முன் நடந்த புண்ய கதைகளையும் அரசர்கள் ஸ்திரீகள் ரிஷிகள் ஆகிய இவர்களுடைய தொன்றுதொட்டுவரும் ஸதாசாரங்களையும் எங்களுக்குச் சொல்லுவீராக' என்று கூறினார். அவர்கள் அங்கு உட்கார்ந்திருக்கும்பொழுது பரிசுத்தசித்தரும் தேவரிஷியுமான நாரதரும் பாண்டவர்களைப் பார்ப்பதில் விருப்பத்துடன் வந்தார்.

பிறகு, கற்றறிந்தவர்களான அந்தப்புருஷஸ்ரேஷ்டர்களாலும் வரும் மஹாத்மாவான அந்நாரதரைப் [1] பாத்யத்தாலும் [2] அர்க்கியத்தாலும் நியாயப்படி பூஜித்தார்கள். பிறகு, தேவரிஷியான நாரதரோ, அவர்களனைவரையும் (மார்க்கண்டேயருடைய சொல்

[1] கால் கழுவக் கொடுக்கும் நீர். [2] பூஜைக்குரிய பொருள்கள்; இக்காலத்தில் சுத்த ஜலத்தைக் கொடுக்கிறார்கள்; அந்த உபசாரத்தானத்தில் கொடுக்கப்படுகிறதென்று தெரிகிறது.

லக் கேட்பதில்) பற்றுவைத்தவர்களாக அறிந்து சொல்லுகின்ற மார்க்கண்டேயருடைய அந்தக் கதையைப் பாராட்டிப் பேசினர். அந்த நாரதர், புன்சிரிப்புடன், காலத்தை அறிந்தவரான அந்த மார்க்கண்டேயரைப் பார்த்து, 'பிரம்மரிஷியே! பாண்டவர்கள் விஷயத்தில் சொல்லக்கருதியதைச் சொல்லக்கடவீர்' என்று சொன்னர். இவ்வாறு சொல்லப்பட்டவரும் பெருந்தவமுள்ளவருமான மார்க்கண்டேயர், 'மனத்தை ஒருவழிப்படுத்திக்கொள்ளுங்கள். சொல்லவேண்டிய விஷயம் விரிவாக இருக்கும்' என்று மறுமொழி கூறினர். இவ்வாறு சொல்லப்பட்ட அந்தப் பாண்டவர்கள், அந்தப் பிராம்மணர்களோடுகூட, நடுப்பகலிலுள்ள சூரியனைப்போன்ற மஹரிஷியையே பார்ப்பவர்களாகி மனத்தை ஒருவழிப்படுத்திக்கொண்டார்கள்.

நூற்றெண்பத்தாறுவது அத்யாயம்.

மார்க்கண்டேய ஸமாஸ்யா பர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர், யுதிஷ்டிரர் முதலியவர்களுக்குத் பிராணிகளுடைய புண்யபாப கர்மங்களுக்குத்தப்பயனை ஸுகதுக்கங்களின் அனுபவ முதலியவற்றின் முறையை நிரூபித்தது.)

குரு ராஜரான கர்மபுத்திர், மஹரிஷியான அந்த மார்க்கண்டேயர் சொல்லிமுடிப்பதுவரையிலும் இருப்பதைக்கண்டு (சொல்லவேண்டியதை) கவனமாகக் குறிப்பிலிருப்பதற்காக, 'தேவரீர் தேவர்கள், கந்தர்வர்கள், மஹரர்கள், எல்லா ராஜரிஷிகள் ஆகிய இவர்களுடைய சரித்திரங்களை அறிந்தவர்; புராதனர். தேவரீர் எங்களால் அனைத்துக்கவலைகளும் விடுபடத்தக்கவரென்றும் எண்ணப்பட்டிருக்கிறீர்; மிகுதியாகவும் விரும்பப்படுகிறீர். இந்தத் தேஜஸ்விகளைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறார். ஸுகத்திலிருந்து நழுவியிருக்கிறோம் என்னையும், கிட்டே நடையுள்ளவர்களையும் சிசுவைப் பெருக்குடையவர்களுடனே திருகராஷ்டிரபுத்திரர்களையெல்லாவற்றையும் பார்த்து, எல்லோடையபுத்திரனது சுழலோடு சுழலுகிறதன்றோ? நல்ல கர்மங்களோடியா கெட்ட கர்மங்களோடியா மனிதன் செய்கிறான்; தான் செய்த அந்த வினைப்பயனை அனுபவிக்கிறான். அவ்வாறிருக்க, ஈச்வரன் எவ்வாறு கர்த்தா ஆவான்? பிரம்மஜ்ஞானிகளுள் சிறந்தவரே! அவ்வாறாயினும், மனிதர்களுக்கு ஸுகதுக்

கங்களைக்கொடுக்கும் விஷயத்தில் வினையானது (செய்தவனை) இந்தச் சரீரத்திலேயே பின்தொடர்கிறதா? அல்லது, வேறு தேகத்திலா? பிராம்மணர்களுள் சிறந்தவரே! நல்வினைகளாலும் தீவினைகளாலும் தேடப்படுகின்ற தேஹியானவன் அவற்றுடன் எவ்வாறு சேர்கிறான்? தேகத்தைவிட்டுப் பரலோகத்திலா? இவ்வுலகத்திலா? பிருகுகுலத்தில் பிறந்தவரே! இந்த வினைப்பயன் இந்த லோகத்திலேயே அனுபவிக்கப்படுகின்றதா? அல்லது, பரலோகத்திலா? உடல் துறந்த ஜீவனுடைய நல்வினைதீவினைகள் எங்கேதான் இருக்கின்றன?' என்று வினவினர்.

மார்க்கண்டேயர், 'பேசுகிறவர்களுள் சிறந்தவனே! உன்னுடைய படி உன்னால் கேட்கப்பட்ட இந்தக் கேள்வியானது உனக்குத் தகுந்தது. அறியத்தக்கதை நீ அறிந்திருக்கிறாய். ஆயினும், உலகங்களைக் காப்பதின்பொருட்டு நீ என்னைக் கேட்கிறாய். அதனால் இங்கே உனக்குச் சொல்லுவேன். மனிதன், இம்மையிலும் மறுமையிலும் ஸுகதுக்கங்களை அடையும் விதத்தை இப்போழுது ஒரே மனத்துடன் கேள். முதலில் தோன்றின பிரம்மதேவர் பிராணிகளுக்குக் குற்றமற்றவையும் மிக்க பரிசுத்தியுள்ளவையும் தர்மத்தை முக்கியமாகக்கொண்டவையுமான சரீரங்களைப் படைத்தார். தேவர்களுள் மிகச்சிறந்தவனே! பன்னிரண்டாயிரம் மனிதர்கள் எண்ணியவற்றை எண்ணியபடி அடைபவர்களும் கல்விவிரதமுள்ளவர்களும் உண்மை பேசுகிறவர்களும் பரிசுத்தர்களுமாயிருந்து பிரம்மலோகஞ்சென்றார்கள். எல்லோரும் தேவர்களைப்போல் ஒப்பானவர்கள்; தம்மிஷ்டப்படி ஆகாயத்தில் போவார்கள்; அங்கிருந்து திரும்பிவருவார்கள். எல்லோரும் தம்மிஷ்டப்படி ஸஞ்சரிப்பார்கள். மனிதர்கள் தம் இஷ்டப்படி மரிப்பவர்களும் தம் இஷ்டப்படி உயிர்வாழ்கிறவர்களும் துக்கமில்லாதவர்களும் கவலையற்றவர்களும் விருப்பம் நிறைவேறினவர்களும் துன்பமில்லாதவர்களுமாயிருந்தார்கள். மனிதர்கள் தேவர்களுடைய கூட்டங்களையும் மஹாத்மாக்களான ரிஷிகளையும் பார்ப்பவர்களும் எல்லாத் தர்மங்களையும் நேரில் அறிந்தவர்களும் அடங்கினவர்களும் [1] மத்ஸரம் அற்றவர்களும் பல்லாயிர வருஷங்கள் ஜீவித்திருப்பவர்களும் அப்படியே பல ஆயிரம் பிள்ளைகளுள்ளவர்களுமாயிருந்தார்கள். அதன் பிறகு, வேறொரு காலத்தில் மனிதர்கள் பூதலத்தில் ஸஞ்சரிப்பவர்களும், காமக்ரோதங்

---

1 பிறர் செழிப்பைக்கண்டு பொறுமைப்படாதல்.

களால் கவரப்பட்டவர்களும், கபடத்தையும் டம்பத்தையும் அடுத்துப் பிழைப்பவர்களும், பொராசையாலும், அஜ்ஞானத் தினாலும் மூடப்பட்டவர்களும், தேவர்களால் விடப்பட்டவர்களும் ஆனார்கள். [1] பாவிகள் தீச்செயல்களால் பலவித மான பிறப்பிறப்புக்களில் விலங்குப் பிறவியையும் நரகத்தையும் அடைகிறவர்களும், திரும்பத்திரும்ப வெவிக்கப்படுகிறவர்களும், விருப்பங்கள் வீணானவர்களும், எண்ணங்கள் வீணானவர்களும், ஞானம் வீணானவர்களும், மனமிழந்தவர்களும், [2] எல்லாப்பொருள்களையும் விரும்புகின்றவர்களும், [3] நாஸ்திகர்களும், கர்மமாகிற அசிணையை உடைக்கிறவர்களும், எல்லா விஷயங்களிலும் ஸம்சயமுள்ளவர்களும், (பிறருக்குத்) துன்பத்தைத் தொடுப்பவர் களும், பொறுப்பாலும் தீய செய்கைகளால் அடையாளமிடப்பட்ட வர்களும், கெட்ட குலத்தில் பிறப்பவர்களும், பலவகை நோயுள்ள வர்களும், தரித்திரர்களும், எல்லாருக்கும் தாபத்தை உண்டு பண்ணுகிறவர்களும், அற்ப ஆயுளுள்ளவர்களும், பாவிகளும், பயங் கரமான செய்கைகளின் பயன் விளையப்பெற்றவர்களும், எல்லாப் பொருள்களிலும் வெறுப்புள்ளவர்களும், நாஸ்திகர்களும், மனம் உடைந்தவர்களும் ஆகிறார்கள். குந்திதந்தனை! உடல் துறந்து லோகாந்தரம் செல்லுகின்ற ஜீவனுக்கு இவ்வுலகத்தில் செய்த கன்மத்தினால் கதி ஏற்படுகிறது. 'கற்றறிந்தவன் படிக்காதவன் ஆகிய இவர்களுடைய விளைப்பொருள் எது வாகியிருக்கிறது? அவன் எவ்விடத்திலிருந்து எதனால் கல்வியையோ தெரிவிக்கப்படாததையோ அனுபவிக்கிறான்?' என்று நீ அறியவிரும்பிய விஷயத்தையும் விரித்தாதிக்கிறேன்.

இந்தமனிதன் எப்படி முன்பிறவியில் முதற்சரீரத்தால் கல்வியையும், தெரிவிக்கப்பட்டதையும் பிறரிடம் குறிப்பிலே செய்கிறான்; வாழ்நாளையுடைய பிறருடனும் அதிகரித்திருக்கிற இந்தச் சரீரத்தை விட்டு அறிவுபாபத்தில் வேறு பிறவியில் தவறாமல் பிறக்கிறான்; இடையில் சரீரமில்லாமை இல்லை. தன்னால் செய்யப்பட்ட விளைவானது அந்த இவனுடைய வேறு சரீரத்தில் எப்பொழுதும் நிழல்போலத் தொடர்ந்திருக்கிறது. பலனைத் தருகிறது. அதனால் ஸுகத்தை அனுபவிப்பதற்கோ துக்கத்தை அனுபவிப்பதற்கோ நேருகிறான். அந்த ஜீவனானவன் ஞானத்துடனையிருப்பானாகிலும் கல்வி அடையாளங்களாகிலும்

---

[1] இது இரண்டாம் வருகிறது. [2], [3] இவை இரட்டித்து வருகின்றன.

கெட்ட அடையாளங்களாலோ யமனால் (ஸுகத்துக்காலுபவத்தில்) கட்டளையிடப்பெற்றவனென்றும், தன்னை அடைந்த ஸுகத்தையோ துக்கத்தையோ விலக்குவதற்குச் சக்தியற்றவனென்றும் அறியப்படுகிறான். யுதிஷ்டிர! அஜ்ஞானிகளுடைய இந்தக்கதி உரைக்கப்பட்டது.

இதற்குமேல் ஞானிகளுடைய உத்தமகதியைத் தெரிந்து கொள். ஞானிகள் தபஸ்வம்புரிகிறவர்களும் எல்லாச் சாஸ்திரங்களிலும் பற்றுள்ளவர்களும் உறுதியான விரதமுள்ளவர்களும் ஸத்தியத்தைப் பிரதானமாகக்கொண்டவர்களும் குருக்களுடைய பணிவிடைகளில் பற்றுள்ளவர்களும் கல்விலாழுக்கமுடையவர்களும் யோகத்தாலுண்டாகிற ஞானத்தைத் தெரிவதிலேயே நோக்கமுள்ளவர்களும் பொறுமையுள்ளவர்களும் இந்திரியங்களை அடக்கினவர்களும் கல்லதேஜஸ்ஸுள்ளவர்களும் சுத்தமான பிறப்பை அடைந்தவர்களும் பெரும்பாலும் கல்ல லக்ஷணமுள்ளவர்களும் இந்திரியங்களை ஜயித்திருப்பதனால் உதாரர்களும் 1 கல்விஹீனதையால் ஆசையில்லாதவர்களும் துக்கமும் பயமும் மற்றவர்களும் துன்பமற்றவர்களும் ஆகிறார்கள். ஞானக்கண்ணுடையவர்களும் தம்ஆத்மாவும் பிறஆத்மாவும் (சரீரத்தினின்று) கிளம்புவதையும் வேறு கர்ப்பத்தில் வளிப்பதையும் பிறப்பதையும் முழுமையும் அறிகிறார்கள். பரதஸ்ரேஷ்டனே! மகாத்மாக்களும் சாஸ்திரங்களை நேரில் கண்டுணர்ந்தவர்களுமான அப்படிப்பட்ட ரிஷிகள் இந்தக் கர்மபூமியை அடைந்து ஞானத்தினால் கல்ல கர்மங்களைச் செய்து மறுபடியும் ஸ்வர்க்கத்தை அடைகிறார்கள். அரசனே! மனிதர்கள் 2 தெய்வத்தினால் சிலவற்றையும் ஹடாத்காரத்தால் சிலவற்றையும் தம் செய்கைகளால் சிலவற்றையும்

---

1 'ஸுகாஸுகாஸந்நிரோதினீ' என்பது வேறுபாடம்; 'சுத்தமாக இருப்பதால்' என்று பொருள் கூறி அந்தச் சுத்தியை யோகமென்று கொண்டு சரீரத்தை யோகாக்நிமயமாக்கினவருக்குச் சோகமும் மூப்பும் மரணமுமில்லை என்னும் பொருளுள்ள வேகவாக்கியத்தை எடுத்துக் காட்டுவதும், மேலும் வேறுவிதமாகப் பாடங்கொண்டு வேதாந்த பரமாகப் பொருள்கூறுவதும் பழையவுரை.

2 'மூடர் பித்தர் ஜடபரதர் முதலியோர் வந்ததை அநுபவித்தது தெய்வத்தால்' என்றும், 'யோகஸித்திபெற்ற விஸ்வாமித்ரர் முதலியவர்கள் வலிந்து அடைந்தது பிடிவாதத்தால்' என்றும், 'மற்றவர்கள் அடைந்தது தம் வினைகளால்' என்றும் கூறுவது பழைய உரை.

அடைகிறார்கள். இந்த மூன்றனுள் ஒன்றுதானுண்டென்னும் எண்ணம் உனக்கு வேண்டாம். பேசுகிறவர்களுள் சிறந்தவனே! இந்த விஷயத்தில் இந்த உவமையையும் தெரிந்துகொள். யுதிஷ்டிர! மானிடவுலகத்திலுள்ள ஸுகத்தையே சிறந்ததென்றெண்ணுகிறேன். ஒருவனுக்கு இந்த உலகத்தில்மட்டுமே ஸுகம் உண்டாகிறது; பரலோகத்தில் இல்லை. மற்றொருவனுக்குப் பரலோகத்தில்மட்டுமே ஸுகம் உண்டாகிறது; இவ்வுலகிலில்லை. வேறு ஒருவனுக்கு இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் ஸுகம் உண்டாகிறது. ஒருவனுக்கு இவ்வுலகத்திலும் ஸுகம் உண்டாகிறதில்லை; பரலோகத்திலும் இல்லை. வலிய பகைவர்களைப்புங் கொல்பவனே! எவர்களுக்கு ஏராளமான பொருள்கள் இருக்கின்றனவோ, எவர்கள் நன்கு அலங்கரிக்கப்பட்ட அங்கங்களுடன் எப்பொழுதும் ஸுகத்தை அனுபவிக்கிறார்களோ, எப்பொழுதும் கிராம்ய ஸுகத்தில் பற்றுதலுள்ள அந்த மனிதர்களுக்கு இந்த லோகஸுகம் மாத்திரம் உண்டு; பரலோகஸுகம் இல்லை. பகைவர்களைக் கொல்பவனே! எவர்கள் தபோகஷ்டப்படுபவர்களும் தவத்தில் பிக்ஷ பற்றுள்ளவர்களும் இந்திரியங்களை அடக்கினவர்களும் பிராணிகளுக்கு நன்மை செய்வதில் ஊக்கமுள்ளவர்களுமாகி லோகலோகாந்தரங்களை முக்கியமாகக்கொண்டு தீக்ஷைகளை மேற்கொள்கிறார்களோ அவர்களுக்குப் பரலோகஸுகமே உண்டு. இந்த உலகஸுகம் இல்லை. எவர்கள் நாட்டத்தையே முதன்மையாக அனுஷ்டிக்கிறார்களோ, தபோநிஷ்டையால் தங்க மயத்தில் விமானங்களைப் பெறுவதும் மரணமில்லாத அமைந்தும் போகங்களால் தேவஸ்திரீகளைப் பூஜிக்கிறார்களோ அவர்களுக்கு இம்மையும் மறுமையும் முண்டு. பரலோகத்தில் வந்த புண்ணியங்களால் கல்வியைக் கற்பதும் தானத்தைச் செய்வதும் ஸ்நானமும் செய்வதும் இருந்து கொண்டு புத்திரனை உண்டுபண்ணுவதில் முயல்பவர்களேயோ, மங்களங்களையும் அடைகிறவர்களேயோ, அவர்களுக்கு இவ்வுலகமுமில்லை; பரலோகமுமில்லை. தீங்கினால் தேவர்களும் யக்ஷமும் பலமும் பிங்கவர்களும் தெய்வசக்தியுள்ளவர்களும் தேவகணங்களுள்ளவர்களும் தேவகாரியங்களில் பிரியமுள்ள பிதிர்க்களும் பரலோகத்திலிருப்பதை அடைந்திருக்கிறார்கள். சூரர்களும் தவத்தையும் இந்திரிய நிக்ரஹத்தையும் ஆசாரத்தையும் ஸ்நாதகத்தையும் இயற்கையாகக்கொண்டவர்களுமான தீங்கள் பெரிய காரியங்களைச் செய்தே எல்லாத் தேவர்களையும் ரிஷிகளையும் பிதி

ருக்களையும் சிறந்தவிதிபிணல் கன்கு திருப்தி அடையச்செய்து உங்களுடைய கர்மங்களால் புண்ணியஞ் செய்தவர்களுக்கு இருப்பிடமான சிறந்த ஸ்வர்க்கத்தைக் காலக்ரமத்தில் அடைவீர்கள். கௌரவ ராஜனே! உன்னுடைய இந்தத் துண்பத்தைப் பார்த்து லௌகவிஷயத்தில் உனக்குச் சம்சயம்வேண்டாம்' என்றுகூறினர்.

நூற்றெண்பத்தேழாவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர் மரித்தவரை மீண்டும் பிழைக்கச்செய்கிற சக்தி முதலிய பிராம்மண மகிமையை யுதிஷ்டிரர் முதலியவர்களுக்குச் சொல்லியது.)

அப்பொழுது, பாண்டுவின் புதல்வர்கள் மஹாத்மாவான மார்க்கண்டேயரைப் பார்த்து, 'சிறந்த பிராம்மணர்களுடைய மஹிமையைக் கேட்க விரும்புகிறோம். சொல்லக்கடவீர்' என்று சொன்னர்கள். இவ்வாறு சொல்லக்கேட்டவரும் பெருந்தவமுள்ளவரும் மிகப்பெரிய தேஜஸ்வுள்ளவரும் எல்லாச் சாஸ்திரங்களிலும் தேர்ந்தவருமான அந்த மார்க்கண்டேயர், பாண்டவர்களைப் பார்த்து, 'ஹைஹயதேசத்து அரசர்களுடைய வம்சத்தை விருத்தி செய்பவனும் பகைவர்களுடைய பட்டணங்களை ஜயிப்பவனும் அழகு நிரம்பினவனும் பலசாலியுமான ஒரு ராஜகுமாரன் வேட்டையாடுவதற்காகக் காட்டில் ஸஞ்சரித்தான். புற்களாலும் கொடிகளாலும் நன்கு மூடப்பட்ட காட்டில் ஸஞ்சரிக்கின்ற அந்த ராஜகுமாரன், மான்தோலைப் போர்த்துக்கொண்டிருக்கிற ஒரு முனிவரைப் பக்கத்தில் கண்டான். காட்டில் அவனால் அவமரியாதையாகக் கொல்லப்பட்டார். பூமிக்கு காதலனே! தாமரைமலர்போன்ற கண்களையுடைய அந்த ராஜகுமாரன், அந்தக் காரியத்தைச் செய்து துண்புற்றவனும் சோகத்தால் தாக்கப்பட்ட புத்தியுள்ளவனுமாகி, பிரஸித்தி பெற்றவர்களான ஹைஹயராஜர்களின் ஸபைக்குள் சென்றான். அந்த ராஜகுமாரன் அப்பொழுது அந்த விருத்தாந்தத்தை அந்த ஹைஹயராஜர்களிடத்தில் உள்ளபடி உரைத்தான். அப்பனே! அந்த அரசர்கள் நடுங்குகனிகளைப் புஜிக்கின்ற அந்த முனிவர் கொல்லப்பட்டதைக் கேட்டுப் அங்கே

(போய்ப்)பார்த்தும் மனவருத்தமுள்ளவர்களானார்கள். அவர்களனைவரும், 'இந்த முனிவர், யாரைச்சேர்ந்தவர்?' என்று அங்கங்கே தேடிக்கொண்டு, பிறகு, கம்யபருடைய புத்திரரான அரிஷ்டநேமியின் ஆச்ரமத்தை விரைவாக அடைந்தார்கள். அவர்களனைவரும் மஹாதபஸ்வியும் கடுமையான விரதமுள்ளவருமான அந்தமுனிவரைவணங்கி நின்றார்கள். பிறகு, அந்தமுனிவர் அவர்களுக்குப் பூஜைக்குரிய பொருள்களைக் கொண்டுவந்தார். அவர்கள் மஹாதபஸ்வியான அந்தமுனிவரைப் பார்த்து, 'முனிவரே! செய்கைக்குற்றத்தால் நாங்கள் உம்மிடத்திலிருந்து உபசாரணையைப் பெறுவதற்குத்தகுதியுள்ளவர்களல்லோம். எங்களால் பிராம்மணர் கொல்லப்பட்டாரன்றோ?' என்று சொன்னார்கள். அந்தப்பிராம்மரிஷியானவர், அவர்களைப் பார்த்து, 'உங்களால் எவ்வாறு பிராம்மணன் கொல்லப்பட்டான்? அவன் எங்கிருக்கிறான்? சொல்லுங்கள். ஒன்றுசேர்ந்தவர்களான நீங்கள் என்னுடைய தபோபலத்தைப் பாருங்கள்' என்று சொன்னார். அவர்களின் அந்தமுனிவருக்கு அவை அனைத்தையும் பிச்சமின்றி உள்ளபடி உரைத்துவிட்டுத் திரும்பிவந்து (பார்க்கையில்) அந்த இடத்தில் உயிர்துறந்த அந்தமுனிவரைக் காணவில்லை. உயிர்துறந்த முனிவரைத் தேடுகின்ற அந்த அரசர்கள் எல்லோருடனும் உறங்குகிறவர்களின்போல மனமிழந்தவர்களாயினர். பகைவர்களுடைய பட்டணங்களை ஜயிப்பவனே! அந்த மஹாயசஸ்காரர்களைப் பார்த்துக் கம்யபருடைய குமாரரான அரிஷ்டநேமி முனிவர், அச்சமயத்தில், 'உங்களால் கொல்லப்பட்டவன் இந்தப் பிராம்மணரல்ல. அரசர்களே! இவர் தபோபலத்துடன்கூடின என்னுடைய புத்திரர்' என்று சொன்னார்.

மன்னரே! அந்த ரிஷியைப் பார்த்தவுடனே அவர்களால் ஆச்சர்யத்தை அடைந்த அந்த அரசர்கள், 'இது பெரிய ஆச்சர்யம்' என்று சொன்னார்கள். 'இந்த முனிவர் இந்த இடத்தில் உயிர் துறந்தவராகக் காணப்பட்டார்; எவ்வாறு உயிரை அடைந்தார்? இந்த முனிவர் மறுபடியும் பிழைப்பிக்கப்பட்டது தபோபலத்தின் விரிவுக்கினறோ? பிராம்மணரே! இது கேட்கத்தக்கதாயிருந்தால் தெளிவாகச் சொல்லவேண்டும்' என்று வேண்டினார்கள். அவர் அந்த அரசர்களைப் பார்த்து, 'அரசர்களே! எங்களின்வரலாற்றில் ஆர்வமுள்ளவனென்ன அதிகாரம் செலுத்தத் தினமும் முன்னவனல்லன். பூரிவர்த்தர்களே! எங்களுடைய மிருது

வானவன் திறமையில்லாதவனுனதற்குக் காரணத்தை [1] யுக்தியுடன் சுருக்கமாகச் சொல்லுவேன். நாங்கள் சுத்தமான ஆசாரத்தினால் ஆலஸ்யமற்றவர்களும் ஸாதிக்கத்தக்க பிரம்மோபாஸனத்தில் முக்கியமான நோக்கமுள்ளவர்களும் சுத்தமான அன்னத்தைப் புஜிப்பவர்களும் சுத்தமான வீட்டில் வஸிப்பவர்களும் பிரம்மசர்ய விரதத்தையுடையவர்களுமாகி உண்மையையே அறிகிறோம். பொய்யில் மனத்தைச் செலுத்துவதில்லை. எங்களுக்குரிய தர்மத்தை அனுஷ்டிக்கிறோம். ஆதலால், எங்களுக்கு மிருத்யுபயம் இல்லை. பிராம்மணர்களுக்கு நன்மையைச் சொல்லுகிறோம். அவர்களுடைய நன்னடையைப் பேசுகிறோம். அதனால், எங்களுக்கு மிருத்யுபயமில்லை. அதிதிகளை அன்னபானங்களாலும், எங்களையடுத்தவர்களை அதிக ஆகாரத்தாலும் நன்கு உன்பித்து மிச்சத்தைப் புஜிக்கிறோம். அதனால் எங்களுக்கு மிருத்யுபயமில்லை. மனவமைதியுள்ளவர்களும் இந்திரியங்களை அடக்கினவர்களும் பொறுமையை இயற்கையாகக்கொண்டவர்களும் தீர்த்தயாத்ரையிலும் கோடையிலும் மிக்க பற்றுள்ளவர்களுமாகப் புண்ய தேசங்களில் வஸிக்கிறோம். அதனால், எங்களுக்கு மிருத்யுபயமில்லை. யோகத்தால் ஸித்திபெற்றவர்களுடைய ஸமீபத்தில் நாங்கள் வாஸம்பண்ணுகிறோம். அதனால், எங்களுக்கு மிருத்யுபயமில்லை. பொறுமையில்லாதவர்களே! இந்த விஷயம் ஒரு சிறிதே உங்களுக்குச் சொல்லப்பட்டது. நீங்களனைவரும் ஒன்றுசேர்ந்து செல்லுங்கள். உங்களுக்குப் பாவத்தினின்று பயமில்லை' என்று சொன்னர். பரதர்களுள் சிறந்தவனே! அந்த அரசர்களனைவரும், 'அப்படியே ஆகட்டும்' என்று மஹரிஷியைப் பூஜித்து ஸந்தோஷமுள்ளவர்களாகித் தம்தம் தேசத்தைக் குறித்துச் சென்றார்கள்.

1 வேறு பாடம்.

நூற்றெண்பத்தெட்டாவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர் பிருது சக்ரவர்த்தியினுடைய அச்வமேத யாகத்தில் அத்ரிக்தும் கௌதமருக்தும் நடந்த விவாதத்தைச் சொல்லுமுகத்தால் பிராம்மண மகிமையைக் கூறியது.)

பிராம்மணர்களுடைய மகிமையை முன்னிடமிருந்து பின்னும் தெரிந்துகொள். இவ்வுலகில், [1] வைன்யன் என்கிற ராஜரிஷியானவன் அச்வமேத யாகத்தின்பொருட்டுத் தீக்ஷையை அடைந்தான். அத்ரிமஹரிஷியானவர் பொருள் நிமித்தமாக அவனை அடையத் தொடங்கினரென்று நமக்குக் கேள்வி. அவர் தம்மை அழியாமல் காக்கும் என்னத்தால் மறுபடியும் பொருளை விரும்பவில்லை. போற்றுதலுள்ள அந்த அத்ரியானவர் தன்னை ஆலோசித்துக் காட்டையடைய விருப்பினர். அவர் தர்மபத்னியையும் புத்ரர்களையும் அழைத்து, 'முடிவில்லாததும் அதிகமானதும் குறைவுபடாததுமான பொருளை நாம் அடைவோமாக. குணம் மிகுந்த வனம்சென்றுணவினை நீங்கள் விரைந்து விரும்பக்கடவீர்' என்று சொன்னர்.

பிறகு, மஹரிஷியானவர் பொருளிடம் விருப்பினவராக அவரைப்பார்த்து, 'மறைதற்கரியான வைன்யனை அடைந்து அதிகமான பொருளை வேண்டுவீராக. யாதம் செய்கின்ற அந்த ராஜரிஷியான் தன் வேள்விக்கு உரிய பொருளைக் கொடுப்பான். பிரம்ம ரிஷியே! அவனிடத்தில் நின்று மிகுந்தான தனத்தை வாங்கிக் கொணர்ந்து பிராஹ்மணர்களுக்கும் க்ஷத்ரியர்களுக்கும் தன் முகம் பங்கிடுகிறதாயினும் பிறகு உரக்கவிடப்பட்டு செல்வீராக. இதுகாலம் இவையில்லாத கர்மமென்று கர்மத்தை அறிந்த வல்லவர்களால் நினைக்கப்பட்டது' என்று விடை கூறினர். அத்ரி, 'மறையாதிருப்பவனே! வைன்யனை. நாங்கள் பொருள் வேண்டுமென்று விருப்பினோம் செல்க. வேள்விக்கு தக்க தனத்தை மறுபடியும் எங்களுக்கு கொடுப்பாயாக' என்று சொன்னர். அதனால், என்று இருக்கிறது. பிராஹ்மணர்களுக்கு வேண்டிய அவனிடத்தில் என்னால் மனத்தினால் பிராஹ்மணர்கள் வணங்கிறார்

1 வேனன் குமாரனென்று பொருள் சொல்லப்படுகிறது.

களன்றோ? அதனால் நான் முயலவில்லை. அங்கே, அவர்கள், என்னால் சொல்லப்பட்டதும் மங்களகரமானதும் அறம்பொருள்இன்பங்களோடுகூடியதுமான சொல்லைப் பொருளில்லாததென்று மறுத்துப் பேசுவார்கள். அதிகம் கற்றறிந்தவளே! (ஆயினும்) உன் வசனமானது எனக்குப் பிடிக்கிறது. செல்வேன். வைன்யன் எனக்குப் பசுக்களையும் ஏராளமான பொருட்குவியல்களையும் கொடுப்பான்' என்று சொன்னார். பெருந்தவமுள்ள அத்ரியானவர் இவ்வண்ணம் முறைத்து வைன்யனுடைய யாகத்தைக் குறித்து விரைவாகச் சென்றார். அவர் யஜ்ஞசாலையை அடைந்து அந்த அரசனைத் துதிக்கலானார். அத்ரியானவர், மங்களங்களோடுகூடின வாக்கியங்களால் புகழ்கின்றவராகி, 'அரசனே! நீ பாக்யசாலி. நீ பிரபு. பூமியில் நீ முதன்மையான அரசன். உன்னை ரிஷிகணங்கள் துதிக்கின்றன. தர்மத்தை அறிந்தவன் உன்னைக்காட்டிலும் வேறொருவனுமில்லை' என்கிற வசனத்தைச் சொன்னார்.

பெருந்தவமுள்ள களதமரிஷியானவர், கோபங்கொண்டு அந்த அத்ரியைப்பார்த்து, 'ஓ! அத்ரியே! நீர் மறுபடியும் இவ்வாறு சொல்லாதீர். உமக்கு அறிவானது கல்லாகிலியில் இல்லை. இவ்வுலகில் நமக்கு முதன்மையான அரசன் மரீஷன்தான். அவன்தான் பிரஜைகளுக்கு ரக்ஷகன்' என்று சொன்னார். ராஜஶ்ரேஷ்டனே! பிறகு, அத்ரியும், களதமரைப்பார்த்து, 'இந்த அரசனை சக்ரவர்த்தி; அப்படியே இந்திரன்; பிரஜைகளைக்காப்பவன். நீர்தாம் மயங்குகிறீர். யாகத்தினால் உமக்கு கல்ல அறிவு இல்லை' என்று சொன்னார். களதமர், 'நான் கல்ல அறிவுள்ளவனாக இருக்கிறேன். நான் மயங்கவில்லை. பேச விரும்பிய நீர் மயங்குகிறீர். ஜனங்கள் கொண்டாடுகின்ற நீர் அரசனுடைய பார்வையை அடைய விரும்பி அவனைத் துதிக்கிறீர். நீர் உத்தமகர்மத்தை அறியவில்லை; (அதன்) பயனையும் [1] அறியவில்லை. நீர் சிறுபிள்ளையாகவும் மூடராகவுமிருக்கிறீர். எதிகா ஒரு காரணத்தினால் நீர் பரிதபமாகிவிட்டீர்' என்று சொன்னார். அவனுடைய யாகசாலையில் வந்திருந்தவர்கள், அவ்வாறு விவாதப்படுகின்றவர்களைப் பிரஜைகளுடைய முன்னிலையில் இருப்பவர்களுடனான அவ்விருவரையும் பார்த்து, 'யாரால் இவ்விருவருக்குமே வைன்யனுடைய சபையில் பிரவேசம் கொடுக்கப்பட்டது? இவர்கள் இருவரும் என்ன காரியத்துக்காக

---

1 வேறு பாடம்.

உரக்கப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்?" என்று கேட்டார்கள். பிறகு, எல்லாத் தர்மங்களையும் அறிந்தவரும் பரமதார்மிகருமான காம்யபர், யாகசாலையில் வந்திருப்பவர்களும் விவாதப்பட்டுக்கொண்டிருப்பவர்களுமான அவ்விருவரையும் ஸபைகளுக்குத் தெரிவித்தார். பிறகு, கௌதமமுனிவர், ஸபையில் வீற்றிருக்கின்ற முனிச்ரேஷ்டர்களைப் பார்த்து, 'பிராம்மணர்களே! எங்களிருவருடைய (விவாத ஸம்பந்தமான) வினைக்கள் சொல்லப்படுவதைக் கேளுங்கள். இந்த ஸபையில் வைன்யரென அத்ரியானவர் கட்டளையிடுபவனென்று சொல்லுகிறார். இந்த விஷயத்தில் எங்களுக்கு ஸந்தேகம் பிறந்திருக்கிறது' என்று சொன்னார். பிறகு, வைன்யனுடைய ஸபையில் கௌதமரால் சொல்லப்பட்ட வாக்கியத்தைக் கேட்டவுடனே, மஹாத்மாக்களான முனிவர்கள், தர்மங்களை அறிந்தவரான ஸநத்குமாரரிடம் ஸந்தேஹநிவர்த்திக்காகவே விரைவாகச் சென்றார்கள். எல்லோரும், தேவர்கள் பிரம்மாவை வணங்குவதுபோல, அந்த ஸநத்குமாரரை வணங்கி வினவினார்கள்.

பெருங்கவலையுள்ள அந்த ஸநத்குமாரர், அவர்களுடைய அந்த வார்த்தையை உள்ளபடி கேட்டு, பிறகு, அவர்களனைவரையும் நோக்கி, 'பிரம்மதேஜஸானது க்ஷத்ரிய தேஜஸோடு சேர்ந்து கொண்டும் க்ஷத்ரிய தேஜஸானது பிரம்ம தேஜஸோடு சேர்ந்து கொண்டும், நெருப்பும் காற்றும் காடுகளை எரிப்பதுபோலப் பகைவர்களை எரிக்கின்றன. அரசன் பிரஜைகளைக் காப்பவன்; கர்மத்தை நிலைநாட்டுகிறவன்; பிரஜைகளுக்குப் பதியாகவும் இருப்பவன். அவனே க்ஷத்ரன். அவனே தீக்ஷையை அறிந்தவன். அதனாலேயே ஜனகன் (=தந்தை); யுத்தத்தை உபதேசிப்பவன். அவனே பிரஜைகளுக்குப் பதி. அவனே விராட். அவனே ஸம்ராட். அவனே க்ஷத்ரியன். அவன் பூமிக்கு இறைவன். அவனே மனிதர்களைப் பாதுகாப்பவன். எவன் இந்தச் சொற்களால் துதிக்கப்படுகிறானோ அவனே எவனொருவன் பூஜிப்படுதற்குத் தகுதியுள்ளவனாவான்: அரசன், தர்மங்களை நடத்துவதனால் (உலகத்துக்கு) முதன்மையான காரணமென்றும், யுத்தத்தில் ஜயத்தை அடைவதனால் தன்பங்களை ஒழிப்பவனென்றும், ஜனங்களுடைய ரக்ஷணத்தின்பொருட்டு எல்லாப்பக்கத்திலும் செல்லுபவனென்றும், ஸர்வஜ்ஞனென்றும் (பிரஜைகளை) ஸ்வர்க்கத்தை அடைவிப்பவனென்றும், பகைவனை எதிர்த்தவுடனே செல்பவனென்றும், விஷ்ணுவென்றும், லக்ஷ்மிக்குப் பிறப்பிடமென்

றும், புராதனமான தர்மங்களை அறிபவனென்றும், ஸத்யத்தை யும் தர்மத்தையும் நடத்துபவனென்றும் சொல்லப்படுகிறான். ரிஷிகள் அதர்மத்தினின்று பயந்தவர்களாக க்ஷத்திரியனிடத்தில் பலத்தை நன்கு அமைத்தார்கள். அதனால், ப்ரம்மதேஜஸினால் க்ஷத்திரியதேஜஸும், க்ஷத்திரிய தேஜஸினால் ப்ரம்மதேஜஸும் குறைவற்றிருக்கின்றன. தேவர்களுள் ஸூர்யன் தேஜஸினால் எவ்வாறு ஆகாயத்தில் இருளைப் போக்குகிறானோ அவ்வாறே அரசன் பூமியில் அதர்மங்களை முழுமையும் போக்குகிறான். ஆகையால், சாஸ்திரத்தினுடைய ப்ராமாண்யத்தைப் பார்த்தால் அரசனுக்குத் தலைமை ஏற்படுகிறது. அரசன் இவ்வாறு (பெருமை யுள்ளவனென்று) சொல்லியவருடைய பக்ஷம் ஸித்தாந்தமாக நிலைக்கிறது' என்று தர்மத்தைத்தாடும் அத்தத்தைத்தாடும்கூடிய வசனத்தை மறுமொழியாக உரைத்தார்.

பிறகு, (அத்ரியினுடைய) கச்யபனது ஸித்தாந்தமான வுடன், உதார மனமுள்ள அந்த அரசன் மிகமகிழ்ந்தவனும் ப்ரீதியடைந்தவனுமாகி முன்பு தன்னைப் புகழ்ந்த அத்ரியைப் பார்த்து, 'ப்ரம்ம ரிஷியே! இச்சபையில் முன்பு என்னை மனிதர்களுள் மிகச் சிறந்தவனென்றும் எல்லாத் தேவர்களைவிடும் ஒப்பானவனென்றும் ப்ரீதஷ்டனென்றும் சொன்னீராதலால் தான் உமக்கு அதிகமான பலித தனங்களையும் நல்ல வஸ்திரங்களால் அலங்கரிக்கப்பட்ட [1] ப்ரயாணைகளான ஆயிரம் தேவலக்காரிகளையும் தருகிறேன். பொன்னாபரணங்களையும், தருப் பாரம் பொன்னையும் கொடுப்பேன். ப்ரம்மரிஷியே! உன்மை எல்லாமறிந்தவரென்று நான் எண்ணுகிறேன். அதனால், இவற்றைக் கொடுக்கிறேன்' என்று சொன்னான். நன்றாக ப்ரயாணஞ் செய்யப்பட்டவரும் நல்ல தேஜஸுள்ளவரும் சுவடி மிக்கவரமான அத்ரியானவர் நியாயமாக அவையினத்தையும் பெற்றுக்கொண்டு தம் வீட்டைக்குறித்துத் திரும்பிச்சென்றார். பரிசுத்த மனமுள்ள அத்ரியானவர் ப்ரீதியுள்ளவராகப் புத்ரர்களின்பாற்றந்தனத்தைத் கொடுத்துவிட்டுத் தவத்தை என்னும் வனத்தையே அடைந்தார்.

1 நடு யௌவனத்திலிருப்பவள்; வனபர்வம் 243-ம் பக்கம் குறிப்பிற் காண்க.

நூற்றெண்பத்தோன்பதாவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர், தானம் அக்னிவைசாத்ரம் மோக்ஷம் முதலியவை களை நிரூபிக்கிறதான தார்க்ஷ்யருக்கும் ஸரஸ்வதிக்கும் நடந்த ஸம்வாதத்தை யுதிஷ்டிரர் முதலியவர்களுக்குக் கூறியது.)

பகைவர்படைகளை அழிப்பவனே! வீரனே! சிறந்த புத்தியுள்ள தார்க்ஷ்யமுனிவர் வினவ, ஸரஸ்வதி சொல்லிய விஷயத்தைக் கேள். தார்க்ஷ்யர், 'கல்யாணி! இவ்வுலகில் மனிதனுக்கு எது நன்மை? எதைச்சேர்கிறவன் தனக்குரிய தர்மத்தினின்று நழுவாமலிருக்கிறான்? அழகிய எல்லா அங்கங்களை முள்ளவளே! எல்லாவற்றையும் எனக்குச் சொல்வாயாக. உன்னால் உபதேசிக்கப்பட்டு எனக்குரிய தர்மத்திலிருந்து நான் நழுவாமலிருக்கக்கடவேன். எந்தக்காலத்தில் அக்னியில் எவ்வாறு ஹோமம் செய்வேன்? எவ்வாறு பூஜிப்பேன்? எதனால் கர்மமானது அழியாமலிருக்கும்? நல்ல மதுரமையுள்ளவளே! நான் ராஜாக்களிடத்து எவ்வாறு உலகங்களில் ஸஞ்சரிப்பேன்? இவை அனைத்தையும் நன்கு கூறுவாயாக' என்று வினவினார். பிரகாசிக்கிறவரும் தேஜஸ்வியுமான அவரால் இவ்வாறு வினவப்பட்ட ஸரஸ்வதியானவள் சிறந்த புத்தியுடைய தார்க்ஷ்யரைநோக்கி ராஜாக்களைப் பார்த்து, 'எவன் தினந்தோறும் காலையில் எழுந்து பல்துலக்கி முகத்தைக் கழுவி ஆசமனம் செய்து சுத்தனாகி அக்னிஹோத்ரத்தைச் செய்கிறானோ அவனே ராஜாக்களிடத்தில் போகவேண்டும்; ராஜாக்களிடத்தில் அதிகமாக ஆசைவைக்கக்கூடாது. அரசர்களிடத்தில் அதிகமாகவும் மிகவும் குறைவாகவும் சேர்ந்திருக்கக்கூடாது. ராஜாக்களிடத்தில் கூடியவனாகவும் மிகவும் தூரத்திலிருக்கிறவனாகவும் கல்லுதல், முள்ளுதல் இவைகளையுடைய இடங்களில் நிற்கக்கூடாது. ராஜாக்களுக்கு அருகில் மரங்களின் நிழலில் நிற்கக்கூடாது. ராஜாக்களுக்கு அருகில் ஆசனத்தில் உட்காரக்கூடாது. ராஜாக்களுக்கு அருகில் படுக்கக்கூடாது. ராஜாக்களுக்கு அருகில் வாகனத்தில் ஏறக்கூடாது. ராஜாக்களுக்கு அருகில் ஆயுதங்களைத் தரிக்கக்கூடாது. ராஜாக்களுக்கு அருகில் ஸ்திரீகளைப் பார்க்கக்கூடாது. ராஜாக்களுக்கு அருகில் ஸ்திரீகளைப் பார்த்துச் சிரிக்கக்கூடாது. ராஜாக்களுக்கு அருகில் ஸ்திரீகளைப் பார்த்துக் கொண்டாடக்கூடாது. ராஜாக்களுக்கு அருகில் ஸ்திரீகளைப் பார்த்துக் கோபிக்கக்கூடாது. ராஜாக்களுக்கு அருகில் ஸ்திரீகளைப் பார்த்துக் கொட்டாவிவிடக்கூடாது. ராஜாக்களுக்கு அருகில் ஸ்திரீகளைப் பார்த்து அழகிய பல்லைக்காட்டிக்கொண்டு சிரிக்கக்கூடாது. ராஜாக்களுக்கு அருகில் ஸ்திரீகளைப் பார்த்து நாக்கை நீட்டிக்கொண்டு சிரிக்கக்கூடாது. ராஜாக்களுக்கு அருகில் ஸ்திரீகளைப் பார்த்து அதிகமாகச் சிரிக்கக்கூடாது. ராஜாக்களுக்கு அருகில் ஸ்திரீகளைப் பார்த்து அதிகமாகக் கோபிக்கக்கூடாது. ராஜாக்களுக்கு அருகில் ஸ்திரீகளைப் பார்த்து அதிகமாகக் கொட்டாவிவிடக்கூடாது. ராஜாக்களுக்கு அருகில் ஸ்திரீகளைப் பார்த்து அதிகமாகப் பல்லைக்காட்டிக்கொண்டு சிரிக்கக்கூடாது. ராஜாக்களுக்கு அருகில் ஸ்திரீகளைப் பார்த்து அதிகமாக நாக்கை நீட்டிக்கொண்டு சிரிக்கக்கூடாது. ராஜாக்களுக்கு அருகில் ஸ்திரீகளைப் பார்த்து அதிகமாகக் கொண்டாட

பண்ணுகிறவர்கள் சிறந்த உலகத்தை அடைகிறார்கள். காளையைத் தானம்பண்ணுகிறவர்கள் ஸூர்யலோகத்தை அடைகிறார்கள். வஸ்திரத்தைக் கொடுப்பவர்கள் சந்திரலோகத்தை அடைகிறார்கள். பொன்னைத் தானம்செய்பவர்கள் தேவத்தன்மையை அடைகிறார்கள். நல்ல காந்தியுடையதும் நல்ல கறவையுள்ளதும் அழகிய கன்றுள்ளதும் வெருண்டு ஓடாமலிருப்பதுமான புதிதாக ஈன்ற பசுவைத் தானம் செய்பவர்கள் அந்தப் பசுவினுடைய தேஹத்தில் எவ்வளவு ரோமங்களிருக்கின்றனவோ அவ்வளவு வர்ஷ காலம் தேவலோகத்திலிருக்கின்றார்கள். எவன் நன்கு அடங்கினதும் கலப்பையை இழுக்கிறதும் அதிக வீர்யமுள்ளதும் பாரத்தைச் சுமக்கக்கூடியதும் சிறந்த பலமுள்ளதும் இளம் வயதுள்ளதுமான விருஷபத்தைத் தானம் செய்கிறானோ அவன் பத்துப்பசுக்களைத் தானம் செய்தவனுக்குள்ள லோகங்களை அடைகிறான். எவன் வஸ்திரத்தோடுகூடியதும் கறக்க வெண்கலப்பாத்திரமுள்ளதுமான கபிலைப்பசுவைப் பின்னே கொடுக்கப்படும் தக்ஷிணை முதலிய த்ரவியங்களோடு தானம்பண்ணுகிறானோ (அவன் மரித்த) பின் [1] அந்தப் பசுவானது தனது அந்தஅந்தக் குணங்களாலே அவனுக்கு விரும்பியவற்றைக் கொடுப்பதாகிக் கொடுத்த அவனை அடைகிறது. பசுவைத் தானம்செய்தால் அதன் தேஹத்தில் எவ்வளவு ரோமங்களிருக்கின்றனவோ அவ்வளவு பலன்களை அடைகிறான். அவன் தனது புத்திரர்களையும் பௌத்திரர்களையும் [2] குலமனைத்தையும் ஏழுதலைமுறைவரையில் பரலோகத்தில் உத்தாரணம் செய்கிறான். தக்ஷிணையுடன்கூடியதும் பொன்னாற்செய்த அழகிய கொம்புகளுள்ளதும் கறக்க வெண்கலப்பாத்திரமுள்ளதும் பின்பு கொடுக்கப்படுகிற தக்ஷிணைமுதலிய த்ரவியங்களையுடையதுமான திலதேனுவைப் ப்ராம்மணனுக்குத் தானம் செய்பவனுக்கு வஸுக்களுடைய உலகங்கள் எளிதில் அடையக்கூடியனவாகின்றன. தன்னுடைய தேஹினகளால் அஸுரர்கள் நிரம்பின கடுமையான இருளுள்ள நரகத்தில் விழுகின்றவனை, பாறாஸமுத்திரத்தில் முழுகுகிறவனை அனுகூலமான காற்றுடன்கூடின படகு கரையேற்றுவதுபோல, தேநுதானமானது பரலோகத்தில் கரையேற்றுகிறது. தானம் செய்யத்தக்க தன் கன்னிகையைப் ப்ராம்மணனுக்குவிதிப்படி கொடுக்கிறவனும் பூமியைப் ப்ராம்மண

---

1 வேறுபாடம். 2 'குலம் ஸர்வம்' என்பது மூலம்; 'முன்னோர்களையும்' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

னுக்குக் கொடுக்கிறவனும் விதிப்படி (மற்றத்) தானங்களையும் செய்கிறவனும் இந்திரலோகத்தை அடைகின்றனர். கார்க்ஷ்ய! எவன் நியமமுள்ளவனுகவும் நல்லொழுக்கமுள்ளவனுகவும் ஏழு வருஷங்கள் இடைவிடாமல் அக்னியில் ஹவிஸ்ஸை ஹோமம் செய்கிறனே அந்த மனிதன் தன்கர்மங்களாலே முன்னேழுதலை முறை பாட்டன்மார்களையும் பின்னேழுதலை முறையாரையும் தன்னையும் பரிசுத்தப்படுத்துகிறன்' என்று தர்மத்துடன் கூடிய ஹிதமான இந்த வாக்கியத்தை உரைத்தாள்.

கார்க்ஷ்யர், 'அழகிய ரூபமுள்ளவளே! அக்னிஹோத்திரத்தினுடைய புராதனமான முறை எது? நான் இப்போழுது இந்த இடத்தில் உன்னால் உபதேசிக்கப்பட்டிப் புராதனமான அக்னிஹோத்திர விதானத்தை அறிய விரும்புகிறேன். எனக்குச் சொல்வாயாக' என்று வினவ, ஸாண்டிலியானவள், 'சுத்தியில்லாதவனுடைய கைகளைச் சேர்த்துக்கொள்ளாதவனும் சிலதங்களை அறியாதவனும் சிலகார்த்தங்களை அறிந்தும் அனுஷ்டியாதவனும் அக்னியில் ஹவிஸ்ஸை ஹோமம் செய்யக்கூடாது. பிறர் மனத்தை அறிய விரும்புகிறவர்களும் சுத்தியில் விருப்பமுள்ளவர்களுடைய சிலவர்கள் ப்ரதக்ஷிணமில்லாதவனிடமிருந்து ஹவிஸ்ஸைப் பெறுங்கொள்ளார். சிலம் சோகாதம் முதலியவற்றை அறிவதற்கு முன் பரனற்றவனை சிலசோமாகவனைச் சேர்வதற்கு உத்சாகமான ஹவிஸ்ஸைக்கொடுப்பது முதலியவற்றில் (பிரிக்கக்) கியமிக்கலாகாது. அப்படியிருந்தாலே (ஸ்ரோத்ரியன்) அக்னிஹோத்ரத்தை ஹோமம் பரிபாலிப்பானென்: சிலசோமாகவனைச் சேர்வதற்கு முன் பரனற்றவனை அக்னியிலாகுதிகளை சிசாலிப்பானென்று சிசாலிப்பானென்று சொல்லப்படுகிறது. கார்க்ஷ்ய! இப்படியிருந்தாலே (ஸ்ரோத்ரியனல்லாதவன்) அக்னி ஹோத்ரத்தை ஹோமம் பரிபாலிக்கூடாது. வாயில்கள் ஸ்ரோத்ரமுள்ளவர்களாகவும் வாக்காகவும் வாக்குபோலிருக்கும் சிலர் வாக்காகவும் ஹோத்ரத்தைப்போலிருக்கும் அக்னிஹோத்ரம் சிலசோமாகவனைச் சேர்வதற்கு முன் பரனற்றவனை சிலசோமாகவனைச் சேர்வதற்கு முன் பரனற்றவனை அக்னியிலாகுதிகளை சிசாலிப்பானென்று சிசாலிப்பானென்று சொல்லப்படுகிறது. (பிறகு அனுஷ்டானத்தில்) சுத்தியுள்ள பிராமணர்களைப் பார்க்கிறார்கள்' என்று சொன்னுள்.

கார்க்ஷ்யர், 'நல்ல ரூபலாவண்யமுள்ளவளே! பரமாத்மனுடைய ஆத்மனுடைய விஷயத்தில் சாஸ்திரத்தில் விஷயத்தில் மிகச் சிறந்த புத்தியை அனுசரித்திருப்பவளும், ஞானமுள்ளவளுமான நீ ஆத்ம

தத்வம் கர்மதத்வம் இரண்டினையும் பிரகாசிக்கச் செய்பவனென்று அறிந்து வினவுகிறேன். அழகிய உருவமுள்ளவனே! நீயார்?' என்று வினவினர். ஸரஸ்வதி, 'பிராம்மணர்ரேஷ்டர்களுடைய ஸந்தேகத்தைப் போக்குவதற்காக (ப் பராபரவித்யாஸ்வரூபியான ஸரஸ்வதியென்கிற) நான் அக்னிஹோத்ரத்திலிருந்து வந்திருக்கிறேன். உள்ளத்தில் நிலைபெற்றிருக்கிற நான் உன்னுடைய ஸமீபத்தை அடைந்து உண்மையான இந்த [1] அர்த்தத்தை உள்ளபடி உரைத்தேன்' என்று கூறினர்.

தார்க்ஷ்யர், 'உனக்கு நிகரானவர் ஒருவரும் இல்லை. லக்ஷ்மி போல மிதமிஞ்சிப் பிரகாசிக்கிறாய். நல்ல கீர்த்தியுள்ளவளே! உன்னுடைய ரூபமானது தேவஸம்பந்தமுள்ளதாயும் முடிவற்ற ஒளியுள்ளதாயுமிருக்கிறது. பிரகாசிக்கின்ற அறிவையும் தருகிறாய்' என்று கூறினர். ஸரஸ்வதி, 'மனிதர்களுள் பெருமையுடையவனே! கற்றறிந்தவனே! பிராம்மணனே! யாகத்தில் செய்பவர்கள் யாகங்களில் நல்ல ஸ்வரத்துடன் உச்சரிக்கிற சிறந்த பத்திரங்களாலேயே நான் நன்றாக வளர்ந்தவளாய்த் திருப்திசெய்யப்பட்டவளாய் ரூபவதியும் ஆகிறேன். வித்வானே! அக்னிஹோத்திரங்களில் மரத்தினாலோ இரும்பினாலோ மண்ணாலோ செய்யப்பட்ட பாத்திரம் உபயோகிக்கப்படுகிறதிலையே எனக்குத் திவ்யரூபமும் பிரஜ்ஞையும் ஸித்திக்கின்றனவென்று அறிவாயாக' என்று சொன்னாள்.

தார்க்ஷ்யர், 'மிக்க பிரஸித்திபெற்றவர்களான முனிவர்கள் இதைச் சிறந்த நன்மையென்றன்றி முயல்கின்றார்கள். அறிவுள்ள சிறந்த எந்தப் பதத்தை அடைகிறார்களோ நிகரில்லாததும் சோகமில்லாததுமான அந்த மோக்ஷத்தை எனக்குச் சொல்வாயாக. ஸாங்க்யர்களும் யோகிகளும் எதை ஸர்வாத்மாவென்று அறிகிறார்களோ புராதனமான அந்தப்பதத்தை நான் அறியவேண்டும்' என்று சொன்னர். ஸரஸ்வதி, 'வேதத்தை அறிந்தவர்களும் கர்மத்தைப் பொருளாகக்கொண்டவர்களும் தியாகம்புரிபவர்களும் ஸாரபந்தத்திலிருந்து விடுபட்டவர்களுமான ஸந்யாஸாச்ரமிகள் வேதாத்தியயனத்தாலும் தானத்தாலும் விரதங்களாலும் புண்யத்தாலும் யோகத்தாலும் சிறந்த வஸ்துக்களைக்காட்டிலும் சிறந்ததும் பிரஸித்திபெற்றதும் புராதனமாக இருப்பதுமான அந்த உத்தமமான பதத்தை அடைகிறார்கள். அந்தப் பதத்தில் நல்ல

1 'கர்மாக்கள் பரப்பரையாக மோக்ஷஹேதுவென்பதையும் ஸ்தூலாப்ரம்மவித்தையையும்' என்பது பழைய உரை.

வாஸனையுள்ளதும் ஆயிரம் கிளைகளுள்ளதுமான பெரிய நீர்நொச்சி மாமானது பிரகாசிக்கிறது. அதனுடைய அடியிலிருந்து தேன் போல ருசியான நீர்ப்பெருக்குள்ள மிக்க புண்யமான நதிகள் பெருகுகின்றன. அதனுடைய ஒவ்வொரு கிளையிலிருந்தும் பொரி களும் பணிகாரங்களும் மாம்ஸங்களும் கிழைகளும் பாயஸமாகிற சேறும் எப்பொழுதுமுள்ள மஹாநதிகள் மணற்பாங்கான தரை களில் ஓடுகின்றன. ரிஷியே! எந்த இடத்தில் அக்னியைத் தூலவ ணைக்கொண்டவர்களும் இந்திரனை கூடியவர்களும் மருத்துக் களுடைய கணங்களோடு கூடியவர்களுமான தேவர்கள் சிறந்த யாகங்களைச் செய்கார்களோ அந்த ஸ்தானம் நிகரற்றது' என்று கூறினான்' என்றார்.

நூற்றுத்தொண்ணூறுவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர், மத்ஸ்யநுபியான விஷ்ணு வைவஸ்வதமநு இவர் களின் சரித்ரமான மத்ஸ்யோபாக்யானத்தை யுதிஷ்டிரர் முதலியவருக்குச் சொல்லியது.)

பிறகு, அந்தப்பாண்டவர், மீண்டும் மார்க்கண்டேயரைப் பார்த்து, 'வைவஸ்வதமநுவினுடைய சரித்ரத்தைச் சொல்லுங்கள்' என்று வினவ, மார்க்கண்டேயர், 'அரசனே! புருஷச்ரேஷ்டனே! கல்ல பிரகாசமுள்ளவரும் பிரம்மஜ்ஞானிகளிலேயான காச்யபருடைய புத்ரரும் ஸூர்யனுடைய புத்ரருமான மநுவிவஸ்வான் ஒருவர் இருந்தார். அந்த மநுவானவர் சௌர்யத்தாலும் தேஜஸாலும் காந்தியினாலும் முக்கியமாகத் தவத்தினாலும் தம் பிதாவுக்குமே பிதாமஹரான ப்ரம்மதேவரிடமிருந்தார். அரசனே அந்த மநுவானவர் விசாலமென்னும் பதரியில் எங்களை உயர்ந்த ஆகாசத்திலாவது மிகப் பெரிய தவத்தைச் செய்தார். அப்படியே ஒரு, அவர் தலைகீழாக நின்றுகொண்டும் அல்லாதபடி கண்டிகோட்டையும் பதினாயிரம் வருஷம் கோரமும் உறுதியுமான தவத்தைச்செய்தார். தவம் செய்கின்றவரும் நின்றிருக்கின்ற மரவரிணையும் சடைகளையும் தரித்திருப்பவருமான அவரை ஒரு ஸமயத்தில் ஒரு பக்ஷியானது பிரியநதியின் தவ

யண்டை வந்து, 'பகவானே! நான் சிறிய மீனாக இருக்கிறேன். பலமுள்ள மீன்களிடத்தில் எனக்குப் பயமுண்டாகிறது. நல்ல விரதமுள்ளவரே! ஆகலால், நீர் என்னை அந்தப் பயத்தினின்று பாதுகாக்கத்தக்கவராகிறீர். பலமுள்ள மீன்கள் பலமில்லாத மீன்களை மிகுத்தின்னுகின்றன. எங்களுக்குச் சாஸ்வதமான இந்த ஜீவனமானது எப்பொழுதும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மிகவும் முழுகுகிற என்னைப் பெரிதான அந்தப்பயமாகிற வெள்ளத்தினின்று காக்கக்கடவீர். இந்த உபகாரத்தைச் செய்வீராகில் நான் உமக்குப் பிரத்யுபகாரம் செய்வேன்' என்று சொல்லியது.

அந்த வைவஸ்வதமனுவானவர் மத்ஸ்யத்தினுடைய வசனத்தைக் கேட்டுக் கருணைமேலிட்டு அந்த மத்ஸ்யத்தைத் தம்முடைய கையினால் எடுத்தார். வைவஸ்வதமனுவானவர் சந்திரகிரணம் போன்ற ஒளிபொருந்திய அந்த மத்ஸ்யத்தை [1] ஜலம் வைக்குமிடத்திற்குக் கொண்டுபோய்த் தண்ணீர் நிறைந்த ஒரு சாலில் போட்டார். அச்சமன! அந்த மத்ஸ்யமானது மிகப்பிரகாசிக்கப்பட்டு அந்தச் சாலில் வளர்ந்தது. மனுவானவர் அந்த மத்ஸ்யத்தினிடம் புத்திரனிடம் அன்புவைப்பதுபோல மிக்க அன்பு வைத்தார். அந்த மத்ஸ்யமானது, நெடுங்காலம் சென்றபிறகு, மிகப் பெரிதாகிவிட்டது. அந்த மத்ஸ்யம் அந்தச் சாலினுள் அடங்காமல் போய்விட்டது. பிறகு, மத்ஸ்யமானது மறுபடியுமே மனுவைப்பார்த்து, 'பகவானே! இப்பொழுது எனக்கு வேறு ஒரு நல்ல இடத்தைத்தாரும்' என்று சொல்லியது. பிறகு, பகவானான அந்த மனு அந்தச்சாலினின்று மத்ஸ்யத்தை மேலே எடுத்து அப்பொழுது ஒரு பெரிய தடாகத்திற்குக் கொண்டுபோனார். பகைவர்பட்டணங்களை ஜயிப்பவனே! மனுவானவர் அந்த மத்ஸ்யத்தை அதில் போட்டார். பிறகு, அந்த மத்ஸ்யம் அங்கேயே மிகப்பல வருஷங்கள் வளர்ந்தது. [2] தாமரைமலர்போன்ற கண்களுள்ளவனே! அந்தத் தடாகமானது இரண்டு யோஜனை நீளமும் ஒரு யோஜனை அகலமுமுள்ளதாக இருந்தது. குந்தீநந்தன! பிரணஜகளுக்கு இறைவனே! அந்த மத்ஸ்யமானது அந்தத் தடாகத்தில் அடங்கவில்லை; அவ்வளவுக்குப் பருத்துவளர்ந்தது.

1 'உதகாந்தம்' என்பது மூலம்.

2 'நாஹ்ரி ஹிலோசந' என்பது மூலம்; 'நாஹ்ரிவ ஹிலோசந:' என்று பிரயோகித்து மத்ஸ்யத்துக்கு அடையெனத்தியாக்குவதும் பலருமுண்டு.

பிறகு, மத்ஸ்யமானது [1] மனுவைப்பார்த்து, 'பகவானே! ஸாதுவே! புத்திமான்களுள் சிறந்தவரே! நான் இந்தத் தடாகத்திலும் வஸிக்கச் சக்தியற்றவனாக இருக்கிறேன். ஆகலால், ஸமுத்திரராஜனுக்குப் பிரிய மஹிஷியான கங்கையில் என்னைச் சேர்த்துவிடும். நான் அஸௌகர்யமில்லாமல் உம்முடைய கட்டளையில் நிற்பேன். நிகரற்றவரே! உமது செய்கையாலன்றோ ஒப்பற்ற வளர்ச்சியை நான் அடைந்தேன்!' என்று சொல்லிற்று. இவ்வாறு சொல்லக் கேட்டவரும் ஸ்வதந்திரரும் பகவானுமான மனுவானவர் தாமே அந்த மத்ஸ்யத்தைக் கங்காநதிக்குக் கொண்டுபோய் அதிலும் அதனை விட்டார். அந்த மத்ஸ்யமானது மிகப் பிரகாயிருந்தும், அதைத் தூக்கிச் செல்லுகிற மனுவுக்கு அப்பொழுது இஷ்டப்படி கொண்டுபோகத்தக்கதும், தொடுவதற்கு இனியதும் மாஸினாயுள்ளதுமாயிருந்தது. அந்த மத்ஸ்யமானது, மனுவினால் ஸமுத்திரத்தில் சேபடுத்தப்பட்டபொழுது, புன்சிரிப்புடன் அவரைப் பார்த்து, இந்த வாக்கியத்தைக் உரைக்கலாயிற்று.

'பகவானே! உம்மால் விசேஷமாக ரக்ஷிணை முழுவதும் செய்யப்பட்டது. மேலும் வந்தபொழுது செய்யத்தக்கதை என்னிடமிருந்து நீர் கேளும். மகாபாக்யசாலியே! பகவானே! பூமியிலுள்ள இந்த ஸ்தாவரம் ஜங்கமம் அனைத்தும் அதிசக்கிரத்தில் காசமடையப்போகின்றன. உலகங்களெல்லாம் மஹாஜலத்தில் முழுகிப்போகிற காலம் வந்துவிட்டது. ஆகையால், இப்பொழுது எது உமக்கு ஒப்பற்ற கல்யாணமோ அதனை உமக்குச் சொல்லுகிறேன். ஜங்கமங்களெல்லாம் ஸ்தாவரங்களெல்லாம் அசைவன அசையாதனவாகிய எல்லாவற்றிற்கும் அதிபயங்கரமான காலம் வந்துவிட்டது. நீர் கல்ல கயிறுள்ள உறுதியான ஓர் ஓடத்

---

1 'பகவானே! ஸாதுவே! என்னை ஸமுத்ரத்துக்குப் பிரியமுள்ள மஹிஷியான கங்கையில் அனுப்பிவிடுங்கள். அதில் வஸிப்பேன். தக்ஷதேவ! அல்லது நீர் எப்படி சொல்லுகிறபடி செய்வேன்' என்பது வேறு பாடத்தின் பொருள்.

ணைதச் செய்யக்கடவீர். மஹரிஷியே! அந்த ஓடத்தில் ஸப்த ரிஷிகளுடன் கூட ஏறுவீராக. என்னால் முன் சொல்லப்பட்ட வித்துக்களெல்லாவற்றையும் வகை வகையாக கன்முகக்கட்டி ஓடத்தில் ஏற்றுவீராக. முனிஜனங்களுக்குப் பிரியமானவரே! பிறகு, நீர் ஓடத்திலிருந்துகொண்டு என்னை எதிர்பார்க்கக்கடவீர். முனிவரே! நான் கொம்புள்ளவனாக வருவேன். தவமுள்ளவரே! அதனால், என்னை அறியக்கடவீர். இதனை நீர் இவ்விதம் செய்ய வேண்டும். நான் உம்மிடம் விடைபெற்றுச் செல்லுவேன். நான் இல்லாவிடில் அந்தப் பெரிய வெள்ளமானது உம்மால் தாண்ட முடியாது. பிரபுவே! என்னுடைய இந்த வசனத்தையும் நீர் ஸந்தேகிக்கலாகாது' என்று சொல்லிற்று. மனுவானவர், 'இவ்வண்ணமே செய்வேன்' என்று அந்த மத்ஸ்யத்தைப் பார்த்து மறுமொழி கூறினர். (இருவரும்,) ஒருவரை ஒருவர் கேட்டு விடை பெற்றுக்கொண்டு, இஷ்டப்படி சென்றார்கள்.

மஹாராஜனே! பகைவர்களை அடக்குபவனே! வீரனே! பிறகு, மனுவானவர் மத்ஸ்யம் சொல்லியபடி எல்லாவித்துக்களையும் சேகரித்துக்கொண்டு நல்ல ஓடத்தினுல் பெரிய அலைகளுடன்கூடின ஸமுத்திரத்தில் அப்பொழுது மிதந்தார். பூமிக்கிறைவனே! அந்த மனுவானவர் அந்த மத்ஸ்யத்தை நினைத்தார். பகைவர் நகரங்களை ஜயிப்பவனே! பரதர்களுள் மிகச் சிறந்தவனே! அந்த மத்ஸ்யமானது, அந்த மனுவினுடைய எண்ணத்தை அறிந்து, கொம்புள்ளதாக அந்த இடத்தில் அப்பொழுது விரைவாக வந்தது. புருஷ ச்ரேஷ்டனே! மனுவானவர் ஜலத்தால் நிறைந்த கடலில் தான் சொல்லியபடியுள்ள உருவத்தால் மலைபோல உயர்ந்திருப்பதும் கொம்புள்ளதுமான [1] அந்த மத்ஸ்யத்தைப் பார்த்து, பிறகு, அந்த மத்ஸ்யத்தின் தலையிலுள்ள கொம்பில் முறுக்கின கயிற்றைப் போட்டார். பகைவர் பட்டணத்தை ஜயிப்பவனே! அந்தக் கயிற்றால் கட்டப்பட்ட மத்ஸ்யமானது ஓடத்தை உப்புநீரில் அதிவேகமாக இழுத்தது. மனிதர்களுக்கிறைவனே! அந்த மனுவானவர் அலைகளால் கூத்தாடுகிறதுபோலிருப்பதும் ஜலத்தினுல் கர்ஜிக்கின்றதுபோலிருப்பதுமான ஸமுத்திரத்தை அந்த ஓடத்தால் தாண்ட ஆரம்பித்தார். பகைவர் பட்டணங்களை ஜயிப்பவனே! பெருங்கடலில் பெருங்காற்றுக்களால் அலைக்கப்படுகிற அந்த ஓடமானது, மதங்கொண்டு நிலைதவறியிருக்கிற மாதுபோலச்

---

[1] இரட்டிக்தலால் ஒரு சொல் விடப்பட்டது.

சுழன்றது. பூமியும் திசைகளும் மூலைத்திசைகளும் பிரகாசிக்கவில்லை. நரஸ்ரேஷ்டனே! ஆகாயமும் ஸ்வர்க்கமும் எல்லாம் ஜலமாகவே ஆயின. பரதஸ்ரேஷ்டனே! அப்பொழுது, உலகம் முழுகிப்போன ஸமயத்தில், ஸப்தரிஷிகளும் மனுவும் அப்படியே மத்ஸ்யமும் காணப்பட்டனர். அரசனே! பிறகு, அந்த மத்ஸ்யமானது சோம்பலின்றி அந்த நீர்ப்பெருக்கில் அந்த ஓடத்தை இவ்வண்ணம் மிகப் பலவருஷங்கள் இழுத்தது. பரதஸ்ரேஷ்டனே! குருநந்தன! பிறகு, இமயமலையைச் சார்ந்த உயர்ந்த சிகரத்தினருகில் அந்த மத்ஸ்யம் ஓடத்தை இழுத்துச் சென்றது. பிறகு, அந்த மத்ஸ்யமானது அப்பொழுது அந்த ரிஷிகளைப் பார்த்து மெல்லச் சிரித்துக்கொண்டு, 'இந்த இமயமலையினுடைய சிகரத்தில் ஓடத்தைத் தாமதமில்லாமல் கட்டுங்கள்' என்று சொல்லியது. பரதஸ்ரேஷ்டனே! மத்ஸ்யத்தினுடைய சொல்லைக்கேட்டு, அந்த ரிஷிகள் அந்த ஓடத்தை அப்பொழுது அந்த இமயமலையின் சிகரத்தில் விரைவாகக் கட்டினர். குந்தீநந்தன! பரதஸ்ரேஷ்டனே! சிறந்த அந்த இமயமலையின் சிகரமானது இன்றும்கூட [1] நௌபந்தனமென்று பிரஸித்திபெற்றதாக இருக்கிறது. அதைத் தெரிந்துகொள்.

பிறகு, மத்ஸ்யமானது, அப்பொழுது ஒன்று சேர்ந்திருக்கிற அந்த ரிஷிகளைப்பார்த்து, 'நான் ப்ரஜைகளுக்குப் பதியான ப்ரம்மா; என்னைவிடச் சிறந்த வஸ்து இல்லை; மத்ஸ்யவடிவம்கொண்டிருக்கிற என்னால் நீங்கள் இந்தப் பயத்திலிருந்து விடுவிக்கப்பட்டீர்கள். (இந்த) மனுவினால் தேவர்களோடும் அஸுரர்களோடும் மனுஷ்யர்களோடும் கூடின எல்லா ப்ரஜைகளும் எல்லா உலகங்களும் அசைவன அசையாதன ஆகிய அனைத்தும் படைக்கப்படத்தக்கவைகள். கடுந்தவத்தினால் இவருக்கு நல்ல புத்திசக்தி உண்டாகும். என் அனுக்ரஹத்தால் ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்கும் விஷயத்தில் மயக்கத்தை அடையமாட்டார்' என்று சொல்லியது. மத்ஸ்யமானது இவ்விதமான சொல்லைச் சொல்லி மறு க்ஷணத்தில் மறைந்துபோய்விட்டது. ப்ரஜைகளைத் தாமே படைக்க எண்ணம்கொண்ட வைவஸ்வதமனுவானவர் ப்ரஜைகளைப் படைப்பதில் மிக மயக்கமுள்ளவரானார். பிறகு, பெருந்தவம் புரிந்தார். பரதஸ்ரேஷ்டனே! பெருந்தவத்தோடு கூடின அந்த மனுவானவர், பிறகு, தாமே முறைப்படி எல்லாப் ப்ரஜைகளையும் படைக்கத்தொடங்கினர். புராதன கதை என்று

---

[1] ஓடுகட்டினது.

சொல்லப்பட்டதும் எல்லாப் பாவங்களையும் போக்குவதுமான இந்த மாத்ஸ்யோபாக்யானமானது இவ்வண்ணம் என்னால் சொல்லப்பட்டது. இந்த மனுவின் சரித்திரத்தைத் தினந்தோறும் ஆதிதொடங்கிக் கடைசிவரையில் கேட்கும் மனிதன் ஸுகமுள்ளவனாகவும் எல்லா விருப்பங்களுந் நிறைவேறினவனாகவும் எல்லா உலகங்களையும் அடைவான்' என்று சொன்னார்.

நூற்றுத்தொண்ணூற்றேராவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர் நான்கு யுகங்களுடைய தர்மங்களையும் கூறிப் பிரளயத்தை வர்ணித்துப் பிரளயஜலத்தில் மிதக்கின்ற தாம் ஆலிலையில் குழந்தைவடிவத்துடன் படுத்திருந்த நெரியின்வயிற்றினுள்புகுந்து பிரம்மாண்டங்களைப் பார்த்துத் திரும்பிவந்ததையும் யுதிஷ்டிரர் முதலியவர்களுக்குக் கூறியது.)

பிறகு, வினயத்துடன்கூடியவரும் தர்மங்களால் பிரகாசிப்பவருமான அந்த யுதிஷ்டிரர் தவசியான மார்க்கண்டேயரைப் பார்த்து, மறுபடியும், 'மஹரிஷியே! உம்மால் பல்லாயிரம் யுகங்கள் பார்க்கப்பட்டிருக்கின்றன. மஹாத்மாவும் ஸ்வயம்பூலோகத்திலிருப்பவருமான பிரம்மதேவரைத்தவிர உமக்கொப்பான ஆயுளுள்ளவர் ஒருவரும் இவ்வுலகில் காணப்படவில்லை. பிராம்மணரே! தேவர்களும் அஸுரர்களுமில்லாத இந்த அந்தரிக்ஷலோகத்தில் ஆயுளினால் உமக்கு ஒப்பாக ஒருவரும் இல்லை. பிராம்மணரே! நீர் பிரளயத்தில் ப்ரம்மாவை அடைந்து துதிக்கிறீர். பிரம்மரிஷியே! பிரளயம் முடிந்து, பிரம்மதேவரும் விழித்துக்கொண்டவுடன், பிரம்மதேவரால் நிசைகளைக் காற்று (நிரம்பினவை) ஆகச் செய்து ஜலங்களை அங்கங்கே உரியஇடங்களில் விலக்கி உள்ளது. 1 நான்கு விதமான பிராணிகளும் இவ்வுலகில் படைக்கப்படுவதை நீர் ஒருவரே பார்க்கிறீர். பிராம்மணச்ரேஷ்டரே! உம்மால் உலகங்களுக்குக் குருவும் எல்லா உலகங்களுக்கும் பிதாமஹருமான பிரம்மதேவர் அளவரியே விஷயமாகக்கொண்டு திடீர்

1 ஆதிபர்வம் 57-ம் பக்கத்திலும் ஸபாபர்வம் 198-ம் பக்கத்திலும் குறிப்பிற் காண்க.

னத்தால் நேரில் ஆராதிக்கப்பட்டார். பிராம்மணரே! மேலும், பிரம்மதேவர் பலமுறை உலகத்தைப் படைப்பதை நீர் நேரில் பார்த்திருக்கிறீர். நீர் கடுமையான தவத்தில் அமிழ்ந்து (மரீசி முதலிய) பிரம்மாக்களை ஜயித்தீர். நீர் பரலோகத்தில் நாராயணருடைய ஸன்னிதத்திலிருக்கிற பிரஸித்திபெற்ற உத்தமபக்தரென்று மிகப்புகழப்படுகிறீர். எங்கும் வியாபித்திருப்பதும் நினைத்த உருவமெடுப்பதுமான பிரம்மத்தை நேரில் பார்க்குமிடமான ஹ்ருதய புண்டரீகத்தை யோகக்லேசமினல் நிறைந்து உலகத்தை உண்டுபண்ணுகிறவரான பகவான் உம்மால் பலமுறை சிறந்த வைராக்யம் அப்யாஸம் என்கிற இரண்டு கண்களால் முற்காலத்தில் பார்க்கப்பட்டார். பிரம்மரிஷியே! பரமாத்மாவினுடைய அந்த அணுக்கிரஹத்தால், முடனைச் செய்கிறபடியும் நேரத்தைக்கடத்துகிறபடியும் உம்மை அடைகிறதில்லை. எக்காலத்தில் ஸூர்யன், அக்னி, வாயு, சந்திரன், ஆகாசம், பூமி ஒன்றும் மிச்சமின்றி அழிந்துபோகின்றனவோ, உலகம் ஒரே ஸமுத்திரமாகின்றதாயும் கருமம் ஜங்கமங்களும் காணமலாகின்றனவோ, தேவாஸுரர்களுடைய கூட்டங்களும் மநுஷ்யர்களும் முற்றிலும் அழிந்துபோகின்றனவோ அக்காலத்தில் காமனாடலில் படுத்திருப்பவரும் பெரியமனமுள்ளவருமான காமனாடலை இருப்பிடமாகக்கொண்டவருமான விஷ்ணுவுக்கும் அதிப்ரியமான பிரம்மதேவரை நீர் நேரில் அடைகிறீர். பிராம்மரிஷ்ரேஷ்டரே! முற்காலத்தில் நடக்கிறவைகளுக்குமட்டும் உம்மைப்போல் நேரில் காணப்பட்டிருக்கின்றன. இதனால், நான் பிரமாணமில்லாமல் வெறுமே எல்லாக் கதைகளையும் உம்மிடம் சொல்லுகிறேனென்று நினைக்கவேண்டாம். பிராம்மணச்ரேஷ்டரே! உம் முடைய ஸாக்ஷாத்காரமான ஜ்ஞானமினல் விஷ்ணுவின் மஹிமையை விரும்புகிறவர்களுக்கு நீர் ஒருவரே ஸாக்ஷியாயிருக்கிறீர்.

பிராம்மணர்களில் சிறந்தவரே! நீர் பிரம்மதேவனுடைய மனஸ்ஸினின்றும் பிறந்தவரென்றும் அவனுடைய புத்ரரென்றும் ஸ்ருஷ்டிகர்த்தாவென்றும் ஸ்ருதிகளிலிருக்கிறபடியால் நீர் ஸர்வஜ்ஞரென்று நினைக்கிறோம். 1 நீர் ஸ்ருஷ்டிகர்த்தாவாகையால் ஸர்வஜ்ஞரென்பதில் ஸந்தேஹமில்லை.

1 ஸ்ருஷ்டிகர்த்தாவாகையால்; பிரம்மதேவருடைய குமாரர்களென்பதும் தகுமென்று பிரதிபக்ஷி சொல்லுகிறான்.

ಉನಕ್ಕುಚ್ ಸೊಲ್ಲುವೇನ್. ಅಕನ್ರು ನೀಂಡ ಕಣ್ಕಳುಳ್ಳವರುಂ ಪೀತಾಂಬರಂ ತರಿತ್ತವರುಂ ಜನಾರ್ತ್ತನರುಮಾನ ಇಂತಕ್ಕಿರುಷ್ಣನೇ ಉಲಕತ್ತೈಪ್ ಪಡೈಪ್ಪವರ್; ಅೞಿಪ್ಪವರ್; ಪಿರಾಣಿಕಳಿಡತ್ತಿಲ್ ಅಂತರಾತ್ಮಾವಾಕ ಇರುಪ್ಪವರ್; ಪಿರಾಣಿಕಳುಕ್ಕು ನನ್ಮೈಯೈಯಳಿಪ್ಪವರ್; ಪಿರಭುವಾಯಿರುಪ್ಪವರ್. ಇಂತಪ್ ಪಕವಾನ್ ನಿನೈಕ್ಕಮುಡಿಯಾತತುಂ ಪೆರಿತುಂ ಆಚ್ಚರ್ಯಮಾನತುಂ ಪರಿಶುತ್ತಮಾನತುಂ ಆಗಿ ಅನ್ತಮಿಲ್ಲಾತತುಂ ಉಲಕಙ್ಕಳೈ ವಡಿವಮಾಕಕ್ಕೊಂಡತುಂ ಕುನ್ರವಟ್ರತುಂ ಅೞಿವಟ್ರತುಮಾನ ವಸ್ತುವೆನ್ರು ಸೊಲ್ಲಪ್ಪಡುಕಿನ್ರಾರ್. ಇವರ್ ಪಡೈಕ್ಕಿನ್ರಾರ್; ಪಡೈಕ್ಕಪ್ಪಡುಕಿನ್ರಿಲ್ಲೈ. ಮನಿತಮುಯಟ್ಸಿಕ್ಕುಂ ಇವರೇಕಾರಣಂ. ಎವನ್ ಇಂತಪ್ಪುರುಷನೈ ಅಱಿವಾನ್? ಇವನೈತ್ ತೇವರ್ಕಳುಂ ಅಱಿಯಾರ್. ರಾಜರ್ಷೇ! ಪುರುಷರ್ಷೇ! ಆತಿಯಿಲ್ ಎಲ್ಲಾ ಉಲಕುಕ್ಕುಂ ನಾಶಂ ವಂತಪೋತು ಇವರಾಲ್ ಸೆಯ್ಯಪ್ಪಡುಕಿಱ ಪಡೈಪ್ಪುಮುಮೈಯುಂ ಆಚ್ಚರ್ಯಮೇ. (ತೇವವರುಷತ್ತಿಲ್) ನಾಲಾಯಿರಂ ವರುಷಙ್ಕಳಡಙ್ಕಿನ ಅನ್ತ ಯುಕತ್ತೈಕ್ ಕೃತಯುಕಮೆನ್ರು ಸೊಲ್ಲುಕಿನ್ರನರ್ಕಳ್. ಅತಱ್ಕು 1 ಸನ್ತಿಯುಂ ಸನ್ತಿಯಾಂಶಮುಂ ತನಿತ್ತನಿಯೇ ನಾನ್ನೂಱು ನಾನ್ನೂಱು ವರುಷ ಅಳವುಳ್ಳನವಾಕುಂ. ಪಿನ್ನರು, ಇವ್ವುलಕಿಲ್ ಮೂವಾಯಿರಂ ತೇವ ವರುಷಙ್ಕಳ್ ತಿರೇತಾಯುಕಂ ಎನ್ರು ಸೊಲ್ಲಪ್ಪಡುಕಿನ್ರನ. ಅನ್ತ ಯುಕತ್ತಿಱ್ಕು ಸನ್ತಿಯುಂ ಸನ್ತ್ಯಾಂಶಮುಂ ತನಿತ್ತನಿ ಮೂನ್ನೂಱು ಮೂನ್ನೂಱು ವರುಷಙ್ಕಳ್ ಎನ್ರು ಕೂಱಪ್ಪಡುಕಿನ್ರನ. ಅವಱ್ರುಕ್ಕುಪ್ ಪಿನ್ರರು, ಇರಣ್ಡಾಯಿರಟ್ ವರುಷಙ್ಕಳ್ ತ್ವಾಪರಯುಕತ್ತಿನ್ ಅಳವೆನ್ರು ಸೊಲ್ಲಪ್ಪಡುಕಿನ್ರನ. ಅನ್ತ ತ್ವಾಪರಯುಕತ್ತಿಱ್ಕುಂ ಸನ್ತಿಯುಂ ಸನ್ತ್ಯಾಂಶಮುಂ ಅಪ್ಪಡಿಯೇ ತನಿತ್ತನಿ ಇರುನೂಱು ಇರುನೂಱು ವರುಷಙ್ಕಳೆನ್ರು ಸೊಲ್ಲಪ್ಪಡುಕಿನ್ರನ. ಪಿನ್ನರು, ಕಲಿಯುಕಮಾನತು ಆಯಿರ ವರುಷಮೆನ್ರು ಕರುತಪ್ಪಟ್ಟತು. ಅತನುಡೈಯ ಸನ್ತಿಯುಂ ಸನ್ತ್ಯಾಂಶಮುಂ ತನಿತ್ತನಿ ನೂಱು ನೂಱು ವರುಷಙ್ಕಳೆನ್ರು ಕರುತಪ್ಪಟ್ಟನ. ಸನ್ತಿಕ್ಕುಂ ಸನ್ತ್ಯಾಂಶತ್ತುಕ್ಕುಂ ಕಾಲ ಅಳವಾನತು ಸಮಮೆನ್ರು ಅಱಿನ್ತುಕೊಳ್ಳ. ಕಲಿಯುಕಂ ಸೆನ್ರವುಡನ್, ಕೃತಯುಕಂ ತೊಡಙ್ಕುಕಿಱತು. ಇನ್ತ ಯುಕಙ್ಕಳಿನ್ ಕಾಲ ಅಳವಾನತು ಪನ್ನೀರಾಯಿರಂ ವರುಷಙ್ಕಳೆನ್ರು ಸೊಲ್ಲಪ್ಪಟ್ಟತು. ಇಪ್ಪಡಿ ಆಯಿರಂ ಚತುರ್ಯುಕಙ್ಕಳ್ ಪಿರಮ್ಮಾವುಕ್ಕು ಒರುನಾಳ್ ಎನ್ರು ಸೊಲ್ಲಪ್ಪಟ್ಟನ. ಉಲಕಮನೈತ್ತುಂ ಪಿರಮ್ಮತೇವರುಡೈಯ ಪಕಲ್ಕಾಲತ್ತಿಲ್ ಎಙ್ಕುಂ ನಡೈಪೆಱ್ರುವರುಕಿಱತು. ಪುರುಷರ್ಷೇ! ಪಿರಮ್ಮ

1 'ಯುಕಧರ್ಮಙ್ಕಳ್ ಕಲಕ್ಕುನ್ಚಾಲಂ. ಯುಕತ್ತಿನ್ ತೊಡಕ್ಕಂ ಸನ್ತಿಯುಂ ಮುಡಿವು ಸನ್ತಿಯಾಂಶಮುಮಾಂ. ಆಯಿನುಂ, ಯುಕಙ್ಕಳಿನಿಡೈಯಿಲ್ ಇನ್ನನಂ ಕೂಱಪ್ಪಡುನ್ಗಾಲಂ ಮುನ್ಯುಕತ್ತೈ ನೋಕ್ಕ ಸನ್ತಿಯಾಂಶಮುಂ ಪಿನ್ಯುಕತ್ತೈನೋಕ್ಕ ಸನ್ತಿಯುಮಾಂ' ಎಂಪತು ಪೞೈಯವುರೈಯಿನ್ ಕರುತ್ತು.

தேவர் கண்வளர்கிற காலத்தை அறிஞர்கள் உலகங்களுக்குப் பிர ளயமென்று அறிகிறார்கள். பரதர்ஷரே‌ஷ்டரே! ஆயிரம்வருஷ அள வுள்ள கலியுகத்தின் முடிவானது சிறிது மிச்சமிருக்கும்பொழுது எல்லா மனிதர்களும் பெரும்பாலும் பொய் சொல்லுவார்கள். பார்த்த! அக்காலத்தில் யாகத்திற்கு [1]ப்ரதிநிதியும் அப்படியே தானத்திற்கு ப்ரதிநிதியும் விரதத்திற்குப் பிரதிநிதியும் ஏற்படுகின்ற ன. இந்த யுகமுடிவில், பிராம்மணர்கள் சூத்திரர்தொழிலைச் செய் வார்கள். அப்படியே, க்ஷத்ரியர்கள் வைச்யர்தொழிலால் பொரு ளைத் தேடுவார்கள். கலியுகத்தில், பிராம்மணர்கள் யாகத்தையும் வேதாத்யயனத்தையும் இழந்தவர்களாயும் தண்டத்தையும் மான் தோலையும் இழந்தவர்களாயும் எல்லாவற்றையும் தின்பவர்களாயும் ஆவார்கள். ஐயனே! பிராம்மணர்கள் மந்த்ர ஜபத்தை இழந்து விடுவார்கள். சூத்திரர்கள் மந்த்ர ஜபத்தைப் பிரதான மாகக் கைக்கொள்ளுவார்கள். உலகமானது விபரீதப்படுகிற காலத்தை, அழிவுக்கு முந்தின அவஸ்தையென்று அறியவேண்டும். அரசனே! பூமியில் மிலேச்ச அரசர்கள்பலர் சுதந்தரமாக ஆள் கிறவர்களாயும் வணிகர்களும் பொய் சொல்லுதலிலேயே பற்றுள்ளவர் களாக இருப்பார்கள். மனிதர்ச்ரேஷ்டரே! சூத்ரர்களான ஆந்த்ரர்களும் சகர்களும் புளிந்தர்களும் யவனர்களும் காம்போ ஜர்களும் பஹ்லீகர்களும் அவரோத்ய ஆபீரர்களும் அரசர்களாக இருப்பார்கள். அப்படிப்பட்ட, சூத்ரபிராம்மணனாலாவது நன்றாழிலைக் கொண்டு ஜீவனம் செய்யமாட்டார். அரசனே! க்ஷத்ரியர்களும் வைச்யர்களும் அடக்குரியனவாகிய தொழில்களில் நிலைபெற்ற வர்களாயும் அதிபாதகர்களாகையால் வில்லிட்ட பலமுள்ளவர்களாட் வில்லாளர்களான வீரபுருஷர்பரர்க்கிரமமுமுள்ளவர்களாயும் அல்ப வல்ல வைபவங்களையுடையவர்களாயும் சிறிய தேகமுள்ளவர்களாயும் அல்பமான உண் வைமாத்திரமாகவுடையவர்களாயும் ஆவார்கள். தேகங்கள் பிரகாசமுள்ளனவாயும் ரோமங்களைப் பூஜ் சிக்கின்ற பிராணிகளையுடையனவாயும் இருக்கும். யுகத்தின் முடி வானது சிகரத்திலிருக்கிறது. பிராம்மணர்களில் (அக்ஷபலிங்களை யும்) விசுத்தியுடையவர்களாயிருக்கிறார்கள். அப்படியே, சூத்ரர்கள் உயர்ந்த வர்ணத்தாரைக் கண்டால், 'அரே!' என்று அழைப்பார்கள். பிராம்மணர்கள் சிற்றவர்ணத்தாரைக் கண்டால், 'ஆம!' என்று அழைப் பார்கள். புருஷர்ரே‌ஷ்டரே! யுகம் முடியும் சமயத்தில்

1 சிறிதளவு என்றபடி.

அனேக ஜந்துக்கள் உண்டாகும். அரசனே! அப்படியே எல்லா மணங்களும் முகரத்தக்கவையாகா. புருஷச்ரேஷ்டனே! அப்படியே ரஸங்களும் ருசியோடு சேர்ந்தவைகளாகா. அரசனே! யுகமுடிவுவரும்போது, ஸ்திரீகள் பலகுழந்தைகளை உடையவர்களும் குறுகின தேகமுள்ளவர்களும் கல்ல ஸ்வபாவத்தாலும் ஆசாரத்தாலும் விடுபட்டவர்களும் முகத்திலேயே ஸம்போகசுகத்தை உண்டு பண்ணுகிறவர்களும் ஆவார்கள். மேன்மேத! தேசங்கள் அன்னவிக்கிரயம் செய்பவைகளும் பிராம்மணர்கள் வேதத்தை விற்கிறவர்களும் ஸ்திரீகள் [1] அங்கத்தை விற்பவர்களும் ஆவார்கள். அரசனே! அப்படியே, பசுக்கள் சிறிதுபாலுள்ளவைகளாகும். மரங்கள் மலர்களும் கனிகளும் குறைந்தவையும் காக்கைகள் நிறைந்தவையும் ஆகும். அரசனே! பிராம்மணர்கள் பிரம்மஹத்தியோஷமுள்ளவர்களும், அப்படியே பொய் சொல்பவர்களுமான அரசர்களிடத்தினின்று ப்ரதிக்ரஹத்தைச் செய்வார்கள். அரசனே! வேதாசையும் அறியாமையும் மேலிட்டவர்களும் கபடமான தர்மங்களைப் பிரஸித்திக்காகச் செய்பவர்களுமான ஆங்காங்கு வஸிக்கின்ற ஜனங்கள், பிக்ஷைக்காகத்திரிகின்ற பிராம்மணர்களால் அடிக்கடி துன்புறுத்தப்படுவார்கள். க்ருஹஸ்தர்கள் அதிக வரிபினாலுண்டான பயத்தால் நடுக்கமுற்றவர்களும் எல்லாவிடங்களிலும் திருடுகிறவர்களும் கபடமான முனிவேஷத்தால் மறைந்தவர்களுமாகி வாணிபம் செய்து ஜீவிப்பார்கள். அப்பொழுது, பிராம்மணர்கள் வீணை நகங்களையும் உரோமங்களையும் தரித்திருப்பார்கள். புருஷச்ரேஷ்டனே! பிராம்மசாரிகள் பொருளிலுள்ள வேதாசையினால் அந்த ஆச்ரமங்களில் வீணை வஸிப்பவர்களும் வீண ஆசாரமுள்ளவர்களும் கள்குடிப்பவர்களும் குருவின் மனைவியை அடைடபவர்களுமாயிருப்பார்கள். ஜனங்கள், மாம்ஸத்தையும் இரத்தத்தையும் விருத்திபண்ணுகின்றவைகளும் இவ்வுலகில் மாத்ரம் பயன்படத்தக்கவையுமான அன்னபானங்களை விரும்புவார்கள். ஜனங்கள் பரலோக ஸாதகமான காரியங்களில் உத்ஸாஹமில்லாதவர்களும் மிக்க நாஸ்திகர்களும் பெரும்பான்மையாகி [2] பாஷண்டர்களுடன் கலந்தவர்களும் பரான்னங்களின் குணங்களை பேசுகிறவர்களும் ஆவார்கள். புருஷச்ரேஷ்டனே! யுகமுடிவில் (காலம்) ஆச்சரியங்களும் இரா. அப்படியே பகவானான இந்திரன் ருதுக்கள் காலமல்

---

1 'கோரகுலா:' என்பது மூலம்.

2 வேதத்துக்கு விரோதமான முறைகளுள்ளவர்கள்.

மழை பொழியமாட்டான். பாரத! எல்லா வித்துக்களும் நன்கு முளையா. ராஜஸ்ரேஷ்டனே! எல்லா இடத்திலும் தர்மத்தினுடைய பலன் குறைவடைகிறது. அப்படியே, ஜனங்கள் ஹிம்ஸையில் விருப்பமுள்ளவர்களும் அசுத்தர்களும் ஆகிறார்கள். தோஷ மற்றவனே! அப்பொழுது, அதர்மபலனை துக்கமானது அதிக மாகிறது. பூமியை ரக்ஷிப்பவனே! அப்பொழுது எந்த மனிதன் தர்மத்தைச் செய்கிறானே அவன் குறைந்த ஆயுளுள்ளவனென்று எண்ணத்தக்கவன். அக்காலத்தில் தர்மம் சிறிதும் இராதன்றே? ஜனங்கள் விற்கவேண்டியவற்றைப் பெரும்பாலும் கபடமான அளவு களால் விற்கிறார்கள். ரஜரேஷ்டனே! வியாபாரிகள் நிச்சயமாக மிக்க கபடிகளாகிறார்கள். தார்மிகர்கள் குறைவடைகிறார்கள். கொடிய பாவம்செய்கிற ஜனங்கள் விருத்தியடைகிறார்கள். தர் மத்திற்குப் பலக்குறைவு உண்டாகும். அதர்மம் பலமுள்ளதாகி றது. யுகமுடிவுக்காலத்தில், தர்மத்தை அனுஷ்டிக்கின்ற மனிதர் கள் அல்பாயுளுள்ளவர்களும் தரித்திரர்களும், தர்மத்தை விட்ட வர்கள் தீர்க்காயுளுள்ளவர்களும் செல்வமுள்ளவர்களும் ஆகிறார் கள். யுகக்ஷயகாலத்தில், பிரஜைகள் தர்மத்தை விட்டு ரகசங் களைச்சார்ந்த பொதுவிடங்களில் தர்மவிரோதமான உபாயங் களால் வழக்குப்பேசுகிறார்கள். அப்படியே, சிறிதுபொருள் சேர்ந்ததனால், 'நாம் தனிகர்களாக இருக்கிறோம்' என்கிற மதமுள்ளவர்களாகிறார்கள். அரசனே! மனிதர்கள், நம்பிக்கை யினால் அடைக்கலமாக வைக்கப்பட்ட பொருளைப் பெரும்பாலும் ரஹஸ்யத்தில் அபஹரிக்க முயற்சியுள்ளவர்களும் கெட்ட கடை யுள்ளவர்களும் வெட்கமில்லாதவர்களும், 'இது என்னிடமில்லை' என்று சொல்லுகிறவர்களுடையவர்களாக இருப்பார்கள். மனிதர்களைத் தின்னுகின்ற (ஓநாய் புலி முதலிய) ஜந்துக்களும் பறவைகளும் அவ் வாறே மற்ற மிருகங்களும் ரகசங்களுடைய பொதுவிடங்களிலும் மேடை கட்டின படித்தினைடிகளிலும் படுக்கின்றன. மேன்மை! விழுட்டுப் பிராயமுள்ள பெண்கள் கர்ப்பம் தரிப்பார்கள். பத்து அல்லது பன்னிரண்டு பிராயமுள்ள புருஷர்களுக்குப் புத்தி ரனுண்டாவான். அப்படியே, பதினாறாவது பிராயத்தில் மனிதர் கள் கலைத்தாபிருடையவர்களாவார்கள். மனிதர்களுக்கு ஆயுள் முடிவானது சிக்கிரமாகவே உண்டாகிறது. மஹாராஜனே! பெண்களுள்ளவர்கள் முதிர்ந்தவயதுடைய தன்மையுடையவர் களும் ஆயுள்குறைந்தவர்களும் ஆகிறார்கள். பெண்களுள்ளவர்

களுக்குரிய தன்மை முதிர்ந்தவர்களிடம் உண்டாகிறது. அப்பொழுது ஸ்திரீகள் இயற்கைமாறுபட்டவர்களும் கெட்ட நடையுள்ளவர்களுமாகி, யோக்யர்களான கணவர்களை வஞ்சித்து, வேலைக்காரர்களோடும் மிருகங்களோடும் வியபிசரிப்பார்கள். அரசனே! அப்படியே, வீரபத்னிகளான ஸ்திரீகள் ஸாமான்ய மனிதர்களை அடைகிறார்கள். கணவன் ஜீவித்திருக்கும்பொழுதே, பிறனை அடைந்து வியபிசரிக்கிறார்கள். மஹாராஜனே! அந்த ஆயிரம் (சதுர்) யுகமுடிவு வந்து ஆயுளுக்கும் அழிவு வரும்பொழுது, பல வருஷங்கள் மழையின்மை உண்டாகிறது. பூமிக்கதிபதியே! பிறகு, பூமியில் பிராணிகளெல்லாம் அல்ப வலிமையுள்ளவைகளாகவும் பசியுள்ளவைகளாகவும் பெருட்பான்மையாக நாசமடைகின்றன. அரசனே! பிறகு, ஜ்வலிக்கின்ற 1 ஏழுசூரியர்களால் ஸமுத்திரங்களிலும் நதிகளிலுமுள்ள ஜலமனைத்தும் உறிஞ்சப்படுகிறது. பாரத! பரதஸ்ரேஷ்டனே! உலர்ந்தவையும் ஈரமாயிருப்பவையுமான கட்டையும் புல்லும் அனைத்தும் சாம்பலானவையாகக் காணப்படுகின்றன. பாரத! பிறகு, ஸம்வர்த்தகம் என்ற அக்னியானது காற்றோடுகூட முந்திச் சூரியர்களால் வளர்க்கப்பட்டிருக்கிற உலகத்தில் பிரவேசிக்கிறது. பிறகு, அந்த நெருப்பானது பூமியைப்பிளந்து பாதாளத்தில் பிரவேசித்துத் தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் யக்ஷர்களுக்கும் அதிபயத்தை உண்டுபண்ணுகிறது. பூமியைக்காப்பவனே! நாகலோகத்தையும் இந்தப் பூமியிலுள்ள பொருள்களனைத்தையும் கண்டு எரிக்கின்ற அந்த அக்னியானது பாதாளலோகத்திலுள்ள எல்லாப்பொருள்களையும் ஒரு கணநேரத்தில் நாசம் செய்கிறது. பிறகு, அடங்களகரமான காற்றுடன்கூடின ஸம்வர்த்தகாக்னியானது இருபது லக்ஷயோஜனை தூரம் (உலகத்தை) எரிக்கிறது. பிறகு, மங்கும் பரவினதும் ஜ்வலிக்கின்றதுமான அந்த அக்னியானது தேவர்களோடும் அஸுரர்களோடும் கந்தர்வர்களோடும் யக்ஷர்களோடும் உரகர்களோடும் ராக்ஷஸர்களோடும் கூடின உலகமனைத்தையுமே எரிக்கிறது. பிறகு, யானைக்கூட்டங்கள்போலப் பிரகாசிக்கின்றவையும் மின்னல்களின் வரிசையிலுல் அலங்கரிக்கப்பட்ட

1 'பன்னிரண்டு சூரியர்களாலும் ஸமுத்திரங்களிலும் நதிகளிலுமுள்ள ஜலமனைத்தும் குடிக்கப்படுகிறது; ஸம்வர்த்தியிலுல் உலர்ந்தவையும் ஈரமாயிருப்பவையுமான கட்டையும் புல்லும் அனைத்தும் சாம்பலாக்கப்பட்டவையாகக் காணப்படுகின்றன' என்பது பழைய உரை.

வையும் அத்புதமான காட்சியுள்ளவையுமான பெரிய மேகங்கள் ஆகாயத்தில் எழுகின்றன. சில மேகங்கள் கருங்கய்தல் புஷ்பங்கள்போலக் கருமைநிறமுள்ளவைகள். சில அல்லிப்பூப்போல வெண்மைநிறமுள்ளவைகள். சில தாமரைமலரின் உள்ளிதழ்போன்ற நிறமுள்ளவைகள். சில பொன்னிறமுள்ளவைகள். சில மஞ்சள்போன்றவைகள். சில காரண்டவமென்னும் பறவைக்கு ஒப்பானவைகள். சில தாமரைமலரின் இதழ்போன்ற காந்தியுள்ளவைகள். சில வாதிங்கத்துக்கொப்பான ஒளியுள்ளவைகள். சில சிறந்தபட்டணம்போன்ற உருவமுள்ளவைகள். சில யானைக்கூட்டம்போன்றவை. சில மைம்போன்றவைகள். சில மூதலைகளுக்கு ஒப்பானவை. மஹாராஜனே! இவ்வண்ணம் மேகங்கள் படங்கரமான உருவமுள்ளவைகளும் கோரமான சத்தத்தினால் எதிரொலி உண்டுபண்ணுகிறவைகளும் மின்னற்கொடிகளின் வரிசைகளால் கட்டப்பட்ட மேனியுள்ளவைகளுமாக நன்கு மேலே எழும்புகின்றன. பூமியை ரக்ஷிப்பவனே! பிறகு, மலைகளுக்கொப்பான மேகங்கள் இடிமுழக்கத்துடன் கூடியவைகளாக ஆகாயமனைத்தையும் வியாபிக்கின்றன. மஹாராஜனே! அந்த மேகங்களால் மலைகளுக்கும் வனங்களுக்கும் இருப்பிடமான இந்தப் பூமி அனைத்தும் நீர்ப்பெருக்கினால் நனைக்கப்பட்டு எங்கும் ஜலத்தால் நிறைக்கப்படுகிறது. புருஷவ்யாக்ரனே! பிறகு, கோரமுடமுள்ளவையும் இடிமுழக்கத்துடன் கூடியவையுமான அந்த மேகங்கள் பிரம்மதேஜஸால் எவப்பட்டு மலைகளை வரையாக நனைக்கின்றன. அதிக ஜலத்தைப் பொழிகின்றவைகளும் பூமியை நிரப்புகின்றவைகளுமான மேகங்கள் மிக்க சோபமானதும் அழகானதும் படங்கரமாயுள்ளதுமான சிகரத்தை நாசம் செய்கின்றன. பிறகு, அந்த மேகங்கள் அந்த யுகமுடிவுக்காலத்தில் மறாந்தகவரால் ஏவப்பட்டுப் பன்னிரண்டு வருஷகாலம் இடைவிடாமல் மழைத்தாரைகளால் உலகத்தை நிறைக்கின்றன. பரத! பிறகு, கடலானது தன் கரையைத் தாண்டுகிறது; மலைகளும் பிளக்கப்படுகின்றன; பூமியும் பிளக்கப்படுகிறது. ஆகாசத்தைச் சூழ்ந்து எல்லாப் பக்கத்திலும் வியாபகமாகச் சுற்றிக்கொண்டிருக்கிற மேகங்கள் வாயுவேகத்தினால் அடிக்கப்பட்டு நாசமடைகின்றன. மனிதர்களுக்கதிபதியே! பரத! பிறகு, முதலில் சொன்னியலும் தாமரைமலரை இருப்பிடமாகக்

கொண்டவருமான பிரம்மதேவர், அந்தக் கோரமான காற்றைப் யானம் செய்துவிட்டு நித்திரை செய்கிறார். அரசனே! அந்த உலகமானது கோரமான ஓர ஸமுத்திரமாக இருக்கும் கருணத்தில் ஸ்தாவரங்களும் ஜங்கமங்களும் அழிந்து தேவாஸுர கணங்களும் நாசமடைந்து யக்ஷர்களும் ராக்ஷஸர்களும் மனிதர்களும் துஷ்ட மிருகங்களும் செடி கொடி மரங்களும் அற்று ஆகாயமும் இல்லாமல் போனபோது, இந்த உலகத்தில் நான் ஒருவன் கவலையுற்றவனாகச் சுற்றுகிறேன். அரசர்களுள் சிறந்தவனே! கோரமான ஓர ஸமுத்ரமான ஜலத்தில் ஸஞ்சரிக்கின்ற நான் எல்லாப் பிராணிகளையும் பார்த்தவனாக மிகுந்த மன வருத்தத்தை அடைந்தேன். பூமிக்கதிபதியே! பிறகு, மிகுந்து கொண்டிருக்கிற நான் சோம்பலின்றி மிகுந்தூரம் சென்று களைத்து ஓரிடத்திலும் ரக்ஷகனை அடையவில்லை. அரசனே! பிறகு, ஓரு ஸமயத்தில் அந்த ஸமுத்திரத்தில் மிகப் பெரிதாயிருக்கிற விசாலமான ஓர் ஆலமரத்தைக் கண்டேன். மனிதர்களுக்கதிபதியே! பூமியைப் பாதுகாப்பவனே! மஹாராஜனே! பாரத! விசாலமாயிருக்கிற அந்த மரத்தினுடைய கிளையில் திவ்யமான விரிப்பினால் மூடப்பட்டிருக்கிற கட்டிலில் வீற்றிருப்பவனும் தாமரைமலருக்கும் சந்திரனுக்கும் ஒப்பான முகமுள்ளவனும் மலர்ந்திருக்கின்ற செந்தாமரைமலர்போல விசாலமான கண்களுள்ளவனுமான ஓரு சிறு குழந்தையைக் கண்டேன். பூமியை ரக்ஷிப்பவனே! பிறகு, உலகம் நாசமடைந்திருக்கும் தருணத்தில் இக் குழந்தை எவ்வாறு படுத்துறங்குகிறானென்று எனக்குப் பெரிய ஆச்சர்யமுண்டாகியது. அரசனே! சென்றதையும் நிகழ்கின்றதையும் வருவதையும் நான் அறிகிறவனாக இருந்தும், தவத்தினால் ஆலோசித்துத் தெரிந்துகொள்ளுகிறவனாக இருந்தும், அந்தக் குழந்தையை அறியவில்லை. காயாம்பூவினுடைய நிறம்போன்ற காந்தியையுடையதும் ஸ்ரீவத்ஸமென்கிற மறுவினால் அலங்கரிக்கப்பட்டதுமான அந்தக் குழந்தையானது அப்பொழுது ஸாக்ஷாத் லக்ஷ்மிக்கு இருப்பிடம்போல எனக்குத் தோன்றியது. பிறகு, தாமரை மலர்போன்ற கண்களுள்ளவனும் ஸ்ரீவத்ஸத்தைத் தரித்திருப்பவனும் காந்தியுள்ளவனுமான அந்தப்பாலன், என்னைப்பார்த்து, 'அப்பனே! உன்னைக் களைத்திருப்பவனென்றும், களைப்பாறுதலை விரும்புகிறவனென்றும் நான் அறிகிறேன். பார்க்கவனே! பிருகுகுலத்தில் பிறந்தவனே! முனிவர்களுள் சிறந்தவனே!

நீ விரும்புகிற அதிகமான தேகபலத்தை அடைகிறவரையில் என் சரீரத்தில் உட்புகுந்து இரு. இந்தச் சரீரத்தில் உனக்கு வாஸம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. என்னால் உனக்கு அனுக்கிரஹம் செய்யப்பட்டது' என்று சகிகளுக்கு இன்பத்தை உண்டு பண்ணுகிற வசனத்தை உரைத்தான்.

பாரத! பிறகு, அந்தச் சிறுவனால் இவ்விதம் சொல்லப்பட்ட எனக்கு, அப்பொழுது, நீண்ட வாழ்நாளிலும் மானிடத்தன்மையிலும் வெறுப்புண்டாயிற்று. பிறகு, அந்தப்பாலனால் வாயானது விரைவாகத் திறக்கப்பட்டது. நான் என்வசமற்று அவனுடைய வாயில் தெய்வச்செயலால் நுழைபுகப்பட்டேன். மனிதர்களுக்குக்கதிபதியே! பிறகு, அவனுடையவயிற்றில் நான் விரைவாகப் பிரவேசித்து நாடுகளும் நகரங்களும் நிரம்பின பூமி முழுமையையும்பார்த்தேன். பாரத! மஹாராஜனே! புருஷ ச்ரேஷ்ட! நான் அந்த மஹாத்மாவின்வயிற்றில் அங்குமிங்கும் திரிகையில், கங்கை, சரஸ்வு, ஸிந்து, பழுஷ்ணி, கௌசிகி, சர்மண்வதி, ரேவதாவதி, சந்திரபாகை, ஸரஸ்வதி, ஸிந்து, விபாசை, ஸதாதாவரி நதி, வஸ்ரீவாகளாரை, நளினி, கர்மதை, தாம்ராநதி, பரிசுத்தஜலத் துடன்கூடியதும் மங்களத்தை உண்டுபண்ணுகிறதுமான ரேவா, ஸுரேவா, கிருஷ்ணரேவா, மற்றநதியான இராமை, விதஸ்தை, மஹாநதியான காரீவரி, துங்கபத்ரை, கிருஷ்ணவேணி, மஹாநதியான கமலை, சோணம், விசல்யை, கிம்புரு ஆகிய இந்தநதிகளையும் இன்னும் பூமியிலுள்ள மற்றநதிகளையும் கண்டேன். பலதை வரைக்கிரகம்பலரை! பிறகு, ஜலஜந்துக்களையுடைய கூட்டங்களால் அடையப்பட்டதும் ரத்னங்களுக்குப் பிறப்பிடமும் ஜலத்திற்குச் சிறந்த இருப்பிடமுமான ஸமுத்திரத்தையும் பார்த்தேன். பிறகு, சந்திரனுடைய்பதினான்காவதாகிக்கிறதும் மற்ற (கார்த்திகை முதலிய) நக்ஷத்திரங்களால் பிரகாசிக்குமதும் அக்னிக்கும் ஸூர்யனுக்கும் ஸமானமான ஒளியுள்ளதுமான ஆகாயத்தையும் கண்டேன். அரசரே! அரசன்பக்கலில் வசிக்குமதும் மலைகளையும் காடுகளையும் பூமியிலுள்ள ஸமுத்திரங்களுடனே பூமண்டலத்தையும் பார்த்தேன். அரசரே! பிராணிகளால் அந்தப்பூமியில் பல யோசனை தூரத்திலுள்ள தேசங்களையும் பார்த்தேன். அந்தந்தி யோசனைகளிலும் வஸிஷ்டர்களாலும் ரக்ஷிக்கப்படுகிறதும் சிறப்பினை யுடையதுமான ஆச்ரமங்களையும் பார்த்தேன். அரசரே! மஹாபலம்பொருந்திய ரிஷிகளால் நிரம்பியிருக்கும். அரசரே, ருக்மரதர் பற்றி

மூன்றுவர்ணத்தார்களுக்கும் பணிவிடைசெய்வதில் பற்றுதலுள்ள வர்களாக இருக்கிறார்கள். வேந்தே! பிறகு, அந்த மஹாத்மாவி னுடைய வயிற்றில் எல்லாப்பக்கங்களிலும் ஸஞ்சரிக்கிற நான் இமயமலையையும் மேருமஹாபர்வதத்தையும் பார்த்தேன். நிஷ தத்தையும் வெள்ளியோடுகூடின ஸ்வேதகிரியையும் பார்த்தேன். பூமியைக்காப்பவனே! கந்தமாதன மலையையும் கண்டேன். புருஷ ஸ்ரேஷ்ட! மஹாராஜ! மந்தரத்தையும் நீலமென்கிற பெரிய மலையையும் மேருவென்கிற ஸ்வர்ணமலையையும் கண்டேன். மஹேந்திரகிரியையும், உத்தமமான விந்தியமலையையும் கண் டேன். மலயபர்வதத்தையும் பாரியாத்ரமலையையும் கண்டேன். இவைகளும் இன்னும் ரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட மற் றப் பல மலைகளுமாகிய அனைத்தும் என்னால் அந்தப்பால னுடைய வயிற்றில் காணப்பட்டன. மனிதர்களுக்கதிபதியே! சிங்கங்களையும் புலிகளையும் பன்றிகளையும் பார்த்தேன். பூமியைப் பாதுகாப்பவனே! பூமியில் மற்றுமுள்ள பிராணிகளெல்லாவற் றையும் நான் அவ்விடத்தில் பார்த்துக்கொண்டு அப்பொழுதுள் ளாப்பக்கத்திலும் ஸஞ்சரித்தேன். நரஸ்ரேஷ்டனே! பூபதியே! மானிடர்க்கிறைவனே! அவனுடைய வயிற்றில் நுழைந்தவனும் திசைகளில் ஸஞ்சரிப்பவனுமான நான் இந்திரன் முதலிய ஸகல லோக தேவகணங்களையும் லோகபர்களையும் ருத்திரர்களையும் ஆதித்யர்களையும் குஹ்யகர்களையும் பித்ருக்களையும் ஸர்ப்பங் களையும் 1நாகர்களையும் ஸுபர்ணர்களையும் வஸுக்களையும் அஸ் வினீதேவர்களையும் கந்தர்வர்களையும் அப்ஸரஸுகளையும் யக்ஷர் களையும் ரிஷிகளையும் தைத்யதானவர்களுடைய கூட்டங்களையும் நாகர்களையும் ஸிம்ஹிகையினுடைய புதல்வர்களையும் இன்னும் மற்றுள்ள தேவசத்துருக்களையும் பார்த்தேன். அநாதா! உல கத்தில் என்னால் ஸ்தாவரமோ ஜங்கமமோ மற்றதொன்று பார்க்கப் பட்டிருக்கிறதோ அந்தனைத்தையும் நான் பறந்தபோதான அந் தப் பாலனுடைய வயிற்றில் பார்த்தேன். பிரபுவே! விரைவுபடு கிறவனும் பறங்களை ஆஹாரமாகக்கொண்டவனுமான நான் அந் தப் பாலனுடைய சரீரத்தினால் பல நூற்றாண்டுகள் ஸஞ்சரித்துக் கொண்டு உலகடனைத்தையும் கண்டேன். நான் ஒருபொழுதும் அந் தப் பாலனது தேகத்தினுடைய எல்லையைக் காணவில்லை. பிரளய காலாக்நி போன்ற! பூமியைப்பாதுகாப்பவனே! அரசனே! அந்தச்

---

1 இது இரண்டுமுறை வருகிறது.

சரீரத்தில் எப்பொழுதும் ஓடுகின்றவனும் சிந்திக்கின்றவனும் மிகப் பல வருஷங்கள் சுற்றுகின்றவனுமாயிருந்தும் மஹாத்மாவான அந்தப் பாலனுடைய தேகத்தின் எல்லையை நான் அடையாமற் போனபொழுது, ஸ்ரேஷ்டரும் வரங்களைக் கொடுப்பவருமான அந்தத் தேவரையே மனத்தினாலும் செய்கையினாலும் விதிப்படி சரணமடைந்தேன். அரசனே! புருஷோத்தமனே! பிறகு, நான் திறக்கப்பட்டிருக்கிற அந்த மஹாத்மாவினுடைய வாயினின்று வாயுவேகத்தால் வெளிப்படுத்தப்பட்டேன். பிரஜைகளுக்கு ரக்ஷகனே! புருஷஸ்ரேஷ்டனே! பிறகு, அந்த ஆலமரத்தின்கிளையில் எல்லா உலகத்தையும் வயிற்றிலடக்கிக்கொண்டு அந்தப் பாலவேஷத்தோடேயே இருப்பவரும் ஸ்ரீவத்ஸமென்கிற மறுவினால் அடையாளமிடப்பட்டவரும் அளவிறந்த தேஜஸ்ஸுள்ளவருமான அவரைக் கண்டேன். பிறகு, ஸ்ரீவத்ஸமென்கிற மச்சத்தைத் தரித்திருப்பவரும் காந்தியுள்ளவரும் பீதாம்பரத்தைத் தரித்தவரும் மிக்க தேஜஸ்ஸுள்ளவருமான அந்தச் சிறுவர் ப்ரீதியுள்ளவராக நகைத்துக்கொண்டு என்னைப் பார்த்து, 'முனிஸ்ரேஷ்டனே! இப்பொழுது இந்த என் சரீரத்தில் வஸித்து நீ களைத்துவிட்டாயா? மார்க்கண்டேயா! நீ எனக்குச் சொல்' என்று சொன்னார்.

பிறகு, அந்த க்ஷணத்தில் புதிய கண்ணானது எனக்கு மறுபடியும் உண்டாயிற்று. என்னை மாயையினின்று விடுபட்ட வனும் தத்வஞானத்தை அடைந்தவனுமாகக் கண்டேன். ஐயனே! உள்ளங்கால்கள் சிவந்தவையும் நன்கு அமைந்தவையும் மிக அழகியவையும் மிருதுவான சிவந்த விரல்களால் விளங்குகின்றவையுமான அவருடைய இருசரணங்களும் என்னால் முயற்சியுடன் பிடிக்கப்பட்டு முடியினால் நமஸ்கரிக்கப்பட்டன. அளவுகடந்த சௌர்யமுள்ள அவருடைய அபரிமிதமான மகிமையைக்கண்டு வினயத்துடன் கைகளைக் குவித்து முயற்சியுடன் ஸமீபத்தில் நெருங்கி, எல்லாப் பிராணிகளுக்கும் அந்தர்யாமியாக இருப்பவரும் தாமரைமலர்போன்ற கண்களுள்ளவருமான அந்தத் தேவனை நான் கண்டேன். நான், அவனைக் கைகூப்பினவனாகி நமஸ்கரித்து அவரைப் பார்த்து, 'தேவதேவ! உம்மையும் உம்முடைய உத்தமமான இந்த மாயையையும் அறியவிரும்புகிறேன். பகவானே! நான் உம்முடைய சரீரத்தில் உமது வாயினால் புகுந்தேன்; உம்முடைய வயிற்றில் எல்லா உலகங்களையும் கண்டேன். தேவதேவ! தேவர்களும் அஸுரர்களும் ராக்ஷஸர்களும் யக்ஷர்களும் கந்தர்வர்களும்

என்னிடத்தினின்று உண்டாகின்றன; என்னிடத்திலேயே பிரவேசிக்கின்றன. நல்ல முயற்சியுள்ளவர்களும் சாந்தியைப் பிரதானமாகக் கொண்டவர்களும் மனத்தை அடக்கினவர்களும் மோக்ஷத்தில் விருப்பமுள்ளவர்களும் காமம், க்ரோதம், த்வேஷம் இவைகளால் விடுபட்டவர்களும் பிரஸித்தியில் பிரியமில்லாதவர்களும் பாவமில்லாதவர்களும் ஸத்வகுணத்தில் நிலைபெற்றிருக்கிறவர்களும் அஹங்காரமில்லாதவர்களும் எப்பொழுதும் அத்யாத்ம சாஸ்திரத்தை அறிந்தவர்களுமான பிராம்மணர்கள் இடைவிடாமல் என்னையே சிந்தித்துக்கொண்டு வழிபடுகிறார்கள். நான் பிரளயகாலத்து நெருப்பு. நான் பிரளயத்தை உண்டுபண்ணுகிற யமன். நான் பிரளயத்தைச் செய்கிற சூரியன். நான் பிரளய காலக்காற்று. பிராம்மணோத்தமனே! ஆகாயத்தில் நக்ஷத்திரவடிவமாகக் காணப்படுகிற தேஜஸுகளை நீ என்னுடைய ரூபங்களாக அறியக்கடவாய். ரத்தினங்களுக்குப் பிறப்பிடமான எல்லா ஸமுத்திரங்களையும் நான்கு திசைகளையும் எனக்கு ஆடையாகவும் படுக்கையாகவும் இருப்பிடமாகவும் அறிவாயாக. அவைகள் தேவர்களுடைய கார்யங்களின்பயன் ஸித்திப்பதன்பொருட்டு என்னாலேயே நன்றாகப் பகுக்கப்பட்டிருக்கின்றன. மிகச்சிறந்தவனே! காமம், கோபம், ஸந்தோஷம், பயம் அப்படியே மோஹம் இவைகளனைத்தையும் என்னுடைய ரோமங்களென்று அறிவாயாக. பிராம்மணா! எந்தக்கர்மத்தைச்செய்து மனிதர்கள் மங்களத்தை அடைகிறார்களோ ஸத்தியம் தானம் கடுந்தவம் பிராணிகளை ஹிம்ஸை செய்யாமை ஆகிய இவைகள் என்னுடைய கட்டளையினால் ஏற்படுத்தப்பட்டனவை. என்னுடைய தேகத்தினுள் ஸஞ்சரிப்பவர்கள் என்னால் அறிவு வசப்படுத்தப்பட்டவர்களாகி இஷ்டப்படி ஸஞ்சரிக்கிறதில்லை. நன்றாக வேதத்தை அத்தியயனம் செய்கிறவர்களும் சாந்தமான மனத்தையுடையவர்களும் குரோதத்தை அடக்கினவர்களுமான பிராம்மணர்கள் பலவித யாகங்களால் என்னை ஆராதிக்கிறார்கள்; அடையவும் அடைகிறார்கள். கற்றறிந்தவனே! பாவச்செயல்களுள்ளவர்களும் பாசையினால் கவரப்பட்டவர்களும் இழிகுணமுள்ளவர்களும் அயோக்யர்களும் அசுத்த புத்தியுடையவர்களுமான மனிதர்களால் அடைவதற்கு முடியாததும் புண்யம் செய்தவர்களால் அடையத்தக்கதும் மூடர்களால் எவ்விதத்தாலும் அடைய முடியாததும் யோகங்களால் அடையப்படுவதும் தேடத்தக்கதுமான பதத்தைப் பெரும்பயனுள்ள

தென்று அறிவாயாக. மிகச் சிறந்தவனே! எப்பொழுது எப்பொழுது தர்மத்திற்கு வாட்டமுண்டாகுமோ அதர்மத்திற்கு அபிவ்ருத்தியுண்டாகுமோ அப்பொழுது அப்பொழுது நான் என்னை அவதரிக்கும்படி செய்வேன். ஹிம்ஸையில் பற்றுதலுள்ளவர்களும் சிறந்த தேவர்களால் கொல்லமுடியாதவர்களுமான தைத்யர்களும் ராக்ஷஸர்களும் பயங்கரர்களாக இவ்வுலகில் எப்பொழுது உண்டாவார்களோ அப்பொழுது நான் கல்வினை செய்தவர்களுடைய வீடுகளில் பிறக்கிறேன். மனுஷ்ய தேகத்தில் பிரவேசித்து நான் எல்லாவற்றையும் அடக்குகிறேன். நான் என்னுடைய மாயையினல் தேவர்களையும் மனுஷ்யர்களையும் கந்தர்வர்களையும் உரகர்களையும் ராக்ஷஸர்களையும் ஸ்தாவரங்களையும் ஜங்கமங்களையும் படைத்து அழிக்கிறேன். தர்மத்தின் எல்லை கட்டுப்படுதற்காக நான் மனுஷ்ய சரீரத்தில் பிரவேசித்துக் (காரியம் செய்யுங்) காலம் வந்தபோது ஆலோசித்து மறுபடியும் தேகத்தை உண்டுபண்ணிக்கொள்ளுகிறேன். க்ருதயுகத்தில் எனக்கு வெண்மை நிறம்; த்ரேதாயுகத்தில் மஞ்சள் நிறம்; த்வாபரயுகத்தை அடைந்தால் எனக்கு நீலவர்ணம். அப்படியே, கலியுகத்தில் கருமை நிறம். ப்ராம்மணோத்தமா! எப்பொழுது என்னுடைய நிறமானது கருமையாயிருக்கிறதோ அப்பொழுது அதர்மத்தினுடைய மூன்று பாகங்கள் இருக்கின்றன. முடிவுக்காலம் வந்தவுடன், நான் ஒருவனே அதி பயங்கரனனகாலனுகி ஸ்தாவரங்களாலும் ஜங்கமங்களாலுமடர்ந்த மூவுலகங்களையும் முழுதும் நாசம் செய்கிறேன். நான் மூன்று வழிகளையுடையவன். உலகத்துக்கே ஆத்மாவாயிருப்பவன்; எல்லா உலகங்களுக்கும் ஸுகத்தை உண்டுபண்ணுகிறவன்; ஜயிக்கப்படாதவன்; எல்லா இடத்திலும் செல்பவன்; முடிவில்லாதவன்; இந்திரியங்களை நடத்துபவன்; பெரிய காலடிகளால் (உலகத்தை) அளந்தவன். ப்ராம்மணா! நானொருவன் உருவமற்றதும் எல்லாப் பிராணிகளையும் அழிப்பதும் எக்காலங்களிலும் முயற்சிசெய்வதுமான காலசக்ரத்தை நடத்துகிறேன். முனிவர்களுள் ச்ரேஷ்டனே! இவ்வாறு மாயையினல் நான் எல்லாப் பிராணிகளிடமும் கன்று வியாபித்திருக்கிறேன். ப்ராம்மணோத்தமனே! ஒருவரும் என்னை அறிவதில்லை. பக்தர்கள் எல்லா உலகங்களிலும் என்னை எல்லா விதங்களாலும் பூஜிக்கிறார்கள். ப்ராம்மண! தோஷமில்லாதவனே! உன்னல் என்னிடத்தில் அடையப்

பட்ட துன்பங்களெல்லாம் உனக்கு ஸுகமுண்டாவதற்கும் நன்மைக்கும் ஆகின்றன. உலகத்தில் உன்னால் காணப்பட்ட ஸ்தாவர ஜங்கமமெல்லாம் எல்லா விதத்தாலும் பிராணிகளைப்போஷிக்கின்ற என்னுடைய சரீரமாகச் சொல்லப்படுகின்றன. எல்லா உலகங்களுக்கும் பிதாமஹரான பிரம்மதேவர் என் சரீரத்தினுடைய பாதியாக இருக்கிறார். நான் சங்கத்தையும் சக்ரத்தையும் கதாயுதத்தையும் தரித்துக்கொண்டிருக்கிற நாராயணனென்று பிரஸித்திபெற்றவன். பிரம்மரிஷியே! எல்லா உலகங்களையும் சரீரமாகக் கொண்டவனான நான் எல்லாஉலகங்களுக்கும் பிதாமஹனாயிருந்துகொண்டு யுகங்கள் ஆயிரம்முறை சுற்றிவருகிறவரையில் தூங்குகிறேன். முனிவர்களுள் மிகச்சிறந்தவனே! பிரம்மா விழித்துக்கொள்ளுகிறவரையில், சிசுவல்லாதவனான நான் சிசுவின் ரூபத்தோடு இவ்வண்ணம் எப்பொழுதும் இவ்விடத்திலிருக்கிறேன். பிராம்மணோத்தம! பிரம்மரிஷிகளுடைய கூட்டங்களால் பூஜிக்கப்பட்டவனே! அடிக்கடி ஸந்தோஷமடைந்த என்னால் பிரம்மாவின் ரூபத்துடனிருந்து உனக்கு வரம் கொடுக்கப்பட்டது. ஸ்தாவரம் ஜங்கமமெல்லாம் நாசமடைந்து ஓரே ஸமுத்திரமாயிருப்பதைக்கண்டு நீ பயந்திருக்கிறாயென்பதை நான் அறிந்தேன். அதற்காக உனக்கு உலகம் காண்பிக்கப்பட்டது. நீ இச்சரீரத்தினுள் நுழைந்தபொழுது, (அங்கே) எல்லாஉலகத்தையும் பார்த்து ஆச்சர்யமடைந்துவிட்டமையால் (என்னைத்) தெரிந்து கொள்ளவில்லை. பிரம்மரிஷியே! அதனால், என்னால் வாய்வழியாக விரைவில் வெளியில் கொண்டுவரப்பட்டாய். என் ஸ்வரூபம் தேவர்களாலும் அஸுரர்களாலும் அறியமுடியாததாயிருந்தும், உனக்கு என்னால் சொல்லப்பட்டது. பெருந்தவமுள்ள பகவானான அந்த ப்ரம்மதேவர் விழித்துக்கொள்ளுகிறவரையில், நீ இந்த இடத்தில் கவலையற்று ஸுகமாக ஸஞ்சரிக்கக்கடவாய். ப்ராம்மணோத்தம! எல்லா உலகங்களுக்கும் பிதாமஹரான அந்தப்பிரம்மதேவர் விழித்தெழுந்தவுடன், (அவருடன் கலந்து) ஒருவனாகிச் சரீரங்களாயிருக்கிற ஆகாசத்தையும் பூமியையும் தேஜஸையும் வாயுவையும் ஜலத்தையும் இவ்வுலகத்தில் மிச்சமுள்ள ஸ்தாவரஜங்கமங்களையும் [1] படைப்பேன்' என்று கூறினர். ஐயா! மிக்க ஆச்சர்யமான அந்தத் தேவர் இவ்வாறு கூறிவிட்டு மறைந்தார். படைக்கப்பட்டவையும் விசித்திரமானவையும் பலவிதமாயிருப்பவையுமான இந்த ப்ரஜைகளை நான்

[1] வேறு பாடம்.

காண்கிறேன். அரசனே! பாதஸ்ரேஷ்டனே! தர்மத்தை வளர்ப்ப வரேனவருள்ளும் சிறந்தவனே! அந்த யுகமுடிவானது சேர்ந்த பொழுது, என்னால் இவ்வண்ணம் ஆச்சர்யம் காணப்பட்டது. புருஷ ஸ்ரேஷ்டனே! முற்காலத்தில் தாமரைமலர்போல நீண்ட கண்களை யுடைய எந்தத்தேவர் என்னால் காணப்பட்டாரோ அப்படிப்பட்ட இந்த ஜநார்த்தனரே இங்கு உனக்கு உறவினராக இருக்கிறார். குந்தியின் புதல்வனே! இவருடைய வரதானத்தாலேயே ஞாபகசக்தியானது என்னை விட்டகலுகிறதில்லை. எனக்குத் தீர்க்கமான ஆயுளும் என்னிஷ்டப்படி மரணமும் ஸித்தித்திருக்கின்றன. எங்கும் வியாபித்திருப்பவரும் புராணபுருஷரும் நினைத்தற்கரிய உருவமுள்ளவரும் நீண்டபுஜங்களையுடையவருமான அந்த ஹரியானவர் வ்ருஷ்ணி வம்சத்தில் அவதரித்துக் கிருஷ்ணனென்கிற பெயருடன்கூடினவராக விளையாடுகிறவர்போல இதோ வீற்றிருக்கிறார். இவர் எல்லாவற்றையும் படைப்பவர்; காப்பவர்; அழிப்பவர்; அழிவற்றவர்; ஸ்ரீவத்ஸமென்கிறமறுவை மார்பில் உடையவர்; கோவிந்தர்; பிரம்மாக்களுக்கெல்லாம் ரக்ஷகர்; பிரபு; வ்ருஷ்ணிவீரர்களுள்மிகச்சிறந்தவரும் தேவர்களுக்கெல்லாம் முந்தினவரும் சத்துருக்களை ஜயிப்பவரும் புருஷசப்தத்தால் சொல்லப்படுகிறவரும் பிதாம்பரத்தைத்தரித்தவருமான இவரைக்கண்டு இந்தநினைவு எனக்கு வந்தது. கௌரவஸ்ரேஷ்டர்களே! மாதவர் எல்லாப்பிராணிகளுக்கும் பிதாவாகவும் மாதாவாகவுமிருக்கிறார். ரக்ஷிப்பதில் வல்லமையுள்ளவரான இவரைச் சரணமடையுங்கள்' என்றுசொன்னர். இவ்வண்ணம் உரைக்கக்கேட்ட அந்தக் குந்திபுத்ரர்களும் புருஷஸ்ரேஷ்டர்களான நகுல ஸஹதேவர்களும் திரௌபதியுடன் கூடினவர்களாக எல்லோரும் ஜநார்த்தனரை நமஸ்கரித்தார்கள். புருஷஸ்ரேஷ்டனே! கௌரவிக்கத்தக்கவரும் விதிப்படி பூஜிக்கப்படுகின்றவருமான அந்தக்ருஷ்ணன் இந்தப்பார்த்தர்களை இனியற்ற இன்சொற்களுடன்கூடிய ஸமாதானவசனத்தால் தேறுதலடையச்செய்தார்.

நூற்றுத்தொண்ணூற்று மூன்றுவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர் கலியில் வரப்போகிற உலகவ்ருத்தாந்தங்களையும் கலியின் முடிவில் கல்கியாக அவதரிக்கும் ஹரியினால் துஷ்டர்கள் ஸம்ஹரிக்கப்படுவதையும் யுதிஷ்டிரர் முதலியவர்களுக்குக் கூறியது.)

குந்தியின் புத்ரரான யுதிஷ்டிரரோ, மந்த்ரிகளோடு மார்க்கண்டேயமகாமுனிவரைப் பார்த்து, வரப்போகிற உலகத்தின்கதியை மீண்டும் வினவலானார். யுதிஷ்டிரர், 'சொல்பவர்களுள் சிறந்தவரே! பிருகுவம்சத்திலுதித்த முனிவரே! யுகத்தின் தொடக்கத்தில் நடந்த ஆச்சரியமான விருத்தாந்தமும் உத்பத்தியும் நாசமும் உம்மிடத்தினின்று எங்களால் கேட்கப்பட்டன. மறுபடியும் எனக்கு ஆவல் இருக்கிறது. இந்தக் கலியுகத்தில் தர்மங்கள் நிலைகுலைந்திருக்கும் தருணத்தில் எது மிகுந்திருக்கப் போகிறது? அந்த யுகமுடிவில் மனிதர்கள் எப்படிப்பட்ட வீர்யமுள்ளவர்களும் எவ்விதஆகாரமுள்ளவர்களும் எவ்விதநடையுள்ளவர்களும் எவ்வளவு ஆயுளுள்ளவர்களும் எதை உடுப்பவர்களுமாயிருப்பார்கள்? எந்தக் கால எல்லையை அடைந்து மீண்டும் க்ருதயுகம் உண்டாகும்? முனிவரே! விஸ்தாரமாகச் சொல்லக்கடவீர்! இப்பொழுது விசித்ரமானவைகளைச் சொல்லுகிறீர்' என்று வினவினர்.

இவ்வாறு சொல்லக்கேட்டவரும் முனிச்ரேஷ்டருமான அந்த மஹரிஷியானவர், விருஷ்ணிகளுள் சிறந்தவரான கிருஷ்ணனையும் பாண்டவர்களையும் ஆனந்தமடையச் செய்துகொண்டு, யுதிஷ்டிரரைப் பார்த்து, 'அரசனே! ராஜச்ரேஷ்டனே! என்னால் முற்காலத்தில் தேவதேவருடைய அருளால் காணவும் கேட்கவும் அனுபவிக்கவும்பட்டவைகளைக் கேள். பரதர்களுள் சிறந்தவனே! (இனி) இந்தப் பாவம் மிக்க காலத்தையடைந்து வரப்போகிற உலகங்களுடைய வரலாறனைத்தும் சொல்லப்படுவதை என்னிடத்திலிருந்து தெரிந்துகொள். பரதர்களுள் சிறந்தவனே! தர்மமென்கிற விருஷபமானது க்ருதயுகத்தில் கபடமில்லாததாயும் பாதாசை முதலிய தீயபுணர்களில்லாததாயும் நான்கு கால்களோடு கூடியதாயும் ஸம்பூர்ணமாக

மனிதனிடத்தில் நிலைபெற்றிருந்தது; த்ரேதாயுகத்தில் அதர்மத்தால் ஒருகால் அடிக்கப்பட்டு மூன்று கால்களோடு நிலைத்திருந்தது. த்வாபராயுகத்தில் பாதி அதர்மத்தோடு தர்மமானது கலந்திருக்கிறதென்று சொல்லப்படுகிறது. பரதஸ்ரேஷ்டனே! தாமஸயுகமான கலியுகத்தை அடைந்து அதர்மமானது மூன்று அம்சங்களால் உலகங்களை வலிந்து கவர்ந்துகொண்டிருக்கிறது. தர்மதேவதை, தான்காவது அம்சத்தால் மனிதர்களை அடைந்திருக்கிறது. பாண்டவ! மனிதர்களுக்கு யுகம்தோறும் ஆயுள், வீர்யம், மனம், புத்தி, பலம், தேஜஸ் இவைகளெல்லாம் குறைவடைகின்றனவென்று என்னிடமிருந்து தெரிந்துகொள். யுதிஷ்டிர! பிராம்மணர்களும் க்ஷத்ரியர்களும் வைச்யர்களும் சூத்ரர்களும், தர்மதேவதென்கிற வஹ்னியை விசி உலகங்களை வஞ்சிக்கிறவர்களாகக் கபடங்களால் தர்மத்தை அனுஷ்டிப்பார்கள். பண்டிதரென்கிற சர்வஜ்ஞனை மனிதர்களால் உலகத்தில் ஸ்தாபனானது சருக்கப்படும். பிறகு, ஸ்ரத்தையின் விகாசத்தினால் அவர்களுக்கு ஆயுளானது அல்பமாக என்பதில். ஆயுளின் குறைவினால் வித்தைகளைக் கற்றுக்கொள்வதற்குச் சக்தியுள்ளவர்களாகார்கள். வித்தையில்லாதவர்களை அஜ்ஞானத்தினால் மோசமானது கவர்ந்துகொள்ளும். மனிதர்கள் மோசமையையும் அறியாமையையும் பிரதானமாகக்கொண்டவர்களும் மூடர்களும் காமத்தில் பற்றுள்ளவர்களும் கிடமான வைதழுள்ளவர்களும் ஒருவனை ஒருவர் கொல்லுவதில் விருப்பமுள்ளவர்களும் ஆவார்கள். பிராம்மணர்களும் க்ஷத்ரியர்களும் வைச்யர்களும் ஒருவரிடமாவது ஒருவர் கலந்திராதவர்கள்; தெய்வத்தினாலும் ஸ்ரத்தைக்காலும் விடப்பட்டுச் சூத்ரர்களுக்கு ஒப்பாவார்கள். சிறப்பட்ட ஜாதியிலே நடவாதவர்கள் சிறு ஜாதியை அடைந்தவர்களாக இருப்பார்கள். வர்ணசங்கரமில்லை. யுகத்தினுடைய முடிவுகாலத்தில் ஜனங்களுடைய ஆயுள் இருபது வயதாகும். யுகமுடிவுகாலத்தில், சணல் கோதல் சிறுப்பயிராகும். சூத்ரர்கள் வைச்யர்களைப்போல் சிறப்படைவார்கள். வைசூகர்கள் க்ஷத்ரியர்களைப்போல் சிறப்படைவார்கள். பிராம்மணர்களைப்போல் சிறப்படைவார்கள். யுகமுடிவுகாலத்தில், யாதொரு விதத்தாலும் விரதத்தைக் கைக்கொள்ளாத மனிதர்களும், பிதுர்கள் கர்மமில்லாமலும், மத்ஸ்யமாம்ஸத்தால் ஜீவிப்பவர்களும் சிலர் ஸாதுக்களாயும் சிலர் மிலேச்சர்களாயும் கூறப்படுபவர்களும் சூத்ரஸ்த்ரீகளில் வைத்தவர்களும் ஆவார்கள். யுகமுடிவில், மனிதர்கள் ஒருவர் மற்றொருவ

ருடைய பொருளை அபகரிக்கிறவர்களும் ஒருவரை ஒருவர் ஹிம் ஸிப்பவர்களும் மந்திரஜபமில்லாதவர்களும் நாஸ்திகர்களும் திரு டர்களும் ஆவார்கள். யுகக்ஷயத்தில், நதி தீரங்களில் குந்தாலிகளால் (பூமியை வெட்டி) [1] அற்பதானியங்களை விதைக்கச் செய்வார்கள். அவைகளும் அவர்களுக்கு அல்ப பலனைக் கொடுப்பவைகளாகும். ஸ்நாத்தத்திலும் தேவகார்யத்திலும் எப்பொழுதும் விரதத்தைத் தரிக்கிற மனிதர்களும் பராசையினால் கவரப்பட்டு இவ்வுலகில் ஒருவரை ஒருவர் பக்ஷிப்பார். யுகக்ஷயத்தில், பிதா புத்திரன் பொருளைக் கவர்ந்து அனுபவிப்பான். அப்படியே, புத்திரனும் தகப்பன் பொருளைக் கவர்ந்து அனுபவிப்பான். உணவுப்பொருள் கள் அழிந்துபோம். பிராம்மணர்கள் வேதத்தை நிந்திக்கிற வர்களாகி விரதங்களை அனுஷ்டியார். யுக்திவாதத்தால் மயக்கப் பட்டவர்களாகி யாகம் செய்யமாட்டார்கள்; யுக்திவாதத்தால் மயக்கப்பட்டு இகழப் பட்ட செய்கைகளில் விருப்பத்தை வைப்பார்கள். பரிதிவரை குத்தகாத களர் நிலத்தில் க்ருஷி செய்வார்கள். நகரத்தில் பக் கலைக் கட்டுவார்கள். மனிதர்கள் ஒரு வயதுக்குள்ளாகவே சமைக்கச் செய்வார்கள். புத்திரன் பிதாவைக் கொல்வான். அப் படியே தகப்பனும் புத்திரனைக் கொல்வான். யுகக்ஷயத்தில். ஸ்திரீ களும் கணவன் புத்திரன் முதலியவர்களைக் கொல்லுவார்கள். ஒரு வருப்பில்லாதவனை அர்த்தமில்லாத சொற்களால் உபத்திரவ படுத் கிற மனிதன் நிந்தனையை அடையமாட்டான். உலகம் முழுமையும் மிலேச்சமயமும் ஸத்கர்மானுஷ்டானமில்லாததும் கானலில் லாததும் ஆனந்தமில்லாததும் அப்படியே உத்ஸாஹமில்லாததும் ஆகும். இவ்வுலகில் கல்லாழுக்குமுள்ளவர்களுடைய பந்துக்க ளான மனிதர்களும், அல்பபலன விர்யமும் பலமுள்ளவர் களும் இறுமாப்புள்ளவர்களும் தபோதனரும் தபோதனரு மாகொண்டவர்களும் அவைகளைச் சார்ந்து கதைகளைக் கேட்டு மகிழ்ப வர்களுமாகி மேலானவர்களின் பொருள்களையும் அபஹரித்து உறவின ரற்ற மனிதர்களுடைய பொருள்களையும் விதவைகளுடைய பொருள் களையும் அபஹரிப்பார்கள். கௌரவ்ய! அரசர்கள் கபட மான துர்நயத்தைக் கைக்கொள்வார்கள். ராஜ்யத்தில் புத்தி சொல்லுபவர்களும் மித்ரத்துரோஹிகளாகி விடு

---

[1] 'ஒஷதய:' என்பது மூலம்; ஒரு வருஷத்திற்குள் பலன் கொடுத்து முடிப் பின்பு பட்டுப்போகின்றவை.

வாங்குவார்கள். யுகமுடிவில், க்ஷத்திரியர்கள் ஒருவரை ஒருவர் கொல்லுவதில் முயற்சியுள்ளவர்களும் மூர்க்கர்களும் பண்டித ரென்கிற கர்வமுள்ளவர்களும் மூலாக கண்டகர்களும் ஆவார்கள். யுகமுடிவில், அரசர்கள் பிரஜைகளைக் காவாதவர்களும் பொய் சையுள்ளவர்களும் கர்வமும் அகங்காரமும் கொழுப்புமுள்ள வர்களும் கண்டிப்பதிலேயே விருப்பமுள்ளவர்களும் ஆவார் கள். பாரத! ஸாதுக்கள் அழுதுகொண்டிருக்கும்போதுகூட, அவர்களுடைய மனைவிகளையும் பொருள்களையும், அரசர்கள், தயை யில்லாதவர்களாகி, ஆக்ரமித்து ஆக்ரமித்து அனுபவிப்பார்கள். யுகத்தின் முடிவுக்காலத்தில் ஒருவனுக்கு கன்னிகையை யேவண்ட மாட்டான். ஒருவனுக்கும் கன்னியும் கொடுக்கப்படமாட்டாள். அவர்கள் காமமே (காரணமாக) அடைபவர்களாவார்கள். யுகத்தின் முடிவு வந்தபோது, அரசர்களும் போதுமென்ற எண்ண மில்லாதவர்களும் மூடபுத்தியுள்ளவர்களுமாகி எல்லா உபாயங் களாலும், பிறர்பொருள்களை அபஹரிப்பார்கள். யுகத்தின் முடிவுக் காலம் வந்தபோது, உலகமனைத்தும் மிலேச்சத்தன்மையுள்ள தாகும். ஸந்தேகமில்லை. [1] வலக்கை இடக்கையையும் இடக்கை வலக்கையையும் வஞ்சிக்கும். உலகத்தில் பண்டிதரென்கிற கர்வ மெதுவோ மனிதர்களால் லக்ஷியமானது மிக விலக்கப்படுகிறது. வயது முதிர்ந்தவர்கள் சிறுவயதுள்ள புத்தியுள்ளவர்களும் சிறுவர்கள் முதிர்ந்தவயதை யுடைய புத்தியுள்ளவர்களும் ஆவார்கள். •அப்படியே, பயந்தவன் (தன்னைச்) சரணமென்கிறவனை வதைப்பான். கூரர்கள் பாடத் தகாதவர்களும் தூஷிக்கத்தகாதவர்களும் ஆவார்கள். யுகத்தினுடைய முடிவுகாலமும் தன்னுடைய ஸ்வரூபத்தை விடுவதில்லை. ஜனங்களுக்குள்ளே, ஒருவரையொருவர் வஞ்சிப்பதில், பிராம்மணர்களும் க்ஷத்திரியர்களும் வைச்யர்களும் சூத்ரர்களும் ஆவார்கள். யுகத்தினுடைய

1 'மனிதர்களுடைய கைகள்போல ஒரே தாய் வயிற்றில் பிறந்த ஸஹோதரர்களும் ஒருவர் மற்றொருவரை வஞ்சிப்பார்' என்பது பழமொழி.

• 'யுகபர்யயம்' என்பது மூலம்; 'யுகஸ்வபாவம்' என்ற பாடம் கொண்டு, 'மாம்ஸபோஜனம், காட்சியிலிருந்து மறைவதில் ஆசாரமுள்ளவர்களாயிருத்தல், நின்னைத்தக்கது தகாதென்னும் வரையறையின்மை' என்பது கருத்து' என்பது பழமையுரை.

உலகமானது ஒரே ஜாதியுள்ளதாகும். யுகக்ஷயத்தில், தக்ஷன் புத்திரனைப் பொறுக்கமாட்டான். அப்படியே, புத்திரனும் தக்ஷனைப் பொறுக்கமாட்டான். யுகமுடிவில், மனிஷிகள் கணவர்களுக்குப் பணிவிடை செய்யமாட்டார்கள். யுகமுடிவு வரும் தருணத்தில், யவையையும் அப்படியே கோதுமையையும் உணவாகக்கொள்ளுகிற தேசங்களை ஜனங்கள் அடைவார்கள். பிரஜைகளுக்கு அதிபதியே! யுகக்ஷயம் வரும் தருணத்தில், புருஷர்களும் ஸ்திரீகளும் இஷ்டப்படி உண்பார்கள்; ஒருவரை ஒருவர் பொறுக்கமாட்டார்கள். யுதிஷ்டிரா! உலகமனைத்தும் மிலேச்சத்தன்மையுள்ளதாகும். மனிதர்கள் ப்ராத்தத்தில் தேவர்களையும் பித்ருக்களையும் திருப்தியடையச் செய்யமாட்டார்கள். ஜனங்களுக்கு அதிபதியே! ஒருவனும் மற்றொருவனுடையசொல்லைக் கேளான். ஒருவனும் ஒருவனுக்கு ஆசார்யனல்லன். அப்பொழுது, உலகமானது தமோகுணத்தால் கவரப்பட்டதாகும. யுகாந்தமவரும தருணத்தில், பதிணறுவருஷம்தான் பூர்ணமான ஆயுளாகும். பிறகு, பிராணன்களை இழப்பார்கள். கன்னிகையானவள் ஐந்தாவது பிராயத்திலோ ஆறுவது பிராயத்திலோ பிரஸவிப்பாள். அப்பொழுது, எழுவயதும் எட்டுவயதுமுள்ள ஆண்பிள்ளைகள் குழந்தைகளை உண்டுபண்ணுவார்கள். அரசனே! ராஜஶ்ரேஷ்டனே! யுகாந்தத்தில், ஸ்திரீகள் புருஷர்களிடத்திலோ புருஷர்கள் ஸ்திரீகளிடத்திலோ ஸந்தோஷத்தை அடையமாட்டார்கள். மனிதர்கள் சிறிதே பொருளுள்ளவர்களும் ஜாதிக்குரிய அடையாளங்களை விரும்பாதவர்களுமாவார்கள். துன்பமும் அதிகமாகும். யுகமுடிவில் எவனும் எவனுக்கும் (எதையும்) கொடுப்பவனல்லன். யுகமுடிவில், தேசங்கள் சோற்றைவிற்பவைகளும் பிராம்மணர்கள் வேதவிக்ரயம்செய்பவர்களும் ஸ்திரீகள் அங்கத்தை விற்பவர்களும் ஆவார்கள். யுகமுடிவுக்காலத்தில், மனிதர்கள் மிலேச்சநடைய ஆசாரமுள்ளவர்களும் எல்லாவற்றையும் பக்ஷிப்பவர்களும் கால்லாச்சிசெய்கைகளிலும் பயங்கரர்களுமாவார்கள். இதில் சந்தேகமில்லை. பரதஶ்ரேஷ்டனே! யுகாந்தகாலத்தில், கொள்ளுதல் விற்றல் செய்யும்பொழுது பொருளாசையினால் எல்லோரும் எல்லோருக்கும் வஞ்சனை செய்வார்கள். யுகமுடிவுக்காலத்தில், அறியவேண்டியவற்றை அறிந்துகொள்ளாமல் கர்மங்களைச் செய்வார்கள். அப்படியே, எல்லாரும் தன்னிஷ்டப்படி இருப்பார்கள். யுகமுடிவுவந்தகாலத்தில், எல்லாஜனங்களும் இயற்

கையிலேயே கொடிய செய்கைகளுள்ளவர்களும் ஒருவரை ஒருவர் அவதூறு சொல்லுகிறவர்களும் ஆவார்கள். ஜனங்கள் மனவருத்தமில்லாமல் பூந்தோட்டங்களையும் மரங்களையும் அழிப்பார்கள். உலகத்தில் பிராணிகளுடைய உயிருக்கு ஸம்சயமுண்டாகும். அரசனே! அப்படியே, மனிதர்கள் பேராசையினால் கவரப்பட்டவர்களாவார்கள். பிராம்மணர்களுடைய பொருள்களால் ஜீவிப்பவர்கள், பிராம்மணர்களைக் கொல்லுவார்கள். பிராம்மணர்களும், சூத்திரர்களால் பீடிக்கப்பட்டவர்களும் பயத்தினால் துன்புறுத்தப்பட்டவர்களும், 'ஆ! ஆ!' என்று அலறுகின்றவர்களுமாகிக் காப்பவன் கிடையாமல் இந்தப் பூமியில் சுற்றுவார்கள். மனிதர்கள் உயிரைப் போக்குகிறவர்களும் கொடியவர்களும் பயங்கரர்களும் பிராணிகளை அதிகமாகத் துன்பம் செய்பவர்களும் ஆகும்போழுது, யுகம் முடிவையடையும். குருகுலத்தை மேன்மையடையச் செய்பவனே! பிராம்மணர்கள் அதிகமான பயத்தை அடைந்தவர்களும் ஓடுகின்றவர்களுமாகி நதிகளையும் மலைகளையும் மேடுபள்ளங்களையும் அடைவார்கள். அரசனே! பூமியைப் பாதுகாப்பவனே! பயங்கரமான யுகமுடிவில், பிராம்மணர்கள் கிருடர்களால் பிடிக்கப்பட்டவர்களும் கொடுங்கோல் மன்னர்களால் எப்போழுதும் ஏற்படுத்தப்பட்ட வரிகளின் சுமையினால் மிகப் பீடிக்கப்பட்டவர்களுமாகிக் காகங்களின் போலத் தைரியத்தை இழந்து சூத்திரர்களுக்குப் பணிசெய்பவர்களாகி ஜாதிக்குரியனவல்லாத செய்கைகளைச் செய்வார்கள். சூத்திரர்கள் தர்மத்தைச் சொல்லுவார்கள். பிராம்மணர்கள் அவர்களை வழிபடுகிறவர்களும் (அவர்கள் சொல்வதைப்) பிரமாணமென்று ஒப்புக்கொள்ளுகிறவர்களும் கேட்பவர்களும் ஆவார்கள். இவ்வுலகமானது கீழ்மேலாக மாறுபடும். யுகமுடிவில், மனிதர்கள் ஆசாபாசங்களால் அடையாளமிடப்பட்ட சுவர்களைப் பூசுவார்கள். தெவ்வாடைகளை விலக்குவார்கள். 1 யுகமுடிவில் சூத்திரர்கள் பிராம்மணர்களுக்குப் பணிசெய்யமாட்டார்கள். யுகமுடிவுக்காலத்தில், மறைபொருள்களுடைய ஆம்பராங்களிலும் பிராம்மணர்களுடைய விருந்துகளிலும் தெவ்வாலயங்களிலும் பாகசாலைகளிலும் தானங்களுடைய ஆலயங்களிலும் பூமியானது எலும்பை அடையாளமாகக் கொண்டதாகும்; (உண்மையான) தெவ்வாலயங்களால் அலங்கரிக்கப்பட்டதாகாது. அது யுகத்தின் முடிவுக்கு அடையாளம். அப்போழுது மனிதர்கள் நித்யம் பயங்

---

1 வேறு பாடம்.

கார்களும் தர்மத்தை விட்டவர்களும் மாம்ஸத்தைப் பக்ஷிப்பவர்களும் அப்படியே கூட்குடிப்பவர்களும் ஆவார்களோ அப்போழுது யுகமானது முடிவை அடையும். அரசனே! மஹாராஜனே! எப்பொழுது புஷ்பத்தில் புஷ்பமும், பழத்தில் பழமும் உண்டாகுமோ அப்பொழுது யுகம் ஸாசத்தை அடையும். யுகத்தின் முடிவுக் காலத்தில், மேகமானது அகாலத்தில் மழையைப் பொழிவதாகும். அப்பொழுது, மனிதர்களுடைய செய்கைகள் முறைதவறினவைகளாகும். ஸ்த்ரீகள் பிராம்மணர்களோடு விரோதத்தை அடைவார்கள். பிறகு, அதிசீக்ரத்தில் பூமியானது மிலேச்சர்களால் நிரம்பினதாகும். பிராம்மணர்கள் அதிகவரிகளால் உண்டான பயத்தால் பத்துத்திசைகளையும் அடைவார்கள். அரசர்கள் அந்தியத்தில் நிலைபெற்றவர்களாவார்கள். ஸத்ருத்ரு ஜனங்கள் ஒரே ஆசாரமும் தவஷமுமுள்ளவர்களும் அப்படியே கூலிகொடாமல் வேலைவாங்குகின்ற மனிதர்களால் தரிம்ஸிக்கப்பட்டவர்களுமாகிப் பழங்களையும் கிழங்குகளையும் உள்நிகான்றி காட்டுக் குடிசைகளை அடைவார்கள். இவ்வண்ணம் உலகமானது குழப்பமடைந்தபொழுது, வரையறை இராது. பிராம்மணர்களும் க்ஷத்திரியர்களும் வைச்யர்களும் நல்ல காரியத்தைவிட்டு விடுவார். சிஷ்யர்கள் அப்ரியமான காரியங்களைச் செய்கின்றவர்களாகிக் குருவின் உபதேசத்தில் கட்டுப்பட்டிருக்கமாட்டார்கள். அதற்குப் பிறகு, தனமில்லாத ஆசார்யன் சிஷ்யனால் பரித்யக்தனாவான். மித்திரர்களும் ஸம்பந்திகளும் பந்துக்களும், போருள்களின் ஸம்பந்தத்தால் (போருளுள்ளவர்களிடம்) அன்பு பாராட்டுவார்கள். யுகத்தின் முடிவில், எல்லாப் பிராணிகளுக்கும் காசமுண்டாகும். திசைகளெல்லாம் நன்கு புகைபிடியும். கதிர்த்திரங்கள் ஒளியற்றனவாகும். சூர்யமண்டலங்கள் புகையினால் மூடப்பட்டவைகளாகும். அப்படியே, காற்றுக்கள் மிகுந்த நிலைகெட்ட வீசும். பல உற்பாதங்கள் பெரும்பயம் வரப்போவதைத் தெரிவித்துக்கொண்டு கீழே விழும். ஸூர்யன் மற்ற ஆறு ஸூர்யர்களோடுகூடி உலகத்தை மிகக்காய்வான். இடி முழக்கங்கள் தொடர்ச்சியாகத் தோன்றும். நான்கு பக்கங்களிலும் திசைகளின் எரிச்சல்களும் உண்டாகும். அப்பொழுது, ஸூர்யன் உதயகாலத்திலும் அஸ்தமயகாலத்திலும் ராகுவினால் கவரப்படுவான். பகலானது இந்திரன் அகாலத்தில் மழைபொழிகிறவனுவான். யுகமுடிவுக்காலம் நெருங்கினபோது, பயிர்கள் முளையா. ஸ்த்ரீகள் அடிக்கடி கருஞ்

சொற்களைச் சொல்பவர்களும் குருநர்களும் அழுவதில் பிரியமுள்ளவர்களுமாகிக் கணவர்களுடைய வசனத்தில் கட்டுப்பட்டு நிற்க மாட்டார்கள். யுகமுடிவில், புத்திரர்கள் தாயையும் தந்தையையும் கொல்லுவார்கள். ஸ்திரீகள் புத்திரர்களை ஆதரவாகக்கொண்டு கணவர்களைக் கொல்லுவார்கள். மஹாராஜனே! பர்வகாலமில்லாத ஸமயத்தில், ராகுவானவன் ஸூர்யனைப் பிடிப்பான். யுகாந்தத்தில், நெருப்பும் எங்கும் பற்றிஎரியும். அப்பொழுது, குடிகண்ணீரையும் போஜனத்தையும் தங்குமிடத்தையும் யாசிக்கின்ற வழிப்போக்கர்கள், அவைகளை அடையார். அவர்கள் ஜனங்களால் தூரத்தப்பட்டு வழியில் படுப்பார்கள். யுகாந்தம் நெருங்கிவரும் காலத்தில், நகரங்களும் காம்பகங்களும் ராசதானிகளும் மற்றப பட்டணங்களும் மிருகங்களும் இடைவிடாமல் பயங்கரமான ஒலிகளை வெளியிடும். யுகாந்தம் கிட்டிவரும் காலத்தில், மனிதர்கள் கண்பார்வைகளையும் வாய்த்தானியங்களையும் வெல்லக்காய்களையும் கைவிடுவார்கள். யுகாந்தம் நெருங்கும் காலத்தில், மனிதர்கள் நகரங்களையும் சாலைகளையும் பட்டணங்களையும் கடைகளையும் முன்போல அழிப்பார்கள். ஜனங்கள், அப்பொழுது, 'ஆ! தந்தையே! ஆ! மைந்தா!' என்றும், 'சிவிதம் மிக்க பயங்கரமான வாக்குக்களை வெளியிட்டு ஓடுவதை ஓடுவர் அலறி அழைத்துக்கொண்டு பூமியில் எல்லாப்பக்கத்திலும் விழுவார்கள். யுகமுடிவில், அப்படிப்பட்ட நடுக்கங்கள் உயிர்களை, 'அடே!' என்று அழைப்பார்கள். பிராமணர்களும் அல்பவல்லுநர்களும் அனாதரவாக்கப்படுவார்கள்.[1] பாதி வேட ஜனங்களாகி கலந்தவர்களும் ஆவார்கள்.

பிறகு, யுகமுடிவில், வர்ணமற்ற காரங்கள் முற்றிலும் அழிந்து விடுகின்றன. ஒன்றுக்கு கலந்து போனதைப்போல, பிராமணனும் முகம்மாறுபட்டுக் கெடுகின்றான். கால ஜாதிகளின் உயர்வானது நாசமடைகிறது. பிறகு, மறுபடியும் உயர்வானது அபரிமிதமான புண்ணியத்தால் சேருகிறது, சிலபிறகு வளர்கிறது. பிராமணனது குற்றமற்றவனாக அறியப்படுகிறது. பிறகு, சுத்தனான, பிரமஞானம், சுத்தி, பிரமசரியம், ஆகிய நிற்குணங்களும், புண்ணியகர்மத்தை அனுஷ்டித்து ஒருவனிடம் சேருகின்றன. பிராமணர்களும் அல்பவல்லுநர்களும் ஆவார்கள். பிறகு, மறுபடியும் பிராமணர்கள் உண்டாகிறார்கள். பிராமணனது குருக்களாகும் தன்மை மறைந்து போகிறது. சூத்திரர்கள் ராஜாக்களாகிறார்கள். ஜனங்

---

1 இவ்விடமும் வேறு பக்கத்திலுள்ள அடைசலணைபோல் பெரிய பக்கத்திலும் குறிப்பிற் காண்க.

திர்க்கதரங்கள் பிரதக்ஷிணமாகச் செல்பவைகளும், அனுகூலசாரத்துடன் கூடியவைகளும் ஆகும். அக்காலத்தில் க்ஷேமமும் ஸுபிக்ஷமும் ஆரோக்கியமும் அமைதியும் உண்டாகும். அரசனே! 1 (நாராயணர்) காலத்தால் ஏவப்பட்டு மகாவீர்யமுள்ளவரும் அதிகமான புத்தியும் பராக்கிரமமுமுடையவரும் மஹாத்மாவும் கல்லொழுக்கங்களால் நிறைந்தவரும் பிரஜைகளுக்கு ஹிதத்தைச் செய்பவரும் விஷ்ணுயசஸென்கிற பிராம்மணருமான கல்கிவடிவமாகி ஸம்பலமென்னும் கிராமத்தில் மங்களகரமான பிராம்மணக்ருஹத்தில் அவதரிப்பார். மனத்தினால் நினைத்தவுடன், எல்லா வாஹனங்களும் ஆயுதங்களும் யுத்தவீரர்களும் சஸ்திரங்களும் கவசங்களும் அவரை அடையும். அவர் தர்ம விஜயத்தால் பிரஜைகளை மகிழ்விக்கிற சக்ரவர்த்தியாவார். அவர் குழப்பமுற்றிருக்கிற இந்த உலகத்தைத் தெளிவிக்கப்போகிறார். அவதரித்திருப்பவரும், ஜ்வலிப்பவரும், யுகக்ஷயத்திற்கு முடிவை உண்டுபண்ணுகிறவரும், உதாரபுத்தியுள்ளவரும் பிராம்மண ருஷியுமான கல்கியானவர் எல்லாவற்றையும் ஒழித்துவிட்டு மீண்டும் தர்மயுகமாக மாற்றப்போகிறார். அந்தக் கல்கி என்கிற ப்ராம்மணர் ப்ராம்மணர்களால் சூழப்பட்டவராக அப்போழுது எல்லாவிடத்திலுமிருக்கிற அயோக்யர்களான எல்லா மிலேச்சர்களுடைய கூட்டங்களையும் அடியோடு அழிக்கப்போகிறார்.

---

1 இங்கே மூலத்திலிருக்கிறபடியே மொழிபெயர்த்திருக்கிறது. ஆயினும், ஸ்ரீ பாகவதம் முதல் ஸ்கந்தம் 3-வது அத்யாயம் 25-வது ஸ்லோகத்தில், 'ஜகத்பதியானவர் விஷ்ணுயசஸென்பவருக்குப் பின்னாயாகக் கல்கியென்னும் பெயருடன் அவதரிப்பார்' என்றும், 12-வது ஸ்கந்தம் 2 வது அத்யாயம் 18 வது ஸ்லோகத்தில், 'கல்கிபானவர் விஷ்ணுயசஸென்பவருடைய வீட்டில் அவதரிப்பார்' என்றும் சொல்லியிருத்தலால், இங்கே, 'விஷ்ணுயசஸென்னும் பிராம்மணர் பிறப்பார். அவருக்கு (நாராயணர்) கல்கிவடிவத்துடன் பின்னையாக அவதரிப்பார்' என்று சிலசொற்களை வருவித்துப் பொருள் செய்தல் சேர்; அல்லது, சிலகுடும்பங்களில் தந்தைபெயரே மகனுக்கும் வழங்குவதுபோல வழங்குவதாகக் கொள்ளவேண்டும்.

நூற்றுத்தொண்ணூற்று நான்காவது அத்யாயம்.

மார்க்கண்டேய ஸமாஸ்யா பர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர் கிருதயுகத்தின் விருத்தாந்தங்களைச் சொல்லி யுதிஷ்டிரனைத் தர்மத்தைச் செய்யும்படி தூண்டியது.)

பிறகு, அவர் திருடர்களுக்கு அழினைச் செய்து இந்தப் பூமியை அப்லவிதமாகவென்கிற பதவாயகத்தில் பிராம்மணர்களுக்கு விதிப்படி தானம் செய்வார். பிரம்மாவினால் ஏற்படுத்தப்பட்ட மங்களகரமான உலக மரியாதைகளை நிலைநாட்டினிட்டு பறபடியும் பூதிச்சியுடன் நல்ல புகழையும் செய்கையையும் அடைவார். உலகத்தில் வளர்க்கின்ற மனிதர்கள் அவருடைய கதையை அனுஸரிப்பார்கள். பிராம்மணர்களை க்ஷத்திரியன் திருடர்களுக்கு நாசம் செய்யப்பட்ட பிறகு தேஷமடம் உண்டாகும். பிராம்மணர்களான கல்கியானவர் 1 கிருஷ்ணபிங்களங்களையும் சக்திகளையும் தீக்ஷாலாயுதங்களையும் (தம்டால்) ஜயிக்கப்பட்ட தேசங்களில் நிலைபெறச்செய்கின்றவரும் பிராம்மணர்ஸ்ரேஷ்டர்களால் நன்கு தூண்டப்படுகின்றவரும் பிராம்மணர்களைப் பூஜிக்கின்றவரும் தன்பம்செய்கிறவர்களைத் தொலைவதில் எப்பொழுதும் பற்றுதலுள்ளவருடனும் பரிவில் வளர்ந்திருப்பார். 'ஆ! அம்மா! அப்பா! குழந்தாய்!' என்கிற சுத்த பிரம்ம பிராம்மணர்களின் தொனிகளை மிஞ்சுகின்ற ரக்ஷகர்களினால் பிரஜைகளுக்கு ஆபத்து நேரிடாது. நாட! பிறகு, அதன்பிறகு அழிவில் அரசாங்கம் வளர்கிறது உண்டாகும். ஜனங்கள் புலால் அல்லாத நல்ல தரமான தானியங்களை உண்பார்கள். ஜனங்களுக்கு பூச்சிகளால் ஏற்படும் நோய்களால் [illegible] [illegible] [illegible]

பெற்றவர்களும் ஆவார்கள். 1 எல்லாப் பிராணிகளும், சுத்தியுள்ளவைகளாகவே பிறக்கும். ராஜஸ்ரேஷ்டனே! எல்லா ருதுக்களிலும் எல்லாப்பயிர்களும் உண்டாகும். மனிதர்கள் தானங்களிலும் விரதங்களிலும் நியமங்களிலும் பற்றுள்ளவர்களாக இருப்பார்கள். பிராம்மணர்கள் ஜபயஜ்ஞத்தில் பற்றுள்ளவர்களும் தர்மத்தில் விருப்பமுள்ளவர்களும் மகிழ்ச்சியுள்ளவர்களுமாயிருப்பார்கள். அரசர்கள் இந்தப்பூமியைத் தர்மத்தால் பரிபாலனம் செய்வார்கள். கிருதயுகத்தில் வைசியர்கள் வாணிகத்தில் பற்றுள்ளவர்களாவார்கள். பிராம்மணர்கள் ஆறு தொழில்களில் நிலைபெற்றிருப்பார்கள். க்ஷத்திரியர்கள் தர்மத்தில் பற்றுள்ளவர்களாக இருப்பார்கள். அப்படியே, சூத்திரர்கள் மூன்று வர்ணத்தார்களுக்கும் பணி செய்வதில் பற்றுள்ளவர்களாக இருப்பார்கள். இந்தத்தர்மமானது, கிருதயுகத்திலும் த்ரேதாயுகத்திலும் அப்படியே த்வாபரயுகத்திலும் சாஸ்வதமாக இருக்கிறது. கடைசியான கலியுகத்திலுள்ள தர்மம் உனக்கு நன்கு எடுத்துரைக்கப்பட்டது.

பாண்டவ! எல்லா உலகத்தார்களாலும் அறியப்பட்டிருக்கிற யுகங்களின் கால அளவும் நன்கு உரைக்கப்பட்டது. ரிஷிகளால் நன்கு துதிக்கப்பட்டதும் வாயுவினால் சொல்லப்பட்டதுமான புராணந்தைத்தழுவி, சென்றதும் வருவதுமாகிய இவை அனைத்தும் என்னால் உனக்கு உரைக்கப்பட்டன. இவ்வண்ணம் நெடுங்காலம் ஜீவித்திருக்கிற என்னால் ஸம்ஸாரமார்க்கங்கள் அதிகமாகப் பார்க்கப்பட்டும் அனுபவிக்கப்பட்டும் இருக்கின்றன. பின்னும் எதைக் கேட்க விரும்புகிறாய்? தர்மத்தினின்றும் கழுவாதவனே! தர்மத்திலுள்ள ஸம்சயத்தினின்று விடுபடுவதின்பொருட்டு மீண்டும் வேறான என்னுடைய இந்த வசனத்தையும், எதிரிகளாகக் கருதப்பட்டிருப்பவர்களுடன்கூடக் கேட்டுத் தெரிந்துகொள். காம்பீர்யமுள்ள சிறந்தவனே! இந்த விஷயத்தில் தர்மமானது உன்னால் வேறு விதமாக அறியத்தக்கதன்று. அரசனே! தர்மத்தில் பற்றுள்ள மனிதன் இம்மையிலும் மறுமையிலும் ஸுகத்தை அடைந்து ஆனந்திக்கிறான். தோஷமற்றவனே! எந்த வசனத்தை நான் உனைப்போன்ற மங்களகரமான அந்த வசனத்தை நீ நன்கு அறிந்துகொள். எந்தப்பொழுதும் நீ பிராம்மணன் விஷயத்தில் அபமானம் செய்ய

1 'வினைப்பயன்கள் செய்யப்படுகின்ற வினைகளால் உறுதியாக சேர்ந்திருந்தாலும் ஞானபலத்தினால் அழிகின்றன' என்பது வேறு பாடத்தின் பொருள்.

லாகாது. பிராம்மணன் கோபம் கொள்வனெகில் பிரதிஜ்ஞையினால் உலகங்களையும் நாசம் செய்வான்' என்று சொன்னர்.

கௌரவர்களுள் மிகச்சிறந்தவரும் நல்ல புத்தியுள்ளவரும் நிகரற்ற காந்தியுள்ளவருமான யுதிஷ்டிரமஹாராஜர், மார்க்கண் டேயருடைய வசனத்தைக் கேட்டு, அவரை நோக்கி, 'முனிவர் களுள் மிக மேன்மைபெற்றவரே! இதைக்கேட்டதனால், என்னால் எது செய்யத்தக்கதாகும்? ஜயிக்கப்பட்ட இந்த உலகமானது என்னால் எவ்வாறு ரக்ஷிக்கத்தக்கதாகும்? முனிவரே! பிரஜை களைப் பரிபாலிக்கின்ற நான் எந்தத் தர்மத்தில் நிலைத்துநிற்க வேண்டும்? இந்த நிலைமையில் இருப்பவனான நான் என் தர்மத் தினின்று எவ்வாறு தவறாமலிருப்பேன்?' என்று வினவ, மார்க் கண்டேயர், 'எல்லா ப்ராணிகளிடமும் காருண்ய முள்ளவனும் ஒழுக்கத்தைச்சேர்ந்தவனும் அன்புள்ளவனும் அஸூயையில்லாத வனும் அன்பினால் குழந்தைகளைப்போல் ப்ரஜைகளைப் பாது காப்பதில் பற்றுதலுள்ளவனுமாகத் தர்மத்தைச் செய். அதர் மத்தை விட்டுவிடு. தகப்பன் முதலிய முன்னோர்களை அடக்கு நினைப்பதாயாக. நீ தவறுதலால் செய்துவிட்டதைக் கல்வி அறி வினால் நிவர்த்தித்துக்கொள். நீ கர்வத்தை அடையாதே. எப் பொழுதும் இன்சொல்லுள்ளவனாக இரு. யுதி முழுவதையும் ஜயித்து எல்லாவனுகளையும் வசமுள்ளவனுகவும் இருப்பா யாக. சென்றதற்கு வருந்தாதே. இந்தத் தர்மத்தை உனக்கு நான் சொல்லத் தொடங்கினேன். தூரியில் சென்றதை விரும்புவதால் எதை யும் நீ அடைவதில்லை. அரசனே! இதைக்கேட்பாய். நீ இந்த விஷயத்தைப்பற்றி வருந்தக்கூடாது. அரசனே! அரு பொருட்களில் மிகவும் நுண்ணியதான ஆத்மாவை அறிந்தவர் களை நீ வணங்கு. அரசனே! ப்ராணிகளின் உற்பத்தியையும் அழிவையும் அறிந்தவர்களை நீ வணங்கு. அரசனே! ஸர்வ வியாபியான ஆத்மாவை அறிந்தவர்களை நீ வணங்கு. அரசனே! ஸர்வ ஜ்ஞ

யுதிஷ்டிரர், 'பிராம்மணோத்தமரே! பிரபுவே! கேட்க இன்பமாக உம்மால் உரைக்கப்பட்ட உம்முடைய கட்டளையை அவ்வாறே முயற்சியுடன் செய்வேன். பிராம்மணோத்தமரே! எனக்குப் பீடாதையும் பயமும் மாத்ஸர்யமும் இல்லை. பிரபுவே! என்விஷயத்தில் உம்மால் சொல்லப்பட்ட அனைத்தையும் செய்வேன்' என்று சொன்னர். அதன்பேர! சுத்தியுள்ளவரான அந்தப் பான்டுநந்தனருடைய வசனத்தைக்கேட்டு, கிருஷ்ணனோடு சேர்ந்த பாண்டவர்கள் மிக்க மனக்களிப்பை அடைந்தார்கள். அங்குவந்திருந்த பிராம்மணஸ்ரேஷ்டர்களனைவரும் சிறந்த புத்தியுடையவரான மார்க்கண்டேயருடைய மங்களகரமான அப்படிப்பட்ட கதையைக்கேட்டுப் புராணகதைகளைச் சொல்லிடுதலில் ஆச்சர்யமடைந்தவர்களானர்கள்.

நூற்றுத்தொண்ணூற்றைந்தாவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யா பர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர் யுதிஷ்டிரருக்குத் தவளாயின் புராணத்தைச் சொல்லத் தொடங்கியதும், பர்க்ஷித்தென்னுமரசன் பிரதிஜ்ஞை யைச்செய்து தவளாயின் மகளை மணந்ததும், அவன் பிரதிஜ்ஞை தவறவே, அந்தப்பெண் தண்ணீரில் மூழ்கிப்போனதும், அவளைத்தேடுவதற்காக அவன் தவளைகளைக் கொல்வித்ததும், தவளையரசன் அதனைத்தடுத்து அந்தப்பெண்ணை மறுபடியும் அவனுக்குக் கொடுத்ததும், சலன் தளன் இவர்களின் நடையும், வாமதேவர் மகிமையும்.)

பான்டுநந்தனரான யுதிஷ்டிரர், மார்க்கண்டேயரை நோக்கி, 'மீண்டுமே பிராம்மணமஹிமையைச் சொல்லக்கடவீர்' என்று வினவ, மார்க்கண்டேயர், 'அபூர்வமாயிருக்கிற இந்தப் பிராம்மணர்களுடைய சரித்திரத்தைக் கேள். அதியாதபத்தியில் இக்ஷ்வாகுகுலத்தைத் தாங்குபவனான பரீக்ஷித் என்கிற ஓர் அரசன் இருந்தான். அவன் வேட்டையாடுவதற்குக் காலகம் சென்றான். அவன் தனித்தவனாகச் சுதந்தரியோடு ஒருபிருந்துக்காய் பின்தொடர்ந்தான். மிருகமானது அவனை நெடுந்தூரம் இழுத்துவிட்டது.

அவன் வழியில் ஸ்ரமமடைந்த பகியும் தாகமும் மேலிட்டவனாகி ஓரிடத்தில் கருமைநிறமுள்ளதும் நுழைபமுடியாததுமான மரமடர்ந்த ஓருசாப்பைக் கண்டான். அந்தச்சாப்பினுடைய நடுவில் மிகவும் அழகியதான ஓரு குளத்தைக் கண்டு குதிரையோடு கூடிய வனாகவே இறங்கினான். பிறகு, அவன் களைதீர்ந்தவனாகக் குதிரைக் குக் தீனிக்காக வரிசில் காமலைத்தண்டுகளைப் போட்டுவிட்டுப் புஷ்கரிணியின் கரையில் உட்கார்ந்தான். பிறகு, பருத்துக்கொண்டு இனிமையான ஓரு பாட்டைக் கேட்டான். அவன் அதைக்கேட்டு, 'இந்தக்காட்டில் மனுஷ்ய ஸஞ்சாரத்தைக் கான் காணவில்லை. இந்தப்பாட்டினாலே யாருடையது?' என்று ஆலோசித்தான். பிறகு, தாமரை அடங்கினால் காட்சிக்கினியவனும் பக்ஷபக்ஷிகளைப் பரிரக்ஷிப்பவனும் பாதிகன்றவனுமான ஓரு கன்னிகையைக் கண்டான். பிறகு, அவன் அவளண்டைபில் வந்தான். அரசன் அவளைப் பார்த்து, 'கல்யாணி! நீ யாருக்குரியவள்? நீ யார்?' என்று கேட்டான். அவள் அரசனைப்பார்த்து, 'நான் கன்னிகை' என்று விடைகூறினாள். அரசன் அவளைப்பார்த்து, 'நான் உன்னை விரும்பு கிறேன்' என்று சொன்னான். பிறகு, அந்தக் கன்னிகை அரசனை நோக்கி, 'நான் உம்மால் தான் உடன்படத்தக்கவளல்லேன். என்னுடைய பிதாவை அடைபுத்தான் கலாணம்செய்வேன்' என்று சொன்னாள். அரசன், 'உடன்பாடு என்ன?' என்று அவளைக் கேட்டான். கன்னிகை, 'எனக்குக் கன்னிகாசுல்கம் கொடுப்பதாக

1 சேவை.

இந்த விஷயத்தை அபூர்வம்போலக் காண்கிறோம். இவ்விடத்தில் ஜலமானது கொண்டுவரப்படுகிறதில்லை' என்று சொன்னார்கள். பிறகு, மந்திரி ஜலமில்லாததும் அதிகமான மரங்களுள்ளதும், ஏராளமான மலர்களும் கனிகளும் கிழங்குகளுமுள்ளதுமான ஒரு காட்டை உண்டாக்கி, அதன் மத்தியில், பக்கங்களில் முத்து வலைகளால் மூடப்பட்டதும் அமிர்தம்போன்ற தண்ணீருள்ளதும் மறைவாயிருப்பதுமான ஒரு தடாகத்தைச் செய்வித்துத் தனிமையில் அரசனை அடைந்து, 'அரசனே! இந்த வனமானது நேர்த்தியானதும் தண்ணீரில்லாததுமாயிருக்கிறது. இங்கே இந்தப்பெண்ணுடன்கூட நீ ஸுகமாகச் செல்லலாம்' என்று சொன்னான். அந்த அரசன், மந்திரியின் சொல்லால் மறைவிடமான அவ்விடத்தை அப்பெண்ணுடன் கூடவே அந்த வனத்தில் நுழைந்தான். அவன் ஒரு ஸமயம் அடைகிய அந்தக்காட்டில் அவளுடனே கூடிக் களித்திருந்தான். பிறகு, பசியினாலும் தாகத்தாலும் களைத்து ஒரு முல்லைக்கொடியைப் பார்த்தான். அரசன் தன் தாகங்களுடன்கூட அதில் சென்று, நல்ல அமைக்கப்பெற்றதும் பரிசுத்தமும் ஜலத்தால் நிறைந்திருப்பதுமான ஒரு குளத்தைக்கண்டான். அதைப்பார்த்திருந்தான்; அதன் கரையில் அந்தத் தேவியுடன்கூடவே படுத்திருந்தான். பிறகு, அந்த அரசன் அந்தத் தேவியைப்பார்த்து, 'இந்தக் குளத்தில் நீரில் இறங்கு' என்று சொன்னான். அவள் அந்தவார்த்தையைக் கேட்டுக் குளத்திலிறங்கி முழுகினாள்; பின்பு தண்ணீரிலிருந்து எழுந்திருக்கவில்லை. அந்த அரசன் அவளைத்தேடியும் காணவில்லை. பிறகு, அரசன் குளித்து ஜலத்தை மிச்சமின்றி வடியச்செய்து ஒரு வளையினுடைய வாயில் ஒரு தவளையைக்கண்டு கோபங்கொண்டு, 'உலகத்திலுள்ள எல்லாத் தவளைகளையும் கொல்லுவேன். எவன் என்னிடத்தில் காரியத்தைக் கருதியிருந்தும் அவன் மற்ற தவளைகளைக் காணிக்கையாகக் கொண்டு வரவேண்டும்' என்று கட்டளையிட்டான். பிறகு, கோபமான வண்டிகளுடனே சென்றபோது எல்லாத் தவளைகளும் மண்டூகராஜனிடத்தில் சென்றன.

பிறகு, மண்டூகராஜன் தவக்கோலம் தரித்து அரசனிடம் வந்தது. அது அவனை அணுகி, 'அரசனே! கோபத்தை விட்டு நீ வரம் படைத்தாய். அதுக்கு மாறாகச் செய்வாயாக. நிரபராதிகளான தவளைகளை நீ கொல்லுதல் தகாது. இந்த விஷயத்தில் இரண்டு ப்ரகாரங்கள்

இருக்கின்றன. (அவற்றின்பொருள்,) 'கவளைகளை நீ கொல்லாதே. கர்மத்தினின்றும் கழுவாதவனே! கோபத்தை நீ கன்கு அடக்கிக் கொள். 1 கர்மாகர்மங்களை அறியாத ஜனங்களுடைய செல்வச் சிறப்பும் நவச்சிறப்புமும் அழிந்துபோகின்றன. உறுதிசெய்துகொள். நீ இந்தக் கவளைகளை மரணத்தை அடைவித்தலால் கோடாங்கணிய மாட்டாய். அதர்மத்தை நீ செய்யாதே. கவளைகளைக்கொல்லு வதனால் உனக்கு யாதுபயன்?' (என்பது) என்றுசொல்லிற்று. இவ்வாறு சொல்லுகின்ற அந்தமன்னர்நாயகனைப் பார்த்து இஷ்ட மான மனைவியை விட்டுப் பிரிந்தகனலுண்டான சோகம் நிறைந்த மனத்தையுடைய அரசன், 'அதை நான் பொறுக்கமாட்டேன். இந்தக் கவளைகளைக் கொல்வேன். கெட்ட எண்ணமுள்ள இந்தக் கவளைகளால் என் காதலியானவள் பாதிக்கப்பட்டாள். கவளைகளை எல்லாவிதத்திலும் நான் கொல்லவேண்டும். கற்றறிந்தவனே! என்னை நீ தடுக்கக் கூடாது' என்று சொன்னான். அந்தக் கவளை யானது அந்தவார்த்தையைக் கேட்டறிந்து, பொறிகளும் மனமும் கலங்கி, அரசனைப்பார்த்து, 'அரசனே! கண்பரிசயிப்பாயாக. நான் ஆயுவென்கிற பெயர்பெற்ற மன்னர்நாயகன். உனக்கு மனைவியாக இருந்தவள் ஸுதேசாவென்ற பெயர்பெற்ற என்னுடைய புதல்வி. இது அவளுடைய கெட்ட கனவினால் ஏற்பட்டது. அவளால் இதற்குமுன் பல அரசர்கள் எமனுலகுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள்' என்று சொல்லியது. அரசன் அதனைப்பார்த்து, 'உன்புத்திரியான அவளை நான் விடுவிக்கிறேன். எனக்கு அவளை நீ கொடுக்கவேண்டும்' என்று சொன்னான்.

பிறகு, பிரதமன் மன்னர்நாயகன் அந்தப் பெண்ணை அரச னுக்குக்கொடுத்து, அந்தப்பெண்ணைப்பார்த்து, 'நீ இந்த அரச னுக்குப் பணிவிடை செய்' என்றும் சொல்லியது. அந்தக் கவளை பெண்வடிவமாய்க்கொண்டு சென்றபின்னர் அந்தப்பெண் சொல்லி, 'உன்னுடைய பெரும்பான குழந்தைகளால் பல அரசர்களுடைய பிரதம்மஹிஷிகளுக்குத் துக்கம் கொடுத்தாய். குழந்தைகள் உனக்கு உண்டாகும்' என்று சபமிட்டது. அந்த அரசன் அவளிடத்தில் சென்றகாலத்தைக் கால் கழிப்பதற்காக மனமுவந்து முப்பத்தாறுவருடம் ஆட்சி யையும் அனுபவித்தது போக அவளை அனுப்பி அனுக்கக்கன்னி யால் சுகமடைந்து சென்ற சோகம்நீங்கி மன்னர்நாயகன் கடல்சூழ்காலம்

---

1 கேடுபாடு.

செய்து பூஜித்து, 'நான் அனுக்ரஹிக்கப்பட்டேன்' என்று சொன்னான். அந்த பாண்டுராஜன் பெண்ணினிடம் விடைபெற்று, வந்தபடியே சென்றது.

பிறகு, சிறிதுகாலம் சென்றபின், அந்த அரசனுக்கு அலிடத்தில் சலன், தலன், பலன் என்கிற மூன்று குமாரர்கள் உண்டானார்கள். பிறகு, தகப்பன், அவர்களை மூத்தவனான சலனுக்குத் தகுந்தகாலத்தில் ராஜ்யத்தில் பட்டாபிஷேகம் செய்வித்துத் தனத்தில் நிலைநிறுத்தப்பட்ட மனத்துடன் கானகம் சென்றான். பிறகு, ஒருசமயம் சலன் வேட்டையாடும் தருணத்தில் ஒரு மானை அடைந்து ரத்தத்தால் அதைப் பின் தொடர்ந்து ஓடினான். ராத்தியைப்பார்த்து, 'நான் மானை அடையும்படி விரைவாக ரதத்தை நடத்து' என்றுச் சொன்னான். அவ்வாறு சொல்லப்பட்ட ராத்தி, அரசனை நோக்கி, 'இந்த மான் தொடரத்தினண்டாம். உம்முடைய ரதத்தில் பூட்டியிருப்பது பிற இனம் குதிரைகளும் வாலமிருகமுடைய [1] குதிரைகளாக இருந்தாலும், நீர் இந்த மிருகத்தைப்பிடிப்பதற்கு ஏற்றபடாது' என்று கூறினான். பிறகு, அரசன் ராத்தியைப்பார்த்து, 'வாலமிருகமுடைய குதிரைகளைப்பற்றி எனக்குச் சொல். உன்னை நான் கேட்கிறேன்' என்று சொன்னான். இவ்வாறு கூறப்பட்ட ராத்தியானவன், அரசனுக்குப் பயந்தும் வாலமிருகமுடைய சாபத்துக்குப் பயந்தும், 'அரசே! வாலமிருகமுடைய குதிரைகளைப் பற்றிவகைப்போன்ற தகுதியுள்ளவனல்ல' என்று சொன்னான். பிறகு, அரசன் இப்படிச் சொல்லுகின்ற ராத்தியைப்பார்த்து, 'வாலமிருகமுடையதைப்பற்றி' என்று சொன்னான். அந்த அரசன் வாலமிருகமுடையதை அடைந்து அந்த விஷயத்தைப்பற்றி, 'பகவன்! என்னுடைய குதிரைகளைப்பற்றி எனக்குச் சொல்லவேண்டும்' என்று சொன்னான். இவ்வாறாக அந்த அரசனால்பார்த்து, 'உனக்கு என்ன நிபந்தனை குதிரைகளையும் கொடுப்பேன். காரியத்தை முடித்துக்கொண்டு நீ நிபந்தனை குதிரைகளையும் சிக்கிரமாக எனக்கு தெரிவிக்கவேண்டும்' என்று கூறினார். அந்த அரசர், அந்தக் குதிரைகளின் [illegible]

1 'வாலமிருகம்' என்பது பசுவால்.

அரசன் ஸுதனைப்பார்த்து, 'ஸுதா! இந்த இரண்டு அச்வரத்தினங்களும் நம்மிருவருக்கே தருந்தனை. இவைகள் வாமதேவருக்குத் திருப்பிக்கொடுக்கத்தக்கனவகளல்ல' என்று சொல்லிவிட்டு, மானை அடைந்து, தன் பட்டணத்திற்குவந்து அந்த இரண்டு குதிரைகளையும் அந்தப்புரத்தில் கட்டச்செய்தான்.

பிறகு, ரிஷியானவர், 'யௌவன முள்ள ராஜபுத்திரனைவன் மங்களகரமான குதிரைகளை அடைந்து மகிழ்கிறான். என்னுடைய குதிரைகளைத் திருப்பிக் கொடுக்கிறானில்லை. அஃதா! கஷ்டம்!' என்று ஆலோசித்தார். அவர் மனத்தினால் நன்கு ஆலோசித்து ஒருமோசம் நினைத்தபடன், ஒரு சிஷ்யனைப்பார்த்து, 'ஆத்ரேய! போ; 'உன்காரியம் நினைத்தவுடனே முடித்தாயானுடையகுதிரைகளிரண்டையும் திருப்பிக்கொடுக்கக்கடவாய்' என்று அரசனிடம் சொல்' என்றார். அந்தச்சிஷ்யன் அந்த அரசனை அடைந்து வாமதேவருடைய வசனத்தை அப்படியே சொன்னான். அரசன் அந்தச் சிஷ்யனைப்பார்த்து, 'இந்தவாகனம் அரசர்களுக்குரியது. பிராம்மணர்கள் இன்னிதமான பதனங்களுக்குத் தகுதியற்றவர்கள். பிராம்மணர்களுக்குக் குதிரைகளாலே செய்யத்தக்க காரியம் ஒன்றுமில்லை; கல்லது; போகலாம்' என்று மறுமொழி சொன்னான். அந்தச்சிஷ்யன் போய் இந்தவசனத்தை உபாத்தியாயரிடம் உரைத்தான். அப்பிரமான அந்தச்சொல்லைக்கேட்டு, வாமதேவர் கோபம் மிகவிட்டு மனத்துடன் காலம அரசனிடம்போய்க் குதிரை கேளுங்கோ. அரசன் சொல்லவில்லை. வாமதேவர், 'அரசனே! நீ என்ன நினைத்துக்கொண்டாய்? நான் முன்னே அரசர்களுக்குக் குதிரைகளைக் கொடுத்தேன் என்பதை மறந்தாயோ? அல்லது நான் பிராம்மணனாதலால் சக்தியில்லாதவனென்று நினைத்தாயோ? அரசனே, 'வாமதேவரே! நான் முன்னே அரசர்களுக்குக் குதிரைகளைக் கொடுத்தேன் என்பதை நான் நினைக்கவில்லை. அரசனே! இவ்வுலகிலுள்ள எவனுக்கும் கர்வமாய்போய் நடக்கிற மனிதனுக்கும் இந்தக் குதிரை

வாகனம்' என்றுசொன்னர். அரசன், 'உம்மை நாலு கழுதைகள் சுமக்கட்டும்; நாலு கோவேறுகழுதைகள் சுமக்கட்டும். காற்றுப் போலப் பறக்கின்ற நாலு குதிரைகள் சுமக்கட்டும். அவைகளால் நீர் போம். இந்தக் குதிரைகள் கூர்த்தபுத்திக்கே தக்கவை. ஆகையால், இவ்விரண்டு குதிரைகளும் என்னுடையவையே யென்றும் உம்முடையவையல்லவென்றும் தெரிந்துகொள்வீராக' என்று சொன்னன். வாமதேவர், 'அரசனே! நீ இப்பொழுது பிராம்மணனுடையபொருளைக்கொண்டு பிழைக்கிறாய். இதனைத் தீமையை விளைவிக்கிற செய்கையென்று சொல்லுகிறார்கள். இரும்பு மயமாக இருப்பவர்களும் கோரமான நுபமுள்ளவர்களும் பருந்தவர்களும் மிக்கபயங்கரர்களுமான நான்கு ராக்ஷஸர்கள் என்னால் ஏவப்பட்டவர்களும் உன்னுடைய தந்தை விரும்புகின்றவர்களும் கூர்மையான சூலம் பிடித்தவர்களுமாகி உன்னை நான்கு திண்டாகவிட்டி நான்கு திசைகளிலும் காக்கடவர்' என்று சொன்னர். அரசன், 'வாமதேவ! எவர்கள் உன்னை வாக்கினாலும் மனத்தினாலும் செய்கையினாலும் என்னைக்கொல்லமுயன்ற பிராம்மணனென்று அறிகிறார்களோ அவர்கள் என்சொல்லால் ஏவப்பட்டவர்களாகவும் கூர்மையான சூலங்களையும் கத்திகளையும் கையில் கொண்டவர்களாகவும் சிஷ்யர்களாகி கூடின உன்னையே இங்கே அடித்துக்கொள்ளக்கடவர்' என்று சொன்னன். வாமதேவர், 'அரசனே! நீ குதிரைகளிற்றுத்தரிக்கிறாயென்று என்னிடத்தில் ஒப்புக்கொண்டு என்னுடைய இரண்டு குதிரைகளையும் வாங்கிக்கொண்டாய். உனக்கு உபகாரமாயிருக்க விரும்பினால் என்னுடைய இரண்டு குதிரைகளையும் விலையாகக் கொடுத்துவிடு' என்று சொன்னர். அரசன், 'பிராம்மணர்களுக்கு வேட்டையானது ஏற்படுத்தப்படவில்லை. பொய் சொல்லுதல் எல்லாவற்றையும் உன்னை நான் தண்டிக்கமாட்டேன். பிராம்மணனே! 1 இன்று முதல் உன்னுடைய கட்டளை முழுவதையும் மனத்தில் வைத்து அப்படியே புண்யலோகத்தை அடையக்கடவாய்' என்று சொன்னன். வாமதேவர், 'அரசனே! பிராம்மணர்களுக்கு வாக்கினாலாவது மனத்தினாலாவது செய்கையினாலாவது தண்டனைகள் இல்லை. தற்றறிந்த எவன் இப்படிப்பட்ட பிராம்மண ஜாதியைத் தவத்துடன் அணுஸரித்து ஜீவிக்கிறானோ அவன் அதனால் சிறப்புற்று வருகிறானன்றோ?' என்று சொன்னர். அரசனே! வாமதேவ

1 அரசன் பிராம்மணனைப் பரிஹஸித்துச் சொல்லியது.

ரால் இவ்வாறு சொல்லப்பட்டவுடன், பயங்கரமான உருவமுள்ள ராக்ஷஸர்கள் சென்றிணர்கள். சூலங்களைக் கையில்கொண்ட அந்த ராக்ஷஸர்களால் கொல்லப்படுகின்ற அந்த அரசன், அப்பொழுது, 'இக்ஷ்வாகு குலத்தில் பிறந்தவர்களும் பூமியில் இன்னும் எனக்கு உட்பட்ட மற்ற அரசர்களும் என்னை விட்டு விட்டாலும் வாமதேவருடைய இரண்டு வாக்குறுதிகளையும் நான் கொடுக்க மாட்டேன். இப்படிப்பட்டவர்கள் தார்மிகர்களாகமாட்டார்கள்' என்றுசொன்னான். அந்த அரசன் இவ்வாறு சொல்லிக்கொண்டே ராக்ஷஸர்களால் கொல்லப்பட்டு விரைவில் பூமியில் விழுந்தான்.

பிறகு, இக்ஷ்வாகு குலத்தவர்கள் அரசன் விழுத்தப்பட்டதை அறிந்து, களனுக்குப் பட்டாபிஷேகம் செய்தார்கள். அச்சமயத்தில் அந்தப் பிராம்மணரான வாமதேவர் அந்த ராஜ்யத்திற்சென்று அரசனை களனைப் பார்த்து, 'அரசனே! எல்லாத் தர்மங்களிலும் பிராம்மணர்களுக்கு இவ்வாறு தானம் செய்யவேண்டுமென்பது காணப்பட்டிருக்கிறது. அரசனே! நீ அதர்மத்தினின்று பயத்தை அடைகிறபடியால் என்னுடைய இரண்டு குதிரைகளையும் சீக்ரமாக இப்பொழுதே கொடுத்துவிடு' என்கிற வசனத்தைக் கூறினர். அந்த அரசன், வாமதேவருடைய இந்த வாக்கியத்தைக் கேட்டு, சோகத்தால் வாடியதைப் பார்த்து, 'ராகவ! எந்தப் பாணத்தால் வாமதேவன் அடிக்கப்பட்டுத் துன்பமுற்ற உருவமுள்ளவனாய் காய்களால் நன்றாகத் தடுக்கப்படுகின்றவனுமாகிப் பூமியில் படுத்திருக்கிறானோ அதில் சீக்ரமான உருவமுள்ள அதுவும் விஷத்தால் தடவப்பட்டதுமான ஒரு பாணத்தை எனக்குக் கொடுப்பாயாக' என்று சொன்னான். அரசனே! வாமதேவரால் இவ்வாறு எனக்கு சொல்லப்பட்ட, களனுடைய விரோதத்தால் சீக்ரமான பிராம்மணர்களுக்குக் கோபமுண்டாகுமென்பது அதற்காகப் பார்த்தால் பிரயோஜனமில்லாதது. அதனால் சோகமில்லாதவனாக. அரசனை களன் அவனைக் கேட்டான், 'இக்ஷ்வாகுகுலத்தில் பிறந்தவர்களே! உத்ஸாஹத்துடன் என் உபகாரத்தைச் செய்யுங்கள்' என்றான். இப்படிப்பட்ட இக்ஷ்வாகுவம்சத்தவனான அரசனை களன் கேட்டான். கூர்மையான

ஒளியுள்ளதுமான வேறொரு பாணம் கொண்டுவர வேண்டும். மன்னவர்களே! இப்பொழுது என் திறமையைப் பாருங்கள்' என்கிற வாக்கியத்தை உரைத்தான். வாமதேவர், 'அரசனே! நீ கோரரூபமுள்ளதும் விஷத்தால் பூசப்பட்டதுமான இந்தப் பாணத்தை என்னைக் கொல்லவேண்டுமென்கிற எண்ணத்தால் வில்லில்பூட்டுகிறாய். நீ இந்த அம்பை இழுத்து என்மீது விடுவதற்காவது காண்காயிற்றில் பூட்டுவதற்காவது சக்தியுள்ளவனாகமாட்டாய்' என்று சொன்னர். அரசன், 'இக்ஷ்வாகுகுலத்தில் பிறந்தவர்களே! அளசய முடியாமல் செய்யப்பட்ட என்னைப் பாருங்கள். இந்த நான் பாணத்தைப் பிரயோகிப்பதற்குச் சக்தியற்றவனாக இருக்கிறேன்; இவருடைய காசத்தைச் செய்வதற்கு ஸாமர்த்தியமில்லாதவனாக இருக்கிறேன். வாமதேவரே நீண்ட ஆயுளுடன் வாழட்டும்' என்று சொன்னான். வாமதேவர், 'அரசனே! பாணத்தினால் இந்த ராஜபுத்திரனை அழைப்பாயாக. பிறகு, பிரம்மஹத்தியைச் செய்ய விரும்பியதாலுண்டான பாவத்தினின்று நீ விடுபடுவாய்' என்று சொன்னர். பிறகு, அரசன் அவ்வாறே செய்தான். பிறகு, ராஜபுத்திரனான முனிவனைப் பார்த்து, 'வாமதேவரே! பிராம்மணரே! நான் கல்ல வழியில் மனத்தைச் செலுத்தினவனாகவும் கொடியவனான இந்தக் கணவனுக்கு நான்காதும் கல்வார்த்தைகளைச் சொல்லுகின்றவனாகவும். பிராம்மணர்களை நிலைக்கள் நம்புகிறவனாகவும் இருந்ததாலும், புண்யமிலாதகத்தை அடையக்கூடியவன்' என்று சொன்னான். வாமதேவர், 'மங்களகரமான கண்களுள்ளவரே! உன்னால் ராஜகுலம் காக்கப்பட்டது. ஒப்பற்ற வரத்தை என்னிடமிருந்து கேட்டுக்கொள். நான் வரத்தை உனக்குக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ராஜபுத்திரியே! இழந்தகாதலரே! இந்தச் சொந்தஜனங்களையும் மிகப்பிரகாசிக்கிற இவ்வரசு ராஜ்யத்தையும் ஆளக்கடவாய்' என்று சொன்னர். ராஜபுத்திரி, 'பகவானே! இப்பொழுது இந்த மன்னனான் பாவத்தினின்று விடுபடக் கடவன். இவ்வண்ணம் வரத்தை வேண்டுகிறேன். பிராம்மணரைத் தடையே! நான் புத்திரர்களோடும் பந்துக்களோடும்கூட ஸுகமாக ஜீவித்திருக்கவேண்டும். இந்த வரத்தையும் நான் வேண்டுகிறேன்' என்று சொன்னாள். நகளவர்களால் சிறந்தவீரனே! அந்த முனிவர் ராஜபுத்திரியினுடைய சொல்லைக்கேட்டு, 'அப்படியே ஆகட்டும்' என்று சொன்னர். பிறகு, அந்த அரசன் ஸந்தோஷ

முள்ளவனனன். நன்முக வந்தனம்பண்ணி இரண்டுதினைகளையும் அந்த மஹரிஷிக்குக் கொடுத்துவிட்டான்' என்று கூறினர்.

நூற்றுத்தொண்ணூற்றுமூறுவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர் ஸுகத்தையும் துக்கத்தையும் நிரூபிப்பதான பகழனிவரலாற்றும் இந்திரனுக்கும் நடந்தஸம்வாதத்தைக்கூறியது.)

ரிஷிகளும் பிராம்மணர்களும் யுதிஷ்டிரரும் மார்க்கண்டேயரைப்பார்த்து, 'எந்தக்காரணத்தினல் பகரென்கிற ரிஷியானவர் தீர்க்காயுளுள்ளவரானர்?' என்று கேட்டார்கள். அதற்கு! மஹரிஷியான மார்க்கண்டேயர் அவர்களனைவரையும் பார்த்து, 'பகரிஷியானவர், தீர்க்காயுளுடையவரே. இதில் ஆராய்ச்சி வேண்டாம்' என்று மறுமொழி உரைத்தார். பரதரே! இவ்வசனத்தைக் கேட்டு, குந்தியின் புதல்வரும் கர்மத்தால் பிரகாசிப்பவருமான யுதிஷ்டிரர் பிரதாக்களோடு மார்க்கண்டேயரைப்பார்த்து, 'மஹரிஷியே! பகர் தால்ப்யர் என்ற அந்த இரண்டு ரிஷிகளும் மறுதக்மாக்களென்றும் சிரஞ்ஜீவிகளென்றும் தீர்க்காயுஷ்மானுக்கு பிதாக்களென்றும் உலகத்திலுள்ள ஜனங்களால் புகழ்க்கப்பட்டவர்களென்றும் கேள்விப்படுகிறோம். பகவானே! எவ்வகுக்கத்தினால் தீர்க்கமும், தீர்க்காயுளுமான பகருக்கும் இந்திரனுக்கும் நேர்ந்த இக்கலஹத்தை நான் கேட்கவிரும்புகிறேன்' என்று வினவினர்.

மார்க்கண்டேயர், 'அரசனே! மனிதலோகத்தில் உண்டுபண்ணுகிற தீர்க்காயுஷ்மாக்கு முறைக்கூறுகிறேன், இந்திரன் முதலிய தேவர்களுக்கும் அதிபதியானவன். சமஸ்த ஜகத்துக்களின், ஜனங்களின் கர்மபலன்களை நியமனம்செய்கிறவன். மனிதர்களின் விபரீதபுத்திகளாகவும், கல்ல தூரத்தில் நிலைபெற்றவர்களாகவும், தூரத்தில் நிலைபெற்றவர்களாகவும் இருக்கிறார்கள். ஜனங்களெல்லாம் ஸுக துக்காதிகளையடைகிறார்கள். எல்லாகாலங்களிலும் நிலைபெற்றவர்களாகவும் இருக்கிறார்கள். பிறகு, பலஸ்தானமென்றவனான இந்திரன் எல்லா ப்ரஜைகளையும் ஸுகதுக்காதிகளையடைவிக்கவேண்டி கவனித்தான். தேவரே! பிறகு, ஸுகதுக்காதிபனான ரிஷபவாஹனமான இந்திரன், ஸுபலோகத்திலிருந்து மரணிக்கவேண்டி, ஸுகதுக்கத்தை அதிகப்

கிற பிரஜைகளையும், பலவிதமான ஆஸ்ரமங்களையும், மங்களகரமான பலவிதநதிகளையும், செல்வம்நிறைந்தபட்டணங்களையும், கிராமங்களையும், தேசங்களையும், பிரஜைகளைப் பாதுகாப்பதில் ஸமர்த்தர்களும் தர்மத்தை அனுஷ்டிக்கிறவர்களுமான அரசர்களையும், கிணறுகளையும், தண்ணீர்ப்பந்தல்களையும், வாவிகளையும், பலவிதவைதிகாசாரத்துடன் கூடின பிராம்மணர்களாலே அமைக்கப்பட்ட தடாகங்களையும், ஸரஸுகளையும் பார்த்தான். அரசனே! தேவராஜனை இந்திரன் ஐராவதத்தினின்று அழகிய பூமியிலிறங்கி, அநேக மரங்களால் அடர்ந்ததும் அழகியதும் மங்களகரமாயிருப்பதுமான அப்படிப்பட்ட தேசத்தில் அழகியதான நிழற்றிசையில் ஸமுத்ரத்திற்கருகில் அழகியதும் மிருகங்களாலும் பக்ஷிகளாலும் அடையப்பட்டதுமான ஆஸ்ரமத்தையும் அழகிய அந்த ஆஸ்ரமத்தில் பகமஹரிஷியையும் கண்டான். பகரிஷி தேவேந்திரனைப் பார்த்து மனமகிழ்ச்சி மிகுந்தவரானர். பிறகு, பாதார்க்கியத்தையும் ஆஸனத்துக்குரியதையும் கொடுத்துக் கௌரவமாயும் கிழங்குகளாலும் பூஜித்தார்.

பிறகு, ஸுகமாக வீற்றிருப்பவனும் வரங்களைக்கொடுப்பவனும் பலனையழித்தவனும் தேவர்களுக்கு ஈச்வரனுமான இந்திரன் பகரிஷியைப்பார்த்து, 'முனிவரே! தேவரிஷிகளற்றவரே! தேவரீர் பிறந்து லக்ஷிம்வருஷங்கள் சென்றனவிட்டன. பிரம்மணரே! சுரஞ்சிவிகளுக்கு என்ன துக்கம் ஸம்பவிக்கிறது? அதை எனக்குச் சொல்வீராக' என்று னினான், பகர், 'அன்பில்லாத மனிதர்களோடு வசிப்பதும் அற்பபுத்திமான்களை விட்டுப்பிரிவதும் துஷ்டர்களோடு சேர்க்கையும் சிரஞ்சிவிகளுக்குத் துக்கம். இவ்வுலகத்தில் மக்கள்டனிபரின் மரணமும் உறவினர் கண்பார்க்கமையுமே பிறருக்கு வசப்படியிருக்கும் துக்கம். அவற்றைக்காட்டிலும் அதிகதுக்கம் என்ன இருக்கிறது? பராதீனமற்ற மனிதன் பிறரால் மிக அவமதிக்கப்படுகிறான். உடம்புகளில் இதைவிட வேறென்றும் அதிகதுக்கமென்றுமுள்ளது? தேவேந்திரனே! சிரஞ்சிவிகள் இழிகுலத்தார்களுடைய குலத்தில் (பிறைகளுடைய) அபிவிருத்தியையும் உயர்குலத்தார்களுடைய குலத்தில் காசத்தையும் (மரணமில்லாமை முதலியதையும்) சேர்க்கையையும் பிரிவையும் பார்க்கிறார்கள். தேவேந்திரனே! தாயபாகங்களில் செய்தவரே! குலத்தால் இழிந்தவர்களுடனும் செல்வத்தால் மேன்மை உயர்ந்தவர்களுடனிருப்பவர்களுக்கு எப்படி குலத்தால் உயர்வு

ஏற்படுகிறதென்னும் இது உனக்கு நேரில் தெரிந்ததே. தேவர்களும் தானவர்களும் கந்தர்வர்களும் மனிதர்களும் உரகர்களும் ராக்ஷஸர்களும் மாறுதலை அடைகிறார்கள். அதைவிட அதிகதுக்கமென்ன இருந்கிறது? நல்லகுலத்தில் பிறந்தவர்கள் இழிகுலத்தில் பிறந்தவர்களுக்கு வசப்பட்டு அவர்களைப்பின்பற்றித் துன்புறுத்தப்படுகிறார்கள். தனிகர்களால் தரித்திரர்கள் அவமதிக்கப்படுகிறார்கள். அதைவிட அதிகதுக்கம் என்ன இருக்கிறது? உலகத்தில் இந்த மாறுதலானது மிக விஸ்தாரமாகக் காணப்படுகிறது. ஞானமில்லாதவர்கள் ஐச்வர்யஷிக்கிறார்கள். கற்றறிந்த மேதாவிகள் கிலேசத்தை அனுபவிக்கிறார்கள். இவ்வுலகத்தில் மானிடப்பிறவியானது பல துக்கங்களோடும் கிலேசங்களோடும் கூடியதாகக் காணப்படுகிறது' என்று கூறினர்.

இந்திரன், 'மகாபாக்யமுள்ளவரே! தேவர்ஷிகளுடைய கூட்டங்களால் அடையப்பட்டவரே! பிரம்மணரே! சிரஞ்ஜீவிகளுக்கு எது ஸுகம்? மற்றபடியுமே அதனை எனக்குச்சொல்வீராக' என்று வினவ, பகர், 'எவன் துஷ்டர்களான மித்ரர்களை அடையாமல் தன் வீட்டில் பகலின் எட்டாவது பாகத்திலாவது பன்னிரண்டாவது பாகத்திலாவது நிசையைமட்டுமாயினும் சமைத்துப் புஜிக்கிறானோ அவனுக்கு அதைவிட அதிக ஸுகம் என்ன இருக்கிறது? இந்திரனே! எந்தமனிதன் விஷயத்தில் காட்கள் எண்ணப்படுகிறதில்லையோ எவனைப் பிரதிநிதிக்காரனென்று சொல்லுகிறதில்லையோ, தன் வீட்டில் நிசையைபாவது பக்குவம் செய்து புஜிக்கிறவனுக்கே ஸுகம். சேவை ஒருவனை அதிக்காமல் தன் திறமைபோலே வைத்துக்கொள்ளப்பட்ட பதிவ்ரதையாவது நிசையைபாவது தன் வீட்டில் சென்னமலத்துடன் புசிப்பது மிகச்சிறந்தது. அபலாஜனமடைய வீட்டில் புசிப்பவனும் நித்யம் பிறரால் அபரதிக்கப்பட்டவனுமான மனிதனுக்கு அதாபமான து சிறந்ததாக இருந்தாலும் மேன்மையுள்ளதாகாது. ஆதலால், எந்தமனிதன் தாய்தேபால்மேபரானசகோதரனைப்போலே பிறருடைய அன்னத்தைப் புஜிக்கவிரும்புகிறானோ, அப்படிப்பட்டவனுடைய அந்தப்போஜனமானது நிந்திக்கத்தக்கதன்றும் இது பெரியோர்களுடைய எண்ணம். எந்தப்பாபமதிவ்ரதைக்காரன் அதிதிகளுக்கும் சேவகர்களுக்கும் பித்ருக்களுக்கும் தெய்வத்துக்கும் கொடுத்து மிகுந்த அன்னங்களைப் புஜிக்கிறானோ அவனுக்கு அதைக்காட்டிலும் சிறந்த ஸுகம் என்ன இருக்கிறது? மதிவாக்யரே! எவன் அதிதிகளுக்குத் தினக்ரமமும் அன்ன

மிட்டு அந்தமிச்சத்தையே புஜிக்கிறுமே அவனுக்கு அந்த ஆகா ரத்தைக்காட்டிலும் மிக்க ருசியுள்ளதும் பரிசுத்தியுள்ளதும் வேறென்றுமில்லை. (அதிதியான) பிராம்மணன் எந்நேர சோற் றுருண்டைகளைச் சாப்பிடுகிறுமே அந்நேர ஆயிரம் பசுக்களைத் தானம் செய்த பலனை அன்னதாதா அடைகிறான். (அவனால்) யௌவன காலத்தில் செய்யப்பட்ட பாவமனைத்தும் நிச்சயமாக நாசம் அடைகிறது. போஜனம் செய்து தக்ஷிணை பெற்றுக் கொண்ட பிராம்மணனுடைய கையிலுள்ள தீர்த்தத்தால் அன்ன மிட்டவன் தன்னைப் புரோக்ஷித்துக்கொண்டால் அவன் ஒரு கோடியினுள் அப்படிப்பட்ட பாவங்களைத் தான்றுகிறான்' என் றார். தேவேந்திரன் பகதோடுகூட இந்தக் கதைகளையும் மற்ற காமான மற்றும் பல கதைகளையும் பேசிக்கொண்டிருந்துவிட்டு அவரிடம் விடைபெற்றுக்கொண்டு ஸ்வர்க்கலோகம் சென்றான்' என்று கூறினர்.

நூற்றுத்தொண்ணூற்றேழாவது அத்யாயம்.

மார்க்கண்டேய ஸமாஸ்யா பர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர் இந்திரியனுடைய மகிமையை வெளிப் படுத்துகிற சிபியினுடைய சரித்திரத்தைக் கூறியது.)

பிறகு, பாண்டவர்கள் மீண்டும் மார்க்கண்டேயரைப் பார்த்து, 'உம்மால் பிராம்மண மகிமை கூறப்பட்டது. அரசர்களுடைய மகிமையை இப்பொழுது நாங்கள் கேட்க விரும்புகிறோம்' என்று வினவினார்கள். மார்க்கண்டேயர் அவர்களைப்பார்த்து, 'இப்பொழுது அரசர்களுடைய மகிமையைக் கேளுங்கள். குருவம்சத்தவர்களுள் ஒருவனான வைதூர்ய திரனென்கிற அரசன் மகரிஷிகளிடம் சென்று, தேர்பிலைந்தில், மகரிஷிகளுக்குப் உசனரீகரதிபதியான சிபி சரஜ்ஞன் கண்டான். அப்பொழுது இருவரும் ரதங்களில் ஒருவரோடொருவர் எதிர்த்து வருவதின் சமத்தை அனுபவித்துப் பார்ப்பதற்காக, ருஷிகள் ஸமமாக இருப்பதால் இருவரும் ஒருவரோடொருவர் ஸமமான நிலைமையுடையவர்களென்றறிந்து, ஒருவருக்கொருவர் விலகி வழி விடவில்லை. அப்பொழுது நாரதர் சொல்லினார். 'இருவர்களா! நீங்களிருவரும் ஒருவர் மற்றொருவருடைய வழியைத் தடுத்துக்

கொண்டிருக்கிறீர்களே' என்று கேட்டார். அவ்விருவரும் நாரதரைப் பார்த்து, 'பகவானே! (விழிவிடுவதென்னும்) இது கூடாது. கர்மாக்களைச் செய்கிறவர்களும் அனுமதிகொடுப்பவர்களும் சொல்லுகிறவர்களுமான முன்னோர்களால் மேலானவனுக்கும் ஸமர்த்தனுக்கும் விழிவிடவேண்டுமென்று உபதேசிக்கப்படுகிறது. நாங்களிருவரும் ஒருவரோடொருவர் 1 நட்பை அடைந்திருக்கிறோம். அதை ஆலோசித்தால் எங்களிருவருக்கும் எற்றத்தாழ்வு இல்லை' என்று சொன்னார்கள்.

இவ்வாறு சொல்லக் கேட்ட நாரதர் மூன்று சுலோகங்களைப் பின்வருமாறு கூறினார். (அவற்றின் பொருள்,) 'குருவம்சத்தில் பிறந்தவனே! சொற்சன்மையுள்ளவன் பிறன்மைத்தன்மையுள்ளவனிடத்திலும் கொடுமையாகவே நடந்துகொள்ளுகிறான். மென்மைத்தன்மையுள்ளவன் கொடியவனிடத்திலும் மென்மையாகவே நடந்துகொள்ளுகிறான். கௌரவ! போக்யன் அபோக்யனிடத்திலும் போக்யமாகவே நடந்துகொள்ளுகிறான். அவ்வாறிருக்க, போக்யன் அபோக்யனிடத்தில் எப்படி போக்யமாக நடவாமற்போவான்? போக்யனானவன் தனக்குப் பிறர்செய்த உபகாரத்தை நாறுமடங்காகக் கருதுவான். 2 இந்த விஷயத்தில் பிதவர்களுள்ளும் நிர்ணயம் உண்டாகவில்லை. உன்னதசாதியான சிபியானவன், உன்னைக்காட்டிலும் நல்லொழுக்கமுள்ளவன். உசீநரபிரானைத் தானத்தால் ஜயிக்கவேண்டும். பொய்சொல்பவனை, மெய்யால் ஜயிக்கவேண்டும். கொடுஞ்செய்கையுடையவனைப் பொறுமையினால் ஜயிக்கவேண்டும். அசீபாக்யனை போக்யத்தன்மையினால் ஜயிக்கவேண்டும்' (என்பது.) ஆகலால், நீங்களிருவருமே மேலானவர்கள். இந்த ப்ரஹ்மசாரிக்குத் திருஷ்டாந்தமாக உங்களில் ஒருவன் விளக்கவேண்டும்' என்று சொல்லிவிட்டு, நாரதர் போய்விட்டார். இதைக்கேட்டு ஸுஹோத்ரன், சிபியைப் பிரகாசிணம்செய்து அவனுக்கு விடைகொடுத்து பலசெய்கைகளாலே அவனோடுகூடிக்கொண்டு தன்னகரம் சென்றான். நாரதர் அப்படிப்பட்ட இந்த அரசனுடைய மகிமையையும் கூறினார்.

---

1 'ஸக்யம்' என்பது மூலம்; 'ஒப்புமைமை' என்பதை இடைவிடாத் தொடர்பு.

2 'இது விஷயத்தில் பிதவர்களுள்ளும் ப்ரமாணமென்கிறது' என்று விரைவாக்குவது இடைவிடாத் தொடர்பு.

ஏசுஉ

ஸ்ரீ மஹாபாரதம்.

நூற்றுத்தொண்ணூற்றெட்டாவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர், யயாதி பிராம்மணனுக்குக் கோதானம் செய்த கதையைக் கூறியது.)

இந்த வேறொரு கதையையும் நீங்கள் கேளுங்கள். நகுஷனுடைய புத்திரனான யயாதிமஹாராஜன் ராஜ்யத்திலிருக்கும் போது, (ஒருஸமயம்) பட்டணத்துஜனங்களால் சூழப்பட்டவனாகவீற்றிருந்தான். ஒருபிராம்மணன் குருதக்ஷிணையைவேண்டி யயாதியிடம் வந்து, 'அரசனே! ஓர் உடன்பாட்டை முன்னிட்டுக் குருதக்ஷிணையை உத்தேசித்து நான் உன்னை யாசிக்க வந்திருக்கிறேன்' என்று சொன்னான். அரசன், 'பிராம்மணரே! பகவானைத்தேவரீர் உடன்பாடு என்னவென்று கூறுவீராக' என்று வினவ, பிராம்மணன், 'அரசனே! ஜீவலோகத்தில் யாசிக்கப்படுகிறமனிதன் யாசிப்பவனிடத்தில் அதிகப்பகையைச் செய்வான். அரசனே! நான் அப்படிப்பட்ட உன்னை எவ்வாறு கேட்பேன்? இப்போது, எனக்கு நீ அன்புடனே கொடுப்பாயாகில் பெற்றுக்கொள்வேன்' என்று கூறினான். அரசன், 'தானம் பெறுதற்குத் தகுந்தவரே! நான் கொடுத்துவிட்டுக் கொடுத்ததாகச் சொல்லேன். யாசிக்கத்தகாத பொருளைக் கேட்டால் ஒருகாலும் கொடுப்பதாகப் பிரதிஜ்ஞைசெய்யமாட்டேன். (யாசகர்களால்) அடையத்தக்க பொருளைக் கொடுப்பதாகப் பிரதிஜ்ஞைசெய்தும் அதைக்கொடுத்தும் நல்ல லோகமுள்ளவனாகிறேன். உமக்கு நான் ஆயிரம் பசுக்களைக் கொடுக்கிறேன். யாசிக்கிற பிராம்மணன் என்னுடைய அன்புக்குரியவனன்றோ? யாசிக்கிறவனிடத்தில் என்மனம் கோபிக்கிறதில்லை; கொடுக்கப்பட்ட பொருளைப்பற்றி ஒருபோழுதும் நான் துக்கிக்கிறதில்லை' என்று இவ்வாறு கூறிவிட்டு, அரசன் பிராம்மணனுக்கு ஆயிரம் பசுக்களைக் கொடுத்தான். பிராம்மணன் ஆயிரம் பசுக்களைப் பெற்றுக்கொண்டான்' என்று கூறினர்.

———

நூற்றுத்தொண்ணூற்றொன்பதாவது அத்யாயம்.

மார்க்கண்டேய ஸமாஸ்யா பர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர், லோதுகன் விருஷதர்ப்பன் ஆகிய இருவருடைய சரித்திரத்தையும் கூறியது.)

யுதிஷ்டிரர், 'மறுபடியுமே, க்ஷத்திரியர்களுடைய மகிமையைச் சொல்லக்கடவீர்' என்று வினவினர். பிறகு, மார்க்கண்டேயர், 'மஹாராஜனே! விருஷதர்ப்பன் லோதுகன் என்ற பெயருள்ள இரண்டு அரசர்களும், நீதிமார்க்கத்தில் பற்றுதலுள்ளவர்களாகவும் அஸ்திரங்களிலும் சஸ்திரங்களிலும் ஸமர்த்தர்களாகவும் இருந்தார்கள். விருஷதர்ப்பன் சிறுவனாயிருக்கும்பொழுதே, 'பிராம்மணர்களுக்குப் பொன்னையும் வெள்ளியையும் தவிர மற்றப்பொருள்கள் கொடுக்கத்தக்கனவல்ல' என்று வைத்துக்கொண்டிருந்த ரகஸ்யமான விரதத்தை லோதுகன் அறிந்தான். பிறகு, அந்த லோதுகன் வேதாத்யயனத்தால் நிறைந்த ஒரு பிராம்மணன் அடைந்து ஆசீர்வாதம்செய்து குருதக்ஷிணையைக்கருதி, 'நீ எனக்கு ஆயிரம்குதிரைகளைக்கொடு' என்று யாசித்தான். லோதுகன் அந்தப்ராம்மணனைப் பார்த்து, 'நீ வேண்டுகிற குருதக்ஷிணையைக் கொடுப்பதற்கு இங்கு ஸாத்தியப்படாது. அப்படிப்பட்ட நீ விருஷதர்ப்பனிடம் போ. அந்த அரசன் நிகரற்றதர்மங்களை அறிந்தவன். பிராம்மண! அவனை யாசகம்செய். அவன் உனக்குக் கொடுப்பான். இது அவனுக்கு ரஹஸ்யமான விரதம்' என்று சொன்னான். பிறகு, பிராம்மணன் விருஷதர்ப்பனிடம்போய் ஆயிரம் குதிரைகளை வேண்டினான். அந்த அரசன் அவனைக் குடாவினல் அடக்கினான். அவனைப்பார்த்து, பிராம்மணன், 'நரபதியான என்னை ஏன் அடக்கினாய்?' என்று வினவினான். இவ்விதச்சொல்லுடன் சாபங்கொடுக்க எண்ணாங்கொண்ட அந்தப் பிராம்மணனைப்பார்த்து, அரசன், 'பிராம்மண! காரணமெதுக்குக் கொள்ளவேண்டும்? பொருளை உனக்குக் கொடாதவனுக்கு நீ சாபங் கொடுப்பது குருதியா? அல்லது, பிராம்மணனுக்குக் கொடுக்கத்தக்கபொருளைக் கொடுக்கவிரும்பாதவனுக்கு நீ சாபங்கொடுப்பது குருதியா?' என்று வினவினான். பிராம்மணன், 'ராஜாதிராஜனே! லோதுகனால் அனுப்பப்பட்டு யாசிப்பதற்கு உன்னிடம் வந்தேன். அந்தலோதுகனால் சொல்லியபடியினால் நான்

உன்னை யாசித்தேன்' என்று சொன்னான். அரசன், 'பிராம்மண! எனக்கு இன்று முற்பகலில் வருகிறவரிப்பணத்தை உனக்குக் கொடுப்பேன். குறடாவினால் அடிக்கப்பட்டவனை எவ்வாறு பயன்தராமல் விலக்குவேன்?' என்றான். இவ்வாறு சொல்லிவிட்டு, பிராம்மணனுக்கு அந்தப்பகலில் வந்த தனம் முழுவதையும் கொடுத்தான். ஆயிரத்துக்கதிகமான குதிரைகளுக்குள்ளானிலை யையே கொடுத்தான்.

இருநூறுவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர், சிபி கழுகினிடமிருந்து புறாவைக்காப் பாற்றிய கதையைக் கூறியது.)

தேவர்களுள், 'பூமியிற்சென்று உன்னதிகசாந்தியான சிபிச்சக்கரவர்த்தியைப்பற்றி நன்றாக அறியவிரும்புகிறோம்' என் கிறபேச்சு நடந்தது. அக்னியும் இந்திரனும், 'தேவர்களே! அப்படி யே ஆகட்டும்' என்று சொல்லிவிட்டு (சிபியினிடம்) வந்தார்கள். அக்கியானவன் புறாவடிவத்துடன் சிபிக்கருகில் ஓடிவந்தான். இந் திரன் கழுகுவடிவத்தோடு புறாவின் மாம்ஸத்தின் பொருட்டு அப் புறாப் பின்தொடர்ந்தான். பிறகு, புறாவானது சிபியினிடமாஸ னத்தில் வீற்றிருக்கின்ற அரசனுடைய மடியில் வந்து விழுந்தது. பிறகு, புரோஹிதர், அரசனைப்பார்த்து, 'உயிரை விரும்பின புற வானது, கழுகினிடம் பயந்து பிராணரக்ஷணைப்பார்த்துக்கொ உன்னைச் சரணமடைகிறது. கடல் சூழ்ந்த பூமியை ஆளுகின்ற அரசன் இதற்குப் பிரதிபக்ஷம் செய்யுங்கள்; பொருளைத் தானம் செய்யுங்கள். புறாவின்னுயிரைக் காப்பதற்கு அறிகுறியென்று சொல்லுகிறார்கள்' என்று சொன்னார். பிறகு, புறா, அரசனைப்பார்த்து, 'உயிரையிரும்புகிற கான் கழுகினிடம் பயந்து பிராணரக்ஷணைப்பதற்காக உன்னைச் சரணமடைகிறேன். புனிதனான கான் என் அங்கங்களிலே புறாவுடைய அங்கங்களில் பிரவேசித்துப் புறாவாகி வந்தது[1] உயிரான உன்னை உயிரை விரும்பிச் சரணமடைகிறேன். என்னை நீ

[1] தனது உயிரைக்காப்பவனைத்தலால் அவனைத் தனது உயிரென்றது.

வேதாத்யயனத்தினால் ப்ராமணனடைந்தவனும் தவத்தோடும் அடக்கத்தோடும்கூடியவனும் ஆசாரியனை எதிர்த்துப்போகாதவனுமான பிரம்மசாரியென்று அறிந்துகொள். இவ்விதமான ஸ்வபாவத்துடன் கூடினனென்னைப் பாபமில்லாதவனாக அறி. வேதங்களைச் சொல்லுகிறேன். சாஸ்திரங்களை (புத்தியினால்) ஆராய்ந்துகாண்டிருக்கிறேன். எல்லாவேதங்களும் என்னால் அக்ஷரம் அக்ஷரமாக அத்தியயனம் செய்யப்பட்டிருக்கின்றன. கழுகின்போருட்டு ப்ரோதகியனை என்னைக்கொல்லுவது கல்ல தானமன்று. கழுகுக்கு என்னைக் கொடாதே. நான் புறாவல்லேன்' என்று சொல்லினான். பிறகு, கழுகு, அரசனைப்பார்த்து, 'பிராணிகள் பலவகைப்பிறவிகளில் மாறிமாறிப் பிறக்கின்றன. முற்பிறப்பில் இந்தப் புறாவினிடத்தினின்று நீ பிறந்தாய். அரசனே! ஆதலால், நீ இந்தப் புறாவைப் பாதுகாக்க வேண்டி என் ஆஹாரத்தில் இடையூறு செய்பவனாகாதே' என்று சொல்லியது. அரசன், 'பக்ஷியினாலே சொல்லப்படுகின்றதும் தர்மத்தையடைந்ததும் சிறந்ததுமான இப்படிப்பட்ட வாக்கானது எந்தவிதங்களால் எப்போழுது காணப்பட்டிருக்கிறது? புறா விதுத்துச்சொல்லுகிற வசனமும் கழுகு எதுத்துச்சொல்லுகிற வசனமும் ஆகிய இரண்டையும் அறிந்து எப்படிச் செய்தால் கல்லது செய்ததாகும்? என்னை, பயந்து சரணமடைந்த பிராணியைப் பகைவனிடத்தில் கொடுக்கிறவனை அவன் ஸமயம் வந்தபோது நன்கு பாதுகாவலில் இருத்தியும் அதனை அடைய பட்டான். அவனுடைய ராஜ்யத்தில் பர்ஜன்யத்தில் மழை பொழியாது. அவனுடைய ராஜ்யத்தில் காலத்தில் விதைக்கப் பட்டவித்துக்களும் முளையா. என்னை, பயந்து சரணமடைந்தவனைப் பகைவனிடம் கொடுக்கிறவனை அவனுக்குப் பிறந்த குழந்தைகள் சிசுவாயிருக்கையிலே மரிக்கின்றன. அவனுடைய பித்ருக்கள் எப்போழுதும் அவனிடம் வசிக்கமாட்டார்கள். தேவர்களும் அவனுடைய ஹவிஸ்ஸுகளை வாங்கிக்கொள்ளுகிறதில்லை. என்னை, பயந்து சரணமடைந்தவனைத் தந்நகரத்தில் கொடுக்கிறவனை உதாரகுணமில்லாத அந்த மனிதன் அன்னத்தை விரைவில் அடைகிறான். கல்லை கர்மங்களால் அடைக்கவல்லதை அடைந்திருந்தாலும், அந்த ஸ்வர்க்கத்தினின்று விரைவாகவே கழுவிவிழுகிறான். இந்திரனோடுகூடின தேவர்கள் அவனை ஸ்ரேஷ்டத்தால் அடிக்கிறார்கள். கழுகே! எந்த இடத்தில் நீ மிகமகிழ்ந்து வஸிக்கிறாயோ அந்த இடத்திற்கு இந்தச் சிபிதேசத்தவர்கள் காலமாட்டைச்

சமைத்து அன்னத்தோடு அந்த மாம்ஸத்தை இந்தப்புறுவுக்குப் பிரதியாக உனக்குக் கொணர்ந்துகொடுக்கக்கடவர்' என்று சொன்னன். கழுகு, 'அரசனே! காளைகளையும் நான் வேண்டவில்லை; இந்தப்புறுவைக்காட்டிலும் வேறு ஒன்றையும் நான் விரும்பவில்லை. புறுவின் மாம்ஸத்தைவிட அதிகமாம்ஸத்தையும் நான் விரும்பவில்லை. அப்படிப்பட்ட இந்த ஆஹாரமானது எனக்கு இப்பொழுது தேவர்களால் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இது தனது உயிரை இழப்பதனல் எனக்கு ஆஹாரமாகிறது. ஆகலால், எனக்குக் கொடுத்துவிடு' என்று சொல்லியது. அரசன், 'பயத்தால் பற்றப்பட்ட புறுவுக்குப்பிரதியாக என்னிடமிருந்து என்னுடைய வேலைக்காரர்களே காளையையும் சினையழிந்த பசுவையும் குறைவின்றி உனக்கு ஆஹாரமாகக் கொண்டுபோகட்டும். [1] நீ இந்தப் புறுவைத் துன்பம்செய்யாதே. கழுகே! நான் உயிரை இழப்பேன்; புறுவைக் கொடுக்கவேமாட்டேன். இது காக்கப் படத்தக்கதன்றோ? கழுகே! என் நீ அறிந்துகொள்ளவில்லை? காட்சிக்கினியவனே! இந்த விஷயத்தில் நீ கிலேசப்படாதே. நான் எவ்விதத்தாலும் புறுவைக்கொடுக்கமாட்டேன். கழுகே! எப்படி (என்வம்சத்தவர்களான) சிபிகள் என்செய்கையினல் மகிழ்ந்து என்னை நல்ல வசனங்களால் புகழ்வார்களோ, எப்படி பிரியத்தையே நான் செய்வேனே அப்படி கட்டளையிடுவாயாக. என்னை நோக்கி எதைச்சொல்லுகிறையோ அதைச் செய்கிறேன்' என்று சொல்லினன். கழுகானது, 'அரசனே! உனது வலத்தொடையிலிருந்து மாம்ஸத்தை அறுத்து எவ்வளவு மாம்ஸம் புறுவின் நிறைக்குச் சமமாயிருக்குமோ அவ்வளவைக்கொடு. அப்படிச்செய்வதனல் புறுவானது உன்னல் நன்கு பாதுகாக்கப்பட்டதாகிறது. சிபிகளும் உன்னைப் புகழ்வார்கள்; எனக்கும் பிரியம் செய்யப்பட்டதாகும்' என்று சொல்லியது. பிறகு, அவன் வலத்தொடையிலிருந்து தன்னுடைய மாம்ஸத்துண்டை அறுத்துப் புறுவோடு தராசில் தூக்கினன். புறுவானது, மாம்ஸத்தைவிட அதிகக்கனமுள்ளதாகவே இருந்தது. மறுபடியும் மற்றொருதொடையிலிருந்தும் மாம்ஸத்தை அறுத்து நிறுத்தான். அப்பொழுதும் புறுவானது அதிகனமுள்ளதாகவேயிருந்தது. இவ்வண்ணம் தன் சரீரமுழுவதையும் நன்றாக அறுத்து அந்த மாம்ஸத்தைத் தராசில் வைத்து நிறுத்தான். அப்படி எல்லாமாம்ஸத்தையும் வைத்துங்கூடப் புறு மிக்க

1 பொருந்தாமையால் ஒரு சொல் விடப்பட்டது.

கனமுள்ளதாகவே இருந்தது. பிறகு, அரசன் தானே தாசில் ஏறினான். அது அரசனுக்கு அப்பிரியமாகவில்லை. கழுகு, அரசனுடைய இந்தச்செய்கையைப் பார்த்து, 'புறு பாதுகாக்கப்பட்டது' என்று சொல்லிப் பறந்துபோய்விட்டது.

பிறகு, அரசன் புறுவைப்பார்த்து, 'புறுவே! சிபிகள் உன்னைப் புறு என்று அறிவார்கள். பக்ஷியே! உன்னை நான் கேட்கிறேன். கழுகு யார்? ஈச்வரனல்லாதவன் ஒருகாலும் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யமாட்டான். பகவானே! என்னுடைய இந்த வினவுக்கு மறுமொழி உரைப்பாயாக' என்று சொல்ல, புறு, 'நான் புகையைக்கொடியாகக்கொண்டவனும் ஜ்வலிக்கிற ஸ்வபாவமுள்ளவனுமான அக்னி. இந்தக்கழுகானது வஜ்ரபாணியாகிய இந்திரன். ஸுரஸையினுடைய புதல்வனே! எங்களிருவரையும் சிறப்புடையவனென உன்னை நன்கு அறியும் விருப்பத்துடன் உன்னருகில் வந்தவர்களென்று அறி. அரசனே! நீ எனக்குப் பிரதியாக இந்த மாம்ஸத்தைக் கத்தியினல் அறுத்துக் கொடுத்தாயாதலால் இந்த அறுத்த இடத்தை உங்களுக்கு மங்களகரமானதும் பொன்னிறமுடையதும் அழகியதும் நறுமணமுள்ளதுமான அடையாளமாக ஏற்படுத்துகிறேன். இந்த விலாவினின்று இந்தப் பிரஜைகளை ரக்ஷிப்பவனும் கீர்த்தியுள்ளவனும் தேவரிஷிகளால் நன்கு ஒப்புக்கொள்ளப்பட்டவனுமான ஒரு மனிதன் உண்டாவான். அவனுக்குக் கபோதரோமா என்று பெயர். அரசனே! உனது களர்ந்த சரீரத்திலிருந்து விலாவைப் பிளந்துகொண்டு வெளியில் வரும் கபோதரோமா என்கிற புத்ரனை அடைவாய். அவனை ராஜஸ்ரேஷ்டனுக்குரிய சரீரமுள்ளவனும் கீர்த்தியினல் பிரகாசிப்பவனும் சூரனும் ஸுரஸையின்வம்சத்தவர்களுள் சிறந்தவனுமாகக் காண்பாய்' என்று சொல்லியது' என்றார்.

இருநூற்றோராவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர் நாரதரால் சொல்லப்பட்ட அஷ்டகன் முதலிய அரசர்களுடைய தாரதம்யத்தைக் கூறித் தானமஹிமையைச் சொல்லியது.)

பாண்டுகுமாரரான யுதிஷ்டிரர், 'மீண்டுமே (அரசர்களுடைய) மகிமையைச் சொல்லக்கடவீர்' என்று மார்க்கண்டேயரை

வினவினர். மார்க்கண்டேயர், 'விஸ்வாமித்திரருடைய குமாரனை அஷ்டகனுடைய அஸ்வமேதத்திற்கு எல்லா அரசர்களும் சென்றார்கள். அந்த அஷ்டகனுடையபிராதாக்களான பிரதர்த்தனனும், வஸுமனஸும் உசினரதிதசாதிபதியானசிபியும் சென்றார்கள். அந்த அஷ்டகன் யாகத்தை நிறைவேற்றினபின் பிராதாக்களோடு கூட ரதத்தின்மீதேறிச் சென்றான். அவர்கள் எதிரில் வருகின்ற நாரதரை அபிவாதனம் செய்து, 'தேவரீர் ரதத்தில்வரவேண்டும்' என்று சொன்னார்கள். அவர் அவர்களைப் பார்த்து, 'அப்படியே' என்று சொல்லி ரதத்திலேறினார். பிறகு, அவர்களுள் மூத்தவன் தேவரிஷியான நாரதரைப்பார்த்து, 'பகவானை தேவரீரை ஆருள் வரச்செய்து ஒரு விஷயத்தைத் தேடுகின்றீர்' என்று சொன்னான். அவர் அவனை, 'கேள்' என்று சொன்னார்.

அவன், 'எல்லோரும் தீர்க்காயுளுள்ளவர்கள்; சிறந்த எல்லாக் குணங்களாலும் ஸந்தோஷமடைந்தவர்கள். சிறந்தகாலம் அறுபது விக்கத்தக்க ஸ்வர்க்க ஸ்தானமான நல்லராஜ்யபட்டமும் சென்றுத் தக்கதாயிருந்தால் (நம்முள்) யார் இறங்கவேண்டும்?' என்று கேட்டான். ரிஷியானவர், 'இந்த அஷ்டகன் இறங்கவேண்டும்' என்று சொன்னார். முன்கேட்டவன், 'என்ன காரணம்?' என்று கேட்டான். பிறகு, நாரதர் அவனைப்பார்த்து, 'அஷ்டகனுடைய அரண்மனையில் நான் வளர்ந்தேன். அவன் என்னைத் தெரிவித்து ஏறும்படி செய்து தேரோடு ஸஞ்சரித்தான். பிறகு, தளர்ந்தவர் யாகம் நிறத்துக்குத்தக்கபடி பிரிக்கப்பட்டிருந்த ஆபரணங்களான பசுமாடுகளை நான் பார்த்தேன். நான் அவனைப்பார்த்து, 'இவை யாருடைய பசுக்கள்?' என்று கேட்டேன். அவன், 'இவைகள் என்னால் தானம் செய்யப்பட்டவை' என்று சொல்லிய அதனை லேயே தானே தன்னைப் புகழ்ந்துகொண்டான். (அதனால்) இவன் இறங்கவேண்டும்' என்று சொன்னார்.

பிறகு, முன்கேட்டவன், 'மூவரால் பாதிப் பொல்லுக்கொண்டிருந்தால் இப்போழுது யார் இறங்கவேண்டும்?' என்று கேட்டான். ரிஷியானவர், 'பிரதர்த்தனன் இறங்கவேண்டும்' என்று சொன்னார். கேட்டவன், 'அந்த விஷயத்தில் யாது காரணம்?' என்று கேட்க, நாரதர், 'பிரதர்த்தனனுடைய வீட்டில் நான் வாஸம் செய்திருக்கிறேன். அவன் என்னுடன்கூட ரதத்தால் ஸஞ்சரித்தான். பிறகு இந்தப் பிரதர்த்தனனை ஒரு பிராம்மணன், 'எனக்கு நீ ஒருகுதிரையைக் கொடுக்கவேண்டும்' என்று யாசித்தான். அபகன்

பிராம்மணனை நோக்கி, 'நான் திரும்பிவந்து கொடுப்பேன்' என்று சொன்னான். பிராம்மணன், 'விரைவாகவே கொடுக்கக்கடவாய்' என்று சொன்னான். அவன், 'அப்படியே' என்று சொல்லி வலப் பக்கத்திலுள்ள குதிரையை விரைவாகவே பிராம்மணனுக்குக் கொடுத்தான். பிறகு, மற்றொரு பிராம்மணன் குதிரையை விரும்பி வந்தான். அரசன் பிராம்மணனைப் பார்த்து, 'அப்படியே' என்று சொல்லி இடப்பக்கத்தில் பின்னுள்ள குதிரையை அவனுக்குக் கொடுத்துச் சென்றான். மறுபடியும், வேறொரு பிராம்மணன் குதிரையை விரும்பி அரசனிடம் வந்தான். அரசன் விரைவாக அந்தப் பிராம்மணனுக்கு இடப் பக்கத்திலுள்ள குதிரையை அவிழ்த்துக் கொடுத்துவிட்டுச் சென்றான். பிறகு, திரும்பவும், மற்றொரு பிராம்மணன் குதிரையை விரும்பி வந்தான். அரசன், மிக விரைபவனாகி, 'கொடுப்பேன்' என்று சொல்ல, பிராம்மணன், 'விரைவாகவே எனக்குக் கொடு' என்று சொன்னான். அரசன் அந்தப்பிராம்மணனுக்குக் குதிரையைக் கொடுத்துவிட்டு ரதத்தின் நுகத்தைத் தாமே தாங்கிக்கொண்டு, 'பிராம்மணர்களுக்குத் தகாதது தகாதது என்கிற ஆலோசனை சிறிதும் இல்லை' என்று சொன்னான். கொடுத்து விட்டு அஸ்தமனத்தை அடைகிற இவன் அப்படிப்பட்ட அந்த வசனத்தினால் ரதத்திலிருந்து இறங்கவேண்டும்' என்றார்.

கேட்டவன், பிறகு, 'இருவரால் மட்டும் சொல்லத்தக்கதாக இருந்தால் யார் இறங்கவேண்டும்?' என்று வினவ, சிஷ்டரானவர், 'வஸுமனஸ் இறங்கவேண்டும்' என்று சொன்னார். கேட்டவன், 'யாதுகாரணம்?' என்று வினவ, கார்க்கர், 'நான் உலகங்களில் எல்லாச் சாஸ்திரங்களிலும் வஸுமனஸினிடத்தே விடாது அடைந்திருக்கிறேன். அந்த விடாது பிராப்தமாகிறதனால் எல்லாக் க்ஷத்திரியர்களும் நடந்துகொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரகாரத்தால் நான் அவனை அறிந்திருக்கிறேன். பிராமணர்கள் எல்லாத் க்ஷத்திரியர்களும் சொல்லியபிறகு அவர்களுக்கு வஸுமனஸ் க்ஷத்திரியர்களைக் காண்பித்தான். அந்த

---

1 'மங்கள காரியங்களின் தொடக்கத்தில் மந்திரங்களைச் சொல்லி அக்ஷதைகளை வாரியிறைப்பது. அது தர்மகாரியங்களிலும் மங்கள காரியங்களிலும் யுத்தங்களிலும் ஆரம்பிக்கும்போதும் தொடக்கத்தில் செய்யப்படுவது' என்பது நீலகண்டம்.

2 'காடு மலை கடல்களில் தடைப்படாமல் செல்லும் ரதம்' என்பது பழைய உரை.

ரதத்தை நான் புகழ்ந்தேன். பிறகு, அரசன், 'பகவானுல் ரதம் புகழப்பட்டது. இந்த ரதமானது பகவானுடையதே; பகவானுடையதே' என்று சொன்னன். பிறகு, ஒருகால், நான் மீண்டும் வஸுமனஸை அணுகினேன். மற்றபடியுமே புஷ்பரதத்தால் எனக்குக் காரியம் ஆகவேண்டியிருந்தது. அரசன், 'சிறப்புடையதான இந்தப் புஷ்பரதமானது பகவானுடையது' என்று இவ்வண்ணம் கூறினன். மீண்டுமே வஸுமனஸினுடைய கிருஹத்தில்நடந்த பூன்றுவதான ஸ்வஸ்திவாசனத்தை நான் அடைந்து சிறப்பித்தேன். பிறகு, அரசன் பிராம்மணர்களுக்கு மன்னைக் காண்பித்து, என்னைப்பார்த்து, 'பகவானுல் புஷ்பரதத்தினுடைய ஸ்வஸ்திவாசனங்கள் நன்கு சிறப்பிக்கப்பட்டன' என்று சொன்னன். புஷ்பரதத்தைக் கொடாமல் இந்த மோசவார்த்தை சொல்லியதால் இவன் கீழே இறங்கவேண்டும்' என்று சொன்னர்.

கேட்டவன், பிறகு, 'ஒருவரால் மட்டும் சொல்லத்தக்கதாக இருந்தால் யார் இறங்கவேண்டும்?' என்று வினவ, மீண்டும் நாரதர், 'சிபி சொல்லக்கடவன்; நான் இறங்குவேன்' என்று சொன்னர். கேட்டவன், 'இந்த விஷயத்தில் காரணமென்ன?' என்று வினவ, நாரதர், 'இப்படிப்பட்ட நான் சிபியாகி மூன்றுவனைவிலும். எனென்றால், பிராம்மணனொருவன் அந்தச் சிபியைப்பார்த்து, 'சிபியே! நான் அன்னத்தை விரும்புகிறவனைக் இருக்கிறேன்' என்று சொன்னன். சிபி, பிராம்மணனை நோக்கி, 'என்ன சொல்லுகிறும்? நீர் கட்டளையிடும்' என்றுசொன்னன். பிறகு, பிராம்மணன் அவனை நோக்கி, 'ப்ருஹத்கர்ப்பனென்கிற உன்னுடைய புத்திரனைக் கொல்லவேண்டும்; அப்படிக்கொல்லப்பட்ட இவனை நன்றாகப் பக்குவம் செய்வதுடன் அன்னத்தையும் விரும்பி செய்வாயாக. பிறகு, நான் உன்னால் நியமனத்தை அடைந்து பார்க்கத்தக்கவன்' என்று சொன்னன். பிறகு, அரசன் புத்திரனைக்கொன்று பக்குவம்செய்து முறையிலே விரும்பியன்னமாக ஒரு பாத்திரத்திலவைத்து அனைத்து சுற்றமிருக்கும் பிராம்மணனைத் தேடினன். இந்த அரசன் பிராம்மணனைத் தேடிக்கொண்டிருக்கும்போழுதே அரசனைப்பார்த்து, 'இந்தப் பிராம்மணன் உன் நகரத்தில் தங்கியிருக்கின்றன் உன் அரண்மனையையும் கணசாலையையும் ஆயுதசாலையையும் அந்தப் புரத்தையும் குதிரைச்சாலையையும் பாகசாலையையும் பார்க்கிறன்' என்று சொன்னன். பிறகு, சிபி அப்படியே நிறம்மாறுக

முகத்துடன் நகரத்தில் நுழைந்து அந்தப் பிராம்மணனைப் பார்த்து, 'பகவானே! அன்னம் ஸித்தமாயிருக்கிறது' என்று சொன்னான். பிராம்மணன் ஒன்றும் பேசாமல் ஆச்சர்யத்தால் தலைகுனிந்தவனானான். பிறகு, அரசன், 'பகவானே! புஜிக்கலாம்' என்று பிராம்மணனைத் தயைசெய்யும்படி வேண்டினான். பிராம்மணன் ஒரு முகூர்த்தகாலத்திற்குப் பிறகு, சிபியை நிமிர்ந்து பார்த்து, 'நீயே இதனைப் புஜிப்பாயாக' என்று சொன்னான். அப்பொழுது, சிபி, 'அப்படியே ஆகட்டும்' என்று மனத்தில் அருவருப்பில்லாதவனாய்ப் பிராம்மணனைப் பூஜித்துக் [1] கபாலத்திலிருந்து மாம்ஸத்தை எடுத்துப் புஜிக்கவிரும்பினான். பிறகு, பிராம்மணன் இவனுடைய கையைப் பிடித்துக்கொண்டான். சிபியைப்பார்த்து, 'நீ தேகபத்தை ஜயித்தவனாக இருக்கிறாய். பிராம்மணனுக்காக விடத்தகாதது உனக்கு யாதொன்றுமில்லை' என்று சொன்னான். அவன் படுறாடாக்கிபரவிபான அந்தச் சிபியை கன்கு கொண்டாடியும் சிபத்தான். எதிரில் பார்க்கின்ற அந்தச் சிபியானவன் எதிரில் நிற்பவனும் தேவகுமாரன்போன்ற வனும் கல்ப மாமுனிவனும் அலங்கரிக்கப்பட்டவனுமான புத்திரனைக் கண்டான். பிராம்மணன் அந்தக் காரியம் அனைத்தையும் சிபத்து மறைந்துவிட்டான். உலகங்களைப் படைப்பவரே அந்த பரீக்ஷையைப்பரிசோதிப்பதற்காக அந்த வேஷத்தைத் தரித்துவந்தார். அந்தப் பிராம்மணன் மறைந்தபிறகு, மந்திரிகள் அரசரை நோக்கி, 'எல்லாவிதமாகவும் அரசனான உனக்கு இது இன்னபடி செய்யப்பட்டதுதான்' என்று விண்ணப்பஞ்செய்தார்கள். சிபி, 'இதைக் கான் புகழ்ச்சிக்காகவாவது பிரதிஞ்ஞைக்காகவாவது செய்யவில்லை. லோகத்தை அனுபவிப்பதிலுள்ள ஆசையினாலும் செய்யவில்லை. இந்த வழியாவனது பரிசுத்தமானது அடையப்படுவதாகுது' என்று இன்னபடி இவ்வாறு நினைத்தும் செய்தேனல்லது. லோகத்தைப் பரிபாலனஞ்செய்யும் அனுஷ்டிக்கப்பட்டதென்று செய்தது. ஆகையால், என் புத்தியானது சிறந்த லோகமே பரிபாலிக்கவேண்டுமென்று' என்று சொன்னான். ஆகையால், சிபியினுடைய இந்தச் சிறந்த பரோபகாரத்தைக் கான் உள்ளபடி அறிகிறேன்' என்று சொன்னார்.

1 'கபாலம்' என்பது மூலம்; 'மனுஷ்யனுடைய பாத்ரம்' என்பது பழைமையுரை; 'தலையினுடைய மாம்ஸ பாத்ரத்தை இரக்கி' என்பது இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு.

இருநூற்றிரண்டாவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர், புகழ்ச்சியும் இகழ்ச்சியும் முறையே ஸ்வர்க்க வாஸத்திற்கும் நரகவாஸத்திற்கும் காரணமென்பதைக் காட்டுகிற இந்திரத்யும்னனுடைய உபாக்கியானத்தைக் கூறியது.)

பாண்டவர்கள், மார்க்கண்டேய ரிஷியைப் பார்த்து, 'தேவரீரைக்காட்டிலும் நெடுங்காலம் முந்திப் பிறந்திருக்கிற ஒருவன் உண்டா?' என்று வினவினார்கள். அவர், அந்தப் பாண்டவர்களைப் பார்த்து, 'இந்திரத்யும்னனெனகிற ராஜரிஷி இருக்கிறனல்லவா? புண்யங்கள் குறைந்துபோனவுடன், அந்த இந்திரத்யும்னன், 'என்னுடைய கீர்த்தியானது அழிந்துவிட்டது' என்று சொல்லிக்கொண்டே ஸ்வர்க்கத்திலிருந்து கழுவினன். அவன் என்னை வந்தடைந்தான்; பிறகு, 'நீர் என்னை முந்திப்பார்த்தது நினைவிருக்கிறதா?' என்று வினவினன். நான் அவனைப் பார்த்து, 'பிரம்மத்தியானம் செய்கிறவழியில் நிலைபெற்றிருப்பவர்களும் ஒரு கிராமத்தில் ஓரிரவு வஸிப்பவர்களுமான நாங்கள் காரியங்களைச் செய்வதில் கவலையிருப்பதால் உன்னை அறியவில்லை. சொந்தக்காரியங்களைச் செய்வதுகூட எங்களுக்கு நினைவிருப்பதில்லை. சரித்தை வாட்டுவதால், காரியங்களைச் செய்வதற்கு நாங்கள் தொடங்குவதில்லை' என்று சொன்னேன். இவ்வண்ணம் கூறப்பட்ட ராஜரிஷியாகிற இந்திரத்யும்னன், மீண்டும் என்னை நோக்கி, 'உம்மைக் காட்டிலும் நெடுங்காலத்திற்குமுன் பிறந்தவன் ஒருவனிருக்கிறனோ?' என்று கேட்டான். நான் அவனைப்பார்த்து, 'இமயமலையில் ப்ராவாரகர்ணனென்கிற கோட்டான் இருக்கிறதன்றோ? அது என்னைக்காட்டிலும் நெடுங்காலத்திற்கு முன் பிறந்தது. அது உன்னை அறிந்தாலுமறியலாம். நெடுந்தூரமுள்ள வழியில் இமயமலை இருக்கிறது. அந்த மலையில் அந்தக்கோட்டான் வாஸம் செய்கிறது' என்று மீண்டும் மறுமொழி உரைத்தேன். பிறகு, அந்த இந்திரத்யும்னன் தான் குதிரையாகி அந்தக்கோட்டானிருக்குமிடத்திற்கு என்னைச் சுமந்துகொண்டு போனன். பிறகு, அந்த ராஜரிஷியானவன் அந்தக் கோட்டானைப் பார்த்து, 'என்னை உனக்குத் தெரிகிறதா?' என்று கேட்டான். அந்தக்கோட்

டான் ஒருமுகூர்த்தகாலம் ஆலோசித்து அந்த ராஜரிஷியைப் பார்த்து, 'நான் உன்னை அறியேன்' என்று சொல்லியது. இவ்வாறு சொல்லப்பட்ட ராஜரிஷியான இந்திரத்யும்னன், மீண்டும் அந்த உலூகத்தைப்பார்த்து, 'உன்னைக்காட்டிலும் நெடுங்காலம் முன்பிறந்தவனெருவனிருக்கிறானே?' என்றுவினவினன். இவ்வண்ணமுரைக்கக் கேட்ட அந்த உலூகமானது, அவனைப் பார்த்து, 'இந்திரத்யும்னனென்கிற பெரிய தடாகமிருக்கிறதன்றோ? அந்தத்தடாகத்தில் காளிஞ்சகமென்கிற ஒரு கொக்குவஸிக்கிறதன்றோ? அது நம்மைவிட நெடுங்காலம் முந்திப்பிறந்தது. அதைக் கேட்பாயாக' என்று சொல்லியது. பிறகு, இந்திரத்யும்னன், என்னையும் உலூகத்தையும் தூக்கிக்கொண்டு காளிஞ்சகமென்கிற கொக்கிருக்கும் குளத்தை அடைந்தான். நான் அந்தக் கொக்கைப்பார்த்து, 'நீ இந்த இந்திரத்யும்னராஜனை அறிவாயா?' என்று கேட்டேன். அந்தக் கொக்கானது ஒரு முகூர்த்தகாலம் சிந்தித்து, 'நான் இந்திரத்யும்னனென்கிற அரசனை அறியேன்' என்று சொல்லியது. பிறகு, நாங்கள் அந்தக் கொக்கை, 'உன்னைக்காட்டிலும் நெடுங்காலம் முந்திப்பிறந்த வயதுசென்ற வேறு நபிராணி இருக்கிறதா?' என்று வினவினோம். அந்தக் கொக்கானது, 'இந்த குளத்தில் அகூபாரமென்கிற ஓர் ஆமை வஸிக்கிறதன்றோ? அது என்னைவிட நெடுங்காலம் முந்திப்பிறந்தது. அந்த ஆமையானது இந்த அரசனை எவ்வித்தக்காலாவது அறிந்திருக்கலாம். அந்த அகூபாரத்தைக் கேளுங்கள்' என்று சொல்லியது. பிறகு அந்தக் கொக்கானது அகூபாரமென்கிற அந்த ஆமையைப் பார்த்து, 'நாங்களுடைய மனத்திலுள்ள ஒரு நல்ல விஷயத்தைப்பற்றி உன்னைக் கேட்க விருப்பமுள்ளவராக இருக்கின்றோம். இங்கு வரவேண்டும்' என்று தெரிவித்துக் கொண்டது.

ஆமை அதைக்கேட்டு, அக்குளத்திலின்று மேலே எழும்பி, நாங்கள் இருந்த இடத்தை நோக்கி வந்தது. நாங்கள், குளக்கரையில் வந்திருக்கிற அந்த ஆமையைப்பார்த்து, 'நீ இந்திரத்யும்னனென்கிற அரசனை அறிவாயா?' என்று கேட்டோம். அது ஒரு முகூர்த்தகாலம் ஆலோசித்துக் கண்களில் நீர் ததும்ப மிகவும் மனவருத்தத்துடன் நடுங்கிக்கொண்டும் பிரஜ்ஞையற்றது போலக் கைகளைக் குவித்துக்கொண்டும், 'நான் இவனை என் அறியமாட்டேன்? இவனால் இந்த இடத்தில் முற்காலத்தில் ஆயிரம் தடவை அக்னிசயனங்கள் செய்தபோது யூபஸ்தம்பங்கள் நாட்

டப்பட்டிருக்கின்றன. இந்தக் குளமும், [1] இவனுல் தக்ஷிணையுடன் தீர்த்தகாரை வார்த்துக் கொடுக்கப்பட்ட பசுமாடுகள் துள்ளிக் குதித்து ஓடினதனுல் உண்டுபண்ணப்பட்டது. இந்தக் குளத்திலேயே நான் வாஸம்பண்ணிக்கொண்டிருக்கிறேன்' என்று சொல்லியது. பிறகு, ஆமையினுல்சொல்லப்பட்ட இவை அனைத்தையும் கேட்டு அதன்பின் தேவலோகத்திலிருந்து தேவதூதம் தோன்றியது. இந்திரத்யும்னனைக் குறித்து, 'உனக்கு ஸ்வர்க்கமானது இப்பொழுது அடையத்தக்கதாக இருக்கிறது. உனக்குத் தகுந்த ஸ்தானத்தை அடைவாயாக. நீ சிறந்த கீர்த்தியுள்ளவனுக இருக்கிறாய். நீ கவலையற்றவனுக ஸ்வர்க்கத்திற்குச் செல்வாயாக' என்கிற வாக்குக்களும் கேட்கப்பட்டன.

இந்த விஷயத்தில் ஸ்லோகங்களிருக்கின்றன. (அவற்றின் பொருள்:) 'புண்ய கர்மானுஷ்டானத்தாலுண்டான புகழ்தேவனது ஸ்வர்க்கத்தையும் பூமியையும் தாங்குகிறது. எவ்வளவு காலம்வரையில் அந்தச் சப்தமானது இருக்கிறதோ அவ்வளவு காலம்வரையில் ஸ்வர்க்கத்தில் மனிதன் பூஜிக்கப்படுகிறான். அந்த மனிதனுக்கு அபகீர்த்தியானது ஜனங்களால் கூறப்படுகிறதோ அவன், அந்த அபகீர்த்தியானது எவ்வளவுவரையில் சொல்லப்படுகிறதோ அவ்வளவு காலம் வரையில் அதமலோகங்களில் விழுகிறான். ஆகையால், மனிதன் பூமியில் நல்ல கீர்த்தியுள்ளவனுகவும் தர்மாத்மாவாகவும் இருக்கவேண்டும். மிக்க பாவமான கர்மத்தை விட்டுத் தர்மத்தையே நன்கு பின்பற்றவேண்டும்' என்றது. இவ்வாறுள்ள இந்த வசனத்தைக்கேட்டு அந்த இந்திரத்யும்னனென்னும் அரசன் தேவதூதத்தைப்பார்த்து, 'நான் பிரபுவுடைய கட்டளைகளை இவ்விருவரையும் அவர்களிருப்பிடத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கும் வரையில் நில்' என்று சொன்னன். அவன் வார்த்தைப்ரகாரமாகவே அவனென்கிற உருவத்தையும் இருக்கும்படியான இடத்தில் கொண்டுபோய்ச் சேர்த்து, அந்தத் தேவதூதன் தன்னுடைய புண்யகர்மங்களினல் ஸித்திக்கிருக்கிற தனத்துடன் கூடிய ஸ்தானத்தை அடைந்தான். இவ்விதமாக இரண்டு இருக்கின்றன என்னல் இப்படிப்பட்ட அந்த விஷயம் கேட்டில் அறியப்பட்டது' என்று மார்க்கண்டேயர் பாண்டவர்களுக்குச் சொன்னர். பாண்டவர்கள், அந்தவிஷயத்தைப்பார்த்து, 'ஸ்வர்க்கலோகத்தினின்று

---

1 'தக்ஷிணையாகக் கொடுக்கப்பட்டவை,' என்பது வேறு பாடத்தின் பொருள்.

நழுவின இந்திரத்யும்னனென்கிற அரசனை அவனிருந்த ஸ்வர்க்க ஸ்தானத்தில் சேர்த்த உங்களால் நல்ல காரியம் செய்யப்பட்டது' என்றும் சொன்னார்கள். பிறகு, அந்த மார்க்கண்டேயர், அந்தப் பாண்டவர்களைப்பார்த்து, 'பாண்டவர்களே! தேவகியின் புதல்வ ரான கிருஷ்ணனும் நகரத்தில் முழுகுகின்ற த்ருகன் என்கிற ராஜரிஷியானவன் அந்தக் கஷ்டத்தினின்று நன்கு கரையேற்றப் பட்டு ஸ்வர்க்கத்தை அடைவிக்கப்பட்டான்' என்று கூறினர்.

இருநூற்றமுன்றுவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர் ஸ்வர்க்கத்தை அடைவதற்குக்காரணமான பொதுவான தர்மங்களைக் கூறியது.)

மஹாராஜரே! ராஜரிஷியான அந்தத் தர்மராஜர் அப்பொழுது மகாபாக்கியசாலியான மார்க்கண்டேயரிடமிருந்து இந்திரத் யும்னனுக்குக்கொடுக்கப்பட்ட அந்த ஸ்வர்க்கவாஸத்தைக்கேட்டு மறுபடியும் அந்த மஹரிஷியைப்பார்த்து, 'மஹாமுனிவரே! மனி தன் காப்பாற்றப்பட்ட நிலைமைகளில் தானம் செய்தால் இந்திரலோக த்தை அடையலாம்: இல்வாழ்க்கையிலிருக்கும்பொழுதா? பரிவ்ராஜகனாகும்பொழுதா? எப்பொழுது மனிதன் தானபலத்தை அடையலாகுமென்பதைத் தெளிவாக எனக்குச் சொல்லவேண்டும்' என்று வினவ, மார்க்கண்டேயர், 'யுதிஷ்டிரா! மனிதனுக்கு ஜன்மங்கள் தான்கு; பலனற்ற தானத்தன் பற்றியது. பிரதிபலனில்லாதவையாய பிறப்புப் பலனற்றது. தர்மத்துக்கு விரோதமாய்க்கொண்ட பிறப்புப் பலனற்றது. பிற ருடைய அன்னத்தைத் திருடுவதால் கொண்ட பிறப்புப் பலனற்றது. எவன் (தேவர் முதலியவர்களுக்குக்கொடாமல்) தனந்தனக்கு மாத்ரமே உண்கிறானோ அவனுடைய பிறப்பும் பலனற்றது.[1] எந்தப்பிறப்பில் பசுக்களையும் பிராம்மணர்களையும் காப்பதற்கல்லாமல் பொய்சொல்

1 இதனுடன் ஜ்ஞாநிரூபம். 'ஸ்ருதாபத்ர தஸஸத்டம் ப்ரதீச்டேத்' என்பது மூலம்; சில பிரதிகளிலுள்ளபடி இங்ஙனம் பொருள் செய்வது பழைமையுரை; மேலுள்ள பாடத்தை விட்டுவிட்டு தான்காகக்கூறுவது இக்காலத்து மொழிபெயர்ப்பு.

லப்படுமோ அந்தப் பிறப்பும் பயனற்றது. [1] ஆருடபதிதனிடத்தில் செய்யப்படுகிற தானம் வீண். அரீதியிலுல் தேடப்பட்ட பொருளின் தானமும் வீண். பதிதனிடத்திலும் திருடனை பிராம்மணனிடத்திலும் பொய் சொல்லுவதில் விருப்பமுள்ள ஆசாரியனிடத்திலும் பாபியினிடத்திலும் நன்றிமறந்தவனிடத்திலும் [2] க்ராம யாஜகனிடத்திலும் வேதத்தை விக்ரயம் செய்பவனிடத்திலும் அப்படியே சூத்திரனுக்கு யாகஞ்செய்விப்பவனிடத்திலும் கொடுக்கிற தானம் வீண். (ஒழுக்கமும் வேதாத்யயனமுமில்லாமல் பிறப்பினுல்மட்டும் பிராம்மணனாயிருக்கிற) பிரம்மபந்துவினிடத்திலும் பிரௌடையான பெண்ணை மணந்தவனிடத்திலும் கொடுக்கப்படுகிறது வீண். ஸ்திரீகளுக்கு வசப்பட்டவர்களிடத்திலும் அப்படியே பாம்புபிடிப்பவனிடத்திலும் வேலைக்காரர்களிடத்திலும் கொடுக்கப்படுவது பயனற்றது. இவ்விதமாகப் [3] பதினுறுதானங்கள் வீண். அஜ்ஞானத்தால் சுவரப்பட்டிருக்கிற எந்த மனிதன், பயத்தாலும் அப்படியே தேகபந்தாலும் கொடுப்பதை அவன் அந்த எல்லாத் தானங்களின் பலனையும், எப்பொழுதும் கர்ப்பத்திலிருக்கையிலேயே அநுபவிக்கிறன். வேறு காரணங்களால் பிராம்மணர்களுக்குத் தானத்தைக் கொடுப்பவன் அந்தத் தானபலனை முதுமையில் அநுபவிக்கிறன். அரசனே! ஆகையால், எல்லா நிலைமைகளிலும், எல்லாத் தானங்களும் ஸ்வர்க்கமார்க்கத்தை ஜயிக்கும் விருப்பத்தால் பிராம்மணர்களுக்குக் கொடுக்கத்தக்கவைகள்' என்று சொன்னர்.

யுதிஷ்டிரர், 'நான்குவர்ணத்தார்களான அனைவரிடத்தினின்றும் தானத்தைப் பெறுவதில் நிலைபெற்றிருக்கிற பிராம்மணர்கள் எந்த விசேஷத்தால் (கொடுத்தவர்களைக்) கரையேற்று

---

1 'வாழ்நாள் முழுதும் அநுஷ்டிப்பதாகிய கைத்திகப்ரம்மசர்யம், வானப்ரஸ்தம், ஸந்யாஸம் இவைகளில் நிலைத்திருந்து இல்வாழ்க்கை முதலியவற்றில் விருப்பத்தால் தழுவினவன்' என்பதும், அவனுக்குப் பிராயச்சித்தமில்லையென்பதற்கு ஆதாரமாக ஒரு ஸ்லோகத்தை எடுத்துக் காட்டுவதும் பழையவுரை.

2 கிராமத்திலுள்ள ஸகல ஜாதிக்கும் பொதுவாக யாகமுதலியவற்றைச்செய்பவன்.

3 வீண்தானங்கள் பதினேந்தே ஆகின்றன. 'பொய் ஆசாரியனிடத்திலும் பொய்யனிடத்திலும்' என்று இரண்டாகக்கூறிப் பதினறு ஆக்குவது இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு.

கிறார்கள்? காங்கேயரும் கரையேறுகிறார்கள்?' என்று வினவ, மார்க்கண்டேயர், 'பிராம்மணர்கள் ஜபங்களாலும், மந்திரங்களாலும், ஹோமங்களாலும், வேதாத்தியயனத்தாலும் வேகமயமான ஓட்டத்தைச்சார்ந்து (அதனால் அவர்களையும்) கரையேற்றுகிறார்கள்; காங்கேயரும் கரையேறுகிறார்கள். எவன் பிராம்மணர்களை ஸந்தோஷமடைவிப்பதினால் அவன்திறத்தில் தேவர்கள் ஸந்தோஷமடைகிறார்கள். மனிதன் பிராம்மணர்களுடைய வசனத்தினாலும் ஸ்வாத்தியாயத்தை அடைவான். ப்ரீஷ்மமுதலியவைகளால் விரோதிக்கப்பட்ட தேகத்துடன் நிகரவிடப்பட்டிருப்பவனே மனமகிழ்ச்சி மனிதன் பித்ருக்களையும் தேவர்களையும் பூஜிப்பதனாலும் பிராம்மணர்களை அர்ச்சிப்பதனாலும் அக்ஷயமான புண்ணிய லோகங்களை அடைவான்; ஸந்தேகமில்லை. புண்யமான ஸ்வாத்தியாயத்தை அடைந்து வித்யாவ்ருத்தர்களாகிய பிராம்மணர்களையே தன்னு பூஜித்தவனென்றிட. ப்ராத்தகர்த்தாவால் அதுவரையிலுள்ள ப்ராம்மணர்களையே தன்னுடன் ஸ்நேஹமுடையவர்களாகவும் ஸ்நேஹமில்லாதவர்களாகவும் பரீக்ஷிக்கவேண்டும். ஸ்நேஹமுள்ளவர்களாகவும் ஸ்நேஹமில்லாதவர்களாகவும் பரீக்ஷிக்கப்பட்ட ப்ராம்மணர்களை ப்ராத்தகர்த்தா ஸ்நேஹமுடையவர்களாகவும் ஸ்நேஹமில்லாதவர்களாகவும் பரீக்ஷிக்கவேண்டும். ஸ்நேஹமுள்ளவர்களாகவும் ஸ்நேஹமில்லாதவர்களாகவும் பரீக்ஷிக்கப்பட்ட ப்ராம்மணர்களை ப்ராத்தகர்த்தா ஸ்நேஹமுடையவர்களாகவும் ஸ்நேஹமில்லாதவர்களாகவும் பரீக்ஷிக்கவேண்டும். ஸ்நேஹமுள்ளவர்களாகவும் ஸ்நேஹமில்லாதவர்களாகவும் பரீக்ஷிக்கப்பட்ட ப்ராம்மணர்களை ப்ராத்தகர்த்தா ஸ்நேஹமுடையவர்களாகவும் ஸ்நேஹமில்லாதவர்களாகவும் பரீக்ஷிக்கவேண்டும். ஸ்நேஹமுள்ளவர்களாகவும் ஸ்நேஹமில்லாதவர்களாகவும் பரீக்ஷிக்கப்பட்ட ப்ராம்மணர்களை ப்ராத்தகர்த்தா ஸ்நேஹமுடையவர்களாகவும் ஸ்நேஹமில்லாதவர்களாகவும் பரீக்ஷிக்கவேண்டும். ஸ்நேஹமுள்ளவர்களாகவும் ஸ்நேஹமில்லாதவர்களாகவும் பரீக்ஷிக்கப்பட்ட ப்ராம்மணர்களை ப்ராத்தகர்த்தா ஸ்நேஹமுடையவர்களாகவும் ஸ்நேஹமில்லாதவர்களாகவும் பரீக்ஷிக்கவேண்டும். ஸ்நேஹமுள்ளவர்களாகவும் ஸ்நேஹமில்லாதவர்களாகவும் பரீக்ஷிக்கப்பட்ட ப்ராம்மணர்களை ப்ராத்தகர்த்தா ஸ்நேஹமுடையவர்களாகவும் ஸ்நேஹமில்லாதவர்களாகவும் பரீக்ஷிக்கவேண்டும். ஸ்நேஹமுள்ளவர்களாகவும் ஸ்நேஹமில்லாதவர்களாகவும் பரீக்ஷிக்கப்பட்ட ப்ராம்மணர்களை ப்ராத்தகர்த்தா ஸ்நேஹமுடையவர்களாகவும் ஸ்நேஹமில்லாதவர்களாகவும் பரீக்ஷிக்கவேண்டும். ஸ்நேஹமுள்ளவர்களாகவும் ஸ்நேஹமில்லாதவர்களாகவும் பரீக்ஷிக்கப்பட்ட ப்ராம்மணர்களை ப்ராத்தகர்த்தா ஸ்நேஹமுடையவர்களாகவும் ஸ்நேஹமில்லாதவர்களாகவும் பரீக்ஷிக்கவேண்டும். ஸ்நேஹமுள்ளவர்களாகவும் ஸ்நேஹமில்லாதவர்களாகவும் பரீக்ஷிக்கப்பட்ட ப்ராம்மணர்களை ப்ராத்தகர்த்தா ஸ்நேஹமுடையவர்களாகவும் ஸ்நேஹமில்லாதவர்களாகவும் பரீக்ஷிக்கவேண்டும்.

யும், இருக்க இடத்தையும் கொடுக்கிறார்களோ அவர்கள் யமனை அணுகுகிறதில்லை. ராஜஸ்ரேஷ்டனே! தேவதைகள் அணிந்து கொண்டிருந்த மலர்களைக் களைதல், பிராம்மணன் போஜனம் செய்த எச்சில் இலையை எடுத்துச் சுத்திசெய்தல், கந்தம் புஷ்ப முதலியவைகளால் அலங்கரித்து அவனுக்குப் பணிசெய்தல், தேகத்தைப் பிடித்துவிடுதல் இவைகளுள் ஒவ்வொன்றும் கோதானத்தைக்காட்டிலும் மேற்பட்டதாக இருக்கிறது. [1] காராம்பசுவைத் தானம் செய்வதினால் முக்தியடைகிறான். இதில் ஸந்தேகமில்லை. ஆகையால், அலங்காரம் செய்யப்பட்டிருக்கிற காராம் பசுவை வேதாத்தியயனம் செய்தவனும் தரித்திரனும் க்ருஹஸ்தனும் அக்னிஹோத்திரம் செய்பவனும் புத்திரர்களும் மனைவியுமாகிற பாரமுள்ளவனும் அப்படியே (முன்) உபகாரத்தைச் செய்யாதவனுமான பிராம்மணனுக்குக் கொடுக்கவேண்டும். பாரத! இப்படிப்பட்டவர்களுக்கே பசுவைத் தானம் செய்யவேண்டும். செல்வமுள்ளவர்களிடத்தில் பசுவைத் தானம் செய்யலாகாது. பரதஸ்ரேஷ்டனே! செல்வமுள்ளவர்களிடம் தானம் செய்வதினால் என்ன குணம் உண்டாகும்? ஒரு பசுவை ஒருவனுக்குக் கொடுக்கவேண்டும்; ஒருபொழுதும் பலருக்குக் கொடுக்கலாகாது. அப்படிப் பலருக்குக் கொடுக்கப்பட்ட பசுவானது விக்ரயம் செய்யப்பட்டால் (கொடுத்தவனுடைய) குலத்தின் மூன்று தலைமுறைகளை அழிக்கும். அந்தப் பசுவானது தன்னைத் தானம்செய்தவனையும் வாங்கின பிராம்மணனையும் ஒருகாலும் கரையேற்றாது; கரையேற்றாது; கரையேற்றாது. ஒருவன் மிக்க நாய்மையாய்த் ஒரு பிராம்மணனுக்கு ஒரு ஸுவர்ணத்தைக் கொடுத்தால் அது நூறு ஸுவர்ணங்களும், அழிவற்றதும் ஆகின்றது. ஒருவன் மிக்களிமையுள்ளதும் நூகத்தைச் சுமக்கக்கூடியதுமான எண்டுக்காளையைக் கொடுப்பதினை அவன் ஆபத்துக்களைத் தாண்டுகிறான்; ஸ்வர்க்கலோகத்தையும் அடைகிறான். ஒருவன் கற்றறிந்த பிராம்மணனுக்குப் பூமியைக் கொடுப்பதினை தானம் செய்த அவனை விரும்பப்பட்ட எல்லா அபீஷ்டங்களும் பின்தொடர்கின்றன. வழியில் நடந்து இளைத்த சரீரமுள்ளவர்களும் புழுதிபடிந்தவர்களுமான மனிதர்கள் பூமியில் அன்ன தானத்தைப்பற்றிக் கேட்கிறார்கள்; மனிதர்களும் சொல்லுகிறார்கள். கற்றறிந்த வந்த மனிதன் ப்ரமத்தால் களைத்த அவர்களுக்கே அன்னத்தைப்பற்றிச்

1 'கபிலாயா:' என்பது மூலம்.

சொல்வதேனே அவனும் அன்னதானம் செய்தவனுக்கு ஒப்பானவனாகச் சொல்லப்படுகிறான். இதில் ஸந்தேகமில்லை. ஆகையினால், நீ எல்லாத் தானங்களையும்விட்டு அன்னத்தை மிகக்கொடுப்பாயாக. இவ்வுலகில் விசித்திரமான இப்படிப்பட்ட புண்யபலன் கிடையாது. எவன் சக்திக்குத் தக்கபடி நன்முகப் பக்குவம் செய்யப்பட்ட அன்னத்தைப் பிராம்மணர்களுக்குக் கொடுப்பதேனே அவன் அந்தச் செய்கையினால் பிரம்மதேவருடன் 1 ஸாலோக்யத்தை அடைகிறான். அன்னமே மிகச் சிறந்ததன்றோ? அதைக்காட்டிலும் சிறந்ததில்லை. அன்னமானது பிரம்மமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பிரம்மதேவர் ஸம்வத்ஸரமென்று எண்ணப்பட்டிருக்கிறார். ஸம்வத்ஸரமே அப்படிப்பட்ட யஜ்ஞமென்று கருதப்பட்டது. ஆகையால், ஸ்தாவரங்களாகவும் ஜங்கமங்களாகவுமிருக்கிற எல்லாப் பொருள்களும் பழந்தந்தில் நிலைபெற்றிருக்கின்றன. ஆகையால், எல்லா வஸ்துக்களையும் காட்டிலும் அன்னமானது மிக்க மேன்மைபெற்றதென்று கேள்வி. எவர்களுக்கு மிக்க நீருள்ள தடாகங்களும் வாவிகளும் கிணறுகளும் வீடுகளும் அன்னதானமும் இன்சொல்லும் இருக்கின்றனவோ 2 அவர்கள் யமனுடைய சொல்லைக் காதால் கேட்கமாட்டார்கள். எவன் வருந்திச்சேகரித்த பொருளால் சேர்க்கப்பட்ட தானியத்தை நல்ல ஸ்வபாவமுள்ள பிராம்மணனுக்குக் கொடுக்கிறானோ அவன்விஷயத்தில் பூமியானது தனங்களுடைய காரணத்தால் ஸ்வர்க்கலோகம் (இந்திரலோகம்) மிகமகிழ்ச்சியுள்ளதாகும். அன்னதானம் செய்யப்பட்ட முதல்ஸ்தானம் சொல்லுகிறார்கள். உன்னைப்போன்ற பிரகிருதிகளுக்கும் பிரபுக்களாயிருப்பவர்கள் கொடுப்பவனுக்கும் பின்பற்றிச் சொல்லுகிறார்கள். மூவகைப்பட்ட ஸம்பத்துக்களையும் அடைகிறார்கள்' என்று சொன்னார்.

தம்பியர்களுடன் கூடின யுதிஷ்டிரர் குதாலரைக்குடன், மார்க்கண்டேயரை மார்க்கண்டேயரைப் பார்த்து, மறுபடியுமே, 'மஹர்ஷியே! யார்களால் மார்க்கண்டேயனது அபிவிருத்தியாக்கப்பட்டது? என்ன அபிவிருத்தி? மார்க்கண்டேயர்களுக்கு யார்களாகத் திருக்கிறது? அது எவ்விதமாக இருக்கிறது? மார்க்கண்டேயர்கள் எந்த ப்ரபாவத்தால் அந்த வாழ்நாளைக் கடைக்கிறார்கள்? அதைநான் என்னுக்குச் சொல்லவேண்டும்' என்று வினவ,

---

1 ஸாலோக்யம் வாஸம்; அதாவது ஒரேலோகத்தில் வஸிப்பது.

2 அவற்றைக் கொடுப்பவர்கள் என்பது.

மார்க்கண்டேயர், 'வேந்தே! தார்மிகர்களுள் சிறந்தவனே! எல்லா ரஹஸ்யங்களையும்காட்டிலும் மிக்க ரஹஸ்யமாயிருப்பதும், பரிசுத்தமானதும், ரிஷிகளால் நன்கு துதிக்கப்பட்டதுமான தர்மத்தை உன் வினவுக்கு மறுமொழியாக உனக்கு உரைப்பேன். அரசனே! யமலோகத்திற்கும் மனுஷ்யலோகத்திற்கும் மத்தியிலிருக்கிற வழியானது எண்பத்தாறாயிரம் யோஜனைதூரம் உள்ளது. கோரமாயிருப்பதும் காடாகக் காணப்படுகிறதுமான அவ்வழியானது காற்புறங்களிலும் கண்ணீரில்லாத வெளியாயிருக்கிறது. அந்த வழியில் மரங்களின் நிழல் கிடையாது; தண்ணீருமில்லை; களைப்படைந்தவனும் இளைத்த வனுமான மனிதன் இளைப்பாறத்தக்க விடுதலையில்லை. யமனுடைய கட்டளையைச் செய்கின்ற யமதூதர்களால் புருஷர்களும் ஸ்திரீகளும் அப்படிப்பட்ட பூமியில் உயிருள்ள பற்றலைகளும் அந்தவழியிலே பலாத்காரமாகக் கொண்டுபோகப்படுகிறார்கள். அரசனே! எந்தபாபிகள் குதிரைமுகங்களிட்ட வாகனங்களின் பல விதமான சிறந்தகாரங்களைப் பிரயாசமனாத்துடன் செலுத்தினார்களோ அவர்கள் (அந்த வாகனங்களால்லேயே) அந்த வழியில் செல்லுகிறார்கள்; தூண்டுகோலைத்தரிப்பவர்கள் தூண்டுகோலையே செலுத்துகிறார்கள்; அங்குசதாரணம் செய்பவர்கள் அங்குசதாரணம் செய்துகொண்டே செல்லுகிறார்கள்; அன்னதானம் செய்பவர்கள் அன்னத்தினால் நிரம்பிப்பருத்தவர்களாகச் செல்லுகிறார்கள்; பிறருக்கு அன்னத்தைத் தொடாதவர்கள் பசியினால் துன்பமுற்றவர்களாகச் செல்லுகிறார்கள்; வஸ்திரதானம் செய்பவர்கள் வஸ்திரமில்லாதவர்களாகவும் வஸ்திரம் செலுத்துகிறார்கள்; பாதரக்ஷை கொடுத்தவர்கள் பாதமில்லாதவர்களாகச் செல்லுகிறார்கள்; மனைகளைத் தானம்செய்தவர்கள் மனையில்லாதவர்களாகச் செல்லுகிறார்கள்; வீடுகளைத் தானம்செய்தவர்கள் மரங்களடியில் மிக்கஸ்ரமமாகச் செல்லுகிறார்கள்; தீபத்தைத் தானம் செய்தவர்கள் குருடர்களாகவும் வஸ்திரமில்லாதவர்களாகவும் செல்லுகிறார்கள்; பாதரக்ஷை கொடுத்தவர்கள் பாதங்களில் மிக்கவேதனையுள்ளவர்களாகவும் செல்லுகிறார்கள்; தானியங்களைத் தானம்செய்தவர்கள் வயிற்றுவலியுள்ளவர்களாகவும் செல்லுகிறார்கள்; தானியதானம் செய்பவர்கள் அடிவயிற்றுவலியுள்ளவர்களாகச் செல்லுகிறார்கள்; தானியங்களைத் தானம்செய்தவர்கள் மலச்சிக்கலுள்ளவர்களாகச் செல்லுகிறார்கள்; வீட்டைத் தானம்செய்தவர்கள் மனைகளில் மிக்கஸ்ரமமாகச் செல்லுகிறார்கள்; தீபத்தைத் தானம் செய்தவர்கள் குருடர்களாகவும் மிகவருந்தும் மனமுள்ளவர்களாகவும் செல்லுகிறார்கள்; தீபதானம் செய்தவர்கள் வழியைப் பிரகாசிக்கச்செய்தபடியால் தினந்தோறும் செல்லுகிறார்கள்; சீததானம் செய்தவர்கள் மெல்லப்பாலவும்ளாதலும் விடப்பட்டு ஸுகமாகச் செல்லுகிறார்கள். தூரயாத்ரை உட

வாஸமிருப்பவர்கள் அன்னங்கள் கட்டின விமானங்களால் செல்லுகிறார்கள்; அப்படியே [1] ஆறுகாலருக்கிகாருகரம் உபவாஸமிருப்பவர்கள் மயில்கள் பூட்டின விமானங்களால் செல்லுகிறார்கள்; பாண்டவ! எங்கடமணிகன் ஒருவேளை சாப்பிட்டுக்கொண்டு மூன்று இரவுகளைக் கழிக்கிறானே, இடைவேளைகளில் சாப்பிடுகிறதில்லை யோ அவனுக்கு அழிவற்ற லோகங்கள் என்படுகின்றன. தீர்த்தத்தின் குணங்கள் அத்புதமானவை. பூமிலோகத்தில் செளக்கியத்தை உண்டுபண்ணுகின்றன. அந்தத் தீர்த்தத்தைத் தானம்செய்பவர் கொடுக்கு அங்கே படித்தோதாதவன் என்கிற கதியான நல உண்டுபண்ணப்படுகிறது. அந்தத்தினால் அவர்கள் அமிருதம்போன்ற குளிர்ந்த ஜலத்தைப் பானம் செய்கிறார்கள். யாசிகள் தினங்களைச் செய்கிறவர்களை அவர்களுக்கு (அந்தத்தினால்) சோபனம் குடிப்பதற்கு எடுத்துக்கொடுக்கிறது. பரதஜனே! இன்னமாதிரியாக அந்த தீர்த்தபலம் அறிவுடையோரால் செய்துகொள்ளப்பட்டது: தாதஜ! நீயும் இந்தப்படி ஸாதுக்களைப்போல் நடந்துகொள்ளுவாயாக. நீயும் இந்தப்படி பூஜிப்பாயாக. வழிகடைவதால் தினமும் சரியாக ஸாயங்காலத்தில் வழிகடைவிஜனுக்கு பூஜைபண்ணுகிறவனாயிருப்பவன், 'அன்னதானம் செய்பவன் யார்?' என்று நீ கேட்கிறாய்; அவன் ஆகசபுடன் விட்டுக்கு வருகிறான். அவனை நீ முயற்சியுடன் பூஜிப்பாயாக. அவனை அறிந்தே. அவன் பிராமணன். இந்திரனுடன்கூட என்னால் நினைக்கப்படுகிறான். நாம் அவனுக்கு அந்த அதிதிகளைப் பின் விசாரிக்கும் விஷயத்தில் செய்யவேண்டியது; நாம் அவனுக்கு இன்னமாதிரி செய்யவேண்டும் என்று அவன் யோசிப்பதில்லை. அவனுக்கு அவனுடைய தர்மமே பிரமாணம். அவன் ஸாதுக்களுடைய வழியில் நடக்கிறான். அவன் ஸாதுக்களுடைய வழியில் நடப்பதால் அவனுக்கு ஸாதுக்களுடைய லோகங்கள் கிடைக்கின்றன. அவன் அந்த லோகங்களை அடைந்து அங்கே ஸுகமாக வஸிக்கிறான். அவன் அங்கே ஸுகமாக வஸிப்பதால் அவனுக்கு அழிவற்ற

ம்ரேஷ்டனே! 1 ஜ்யேஷ்ட புஷ்கரத்தில் காராம்பசுவானது கொடுக்கப்பட்டால் என்ன பலனுண்டோ அந்தப்பலனானது பிராம்மணர்களுடைய பாதத்தை அலம்புகிறதனால் ஏற்படுகிறது. பூமியானது எவ்வளவுகாலம்வரையில் பிராம்மணனுடைய பாதத்தை அலம்பினஜலத்தால் நனைந்திருக்கிறதோ அவ்வளவுகாலம்வரையில் பித்ருக்கள் தாமரை இலையினால் தீர்த்தத்தைப் பானம்பண்ணுகிறார்கள். பிராம்மணனைக் குறித்துக் கூறப்படும் வரவேற்புச்சொல்லால் அக்னிகள் திருப்தி அடைகின்றன; ஆஸனம் கொடுப்பதினால் இந்திரன் திருப்தி அடைகிறான்; காலை அலம்புவதனால் பித்ருக்கள் திருப்தி அடைகிறார்கள். அன்னம் முதலியன கொடுத்தலால் பிரம்மதேவர் திருப்தி அடைகிறார். பசுவானது கன்றுமேய்போடும் தருணத்தில் கன்றினுடைய இரண்டு கால்களும் தலையும் காணப்படும்பொழுது பரிசுத்தமான மனத்துடன் அந்தப்பசுவைத் தானம்செய்யவேண்டும். கன்றானது ஆகாசத்தை அடைந்ததாகப் பசுவின் கண்ணில் காணப்பட்டிப் பசுவும் கர்ப்பத்தை முழுதும் ஈனுமளவிருக்கும்வரையில் அந்தப்பசு பூமியாக அறியப்படுகிறது. யுதிஷ்டிரா! அந்தப்பசுவினுடம்பில் கன்றினுடைய ரோமங்கள் இருக்கின்றனவோ அத்தனை ஆயிரம்யுகங்கள் வரையில் அந்தத்தானம்செய்பவன் ஸ்வர்க்கலோகத்தில் பூஜிக்கப்படுகிறான். பாரத! எந்தமனிதன் ஸ்வர்ணமயமான மூக்குள்ள நல்ல நல்ல புகளுள்ளதும் எல்லா லக்ஷணங்களாலும் அலங்கரிக்கப்பட்டதும் எள்ளளவைத்து மூடப்பட்டதுமான காராம்பசுவைச்செய்து தானம்செய்வானோ, எவன் இந்தக் காராம்பசுவைத் தானம்வாங்கி மீண்டும் ஸாதுஜனங்களிடத்தில் கொடுப்பானோ அந்தத்தானத்தையும் பிரதிக்ரஹத்தையும் செய்தவர்கள் தானபலன்களை அதிகமாக பலனை அனுபவிக்கின்றனர். அவர்களால் கடல்களாலும் சூழப்பட்டதும் மலைகளுடனும் காடுகளுடனும் நகரங்களுடனும் கூடியதும் நாற்புறங்களிலும் ஸமுத்திரங்களை எல்லையாகக்கொண்டதுமான பூமியானது கொடுக்கப்பட்டதாகும். இதில் ஸந்தேஹமில்லை. எந்தப் பிராம்மணன் இரண்டு புறங்கால்களின் நடுவில் கைகளை உடையவனாகவும் பாஜனபாத்ரத்தைத் தரிப்பவனாகவும்

1 பிரம்மாவினால் உண்டுபண்ணப்பட்ட ஒரு தீர்த்தம். அதற்கு ரூபதீர்த்தம் என்றும் முகதர்சனம் என்றும் வேறு பெயர்களுண்டு. அதில், ஜ்யேஷ்ட புஷ்கரம் மத்யம புஷ்கரம் கனிஷ்ட புஷ்கரம் என்று மூன்று மடுக்களுண்டு.

கொண்டவனுகவும் சப்தமில்லாமல் போஜனம் செய்வானே அவன் கரையேற்றுவதற்குத் திறமையுள்ளவன். எவர்கள் [1] குடிதண்ணீரைக் கொடுக்கிறார்களோ, அப்படியே வேறு எந்தப் பிராம்மணர்கள் வேத [2] ஸம்ஹிதையை நன்றாக ஜபம் செய்கிறார்களோ அவர்கள் எப்பொழுதும் கரையேற்றத் திறமையுள்ளவர்கள். ஹவ்யகவ்யங்களனைத்தையும் [3] ப்ரோக்ஷியன் அடைவதற்குத் தகுதியுள்ளவன். கார்மிகனை ப்ரோக்ஷியனிடத்தில் கொடுக்கப்பட்டதானமானது ஜ்வலிக்கின்ற நெருப்பில் ஹோமம் செய்யப்பட்ட ஹவிஸ்போலப் பயனுள்ளது. பிராம்மணர்கள் கோபத்தை ஆயுதமாகக் கொண்டவர்கள். பிராம்மணர்கள் ஆயுதமெடுத்து யுத்தம் செய்பவர்களல்லர். இந்திரன் அஸுரர்களை வஜ்ராயுதத்தால் கொல்லுவதுபோலப் பிராம்மணர்கள் குற்றம் செய்தவர்களைக் கோபத்தினால் கொல்லுவார்கள். தோஷமற்றவனே! எந்தக் கதையைக் கேட்டு ஸமீசாரண்யத்தில் வஸிக்கின்ற முனிவர்கள் பிரீதியடைந்தார்களோ அப்படிப்பட்ட தர்மத்தை அடுத்த இந்தக் கதையானது உனக்குக் கூறப்பட்டதன்றோ? வேந்தே! இவ்வுலகத்தில் மனிதர்கள் இந்தக் கதையைக் கேட்டுத் துயரத்தையும் பயத்தையும் கோபத்தையும் விட்டவர்களாகும் அப்படியே பாவம் தொலைந்தவர்களாகும் ஆகிறார்கள்' என்று கூறினர்.

யுதிஷ்டிரர், 'மகாப்ராஜ்ஞரே! கார்மிகர்களுள் சிறந்தவரே! எதனால் பிராம்மணன் எப்பொழுதும் சுத்தனாவானோ அந்தச் சௌசமென்பது யாது? அதைக் கேட்கவே விரும்புகிறேன்' என்று கேட்டார். மார்க்கண்டேயர், 'வாக்சௌசமென்றும், கர்மசௌசமென்றும், ஜலசௌசமென்றும் சௌசம் மூன்றுவிதமானது. எவன் மூன்று சௌசங்களையுங்கூடியவனோ அவன் ஸ்வர்க்கத்தை அடைகிறான். இதில் ஸந்தேகமில்லை. எந்தப் பிராம்மணன் மனோவாக்காயத்திலும் அதே காலையிலும் பரிசுத்தனானதும் வேதமாதாவான காயத்ரியை நன்றாக ஜபித்துக்கொண்டு ஸந்தியை உபாஸிப்பானோ அந்தப் பிராம்மணன் சுடர்விடுகின்ற பூமியைத்

---

1 'மதுபானம் செய்பவர்களும் தோஷமுள்ளவர்களென்று சொல்லப்படாதவர்களும்' என்பது வேறுபாடத்தின் பொருள்.

2 எழுத்துக்களை உச்சரிப்பதில் ஒன்றுக்கொன்று இடையில் இடந்தராமையாக விடவேண்டிய அரை மாத்திரைக் காலத்தைக் கடவாமல் தொடர்ந்து சொல்லப்படுவது.

3 வேத வேதாங்கங்களை ஓதி உணர்ந்தவன்.

தானம்வாங்கினலும் அந்தக் காயத்ரீதேவியினல் பரிசுத்தம் செய்யப்பட்டவனும் பாவமழிந்தவனுமாகிக் குறைவடைய மாட்டான். இவன் விஷயத்தில் ஆகாயத்தில் ஸூர்யன் முதலிய கிரஹங்களுள், குரூரமாயிருப்பவைகள் சாந்தமானவைகளும் அனுகூலமாயிருப்பவைகள் எப்பொழுதும் மிக்க அநுகூலமாயிருப்பவைகளும் ஆகின்றன. பயங்கரமாயிருப்பவர்களும் கோரரூபமுள்ளவர்களும் பருத்த தேகமுள்ளவர்களுமான எல்லா யக்ஷஸ்களும் காயத்ரீ ஜபத்தில் பற்றுதலுள்ள இந்தப்ராம்மணரைக்கண்டால் ஹிம்ஸிக்கமாட்டார்கள். பிறருக்கு தீவநங்களைச் சொல்லிவைப்பதினலோ பிறருக்கு யாகத்தைச் செய்விப்பதினலோ அத்யாபனம் பிரதிக்ரஹத்தினலோ ப்ராம்மணர்களுக்குரிய தேஜஸ் கிடையாது. ப்ராம்மணர்கள் எரிகிற நெய்ப்பிழம்புகள். ப்ராம்மணர்கள் தேவதைகளுக்கும் அரியதர்மங்களுக்கும் அரிய காரணங்களாவர். அக்நிகளும் சூர்யர்களும் ப்ராம்மணர்களுக்கு ஒப்பாகமாட்டார்கள். அவர்கள் சாம்பலால் மூடப்பட்ட நெருப்புப் போன்றவர்கள். இந்தலோகத்தில் பிறந்து ஜ்வலிக்கின்ற நெருப்பினது தேஜஸ் முள்ளதாகாததுபோல் அறிந்தவனுடைய அறிவுள்ள ப்ராம்மணனின் தேஜஸ் முள்ளதாகாது. அவன் நெருப்பு. தேவதை. ப்ராம்மணர்களால் விநாயகர்முதலான பூதங்களும் தேவர்களும் ராக்ஷஸர்களும் பாம்புகளும் மரங்களும் ரக்ஷிக்கப்படுகின்றன. அசுரர்களே! மந்த்ரம் தெரிந்த ப்ராம்மணர்களும் கல்லிலாயுங்களுள்ளவர்களும் தர்ப்பம் முள்ளவர்களும் தவசிகளுமான ப்ராம்மணர்கள் இருக்குமிடமே அகல்லிலாத பட்டணம்: குருக்ஷேத்ரங்கள்! நீங்கள் சீக்ரமாகப் போய் டிலோ எதில் பல சாஸ்த்ரங்களை அறிந்தவர்களும் இருக்குமிடமே அதை நகரமென்று சொல்லுகிறார்கள். அது நிந்தியம். மனிதன் பாதுகாக்கிற அக்நியும் கலந்திருக்கிற ப்ராஹ்மணாக்நியும் அணுகி சேர்ந்தால் உடனே ப்ராஹ்மணாக்நியினால் விடுபடுகிறான். புண்யதீர்த்தங்களில் ஸ்நானம் செய்தல் ப்ராஹ்மணர்களைச் சேர்ந்துகொண்டால் ஸாதுக்களின் ஸம்பாஷணமுமுண்டாகிறது என்று அறிஞர்களால் சொல்லப்படுகின்றது. கல்லிலாயுங்கள் எப்பொழுதும் தர்ப்பை ஸாதுக்களுடைய சேர்க்கையினல் ப்ராஹ்மணனென்ற இன்சொல்லாகிற ஜலத்தால் ப்ராஹ்மணர்களை ரக்ஷிக்கின்றன. மனிதர்களை ஸாதுக்களல்லாதவர்களினின்றும் விடுவிக்கின்றன. தர்ப்பங்கள், ப்ராஹ்மணர்கள்,

மொட்டை அடித்துக்கொள்ளுதல், மரவுரியையும் மான்தோலையும் உடுத்தல், விரதாநுஷ்டானம், ஸ்நானம், அக்னிஹோத்ரம், வனத்தில்வாஸம், உடம்பை உலர்த்தல் இவை அனைத்தும் பயனற்றனவாகும். கண்முதலிய ஆறுஞானேந்திரியங்களாலும் அனுபவிக்கப்படுகிற பொருள்களுக்குச் சாஸ்திரியமான சுத்தியில்லாமற்போனாலும் அந்த இந்திரியங்களுக்கு அனுபவஸுகம் கிடைத்துவிடுகிறதே. ஆயினும், பொருள்களுக்குச் சுத்தியில்லாமல் கிடைக்கும் ஸுகம் மோகஹேதுவாகாது. ஸாதிஜ்ஞர்களே! எவனொருவன், விகாரத்துடன்கூடின அவர்களுடைய மனமானது எப்பொழுதும் அடக்கமுடியாததாகிறதோ, எவர்களின் மனத்தினாலும் வாக்கினாலும் செய்யுங்காலத்தும் புத்தியாலும் பாவங்களைச் செய்வதில் ஆசையுள்ள அந்த மதாந்தர்களின் உடம்பை உலர்த்துகிற தவத்தைச் செய்யாதவர்களாகின்றார்கள். எவனுக்குப் புத்தியும் முதலிய பத்துக்களிடத்தில் கருணையில்லையோ, அவன் [1] சுத்த நிரகமுள்ளவனாயிருந்தாலும் பாவமில்லாதவனாகமாட்டான். (கருணையில்லாமையாகிய) அந்த அவலக்ஷணத்துக்குத் தீங்கு காண்கிறது. உண்மையில் நூற்றுக்கணக்கென்று சொல்லப்படவில்லை. எப்பொழுதுஞ் சுத்தமாயிருப்பவனும் அல்பாகாரியாயிருப்பவனும் தன்னுடைய மனத்தை முழுதும் அன்பாயிருப்பவனுமான மனிதனை முனிவன். அவன் விட்டுவிருந்தாலும் மலம்பிடித்தவஸ்திரமும் விரும்பத்தகுந்தவனாகிறான். ஆகாயத்தில்வாழ்பவனாயினும் பாவமற்றவர்கள் சுத்தி அடையாதவர்களாகின்றார்கள். அதனால் மனிதன் தன்னுடைய சுத்தியை முயற்சியுடன் பாதுகாக்கவேண்டும். சுத்தியானது மனிதனுக்கு நன்மையைச் செய்கிறது. சுத்தியில்லாதவனுக்கு நன்மை உண்டாகாது. சுத்தியானது மனிதனுக்கு ஸ்வர்க்கத்தைக் கொடுக்கிற

தனாலும், அக்னியின் சுச்ரூஷையினாலும், தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வதினாலும், தரையில் படுப்பதினாலும் மனிதன் உத்தம ஸ்தானத்தை அடையமாட்டான். ஞானத்தாலாவது (பயனை விரும்பாத) கர்மத்தாலாவது பிணியும் மூப்பும் சாக்காடும் அற்றுப்போகின்றன; உத்தமமான பதமும் அடையப்படுகிறது. நெருப்பால் எரிக்கப்பட்ட வித்துக்கள் எவ்வாறு மறுபடி முளையாவோ அவ்வாறே ஞானத்தால் எரிக்கப்பட்ட கிலேசங்களோடு மறுபடி ஆத்மா சேர்கிறதில்லை. பெரிய ஸமுத்திரத்தில் நதிகள்போல ஆத்மாவினால் விடப்பட்டவையும், கட்டையும் உள்ளே எலும்புவைத்துக்கட்டின சுவரும் போன்றவையுமான சரீரங்கள் நாசமடைகின்றன. ஸந்தேகமில்லை. எவன் ஒரு ப்ரேலோகத்தினாலாவது, ப்ரேலோகத்தின் பாதியினாலாவது எல்லாப் பிராணிகளுடைய ஹிருதயத்திலும் வஸிக்கின்ற பரமாத்மாவை அடைகிறானோ அவனுக்கு மேண்டுவது ஒன்றுமில்லை. [1] சிலர் மோக்ஷத்திற்கு ஸாதகமான ஞானத்தை அடைந்து இரண்டு அக்ஷரமடங்கின ப்ரம்ம சப்தத்தினால் தியானித்து ப்ரேலோகமென்கிற பதத்தால் அடையாளமிடப்பட்டிருக்கிற நூறு உபநிஷத்துக்களாலும் ஆயிரம் உபநிஷத்துக்களாலும் ப்ரம்மத்தை அடைகிறார்கள். ஸம்சயத்தால் கவரப்பட்ட மனமுள்ளவனுக்கு இவ்வுலகமுமில்லை; மறுஉலகமுமில்லை; ஸுகமுமில்லை. ஞானத்தை அடைந்த வ்ருத்தர்கள் [2] ஞானம் மோக்ஷ ஸாதனமென்று கூறுகின்றனர். ஆத்ம தத்வங்களை அறிந்தவரை வேதங்களுடைய உபயோகத்தை நன்றாக அறிகிறான். அந்த மனிதனை காட்டுத்தீயினிடமிருந்து நடுங்குவதுபோல வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற கர்மங்களினிடமிருந்து நடுங்குகிறான். ஓரக்ஷரமான ப்ரணவத்தினால் சொல்லப்பட்டிருக்கிற ப்ரம்மதத்வத்தை வேதங்களால் அறிய விரும்புகிறவனாகில் வெறுப்புக்கு வாதத்தைவிட்டு வேதத்தையும் ஸ்ம்ருதியையும் ப்ரமாணமாகக்

---

1 'சிலர் தத்வம் என்கிற இரண்டக்ஷரங்களடங்கின மஹாவாக்யத்தினால் ப்ரம்மம் நிர்விசேஷமென்று சொல்லுகிற சாஸ்திரக்கருத்தை அறிந்து (ஸத்யம் ஜ்ஞானம் அனந்தம் என்பவை முதலிய) மந்த்ர பதங்களால் அடையாளமிடப்பட்ட ப்ராம்மணங்களடங்கின நூறு உபநிஷத்துக்களாலும் வேறு ஆயிரம் உபநிஷத்துக்களாலும் ப்ரம்மத்தை அடைகிறார்கள். 'நான் ப்ரம்மமாயிருக்கிறேன்' என்கிற தன்னிலையாகக் கொண்ட அனுபவமானது மோக்ஷத்தை அறிவிப்பதாகிறது' என்பது பழையவுரை. 2 'ப்ராத்ரவ:' என்பது மூலம்.

கொள்ளக்கடவாய். (சமதமமுதலியவையும் வேத சாஸ்திரமுதலி யவையுமான) ஸாதனங்களில்லாமையால் (யுக்திவாதியான) அவ னுக்குத் தத்வஜ்ஞானம் கைகூடாது. அழிவற்ற பிரம்மதத்வமா னது வேதத்தை முன்னிட்டு முயற்சியினால் அறியத்தக்கது. அந்த ப்ரம்மமே வேதம் (=பிரணவம்). வேதமானது அந்தப்ரம்மத் திற்குச் சரீரம். வேதமானது அந்தப்ரம்மதத்வத்தை அறிவதற்குக் காரணமாயிருக்கிறது. அந்த வேதத்துக்கு லயஸ்தானமான ஆத்மதத்வத்தை அறிவிக்கும் விஷயத்தில் ஆத்மாவானது சக்தி யற்றதாயிருக்கிறது. ஆதலால், அந்த ஆத்மதத்வமானது அறியக் கூடிய புத்திதத்வத்தால் அறியத்தக்கதாயிருக்கிறது. வேதங்களில் கூறப்பட்ட ஆயுஸும் கார்யங்களை உத்தேசித்துத் தேவர்கள் தொடர்ந் திருக்கும் பலன்களும் சரீரகளுடைய கார்யத்தானமையும் உலகத்தில் யுகத்தை அனுஸரித்து உண்டாகின்றன. இந்தியங்களுடைய நிகரினால் அப்படிப்பட்ட நிச்சயத்தை விட்டிருக்கவேண்டும். ஆகையால், மனமுதலிய இந்திரியங்களை அடக்குவதே சிறந்த உண்மையான தபஸ். தபஸ்ஸினால் ஸ்வர்க்கமானது அடையப்படு கிறது. தானத்தால் ஸுகானுபவம் உண்டாகிறது. நிர்த்த ஸ்நானத்தால் பாவம் நீங்குகிறது; (ஆனால்,) ஞானத்தாலேயே மோக்ஷம் கைகூடுமென்று அறியவேண்டும்' என்று சொன்னார்.

பரீக்ஷித்தே! இவ்வாறு சொல்லப்பட்டவரும் மிக்க புகழ்ச்சியுடைய யுதிஷ்டிரர், பராக்கஸ்தேயரை நோக்கி, 'பக வானே! உத்தமமான தானவிதியைக் கேட்பதற்கு விருப்ப மிருக்கிறது' என்று கூறினார். பராக்கஸ்தேயர், 'யுதிஷ்டிர! பரீக்ஷித் புத்ரனே! மார்க்கண்டேயனுக்கும் இந்திரனுக்கும் நடந்த விஷயமான இந்த புராதனமான சரித்திரத்தை எப்பொழுதும் மனத்தில் நினைத்துக்கொண்டிரு. தேவதைகளுக்கும் தேவர்கள் தேவதைகளுக்கும் தேவதைகளான பிராமணர்களை பூஜிக்கவேண்டும். பிராமணர்களை பூஜிப்பதனால் மனிதர்களுக்கு ஸ்வர்க்கம் ஸித்திக்கிறது. ஆகையால்,

ஆராதித்தவணகிறன். நதியின் பிரவாஹமானது தனக்கு எதிர் முகமாக வளைந்து செல்லுகிற இடத்தில் தகுந்தவனிடம் தானம் செய்யப்பட்ட சிறந்த குதிரைகள் அசுஷ்யபலனைக்கொடுக்கின்றன. அன்னத்திற்காக க்ருஹன்தனை அடைகிற அதிதி இந்திரனை. அவனும் அசுஷ்யமான ஸ்வர்க்கத்தைக் கொடுப்பான். இப்படி தானம் செய்தவர்கள், பெருங்கடலைக் கப்பலால் தான்றிவதுபோல மஹாபாதகங்களை எளிதில் தான்றிகிறார்கள். க்ரஹணகாலத்தில் பிராம்மணனுக்குக் கொடுக்கப்படுகிற தாபிராடைகள் அசுஷ்யமாகின்றன. பர்வகாலங்களில் கொடுக்கப்பட்டதானம் இரண்டு மடங்காகிறது. ருதுக்களில் தானம் பத்து மடங்காகும். 1 அயனத்தில், 2 விஷுவத்திலும், 3 ஷடசீதி முதலிய புண்யகாலங்களில், சந்த்ரக்ரஹண ஸூர்ய க்ரஹண காலங்களில் தானமானது அசுஷ்யமென்று சொல்லப்படுகிறது. ருதுக்களில் கொடுக்கப்பட்டதானத்தைப் பத்துமடங்கு பலனுள்ளதென்று சொல்லுகிறார்கள். ருது அயனம் முதலிய புண்யகாலங்களில் தானமான து க்ரமமாகவே கோடிமடங்கு பலனுள்ளது. ராஹுக்ரஹணகாலத்தில் தானம் ஆயிரம் மடங்காகிறது. விஷுவத்தில் தானம் செய்தால் அசுஷ்ய பலனை அடைகிறன். அரசனே! பூமியைக் கொடுத்தவன் பூமியை அனுபவிக்கமாட்டான். வாகனத்தைக்கொடுத்தவன் வாகனத்தில் ஏறிச்செல்லமாட்டான். விருப்பமான எந்த எந்த வஸ்துக்களைப் பிராம்மணர்களுக்குக் கொடுக்கிறானோ, அந்த அந்த விருப்பமான வஸ்துக்களை, கொடுத்தவன் மறுஜன்மத்தில் அனுபவிக்கிறன். பசுவானது அவனிடமுள்ள மூத்த குழந்தை. பூமியானது விவாஹமானவளாம். ரத்னங்கள் ஸ்ரீயினுடையது. வஸ்த்ரங்களும் ரத்னங்களும் பூமியைப்போல் தானம் செய்கிறதினால் அவற்றில் புருஷர்களுக்கும் தானம் செய்யப்பட்டவைகளாகின்றன. புருஷர்களுக்கு ஏற்படும் தானம் கைக்காட்டி ஏறும் சிறந்த ரதம் பிராம்மணர்களுக்கு கொடுக்கப்பட்டதானது; இனியும் இரண்டு. அவைகளால், கோதானங்களில் சிறந்த புத்திரனுள்ள கோதானமும் புகழ்பெற்ற ரதமும் சிலர்கள் ' என்று கூறினர்.

---

1 அதிக மாடமான அகாரஸ்தலமும் விடப்பட்டது. அயனம் — ஆறு மாதங்களின் பிறப்பு. 2 சித்திரை ஐப்பசி மாதங்களின் பிறப்பு. 3 ஆனி, புரட்டாசி, மார்கழி, பங்குனி மாதப் பிறப்புக்கள்.

இருநூற்றுநான்காவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர் துந்துமாரனுடைய உபாக்கியானத்தைச் சொல்லத் தொடங்கியதும், உதங்கரடைய தவத்தினல் ஸந்தோஷமடைந்த விஷ்ணு அவருக்கு வரங்களைக் கொடுத்துத் தவலாம்வனல் துந்து எனுகின்ற அஸுரனைக்கொல்வதற்குய முறையைச் சொல்லி மறைந்ததும்.)

ஜநமேஜயரே! மஹாராஜரே! யுதிஷ்டிரராஜர் ராஜரிஷியான திருதராஷ்டிரனுக்கு அப்படிப்பட்ட ஸ்வர்க்கவாஸம் கொடுக்கப்பட்டதைக் கண்டபோது பாண்டவரிடத்தில் பாஞ்சாலிக்கும் கண்ட வாழ்க்கையிலும் பார்க்கும் பலவிதங்களில் அதிகமான துக்கத்தை அடைந்தார். 'தர்மதேவதையே! தர்மவானே! தர்மத்தின் பிரபுவே! ஸத்யவானே! ஸத்யபராக்கிரமரே! ஸத்யவ்ரதரே! ஸத்யஸந்தரே! ஸத்யபராயணரே! ஸத்யவாதிகளே! ஸத்யஸ்வரூபிகளே! ஸத்யஸ்வரூபிணிகளே! ஸத்யவதிகளே! ஸத்யவாதினிகளே! ஸத்யபராயணிகளே! ஸத்யவ்ரதிகளே! ஸத்யஸந்திகளே! ஸத்யபராக்கிரமிகளே! ஸத்யவான்களே! ஸத்யவதிகளே! ஸத்யவாதினிகளே! ஸத்யஸ்வரூபிகளே! ஸத்யஸ்வரூபிண

அந்தக் குவலாஸ்வராஜன் துந்துமாரனென்று பிரஸித்தியை அடைந்தவிதத்தைக் கேட்பாயாக. அப்பா! பாரத! பிரஸித்திபெற்ற உதங்கரென்கிற ஒரு மஹரிஷி இருந்தார். கௌரவ! அழகிய காட்டில் அவருடைய ஆஸ்ரமமிருந்தது. மகாராஜனே! விபுவான உதங்கரோ, விஷ்ணுவை ஆராதிக்க விருப்பங்கொண்டு பல வருஷகாலம் செய்ய மிகஅரிய தவத்தைச் செய்தார். அவர் விஷயத்தில் ப்ரீதியடைந்த அந்த விஷ்ணுபகவான் அவருக்கு நேரில் காட்சியளித்தார். மஹரிஷியானஉதங்கர், அந்தப் பகவானை, 'மிக்க காந்தியுள்ளவரே! தேவரே! தேவர்களோடும் அஸுரர்களோடும் மனிதர்களோடும்கூடின எல்லாப் ப்ரஜைகளும், அப்படியே ஸ்தாவரங்களாகவும் ஜங்கமங்களாகவுமிருக்கிற ப்ராணிகளும், ப்ரம்மத்தைச் சொல்லுகிற வேதங்களும், அறியத்தக்க வஸ்துவும் உம்மால் உண்டுபண்ணப்பட்டிருக்கின்றன. தேவரே! ஆகாயம் உம்முடைய தலை. சந்திரஸூர்யர்கள் உம்முடைய கண்கள். அக்ஸுதரே! காற்று உம்முடைய மூச்சு. நெருப்பு உம்முடைய தேஜஸ். எல்லாத்திசைகளும் உம்முடைய கைகள். ஆகாஸமுகம் உம்முடைய வயிறு. தேவரே! மலைகள் உம்முடைய தொடைகள். மதுஸூதனரே! ஆகாசம் உம்முடைய நாபி. பூமியானது உம்முடைய கால்கள். அப்படியே, ஓஷதிகள் உரோமங்கள். இந்திரன், சந்திரன், அக்னி, வருணன், தேவர்கள், அஸுரர்கள், மஹோரகர்கள் ஆகிய எல்லாரும் வணக்கமுள்ளவர்களாகப் பலவித ஸ்தோத்திரங்களால் துதித்துக்கொண்டு உம்மைப் பூஜிக்கின்றனர். லோகநாதரே! எல்லாப் ப்ராணிகளும் உம்மால் வ்யாபிக்கப்பட்டிருக்கின்றன. அதிக சக்தியுள்ளவர்களான யோகிகளும் மஹரிஷிகளும் உம்மைத் துதிக்கிறார்கள். நீர் ஸந்தோஷமடைந்தால் உலகம் சாந்தமாக இருக்கிறது; நீர் கோபித்துக்கொண்டால் மிக்க பயத்தை அடைகிறது. புருஷோத்தமரே! எல்லாப் ப்ராணிகளுக்கும் ஸுகத்தை உண்டுபண்ணுகிறவரான நீர் ஒருவரே தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் உண்டாகும் பயங்களைப் போக்குகிறீர். தேவரே! உம்மால் மூன்று காலடிகளால் மூன்று உலகங்களும் ஆக்ரமிக்கப்பட்டன. ஸம்ஹாரத்தால் நிறைந்தவர்களான அஸுரர்களுடைய விநாசமும் உம்மால் செய்யப்பட்டது. அதிகப் பிரகாசமுள்ளவரே! உம்முடைய அநுக்ரஹப் புக்களால் தேவர்கள் சிறந்த ஸுகத்தை அடைந்தார்கள். நீர் கோபங்கொண்டவுடன், கைதபராஜர்கள் அபாயத்தை அடைந்

தார்கள். நீர் இவ்வுலகில் எல்லாவிதத்தாலும் பிராணிகளைப் படைப்பவராகவும் அழிப்பவராகவும் இருக்கிறீர். தேவர்கள் உம்மை நள்ளிதாறும் ஆராதித்து ஸுகமாக வ்ருத்தி அடைகிறார்கள்' என்று பலவித ஸ்தோத்திரங்களால் புகழ்ந்தார். இவ்வாறு மகாத்மாவான உதங்கரால் துதிக்கப்பட்ட ஹ்ருஷீகேசரான விஷ்ணு உதங்கரைப் பார்த்து, 'நான் உன் விஷயத்தில் ப்ரீதியடைந்தேன். வரத்தைப் பெற்றுக்கொள்' என்று சொல்ல, உதங்கர், 'புருஷரும் சாஸ்வதரும் தேவரும் முள்ளவரும் உலகத்தைப் படைப்பவரும் ப்ரபுவுமான ஹரியை நான் தரிசனம் செய்தேன் எனக்குப் போதுமான வரம்' என்று சொன்னார். விஷ்ணு, 'மிகச் சிறந்தவனே! நான் உன்னுடைய உறுதியான பக்தியினால் உன் விஷயத்தில் ப்ரீதியடைகிறேன். ப்ராம்மணனே! நீ என்னிடமிருந்து அபீஷ்டம் வரத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்' என்று சொன்னார். பகவானே! அப்போழுது ஹரியினால் இவ்வண்ணம் (வரங்கொடுப்பதாகச் சொல்லி) மகிழ்விக்கப்படுகிற அந்த உதங்கர் கைகளைக் குவித்துக்கொண்டு, 'பகவானே! காமலைமலர்போன்ற கண்களையுள்ளவரே! என் விஷயத்தில் ப்ரீதியுள்ளவராயிருந்தால் தர்மத்திலும், ஸத்தியத்திலும், ஐம்பொறி அடக்கத்திலும் எப்போழுதும் எனக்குப் புத்தியிருக்கவேண்டும். ஈச்வரரே! எனக்கு எப்போழுதும் உம்மிடத்தில் தொடர்ச்சியான பக்தி இருக்கவேண்டும்' என்று வரத்தை வேண்டினார். பகவான், 'ப்ராம்மணனே! என் அனுக்ரஹத்தினால் இவையெல்லாம் உனக்கு உண்டாகும். எந்த யோகத்தைத் தாங்கூடியவனாக நீ ப்ரஜைகளுக்கும் மூவுலகங்களுக்கும் பெரிய காரியத்தைச் செய்வாயோ அப்படிப்பட்ட யோகமும் உனக்குத் தானே தோன்றும். துந்துவென்கிற மகாஸுரன் உலகங்களை அழிப்பதற்காகக் கடுந்தவம் புரிகிறான். அவனைக் கொல்லுபவனைச் சொல்லுவேன்; கேள். அப்பா! இக்ஷ்வாகுகுலத்தில் தோன்றியவனும், பலசாலியால் அனுக்ரஹிக்கப்பட்டதாலும், சிறந்த சக்தியுள்ளவனும், ப்ருஹதச்வனென்று ப்ரஸித்திபெற்றவனுமான அரசன் பூமிக்கு அதிபதியாவான். ப்ராம்மணரிஷியே! அந்தப் ப்ருஹதச்வனுக்குப் புத்ரனும் சுத்தனும் இந்த்ரியங்களை அடக்கினவனும் அரசர்களுள் உத்தமனுமான குவலாச்வனென்கிற ப்ரஸித்தனான அப்படிப்பட்ட அரசன் என்னுடைய யோகபலத்தை அடைந்திருக்கிற உன்னுடைய கட்டளையினால் துந்து என்கிற

அஸுரனைக்கொன்று துந்துமாரனென்கிற பெயருள்ளவனுவான்' என்று சொன்னர். இவ்வண்ணம் உதங்கரைப் பார்த்துச் சொல்லி, விஷ்ணுவானவர் அந்தர்த்தானத்தை அடைந்தார்.

இருநூற்றைந்தாவது அத்யாயம்.

மார்க்கண்டேய ஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(உதங்கர், பிருகதஸ்வன் ராஜ்யத்தில் தன் புத்திரனுக்கு முடிதூடி வனத்துக்குப் புறப்பட்டதைத் தடுத்து, துந்து என்கிற அஸுரனைக் கொல்ல ஏவியது.)

அரசனே! இக்ஷ்வாகுமகாராஜன் லோகாந்தரத்தை அடைந்த பிறகு, பரமதார்மிகனான சந்ததன் இந்தப் பூமியை அடைந்து அபிபாக்கியில் அரசனனான். சிறந்த வல்லமையுள்ள வனான கருதஸ்தனென்பவன் சந்ததனுடைய புத்திரன். கருதஸ்தனுக்கு அதினனஸ் என்று ஒரு புத்திரன் பிறந்தான். அதினனஸுக்குப்பிறகு என்கிற புத்திரன் உண்டானன். ப்ருதுவின் புத்திரன் விஷ்வகஸ்வன். அவனிடத்தினின்று ஆர்த்ரன் பிறந்தான். ஆர்த்ரனுக்கு யுவனஸ்வினென்ற புத்திரன் உண்டானன். அவனுக்கு ஸ்ராவஸ்தனென்கிற புத்திரன் உண்டானன். ஸ்ராவஸ்தன் அரசனனான். அவனல் ஸ்ராவஸ்தி என்கிற நகரமானது நிர்மாணஞ்செய்யப்பட்டது. ஸ்ராவஸ்தனுக்கு ப்ருஹதச்வனென்பவன் பிறந்தான். ப்ருஹதச்வனென்கிற புத்திரன் உண்டானன். குவலயாச்வனுடைய புத்திரனாக என்னப்பட்டான். குவலயாச்வனுக்கு இருபத்தொராயிரம் பிள்ளைகளுண்டானார்கள். எல்லோரும் வித்தைகளில் மிகுந்த கர்வமுள்ளவர்களாகவும் பலமுள்ளவர்களாகவும் பராக்கிரமசாலிகளாகவும் இருந்தார்கள். குவலயாச்வனுடைய குமாரர்களில் பிரதானமனைக்காட்டிலும் மேற்பட்டவனாக இருந்தான். மஹாமுனே! ப்ருஹதச்வன் அப்பிரதிமமான சக்தியையுடைய சாபத்தில் குவலயாச்வனுக்கு பட்டாபிஷேகம் செய்வித்தான். சிறந்த புத்திரர்களையுடைய தனை வரைக்கொல்லுவதாக ப்ருஹதச்வனென்கிற அரசன் அரசச் செல்வத்தைத் புத்திரனிடத்தில் ஒப்பித்துவிட்டுத் தவம்புரி வதற்காகத் தபோவனத்தைக் குறித்துச் செல்லத் தொடங்கி

ஞன். மனிதர்களுக்குத் தலைவனே! கேள்! பிறகு, பிராம் மணோத்தமரான உதங்கர், ப்ருஹதச்வனென்கிற அந்த ராஜரிஷி வனத்திற்குப் புறப்பட்டதைத் கேட்டார். மிக்க தேஜஸ்ஸுள்ள வரும் அளக்கற்கரிய ஆற்றலுள்ளவருமான உதங்கர் சிறந்த அந்த ப்ராவஸ்திநகரியை அடைந்து, எல்லா அஸ்திரங்களையும் அறிந் தவர்களுள் சிறந்தவனான அந்த ப்ருஹதச்வனை வனத்திற்குப் போவதினின்று தடுத்து, 'அரசனே! நீ பிரஜாபாலனத்தைச் செய் யத்தக்கவன். அதையே நீ செய்யவேண்டும். அரசனே! தாங்கள் உன்னுடைய தயையினால் பயமற்றவர்களாக வஸிக்கக்கடவோம். அரசனே! பூமியான தது மஹாத்மாவான உன்னால் காக்கப்படுமாயின் பயமற்றதாகும். நீ அரண்யத்தை அடைதல் கூடாது. இவ்வுலகில் ப்ரஜைகளைப் பாதுகாப்பது பெரிதான தர்மமாகக் காணப்படுகின் றது. அரண்யத்தில் வஸிப்பது அப்படி பெரிய தர்மமாகக் காணப்படவில்லை. உனக்கு இப்படிப்பட்ட புத்தி உண்டாக வேண்டாம். மஹாராஜனே! இப்படிப்பட்ட தர்மமானது ஓரிடத்திலும் காணப்படவில்லை. முற்காலத்தில் ராஜரிஷிகளால் ப்ரஜைகளைப் பரிபாலனம் செய்வதில் முயற்சி செய்யப்பட்டிருக் கிறது. ப்ரஜைகள் அரசனுல் காக்கத்தக்கவைகள். அவைகளை நீ காப்பதற்குத் தகுதியுள்ளவனாக இருக்கிறாய். அரசனே! நான் மனக்கலக்கமற்றவனாகித் தவத்தைச் செய்வதற்குச் சக்தியற்ற வனாக இருக்கிறேனல்லேன்; என்னுடைய ஆச்ரமவாஸத்தில் வாதகனையான காரிகளில் முதற்தினைகளால் நிரம்பினதும் பலசோறுள்ள அகன்றதும் பலசோறுள்ள நீண்டதுமான[1] உஞ்ஞா லம் என்கிற இடம் இருக்கிறது. அரசனே! அந்த இடத் தில் பயங்கரமான வடிவு முடன் பராக்ரமமுள்ளவ னும் அளவற்ற தேஜஸ்ஸுள்ளவனும் பராக்ரமத்தால் பூர்த்தி யுள்ளவனுமான அந்தகன் என்கிற அளவற்ற ப்ராணி களை பக்ஷிக்கிறான். மஹாராஜனே! அவனைக் கொன்றால் நீ மனக்கவலை அடையமாட்டாய். அரசனே! நிலையில்லாத ஆயுஸ்களையுடைய ஜந்துக்களை

1 இது உஞ்ஞாலகம் என்றும் வழங்கப்படுகின்றது.

லும் ராக்ஷஸர்களாலும் நாகர்களாலும் யக்ஷர்களாலும் கந்தர்வர்களாலும் எல்லாவிதத்தாலும் கொல்லத் தகாதவனாக இருக்கிறான். அவனைக் கொல்வாயாக. உனக்கு மங்களம். உன்னுடைய புத்தியானது இவ்விஷயத்தினின்று வேறுவிதமாக வேண்டாம். சாஸ்வதமானதும் குறைவற்றதும் அசைவற்றதுமான பெரிய கீர்த்தியை அடைவாய். குரோணும் உறங்குகிறவனும் மணலினுள் மறைந்திருப்பவனுமான அவனுடைய மூச்சுக்காற்றானது ஒருவருஷத்தின் முடிவில் வெளிப்படுகிறது. மலைகளோடும் காடுகளோடும் சோலைகளோடும்கூடின பூமியானது அவனுடைய மூச்சுக்காற்றினால் எப்பொழுது எப்பொழுது அசைகிறதோ அப்பொழுது அப்பொழுது பெரும் பூகம்பமானது ஆகாயத்தில் சென்றுகொண்டிருக்கிற ஸூர்யனுடைய தேரை நோக்கி மேலே கிளம்புகிறது. நெருப்புப்பிராகாரங்களோடுகூடியதும் ஜ்வாலைகளோடுகூடியதும் புகையோடுகலந்ததும் பிக்க பயங்கரமான பூகம்பமானது ஏழுநாள் அதிவேகத்தோடும் உண்டாகிறது. அரசனே! அதனால், அந்த ஸன்னுடைய ஆச்ரமத்தினிருப்பதற்குச் சக்தியற்றவனாக இருக்கிறான். அரசர்களுள் சிறந்தவனே! உலகங்களுக்கு நன்மையைச் செய்யவேண்டுமென்கிற விருப்பத்தால் அவனைக் கொல்வாயாக. அந்த அஸுரன் கொல்லப்பட்டால் உலகங்கள் தம் நிலைமையை அடைந்திருக்கும். பயங்கரமானதும் அஸ்திரசஸ்த்திரங்களால் நெருங்கியதுமான யுத்தத்தில் பிக்க பயங்கரமான சரீரமுள்ளவனுமான நரகன் என்று பெயருள்ள அஸுரனைப் பெரிய பாணத்தினால் நாசம் செய்வாயாக. நீ அவனை அழிப்பதற்குப் போதுமான திறமையுள்ளவனென்பது என் எண்ணம். விஷ்ணுவானவர் தம் தேஜஸினால் உன் தேஜஸை வருத்தி அடைபச்செய்வார். பூமிக்குபதியே! விஷ்ணுவினால், 'எந்த அரசன் பயங்கரனான அந்த மஹாஸுரனைக் கொல்லுகிறானோ அவனுடைய தேஜஸில் ஒரு நாராயணாம்சம் ஆச்ரயிக்கும். அந்த விஷ்ணு தேஜஸானது பிரவேசிக்கப் போகிறது' என்று முன்னமே எனக்கு யாசிக்கப்பட்டிருக்கிறது. பாரதர்களில் சிறந்தவனே! என்னால் கட்டளையிடப்பட்ட நீ பூமியாகத்தில் எல்லாவிதத்தாலும் தாங்கமுடியாத அந்த விஷ்ணுதேஜஸைச் சேர்ந்துகொண்டு பயங்கரனான பராக்கிரமமுள்ள அந்த அஸுரனை நாசம் செய்வாயாக. பூமிபாலர்களில் சிறந்தவனே! பிக்க தேஜஸையுடைய துந்துவானவன் நூறு முக்கண்களான வருஷங்கள் யுத்தம்

செய்தாலும் சக்தி குறைந்தவனல் எரிப்பதற்கு ஸாத்தியப்படாத வனன்றே?" என்றார்.

இருநூற்றிருபத்தி அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(பிருதைதர்வன் தன்புதல்வன் துந்துவைக் கொல்வானென்று சொல்லிக் கானகம் சென்றதும், யுதிஷ்டிரர் துந்துவினுடைய உற்பத்தியைத் தெரிந்து வினவியதும், மார்க்கண்டேயர் அவனுடைய உற்பத்திக்கு மதுகைடபர் கதையை வாலாற்றைச் சொல்லியதும்.)

விகவாவர்களுள் சிறந்தவனே! உதங்கரால் இவ்வாறு சொல்லப்பட்டவனும் மகாவர்களால் ஜயிக்கமுடியாதவனும் ராஜரிஷியுமான அந்தப் பிருதுகர்மாவின், உதங்கரைக் குறித்து அந்தஸில் செய்துகொண்டு, 'பிராம்மணரே! என்னுடைய இந்த வனப்பிரயாணமானது விரோதங்கூடாது. மகாபாக! கைரிபமுள்ளவனும், காரியங்களை விசாரணையாகச் சொல்பவனும், புத்தியில் தேர்ந்தவனும் சிஷ்யர்களுள்ளவனுமான குலபதியென்கிற பக்ஷன் எனக்கு இருக்கிறான். அவன் உம்முடைய இந்த அக்னிப்பரிசரணத்தையும் செய்வான். அவனிடத்தில் நீர் ஸ்வாதீனமாக்கிக்கொண்டு ஆச்ரமத்தை ரக்ஷிக்கவேண்டும். ஸ்வாமியே! நான் திரும்பிவருமளவும் அக்னிகளை ரக்ஷிக்கவேண்டும்" என்று சொல்லிவிட்டு, "மகாபாக! நான் திரும்பிவருமளவும் நீர் ஆச்ரமத்தில் இரு

மைபுள்ள அஸுரனே நான் இதற்குமுன் கேட்டதில்லை. பகவானே! மஹா மேதாவியே! தபோதனரே! இவை எல்லாவற்றையும் விஸ்தாரமாக உள்ளபடி அறிவதற்கு விரும்புகிறேன்' என்று சொன்னர்.

மார்க்கண்டேயர், 'அரசனே! மனிதர்களுக்கதிபதியே! மகாப்ராஜ்ஞனே! விஸ்தாரமாகவும் உண்மையாகவும் உரைக்கப்படுகின்ற இந்த வரலாறனைத்தையும் கடந்தபடி சொல்லுகிறேன்; கேள். பரதச்ரேஷ்டனே! உலகமானது ஓர் ஸமுத்திரமாகிப் பிரகாசமில்லாமற்போய் ஸ்தாவரங்களும் ஜங்கமங்களும் அழிந்து எல்லாப் பூதங்களும் முழுதும் அழிந்துபோகவே, முனிவர்களாலும் ஸித்தர்களாலும் எல்லா உலகங்களுக்கும் மஹத்வரென்று சொல்லப்பட்டவரும் உலகங்களுக்குக் காரணமானவரும் உலகங்களைப் படைப்பவரும் எங்கும் வியாபித்தவரும் நித்தியமாக இருப்பவரும் குறைவற்றவரும் நான்கு புஜங்களுள்ளவரும் சிறந்த மேனியுள்ளவருமான பகவிஷ்ணுவைக் கண்டேன். மகாபாக்கியசாலியே! பகவானும், உலகங்களைப் படைத்தவரும், மகிமையுள்ளவரும், பக்தர்களைக் காக்கிற விரதத்தினின்று தழுவாதவரும், எங்கும் வியாபித்திருப்பவருமான ஹரியானவர் அபரிமிதமான தேஜஸுள்ள சேஷனென்கிற ஸர்ப்பத்தினுடைய பெரிய தேகத்தைப் படுக்கையாகச் செய்துகொண்டு ஒருவராகவே நித்திரைசெய்துகொண்டிருந்தார். பெரிதான ஸர்ப்பதேகத்தால் இந்தப் பூமியை வியாபித்துக்கொண்டு தூங்குகின்ற அந்த விஷ்ணுவினுடைய நாபியிலிருந்து ஸூர்யனுக்குச் சமமான ஒளியுள்ளதும் திவ்யமாயிருப்பதுமான ஒரு தாமரைமலர் வெளியில்வந்தது. மஹிமைபொருந்தியவரும் உலகங்களுக்கெல்லாம் குருவாக இருப்பவரும் பிதாமஹரும் ஸூர்யனுக்கு ஸமமான ஒளிபொருந்தியவரும் நான்கு வேதங்களையும் அறிந்தவரும் நான்கு முகத்துடன்கூடியவரும் நான்கு புருஷார்த்தங்களோடுகூடியவரும் நான்கு முகங்களுள்ளவரும் தம் பிரபாவத்தினால் ஒருவராலும் ஜயிக்கமுடியாதவரும் அதிகமான பலத்துடனும் பராக்கிரமத்துடனுங்கூடியவருமான பிரம்மதேவர் அந்தத் தாமரைமலரில் உண்டானார். அரசனே! பிறகு, ஒரு ஸமயத்தில் சிறந்த வீர்யமுள்ளவர்களான மது, கைடபன் என்கிற இரண்டு அஸுரர்கள் அத்புதமானதும் பல யோஜனதூரம் விஸ்தாரமுள்ளதும் பல யோஜனதூரம் நீண்டிருப்பதுமான ஸர்ப்பத்தினுடையசரீரமாகிற படுக்கையில் படுத்திருப்பவரும் பிரபுவும் மிக்க காந்தியுள்ளவரும்

கிரீடத்தையும் கௌஸ்துபமென்கிற ரத்தினத்தையும் தரித்திருப்பவரும் பீதாம்பரத்தைத் தரித்தவரும் ஸ்ரீ தேவியினால் பிரகாசிப்பவரும் தேஜஸினாலும் அப்படியே தேகத்தாலும் ஆயிரம் ஸூர்யர்களுக்கு ஒப்பானவரும் அத்புதமான காட்சியுள்ளவருமான ஹரியைக் கண்டார்கள். அப்பொழுது, அந்த விஷ்ணுவையும் அவருடைய முகாரவிந்தத்தில் தாமரைமலர்போன்ற கண்களுள்ளவரான பிரம்மதேவரையும் பார்த்து மதுவும் கைடபனுமாகிய இருவருக்கும் மிகப் பெரிதான ஆச்சர்யமுண்டாயிற்று. பிறகு, அவ்விருவரும் அளவுகடந்த தேஜஸுள்ள பிரம்மதேவரைப் பயமுறுத்தினார்கள். அவ்விருவராலும் பலவாறு பயமுறுத்தப்படுகின்றவரும் பெரும்புகழுள்ளவருமான பிரம்மதேவர் தாமரைத்தண்டை அசைத்தார். அதனால், தேவர் விழித்துக்கொண்டார். பிறகு, தேவரீர் மிக்க வீர்யமுள்ளவர்களான அந்த இரண்டு அசுரர்களையும் பார்த்தார். தேவரான விஷ்ணுவானவர் அவ்விருவரையும் பார்த்து, 'மகா பலசாலிகளே! உங்களிருவருக்கும் நல்வரவாகுக. உங்களுக்குச் சிறந்த வரத்தைத் தருகிறேன். எனக்கு உங்கள்மீது ப்ரீதியுண்டாகிறதன்றோ?' என்று சொன்னார். மகாராஜனே! அதிக கொழுப்புள்ளவர்களும் அதிக பலமுள்ளவர்களுமான அவ்விருவரும், ஏற்றுஸ்தேகரான விஷ்ணுவைப் பார்த்து உரக்கச்சிரித்து ஒன்றுசேர்ந்து, 'தேவர்களுள் சிறந்தவனே! தேவனே! நீ எங்களிடமிருந்து வரத்தைப் பெற்றுக்கொள்வாயாக. நாங்கள் வரன்களைத் தருபவர்களாக இருக்கிறோம். ஆதலால், நீ ஆலோசியாமல் சொல்வாயாக. உனக்கு வேண்டியவரத்தை நாங்களிருவரும் தருபவர்களாக இருக்கிறோம்' என்று மறுமொழி உரைத்தார்கள். பகவான், 'வீரர்களே! நான் வரத்தை உங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுகிறேன். நான் வரத்தை விரும்புகிறேன். நீங்கள் ஆற்றலால் நிறைந்தவர்கள். உங்களிருவருக்கும் மரணமான ஆண்பிள்ளை இல்லை. மரணமான பராக்கிரமத்துடன்கூடின நீங்களிருவரும் என்னால் தெரிவுக்கப்பட்டவர்களாகவேண்டும். உலகங்களுக்கு நன்மை செய்யும்பொருட்டு இந்தப் பிரியமான வரத்தை நான் அடைய விரும்புகிறேன்' என்று சொன்னார். மதுகைடபர்கள், 'புருஷோத்தம! இஷ்டப்படி செய்யும் காரியங்களில்கூட எங்களால் இதற்குமுன் பொய் சொல்லப்பட்டதில்லை. அப்படியிருக்க, இந்த விஷயத்தில் எங்களுடைய சொல்லானது எவ்வாறு வேறு

விதமாக மாலும்? எங்களை ஸத்தியத்திலும் தர்மத்திலும் நிலை பெற்றவர்களென்று அறிவாயாக. பலத்திலும் ரூபத்திலும் சௌர்யத்திலும் சாந்தியிலும் தர்மத்திலும் தவத்திலும் தானத்திலும் நல்லொழுக்கத்திலும் மேன்பலத்திலும் இந்திரிய நிக்ரஹத்திலும் எங்களுக்கு ஒப்பானவனில்லை. தேசவ! எங்களுக்குப் பெரிய அனர்த்தமானது நேருங்கிவந்துவிட்டது. நீ சொன்னபடி செய். காலமானது எவ்விதத்தாலும் தாண்ட முடியாததன்றோ? விதுரே! தேவனே! நாங்கள் உன்னால் இது சொன்னமாத்திரம் செய்யப்பட விரும்புகிறோம். தேவர்களுள் மிகச் சிறந்தவனே! நீ எங்களிருவரையும் மேல்மறைவில்லாத இடத்தில் கொல்லாயாக. அழகிய கண்களுள்ளவனே! நாங்கள் உனக்குப் புத்திரர்களாகப் பிறக்கக்கடவோம். தேவ! இந்த வரன் எங்களால் வேண்டப் பட்டது. தேவர்களுள் சிறந்தவனே! அதனைத் தெரிக்கொள். தேவனே! எங்கள் விஷயத்தில் பிரதிஜ்ஞை செய்யப் பட்டது பொய்யாகவேண்டாம்' என்று சொன்னார்கள். பகவான், 'ஆக; அப்படியே எல்லாவற்றையும் செய்வேன். இவை அனைத்தும் நடக்கும்' என்று சொன்னான். பிறகு, மதுஸூதனரான அந்தக் கோவிந்தர் கன்றாக ஆலோசித்துப்பார்த்து அவர்களைக் கொல்வதற்குரிய ஆவரணமில்லாத பிரதேசத்தை பூமியிலேனும் ஆகாயத்திலேனும் காணவில்லை. அரசனே! பிருதை களுள் சிறந்தவரும் மிக்க புகழுள்ளவருமான மதுஸூதனர் அவரை மில்லாத தம் திருக்கைகளையும் பார்த்து மதுசூடபர்களை (அவற்றில் வைத்து) அவர்களுடைய தலைகளை புஷ்கரமுடையான சக்கரத்தால் அறுத்தார்.

இருநூற்றேழாவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(மதுகைடபர்களுக்குப் புத்திரனென துந்துவானவன் தவத்தினல் பிரம்மதேவரிடமிருந்து வரங்களைப் பெற்றுத் தேவர்களை வெற்றிசெய்ததும், உதங்கரால் ஏவப்பட்ட குவலாச்வன் அவனைப் பிரம்மாஸ்திரத்தால் எரித்ததும், தேவர்கள் முதலியவர்கள் குவலாச்வனுக்குத் துந்துமார னென்று பெயரிட்டு வரன்களைக்கொடுத்துச் சென்றதும், மார்க்கண்டேயர் துந்து மாரனுடைய உபாக்கியானத் தைப் புகழ்ந்ததும்.)

ஜனமேஜயனே! அந்த மதுகைடபர்களுக்கு மிக்க காந்தி யுள்ள துந்து வென்கிற புத்திரன் உதான்றினன். மிக்க சக்தியும் பராக்கிரமமுள்ளவனென அவன், உதங்கம் இலைத்த நம்புகள் நிரம்ப முருகாலில் நின்றுகொண்டு மிகவுக்கமும் புரிந்தான். பிரம்மதேவர் பிரியமடைந்து அவனுக்கு வரத்தைக் கொடுக்க வந்தார். அவன் பிரபுவான பிரம்மதேவரைப்பார்த்து, 'நான் நிகளிக்கமாட்டும் அளோபிக்கமாட்டும் பயஞ்சிக்கமாட்டும் நாகர்களா லும் கந்தர்வர்களாலும் ராக்ஷளர்களாலும் கொல்லத்தகாதவனாக இருக்கக்கடவேன்' என்ற வரத்தைக் கேட்டனன்; 'இந்த வரன் நான் என்னுலும் கேட்கப்பட்டிருக்கிறது' என்றும் சொன்னன். இவ்வரனால் சொல்லப்பட்ட அந்தத் துந்துவானவன் அவரிடமிருந்து விடைபெற்றுச் சென்றனன். அந்தத் துந்துவானவன் பிரபுவான பிரம்மதேவரிடமிருந்து சக்தியும் பராக்கிரமமும் அதிகரித் திருக்கிறதென்பதை அறிந்துகொண்டு அந்தத் துந்துவானவன் விரோசனிடம் விரைவாகச் சென்றனன். நாகராஜனிடம் அந்தத் துந்துவானவன் நாகர்களையும் வென்றதை நிகழ்வித்து அவர்களை ஜயித்து அடக்கி எல்லாத் தேசங்களையும் விக்ரமத்தினாலும் பிரதாபத்தினாலும் தன்வசப்படுத்தினன். பரத பூமியிடமே! பிரபுவே! மிகுட்ட மனமுள்ள அந்தத் துந்துவான வன் மனமில் நினைத்ததை கடவினில் உஜ்ஜயனகமென்று சொல் லப்படுகிற அந்த நிலத்தைப் பலாத்காரத்தால் தன் சக்தியி னல் அந்த உதங்கருடைய அபராதத்தை அதிகமாகத் தண்டம் செய்தான். அந்த உஜ்ஜயனகத்தில், பயங்கரமான

பராக்கிரமமுள்ளவனும் மதுகைடபர்களுக்குப் புத்திரனுமான துந்துவானவன் தவத்தின் பலத்தைப்பற்றியவனும் பூமியினுள் பிரவேசித்தவனும் அப்படியே மண்ணுள் மறைந்தவனுமாகி உலகத்தை அழிப்பதற்காக உதங்கருடைய ஆச்ரமத்தின் ஸமீபத்தில் நெருப்பு ஜ்வாலைகளை மூச்சினால் வெளியிட்டுக்கொண்டு படுத்திருந்தான். இதிஹாஸமயத்தில் பகைவரை அழிப்பவனும் மனிதர்களைக் காப்பவனுமான குவலாச்வராஜன் தேசனகளோடும் வாகனங்களோடும் கூடியவனும் பலசாலிகளான இருபத்தோராயிரம் பிள்ளைகளோடும் உதங்கரோடும்கூடியவனுமாக அந்தத் துந்துவின் வதத்தின்பொருட்டுப் புறப்பட்டான். பிறகு, பகவானும் பிரபுவுமான விஷ்ணு, உதங்கருடைய தாண்டி தலால் உலகங்களுக்கு ஹிதத்தைச் செய்ய விரும்பித் தம் சக்தியினால் அந்தக் குவலாச்வனிடத்தில் பிரவேசித்தார். எவராலும் ஜயிக்கமுடியாத அந்தக் குவலாச்வன் துந்துவின் வதத்திற்காகப் புறப்பட்டவுடனே, ஆகாயத்தில், 'ஸ்ரீமானான இந்த ராஜகுமாரன் துந்துமாரன் (=துந்துவைக்கொல்பவன்) ஆவான்' என்கிற பெரிய ஆரவாரம் உண்டாயிற்று. தேவர்கள் அவன்மீது தேவலோகத்திலுள்ள மலர்களை நாற்புறங்களிலும் இறைத்தார்கள். தேவதுந்துபிகளும், அடிக்கப்படாமல், தாமே ஒலித்தன. புத்திமானான அந்தக் குவலாச்வன் புறப்படும்போது குளிர்ந்தகாற்று வீசியது. தேவராஜன் பூமியைப் புழுதியில்லாமல் இருக்கச் செய்தற்காக மழையைப் பொழிந்தான். வனத்திலுள்ள மிருகங்களும் பக்ஷிகளும் அந்தக் குவலாச்வனுக்கு வலமாகச் சென்றன. யுதிஷ்டிர! துந்துவென்கிற பகாஸுரன் இருந்திருந்த இடத்திலேயே ஆகாயத்தில் தேவர்களுடைய விமானங்கள் காணப்பட்டன. குவலாச்வனுக்கும் துந்துவுக்கும் நடக்கிற யுத்தத்தைப் பார்ப்பதில் விருப்பமுள்ள மஹரிஷிகள் தேவர்களோடும் கந்தர்வர்களோடும் சேர்ந்து அந்த யுத்தத்தைப் பார்க்க வந்தார்கள். தருமபுத்திரனே! பிறகு அந்தக் குவலாச்வமஹாராஜன் அபிமந்யுவுடைய காயத்ரியினால் தன் தேஜஸினால் விருத்தியடைந்ததாகிய அந்த வில்லைப் பிடித்து சத்ருக்களோடும் துந்துவைக்கொல்வதற்கும் தீக்ஷையைக் குறித்து விரைவாகச் சென்றான். குவலாச்வமஹாராஜன் உதங்கருடைய வசத்திலிருந்துகொண்டு எல்லா உலகங்களுக்கும் கண்ணையைச் செய்வதற்காக ரணக்கடலைத் தோண்டிவைத்து செய்

தான். குவலாஸ்வனுடைய குமாரர்களால் ஏழுதினங்கள் பரிக்கப் பட்ட அந்த மணற்கடலில் மகாபலசாலியான துந்துவானவன் காணப்பட்டான். பரதஸ்ரேஷ்டனே! மணலினுள் மறைந்திருந்த அந்தத் துந்துவினுடைய பெரிய சரீரமானது, ஒளியினால் ஸூர்யன் போலப் பிரகாசிக்கின்றதும் கோரமுள்ளதுமாக இருந்தது. மகாராஜனே! ராஜஸ்ரேஷ்டனே! ஊழித் தீப்போன்ற காந்தியுள்ள துந்துவானவன் மேற்குத்திசையை மறைத்துத் தூங்கிக் கொண்டிருந்தான். குவலாஸ்வனுடைய புத்திரர்களால் காற் புறங்களிலும் சூழப்பட்டவனும், அவர்களால் எதிர்த்துக்காக்கப் பட்டவனும், கூர்மையுள்ள பாணங்களாலும் கதாயுதங்களாலும் உலக்கைகளாலும் பட்டணங்களாலும் ஈட்டிகளாலும் பிராஸங் களாலும் தீட்டப்பட்ட பலபலப்பான கத்திகளாலும் துன்புறுத் தப்படுகின்றவனும், மகாபலசாலியுமான அந்தத் துந்துவானவன் மிக்க கோபங்கொண்டவனாக எழுந்திருந்தான். அப்பொழுது, பிரளயகால சூரியப்பிரபன்ற சூரியனை வாயிலிருந்து கக்குகின் றவனும் கோபமுள்ளவனுமான அந்தத் துந்துவானவன் அவர்களு டைய பலவிதமான ஆயுதங்களை விழுங்கினான். ராஜஸ்ரேஷ்டனே! கோபங்கொண்ட அந்த அஸுரன் வாயிலிருந்து உண்டான சூரிய மண்டலங்களைத் தன்னிடமிருந்து வெளிப்படுத்துகின்றவன்போலத் தன்னுடைய சூலத்தினால் அந்த ராஜகுமாரர்களனைவரையும், முற்காலத்தில் சூரியன்கொண்ட பிரபலமான கோபம் ஸகரனுடைய குமாரர்களை எரித்ததுபோல், சூரியன்பொழுதில், எரித்து விட்டான். அது அதிசயமாயிருந்தது. பரதசார்தூலனே! அந்த ராஜகுமாரர்கள் அஸுரனால் எரிக்கப்பட்ட பின்பு, நீண்ட ஒரு நிசாகாலமானபின் விழித்தெழுந்தவர்போல அஸுரனை (அஸுரன்) நோக்கி, மிகுந்த கோபத்துடன் அம்புகளால் அடித்தார்கள். பரத பூஷபனே! பிறகு, அதிசய முள்ளவனும் பராக்கிரமமுள்ள அஸுரனுமான அவன் அவர்களால் அடிக்கப்பட்டு கோபாக்னியால் ஜ்வலிப்பவனாகி அவர்களை எரித்தான். பரதஸ்ரேஷ்டனே! அந்தத் துந்துவினுடைய

வேமிரூரு த்ரிலோகுகாதன்போன்றவனும் ராஜரிஷியுமான அந்தக் குவ்லாஸ்வன் தேவசத்துருவான மகாஸ்ரனை அஸ்திரத்தால் எரித்து வெற்றியுடன் விளங்கினன். பெரியமனமுள்ள குவலாஸ்வராஜன், அப்பொழுது துந்துவிணையுடைய வதத்திணல் துந்துமாரனென்கிற பெயரால் பிரஸித்தியுள்ளவனானன். அரசனே! பிறகு, ப்ரீதியுள்ளவர்களான எல்லா மகரிஷிகளுடனும் கூடின தேவர்களால், 'வரத்தைப் பெற்றுக் கொள்' என்று சொல்லப்பட்ட அந்தக்குவலாஸ்வன், அப்பொழுது நன்கு வணங்கினவனும் கைகுவித்துக்கொண்டவனும் மிக்க மனக்களிப்புற்றவனுமாகி, அவர்களைப்பார்த்து, 'சிறந்த பிராமணர்களின்பொருட்டுப் பொருளைக் கொடுக்கக்கடமேவன்; பகைவர்களால் எவ்விதத்தாலும் ஜயிக்கமுடியாதவனாகக்கடமேவன்; எனக்கு விஷ்ணுவிடத்தில் நேசமுண்டாகவேண்டும்; பிராணிகளிடத்தில் துரோகபுத்தி உண்டாகவேண்டாம். தர்மத்தில் எப்பொழுதும் பற்றுதலிருக்கவேண்டும். அப்படியே, அக்ஷயமான ஸ்வர்க்கவாஸம் ஏற்படவேண்டும்' என்கிற வசனத்தை உரைத்தான். பிறகு, ப்ரீதியடைந்தவர்களான தேவர்களாலும் ரிஷிகளாலும் கந்தர்வர்களாலும் சிறந்த புத்தியுள்ள உதங்கராலும், 'அப்படியே ஆகட்டும்' என்று அந்த அரசன் சொல்லப்பட்டான். பிறகு, தேவர்களும் மஹரிஷிகளும் அந்தஅரசனைப் பலவிதஆசீர்வாதங்களால்வாழ்த்திவிட்டுத் தங்கள் ஸ்தானங்களை அடைந்தார்கள். பரதகுலத்தில் பிறந்தவனே! யுதிஷ்டிரா! அந்தக் குவலாஸ்வனுக்கு அப்பொழுது த்ருடாஸ்வன், கபிலாஸ்வன், பத்ராஸ்வனென்கிற மூன்றுபிள்ளைகள் மிகுந்தவர்களாக இருந்தார்கள். தேவர்தே! மகாபாக்கியமுள்ளவனே! மகாத்மாக்களும் அபரிமிதமான பராக்கிரமசாலிகளுமான இக்ஷ்வாகுகுலத்தில்பிறந்த அரசர்களுடைய வம்சபரம்பரையானது அம்மூவர்களிடமிருந்தும் உண்டாகியது. மிகச்சிறந்தவனே! மதுகைடவர்களுக்குப் புத்திரனை துந்துவென்கிற அந்த மகாஸுரன் அந்தக் குவலாஸ்வனால் இவ்வண்ணம் கொல்லப்பட்டான். அதுமுதற்கொண்டு, அந்தக் குவலாஸ்வராஜன் காரணப்பெயரால் துந்துமாரனென்று எண்ணப்பட்டவனானன். எவனுடைய செய்கையினால் (இந்த) உபாக்கியானமானது நளாந்துமாரமென்று பிரஸித்தியடைந்ததோ, எந்த உபாக்கியானத்தைப்பற்றி என்னைக் கேட்டாயோ, அவனுடைய இந்த முழுமையும் என்னால் உனக்கு உரைக்கப்பட்டது. விஷ்ணுவினுடைய சரித்திரை

ஈன்றுக் வெளிப்படுத்துகிற புண்யமான இந்த உபாக்யான்த்ணை எந்த மனிதன் கேட்பதோ அவன் தார்மிகனும் புத்திரர்களுட னும் புத்ரிகளுடனும் கூடியவனும் ஆவான். மனிதன் பர்வகாலங் களில் இந்த உபாக்யானத்ணைக் கேட்டால் தீர்க்காயுளுள்ளவனும் ஸம்பத்துள்ளவனும் கவலையற்றவனுமாகி வியாதிபயத்தைச் சிறிதும் அடையான்' என்று கூறினர்.

இருநூற்றெட்டாவது அத்யாயம்.

மார்க்கண்டேய ஸமாஸ்யா பர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர் பதிவிரதைகளின் மகிமையைச் சொல்லத் தொடங்கியது.)

பரதர்களுள் சிறந்தவரே! பிறகு, அந்த யுதிஷ்டர ராஜர், மகரிஷிகளுள்ளவரான மார்க்கண்டேயரைப் பார்த்து, 'பகவானே! பிராம்மணரே! உம்மால் சொல்லப்படுவதும் நட்பாடானதும் உள்ளபடி தர்மத்தையறிந்து விலகாததும் சிறந்ததுமான ஸ்திரீ களுடைய மகிமையைக் கேட்க விரும்புகிறேன்' என்று [1] சொல்லி னார். அதற்கு மார்கண்டேயர் சொல்லினார். 'பிரம்மரிஷியே! ராஜரிஷிகளுள் உத்தமரே! பிருதுகர்மரே! இவ்வுலகில் ஸ்திர் யாலும் சக்ரவர்த்தியாலும் வாயுவாலும் பூமியாலும் அக்னியாலும் தர்மமும் தாயும் மகிமை பொருந்தியது [2] இவற்றால் பாடாடவர்களால் கவனிக்கப் படவேண்டியதாகும். ஆகையால் பதிவிரதைகளுடைய பெருமையை விஸ்தரித்துச் சொல்லவேண்டும். பிரபுதேவ! பக வானே! பிராம்மணரே! மஹரிஷிகளின் சரித்ரங்களையும் ஸ்திரீ

1 'அறிகுறியே' என்பது பேடபாடத்தின் பொருள்.

2 வேறு பாடம்.

களுக்குக் கணவனிடம் செய்யத்தக்க சுச்ரூஷையும் செய்வதற் கரியவையென்று எனக்குத் தோன்றுகின்றன. பிராம்மணரே! நல்ல ஆசாரமுள்ளவர்களும் ஸாதுக்களால் புகழப்பட்டவர்களு மான ஸ்திரீகள் [1] எதைச்செய்கிறார்களோ ஸ்திரீகளுடைய மிகவும் கோரமான அந்தத் தர்மத்தைக்காட்டிலும் வேறான செய்யமுடியாத காரியமொன்றையும் நான் காணவில்லை. தங்கைகளும் தாய்களும் செய்யமுடியாத காரியத்தையன்றோ செய்கிறார்கள்? ஸ்திரீகள் ஒரு வனையே கணவனைக்கொண்டிருப்பதையும் உண்மையைப் பே வதையும் கர்ப்பத்தை வயிற்றினுல் பத்துமாதகாலம் சுமப்பதை யுங்காட்டிலும் மிக்க ஆச்சர்யமான விஷயம் என்ன இருக்கிறது? பிரபுவே! ஸ்திரீகள் அதிகமான பிரஸவ ஸம்சயத்தையும் நிகரில் லாத வேதனையையுமடைந்து அதிக கஷ்டத்தினுல் புத்திரர்களைப் பெறுகிறார்கள்; பிராம்மணரே! அந்தப்பிள்ளைகளை மிக்க அன்புடன் வளர்த்தலையும் செய்கிறார்கள். பிறகும், 'இந்தப் புத் திரன் எவ்விதக் கஷ்டமுள்ளவனைக இருப்பானே?' என்று கவலையை அடைகிறார்கள். ஸ்திரீகள் சதுரியவர்களான கணவனைச்சார்ந்த எல்லாரிடமுமிருந்துகொண்டு அவர்களால் வெறுக்கப்படும் தாம் செய்யவேண்டிய காரியத்தை எப்படியாயினும் செய்வதும் மிகக் கஷ்டமானதென்று நான் என்றெண்ணுகிறேன். பிராம்மணரே! ஸ்திரீகளுடைய கடமையைச் செய்வதன் உண்மையை எனக்கு விரித்து உரைப்பீராக. பிராம்மணரே! மஹாத்மாக்களுடைய தர்ம மானது குருவானவன் சிஷ்யனுல் எவ்விதத்தாலும் அடையமுடியா தது. பகவானே! பிரம்மனுடைய புத்திரர்களுள் சிறந்தவரே! இந்தப் பிரச்னத்தின் உத்தரத்தைத் தேடக விரும்புகிறேன். பிருகு குலத்தில் பிறந்தவர்களுள் சிறந்தவரே! நல்ல விரதத்தையுடைய வரே! தேவரிஷியுடைய மறுமொழியைத் தேடக விரும்புகிறேன்' என்று வினவினர்.

மார்க்கண்டேயர், 'பரதர்களுள் சிறந்தவனே! நீ கேட்கும் விடைகூற முடியாத இந்த வினாவுக்கு நான் உனக்கு எங்ஙனம் துடன் விடைகூறுவேன். உன்னைப்போல் சிலர் என்னிட மிருந்து அதனை நீ தெரிந்துகொள்வாயாக. ஜனமேன! சிலர் தாயை மேன்மையுடையவளென்று சொல்லுகிறார்கள். சிலர் தந்தைகளை மேம்பாடுடையவர்களென்று எண்ணுகிறார்கள். வந்தத் தாய் குழந்தைகளை வளர்க்கிறாளோ அவள் செய்யமுடியாத காரியத்

[1] வேறுபாடம்.

னைதச் செய்கிறாள். தாய் தந்தைகள் தவத்தினாலும், தேவதை களின் ஆசீர்வாதங்களாலும், வந்தனத்தினாலும், ப்ரமங்களைப் பொறுப்பதனாலும், மிகச்சிறந்த உபாயங்களாலும் புத்திரர்களை அடையப்பெறுகிறார்கள். வீரனே! இவ்வண்ணம் மிக்க ப்ரமத் தினால் அடைதற்கு மிக அரிய புத்திரனை அடைந்து, 'இவன் எப்படி இருப்பானோ' என்று எப்பொழுதும் கவலை அடைகிறார்கள். பாரத! தந்தையும் தாயும் புத்திரர்கள்விஷயத்தில் யசஸையும் கீர்த்தியையும் ஐச்வர்யத்தையும் தேஜஸையும் தர்மத்தையும் விரும்புகிறார்கள். பரீக்ஷித்தனே! எப்பொழுதும் தீர்க்கதர்சி செய்பவர்களான அந்தத் தாய்தந்தைகளுடைய ஆணையை எவன் ஸபலமாகச் செய்கிறானோ அவனை தர்மங்களை அறிந்தவன். பரீக்ஷித்தனே! எந்தப் புத்திரன்விஷயத்தில் தினந்தோறும் தந்தை தாய் இருவரும் ஸந்தோஷமடைகிறார்களோ அந்தப் புதல்வனுக்கு இம்மையிலும் மறுமையிலும் சாச்வதமான கீர்த்தியும் தர்மமும் எற்படுகின்றன; ஸந்தானமான யாகந்தொடர்ச்சியும் வேண்டாம்; ப்ரதக்ஷிணமும் உபவாஸமும் வேண்டுவதில்லை. பார்த்தா விடத்தில் சுச்ரூஷை செய்கிறவள் அந்தச்சுச்ரூஷையினால் ஸ்வர்க் கத்தை அடைகிறாள்; இது நிச்சயம். அரசனே! யுதிஷ்டிர! இந்த ஸந்தர்ப்பத்தை முன்பு பதிவிரதைகளுடைய தர்மநியமத்தை நீ வாஸுதேவரிடம் கேள்.

இருநூற்றுஎண்பதாவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யா பர்வம். (தொடர்ச்சி.)

(மாத்ருயிடம் தவம்புரிகின்ற கௌசிகன் தன்னிடம் எச்சமிட்ட கொக்கைக்கண்டு பார்வையினால் எரித்தது, பிக்ஷைக்காகத் தாம தித்ததால் கோபங்கொண்டு அவனைப் பதிவ்ரதை யானவள் கொக்கின் வரலாற்றைக் குறிப்பிட்டுத் தர்ம வ்யாதரிடம் போகச் சொல்லியதும்.)

பரத! பிராம்மணர்களும் மிகச்சிறந்தவர்களும் சிலதங்களை அநுஷ்டிப்பவனும் சிறந்தகுலமும் தவத்தையுடைய பிராம்மணனாகக்கொண்ட வனும் சிறந்த குலமும்வயதும் கர்மங்களுமான பிக்ஷாசிகனென்கிற ஒரு பிராம்மணன் இருந்தான். அந்தப் பிராம்மணன் பிக்ஷைக்காகச் சென்ற வீடுகளுடனும் உபந்யஸிக்கப்பட்டவர்களுடனும் சிலதங்களை அநுஷ்டி

யனம் செய்தவன். அவன் ஒரு மரத்தினடியில் வேதங்களை உச்சரித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அந்த மரத்தின்மேல் ஒரு கொக்கு உட்கார்ந்திருந்தது. அப்பொழுது, அந்தக் கொக்குப் பிராம்மணன்மீது எச்சமிட்டுவிட்டது. மகாராஜனே! பிறகு, பிராம்மணன் கோபங்கொண்டவனாக மரத்தினுடைய உச்சியில் உட்கார்ந்துகொண்டிருந்த அந்தக் கொக்கை நன்றாகப்பார்த்து அதற்குத் தீங்கு செய்ய நினைத்தான். கோபம் மிகமேலிட்ட பிராம்மணனால் பார்க்கப்பட்டதும் மனத்தினால் தீங்குநினைக்கப்பட்டதுமான அந்தக் கொக்கானது பூமியில் விழுந்தது. அதிவற்று உயிர் போய் விழுந்திருக்கிற அந்தக் கொக்கைப்பார்த்து, பிராம்மணன், கருணையினால் மிக்க மனவருத்தமடைந்தவனாக, 'நான் வெறுப்புக்களால் வலிமைசெய்யப்பட்டு அகார்யத்தைச் செய்துவிட்டேன்' என்று மிக்க துயரத்தையடைந்தான். தற்றறிந்தவனான அவன் இவ்வண்ணம் பலவாறு கூறிப் பிணத்திற்காகக் கிராமத்தை அடைந்தான். பரதஸ்ரேஷ்டனே! அந்தப் பிராம்மணன் கிராமத்தில் சுத்தியுள்ள வீடுகளில் பிணத்தை எடுத்துக்கொண்டு முன் பிணத்தை எடுத்த வழக்கமுள்ள ஒரு வீட்டில் நுழைந்தான். பிறகு, 'பிணத்தை எடு' என்று யாசிக்கின்ற அவனை, அந்த ஸ்த்ரீயானவள், 'குடும்பினியானவள் பாத்திரங்களைச் சுத்திசெய்துகொண்டு வருகிறவரையில் காத்துக்கொண்டிரும்' என்று சொல்லப்பட்டான். அரசனே! பரதர்களுள் சிறந்தவனே! இந்தச் சமயத்தில் அவளுடைய கணவன் மிகவும் பசியினால் பீடிக்கப்பட்டுத் தன் வீட்டினுள் நுழைந்தான். அந்தப்பதிவிரதை பர்த்தாவைப்பார்த்து, அந்தப் பிராம்மணனைக் கவனியாமல், பர்த்தாவுக்குக் கால்களை அலம்புவதற்காக ஜலத்தையும் ஆசமனத்திற்காகத் தீர்த்தத்தையும் அப்படியே ஆஸனத்தையும் கொடுத்தாள். கருணையினால் கண்களையும் அவள் வணக்கமுள்ளவளாகப் பர்த்தாவை ஆதரத்தோடும் பக்தியுடன் களாலும் அப்படியே மிக்க மதுரமான வாக்கியங்களாலும் உபசரித்தாள். யுதிஷ்டிர! (கணவனால்) கௌரவிக்கப்பட்டவளும் கணவனுடைய மனத்தை அறிந்திருப்பவளுமான அவள் தீர்த்தம் கணவனுண்ட மிச்சத்தை உண்கிறாள்; பதிவ்ரதைகளுக்கு விரதமும் எண்ணினாள். அந்தப் பதிவ்ரதை எல்லாப் பிராணிகளிலும் அடைந்தவளும் பதிவ்ரதைகளிலே சிறந்தவளுமான அந்த ஸ்த்ரீ சௌந்தர்யத்தினாலும் மனத்தினாலும் வாக்கினாலும் பதியை மீறிப் போஜனமும் செய்யாள்; ஜலபானமும் செய்யாள். கல்ல

ஆசாரமுள்ளவளும் சுத்தியுள்ளவளும் ஸாமர்த்தியமுள்ளவளும் குடும்பத்திற்கும் பர்த்தாவுக்கும் ஹிதத்தைச் செய்வதில் விருப்பமுள்ளவளுமான அவள் எப்பொழுதும் எது ஹிதமோ அதையே அனுஸரித்துவந்தாள். தேவதைகளுக்கும் அதிதிகளுக்கும் மேலோர்களுக்கும் அப்படியே மாமியார் மாமனர்களுக்கும் தினமும் பணிசெய்வதில் பற்றுள்ளவளும் எப்பொழுதும் இந்திரியங்களை நன்கு அடக்கினவளும் இனியபார்வையுள்ளவளுமான அந்த க்ருஷ்ணை பர்த்தாவுக்குப் பணிசெய்யும்பொழுது பிரகாசத்தை விரும்பி நிற்கின்ற ப்ராம்மணஸ்ரேஷ்டரைப் பார்த்தாள். அவர் தபஸ்களுள் மிகச்சிறந்தவரே! கிருஷ்ணையான அந்தப் பதிவிரதை அப்பொழுது ரிஷிகளுள்ளவளானாள்; ப்ராம்மணரிடம் பிரகாசத்தை நிறுத்திக்கொண்டு வெளியில் வந்தாள். ப்ராம்மணர், 'உத்தமஸ்த்ரீயே! அம்மா! இதென்ன? நீ என்னை, 'நில்' என்று சொல்லி என்பிரகாசத்தை நிறுத்தச் செய்தாய். என்னை அறியவில்லை' என்று சொன்னார். அபசாரமே! கோபத்தினால் மிக்கதாபத்தை அடைந்தவரும், தேஜஸினால் ஜ்வலிப்பவரும் போலிருக்கிறவருமான ப்ராம்மணரைப் பார்த்து, இன்சொல்லை முன்னிட்டு, 'ப்ராம்மணரே! பொறுத்துக்கொள்ளுங்கள். ஸ்த்ரீகளுக்குள்ள அறியாமையைப் பொறுத்துக்கொள்ளுங்கள். பகவானே! என்விஷயத்தில் அனுக்ரஹம் செய்வீராக. ப்ராம்மணரே! என்விஷயத்தில் கருணைபுரிவீராக. குற்றமற்றவரே! என் குற்றத்தை நீ பொறுக்கவேண்டும். எனக்குப் பர்த்தா பெரிய தேவதை. பதிவ்ரதைகளால் வந்திருக்கின்ற அந்த என்பர்த்தாவுக்கு நான் பணிவிடை செய்தேன்' என்று சொல்ல, ப்ராம்மணர், 'உன்னால் ப்ராம்மணர்கள் சினமடையவில்லை. உன்னாலேயே உன்னால் சினமடையவைக்கப்பட்டான். கிருஷ்ணே! நீ ப்ராம்மணர்களை அவமதிக்கிறாய். இந்திரன் கூட சிலரை மதிக்கிறான். அப்படியிருக்க, பூமியில் மனிதன் சிலரை மதிப்பதில் ஸம்சயமென்ன? கல்யாணீ! நீ அறியவில்லை. நீ ஞானவ்ருத்தர்களுடைய மஹிமையைக் கேட்டதில்லை. அதனால்தான் ஸப்தரிஷிகளான ப்ராம்மணர்கள் அவமதிக்கப்பட்டதால் மஹிமைகளாதும் காந்திகளாதும் தேஜஸ்களாதும்கூட இவைகளைக்கூட விரைவாகவே எரித்து விடுவார்கள்' என்று சொன்னார். பின்பு, 'ப்ராம்மணியே! நான் சொல்வதைக் கேள்! கல்யாணீ! சொல்லுகிறேன். கோபத்தைவிட்டுவிடு. கோபமுள்ளவளான நீ

கோபமுள்ள இந்தப் பார்வையினால் என்னை என்ன செய்துவிடுவீர்? நான் தேவர்களுக்குச்சமானர்களும் பெரிய மனமுள்ளவர்களுமான பிராம்மணர்களை அவமதிக்கிறதில்லை. தோஷமற்றவரே! பிராம்மணரே! நீர் இந்த அபராதத்தைப் பொறுக்கவேண்டும். நான் சிறந்த புத்தியுடையவர்களான பிராம்மணர்களுடைய சக்தியையும் மகிமையையும் அறிவேன். பிராம்மணர்களுடைய கோபத்தினால் ஸமுத்திரமானது உவர்நீருள்ளதும் பானம்செய்வதற்குத் தகாததுமாகச் செய்யப்பட்டதன்றோ? அப்படியே, ஜ்வலிக்கின்ற தவமுள்ளவர்களும் ஆத்மாவைத்தியானிப்பவர்களுமான முனிவர்களுடைய கோபத்தீயானது இன்றுங்கூட ஸமுத்திரத்தினால் தணியாமலிருக்கிறது. அளவுகடந்த சக்தியுள்ள அந்தப்பிராம்மணர்களை எந்தமூடன்தான் அவமதிப்பான்? மிக்க கெட்டஎண்ணமுள்ளவனும் குரூரனுமான வாதாபி என்கிற மகாஸுரன் பிராம்மணர்களை அவமதித்ததனால் அகஸ்திய ரிஷியை அடைந்து நீர்ணமானான். மகாத்மாக்களான பிராம்மணர்களுடைய அற்பமான பெருமைகள் கேட்கப்படுகின்றன. பிராம்மணரே! மகாத்மாக்களுக்குக் கோபமும் மிகவும் அதிகம்; அனுக்ரஹமும் அதிகம். பிராம்மணரே! தோஷமற்றவரே! இந்தக்குற்றத்தை நீர் பொறுக்கவேண்டும். பிராம்மணரே! பார்த்தாவினுடைய பரம ரஹஸ்யத்தினால் உண்டாகும் தர்மமே எனக்கு ருசிக்கிறது. எல்லாத் தீகளைகளுக்கும் என்னுடைய கண்ணே பரீக்ஷணை. பிராம்மணரே! நீங்களெல்லாம் கோபத்தோடு பேதமின்றி அந்தப் பார்த்தாவுக்கு நான் என்னுடையவனாகச் செய்வேன். பிராம்மணரே! பார்த்தஸர்வரக்ஷைக்குப் பலன் என்னிடமிருப்பதைப் பாருங்கள். கொக்கானது உம்மால் கோபத்தால் பரிக்ஷிக்கப்பட்டதன்றோ? அது என்னால் அறியப்பட்டது. பிராம்மணோத்தமரே! மனிதர்களுக்குக் கோபமானது உடனிருப்பது பலமல்ல. நீர் கோபித்துக்கொள்ளவேண்டாம். பதிவ்ரதையான நான் கொக்குப்போலக் கொல்லப்படுத்தக்கவளாகமாட்டேன். பலமான கோபத்தையும் மோகத்தையும் விடுகிறவளை அவர்கள் பிராம்மணனாக அறிகிறார்கள். எவன் இவ்வுலகத்தில் வாத்தியாரின் கியங்களை உரைப்பதினை, ஆசார்யரான ஸந்தோஷப்படுத்துவதினை, பிறரால் தான் துன்பம் செய்யப்பட்டாலும் பிறரைத் துன்பம் செய்யாதிருப்பதினை அவனைத் தேவர்கள் பிராம்மணனாக அறிகிறார்கள். எவன் இந்திரியங்களை ஜயித்தவனாகவும் தர்மத்தில் முக்கிய நோக்கமுள்ளவனாகவும் வேதாத்தியயனத்தில் டம்பமற்றவனாகவும்

சுத்தனுகவுமிருப்பானே, காமம் கோபமிரண்டும் எவனுக்கு வசப்பட்டிருக்குமோ அவனைத் தேவர்கள் பிராம்மணனாக அறி கிறார்கள். தர்மங்களை அறிந்தவனும் சிறந்த மனமுடையவனும் எல்லாத் தர்மங்களையும் செய்பவனுமான எந்த மனிதனும் தனக்குச் சமமாக எண்ணப்படுகிறானோ அவனைத் தேவர்கள் பிராம்மணனாக அறிகிறார்கள். எவன் வேதங்களை அத்தியயனம் செய்விப்பானே, தானும் அத்தியயனம் செய்வானே, எவன் யாகம் செய்வானே, பிறர்களுக்கும் யாகத்தைச் செய்விப்பானே, சக்திக்குத் தக்கபடி தானம் செய்வானே, அவனைத் தேவர்கள் பிராம்மணனாக அறிகிறார்கள். பிரம்மசர்யத்தையுடையவனும் [1]சொல்வன்மை யுள்ளவனும் மதமில்லாதவனும் சிறந்த வேதங்களை ஓதினவனும் வேதங்களை அத்யயனம் செய்துகொண்டே இருப்பவனுமான பிராம்மணோத்தமனைத் தேவர்கள் பிராம்மணனாக அறிகிறார்கள். பிராம்மணர்களுக்கு எது பகிரங்கமோ அதை இவர்களுக்கு இரு பதாகச் சொல்லவேண்டும். அப்படி. ரஹஸ்யத்தைப் பேசு கிறவர்களுக்குப் பொய்யில் மனமானது ஸந்தோஷமடையாது. பிராம்மணோத்தமரே! பிராம்மணனுக்கு வேதத்தையும் மனத் தின் அடக்கத்தையும் மௌம், வாக்கு, தானம் என்னும் மூன்றி னுடைய நற்றுணையையும் இந்திரிய நிக்ரஹத்தையும் சாஸ்வத மான பொருளாகச் சொல்லுகிறார்கள். நான்கை அறிந்த ஜனங் கள் ரஹஸ்யத்தையும் மேலுலகுக்குச் சுகங்களுடைய நற்றுணையை யும் சிறந்த தர்மமாகச் சொல்லுகிறார்கள். சாஸ்வதமான தர்மமா னது எல்லாவிதத்தும் அறியப்படாதது. அந்தத் தர்மமானது ரஹஸ்யத்தில் நிலைபெற்றிருக்கிறது. தர்மமான தும் ரஹஸ்யம் பிர மாணமாகச் சொல்லப்பட்டதென்று வேதவித்துக்களுடைய உபதேசம். பிராம்மணரே! மனிதர்களான தர்மதேவ பஸ்வாமிக்கு தானமாகிறது. பகவானே! நீங்கள் நான் தர்மத்தை அறிந்தவர்; தேவதேவனுக்கு நான் பிரியமானவர்; சுத்தர். பகவானே! தர்மத்தை நீர் உள்ளபடி அறியவேண்டுமென்று என்னால் பிரார்த்திக்கப் பட்டீர். பிராம்மணரே! உங்கள் தர்மத்தை நீர் அறியவேண்டுமென்பதால் மிகவும்பிரியத்துடன் தர்மரஹஸ்யத்தைச் சொல்லுவேன். தாய்தந்தைகளுக்குச் சுஸ்ரூஷணை செய்கிறவனும் உண்மையாயும் பிரசுரமாயும் நடக்கிறவனான விபாகி மிதிலையில் வசிக்கிறான். அவன் உமக்குத் தர்மங்

[1] 'வதான்ய:' என்ற மூலம்; 'சுலக்ஷணன்' என்றும் கொள்ளலாம்.

களைச் சொல்லுவார். பிராம்மணோத்தமரே! உமதிஷ்டப்படி அவ்விடம் செல்லுவீராக. உமக்கு மங்களம். பரமதார்மிகரான அந்த வியாதர் உம்முடைய ஸம்சயத்தைப் போக்குவார். இகழப் படாதவரே! அதிகமாகச் சொல்லப்பட்டிருந்தாலும் என்னுடைய (அபசாரங்கள்) எல்லாவற்றையும் பொறுக்கக்கடவீர். எவர்கள் தர்மத்தை அறிகிறார்களோ அவர்களனைவருக்கும் ஸ்திரீகள் வதம் செய்யத்தகாதவர்களல்லரோ?' என்று சொன்னாள். பிராம்மணன், 'நான் பிரீதியுள்ளவனாக இருக்கிறேன். உனக்கு மங்களம். கல்யாணி! கோபம் போய்விட்டது. உன்னால் சொல்லப்பட்டதெல்லாம் எனக்குச் சிறந்த நன்மையே ஆயிற்று. உனக்கு க்ஷேமமுண்டாகட்டும். கல்யாணி! நான் மிதிலைக்குச் செல்வேன். என் காரியத்தை நிறைவேற்றிக்கொள்வேன். கல்யாணி! இப்படிப்பட்ட நடையுள்ள நீ பாக்கியவதியாக இருக்கிறாய்' என்று சொன்னான். அவளால் சொல்லி அனுப்பப்பட்ட பிராம்மணோத்தமனான அந்தக் கௌசிகன் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுத் தன்னை நிந்தித்துக்கொண்டு தன் வீட்டையே அடைந்தான்.

இருநூற்றுப்பத்தாவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(கௌசிகன் பதிவிரதையின் சொல்லால் தர்மவியாதரிடம் சென்றதும், தர்மவியாதர் அவனுக்கு எல்லாத் தர்மங்களையும் உபதேசித்ததும்.)

அந்தப் பிராம்மணன் ஸ்திரீயினால் சொல்லப்பட்ட அந்த ஆச்சரியத்தை முழுமையும் நினைத்துத் தன்னை அதிகமாக நிந்தித்துக்கொண்டு குற்றம்செய்தவன்போலக் [1] காணப்பட்டான். பிறகு, அவன் தர்மத்தினுடைய ஸூக்ஷ்மகதியைச் சிந்திக்கின்றவனாக, 'நான் ஸ்ரத்தையுள்ளவனாக வேண்டும்; மிதிலைக்குச் செல்லுகிறேன். சுத்தமான மனமுள்ளவரும் தர்மத்தை அறிந்தவருமான வியாதர் அந்த மிதிலையில் வஸிக்கிறாரன்றோ? அந்தத் தர்மதனரிடம் தர்மத்தைக் கேட்பதன்பொருட்டு நான் இப்பொழுதே செல்லுகிறேன்' என்று சொன்னான். அவன் மனத்தால் இவ்வாறு நன்கு ஆலோசித்து, ஸ்திரீயினுடைய வசனத்தில்

1 'சூலேஹன்' என்பது மூலம்.

நம்பிக்கையுள்ளவனுகவும், கொக்கின் செய்தியைக்கேட்டு உண்டான நம்பிக்கையினுலும் தர்மத்தைவிட்டு விலகாத மங்களகரமான அவளுடைய வசனங்களாலும் ஆவலுடன்கூடியவனுகவும் மிதிலையை நோக்கிப் புறப்பட்டான். பிறகு, அவன் காடுகளையும் கிராமங்களையும் நகரங்களையும் தாண்டி ஜனகனுல் நன்கு காப்பாற்றப்பட்டதும், தர்மமாகிய அரணையினுல் சூழப்பட்டதும், யாகங்களும் உத்ஸவங்களுமுள்ளதும், மங்களகரமானதும், தோரணங்களும் அட்டாலகங்களுமுள்ளதும், உப்பரிகைகளாலும் மதில்களாலும் அழகியதுமான மிதிலையை அடைந்தான். அந்தப்பிராம்மணன் அழகியதும், அநேக [1]ஸ்தானங்களோடுகூடியதும், அநேகமான வாணிகப் பொருள்களுள்ளதும், நன்முக வகுக்கப்பட்ட ராஜமார்க்கங்களுள்ளதும், குதிரைகளோடும் ரதங்களோடும் அப்படியே யானைகளோடும் அநேக யுக்தவீரர்களோடும் கூடியதும், எங்கேயும் காவலாளர்களும் பிரயாணிகளுமான ஜனங்கள் எங்கும் நிரம்பியதும், எப்பொழுதும் உத்ஸவங்கள் நிறைந்ததுமான மிதிலையில் நுழைந்து சென்று கொண்டே அநேகம் நுந்தாந்தங்களுடன் கூடின அந்த மிதிலையைப் பார்த்தான்; தர்மவ்யாதனைப்பற்றிக் கேட்கவும் கேட்டான். அந்தத்தர்மனியாகவும் பிராம்மணர்களால் இவனுக்குச் சொல்லப்பட்டார். அவனிடம் சென்று, மிருகங்களைக் கொல்லுமிடத்தை நெருங்கி இருப்பவனும் மாமிசங்களையும் எருமைமாமிசங்களையும் விற்பவனும் கசாப்புமான அந்தத் தர்மவ்யாதனைக் கண்டான். இவனுடைய வீட்டில் வசிப்பவர்களும் பிராம்மணர்களும் மிகவும் வியந்தார்கள். 'பிரபுவான! உம்மை அடிமைகளாக நினைக்கிறேன். பிராம்மணரே! உமக்கு நல்வரவாகட்டும்! நான் என்ன செய்யவேண்டும்? உமக்கு நன்மை உண்டாகட்டும். நீர் மிதிலைக்குப் போகிறவர்களுடன் சேர்ந்து போவதற்கு நினைத்திருந்தீர்களல்லவா? நீர் இந்த இடத்திற்கு வந்த காரியமும் அதன் அபிப்பிராயமும் நான் அறிவேன்' என்றும். அவனுடைய அந்த வாக்கியத்தைக் கேட்டு அந்தப் பிராம்மணர்கள் மிக வியந்தார். 'இது இவனுக்கு ஆச்சர்யம்'

[1] 'புழுதிகளுள்ள வீடு' என்பது மூலபாடம்.

என்று எண்ணினான். பிறகு, வியாதர் பிராம்மணனைப் பார்த்து, 'பகவானே! தோஷமற்றவரே! இந்த இடத்திலிருப்பது உமக்குத் தக்கதன்று. உமக்கு விருப்பமிருந்தால், வீட்டுக்குச் செல்வோம்' என்று சொன்னர். பிராம்மணன் ஸந்தோஷமடைந்து அவரைப் பார்த்து, 'ஆக' என்றே சொன்னான். அந்த வியாதர் பிராம்மணனை முன்னிட்டுக்கொண்டு வீட்டைக்குறித்துச் சென்றார். அழகிய வீட்டில் நுழைந்து, அந்த வியாதரால் அந்தப் பிராம்மணோத்தமன் அர்க்கியத்தாலும் ஆஸனத்தாலும் நன்றாகப் பூஜிக்கப்பட்டான். பிராம்மணோத்தமன் பாத தீர்த்தத்தையும் ஆசமனீயத்தையும் பெற்றுக்கொண்டான்.

பிறகு, ஸுகமாக வீற்றிருக்கிற பிராம்மணன், அந்தவ்யாதரைப் பார்த்து, 'இந்தத் தொழிலானது உமக்குத் தகுந்ததன்றென்று எனக்குத் தோன்றுகிறது. ஐயா! கோரமான உம்முடைய இத் தொழிலால் நான் மிகவும் பரிதாபத்தை அடைகிறேன்' என்கிற வசனத்தைச் சொன்னான். வியாதர், 'நாகப்பன் பாட்டன் பரம்பரையாகச் செய்யப்பட்டுவருவதும் சிறந்ததுமான இந்தத் தொழிலானது என் குலத்திற்குத்தக்கது. பிராம்மணோத்தமரே! ஸ்வதர்மத்திலிருக்கின்ற என்னைப்பற்றி நீர் துக்கப்படலாமென்றிடாம். பிராம்மணோத்தமரே! உலகத்தைப் படைத்தவனால் ஏற்படுத்தப்பட்ட பழமையான சொந்தத்தொழிலைத் தொடர்ந்து காப்பாற்றிக்கொண்டு நான் வயதுசென்றவர்களான தாய்தந்தைகளுக்கு முயற்சியுடன் பணிவிடை செய்கிறேன்; உண்மை பேசுகிறேன்; அஸூயைப்படுகிறதில்லை; சக்திக்குத்தக்கபடி கொடுக்கிறேன்; தேவதைகளுக்கும் அதிதிகளுக்கும் வேலைக்காரர்களுக்கும் கொடுத்து மிகுதியிருக்கும் வஸ்துக்களால் ஜீவனம் செய்கிறேன். நான் ஒன்றையும் இகழ்கிறதில்லை. அதிக பலமுள்ளவனை நிந்திக்கிறதில்லை. பிராம்மணோத்தமரே! முற்காலத்தில் செய்த வினையானது செய்தவனைப் பின்தொடர்கிறது. பிரிந்தால், பசுக்களைக் காப்பாற்றுதல், வியாபாரம் செய்தல் இவைகள் இவ்வுலகில் ஜனங்களுக்கு ஜீவன உபாயங்கள். தண்டநீதியினாலும் மூன்று வேதங்களாலும் பரலோகம் ஸித்திக்கிறது. க்ருத்தியனிடத்தில் வேலையும், வைச்யனிடத்தில் பாதுகாப்பும், க்ஷத்ரியனிடத்தில் யுத்தமும், பிராம்மணனிடத்தில் எப்பொழுதும் பிரம்மசர்யமும் தவமும் மந்திரமும் ஸத்தியமும் அறிஞர்களால் எண்ணப்பட்டிருக்கின்றன. அரசன், தமக்குரிய தொழிலில் பற்றுதலுள்ள

பிரஜைகளைத் தர்மத்தால் பரிபாலனம் செய்கிறான். எவர்கள் வேறு தொழில்களில் செல்லுகிறார்களோ, அவர்களைத் தங்களுக்குரிய தொழில்களில் அரசன் சேர்ப்பிக்கிறான். பிரஜைகள், அரசர்களிடமிருந்து எப்பொழுதும் பயப்படவேண்டும். அரசர்கள் பிரஜைகளுக்கு அதிபதிகளல்லரோ? வேடர்கள் பாணங்களால் மிருகங்களைக் கொல்லுவதுபோல அரசர்கள் விபரீத கர்மங்களில் நிலைபெற்றிருக்கிற மனிதர்களைக் கொல்லுகிறார்கள். பிரம்மரிஷியே! ஜனகனுடைய இந்த மிதிலாநகரில் ஒருவனுவது தனக்கு விதிக்கப்படாத தொழில்களில் நிலைபெற்றவனாக இருக்கவில்லை. பிராம்மணேந்திரரே! நான்குவர்ணத்தார்களும் தங்குரிய தொழில்களில் பற்றுள்ளவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இந்த ஜனகராஜன், தன் புத்திரனாக இருந்தாலும், கெட்ட நடையுள்ளவனும் தண்டிக்கப்படத்தக்கவனுமாயிருப்பவனைத் தண்டிக்கிறான்; நன்னடையுள்ளவனைத் துன்புறுத்துவதில்லை. சாரர்களை நன்கு ஏவுகிற அரசன், எல்லாவற்றையும் தர்மத்தால் பார்க்கிறான். பிராம்மணேந்திரரே! க்ஷத்திரியர்களுக்கு ஸம்பத்தும் ராஜ்யமும் தண்டமும் முக்யமானவை. அரசர்கள் ஸ்வதர்மத்தினால் ஏராளமான ஸம்பத்தை விரும்புகிறார்கள். அரசன் எல்லாவர்ணங்களுக்கும் ரக்ஷகனாக இருக்கிறான். நிச்சயம். பிரம்மரிஷியே! நான் மற்றவனால் கொல்லப்படுகிற பன்றிகள் எருமைகள் ஆகியவற்றின் மாம்ஸங்களை எப்பொழுதும் விற்கிறேன். நான் கொல்லுவதில்லை. நான் எப்பொழுதும் மாம்ஸங்களை விற்கிறேன்; நான் பசுவதிக்கிறதில்லை. அப்படியே, நான் ருதுகாலங்களில் பத்னியை அடைகிறேன். பிராம்மணேந்திர! அப்படியே, எப்பொழுதும் (பகலில்) உபவாஸமிருக்கிறேன். எப்பொழுதுமே நான் இராத்திரியில் புஜிக்கிறேன். மனிதன் நன்னடையில்லாதவனாயிருந்தாலும் ஒரு காலத்தில் நன்னடையுள்ளவனாகிறான். காமினன் கூடப் பிராணிகளைக் கொல்லுவதில் விருப்பமுள்ளவனாகிறான். அரசர்களுடைய நடவடிக்கைகளால் பெரிய தர்மமானது அதர்மத்தாலே கலக்கப்படுகிறது. அதர்மமும் நிலைபெறுகிறது. அதனால், மனிதர்கள் கலக்கமடைகிறார்கள்; பயங்கரமான உருவமுள்ளவர்களும் குள்ளர்களும் கூனர்களும் அப்படியே பருத்த தலையுள்ளவர்களும் நாள்களுடனும் குருடர்களும் செவிடர்களும் மிகமேலானவர்களுமாகப் பிறக்கிறார்கள். அரசர்களுடைய அதர்மத்தினால் எப்பொழுதும் பிரஜைகளுக்குத் தீங்கு

விளைகிறது. அப்படிப்பட்ட இந்த ஜனகராஜன் பிரஜைகளைத் தர்மத் தால் பாதுகாக்கிறான். பிராம்மணோத்தமரே! இந்த ஜனகராஜன் எப்பொழுதும் ஸ்வதர்மத்தில் பற்றுதலுள்ள எல்லாப் பிரஜை களையும் அனுக்ரஹித்துக்கொண்டு தகப்பன்போலப் பாதுகாக் கிறான். என்னைப் புகழ்கிறவர்களும் இகழ்கிறவர்களுமாகிய அனை வரையும் நான் நல்லசெய்கையினால் ஸந்தோஷமடையச் செய்கிறேன். இந்திரியங்களை அடக்கினவர்களும் முன்னேற்றத்தில் நோக்கமுள்ள வர்களும் தம்தொழிலால் ஜீவிக்கிறவர்களும் சேனையை நன்கு சேர்க்கிறவர்களும் ஒன்றையும் அண்டிப்பிழையாதவர்களுமாயிருப் பவர்களே அரசர்கள். எப்பொழுதும் சக்திக்குத்தக்கபடி அன்ன மளித்தலும் பொறுமையும் எப்பொழுதும் தர்மத்திலேயே நிலை பெற்றிருத்தலும் தக்கபடி பெரியோர்களைப் பூஜித்தலும் எல்லாப் பிராணிகளிடமும் தயையும் மனிதர்களுக்கு அவஸ்யமிருக்கவேண்டும். மனிதர்களுக்கு ஸத்பாத்திரத்தில் பொருளைக் கொடுத்தலிலும் பிடிலும் வேறுகுணங்கள் வேண்டுவதில்லை. பொய் சொல்வதைவிட்டு விடவேண்டும். கேட்கப்படாமலே பிரியத்தைச் செய்யவேண்டும். காமத்தாலும் பயத்தாலும் த்வேஷத்தாலும் தர்மத்தைவிடக் கூடாது. பிரியம் சேர்ந்தபோது எல்லைமீறிய சந்தோஷமடையக் கூடாது. துக்கம் வரும்போது மனவருத்தமடையக்கூடாது. கஷ்டமான காரியங்கள் சேர்ந்தபோது மதிமயங்கக்கூடாது. தர் மத்தை விடக்கூடாது. தான் செய்யத்தக்க ஒரு கர்மமிருக்கும் போது அதைவிட்டு வேறு ஒரு கர்மத்தைச் செய்யக்கூடாது. எந்தக்கர்மத்தை நல்லதென்று எண்ணுகிறோமோ அதிலேயே மனத் தைச் செலுத்தவேண்டும். தீமை செய்தவனுக்கும் தீங்கு செய்யக் கூடாது. எப்பொழுதும் தர்மசிந்தையுள்ளவனாகவே இருக்க வேண்டும். பாவத்தைச்செய்ய விரும்புகிற பாவி நன்னிலை அடை கிறபடியால் துஷ்டர்களுடைய சேர்க்கை தர்மமில்லையென்று எண்ணிக்கொண்டு சுத்தி களைப் பரிகரிக்கிறவர்களான தர்மத்தில் நம்பிக்கையற்றவர்கள் நாசமடைகிறார்கள்; ஸம்சயமில்லை. பாவிபானவன் பிறரை துரத்திபோல எப்பொழுதும் மனஸ்தாபத்தினால் பாதிக்கப்பட்ட வனாக இருக்கிறான். பிராம்மணோத்தமரே! எல்லாரிடத்திலும், ஸத்புருஷன் வணக்கமுள்ளவனாகவே இருப்பான். கர்வங் கொண்டவர்களான மூடர்களுடைய பேச்சானது ஸாமர்த்தியமாக இருக்கும். ஸூர்யன் பகலில் பொருள்களின் உருவத்தைக் காண்

பிப்பதுபோல மூடர்கள் மனத்திலிருக்கிற எண்ணத்தை வெளியில் காண்பிக்கிறார்கள். மூர்க்கன் உலகத்தில் தற்புகழ்ச்சியினாலேயே பிரகாசியாமற் போகிறான். கல்வியில்தேர்ந்தவன் அழுக்கடைந் திருந்தாலும் பிறனுடைய நிந்தனையைச் சொல்லாமலும் தன் னுடைய புகழை விரித்துக்கூறுமலுமிருப்பதனால் இவ்வுலகில் பிர காசிக்கிறான். குணங்களால் நிறைந்த ஒரு மனிதனுவது பூமியில் [1] பிரகாசமாகக் காணப்படுகிறதில்லை. பாவத்தைச் செய்து அனு தாபமடைகிறவன் முன்செய்த பாவத்தினின்று விடப்படுகிறான். 'முன்செய்த கொடிய காரியத்தை மீண்டும் நான் செய்யேன்' என்று என்னுகிறவன், இனிச் செய்யப்படும் பாவத்தினின்று விடப்படுகிறான். பிராம்மணரே! பாவத்தைச்செய்தவன் பிராயச்சித்தரூபமான ஏதாவதொரு கர்மத்தினால் பாவத்தி னின்று விடப்படுகிறான். பிராம்மணரே! தர்மங்களில் ஸ்வதர் மத்தை அனுஷ்டிப்பதையே ஸ்வபாவமாகக் கொண்ட மனிதன் இவ்வுலகில் முன்செய்த பாவங்களை நீனைத்துப் பிற்காலத்தில் அவைகளை நாசம் செய்கிறான். பிராம்மணரே! தவறுதலால் இவ் வுலகில் பிராம்மணர்கள் எந்தப் பாவத்தைச் செய்கிறார்களோ பிராம்மணர்களுடைய அந்தப் பாவத்தைத் தர்மம் போக்குகிறது. மனிதன் பாவத்தைச்செய்து, 'நான் பாவம் செய்யவில்லை' என்று என்னுவானுகில் அவனைத் தேவர்கள் ஸாக்ஷியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்களன்றோ? அவன் உள்ளத்திலேயுலவுகின்ற பரமாத்மாவும் அவன்செய்கைக்கு ஸாக்ஷியாக இருக்கிறது. மனி தன் ப்ராத்தகாலவரைகவும் அஸ்தமயமில்லாதகவரைகவும் மங்க ளத்தையே செய்ய விரும்பவேண்டும். எந்தப் பாபியானவன் தன் னிடமுள்ள தீநாஷங்களைப் பராமல் வஸ்திரத்திலுள்ள ஓட்டை களைப்போல ஸாதுக்களுடைய தீநாஷங்களை வெளிப்படுத்தினை அவன் மறுமையில் நாசமடைகிறான். மனிதன் அறிவின்மையினால் பாவத்தைச் செய்து மங்களகரமான பிராயச்சித்தத்தைச் செய்வதினை யாகில் அவன் பெரிய மேகத்தினின்று சந்திரன் விடுபடுவது போல எல்லாப்பாவங்களினின்றும் விடப்படுகிறான். உதிக்கிற ஸூர்யன் இருளைநீக்குவதுபோல கல்வினைகளைச் செய்பவன் எல்லாப்பாவங்களையும் போக்குகிறான். பிராம் மணரே! லோபம் மோஹம் இரண்டையும் பாவங் களுக்கு இருப்பிடமாக அறியக்கடவீர். பிராம்மணரே!

[1] அடக்கமாயிருப்பனென்ப.

ஆதலால், பண்டிதன் அவ்விரண்டையும் முக்யமாக விலக்க வேண்டும். அதிகமாகச் சாஸ்திரார்த்தங்களைக் கேட்டறியாத் வர்களும் அதர்மத்தைவிட்டு விலகாதவர்களும் பேராசையுள்ள வர்களுமான மனிதர்கள், புற்களால் மூடப்பட்டிருக்கிற ஆழ்ந்த கிணறுகள்போலத் தர்மவேஷத்தால் மறைக்கப்பட்டவர் களாகப் பாவத்தைச்செய்ய முயல்கின்றார்கள். அவர்களிடத்தில் இந்திரியங்களினடக்கமும் சுத்தியும் தர்மத்தைச்சார்ந்த பேச்சுக் களும் ஆகிய எல்லாமிருந்தாலும் சிஷ்டாசாரமானது கிடைப்பது மிக அரிதன்றே?" என்று கூறினர்.

இறுநூற்றுப்பதினேராவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(தர்மவியாதர், சிஷ்டர்களுடைய லக்ஷணமுதலியவற்றைக் கௌசிகனுக்குச் சொல்லியது.)

பேரறிவாளனே! அந்தப் பிராம்மணன் தர்மவியாதரைப் பார்த்து, 'புருஷோத்தமரே! நான் எப்படி சிஷ்டாசாரத்தைத் தெரிந்துகொள்வேன்? எப்பொழுதும் சிஷ்டாசாரங்களிலுள்ள ஐந்து பவித்திரங்கள் எவை? தார்மிகர்களுள் சிறந்தவரே! பகவ புத்திபுள்ள வ்யாதரே! உமக்கு மங்களம். உம்மிடமிருந்து அதைக் கேட்கவிரும்புகிறேன். அதனை உள்ளபடி உரைப்பீராக' என்று வினவ, வ்யாதர், 'பிராம்மணரே! சிஷ்டாசாரங்களில் எப் பொழுதும் யஜ்ஞம், தானம், தவம், வேதங்கள், ஸ்நாநம் என இவைகள் ஐந்து பவித்திரங்கள். எவர்கள் காமக்ரோதங்களையும் டம்பத்தையும் பேராசையையும் மனிதர்களுக்குக் காயங்களுடைய ஒற்றுமையின்மையையும் வசப்படுத்திக்கொண்டு, செய்யவேண்டிய கடமையென்றே கர்மங்களைச் செய்து சுத்தாசாரமாயிருக்கிறார் களோ அவர்கள் சிஷ்டர்களென்று சிஷ்டர்களால் புரப்பாக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். யஜ்ஞதானத்தையும் வேதாத் தியயனத்தையும் இயற்கையாகக் கொண்ட அந்தச் சிஷ்டர் களுடைய நடை வேறுபடாது. ஆசாரங்களைப் பாதுகாப் பதும் இரண்டாவதான சிஷ்ட லக்ஷணம். பிராம்மணரே! எப்பொழுதும் சிஷ்டாசாரங்களில் குருசுச்ரூஷை, ஸ்நாநியம்

கோபமின்மை, தானம் இவை நான்கும் நிலைபெற்றிருக்கின்றன. சிஷ்டாசாரத்தில் மனத்தைச் செலுத்தி எல்லாவிதங்களாலும் அதில் ஊன்றும்படி செய்து மனிதன் எந்த ஸம்தோஷத்தை அடைகிறானோ அந்த ஸம்தோஷமானது இவை நான்குமில்லாமல் வேறுவிதத்தால் அடையமுடியாது. வேதத்திற்கு ஸாரம் ஸத்தியம். ஸத்தியத்திற்கு ஸாரம் ஐம்பொறியடக்கல். ஐம்பொறியடக்கலுக்கு ஸாரம் போகங்களை விடுதல். இவைகள் எப்பொழுதும் சிஷ்டாசாரங்களில் நிலைபெற்றிருக்கின்றன. புத்தி மோகத்துடன் கூடின எந்த மனிதர்கள் தர்மங்களை வெறுக்கிறார்களோ கெட்டவழியினால் செல்லுகின்ற அவர்களை அனுஸரிப்பவனும் பீடிக்கப்படுகிறான். இந்திரியங்களை நன்கு அடக்கினவர்களும், வேதத்தையும் விஷயானுபவங்களை விடுவதையும் பிரதானமாகக்கொண்டவர்களும், தர்மமார்க்கத்தை அடைந்திருப்பவர்களும், ஸத்தியத்திலும் தர்மத்திலும் பற்றுதலுள்ளவர்களும், ஆசாரியருக்கு ஸம்மதமான விஷயத்தில் மனத்தைச் செலுத்தினவர்களும், [1] சாஸ்திரமுறையினால் அறம்பொருள்களை அறிபவர்களுமான சிஷ்டஜனங்களை சாஸ்திரத்தில் கூறிய ஆசாரமுள்ளவர்கள். ஞானத்தை அடைந்தும் தார்மிகர்களை அடுத்தும், நாஸ்திகர்களும் தர்மத்தின் எல்லையைக்கடந்துசெல்லுகிறவர்களும் குரூரர்களும் பாபபுத்தியில் நிலைபெற்றிருப்பவர்களுமான அப்படிப்பட்ட துஷ்டர்களை விடுவீராக. காமமும் லோபமுமாகிற முதலிலியால் வியாபிக்கப்பட்டதும் ஐந்து இந்திரியங்களாகிற ஜலத்தோடு கூடியதுமான நதியில் வைதரணியாகிற ஓடத்தை ஏற்படுத்திக்கொண்டு பிறவித் தண்டங்களைத் தாண்டுவீராக. நாளடைவில் சேர்க்கப்பட்டிருக்கிற பொறாமை புத்தியாகிற நூலாலான தர்மமானது, விலங்குப்புழு முள்ளை ஆலையில் சாறும் பிழிப்பதைப்போலச் சிஷ்டாசாரத்தில் நன்கு பற்றுதலுள்ளவர்களுக்கும். மிகவல்லமை, மிகப்பெரிய வீரனென்கிறபடி ஒருபெயர்ச்சொல் ஆகிய இம்மூன்றும் சிறந்தனவாம். இவற்றுள் அடுத்தடுத்தது என்பது நிகரில்லாத தர்மம். அது ஸத்தியத்தில் நிலைபெற்றிருக்கிறது. ஸத்தியத்தை ஆசாரமாகக்கொண்டு பிரம்மஞானிகள் எற்படுகின்றனர். சிஷ்டாசாரத்தால்

[1] 'ஸ்ருதிஸ்மார்த்தயோர்மத்யே:' என்பது மூலம். 'ஸ்ருதி' என்பதற்கு, 'பொறாமையோடும் ஸாக்ஷாத்பரமே' என்பதும், 'ஸ்மார்த்த தர்மே:' என்பதற்கு, 'ஸாஸ்திரக் கருத்துக்களில் நிற்பவர்கள்' என்பதும் இக்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

நன்முக அடையப்பட்டிருக்கிற ஸத்தியமே மிகவும் பெரியது. ஆசாரமென்பது ஸாதுக்களுடைய தர்மம். ஸத்புருஷர்கள் ஆசாரத்தை லக்ஷணமாக உடையவர்கள். எந்தப் பிராணியானது எவ்வித ஸ்வபாவமுள்ளதோ அது தன்னுடைய அவ்வித ஸ்வபாவத்தையே அடைகிறது. சிறந்த சித்தவ்ருத்தியில்லாதவனும் பாவச்செயலில் புத்தியைச் செலுத்தினவனுமான மனிதன் ஆசை கோபமுதலிய தோஷங்களை அடைகிறான். நியாயத் தோடுகூடிய காரியம் தர்மமென்றும் அநியாயத்தோடுகூடியது அதர்மமென்றும் எண்ணப்படுகின்றன. இது சிஷ்டர்களுடைய உபதேசம். எவர்கள் கோபமில்லாதவர்களாகவும் அஸூயையில்லாதவர்களாகவும் அஹங்காரத்தையும் மாத்ஸர்யத்தையும் விட்டவர்களாகவும் கபடமில்லாதவர்களாகவும் சாந்தியினல் நிறைந்தவர்களாகவிருக்கிறார்களோ அவர்கள் சாஸ்திரத்தில் கூறப்பட்ட ஆசாரமுள்ளவர்களாகிறார்கள். மூன்று வேதங்களாலும் கூறப்பட்ட யாகமுதலியவற்றைச் செய்பவர்களும் சுத்தர்களும் நன்னடையுள்ளவர்களும் மனத்தை அடக்கினவர்களும் குரு சுச்ரூஷைசெய்பவர்களும் இந்திரியங்களை அடக்கினவர்களும் சாஸ்திரங்களால் சொல்லப்பட்ட ஆசாரமுள்ளவர்களாகிறார்கள். மனவடுதியுள்ளவர்களும் அனுஷ்டிப்பதற்கரிய கடையும் செயலுமுள்ளவர்களும் தடைக்குரிய தொழில்களால் கௌரவிக்கப்பட்டவர்களுமான மனிதர்களுக்கு நிம்மஸ்ஸுமுதலிய தோஷங்கள் காணமடைகின்றன. கற்றறிந்தவர்கள் ஆச்சரியமானதும் பழமையானதும் சாஸ்வதமானதும் நித்யமானதும் தர்மத்தை விட்டகலாததுமான அந்த ஸதாசாரத்தைத் தர்மத்தால் பார்த்துக்கொண்டு ஸ்வர்க்கத்தை அடைகிறார்கள். ஆஸ்திகர்களும் அஹங்காரத்தை விட்டவர்களும் பிராம்மணர்களிடம் பக்தியுள்ளவர்களும் சாஸ்திரஜ்ஞானத்தோடும் நன்னடையோடும் கூடியவர்களுமான அப்படிப்பட்ட ஸத்புருஷர்கள் ஸ்வர்க்கத்தை அடைகிறார்கள். வேதங்களால் சொல்லப்பட்டிருப்பது முதன்மையான தர்மம். தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருப்பது மற்றொரு தர்மம். சிஷ்டர்களால் அனுஷ்டிக்கப்பட்டிருவருவது மேலிரு தர்மம். இவ்விதமாகச் சிஷ்டர்களுடைய தர்மலக்ஷணம் மூன்று விதமாயுள்ளது. வேதங்களோ அத்தியயனம் செய்தது மறவாமல் உள்ளத்தில் தரித்தலும் தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தலும் பொறுமையும் ஸத்திய முடன் கபடமின்மையும் தூய்மையும்

சிஷ்டாசாரத்திற்கு நிதர்சனம். ஸத்புருஷர்கள், எல்லாப் பிராணி களிடத்திலும் தயையுள்ளவர்களும் எப்பொழுதுமே அஹிம் ஸையில் பற்றுதலுள்ளவர்களும் எப்பொழுதும் பிராம்மணர் களிடத்தில் அன்புள்ளவர்களுமாக இருப்பதுடன் கடுமையாகப் பேசவும் மாட்டார்கள். [1] நல்வினை தீவினைகளுக்குப் பயனான லோகத்துக்களுடைய அனுபவத்தினால் அந்த வினைகளின் காரணத்தை அறிபவர்கள் சிஷ்டர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட சிஷ்டர்கள். யுக்திபோதும் சமதமாதிகுணங்களோடும் கூடியவர் களும் எல்லாஜனங்களுக்கும் நன்மையை விரும்புகின்றவர்களும் பிராம்மணர்க்கத்தில் நன்கு நிலைபற்றி நிற்பவர்களுமான ஸத் புருஷர்கள் கட் [2] சுத்திரினால் ஸ்வர்க்கத்தை ஜயிக்கிறார்கள். கொடுப்பவர்களும் குடும்பங்களில் போஷிக்கத்தக்கவர்களுக்குப் போகங்களைப் பகுத்துக்கொடுப்பவர்களும் தினர்களிடம் அனுக் கிரஹத்தைச் செய்கின்றவர்களும் எல்லாராலும் பூஜிக்கத்தக்கவர் களும் கல்வியையே பொருளாகவுடையவர்களும் அப்படிப்பட்ட குணமுள்ளவர்களும் எல்லாப்பிராணிகளிடமும் தயையுள்ளவர்களு மான அப்படிப்பட்ட சிஷ்டர்கள் சிஷ்டர்களால் ஒப்புக்கொள்ளப் பட்டவர்கள். தானம் செய்வதில் நிலைத்தவர்கள் விசேஷமாக லோகங்களையும் லம்பத்தையும் அடைகிறார்கள். அடக்கமுள்ள வர்களான ஸாதுக்கள் ஸாதுக்களால் உருவி செலுத்தப்பட்ட போது தானினது செயல்களாலும் இவர்களால் தினக்கரிப்பு

---

1 தெளிவுபடவில்லை.

2 'சுத்தி:' என்பது தெளிவுபடவில்லை; 'சுத்திமார்க்கமாக' என்பது பொருத்தமாயிருக்கலாம்.

தானம்செய்தல், எப்பொழுதும் உண்மைபேசுதல் இம்மூன்றையே ஸாதுக்களுக்குச் சிறந்த லக்ஷணங்களென ஸாதுக்கள் கூறுகின்றனர். எல்லாவற்றிலும் மன இரக்கமுள்ளவர்களும் கருணையுள்ளவர்களும் அறியுந்தன்மையுள்ளவர்களுமான ஸத்புருஷர்கள், இவ்வுலகில் மிகுந்த திருப்தியுள்ளவர்களாகத் தர்மத்தை விட்டு விலகாததும் ஒப்பற்றதுமான வழியை அடைகிறார்கள். எவர்களுக்கு நன்றாக நிச்சயிக்கப்பட்ட தர்மமும் அஸூயையில்லாமையும் பொறுமையும் சாந்தியும் ஸந்தோஷமும் இன்சொல்லுடைமையும் காமக்ரோதங்களை விடுதலும் சிஷ்டாசாரங்களை அனுஷ்டித்தலும் இருக்கின்றனவோ அவர்கள் சிஷ்டாசாரத்துடன்கூடின மகாத்மாக்கள். எப்பொழுதும் தர்மத்தை அனுஸரிக்கின்றவர்கள் சாஸ்திரங்களால் விதிக்கப்பட்டிருக்கிற கர்மாவையும் நிகரில்லாத ஸாதுக்களுடைய வழியையும் சிஷ்டாசாரத்தையும் அனுஷ்டிக்கிறார்கள். சிறந்த பிராம்மணர்களுள் உத்தமரே! பிராம்மணோத்தமர்கள் சிறந்தஞானமாகிற உப்பரிகையின் மீதேறிப் புத்திமயக்கமுற்றிருக்கிற மனுஷ்யஜனங்களையும் பற்பலவிதமான உலகநடைகளையும் மிகப் பரிசுத்தமான அப்படிப்பட்ட தானங்களையும் பார்க்கிறார்கள். பிராம்மணரே! பிராம்மணோத்தமரே! சிஷ்டாசாரங்களையும் குணங்களையும் முன்னிட்டு என் அறிவுக்கும் சாஸ்திரஞானத்துக்கும் தக்கபடி இவை அனைத்தும் உமக்கு உரைக்கப்பட்டன' என்று கூறினர்.

இருநூற்றுப்பன்னிரண்டாவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(தர்மவ்யாதர் விரிம்னையானது எவ்விதத்தாலும் விடமுடியாததென்பதை நிரூபித்து, எல்லா வர்ணத்தார்களுக்கும் தத்தம் தர்மங்களை அனுஷ்டிப்பதே நன்மையாதுமென்பது முதலிய விஷயங்களைக் கௌசிகனுக்குக் கூறியது.)

யுதிஷ்டிரா! அந்தத் தர்மவ்யாதர், பிறகு பிராம்மணனைப் பார்த்து, 'நான் செய்கிற தொழில் கொடியது. ஸந்தோஷமில்லை. பிராம்மணரே! விதியானது மிக்க வலிமையுள்ளது. முற்பிறப்பில் செய்தவினை எவ்விதத்தாலும் தாண்டமுடியாததன்றோ? இது முன்

செய்த பாவச்செயலினுடைய தோஷமாக இருக்கிறது. பிராம் மணரே! இந்தத் தோஷத்தைப் போக்குவதில் நான் முயற்சியுள்ள வனாக இருக்கிறேன். ஒரு பிராணியானது முந்திச் தெய்வத்தால் கொல்லப்பட்டுவிடுகிறது. பிறகு, அதைக் கொல்பவன் அந்த வதத்தில் நிமித்தமட்டும் ஆகிறான். பிராம்மணோத்தமரே! நாங்கள் இந்தக்கர்மத்திற்கு நிமித்தமாத்திரமாக இருக்கிறோமல்லவா? பிராம் மணரே! கொல்லப்பட்ட எந்தப் பிராணிகளுடைய மாம்ஸங்களை நாங்கள் விற்கிறோமோ, (அந்த மாம்ஸங்களைப்) பக்ஷிப்பதனாலும் தேவதைகள், அதிதிகள், வேலைக்காரர்கள், பித்ருக்கள் இவர் களுக்கு உபயோகித்துப் பூஜிப்பதனாலும் அந்தப்பிராணி களுக்கும் கர்மமுண்டாகும். 'ஔஷதிகளும் கோடிகளும் பசுக் களும் மிருகங்களும் பக்ஷிகளும் உலகத்திலுள்ள ஜனங் களுக்கு அன்னமுதலியவைகளாக இருக்கின்றன' என்கிற ஸ்ருதி வசனம் கேட்கப்படுகிறது. பிராம்மணோத்தமரே! பொறுமை யுள்ளவனும் உசினரதேசாதிபதியுமான சிபிராஜன் தன் மாம்ஸத் தைக் கொடுத்ததனால் அடைவதற்கு அரிதான ஸ்வர்க்கத்தை அடைந்தான். பிராம்மணரே! முற்காலத்தில் ரந்திதேவராஜ னுடைய மடைப்பள்ளியில் காள்தோறும் இரண்டாயிரம் (கோக்க ளல்லாத.) பிராணிகள் பக்குவம் செய்யப்பட்டன; அப்படியே, காள்தோறும் இரண்டாயிரம் கோக்களும் பக்குவம் செய்யப்பட் டன. பிராம்மணோத்தமரே! பக்ஷிக்கத்தக்க மாம்ஸத்தை அதிதிகளுக்கு ஒருமாதம் தினந்தோறும் கொடுத்துவந்த ரந்தி தேவராஜனுக்கு நிகரில்லாத கீர்த்தி உண்டாகியது. 'சாதுர்மாஸ் யத்தில் நித்தியமாகப் பசுக்கள் கொல்லப்படுகின்றன' என்றும், 'அக்னிகள் மாம்ஸத்தில் விருப்பமுள்ளவைகள்' என்றும் ஸ்ருதி கேட்கப்படுகிறது. பிராம்மணரே! யஜ்ஞங்களில் பசுக்கள் பிராம் மணர்களால் எப்போழுதும் கொல்லப்படுகின்றன. மந்திரங்களால் ஸம்ஸ்கரிக்கப்பட்ட அந்தப்பசுக்களும் ஸ்வர்க்கத்தை அடைகின் றனவாம். பிராம்மணோத்தமரே! முற்காலத்தில் அக்னிகள் மாம்ஸத்தில் விருப்பமுள்ளவைகளாகாமல் போயிருந்தால், ஒரு வருக்காவது மாம்ஸம் பக்ஷிக்கத்தக்கதாக ஏற்பட்டிராது. இந்த மாம்ஸபக்ஷணத்திலும், முனிவர்களால், 'எவன் எப்போழுதும் (மாம்ஸத்தைத்) தேவதைகளுக்கும் பித்ருக்களுக்கும் சாஸ்திர விதிப்படியும் ஸ்ரத்தையுடனும் கொடுத்துவிட்டுச் சாப்பிடுவதை அவன் அகால உண்பதனால் தோஷமுள்ளவனாகான்' என்கிற

விதியானது கூறப்பட்டிருக்கிறது. 'இவ்விதம் (உண்பவன்) மாம்ஸத்தைப் பக்ஷிப்பவனுகான்' என்றும் ஸ்ருதி கேட்கப்படுகிறது. ருதுகாலத்தில்மட்டும் பார்யையை அடைகிற பிராம்மணன் பிரம்மசாரியாகிறான். இந்த விஷயத்திலும் ஸத்தியத்தையும் அஸத்யத்தையும் (அதாவது உசிதத்தையும் அனுசிதத்தையும்) நிச்சயித்து விதி கூறப்படுகிறது. பிராம்மணரே! சாபத்தால் மிக ஆக்ரமிக்கப்பட்ட அரசனை ஸௌதாஸனுல் அக்காலத்தில் மனிதர்கள் பக்ஷிக்கப்பட்டார்கள். இந்த விஷயத்தில் உமக்கு என்ன தோன்றுகிறது? பிராம்மணரே! ஸ்வதர்மமென்று எண்ணி இதை நான் விடவில்லை. முற்பிறப்பில் செய்தனிகா என்று அறிந்து இந்தத் தொழிலால் நான் ஜீவிக்கிறேன். பிராம்மணரே! உலகில் தன்தொழிலை விடுகிறவனுக்கு அதர்மம் காணப்படுகிறது. தன் தொழிலில் நிலைபெற்றிருப்பவனுக்கு அது தர்மமென்பது நிச்சயம். ஜாதிகளுக்குத் தொழில்கள் விதிக்கப்பட்டிருக்கின்றனவல்லவா? தகுதியற்றவன் அவற்றைவிடலாகாது. பலவான ஹிம்ஸைகளை நிர்ணயிக்கும் விஷயத்தில் பிரம்மதேவரால் இந்த விதிபாவது விதிக்கப்பட்டிருக்கிறது. பிராம்மணரே! தொழில் நிச்சயிக்கும் விஷயத்தில், 'நான் எவ்வாறு நல்ல தொழிலைச் செய்வேன்? எவ்வாறு அவமானத்தினின்று விடுபடுவேன்?' என்ற தர்மத்தை ஆராயவேண்டும். அந்தத் தொட்ட தர்மமானது [1] பலவிதத்தால் பரிஹாரம் பண்ணப்படலாம். நான் தானத்திலும் ஸத்தியத்திலும் அப்படியே பெற்றோர் பணிவிடையிலும் பிராம்மண பூஜையிலும் தர்மத்திலும் எப்பொழுதும் பற்றுதலுள்ளவன். பிராம்மணரே! தர்மத்தினின்றும் அதிகப்பிரயத்தினின்றும் நான் விலகியிருக்கிறேன். பறித்தொழில் செய்பவரைக் கள்ளரென்று எண்ணுகிறார்கள். அதில் அதிக ஹிம்ஸை உண்டாகிறது. கலப்பைகளால் பூமியை உழுகிறவர்கள் பூமிக்குள்ளிருக்கிற அனேக ஜீவன்களையும் மற்ற அனேக ஜந்துக்களையும் நாசம் செய்கிறார்கள். அந்த விஷயத்தில் உமக்கென்ன தோன்றுகிறது? பிராம்மணரே! சில பறவைகளை தானத்திலும் ஜீவன்களல்லவா? இந்த விஷயத்தில் உமக்கு என்ன தோன்றுகிறது? பிராம்மணரே! மனிதர்கள் பக்ஷிகளைக்கூட வலியப்பிடித்துக் கொல்லுகிறார்கள்; பக்ஷிக்கவும் பார்க்கிறார்

---

[1] வேறுபாடம்.

கள்; அப்படியே மரங்களையும் ஓஷதிகளையும் வெட்டுகிறார்கள். பிராம்மணரே! மரங்களிலும் பழங்களிலும் நீரிலும் பலபல ஜீவன்கள் இருக்கின்றனவல்லவா? அந்த விஷயத்தில் உமக்கு என்ன தோன்றுகிறது? பிராம்மணரே! இவ்வுலகமுழுதும் பிராணிகளைத்தின்று ஜீவிக்கின்ற பிராணிகளால் வியாபிக்கப்பட்டிருக்கின்றது. மீன்கள் மீன்களை விழுங்குகின்றன. அதில் உமக்கு என்ன தோன்றுகிறது? பிராம்மணரே! பெரும்பான்மையாகப் பிராணிகளால் பிராணிகள் ஜீவிக்கின்றன. பிராணிகள் ஒன்றை மற்றொன்று பக்ஷிக்கின்றன. அதில் உமக்கு என்ன தோன்றுகிறது? பிராம்மணரே! நடக்கின்ற மனிதர்கள் பூமியை அடைந்திருக்கின்ற அநேக ஜீவன்களைக் கால்களால் நசுக்கிறார்கள். அதில் உமக்கு என்ன தோன்றுகிறது? உட்கார்ந்திருப்பவர்களும் படுத்திருப்பவர்களும் அறிந்தோ அறியாமலோ அனேக ஜீவன்களைக் கொல்லுகிறார்கள். அந்த விஷயத்தில் உமக்கு என்ன தோன்றுகிறது? இந்த ஆகாசமுழுவதும் அப்படியே பூமியும் ஜீவன்களால் வியாபிக்கப்பட்டிருக்கின்றன. அறியாமையால் மனிதர்கள் அந்த ஜீவன்களைக் கொல்லுகிறார்கள். அதில் உமக்கு என்ன தோன்றுகிறது? பிராம்மணரே! முற்காலத்தில் முன் ரிஷிகளால் கொல்லாமையானது அறியாமையால் விதிக்கப்பட்டது. இந்த உலகத்தில் எவர்கள் ஜீவஹிம்சை செய்யாமலிருக்கிறார்கள்? அனேகவிஷயங்களை நன்றாக ஆலோசித்துப்பார்க்குங்கால், இவ்வுலகத்தில் அஹிம்சை செய்பவர்களுள் ஒருவனுவது இல்லை. பிராம்மணரே! மனுஷ்யர்கள் அஹிம்சையில் நிலை பெற்றிருப்பவர்கள். அவர்களும் அஹிம்சையைச் செய்பவராகின்றார்கள். அந்த அஹிம்சையானது (அவர்களுடைய) முயற்சியால் ஸித்தியாகிறது. நற்குலத்திற்பிறந்தவர்களும் சிறந்தகுணங்களையுள்ளவர்களுமான மனிதர்கள் சிலரே காணப்படுகிறார். மீன்கள் மான்முதலிய பிராணிகளையும் பிராணிகள் வேறு விதமான ஜீவன்களைச்சாப்பிட்டு வாழ்கின்றன. கல்மரங்களில் பிரவர்த்திக்கின்ற மனிதர்களை மனிதர்கள் கொல்லுவதில்லை. பக்ஷிகள் செய்வதுபோல் பக்ஷிகளையும் கொல்லுவதில்லை. அதிக கர்வமில்லாத மனிதர்கள் ஆஹாரங்களில் அதிகமாக நம்பிக்கை வைக்கிறார்கள். பிராம்மணரே! உலகத்தில் பல மனுஷ்யர்கள் நியமனமாகக் காணப்படுகின்றனர். தர்மத்தை நன்றாக ஆசரிக்கும் அர்மமாகத்

காணப்படுகிறது. அந்தவிஷயத்தில் உமக்கு என்னதோன்றுகிறது? தர்மமாகவும் அதர்மமாகவுமிருக்கிற கர்மங்களின் விஷயத்தில் பலவிதம் சொல்லமுடியும். எவன் தன்னுடைய கர்மங்களில் நிலை பெற்றிருப்பனோ அவன் பெரும்புகழை அடைவான்' என்று கூறினர்.

இருநூற்றுப்பதின்மூன்றுவது அத்யாயம்.

மார்க்கண்டேய ஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(தர்மவ்யாதர் முயற்சியை நிந்தித்துத் தெய்வத்தைப்புகழ்ந்து புண்ய பாபங்கள் ஸுகதுக்கங்களுக்குக் காரணமென்பதைக் கூறியது.)

யுதிஷ்டிர! தர்மவான்களனைவருள்ளும் சிறந்தவனே! தர்மவ்யாதரோ மீண்டுமே பிராம்மணோத்தமரைப் பார்த்து, 'பிராம்மணரே! இந்தத்தர்மமானது வேதத்தைப் பிரமாணமாகக்கொண்டதென்பது ஞானத்தால்முதிர்ந்தவர்களுடைய உபதேசம். தர்மத்தினுடைய ஸூக்ஷ்மகதியானது அனேக பிரிவுகளுள்ளதாகவும், முடிவில்லாததாகவும் இருக்கின்றதன்றோ? பிராணனுக்கு அபாயம் நேருந்தருணத்திலும் விவாஹத்திலும் பொய் சொல்லத்தக்கதாகலாம். பொய்யினால் ஸத்தியம் நிலைபெறும். ஸத்தியத்தினால் பொய் ஸம்பவிக்கும். எது பிராணிகளுக்கு மிகவும் ஹிதமாக இருக்குமோ அது ஸத்தியமென்பது நிச்சயம். மாறிச்செய்யப்பட்டால் அதர்மம். தர்மத்தினுடைய நுட்பத்தைப் பாரும். ஸாதுக்களுள் மிகச்சிறந்தவரே! மனிதன் கல்லனதீயா கெட்டனதீயா எந்தக்காரியத்தைச் செய்கிறானோ அதனுடைய பலனை அவஶ்யம் அடைகிறான்; இதில் ஸம்சயமில்லை. மனிதன் கெட்ட நிலைமையை அடைந்தவனானால் தேவர்களை மிகவும் நிந்திக்கிறான். பிராம்மணோத்தமரே! கற்றறியாதவனும் மூடனும் வஞ்சகனும் [1] சபலனுமான மனிதன் அந்த ஆபத்தைத் தன்னுடைய கர்மம் தோஷத்தால் ஏற்பட்டதென்று அறிகிறதில்லை. நிச்சயமில் மனிதனை நிச்சயமுள்ள மனிதனை நல்ல கர்மமானது கட்டுப்படுத்தாது.

---

[1] மனவுறுதியில்லாதவன்; அல்லது, அலைகிறமனமுள்ளவன். சாந்தியோகபர்வம் 174-ம் பக்கத்திலும் சாந்திபர்வம் 375-ம் பக்கத்திலும் குறிப்புக்களிற் காண்க.

ஸுகதுக்கங்களுண்டைய மாறுட்டமானது எப்பொழுது ஏற்படுகிறதோ அப்பொழுது இவனைக் கல்வியறிவாவது குருசிஷ்ருஷையாவது மனிதமுயற்சியாவது காக்கிறதில்லை. கார்யத்தினுடைய பயனானது மனிதமுயற்சிக்கு வசப்பட்டிருக்குமேயாகில், எந்தமனிதன் எந்த எந்த விருப்பத்தை எப்படி எப்படி விரும்புவனோ அந்த அந்த விருப்பத்தை அப்படியப்படி அவன் அடைவான். இந்திரியங்களை நன்றாக அடக்கினவர்களும் ஸமர்த்தர்களும் நல்ல புத்தியுள்ளவர்களுமான நல்ல மனிதர்கள் எல்லாக்கர்மங்களையும் செய்து ச்ரமமடைந்தவர்களாக இருந்தாலும் பயனில்லாதவர்களாகக் காணப்படுகிறார்கள். மற்றொருவன் பிராணிகளை ஹிம்ஸிப்பதிலும் உலகத்தை வஞ்சிப்பதிலும் எப்பொழுதும் முயற்சியுள்ளவனாக இருந்தும் ஸுகத்தோடேயே சேர்கிறான். லக்ஷ்மியானவள் ஒருகார்யத்தையும் செய்யாமல் உட்கார்ந்திருக்கிற ஒரு மனிதனைத் தானாக அடைகிறாள். கர்மங்களைச் செய்கின்ற ஒருவன் பயனை அடைகிறதில்லையன்றோ? புத்தியை அடைவதில் விருப்பமுள்ளவர்களும் இரக்கப்படத்தக்கவர்களுமான தாய் தந்தைகளால் தேவர்களைக் குறித்து யாகம் செய்தும் தவம்புரிந்தும் பத்துமாதகாலங்கள் வயிற்றினுல் தாங்கப்பட்ட குழந்தைகள் வம்சத்தைக் கெடுப்பவர்களாகப் பிறக்கிறார்கள். சில் அந்த நற்கருமங்களாலேயே அடையப்பட்டவர்களாகப் பிதாவினுல் சேர்த்து வைக்கப்பட்ட மிகுதியான தனதான்யங்களோடும் போகங்களோடும் பிறக்கிறார்கள். பிராம்மணச்ரேஷ்ட! மனிதர்களுக்கு வியாதிகள் சரீரத்தினுல் உண்டாகிறதில்லை. மனிதர்களுக்கு வியாதிகள் விஷங்களால் உண்டாகின்றன; இதில் ஸம்சயமில்லை. கொடியமிருகங்களால் அற்பமிருகங்கள் நிர்மூலிக்கப்படுவதுபோல போகங்களாலும் மரணவியாதியாலும் மனிதர்கள் தின்புறுத்தப்படுகிறார்கள். பிராம்மணச்ரேஷ்ட! வேடர்களால் மிருகங்கள் போக்கப்படுவதுபோல அந்த வியாதிகள் சிகித்ஸை செய்வதில் ஸமர்த்தர்களும், ஆயுர்வேதத்தில் தீக்ஷ்ணபுள்ளவர்களும், ஔஷதங்களை நன்று சேர்த்து வைத்திருப்பவர்களுடைய வைத்தியர்களால் போக்கப்படுகின்றன. கர்மவான்களுள் சிறந்தவரே! எவர்களுக்கு அனுபவிக்கத்தக்கபோருள் இருக்கிறதோ அவர்கள் [1] கிரஹணரோகத்தால் பீடிக்கப்பட்டவர்களாக அனுபவிப்பதற்குச் சக்தியுள்ளவர்களாவதில்லை; பாரும். பிராம்ம

[1] வேறுபாடும். [2] அடங்காத வயிற்றுப் போக்கு.

ணேத்தமோ! சிறந்த புஜபலமுள்ள மற்ற அநேக ஜனங்கள் கிலேசத்தை அடைகிறார்கள்; கஷ்டத்தினல் போஜனத்தை அடைகிறார்கள். இவ்வாறு உலகமானது ஸஹாயமற்றதாகவும், [1] அறியாமையும் தயாரும் மேலிட்டதாகவும் மிக்க பலமுள்ள விஸனப் பெருக்கினல் அடிக்கடி கள்ளி இழுத்துக்கொண்டுபோகப் படுகிறது. சுகமென்று இல்லாமற்போனல் ஜனங்கள் இறக்கமாட்டார்கள்; மூப்படையமாட்டார்கள். எல்லோரும் விரும்பின எல்லாவற்றையும் அடைகின்றவராவார்கள்; அப்பியத்தையும் பார்க்கமாட்டார்கள். எல்லோரும் மற்றவரைக் காட்டிலும் (தாம் தாம்) மேல் மேலாகச் செல்வதற்கு விரும்புகிறார்கள்; சக்தியுள்ளவரையிலும் முயற்சியும் செய்கின்றார்கள். ஆனல், அது அப்படி ஏற்படுகிறதில்லை. அநேகம்பேர்கள் துல்யமான சுகஷித்திரத்துடனும் மங்களத்துடனும் காணப்படுகிறார்கள். காரியஸித்திகளில் அவர்களுக்குப் பயனில் சோம்பலானது பெரிதாகக் காணப்படுகிறது. ஸாதுக்களுள் மிகச்சிறந்தவரே! பிராம்மணரே! சில சுகம் பொருந்தாதவர்களும் அதிகாரிகளாயிருக்கிறார்கள். முன்ஜன்மத்தில் செய்யப்பட்ட விசேஷமின்பயன் இந்த ஜன்மத்தில் காணப்படுகிறது. பிராம்மணரே! 'உலகில் ஜீவன் சாச்வதமாக இருப்பவன்; எல்லாப் பிராணிகளுக்குச் சரீரம் நிச்சயமன்று. சரீரமானது கொல்லப்படுகிறபோதில் அந்தச் சரீரத்துக்குடையாத்மம் நாசமுண்டாகிறது. கர்மத்தைக் காரணமாகக்கொண்டு ஜீவன் வேறு தேகத்தில் பிரவேசிக்கிறான்' என்கிற அர்த்தமுள்ள இந்த ஸ்ருதியானது இருக்கிறது' என்று சொன்னர்.

பிராம்மணன், 'கர்மத்தை அறிந்தவர்களுள் சிரேஷ்டரே! ஜீவன் எவ்வாறு சாச்வதனாகிறான்? மேதாவிகளுள் சிறந்தவரே! இதை நான் உள்ளபடி அறிய விரும்புகிறேன்' என்று வினவ, வியாதர், 'தேகமானது அழிந்துபோகும்; சுகாத்மாவுக்கு நாசமில்லையென்று? அறிஞர்கள், ஜீவன் இருக்கிறானென்று சொல்லுகிறார்கள். இது பொய். ஜீவனை வேறு தேகத்தால் மறைக்கப்பட்டு வேறிடத்தில் செல்லுகிறான். இந்த ஜீவனுக்கு வேறு சரீரத்தை அடைவதே மரணம். மானிடலோகத்தில் ஒரு மனிதன் செய்த விசேஷமின் பயனை மற்றொரு மனிதன் அநுபவிக்கிறதில்லை. அந்த மனிதனல் செய்யப்பட்ட விசேஷமின்

---

[1] வேறுபாடம்.

பயனை அவனை அனுபவிக்கிறான். செய்தவினைக்கு அழிவில்லை. நல்லவர்கள் நல்வினைகளையே செய்பவராகின்றனர். நராதமர்கள் தீவினைகளையே செய்பவர்களாகின்றனர். இவ்வுலகத்தில் மனிதன் தன் வினைகளால் பின்தொடரப்படுகிறான். பிறகு, அந்தக் கர்மங்களாலேயே தூண்டப்பட்டு மறுபடியும் பிறக்கிறான்' என்று சொன்னார். பிராமணன், 'ஸாதுக்களுள் உத்தமரே! நீவன் எவ்வாறு [1] பிறப்பை அடைகிறான்? எவ்வாறு புண்ய பாவங்களின் வயப்பட்டுத்தான் அடைகிறான்? எவ்வாறு நல்ல பிறப்புக்களையும் கெட்ட பிறப்புக்களையும் அடைகிறான்?' என்று வினவ, வியாதர், 'பிராமணரே! இந்தச் சரீரமானது நீவன் கர்மபூமியில் செய்துள்ளபடியே அதன்படி சேர்க்கைகளிற்றாகச் சரணப்படுகிறது. இந்த உடலுக்குள் நுழைந்தபோது வினைகளில் சிக்கிக்கொண்டான். பிராப்தப்பட்ட வினைகளுக்குத் தக்கபடி நல்வினை செய்தவன் நல்ல பிறப்புக்களிலும் தீவினை செய்தவன் கீழ் பிறப்புக்களிலும் மறுபடியும் பிறக்கின்றனர். நல்வினைகளால் நீங்களும், கணவரும் தேவரும் கர்மவினைகளால் மானிடஜன்மம் அடைந்தீர்கள். மானிடன் பிறப்பு, இறப்பு, மறுபடி. தன்னுடைய நிலைமைகளால் மாற்றமடைந்து அந்தப் பிறவிகளிலேயே வாழ்ந்து வருகிறான். ஒரு மனிதன் வாழ்க்கையில் பலவிதமான நிலைமைகளை அடைகிறான். ஒரு பிறவியில் ஒரு நிலைமைய

பிராம்மணேத்தமரே! அவனே தீவினைக்கட்டிலிருந்து விடுபட்டால் கல்வினைகளால் மிக்க சுத்தியுள்ளவனுகித் தவத்திலும் யோகத்திலும் தொடக்கத்தைச் செய்கிறான். மனிதன் பல கல்வினைகளால் கல்லுலகங்களை அனுபவிக்கிறான். எந்த உலகத்தில் சென்று சோகத்தை அடையமாட்டானே அப்படிப்பட்ட நல்ல உலகங்களை அடைகிறான். பாவநடையுடையவன் பாவத்தைச் செய்கின்றவனுகிப் பாவத்தினுடைய [1] முடிவை அடைகிறதில்லை. புண்யநடையுள்ளவன் புண்யத்தைச் செய்கின்றவனுகிப் புண்யத்தினுடைய முடிவை அடைகிறதில்லை. ஆதலால், புண்யத்தைச் செய்வதற்கு முயலவேண்டும்; பாவத்தை விட்டுவிடவேண்டும். அஸூயையில்லாதவனும் நன்றி அறிவுள்ளவனுமான மனிதன் கல்வினைகளையே செய்கிறான்; அதனல், ஸுகங்களையும் தர்மத்தையும் அர்த்தத்தையும் ஸ்வர்க்கத்தையும் அடைகிறான். நன்ருக [2] ஸம்ஸ்கரிக்கப்பட்டவனும் இந்திரியங்களை அடக்கினவனும் சுத்தியுள்ளவனும் மனத்தைக் கட்டுப்படுத்தினவனுமான அறிஞனுக்கு இம்மையிலும் மறுமையிலும் ஸுகானுபவம் எளிதில் ஏற்படுகிறது. பிராம்மணன் ஸாதுக்களுடைய தர்மத்தினல் நிலைபெற்றிருக்கவேண்டும்; சிஷ்டர்களைப்போலக் கிரியைகளைச் செய்யவேண்டும். உலகத்தாருக்குத் துன்பத்தைக் கொடாமல் ஜீவனத்தை அடைய விரும்பவேண்டும். தர்மசாஸ்திரங்களில் விசேஷமான அறிவுள்ளவர்களும் மற்றச் சாஸ்திரங்களிலும் ஸமர்த்தர்களுமான சிஷ்டர்கள் இருக்கிறார்கள். உலகத்தில் தமக்குரிய ஆசாரத்துடன் கிரியைகளைச் செய்கிற அவர்கள் தர்மஸாங்கர்யத்தை உண்டுபண்ணுகவர்கள். கற்றறிந்தவன் தர்மத்தினல் ஸுகத்தை அனுபவிக்கிறான்; தர்மத்தையே அண்டிப் பிழைக்கிறான். பிராம்மணேத்தமரே! அந்தத் தர்மத்தால் அடையப்பட்ட பொருளால் எந்தத் தர்மத்தில் குணங்களைக் காண்கிறானே அந்தத் தர்மத்தின் அடிவரை நாடுகிறான். தர்மாத்மாவானவன் இப்படியன்றே இருக்கிறான்? இவனுடைய மனமும் தெளிவடைகிறது. அவன் இவ்வுலகில் மித்திரஜனங்களுடன் பிரிகிறான்; பரலோகத்தை அடைந்தும் ஆனந்திக்கிறான். ஸாதுக்களுள் சிறந்தவரே! தார்மிகன் ரஸத்தையும் ஸ்பர்சத்தையும் ரூபத்தையும் இஷ்டமான கந்தங்களையும்

---

[1] இருவரும் மேலும் மேலும் அதனை அதனையே செய்வரென்றபடி.

[2] ஸம்ஸ்காரங்கள் கர்ப்பாதான முதலியன; அவை பத்தென்றும் பன்னிரண்டென்றும் பதினேழென்றும் கூறுவர்.

பிரபுத்தன்மையையும் அடைகிறான். இதனைப் பெரியோர்கள் தர்மத்தினுடைய பயனாக அறிகிறார்கள். மஹாப்ராம்மணரே! தர்மத்தின்பலனை அடைந்து தார்மிகன் களிப்படைகிறதில்லை. ப்ரீதி அடையாத அந்த மனிதன் ஞானத்ருஷ்டியினால் வைராக்கியத்தை ஏற்றுக்கொள்ளுகிறான். ஞானத்ருஷ்டியுள்ள மனிதன் இவ்வுலகில் விருப்பு வெறுப்பு முதலியவைகளுக்கு வசப்பட்டவனாகிறதில்லை; விரக்தி அடைகிறான்; தன்னிஷ்டத்துக்காகத் தர்மத்தை விடமாட்டான்; உலகத்தைத் கர்மஸ்வரூபமாகக்கண்டு கர்மபலத்தின் தியாகத்தில் முயல்கிறான்; பிறகு, உபாயமல்லாததை விட்டு உபாயத்தினால் மோக்ஷத்தில் முயல்கிறான்; இவ்வாறு, வைராக்கியத்தை அடைகிறான்; பாபகர்மங்களை விடுகிறான்; தார்மிகனுமாகிறான்; சிறந்த மோக்ஷத்தையும் அடைகிறான். மனிதனுக்குத் தவமானது மோக்ஷத்துக்கு ஸாதனமாயிருக்கிறது. அதற்கு மூலம் சமதமங்கள். அவற்றால் எந்த எந்த விருப்பங்களை மனத்தினால் விரும்புகிறானோ அவைகளனைத்தையும் அடைகிறான். பிராம்மணர்களால் மிக்க மேன்மைபெற்றவரே! மனிதன் இந்திரியங்களை அடக்குவதினாலும் ஸத்தியத்தாலும் மனத்தை அடக்குவதாலும் சிறந்ததான பிரம்மத்தினுடைய ஸ்தானத்தை அடைகிறான்' என்று சொன்னார். பிராம்மணன், 'சிறந்த விரதத்தையுடையவரே! இந்திரியங்களென்று சொல்லப்படுகின்றவை எவை? இந்திரியங்களுடைய அடக்கமானது எவ்வண்ணம் செய்யத்தக்கது? அடக்குவதற்கு யாதுபயன்? தார்மிகர்களால் சிறந்தவரே! அவைகளுடைய பயனை எவ்வண்ணம் அடைகிறான்? கல்ல தார்மிகரே! இந்தத் தர்மத்தை உள்ளபடி அறிவதற்கு விரும்புகிறேன்' என்று வினவினான்.

இருநூற்றுப்பதினான்காவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(தர்மவியாதர் பிராணிகளால் செய்யப்படுகிற நல்வினை தீவினைகளின் இயற்கை முதலியவற்றையும் பிராம்மணமகிமை முதலியவற்றையும் கௌசிகனுக்குச் சொல்லியது.)

யுதிஷ்டிரா! மஹாராஜனே! பிராம்மணனால் இவ்வாறு உரைக்கப்பட்ட தர்மவ்யாதர் சொல்லிய மறுமொழியைக் கேள். வியா

தர், 'பிராம்மணோத்தமரே! மனிதர்களுடைய மனமானது அறிவதற்காக முதலில் விஷயங்களில்செல்லுகிறது. மனிதன் அவற்றை அடைந்து காமத்தையும் கோபத்தையும் அடைகிறான்; பிறகு, அந்த விஷயானுபவத்துக்காக முயல்கிறான்; பெரிய காரியத்தையும் செய்யத்தொடங்குகிறான்; விருப்பமான ரூபங்களிலும் சுகந்தங்களிலும் அப்யாஸத்தையும் செய்துவருகிறான். அந்த அப்யாஸத்தால் விருப்பு உண்டாகிறது. அதற்குப் பிறகு, வெறுப்பு உண்டாகிறது. பிறகு, லோபமுண்டாகிறது. அதற்குப் பிறகு, மோஹமுண்டாகிறது. லோபகுணத்தால் கவரப்பட்டவனும், விருப்பு வெறுப்புக்களால் நிரம்பியிருப்பவனுமான அந்த மனிதனுக்குப் புத்தியானது தர்மத்தில் செல்லுகிறதில்லை. கபடத்தால் தர்மத்தைச் செய்கிறான். கபடத்தால் தர்மத்தைச் செய்வதுடன் கபடத்தால் பொருளையும் அடையவிரும்புகிறான். பிராம்மணோத்தமரே! கபடத்தினால் பொருள்கள் கிடைத்தபோது அந்தப்பொருள்களிலேயே புத்தியானது மயங்கிநிற்கிறது. பிராம்மணோத்தமரே! ஆகையால், நண்பர்களாலும் பண்டுதர்களாலும் தடுக்கப்பட்டும் பாவத்தைச் செய்ய விரும்புகிறான். லோகத்திலில்லாதனவாக லோகத்தில் நன்கு கூறப்பட்டிருப்பதாக மறுமொழி கூறுகிறான். அவனுக்கு விருப்பு வெறுப்புக்களாலுண்டாகிற அதர்மம் முன்னுள்ளதாக விரிவடைகிறது. பாவத்தைச் சிந்தித்துக்கொண்டிருக்கிறான்; சொல்லவும் சொல்லுகிறான்; செய்யவும் செய்கிறான். அந்தப் பாவத்தில் முயல்கின்ற அந்த மனிதனுக்கு நற்குணங்கள் நாசமடைகின்றன. பாவங்களைச் செய்பவனுக்கு அவனை நெருங்கியிருக்கிற பாவச்செய்கைகளான சேனாவர்கள். அவன் அந்தப் பாவிகளுடைய கோட்டையில் இவ்வுலகில் துக்கமடைகிறான். லோகாந்தரத்திலும் அப்படியே அடைகிறான். பாவகுணமுள்ளவன் இவ்வண்ணமிருக்கிறான். எவனிடமிருந்து தர்மபோதத்தைக் கேட்கிறானோ, எவன் இந்தத் தர்மவழிகளைப் புத்தியினால் முழுதும்பார்க்கிறானோ, எவனுக்கு இந்தத் தர்மங்களில் விசுவாசமுண்டோ அவனுடைய புத்தியானது தர்மங்களில் பிரகாசிக்கிறது' என்று சொன்னார்.

பிராம்மணன், 'ஐயரே! எவனிடமும் சிலர் குற்றங்களையும் பிறரையடையுமுள்ள தர்மத்தைச் சொல்லுகிறீர். இவ்வுலகில் பிரசாரமுள்ளதோ, பிரசாரமுள்ளதோ சொல்லுகிறீர்' என்று சொல்ல, வியாதர், 'மகா

பாக்யாலிகளான பிராம்மணர்கள் எப்பொழுதும் முதலில் புஜிக்கின்ற பித்ருக்கள். உலகத்தில் கற்றறிந்தவன் எல்லாவிதத்தாலும் அவர்களுக்குப் பிரியத்தைச் செய்யவேண்டும். பிராம்மணர்களுக்கு மேல! பிராம்மணர்களுக்கு நமஸ்காரம் செய்து அவர்களுக்கு எது பிரியமோ அதை உடனுக்குச் சொல்லுவேன். பிராம்மணர்களுக்குப் பொருளான விருத்தியை என்னிடமிருந்து தெரிந்து கொள்ளும். பிராம்மணரே! ஐங்கமஸ்தாவயங்களான இவ்வுலகமனைத்தும் ஐந்துமகாபூதங்களுடைய ஸ்வரூபமாக இருக்கின்றன. இவற்றைக்காட்டிலும் சிறந்த தேவதைஸ்தானமொன்றுமில்லை. ஆகாயம், காற்று, தீ, ஜலம், பூமி ஆகிய இந்த ஐந்தும் மகாபூதங்கள். சப்தமும் ஸ்பர்சமும் ரூபமும் ரஸமும் கந்தமும் அவைகளின் குணங்கள். அந்தப்பூதங்களுடைய குணங்களுக்குப் அதிகமாதல் குறைதல் முதலிய குணங்களிருக்கின்றன. பஞ்சபூதங்களாலாகிய காணப்படுகின்ற எல்லாப்பிராணிகளும் ஒன்றின்குணம் மற்றொன்றில் சேர்ந்திருக்கின்றவையாயிருக்கின்றன. முக்தி முக்தியிருக்கிற பொருள்களுடைய எல்லாக்குணங்களும் முன்னமே குணிகளான [1] முன்னில் காணப்படுகின்றன. ஆறாவதான சேதனை என்பது மனமென்று சொல்லப்படுகிறது. புத்தியானது எழாவதாக இருக்கும். அதற்கு மேற்பட்டது அஹங்காரம். ஸத்து இந்திரியங்கள், ஸ்பர்சம், ரஜோகுணம், ஸத்வ குணம், தமோகுணம் இவ்வாறுகப் பதினேழு அவயவங்களோடுகூடின இந்தக் கூட்டமானது அவ்யக்தமென்கிறபடியாயிருக்கும். பிராம்மணர்களுடைய மனோரதமாகவிருப்பதை [2] விருத்தியென்று சொல்லுவார்கள். இவ்விருத்தியானது [3] இருபத்தெட்டாவது. இவ்விருபத்தெட்டாவதும் உடனுக்குடனே அடைந்திருக்கிறது: ஆதலால் ஸாதுக்களுக்கு விருத்தியென்று சொல்லப்படுகிறது.

[1] இந்த, பஞ்சபூதவ்யாக்யானம் திருத்தியுரை; பிரம்மத்தின் குணங்கள் ஸாங்கயோகத்தின் குணங்கள் பிரம்மத்திலும் தத்தினிடனுத்தான் காணப்படுகின்றன என்பதே கருத்து.

[2] வேறு பாடம்.

[3] சாந்தி பர்வம் 1220-ம் பக்கத்திலும் அடிக்குறிப்பு பாடம் 99-ம் பக்கத்திலும் குறிப்புக்களைப் காண்க.

இருநூற்றுப்பதினைந்தாவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(தர்மவ்யாதர் ஐந்து பூதங்களுடைய குணங்களைச் சொல்லி இந்திரியங்களை அடக்குதலும் அடக்காமையும் ஸுகதுக்கங்களுக்கு முறையே முக்யமான காரணங்களென்பதைக் கூறியது.)

பாரத! இவ்வண்ணம் தர்ம வ்யாதரால் சொல்லப்பட்ட அந்தப் பிராம்மணன், மனத்திற்குப் பிரியத்தைப் பெருக்குகிற சொல்லை மீண்டும் சொன்னான். பிராம்மணன், 'தர்மத்தை அறிந்தவர்களுள் சிறந்தவரே! எவைகளை ஐந்து மகாபூதங்களென்று சொல்லுகிறார்களோ அந்த ஐந்து பூதங்களுள்ளும் ஒவ்வொன்றினுடைய குணங்களையும் எனக்கு நன்கு உரைப்பீராக' என்று வினவ, வ்யாதர், 'பூமி, ஜலம், அக்னி, வாயு, ஆகாசம் ஆகிய எல்லாம் குணங்களால் மேலிட்டனவைகள். அவைகளுடைய குணங்களை உமக்குக் கூறுவேன். பூமியானது ஐந்து குணங்களுள்ளது. பிராம்மணரே! ஜலமானது நான்கு குணங்களுள்ளது. அக்னியில் மூன்று குணங்களிருக்கின்றன. காற்றிலும், ஆகாசத்திலும், முறையே இரண்டுகுணங்களும் ஒருகுணமும் இருக்கின்றன. சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், ஐந்தாவதான கந்தம்ஆகிய எல்லாவற்றிலும்சிறந்த இந்த ஐந்தும் பூமியின் குணங்கள். பிராம்மணரே! கந்தமரே! நல்ல விரதமுள்ளவரே! பிராம்மணரே! சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம் ஆகிய இவைகள் ஜலத்தினுடைய குணங்களென்று உமக்குச் சொல்லப்பட்டன. சப்தம், ஸ்பர்சம், ரூபம் இம் மூன்று குணங்களும் தேஜஸைச் சார்ந்திருக்கின்றன. சப்தம், ஸ்பர்சம் இரண்டும் வாயுவிலிருக்கின்றன. சப்தம் மூன்றே ஆகாசத்தில் இருக்கிறது. பிராம்மணரே! எந்த ஐந்து பூதங்களில் உலகங்கள் நிலைபெற்றிருக்கின்றனவோ அந்த எல்லாப் பூதங்களிலும் இந்தப் பதினைந்து குணங்களிருக்கின்றன. பிராம்மணரே! இந்தப் பூதங்கள் ஒன்றை ஒன்று விட்டுப் பிரியாமல் சேர்ந்திருப்பதனால் பிரகாசிக்கின்றன. எப்பொழுது ஜீவர்கள் தம் தேகத்தைத்தாட்டிலும் விலக்ஷணமான வேறு தேகத்தை நினைக்கிறார்களோ அப்பொழுது முன் தேகத்தை விட்டு வேறு தேகத்தை அடைகிறார்கள். அவர்கள் (லிங்கசரீரத்தால்)

மூறையே மறைகிறூர்கள்; முறையே தோன்றவும் தோன்று கிறூர்கள். ஸ்தாவரங்களாலும் ஜங்கமங்களாலும் நிறைந்திருக்கிற இவ்வுலகமனைத்தையும் வியாபித்திருக்கிற [1] தாதுக்கள் ஐந்துபூதங்களைச் சேர்ந்தவைகளாகவே ஆங்காங்குக் காணப்படுகின்றனவன்றே? இந்திரியங்களால் அறியப்படுவனவெல்லாம் வ்யக்தமென்று எண்ணப்படுகின்றன. இந்திரியங்களுக்குப் புலப்படாததும் அனுமானங்களால் அறியத்தக்கதுமாயிருப்பது அவ்யக்தமென்று அறியத்தக்கது. சப்தம் முதலிய இந்தக் குணங்களை இந்த இந்திரியங்கள் தத்தமக்கு உரியபடி கிரஹிக்கின்றன. தேகத்துடன் கூடின ஜீவன் அப்படிப்பட்ட இந்திரியங்களைத் தரித்துக் கொண்டு இந்த ஜனன மரணச்சுழலில் தாபத்தை அடைகிறான். உயர்வுதாழ்வான தத்வங்களை அறிந்தவன், ஆத்மா உலகத்தில் பரவியிருப்பதையும் உலகம் ஆத்மாவினிடத்திலிருப்பதையும் பார்க்கிறான். அவனே விஷயங்களில் பற்றுதலுள்ளவனுனால் (உலகத்தில்) பஞ்சபூதங்களைக் காண்கிறான். எப்பொழுதும் எல்லா நிலைமைகளிலும் எல்லாப்பூதங்களையும் பார்க்கிறவனும் ப்ரம்மமாகியிருக்கிற வனுமான மனிதனுக்கு இருவினைப்பயன்களோடு சேர்க்கை உண்டாகிறதில்லை. அஜ்ஞான முதலிய கிலேசத்தைத் தாண்டியிருக்கிற யோகிக்கு ஒப்பற்ற உறுதிப்பொருளான மோக்ஷமானது இவ்வுலகில் வாஸம் பயனற்றதென்பதைக் காட்டுகிற ஞானத்தினால் அடையப்படுகிறது. சிறந்த புத்தியுள்ளவரான பகவான் பிரம்மத்தை ஆதியந்தமில்லாததென்றும் தனக்குத் தன்னையே காரணமாகக்கொண்டதென்றும் எப்பொழுதும் குறைவற்றதென்றும் தனக்கு நிகரில்லாததென்றும் உருவமில்லாததென்றும் சொல்லுகிறார். பிராம்மணரே! நீர் என்னைக் கேட்டது முழுமையும் தவத்தையே மூலமாகக்கொண்டது. மனிதன் எதை எதை விரும்புகிறானோ அதை அதைத் தவத்தினால் அடைகிறானன்றே? இந்திரியங்களை நன்றாக அடக்கிக்கொண்டு கர்மங்களை அனுஷ்டிப்பவனுக்குத் தவம் நிலைபெறுகிறது. வேறுவிதத்தால் தவம் கைகூடாது. ஸ்வர்க்கம் நரகமென்னும் இரண்டும் முழுமையும் இந்திரியங்களையே சார்ந்திருக்கின்றன. அவைகள் அடக்கப்பட்டால் ஸ்வர்க்கத்திற்கு ஸாதகமாகும்; வெளியில் விடப்பட்டால் நரகத்திற்கு ஸாதகமாகும். எல்லா இந்திரியங்களையும் அடக்கி

[1] பீஷ்மபர்வம் 19, 363, சாந்திபர்வம் 629 பக்கம் குறிப்புக்களைக் காண்க.

நிலைநிறுத்துதலே ஸம்பூர்ணமான யோகஸித்தி. இது தவத்துக்கும் ஸ்வர்க்கத்துக்கும் நரகத்துக்கும் மூலமன்றே? இந்திரியங்கள் விஷயங்களில் ஸஞ்சரிப்பதினால் மனிதன் ஸம்சயமின்றித் தோஷத்தை அடைகிறான். அவைகளையே நன்றாக அடக்கினால் அதனால் ஸித்தியை அடைவான். எவன் ஆத்மாவினிடத்தில் சேர்ப்பிக்கத்தக்க ஆறு இந்திரியங்களையும் அடக்கவல்லவனாகிறானோ ஜிதேந்திரியனான அந்தமனிதன் பாவங்களோடு சேர்க்கை அடையமாட்டான்; அவ்வாறிருக்க, அனர்த்தங்களோடு எவ்வாறு சேர்க்கை அடைவான்? சரீரமானது ஜீவனுக்கு ரதமாகக் காணப்பட்டிருக்கிறது; ஜீவாத்மா அந்த ரதத்திலிருக்கிற ஸாரதி; இந்திரியங்களைக் குதிரைகளாகச் சொல்லுகிறார்கள். இந்திரியங்களை அடக்கினவனும் தீரனும் அஜாக்கிரதையில்லாதவனுமான மனிதன் அந்த நல்ல குதிரைகளால் தேஷமத்துடன்கூடினவனாக ரதிகன்போல் ஸுகமாகச்செல்லுகிறான். தீரனான எந்த மனிதன் சரீரமாகிற ரதத்தில் பூட்டப்பட்டவையும் அபாயத்தை விளைவிப்பதிலே நோக்கமுள்ளவையுமான ஆறு இந்திரியங்களாகிற குதிரைகளுடைய கடிவாளங்களை இழுத்துப் பிடிப்பானோ அவன் உத்தம ஸாரதியாவான். வழிகளில் விரைவாகச் செல்லுகிற குதிரைகள் போல விஷயங்களில் விரைவாகச் செல்லுகிற இந்திரியங்களை இழுத்துப்பிடித்து ஸாரத்தியம் செய்வதில் மனிதன் தைர்யத்தைக் கைக்கொள்ளவேண்டும். தைர்யத்தினால் அவைகளை நிச்சயமாக ஜயிப்பான். விஷயங்களில் ஸஞ்சரிக்கின்ற இந்திரியங்களை அனுஸரித்து மனமானது தடையின்றி விடப்படுமானால் அந்த மனமானது இவனுடைய புத்தியை, காற்று ஜலத்தில் ஓடத்தை இழுப்பதுபோல இழுக்கிறது. ஸங்கல்பம் சேர்ந்த சப்தம் முதலிய எந்த ஆறு விஷயங்களில் அந்த விஷயங்களின் அனுபவத்தாலுண்டாகிற ஸுகத்தை விஷயப்பற்றுள்ளவர்கள் மதிமயக்கத்தால் ஸுகமென்று கொள்ளுகிறார்களோ அந்த விஷயங்களில் விஷயப்பற்றற்றவன் அவை நிலையற்றவையென்றெண்ணிப் பிரம்மத்தியானத்தாலுண்டாகிற பலனைப் பெறுகிறான்' என்று சொன்னார்.

இருநூற்றுப்பதினேழாவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(தர்மவியாதர் ஸத்வம் முதலிய மூன்று குணங்களையும் அத்யாத்ம ஸ்வரூபத்தையும் கௌசிகனுக்குத் சொல்லியது.)

பரதவம்சத்திலுதித்தவனே! தர்மவியாதரால் இவ்வண்ணம் ஸூக்ஷ்மமானது சொல்லப்பட்டவுடனே, அந்தப் பிராம்மணரை, மனத்தை ஒருவழிப்படுத்திக்கொண்டு, 'ஸத்வம், ரஜஸ், தமஸ் இவற்றின் குணங்களை உள்ளபடி கேட்கின்ற எனக்கு இப்போழுது உள்ளபடி உரைப்பீராக' என்று மறுபடியும் ஸூக்ஷ்மத்தை வினவினன். வியாதர், 'நீர் என்னைக் கேட்டதனால் உமக்கு அனைத ஸந்தோஷத்தோடு சொல்லுவேன். சொல்லுகின்ற என்னிடமிருந்து அந்தக் குணங்களைத் தனித்தனி தெரிந்துகொள்வீராக. அந்தக்குணங்களுள் தமோகுணமானது விபரீத ஞானமயமாயுள்ளது. இவைகளுள், ரஜஸானது பிரவ்ருத்தியை உண்டுபண்ணுகிறது. இவைகளுள், பிரகாசம் மேலிட்டிருப்பதால் ஸத்வகுணமானது சிறந்ததென்று சொல்லப்படுகிறது. தமோகுணமுள்ளவன் அறியாமை மேலிட்டவனாகவும் மூடனாகவும் உறக்கத்தை ஸ்வபாவமாகக் கொண்டவனாகவும் புத்திதெளிவில்லாதவனாகவும் கெட்ட இந்திரியங்களுள்ளவனாகவும் அஜ்ஞானத்தால் கெடுக்கப்பட்டவனாகவும் சோம்பேறியாகவுமிருப்பான். பிராம்மணரிலுத்தமரே! எவன் கன்னத்தையும் இன்சொல்லுமுள்ளவனும் ஆலோசிப்பவனும் மனிதர்களுள் சிறந்தவனும் ஆஸையையில்லாதவனும் லாபத்தை அடைவதில் விருப்பமுள்ளவனும் இறுமாப்புள்ளவனும் அஹங்காரமுள்ளவனுமாயிருப்பானோ அவன் ரஜோகுணமுள்ளவனென்று அறியத்தக்கவன். எந்த மனிதன் அதிகப்பிரகாசமுள்ளவனும் தானும் லாபத்தை அடைவதில் விருப்பமில்லாதவனும் ஆஸையையில்லாதவனும் கோபமில்லாதவனும் சிறந்தபுத்தியுள்ளவனும் ஜிதேந்திரியனுமாயிருக்கிறானோ அவன் ஸாத்விகனென்று அறியத்தக்கவன். கல்லறிவுள்ளவனென்ன ஸாத்விகனே உலகத்தாருடைய கடைகளாடு ஸம்பந்தப்படமாட்டான்; அறியத்தக்கதை அறிந்துகொள்வான். உலக கடையை அருவருப்பான். (அவனுக்கு) வைராக்கியத்தினுடைய ரூபமோ முக்கியமெதாடங்குகிறது. அஹங்காரமானது

தணிவடைகிறது. மனம் தெளிகிறது. மூன்று காரணங்களிலும் ஒற்றுமை உண்டாகிறது. பிறகு, இந்த விரக்தனுக்கு (ஸுகம் துக்கம், லாபம் அலாபம் முதலிய) எல்லா த்வந்துவங்களும் பரஸ்பரம் விரோதியாமல் தணிந்துவிடுகின்றன. இப்படிப்பட்ட விரக்தனுக்கு ஒரு விஷயத்திலும் [1] ஒரு ஸம்சயமும் உண்டாகிறதில்லை. பிராம்மணரே! சூத்திரஜாதியில்பிறந்து நல்ல குணங்களையே அடைந்திருப்பவனுக்கு வைச்யத்தன்மையும் அப்படியே க்ஷத்திரியத்தன்மையும் உண்டாகின்றன. மனத்திலும் வாக்கிலும் செய்கையிலும் கபடமில்லாமல் உள்ளும்புறமும் ஒத்திருப்பவனுக்கு ப்ராம்மண்யம் உண்டாகிறது. உமக்கு எல்லாக்குணங்களும் கூறப்பட்டன. மறுபடியும் எதைக் கேட்க விரும்புகிறீர்?' என்று சொன்னர்.

பிராம்மணன், 'சரீரத்திலுள்ள அக்னியானது பிருதிவிஸம்பந்தமுள்ள தாதுவை அடைந்து எப்படி இருக்கும்? காற்றானது ஸ்தானவிசேஷங்களை அடைவதனல் எவ்வாறு பிராணிகளை இருக்கச் செய்கிறது?' என்று வினவினன். யுதிஷ்டிர! பிராம்மணனல் வினவப்பட்ட இந்த விஷயைக்கேட்டு, வ்யாதர், மகாத்மாவான பிராம்மணனுக்குச் சொல்லலானர். 'சரீரத்தைப் பரிபாலனம் செய்துகொண்டு அக்னியானது சிரஸை அடைந்திருக்கிறது. பிராணவாயுவானது தலையிலும் அக்னியிலுமிருந்துகொண்டு பலவிதமாக ஸஞ்சரிக்கின்றது. சென்றது, இருக்கிறது, வருவது ஆகிய எல்லாம் பிராணனில் நிலைபெற்றிருக்கின்றன. அதுவே பூதங்களுள் சிறந்தது. அதை ஒளிவடிவமான பிரம்மமாக உபாஸிக்கிறோம். அது [2] ஸமஷ்டிஜீவன். எல்லாப்ராணிகளுக்கும் அது அந்தராத்மா. அது சாச்வதமான புருஷன். அது மஹத்தத்வம்; புத்தி; அஹங்காரம்; பூதங்களுக்குஅதுதான் விஷயமாக இருக்கிறது. அதுஅவ்யக்தம்; ஸத்வமென்கிறபெயருள்ளது. அது ஜீவன். அதுவே காலம். பிராம்மணோத்தமரே! ப்ரக்ருதியும் புருஷனும் பிராணனே. அது ஸ்வப்னஸமயத்தில் விழித்துக்கொண்டிருக்கிறது. ஸுஷுப்தியில் அது உறங்கவும்உறங்குகிறது. விழித்துக்கொண்டிருக்கிற பிராணிகளிடம் வலிமையை உண்டுபண்ணுகிறது. வேலைசெய்கிற பிராணிகளிடம் இயங்கும்படியும் செய்கிறது.

[1] வேறு பாடம்.

[2] 'சித்து, விஜ்ஞானம், பிராணன் இவற்றின் சேர்க்கை' என்பது பழையவுரை.

பிராம்மமேணைத்தமரே! அந்தப் பிராணவாயுவானது தடுக்கப்பட்டு விட்டால் (மனிதன்) மரித்தவனென்று சொல்லப்படுகிறான். பூதங்களின் சேர்க்கையான சரீரத்தைத் தரிக்கிறஜீவன் சரீரத்தை விட்டு மறுபடியும் வேறு சரீரத்தை அடைகிறான். சரீரத்தினுடைய மத்தியில் நாபிமண்டலம் நிலைபெற்றிருக்கும். நாபியில் அக்னியானது நிலைபெற்றிருக்கிறது. [1] இவ்வாறு சரீரத்தினுள்ளிருக்கிற விஜ்ஞானரூபியானஜீவனும் வெளியிலுள்ள சரீரம் இந்திரிய முதலியனவும் பிராணவாயுவினால் பாதுகாக்கப்படுகின்றன. அந்த விஜ்ஞானம் உபாதியின் ஸம்பந்தத்தினால் ஜீவனென்னும் பெயரை அடைந்தபிறகு, ஸமானவாயுத் தன்மையை அடைந்து (ஜாடராக்னியை அடுத்து உண்டபொருள்களை ஜீரணப்படுத்தி அபானவாயுவாகி அவற்றின் ஸாராஸாரங்களைத்) தக்கம் இடங்களில் சேர்ப்பிக்கிறது. அபானவாயுவானது [2] வஸ்தியினடியிலும் குதத்திலும் அக்னியை அடைந்து மூத்ரத்தையும் மலத்தையும் கழித்துக்கொண்டு சுற்றிவருகிறது. ஒன்றுக இருந்துகொண்டு பிரயத்னம், செய்கை, வண்மைமூன்றிலுமிருக்கிற வாயுவை அத்யாத்ம ஸ்வரூபத்தை அறிந்த மனிதர்கள் உதானமென்றுசொல்லுகிறார்கள். அப்படியே, மனிதர்களுடைய சரீரங்கள் முழுமையிலும் ஸந்திதோறும் நன்கு நிலைபெற்றிருக்கிற வாயுவானது வ்யானமென்று உபதேசிக்கப்படுகிறது. அந்த அக்னியோ, சரீரதாதுக்களில் பரவியதாகவும் வாயுவினால் நன்றாகத் தூண்டப்பட்டதாகவும் இருந்துகொண்டும் ரஸங்களையும் சரீரதாதுக்களையும் வாதபித்தஸ்லேஷ்மங்களையும் நடைபெறச் செய்துகொண்டும், எல்லாப்பக்கங்களிலும் ஓடுகிறது. பிராணன் முதலிய வாயுக்கள் சேர்வதால் ஒன்றிலொன்று உராய்தல் உண்டாகிறது. அதனால் உண்டாகிற சூடே பிராணிகளுடைய அன்னத்தைப் பக்குவம்செய்கிற அக்னியென்று அறியத்தக்கது. அபானத்துக்கும் உதானத்துக்கும் இடையில் பிராணனும் வ்யானனும் நன்கு நிலைநிறுத்தப்பட்டிருக்கின்றன. அக்னியோ, அதிஷ்டானத்தை நன்கு அடைந்ததாக அன்னத்தை நன்றாகப் பக்வம்செய்கிறது. இந்த நெருப்புக்கு (மலத்தைக்கழிக்கிற இந்திரியமான) பாயுவானது கடைசி எல்லையாகும். அது குதமென்று பேருள்ளதாகும். மனிதர்களுடைய பிராணவாயுமுதலிய ஐந்து வாயுக்களுள்ளும் அந்த அபானவாயுவிலிருந்து நாடிமார்க்கங்கள் உண்டா

[1] வேறுபாடம். [2] நாபியின் கீழ்ப்பாகம்.

கின்றன. அக்னியின் வேகத்தையுடைய பிராணவாயுவானது குதத்தினுடைய கடைசியில் திருப்பி அடிக்கப்படுகிறது. அப்படி திருப்பி அடிக்கப்பட்ட பிராணவாயுவானது மேலே வந்து மீண்டும் அக்னியை நன்றாக மேலே எழுப்புகிறது. பக்வாசயமோ நாபிக்குக் கீழாகஇருக்கிறது; ஆமாசயமானது மேலேயிருக்கிறது. சரீரத்தினுடைய நாபியின் மத்தியிலுள்ள ஜாடராக்னியில் எல்லா இந்திரியங்களும் நிலைபெற்றிருக்கின்றன. பிராணவாயுமுதலான பத்து வாயுக்களால் ஏவப்பட்ட எல்லா நாடிகளும் ஹ்ருதயத்தினின்று குறுக்காகவும் மேலாகவும் அவ்வாறே கீழாகவும் சென்று அன்னரஸத்தைத் தேகத்தில் பரவச் செய்கின்றன. எந்த வழியினால் அந்தப் பரமாத்மஸ்வரூபத்தை அடைகிறார்களோ அப்படிப்பட்ட இந்தமார்க்கம் யோகிகளுக்கு உரியது. சரமத்தை ஜயித்தவர்களும் ஸமபுத்தியுள்ளவர்களுமான தீரர்கள் ஸுஷும்நா நாடியுடன் ஸஹஸ்ராரமென்னும் இடத்தை அடைந்து அந்த நாடியின்வழியாகப் பரமாத்ம ஸ்வரூபத்தைச் சரீரத்தில் தியானம் செய்வதற்காக நிலைநிறுத்துகிறார்கள். இவ்வண்ணம் எல்லாப்பிராணிகளிடமும் ப்ராணரூபமான வாயுக்கள் பரவியிருக்கின்றன. அவ்விரண்டையும் அக்னியுடன்கூடியவைகளென்றும் பிராணவாயுவை ஆத்மாவில் நிலைபெற்றதென்றும் அறிந்துகொள்ளவும். ஜீவாத்மா [1] பதிமூன்று விகாரங்களுடன் கூடின லிங்கசரீரத்தோடு ஐக்யத்தை அடைந்தவனாகவும் [2] பதினாறு கலைகளின் கூட்டத்தினால் நிறைக்கப்பட்டவனாகவும் இருக்கிறான். யோகத்தால் ஜயிக்கப்பட்ட புத்தியுள்ள நித்யனான அந்த ஆத்மாவை ஸூக்ஷ்மமாயும் ஸ்தூலமாயுமிருக்கிற தேகத்துடன் கூடியவனென்று அறிவீராக. அந்தக் கலைகளின் கூட்டத்தில் பாத்திரத்தில் நெருப்புப்போல எவன் எப்பொழுதும் வைக்கப்பட்டிருக்கிறானோ யோகத்தால் சித்தத்தை அடக்கிய அந்த ஜீவாத்மாவை நித்யனென்று அறிவீராக. தாமரை

[1] 'ஞானேந்திரியம் 5, கர்மேந்திரியம் 5, பிராணன் 5, மனம், புத்தி ஆகிய 17-ம் கூடியது லிங்கசரீரம் என்பர் வேதாந்திகள்; இவற்றில், பிராணன்களை 10 இந்திரியங்களிலும் புத்தியை மனத்திலும் அடக்கி 11 ஆகக்கூறும் ஸாங்கியர்களுடைய கொள்கைப்படி இங்குக்கூறப்பட்டது' என்பது பழையவுரை.

[2] பிராணன், ச்ரத்தை, ஆகாயம், வாயு, ஜோதி, அப்பு, பிருதிவி, இந்திரியம், மனம், அன்னம், வீரியம், தவம், மந்திரம், கர்மா, லோகம், காமம் ஆகப்பதினாறு' என்பது பழையவுரை.

இலையில் நீர்த்துளிபோல அந்தக் கலைகளின் கூட்டத்தில் எவன் நன்கு நிலைபெற்றிருக்கிறானே நித்யம் கர்மபலத்யாகத்தால் அடக்கப்பட்ட மனமுள்ள அவனை க்ஷேத்ரஜ்ஞனென்று அறிவீராக. ரஜஸையும் ஸத்வத்தையும் தமஸையும் உபாதியுடன்கூடின ஜீவன்களோடு ஸம்பந்தம்பெற்றவைகளென்று அறிவீராக. ஜீவாத்மாவைப் பரமாத்மாவுக்கு வேலைக்காரனைப் போலப் பாதீனமென்று அறிவீராக. அப்படியே, பரமாத்மாவைச் சிறந்தகுணங்கள் நிறைந்தவரென்று அறிவீராக. சைதன்யமில்லாத சரீரத்தைச் சைதன்யமுள்ளதென்றும் ஜீவனுக்குப் போக்யமென்றும் சொல்லுகிறார்கள். அந்த ஜீவன் ஸ்வதந்திரனைக் கிரியைகளைச் செய்கிறான்; எல்லாவற்றையும் அசைவுறச் செய்கிறான். எவன் ஏழு உலகங்களையும் படைத்தானோ அந்த ஆத்மாவை க்ஷேத்ரத்தை அறிந்தவர்கள் பரமாத்மாவென்று சொல்லுகிறார்கள். பிராணிகளிடம் அந்தர்யாமியாக இருக்கிற இந்தப் பரமாத்மா எல்லாப்பூதங்களிலும் பிரகாசிக்கிறதில்லை; ப்ரம்மஜ்ஞானத்தைச் சான்றோர்களால் அடைந்திருக்கிற மகான்களாலே ஸூக்ஷ்மமும் சிறந்ததுமான புத்தியினால் காணப்படுகிறான். அந்தக்கரணத்தின் தெளிவினால் மனிதன் நல்லகர்மங்களையும் பாபகர்மங்களையும் நாசம் செய்கிறான். தெளிந்தமனமுள்ளவன் ஆத்மாவிடம் நிலைபெற்று முடிவற்றஸுகத்தைப்பெறுகிறான். மனம்தெளிந்ததற்கு அடையாளம் யாதெனில், மனிதன் திருப்திஅடைந்து ஸுகமாகத் தூங்குவான். ஸுகம் துக்கம் இரண்டையும்விட்டு, (புண்யம் பாபம், பிறப்பு இறப்பு, முதலிய) இரட்டைகளையும் விட்டு, எல்லா வஸ்துக்களிலும் தன்னுடையதென்கிற அபிமானத்தையும்விட்டு, சேஷமத்தினால் மேன்மேல் பிரகாசத்தை அடைவிக்கப்பட்டவனைக் காற்றில்லாத இடத்தில் விளக்குப்போல (அசைவற்று) ஜ்வலிப்பான். எப்போழுதும் இரவின் முன்பாகத்திலும் பின்பாகத்திலும் மனத்தை யோகத்தில் செலுத்துகிறவனும் சோற்ப ஆகாரத்தை உட்கொள்பவனும் மாசற்ற மனமுள்ளவனுமான யோகியானவன் தன் உள்ளத்தில் பரமாத்மாவைப் பார்க்கிறான், மனிதன் தன்னுடைய ப்ரகாசிக்கின்ற தீபத்தினால் பொருள்களைப் பார்ப்பதுபோல மஹிமையமான தீபத்தினால் பரமாத்மாவை ஸாக்ஷாத்கரிக்கிறான். பிராம்மணரே! அவன் [1] வடிவமில்லாத ஆத்மாவைக்கண்டு

---

[1] 'நிராத்மானம்' என்பது மூலம்; 'நிர்க்குணமான' என்பது பழைய உரை.

பந்தத்தினின்று விடப்படுகிறான். எல்லா உபாயங்களாலும் லோபத்தையும் கோபத்தையும் விலக்கவேண்டும். எது ஞானமோ அது பவித்ரம். தவமானது ஸம்ஸாரமாகிற கடலைக் கடப்பதற்கு ஒரு வாராவதியாக எண்ணப்பட்டிருக்கிறது. எப்பொழுதும் தவத்தைக் கோபத்தினின்று பாதுகாக்கவேண்டும். [1] ஸம்பத்தை மாத்ஸர்யத்தினின்று பாதுகாக்கவேண்டும். வித்தையை மானவமானங்களினின்று காக்கவேண்டும். ஆத்மாவை (உண்மை ஞானத்திலிருந்து) தவறுதலினின்று பாதுகாக்கவேண்டும். அண்டினவர்களைப் பாதுகாப்பது சிறந்த தர்மம். பொறுமையானது நிகரில்லாத பலம். ஆத்மஜ்ஞானமானது சிறந்த ஞானம். ஸத்தியவிரதமானது எல்லா விரதங்களையுங்காட்டிலும் சிறந்த விரதம். ஸத்தியத்தைச் சொல்லுவது சிறந்தது. ஸத்திய ஜ்ஞானமானது ஹிதமாகும். எது பிராணிகளுக்கு மிகவும் ஹிதமாயிருக்குமோ அது சிறந்த ஸத்யமென்று எண்ணப்பட்டிருக்கிறது. எவனுடைய எல்லாக் கார்யங்களும் எப்பொழுதுமே பயனில் விருப்பமில்லாதவைகளாக இருக்குமோ, எவனுடைய ஹோமம் முதலிய எல்லாக் கிரியைகளும் பலத்யாகத்தில் நோக்குள்ளவையாக இருக்குமோ அவன் தியாகி; அவன் சிறந்த புத்தியுள்ளவன். குருவாக இருந்தாலும் இந்த ப்ரம்மயோகத்தைப் பிறருக்கு இவ்விதமென்று சொல்லமுடியாதாதலால் அந்த லக்ஷணையினாலேயே தெரிவிக்கவேண்டும். சித்தவிதியாக ரூபமான இந்த ப்ரம்மயோகத்தை விருத்தலக்ஷணையினால் யோகமென்கிற பெயருள்ளதாக அறியவேண்டும். பிராணிகளில் ஒன்றையும் துன்பம் செய்யலாகாது. ஸ்நேஹத்தன்மையாகிற வழியை அடைந்தவனாக நடக்கவேண்டும். இந்த மனித ஜன்மத்தை அடைந்து ஒருவனோடாவது வைரத்தைப் பாராட்டக்கூடாது. 'எனக்கு யாதொன்றுமில்லை' என்கிற எண்ணம், நல்ல ஸந்தோஷம், ஆசை இல்லாமை, சாபல்யமில்லாமை ஆகிய இவையே சிறந்த ஞானம். நல்ல ஆத்மஜ்ஞானம் உத்தமமானது. மனிதன் பற்றைவிட்டு இம்மையிலும் மறுமையிலும் சோகமில்லாததும் அசைவற்றதுமான வைராக்கியத்தைக் கைக்கொண்டு புத்தியினால் பரிசுத்த விரதமுள்ளவனாயிருக்கவேண்டும். அடைதற்கரிய மோக்ஷத்தை அடையவிரும்புகிற மனிதன் தவத்தில் எப்பொழுதும் நிலைபெற்றவனும் இந்திரியங்களை அடக்கினவனும் ப்ரம்மஸ்வரூபத்தை மனனம்செய்பவ

[1] 'தர்மத்தை' என்பது வேறுபாடம்.

னும் மனத்தை நன்கு அடக்கினவனும் விஷயங்களில் பற்றுதலில்லாதவனுமாக இருக்கவேண்டும். அறிஞர்கள் இந்தப் பிரம்ம ஸுகானுபவஸ்தானமான மோக்ஷத்தை, குணங்களாக எண்ணப்படுகின்றவை குணமல்லாதவையாகுமிடமென்றும், ஸ்திரீ முதலிய வஸ்துக்களின் ஸம்பந்தமில்லாததென்றும், ஜீவாத்மா ஒன்றுமேலேயே ஸாதிக்கத்தக்கதென்றும், அஜ்ஞானம் விலகினவுடன் அடையத்தக்கதென்றும், முந்தியே ஸித்தமாக இருக்கிறதென்றும், ஒன்றென்றே அறியத்தக்கதென்றும் சொல்லுகிறார்கள். எந்த மனிதன் துக்கம் ஸுகம் இரண்டையும் விடுகிறானோ அவன் அழிவில்லாத பிரம்மத்தை அடைகிறான். மற்ற ஒரு வஸ்துவினிடத்திலும் பற்றுதலை அடைகிறானில்லை. பிராம்மணோத்தமரே! பெரியோர்களிடமிருந்து கேட்டவண்ணம் என்னால் இவை எல்லாம் நுணுக்கமாக உமக்கு உரைக்கப்பட்டன. மீண்டும் எதைக் கேட்க விரும்புகிறீர்?' என்று கூறினார்.

இருநூற்றுப்பதினேழாவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யா பர்வம். (தொடர்ச்சி.)

(தர்மவ்யாதர் கௌசிகனைத் தம் வீட்டினுள் அழைத்துப்போய் முதியவர்களான தம் தாய்தந்தையரைக் காண்பித்து அவர் களுக்குத் தாம் பணிசெய்யும் முறையைத் தெரிவித்தது.)

யுதிஷ்டிர! இவ்விதம் மோக்ஷதர்மம் முழுமையும் சொல்லப்பட்டவுடன், பிராம்மணன் திடமான பிரீதியுள்ள மனத்துடன் தர்மவ்யாதனைப் பார்த்து, 'உம்மால் நியாயத்துடன்கூடின இவை அனைத்தும் நன்கு கூறப்பட்டன. உம்மால் தர்மங்களில் அறியப்படாதது ஒன்றுமில்லையில்லை' என்று சொல்ல, வியாதர், '[1] பிராம்மணோத்தமரே! என்னால் இந்த ஸித்தியானது எதனால் அடையப்பட்டதோ, எது என்னுடைய தர்மமோ, அதை நீர் நேரில் பார்ப்பீராக. பகவானே! எழுந்திரும். தர்மங்களை அறிந்தவரே! விரைவாக என் வீட்டினுள் நுழைந்து என்னுடைய தாய்தந்தைகளைப் பார்க்கக்கடவீர்' என்று சொன்னார். இவ்வண்ணம் சொல்லப்பட்ட அந்தப்பிராம்மணன் வீட்டினுள் நுழைந்து, நன்றாக அர்ச்சிக்கப்பட்டதும் மனத்திற்கு ஸந்தோஷத்தை

[1] பொருள் இரட்டித்தலால் ஒரு விளி விடப்பட்டது.

உண்டுபண்ணுகிறதும் மிக்க ரம்மியமாயிருக்கிறதும் நான்கு அறைகளுள்ளதும் தேவாலயத்திற்கொப்பானதும் தேவதைகளால் நன்முகப் பூஜிக்கப்பட்டதும் படுக்கைகளாலும் ஆஸனங்களாலும் நெருங்கியதும் நிகரில்லாத வாஸனையுள்ள வஸ்துக்களோடு கூடியதுமான உப்பரிகையைக் கண்டான். பிராம்மணன், அந்த மாளிகையில் வெள்ளைவஸ்திரங்களைத் தரித்தவர்களும் பூஜிக்கப் பட்டவர்களும் போஜனம் செய்தவர்களும் ஸந்தோஷமுள்ளவர்களும் உத்தமமான ஆஸனத்தில் வீற்றிருப்பவர்களுமான அந்த வ்யாதருடைய தாய்தந்தைகளைக் கண்டான். தர்மவ்யாதரோ அந்தத் தாய்தந்தைகளைப் பார்த்து முடிபிலுல் கால்களில் தண்டனிட்டார். தாய்தந்தைகள், 'தர்மங்களை அறிந்தவனே! எழுந்திரு; எழுந்திரு. தர்மம் உன்னை நாற்புறங்களிலும் பாதுகாக்கட்டும். நாங்கள் உன்னுடைய சுத்தியிலுல் பிரீதியுள்ளவர்களாகிறோம். நீண்ட ஆயுளை அடைவாயாக. நீ இஷ்டமான கதியையும் தவத்தையும் ஞானத்தையும் சிறந்த மேதையையும் அடைந்திருக்கிறாய். புத்திரா! ஸத்புத்திரனை உன்னுல் நித்யம் காலத்தில் நன்கு பூஜிக்கப்பட்டுத் தேவலோகத்தை அடைந்தவர்கள்போல இந்த இடத்தில் ஸுகமாகவே வஸிக்கிறோம். உனக்கு எங்களைத்தவிர வேறு தெய்வமானது தேவர்களுள் கூட இல்லை. பரிசுத்தனுக இருப்பதுடன், பிராம்மணர்களுக்குரிய இந்திரியநிக்ரஹமுள்ளவனுகவும் இருக்கிறாய். புத்திரா! எவர்கள் பிதாவுக்குப் பிதாமஹர்களோ, அப்படியே பிரபிதாமஹர்களோ அவர்கள் உன்னுடைய இந்திரிய நிக்ரஹத்தாலும் எங்களுக்குச்செய்கிற பூஜையினுலும் பிரீதியடைந்தார்கள். மனத்தினுலும் செய்கையினுலும் வாக்கினுலும் செய்யப்படுகிற பணிவிடை குறைவடைகிறதேயில்லை. உனக்கு இப்பொழுது எங்களுக்குப் பணி செய்வதைத்தவிர வேறு எண்ணம் இருப்பதாகக் காணப்படவில்லை. அருமைக்குழந்தாய்! ஜமதக்னியின் குமாரான பரசுராமரால் வயது முதிர்ந்த தாய் தந்தைகள் எவ்வண்ணம் நன்முகப் பூஜிக்கப்பட்டார்களோ, அவ்வாறுகவும், அதைவிட மேலாகவும் உன்னுல் எங்கள் விஷயத்தில் எல்லாம் செய்யப்பட்டன' என்று சொன்னர்கள். பிறகு, தர்மவ்யாதர் அவ்விருவருக்கும் அந்தப் பிராம்மணனை அறிவித்தார். அவ்விருவரும் அப்பொழுது அந்த ப்ராம்மணனை நல்வரவு கூறி அர்ச்சித்தார்கள். பிராம்மணன் அந்தப் பூஜையைப் பெற்றுக்கொண்டு அவ்விருவரையும்

பார்த்து, 'நீங்கள் புத்திரருடனும் வேலைக்காரர்களுடனும் வீட்டில் க்ஷேமமாயிருக்கிறீர்களா? நீங்கள் நோயற்றிருக்கிறீர்களா? இந்த (முதுமையில்) உங்கள் சரீரங்கள் ஸௌக்கியமாயிருக்கின்றனவா?' என்று வினவினன். முதியோர்கள், 'பிராம்மணரே! எங்களுக்கு வீட்டிலும் வேலைக்காரர்வகையிலும் எல்லாவிதத்தாலும் க்ஷேமம். பகவானே! நீரும் இடையூறில்லாமல் வந்தீரா'? என்று சொன்னார்கள். பிராம்மணன், ஸந்தோஷத்துடன் அவ்விருவரையும் பார்த்து, 'ஆம்' என்றே மறுமொழி கூறினன். தர்மவ்யாதரோ, அந்த ப்ராம்மணனைப் பார்த்து, 'பகவானே! இந்த மாதாபிதாக்கள் எனக்குப் பரதேவதை. தேவதைகளை உத்தேசித்து எது செய்யத்தக்கதோ அதை நான் இவர்களுக்குச் செய்கிறேன். எப்படி எல்லா உலகத்தாருக்கும் இந்திரனைத் தலைவனாகக் கொண்ட முப்பத்துமுக்கோடி தேவர்களும் நன்முகப் பூஜிக்கத்தக்கவர்களோ அப்படியே பிராயம் முதிர்ந்தவர்களான இந்தத் தாய்தந்தைகள் எனக்குப் பூஜிக்கத் தக்கவர்கள். எப்படி பிராம்மணர்கள் பூஜைக்குரிய பொருள்களைக் கொண்டுவந்து தேவர்களைப் பூஜிக்கிறார்களோ அப்படியே நான் ஆலஸ்யமில்லாதவனாக இந்தத் தாய்தந்தைகளிருவரையும் பூஜிக்கிறேன். பிராம்மணரே! இந்தத் தந்தை தாயிருவரும் எனக்குச் சிறந்த தெய்வம். பிராம்மணரே! எப்பொழுதும் நான் இவர்களைப் புஷ்பங்களாலும் பழங்களாலும் அன்னங்களாலும் ஸந்தோஷமடையச் செய்கிறேன். கற்றறிந்தவர்கள் எவைகளை அக்னிகளென்று சொல்லுகிறார்களோ, அந்த அக்னிகள் எனக்கு இவர்களே. பிராம்மணரே! யஜ்ஞங்களும் நான்கு வேதங்களும் மற்ற எல்லாமும் எனக்கு இவர்களே. இவர்களுடைய பணிவிடைக்காக என்னுடைய உயிர், மனைவி, புத்திரன், நண்பர்கள் எல்லாருமிருக்கிறார்கள். நான் புத்திரனேடும் மனைவியோடும் நாள்தோறுமே பணிவிடையைச் செய்கிறேன். பிராம்மணோத்தமரே! நானே இவர்களை நீராட்டுகிறேன். அப்படியே இவர்களுடைய கால்களை நன்முக அலம்புகிறேன். நானே ஆஹாரத்தையும் கொடுக்கிறேன். அனுகூலமான வார்த்தைகளைச் சொல்லுகிறேன். அப்ரியமான சொற்களை விலக்குகிறேன். நான், அகர்மத்திலாடு சேர்ந்தகாலிலும் இவர்களுக்குப் பிரியத்தைச் செய்கிறேன். பிராம்மணோத்தமரே! பிராம்மணரே! கர்மத்தையே பெரிதாக எண்ணிச் சோம்பலில்லாதவனாக எப்

பொழுதும் இவர்களுக்கு நானே நேரில் பணிவிடையைச் செய்கிறேன். பிராம்மணோத்தமரே! உலகத்தில் சிறப்படைய விருப்பமுள்ள மனிதனுக்கு, பிதாவும் மாதாவும் அக்னியும் ஆத்மாவும் ஆசாரியனுமாகிய ஐவரே குருக்கள். பிராம்மணோத்தமரே! இவர்களிடம் எவன் நன்றுகவே நடந்துகொள்ளுகிறானே அவனுலே அக்னிகள் நாள்தோறும் பணி செய்யப்பட்டவைகளாகும். இல்லறத்திலிருப்பவனுக்கு இது சாஸ்வத தர்மம்' என்று கூறினர்.

இருநூற்றுப்பதினேட்டாவது அத்யாயம்.

மார்க்கண்டேய ஸமாஸ்யா பர்வம். (தொடர்ச்சி.)

(தர்மவ்யாதர் கௌசிகனைத் தாய்தந்தையருக்குப் பணிசெய்ய ஏவி, தாம் சூத்திரஜாதியில் பிறந்ததற்குக் காரணத்தைக் கூறியது.)

தர்மாத்மாவான அந்த வ்யாதர், குருக்களான அந்த மாதா பிதாக்களிருவரையும் பிராம்மணனுக்குத் தெரிவித்து, மீண்டும் பிராம்மணனை நோக்கி, 'பிராம்மணரே! நீர் மிதிலாநகரத்திற்குச் செல்லும். மிதிலையில் வஸிக்கின்ற அந்த வியாதன் உமக்குத் தர்மங்களைச் சொல்லுவான்' என்று பார்த்தாவினுடைய சுஸ்ரூஷையை ப்ரதானமாகக்கொண்டவனும் இந்திரியங்களை அடக்கினவனும் ஸ்த்தியத்தையே சீலமாகக்கொண்டவனுமான அந்தப் பதிவ்ரதையினால் நீர் சொல்லப்பட்டவிஷயத்தில் நான் திவ்யதருஷ்டியுள்ளவனாக இருக்கிறேன். தாய்தந்தையருடைய பணிவிடை ரூபமான தவத்தின் வன்மையை நன்கு பார்ப்பீராக' என்று சொன்னர். பிராம்மணன், 'பரிசுத்த விரதமுள்ளவரே! தர்மங்களை அறிந்தவரே! மெய்பேசுகிறவனும் கல்வி ஸ்வபாவத்தாலும் நன்னடைகளாலும் நிறைந்தவனுமான பதிவ்ரதையினுடைய வாக்கியத்தை நன்றாக நினைத்து, 'நீர் சிறந்த குணமுள்ளவரென்று என்னால் எண்ணப்பட்டிருக்கிறீர்' என்று சொன்னன். வியாதர், 'பிராம்மணோத்தமரே! பிரபுவே! நீர் அவளால் எதைப்பற்றி என்னைக்குறித்து ஏவப்பட்டீரோ அந்த விஷயம் அந்தப் பதிவிரதையினால் நன்கு அறியப்பட்டதே. ஸம்சயமில்லை. பிராம்மணரே! உம்மை அனுக்கிரஹிக்கவேண்டுமென்ற எண்ணத்தால் என்னால் இது காண்பிக்கப்பட்டது. ஐயா! பிராம்மணரே! நான் உமக்குச் சொல்லப்போகிற ஹிதவாக்கியத்தை என்னிடமி

ருந்து கேளும். பிராம்மணோத்தமரே! உம்மால் தாயும் தந்தையும் பூஜிக்கப்படவில்லை. இகழப்படாதவரே! அவ்விருவராலும் அனுமதி கொடுக்கப்படாமலே வேதங்களை அத்யயனம் செய்வதற்காக வீட்டிலிருந்து வெளிப்பட்டீர். அப்படிப்பட்ட தகாத காரியம் உம்மால் செய்யப்பட்டது. இரக்கப்படத்தக்கவர்களும் வயது சென்றவர்களுமான அவ்விருவர்களும் உம்முடைய சோகத்தால் குருடர்களானார்கள். அவர்களை மனங்குளிரும்படி செய்வதற்கு விரைவாகச் செல்லும். உம்மை இந்தக் கர்மமானது தாண்டிச் செல்லவேண்டாம். நீர் சிறந்த தவமுள்ளவர்; மஹாத்மா; எப்பொழுதும் தர்மத்தில் பற்றுதலுள்ளவர். இவை அனைத்தும் பயனற்றவை. அந்த மாதாபிதாக்களை விரைவாக அடைந்து ஸந்தோஷமடையும்படி செய்வீராக. பிராம்மணோத்தமரே! அவர்களை ஸந்தோஷமடையும்படி செய்தால் நன்மையை அடைவீர். பிராம்மணரே! என் சொல்லில் நம்பிக்கை வைக்கக்கடவீர். நீர் வேறுவிதமாக நடப்பது தகாது. பிரம்மரிஷியே! இப்பொழுதே போகலாம்; நான் உமக்கு நன்மையைச் சொல்லுகிறேன்' என்று சொன்னார்.

பிராம்மணன், 'நீர் சொல்லியதெல்லாம் உண்மையே. ஸந்தேகமில்லை. தர்மத்தோடும் ஆசாரத்தோடும் குணங்களோடுங்கூடியவரே! உமக்கு மங்களம். உம் விஷயத்தில் பிரீதியுள்ளவனாக இருக்கிறேன்' என்று சொல்ல, வ்யாதர், 'பழமையானதும் சாஸ்வதமானதும் திவ்யமானதும் சாஸ்திர ஜ்ஞானமில்லாதவர்களால் அடையமுடியாததுமான தர்மத்தை நீர் அனுஷ்டிக்கிறீர். நீர் தேவதைபோன்றவரன்றோ? பிராம்மணோத்தமரே! நீர் தாய் தந்தைகளிடம் சென்று தோம்பலில்லாதவராக அவர்களுக்குப் பூஜையை விரைவாகச் செய்யும். வேறு ஒரு தர்மத்தையும் இதைக் காட்டிலும் சிறந்ததாக நான் காணவில்லை' என்று சொன்னார்.

பிராம்மணன், 'நான் பாக்கியவிசேஷத்தால் இவ்விடத்திற்கு வந்தேன். எனக்குப் பாக்கியவிசேஷத்தால் உம்முடன் கட்பு ஏற்பட்டது. உலகத்தில் தர்மத்தைக் காட்டுகின்ற இப்படிப்பட்ட மனிதர்கள் கிடைப்பது அரிது. பல்லாயிரம் மனிதர்களுள் ஒரு தர்மவான் இருப்பதே இராதே. புருஷஶ்ரேஷ்டரே! உமக்கு மங்களம். உம்முடைய ஸந்தியத்தினால் பிரீதியுள்ளவனாக இருக்கிறேன். நரகத்தில் விழுகின்ற நான் இப்பொழுது உம்மால் நன்கு கரையேற்றப்பட்டேன். தோஷமற்றவரே! நான் உம்மை இப்படி பார்த்தது என் அதிருஷ்டம். புருஷஶ்ரேஷ்டரே! ஸ்வர்க்கத்தி

னின்று கீழே விழுகின்ற யயாதிராஜன் தர்மவான்களான தௌஹித்
திரர்களால் எவ்வாறு கரையேற்றப்பட்டானோ அவ்வாறே
நான் உம்மால் இப்பொழுது கரையேற்றப்பட்டேன். உம்முடைய
வசனத்தினால் தாய் தந்தைகளுக்குச் சுச்ரூஷை செய்யப்போகி
றேன். சாஸ்திர ஜ்ஞானமில்லாதவன் தர்மாதர்மநிச்சயத்தைப்
பிறருக்குத் தெரிவிக்கச் சக்தியுள்ளவனாகான். சூத்திரஜாதியில்
இருக்கிறவனால் சாச்வதமான தர்மமானது அறியமுடியாதது.
நான் உம்மைச் சூத்திரராக எண்ணவில்லை. தக்க காரணமிருக்க
வேண்டுமன்றே? நீர் இந்தச் சூத்திரத்தன்மையை அடைந்ததற்
குரிய உம்முடைய வினயை உள்ளபடி அறியவிரும்புகிறேன்.
விருப்பமுள்ள எனக்குப் பரிசுத்தாத்மாவான நீர் எல்லாவற்றை
யும் கூறுவீராக' என்று வினவ, வ்யாதர், 'பிராம்மணோத்தமரே!
என்னால் பிராம்மணர்கள் மீறி நடக்கத் தகாதவர்கள். தோஷ
மில்லாதவரே! முந்தின தேகத்தில் நடந்த இந்த எல்லா விருத்தாந்
தத்தையும் கேட்பீராக. நான் பூர்வஜன்மத்தில் உத்தமரான ஒரு
பிராம்மணருக்குப் புத்திரனும் வேதங்களை அத்தியயனம் செய்த
வனும் அவைகளில் நல்ல ஸாமர்த்தியமுள்ளவனும் வேதாங்கங்
களுடைய கரையையடைந்தவனுமான ஒரு பிராம்மணனாக இருந்
தேன். பிராம்மணரே! என்னால் செய்யப்பட்ட தீச்செயல்களால்
இந்த நிலைமையை அடைந்தேன். முன் ஜன்மத்தில் கணுர்வேதத்தில்
பற்றுதலுள்ளவனான ஓரரசன் எனக்குத் தோழனாக இருந்தான்.
பிராம்மணரே! அவனது சேர்க்கையினால் நான் கணுர்வித்தையில்
மிகச் சிறந்தவனானேன். இதே ஸமயத்தில் அரசன் சிறந்த போர்
வீரர்களோடுகூடியவனும் மந்திரிகளால் நன்கு சூழப்பட்டவனு
மாக வேட்டைக்காகப் புறப்பட்டான். பிறகு, அங்கே ஓர் ஆச்ர
மத்தின் அருகில் பல மிருகங்களைக் கொன்றான். பிராம்மணோத்
தமரே! பிறகு, என்னாலும் கோரமான ஒரு பாணம் விடப்பட்டது.
வளைந்த கணுக்களுள்ள அந்த அம்பினால் ஒரு ரிஷி அடிக்கப்பட்
டார். பிராம்மணரே! அடிக்கப்பட்டுப் பூமியில் விழுகின்ற அந்த
ரிஷியானர், 'நான் ஒரு குற்றமும் செய்யவில்லை. எவனால் இந்தத்
தீங்கு செய்யப்பட்டது?' என்று எதிரொலி இடும்படி உரத்த
சப்தத்துடன் சொன்னார். நான் அந்த முனிவரை மிருகமென்று
எண்ணிக்கொண்டு அவரிடம் விரைவாகச் சென்றேன். வளைந்த
கணுக்களோடுகூடின அம்பினால் அடிக்கப்பட்டவரும் பூமியில்
விழுந்து அலறுகின்றவரும் கடுந்தவமுள்ளவருமான அந்தப் பிரம்ம

ரிஷியைப் பார்த்தேன். அகார்யத்தைச் செய்ததினால் என் மனமானது மிக்க துன்பமடைந்தது. பிறகு, நான், அறியாமையினால் இதனைச் செய்தேன்' என்று சொன்னேன். 'என்னுடைய குற்றமனைத்தையும் நீர் பொறுக்கக்கடவீர்' என்றும் அந்த மஹரிஷியை நான் வேண்டினேன். பிராம்மணரே! பிறகு, கோபமுண்டவரான அந்த ரிஷியானவர் என்னைப் பார்த்து, 'கொடியவனே! நீ சூத்திரஜாதியில் வியாதனுகப் பிறப்பாய்' என்கிற வாக்கியத்தை எனக்கு மறுமொழியாகக் கூறினர்.

இருநூற்றுப்பத்தொன்பதாவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(தர்மவியாதரால் பற்பல தர்மங்களை அறிவிக்கப்பட்ட கௌசிகன் தன் வீடு சென்று தன் பெற்றோர்களுக்குப் பணி செய்ததும், மார்க்கண்டேயர் பதிவ்ரதையின் மகிமை முதலிய வற்றைச்சொல்லிக் கதையை முடித்ததும்.)

பிராம்மணஶ்ரேஷ்டர்களுள்உத்தமரே! இவ்வாறு ரிஷியினால் அப்பொழுது சபிக்கப்பட்ட நான் வாக்கியத்தை உரைப்பதில் ஸமர்த்தரான அந்த மஹரிஷியைப் பார்த்து, 'முனிவரே! அறியாகவனை என்னால் இப்பொழுது இந்த அகார்யம் செய்யப்பட்டது. பகவானே! அவையனைத்தையும் பொறுக்கக்கடவீர். அருள் புரிவீராக' என்கிற சொல்லால் கோபந்தணியும்படி ரிஷியை வேண்டினேன். ரிஷி, 'இந்தச் சாபமானது இவ்விதமே; வேறுவிதமாகாது; ஸம்சயமில்லை. நான் கருணையினால் இப்பொழுது உன் விஷயத்தில் சிறிது அனுக்கிரஹம் செய்வேன். சூத்திரஜாதியில் நீ பிறந்திருந்தாலும் கர்மங்களை அறிந்தவனுவாய்; தாய்தந்தைகளுக்குச் சுஶ்ரூஷை செய்வாய்; ஸம்சயமில்லை; அவர்களுடைய சுஶ்ரூஷையினால் மகாஸித்தியை அடைவாய்; முன்பிறப்புக்களை அறிபவனுமாவாய்; ஸ்வர்க்கத்தையும் அடைவாய். நீ கார்மிகனை வேடனுகப் பிறந்து மாதாபிதாக்களுடைய சுஶ்ரூஷையில் பற்றுதலுள்ளவனுகவுமிருந்து, சாபத்திற்கு அழிவு வந்தவுடன், மீண்டும் பிராம்மணனுகப் பிறப்பாய்' என்று அனுக்கிரஹித்தார். மனிதருட்சிறந்தவரே! உக்ர தேஜஸுள்ள அந்த ரிஷியினால் இவ்வண்ணம் நான் முற்காலத்தில் சபிக்கப்பட்டேன். அவரால் எனக்கே

அனுக்கிரஹமும் செய்யப்பட்டது. பிராம்மணோத்தமரே! அந்த ரிஷியின் தேகத்தில் பாய்ந்திருந்த அம்பையும் பிடுங்கி எடுத்தேன். அந்த ரிஷியானவர் என்னால் ஆஸ்ரமத்திற்குக் கொண்டுபோகப் பட்டார். அவர் உயிர் துறக்கவில்லை. பிராம்மணோத்தமரே! எனக்கு முன்ஜன்மத்தில் நேர்ந்தவையும் ஸமீபகாலத்தில் எப்படி ஸ்வர்க்கம் செல்வேனென்பதும் ஆகிய அனைத்தும் உமக்கு உரைக் கப்பட்டன' என்று கூறினர். பிராம்மணன், 'மகாபுத்தியுள்ளவரே! இவ்வண்ணம் மனிதர்கள் இந்தத் துக்கங்களையும் ஸுகங்களையும் அடைகிறார்கள். நீர் இதுவிஷயத்தில் கவலை அடையவேண்டாம். உம்முடைய ஜாதியை அறிந்துகொண்டிருக்கிற உம்மால் செய்ய முடியாத காரியம் செய்யப்படுகிறதன்றே? உலகங்களுடைய விருத் தாந்தங்களின் உண்மையை அறிந்தவரே! எப்பொழுதும் தர்மத் தில் பற்றுதலுள்ளவரே! கற்றறிந்தவரே! கர்மதோஷத்தாலும் உமது ஜாதியைச் சார்ந்த தொழிலினாலும் சிறிதுகாலம் பொறுக் கக்கடவீர்; பிறகு, பிராம்மணராவீர். இப்பொழுதே என்னால் பிராம்மணராக எண்ணப்பட்டிருக்கிறீர். இதில் ஸம்சயமில்லை. பதிதனுக்குக் காரணமான கெட்ட காரியங்களில் இருப்பவனும் டம்பமுள்ளவனும் கெட்ட காரியங்களை அதிகமாகச் செய்பவனு மான பிராம்மணன் சூத்திரனுக்கு ஸமானனாவான். எந்தச் சூத் திரன் ஐம்பொறியடக்கலிலும் ஸத்தியத்திலும் தர்மத்திலும் எப் பொழுதும் முயற்சியுள்ளவனாக இருப்பதை அவனை நான் பிரா மணனாக எண்ணுகிறேன். நடையினால் அவன் பிராம்மணனன்றே? கர்மதோஷத்தினால் உக்கிரமான தகாத நிலைமையை நீர் அடைந் திருக்கிறீரன்றே? மனிதர்களுள் சிறந்தவரே! நான் உம்மை விரை வில் தோஷங்கள் நீங்கினவரென்றெண்ணுகிறேன். நீர் கவலைப்பட வேண்டாம். உலகங்களுடைய விருத்தாந்தங்களின் உண்மையை அறிந்தவர்களும் நித்யம் தர்மத்தில் பற்றுள்ளவர்களுமான உம் மைப்போன்ற மனிதர்கள் வியஸனப்படமாட்டார்களன்றே?' என்று சொல்ல, வ்யாதர், 'மனிதன் ஞானத்தினால் மோஹத்தை தைப் போக்கவேண்டும்; மருந்துகளால் சரீரத்திலுள்ள வியாதி யைப் போக்கிக்கொள்ளவேண்டும். இது பேரறிவின் சிறப்பு. மனிதன் பாலர்களைப்போலு ஒப்புமையை அடையக்கூடாது. அற்ப புத்தியுள்ள மனிதர்கள், விரும்பாதவற்றின் சேர்க்கையாலும் விரும்பியவற்றின் பிரிவினாலும் மோஹத்தை அடைகிறார்கள். எல்லாப்பிராணிகளும் சுகதுக்கமோஹங்க

ளோடு சேர்கின்றன; அப்படியே பிரிவடைகின்றன. இது ஒருவ னுக்குச் சோகத்துக்குக் காரணமாகக் கூடாதன்றே? அனிஷ்டத் தின் சேர்க்கையைப் பார்ப்பவன் அப்படி விரைவில் விரக்தி அடை கிறான். பிறகு, மனிதர்கள், அனிஷ்டம் தொடங்குவதைப் பார் பார்களேயானால் பரிஹாரத்தைச் செய்கிறார்கள். தூக்கப்படுகிற வனுக்கு ஒன்றும் உண்டாகாது. அவன் பரிதாபத்திற்குமாத்தி ரம் ஆளாவான். எந்தமனிதர்கள் ஸுகத்தையோ துக்கத்தையோ இரண்டையுமோ விடுகிறார்களோ ஞானத்தினால் த்ருப்தியுள்ளவர் களான அந்த அறிஞர்களே ஸுகமாக விருத்தி அடைகிறார்கள். மூடர்கள் அதிருப்தியை ப்ரதானமாகக்கொண்டிருப்பார்கள். பண் டிதர்கள் திருப்தியை அடைகிறார்கள். அதிருப்திக்கு முடிவு கிடை யாது. திருப்தியோ சிறந்த ஸுகம். ஞானமார்க்கத்தை அடைந் தவர்கள் சிறந்த கதியைப் பார்ப்பவர்களாகிச் சோகத்தை அடைய மாட்டார்கள். துக்கத்தில் மனத்தைச் செலுத்தலாகாது. வ்ய ஸனமென்பது கொடிய விஷம். வ்யஸனமானது விவேகமில்லா தவனைக் கோபங்கொண்ட ஸர்ப்பமானது பாலனைக் கொல்லுவது போலக் கொல்லுகிறது. ஆபத்து நேர்ந்திருக்கும் தருணத்தில் வ்யஸனமானது எந்த மனிதனைக் கவருகிறதோ பௌருஷத்தி னால் விடுபட்ட அந்த மனிதனுக்குப் புருஷார்த்தம் கிடையாது. செய்யப்படுகிற வினையின் பயன் அவஸ்யம் காணப்படுகிறது. மனி தன் கார்யங்களில் ஒழிவை அடைந்தால் ஒருவிதமான மங்களத்தை யும் அடையமாட்டான். அப்படி இருந்தாலும் துக்கத்தைவிட்டு விலகுவதில் உபாயத்தைக் கண்டறிய விரும்புவனானால் சோகத் திற்கு உடன்படாதவனாக நல்ல கார்யத்தை ஆரம்பிக்கவே வேண் டும். நல்லகார்யங்களில் முயற்சியுள்ளவனாகவும் வியஸனமில் லாதவனாகவும் இருக்கவேண்டும். பிராணிகளிடங்களில் அழிவுண் டாவதை நன்கு ஆலோசித்து எவர்கள் தத்துவ ஜ்ஞானத்தால் பரப்ரம்மத்தை அடைய முயலுகிறார்களோ தேர்ந்த ஞானமுள்ள அவர்கள் உத்தமகதியைப் பார்ப்பவர்களாகிச் சோகத்தை அடை கிறதில்லை. கற்றறிந்தவரே! நான் துக்கப்படுகிறதில்லை; ஸந்தோ ஷிக்கிறேன். நான் காலத்தை விரும்பிக்கொண்டிருக்கிறேன். பிராம்மணரே! ஸாதுக்களுள் சிறந்தவரே! இந்த நிகர்சனங்களால் நான் மனந்தளராமலிருக்கிறேன்' என்று கூறினர்.

பிராம்மணன், 'நீர் தேர்ந்த அறிவுள்ளவராக இருக்கிறீர். நீர் நல்ல மேனையுள்ளவர். உமது புத்தி விசாலமானது. பாபத்தினின்று

எப்பொழுதுமே திரும்பினவராக இருக்கிறீர். நீர் ஞானத்தால் முதிர்ந்தவராகவும் தர்மங்களை அறிந்தவராகவும் இருக்கிறீர். உம்மிடம் நான் விடைபெற்றுக்கொள்ளுகிறேன். உமக்கு க்ஷேமம் உண்டாகட்டும். தர்மமானது உம்மைப் பாதுகாக்கட்டும். தார்மிகர்களுள் சிறந்தவரே! நீர் தர்மத்தில் தவறுமையைச் செய்வீராக' என்று கூறினான். வியாதர், அஞ்சலி செய்துகொண்டு அவனைப்பார்த்து 'ஆகுக' என்றே சொன்னார். பிறகு, பிராம்மணன் தமன். அவரைப் பிரதக்ஷிணம்செய்து புறப்பட்டான். அந்தப் பிராம்மணன் தன் வீட்டை அடைந்து நல்ல நியமத்துடன்கூடியவனாகக் குருடர்களாயிருக்கிற தாய் தந்தையருக்கு அப்பொழுது நியாயப்படி பணிவிடைகளையெல் லாம் செய்தான். யுதிஷ்டிரா! தார்மிகர்களுள் சிறந்தவனே! ஐயா! எந்தத் தர்மத்தைப்பற்றி என்னை வினவினீயோ அவை அனைத்தும் மிச்சமின்றி உனக்கு உரைக்கப்பட்டன. ஸாதுக்களுள் சிறந்தவனே! பதிவ்ரதை பிராம்மணன் இவர்களின் மகிமை யும் தர்மவ்யாதரால் சொல்லப்பட்ட தாய்தந்தையர்களுடைய சுஸ் ரூஷையும் உனக்குச் சொல்லப்பட்டன' என்று சொன்னார். யுதிஷ் டிரர், 'பிராம்மணரே! எல்லாத்தர்மங்களையும் அறிந்தவர்களுள் சிறந்தவரே! முனிவர்களுள் மிகுந்த மேன்மைவாய்ந்தவரே! மிக வும் ஆச்சர்யமானதும் இதனிலும் சிறந்ததில்லாததுமான இந்தத் தர்ம கதையானது தேவரீரால் உரைக்கப்பட்டது. கற்றறிந்தவரே! கேட்பதற்கு இன்பமாயிருப்பதனால் நீண்ட தூரமானது ஒரு க்ஷணம்போல எனக்குச் சென்றுவிட்டது. பகவானே! உத்தம தர்மத்தைக் கேட்கின்ற நான் (போதுமென்ற) திருப்தியை அடைய வில்லை' என்று கூறினார்.

இருநூற்றிருபதாவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர், ஆங்கிரஸருடைய உபாக்கியானத்தைச் சொல்லத் தொடங்கியதும், அங்கிரஸினுடைய புத்திரரான பிருஹஸ்பதியைத் தேவர்கள் அங்கிரஸினுடைய வசனத்தினால் குருவாக ஏற்றுக்கொண்டதும்.)

தர்மராஜர் தர்மங்களோடு கூடிய மங்களகரமான இந்தக் கதையைக்கேட்டு, அப்பொழுது, அந்த மார்க்கண்டேய மஹரிஷி

யைப் பார்த்து, 'முனிவரே! அக்னியானவன் எவ்வாறு கானகம் சென்றான். முற்காலத்தில், மஹா தேஜஸ்வியான அங்கிரஸானவர் அக்னி ஒளிந்துபோனபோது தாம் அக்னியாக இருந்து எவ்வாறு ஹவிஸுகளை (ஏற்றுத் தேவர்களிடம்) சேர்ப்பித்தார்? பகவானே! அக்னி ஒருவனே. அப்படியிருக்க, இந்த அக்னிக்குக் கர்மங்களில் பலவாயிருத்தல் காணப்படுகிறதே. இவை அனைத்தையும் அறிவதற்கு விரும்புகிறேன். எப்படி ஸுப்ரமண்யர் பிறந்தார்? எப்படி அவர் அக்னிக்குப் புத்திரரானார்? எப்படி அவர் ருத்திரரிடமிருந்து உண்டானார்? எப்படி கங்காதேவியினிடத்திலும் க்ருத்திகாதேவிகளிடத்திலும் தோன்றினார்? ப்ருகுகுலத்தில் பிறந்தவர்களுள் உத்தமரே! மஹாமுனிவரே! அவாநிரம்பின நான் இதனை உம்மிடமிருந்து உள்ளபடி கேட்க விரும்புகிறேன்' என்று மறுபடியும் வினவினர்.

மார்க்கண்டேயர், 'அக்னி கோபங்கொண்டு தவம்புரிவதற்காக வனத்தை அடைந்ததும், மஹிமை பொருந்தியவரான அங்கிரஸானவர் தாமே அக்னியானதுமாகிய இந்தவிஷயத்தில் அறிஞர்கள் பழமையான இந்த இதிஹாஸத்தை எடுத்துக் கூறுகின்றார்கள். மிக்க புஜபலமுள்ளவனே! முற்காலத்தில் மகாமகிமைபொருந்தின அங்கிரஸானவர் ஆஸ்ரமத்திலிருப்பவரும் தம் ஒளியினால் அக்னியைக் கிழ்ப்படுத்துகின்றவரும் ஜகத்தைத் தாபமடையும்படி செய்கின்றவரும் இருட்குஹியிலே நாசம் செய்கின்றவருமாகி உத்தமமான தபஸ்ஸைச் செய்தார். அவர் அப்பொழுது தாம் அக்னியாகி உலகமனைத்தையும் பிரகாசிக்கச் செய்தார். தவம்புரிகின்ற தேஜஸ்வியான அக்னிபகவானின் அவருடைய தேஜஸினால் திக்குகளிலெல்லாம் மிக்க வாட்டமுற்று ஒன்றையும் அறியவில்லை. பிறகு, அக்னிபகவான், 'உலகங்களுக்கு ப்ரம்மாவினால் படைக்கப்பட்ட வேறு அக்னிதேவன் அங்கிரஸ் பிரகாசிக்கிறார்' என்று கண்டு சிந்திக்கலானான். அந்த அக்னிபகவான், 'தவம்புரிகொண்டிருந்த என்னுடைய அக்னித்தன்மையானது முழுதும் அழிந்துவிட்டதே. இன்று நான் எவ்வாறு அக்னியாவேன்?' என்று ஆலோசித்து, அக்னிதேவன் உலகங்களைத் தேஜஸால் எரிக்கிற மஹாமுனிவனைப் பார்த்தான். அவன் அங்கிரஸைப் பார்த்தவுடன் பயந்து மௌனமாயிருந்தான். அப்பொழுது, அங்கிரஸானவர், அவனைப்பார்த்து, 'அக்னிதேவ! உலகங்களைப் பாதுகாக்கிற கர்மமுள்ளவனான நீ அக்னியாகக்கடவாய்.

மூவுலகங்களிலும் ஸ்தாவரங்களிலும் ஜங்கமங்களிலும் இருப்பவனுக நீ அறியப்பட்டிருக்கிறாய். நீ முதலில் பிரம்மதேவரால் இருளைப் போக்குகிறவனுகப் படைக்கப்பட்டாய். உன் ஸ்தானத்தை அடைந்து சீக்கிரமாகவே இருளைப் போக்குவாயாக' என்று சொன்னார். அக்னி, 'நான் உலகத்தில் புகழ் அழிந்தவனுகிவிட்டேன். நீர் அக்னியாகிவிட்டீர். ஜனங்கள் உம்மைத்தான் அக்னியாக அறிவார்கள்; என்னை அறியமாட்டார்கள். நான் என்னிடமுள்ள அக்னித்தன்மையை உம்மிடத்தில் வைத்துவிடுகிறேன். நீர் முதலக்னியாக இரும். நான் இரண்டாவதான ப்ராஜாபத்யாக்னியாகவே இருப்பேன்' என்று சொன்னன். அங்கிரஸ், அக்னியைப்பார்த்து, 'அக்னிதேவனே! ப்ரஜைகளுக்கு ஸ்வர்க்கத்தை அடைவதற்கு ஸாதனமாயிருக்கிற புண்யத்தைச் செய். நீ இருட்டை விலக்குகிற அக்னியாகக்கடவாய். என்னையும் முதலில் உன்னுடைய மூத்தபிள்ளையாகச் செய்துகொள்' என்று சொன்னர். அங்கிரஸினுடைய அந்த வாக்கியத்தைக் கேட்டு, அக்னிபகவான் அப்படியே செய்தான். அரசனே! ப்ருஹஸ்பதி என்பவர் அந்த அங்கிரஸினுடைய புதல்வர். பாரத! தேவர்கள், அந்த அங்கிரஸ் அக்னிபகவானுக்கு மூத்தபிள்ளையாகிவிட்டானென்பதை அறிந்து, அங்கிரஸை அடைந்து அந்தவிஷயத்தில் காரணத்தை வினவினர்கள். தேவர்களால் வினவப்பட்ட அந்த அங்கிரஸோ அந்தவிஷயத்தில் காரணத்தை உரைத்தார். அப்பொழுது, 'என் குமாரனை ப்ருஹஸ்பதியை நீங்கள் குருவாக அங்கீகரிக்கவேண்டும்' என்கிற அங்கிரஸினுடைய அந்த வசனத்தைத் தேவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். பலவிதமாயிருப்பவைகளும் மிக்க ஒளிபொருந்தியவைகளும் பல கர்மங்களால் பிரஸித்திபெற்றவைகளும் பிராம்மணங்களில் பற்பல பிரயோஜனங்களுடன் கூடியவைகளுமான அக்னிகளை இப்பொழுது உனக்கு உரைப்பேன்.

இருநூற்றிருபத்தோராவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யா பர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர் அக்னிகளுடைய உற்பத்தி முதலியவைகளைக் கூறியது.)

ருருவம்சத்தைத் தாங்குபவனே! பிரம்மதேவருக்கு மூன்றாவது புத்திரரான அங்கிரஸுக்கு [1] ஸுபை என்கிற மனைவி இருந்தாள். அவளிடத்தில் உண்டான பிரஜைகளை என்னிடமிருந்து கேட்பாயாக. அரசனே! அந்த அங்கிரஸுக்கு ப்ருஹத்கீர்த்தி, ப்ருஹஜ் ஜ்யோதி, ப்ருஹத்ப்ரம்மா, ப்ருஹந்மனஸ், ப்ருஹந்மந்த்ரன், ப்ருஹத்பாஸன், ப்ருஹஸ்பதி என்று ஏழு புத்திரர்கள் உண்டானார்கள். [2] அவருடைய எல்லா மக்களுள்ளும், ரூபத்திலும் ஒப்பற்றவளான பானுமதியென்பவள் அங்கிரஸினுடைய மூத்த புதல்வியாக இருந்தாள். எல்லாப் பிராணிகளுக்குமே எவளிடத்தில் அப்பொழுது ராகம் (= அன்பு) உண்டாயிற்றோ, ராகமுண்டானதிலை எவளை ராகையென்று சொல்லுகிறார்களோ அந்தப்பெண் அங்கிரஸின் இரண்டாவது புதல்வி. எவளை ஜனங்கள் [3] ருத்ராருடைய புத்ரியென்றும், ஸூக்ஷ்மமாயிருப்பதால் பார்க்கத்தக்கவளும் பார்க்கத்தகாதவளுமாயிருப்பவளென்றும் சொல்லுகிறார்களோ அந்த ஸினீவாலி என்பவள் அங்கிரஸின் மூன்றாவது பெண். மகிமைபொருந்தியவளான எவளைக்கண்டு ஜனங்கள் ஆனந்தத்தால், 'குஹூ, குஹூ' என்ற சப்தத்தை வெளியிடுகிறார்களோ, எவளை ஒருத்தியென்றும் பலராயிருப்பவளென்றும் சொல்லுகிறார்களோ அந்தக்குஹூ என்பவள் அங்கிரஸின் நான்காவது பெண். ஹவிஸுகளால் ஜ்வாலையுடன்கூடியவளான ஹவிஷ்மதியென்பவள் அங்கிரஸினுடைய ஐந்தாவது பெண். பரிசுத்தையான அங்கிரஸினுடைய ஆறாவது பெண்ணை மஹிஷ்மதியென்று சொல்லுகிறார்கள். சிறந்த காந்தியுடன் கூடின மகாயாகங்களில் மகிமையுடன் ஜ்வலிப்பவளான மகாமதி என்று பிரஸித்திபெற்ற பெண்ணானவள் அங்கிரஸினுடைய ஏழாவது புத்திரி என்று சொல்லப்படுகிறாள். பிருஹஸ்பதிக்குப் பார்யையான சிறந்த கீர்த்தியுள்ள சாந்த்ரமஸி என்பவள் பரிசுத்தமான ஆறு

---

[1] 'வஸுதை' என்பதும் பாடம். [3] 'தாஸு' என்பது மூலம்.

[3] 'காணப்பட்டும் காணப்படாமலுமிருத்தலால் ருத்ராருடைய புதல்வி போலிருப்பவளும்' என்பது பழையவுரை.

அக்னிகளையும் ஒரு பெண்ணையும் ஈன்றாள். பிரதானஹோத்திரியிலும் தர்சபூர்ணமாஸத்திலும் எந்த அக்னிக்கு முதன்மையான ஹவிஸானது விதிக்கப்படுகிறதோ நான்கு மாதங்களில் செய்யத் தக்க (வைஶ்வதேவமும், வருணப்ரகாஸமும், ஸாகமேதமும், சதுர்மாஸ்யமும் என்கிற) நான்கு பர்வங்களிலும் அப்படியே அக்வமேதத்திலும் எந்த அக்னிக்கு இஷ்டிஸமீபத்தில் முதற்பசு இருக்கிறதோ அனேக காந்திகளுடன்கூடின ஜ்வாலைகளால் பிரகாசிக்கின்றவனும் ஒருவனுயிருப்பவனும் சிறந்த வீர்யமுள்ளவனும் அதிக ஒளிபொருந்தியவனுமான அந்த அக்னியானவன் சம்பு என்கிற பெயருள்ளவன். அவன் பிருஹஸ்பதியின் புதல்வன். சம்புவுக்கு நிகரில்லாதவனும் ஸத்யஸ்வரூபியும் தர்மருக்குப் புதல்வியுமான ஸத்யை என்பவள் மனைவியாஞள். அவனுக்கு நல்லகாந்தியுள்ளவனென அக்னியென்னும் ஒருபுத்திரனும் நல்ல வ்ரதமுள்ள மூன்று கன்னிகைகளும் உண்டானார்கள். எந்த அக்னிபானவன் யாகத்தில் முதன்மையாய்ந்த ஆஜ்யபாகத்தால் பூஜிக்கப்படுகிறானே அந்த அக்னிக்குப் பரத்வாஜன் என்கிற அக்னியானவன் மூத்தபுத்திரனெனச் சொல்லப்படுகிறான். எந்த அக்னிக்கு எல்லாப் பௌர்ணமாஸங்களிலும் [1] ஸ்ருவத்தால் எடுக்கப்பட்ட ஆஜ்யரூபமான ஹவிஸானது கொடுக்கப்படுகிறதோ பரதன் என்கிற பெயர்கொண்ட அந்த அக்னிபானவன் சம்புவினுடைய இரண்டாவது குமாரன். எவர்களுக்கு அந்தப் பரதன் பர்த்தாவோ அப்படிப்பட்ட மூன்று கன்னிகைகளும் உண்டானார்கள். அந்தப் பரதனென்கிற அக்னிக்குப் பாரதனென்கிற ஒரு புத்திரனும் பாரதி என்கிற ஒரு புத்திரியும் உண்டானார்கள். பரதர்களுள் சிறந்தவனே! பாரதனென்கிற அக்னிக்குப் பெருமையுள்ளவனும் அப்படியே மிகவும் பூஜிக்கப்பட்டவனுமான பாவகனென்கிற புத்திரன் பிறந்தான். பாரதியென்கிற அக்னியினுடைய மனைவியான விசையாவென்பவள் விராவென்கிற அக்னியைப் பெற்றாள். பிராம்மணர்கள் சந்திரனுக்குச் செய்வதுபோல அந்த அக்னிக்கு ஆஜ்யபுரோடாசத்தை [2] உபாம்சுஸ்வரத்தோடு மந்திரங்களை உச்சரித்துச் செய்யவேண்டுமென்று சொல்லுகிறார்கள். எந்த அக்னியானவன் சோமமென்னும் கூட இரண்டாவது ஹவிஸினால் சேர்க்கப்படுகிறானே அந்த விராவென்கிற அக்னியானவன் ரதப்ரபு என்றும், ரதந்வானனென்றும், கும்பரதனென்றும் சொல்லப்படுகிறான். அந்த விராவென்கிற

---

[1] வேறுபாடம். [2] பிறர் காதுகேளாமல் உச்சரிக்கப்படுவது.

அக்னியானவன் ஸாயு என்கிற பார்யையினிடத்தில் ஸித்தி என்கிற புத்திரனை உண்டுபண்ணினான். அவன் ஒளிகளாலே ஸூர்யனை நன்றாக மறைத்தான். [1] அக்னியைத் தேவதையாகக்கொண்டு யாகத்தைச் சிறப்பிக்கிற இந்த அக்னியானவன் நித்யம் அக்னியை அழைக்கிற மந்திரத்தில் நன்றாகக் கீர்த்தனம் செய்யப்படுகிறான். எந்த அக்னியானவன் எப்பொழுதும் கீர்த்தியினின்றும் வர்ச்சஸினின்றும் தேஜஸினின்றும் நழுவாமலிருக்கிறானே அவன் அதனால் நிர்ச்சயவனனென்று ப்ரஸித்திபெற்றான். இந்த அக்னி ப்ரகாசிப்பதிக்கு இரண்டாவது புத்திரன். வாக்குக்கு அபிமானி தேகாதாரூபமான அந்த அக்னியானவன் பூமியை மாத்ரமம் தரிக்கிறான். [2] அந்த நிர்ச்சயவனுக்கினிக்குப் [3] பாபமில்லாதவனும் தேஜஸ்ஸுகளால் விருப்பட்டவனும் மிக்க பரிசுத்தியுள்ளவனும் ஜ்வாலையினால் ஜ்வலிப்பவனும் வாசகங்களுக்கு அத்தங்களினாதி ஸம்பந்தத்தை உண்டுபண்ணுகிறவனுமான நிஷ்க்ருதி என்கிற தேவதை பெயரருள்ள ஸத்கியனென்கிற அக்னியானவன் புத்திரனாக உண்டாயினன். தன்னை நிந்திக்காத ப்ராணிகளுக்கு எந்த அக்னியானவன் பாவத்திற்குப் பரிஹாரத்தைச் செய்கிறானே அந்த அக்னியானவன் நிஷ்க்ருதி என்ற பெயரருள்ளவன். அவன் [4] வீதி தூர்தாட்டம் முதலியவற்றில் தேஜஸ்ஸை உண்டுபண்ணுகிறான். இவ்வுலகத்தில் தேவதாஜனங்களினால் பீடிக்கப்பட்ட ஜனங்கள் தாங்களை எந்த அக்னியினால் தேவதாஜனை பொறுக்காமல் அழுகிறார்களோ அந்த தேவதாஜனையை உண்டுபண்ணுகிற அந்த அக்னியானவன் என்கிற அக்னியானவன் அந்த நிஷ்க்ருதிக்குப் புத்தல்வன். எந்த அக்னியானவன் எல்லா உலகத்தாருடைய புத்தியையும் ஆக்ரமித்துக்கொண்டு நிற்கிறானோ அந்த அக்னியை அத்தியாத்மஸ்வரூபத்தை அறிந்தவர்கள் விப்ரயோகம் என்கிற அக்னியாகச் சொல்லுகிறார்கள். பரத! எல்லா உலகங்களிலும் ப்ராணிகளுடைய சரீரத்தினின்றும் என்ற எந்த அக்னி புறப்படுகிறானோ அந்த அக்னி புஜிக்கப்பட்ட அன்னத்தைப் பக்குவம் செய்கிறானே அவன் யஜ்ஞத்தில் விப்ரயோகம் என்கிற பெயருள்ளவனாக எண்ணப்பட்டிருக்கிறான். இந்த அக்னியானவன் ப்ரம்மசர்யத்துடன் கூடியவனும் மனத்தை அடக்கியவனும் எப்பொழுதும் அதிக ஒளியுள்ளவனுமாயிருக்கிறான். இந்த அக்னியைப்

---

[1] வேறுபாடம். [2] வேறுபாடம்.

[3] பொருள் இரட்டித்தலால் ஒருசொல் விடப்பட்டது.

[4] வேறுபாடம்.

பிராம்மணர்கள் [1] பாகயஜ்ஞங்களில் பூஜிக்கிறார்கள். பரிசுத்தமான [2] கோமதி என்கிற நதியை மனவியாக உடைய விப்லவபுக் என்கிற அக்னியில் தர்மத்தை அனுஷ்டிப்பவர்களால் (இல்லறத்தாருக் குரிய) எல்லாக் கருமங்களும் செய்யப்படுகின்றன. அதிக உக்கிர மானவனும் ஜலத்தை எப்பொழுதும்குடிக்கிறவனுமான அந்தப்பட பாக்கினியானவன் மேல்நோக்கின கதியுடன்கூடி உதானமென்கிற பெயரைப்பெற்று ஊர்த்வபாக் என்கிற பிராம்மணனாக இருக்கிறான். அவன் பிராண வாயுவுக்கு அபிமானியாக இருக்கிறான். எந்த அக்னிக்கு வீட்டில் நாள்தோறும் ஹவிஸின் வடபாகியிலி ருந்து ஹவிஸானது எடுத்துக்கொடுக்கப்படுகிறதோ அந்த அக்னி க்குக் கொடுக்கும் அதனல் பிரம்மதேவர் திருப்தியடைகிறார். ஸ்விஷ்டக்ருத்தானது அந்த அக்னி ஸம்பந்தத்தால் ஸர்வோத்தம மென்று எண்ணப்படுகிறது. பிருகஸ்பதியென்ற அக்னியானவன் பொறுமையில்லாத பிராணிகளிடம் கோபரூபமாகத் தோன்று கிறான். [3] அப்பொழுது கோபங்கொண்டவனுடைய தேகத்தில் உண் டாகிற வேர்வையை அந்த அக்னிக்குப் புத்ரிகையாக எண்ணு கிறோன். அவள் ஸ்வாஹாவென்று பயங்கரியாகவும் குரூரையாகவும் எல்லாப் பிராணிகளிடமும் நிலைபெற்றிருக்கிறாள். ஸ்வர்க்கத்தில் ரூபத்தால் எந்த அக்னிக்கு ஸமனாக ஒருவனும் இல்லையோ நிகரில் லாமையால் இந்த அக்னியானவன் தேவர்களால் காமனென்று பெயரிடப்பட்டான். எந்த அக்னியானவன் உத்ஸாஹத்தினல் கோபத்தை அடக்கிக்கொண்டவனும் வில்லுள்ளவனும் மாலை அணிந்தவனும் தேரில் வீற்றிருப்பவனுமாகி யுத்தத்தில் பகைவர் களை நாசம் செய்கிறானே அந்த அக்னியானவன் அமோகனென்று பெயருள்ளவன். [4] மகாபாக்யமுள்ளவனே! எந்த அக்னியை வேதத்தைப்ரவசனம்செய்கிற ஆசாரியர்கள் மோக்ஷவிஷயத்தில் ஹேதுவாக அறிகிறார்களோ மூன்று உத்தங்களாலே துதிக்கப் படுகிற உத்த்யனென்கிற அந்த அக்னியானவன் பரைவென்கிற பெயருள்ள நான்காவது ப்ரம்மகலையை உண்டுபண்ணினான்.

---

[1] ஐந்து மஹாயஜ்ஞங்களில் பிரம்மயஜ்ஞமும் நீங்கலான பித்ருயஜ்ஞம், தேவயஜ்ஞம், பூதயஜ்ஞம், மனுஷ்யயஜ்ஞம் ஆகிய நான்கு.

[2], [3], [4] வேறுபாடம்.

[1] இருநூற்றிருபத்திரண்டாவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர் அக்னிகளின் உற்பத்திகளைக்கூறியது. தொடர்ச்சி.)

அந்த உக்தனென்கிற அக்னியானவன், 'கீர்த்தியினால் பிரம்ம தேவருக்கு ஒப்பான தார்மிகனான புத்திரனை நான் அடையக்கட வேன்' என்கிற எண்ணத்துடன் புத்திரனுக்காக அனேக வருஷ காலம் கடினமான தவம் செய்தனன். அவன் காச்யபனென்றும் வாஸிஷ்டனென்றும் பிராணனுக்குப் புத்திரனாக இருக்கிற பிராண னென்றும் அங்கிரஸினுடைய புத்திரனான ச்யவனனென்றும் க்ருஷ்ணாத்ரேயனென்றும் சொல்லப்படுகிறான். அந்த உக்தாக்னி யானவன் அப்படிப்பட்ட ஐந்து [2] மஹரால்யாஹ்வர்களால் அப் பொழுது தியானம் செய்யப்பட்டு அதிக ஜ்வாலையுடன் கூடின அக்னிபோல் ஐந்துவர்ணமுள்ள [3] ப்ரபாவனன் என்கிற தேஜோமயமான புத்திரனைத் தோன்றினன். அந்த அக்னிக்கு நன்றாக ஜ்வலிக்கின்ற அக்னியானவன் சிரஸாக இருந்தனன். அப் படியே அந்த அக்னியினுடைய இரண்டு கைகளும் ஸூர்யனுக்கு ஒப்பாயிருந்தன. பாதத! தோளும் கண்களும் ஸ்வர்ணத்தின் காந்திபோன்ற காந்தி உடையனவாக இருந்தன. இரண்டு கணைக்கால்களும் காரணமற்றமுள்ளனவாக இருந்தன. ஐந்து நிறமுள்ளவனும் தவத்தினால் உண்டுபண்ணப்பட்டவனுமான அந்த அக்னியானவன் ஐந்து ஜனங்களால் உண்டுபண்ணப்பட்டிருப்ப தால் பாஞ்சஜன்யனென்ற பெயருள்ளவனென்று சொல்லி. பிரகா சிக்கின்ற அந்த அக்னியானவன் ஐந்து வாய்ச்சங்களை உண்டுபண்ணு கிறவனானான். மிக்க தவத்தையுடைய அந்தப் பாஞ்சஜன்யாக்னி யானவன் பத்தாயிரம் வருஷம் தவஞ்செய்து சோமமான தகஜிஷ்ணு வினை உண்டுபண்ணினான். அந்த அக்னியானவன் பிதுருக்களுக் குப் பிரஜாபதிகளை உண்டுபண்ணினான். அவன் சோகத்தோடு ஆயுள்

---

[1] இந்த 222-வது அத்யாயம் தொடங்கி மூன்று அத்யாயங்கள் மிகக்கடினமாக இருப்பதாலும் கிருஷ்ணாசார்யர் பதிப்பில் விபாக்கிடான வில்லாமையாலும் வ்யாகரணம் ஆலோசித்தும் சிருப்திகரமாகப் பொருள்பட் டாமையாலும் சீலகண்ட விபாக்கிடான புத்தகபாடமே கொள்ளப்பட்டது.

[2] ஸ்ரோத்ரீ, ஸ்ரோத்ரீ, ஸ்ரோத்ரீ, ச்ரோத்ரீ, ஜ்ரோத்ரீ என்பன.

[3] ஜகத்தை ஸ்ருஷ்டி செய்கிறவன்.

முதலியவற்றை அபகரிக்கின்ற பகலிரவுகளுக்கு அபிமானிதேவ தைகளான பிருகத்தையும் ரதந்தரத்தையும் முறையே தலையிலும் வாயிலுமிருந்தும், ருத்ரரை நாபியிலிருந்தும், இந்திரனைப் பலத்தி லிருந்தும், [1] வாயுவையும் அக்னியையும் பிராணனிலிருந்தும் உண்டு பண்ணினான். இரண்டு கைகளால் [2] ப்ராக்ருதாநுதாத்தத்தையும் வைக்ருதாநுதாத்தத்தையும் மனத்தோடுகூடின இந்திரியாதிஷ் டான தேவதைகளையும் ஐந்து பூதங்களையும் இவ்வுலகில் உண்டு பண்ணினான்; இவைகளைப் படைத்த பிறகு, பித்ருக்களுக்கு ஐந்து புத்திரர்களையும் படைத்தான். ப்ருஹத்ரதனுக்கு ப்ரணிதியும் காச்யபனுக்கு மஹத்தரனும் அங்கிரஸென்கிற ச்யவனுக்னிக்குப் பானுவும் ஸுவர்ச்சகனுக்குத் தீரனை ஸௌபரனென்கிற அக்னி யும் பிராணனுக்கு அனுதாத்தனும் புதல்வர்களாக ஏற்பட்டார் கள். இவ்வாறுக இருபத்தைந்து அக்னிகள் விவரித்து உரைக்கப் பட்டனர். காந்தியுள்ளவர்களும் யஜ்ஞத்தில் கொடுக்கிற ஹவிஸ்ஸை அபஹரிக்கிறவர்களும் முதன்மை வாய்ந்தவர்களுமான வேறு பதி னைந்து [3] அஸுரர்களையும் ஸ்ருஷ்டித்தான். பாஞ்சஜன்யனென்று வேறு பெயருள்ள தபஸென்கிற அக்னியானவன் தேவர்களுடைய யஜ்ஞபாகத்தை அபஹரிக்கின்ற ஸுதீமன், அதிதீமன், தீமன், தீமபலன், அபலன் என்கிற இந்த ஐந்து அஸுரர்களையும் ஸ்ருஷ்டிசெய்தான். அந்தத்தபஸென்கிற அக்னியானவன் ஸுமித் ரன், மித்ரவந்தன், மித்ரஜ்ஞன், மித்ரவர்த்தனன், மித்ரகர்மா என்கிற இந்த அஸுரர்களையும் ஸ்ருஷ்டிசெய்தான். அந்தத் தப

---

[1] 'பிராணனைப் படைத்தபிறகு, வாயுவையும் அக்னியையும் படைத் தது' என்பது பழையவுரை.

[2] வேதங்களை உச்சரித்தற்குரிய ஸ்வரங்கள் உதாத்தம், அநுதாத் தம், ஸ்வரிதம், ப்ரசயம் என நான்கு; உதாத்தம் = எழுத்துக்களை உச் சரித்தற்குரிய கண்டம் தாலு முதலிய பதினெண் இடங்களில் மேற்பாகத் தால் உச்சரிக்கப்படுகிற உயிரெழுத்தினொலி. அநுதாத்தம் = அவற்றி லேயே கீழ்ப்பாகத்தாலுச்சரிக்கப்படும் உயிரெழுத்தினொலி. ஸ்வரிதம் = உதாத்தத்வம் அநுதாத்தத்வம் என்கிற இரண்டு வர்ணதர்மங்களும் கலந்து உச்சரிக்கப்படுகிற உயிரெழுத்தினொலி. ப்ரசயம் = மேலுமில் லாமல் கீழுமில்லாமல் நடுத்தரமாக உச்சரிக்கப்படுகிற உயிரெழுத்தினொலி. மந்திரத்தில் வருவது பிராகிருதாநுதாத்தம். யஜுர்வேதத்தைச் சார்ந்த சதபதப்ராம்மணத்தில் வருவது வைக்ருதாநுதாத்தம்.

[3] 'தேவாந்' என்பது மூலம்.

லென்ற அக்னியானவன் ஸுரப்ரவீரன், வீரன், ஸுரேசன், ஸுவர்ச்சஸ், ஸுரஹந்தா என்கிற இந்த ஐந்து அஸுரர்களையும் உண்டுபண்ணினான். மூன்று விதமாக தனித்தனியாக இருக்கின்ற இந்த ஐந்து ஐந்து அஸுரர்களும் ஸ்வர்க்கத்தில் நிலைபெற்றவர்களாக இருந்துகொண்டு யாகத்தால் தேவர்களை ஆராதிக்கிறவர்களுடைய யாகத்தைக் கவருகிறார்கள். இவர்கள் மஹிமை வாய்ந்த ஹவிஸ்ஸையும் நாசம் செய்கிறார்கள். அக்னிகளோடு வைரத்தினால் இந்த அஸுரர்கள் ஹவிஸ்ஸை நாசம்செய்கிறார்கள்; கவர்ந்தும் கொள்ளுகிறார்கள். ஸமர்த்தர்களால் பஹிர்வேதியில் அவர்கள் பெற்றுக்கொள்ளவேண்டிய ஹவிர்ப்பாகமானது நன்கு அமைக்கப்பட்டிருந்தது. எந்த யாகசாலையில் அந்தர்வேதியில் அக்னியானது நிலைபெற்றிருந்தோ அந்த இடத்தில் இந்த அஸுரர்கள் கிட்ட நெருங்குகிறதில்லை. இரண்டு சிறகுகள்போன்ற இரண்டு மண்டலாகாரமான வேதிகளோடுகூடின அந்தச்சயனமானது நடந்துவரும் தருணத்தில் இவர்கள் சயனம்செய்கின்ற யஜமானனுடைய ஆஜ்யத்தையும் ஹவிஸ்ஸையும் அபகரிக்க முயன்றார்கள். பிறகு, ராக்ஷஸர்களை ஹிம்ஸிக்கின்ற மந்திரங்களால் தண்டிக்கப்பட்டவர்களான இந்த அஸுரர்கள், யஜ்ஞ ஸம்பந்தமான ஹவிஸ்ஸை அபகரிக்கவில்லை. தபனென்ற அக்னிபிறுடைய புத்திரனை ப்ருஹத்துக்தன் பூமியை அடைந்தான். அந்த ப்ருஹத்துக்தன் பூமியில் ஸாதுக்களால் அக்னிஹோத்ரஹோமம் செய்யும் தருணத்தில் பூஜிக்கப்படுகிறான். தபனென்ற அக்னிக்கு ரதந்தரனென்கிற அக்னியானவன் புத்திரனாகச் சொல்லப்படுகிறான். மித்ரவிந்தனென்கிற இந்த ரதந்தராக்னியின் பொருட்டு அத்வர்யுக்கள் ஹவிஸ்ஸைக் கொடுத்துக்கொண்டு அழைக்கிறார்கள். மிக்க சக்திமானான தபாக்னியானவன் புத்திரர்களோடுகூட நிகரற்ற ப்ரீதியுள்ளவனாகி ஸந்தோஷமடைந்தான்.

இருநூற்றிருபத்துமூன்றுவது அத்யாயம்.

மார்க்கண்டேய ஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(மார்கண்டேயர் அக்னிகளின் வம்சத்தை விஸ்தாரமாகக் கூறியது.)

பெரிய நியமங்களால் பிறந்தவனும் பரிசுத்தனும் புஷ்டிமதி என்கிற பெயருள்ளவளுமான பரதனென்கிற அக்னியான

வன் ஸங்கோஷமுள்ளவனெகிப் புஷ்டியைக் கொடுக்கிறான். இவன் எல்லா ப்ராணிகளையும் பரிப்பதனால் (=போஷிப்பதனால்) பரத னென்று சொல்லப்படுகிறான். தபாக்னியின் மூன்றுவது புதல்வ னான நிர்ஹிகல்பஸமாதிரூபமான சிச்சக்திபூஜையில் பற்றுத லுள்ள சிவாக்னியானவன் துக்கத்தால் ஹிம்ஸிக்கப்பட்ட எல்லா ருக்கும் எப்பொழுதும் மங்களத்தை உண்டுபண்ணுகிறான். தப னென்கிற அக்னிக்கு விருத்தியடைந்திருக்கிற பெருந்தவத்தையும் ஐஸ்வர்யத்தையும் கண்டு அந்த ஐஸ்வர்யத்தை அடைவதற்குப் புத்திமானான புரந்தரன் என்கிற புத்திரன் உண்டானான். தபாக்னி யினிடத்தினின்று ஊஷ்மா என்கிற அக்னி உண்டானான். அந்த அக்னியானவன் பூதங்களில் உஷ்ணத்திற்காக அனைவர்களா லும் காணப்படுகிறான். மனு என்கிற அக்னியும் ப்ராஜாபத் யத்தை உண்டுபண்ணினான். பிறகு, வேதங்களின் கரைகடந்த வர்களான பிராம்மணர்கள் சம்பு என்கிற அக்னியைத் தபாக்னி யினுடைய நான்காவது புத்திரனைச் சொல்லுகிறார்கள். பிராம் மணர்கள் ஜ்வலிப்பவனும் அதிக காந்தியுள்ளவனுமான ஆவஸத்தி யனைத் தபாக்னியினுடைய ஐந்தாவது புதல்வனைச் சொல்லு கிறார்கள். மகாபாக்கியசாலியே! அஸ்தமனகாலத்தில் களைத்த வனான ஸூர்யன் எந்த அக்னியாகிறானோ, எவன் கோரர்களான அஸுரர்களையும் பலவகை மனிதர்களையும் உண்டுபண்ணினானோ அந்தத் தபர்க்னியானவன், பிறகு, இவ்வுலகில் பலத்தை உண்டு பண்ணுகிறவர்களும் ஸ்வர்ணத்திற்கு ஒப்பான ஒளியுள்ளவர்களும் ரஸத்தை அடையத்தக்கவர்களுமான ஐந்து அக்னிகளை உண்டு பண்ணினான். ப்ராஜாபத்யமானது தபாக்னியினிடத்தினின்று மனு என்கிற புத்திரனை உண்டுபண்ணியது. அங்கிரஸானவன் பானுவை உண்டுபண்ணினான். வேதங்களின் கரை அடைந்தவர் களான ப்ராம்மணர்கள் அந்தப் பானுவை ப்ருஹத்பானுவென்று சொல்லுகிறார்கள். ஸூர்யனிடமிருந்து உண்டானவனும் கல்ல ப்ரஜைகளுடன்கூடியவனுமான ப்ருஹத்பானுவை என்பவள் பானு வினுடைய மனைவி. அவ்விருவர்களும் ஆறு புத்திரர்களை உண்டு பண்ணினார்கள். அவர்களுடைய ப்ரஜாவிஸ்தரத்தைக் கேட்பாயாக. எந்த அக்னியானவன் பலஹீனர்களான ப்ராணிகளுக்கு உயிரைக் கொடுக்கிறானோ, பலதன் என்கிற அந்த அக்னியைப் பானுவினு டைய முதற் புத்திரனைச் சொல்லுகிறார்கள். எந்த அக்னி யானவன் சாந்தியில்லாத ப்ராணிகளிடம் பயங்கரமான கோப

மாகிறதே அந்த மன்யுமான் என்கிற அக்னியானவன் பானுவினு டைய இரண்டாவது புத்திரன். தர்சத்திலும் பௌர்ணமாஸத் திலும் இவ்வுலகில் எந்த அக்னிக்கு ஹவிஸானது சொல்லப்படு கிறதோ அவன் விஷ்ணுவென்று பெயருள்ளவன். விஷ்ணு என்கிற பெயருள்ள அக்னியானவன் த்ருதிமானென்கிற அங்கிரஸாகச் சொல்லப்படுகிறான். எந்த அக்னிக்கு இந்திராணி சேர்ந்து ஆக்ரயண ஹவிஸானது விதிக்கப்பட்டிருக்கிறதோ அந்த ஆக்ரயண னென்கிற அக்னியானவன் பானுவினுடைய வம்சத்திலேயே பிறந் தவன். சாதுர்மாஸ்யங்களில் நித்தியமாக இருக்கிற ஆக்நேய முத லிய ஹவிஸுகளுக்கு எவன் உத்பத்திஸ்தானமோ அந்த அக்னி யானவன் அக்ரஹன் என்று பெயருள்ளவன். நான்கு புத்திர் களோடுகூடின ஸ்துபனென்கிற அக்னியானவன் பானுவினுடைய வம்சத்திலேயே தோன்றினன். பானுவென்கிற வேறு பெயர் கொண்ட மனுவினுடைய மூன்றாவது மானவியான நிசை என்கி றவள் சோஹிணியென்ற பெண்ணையும் அக்னி லோமன் இருவரையும் மற்ற ஐந்து அக்னிகளையும் உண்டுபண்ணினாள். சாதுர்மாஸ்யங் களில் சிறந்த ஹவிஸினால் எந்த அக்னி பூஜிக்கப்படுகிறதோ பர்ஜன்ய னுடன்கூடியவனும் காந்தியுள்ளவனுமான அந்த அக்னியானவன் வைஶ்வானரன் என்று பெயருள்ளவன். இந்த உலகத்தி லுள்ள எல்லாப் பிராணிகளுடைய ஆஹாரங்களும் எவனால் பக்குவம் செய்யப்படுகின்றனவோ அந்த அக்னியானவன் விஶ்வபதி என்று பெயர்பெற்ற மனுவினுடைய இரண்டாவது புதல்வன். எந்த அக்னியில் ஹோமஞ்செய்யப்பட்ட ஆஜ்யமானது பயனுள்ளதா கிறதோ சிறந்த ரோகிணியென்கிற அவள் ஸ்விஷ்டக்ருத் என்று பெயருள்ள மனுவின் புத்திரி. கன்னிகையான அந்த ரோஹிணி யென்பவள் ஹிரண்யகசிபுவின் புதல்வியாயிருந்து தன் கர்மதோஷத் தால் அவனுக்கே பார்யையானாள். அவள்தான் அந்த அக்னி. அவள் அந்த ப்ரஜாபதி. பிராணிகளுடைய தேகத்தை அடைந்து எந்த அக்னியானவன் பிராணன் முதலிய வாயுக்களை கடைபெறச் செய்கிறதோ, சப்த ஸ்வரூபத்தை க்ரஹிப்பதற்கு ஸாதனமாயு மிருக்கிறதோ அந்த அக்னியானவன் ஸ்ருஞ்ஜயன் என்று பெய ருள்ளவன். அச்சிராதிமார்க்கத்தையும் தூமாதிமார்க்கத்தையும் அடையச்செய்கிறவனும் பிரகாசிப்பவனும் அக்னியைத் தாங்குகி றவனும் பாவமற்றவனும் காம்ய கர்மங்களைச் செய்பவனும் தோஷத்தை அடைந்திருப்பவனுமான அந்த அக்னியானவன் கபிலனென்று

வும் முதன்மைவாய்ந்ததுமான அந்த ஸஹாக்னியானது தேவர்களால் நித்யம் தேடப்படுகிறது. அந்த ஸஹாக்னியானது வருகின்ற தனக்குப் பௌத்திரனான நியதனென்கிற சவாக்னியைக் கண்டு தன்னைத் தொட்டுவிடுமென்கிற பயத்தினால் ஸமுத்திரத்தில் பிரவேசித்தது. தேவர்கள் அந்த அக்னியைத் தேடிக்கொண்டு அந்த ஸமுத்திரத்திலும் சென்றார்கள். பிறகு, ஸஹாக்னியானது, தீவ்ரமான தவத்தைச் செய்துகொண்டிருக்கிற அதர்வாவைப்பார்த்து, 'தேவர்களுக்கு ஹவிஸை நீ கொண்டுபோ. வீரனே! நான் மிக்க பலமற்றவனாக இருக்கிறேன். இதற்குமேல் நீ மஞ்சள்நிறமான கண்களுள்ள அக்னியின் தன்மையை அடைவாயாக. இந்தப்ரியத்தை எனக்குச்செய்' என்ற சொல்லைச் சொல்லியது. ஆபமென்கிற ஸஹாக்னியானது அதர்வாவைநோக்கி இவ்வண்ணம் கட்டளையிட்டு அவ்விடத்தினின்று வேறிடத்தை அடைந்தது. மீன்கள் அந்த ஸஹாக்னி ஒளிந்த இடத்தை உரைத்தன. கோபங்கொண்ட ஸஹாக்னியானது, அந்த மீன்களைப் பார்த்து, 'நீங்கள் பிராணிகளுக்குப்பலபலவழிகளாலே உணவாவீர்கள்' என்று சொல்லியது. அப்படியிருந்தும், அந்த ஸஹாக்னியானது, அதர்வாவைப் பார்த்து, 'நீ தேவர்களுக்கு ஹவிஸைக்கொண்டுபோ' என்று உரைத்தது. ஹிதமான தேவர்களுடைய வாக்யத்தினால் அந்த அதர்வா மிகவும் கல்லவாசனங்களால் வேண்டப்பட்டும், ஹவிஸைக் கொண்டுபோவதற்குச் சரீரத்தைத் தாங்குவதற்கும் விருப்பமில்லை. அது சரீரத்தையும் விட்டுவிட்டது. அது அந்தச் சரீரத்தை விட்டு அப்பொழுது பூமியில் பிரவேசித்தது. [1] பூமியைத் தொட்டுத் தனித்தனியாகத் தாதுப் பொருள்களையும் மிருதியாகப் படைத்தது. சியிலிருந்து கந்தத்தையும் தேஜஸையும் எலும்புகளிலிருந்து தேவதாருவையும் கபத்திலிருந்து ஸ்படிகங்களையும் அப்படியே அதனுடைய பித்தத்தினின்று மரகதங்களையும் சரீரத்திலுள்ளிருக்கிற ஈரமிலிருந்து உருக்கையும் உண்டுபண்ணியது. அதனால் உண்டுபண்ணப்பட்ட காஷ்டங்களாலும் பாஷாணங்களாலும் உலோகங்களாலுமே பிரஜைகள் பிரகாசித்தன. அதனுடைய நகங்கள் மேகஸமூகமாயின. நரம்புக்கூட்டங்கள் பவளங்களாயின. அரசனே! இதனுடைய சரீரத்தினின்று பற்பலவிதமான ரஸம், பொன், வெள்ளி முதலிய மற்றத்

[1] பூமியுடன் கலந்து.

காதுக்களும் உண்டாயின. இவ்வண்ணம் சரீரத்தைவிட்டு அதர்வா ஒப்பற்றதான தவத்தில் நிலைபெற்றிருந்தான். அப்பொழுது, ப்ருகு அங்கிரஸ் முதலியவர்களால் மீண்டும் ஸாமர்த்தியத்தினால் ஸமாதியிலிருந்து கழுவும்படி செய்யப்பட்ட அந்த அதர்வாவான் வன், தவத்தினால் விருத்தியடையும்படி செய்யப்பட்டவனும் அதிக தேஜஸ்ஸுள்ளவனுமாகி மிகவும் ஜ்வலித்தான். அதர்வா ரிஷிகளைப்பார்த்துப் பயத்தினால் மஹாஸமுத்திரத்தில் பிரவேசித் தான். அந்த அக்னி ஒளித்துப்போனவுடன், உலகமானது பயந்து அந்த அதர்வரிஷியை அடைந்தது. தேவர்கள் முதலியவர்கள் அந்த அதர்வரிஷியையே பூஜித்தார்கள். அதர்வரிஷியானவர், எல்லாப் பிராணிகளும் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே, ஸமுத்திரத்தை [1] நன்றாகக்கடைந்தார்; அதனால், அக்னியைப் பார்த்துத் தாமே உலகங்களைப் படைத்தார். முந்தி ஓடி ஒளிந்த அதர்வாக்னியானது, பகவானை அதர்வரிஷியினால் அழைக் கப்பட்டதாக எல்லாப் பிராணிகளாலும் கொடுக்கப்படுகிற ஹவிஸை எப்பொழுதும் கொண்டுபோகிறது. அந்தக்கடலில் வஸிப்பவனும் பற்பல தேசங்களில் ஸஞ்சரிக்கின்றவனுமான அதர்வாக்னியானவன் இவ்வண்ணம் வேதங்களில் சொல்லப்பட்ட பல அக்னிகளை உண்டுபண்ணினான். ஸிந்துநதம், ஐந்து நதிகள், தேவிகை, ஸரஸ்வதி, கங்கை, சதகும்பை, ஸரயு, கண்டகி, சர்மண் வதி, மறை, மேத்யை, மேதாதிதி, தாம்ராவதி, வேத்ரவதி, கௌசிகி, மூன்று நதிகள், தமஸை, நர்மதை, கோதாவரி, வேணை, உபவேணை, பீமை, வடவை, பாரதி, ஸுப்ரயோகை, காவேரி, முர்முரை, தங்கவேணை, கிருஷ்ணவேணை, கபிலை, சோணம் ஆகிய இந்த நதிகள் முற்கூறப்பட்டுள்ள அக்னிகளுக்கு மாதாக்கள். அக்புதாக்னிக்கு ப்ரியை என்கிற மனைவி இருந்தாள். அந்த அக்புதாக்னிக்கு [2] விபூ ரஸி என்கிற புத்திரனுண்டானான். எத் தனை அக்னிகள் கூறப்பட்டிருக்கின்றனவோ ஸோமயாகங்கள் அத்தனையென்றே யாஜ்ஞிகர்களிடம் பிரஸித்தி பெற்றிருக்கின் றன. அத்ரியினுடைய வம்சத்தில் ப்ரம்மரிஷியுடைய மனத்தி னின்று ப்ரஜைகள் உண்டாயின. புத்திரர்களை ஸ்ருஷ்டிக்க எண் ணங்கொண்ட அத்ரியானவர் அந்த அக்னிகளையே மனத்தில் தரித்தார். அந்த அத்ரி என்கிற ப்ரம்மரிஷியுடைய தேகத்தி

---

[1] வேறுபாடம். [2] 'விபு' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

னின்று அக்னிகள் வெளிப்புறப்பட்டன. மனத்தினால் இவ்விதமென்று நினைக்கமுடியாதவைகளும் காந்தியுள்ளவைகளும் இருளைப் போக்குகின்றவைகளும் மஹாத்மாக்களுமான அப்படிப்பட்ட இந்த அக்னிகள் உண்டானவிதம் இவ்வாறு என்னால் உனக்கு உரைக்கப்பட்டது. அத்புதாக்கினியினுடைய மகிமையானது எப்படி வேதங்களில் சொல்லப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட மகிமையை எல்லா அக்னிகளுக்குமிருப்பதாக நீ தெரிந்துகொள். இந்த அக்னிகளுள் ஹோமம் செய்யப்பட்ட ஹவிஸைப் புஜிப்பதும் பகவானுமான இந்த அங்கிரஸ் என்ற ஓர் அக்கினியே அக்னிகளுள் முதன்மைவாய்ந்ததென்று அறியவேண்டும். எப்படி ஜ்யோதிஷ்டோமமானது உத்பித் முதலிய பல யாகங்களாக வெளியில் வந்ததோ அப்படியே பிரம்மாவின் புத்திரனை அங்கிரஸினிடத்தினின்று அக்னியானது பலவித அக்னிகளாக வெளிப்பட்டது. பற்பல மந்திரங்களால் அர்ச்சிக்கப்பட்டதாக மனிதர்களால் ஹோமம் பண்ணப்பட்ட ஹவிஸ்களை வஹிக்கிற மிக்க பெரிதான இந்த அக்னிகளுடைய வம்சமானது என்னால் உரைக்கப்பட்டது.

இருநூற்றிருபத்தைந்தாவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர் ஸுப்ரம்மண்யருடைய உத்பத்தியைச் சொல்லத் தொடங்கியதும், தேவஸேனைகளுக்கு நாயகன் அமைப்படுதற்காகக் கவலையுற்ற இந்திரன் மானஸபர்வதத்தில் ஒரு கன்னிகையைப் பார்த்ததும், அவளுடைய குலம் விருப்பம் முதலியவற்றை வினவியதும்.)

தோஷமற்றவனே! அக்னிகளுடைய பற்பலவிதமான வம்சங்கள் உனக்கு உரைக்கப்பட்டன. குருவம்சத்தில் பிறந்தவனே! சிறந்த புத்தியுள்ளவரான ஸுப்ரம்மண்யருடைய உத்பத்தியையும் கேட்பாயாக. அளவுகடந்த சௌர்யமுள்ளவரும் ஸப்தரிஷிகளின் மனைவிகளாலே உண்டுபண்ணப்பட்டவரும் பிராம்மணர்களுக்கும் வேதத்திற்கும் ஹிதத்தைச் செய்பவரும் புகழைப் பெருக்குகிறவரும் அத்புதமென்ற அக்னியினுடைய அத்புதமான புத்ரருமான ஸுப்ரம்மண்யரைப்பற்றிச் சொல்லுவேன். முற்காலத்தில், தேவாஸுரர்கள், ஒரு

வீரோடொருவர் அடித்துக்கொண்டு போர் புரிந்தார்கள். அந்த யுத்தத்தில் பயங்கரமான ரூபமுள்ள அஸுரர்கள் எப்பொழுதுமே தேவர்களை ஜயித்தார்கள். சத்ருபட்டணங்களை அழிப்பவனும் மகாபலசாலியுமான அந்த இந்திரன் அந்த அஸுரர்களால் தன் சேனை பெரும்பாலும் கொல்லப்படுகின்றதைக் கண்டு, ஸைனிகர்களுக்கு நாயகன் வேண்டுமென்று, 'மகாபலசாலியான எவன் அஸுரர்களால் தேவஸேனை முறிய அடிக்கப்பட்டதைக் கண்டு வீர்யத்தைக் கைக்கொண்டு (தேவஸேனையைப்) பாதுகாப்பனே அந்த ஆண் பிள்ளை என்னால் அறியத்தக்கவன்' என்று ஆலோசித்தான். இந்த விஷயத்தை அதிகமாகச் சிந்திக்கின்ற அந்த இந்திரன், மானஸமென்கிற மலையை அடைந்து, அப்பொழுது, 'என்னை நோக்கி ஒருவன் நேரில் ஓடி வரட்டும்; ஒரு புருஷன் என்னைக் காக்கட்டும்; எனக்குக் கணவனைக் கொடுக்கட்டும்; அல்லது, எனக்குத் தானே பர்த்தாவாகட்டும்' என்று ஒரு ஸ்திரீயினால் வெளியிடப்பட்ட கோரமான தீனஸ்வரத்தையும் கேட்டான். புரந்தரனே அந்தக் கன்னிகையைப் பார்த்து, 'நீ பயப்படாதே. உனக்குப் பயமில்லை' என்று இவ்வண்ணம் சொல்லி, பிறகு, அந்தக் கன்னிகையைக் கையில் பிடித்துக்கொண்டு, எதிரில் நிற்கிறவனும் கிரீடமுள்ளவனும் கதாயுதத்தைக் கையிலேந்தியவனும் உலோகங்களுடன்கூடின மலைபோன்றவனுமான கேசியைப் பார்த்தான். பிறகு, இந்திரன், அவனைப் பார்த்து, 'கெட்ட செய்கையுள்ளவனே! யாது காரணத்தால் இந்தக் கன்னிகையை அபஹரிக்க விரும்புகிறாய்? என்னை வஜ்ரபாணியான இந்திரனென்று தெரிந்துகொள். இந்தப் பெண்ணைத் தண்டம்செய்வதினின்று ஒழிந்துவிடுவாயாக' என்று சொன்னான். கேசி, 'இந்திரனே! பாகனென்னும் அஸுரனைக் கொன்றவனே! நீ உயிரோடு உன் பட்டணத்தைக்குறித்துச் செல்லவிரும்பினால் இந்தப் பெண்ணை நீயே விட்டுவிடு. இவள் என்னால் வேண்டப்பட்டிருக்கிறாள்' என்று சொன்னான். கேசியானவன் இவ்வண்ணம் உரைத்து இந்திரனைக் கொல்வதற்காகக் கதாயுதத்தை எறிந்தான். இந்திரன், வருகின்ற அந்தக் கதாயுதத்தை வஜ்ரத்தால் நடுவில் வெட்டி எறிந்தான். பிறகு, கோபங்கொண்ட கேசியானவன், பெரிய மேகத்திற்கொப்பானதும் ஜ்வாலைகளுடன்கூடின ஒருப்பினால் சூழப்பட்டதுமான மலையின் சிகரத்தை இந்திரன்மீது எறிந்தான். அசனி! மஹேந்திரன், அப்பொழுது, தன்னை

நோக்கி வருகின்ற மலையின் சிகரத்தை நன்றுகப்பார்த்து வஜ்ராயுதத்தால் பிளந்தான். அது பூமியில் விழுந்தது. கீழே விழுகின்ற அந்த மலையின் சிகரத்தால் அப்பொழுது கேசி அடிக்கப்பட்டான். மிக்க துன்பமடையும்படி செய்யப்பட்ட கேசியான வன் மகாபாக்கியவதியான அந்தக் கன்னிகையை விட்டுவிட்டு ஓடிவிட்டான். அந்த அஸுரன் ஓடிப்போன பிறகு, இந்திரன் அக் கன்னிகையைப் பார்த்து, 'மங்களகரமான முகமுள்ளவளே! நீ யார்? யாருடைய பெண்? இந்த இடத்தில் என்ன செய்கிறாய்?' என்று கேட்டான்.

இருநூற்றிருபத்தாறுவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(கன்னிகை தன்னையும் தன் விருப்படத்தையும் தெரிவித்ததும், இந்திரன் கன்னிகைக்குத் தகுந்த கணவனைப்பற்றி வேண்ட, பிரம்மதேவர் மறுமொழி கூறியதும், அக்னி ஸ்ப்தரிஷிகளுடைய மனைவிகளை விரும்பி அவர்கள் கிடையாமையால் வனஞ்சென்றதும், ஸ்வாஹாதேவி அக்னியை வசப்படுத்த நிச்சயித்ததும்.)

கன்னிகை, 'நான் கர்ப்யபரென்னும் ஸ்ருஷ்டிகர்த்தரின் புதல்வி; தேவலனென்று பிரஸித்திபெற்றவள். தைத்யசேனை என்பவள் என் ஸகோதரி. அவள் முந்திக் கேசியினால் அபஹரிக்கப்பட்டாள். ஸகோதரிகளான நாங்களிருவரும் ஸ்ருஷ்டிகர்த்தரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு விளையாடுவதற்காகத் தோழிகளுடன் மானஸபர்வதத்திற்கு வந்திருக்கொண்டிருந்தோம். பாகாஸுரனைக் கொன்றவனே! கேசி என்கிற மகாஸுரன் எங்களிருவரையும் அபஹரிப்பதற்கு எப்பொழுதும் விருப்பங்கொண்டிருந்தான். தைத்யஸேனை இவனை விரும்பினாள்; நான் விரும்பவில்லை. பகவானே! அவள் இவனால் கொண்டுபோகப்பட்டாள். உன்பலத்தால் நான் விடுவிக்கப்பட்டேன். தேவேந்திரனே! ஒருவராலும் ஜயிக்க முடியாதவனும் உன்னால் குறிப்பிடப்பட்டவனுமான பர்த்தாவை விரும்புகிறேன்' என்று சொன்னாள். இந்திரன், 'நீ எனக்குச் சிறிய தாயார் பெண். என் தாய் தக்ஷரின் மகள். நான் உன்னால் கூறப்படுகின்ற உன் பலத்தைக் கேட்க விரும்புகிறேன்' என்று சொல்ல,

கன்னிகை, 'மிக்க தேஜஸ்வியுமைந்தவனே! நான் பலமில்லாதவள். பிதாவினுடைய வரத்தினால் தேவர்களாலும் அஸுரர்களாலும் நமஸ்கரிக்கப்பட்ட சிறந்த பலமுள்ள 'பதியானவன் எனக்கு இனி உண்டாகப்போகிறான்' என்று சொல்ல, இந்திரன், 'தேவி! உன் கணவனுக்கு எவ்விதமான பலமுண்டாகும்? இகழப்படாதவளே! நான் உன்னுடைய இந்த வாக்கியத்தைக் கேட்க விரும்புகிறேன்' என்று சொல்ல, கன்னி, 'எவன் தேவர்களையும் அஸுரர்களையும் யக்ஷர்களையும் கிந்நரர்களையும் உரகர்களையும் ராக்ஷஸர்களையும் துஷ்டர்களான தைத்யர்களையும் ஜயிப்பவனே, எவன் மகாவீர்யமுள்ளவனே, எவன் மகாபலசாலியோ, எவன் உன்னுடன் சேர்ந்த எல்லாப் பிராணிகளையும் ஜயிப்பவனே அப்படிப்பட்டவனும் பிராம்மணர்களுக்கு ஹிதத்தைச் செய்பவனும் கீர்த்தியைவளர்க்கிறவனுமான புருஷன் எனக்குப் பர்த்தாவாக உண்டாவான்' என்று சொன்னாள்.

இந்திரன் அவளுடைய வசனத்தைக் கேட்டு, மிகவும் துக்கமுள்ளவனாக, 'எப்படிப்பட்ட பதியைப்பற்றி இவள் பேசுகிறாளோ, அப்படிப்பட்ட பதியானவன் இந்தத் தேவிக்கு (இப்பொழுது) இல்லை' என்று நன்கு ஆலோசித்தான். பிறகு, ஸூர்யனுடைய காந்தி போன்ற காந்தியுள்ள அந்த மஹரிஷியின் உதயபர்வதத்தில் உதிக்கின்ற ஸூர்யனையும் ஸூர்யனிடம் பிரவேசிக்கின்ற மகாபாக்கியசாலியான சந்திரனையும் அமாவாஸ்யை சேர்ந்திருக்கும் கருணத்தில் [1]மௌனத்ரமுஹூர்த்தத்திலேயே தேவாஸுர யுத்தத்தையும் பார்த்தான். நூறு யாகங்களைச் செய்தவனான மஹரிஷியின், சிவந்த மேகங்களோடுகூடின காலை ஸந்தியையும் ரக்த ஜலத்துடன் கூடின ஸமுத்ரத்தையும் கண்டான். ப்ருகுபுத்ரர்களால் அக்னிகளின்பொருட்டுத் தனித்தனியான மந்த்ரங்களால் ஹோமம் செய்யப்பட்ட ஹவ்யங்களைப் பெற்றுக்கொண்டு ஸூர்யனிடத்தில் பிரவேசிக்கின்ற அக்னியையும் பார்த்தான். இந்திரன் அப்பொழுது ஸூர்யனை வந்து அணுகியிருக்கின்ற இருபத்துநான்காவது பர்வத்தையும் அப்படியே அக்னியை அடைந்திருக்கிற ஸூர்யனையும் ஸூர்யனை அடைந்திருக்கிற அந்தச் சந்த்ரனையும் சந்த்ரனுக்கும் ஸூர்யனுக்கும் ஏற்பட்டிருக்கிற ஐக்யத்தையும் கண்டான். இந்திரன் பயங்கரமான அந்தச்சேர்க்கையைக் கண்டு, 'ஸூர்யனுக்கும் சந்த்ரனுக்கும் கோரமும்

[1] முத்திரூருக்கு உரிய காலம்.

வட்டமுமான ரேகை காணப்படுகிறது. இந்தப் பரிவேஷமானது இந்த இரவின் முடிவிலேயே பெரிய யுத்தத்தைச் சொல்லுகிறது. இந்த ஸிந்துநதியும், மிக்க இரத்தவெள்ளத்துடன் எதிர்த்துச் செல்லுகிறது. நரியானது வாயில் அக்னியுடன் ஸூர்யனுக்கு எதிராக ஊளை இடுகிறது. இந்தப் பயங்கரமான சேர்க்கையானது பெரிதாயும் தேஜஸ்ஸோடு கூடியதாயும் இருக்கிறது. சந்திரனுக்கு அக்னியுடனும் ஸூர்யனுடனும் ஏற்பட்ட இந்தச்சேர்க்கையானது ஆச்சர்யமாயிருக்கிறது. சந்திரன் எந்தப்புத்திரனை உண்டுபண்ணுவனோ அவன் இந்தத் தேவிக்குப் பதியாகலாம். அக்னி அநேக குணங்களையுடையவன். அக்னியே எல்லாத்தேவர்களும். இந்த அக்னியானவன் ஒரு குழந்தையை உண்டுபண்ணுவனேயானால் அவன் இந்தத் தேவிக்குப் பதியாகலாம்' என்று ஆலோசித்தான். பகவானான இந்திரன் இவ்வண்ணம் ஆலோசித்து அப்பொழுது அந்தத் தேவஸேனையை அழைத்துக்கொண்டு பிரம்ம லோகம் சென்று பிரம்மதேவரை வணங்கினன். அவரைப் பார்த்து, 'இந்தத் தேவிக்கு நீர் நல்ல சூரனை பதியைக் கொடுப்பீராக' என்று சொன்னன்.

பிரம்மா 'அஸுரர்களை அழிப்பவனே! உன்னால் இந்தக்கார்யம் எண்ணப்பட்டபடியே சிறந்த பலமுள்ளவனும் மிக்க வல்லமையுள்ளவனுமான அப்படிப்பட்ட குழந்தை உண்டாவான். இந்திர! சிறந்த வீர்யமுள்ளவனை அந்தக் குழந்தை உன்னைச் சேர்ந்து சேனாபதியாவான். இந்தத் தேவிக்குப் பதியுமாவான்' என்று சொன்னார். அந்தத் தேவேந்திரன் இந்த வசனத்தைக் கேட்டு, கன்னிகையுடன்கூட அவரை நமஸ்காரம்செய்து, முதன்மை வாய்ந்தவர்களும் பிராம்மணர்களுள் சிறந்தவர்களும் மிக அதிகமான ஒளியுள்ளவர்களும் வஸிஷ்டரைத் தலைவராகக்கொண்டவர்களுமான ஸப்தரிஷிகள் இருக்கிற அவ்விடத்திற்குச் சென்றான். இந்திரனைத் தலைவனாகக்கொண்ட தேவர்கள் அந்த ஸப்தரிஷிகளுடைய அப்படிப்பட்ட யாகத்தில் தவத்தினால் பாகமாக அடையப்பட்டிருக்கிற ஸோமரஸத்தைப் பானம்செய்ய எண்ணிச் சென்றார்கள். மகாத்மாக்களான அந்த ஸப்தரிஷிகள் நியாயப்படி இஷ்டியைச் செய்து நன்கு மூட்டப்பட்ட அக்னியில் எல்லாத்தேவர்களையும் உத்தேசித்து ஹவ்யத்தை ஹோமம் செய்தார்கள். நன்றாக அழைக்கப்பட்டவனும் ப்ரபுவுமான அந்த அக்னியானவன் ஸூர்யமண்டலத்தினின்று வெளியில் புறப்பட்டு விதிப்படி அருகிற்

சென்றான். பரதர்களுள் சிறந்தவனே! அந்த அக்னியானவன் ஆஹவனீயத்தை வந்து அடைந்து, அந்தப் பிராம்மணர்களாலே மந்திரங்களோடு ஹோமம் செய்யப்பட்ட பற்பலவிதமான ஹவ்யங்களை அந்த யாகத்தில் ரிஷிகளிடமிருந்து பெற்றுக் கொண்டு தேவர்களுக்குக் கொடுத்தான். வெளியில் செல்லுகின்ற அந்த அக்னியானவன், தங்கள் தங்கள் ஆஸனங்களில் வீற்றிருப்பவர்களும், ஸுகமுண்டாகும்படி ஸ்நானம் செய்தவர்களும், பொன்னாலாகிய யாகமேடைபோன்றவர்களும், சந்திரகலைகள் போல மாசற்றவர்களும், அக்னிஜ்வாலைக்கு ஒப்பானவர்களும், நக்ஷத்திரங்கள்போல ஆச்சரியமாயிருப்பவர்களுமான மகாத்மாக்களான அந்த ரிஷிகளுடைய பத்தினிகளைப் பார்த்தான். அந்த அக்னியானவன் அந்த இடத்தில் பிராம்மணோத்தமர்களுடைய பத்தினிகளைக்கண்டு அவர்களிடத்துச் சென்ற மனத்தோடு பொறிகள் கலங்கினவனானான். அவன் காமவசத்தை அடைந்தான். அந்த அக்னியானவன், 'நான் மனங்கலங்கினவனாகிவிட்டேன். இது நியாயமன்று. என்னிடத்தில் விருப்பமில்லாதவர்களும் பதிவ்ரதைகளுமான பிராம்மணோத்தமர்களுடைய பத்தினிகளை நான் விரும்புகிறேன். இந்த ஸ்த்ரீகள் காரணமின்றி என்னால் பார்ப்பதற்கோ, தொடுவதற்கோ ஸாத்தியப்படாதவர்கள். ஆகையால், கார்ஹபத்யாக்னியில் நன்கு ப்ரவேசித்து இந்த ஸ்த்ரீகளை அடிக்கடி பார்க்கிறேன்' என்று மீண்டும் எண்ணினான். அத்புதாக்னியானவன் கார்ஹபத்யத்தை அடைந்து பொன்போன்ற ஒளியுள்ள அந்த எல்லா ரிஷிபத்தினிகளையும் ஜ்வாலைகளால் நன்முகத்தைக்காடுகிறவன்போலிருந்துகொண்டு அவர்களைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தான். அந்த அக்னியானவன் அந்த யாகத்தில் இவ்வண்ணம் நெடுங்காலம் வாஸம் பண்ணிவிட்டு அந்த ஸ்த்ரீகளிடம் மனத்தை வைத்து அந்த உத்தம ஸ்த்ரீகளை விரும்பினவனாகவே காட்டுக்குச் சென்றான். ப்ராம்மணஸ்த்ரீகள் கிடையாமற்போகவே, காமனாலே எரிக்கப்பட்டமனமுள்ளவனும் தைர்யத்தை விடுவதில் நிச்சயம்கொண்டவனுமான அந்த அக்னியானவன் காட்டிற்குச் சென்றான். அப்பொழுது தக்ஷனுடைய புத்ரபெண்ணாகிய ஸ்வாஹை என்பவள் அந்த அக்னியின்மீது ஆசை வைத்தாள். அந்தப் பெண் நெடுநாளாகவே அந்த அக்னியை அடைவதற்குத் தக்க ஸமயத்தை விரும்பிக்கொண்டிருந்தாள். சிறந்த ஸௌந்தர்யமுள்ள ஸ்வாஹை நல்லொழுக்

கத்தினின்று தவறுமலிருக்கிற அக்னிதேவனை அடைவதற்குத் தக்கஸமயத்தைக் காணவில்லை. அந்தப்பெண், அக்னியானவன் உண்மையாகவே காமனால் வாட்டப்பட்டுக் கானகம் சென்றதை உள்ளபடிஅறிந்து, 'நான் ஸப்தரிஷிபத்னிகளுடைய ரூபங்களை எடுத்துக்கொண்டு காமனால் பீடிக்கப்பட்டவனும் அந்த ஸ்திரீகளுடைய ரூபத்தால் மோஹித்தவனுமான அக்னியை என்மீது காதலுள்ளவனாகச் செய்வேன். இப்படிச் செய்தால் இந்த அக்னிக்கும் பிரீதி உண்டாகும். என்னுடைய விருப்பமும் நிறைவேறினதாகும்' என்று எண்ணினாள்.

இருநூற்றிருபத்தேழாவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(ஸ்வாஹா தேவியானவள், ஸப்தரிஷிபத்தினிகளில் அருந்ததியைத்தவிர மற்றவர்களுடைய உருவங்களை எடுத்து அக்னியுடன் சேர்ந்ததும், அவள் அக்னியினுடைய வீர்யங்களை ஸ்வேதபர்வதத்திலுள்ள ஸ்வர்ணதண்டத்தில் சேர்த்ததும், அதினின்று ஷண்முகனுண்டானதும், அவன் பாணங்களால் க்ரௌஞ்சகிரியைப் பிளந்ததும், வேலாயுதத்தினால் ஸ்வேதகிரியின் சிகரத்தைப் பிளந்ததும்.)

அங்கிரஸ் மஹரிஷிக்கு நல்ல நடையோடும் ரூபத்தோடும் குணங்களோடும்கூடின சிவை என்கிற பார்யை இருந்தாள். ஜனங்களுக்கு அதிபதியே! சிறந்த அங்கங்களுடன்கூடின ஸ்வாஹாதேவியானவள்முதலில் அந்தச் சிவையின் ரூபத்தை எடுத்துக்கொண்டு அக்னியினருகிற்சென்று அவனைப்பார்த்து, 'அக்னியே! காமனாலேநன்றாக எரிக்கப்பட்டிருக்கிற என்னை நீ காதலிக்கக்கடவாய். இப்படி நீ செய்யாமல் போவாயாகில், என்னை மரித்தவளாகநிச்சயம்செய்துகொள். அக்னியே! உனக்கும் மிகப்பெரிதான அதர்மமுண்டாகும். அக்னியே! நான் சிவை என்கிற அங்கிரஸினுடைய மனைவி. தோழிகளுடன்கூடி ஆலோசித்துக்கொண்டு நல்ல நிச்சயத்துடன் உன் அருகில் வந்தேன்' என்று சொன்னாள். அக்னி, 'பெண்ணே! நீ என்னைக் காமனால் பீடிக்கப்பட்டவனென்று எவ்வாறு அறிகிறாய்? எவர்கள் உன்னால் சொல்லப்

பட்டார்களோ அந்த ஸப்தரிஷிகளுடைய மனைவிகளான எல்லா ஸ்திரீகளும் எவ்வண்ணம் என்னை அறிகிறார்கள்?' என்று வினவ, சிவை, 'அக்னியே! நீ எப்போழுதும் எங்களுக்குப் பிரியமான வன். நாங்கள் உன்னிடமிருந்து பயப்படுகிறோம்; இங்கிதங்களால் உன்னுடைய உள்ளத்தை அறிந்துகொண்டு உன்னிடம் நான் அனுப்பப்பட்டிருக்கிறேன். நான் காமத்தினால் உன்னுடன் சேர்க்கைக்காக விரைவாக உன்னை அடைந்தேன். மகாவீர்ய முள்ளவனே! நீ முந்தி என்னை மணந்துகொள். அக்னியே! என் சுற்றத்தாரான ஸ்திரீகள் என்னை எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறார்கள். நான் செல்வேன்' என்று கூறினாள். பிறகு, அக்னியானவன், பிரீதியோடும் ஸந்தோஷத்துடனும்கூடியவனாக அந்தச் சிவையை விவாகம் செய்துகொண்டான். பிரீதியினால் நன் றாக அக்னியுடன் சேர்ந்தவளான தேவியானவள் அக்னியி னுடைய வீர்யத்தைக் கையினால் ஏந்தினாள். அவள், 'என்னுடைய இந்த ரூபத்தைக் காட்டில் எவர்கள் பார்ப்பார்களோ அவர்கள் அக்னியைக் காரணமாகக்கொண்டு பிராம்மணஸ்திரீகளின்மீது வீணான தோஷத்தைச் சொல்லுவார்கள். ஆகையால், நான் இந்த வீர்யத்தைக் காப்பாற்றுகின்ற பெண்கருடபக்ஷியாகிறேன். வனத்தினின்று புறப்படுவதும் எனக்கு ஸுகமாக இருக்கும்' என்று ஆலோசித்தாள். அப்போழுது, அந்த ஸ்வாஹையானவள் பெண்கருடனைப் போல காட்டினின்று வெளிப்பட்டாள். பிறகு, அவள் நாணற்காத்துக்களால் நன்றாக மூடப்பட்டிருப்பதும், கண்களில் விஷமுள்ளவைகளும் ஏழுதலைகளுள்ளவைகளுமான அத்புதமான ஸர்ப்பங்களால் பாதுகாக்கப்பட்டதும், ராக்ஷஸர்க ளாலும் பிசாசங்களாலும் அப்படியே பயங்கரமான பூதகணங்க ளாலும் ராக்ஷஸிகளாலும் பல மிருகங்களாலும் பறவைகளாலும் நிறைந்திருக்கிறதும், நதிகளோடும் மலை அருவிகளோடும்கூடியதும், பற்பல மரங்களாலும் கொடிகளாலும் நிறைக்கப்பட்டிருப்பது மான ம்லேச்சபர்வதத்தைக் கண்டாள். மங்களத்தைச் செய்பவ ளான அந்த ஸ்வாஹாதேவி அந்த இடத்தில் பிரவேசிக்கமுடியாத மலையின் மேற்பக்கத்தை விரைவாக அடைந்து அந்த அக்னியின் வீர்யத்தை ஸ்வர்ணகுண்டத்தில் விரைவுடன் போட்டாள். அந்த ஸ்வாஹாதேவியானவள் மீதியிருக்கிற மகாத்மாக்களான ஸப்த ரிஷிகளுடைய பத்னிகளின் ரூபங்கள்போன்ற ரூபங்களை எடுத்துக் கொண்டு அக்னியை ரமிக்கச்செய்தாள். அந்த ஸ்வாஹாதேவி

யினல், அருந்ததியினுடைய தவத்தின் மகிமையினலும் பர்த்தா வுக்குச் செய்யும் பணிவிடையினலும், அவளுடைய திவ்யரூப மானது எடுத்துக்கொள்ளமுடியாமற் போயிற்று. கௌரவர் களுள் உத்தமனே! அப்பொழுது காமமுள்ளவளான ஸ்வாஹையினல் அந்த ஸ்வர்ணகுண்டமென்னும் தடாகத் தில் பிரதமாதிதியில் அக்னியினுடைய வீர்யமானது ஆறு தடவை போடப்பட்டது. அந்தக்குண்டத்தில் ஸ்கந்நமான (=நழுவிவிழுந்த) அந்த வீர்யமானது, தேஜஸினல் சூழப்பட்ட ஒரு புத்திரனை உண்டுபண்ணியது. பிறகு, ரிஷிகளால் பூஜிக்கப்பட்ட அந்த வீர்யமானது ஸ்கந்தனுயிற்று. அந்தவீர்யத்தில் ஆறுதலை களுள்ளவரும், பன்னிரண்டு காதுகளும் கண்களும் கைகளும் பாதங்களுமுள்ளவரும், ஒருகழுத்தோடும் ஒருதேகத்தோடும் கூடியவருமான குமாரர் தோன்றினர். த்விதீயையில் அந்தக் குழந்தை தெரிந்தது. த்ருதீயையில் சிசுவாக விளங்கியது. சதுர்த்தி திதியில் அங்கங்களோடும் அவற்றின் அவயவங்களோடும் சேர்ந்த குஹனுயிற்று. அந்தக்குஹன் மிகப்பெரிதான சிவந்தமேகமண்ட லத்தில் மின்னலோடுகூடின பெரிய சிவந்தமேகத்தால் மூடப் பட்டவனுக உதித்த ஸூர்யன்போல்ப் பிரகாசித்தான். த்ரிபுரத்தை ஸம்ஹரித்த ஈச்வரால் எந்த வில்லானது வைக்கப்பட் டிருந்ததோ, தேவசத்ருக்களை நாசம் செய்கிறதும் மயிர் பொடிக்கச்செய்வதும் பெரிதுமான அந்த வில்லானது அந்தக் குஹரால் பிடிக்கப்பட்டது. பலசாலியான குஹர், அப்பொழுது விற்களுள் சிறந்த அந்த வில்லை எடுத்து, ஜங்கமங்களோடும் ஸ்தா வரங்களோடும்கூடின மூவுலகங்களையும் நன்முக மயங்கச்செய்து கொண்டு சிங்காதம் செய்தார். பெரியமேகங்களுடைய கூட்டத் தின் இடிமுழக்கம்போன்ற குஹருடைய அந்தச் சிங்காதத்தைக் கேட்டு, சித்ரன், ஐராவதனென்கிற இரண்டு மகாஸர்ப்பங்கள் எழுந்து துள்ளி எதிர்த்துவந்தன. ஸூர்யனுக்கு ஸமனன ஒளி பொருந்தியவரும் அக்னிகுமாரருமான அந்தப்பாலர், எதிர்த்து வருகின்ற அந்த இரண்டு மகாநாகங்களையும் நன்முகப்பார்த்து, இருகைகளால் பிடித்துக்கொண்டும், மற்றிருரு கையினல் சக்தியைப் பிடித்துக்கொண்டும், வேறிருரு கையினல் பருத்த சரீரமுள்ளதும் பக்கத்தில் வந்திருப்பதும் பலசாலிகளுள் சிறந்ததும் சிவந்த கொண்டையுள்ளதுமான கோழியைப் பிடித்துக்கொண்டும் பயங்கரமாகக் கர்ஜித்தார். மகாபுஜபல

மூள்ள குஹர் விளையாடவும் விளையாடினர். பலசாலியான குஹர், சிறந்த பலமுள்ளபிராணிகளையும் பயமடையும்படி செய்கின்ற உத்தமமானசங்கத்தை இருகைகளால் பிடித்து உரக்க ஊதினர். இரண்டு கைகளால் ஆகாயத்தைப் பலமுறை அடித்தார். அந்த மஹாஸேனர் மூவுலகங்களையும் வாய்களால் விழுங்குகிறவர் போலவும் அளத்தற்கரிய உருவமுள்ளவராகவும் உதயபர்வதத்தில் ஸூர்யன்போல ஸ்ரீவேதபர்வதத்தின் சிகரத்தில் விளையாடிக்கொண்டு விளங்கினர். அத்புதமான விக்கிரமமுள்ளவரும் மலையினுடைய உச்சியில் வீற்றிருப்பவரும் இந்திரியங்களால் அறியமுடியாத ஸ்வரூபமுள்ளவருமான அந்தக்குஹர் பலவித முகங்களால் திசைகளைப் பார்த்தார். அவர் பற்பல வஸ்துக்களைப் பார்த்துக்கொண்டு மீண்டும் சிங்காதம்செய்தார். அவருடைய அந்தச்சப்தத்தைக்கேட்டு ஜனங்கள் பலவாறு கிழேவிழுந்தார்கள். பயந்தவர்களும் மனநிலை தப்பினவர்களுமான ஜனங்கள் அவரையே சரணமடைந்தார்கள். பற்பல ஜாதி பேதங்களுடன் கூடின எந்த ஜனங்கள் அப்பொழுது அந்தத்தவரை அடுத்தார்களோ மிக்கநல்ல பலமுள்ளவர்களான அந்த ஜனங்களையும் பிராம்மணர்கள் பாரிஷதர்களாகச் சொல்லுகிறார்கள். மகாபாகுபலமுள்ள அந்த ஸ்கந்தர் எழுந்திருந்து அந்த ஜனங்களை இன்சொற்களால் ஆனந்தமடையும்படி செய்து வில்லின் நாண்கயிற்றை இழுத்துப் பெரிதான ஸ்ரீவேதகிரியில் பாணங்களைப் பிரயோகித்தார். அந்த ஸ்கந்தர் ஹிமவானுடைய புத்திரனின் க்ரௌஞ்சபர்வதத்தை அம்புகளால் பிளாளந்தார். அந்த த்வாரத்தினால் அன்னங்களும் கழுகுகளும் மேருபர்வதத்தை நோக்கிச் செல்லுகின்றன. அந்த மலையானது அதிகமாகத் தீனஸ்வரங்களை வெளியிட்டுக்கொண்டு சிதறுண்டு கீழே விழுந்தது. அம்மலை விழுந்தவுடன், மற்ற மலைகள் பயத்தினால் மிகவும் அலறின. க்ரௌஞ்சகிரி பிளக்கப்பட்டதைக் கண்டு மற்ற மலைகள் கோரமான தீனஸ்வரத்தைச் செய்தன. பலதாளிகளுள் சிறந்தவரும் அளத்தற்கரிய ஆற்றலுள்ளவருமான அந்த ஷண்முகர் மிக்க துன்பமடைந்திருக்கிற மலைகளுடைய நாதத்தைச் செவியுற்றுங்கூட மனவருத்தமடைந்தாரில்லை. சக்தியை எடுத்துக்கொண்டும், சிங்காதம் செய்தார். மகாத்மாவான அந்த ஷண்முகரால் பிரயோகிக்கப்பட்ட அந்த நிர்மலமான சக்தியானது அப்பொழுது ஸ்ரீவேதகிரியினுடைய கோரமான சிகரத்தை வினாவாகப் பிளந்தது. அந்த

ஷண்முகரால் அடித்து உடைக்கப்பட்டிருக்கிற அந்த ஸ்வேதகிரி யானது மகாத்மாவான அந்த ஷண்முகரிடமிருந்து பயந்து பூமியை விட்டு மற்ற மலைகளோடுகூட ஓடியது. பிறகு, மிக்க மனவருத்த மடைந்த பூமியானது நாற்புறங்களிலும் சிதறியது. துன்பமடைந் திருக்கின்ற பூமியானது ஸ்கந்தரை அடைந்து மீண்டும் வலிமை யுள்ளதாக விளங்கிற்று. மலைகளும் அவரையே நமஸ்கரித்துப் பூமியை அடைந்தன. பிறகு, உலகமானது இந்த ஸ்கந்தரைச் சுக்லபக்ஷ பஞ்சமி திதியில் சரணடைந்தது.

இருநூற்றிருபத்தெட்டாவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யா பர்வம். (தொடர்ச்சி.)

(ஆறு ரிஷிகள் லோகாபவாத பயத்தினால் தத்தம் மனைவிகளைத் தள்ளியதும், விஸ்வாமித்திரர் ஸ்கந்தருக்கு ஜாதகர்ம முதலி யன செய்ததும், இந்திரன் ஸ்கந்தரோடு போர்புரிந்த தும், வஜ்ராயுதத்தினால் அடிக்கப்பட்ட ஸ்கந்தரு டைய வல விலாவிலிருந்து விசாகனும் குமாரர்களும் கன்னிகளுமுண்டானதும், இந்திரன் பயந்து ஸ்கந்தரோடு நட்புக் கொண்டதும்.)

அதிக ஆண்மையுள்ளவரும் அதிக பலமுள்ளவருமான அந்த மகாமுனைவர் பிறந்தவுடனே, கோரரூபமுள்ள பலவிதமான பெரிய உத்பாதங்கள் மிகத்தோன்றின; ஆண்பெண்களிருவருக் கும் வைரமானது ஏற்பட்டது; அப்படியே அதிசீதம் அதிஉஷ்ணம் முதலியவைகள் உண்டாயின; ஜ்யோதிர்க்ரஹங்களும் திசை களும் ஆகாயமும் ஜ்வலித்தன; பூமியானது மிகவும் ஒலித்தது. உலகத்தை ரக்ஷிப்பவர்களான ரிஷிகளும், மகாகோரமான உத் பாதங்களை எல்லாப் பக்கங்களிலும் பார்த்து, அதிக பயமுள்ளவர் களாக உலகங்களுக்குச் சாந்தியைச் செய்தார்கள். அந்தச் சைத்ராதமென்கிற வனத்தில் வஸித்த ஜனங்கள், 'ஸப்தரிஷிகளு டைய ஆறு பத்னிகளோடு சேர்ந்து அக்னியினால் இந்தப் பெரிய அனர்த்தமானது கொண்டுவரப்பட்டது' என்று சொன்னர்கள். அப்பொழுது அந்த ஸ்வாஹாதேவியானவள் அந்தக் [1] கருடியினு

[1] பெண் கருட பக்ஷி.

ணடைய ரூபத்தோடு செல்லுகையில் பார்த்த மற்றவர்கள், 'அந்தக் கருடியினல் இந்த அனர்த்தம் கொண்டுவரப்பட்டது' என்று கருடியைப்பற்றிச் சொன்னர்கள். அந்தக் கார்யமானது ஸ்வாஹை யினல் பண்ணப்பட்டதென்று ஜனங்கள் அறியவில்லை. கருடியான வள் அந்த வசனத்தைக் கேட்டு, 'இவன் என்னுடைய புத்திரன்' என்று (எண்ணி) ஸ்கந்தரை அணுகி மெதுவாக, 'நான் உன்னுடைய தாய்' என்று சொன்னுள். பிறகு, ஸப்தரிஷிகள் மகாபராக்கிரம சாலியான புத்திரன் பிறந்தானென்பதைக் கேட்டு அப்பொழுது அருந்ததீதேவியைத் தவிர மற்ற ஆறு பத்தினிகளையும் தள்ளிவிட் டார்கள். அந்தக்காட்டில் வஸிக்கின்ற ஜனங்கள் அப்பொழுது, '(அவர்) ஆறு ரிஷிபத்னிகளாலேயே உண்டுபண்ணப்பட்டார்' என்று சொன்னர்கள். அரசனே! ஸ்வாஹாதேவியானவள் ஸப்த ரிஷிகளைப் பார்த்து, 'இவன் நிச்சயமாக என்னுடைய புத்திரன். நான் இவனுக்குக் காரணம். இந்த வனவாஸிகள் சொல்லுகிறபடி இல்லை' என்று மீண்டும் மீண்டும் உரைத்தாள். விச்வாமித்திர மஹரிஷியோ ஸப்தரிஷிகளுடைய யாகத்தைச் செய்துவிட்டு அக்னியினல் காணப்படாதவராகக் காமத்தால் மிகத் தவிக்கப்பட் டிருக்கிற அக்னியைப் பின்புறத்தில் தொடர்ந்து சென்றார். விச்வாமித்திரரோ அந்த அக்னியினல் அது எல்லாவற்றையும் உள்ளபடி முழுமையும் அறிந்து குமாரரை முதல் முதலில் சரண மடைந்தார். அந்த மகாமுனிவர் மஹாஸேனரைக் குறித்துத் திவ்ய ஸ்தோத்திரங்களையும், பாலனுக்குச் செய்யவேண்டிய [1] பதின்மூன்று மங்களகர்மங்களையும் முழுமையும் நன்கு செய்தார். விச்வாமித்திர மகாமுனிவர் அந்த மஹாஸேனருக்கு ஜாதகர்மம் முதலிய வைதிகக்ரியைகளைச் செய்தார். விச்வாமித்திரர், உல கங்களுடைய நன்மையின்பொருட்டு ஷண்முகருக்கு மகிமையை யும், கோழியைக் கொடியாக வைத்துக்கொள்ளுதல் தேவஸம்பந்தம் பெற்ற சக்தியைக் கையில் பிடித்தல் பாரிஷதர்களைப் பரிவாரங் களாக ஏற்றுக்கொள்ளுதல் ஆகிய இந்தக் காரியங்களையும் செய்தார். அதனல், விச்வாமித்திரரிஷியானவர் குமாரருக்குப் பிரியராஞர். விச்வாமித்திரமகாமுனிவர், ஸ்வாஹையானவள் தன் ரூபத்தைவிட்டு ரிஷிபத்தினிகளின் வடிவத்தை எடுத்து அக்னி யோடு ரமித்தாளென்பதைத் தெரிந்துகொண்டார். அவர் ஸப்த

---

[1] 'ஜாதகர்மமுதல் விவாகத்துக்கு முந்தின வரையில் செய்யப்படும் பதின்மூன்று கர்மாக்கள்' என்பது பழையவுரை.

ரிஷிகளனைவரையும் அணுகி, 'உங்களுடைய ஸ்திரீகள் அபராதிகளல்லர்' என்றும் சொன்னர். அந்த ரிஷிகள் அந்த விஸ்வாமித்திரரிடமிருந்து உண்மையைக் கேட்டுங்கூட (லோகாபவாத பயத்தினால்) எல்லோரும் பத்தினிகளைத் தள்ளிவிட்டார்கள். அப்பொழுது, தேவர்கள் ஸ்கந்தருடைய வல்லமையைக்கேட்டு ஒன்று சேர்ந்தவர்களாக இந்திரனை நாடி., 'இந்திர! ஸஹிக்கமுடியாத பலத்துடன்கூடின ஸ்கந்தனை விரைவாக நாசம் செய்வாயாக. விளம்பம் செய்யக்கூடாது. மகாபலசாலியான இந்திரனே! இப்பொழுது இவனைக் கொல்லாமற்போவாயாகில் மூவுலகங்களையும், எங்களையும், உன்னையும் அடக்கிக்கொண்டு இப்பொழுதே இவன் இந்திரனாகிவிடுவான்' என்று சொன்னர்கள். அந்த இந்திரன் மனவருத்தமுள்ளவனாக 'மிக்க வலிமையுள்ள இந்தச் சிறுவன் உலகங்களைப் படைக்கிற பிரம்மாவையும் யுத்தத்தில் எதிர்த்துப் போர்புரிந்து நாசம் செய்வான். பாலனைக் கொல்லுவதற்கு நான் சக்தியுள்ளவனல்லேன்' என்று தேவர்களைப் பார்த்துச் சொன்னன். அவர்கள், 'இவ்வாறு பேசுகிறயாதலால் உனக்குச் சக்தியில்லை' என்று சொன்னர்கள். பிறகு, 'இப்பொழுது, லோகமாதாக்களனைவரும் ஸ்கந்தனை நோக்கிச் செல்லட்டும். நிறைந்த வீர்யமுள்ள லோகமாதாக்கள் அந்த ஸ்கந்தனைக் கொல்லட்டும்' என்று சொன்னர்கள். அந்த லோகமாதாக்கள், 'அப்படியே' என்று சொல்லிவிட்டு ஸ்கந்தரிடம் சென்றார்கள். அவர்கள், நிகரற்ற பலமுள்ளவராகி அந்த ஸ்கந்தனைப் பார்த்து, 'இவன் நம்மால் கொல்லத்தகாதவன்' என்று நன்கு எண்ணி, வினதையின் வாடியமுகத்துடன், அவளையே சரணமடைந்தார்கள். அவர்கள், ஸ்கந்தனைப் பார்த்து, 'எங்களால் உலகமானது தரிக்கப்பட்டிருக்கிறது. நீ எங்களுக்குப் புத்திரன்' என்று சொன்னர்கள். பிறகு, பிரபுவான ஸ்கந்தர், ஸ்நேகத்தினால் கனிந்த மனத்துடன் கூடியவர்களும் பால் பொருகுகின்றவர்களுமான அந்த எல்லா மாதாக்களையும் அங்கிகரித்து, அவர்களுடைய அந்த வசனத்தைக் கேட்டு, அவர்களுடைய ஸ்தன்யபானம் பண்ணவிரும்பினர். பல சாலிகளுள் பலசாலியான அந்த மஹாரிஷனர் அவர்களை நன்றாகப் பூஜித்து அவர்களுடைய விருப்பங்களைக்கொடுத்து, சேரில் வருகின்ற பிதாவான அக்னியைக் கண்டார். அந்தக் கந்தரால் நன்கு பூஜிக்கப்பட்ட மங்களகரனான அந்த அக்னியானவன் அந்த மாத்ருகணத்தோடுகூட மஹாரிஷனரான அவரைச் சூழ்ந்து

கொண்டு ரக்ஷிகளுக இருந்தான். எல்லா மாதாக்களுள்ளும் க்ரோதஸமுத்பவை என்கிற ஸ்திரீ, சூலத்தைக் கையிலேந்தி, தாய் தன் புத்திரனை ரக்ஷிப்பதுபோல ஸ்கந்தரை ரக்ஷித்தாள். லோஹிதமென்கிற ஸமுத்திரத்தினுடைய புதல்வியும் இரத்தத்தைப் பானம்செய்பவளுமான க்ருரை என்பவள் மஹாஸேனரைக் கட்டிக்கொண்டு புத்திரனைப்போலப் பாதுகாத்தாள். அக்னியானவன் நைகமேயன், சாகவக்த்ரன், பஹுப்ரஜன் என்கிற குமாரர்களாகி அவர்களால் மரப்பாவைகளால் குழந்தையை ஆனந்தப்படுத்துவதுபோல் ஸ்வேதகிரியிலிருக்கிற ஸ்கந்தரை ஆனந்தமடையச் செய்தான். க்ரஹங்களும், உபக்ரஹங்களும், ரிஷிகளும், மாதாக்களும், அக்னியை முதன்மையாகக்கொண்டவைகளும் அஹங்காரமுள்ளவைகளுமான பாரிஷதர்களுடைய கூட்டங்களும் ஆகிய இவர்களும் கோரரூபிகளும் ஸ்வர்க்கத்தில் வஸிப்பவர்களுமான இன்னும் மற்ற அநேகர்களும், மாத்ருகணங்களோடுகூட மஹாஸேனரைச் சூழ்ந்துகொண்டு நின்றார்கள். தேவராஜன் வெற்றியுண்டாவது ஸந்தேகமென்றெண்ணி, வெற்றியை அடைய விரும்பமுள்ளவனாக, ஐராவதத்தின் பிடரியின் மீதேறித் தேவதைகளோடு கூடப் புறப்பட்டான். சிறந்த பலமுள்ளவனான இந்திரன் தேவகணங்களால் சூழப்பட்டவனாக வஜ்ராயுதத்தை எடுத்து மஹாஸேனரைக் கொல்லவேண்டுமென்கிற எண்ணமுள்ளவனாக மிக விரைவாகச் சென்றான். அரசனே! இந்திரன் அந்த ஸ்கந்தருடைய மகாவேகமுள்ள அத்புதமான பராக்கிரமத்தைக் கண்டு, ஆச்சர்யமுள்ளவனானான்; உக்ரமான உருவமுள்ளதும், பெரிய அட்டஹாஸத்துடன்கூடியதும், அதிக ஒளிபொருந்தியதும், விசித்ரமான கொடிகளுடனும் கவசங்களுடனும்கூடியதும் பற்பல வாஹனங்களுடனும் ஸ்த்ரீகளுடனும்கூடியதுமான தேவஸேனையை ஸ்கந்தரோடு போர்புரிவதற்காக வந்தான். குமாரர் சிறந்த வஸ்த்ரங்களை உடுத்தவனும் காந்தியையுடையவனும் அலங்கரிக்கப்பட்டவனும் கொல்ல எண்ணங்கொண்டு நேரில் வருகிறவனுமான அந்த இந்திரனை எதிர்த்தார். மிக்க பலசாலியும் ஸ்வர்க்கத்திற்குப் பதியுமான அந்த இந்திரனே தேவஸேனையை நன்கு மதிப்பித்துக்கொண்டு அக்னிகுமாரரான ஸ்கந்தரைக் கொல்ல எண்ணி விரைவாக வந்தான். இந்திரன் தேவர்களாலும் நிகரற்ற ரிஷிகளாலும் நன்றாகப் பூஜிக்கப்படுகின்ற

வணங்கி, அக்னிபுத்திரருடைய ஸமீபத்தை வந்தடைந்தான். பிறகு, தேவராஜன் ஒன்றுசேர்ந்திருக்கிற தேவர்களோடு ஸிம்மநாதத்தைச் செய்தான். குஹரும், அந்தச் சப்தத்தைக்கேட்டுக் கடல்போல உரக்கக் கர்ஜித்தார். பெரிதான அந்தச் சப்தத்தினால் நன்றாக எழுந்து கொந்தளிக்கின்ற ஸமுத்திரம்போலப் பிரகாசிக்கின்ற தேவ ஸேனையானது ப்ரஜ்ஞையை இழந்து ஆங்காங்கு சுழன்றது. அந்த அக்னிபுத்ரர் தம்மைக் கொல்லக்கருதி அருகில் வந்திருக்கின்ற தேவர்களைப் பார்த்துக் கோபங்கொண்டு வாயிலிருந்து மூண்டெரிகின்ற நெருப்பு ஜ்வாலைகளை வெளியில் விட்டார். அந்த ஸ்கந்தர் பூமியில் நடுங்குகின்ற தேவஸைன்யங்களை எரித்தார். அந்தத்தேவர்கள் நன்றாகப் பற்றி எரிகின்ற தலைகளுடனும் தேகங்களுடனும்கூடியவர்களாகவும், நன்றாக எரிகின்ற ஆயுதங்களுடனும் வாஹனங்களுடனும்கூடியவர்களாகவும், உடனே பூமியில்விழுந்திருக்கிற விசித்திரமான கஸ்தூரிக்கூட்டங்கள்போலப் பிரகாசித்தார்கள். எரிக்கப்படுகின்ற அந்தத்தேவர்கள் வஜ்ரபாணியான இந்திரனைவிட்டு, அக்னிகுமாரரான ஸ்கந்தரைச் சரணமடைந்தார்கள். அதனால், தேவர்கள் துக்கசாந்தியை அடைந்தார்கள்.

பிறகு, தேவர்களால் விடப்பட்ட இந்திரன் ஸ்கந்தர்மீது வஜ்ராயுதத்தைப் பிரயோகித்தான். இந்திரனால் விடப்பட்ட அந்த வஜ்ராயுதமானது ஸ்கந்தருடைய வலவிலாவை விரைவாக அடித்தது. மகாராஜனே! வஜ்ராயுதமானது மகாத்மாவான அந்தக் குஹருடைய விலாவைப் பிளக்கவும் பிளந்தது. வஜ்ராயுதத்தால் அடிக்கப்பட்ட ஸ்கந்தருடைய காயத்தினின்று யௌவனமுள்ளவனும் பொற்கவசம் பூண்டவனும் சக்தியைத் தரித்தவனும் திவ்யகுண்டலங்களுள்ளவனுமான வேறு ஒரு புருஷன் தோன்றினான். அவன் வஜ்ராயுதத்தால் உண்டுபண்ணப்பட்ட விசனத்தினின்று (=வஜ்ராயுதம் புகுந்ததினின்று) உண்டானதினால் விசாகனென்கிற பெயருள்ளவனானான். ஊழித்தீப்போன்ற காந்தியோடு தோன்றின அந்த வேறு புருஷனைப்பார்த்து இந்திரன் பயத்தினால் காங்குஷித்துக்கொண்டு அந்த ஸ்கந்தரைச் சரணமடைந்தான். சாதுக்களுள் உத்தமனே! ஸ்கந்தர் சேனைகளுடன்கூடின அந்த இந்திரனுக்கு அபயம் கொடுத்தார். பிறகு, மிக்க மனக்களிப்படைந்த தேவர்கள் நான்குவித வாத்தியங்களை முழக்கினார்கள். அத்புதமான தோற்றமுள்ளவர்களும் கோரமாயிருப்பவர்களுமான

ஸ்கந்தருடைய பாரிஷதர்களைக் கேள். பயங்கரர்களான எவர்கள் பிறந்த குழந்தைகளையும் கர்ப்பத்திலிருக்கிற குழந்தைகளையும் உயிர்துறக்கச் செய்கிறார்களோ அப்படிப்பட்ட குமாரகர்கள், அச்சமயத்தில், ஸ்கந்தருடைய தேகத்தில் வஜ்ரத்தால் உண்டுபண்ணப்பட்ட காயத்தினின்று தோன்றினர்கள். இந்த ஸ்கந்தருடைய வஜ்ராயுதக் காயத்தினின்று மகாபலசாலிகளான கன்னியரும் உண்டானர்கள். அந்த ஸ்கந்தர் தம் தேககாயத்தினின்றுண்டான குமாரர்களையும் விசாகனையும் புத்திரர்களாக ஏற்படுத்திக்கொண்டார். அந்த அக்னிபகவான் அப்பொழுது [1]சாக முகனாகி, கன்யா கணங்களும் தன்னுடைய புத்திரர்களுமான எல்லாராலும் சூழப்பட்டு மாதாக்கள் [2]பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே யுத்தத்தில் ஸ்கந்தரைப் பாதுகாத்தான். [3]ஸமர்த்தனனான பத்ரசாகனும் ஸ்கந்தரை ரக்ஷித்தான். அதனால், ஜனங்கள் பூலோகத்தில் ஸ்கந்தரைக் [4]குமாரர்களுக்குப் பிதா என்று சொல்லுகிறார்கள். புத்திரர்களை அடைவதில் விருப்பமுள்ளவர்களும் புத்திரர்களுள்ளவர்களுமான ஜனங்கள் பல ஸ்தலங்களில் மஹாபலசாலியான ருத்திரரையும் அக்னியை முகமாகக் கொண்ட ஸ்வாஹாதேவியையும் எப்பொழுதும் பூஜிக்கிறார்கள். தபமென்ற அக்னியானது எவர்களை உண்டுபண்ணியதோ அந்தக் கன்னியர்கள் ஸ்கந்தரை வந்தடைந்தார்கள். அவர், 'நான் என்ன செய்யவேண்டும்?' என்று வினவ, அவர்கள், 'உம்முடைய அருளால் நாங்கள் எல்லா உலகங்களுக்கும் உத்தமமான மாதாக்களும் பூஜிக்கத்தக்கவர்களும் ஆகக்கடவோம். எங்களுடைய இந்தப் பிரியத்தை நீர் செய்யவேண்டும்' என்று சொன்னார்கள். உதாரபுத்தியுள்ளவரான அந்த ஸ்கந்தர் அந்த மாதாக்களைப் பார்த்து, 'ஆக; நீங்கள் தனித்தனி மாதிரியுள்ளவர்களும் மங்களமூர்த்திகளும் அமங்களமூர்த்திகளும் ஆவீர்கள்' என்று மீண்டும் மீண்டும் சொன்னர். பிறகு, அமோக ப்ரஜைகளுடன்கூடின அக்னியானவன் சாகமுகனாகி மரப்பாணைகளால் குழந்தையை ஆனந்தப்படுத்துவதுபோல ஸ்ரீவத்ஸகிரியிலிருக்கிற அந்த ஸ்கந்தரை ஆனந்தமடையச் செய்தான்.

[1] சாகம் - வெள்ளாடு. [2] வேறுபாடம்.
[3] வேறுபாடம். [4] வேறுபாடம்

இருநூற்றிருபத்தோன்பதாவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர் ஸ்கந்தருடைய சரித்திரத்தைச் சொல்லியதும், இந்திரன் ஸ்கந்தருக்குத் தேவஸேனாபதி ஸ்தானத்தில் முடி சூட்டியதும், ஸ்கந்தர் இந்திரனுடைய பிராத்தனையினால் தேவஸேனையை மணந்ததும்.)

பிறகு, மாத்ருகணமானது ஸ்கந்தரைப் பிடித்திராக ஏற்படுத்திக்கொண்டு தங்களிருப்பிடத்தை நோக்கிச் சென்றது. காகி, ஹலிமா, மாதா, ஹலீ, ஆர்யா, பாலா, தாத்ரீ இவ்விழுவரும் சிசு என்கிற புத்திரனுக்கு மாதாக்கள். இந்த மாதாக்களுக்கு வீர்யமுள்ளவனும் அதிபயங்கரனும் சிவந்த கண்களுள்ளவனும் பார்ப்பவர்களுக்குப் பயத்தை உண்டுபண்ணுகிறவனுமான சிசு என்கிற புத்திரன் ஸ்கந்தருடைய அருளால் உண்டானன். ஸ்கந்தருடைய மாத்ருகணத்தினிடம் உண்டான இக்குழந்தையானவன் எட்டாவது வீரன் என்று சொல்லப்படுகிறான். அவன் சாகமுகமுள்ளவனெனபோழுது ஒன்பதாமவனென்று சொல்லப்படுகிறான். ஸ்கந்தருடைய அந்த ஆறுவது முகத்தைச் சாக முகம் போலிருந்ததென்று அறிவாயாக. அரசனே! பத்ரசாகன் எந்தத் தலையினால் தெய்வத்தன்மை பொருந்திய வேலாயுதத்தை உண்டுபண்ணினானோ, எப்பொழுதும் மாத்ருகணங்களால் பூஜிக்கப் பட்டதும் அந்த ஸ்கந்தருடைய ஆறு தலைகளுள்ளதும் மிகச் சிறந்ததுமான இந்தத் தலையானது அந்த ஆறிலும் நடுவில் அமைந் திருப்பதென்று இவ்வுலகில் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட இந்தப் பற்பலவிதமான ஸ்கந்தருடைய சரித்திரமானது சுக்ல பக்ஷ பஞ்சமியில் நடைபெற்றது. ஜனங்களுக்குத்தலைவனே! அந்தச் சுக்லபக்ஷ ஷஷ்டியில் மகாதேஜமான யுத்தம் நடைபெற் றது. பிறகு, ஆஸனத்தில் வீற்றிருப்பவரும், கவசத்தையும் மாலை யையும் அணிந்தவரும், ஸ்வர்ணமயமான கிரீடந்தரித்தவரும், ஹிதமாயும் ரமணீயமாயுமிருக்கிற கண்களுள்ளவரும், அதிக காந்தியுள்ளவரும், சிவந்த வஸ்திரத்தை உடுத்தவரும், கூர்மையான தேற்றிப்பற்களுள்ளவரும், மனத்துக்கினியவரும், எல்லா லக்ஷணங் களும் பொருந்தியவரும், மூவுலகங்களுக்கும் மிக்க பிரியமா

யிருப்பவரும், வரங்களைக் கொடுப்பவரும், சூரரும், யௌவன முள்ளவரும், மெருநிட்ட குண்டலங்களையணிந்தவருமான அந்த ஸ்கந்தரைத் தாமரைமலர் நிறமுள்ளவளான லக்ஷ்மியானவள் உருவெடுத்தவளாகத் தானே வந்தடைந்தாள். லக்ஷ்மியினால் அடையப் பட்டவரும் பெரும் புகழுள்ளவரும் சிறந்தவரும் வீற்றிருப்பவருமான அந்தக் குமாரர், பிராணிகளால், பௌர்ணமாஸியில் சந்திரன் காணப்படுவதுபோலக் காணப்பட்டார். மகாத்மாக்களான பிராம்மணர்கள் மகாபலசாலியான அந்த ஸ்கந்தரைப் பூஜித்தார்கள். அப்பொழுது, மஹரிஷிகள் அவ்விடத்தில் ஸ்கந்தரைப் பார்த்து, 'பொன்னிறமுள்ளவரே! உமக்கு மங்களம். உலகங்களுக்கு மங்களத்தை உண்டுபண்ணுகிறவராகக்கடவீர். பிறந்து ஆறு நாட்களான உம்மால் எல்லா உலகங்களும் வசப்படுத்தப்பட்டன. சேனாநாயகரே! உம்மால் இவர்களுக்கு மீண்டு அபயமும் கொடுக்கப்பட்டது. ஆகையால், தேவரீர் மூவுலகங்களுக்கும் அபயம் கொடுக்கிற இந்திரனாகக்கடவீர்' என்று சொன்னார்கள்.

ஸ்கந்தர், 'தபோதனர்களே! இப்பொழுது இந்திரன் எல்லா உலகங்களுக்கும் எதைச் செய்கிறான்? தேவராஜன் நீத்யம் தேவகணங்களை எவ்வாறு பாதுகாக்கிறான்?' என்று வினவினர். ரிஷிகள், 'இந்திரன், பிராணிகளுக்குப் பலத்தையும் தேஜஸையும் பிரஜைகளையும் ஸுகத்தையும் பெருக்குகிறான். தேவராஜன் ஸந்தோஷமுள்ளவனாக, விரும்பிய எல்லாவற்றையும் அப்படியே கொடுக்கிறான்; நெருட்ட கலடையுள்ளவர்களை ஸம்ஹரிக்கிறான்; கல்பூக்களுக்கும் நல்ல காலங்களுக்கும் விரும்பியவைகளைக் கொடுக்கிறான். எவனொருவனுக்கு அனுகூலனாக இந்திரன் பிராணிகளைக் காரியங்களில் கட்டளையிடுகிறான். ஸோமபானம்வரை ஸோமத்தில் ஸோமபானனாவான்; அப்படியே சந்திரனிடமாக நக்ஷத்திரங்களில் நக்ஷத்திரனாவான்; அக்னியும் வாயுவும் பூமியும் ஜலமும் ஆகாயமும் ஆகிறான். இதனால் இந்திரன் செய்பவனென்றோம். இந்திரனிடத்தில் மிக்க பயமிருக்கிறதென்ன? விரதீ! நீர் பலசாலிகளுள் சிறந்தவர். ஆகையால், தேவரீர் எங்களுக்கு இந்திரனாகக் கடவீர்' என்று சொன்னார்கள். இந்திரன், 'மிக்க புஜபலமுள்ளவரே! எங்களுடைய ராஜ்யத்தை ஸுகத்தைக் கொடுக்கிற இந்திரனாகக் கடவீர். சிறக்கவரே! இப்பொழுது தேவராஜ்யத்தில் பட்டாபிஷேகம் செய்துகொள்ளுவீர். தேவராஜனாக இருக்கத்தக்க ரூபத்தை அடைந்தவராக இருக்கிறீர்' என்று சொன்னான்.

ஸ்கந்தர், 'இந்திர! நீயே கவலையற்று வெற்றியில் பற்றுதலுடன் மூவுலகங்களையும் ஆள்வாயாக. நான் உன்னுடைய வேலைக்காரன். என்னால் இந்திரபட்டமானது விரும்பப்படவில்லை' என்று சொன்னார். இந்திரன், 'வீரரே! உம்முடைய பலம் அற்புதமானது. நீர் தேவர்களுடைய சத்ருக்களை நாசம் செய்வீராக. உம்முடைய வீர்யத்தால் ஆச்சர்யமடைந்த உலகத்தார்கள் என்னை அவமதிப்பார்கள். வீரரே! தேவர்களுள் சிறந்தவரே! வலிமைகுறைந்தவனும் உம்முடைய தேஜஸினால் தோற்க அடிக்கப்பட்டவனும் இந்திரபட்டத்தில் இருப்பவனுமான என்னை உலகத்துஜனங்கள் அவமதிப்பார்கள். ஆலஸ்யமில்லாதவர்களான ஜனங்கள் நம்மிருவருக்கும் அன்யோன்யம் விரோதத்தை உண்டுபண்ணுவதில் முயல்வார்கள். பிரபுவே! தேவரீர் விரோதியாகிவிடுவீராயின் உலகம் இரண்டுபடும். மிக்கவலிமைபுள்ளவரே! உலகங்கள் தீர்மானத்துடன் இரண்டுபட்டுப் போகுமாகில், நம்மிருவருக்கும் ஜனங்களுடைய வேறுபாட்டினால் முன்போல யுத்தமுண்டாகும். ஐயா! அந்த யுத்தத்தில் தேவரீர் என்னை நிச்சயமாக வெல்வீர். ஆகையால் தேவரீரே இந்திரனாக இருக்கக்கடவீர். ஆலோசிக்கவேண்டாம்' என்று சொன்னான். ஸ்கந்தர், 'இந்திர! உனக்கு மங்களம். மூவுலகங்களுக்கும் எனக்கும் நீயே அரசன். உன் கட்டளையினால் நான் உனக்கு என்ன செய்யக்கடமைவன்? எனக்குச் சொல்' என்று சொன்னார். இந்திரன், 'மிக்கபலசாலியே! இந்த வாக்கியம் உண்மையாக இருக்குமாகில், உம்மால் நிச்சயித்துச் சொல்லப்பட்டிருக்குமாகில், உம்முடைய சொல்லால் நான் இந்திரனாக இருப்பேன். ஸ்கந்தரே! என்னுடைய கட்டளையை நீர் செய்வதற்கு விரும்புவீராகில் கேளும். மிக்க வலிமையாய்ந்தவரே! தேவர்களுக்கு சேனாபதிஸ்தானத்தில் அபிஷேகம் செய்துகொள்ளும்' என்று சொன்னான். ஸ்கந்தர், 'அஸுரர்களுடைய விநாசத்திற்காகவும் தேவர்களுடைய கார்யஸித்திக்காகவும் பசுக்களுக்கும் பிராம்மணர்களுக்கும் நன்மைக்காகவும் என்னை சேனாபதிஸ்தானத்தில் அபிஷேகம் செய்வாயாக' என்று சொன்னார்.

எல்லாத்தேவகணங்களோடுகூட இந்திரனால் அபிஷேகம் செய்யப்பட்ட அந்த ஸ்கந்தர் அச்சமயத்தில் மஹரிஷிகளால் பூஜிக்கப்படுகின்றவராகி மிகவும் விளங்கினர். அப்பொழுது, தூக்கிப் பிடிக்கப்பட்ட பொற்குடையானது நன்றாக மூட்டப்பட்ட அக்னி மண்டலம்போலப் பிரகாசித்தது. விச்வகர்மாவினால் பண்ணப்

பட்ட திவ்யமான பொன்மாலையானது கீர்த்தியுள்ளவரான சங்கரரால் தம்மாலேயே ஸ்கந்தருக்குச் சூட்டப்பட்டது. புருஷஸ்ரேஷ்டனே! பகைவர்களை வாட்டுபவனே! பகவானை விருஷபத்வஜர் மிக்கப்ரீதியுள்ளவராக உமையவளோடுகூட வந்து ஸ்கந்தரைப் பெருமைப்படுத்தினர். பிராம்மணர்கள் அக்னியை ருத்திரராகச் சொல்லுகிறார்கள். ஆதலால், மகாதேஜஸ்வியும் அத்புதமான காட்சியுள்ளவருமான அந்த ஸ்கந்தர் ருத்திரருடைய புத்திரராகச் சொல்லப்படுகிறார். ருத்திரரால் விடப்பட்ட அந்த வீர்யமானது ஸ்ரேஷ்டபர்வதமாகியது. அக்னியினுடைய இந்திரியமானது ஸ்ரேஷ்டகிரியில் க்ருத்திகைகளால் சேர்க்கப்பட்டது. பிறகு, எல்லாத்தேவர்களும், ருத்திரரால் பூஜிக்கப்படுகின்றவரும் குணசாலிகளுள் சிறந்தவருமான குஹரைப்பார்த்து அவரை ருத்திரபுத்திரராகச் சொன்னர்கள். ருத்திரரால் அக்னியினிடத்தில் கலந்து பிரவேசித்து இந்தக்குமாரர் உண்டுபண்ணப்பட்டார். அங்கே அவரிடமிருந்து பிறந்தார். அதனால், ஸ்கந்தர் ருத்ரபுத்ரரானர். ருத்ரர், அக்னி, ஸ்வாஹை, ஆறுகிருத்திகாஸ்திரீகள் ஆகிய இவர்களுடைய தேஜஸினால் ஸ்கந்தர் உண்டானர். அதனால், தேவஸ்ரேஷ்டரான ஸ்கந்தர் ருத்ரபுத்ரரானர். மாசற்ற சிவப்பு நிறமுள்ள இரண்டு வஸ்திரங்களை உடுத்தவரும் ஜ்வலிக்கின்ற திருமேனியுள்ளவரும் கல்ல ஒளி பொருந்தியவருமான அக்னியின் குமாரர் சிவந்த இரண்டு மேகங்களால் சூழப்பட்டிருக்கிற ஸூர்யன்போலப் பிரகாசித்தார். அக்னியினால் கொடுக்கப்பட்ட கோழியானது அவருடைய கொடியை அலங்கரித்தது. ரதத்தில் தூக்கி நிறுத்தப்பட்ட அந்தக் கோழிக் கொடியானது சிவந்த ஜ்வாலித்தீப்போல விளங்கியது. எல்லாப் பிராணிகளுடைய செய்கையும் ஒளியும் சக்தியும் பலமுமானதும் தேவர்களுக்கு ஜயத்தை விருத்திபண்ணுகின்றதுமான சக்தியாயுதமானது அந்த ஸ்கந்தருக்கு எதிரில் வந்தது. அப்படியே, கூடவே தோன்றின கவசமும் அவருடைய சரீரத்தில் அமர்ந்திருந்தது. அந்த ஸ்கந்ததேவருக்கு யுத்தஞ் செய்யும்போழுதெல்லாம் அது சரீரத்தில் தோன்றுகிறது. ஜனங்களுக்கு அதிபதியே! சக்தி, தர்மம், பலம், தேஜஸ், காந்தி, ஸ்தைர்யம், மேன்மை, பிராம்மணர்களுக்கு விரோதமாயிருத்தல், மதிமயக்கமில்லாமை, பக்தர்களைப் பாதுகாத்தல், பகைவர்களை அழித்தல், உலகங்களைக் காத்தல் இவைகளெல்லாம் ஸ்கந்ததேவருக்கு யுத்தஞ் செய்யும்போழுதெல்லாம் அது சரீரத்தில் தோன்றுகிறது. ஜனங்களுக்கு அதிபதியே! சக்தி, தர்மம், பலம், தேஜஸ், காந்தி, ஸ்தைர்யம், மேன்மை, பிராம்மணர்களுக்கு விரோதமாயிருத்தல், மதிமயக்கமில்லாமை, பக்தர்களைப் பாதுகாத்தல், பகைவர்களை அழித்தல், உலகங்களைக் காத்தல் இவைகளெல்லாம் ஸ்கந்ததேவருக்கு யுத்தஞ் செய்யும்போழுதெல்லாம் அது சரீரத்தில் தோன்றுகிறது. ஜனங்களுக்கு அதிபதியே! சக்தி, தர்மம், பலம், தேஜஸ், காந்தி, ஸ்தைர்யம், மேன்மை, பிராம்மணர்களுக்கு விரோதமாயிருத்தல், மதிமயக்கமில்லாமை, பக்தர்களைப் பாதுகாத்தல், பகைவர்களை அழித்தல், உலகங்களைக் காத்தல் இவைகளெல்லாம் ஸ்கந்ததேவருக்கு யுத்தஞ் செய்யும்போழுதெல்லாம் அது சரீரத்தில் தோன்றுகிறது. ஜனங்களுக்கு அதிபதியே! சக்தி, தர்மம், பலம், தேஜஸ், காந்தி, ஸ்தைர்யம், மேன்மை, பிராம்மணர்களுக்கு விரோதமாயிருத்தல், மதிமயக்கமில்லாமை, பக்தர்களைப் பாதுகாத்தல், பகைவர்களை அழித்தல், உலகங்களைக் காத்தல் இவைகளெல்லாம் ஸ்கந்ததேவருக்கு யுத்தஞ் செய்யும்போழுதெல்லாம் அது சரீரத்தில் தோன்றுகிறது. ஜனங்களுக்கு அதிபதியே! சக்தி, தர்மம், பலம், தேஜஸ், காந்தி, ஸ்தைர்யம், மேன்மை, பிராம்மணர்களுக்கு விரோதமாயிருத்தல், மதிமயக்கமில்லாமை, பக்தர்களைப் பாதுகாத்தல், பகைவர்களை அழித்தல், உலகங்களைக் காத்தல் இவைகளெல்லாம் ஸ்கந்ததேவருக்கு யுத்தஞ் செய்யும்போழுதெல்லாம் அது சரீரத்தில் தோன்றுகிறது. இவ்வண்

ணம் எல்லாத் தேவகணங்களாலும் அபிஷேகஞ் செய்யப்பட்ட வரும் நன்கு அலங்கரிக்கப்பட்டவரும் பிரஸித்திபெற்றவரும் நல்ல மனமுள்ளவருமான அந்த ஸ்கந்தர் பூர்ணசந்திரன்போன்ற தோற்றத்துடன் இஷ்டமான வேத கோஷங்களோடும் தேவர்க ளுடைய சிறந்த நூர்யவாத்தியங்களோடும் தேவ கந்தர்வர்க ளுடைய கானங்களோடும் எல்லா அப்ஸரஸுகளுடைய கூட் டங்களோடும் பிரகாசித்தார். ஸந்தோஷமுள்ளவர்களும் ஆனந்த முள்ளவர்களுமான மற்ற அனேகம் தேவர்களாலும் நன்றாக அலங்கரிக்கப்பட்டவரும் பிசாசங்களுடைய கணங்களாலும் அப் படியே தேவகணங்களாலும் நன்றாகச் சூழப்பட்டவருமான அந்த அக்னிகுமாரர் அப்பொழுது தேவர்களால் அபிஷேகம் பண்ணப் பட்டவராக விளையாடிக்கொண்டு பிரகாசித்தார். தேவர்கள், அபி ஷேகம் செய்யப்பட்ட மகாஸேனரை இருள் நாசம் செய்துகொண்டு உதித்திருக்கின்ற ஸூர்யனைப்போலக் கண்டார்கள். பிறகு, எல்லாத் தேவஸேனைகளும், 'எங்களுக்கு நீர் அதிபதி' என்று சொல்லிக் கொண்டு எல்லாத் திக்குக்களினின்றும் ஆயிரமாயிரமாக அந்த ஸ்கந்தரை வந்தடைந்தன. எல்லாப் பூதகணங்களாலும் சூழப் பட்டிருக்கிற ஸ்கந்தபகவான் அந்தத் தேவஸேனைகளை அடைந்து (அவைகளால்) அச்சிக்கப்பட்டவராகவும் துதிக்கப்பட்டவராகவு மிருந்துகொண்டு, அந்தச் சேனைகளையும் இன்சொற்களால் ஸந் தோஷமடையச் செய்தார். இந்திரனும் அப்பொழுது ஸ்கந்தரை ஸேனாபதித்வத்தில் அபிஷேகம் செய்து அந்த இந்திரனால் எந்த ஸ்திரீ தேவஸேனையினிடமிருந்து விடுவிக்கப்பட்டாளோ அந்தத் தேவஸேனையை நினைத்தான். அந்த இந்திரன் பிரம்மதேவர் அவ ளுக்கு நிச்சயமாக இவரைப் பதியாகத் தானம் பண்ணியிருக் கிறாரென்று நன்றாக எண்ணி, அலங்கரிக்கப்பட்டு நின்ற தேவ ஸேனையை அழைத்துவரச் செய்தான். இந்திரன் ஸ்கந்தரைப் பார்த்து, 'தேவதைகளுள் உத்தமரே! இந்தப் பெண் நீர் பிறவா திருக்கும்பொழுதே பிரம்மதேவரால் உமக்குப் பத்னியாக ஏற் படுத்தப்பட்டிவிட்டாள். ஆகையால், நீர் இந்தத் தேவியினுடைய வலக்கையைத் தாமரைமலர்போல விளங்குகின்ற உம்முடைய கையினால் விதிப்படி பாணிக்ரஹணம் (முன்னிட்டுப் பிடித்துக்கொள் ளும்' என்று சொன்னான். இவ்வென்னால் சொல்லப்பட்ட அந்த ஸ்கந்தர் அவளை விதிப்படி பாணிக்ரஹணம் செய்தார். மந்திரங் களை அறிந்த ப்ருஹஸ்பதியோ மந்திரங்களை ஜபித்தார்; வேறமங்

கௌளும் செய்தார். பிராம்மணர்கள் எவளை ஷஷ்டியென்றும் இந்த ப்ரஜைகளுக்கெல்லாம் ஸுகத்தைக் கொடுக்கிற லக்ஷ்மி யென்றும் சொல்லுகிறார்களோ அப்படிப்பட்ட தேவஸேனையை ஜனங்கள் இவ்வண்ணம் ஸ்கந்தருக்கு மஹிஷியாகச் சொல்லு கிறார்கள். அந்தத் தேவஸேனையானவள் ஸினீவாலி, குஹூ, ஸரஸ்வதி, அனாஜிதை என்னும் இவை முதலிய நாமங்களால் சொல்லப்படுகிறாள். எப்பொழுது ஸ்கந்தர் தேவஸேனையினால் சாஸ்வதமான பதியாக அடையப்பட்டாரோ அப்பொழுது லக்ஷ்மீ தேவியானவள் சரீரத்துடன்கூடியவளாகத் தானே அவரை அடைந்தாள். பந்நகியினுண்டான ஸ்கந்தர் லக்ஷ்மியினால் அடை யப்பட்டார். அதனால், லக்ஷ்மியானவள் பந்நகியென்று எண் ணப்பட்டிருக்கிறாள். ஸ்கந்தர் ஷஷ்டியில் ஜயம் பெற்றவரானார். அதனால், ஷஷ்டியானது பதிதை பொருந்திய திதியாயிற்று.

இருநூற்றமுப்பதாவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர் ஸ்கந்தருடைய சரித்திரத்தைக் கூறியது.)

லோகரக்ஷகர்களான ஆறு ரிஷிகள் மிக்க பாக்யம் பெற்றவரும் தேவஸேனாபதியாகவந்து பதியாகச் சேர்ப்பிக்கப்பட்டவரு மான மஹாதேவனிடம் வந்தார்கள். ரிஷிகளாதலில் விட்டுவிடப் பட்டவர்களும், கார்த்திகை தேவிகளும், பெரிய விரதங்களை அனுஷ்டிப்பவர்களான அந்த ரிஷிபத்னிகள் பிரபுவான தேவ ஸேனாபதியை விரைவாக வந்தடைந்து, 'பிதாவே! தேவர்களுக் கெல்லாம் அந்தப் பரிக்ரஹத்தாலே தேவபதியினால் காரண மின்றி நாங்கள் விடப்பட்டோம். நீ எங்களால் உண்டுபண்ணப் பட்டாயென்று யாதோர் சிரஸ்வினாலும். அதனை உண்மையென்று கம்பி அவர்களால் நாங்கள் புண்யஸ்நானத்தினின்றும் தழுவப்படு செய்யப்பட்டோம். அந்த அபவாதத்தினின்று நீ எங்களைப் பாதுகாக்கவேண்டும். பிரபுவே! எங்களுக்கு உன்னுடைய அரு ளால் அழிவற்றதான லோகத்தை முன்பாகவேண்டும். நாங்கள் உன் னைப் புத்திரனாக அடையவிரும்புகிறோம். இதைச் செய்து கட னைத் தீர்த்தவனாவாயாக' என்று சொன்னார்கள். ஸ்கந்தர், அவர்

களைப் பார்த்து, 'நீங்கள் எனக்குத் தாய்மார்களன்றோ? இகழப் படாதவர்களே! உங்களுக்கு நான் புத்திரன். நீங்கள் விரும்புகிற அனைத்தும் உங்களுக்கு அப்படியே உண்டாகும்' என்று சொன்னார். பிறகு, அந்த ஸ்கந்தர், 'அபிஜித் என்கிற நக்ஷத்திரம் கீழே விழுந்துவிட்டதனால் நக்ஷத்திரங்களின் எண்ணிக்கையானது எவ்வாறு ஸமமாகும்?' என்பதைக் கேட்க விரும்பின இந்திரனைப் பார்த்து, 'உனக்கு எது செய்யவேண்டும்?' என்று கேட்டார். ஸ்கந்தரால், 'கொல்' என்று கூறப்பட்ட அந்த இந்திரன், பிறகு, ஸ்கந்தரைப் பார்த்து, 'ரோஹிணியோடு விரோதமுள்ளவளும் ரோஹிணிக்கு மிக இளைய ஸஹோதரியுமான அபிஜித் தேவியான வள் ரோஹிணிக்கு மூத்தவளாக இருக்கலே விரும்பித் தவம் புரிவதற்காகக் கானகம் சென்றுள். அந்த விஷயத்தில் நான் மதிமயங்கினவனாக இருக்கிறேன். உமக்கு மங்களம். அபிஜித் என்கிற நக்ஷத்திரமானது ஆகாயத்தினின்று நழுவி விழுந்துவிட்டது. ஸ்கந்தரே! பிந்தியதான இந்தக் காலத்தைப்பற்றிப் பிரம்மதேவரோடுகூடி ஆலோசனை செய்யும். அபிஜித்தானது கீழே விழுந்த காலத்தில் காலமானது அவிட்டத்தை ஆதியாகக் கொண்டதாகப் பிரம்மதேவரால் ஏற்படுத்தப்பட்டது. எந்த நக்ஷத்ரத்தின் தொடக்கத்தில் சந்திரனுக்கும் ஸூர்யனுக்கும் குருவுக்கும் சேர்க்கை ஏற்படுமோ அந்த நக்ஷத்ரம் யுகாதிநக்ஷத்ரம் என்னப் படும். அது முந்தி ரோகிணியாயிருந்தது; அபிஜித் நக்ஷத்ரம் விழுந்த காலத்திலோ ஒன்று குறைந்த இரவு பகல்களோடு நக்ஷத்ர கணங்கள் அமைந்திருந்ததனால் அவிட்டம் யுகாதி நக்ஷத்ரமாயிருந்தது. இவ்வாறு நக்ஷத்ரங்களின் எண் குறைவுபடினும் காட்களின் எண் ஸமமாயிற்று' என்று சொன்னான். 'கிருத்திகைகளால் நக்ஷத்திரங்களுடைய எண்ணிக்கையின் பூர்த்தியைச் செய்யும்' என்கிற அபிப்ராயத்தைக் குறிப்பித்து இந்திரனால் இவ்வண்ணம் சொல்லப்பட்டவுடன், (ஸ்கந்தருடைய கட்டளையினால்) க்ருத்திகைகள் ஆகாயத்தை அடைந்தன. அக்னியைத் தேவதையாகக் கொண்ட அந்த க்ருத்திகா நக்ஷத்ரமானது ஏழுகலையுள்ளதுபோலப் பிரகாசிக்கிறது. வினதையானவள் ஸ்கந்தரைப் பார்த்து, 'எனக்கு நீ பிண்டங்களைக் கொடுக்கிற புதல்வன். புத்ர! நான் நித்யமாகவே உன்னோடுகூட இருக்க விரும்புகிறேன்' என்று சொன்னாள். ஸ்கந்தர், 'அவ்வாறே ஆகுக. உனக்கு நமஸ்காரம். புத்ரனிடத்திலுள்ள நேசத்தால் நீ என்னைக் கட்டளையிடக்கடவாய். தேவியே!

மருமகளால் பூஜிக்கப்படுகின்றவளாகி என்றும் (என்னிடம்) வஸிப் பாயாக' என்று சொன்னர். பிறகு, வினதை முதலிய எல்லா மாதாக்களுடைய கூட்டமும் ஸ்கந்தரைப்பார்த்து, 'நாங்கள் எல்லா உலகங்களுக்கும் மாதாக்களென்று கவிகளால் துதிக்கப்பட்டிருக்கி றோம். உனக்கும் மாதாக்களாக விரும்புகிறோம். எங்களை நீ பூஜிப்பாயாக' என்று சொன்னார்கள். ஸ்கந்தர், அவர்களுடைய வசனத்தைக் கேட்டு, 'நீங்கள் எனக்கு மாதாக்களன்றோ? நான் உங்களுக்குப் புத்திரன். உங்களுக்கு என்னால் எது செய்யத்தக் கது? உங்களுடைய விருப்பத்தைச் சொல்லுங்கள்' என்று சொன் னர். மாதாக்கள் ஸ்கந்தரைப்பார்த்து, 'பிராம்மி மாஹேஶ்வரி முதலிய எங்க மாதாக்கள் முற்காலத்தில் இந்த உலகத்திற்கு மாதாகளாக ஏறடுத்தபட்டிருந்தார்களோ, அவர்களுடைய ஸ்தானமானது எங்களுக்குக் கிடைக்கவேண்டும். அவர்களுக்கு அந்த ஸ்தானம் இருக்கக்கூடாது. தேவஶ்ரேஷ்டனே! உலகத் தால் நாங்கள் பூஜிக்கத்தக்கவர்களாகவேண்டும். அவர்கள் பூஜிக்கத்தக்கவர்களல்லர். உனக்காக எங்களுடைய பர்த்தாக் களைக் கோபிக்கும்படி செய்தவர்களான அந்த ப்ராம்மி முதலிய மாதாக்களாலே எங்களுடைய [1] ப்ரஜைகள் அபஹரிக்கப்பட்டன. அந்த ப்ரஜைகளை (ப்பர்த்தாக்களுடைய கோபத்தினால்) எங்களுக் குக் கொடுப்பாயாக' என்று சொன்னார்கள். ஸ்கந்தர், 'என்னால் கொடுக்கப்பட்டதும் அந்தப்ரஜைகளை நீங்கள் அடைவது ஸரத் தியமல்லாதது. அந்த ப்ரஜைகளை மனத்தினால் விரும்புகிறீர்களோ, அப்படிப்பட்ட வேறு எந்தப்ரஜைகளை நான் கொடுக்கக்கடவேன்?' என்று சொல்ல, மாதாக்கள், 'ஸ்கந்த! நாங்கள் அந்தப்ராம்மி முதலான பாதுகாக்கத்தக்க ப்ரஜைகளையும் அவற்றின் பிராணிகளையும் உன்னுடன் கூடிக்கொண்டு பூஜிக்க விரும்புகிறோம். எங்களுக்கு அனைகளைக்கொடு' என்று சொல்ல, ஸ்கந்தர், 'உங்களுக்கு ப்ரஜை களைக்கொடுக்கிறேன். உங்களால் கவலைடைன்றோ கூறப்பட்டது? உங்களுக்கு மங்களம். என்னால் கொடுக்கப்பட்டிருக்கிற நீங்கள் (நான் முதலிய) எல்லா ப்ரஜைகளையும் பாதுகாப்பீர்களாக' என்று சொல்ல, மாதாக்கள், 'ஸ்கந்த! உனக்கு மங்களம். நீ எப்படி விரும்புகிறாயோ அப்படியே ப்ரஜைகளைப் பாதுகாக்கக்கடனாகப் பட்டிருக்கிறோம். ஸ்கந்த! பிராணி! எங்களுக்கு எப்போதும் உன்னிடத்தில் ஸ்நேஹம் விருப்பமாயிருக்கிறது' என்று சொல்ல,

[1] எங்களுக்கு அந்தந்த பிள்ளைகளும் பேரன்கள் என்பது.

கோபத்தைத் தணிப்பதற்காக ஸ்நானம் வாஸனைதூபம் அஞ்சனம் இவை அனைத்தையும் செய்யவேண்டும். பலிகர்மங்களோடும் உபஹாரங்களோடும் கூடின ஆராதனங்கள் ஸகந்தருக்கு விசேஷித்துச் செய்யத்தக்கவை. ராஜேந்திரனே! எல்லா க்ரஹங்களும் நன்றாகப் பூஜைகளுடன்கூடி நமஸ்கரிக்கவும் இவ்வண்ணம் அர்ச்சிக்கவுமப்பட்டால் மனிதர்களுக்கு மங்களத்தையும் நீண்ட ஆயுளையும் கொடுக்கின்றன. பதினாறுவருஷங்களுக்குமேல் எந்த க்ரஹங்கள் மனிதர்களை ஆக்ரமிக்கின்றனவோ அந்த க்ரஹங்களை நான் மஹாத்மாவரை வந்தனம்பண்ணி நன்கு உரைப்பேன்.

எந்த மனிதன் விழித்துக்கொண்டிருக்கும்பொழுதோ, உறங்கும்பொழுதோ தேவர்களைப் பார்ப்பதினால் அந்த மனிதன் விரைவாகச் சித்தப்ரமத்தை அடைகிறான். அதற்குக் காரணமான க்ரஹத்தைத் தேவ க்ரஹமென்று சொல்லுகிறார்கள். எந்த மனிதன் உட்கார்ந்துகொண்டோ, படுத்துக்கொண்டோ பித்ருக்களைப்பார்ப்பதினால் அவன் விரைவாகச் சித்தப்ரமத்தை அடைகிறான். அதற்குக்காரணமாயிருக்கிற க்ரஹமானது பித்ரு க்ரஹமென்று அறியத்தக்கது. எவன் ஸித்தர்களை அவமதிக்கிறதினால், தோஷமுள்ளவர்களான அந்த ஸித்தர்கள் எவனைச் சபிக்கிறார்களோ அந்த மனிதன் சிக்கிரமாக உன்மாதத்தை அடைவான். அதற்குக் காரணமான க்ரஹமானது ஸித்தக்ரஹமென்று அறியத்தக்கது. எவன் பலனிகமான கந்தங்களை முகர்கிறதினால், ரஸங்களையும் சுவைக்கிறதினால் அவன் விரைவாக உன்மாதத்தை அடைகிறான். அதற்குக் காரணமாக இருக்கிற க்ரஹமானது ராக்ஷஸ க்ரஹமென்று அறியத்தக்கது. பூமியில் எந்த மனிதனைத் தேவ கந்தர்வர்கள் பற்றுகிறார்களோ, அந்த மனிதன் சிக்கிரமாக உன்மாதத்தை அடைகிறான். அதற்குக் காரணமான க்ரஹமானது கந்தர்வக்ரஹமே. எந்த மனிதன்மீது பிசாசங்கள் ஏறுகின்றனவோ அந்த மனிதன் சிக்கிரமாகச் சித்தப்ரமத்தை அடைகிறான். அதற்குக் காரணமாக இருக்கிற அந்த க்ரஹம் பைசாசமே. எந்த மனிதனிடம் காலக்ரமத்தில் யக்ஷர்கள் ப்ரவேசிக்கிறார்களோ அந்த மனிதன் விரைவாக உன்மாதத்தை அடைகிறான். அதற்குக் காரணமான அந்த க்ரஹமானது யக்ஷக்ரஹமென்று அறியத்தக்கது. எந்த மனிதனுடைய சித்தமானது தோஷங்களால் நிலைதவறி மயங்குகிறதோ அந்த மனிதன் விரைவாக உன்மாதத்தை அடைகிறான்.

அதற்குச் சாஸ்திரத்தினால் சாந்தியைச் செய்யவேண்டும். எவன் அதிகரியத்தாலும் பயத்தாலும் கோரமான வஸ்துக்களைப் பார்ப்பதாலும் விரைவாக உன்மாதத்தை அடைகிறானோ அந்த உன்மாதத்திற்கு இன்சொற்களால் அவனைத் தேற்றுதல் பரிகாரமாகும். ஒரு க்ரஹம் விளையாட்டில் விருப்பமுள்ளது. அப்படியே, மற்றொரு க்ரஹம் புஜிப்பதில் விருப்பமுள்ளது. அப்படியே, மற்றொரு க்ரஹமானது காமமிவறியுள்ளது. இவ்வாறு, க்ரஹம் மூன்று விதமாகும். மனிதர்களுக்கு எழுபதுபிராயம்வரையில் இந்த க்ரஹதோஷங்களிருக்கின்றன. அதற்குமேல் மனிதர்களுக்கு க்ரஹங்களுக்கு ஒப்பான [1] ஜ்வரம் உண்டாகிவிடும். க்ரஹங்கள் பொறிகளையடக்கினவனையும், மனத்தை அடக்கினவனையும், சுத்தனையும், எப்பொழுதும் ஆலஸ்யமில்லாதவனையும், தெய்வத்திலும் சாஸ்திரத்திலும் நம்பிக்கையுள்ளவனையும், ப்ரத்தையுள்ளவனையும் விட்டு விலகுகின்றன. இவ்வண்ணம் மனிதர்க்களுக்கு ஸம்பவிக்கக்கூடிய இந்த க்ரஹதோஷமானது உனக்கு நன்றாக உரைக்கப்பட்டது. க்ரஹங்கள் மஹாத்மாவானுக்குப் பக்தர்களான மனிதர்களைத் தொடுகிறதில்லை.

இருநூற்றுமுப்பத்தோராவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(ஸ்கந்தர் ஸ்வாஹாதேவிக்கு விரும்பியவரனைக் கொடுத்ததும், ப்ரம்மதேவர் ஸ்கந்தர் ஈஸ்வராகத்துப் புத்திராதல் முதலிய வரனை அவருக்குக் காரணத்துடன் தெரிவித்ததும்.)

ஸ்ரீகந்தரால் ப்ரதம் வினதை முதலிய மாதாக்களுக்கு இவ்வண்ணம் இந்த ப்ரியம் செய்யப்பட்டபொழுது, ஸ்வாஹை யானவள், அவரைப் பார்த்து, 'நீ என் வயிற்றில் பிறந்தபின்னை. நான் உன்னால் சொருகப்பட்டதும் எவ்விதத்தாலும் அடைய முடியாததுமான நிதியை விரும்புகிறேன்' என்று சொன்னாள். பிறகு, ஸ்கந்தர், அவளைப் பார்த்து, 'எவ்விதமான நிதியை விரும்புகிறாய்?' என்று கேட்க, ஸ்வாஹை, 'நீ என்னுடனகலாதிருப்பாயாக; நான் உனக்குப் பிரியமான கன்னிகை; ஸ்வாஹையென்று பிரஸித்திபெற்றவள். நான் பாவம்செய்கையை எப்பொழுதும்

[1] வேறுபாடம்.

அக்னியிடத்தில் காதலுள்ளவளாக இருந்தேன். புத்திரனே! அந்த அக்னியானவன் என்னைத் தன்னிடத்தில் காமமுள்ளவ னென்று நன்கு அறியவில்லை. புத்திர! அக்னியோடு சாம்வத மாகச் சேர்ந்துவஸிப்பதற்கு நான் விரும்புகிறேன்' என்று சொன் னாள். ஸ்கந்தர், 'தேவியே! நன்னடையுள்ளவர்களும் நல்வழியில் நிலைபெற்றிருப்பவர்களுமான பிராம்மணர்கள் மந்திரங்களாலே நன்முகத் துதிக்கப்பட்டிருக்கிற ஹவ்யமோ கவ்யமோ எதையும் நன்முக எடுத்து இன்றுமுதல் எப்பொழுதுமே 'ஸ்வாஹா' என்கிற மந்திரத்தைச் சொல்லி அக்னியில் ஹோமம் செய்து (காம் உத்தேசித்த தேவர்களுக்குச்) கொடுப்பார்கள். கல்யாணீ! அக்னிபகவான் இவ்வண்ணம் உன்னோடுகூட எப்பொழுதும் வாஸம் செய்வான்' என்று சொன்னர். இவ்வண்ணம் சொல்லப் பட்டவளும் ஸ்கந்தரால் பூஜிக்கப்பட்டவளுமான ஸ்வாஹாதேவி யானவள், பிறகு, பர்த்தாவான அக்னியோடுசேர்ந்து ஸ்கந்தரைக் கொண்டாடினாள். பிறகு, ப்ரஜைகளை ஸ்ருஷ்டித்தவரான பிரம்ம தேவர், மஹாஸேனரைப்பார்த்து, 'முப்புரங்களை ஸம்ஹரிக்கவரும் உனக்குப் பிதாவுமான மஹாதேவரை அடைவாயாக. ருக்ஷர் அக்னியில் பிரவேசித்தும் உமையவள் ஸ்வாஹையினிடத்தில் பிரவேசித்தும் எல்லா உலகங்களின் நன்மைக்குமாகப் பகைவரால் ஜயிக்கப்படாத நீ உண்டுபண்ணப்பட்டாய். மஹாத்மாவான ருத் திரரால் [1] உமையவளிடத்தில் வீர்யம் விடப்பட்டது. மஹாபாக்ய சாலியே! ருத்ரரிடத்திலிருந்துண்டான அது மிஞ்சினை மிஞ்சிகை னென்கிற பெண்ணும் ஆணுமாகி இந்த மலையில் விழுந்தது. வெளிப்பட்ட வீர்யத்தில் மிகுதியுள்ள ஒரு சிறிது லோஹித ஸமுத்திரத்தில் விழுந்தது; ஒரு சிறிது சூரியனுடைய கிரணங்களில் விழுந்தது; ஒரு சிறிது பூமியில் விழுந்தது; ஒருசிறிது மரங்களில் விழுந்தது. இவ்வண்ணம் அந்தவீர்யமானது ஐந்து பிரிவாக விழுந் தது. அந்த இடங்களில் விழுந்த அந்த வீர்யபிந்துக்கள் பலவிதவடி வங்களுள்ள கணங்களும், மாம்ஸங்களைப் பக்ஷிக்கின்றவர்களும் கோர ரூபிகளுமான உன்னுடைய இந்தப் பரிஷத்தார்களும் ஆயினவென்று அறிஞர்கள் அறியவேண்டும்' என்று சொன்னர். அளத்தற் கரிய ஆற்றலுள்ளவரும் பிதாவினிடம் அன்புள்ளவருமான மஹா ஸேனர், 'இப்படியே ஆகட்டும்' என்று சொல்லிவிட்டுப் பிதாவான மஹேச்வரரைப் பூஜித்தார். அந்த ஐந்து கணங்களை, பொருளை

---

[1] மூலத்தில் வேறு விதமாயிருக்கிறது.

விரும்புகிறவர்கள் எருக்கம்பூக்களால் பூஜிக்கவேண்டும். வியாதியின் தணிதலை உத்தேசித்து அந்தக் கணங்களுக்குப் பூஜையைச் செய்யவேண்டும். ருத்திராடத்திலுண்டான மிஞ்சிகா மிஞ்சிகனென்கிற மிதுனமானது பாலர்களுக்கு நன்மையைவிரும்புகிறவர்களால் இவ்வுலகில் எப்பொழுதும் நமஸ்கரிக்கத்தக்கது. மனுஷ்யர்களுடைய மாம்ஸங்களைப் பக்ஷிக்கின்ற வ்ருக்ஷிகைகள் என்கிற பெயர்கொண்ட ஸ்திரீகள் மரங்களில் உண்டானார்கள். அந்த வ்ருக்ஷிகாதேவிகள் ஸந்தானத்தை விரும்புகிறவர்களால் நமஸ்கரிக்கத்தக்கவர்கள். இந்தப் பிசாசங்களுடைய கூட்டங்கள் எண்ணமுடியாதவைகளென்று கருதப்பட்டிருக்கின்றன.

அரசனே! கொடியுடன்கூடின மனிதனுடைய உத்பத்தியை என்னிடமிருந்து கேள். இந்திரனுக்கு வாஹனமான ஐராவதமென்கிற யானையினுடைய இரண்டுமணிகளும் வைஜயந்தியென்று பிரஸித்தியுள்ளவைகள். புத்திசாலியான இந்திரனால் காணே முறையுடன் கொண்டுவந்து அந்த இரண்டுமணிகளும் குஹருக்குக் கொடுக்கப்பட்டன. அவ்விரண்டினுள் ஒன்று விசாகனுக்கும் மற்றொன்று ஸ்கந்தருக்கும் கொடுக்கப்பட்டன. கார்த்திகேயருக்கும் விசாகனுக்கும் கொடி சிவப்புநிறமுள்ளது. அப்பொழுது எந்த வஸ்துக்கள் மஹாபலசாலியான ஸ்கந்ததேவருக்கு விளையாடுவதற்காகத் தேவர்களால் கொடுக்கப்பட்டனவோ அந்த வஸ்துக்களாலேயே அவர் விளையாடுகிறார். பிசாசங்களுடைய கூட்டங்களாலும் அப்படியே தேவகணங்களாலும் சூழப்பட்டவரும் ஸ்ரீயினால் அடையப்பட்டவருமான அந்த ஸ்கந்தர் ஒளியுடன் கூடியவராகப் பொன்மலையில் பிரகாசித்தார். அந்தவீராமலை, அழகிய குகைகளுள்ள மந்தரபர்வதமானது கிரணங்களுள்ள ஸூர்யனால் விளங்குவதுபோல மங்களகரமான காடுகளுள்ள அந்த மலையானது, விளங்கியது. ஸ்ரேஷ்டபர்வதமானது மலர்ந்திருக்கின்ற ஸந்தானக வனங்களாலும் கரவீரவனங்களாலும் பாரிஜாதவனங்களாலும் அப்படியே [1]சௌவரத்தைக் காடுகளாலும் அசோகவனங்களாலும் கடம்பமரங்களடர்ந்த சோலைகளாலும் திவ்யமான பக்ஷிக்கூட்டங்களாலும் பிரகாசித்தது. அந்தமலையில் எல்லாத் தேவகணங்களும் அப்படியே எல்லாத் தேவஸ்திரீகளும் வந்து சேர்ந்தார்கள். கடையப்படுகிற கடல்போல முழங்குகின்றவைகளும் மேகத்தின் இடிமுழக்கம்

---

[1] 'ஜபா' என்பது மூலம்.

போன்ற ஒளியுள்ளவைகளுமான தூர்யவாத்தியகோஷங்களும் தோன்றின. அந்தமலையில் தேவர்களும் கந்தர்வர்களும் கானம் செய்தார்கள்; அப்படியே, அப்ஸரஸ்திரீகள், நர்த்தனம்செய்தார்கள். அந்தமலையில் ஸந்தோஷமடைந்திருக்கின்ற பிராணிகளுடைய பெரிய சப்தமானது கேட்டது. இவ்வண்ணம் இந்திரனோடு கூடிய உலகமனைத்தும் ஸ்வேதபர்வதத்திலிருப்பவரும் மிக்கமனக்களிப்படைந்தவருமான ஸ்கந்தரைத் தர்சனம்செய்தது. அவரைப் பார்ப்பதினின்று ஒரு பிராணியும் போதுமென்கிற த்ருப்தியை அடையவில்லை.

இருநூற்றுமுப்பத்திரண்டாவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(ஸ்கந்தர் ஸேனாபதியானபின் மறைதேவரும் பார்வதியும் இந்திரன் முதலியவர்களும் பத்ரவடஸ்தலஞ்சென்றதும், ஈச்வரர் ஸ்கந்தரைத் தேவஸேனைத் தலைவன் செய்யவேண்டிய காரியத்தில் கட்டளையிட்டதும், தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் யுத்தமும், ஸ்கந்தர் மகிஷாஸுரனைக் கொன்றதும்.)

ஸ்கந்தபகவான் தேவஸேனாபதி ஸ்தானத்தில் புஷ்யநக்ஷத்ரம் பட்டபொழுது சிறந்த தேஜஸுடன் கூடினவரும் ஸர்வகாலமும் வரும் பார்வதிபோதிருப்பவருமான பிரபுவான பரமசிவன், இந்திரனைத் தலைவனாகக்கொண்ட எல்லாத்தேவர்களாலும் பின் தொடரப்பட்டவராக ஸூர்யன்போலப் பிரகாசிக்கின்ற பத்மஸரஸில் பத்ரவடத்தைக் குறித்துப் புறப்பட்டார். அவருடைய அந்தச் சிறந்த ரதத்தில் பூட்டப்பட்டிருக்கின்ற வெள்ளைநிறமான ஆயிரம் சிங்கங்கள் காலணிலே ஓட்டப்பட்டவைகளாக ஆகாயத்தை நோக்கி மேலே எழுப்பின. அந்தச் சிங்கங்கள் ஆகாயத்தைப் பானம் செய்கின்றவைபோல, சாசாசங்களைப் பயமளிக்கும்படி செய்பவைகளாகவும் கர்ஜிக்கின்றவைகளாகவும் அழகிய பிடரி மயிர்களுள்ளவைகளாகவும் ஆகாயத்தில் சென்றன. அந்த ரதத்தில் உமையவளோடுகூட வீற்றிருக்கிற பரமபதியானவர் இந்திரனுடைய வில்லோடுகூடின மேகத்தில் மின்னலோடு கூடினவராய் ஸூர்யன்போலப் பிரகாசித்தார். கணங்களுக்கு அதிபதியும்

பகவானுமான குபேரன் அழகிய புஷ்பகவிமானத்தின்மீதேறிக் கொண்டு யக்ஷர்களோடுகூட அவருக்கு முன் சென்றான். இந்திரனும், தேவர்களோடுகூட ஐராவதத்தின் மீதேறிக்கொண்டு, பக்தர்களுக்கு வரங்களைக் கொடுப்பவரும் செல்பவரும் காளையைக் கொடியாகக்கொண்டவருமான பரமசிவனைப் பின்புறத்தில் தொடர்ந்து சென்றான். நன்றாக அலங்கரிக்கப்பட்டிருக்கிற அமோகனென்கிற மகாபக்ஷன், மாலைகளை அணிந்துகொண்டிருக்கிற ஜ்ரும்பகக்ரஹங்களோடும் யக்ஷர்களோடும் ராக்ஷஸர்களோடும் வலப்பக்கத்தை அடுத்துச் சென்றான். விசித்திரமாக யுத்தம்செய்கின்ற அனேக தேவர்கள் வஸுக்களோடும் ருத்ரர்களோடும் சேர்ந்து அவருடைய வலப்பக்கத்தில் சென்றார்கள். அப்படியே, கோரமான ரூபத்தையும் சரீரத்தையுமுடைய யமன் ம்ருத்யுதேவதாகூடிக் கோரமான அதிகவிபாதிகளால் நாற்புறங்களிலும் சூழப்பட்டவனைச் சென்றான். பயங்கரமான உருவமுள்ளதும் மூன்று முகங்களையுடையதும் கூர்மையுள்ளதும் நன்கு அலங்கரிக்கப்பட்டதுமான விஜயமென்கிற ருத்ரருடைய சூலமானது யமனுக்குப் பின் சென்றது. உக்ரமான பராக்ரமத்தையுடையவனும் ஜலத்திற்கு அதிதேவதையுமான வருணபகவான் பலமித ஜலஜந்துக்களால் சூழப்பட்டவனை ருத்ரனை நாற்புறங்களிலும் சூழ்ந்துகொண்டு மெதுவாகச் சென்றான். ருத்ரருடைய பட்டஸமானது, கதை உலக்கை சக்தி முதலிய உத்தமமான ஆயுதங்களால் சூழப்பட்டதாக, விஜயமென்கிற ருத்ரனைப் பின்தொடர்ந்து சென்றது. அசனி! அதிக ஸமரீபமாகூடின ருத்ரருடைய குடையானது பட்டஸமென்கிற ஆயுதத்தைப் பின்தொடர்ந்து சென்றது. மறறிவிதமான. பல கணங்களால் அடைபெப்பட்ட கமண்டலுவானது அந்தக் குடையைப் பின்தொடர்ந்து சென்றது. பூர்வியால் வரிக்கப்பட்ட கண்டாரனது, பிருதுக்களோடும் அங்கிரஸுகளோடும் கூடியதாகவும் ரிஷிகளால் பூஜிக்கப்பட்டதாகவும், அந்தக்கமண்டலுவுக்கு வலப்புறத்தில் பிரகாசித்தது. இவைகளுக்குப் பின் புறத்தில், ருத்ரர் ரௌத்ர மனத்தில் விரும்பி எல்லாத் தேவர்களையும் தேவர்களையும் நன்றாக லக்ஷ்தாஷிக்கும்படி செய்துகொண்டு சென்றார். ரிஷிகளும் தேவர்களும் கந்தர்வர்களும் உரகர்களும் நதிகளும் மதிக்களும் பூதராக்ஷஸர்களும் அப்ஸரஸுகளுடைய கூட்டங்களும் கக்ஷாத்ரங்களும் க்ரஹங்களும் தேவர்களுடைய சக்தியும் பராக்ரமமான வடிவமுள்ள

ஸ்திரீகளும் பூமாரிபொழிகின்ற அழகிய ரூபமுள்ள உத்தமஸ்திரீகளும் ருத்திரருடைய பின்புறத்தில் சென்றார்கள். பார்ஜன்யன் பிங்கபாணியான ருத்திரரை நமஸ்கரித்து அவரைப் பின்தொடர்ந்து சென்றான். சந்திரன் அவருடைய தலையில் வெண்குடையைப் பிடித்தான். வாயுவும் அக்னியும் சாமரங்களைக் கையிலெடுத்து வீசிக்கொண்டு இருபுறத்திலும் சென்றார்கள். அரசனே! இந்திரனும் காந்தியினால் சூழப்பட்டவனாக எல்லா ராஜரிஷிகளோடுங்கூட விருஷபத்வஜரைத் துதித்துக்கொண்டு அவருக்குப் பின்புறத்தில் சென்றான். கௌரி, வித்தை, காந்தாரி, கேசினி, மித்திரை ஆகிய எல்லோரும் ஸாவித்ரியோடு கூடப் பார்வதிக்குப் பின்புறத்தில் சென்றார்கள். கவிகளாலே எவைகள் கணங்களாக எண்ணப்பட்டனவோ அந்த எல்லா வித்யாகணங்களும் இந்திரனோடுகூடின எல்லாத் தேவர்களும், அந்த ஸைன்யமுகத்தில் அந்த ருத்ரருடைய கட்டளையைச் செய்தார்கள். ராக்ஷஸ க்ரஹமானது, கொடி பிடித்துக்கொண்டு, சிவனுக்கு முந்திச்சென்றது. இடுகாட்டில் நித்யவாஸம் பண்ணுகிறவனும் ருத்ரருக்கு நண்பனும் உலகங்களுக்கு ஆனந்தத்தைக் கொடுப்பவனுமான பிங்களனென்கிற யக்ஷேந்திரனும் இவர்களோடு சேர்ந்து அவ்விடத்தில் சேனைகளுக்கு முந்தியும் பிந்தியும் உத்ஸாகத்துடன் ஸுகமாகச் சென்றான். அவனுடைய கதியானது ஸ்திரமாக இல்லையன்றோ? எவரைச் சிவனென்றும் ஈசனென்றும் ருத்ரனென்றும் பினாகியென்றும் சொல்லுகிறார்களோ அந்த ருத்ரதேவதையை மனிதர்கள் இவ்வுலகில் நல்ல கர்மங்களால் பூஜிக்கிறார்கள். இவ்வண்ணம் எல்லாத் தேவகணங்களும் அப்பொழுது பிரீதியுள்ள மனத்துடன்கூடியவைகளாகப் பற்பல கருத்துக்களுடன் மஹேச்வரரைப் பூஜிக்கின்றன. பிராம்மணர்களுக்கு நன்மையைச் செய்பவரும் தேவஸேனைக்குப் பதியும் கிருத்திகாதேவிகளுக்குப் புதல்வருமான ஸ்கந்தர் இவ்வாறு தேவஸேனைகளால் சூழப்பட்டவராகத் தேவர்களுக்குப் பிரபுவான ருத்ரரைப் பின்தொடர்ந்து சென்றார். பிறகு, மஹாதேவர், மஹாஸேனரைப் பார்த்து, 'நீ நித்யம் ஆலஸ்யமில்லாதவனாகத் தேவஸேனைகளுடைய ஏழாவது ஸ்கந்தத்தை ரக்ஷிப்பாயாக' என்கிற பெரிய வசனத்தை உரைத்தார். ஸ்கந்தர், 'பிரபுவே! நான் தேவஸேனையின் ஏழாவது வகுப்பைப் பாதுகாப்பேன். தேவரே! செய்யத்தக்க மற்றனதையும் விளம்பமின்றிச் சொல்வீராக'

என்று சொன்னார். ருத்ரர், 'புத்திர! கார்யங்களில் நீ என்னை எப்பொழுதுமே பார்க்கக்கடவாய். என் தர்சனத்தினாலும் பக்தியினாலும் சிறந்த நன்மையை அடைவாய்' என்று சொன்னார். மஹேச்வரர், இவ்வாறு சொல்லிவிட்டு, உமையவளோடு கூட ப்ரீதியுள்ளவராகத் தேஜஸினால் ஜ்வலிப்பவர்போலிருக்கிற அந்த ஸ்கந்தரைத் தழுவிக்கொண்டு அனுப்பினார்.

மகாராஜனே! ஸ்கந்தர் அனுப்பப்பட்டவுடன், எல்லாத் தேவர்களையும் நன்றாக மதிமயங்கச்செய்கின்ற பெரிதான உத்பாதமானது தோன்றியது; பிரபுவே! நக்ஷத்திரங்களுடன்கூடின ஆகாயம் ஜ்வலித்தது. உலகமானது மிக்க மதிமயக்கத்தை அடைந்தது. பூமி அசைந்தது; விசேஷமாக ஒலியும் செய்தது. உலகமே இருளடர்ந்ததாயிற்று. மகாபாக்யமுள்ளவனே! பிறகு அந்தக் குரூரமான உத்பாதத்தைக்கண்டு அப்பொழுது சங்கரரும் உமையவளும் தேவர்களும் மஹரிஷிகளும் கலக்கத்தை அடைந்தார்கள். பிறகு, அவர்கள் மிக மயக்கமடைந்திருக்கும் தருணத்தில், மலைகளுக்கும் மேகங்களுக்கும் ஒப்பானதும் பலவித ஆயுதங்களோடுகூடினதும் கோரமாயிருப்பதுமான பெருஞ்சேனை காணப்பட்டது. கோரமானதும் எண்ணமுடியாததுமான அந்தச் சேனையானது, கர்ஜனம் செய்துகொண்டும், பற்பலவிதமான சொற்களை வெளியிட்டுக்கொண்டும், யுத்தத்தில் தேவர்களைக்குறித்தும் பகவானான சங்கரரைக்குறித்தும் எதிர்த்துவந்தது. அவர்களால் தேவசேனைகளின்மீது அநேகமான அம்புக்கூட்டங்களும் மலைகளும் சக்தக்னிகளும் பிராஸங்களும் கத்திகளும் ஈட்டிகளும் கதாயுதங்களும் பிரயோகிக்கப்பட்டன. மேலே விழுகின்ற கோரமான அந்தப் பெரிய ஆயுதங்களாலே தேவசேனை முழுவதும் ஒரு கணத்தினுள் ஓடியது; புறங்காட்டியதாகவும் காணப்பட்டது. போர்வீரர்களும் யானைகளும் குதிரைகளும் ஆயுதங்களும் மகாரதங்களும் அறுக்கப்பட்ட தேவர்களுடைய சேனையானது, அஸுரர்களால் அடிக்கப்பட்டுப் புறங்காட்டி ஓடியது. அஸுரர்களால் வதம் செய்யப்படுகின்ற அந்தத்தேவசேனையானது நெருப்புக்களால் பெரும்பான்மையாக எரிக்கப்பட்டிருக்கிற பெரிய மரங்களடர்ந்த காடுபோலக் கீழேவிழுந்தது. மகாயுத்தத்தில் கொல்லப்படுகிறவர்களும், தலைகளும் உடல்களும் வெட்டப்பட்டவர்களும், விரைவாக ஓடுகின்றவர்களுமான தேவர்கள் நாதனை அடையவில்லை. பிறகு, பலனென்கிற அஸுரனை நாசம் செய்தவனும்

பகைவர்களுடைய பட்டணங்களை அழிப்பவனுமான தேவராஜன், அஸுரர்களால் அடிக்கப்பட்டு ஓடுகின்ற அந்தத் தேவசேனையைப் பார்த்துத் தேற்றிக்கொண்டு, 'சூரர்களே! பயத்தை விட்டுவிடுங்கள். உங்களுக்கு மங்களம். ஆயுதங்களை எடுங்கள். பராக்கிரமத்தில் புத்தியைச் செலுத்துங்கள். உங்களுக்கு ஒருவிதமான மனவருத்தமும் உண்டாகவேண்டாம். மிக்க கெட்ட நடையுள்ளவர்களும் கோரமான தோற்றமுள்ளவர்களுமான இந்தத் தானவர்களைத் தோல்வியடையச்செய்யுங்கள். உங்களுக்கு மங்களம். என்னோடுகூடப் பெரிய அஸுரர்களை எதிர்த்துச் செல்லுங்கள்' என்று சொன்னன். இந்திரனுடைய வசனத்தைக் கேட்டுத் தேறுதலடைந்தவர்களான தேவர்கள் இந்திரனை ஆதாரமாகக்கொண்டு தானவர்களை எதிர்த்துப் போர்புரிந்தார்கள். பிறகு, அந்த எல்லாத்தேவர்களும் அதிக பலசாலிகளான மருத்துக்களும் மகாபாக்யசாலிகளான ஸாத்தியர்களும் வஸுக்களோடுகூடி அஸுரர்களை எதிர்த்துச் சென்றார்கள். கோபங்கொண்டிருக்கிற அந்தத் தேவர்களாலே யுத்தத்தில் அஸுரப்படைகளில் பிரயோகிக்கப்பட்ட சஸ்திரங்களும் பாணங்களும் அஸுரர்களுடைய தேகங்களில் ரத்தத்தை மிகுதியாகக் குடித்தன. அந்த அஸுரர்களுடைய தேகங்களைப் பிளந்துகொண்டு, அப்பொழுது, வெளியில் போய்விழுகின்ற கூர்மையான அந்த அம்புகள் மலைகளிலிருந்து வெளிக்கிளம்புகின்ற ஸர்ப்பங்கள்போலக் காணப்பட்டன. வேந்தே! பாணங்களால் பிளக்கப்பட்ட அந்த அஸுரர்களுடைய சரீரங்கள் காற்புறங்களிலும் துண்டு துண்டாகச் செய்யப்பட்ட மேகங்கள்போலப் பூமியில் விழுந்தன. பிறகு, யுத்தத்தில் எல்லாத் தேவகணங்களாலும் பலவித அம்புகளால் பயமடையும்படி செய்யப்பட்ட அந்த அஸுரசேனையானது புறங்காட்டி ஓடும்படி செய்யப்பட்டது. பிறகு, ஸந்தோஷமுள்ளவர்களும் ஆயுதங்களை ஓங்கினவர்களுமான எல்லாத் தேவர்களாலும் அப்பொழுது உரத்த சிங்கநாதம் செய்யப்பட்டது. ஒன்றுசேர்ந்திருக்கின்ற தூர்யவாத்தியங்கள் பலவாறு ஒன்று வாசிக்கப்பட்டன. இவ்வண்ணம் ஒன்றை ஒன்று எதிர்த்ததும் மிக்க பயங்கரமானதும் மாம்ஸங்களாலும் ரக்தங்களாலும் சேறுள்ளதுமான யுத்தமானது தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் நடந்தது. தேவலோகத்துக்கு அனர்த்தமானது உடனே நேரில் காணப்பட்டது. கோரர்களான

அஸுரர்கள் தேவர்களை மிக நாசம் செய்தார்கள். பிறகு, தூர்ய வாத்திய கோஷங்களும் பேரீவாத்தியங்களுடைய பெருமுழக்கங்களும் தானவேந்திரர்களுடைய பயங்கரமான சிங்கநாதங்களும் உண்டாயின. பிறகு, கோரமான அஸுரப்படையிலிருந்து மிக்க பலசாலியான மஹிஷனென்கிற அஸுரன் பெரிய மலையைக் கையிலெடுத்துக்கொண்டு வெளிப்புறப்பட்டு வந்தான். அரசனே! மேகங்களாலே நன்றாக நாற்புறங்களிலும் சூழப்பட்டிருக்கிற ஸூர்யனைப்போலக் கையில் மலையைத் தூக்கிக்கொண்டிருக்கிற அந்த மஹிஷாஸுரனைக்கண்டு அந்தத் தேவர்கள் வேகமாக ஓடத் தொடங்கினர்கள். மகாராஜனே! பிறகு, மஹிஷன் தேவர்களை எதிர்த்து ஓடிவந்து ஜலத்தோடுகூடின மேகம்போன்றதும் பருத்த உருவமுள்ளதுமான அந்த மலையைத் தேவர்களின்மீது எறிந்தான். அரசனே! தேவஸைன்யத்தின்மீது விழுகின்றதும் பயங்கரமான உருவமுள்ளதுமான அந்த மலையிலுல் தேவஸைனியில் பதினாயிரவர் கொல்லப்பட்டுப் பூமியில் விழுந்தார்கள். பிறகு, மஹிஷன் தேவர்களைப் பயமடையச் செய்துகொண்டு அந்தத் தானவர்களோடு சிங்கமானது அல்பமிருகங்களை நோக்கி ஓடிவருகிறதுபோல விரைவாக யுத்தத்தில் எதிர்த்து ஓடிவந்தான். எதிர்த்துவருகின்ற அந்த மஹிஷனைக்கண்டு, இந்திரனோடு கூடின தேவர்கள், யுத்தத்தில் பயந்தவர்களாகவும் ஆயுதங்களும் த்வஜங்களும் சிதறினவர்களாகவும் ஓடினார்கள். பிறகு, அந்த மஹிஷன் கோபங்கொண்டு ருத்ரனுடைய தேரைக்குறித்து விரைவாகச் சென்றான்; ரதத்தை எதிர்த்து ஓடி ருத்ரனுடைய ரதத்தின் ஏர்க்காலைப் பிடித்துக்கொண்டான். கோபங்கொண்ட மஹிஷாஸுரன் ருத்ரனுடைய ரதத்தை விரைவாக எதிர்த்தபொழுது, ஆகாயமும் பூமியும் அலறின. மஹரிஷிகள் மிக்க மதிமயக்கத்தை அடைந்தார்கள். பருத்த தேகமுள்ளவர்களும் மேகம்போன்றவர்களுமான தைத்யர்கள் வீரவாதம் செய்தார்கள். 'நாம் ஜயித்துவிட்டோம்' என்று அவர்களுக்கு நிச்சயமுண்டாயிற்று. அப்படியிருக்கையில், ருத்ரபகவான், புத்ரரான குஹரை அழைத்து, 'புத்ர! நீ துராத்மாவான அஸுரனுடைய துஷ்டத்தனத்தைப் பார். கெட்டநடையுள்ளவனை மஹிஷனை விரைவாகக் கொல். உன்பலத்தைப் பார்க்கவிரும்புகிறேன்' என்று சொன்னார். பகவானை மஹேஶ்வரர் 'இவ்வண்ணம் சொல்லி

விட்டு ஸ்கந்தரைப் புகழ்ந்து ஆயுள்கழிந்தவரென மஹிஷனைக் கொல்லுவதற்காக ஏவினர்; அப்பொழுது ஸ்கந்தரைத் துராத்மாவான அந்த மஹிஷனுக்கு யுமனாக நினைத்தார். மஹிஷனும், ருத்திரருடைய ரதத்தைக்கண்டு, தேவர்களைப் பயப்படும்படி செய்துகொண்டும் அஸுரர்களை ஸந்தோஷிக்கச் செய்துகொண்டும் பயங்கரமாகச் சிங்கநாதம் செய்தான்.

பிறகு, தேவர்களுக்கு அப்படிப்பட்ட கோரமான பயம் நேர்ந்திருக்கையில் பிரபுவும் கோபத்தினால் ஸூர்யன்போல ஜ்வலிக்கின்றவரும் சிவப்புவஸ்திரத்தை உடுத்தவரும் சிவந்தமாலையுடனும் ஆபரணங்களுடன்கூடியவரும் சிவந்த குதிரைகளுள்ளவரும் மிக்க புஜபலமுள்ளவரும் பொற்கவசத்தை அணிந்தவருமான மஹாஸேனர், ஸூர்யனுக்கு ஒப்பானதும் ஸ்வர்ணத்தினால் ஒளிபொருந்தியதுமான ரதத்தின்மீதேறி மஹிஷனை எதிர்த்து வந்தார். அவரைக்கண்டு அந்த அஸுரஸேனையானது யுத்தத்தில் விரைவாக ஓடியது. ராஜேந்திரனே! மகாபலசாலியான அந்த மஹாஸேனரும், நன்றாக ஜ்வலிக்கின்றதும் மஹிஷனைப் பிளக்கக்கூடியதுமான அப்படிப்பட்ட சக்தியைப் பிரயோகித்தார். விடப்பட்ட அந்தச் சக்தியானது அந்த மஹிஷனுடைய பெரிதான தலையைக் கொய்தது. தலை அறுக்கப்பட்டவுடன், மஹிஷன் உயிரிழந்து கீழே விழுந்தான். விழுகின்றதும் மலைபோல விளங்குவதுமான அந்தத் தலையினால் பதினறு யோஜனதூரம் வழியானது மறைக்கப்பட்டது. அப்பொழுது, அந்த வழியானது நடந்துசெல்லத்தகாததாகியது. இப்பொழுது, அந்த வழியினால் உத்தரகுருதேசத்து ஜனங்கள் ஸுகமாகச் செல்லுகிறார்கள். சுழற்றி எறியப்பட்ட அந்தச் சக்தியானது ஆயிரமாயிரமாகப் பகைவர்களைக் கொன்று ஸ்கந்தருடைய கையை அடைந்ததைத் தேவர்களும் அஸுரர்களும் கண்டார்கள். சிறந்த புத்தியுள்ள மஹாஸேனரால் பெரும்பான்மையாக அம்புகளால் அடிக்கப்பட்டவைகளும் கோரமானவைகளும் மாண்டவை போக மீதி இருப்பவைகளுமான அஸுரக் கூட்டங்கள் பயந்தன. கிட்ட அணுகமுடியாதவர்களான ஸ்கந்தருடைய பாரிஷதர்களால் பயந்த அஸுரர்கள் ஆயிரமாயிரமாகக் கொன்று தின்னப்பட்டார்கள். மிகக்களித்தவர்களும் தானவர்களைத் தின்பவர்களும் இரத்தத்தைக் குடிப்பவர்களுமான அந்த ஸ்கந்தருடைய பாரிஷதர்கள் ஒரு க்ஷணத்தில் அந்த எல்லா யுத்தகளங்களையும் அஸுரர்களில்லாமல் செய்தனர். சிறந்த கீர்த்தியுள்ளவரான ஸ்கந்தர், ஸூர்யன்

இருள்களைப் போக்குவதுபோலவும், அக்னி மரங்களை எரிப்பது போலவும், காற்று மேகங்களைச் சிதறச் செய்வதுபோலவும், தம் வீர்யத்தால் பகைவர்களை அழித்தார். தேவர்களாலே கன்கு பூஜிக்கப்படுகிறவரும் க்ருத்திகாதேவிகளின் புத்திரருமான ஸ்கந்தர் மஹேஶ்வரரை வந்தனம் செய்து, கிரணங்கள் பரவுகின்ற ஸூர்யன் போலப் பிரகாசித்தார். பகைவர்களை அழித்தவரான ஸ்கந்தர், மஹேஶ்வரரை அடைந்தபொழுது, இந்திரன் (அந்த) மஹாஸேன ரைக்கட்டிக்கொண்டு, 'ஸ்கந்தரே! யுத்தத்தில் தேவர்களால் ஜயிக்க முடியாதவனும் பிரம்மாவினால் வரங்கொடுக்கப்பட்டவனும் மிக்க பலசாலியுமான அப்படிப்பட்ட இந்த மஹிஷாஸுரன் உம்மால் கொல்லப்பட்டான். ஜயிப்பவர்களுள் சிறந்தவரே! மகாபாகுபல முள்ளவரே! தேவர்கள் எவனுக்குத் துரும்பு போலானார்களோ அப்படிப்பட்ட இந்தத் தேவ சத்ருவான மஹிஷன் உம்மால் ஒழிக்கப்பட்டான். யுத்தத்தில் எவர்களால் நாங்கள் முன்பு தவிக் கும்படி செய்யப்பட்டோமோ அப்படிப்பட்ட மஹிஷனுக்கு ஒப் பானவர்களும் தேவசத்ருக்களுமான அநேக தானவர்கள் உம்மால் கொல்லப்பட்டார்கள். மற்றத்தானவர்கள் நூறு நூறுகவும் கூட்டங்கூட்டமாகவும் உம்மைச் சேர்ந்தவர்களால் தின்னப் பட்டார்கள். பிரபுவான உமாபதிபோல நீர் யுத்தத்தில் பகைவர் களால் வெல்லப்படத்தகாதவர். தேவரே! இந்தக் காரியமானது, உம்முடைய முதலாவது வெற்றியென்று பிரஸித்தியடையும். மூவுலகங்களிலும் உம்முடைய புகழும் அழிவற்றதாகும். மிக்க வலிய தோள்களுள்ளவரே! தேவர்கள் உமக்கு வசப்பட்டவர்களா வார்கள்' என்று சொன்னன். சசீபதியான இந்திரன் இவ்வண்ணம் மஹாஸேனரைப் பார்த்து உரைத்துவிட்டு, பகவானை முக் கண்ணரால் அனுமதி கொடுக்கப்பெற்று, தேவர்களோடு திரும்பி னன். ருத்திரர் பத்ரவடத்தைக் குறித்துச் சென்றார். தேவர் களும் திரும்பினர்கள். ருத்ரர், தேவர்களை நோக்கி, 'ஸ்கந்தனை என்னைப்போலப் பாருங்கள்' என்று சொன்னர். அக்னிபுத்திரரான அந்த ஸ்கந்தர் தானவகணங்களைக் கொன்று மஹரிஷிகளால் பூஜிக்கப்படுகின்றவராகி, மூவுலகங்களை முழுமையும் ஒரு பகலில் ஜயித்தார்.

எந்தப் பிராம்மணன் மனத்தை அடக்கி இந்த ஸ்கந்த ருடைய உத்பத்தியைச் சொல்லுகிற உபாக்கியானத்தைப் படிப் பனை, அல்லது, பிராம்மணனிடமிருந்து கேட்பனை, எவன் அறியாதவனைக் கேட்கும்படி செய்வனை அந்த ப்ராம்மணன் தனங்

களையும் ஆயுளையும் கீர்த்தியையும் காந்தியையும் புத்திரர்களையும் சத்துரு ஜயத்தையும் புஷ்டியையும் இவ்வுலகில் நன்முக அடைந்து மறுமையில் ஸ்கந்தருடைய ஸாலோக்யத்தை அடைவான்' என்று கூறினர்.

இருநூற்றுமுப்பத்துமூன்றுவது அத்யாயம்.

மார்க்கண்டேயஸமாஸ்யாபர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர் ஸ்கந்தருடைய நாமங்களைக் கூறியது.)

யுதிஷ்டிரர், 'பகவானே! பிராம்மணோத்தமரே! மகாத்மாவான இந்த ஸ்கந்தருடைய மூவுலகங்களிலும் பிரஸித்திபெற்ற நாமங்களைக் கேட்க விரும்புகிறேன்' என்று வினவினர். பாண்டு புத்திரரான யுதிஷ்டிரரால் இவ்வாறு சொல்லப்பட்டவரும் மகாத்மாவும் மிக்க தவமுள்ளவருமான மார்க்கண்டேய பகவான், அப்பொழுது அவரைப் பார்த்து, 'எந்த மனிதன் கார்த்திகேயருடைய ஆக்னேயன், ஸ்கந்தன், தீப்தகீர்த்தி, அனுமயன், மயூரகேது, தர்மாத்மா, பூதேசன், மஹிஷார்த்தனன், காமஜித், காமதன், காந்தன், ஸத்தியவாக், புவனேஸ்வரன், சிசு, சீக்ரன், சுசி, சண்டன், தீப்தவர்ணன், சுபானனன், அமோகன், அகஹன், ரௌத்திரன், ப்ரியன், சந்திராननன், தீப்தசக்தி, ப்ரசாந்தாத்மா, பத்ரகுக்குடமோஹனன், ஷஷ்டிப்ரியன், தர்மாத்மா, பவித்ரன், மாத்ருவத்ஸலன், கன்யாபர்த்தா, விபக்தன், ஸ்வாமிஹபன், ரேவதீஸுதன், ப்ரபு, நேதா, விசாகன், நைகமேயன், ஸுதுஷ்கரன், ஸுவ்ரதன், லலிதன், பாலக்ரீடநகப்ரியன், சசாரி, ப்ரம்மசாரி, சூரன், சரவணோத்பவன், விஸ்வாமித்ரப்ரியன், தேவஸேனாப்ரியன், வாஸுதேவப்ரியன், ப்ரியன், ப்ரியக்ருத் என்கிற திவ்ய நாமங்களைப் படிப்பானேனை அவன் ஸ்வர்க்கத்தையும் கீர்த்தியையும் பொருளையும் அடைவான். இதில் ஸம்சயமில்லை. கௌரவர்களுள் சிறந்த வீரனே! தேவர்களாலும் ரிஷிகளாலும் அன்புடன் அடையப்பட்டவரும் சக்தியுடன் கூடியவரும் அளத்தற்கரியவரும் ஆறுமுகங்களுள்ளவரும் சிறந்த வீரருமான குஹரை நான் துதிசெய்யப்போகிறேன். இந்தக் குஹருடைய நாமதேயங்களை நீ அறிந்துகொள்வாயாக. (அந்தத்துதி,) 'ஸ்கந்தரே! நீர் பிராம்மணர்களுக்கு ஹிதத்தைச் செய்பவர்;

பிரம்மத்தினிடமிருந்து உண்டானவர்; பிரம்மத்தை அறிந்தவர்; (கர்ம) பிரம்மத்தினிடத்தில் படுத்திருப்பவர்; வேதமுள்ளவர்களுள் மிகச்சிறந்தவர். நீர் பிராம்மணப்ரியர்; பிராம்மணர்களுக்கு எல்லாவிதத்தாலும் மந்திரியாக இருப்பவர். நீர் வேதங்களுக்கும் பிராம்மணர்களுக்கும் தலைவர். நீர் ஸ்வாஹாஹாயாகவும் ஸ்வதையாகவும் ஒப்பற்ற பரிசுத்த வஸ்துவாகவுமிருக்கிறீர். நீர் மந்திரங்களால் துதிக்கப்படுகிறீர். நீர் ஆறு நாக்களுள்ளவரென்று பிரஸித்திபெற்றிருக்கிறீர். நீர் ஸம்வத்ஸரம்; ஆறு ருதுக்கள். நீரே மாதங்கள்; பக்ஷிங்கள்; பகல்; திசைகள். நீர் தாமரைக்கண்ணர். நீர் தாமரைமலர்போன்ற முகங்களுள்ளவர்; ஆயிரம் கண்ணுள்ளவர்; ஆயிரம் கைகளுள்ளவர். நீர் லோகபாலர்; சிறந்த ஹவிஸ். நீர் தேவாஸுரர்களனைவரையும் போஷிப்பவர். நீரே ஸைனாதிபதி; ப்ரசண்டர்; ப்ரபு; விபு. நீர் இந்திரனை ஜயித்தவர். நீர் ஆயிரம் கால்களுடன் கூடியவர். நீரே தாணி; ஸஹஸ்ரதுஷ்டி; ஸஹஸ்ரபுக்; ஆயிரம் தலைகளுள்ளவர்; அநந்தரூபர், நீர் ஸஹஸ்ரபாத். நீர் பத்துச் சக்திகளைத் தரித்திருப்பவர். நீர் உமதிஷ்டத்தினால் கங்கைக்குப் புத்திரரானவர். அப்படியே, ஸ்வாஹாவுக்கும் பூமிக்கும் க்ருத்திகைகளுக்கும் புத்திரர். ஷண்முகரே! இஷ்டப்படி பற்பலவிதமான ரூபங்களைத் தரித்துக்கொண்டு நீர் கோழியோடு விளையாடுகிறீர். தேவரீர் தீக்ஷையாகவும் ஸோமனாகவும் மருத்துக்களாகவும் எப்பொழுதும் கர்மமாகவும் வாயுவாகவும் பர்வதராஜனாகவும் இந்திரனாகவும் இருக்கிறீர். நீர் ஸனாதன வஸ்துக்களுள்ளும் ஸனாதன வஸ்துவாக இருப்பவர்; பிரபுக்களுக்கும் பிரபுவாக இருக்கிறீர்; உக்கிரமான வில்லுள்ளவர்; பிரபஞ்சத்தை உண்டுபண்ணுகிறவர்; அஸுரர்களை அழித்தவர்; சத்துருக்களை ஜயிப்பவர்; தேவர்களுள்சிறந்தவர். நீரே அப்படிப்பட்ட ஸூக்ஷ்மமான ஒப்பற்றதாகவுமாக இருக்கிறீர்; பராபரவஸ்துக்களை அறிந்தவராக இருக்கிறீர்; நீர் பராபர வஸ்து. மகாத்மாவே! தர்மத்துக்கும் காமத்துக்கும் சிறந்த மற்ற வஸ்துக்களுக்கும் (தேவரீரே ஆதாரமாக இருக்கிறீர்.) இவ்வுலகமனைத்தும் உம்முடைய தேஜஸால் விளங்குகிறது. எல்லாத் தேவர்களுள்ளும் சிறந்த வீரரே! என்னால் துதிக்கப்பட்டவரே! லோகநாதரே! உலகமனைத்தும் உமது சக்தியினால் வியாபிக்கப்பட்டிருக்கிறது. பன்னிரண்டு கண்களையும் கைகளையுமுடையவரே! உமக்கு வந்தனம். இதற்கு மேற்

பட்ட உம்முடைய கதியை நான் அறியேன்' என்பது. எந்தப் பிராம்மணன் மன அடக்கமுள்ளவனாக இந்த ஸ்கந்த புராணமுடைய ஜனனத்தைப் படிப்பானோ, எவன் பிராம்மணர்களைக் கேட்கும்படி செய்வானோ, எவன் பிராம்மணர்களால் சொல்லப்பட்ட ஸ்கந்தருடைய ஜனனத்தைக் கேட்பானோ அவன் தனத்தையும் ஆயுளையும் கீர்த்தியையும் ஒளியையும் புத்திரர்களையும் அப்படியே சத்துரு ஜயத்தையும் புஷ்டியையும் துஷ்டியையும் நன்றாக அடைந்து ஸ்கந்தருடைய ஸாலோக்யத்தை அடைவான்' என்று கூறினர்.

மார்க்கண்டேய ஸமாஸ்யா பர்வம் முற்றிற்று.

இருநூற்றுமுப்பத்துநான்காவது அத்யாயம்.

த்ரௌபதீஸத்யபாமாஸம்வாதபர்வம்.

(ஸத்யபாமை பரீத்தாவை வசப்படுத்துகிற உபாயத்தை வினவியதும், திரௌபதி அதற்கு விடை கூறுமுகத்தால் பதிவ்ரதைகளுடைய தர்மத்தைக் கூறியதும்.)

பாரதரே! பாண்டவர்களும் பிராம்மணர்களும் உட்கார்ந்த பிறகு, த்ரௌபதியும் ஸத்யபாமையும் அப்பொழுது அந்த ஆச்ரமத்தில் ஓரிடத்தில் ப்ரவேசித்தார்கள். உத்தமஸ்த்ரீகளான அவ்விருவரும், புண்யாச்ரமத்தில் பிரவேசித்து, ஒருவரைவிட ஒருவர் சிரிப்புமேலிட்டவர்களாகவும் அன்புமிக்கவர்களாகவும் அந்த ஆச்ரமத்தில் ஸுகமாக வீற்றிருந்தார்கள். ராஜேந்திரரே! ஒரு வரோடொருவர் பிரியவசனங்களைச் சொல்பவர்களான அவ்விரு வரும், நெடுங்காலத்திற்குப் பிறகு பார்த்ததனால், கௌரவர்களுக் கும் யாதவர்களுக்கும் தகுந்த விசித்ரமான கதைகளைப் பேசிக் கொண்டார்கள். பிறகு, கிருஷ்ணனுடைய ப்ரிய மஹிஷியும் ஸத்ராஜித்தினுடைய குமாரியும் அழகிய இடையுள்ளவருமான ஸத்யபாமையானவள், ஏகாந்தத்தில் யஜ்ஞஸேனனுடைய குமாரி யான த்ரௌபதியைப்பார்த்து, 'த்ரௌபதி! லோகபாலர்களுக்கு நிகரானவர்களும் வீரர்களும் நிச்சயமாக (எல்லாராலும்) நன்கு ஒப்புக்கொள்ளப்பட்டவர்களுமான பாண்டவர்களை எந்தகடையி னல் நீ ஆள்கிறாய்? கல்யாணீ! எவ்வாறு உனக்குப் பாண்ட வர்கள் வசப்பட்டிருக்கிறார்கள்? உன் விஷயத்தில் அவர்

கள் எப்படி கோபிக்காமலிருக்கிறார்கள்? ப்ரியமான காட்சியுள்ளவளே! பாண்டவர்கள் உனக்கு எப்பொழுதும் வசப்பட்டிருக்கிறார்களல்லரோ? அழகிய, இடையையுடையவளே! அவர்கள் எவ்வாறு ஒருவரிடத்தொருவர் அஸூயைப்படாமலிருக்கிறார்கள்? விதானுஷ்டானமா? அல்லது, தவமா? ஸ்நானமா? மந்திரமா? ஔஷதங்களா? வித்தையினுடைய சக்தியா? தளராத யௌவனமுதலியவற்றின் சக்தியா? ஜபமா? ஹோமமா? அப்படியே, (மை முதலிய) மருந்துகளா? எதனல் அந்தப் பாண்டவர்களெல்லாரும் உன்முகத்தைப் பார்ப்பவர்களாக இருக்கிறார்கள்? இந்த உண்மையை எனக்குச் சொல்லுவாயாக. கிருஷ்ணையே! பாஞ்சாலி! எதனல் எனக்குக் கிருஷ்ணன் எப்பொழுதும் வசப்பட்டிருப்பரோ அப்படிப்பட்ட கீர்த்தியை உண்டுபண்ணக்கூடியதும் [1]லௌபாக்கியத்தை வ்ருத்தி அடையச் செய்கின்றதுமான ஸௌரவ்ரதமுதலியவற்றை எனக்குச் சொல்லுவாயாக' என்று வினவினள். உத்தம கீர்த்தியையுடையவளான ஸத்யபாமை இவ்விதம் கூறிவிட்டுப் பேசாமலிருந்தாள்.

மகாபாக்கியமுள்ள பதிவ்ரதையான திரௌபதி அந்த ஸத்யபாமையைப்பார்த்து, 'ஸத்யா! கெட்ட ஸ்திரீகளுடைய நடையைப் பற்றி என்னைக்கேட்கிறாய். துஷ்டர்களாலே கடக்கப்பட்டிருக்கிற வழியில் எவ்வாறு (என்னல்) விடைகூற முடியும்? இந்த விஷயவாவது ஸம்சயமாவது உன்னிடத்தில் பொருந்தாது. கிருஷ்ணனுடைய ப்ரியமஹிஷியான நீ எவ்விதம் இந்தப் புத்தியோடுகூடியவளாக இருக்கிறாய்? கணவன் மந்திரங்களாலாவது மூலிகைகளாலாவது தன்னை வசப்படுத்த முயல்கிறானென்று மனிஷியை அறிவனேயானல் அப்பொழுதே குடியிருக்கிற வீட்டை அடைந்திருக்கிற ஸர்ப்பத்தினிடம் நடுங்குவதுபோல அந்த ஸ்திரீயினிடமிருந்து நடுங்குவான். பயந்த புருஷனுக்கு மனவமதி ஏது? அமதியில்லாதவனுக்கு ஸுகமேது? கணவன் ஒருபொழுதும் மந்திரத்தினல் மனிஷிக்கு வசப்படமாட்டான். பகைவர்கள் பயங்கரமான வியாதிகளை உண்டுபண்ணுகிறார்கள். கொல்ல எண்ணங்கொண்டவர்கள் மூலிகாப்ரயோகங்களால் விஷத்தைக் கொடுக்கிறார்களல்லரோ? புருஷன் எவைகளை நாக்கினலோ தோலினலோ அனுபவிக்கிறானோ அவைகளில் போடப்பட்ட சூர்ணங்கள் அவனை விரைவாகக் கொன்றுவிடும். ஸம்சயமில்லை. ஸ்திரீ

---

[1] வேறுபாடம்.

களால் புருஷர்கள் உதர ரோகத்துடன் கூடியவர்களாகவும், குஷ்டரோகமுள்ளவர்களாகவும், அப்படியே கரையுள்ளவர்களாகவும், ஆண்மைத்தனமில்லாதவர்களாகவும், ஞானமில்லாதவர்களாகவும், குருடர்களாகவும், செவிடர்களாகவும் செய்யப்படுகிறார்கள். பாபஸ்திரீகளை அணுஸரிக்கின்ற அந்தப் பாபஸ்திரீகள் பர்த்தாக்களைத் தோஷங்களோடு சேரும்படி செய்கிறார்கள். ஸ்திரீயினல் பர்த்தாவுக்கு ஒருபொழுதும் எவ்விதத்தினலும் அப்ரியமான கார்யம் செய்யத்தக்கதன்று. கீர்த்தியுள்ள ஸத்தியபாமையே! நான் மகாத்மாக்களான பாண்டவர்களிடம் எந்த நடையுடனிருக்கிறேனே உண்மையான அந்த நடைமுழுமையும் என்னிடமிருந்து கேட்பாயாக.

நான், அஹங்காரத்தையும் காமக்ரோதங்களையும் எப்பொழுதும் விட்டுப் பரிசுத்தையாக இருந்துகொண்டு நித்யம் மனுஷிகளுடன் கூடின பாண்டவர்களை உபசரிக்கிறேன். பொறுமையை விட்டுச் சித்தத்தை என்னிடத்தில் நன்கு நிலைபெறச்செய்து அபிமானத்தை விட்டவளாகப் பதிகளுடைய சித்தத்தைப் பாதுகாத்துக்கொண்டு அவர்களுக்குப் பணிவிடை செய்கிறேன். கெட்ட சொல்லினின்றும், கெட்ட இடத்தில் நிற்பதினின்றும், கெட்டவர்களைப் பார்ப்பதினின்றும், கெட்டஇடத்தில் உட்கார்வதினின்றும், கெட்டவர்களோடு செல்வதினின்றும், இங்கிதத்துடன் கூடின பார்வையினின்றும் அச்சமுள்ளவளாக, ஸூர்யனுக்கும் அக்னிக்கும் சந்திரனுக்கும் ஒப்பானவர்களும், மஹாரதர்களும் பார்த்த மாத்ரத்திலேயே பகைவர்களைக் கொல்பவர்களும், உக்ரமான வீர்யமும் பிரதாபமுமுள்ளவர்களுமான பார்த்தர்களை அடைந்து சுச்ரூஷை செய்கிறேன். தேவனே மனுஷ்யனே கந்தர்வனே யௌவனமுள்ளவனே நன்றாக அலங்கரிக்கப்பட்டவனே திரவியமுள்ளவனே அழகுள்ளவனே எப்படிப்பட்டவனாக இருந்தாலும், அன்ய புருஷன் என்னல் நினைக்கப்படமாட்டான். பர்த்தா போஜனம் செய்யாமலும் ஸ்நானம் செய்யாமலும் படுக்காமலுமிருக்கும் தருணத்தில், [1] வீட்டு வேலைகளை நான் செய்துகொண்டே இருப்பேன்; படுக்கவும் மாட்டேன்; புஜிக்கவும் மாட்டேன்; ஸ்நானம் செய்யவும் மாட்டேன். விளைநிலத்தினின்றே வனத்தினின்றே கிராமத்தினின்றே வீட்டிற்கு வந்திருக்கிற பர்த்தாவை,

[1] 'எங்கள் வேலைக்காரர்கள் நீராடி உண்டு உறங்கு முன்னும்' என்பது வேறு பாடத்தின் பொருள்.

விரைந்து எழுந்திருந்து, ஆஸனத்தாலும் தீர்த்தத்தாலும் நான் உபசரித்து ஆநந்தமடையச் செய்கிறேன். பாத்திரங்களை நன்றுகச் சுத்தி செய்பவளும், ருசியுள்ள அன்னங்களைப் பக்குவம் செய்பவளும், காலத்தில் போஜனங்களைக் கொடுப்பவளும், கல்ல அடக்கமுள்ளவளும், தான்யங்களைப் பாதுகாப்பவளும், வீட்டை நன்கு மெழுகிப் பெருக்கிச் சுத்திசெய்பவளும், அவமதியாத பேச்சுள்ளவளும், கெட்ட ஸ்திரீகளை அணுஸரியாதவளும், எப்பொழுதும் ஆலஸ்யமில்லாதவளும், என்றும் அனுகூல காரியத்தைச் செய்பவளுமாயிருக்கிறேன்; பரிஹாஸமில்லாத சிரிப்பையும், அடிக்கடி தலைவாசலிலிருப்பதையும், வீட்டைச்சேர்ந்த பூந்தோட்டங்களில் நெடுங்காலமிருப்பதையும் விலக்குகிறேன்; அளவுமீறின பேச்சையும், மகிழ்ச்சியில்லாமையையும், அன்ய மனிதர்களுடைய செய்கைகளைப்பற்றின கதைகளையும், அதிகச் சிரிப்பையும், அதிக கோபத்தையும், கோபத்திற்குக் காரணத்தையும் விலக்குகிறேன். நான், எப்பொழுதும், ஸ்தியத்திலும் பாபங்களை விலக்குவதிலும் பற்றுதலுள்ளவளாக இருக்கிறேன். பர்த்தாவுக்கு எது ஹிதமில்லாததோ அது எனக்கு எவ்விதத்தாலும் ஒருபொழுதும் இஷ்டமாக இராது. பர்த்தா ஏதாவது ஒரு குடும்ப காரியத்தை உத்தேசித்துத் தேசாந்தரம் போவாரேயாகில், நான் புஷ்பங்களை அணியாதவளாகவும் (சந்தனம் முதலியவைகளைப்) பூசிக்கொள்ளாதவளாகவும் வ்ரதத்தை அனுஷ்டிப்பவளாகவுமிருக்கிறேன். எதை என் பர்த்தா பானம் செய்யமாட்டாரோ, எதை என் பர்த்தா அனுபவிக்கமாட்டாரோ, எதை என் பர்த்தா புஜிக்கமாட்டாரோ அவையெல்லாவற்றையும் நான் விலக்குகிறேன். உத்தமஸ்திரீயே! பெரியோர்களுடைய உபதேசப்படி நியமத்துடன்கூடி இருப்பவளாகவும் நன்றுக அலங்கரிக்கப்பட்டவளாகவும் கல்ல பரிசுத்தியுள்ளவளாகவும் பர்த்தாவினுடைய பிரியத்திலும் ஹிதத்திலும் பற்றுதலுள்ளவளாகவுமிருக்கிறேன். ஸத்யையே! முற்காலத்தில் என் மாமியாரால் குடும்பங்களில் எந்தத் தர்மங்கள் சொல்லப்பட்டனவோ அவைகளை எப்பொழுதும் ஆலஸ்யமில்லாதவளாக அனுஷ்டிக்கிறேன். பர்வகாலங்களில் பிணகூயிடுதல், பலியிடுதல், ஸ்ராத்த காரியங்கள், ஸ்தாலீபாகங்கள், பூஜ்யர்களுக்கு மரியாதையுடன் கூடின பூஜைகள் ஆகிய இவைகளும் இன்னும் மற்ற என்னால் அறியப்பட்டவைகளுமாகிய எல்லாவற்றையும் சோம்பலில்லாதவளாகப் பகலிலும் இரவிலும் அனுஸரிக்கிறேன். வினயங்களை

யும் நியமங்களையும் எப்பொழுதும் எல்லாவிதத்தாலும் அடைந் திருக்கிறேன். மெதுவாக இருப்பவர்களும் ஸத்தியத்தையே ஸ்வபாவமாகக் கொண்டவர்களும் ஸத்யத்தையும் தர்மங்களையும் பரிபாலனம் செய்பவர்களும் பல்லில் விஷமுள்ள ஸர்ப்பங்களைப் போலக் கோபிக்கிறவர்களுமான பதிகளை நான் உபசரிக்கிறேன். ஸ்திரீகளுக்குப் பதியை அண்டியிருத்தலென்கிற தர்மமே ஸனாதன தர்மமென்று என்னால் எண்ணப்பட்டிருக்கிறது. ஸ்திரீகளுக்கு அந்தப் பதிதான் தேவதை. அவன்தான் கதி. எவள் அந்தக் கணவனுக்கு அப்ரியத்தைச் செய்வாள்? எப்பொழுதும் கட்டுப் பட்டவளான நான் கணவர்களை மீறமாட்டேன்; அவர்களை மீறிப் புஜிக்கமாட்டேன்; அவர்களை மீறி அலங்கரித்துக்கொள்ளமாட் டேன்; மாமியாரை ஒருபொழுதும் நிந்திக்கமாட்டேன். ஸௌ பாக்கியவதீ! அவதானத்தாலும் நித்யமான சுறுசுறுப்பினாலும் பெரியோருக்குச் செய்யும் பணியினாலும் பார்த்தாக்கள் எனக்கு வசப்பட்டிருக்கிறார்கள். வீரர்களைப்பெற்றவளும் ஸத்தியத்தைப் பேசுபவளும் பூஜிக்கத்தக்கவளுமான இந்தக் குந்திக்குப் பானங்க ளாலும் வஸ்திரங்களாலும் போஜனங்களாலும் நானே பணிசெய் கிறேன். ஒருபொழுதும் இந்தக் குந்தியை வஸ்திரங்களாலும் பூஷணங்களாலும் போஜனங்களாலும் மீறினவளாக இருக்க மாட்டேன். பூமிக்கு ஒப்பானவளான அந்தக் குந்தியை மிதமிஞ் சின சொற்களால் நான் பேசமாட்டேன். யுதிஷ்டிரருடைய அரண்மனையில் நித்தியம் முதலில் எண்ணூயிரம் பிராம்மணர்கள் ஸ்வர்ணபாத்திரங்களில் புஜிப்பார்கள். எண்பதினாயிரம் ஸ்நாதகர்களும் க்ருஹஸ்தர்களும் புஜிப்பார்கள். யுதிஷ்டிரர் எவர்களை அன்னபானங்களால் போஷிக்கிறாரோ அந்த மனிதர்க ளுள் ஒவ்வொருவரும் முப்பது முப்பது வேலைக்காரிகளையுடையவர். ஊர்த்வரேதஸ்களான எந்த யதிகளுக்கு நன்முகப் பக்குவம் செய்யப்பட்ட அன்னமானது பொற்பாத்திரங்களால் பரிமாறப் படுகிறதோ அப்படிப்பட்ட யதிகள் பதினாயிரவர்கள் புஜிப்பார் கள். வேதவாதிகளான அந்த எல்லாப் பிராம்மணர்களையும் வைஶ்வதேவமானவுடன் முதலில் கொடுக்கிற அன்னத்தினாலும் பானங்களாலும் வஸ்திரங்களாலும் போஜனங்களாலும் தகுதிப் படி பூஜித்தேன். மகாத்மாவான குந்தீபுத்ரருக்கு லக்ஷம் வேலைக் காரிகள். அந்த ஸ்திரீகள் சங்கிலால் செய்யப்பட்ட தோள்வளை களை அணிந்தவர்களும் பொன்மாலைகளைக் கழுத்தில் பூண்டவர்

களும் நன்முக அலங்கரிக்கப்பட்டவர்களும் மிகச்சிறந்த மாலைகளை யும் ஆபரணங்களையும் அணிந்தவர்களும் நல்ல நிறமுள்ளவர்களும் சந்தனங்களால் பூசப்பட்ட மேனியை உடையவர்களும் மணிகளை யும் பொன்னையும் தரித்தவர்களும் ஆடலிலும் பாடலிலும் வல்ல வர்களுமாயிருந்தார்கள். அந்த எல்லா ஸ்திரீகளுடைய பெயரை யும் ரூபத்தையும் போஜனங்களையும் வஸ்திரங்களையும் செய்யப் பட்ட கார்யங்களையும் செய்யப்படாத கார்யங்களையும் நான் அறி வேன். சிறந்த புத்தியுள்ளவரான குந்தீபுத்திரருடைய லக்ஷம் வேலைக்காரிகள் பாத்திரங்களைக் கையில் எடுத்துப் பகலிலும் இர வியிலும் அதிதிகளைப் போஜனம் செய்விப்பார்கள். இந்திரப்ரஸ்தத் தில் வஸிக்கின்ற யுதிஷ்டிரருடைய ஒவ்வொரு பிரயாணத்திலும் லக்ஷம் குதிரைகளும் லக்ஷம்யானைகளும் கூடவேசென்றன. யுதிஷ் டிரமகாராஜர் பூமியைப் பரிபாலனம் செய்துகொண்டிருக்கையில், இது இவ்வாறுக இருந்தது. அந்தப்புரஸ்திரீகளும் வேலைக்காரர் களுமாகிய எல்லாருடைய எண்ணிக்கையையும் அவர்கள் நடந்து கொள்ளவேண்டிய முறையையும் நானே ஏற்படுத்துகிறேன்; (அவர்களுடைய குறைகளைக்) கேட்கவும் கேட்கிறேன். மாட் டிடையர் ஆட்டிடையர் வரையில் (எல்லாருடைய) செய்யப் பட்டதும் செய்யப்படாததுமாகிய அனைத்தையும் நான் அறி வேன். கல்யாணியே! கீர்த்தியோடு கூடியவளே! பாண்டவர்களுள் நான் ஒருத்தியே அரசருடைய வரவையும் செலவையும் சொத்து முழுமையையும் அறிவேன். சிறந்த முகமுள்ளவளே! பரத ஸ்ரேஷ்டர்களனைவரும் என்னிடத்தில் குடும்ப முழுமையையும் ஒப்பித்துத் [1] தேவதோபாஸனத்தில் பற்றுதலுள்ளவர்களாகக் கவலையற்றிருக்கிறார்கள். என்னிடத்தில்வைக்கப்பட்டதும் கெட்ட எண்ணமுள்ளவர்களால் நிர்வகிக்க முடியாததுமான அப்படிப் பட்ட பொறுப்பை நான் எல்லாஸுகத்தையும் விட்டு இரவு பகலாக நிர்வஹிக்கிறேன். நிதிகளால் நிறைந்திருக்கின்றதும் குறைக்கமுடியாததுமான வருணனுடைய ஸமுத்திரம்போன்ற தும் தர்மத்தை அனுஷ்டிப்பவர்களான பதிகளுடையதுமான குறைவற்ற பொக்கசத்தை நான் ஒருத்தியே அறிகிறேன். குரு குலத்தில் தோன்றினவர்களான பர்த்தாக்களைப் பகலிலும் இரவி லும் பசிதாகங்களைப்பாராமல் ஆராதிக்கின்ற எனக்கு இரவும் பக

---

[1] 'ப்ரியத்தை அடைய முயலுகிறார்கள்' என்பது இங்கிலிஷ் மொழி பெயர்ப்பு.

லும் ஸமமாக இருக்கின்றன. ஸத்யையே! நான் நித்யம் பார்த்தாக் களுக்குமுன் விழித்துக்கொள்ளுகிறேன். அவர்கள் படுத்துக் கொண்டபிறகு படுத்துக்கொள்ளுகிறேன். இது பார்த்தாக்களை வசப்படுத்துகிற என்னுடைய உபாயம். நான் பார்த்தாக்களை வசப் படுத்துகிற இந்தப் பெரிதான உபாயத்தைச் செய்வதற்குத் தெரிந்துகொண்டிருக்கிறேன். கெட்ட ஸ்திரீகளுடைய செய்கையை நான் செய்ய மாட்டேன்; விரும்பவும் மாட்டேன்' என்று சொன் னள். திரௌபதியினல் அப்பொழுது சொல்லப்பட்ட தர்மத் துடன் கூடின அந்த வசனத்தைக்கேட்டு, ஸத்யையானவள், தர்மத்தைச் செய்பவளான பாஞ்சாலியைக் கௌரவித்து, 'பாஞ் சாலீ! நான் உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன். யஜ்ஞஸேன னுடைய புத்திரியே! என்னுடைய குற்றத்தைப் பொறுக்கக்கட வாய். ஸகிகளுக்குப் பரிஹாஸத்துடன்கூடின ஸல்லாபமானது இஷ்டப்படி நடக்கிறதன்றே?' என்று சொன்னள்.

இருநூற்றுமுப்பத்தைந்தாவது அத்யாயம்.

த்ரௌபதீஸத்யபாமாஸம்வாதபர்வம். (தொடர்ச்சி.)

(திரௌபதியானவள் கணவனை வசப்படுத்துகிற உபாயத்தை உபதேசிக்கும் முகத்தால் பதிவ்ரதா தர்மங்களைக் கூறியது; தொடர்ச்சி.)

திரௌபதி, 'தோஷமில்லாத இந்தவழியைப் பார்த்தாவி னுடைய சித்தத்தைக் கவருதற்காக உனக்குச் சொல்லுவேன். தோழியே! இந்தவழியில் உள்ளபடி நிலைபெற்றிருந்து சக்களத்தி களிடமிருந்து பார்த்தாவை வலிந்து வசப்படுத்திக்கொள்வாய். தேவர்களோடு கூடின எல்லா உலகங்களிலும் கணவன் போன்ற இப்படிப்பட்ட தேவதை ஒன்றும் இல்லை. அந்தப்பார்த் தாவினுடைய அருளிருந்தால் ஸ்திரீகளுக்கு விரும்பியவையெல் லாம் அடையப்பட்டவைகளாகும். அவன் கோபித்துக்கொண் டால் கெடுத்துவிடுவான். அந்தப் பார்த்தாவிடமிருந்து ஸ்திரீக ளுக்குக் குழந்தைகளும் பலவிதபோகங்களும் அத்புதமானகாட்சி யுள்ள சயனங்களும் ஆஸனங்களும் வஸ்திரங்களும் புஷ்பங்களும் கந்தங்களும் ஸ்வர்க்கலோகமும் பெரும்புகழும் உண்டாகின்றன.

இவ்வுலகத்தில் ஒருகாலும் ஸுகத்தால் ஸுகம் அடையத்தக்க தாகாது. பதிவ்ரதையானவள் கஷ்டத்தால் ஸுகங்களை அடை கிறாள். அப்படிப்பட்ட நீ, நட்பினாலும் அன்பினாலும் காய்க் கிலேசத்தாலும் ஸ்நானங்களாலும் ஆஸனங்களாலும் அழகிய சிறந்த புஷ்பங்களாலும் ஸாமர்த்தியமான உபாயங்களாலும் பலவிதகந்தங் களாலும், 'இவளுக்கு நான் ப்ரியனாக இருக்கிறேன்' என்று கிருஷ்ணன் உன்னை அறிந்துகொண்டு முழுமனத்தோடும் உன்னையே வந்து அடையும்படி அவரை நீ பூஜிப்பாயாக. வாயி லில் வந்திருக்கிற பர்த்தாவினுடைய குரலைக் கேட்ட வுடன், எழுந்திருந்து வீட்டின் மத்தியில் நிற்பாயாக; கணவர் உள்ளே வந்ததைக்கண்டு விரைவுடன் ஆஸனத்தாலும் பாத தீர்த்தத்தாலும் அவரைப் பூஜிப்பாயாக. வேலைக்காரிகள் தத்தம் இருப்பிடங்களுக்கு அனுப்பப்பட்டிருப்பார்களாகில் எழுந்திருந்து எல்லாக் கார்யங்களையும் நீயே செய்யவேண்டும். ஸத்யையே! 'எல்லாவிதத்தாலும் இவள் என்னை அடைந்திருக் கிறாள்' என்று இந்த உன்னுடைய மநோதர்மத்தைக் கிருஷ்ணன் அறியட்டும். உன்னிடம் உன் கணவர் சொல்வது ரஹஸ்யமில்லாத தாயினும் அதனை நீ வெளியிடாமல் நன்கு பாதுகாக்கவேண்டும். ஏனெனில், உன்னுடைய யாராவது ஒரு சக்களத்தியானவள், வாஸுதேவரிடம் அதனைச் சொல்லக்கூடும். அதனால், அவர் உன்னிடத்தில் பிரியமில்லாதவராவார். உன்பர்த்தாவுக்கு நன்பர் களையும் அவரால் [1] அன்புபாராட்டப்படுகிறவர்களையும் அவ ருடைய நன்மையை நாடுகிறவர்களையும் பலவித உபாயங்களால் போஷிப்பாயாக. அந்தக் கிருஷ்ணனுக்கு எவர்கள் பகைவர் களோ எவர்கள் உபேக்ஷிக்கத்தக்கவர்களோ எவர்கள் அஹிதர்களோ அவர்களோடும் வஞ்சகர்களோடும் கர்வமுள்ளவர் களோடும் விலகியே இருப்பாயாக. புருஷர்களிடம் மத்ஸ் யத்தையும் அஜாக்ரதையையும் விட்டு [2] மௌனத்தைக் கைக் கொண்டு உன் உள்ளக்கருத்தை வெளியிடாமலிருப்பாயாக. உனக்குப் புத்திரர்களாக இருந்தாலும் ப்ரத்யும்னனும் ஸாம்ப னும் ஏகாந்தத்தில் ஒருபொழுதும் நெருங்கத்தக்கவர்களல் லர். பெரியகுலத்தில் பிறந்தவர்களும் பாவஸம்பந்தமில்லாத வர்களுமான பதிவ்ரதாஸ்த்ரீகளோடு உனக்கு நேசமிருக்க

---

[1] 'ரம்யாந்' என்பது மூலம்; 'அவரிடம் பற்றுள்ளவர்கள்' என்பது இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு. [2] வேறு பாடம்.

வேண்டும். குரூரர்களும் பிறரை அவமதிப்பதில் ஸாமர்த்திய முள்ளவர்களும் பெருந்தீனிக்காரர்களும் திருட்டுத்தனமுள்ளவர் களும் பகைமுதலியன மேலிட்டவர்களும் [1] சாபல்யமுள்ளவர் களும் விலக்கத்தக்கவர்கள். இது கீர்த்தியை உண்டுபண்ணக் கூடியது; பாக்கியத்தை உண்டுபண்ணக்கூடியது; எப்பொழுதும் உனக்குப் பயனைத் தருவது; பகைவர்களை நாசம்பண்ணக்கூடியது. சிறந்த புஷ்பங்களுடனும் ஆபரணங்களுடனும் சந்தனம் கஸ்தூரி முதலிய வாஸனைப் பொருள்களுடனும்கூடியவளாக நல்ல வாஸனைப் பொருள்களால் பர்த்தாவை ஆராதிப்பாயாக' என்று கூறினாள்.

இருநூற்றமுப்பத்தாறுவது அத்யாயம்.

த்ரௌபதீஸத்யபாமாஸம்வாதபர்வம். (தொடர்ச்சி.)

(ஸத்யபாமை திரௌபதிக்கு இன்சொற்கூறியதும், கிருஷ்ணன் ஸத்யபாமையுடன் தன் நகரம் சென்றதும்.)

ஜனர்த்தனர், மார்க்கண்டேயர் முதலிய பிராம்மணர்களோ டும் மகாத்மாக்களான பாண்டவர்களோடுங்கூடி அனுகூலமான கதைகளைச் சொல்லிக்கொண்டிருந்தார். பாரதரே! மதுஸூதனர், பிறகு, அவர்களோடு உள்ளபடி ஸம்பாஷணம் செய்துவிட்டு, தேரிலேறக்கருதி ஸத்யபாமையை அழைத்தார். பிறகு, ஸத்ய பாமை, அந்தச்சமயத்தில், த்ருபதராஜகுமாரியைத் தழுவிக் கொண்டு, 'க்ருஷ்ணையே! உனக்கு மனக்கவலை வேண்டாம்; வருத்தம் வேண்டாம்; உறக்கமின்மை வேண்டாம். தேவர்களுக் கொப்பான பர்த்தாக்களால் ஜயிக்கப்பட்ட பூமியை நீ அடை வாய். கருமையான கண்களுள்ளவளே! இம்மாதிரியான ஒழுக்கத் தோடும் சிறந்த லக்ஷணங்களோடும்கூடிய உன்னைப்போன்ற ஸ்திரீகள் நெடுங்காலம் துன்பத்தை அடையமாட்டார்கள். பகைவரை அழிக்கப்பெற்றதும் விரோதியில்லாததுமான இந்தப் பூமியை நீ பர்த்தாக்களோடுகூடி அவஸ்யம் அனுபவிப்பாய் என்று நான் கேட்டிருக்கிறேன். த்ருபதராஜகுமாரியே! த்ருதராஷ்டிரகுமாரர்களை வதம் செய்து பகைகளைத் தீர்த்துக்

---

[1] உத்யோகபர்வம் 174-ம் பக்கம், சாந்திபர்வம் 375-ம் பக்கம் குறிப்புக்களிற் காண்க.

கொண்டு, யுதிஷ்டிரரிடத்தில் பூமி நிலைபெற்றிருப்பதைப் பார்ப்பாய். எந்த ஸ்திரீகள், கானகம் செல்லுகின்ற உன்னைப் பார்த்து, கொழுப்பினால் மதிமயக்கமுள்ளவர்களாகி, உரக்கச் சிரித்தார்களோ அந்தக் கௌரவ ஸ்திரீகள் எண்ணம் குலைக்கப் பட்டதை நீ விரைவில் பார்ப்பாய். க்ருஷ்ணையே! துக்கத் தோடுகூடியவளான உனக்கு எவர்களால் அப்ரியமான கார்யம் செய்யப்பட்டதோ அவர்களனைவரையும் யமலோகத்திற்குப் புறப் பட்டவர்களாக அறிந்துகொள். உன்னுடைய குமாரனை பிரதி விந்தியன், அப்படிப்பட்ட ஸுதஸோமன், அர்ஜுனனுடைய புதல்வனை ச்ருதகர்மா, நகுலனுடைய குமாரனை சதானீகன், ஸஹதேவனிடத்தினின்று உனக்குப் பிறந்த ச்ருதஸேனன் ஆகிய உன் குமாரர்களனைவரும், சூரமுள்ளவர்களாகவும் வீரர்களாக வும் அஸ்திரங்களில் தேர்ச்சி அடைந்தவர்களாகவும் இருக்கி றார்கள். இவர்கள் அபிமன்யுவைப்போல ப்ரீதியுள்ளவர்களாகவும் த்வாரகையில் அதிகப் பற்றுதலுள்ளவர்களாகவுமிருக்கிறார் கள். இந்தப் புத்திரர்களிடம் உன்னைப்போல ஸுபத்ராதேவி யானவள் எல்லாவித்தாலும் அன்புள்ளவளாக இருக்கிறாள். எதிரில்லாத ஸுபத்ரையானவள் உன் விஷயத்தில் ப்ரீதியுடைய வளாக இருக்கிறாள்; அந்த உன்னுடைய புத்திரர்கள்விஷயத்தி லும் மனவருத்தமில்லாதவளாக இருக்கிறாள்; அந்த உன் புத்திரர் களுடைய துக்கத்தால் துக்கமுள்ளவளாகவும், அப்படியே ஸுகத்தால் ஸுகமுள்ளவளாகவும் எல்லாவித்தாலும் உன் குமாரர்களைப் ப்ரீதியுடன் பாதுகாக்கிறாள். அப்படியே, ப்ரத்யும்ன னுடைய தாயான ருக்மிணியும் நடந்துகொள்ளுகிறாள். கேசவர், பானு முதலிய புத்திரர்களுடன் இவர்களை முக்யமாகப் பாதுகாக்கிறார். இந்தப் பிள்ளைகளுக்குப் போஜனவிஷயத்திலும் வஸ்த்ரவிஷயத்திலும் நித்யம் என் மாமனார் ஊக்கமுள்ளவராக இருக்கிறார். பலராமரை முதன்மையாகக்கொண்ட அந்தகர்களும் வ்ருஷ்ணிகளுமாகிய அனைவரும் உன் குமாரர்களை அன்புடன் அடைகிறார்கள். பெண்ணே! அவர்களுக்கும் ப்ரத்யும்னனுக்கும் (உன் பிள்ளைகளிடம்) நேசமானது ஸமானமாக இருக்கிறதன்றோ?" என்றாள்; இவ்வண்ணம் ப்ரியமாயும் ஸத்யமாயும் மனத்துக் கினியதாயும் உள்ளக்கருத்தைப் பின்பற்றியதாயுமுள்ள வசனத்தை உரைத்து வாஸுதேவருடைய ரதத்தை நோக்கிப் பிரயாணத் தில் மனம் வைத்தாள். கிருஷ்ணனுடைய மஹிஷியான ஸத்ய

பாமையானவள் அந்த த்ரௌபதியைப் பிரதக்ஷிணம் செய்தாள். பிறகு, அழகிய ஸத்யபாமை சௌரியின் தேரிலேறினாள். பகைவர் கூட்டத் தவிக்கச்செய்பவரும் யாதவர்களுள் மிகச்சிறந்தவருமான கிருஷ்ணன் புன்னகை செய்து த்ரௌபதியை இன்சொற்களால் ஸமாதானம் செய்து அவ்விடமிருந்து திரும்பி மேகமுள்ள குதிரைகளால் த்வாரகைக்குப் பிரயாணமானர்" என்று கூறினர்.

த்ரௌபதீஸத்யபாமாஸம்வாதபர்வம் முற்றிற்று.

இருநூற்றுமுப்பத்தேழாவது அத்யாயம்.

[1]கோஷயாத்ராபர்வம்.

(ஒரு பிராம்மணனிடத்தினின்று பாண்டவர்களுடைய வரலாற்றைக் கேட்ட திருதராஷ்டிரன் அவர்களைப்பற்றித் துக்கப்பட்டதும், அவர்களுடைய பராக்கிரமத்தை நினைத்துத் தன் புத்திரர் களுக்கு வதம் நிச்சயமென்றெண்ணி அவர்களைப் பற்றித் துக்கித்ததும்.)

ஜனமேஜயர், "இவ்வாறு வனத்திலிருப்பவர்களும், புருஷ ச்ரேஷ்டர்களும், குளிராலும் வெப்பத்திலுலும் காற்றிலுலும் வெய்யிலாலும் துன்புறுத்தப்பட்ட அங்கங்களையுடையவர்களு மான பார்த்தர்கள் அந்த த்வைதவனத்திலுள்ள குளத்தையும் புண்யமான காட்டையும் அடைந்து அதற்குமேல் என்ன செய் தார்கள்?" என்று வினவினர்.

வைசம்பாயனர், "பிறகு, பாண்டுபுத்திரர்கள் அந்தக் குளத்தை அடைந்து ஜனக்கூட்டத்தை விட்டுவிட்டு இஷ்டமான கார்யங்களைச் செய்துகொண்டு அப்பொழுது அழகிய காடுகளி லும் மலைகளிலும் நதீதீரங்களிலும் ஸஞ்சரித்தார்கள். அப்படி வனத்தில் வஸிப்பவர்களான அந்தச் சிறந்த வீரர்களை வேதாத் தியயனம் செய்தவர்களும் தவத்தைப் பொருளாகக்கொண்டவர் களும் பழமையாக இருப்பவர்களுமான வேதார்த்தங்களை நன்கு அறிந்தவர்கள் வந்தடைந்தார்கள். பிறகு, புருஷச்ரேஷ்டர்களான பாண்டவர்கள் அவர்களைப் பூஜித்தார்கள். பிறகு, ஒரு ஸமயத் தில், உலகத்தில் கதைகளில் ஸமர்த்தனான ஒரு பிராம்மணன்,

---

[1] அரசன் பசுமந்தைகளைக் காணச் செல்லுதல்.

பூமியில் குருவம்சத்தில் பிறந்தவர்களான பாண்டவர்களை அடைந்தான். அவன், அவர்களோடு சேர்ந்திருந்துவிட்டுத் தற் செயலாக விசித்திரவீர்யனுடைய குமாரனை திருதராஷ்டிரமகாராஜனை அடைந்தான். பிறகு, உட்கார்ந்திருப்பவனும் மரியாதை செய்யப்பட்டவனுமான பிராம்மணன், கௌரவர்களுள் மிகச்சிறந்தவனும் வயதுசென்றவனுமான திருதராஷ்டிரமகாராஜனால் ஏவப்பட்டவனாகி, தர்மன் வாயு இந்திரன் இவர்களுடைய புத்திரர்களான யுதிஷ்டிரரும் பீமசேனனும் அர்ஜுனனும் நகுல ஸஹதேவர்களும், காற்றினாலும் வெய்யிலாலும் வருத்தப்பட்ட அங்கங்களுடன் மெலிந்து உக்கிரமான துக்கத்தினுடைய வாயில் விழுந்திருப்பதாகவும், வீரர்களை நாதர்களாகக்கொண்ட திரௌபதி நாதனற்றவள்போலிருந்துகொண்டு பலவித கிலேசங்களை அனுபவிப்பதாகவும் சொன்னான். பிறகு, திருதராஷ்டிரமகாராஜன், அவனுடைய சொற்களைக்கேட்டு, இரக்கத்தினால் தாபமடைந்தவனும், அப்படிப்பட்ட ராஜபுத்திரர்களும் ராஜபௌத்திரர்களும் காட்டில் அவ்விதமான துக்கநிலையை அடைந்திருக்கிறார்களென்பதை எண்ணி மனத்தில் தைன்யம் மேலிட்டவனும், அப்பொழுது உஷ்ணமான பெருமூச்சுக் காற்றினால் தாக்கப்பட்டவனுமாகி, மனத்தில் தைர்யத்தை அரிதில் அடைந்து, அவை அனைத்துக்கும் தானே காரணமென்றெண்ணிப் பின்வருமாறு புலம்பலானான்.

'உண்மைபேசுகிறவனும் சுத்தனும் புகழத்தக்க நடையுள்ளவனும் என்னுடைய புத்திரர்களுள் மிகச்சிறந்தவனும் அஜாதசத்ருவும் முற்காலத்தில் ஹம்ஸதூளிகாசயனத்தில் படுத்துறங்கினவனுமான தர்மராஜன் எவ்வாறு தரையில் படுக்கிறானே? இந்திரனுக்கொப்பானவனும் உறங்குகின்றவனுமான எந்தத் தர்மராஜன் அதிகாலையில் துதிக்கின்ற மாகதர்களாலும் ஸூதபுத்திரர்களாலும் நித்யம் எழுப்பப்படுவானே அவன் இப்பொழுது நிச்சயமாகத் தரையில்படுத்திருந்து விடியற்காலத்தில் பக்ஷிகளுடைய கூட்டங்களால் எழுப்பப்படுகிறான். காற்றினாலும் வெய்யிலாலும் சரீரம் இளைத்தவனும், கோபத்தினால் நிரம்பிய சித்தமுள்ளவனும், அப்படிப்பட்ட கஷ்டங்களில் பழக்கமில்லாத மேனியுடையவனுமான பீமசேனன் த்ரௌபதிக்கெதிரில் [1] எவ்விதம் தரையில் படுக்கிறானே? அப்படியே மென்மைத்

[1] பொருள் இரட்டித்தலால் ஒரு சொல் விடப்பட்டது.

தன்மையுள்ளவனும் நல்லமனமுள்ளவனும் அரசனுன தர்மநந்தன னுடைய வசத்திலிருப்பவனும் மிக்க துன்பத்தை அடைந்தவை போன்ற எல்லா அங்கங்களையுமுடையவனுமான அர்ஜுனன் கௌரவர்கள்மீது உள்ள கோபத்தினுல் இராக்காலங்களில் நிச்சய மாகப் படுத்துறங்கமாட்டான். உக்கிரமான தேஜஸுள்ள அர்ஜு னன், ஸுகத்தால்விடுபட்டிருக்கிற நகுலஸஹதேவர்களையும் த்ரௌ பதியையும் யுதிஷ்டிரரையும் பீமனையும் பார்த்து, ஸர்ப்பம்போலப் பெருமூச்சு விட்டுக்கொண்டு கோபத்தினுல் நிச்சயமாக இராக் காலங்களில் படுத்து உறங்கமாட்டான். அப்படியே, ஸுகத்துக்கே தகுந்தவர்களும், ஸுகத்தை இழந்தவர்களும், அழகு நிரம் பினவர்களும், தேவலோகத்திலுள்ள தேவர்கள்போன்றவர்களும், விழித்துக்கொண்டேயிருப்பவர்களும், மனத்திற்கு ஆறுதலில்லா தவர்களும், கோபத்தாலும் ஸத்தியத்தாலும் தடுக்கப்படுகின் றவர்களுமான நகுல ஸஹதேவர்களைப்பார்த்து நிச்சயமாகப் படுத் துறங்கமாட்டான். பலத்தினுல் வாயுவைப்போன்றவனும் சிறந்த பலமுள்ளவனுமான வாயுகுமாரனுன பீமன், ஜ்யேஷ்ட னுன யுதிஷ்டிரனுல் தர்ம பாசத்தால் கட்டப்பட்டவனுகப் பெரு மூச்சு விட்டுக்கொண்டு நிச்சயமாகக் கௌரவர்கள்மீதுள்ள கோபத்தை அடக்கிக்கொண்டிருப்பான். யுத்தத்தில் மற்றவர் களைக்காட்டிலும் வீர்யத்தினுல் மேற்பட்டவனுன அந்தப் பீம ஸேனனும், பூமியில் புரளுகின்றவனும் என் பிள்ளைகளுடையவதத் தை விரும்புகின்றவனும் ஸத்தியத்தாலும் தர்மத்தாலும் தடுக் கப்படுகின்றவனுமாகிக் காலத்தை எதிர்பார்த்திருக்கிறன். அஜாதசத்துருவானவன் கபடமான சூதாட்டத்தால் ஜயிக்கப் பட்டபோது துச்சாஸனன் சொல்லிய கடுஞ்சொற்கள் விருகோ தரனுடைய அங்கத்தில் பிரவேசித்துக் காட்டுத்தீயானது விறகு களை எரிப்பதுபோல் எரிக்கின்றன. தர்மபுத்திரன் தீங்கு நினைக்க மாட்டான். தனஞ்சயனும் அவனை அனுசரிப்பான். பீமனுடைய கோபமானது காற்றினுல் நெருப்பு மூள்வதுபோல அரண்ய வாஸத்தினுல் மூள்கிறது. வீரனுன அந்தப் பீமன் அந்தக் கோபத்தி னுல் பிளக்கப்படுகின்றவனுகிக் கையினுல் கையை முறுக்கிப் பிசை ந்துகொண்டு என் புத்திரனுடைய இந்தச் சேனையை எரிக்கிறவன் போல உஷ்ணமாகவும் மிக்க கோரமாகவும் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறன். கோபமுள்ளவர்களும் அந்தகனுக்கும் காலனுக்கும் ஒப்பானவர்களுமான அர்ஜுனனும், பீமனும், வஜ்

ராயுதம்போலப் பிரகாசிக்கின்ற அம்புகளை இறைத்துக்கொண்டு யுத்தத்தில் பகைவர்களுடைய படையை மிச்சம் வைக்கமாட்டார்கள். துர்யோதனனும் சகுனியும் கர்ணனும் மிக்க மந்தபுத்தியுள்ள வனை துச்சாஸனனும் கொம்புநுனியிலிருக்கின்ற தேனைப்பார்க்கிறார்கள்; கீழே பீமஸேனன் தனஞ்சயனென்கிற படுகுழியிருப்பதைப் பார்க்கவில்லை. மனிதன் நல்ல கார்யத்தையோ கெட்ட கார்யத்தையோ செய்து பரிபாககாலத்தில் பயனை எதிர்பார்ப்பனேயாகில், அவன் தன்வசமில்லாமலே அந்தப்பயனோடு சேர்க்கப்படுகிறான்; மனிதனுக்கு அந்தப் பயனிலிருந்து எப்படி விடுதலுண்டாகும்? நிலமானது நன்றாக உழப்பட்டும் விதைவிதைக்கப்பட்டும் பர்வ காலத்தில் தக்கபடி மழை பொழிந்துமிருக்க, பயிரிட்டவனுக்குப் பலனானது கைகூடாமல் போமாகில் தெய்வத்தைத் தவிர வேறு யாது காரணமிருக்கிறது? கெட்டகாரியத்தைச் செய்தவனும் சூதாட்டத்தில் வல்லவனுமான சகுனியிலும், நல்ல கார்யங்களில் சென்றவனை தர்மபுத்திரனிலும், கெட்டபிள்ளைகளுக்கு வசப்பட்டு அவர்களை அனுஸரித்த என்னிலும் கௌரவர்களுக்கு இது காசகாலமாக எற்படுத்தப்பட்டது. அக்கினியானது தூண்டப்படாமலிருந்தும் நிச்சயமாகத் தானாகவே எரிந்து தணிகிறது. கர்ப்பிணியானவள் நிச்சயம் பிரஸவிப்பாள். பகலின் தொடக்கத்தில் நிச்சயமாக இரவானது அழிந்துவிடுகிறது. அப்படியே, இரவின் தொடக்கத்திலும் பகல் நாசமடைகிறது. [1] (மனிதர்களுக்கு விவேகமிருக்குமானால்) நம்போன்றவர்கள் எதற்காக அநீதியினாலாவது பொருளைத் தேடுகிறார்கள்? மற்ற அரசர்களும் எதற்காகப் பொருளைத் தேடுகிறார்கள்? தேடிய பொருளை மனிதர்கள் (ஸாதுக்களாயிருந்தாலும்) எவ்விதத்தாலும் அறம் இன்பம் முதலியவைகளுக்காக ஏன் செலவிடுவதில்லை? ஆதலால், மனிதர்களுக்குப் பொருளைத் தேடுவதிலும் பாதுகாப்பதிலும் விலக்கமுடியாதபடி இயற்கையாகவே புத்தி அமைந்திருக்கிறது. 'பொருளைத் தேடாவிட்டால் அதனால் ஸாதிக்கத்தக்க விவாகமுதலியவற்றுக்குரிய காலத்தையடைந்தால், தனமில்லாதவனை எனக்குப் பொருளால் ஸாதிக்கத்தக்க கலியாணம் முதலியன எப்படி நடக்கும்? அந்தப் பொருளானது எந்த உபாயத்தால் கிடைக்கும்?' என்கிற வியாகுலமானது மனத்தில் உண்டாகும். மனிதனுல், பொருளானது, 'எவ்வாறு பிரிவுபடாமலிருக்

[1] வேறு பாடம்.

கும்? எவ்வாறு அழியாமலிருக்கும்? எவ்வாறு சிறிது சிறிதாகச் செலவாகாமலிருக்கும்?" என்று பாதுகாக்கப்படவேண்டும்; பாதுகாக்கப்படாமற்போனால் நாறு துண்டாகச் சிதறிப்போய்விடும். உலகத்தில் செய்தவினையானது பயன் கொடாமல் அழிவதில்லை; நிச்சயம். தனஞ்சயன் காட்டிலிருந்தும் இந்திரலோகம் சென்றான்; நான்குவிதமான திவ்யாஸ்திரங்களையும் அறிந்து மீண்டும் இவ்வுலகத்தை அடைந்துவிட்டான். இவனுடைய வீர்யத்தைப் பாருங்கள், காலத்தால் அடிக்கப்பட்டவர்களும் மரிக்கப்போகிறவர்களுமான கௌரவர்களைப் பார்க்கிற (அர்ஜுனனைத்தவிர) வேறு எந்தமனிதன் சரீரத்தோடுகூடவே ஸ்வர்க்கத்தை அடைந்து மறுபடியும் திரும்பி வருவதற்கு விரும்புவான்? விற்பிடித்தவனே இருகைகளாலும் அம்பெய்பவனுகிய அர்ஜுனன்; வில்லோ பயங்கரமான வேகத்துடன்கூடின அப்படிப்பட்ட காண்டீவம்; அஸ்திரங்களோ அப்படிப்பட்ட மஹிமையுள்ள திவ்யாஸ்திரங்கள். அந்த மூன்றினுடைய தேஜஸையும் இவ்வுலகில் எவன் தாங்குவான்?" என்று சொன்னன். அரசனுடைய அந்த வசனத்தைக் கேட்டு, பிறகு, சகுனி ஏகாந்தத்தில் துர்யோதனனுக்குத் தெரிவித்ததுடன் கர்ணனையும் அடைந்து அவை அனைத்தையும் தெரிவித்தான். அல்பபுத்தியுள்ள அந்தக் கர்ணனும் ஸந்தோஷமில்லாதவனனன்.

இறுநூற்றுமுப்பத்தெட்டாவது அத்யாயம்.

கோஷயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(தன் செல்வத்தைதக் காட்டிப் பாண்டவர்களுக்கு மனவருத்தத்தை உண்டுபண்ணுவதற்காக த்வைத வனத்திற்குப்போதும்படி கர்ணனும் சகுனியும் துர்யோதனனே ஏவியது.)

திருதராஷ்டிரனுடைய அந்த வாக்கியத்தைக் கேட்டு, சகுனி, அப்பொழுது கர்ணனோடுகூடியவனுகித் தக்கஸமயத்தில் துரியோதனனைப் பார்த்து, 'பரதகுலத்திற்பிறந்தவனே! உன் வீர்யத்தினால் வீரர்களான பாண்டவர்களைக் காட்டிற்கு ஓட்டிவிட்டமையால், ஸ்வர்க்கத்தை இந்திரன் அனுபவிப்பதுபோல, நீ ஒருவனுக இந்தப் பூமியை அனுபவிப்பாயாக. அரசனே! ஸமுத்திரங்களால் சூழப்பட்டதும் மலைகளும் காடுகளுமுள்ளதும் ஸ்தாவரங்

களோடும் ஜங்கமங்களோடும்கூடியதுமான பூமியானது இப் பொழுது உனக்கு முழுமையும் வசப்பட்டதாயிற்று. அரசனே! கீழ் நாட்டிலும் தென்னாட்டிலும் மேல்நாட்டிலும் வடநாட்டிலுமுள்ள எல்லா அரசர்களும் உனக்குக் கப்பங் கொடுப்பவர்களாகச் செய்யப் பட்டார்கள். அரசனே! முற்காலத்தில் எந்த லக்ஷ்மியானவள் பிரகாசிப்பவள்போலப் பாண்டவர்களை அடைந்திருந்தாளோ அந்த லக்ஷ்மியானவள் இப்பொழுது உன்னால் பிராதாக்களோடு அடையப் பட்டாள். அரசனே! மிக்க தேஜஸ்வியமைந்தவனே! இந்திர ப்ரஸ்தத்தை அடைந்த யுதிஷ்டிரனிடத்தில் பிரகாசித்துக்கொண் டிருந்த எந்த லக்ஷ்மியை நாம் நெடுங்காலம் துக்கத்தால் வாடின வர்களாகிப் பார்த்தோமோ அப்படிப்பட்ட இந்த லக்ஷ்மியானவள், உன்னால் புத்திபலத்தினால் அப்படிப்பட்ட அரசனிடமிருந்து கவரப்பட்டு, ஜ்வலிக்கிறவள்போலக் காணப்படுகிறாள். ராஜேந் திரனே! பகைவீரர்களைக்கொல்பவனே! அப்படியே, அரசர்கள் அனைவரும், 'நாங்கள் எதைச் செய்யக்கடவோம்?' என்று சொல் லிக்கொண்டு உன் கட்டளையில் நிலைபெற்றிருக்கிறார்கள். அர சனே! அப்படிப்பட்ட நாங்களும் உனக்கு வசப்பட்டிருக்கிறோம். கடலால் சூழப்பட்டதும், மலைகளோடும் வனங்களோடுங்கூடியதும், கிராமங்களும் நகரங்களுமுள்ளதும், சுரங்கங்களோடுகூடியதும், பலவித வனப்ரதேசங்களுள்ளதும், பட்டணங்களால் விளங்குகின் றதும், [1] பிரகாசிக்கின்றதுமான இந்தப் பூமியும் உன் கட்டளையில் நிலைபெற்றிருக்கின்றது. அரசனே! நக்ஷத்திரங்களுக்கு அரசனை சந்திரன்போலப் பிராம்மணர்களால் மகிழ்விக்கப்படுகின்றவனாகிப் பிரகாசிக்கிறாய். ஸ்வர்க்கத்தில் தேவர்களுள் ஸூர்யன் பிரகாசிப் பதுபோலப் பராக்ரமத்தால் நீ பிரகாசிக்கிறாய். அரசனே! ருத்ர் களாலே சூழப்பட்ட யமன்போலவும், [2] மருத்துக்களால் சூழப்பட்ட இந்திரன்போலவும், தேவர்களால் சூழப்பட்ட நீ நக்ஷத்திரங் களினிடையில் சந்திரன்போலப் பிரகாசிக்கிறாய். எவர்களால் உன்னுடைய ஆணையானது ஏற்றுக்கொள்ளப்படவில்லையோ, எவர்கள் உன்னுடைய ஆணையில் கட்டுப்பட்டிருக்கவில்லையோ அந்தப்பாண்டவர்களை ஸம்பத்தை இழந்தவர்களாகவும் வனவாஸி களாகவும் பார்க்கிறோம். மஹாராஜனே! பாண்டவர்கள் வன வாஸிகளான பிராம்மணர்களோடுகூட த்வைதவனத்திலுள்ள

[1] அதிகபாடமான அரைஸ்லோகம் விடப்பட்டது.

[2] 'மருத்பி:' என்பது மூலம்; 'தேவர்களால்' என்றும் கொள்ளலாம்.

தடாகத்தினருகில் வஸித்துக்கொண்டிருக்கிறார்களென்பது கேட்கப் படுகிறதன்றே? மகாராஜனே! அப்படிப்பட்ட நீ சிறந்த ஸம்பத் தோடுகூடியவனுகத் தேஜஸினல் ஸூர்யன்போலப் பாண்டு புத்திரர்களை ஸந்தாபத்தை அடையும்படி செய்துகொண்டு த்வைத வனம் போவாயாக. அரசனே! இராஜ்யத்தில் நிலைபெற்றவனும் செழிப்புள்ளவனும் பரிபூர்ணமான தனங்களோடுகூடினவனு மான நீ, ராஜ்யத்தினின்று நழுவினவர்களும் செழிப்பில்லாதவர் களும் ஸம்பத்தில்லாதவர்களுமான பாண்டுபுத்திரர்களைப் பார்ப்பா யாக. பாண்டவர்கள் மகிமைதங்கிய வம்சத்திலுதித்தவனும் பெரிதான மங்களத்தில் நிலைபெற்றிருப்பவனுமான உன்னை நகுஷ னுடைய புதல்வனை யயாதியைப்போலப் பார்க்கட்டும். பிரஜை களுக்கு அதிபதியே! பௌருஷங்களால் பிரகாசிக்கின்ற எந்த ஸம்பத்தை நண்பர்களும் பகைவர்களும் பார்க்கிறார்களோ அந்த ஸம்பத்தே சிறப்புள்ளதாகிறது. மலையின்மீதிருப்பவன் தரையி லிருப்பவர்களைப் பார்ப்பதுபோல நல்ல நிலைமையிலிருக்கிற எந்த மனிதன் கெட்ட நிலைமையிலிருக்கிற பகைவர்களைப் பார்க்கிறானே அவனுக்கு அதைக்காட்டிலும் சிறந்த ஸுகமேது? அரசர் களுள் சிறந்தவனே! மனிதன் பகைவர்களுடைய கஷ்டத் தைப் பார்ப்பதனல் எந்த ப்ரீதியை அடைகிறானே அந்த ப்ரீதி யைப் புத்திரலாபத்தாலும் தனலாபத்தாலும் ராஜ்யலாபத்தாலும் அடைகிறனில்லை. காய்யஸித்தியைப் பெற்றிருக்கிற எந்த மனிதன் மாவுரியையும் மான்தோலையுமுடுத்தவனும் ஆச்ரமத்திலிருப் பவனுமான தனஞ்சயனைப் பார்ப்பனே அவனுக்கு என்ன ஸுகம் உண்டாகாது? நல்ல வஸ்திரங்களைத் தரித்தவர்களான உன் னுடைய பார்யைகள், மாவுரியையும் மான்தோலையுமுடுத்தவளும் துக்கமுள்ளவளுமான கிருஷ்ணையைப் பார்க்கட்டும். அவளும் (உயிரில்) வெறுப்பை அடையட்டும். ஜனங்களுக்கு அதிபனே! இப்பொழுது, உன் மனுஷ்யகளுடைய ஜ்வலிக்கின்ற செல்வத் தைப் பார்த்து அப்படியே தன்னையும் செல்வத்தினின்று நழுவி யிருக்கிற ஜீவனத்தையும் விசேஷமாக நிந்தித்துக்கொள்ளட்டும். நன்முக அலங்கரிக்கப்பட்டிருக்கிற உன்னுடைய பார்யைகளைப் பார்த்து எப்படிப்பட்ட மனவருத்தமுண்டாகுமோ அப்படிப் பட்ட மனவருத்தமானது அவளுக்கு ஸபைநடுவில் துகிலுரிந்த பொழுதும் உண்டாயிராது' என்று சொன்னன். ஜனமேஜயரே! கர்ணனும் சகுனியும் அரசனுன துர்யோதனனைப் பார்த்து

இவ்வண்ணமுரைத்துப் பேச்சு முடிந்தபின் இருவரும் பேசாமலிருந்தார்கள்.

இருநூற்றமுப்பத்தொன்பதாவது அத்யாயம்.

கோஷயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(கர்ணன், சகுனி முதலியவர்கள் த்வைதவனஞ் செல்லும் விஷயத்தில் கோஷயாத்ரையை உபாயமாக நிச்சயித்தது.)

கர்ணனுடைய வசனத்தைக் கேட்டு அரசனை துரியோதனன் ஸந்தோஷமுள்ளவனாகி மீண்டும் தைன்யமுள்ளவனாக ராதாபுத்திரனை கர்ணனைப் பார்த்து, 'கர்ண! நீ சொல்லுகிறதெல்லாம் என் மனத்திலிருக்கிறது. ஆனால், எவ்விடத்தில் பாண்டவர்கள் வஸிக்கிறார்களோ அவ்விடம் போவதற்குப் பிதாவினுடைய அனுமதி எனக்குக் கிடைக்காது. அரசரான திருதராஷ்டிரர் அந்த வீரர்களைப்பற்றிப் புலம்புகிறார்; அவர்களைத் தவத்தினால் நம்மைவிட மேற்பட்டவர்களென்றும் நினைக்கிறார். அல்லது, அரசர் நம்முடைய விருப்பத்தை அறிந்திருக்கக்கூடும். வருங் காலத்தில் சேரக்கூடிய இந்த அனர்த்தத்தை விலக்க எண்ணி எனக்கு அனுமதி கொடுக்கக் கூடாதவராயிருக்கிறார். வனத்திலிருக்கின்ற பகைவர்களான அந்தப் பாண்டவர்களுக்குத் துன்பத்தை உண்டுபண்ணுவதைத் தவிர வேறு ஒரு பிரயோஜனமும் த்வைதவனத்திலில்லையன்றோ? சூதாடுகிற சமயம் வந்தவுடன், விதுரர் என்னையும் உன்னையும் சகுனியையும் பார்த்து அப் பொழுது சொல்லிய வசனத்தை நீ அறிந்திருக்கிறாயன்றோ? அந்த எல்லா வாக்கியங்களையும் வேறான புலம்பலையும் நன்றாக ஆலோசித்தும் த்வைதவனத்தைக் குறித்துச் செல்வதற்கோ செல்லாமலிருப்பதற்கோ நிச்சயத்தை[1] நான் அடையவில்லை. அரண்யத்தில் துன்பப்படுகிறவர்களும் திரௌபதியுடனிருப்பவர்களுமான பீமார்ஜுனர்களை நான் பார்ப்பேனென்பதில் எனக்கும் அதிகமான ஸந்தோஷமுண்டு. மரவுரியையும் தோலையும் உடுத்துக்கொண்டிருக்கிற பாண்டுபுத்திரர்களைப் பார்த்தால் எவ்விதமான ப்ரீதியுண்டாகுமோ அவ்விதமான ப்ரீதியை இந்தப் பூமியை அடைந்து

[1] வேறுபாடம்.

கூட நான் அடையமாட்டேன். கர்ண! வனத்தில் காஷாயதனை உடுத்தவளும் த்ருபதனுடைய குமாரியுமான த்ரௌபதியை நான் பார்ப்பேனென்பதைக் காட்டிலும் மேலானது என்ன இருக்கிறது? தர்மராஜனும், பாண்டுநந்தனனை பீமஸேன னும், நிகரற்ற ராஜ்ய லக்ஷ்மியோடு சேர்ந்திருக்கின்ற என் னைப் பார்ப்பார்களாகில் அப்பொழுதுதான் எனக்கு உயிர் உண்டாகும். நாம் அந்த வனத்திற்குச் செல்லக்கூடியதும் நான் வனத்திற்குச் செல்லும்படி அரசர் எனக்கு அனுமதி கொடுக்கக்கூடியதுமான உபாயத்தை நான் காணவில்லை. எந்த உபாயத்தால் அந்த வனத்திற்குச் செல்லுவோமோ அந்த உபா யத்தைச் சகுனியோடும் அப்படியே துச்சாஸனனோடும் கூடி ஸாமர்த்தியமாக ஆராயக்கடவாய். நானும் பிரயாணத்துக்கோ இங்கேயே இருப்பதற்கோ உன்னை அனுஸரிக்கிறேன். அரசரான திருதராஷ்டிரரிடம் அதிகாலையிலேயே செல்வேன். நானும் கௌர வர்களுள் சிறந்தவரான பீஷ்மரும் அந்த ராஜஸபையில் இருக்கும் பொழுது உன்னால் காணப்பட்ட உபாயத்தைச் சகுனியோடு சேர்ந்து சொல்வாயாக. அதற்குமேல், நான், பீஷ்மர் திருதராஷ் டிரர் இவர்களுடைய அபிப்ராயத்தைக் கேட்டுப் பிதாமஹரான பீஷ்மரை நயமாக வேண்டிக்கொண்டு வனப்பிரயாணத்தைக் குறித்து முயற்சியைச் செய்வேன்' என்று சொன்னான். 'அப் படியே ஆகட்டும்' என்று சொல்லிவிட்டு அவர்களெல்லாரும் தத்தம் வீடுகளைக்குறித்துச் சென்றார்கள்.

இரவு விடிந்தவுடன், கர்ணன் துர்யோதனராஜனை வந்தடைந் தான். பிறகு, கர்ணன், துரியோதனனைப் பார்த்து உரக்கச் சிரித்துக் கொண்டு, 'அரசனே! இந்த உபாயம் நன்கு கண்டறியப்பட்டது. அதை நீ தெரிந்துகொள். வேந்தே! த்வைதவனத்தில் எல்லா இடைச்சேரிகளும் உன்னை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றன. கோஷயாத்திரை என்கிற வியாஜத்தினால் த்வைதவனத்திற்குச் செல்வோம். ஸம்சயமில்லை. பிரஜைகளுக்கு நாதனே! எப் பொழுதுமே அரசர்களுக்குக் கோஷயாத்திரை செல்வது தகுதி யன்றோ? அரசனே! இவ்வண்ணம் நீ சொல்வாயாகில் பிதா உனக்கு த்வைதவனம் செல்வதற்கு அனுமதி கொடுப்பார்' என்று சொன்னான். அவ்வாறு கோஷயாத்திரை விஷயமாக நிச்சயத்தை இருவரும் பேசிக்கொண்டிருக்கையில், காந்தாரதேசாதிபதி யான சகுனி, சிரித்துக்கொண்டு, 'துரியோதன! த்வைதவனப்

பிரயாணத்தின்பொருட்டு இந்த உபாயத்தைக் குற்றமற்றதென்று நான் காண்கிறேன். அரசர் நமக்கு அனுமதி கொடுப்பார். மேலும், அவரே நம்மைப் போகும்படி ஏவுவார். அரசனே! த்வைதவனத்தில் எல்லாப் பசுக்கூட்டங்களையும் பாதுகாக்கின்ற இடையர்களனைவரும் உன்னை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். கோஷயாத்திரை என்கிற வியாஜத்தினால் த்வைதவனத்திலுள்ள தடாகத்தினருகில் செல்வோம்' என்று சொன்னான். பிறகு, அவர்களனைவரும் உரக்கச் சிரித்துக்கொண்டு ஒருவருக்கொருவர் கைகொடுத்துக்கொண்டார்கள். அதையே தக்கதென்று நிச்சயித்து எல்லாரும் ஒன்றுசேர்ந்து திருதராஷ்டிரனைக் கண்டார்கள்.

இருநூற்றுநாற்பதாவது அத்யாயம்.

கோஷயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(துரியோதனன் கோஷயாத்திரை என்கிற வியாஜத்தினால் தம்பிமார் முதலியவர்களோடு த்வைதவனத்துக்குச் சென்றது.)

ஜனமேஜயரே! பிறகு, எல்லோரும் திருதராஷ்டிரனைக் கண்டார்கள். பாரதரே! பிறகு, [1] அரசனுடைய ஸுகத்தைக்கேட்டு அரசனும் க்ஷேமத்தை விசாரிக்கப்பட்டார்கள். [1]பிறகு, அவர்களால் முன் ஏவப்பட்டிருக்கிற [2] ஸங்கவன் என்கிற இடையன் அப்பொழுது த்ருதராஷ்டிரனிடத்தில் பசுக்கள் ஸமீபத்தில் வந்திருப்பதாகத் தெரிவித்தான். அரசரே! பிறகு, கர்ணனும் சகுனியும், அரசர்களால் சிறந்தவனும் ஜனங்களுக்கு அதிபதியுமான த்ருதராஷ்டிரனைப் பார்த்து, 'கௌரவரே! அழகிய இடங்களில் இப்பொழுது பசுக்கூட்டங்கள் (வந்து) இருக்கின்றன. பசுக்களுடைய[a] எண்ணிக்கையை முன்னிட்டு வயது, நிறம், ஜாதி, பெயர் இவைகளை எழுதுவதற்கும் கன்றுகளை அடையாளமிடுவதற்கும் ஸமயம் சேர்ந்திருக்கிறது. அரசரே! இந்த ஸமயத்தில் உம்முடைய புத்திரனுக்கு வேட்டை உசிதமானது. நீர் துர்யோதனனுடைய பிரயாணத்தைப்பற்றி அனுமதி கொடுக்கக்கடவீர்' என்று சொன்னார்கள். திருதராஷ்டிரன், 'ஐயா! வேட்டை நல்லது. பசுக்களை நன்றாகப் பரிசீலனம் செய்வதும் சிறந்ததே. இடையர்களிடத்தில்

---

[1] வேறுபாடம். [2] 'ஸமங்கன்' என்பது வேறுபாடம்.

நம்பிக்கை வைக்கலாகாதென்று நான் நினைக்கிறேன். புருஷ ஸ்ரேஷ்டர்களான அந்தப் பாண்டவர்கள் அந்த வனத்தில் ஸமீபத்திலிருக்கிறார்களென்று நாம் கேட்டிருக்கிறோம். ஆகையால், அவ்விடத்தில் நீங்கள் செல்வதற்கு நான் அனுமதி கொடுக்கமாட்டேன். கர்ண! திறமையுள்ளவர்களும் மஹாரதர்களுமான அந்தப் பாண்டவர்கள், கபடத்தால் ஜயிக்கப்பட்டவர்களும் பெரியகாட்டில் துன்பத்திற்கு உட்படுத்தப்பட்டவர்களும் எப்பொழுதும் தவத்தில் நிலைபெற்றவர்களுமாக இருக்கிறார்கள். தர்மராஜன் கோபித்துக்கொள்ளமாட்டான். பீமஸேனனே மிகுந்த கோபமுள்ளவன். துருபதனுடைய குமாரியானவள் தனித்த தேஜஸாகவே இருக்கிறாள். கொழுப்பும் அறியாமையுமுடையவர்களான நீங்கள் குற்றம்செய்வீர்கள். பிறகு, தவமுள்ளவர்களான அந்தப் பாண்டவர்கள் உங்களை எரித்துவிடுவார்கள். அன்றியும், ஆயுதங்களையுடையவர்களும் கோபம் மிகமேலிட்டவர்களும் ஒன்று சேர்ந்தவர்களும் கத்தி கட்டிக்கொண்டவர்களுமான அந்த வீரர்கள் சஸ்திரங்களுடைய தேஜஸினால் எரிப்பார்கள். [1] பிறகு, நீங்கள் அனேகர்களாக இருப்பதனால் எவ்விதத்தாலாவது அவர்களை எதிர்த்து யுத்தம் செய்யப்போவீர்கள். அப்படி பாண்டவர்களை எதிர்த்துச் சண்டை செய்யப்போவது மிகவும் இகழத்தக்கதாகும். அதுவும் முடியாதென்பது எனதெண்ணம். மிக்க தோள்வலிமையுள்ள தனஞ்சயன் இந்திரலோகத்தில் வாஸம் செய்தானன்றோ? திவ்யாஸ்திரங்களைப்பெற்று அந்த ஸ்வர்க்கத்தினின்று காட்டிற்குத் திரும்பிவந்திருக்கிறான். முற்காலத்தில், அஸ்திரங்களில் விசேஷப் பயிற்சியில்லாதபொழுதே அர்ஜுனனால் பூமி ஜயிக்கப்பட்டது. அவன் இப்பொழுது அஸ்திரங்களில் விசேஷமாகத் தேர்ச்சி அடைந்திருக்கையில் சொல்லவேண்டுமா? மஹாரதனான அர்ஜுனன் உங்களைக் கொல்லமாட்டானே? என் வசனத்தைக்கேட்டு நீங்கள் ஜாக்கிரதையாயிருப்பீர்களானாலும், வனவாஸத்தினால் மிக்க மனவருத்தமடைந்திருக்கிற பாண்டவர்களிடம் நம்பிக்கை வைத்து அங்கு வஸிப்பதனால் உங்களுக்குத் துன்பம் நேரும். அல்லாமலும், சில போர்வீரர்கள் யுதிஷ்டிரனிடத்தில் அபகாரத்தைச் செய்வார்கள். அறிவீனத்தால் செய்யப்பட்ட அந்தச் செய்கையானது, உங்களுக்குத் தோஷத்தை உண்டுபண்ணும். ஆதலால், நம்பிக்கையுள்ள வேறு மனிதர்கள் பசுக்களை எண்ணுவதற்

---

[1] வேறுபாடம்.

காகப் போகட்டும். பாரத! துர்யோதனன் தானே நேரில் அந்த வனத்திற்குப்போவது எனக்கு ருசிக்கவில்லை' என்று சொன்னான்.

சகுனி, 'பாரதரே! பாண்டவர்களுள் மூத்தவனான யுதிஷ்டிரன் தர்மத்தை அறிந்தவன். அவன், ஸபையில், பன்னிரண்டு வருஷ காலம் காட்டில் வஸிப்பதாகப் பிரதிஜ்ஞை செய்திருக்கிறான். தர்மசாரிகளான எல்லாப் பாண்டவர்களும் அவனை அனுஸரித் திருக்கிறார்கள். குந்தீபுத்திரனான யுதிஷ்டிரரே, நம் விஷயத்தில் கோபத்தைப் பாராட்டமாட்டான். எங்களுக்கோ வேட்டையைக் குறித்துச் செல்வதற்கு விருப்பம் பெருகுகிறது. நாங்கள் பசுக்களுடைய எண்ணிக்கையைச் செய்ய விரும்புகிறோம்; பாண்டவர்களைப் பார்க்க விரும்பவில்லை. அந்த இடத்தில் கெட்ட செய்கை ஒன்றும் நடைபெறாது. எந்த இடத்தில் அவர்களுக்கு வாஸமோ அந்த இடம் நாங்கள் செல்லமாட்டோம்' என்றுசொன்னான்.

சகுனியினால் இவ்வாறுசொல்லக்கேட்ட திருதராஷ்டிரமகாராஜன், மந்திரியுடன் கூடின துர்யோதனனுக்கு, 'இஷ்டப்படி போகலாம்' என்று அனுமதி கொடுத்தான்; ஆனால், முழுமனத்தோடு கொடுக்கவில்லை. அப்பொழுது, கர்ணனோடுகூடின சகுனி அனுமதிகொடுக்கப்பட்டான். பரதஶ்ரேஷ்டனான துர்யோதனனும், பெரிய சேனையினையும் சிறந்த புத்தியுள்ள சகுனியினையும் துச்சாஸனனையும் மற்றத் தம்பிமார்களையும் ஆயிரக்கணக்கான ஸ்திரீகளையும் சூழப்பட்டவனைப் புறப்பட்டான். த்வைதவனமென்கிற ஸரஸையும் அந்தக் காட்டையும் பார்ப்பதற்குப் புறப்பட்டவனும் மஹாபாகுபலமுள்ளவனுமான அந்தத்துர்யோதனனை நகரவாஸிகளனைவரும் மனஸ்விகளோடு கூடியவர்களாகப் பின்தொடர்ந்தார்கள். எண்ணாயிரம் ரதங்களும் முப்பதினாயிரம் யானைகளும் பல்லாயிரம் காலாட்களும் ஒன்பதினாயிரம் குதிரைகளும் வண்டிகளும் கடைகளும் தாதிகளும் வியாபாரிகளும் துதிபாடகர்களும் வேட்டையாடுவதையே தொழிலாகக்கொண்ட மனிதர்களும் நூறுநூறுகளும் ஆயிரமாயிரமாகவும் துர்யோதனனைப் பின் தொடர்ந்தார்கள். அரசரே! பிறகு, துர்யோதனராஜனுடைய பிரயாணத்தில் மழைக்காலத்தில் எழும்பின பெருங்காற்றினுடைய ஒலிபோல மிகப் பெரிதான ஆரவாரமுண்டாயிற்று. பிறகு, துர்யோதனராஜன் எல்லா வாகனங்களோடும் த்வைதவனமென்னும் தடாகத்தை அணுகி ஒரு [1] கவ்யூதி தூரத்தில் வஸித்தான்.

---

[1] இரண்டு க்ரோசம்; அதாவது, நான்குமைல்.

இருநூற்றுநாற்பத்தோராவது அத்யாயம்.

கோஷயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(துரியோதனன் த்வைதவனஸரஸுக்கருகில் விளையாட்டிடங்களை அமைக்க ஏவியதும், கந்தர்வர்கள் துர்யோதனனுடையவேலைக்காரர்களைத் தடுத்ததும், துர்யோதனன் அவர்களைத் துரத்தும்படி தன் சேனையை அனுப்பியதும், கந்தர்வர்கள் அவர்களைப் பயமுறுத்த அவர்கள் துர்யோதனனிடம் தெரிவித்ததும்.)

பிறகு, துர்யோதனராஜன், வனத்தில் ஆங்காங்கு வசித்துக் கொண்டு மாட்டுமந்தைகளை அடைந்தான்; அங்கே, நாற்புறங்களிலும் சேனையை இறக்கினன். மேலேக்காரர்கள், அழகியதும் நன்றாக அறியப்பட்டிருப்பதும் ஜலமுள்ளதும் மரங்களோடும் எல்லாக் குணங்களோடும் கூடியதுமான இடத்தில் விடுதிகளை ஏற்படுத்தினர்கள். அப்படியே கர்ணனுக்கும் சகுனிக்கும் துர்யோதனனுடைய எல்லாத் தம்பிமார்களுக்கும் அவைகளுக்குள்மீபத்திலிருப்பவைகளாகத் தனித்தனியான பலவிடுதிகளையும் ஏற்படுத்தினர்கள். அப்போழுது, அவர்கள் நூறுநூறாகவும் ஆயிரமாயிரமாகவும் பசுக்களைப் பார்வையிட்டார்கள். அரசன், அந்த எல்லாப் பசுக்களையும் அடையாளங்களிட்டுக் கணக்கிட்டான்; இளங்கன்றுகளையும் அப்படியே நுகத்தடியைத்துப்பழக்கக்கூடியகாளைக்கன்றுகளையும் அடையாளமிட்டான்; இளங்கன்றுகளையுள்ள பசுக்களையும் எண்ணினான். குருகுலத்தில் பிறந்த அவன் பசுக்களை எண்ணிவிட்டு, பிறகு, மூன்றுவயதுசென்றகன்றுகளை அடையாளமிட்டு, ஆபேப்பவர்களால் சூழப்பட்டவனாகவும் ப்ரீதியுள்ளவனாகவும் களித்திருந்தான். அந்தப் பட்டணத்து ஜனங்களனைவரும் ஆயிரக்கணக்கான படைவீரர்களும் அக்காட்டில் தேவர்கள்போல இனிது விளையாடினர்கள். பிறகு, வழிநடையினல் களைப்படைந்த துர்யோதனனை ஸ்மர்த்தர்களான இடையர்களும் நன்றாக அலங்கரிக்கப்பட்ட கன்னிகைகளும் நர்த்தனங்களாலும் வாத்தியங்களாலும் ஆனந்தமடையச் செய்தார்கள். அந்தப்புரஸ்திரீகளின் கூட்டத்தால் சூழப்பட்ட அந்த அரசன் மிக்க ஸந்தோஷமுள்ளவனாக அவர்களுக்குத் தக்கபடி தனத்தையும் பற்பல விதமான அன்னபானங்களையும் கொடுத்தான். பிறகு, அவர்களால்

லாரும் ஒருங்குசேர்ந்து சிறுத்தைகளையும் எருமைகளையும் மான்களையும் கவய மிருகங்களையும் காடிகளையும் பன்றிகளையும் நாற்புறங்களிலும் வளைத்துக்கொண்டார்கள். அந்தத் துர்யோதனன், காட்டில் அநேகமான அந்த் மிருகங்களையும் யானைகளையும் அம்புகளால் பிளந்து, அழகான இடங்களில் மிருகங்களைப் பிடிப்பித்தான். பாரதரே! வஜ்ரத்தைக் கையில்தாங்கின மஹேந்திரன்போலச் சிறந்த செல்வத்துடன் கூடின துர்யோதனராஜன், பால் தயிர் நெய்களையும் அனுபவிக்கத்தக்க ருசியுள்ள வஸ்துக்களையும் அனுபவித்துக்கொண்டும், மதங்கொண்ட வண்டுகளால் அடையப்பட்டும் மயில்களால் ஒலியுள்ளதாகச் செய்யப்பட்டுமிருக்கிற அழகிய காடுகளையும் பூந்தோட்டங்களையும் பார்த்துக்கொண்டும், மதங்கொண்ட வண்டுகளால் வரிசையாக நன்கு சூழப்பட்டிருப்பதும் மயில்களுடைய ஒலிகளால் நிரப்பப்பட்டதும் ஏழிலம்பாலமரங்களால் சூழப்பட்டதும் புன்னைமரங்களோடும் மகிழமரங்களோடும் கூடியதும் புண்யமானதுமான த்வைதவன தடாகத்தை அடைந்தான். அரசரே! கௌரவர்களுள் சிறந்தவரே! அந்த இடத்திலிருப்பவரும் சிறந்த புத்தியுள்ளவரும் தர்மநந்தனருமான யுதிஷ்டிரர், கற்றறிந்தவர்களும் வனத்தில் வஸிப்பவர்களுமான பிராம்மணர்களோடுகூடித் திவ்யமும் வனத்தில் வஸிப்பவர்களுக்குத்தக்க முறையோடு கூடியதும் ஒரு பகலால் முடிக்கத்தக்கதுமான ராஜரிஷிகள் செய்யத்தக்க யஜ்ஞந்தினால் தற்சயலாக (த்ரீதவனதகளை) ஆராதித்தார். கௌரவரே! சிறந்த புத்தியுடையவரான தர்மராஜர் தர்மபத்னியான திரௌபதியுடன்கூட அந்தத் தடாகத்தினருகில் வீட்டை ஏற்படுத்திக்கொண்டிருந்தார். பிறகு, இளைய ஸஹோதரர்களோடு கூடின துர்யோதனன், வேலைக்காரர்களைப் பார்த்து, 'இந்தத் தடாகத்திற்கருகில் உத்யானவனங்களையும் விடுதிகளையும் விரைவாக ஏற்படுத்துங்கள்' என்று கட்டளையிட்டான். குற்றேவல்செய்கிறவர்களான அவர்கள், 'அப்படியே' என்று துர்யோதனனைப்பார்த்துச் சொல்லிவிட்டு, அப்பொழுது உத்யானங்களையும் விடுதிகளையும் ஏற்படுத்துவதற்காக த்வைத வனஸரஸை அடைந்தார்கள். வந்துகொண்டிருப்பவர்களும் த்வைதவன ஸரஸில் பிரவேசிக்கின்றவர்களுமான துர்யோதன னுடைய சிறந்த சேனைக்கலைவர்களை த்வைதவனத்தின் வாயிலில் கந்தர்வர்கள் தடுத்தார்கள். அரசரே! அவ்விடத்தில் பரி

வாரங்களால் சூழப்பட்டிருக்கிற கந்தர்வராஜன் குபேரனுடைய அரண்மனையிலிருந்து முந்தியே வந்திருந்தான். அந்தக் கந்தர்வராஜனுல் அப்ஸரஸுகளுடைய கூட்டங்களோடும் அப்படியே விளையாட்டையே இயற்கையாகக்கொண்ட தேவகுமார்களோடும் கூடி விளையாடுவதற்காக அந்த ஸரஸானது நன்முகச் சூழப்பட்டிருந்தது. அரசரே! அந்தக் கந்தர்வராஜனுல் அந்தக்குளம் சூழப்பட்டதைக்கண்டு அந்த ராஜபரிசாரகர்கள் துர்யோதனமகாராஜனிருக்கிற இடத்திற்குத் திரும்பிப்போனர்கள். குருகுலத்தில் பிறந்தவரே! அந்தத் துர்யோதனரே, அவர்களுடைய வசனத்தைக் கேட்டு, யுத்தத்தில் கெட்ட மதங்கொண்டவர்களான படைவீரர்களைப்பார்த்து, 'அந்தக் கந்தர்வர்களை ஓட்டிவிடுங்கள்' என்று கட்டளையிட்டு அனுப்பினன். சேனையின் முந்திச் செல்பவர்களான வீரர்கள் அந்த அரசனுடைய அந்த வசனத்தைக்கேட்டு த்வைதவன ஸரஸை அடைந்து கந்தர்வர்களைப்பார்த்து, 'திருதராஷ்டிரருடைய குமாரரும் மிகுந்தபலசாலியும் துர்யோதனரென்று பிரஸித்திபெற்றவருமான அரசர் விளையாடவிரும்பி இவ்விடம் வருகிறார். அதற்காக நீங்கள் விலகிச் செல்லுங்கள்' என்று சொன்னர்கள். அரசரே! இவ்வாறு சொல்லப்பட்ட கந்தர்வர்கள், உரக்கச் சிரித்துக்கொண்டு அந்த ஆட்களைப்பார்த்து, 'தேவலோகவாஸிகளான எங்களைத் தனக்கு அடங்கினவர்களைப்போல எண்ணி இவ்வாறு கட்டளையிடுகிற உங்களுடைய அரசனை துர்யோதனன் மந்தபுத்தியுள்ளவன்; விஷயங்களை அறிவதில்லை. புத்தியற்ற அவனுடைய வசனத்தினுல் இவ்வண்ணம் எங்களைப்பார்த்துச் சொல்லுகிறவர்களும் மரிக்க எண்ணங்கொண்டவர்களுமான நீங்களும் மந்தபுத்தியுள்ளவர்கள்; ஸம்சயமில்லை. அந்தக் கௌரவராஜனிருக்கிறவிடத்திற்கு நீங்கள் விரைவாக ஓடுங்கள். இல்லாவிடில், இப்பொழுதே யமனுடைய வீட்டிற்குப் போகவேண்டும்' என்ற கடுமையான சொல்லை மறுமொழியாக உரைத்தார்கள். கந்தர்வர்களாலே இவ்வாறு சொல்லப்பட்ட அரசனுடைய சேனைத்தலைவர்கள் திருதராஷ்டிரகுமாரனை துர்யோதனராஜனிருக்கிறவிடத்திற்கு விரைவாக ஓடினர்கள்.

இருநூற்றுநாற்பத்திரண்டாவது அத்யாயம்.

கோஷயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(கௌரவர்களுக்கும் கந்தர்வர்களுக்கும் யுத்தமும், சித்திரஸேனன் முதலியவர்களால் கர்ணன் ரதத்தை இழந்து யுத்தரங்கத்தை விட்டு ஓடியதும்.)

மகாராஜரே! பிறகு, அவர்களெல்லாரும் ஒன்றுகூடித் துர்யோதனனருகில் ஓடிவந்தார்கள்; (கந்தர்வர்கள்) துர்யோதனனைப்பற்றிச் சொல்லியதையும் கூறினர்கள். பாரதரே! கந்தர்வர்களால் தன்னுடைய படை தடுக்கப்பட்டவுடன், சிறந்த பிரதாபமுள்ள துர்யோதனன், கோபம் மூண்டவனாய் ஸைன்யங்களைப் பார்த்து, 'இந்திராணியின் பர்த்தாவான இந்திரன் எல்லாத்தேவர்களோடுங்கூட விளையாடுபவனாயிருந்தாலும், எனக்கு அப்ரியத்தைச் செய்கின்றவர்களும் தர்மங்களை அறியாதவர்களுமான இவர்களைச் சிக்ஷைசெய்யுங்கள். நாம் இந்த இடத்தில் பிரீதியுள்ளவர்களாகத் தடையற்று விளையாடுவோம்' என்று மறுமொழி கூறினான். துர்யோதனனுடைய வசனத்தைக் கேட்டு, மகாபலசாலிகளான திருதராஷ்டிரகுமாரர்களும் ஆபிரக்கணக்கான எல்லாயுத்தவீரர்களும் யுத்தஸன்னத்தர்களானார்கள். பிறகு, அவர்கள் அந்தக் கந்தர்வர்களனைவரையும் மிக அடித்துப் பெரிய சிங்கநாதத்தினால் பத்துத்திசைகளையும் நிரப்பிக்கொண்டு பலாத்காரத்தினால் அந்தக் காட்டில் நுழைந்தார்கள். பிரபுவே! பிறகு, அந்த இடத்தில் பராக்ரமத்தை வெளிப்படுத்துகிற கௌரவஸைனவீரர்கள் சில கந்தர்வர்களால், 'ஸாஹஸம் செய்யாதீர்கள்' என்று கல்வார்த்தைகளினாலேயே தடுக்கப்பட்டார்கள். பூமிக்நாதரே! கந்தர்வர்களால் நல்வார்த்தையினாலேயே தடுக்கப்படுகின்ற அந்தக் கௌரவஸைனவீரர்கள் அந்தக் கந்தர்வர்களை அலக்ஷியம் செய்துவிட்டு அந்தப் பெரியகாட்டில் நுழைந்தார்கள். அரசரே! நுழைந்துகொண்டிருக்கையில் சொல்லால் நில்லாழற்போனபொழுது, ஆகாயத்தில் ஸஞ்சரிப்பவர்களான எல்லாக் கந்தர்வர்களும் சித்திரஸேனனிடத்தில் தெரிவித்தார்கள். கந்தர்வராஜனான சித்திரஸேனன் கோபம் மூண்டு அவர்களனைவரையும் பார்த்து, 'துஷ்டர்களான இந்தக் கௌரவர்களை நன்றாகச் சிக்ஷியுங்கள்' என்று சொன்னான். பாரதரே! சித்திரஸேனனால் அனுமதிகொடுக்கப்பட்ட கந்தர்

வர்களெல்லாரும், ஆயுதங்களை எடுத்துக்கொண்டு திருதராஷ்டிர புத்ரர்களை எதிர்த்து விரைவாகச் சென்றார்கள். ஆயுதங்களெடுத்துக்கொண்டு விரைவாகவருகின்ற அந்தக் கந்தர்வர்களைப்பார்த்து, அந்தக் கௌரவஸைனிகர்களனைவரும், துர்யோதனன் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே திசைகளில் ஓடினார்கள். புறங்காட்டி ஓடுகின்ற அந்த எல்லாத் தார்த்தராஷ்டிரர்களையும் பார்த்தும் அப்பொழுது வீரனான கர்ணன் அந்த யுத்தத்தில் புறங்காட்டினவனில்லை. நேரில் வருகின்ற கந்தர்வர்களுடைய பெரிய சேனையைக்கண்டு, கர்ணன் பெரிய அம்பு மழையினால் அவர்களைத் தடுத்தான். ஸூதபுத்ரனும் மஹாரதனுமான கர்ணன் க்ஷுரப்ரங்களாலும் அம்புகளாலும் அர்த்தசந்த்ரபாணங்களாலும் உருக்குமயமான வத்ஸதந்தங்களாலும் லாகவத்தால் நூறு நூறுகக் கந்தர்வர்களை அடித்துக்கொண்டும் அவர்களுடைய தலைகளைத் தள்ளிக்கொண்டும் சித்ரஸேனனுடைய ஸைன்யமனைத்தையும் ஒரு க்ஷணத்தினுள் ஊதிவிட்டான். சிறந்த புத்தியுள்ளவனை கர்ணனால் அடிக்கப்படுகின்ற அந்தக் கந்தர்வர்கள் நூறுநூறுகவும் ஆயிரமாயிரமாகவும் மீண்டுமே எதிர்த்து வந்தார்கள். எதிர்த்து வருகின்றவர்களும் மிக்க வேகமுள்ளவர்களுமான சித்ரஸேனனுடைய சேனவீரர்களால் பூமியானது ஒருக்ஷணத்தினுள் கந்தர்வமயமாகியது. பிறகு, துர்யோதனராஜனும் துச்சாஸனனும் விகர்ணனும் இன்னும் திருதராஷ்டிரனுடைய மற்றப் புத்திரர்களும் ஸுபலனுடைய புத்திரனான சகுனியும் கருடன்போலச் சப்திக்கின்ற ரதங்களோடுகூடியவர்களாக அப்பொழுது கந்தர்வஸேனையை மிக அடித்தார்கள். அரசரே! யுத்தத்தில் எதிர்த்துப் போர்புரிகின்ற கந்தர்வஸைன்யத்தைக் கண்டு கர்ணன் பொறுக்கவில்லை. கந்தர்வர்கள் ஸூர்யகுமாரனைப் பிடிக்க எண்ணிப் பெரிய தேர்க்கூட்டத்தாலும் ரதங்களுடைய கதி விசேஷங்களாலும் நாற்புறங்களிலும் சூழ்ந்துகொண்டார்கள். பிறகு, கந்தர்வர்களனைவரும் துர்யோதனனை நோக்கி நன்றாக எதிர்த்தார்கள். அப்பொழுது மயிர் சிலிர்த்தலை உண்டுபண்ணுகிற மிக்க கைகலந்த போர் நடந்தது. பிறகு, பாணங்களால் அடிக்கப்பட்ட அந்தக் கந்தர்வர்கள் மெதுவாஞர்கள். கௌரவர்கள், அடிக்கப்பட்டிருக்கிற கந்தர்வர்களைப் பார்த்துப் பெருங்கூச்சலிட்டார்கள். கௌரவர்களால் பயமடைவிக்கப்பட்ட கந்தர்வர்களைப் பார்த்துப் பொறுதவனை சித்ரஸேனன் கோபங்கொண்டு அந்தக் கௌர

வர்களுடைய வதத்தில் மனத்தைச் செலுத்தினவனாக ஆஸனத்தி லிருந்து எழுந்திருந்தான்.

பிறகு, விசித்திரமான யுத்தமார்க்கங்களை அறிந்தவனான சித்திரஸேனன் மாயாஸ்திரங்களைப் பிரயோகித்துப் போர் புரியலானான்; அந்த மாயாஸ்திரங்களால் ஆகாயத்தை நன்றாக மூடினான். அந்த இடத்தில் காற்று வீசவில்லை. பரதகுலத்தில் பிறந்தவரே! யானையின்மீது ஏறியிருந்த [1] மகாமாத்ரர்கள் கொல்லப்பட்டு யானைகளோடு கீழே விழுந்தார்கள். அப்பொழுது, குதிரைவீரர்கள் குதிரைகளோடு விழுந்தார்கள். ரதிகர்கள் ரதங்களோடு விழுந்தார்கள். அப்படியே, காலாட்களும் அம்பு மழைகளால் கொல்லப்பட்டுக் கீழே விழுந்தார்கள். கௌரவர்கள் சித்திரஸேனனுடைய அந்த மாயையினால் மயக்கத்தை அடைந்தார்கள். பாரதரே! அப்பொழுது துர்யோதனனுடைய ஒவ்வொரு போர்வீரனும் யுத்தகளத்தில் பத்துப் பத்துக் கந்தர்வர்களால் சூழ்ந்துகொள்ளப்பட்டார்கள். பிறகு, பெரிய கந்தர்வஸேனையினால் யுத்தத்தில் நன்றாக அடிக்கப்படுகின்ற அந்தக் கௌரவவீரர்கள் அப்பொழுது பயந்து யுதிஷ்டிரரிருக்கிற இடத்துக்கு ஓடினார்கள். அரசரே! துர்யோதனனுடைய படைகள் நாற்புறங்களிலும் அடித்து நாசம் செய்யப்படும் தருணத்தில், சூரியகுமாரனான கர்ணன் மலைபோல அசைவற்று நின்றான். யுத்தத்தில் மிகவும் காயப்படுத்தப்பட்டவர்களான கர்ணனும் தேஜஸ்வியான துர்யோதனனும் ஸுபலனுடைய புத்திரனான சகுனியும் கந்தர்வர்களை எதிர்த்துப் போர்புரிந்தார்கள். எல்லாக் கந்தர்வர்களுமே கோடமுள்ளவர்களாகவும் கொல்ல எண்ணங் கொண்டவர்களாகவும் நூறு நூறுகவும் ஆயிரமாயிரமாகவும் யுத்தத்தில் கர்ணனை எதிர்த்தோடி வந்தார்கள். மகாபலசாலிகளான கந்தர்வர்கள் கத்திகளாலும் பட்டஸங்களாலும் சூலங்களாலும் கதைகளாலும் ஸுதபுத்திரனைக் கொல்ல எண்ணி எல்லாப்பக்கத்திலும் சூழ்ந்துகொண்டார்கள். சிலர் அந்தக்கர்ணனுடைய ரதத்திலுள்ள நுகத்தடியை வெட்டினார்கள். சிலர் த்வஜத்தை அறுத்துத் தள்ளினார்கள். சிலர் ஏர்க்காலையும், சிலர் குதிரைகளையும், சிலர் ஸாரதியையும் அடித்துத் தள்ளினார்கள். சிலர் குடையையும் சிலர் பொருத்துக்களையும் ரதகுப்தியையும் அடித்துத் தள்ளினார்கள். பல்லாயிரக் கணக்கான கந்தர்வர்கள் கர்ணனுடைய

[1] யானைப்பாகர்கள்.

ரதத்தை எள்ளளவெள்ளளவாகப் பொடிசெய்தார்கள். பிறகு, தோள்களில் தொங்குகின்ற வில்லுடன் கூடியவனும் ஓடுகின்றவனும் மகாபலசாலியும் ஸுதபுத்திரனுமான கர்ணன், கத்தியையும் கேடகத்தையும் எடுத்துக்கொண்டு ரதத்தினின்று துள்ளிக் குதித்து விகர்ணனுடைய ரதத்தை அடைந்து கந்தர்வர்களிடத்தினின்று தன்னை விடுவித்துக்கொள்வதற்காகக் குதிரைகளை விரைவாக ஓட்டினான்.

இருநூற்றுநாற்பத்துமூன்றுவது அத்யாயம்.

கோஷயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(சித்திரஸேனன் துர்யோதனனை வென்று கட்டித் தேரில் ஏற்றியதும், மற்றக் கந்தர்வர்கள் துர்யோதனனுடைய பிராதாக்களையும் அவர்களுடைய மனைவிகளையும் கட்டியதும், துர்யோதனனுடைய மந்திரிமுதலியவர்கள் யுதிஷ்டிரரிடம் அதனைத் தெரிவித்ததும், பீமன் அதனைக் கொண்டாடியதும்.)

மகாராஜரே! கந்தர்வர்களால் மகாரதனான கர்ணன் முறிய அடிக்கப்படவே, துர்யோதனன் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே, சேனை எல்லாம் ஓடியது. புறங்காட்டி ஓடுகின்ற அந்தத் திருதராஷ்டிரகுமாரர்களனைவரையும் பார்த்தும் துர்யோதனமஹாராஜன் அந்த யுத்தரங்கத்தில் புறங்காட்டி ஓடவில்லை. சத்துருக்களை அடக்குகிறவனான அந்தத் துர்யோதனன், எதிர்த்து வருகின்ற கந்தர்வர்களுடைய அந்தப் பெருஞ் சேனையை நன்றாகப் பார்த்துப் பெரிய அம்புமழையினால் அடித்தான். கந்தர்வர்கள் அம்புமழையைப் பொருட்டாக எண்ணுமல் துர்யோதனனைக் கொல்ல எண்ணி அவனுடைய அந்தத் தேரை எல்லாப்பக்கங்களிலும் சூழ்ந்துகொண்டார்கள். கந்தர்வர்கள் பாணங்களால் துர்யோதனனுடைய ரதத்தின் நுகத்தையும் ஏர்க்காலையும் ரதகுப்திகளையும் கொடியையும் ஸாரதியையும் குதிரைகளையும் த்ரிவேணுவையும் அச்சையும் எள்ளளவெள்ளளவாகப் பொடிபண்ணினார்கள். மிக்க தோள்வலிமையுள்ள சித்திரஸேனன், ரதத்தை இழந்து பூமியில் நிற்கிற துர்யோதனனை எதிர்த்தோடிவந்து அவனை உயிரோடு பிடித்தான். மிக்க புஜபலமுள்ள அந்தச் சித்திரஸேனன் துர்யோதனனுடைய இருகைகளையும் கயிற்றினால்

கட்டி அவனைத் தன்னுடைய பெரிய ரதத்தில் ஏறும்படி செய்து சிங்காதனம் செய்தான். ராஜேந்திரரே! அவன் பிடிபட்டவுடன், ரதத்திலிருக்கிற துச்சாஸனனைக் கந்தர்வர்கள் எல்லாப் பக்கங்களிலும் சூழ்ந்து பிடித்தார்கள். சிலர் விவிம்சதியைப் பிடித்துக் கொண்டு சித்திரசேனனிடம் அதிக வேகத்துடன் ஓடினர்கள். சிலர் விந்தானுவிந்தர்களையும் ராஜமஹிஷிகளனைவரையும் பிடித்தார்கள். கந்தர்வர்களால் நன்முக எதிர்த்துத் துரத்தப்பட்டவர்களான துர்யோதனனுடைய சேனைவீரர்கள், அப்பொழுது, முன்பே முறிய அடிக்கப்பட்டிருக்கிறவர்களோடுகூடிப் பாண்டவர்களிடம் ஓடி வந்தார்கள். அரசன் பிடிபடவே, வண்டிகளும் கடைகளும் தாதிகளும் வாகனங்களும் வண்டிக்காளைகளும் வண்டிக்குதிரைகளும் பாண்டவர்களைச் சரணமடைந்தன.

ஸைனிகர்கள், 'பார்த்தர்களே! இனிய தோற்றமுள்ளவனும் மகாபாகுபலமுள்ளவனும் மகாபலசாலியுமான துர்யோதனராஜனைக் கந்தர்வர்கள் கொண்டுபோகின்றனர். அந்தச் சித்திரசேனனைப் பின்தொடர்ந்து ஓடுங்கள். கந்தர்வர்கள் துச்சாஸனனையும் துர்விஷஹனையும் துர்முகனையும் அப்படியே துர்ஜயனையும் ராஜபத்னிகள் எல்லாரையும் கட்டிக் கொண்டுபோகிறார்கள்' என்று சொன்னர்கள். துர்யோதனராஜனிடம் அதிக அன்புள்ளவர்களான அவனுடைய மந்திரிகளனைவரும், இவ்வாறு அலறுகின்றவர்களும் மனவருத்தமுள்ளவர்களும் எளிமையை அடைந்தவர்களுமாக, யுதிஷ்டிரரருகில் வந்தார்கள். அப்படி துன்பத்தை அடைவிக்கப்பட்டவர்களும் தீனர்களும் யுதிஷ்டிரரை ராஜபிரைஷி கேட்பவர்களும் பிராயமுதிர்ந்தவர்களுமான துர்யோதனனுடைய மந்திரிகளைப் பார்த்துப் பீமஸேனன், 'பெரியபிரயத்தனத்தால் யானைகளோடும் குதிரைகளோடும் (யுத்தத்திற்காக) ஸன்னாகத்தைச் செய்து வேறு எண்ணத்துடன் இங்குவந்த கௌரவர்களுக்கு இந்தக் காரியம் மற்றொரு விதமாக ஏற்பட்டுவிட்டது. நாம் செய்யவேண்டியதைக் கந்தர்வர்கள் செய்தார்கள். இது முழுமையும், தீனர்களானநம்மைப் பார்க்க விருப்பமுள்ளவனும் கெட்ட எண்ணமுள்ளவனும் கெட்ட சூதாட்டத்தை விளையாட்டாகக் கொண்டவனுமான துர்யோதனராஜனுடைய துராலோசனை. 'சக்தியற்றவனைப் பகைக்கிறவனைப் பிறர் கொல்வார்கள்' என்று நாம் கேட்டிருக்கிறோம். மனிதர்களால் செய்வதற்கரிய இந்தக் காரியம் கந்தர்வர்களால் நமக்கெதிரில் செய்யப்பட்டது. சும்மா இருக்கின்ற

வர்களான நம்முடைய காரியப் பொறுப்பானது எந்த ஆண் பிள்ளையால் ஸுகமாக வாங்கிக்கொள்ளப்பட்டதோ நம்முடைய பிரியத்தில் நிலைபெற்றிருக்கிற அப்படிப்பட்ட ஒருவன் தெய்வாதீனமாக இவ்வுலகத்திலிருக்கிறான். கெட்ட புத்தியுள்ளவனை துர்யோதனன் நல்ல நிலைமையிலிருந்துகொண்டு, குளிரையும் காற்றையும் வெய்யிலையும் பொறுத்துக்கொண்டிருப்பவர்களும் தவத்தினால் இளைத்தவர்களும் துர்த்தசையிலிருப்பவர்களுமான எங்களைப் பார்க்க விரும்புகிறானன்றே? அநியாயவழியில் நடப்பவனும் மதி கெட்டவனுமான துர்யோதனனுடைய நடையை எவர்கள் அனுஸரிக்கிறார்களோ அவர்கள் அவமானத்தை அடைகிறார்கள். எவனால் இந்தச் செய்கையானது (துர்யோதனனுக்குச்) சொல்லப்பட்டதோ அவனல் அதர்மமானது செய்யப்பட்டிருக்கிறதன்றே? குந்தீநந்தனர்களோ கருணையுள்ளவர்களென்று உங்களுக்குநேரில் சொல்லுகிறேன்' என்று சொன்னான். இவ்வாறு சொல்லுகிறவனும் கோபத்தால் குரல்மாறினவனுமான பீமஸேனனை நோக்கி யுதிஷ்டிரராஜர், 'கடுஞ்சொல்லுக்கு இது காலமன்று' என்று சொல்லலானார்.

இருநூற்றுநாற்பத்துநான்காவது அத்யாயம்.

கோஷயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(பீமன் துர்யோதனனுடைய அனியாயங்களை நினைவுழட்டி அவனை விடுவிப்பது தகாதென்றுசொல்ல, யுதிஷ்டிரர் மறுபடியும் துர்யோதனனை விடுவிக்கும்படி ஏவியதும், அர்ஜுனன் தான் செய்வதாகப் பிரதிஜ்ஞை செய்ததும்.)

யுதிஷ்டிரர், 'ஐயா! நம்மைநோக்கி வந்திருப்பவர்களும் பயத்தினால் பீடிக்கப்பட்டவர்களும் ரக்ஷணத்தைவிரும்புகின்றவர்களும் கெட்ட நிலையை அடைந்திருப்பவர்களுமான கௌரவர்களைப் பார்த்து நீ இப்படிப்பட்டவசனத்தை எவ்வாறு சொல்லலாம்? விருகோதர! ஜ்ஞாதிகளுள் வேறுபாடுகளும் கலகங்களும் இருக்கின்றன; பகைகளும் திடமாக ஏற்படுகின்றன. ஆனாலும், ஜ்ஞாதிதர்மமானது அழிகிறதில்லை. ஜ்ஞாதியல்லாத அயலான் ஒருவன் குலத்தைக்கெடுக்க விரும்புவானாகில், அன்னியனால் ஏற்படக்கூடிய

அந்த அவமானத்தை ஸாதுக்கள் பொறுக்கமாட்டார்கள். கெட்ட புத்தியுள்ள இவன் நாம் இவ்விடத்தில் நெடுநாளாகவஸிப்பதை அறிந்திருக்கிறானன்றே? இவன் நம்மை இவ்வண்ணம் அவமதித்து இந்த அப்ரியத்தைச் செய்தான். யுத்தத்தில் கந்தர்வன் பலாத்காரத்தால் துர்யோதனனைப்பிடித்தகனும் ராஜஸ்திரீகளை ஜ்ஞாதிகளல்லாத அன்னியர்கள் தொடுவதாலும் நம்முடைய குலமானது கெடுக்கப்பட்டதாகிறது. புருஷஶ்ரேஷ்டர்களே! சரணமடைந்தவர்களையும் குலத்தையும் காப்பதற்காகக் கிளம்புங்கள். தாமதியாமல் ஸன்னத்தர்களாகக்கடவீர். பீம! புருஷப்புலிகளே! அர்ஜுனனும் நகுலஸஹதேவர்களும் சத்துருக்களால் ஜயிக்க முடியாதவனான நீயும், கொண்டுபோகப்படுகிற துர்யோதனனை விடுவியுங்கள். புருஷஶ்ரேஷ்டர்களே! எல்லாச் சஸ்திரங்களோடும்கூடியவைகளும் பிரகாசமுள்ளவைகளும் பொன்மயமான கொடிகளுள்ளவைகளுமான திருதராஷ்டிரபுத்திரர்களுடைய தேர்கள் இதோ இருக்கின்றன. சஸ்திரங்களில் கல்ல தேர்ச்சியுள்ளவர்களான இந்திரஸேனன் முதலிய ஸூதர்களால் இருந்து நடத்தப்பட்டவைகளும் சப்தத்துடன் • கூடியவைகளும் எப்பொழுதும் யுத்தஸன்னத்தமாக இருப்பவைகளுமான இந்தத் தேர்களில் ஏறுங்கள். இந்த ரதங்களில் ஏறிக்கொண்டு யுத்தரங்கத்தில் கந்தர்வர்களை எதிர்த்துப் போர் புரிவதற்கு முயற்சியுள்ளவர்களாகவும் ஆலஸ்யமில்லாதவர்களாகவும் துர்யோதனனை விடுவிப்பதில் முயலுங்கள். அன்னியர்களால் அவமானமானது வரும்போது நாம் நூற்றைந்துபேர்களும் ஒன்றுபட்டவர்கள். நமக்குள் அன்யோன்யம் விரோதமிமற்படும்போது நாம் ஐந்துபேர்களே; அவர்கள் நூறுபேர்கள். பீமஸேன! ஸாமான்ய க்ஷத்ரியன்கூடச் சரணமடைந்தவனைத்தனது முழுவல்லமையினாலும் காப்பாற்றுவான். அவ்வாறிருக்க, நீ காப்பாற்றுவாயென்பதில் ஸந்தேஹமென்ன?' என்று சொன்னர். இவ்வாறு சொல்லக்கேட்ட பீமஸேனன், கோபத்தால் கண்கள் சிவந்து முந்தின வைரத்தை நினைத்துக்கொண்டு மீண்டும் யுதிஷ்டிரரைப்பார்த்து, 'யுதிஷ்டிரரே! வீரரே! முற்காலத்தில் நம்மை அரக்குமாளிகையில் எரிப்பதற்கு இவன் கெட்டஎண்ணம் கொண்டானன்றே! அப்பொழுது தெய்வத்தால் காப்பாற்றப்பட்டோம். பரதவம்சத்திலுதித்தவரே! பிரபுவே! என்னுடைய உணவில் கடுமையான காலகூடவிஷத்தைப்போட்டுப்

புஜிக்கச்செய்து கொடிகளால் கட்டிக் சுங்கையில் போட்டான். ராஜேந்திரரே! அப்பொழுது நான் பாதாளத்தை அடைந்து அந்தஇடத்தில் வாஸுகியைப்பார்த்து அவ்விடத்தினின்று மீண் டும் விரைவாகப் பூலோகத்தை அடைந்தேன். குந்தீநந்தனரே! சூதாடுகிறகாலத்திலும் பாவச்செயல்கள் செய்யப்பட்டன. ஸபை யின்நடுவில் திரௌபதியைத்தொடுதலும் மாபிர்பிடித்தலும் துகி லுரிதலும் செய்யப்பட்டன. ராஜேந்திரரே! நம்முடைய ராஜ் யத்தையும் பிடுங்கிக்கொண்டு கடுஞ்சொற்களையும் சொன்னன். துரியோதனன் முற்காலத்தில் செய்தபாவங்களின் பயனை அனு பவிக்கிறான். நாமே துர்யோதனனுடைய சிக்ஷையைச் செய்ய வேண்டும். நம்முடைய நேசத்தை விரும்புகின்ற வேறொருவனல் அந்தச் சிக்ஷை செய்யப்பட்டது. அரசரே! கந்தர்வன் நமக்கு உபகாரியன்றே? அவன்விஷயத்தில் நீர் மனவருத்தமடைய வேண்டாம்' என்று சொன்னன்.

அரசரே! இந்தஸமயத்தில் சித்திரஸேனனுல் துரியோதனன் கொண்டுபோகப்பட்டான். கொண்டுபோகப்படுகின்ற ஸுயோதனன் அதிக துக்கத்தால் மனவருத்தமுள்ளவனுக, 'யுதிஷ்டிர! மிக்க புஜபலமுள்ளவனே! தர்மவான்களனவருள்ளும் சிறந்தவனே! கௌரவர்கள் புத்திரர்களோடும் மனவிகளோடும் கந்தர்வர்களால் வலிந்து கொண்டு போகப்படுகின்றதைப் பார். பாண்டுநந்தன! மகாபாகுபலமுள்ளவனே! கௌரவர்களுக்குக் கீர்த்தியை உண்டு பண்ணுகிறவனே! தர்மவான்களனவருள்ளும் சிறந்தவனே! கந்தர் வனுல் பலாத்காரித்துக் கொண்டுபோகப்படுகிற என்னைப் பாதுகாப்பா யாக. புருஷச்ரேஷ்டனே! யுதிஷ்டிர! மகாகீர்த்தியுள்ளவனே! மிக்கதேஜஸ்வியமைந்தவனே! இந்தக்கந்தர்வன் உன்னுடைய பிராதாவான என்னைக் கட்டிக்கொண்டுபோகிறன். கந்தர்வர் கள் துச்சாஸனனையும் துர்விஷஹனையும் துர்முகனையும் துர்ஜயனை யும் எம்மையும் மனவிகளனவர்களையும் கட்டிக்கொண்டுபோகி றார்கள். புருஷச்ரேஷ்டர்களே! சீக்கிரமாகப் பின்தொடர்ந்து ஓடிவாருங்கள். என்னைக் காப்பாற்றுங்கள். என்னை ரக்ஷிப் பதற்காக நகுல ஸஹதேவர்களிருவரும் ஆயுதங்களுடன் கூடின வர்களாக என்னைப் பின்தொடர்ந்து ஓடிவரக்கடவர். பாண்டவர் களே! வீர்யத்தினுல் கந்தர்வர்களை ஜயித்துக் குருவம்சத்திற்கு நேர்ந்திருக்கிற இப்படிப்பட்ட மிகப்பெரிதான அபகீர்த்தியைப் போக்குங்கள்' என்று புலம்பினன்.

துன்பக்குரலுடன் இவ்வாறு புலம்புகின்ற துர்யோதன னுடைய புலம்பலைக்கேட்டு, யுதிஷ்டிரர், பரபரப்புள்ளவராகவும் கருணைமேலிட்டவராகவும் மீண்டும் பீமசேனனைப் பார்த்து, 'ஸுயோதனனை விடுவிப்பதற்காக 'ஆலஸ்யமில்லாமல் நன்கு முயலுங்கள். 'என்னைப் பாதுகாப்பதற்காக ஓடிவா' என்று அழைக்கப்பட்டவனும் உத்தமனுமான எந்தமனிதன், சத் துருவாக இருந்தாலும், கைகளைக்குவித்துக்கொண்டு சரணமடைந் திருப்பவனைப்பார்த்துத் தன் பிராணனில் தயைபாராட்டுவான்? பாண்டவர்களே! வரன்களைப் பெறுதல் அரசாட்சி புத்திரஜன னம் இம்மூன்றும், ஆபத்தினின்று சத்துருவை விடுவிப்பதொன் றும் ஒப்பானவை. இது நிச்சயம். ஸுயோதனன் ஆபத்தை அடைந்தவனாகி உன் புஜபலத்தை அடுத்து உயிரைத்தேடுகிறானென் பதைவிடப் பெரியது என்ன இருக்கிறது? விருகோதர! வீர! விஸ் தாரமாக அனுஷ்டிக்கப்படுகிற இந்த யாகமில்லாமலிருக்குமானல் நானே ஓடுவேன். எனக்கு இந்த விஷயத்தில் ஆலோசனை இல்லை யன்றோ? பீம! குருநந்தன! எப்படியும் துரியோதனனை ஸாமோ பாயத்தினாலேயே விடுவிப்பதற்கு முயல்வாயாக. அந்தக் கந்தர்வ ராஜன் ஸாமோபாயத்தினால் ஸம்மதிக்காமற்போனால் மெதுவான பராக்கிரமத்தால் துர்யோதனனை விடுவிப்பாயாக. பீம! அப்படி யின்றி, அவன் இலேசான யுத்தத்தினால் கௌரவர்களை விடா மற்போனால் எல்லா உபாயங்களாலும் பகைவர்களை அடக்கி அந்தக் கௌரவர்களை விடுவிக்கவேண்டும். விருகோதர! பாரத! விஸ்தாரமான யாககாரியம் நடந்துகொண்டிருக்கும்பொழுது, இவ்வளவுதான் என்னால் சொல்லியனுப்ப முடியும். யாசகனுக்கு வேண்டியவரனைக் கொடுப்பது மிகப் பெரியதென்று சொல்லப் பட்டிருக்கிறது' என்று கூறினர். அஜாதசத்துருவினுடைய அந்த வசனத்தைக்கேட்டு, அர்ஜுனன், 'கந்தர்வர்கள் ஸமாதானத்தால் திருதராஷ்டிரபுத்திரர்களை விடாமல் போவார்களாகில், இப்பொ ழுது, கந்தர்வராஜனுடைய இரத்தத்தைப் பூமியானது குடிக்கப் போகிறது' என்று, தமையனுடைய சொற்படி, கந்தர்வர்களிட மிருந்து கௌரவர்களை மீட்பதைப் பிரதிஜ்ஞைசெய்தான். அர சரே! லக்ஷியவாதியான அர்ஜுனனுடைய அந்த ப்ரதிஜ்ஞை யைக்கேட்டு, அப்பொழுது கௌரவர்களுடைய மனமானது மீண்டு திரும்பிவந்ததாகியது.

இருநூற்றுநாற்பத்தைந்தாவது அத்யாயம்.

கோஷயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(பீமன் முதலிய நால்வருக்கும் சித்திரஸேனன் முதலியவர்களுக்கும் யுத்தம்.)

யுதிஷ்டிரருடைய வசனத்தைக் கேட்டுப் பீமஸேனனை முதன்மையாகக்கொண்ட புருஷஸ்ரேஷ்டர்களனைவரும் மிக்க மனக்களிப்புடனும் முகமலர்ச்சியுடனும் கிளம்பினர்கள். பாரதரே! பிறகு, மகாரதர்களான பாண்டவர்களனைவரும் உடைக்கமுடியாதவைகளும் பொன்னால் அலங்கரிக்கப்பட்டவைகளுமான கவசங்களைப் பூண்டுகொண்டார்கள்; பற்பலவிதமான திவ்யாயுதங்களையும் எடுத்துக்கொண்டார்கள். கவசம்பூண்டவர்களும் த்வஜமுள்ளவர்களும் விற்பிடித்தவர்களுமான அந்தப் பாண்டவர்களனைவரும் ரதங்களிலேறி ஜ்வலிக்கின்ற அக்னிகள் போலக் காணப்பட்டார்கள். ரதிகர்களுள் சிறந்த பாண்டவர்கள் ஆயுதங்களால் நன்கு நிறைக்கப்பட்டவையும் வேகமுள்ள குதிரைகள் பூட்டினவையுமான அந்த ரதங்களிலேறிக்கொண்டு அங்கிருந்து விரைவாகவே சென்றார்கள். பிறகு, ஒன்றுசேர்ந்தவர்களும் யுத்தத்திற்காகப் புறப்பட்டவர்களும் மகாரதர்களுமான பாண்டுபுத்திரர்களைப் பார்த்து, கௌரவஸைனிகர்களுடைய பெரிய ஆரவாரம் தோன்றியது. ஜயத்தால் பிரகாசிப்பவர்களும் ஆகாயத்தில் ஸஞ்சரிப்பவர்களும் மஹாரதர்களுமான கந்தர்வர்கள் விரைவுள்ளவர்களாகப் பயமில்லாதவர்கள்போல ஒருக்ஷணத்தில் அந்த வனத்தில் போர்புரிவதற்காக வந்தார்கள். பிறகு, வெற்றியோடு விளங்குபவர்களான கந்தர்வர்களனைவரும் போர்புரிவதற்காக ரதத்திலேறியிருக்கிற நான்கு பாண்டவவீரர்களைக்கண்டு திரும்பினர்கள். லோகபாலர்கள்போல முயற்சியுள்ளவர்களும் மிக விளங்குபவர்களுமான அந்தப் பாண்டவர்களைக் கண்டு கந்தமாதனத்தில் வஸிப்பவர்கள் அணிவகுத்துக்கொண்டு யுத்தஸன்னத்தர்களாக இருந்தார்கள். பாரதரே! சிறந்த புத்தியுள்ள அரசரான தர்மபுத்திரருடைய வசனத்தைக் கேட்டு மெதுவான முறையோடு யுத்தம் தொடங்கப்பட்டது. மந்தபுத்தியுள்ளவர்களான கந்தர்வராஜனுடைய போர்வீரர்கள் அப்பொழுது மெதுவான யுத்தத்தினால் நன்மையை அடைவிக்கப்படக்கூடியவர்களாயில்லை. பிறகு, பகைவர்களைத்

தவிக்கச் செய்கிற ஸவ்யஸாசியானவன், யுத்தத்தில் எளிதில் ஜயிக்கமுடியாதவர்களான அந்தக் கந்தர்வர்களைப் பார்த்து ஸமாதானத்தை முன்னிட்டு, 'அருவருக்கப்பட்ட இந்தக் கார்யமானது கந்தர்வராஜனுக்குத் தகுந்ததன்று. பரதாரங்களைத் தொடுவதும் மனிதர்களோடு எதிர்ப்பதும் தகுந்தவையல்ல. தர்மராஜருடைய கட்டளையினால் சிறந்த வீரர்களான இந்தத் திருதராஷ்டிரருடைய புத்திரர்களையும் இவர்களுடைய மனைவிகளையும் விட்டுவிடுங்கள்' என்கிற வாக்கியத்தை உரைத்தான். புகழ்பெற்ற பாண்டவனால் இவ்வண்ணமுரைக்கப்பட்ட கந்தர்வர்கள், அப்பொழுது மிகச் சிரித்துக்கொண்டு பார்த்தனைப் பார்த்து, 'ஐயா! நாங்கள் பூமியில் ஒருவனுடையவசனத்தையே செய்யக்கடவோம். பாரத! எவனுடைய கட்டளையை அறிந்து அனுஷ்டித்துக் கவலையற்றவர்களாக ஸஞ்சரிக்கிறீரோ அவனொருவனுடைய கட்டளைப்படி இருக்கிறோம். அந்தத் தேவராஜனைக்காட்டிலும் வேறொருவன் எங்களுக்கு அதிகாரியல்லன்' என்கிற வசனத்தை உரைத்தார்கள். கந்தர்வர்கள் இவ்வாறு கூறக்கேட்ட அந்தக் குந்தீபுத்திரனான தனஞ்சயன், மீண்டுமே அந்தக் கந்தர்வர்களைப் பார்த்து, 'கந்தர்வர்களே! நல்வசனத்தினால் திருதராஷ்டிரருடைய குமாரர்களை விடாமற்போவீர்களாகில் நானே பராக்கிரமத்தை வெளிப்படுத்தித் துர்யோதனனை விடுவிப்பேன்' என்று மறுமொழி கூறினன். பிறகு, குந்தீபுத்திரனும் ஸவ்யஸாசியுமான தனஞ்சயன் இவ்வாறு கூறி ஆகாயத்தில் ஸஞ்சரிப்பவர்களான கந்தர்வர்களின்மீது கூர்மையுள்ள அம்புகளை எய்தான். பலத்தினால் மேற்பட்டவர்களான அந்தக் கந்தர்வர்களும் அப்படியே அம்புமழையினால் பாண்டவர்களை நான்குடைக்கங்களிலும் அடித்தார்கள். பாண்டவர்களும் கந்தர்வர்களை அடித்தார்கள். பாரதரே! பிறகு, பலசாலிகளான கந்தர்வர்களுக்கும் பயங்கரமான வேகமுள்ள பாண்டவர்களுக்கும் மிகவும் கொடுங்கின யுத்தம் நடந்தது.

இருநூற்றுநாற்பத்தாறுவது அத்யாயம்.

கோஷயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(மாயையினால் மறைந்து யுத்தம்செய்கின்ற சித்திரஸேனன்மீது அர்ஜுனன் அஸ்திரம்தொடுத்ததும், சித்திரஸேனன் அர்ஜுனனிடம் தன்னை அவனுக்குத் தோழனென்று சொல்லியதும், அர்ஜுனன் அஸ்திரங்களைத் திருப்பியழைக்கவே பீமன்முதலியவர்கள் யுத்தத்தை நிறுத்திவிட்டு அவனோடு ஸல்லாபம் செய்ததும்.)

பிறகு, திவ்யாஸ்திரங்களோடுகூடினவர்களும் பொன் மாலைகளை அணிந்தவர்களுமான கந்தர்வர்கள் பிரகாசிக்கின்ற பாணங்களைப் பிரயோகித்துக்கொண்டு, பாண்டவர்களை நாற் புறங்களிலும் சூழ்ந்துகொண்டார்கள். அரசரே! வீரர்களான நான்கு பாண்டவர்களை ஆயிரக்கணக்கான கந்தர்வர்கள் யுத்தத்தில் நன்றாக எதிர்த்துப் போர்புரிந்தார்கள். அது ஆச்சரியமாயிருந்தது. கர்ணன் துர்யோதனன் இருவருடைய ரதங்களும் கந்தர்வர்களால் நூறுதுண்டுக்குக்களாக வெட்டி எறியப்பட்டதுபோலவே அந்தக் கந்தர்வர்களுடைய ரதங்களும் பாண்டவர்களால் துண்டாடப்பட்டன. வேந்தரே! புருஷஸ்ரேஷ்டர்களான பார்த்தர்கள், யுத்தத்தில் நூறுநூறாக எதிர்த்து வருகின்ற அந்தக் கந்தர்வர்களைப் பலவாறாகச் சரமாரிகளால் எதிர்த்து அடித்தார்கள். பாணவர்ஷங்களால் நாற்புறங்களிலும் சிந்த அடிக்கப்படுகின்ற அந்தக் கந்தர்வர்கள் பாண்டுபுத்திரர்களினருகில் திரும்புவதற்குச் சக்தியுள்ளவர்களாகவில்லை. அப்பொழுது கோபங்கொண்ட அர்ஜுனன், கோபங்கொண்ட கந்தர்வர்களைக் குறிவைத்துத் திவ்யமான மகாஸ்திரங்களைப் பிரயோகிக்கத் தொடங்கினன். பலத்தினால் மேற்பட்டவனான அர்ஜுனன் யுத்தத்தில் ஜயிக்கமுடியாதவர்களான கந்தர்வர்களை ஆயிரமாயிரமாக யமலோகத்திற்கு அனுப்பினன். அரசரே! நெடுந்தூரத்திலிருந்தே லக்ஷ்யங்களில் அம்புகளை எய்யும் திறமையுள்ளவனும் பலசாலிகளுள் சிறந்தவனுமான பீமன், யுத்தத்தில் கூர்மையான பாணங்களால் கந்தர்வர்களை நூறுநூறாக வதம் செய்தான். வேந்தரே! அப்படியே, பலத்தால் அதிகரித்தவர்களும்

யுத்தம்செய்பவர்களுமான மாத்ரீபுத்திரர்களும் யுத்தமுனையில் பகைவர்களை எதிர்த்து நூறுநூறுகக் கொன்றார்கள். மகாரதர்களால் திவ்யாஸ்திரங்களால் கொல்லப்படுகின்ற அந்தக் கந்தர்வர்கள் அங்கிருந்து திருதராஷ்டிரபுத்திரர்களை எடுத்துக்கொண்டு ஆகாயத்தில் எழும்பினர்கள். குந்தியின் புத்திரனை அந்தத் தனஞ்சயன், ஆகாயத்தில் எழும்பின அந்தக் கந்தர்வர்களைக்கண்டு, பெரிய அம்புமழையினல் எல்லாப் பக்கங்களிலும் சூழ்ந்துகொண்டான். கூட்டில் கிளிகள்போல அம்புக்கூட்டத்தால் கட்டுப்படுத்தப்பட்ட அந்தக் கந்தர்வர்கள், கோபத்தால், அர்ஜுனன்மீது கதைகளையும் சக்திகளையும் ரிஷ்டிகளின் மழைபைபும் பொழிந்தார்கள். சிறந்த அஸ்திரங்களை அறிந்தவனை தனஞ்சயன் அந்தக் கதைகள் சக்திகள் ரிஷ்டிகளாகிய இவைகளுடைய மழைகளை அடித்து நாசம்செய்து அர்த்தசந்திரபாணங்களால் கந்தர்வர்களுடைய சரீரங்களை அடித்தான். தலைகளும் கால்களும் அப்படியே கைகளும் விழுவது கல்மாரிபோல விளங்கியது. பகைவர்களுக்குப் பயமுண்டாயிற்று. மிக்க தைரியமுள்ளவனை பாண்டவனல் வதம் செய்யப்படுகின்ற அந்தக் கந்தர்வர்கள் ஆகாயத்திலிருந்து கொண்டு பூமியிலிருக்கிற அர்ஜுனன்மீது அம்புமழைகளைப் பொழிந்தார்கள். பகைவர்களைத் தவிக்கச்செய்பவனும் தேஜஸ்வியுமான ஸவ்யஸாசியானவன், கந்தர்வர்களுடைய பாணவர்ஷங்களை அஸ்திரங்களால் தடுத்து அவர்களைத் திருப்பியடித்தான். குருநந்தனனை அர்ஜுனன் ஸ்தூணகர்ணத்தையும் இந்திரஜாலத்தையும் அப்படியே ஸௌராஸ்திரத்தையும் ஆக்நேயாஸ்திரத்தையும் ஸௌம்யாஸ்திரத்தையும் பிரயோகம்செய்தான். இந்திரனல் எரிக்கப்படுகின்ற அஸுரர்கள்போலக் குந்தீபுத்திரனுடைய அம்புகளாலெரிக்கப்படுகின்ற அந்தக் கந்தர்வர்கள் அதிகத் துயரத்தை அடைந்தார்கள். மேலே எழும்புகின்ற கந்தர்வர்கள் ஸவ்யஸாசியினல் பாணஸமூகத்தால் தடுக்கப்பட்டார்கள்; ஓடுகின்றவர்கள் அர்த்தசந்திரபாணங்களால் தடுக்கப்பட்டார்கள். பாரதரே! குந்தீபுத்திரனல் பயமடையும்படி செய்யப்பட்ட கந்தர்வர்களைக்கண்டு, சித்திரஸேனன் கதையை எடுத்துக்கொண்டு ஸவ்யஸாசியை நோக்கி எதிர்த்து ஓடிவந்தான். யுத்தத்தில் விரைவாக எதிர்த்து வருகின்றவனும் கதையைக் கையில் பிடித்தவனுமான அந்தச்சித்திரஸேனனுடைய முற்றிலும் உருக்குமயமான கதையைப் பார்த்தன் அம்புகளால் ஏழாகத் துண்டாடினன். அந்தச்

சித்திரஸேனன் பலசாலியான அர்ஜுனனுல் பாணங்களால் கதையானது பலவாறு அறுக்கப்பட்டதைக்கண்டு [1] திரஸ்கரிணீவித்தையினுல். தன்னைமறைத்துக்கொண்டு பாண்டவனேடு போர்புரிந்தான். வீரனான அர்ஜுனன் சித்திரஸேனனுல் நன்குபிரயோகிக்கப்பட்ட எல்லாத் திவ்யாஸ்திரங்களையும் அப்பொழுது திவ்யாஸ்திரங்களால் தடுத்தான். மிக்க வலிமையுள்ள அர்ஜுனனுல் அந்த அஸ்திரங்களால் தடுக்கப்படுகின்றவனும் சிறந்த பலமுள்ளவனுமான அந்தக் கந்தர்வராஜன் மாயையினுல் அப்பொழுது மறைந்தான். பிறகு, அர்ஜுனன் மறைந்துகொண்டு அடிக்கின்ற அந்தக் கந்தர்வராஜனைக் குறிவைத்துத் திவ்யாஸ்திரமந்திரங்களால் அபிமந்திரணம் செய்யப்பட்டு ஆகாயத்தில் ஸஞ்சரிக்கின்ற பாணங்களால் அடித்தான். அப்பொழுது, கோபங்கொண்டவனும் அதிக ரூபங்களுள்ளவனும் தனஞ்சயனென்கிற பிரஸித்தியைப்பெற்றவனுமான அர்ஜுனன், சப்தவேதமென்கிற அஸ்திரத்தை எடுத்து, மறைந்திருக்கிற அந்தக் கந்தர்வராஜனுடைய வதத்தைச் செய்யத் தொடங்கினன். மகாத்மாவான அர்ஜுனனுல் அந்த அஸ்திரங்களால் வதம் செய்யப்படுகின்ற இனிய நண்பனை அந்தச் சித்திரஸேனன் அப்பொழுது தன்ஸ்வரூபத்தை அர்ஜுனனுக்குக் காண்பித்தான். பிறகு, சித்திரஸேனன், யுத்தத்தில் அர்ஜுனனைப் பார்த்து, 'என்னை [2] நண்பனென்று நீ அறிவாயாக' என்று சொன்னன். அர்ஜுனனும் சித்திரஸேனனைக்கண்டு, 'இவன் தோழன்' என்று ஆச்சரியமடைந்தான். பாண்டவஸ்ரேஷ்டனான அர்ஜுனன், பிறகு, பிரயோகிக்கப்பட்டிருக்கிற அந்த அஸ்திரத்தைத் திருப்பியழைத்தான். பாண்டவர்களனைவரும், தனஞ்சயன் அஸ்திரத்தைத் திருப்பியழைத்ததைப்பார்த்து, யுத்தகளத்தில் வேகமாகச் செல்லுகின்ற குதிரைகளையும் பாண வேகங்களையும் வில்களையும் ஓயச்செய்தார்கள். சித்திரஸேனனும் பீமனும் ஸவ்யஸாசியும் நகுலஸஹதேவர்களும் ஒருவரை ஒருவர் குசல ப்ரச்னம் செய்துகொண்டு ரதங்களிலேயே இருந்தார்கள்.

[1] மறைப்பது. [2] 166-ம் பக்கம் பார்க்க.

இருநூற்றுநாற்பத்தேழாவது அத்யாயம்.

கோஷயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(சித்திரஸேனன் துர்யோதனனைக் கட்டினதற்குக் காரணத்தைக் கூறி யுதிஷ்டிரரிடம் போனதும், யுதிஷ்டிரர் துர்யோதனன் முதலியவர்களைக் கட்டிலிருந்து விடுவித்ததும், துர்யோதனன் தன் நகரம் சென்றதும்.)

பிறகு, பெரியவில்லைக் கையிற்பிடித்தவனும் அதிக காந்தியுள்ளவனுமான அர்ஜுனன் சிரித்துக்கொண்டு கந்தர்வ சேனவீரர்களின் நடுவில் சித்திரஸேனனைப் பார்த்து, 'வீர! கௌரவர்களைத் தண்டிக்கும் விஷயத்தில் உன்னுடைய அபிப்பிராயம் என்ன? எதற்காக இந்தத் துர்யோதனன் மனைவிகளுடன்கூடக் கட்டப்பட்டான்?' என்று வினவ, சித்திரஸேனன், 'தனஞ்சய! இந்திரன், கர்ணனெடுசேர்ந்தவனும் கெட்ட எண்ணமுள்ளவனுமான துர்யோதனன், வனவாஸத்துக்குத் தகுதியற்றவர்களும் வனத்தில் வஸிப்பவர்களுமான நீங்கள் துன்பப்படுவந்த அறிந்து, 'நல்ல நிலைமையிலிருக்கிற நான் கெட்ட நிலைமையிலிருக்கிற அந்தப் பாண்டவர்களைப் பார்ப்பேன்' என்றெண்ணின இந்த அபிப்பிராயத்தை ஸ்வர்க்கத்திலிருந்தே அறிந்தான். 'நிலை தப்பினவர்களான இந்தப் பாண்டவர்களையும், கீர்த்திபுள்ளவளான திரௌபதியையும் பரிஹஸிப்பதாக இவர்கள் வந்திருக்கிறார்கள்' என்கிற இவர்களுடைய கருத்தை அறிந்து தேவராஜன் என்னைப்பார்த்து, 'போ; துர்யோதனனை மந்திரிகளுடன் கட்டிக்கொண்டுவா. யுத்தத்தில் தனஞ்சயனை ப்ராதாக்களோடுகூட நீ காக்கவேண்டும். அந்தப் பாண்டவன் உனக்கு ப்ரியனான தோழன். உனக்குச் சிஷ்யனுமிருக்கிறான்' என்று சொன்னான். தேவராஜனுடைய வசனத்தினால் நான் ஸ்வர்க்கத்தினின்று வினாவாக இங்கு வந்தேன். இந்தத் துராத்மாவான துர்யோதனன் கட்டப்பட்டான். தேவலோகத்திற்குச் செல்லுவேன். பாகசாஸனனுடைய கட்டளையினால் இந்தத் துராத்மாவைக் கொண்டுபோவேன்' என்று சொன்னான். அர்ஜுனன், 'சித்திரஸேன! எனக்குப் ப்ரியத்தை நீ விரும்புகிறாயாகில் தர்மராஜருடைய கட்டளையினால் நம்முடைய ப்ராதாவான துர்யோதனனை அவிழ்த்துவிடவேண்டும்' என்று சொல்ல, சித்திரஸேனன், 'தனஞ்சய! தர்மராஜன் விஷயத்தி

லும் திரௌபதிவிஷயத்திலும் வஞ்சகனும் ஸாதுக்களுடைய துயரத்தில் நித்தியம் ஸந்தோஷப்படுகிறவனுமான இந்தப்பாவி யான்வன் விடுதலை அடைவதற்குத் தகுதியுள்ளவனல்லன். தர்மத் தால் பிரகாசிப்பவனும் குந்தியின் புத்திரனுமான யுதிஷ்டிரன், அவனுடைய இந்தக் கெட்ட எண்ணத்தை அறியான். இந்த விஷயத் தைக் கேட்டு நீ விரும்புகிறதைச் செய்வாயாக' என்று சொன்னான்.

அவர்களனைவருமே யுதிஷ்டிரராஜரை அடைந்தார்கள். அவரை அணுகி அந்தத் துர்யோதனனுடைய செய்கையனைத்தை யும் சொன்னார்கள். அஜாத சத்துருவானவர் கந்தர்வனுடைய அந்த வசனத்தை அப்பொழுது கேட்டுத் துரியோதனன் முதலியவர்களைக் கட்டிலிருந்து அவிழ்த்துவிடும்படி செய்தார்; அந்த எல்லாக் கந்தர்வர்களையும் புகழ்ந்தார். சித்திரஸேனன், அப்பொழுது, கந்தர்வர்களைப்பார்த்து, கம்பீரமான சொல்லால், 'இளைய ஸஹோதரர்களுடனும் மந்திரிகளுடனும் மனைவிகளுட னும்கூடத் துர்யோதனனை விட்டுவிடுங்கள்' என்கிற வாக்கி யத்தை உரைத்தான். கந்தர்வர்களோ சித்திரஸேனனுடைய அந்த வசனத்தைக்கேட்டு இருப்புச்சங்கிலிகளால் கட்டப்பட் டிருக்கிற துர்யோதனராஜனை மனைவிகளுடனும் பரிஜனங்களுட னும் மந்திரிகளுடனும் விரைவாக அவிழ்த்துவிட்டார்கள். மற்றும் எவர்கள் சணல் வலைகளால் கட்டப்பட்டிருந்தார்களோ அவர்களனைவரும் அப்பொழுது யுதிஷ்டிரருக்கருகில் கீழே விழுந்து தரையில்புரண்டு வெட்கத்துடன் தலைகுனிந்து நின்றார்கள். யுதிஷ்டிரரும், அந்த நிலைமையை அடைந்திருக்கிற அந்தக் கௌரவர்களைத் தயையுடன் பார்த்து, கந்தர்வர்களை நோக்கி, 'பாக்கியுள்ளவிசஷத்தால் பலசாலிகளும் வல்லமை யுள்ளவர்களுமான உங்களனைவராலும் கெட்ட நடையுள்ளவனும் மந்திரிகளோடும் ஜ்ஞாதிகளோடும் பந்துக்களோடும் கூடினவனு மான இந்தத் துரியோதனன் கொல்லப்படவில்லை. அப்பா! கந்தர்வ! எனக்கு இந்தப் பெரிய உபகாரம் உன்னால் செய்யப் பட்டது. துராத்மாவான இந்தத் துரியோதனனை விட்டதனால் என்னுடைய குலமானது அவமதிக்கப்படாததாயிற்று. உங்களைப் பார்த்ததனால் ப்ரீதியுள்ளவனான என்னை நோக்கி உங்களுடைய இஷ்டங்களைப்பற்றிக் கட்டளை இடுங்கள். எல்லா அபீஷ்டங் களையும் பெற்றுக்கொண்டு, பிறகு, விளம்பமின்றிச் செல்லுங்கள்' என்று சொன்னார்.

புத்திமானான பாண்டுபுத்திரரால் அனுமதிகொடுக்கப்பட்ட சித்திரசேனன் முதலிய கந்தர்வர்கள் அதிக சந்தோஷமுள்ளவர்களாக அப்ஸரஸ்ஸுகளோடுகூட ஸ்வர்க்கலோகத்தை நோக்கிச் சென்றார்கள். பிறகு, சித்திரசேனன் கந்தர்வர்களோடுசேர்ந்து அப்பொழுது தேவலோகத்தை அடைந்து இந்திரனிடத்தில் அவை அனைத்தையும் தெரிவித்தான். தேவராஜனும், எவர்கள் கௌரவர்களால் யுத்தத்தில் கொல்லப்பட்டார்களோ மரித்த அந்த எல்லாக் கந்தர்வர்களையும் திவ்யமான அமிருத வர்ஷத்தினால் பிழைக்கச்செய்தான். பாண்டவர்கள் அந்த ஜ்ஞாதிகளையும் எல்லா ராஜஸ்திரீகளையும் விடுவித்து ஒருவராலும் செய்யமுடியாத காரியத்தைச் செய்து மகிழ்ச்சியடைந்தார்கள். ஸ்திரீகளுடனும் குமாரர்களுடனுங்கூடின கௌரவர்களால் பூஜிக்கப்படுகின்றவர்களும் மஹாத்மாக்களும் மகாரதர்களுமான பாண்டவர்கள் யாகசாலையின்மத்தியில் அக்னிகள்போலப் பிரகாசித்தார்கள். பிறகு, கட்டவிழ்த்துவிடப்பட்ட துர்யோதனனைப்பார்த்து, யுதிஷ்டிரர், பிராதாக்களோடு கூடினவராக அப்பொழுது அன்பினால், 'அப்பா! மீண்டும் இப்படிப்பட்ட ஸாஹஸத்தை ஓரிடத்திலும் ஒருபொழுதும் செய்யாதே. பாரத! ஸாஹஸகார்யத்தைச் செய்பவர்கள் ஸுகமாக விருத்தியடைகிறதில்லையன்றோ? குருவம்சத்தை ஆனந்தமடையச் செய்பவனே! எல்லாப்பிராதாக்களோடும்கூடி க்ஷேமமாக இஷ்டப்படி வீட்டுக்குச் செல்வாயாக. மனோவருத்தத்தைப் போராட்டாதே' என்று சொன்னர். யுதிஷ்டிரரால் அனுமதி கொடுக்கப்பட்ட துர்யோதனராஜன் அப்பொழுது தர்மபுத்திரனைத் தண்டனிட்டு விபாதிபுள்ளவன்போல இந்திரிய சக்தியை இழந்தவனைகவும் (துக்கத்தால்) பிளக்கப்படுகின்றவனைகவும் வெட்கமுள்ளவனைகவும் நகரத்தைநோக்கிப் புறப்பட்டுச் சென்றான். கௌரவனை அந்தத் துர்யோதனன் சென்ற பிறகு, குந்திபுத்திரரும் வீரருமான யுதிஷ்டிரர், பிராதாக்களோடுகூடினவராகவும், பிராம்மணர்களால் பூஜிக்கப்படுகின்றவராகவும், தேவர்களால் இந்திரன் சூழப்பட்டதுபோல அப்படிப்பட்ட எல்லாத் தபஸிகளாலும் சூழப்பட்டவராகவும், ஸர்வகாமமுள்ளவராகவும் அந்த த்வைதவனத்தில் அவ்வாறு மகிழ்ந்திருந்தார்" என்று கூறினர்.

ஸ்ரீ மஹாபாரதம்.

இருநூற்றுநாற்பத்தெட்டாவது அத்யாயம்.

கோஷயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(துரியோதனன் நடுவழியில் தங்கியதும், கர்ணன் வந்து, கந்தர்வர்கள் கட்டியதையும் விட்டதையும் அறியாமல் துரியோதனன் வெற்றி பெற்றதாக எண்ணி அவனைப் புகழ்ந்ததும்.)

ஜனமேஜயர், "பகைவர்களால் வெல்லப்பட்டுக் கட்டப்பட்டவனும், பிறகு, மகாத்மாக்களான பாண்டவர்களால் யுத்தத்தால் விடுவிக்கப்பட்டவனும், அகங்காரமுள்ளவனும், மிகக் கெட்ட எண்ணமுள்ளவனும், தற்புகழ்ச்சி செய்பவனும், கொழுப்புள்ளவனும், எப்பொழுதுமே கர்வமுள்ளவனும், எப்பொழுதும் ஆண்மைகளாலும் ஔதார்யங்களாலும் பாண்டவர்களை அவமதிக்கின்றவனும், பாவியும், நிந்தியம் அகங்காரத்துடன் பேசுபவனுமான துர்யோதனனுக்கு ஹஸ்தினபட்டணத்தில் பிரவேசமானது செய்ய முடியாதென்று எனக்குத் தோன்றுகிறது. வைசம்பாயனரே! வெட்கத்துடன்கூடியவனும் சோகத்தால் மனம் கலங்கினவனுமான அந்தத் துர்யோதனனுடைய நகரப்பிரவேசத்தை எனக்கு நீர் விஸ்தாரமாக உரைக்கக்கடவீர்" என்று வினவினர்.

வைசம்பாயனர், "தர்மராஜரால் விடுவிக்கப்பட்ட திருதராஷ்டிரபுத்திரனை துரியோதனன் வெட்கத்தால் தலைகுனிந்தவனும் வாட்டமுற்றவனுமும் மிக்க துக்கமுள்ளவனுமும் நகரத்திற்குச் செல்லலானான். சதுரங்கசேனையினால் பின்தொடரப்பட்ட துர்யோதனராஜன் சோகத்தாலடிக்கப்பட்ட புத்தியினால் அவமானத்தை நினைத்துக்கொண்டு தன் பட்டணத்திற்குச் சென்றான். வழியில் கல்லபுல்லுகளும் தண்ணீருமுள்ள ஓரிடத்தில் வாகனங்களை விட்டுவிட்டு, மங்களகரமானதும் அழகியதுமான பூமியில் தன்னிஷ்டப்படி உட்கார்ந்தான்; யானைகளையும் குதிரைகளையும் ரதங்களையும் காலாட்களையும் இருக்க வேண்டிய இடங்களில் அமர்ந்திருக்கச் செய்தான். பிறகு, அக்னிபோல் ஜ்வலிக்கின்ற கட்டிலில் வீற்றிருப்பவனும் விடியற்காலத்தில் ராகுவினால் விழுங்கப்பட்ட சந்திரன்போன்றவனுமான துரியோதனனை அணுகிக் கர்ணன் அப்பொழுது, 'காந்தாரீநந்தன! பாக்கியவிசேஷத்தால் பிழைத்திருக்கிறாய். பாக்கியவிசேஷத்தால் நமக்கு மீண்டும் சேர்க்கை ஏற்பட்

டது. காமரூபிகளான கந்தர்வர்கள் தெய்வாதீனமாக உன்னல் ஜயிக்கப்பட்டார்கள். குருநந்தன! ரணகளத்தில் சத்துருஜயத்தில் விருப்பமுள்ளவர்களும் தக்க முயற்சியுள்ளவர்களும் மஹாரதர்களுமான உன்னுடைய பிராதாக்களனைவரையும் பாக்கிய விசேஷத்தால் சத்துருக்களை ஜயித்தவர்களாகக் காண்கிறேன். நானே நீ பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே எல்லாக் கந்தர்வர்களாலும் எதிர்த்துத் தாக்கப்பட்டவனைப் பிளக்கப்படுகிற சேனையை நிலைநிறுத்துவதற்குச் சக்தியுள்ளவனாகவில்லை. பாணங்களால் உடம்பு காயப்படுத்தப்பட்டவனும் எதிர்த்து அடிக்கப்பட்டவனுமாகி யுத்தத்தைவிட்டு ஓடிவிட்டேன். பாரத! இந்த இடத்தில் உங்களை நான் பார்ப்பதை அதிக ஆச்சர்யமாக நினைக்கிறேன். உங்களை சூக்ஷ்மமுள்ளவர்களாகவும் ஆயுதக் காயமில்லாதவர்களாகவும் தாராங்கதைளோடும் ஸைன்யங்களோடும் வாகனங்களோடுங்கூடினவர்களாகவும் அந்த அமானுஷமான யுத்தத்திலிருந்து விடுபட்டவர்களாகவும் பார்க்கிறேன். பாரதனே! மகாராஜனே! யுத்தத்தில் ப்ராதாக்களோடு கூடின உன்னால் செய்யப்பட்ட இதனைச் செய்கிற மனிதன் இவ்வுலகத்தில் இல்லை' என்று சொன்னான். அரசனே! கர்ணனால் இவ்வண்ணம் உரைக்கப்பட்ட அரசனை துரியோதனன், அப்பொழுது தலை குனிந்து கொண்டு கண்ணீரால் நடுமாற்றமுள்ள குரலுடன் பின்வருமாறு உரைக்கலானான்.

இருநூற்றுநாற்பத்தோன்பதாவது அத்யாயம்.

கோஷயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(துர்யோதனன் யுத்தத்தில் தம்பிமார்களுடன் கூடத் தான் கந்தர்வர்களால் கட்டப்பட்டதையும் யுதிஷ்டிரருடைய கட்டளையினால் பீமன்முதலியவர்கள் யுத்தத்தில் கந்தர்வர்களைத் தோல்வியடையச் செய்ததையும் சொல்லியது.)

துர்யோதனன், 'கர்ண! அறிவாதவனைபோலிருக்கிற உன்னுடைய வசனத்தைப்பற்றி நான் அலக்ஷியப்படவில்லை. நீ என்னால் சொல்லப்பட்டதினால் பகைவர்களான கந்தர்வர்கள் ஜயிக்கப்பட்டார்களென்று நினைக்கிறாய். நெடுநேரமும் என்னோடுகூட என்னுடைய தம்பிமார்கள் கந்தர்வர்களுடன் போர்புரிந்தார்கள்.

மிக்க புஜபலமுள்ளவனே! இருதிறத்திலும் நாசம் உண்டுபண்ணப் பட்டது. மாயை மிகுந்தவர்களான கந்தர்வ சூரர்கள் ஆகாசத்தை அடைந்து போர்புரிந்தபொழுது எங்களுக்கு ஆகாயத்தில் ஸஞ் சரிப்பவர்களோடு ஸமமான் யுத்தம் ஏற்படவில்லை. யுத்தத்தில் தோல்வியை அடைந்தோம்; கட்டவும் பட்டோம். அதிக துக்கத் தை அடைந்தவர்களான நாங்கள் வேலைக்காரர்களோடும் மந்திரி களோடும் புத்திரர்களோடும்கூடியவர்களாகவும் தாரங்களோடும் சேனைகளோடும் வாகனங்களோடும்கூடினவர்களாகவும் கந்தர்வர் களால் ஆகாயமார்க்கத்தால் மேலே கொண்டுபோகப்பட்டோம். பிறகு, நம்முடைய சில ஸைனிகர்களும் மந்திரிகளும் மகாரதர் களும் தீனர்களாக, அபயம் கொடுப்பவர்களான பாண்டவர்களை அணுகி, 'திருதராஷ்டிரகுமாரனான இந்தத் துர்யோதனராஜன் தம்பிமார்களோடுகூடியவனாகவும் அமாத்தியர்களோடும் தாரங் களுடனும்கூடியவனாகவும் தேவலோகவாஸிகளான கந்தர்வர் களால் கொண்டுபோகப்படுகிறான். மனைவிகளுடன் கூடின அந்த அரசனை விடுவியுங்கள். உங்களுக்கு மங்களம். குருகுலத்தில் பிறந்த அரசர்களுடைய தாரங்களனைவரையும் அன்யபுருஷர்கள் தொடாமலிருக்கட்டும்' என்று சொன்னர்கள். யுத்தத்தினின்று விடுபட்டவர்கள் தர்மராஜனை அணுகி இவ்வண்ணம் கூறினர்கள்.

இவ்வண்ணம் சொல்லப்பட்டவுடன், தர்மாத்மாவும் பாண்டுவின் மூத்த குமாரனுமான யுதிஷ்டிரன், அப்பொழுது, நல்ல வசனங்க களால் ஸந்தோஷத்தை அடையச் செய்து, தம்பிமாரெல்லாரை யும் கௌரவர்களை விடுவிக்கும் விஷயத்தில் கட்டளையிட்டான். பிறகு, புருஷச்ரேஷ்டர்களும் சக்திபுள்ளவர்களும் கார்முக் களும் மகாரதர்களுமான பாண்டவர்கள் அந்த இடத்தை வந் தடைந்து நல்வார்த்தைகளை முன்னிட்டுக்கொண்டு எங்களை விட்டுவிடவேண்டுமென்று கந்தர்வர்களை வேண்டினர்கள். ஆகாசத் தில் ஸஞ்சரிப்பவர்களும் வீரர்களும் மேகங்கள்போலக் கர்ஜிப் பவர்களுமான கந்தர்வர்கள் இன்சொற்களால் வேண்டப்பட்டும் எங்களை விடாமற்போனபொழுது அர்ஜுனனும் பீமனும் பலம் மிகுந்த நகுல ஸஹதேவர்களும் கந்தர்வர்களின் மீது அனேக மான சரமாரிகளை விடுத்தார்கள். பிறகு, எல்லாக்கந்தர்வர்களும் மனக்களிப்புடன் யுத்தத்தை விட்டுவிட்டுத் தீனர்களான எங்களை இழுத்துக்கொண்டே ஸ்வர்க்கத்தை நோக்கிச் செல்லலானர்கள். பிறகு, எல்லாப் பக்கங்களிலும் அம்புவலையால் சூழப்பட்டவனும்

அமானுஷமான அஸ்திரங்களைப் பிரயோகிப்பவனுமான தனஞ்சயனைக் கண்டோம். பாண்டுநந்தனனுல் கூர்மையான அம்புகளால் திசைகள் நன்றுக மூடப்பட்டதைக்கண்டு அப்பொழுது தனஞ்சயனுக்குத் தோழனை சித்திரசேனன் தன் ஸ்வரூபத்தைக் காண்பித்தான். சித்திரசேனனும் அர்ஜுனனும் ஒருவரையொருவர் கழுவிக் குசலப்ரச்னம் செய்தார்கள். மற்றப் பாண்டவர்களாலும் சித்ரசேனன் க்ஷேமம் விசாரிக்கப்பட்டான். அந்த வீரர்களான கந்தர்வர்கள் அப்படி ஒன்று சேர்ந்து யுத்தஸன்னகங்களை முழுதும் விட்டுப் பிறகு பாண்டவர்களோடு அந்யோந்யம் ஒன்று சேர்ந்தார்கள். சித்திரசேனனும் தனஞ்சயனுமாகிய இருவரும் ஒருவரோடொருவர் சேர்ந்து அதிக ப்ரீதியுள்ளவர்களாக ஒருவரையொருவர் பூஜித்தார்கள்.

இருநூற்றைம்பதாவது அத்யாயம்.

கோஷயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(துர்யோதனன் தான் கட்டுண்ட விஷயத்தில் சித்திரஸேனனும் அர்ஜுனனும் பேசிக்கொண்டதையும் யுதிஷ்டிரர் தன்னை விடுவித்ததையும் கூறிப் பிராயோபவேசந் செய்ய நிச்சயித்துத் துச்சாஸனனிடத்தில் ராஜ்யத்தை ஒப்பித்ததும், கர்ணன் துர்யோதனனைத் திருப்புவதற்காக அவனுக்கு இன்சொல் கூறியதும்.)

பகைவீரர்களைக் கொல்பவனான அர்ஜுனன், அப்பொழுது சித்திரசேனனுடன் சேர்ந்து சிரித்துக்கொண்டு, 'கந்தர்வஶ்ரேஷ்டனே! வீர! என்னுடைய பிராணர்களை நீ விடவேண்டும். பாண்டவர்கள் உயிரோடிருக்கும்பொழுது இவர்கள் பகைவர்களால் அவமதிக்கப்படத் தக்கவர்களல்லரன்றோ?' என்கிற இப்படிப்பட்ட கம்பீரமான வசனத்தைக் உரைத்தான். கர்ண! மஹாத்மாவான பாண்டவனுல் இவ்வண்ணம் சொல்லப்பட்ட கந்தர்வன், 'ராஜ்யத்திலிருப்பவனும் ஸ்ரீயினுல் வர்க்கப்பட்டவனுமான நான் ராஜ்யத்தினின்று நழுவினவர்களும் ஸ்ரீயினுல் கைவிடப்பட்டவர்களும் ஸுகத்தை இழந்தவர்களும் வீரர்களும் மனைவியுடன்கூடினவர்களுமான பாண்டவர்களைப் பார்ப்பேன்' என்று எந்த விஷயத்தைக் காம் ஆலோசித்துக்கொண்டு நகரத்திலிருந்து புறப்பட்டோமோ

அந்த விஷயத்தைச் சொன்னான். கந்தர்வனால் அந்தவிஷயமானது அவ்வாறு சொல்லப்படும் ஸமயத்தில் வெட்கத்துடன்கூடியவனாகப் பூமியிலுள்ள ஒரு வளையில் நுழைய விருப்பங்கொண்டேன். பிறகு, கந்தர்வர்கள் பாண்டவர்களோடுகூட யுதிஷ்டிரனை அணுகி அவனுக்கு நம்முடைய துராலோசனையையும் நாம் கட்டப்பட்டதையும் தெரிவித்தார்கள். சுட்டப்பட்டவனும் சத்துருவின் வசத்தை அடைந்தவனும் தீனனுமான நான் ஸ்திரீகளுக்கு எதிரில் யுதிஷ்டிரனுக்குக் காணிக்கையாகக் கந்தர்வர்களால் கொடுக்கப்பட்டேன். இதைவிடப் பெரிதான துக்கமென்ன இருக்கிறது? எவர்கள் என்னால் எப்பொழுதும் நிராகரிக்கப்பட்டார்களோ, எவர்களுக்கு நான் எப்பொழுதும் பகைவனோ அவர்களால், துர்ப்புத்தியுள்ளவனென நான் விடுவிக்கப்பட்டேன். அவர்களாலேயே உயிர் எனக்குக் கொடுக்கப்பட்டது. வீர! அந்த மகாயுத்தத்தில் நான் வதத்தை அடைந்திருந்தால் அந்த வதமானது எனக்கு நன்மையாக இருக்கும். இப்படி அவமதிக்கப்பட்டிருக்கிற எனக்கு உயிர் சிறந்ததாகாது. கந்தர்வர்களிடத்திலிருந்து ஏற்படும் வதத்தால் எனக்குப் பூமியில் புகழ் பரவினதாகும். இந்திரலோகத்தில் என்னால் அசூயமான புண்யலோகங்கள் அடையப்பட்வைகளாகும். புருஷஶ்ரேஷ்டர்களே! இப்பொழுது என்னுடைய முயற்சியைக் கேளுங்கள். இந்த இடத்தில் நான் பிராயோபவேசம் செய்வேன். நீங்கள் வீட்டுக்குச் செல்லுங்கள். என்னுடைய பிராதாக்கள் அனைவரும் இப்பொழுது தங்கள் பட்டணத்துக்குச் செல்லக்கடவர். கர்ணன்முதலிய நண்பர்களும் உறவினர்களும் துச்சாஸனனை முன்னிட்டுக்கொண்டு இப்பொழுது பட்டணத்தை நோக்கிச் செல்லக்கடவர். நண்பர்களுக்குக் கௌரவத்தை உண்டுபண்ணுகிறவனாகவும் பகைவர்களுடைய கௌரவத்தை அழிப்பவனாகவுமிருந்து, இப்பொழுது பகைவர்களால் நிராகரிக்கப்பட்ட நான் பட்டணத்தைநோக்கிச் செல்லமாட்டேன். இப்பொழுது நான் யுத்தமுனையில் பகைவர்களால் இவ்விதமாக அவமதிக்கப்பட்டேன். அப்படிப்பட்ட நான் நண்பர்களுக்குத் துயரத்தைக் கொடுப்பவனும் பகைவர்களுக்கு மகிழ்ச்சியை வளர்க்கிறவனுமாகிவிட்டேன். ஹஸ்தினபுரத்தை அடைந்து அரசரான திருதராஷ்டிரரை அணுகி என்ன சொல்லுவேன்? பீஷ்மரும் துரோணரும் கிருபரும் அஶ்வத்தாமாவும் விதுரரும் ஸஞ்சயனும் பாஹ்லீகரும் பூரிஶ்ரவஸும் பெரியோர்

களால் ஒப்புக்கொள்ளப்பட்ட மற்றவீரர்களும் பிராம்மணர்களும் சில்பிக்கூட்டத்தலைவர்களும் ஸ்வதந்திரஜீவனமுள்ளவர்களும் என்னைப்பார்த்து என்ன சொல்லுவார்கள்? நான் அவர்களைப்பார்த்து என்ன மறுமொழிசொல்லுவேன்? பகைவர்களுடைய தலையில்நின்று அப்படி அவர்கள்மார்பில் பராக்கிரமத்தைக் காட்டி உயர்ந்த நிலைமையிலிருந்து என்குற்றத்தால் கழுவிக் கீழே விழுந்திருக்கின்ற நான் அரசர் முதலானவர்களுக்கு என்ன சொல்லுவேன்? துஷ்டர்கள் ஸ்ரீயையும் வித்தையையும் ஸம்பத்தையுமடைந்தால், மதத்தினால் கர்வங்கொண்டவனை என்னைப்போல நெடுங்காலம் நல்ல பதத்திலிருக்கமாட்டார்கள். எதனால் பிராணஸம்சயத்தை அடைந்தவனானேனே அப்படிப்பட்ட இந்தக் கஷ்டமான கெட்டகார்யமானது கெடுமதியுள்ளவனை என்னால் அறியாமையால் செய்யப்பட்டது. அந்தோ! கஷ்டம்! ஆகையால், பிராயோபவேசம் செய்வேன். உயிரோடு இருப்பதற்கு நான் சக்தியுள்ளவனல்லேன். ஆபத்தினின்று பகைவர்களால் கரையேற்றிவிடப்பட்ட அறிவுள்ள எந்த மனிதன் உயிரோடிருப்பான்? கர்வமுள்ளவனை நான் பகைவர்களாலும் நகைக்கப்பட்டேன்; ஆண்மையினாலும் விடப்பட்டேன். வலிமைமிக்கவர்களான பாண்டவர்களாலும் அவமதிப்போடு பார்க்கப்பட்டேன்' என்று சொன்னான்.

இவ்வண்ணம் சிந்தையினால் கவரப்பட்டவனை தரியோதனன், பிறகு, துச்சாஸனனைப்பார்த்து, 'பாரத! துச்சாஸன! என்னுடைய இந்த வசனத்தைத் தெரிந்துகொள்வாயாக. நீ என்னால் கொடுக்கப்படுகிற இந்த ராஜ்யபட்டாபிஷேகத்தைப் பெற்றுக்கொள். ராஜாவாக இரு. கர்ணனாலும் சகுனியினாலும் பாதுகாக்கப்பட்டதும் ஸம்பத்தால் நிறைந்ததுமான பூமியையாள்வாயாக. இந்திரன் தேவர்களை ரக்ஷிப்பதுபோலத் தம்பிமார்களை அன்புடன் பரிபாலனம் செய்வாயாக. தேவர்கள் இந்திரனை அண்டிப்பிழைப்பதுபோலப் பந்துக்கள் உன்னை அண்டிப் பிழைக்கட்டும். அஜாக்கிரதையில்லாமல் எப்பொழுதும் பிராம்மணர்களுக்கு ஜீவனத்தை ஏற்படுத்துவாயாக. உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் நீ எப்பொழுதும் கதியாக இரு. விஷ்ணுவானவர் தேவகணங்களைப் பார்த்துக்கொள்வதுபோல ஞாதிகளையும் பார்த்துக்கொள்வாயாக. நீ பெரியோர்களைப் பரிபாலனம் செய்யவேண்டும்; போ. நண்பர்களை ஆனந்தமடையச் செய்துகொண்டும் பகைவர்களை

வரையும் வெருட்டிக்கொண்டும் பூமியைப் பரிபாலனம் செய்வாயாக' என்றுசொல்லி அவனைக் கழுத்தில் தழுவிக்கொண்டு, 'போகலாம்' என்றும் சொன்னான்.

அவனுடைய அந்தவச்னத்தைக்கேட்டுத் துச்சாஸனன் மனந் தளர்ந்தவனும் கண்ணீரால் குரல் தடைப்பட்டவனும் மிக்க துக்கத்தால் பீடிக்கப்பட்டவனுமாகிக் கைகளைக் குவித்துக்கொண்டு தண்டனிட்டுக் கூறலானான். துச்சாஸனன், 'கருணைபுரிவாயாக' என்று தமையனைநோக்கிப் பரிதாபமுள்ள மனத்துடனும் தடுமாற்றமுள்ள குரலுடனும் ஒருவாக்கியத்தைச் சொல்லிக்கொண்டு பூமியில் விழுந்தான். புருஷஸ்ரேஷ்டனான துச்சாஸனன் துக்கத்துடன் அந்தத் துர்யோதனனுடைய கால்களில் கண்ணீரை வடிக்கின்றவனாகி, 'இது இப்படி நேரக்கூடாது. பூமியானது முழுமையும் வெடித்துப்போகலாம். ஆகாசமும் துண்டுதுண்டாகப்போகலாம்; சூரியனும் தன்னுடைய ஒளியை இழக்கலாம்; சந்திரன் குளிர்ந்த கிரணங்களுடனிருந்தலை இழக்கலாம்; வாயுவும் விரைவாகச் செல்லும் தன்மையை விட்டுவிடலாம்; இமயமலையும் குளிர்ச்சியை இழக்கலாம்; ஸமுத்திரங்களில் ஜலமும் வறண்டுபோகலாம்; நெருப்பானது வெம்மையை விட்டுவிடலாம்; அரசனே! நீ இல்லாமல் நான் பூமியைப் பரிபாலனம்செய்யமாட்டேன். வேந்தனே! நீயே பகைவர்களுக்குச் சோகத்தை உண்டுபண்ணிக்கொண்டும் நண்பர்களுக்குச் சோகத்தைப் போக்கிக்கொண்டும் நம்முடைய குலத்தில் நூறுவருஷகாலம் அரசனாகஇருப்பாய். கிருபைசெய்வாயாக' என்கிற இந்தவாக்கியத்தை மீண்டும் மீண்டும் உரைத்தான்.

பாரதரே! அந்தத் துச்சாஸனன் துர்யோதனராஜனைப் பார்த்து இவ்வண்ணமுரைத்துப் பூஜைக்குத் தகுதியுள்ள தமையனுடைய பாதங்களை நன்றாகப் பிடித்துக்கொண்டு இனியகுரலாக அழுதான். அவ்வாறு துக்கமடைந்திருக்கின்ற அந்தத் துச்சாஸனனையும் துர்யோதனனையும் பார்த்துக் கர்ணன் மனவருத்தமுள்ளவனாக அவர்களை அணுகி, 'குருகுலத்தில் பிறந்தவர்களே! மூர்க்கஸ்வபாவத்தால் அல்பமனிதர்கள்போல ஏன் விசனப்படுகிறீர்கள்? துக்கப்படுகின்ற மனிதனுடைய சோகமானது ஒருபொழுதும் அவனைவிட்டு விலகாது. சோகமானது சோகத்திற்கு உடன்பட்டிருக்கிற மனிதனுடைய விசனத்தைப் போக்குகிறதில்லை. ஆதலால், சோகத்தை அனுபவிக்கின்ற நீங்கள் சோகத்தில் என்ன பயனைக் காண்கிறீர்கள்? தைர்யத்தை அடையுங்கள். சோகத்திற்கு

உடன்பட்டவர்களாக இருந்துகொண்டு பகைவர்களை ஆனந்த மடையும்படி செய்யாதீர்கள். அரசனே! பாண்டவர்களால் உனக்குச் செய்யத்தக்கதாகஇருக்கிற விடுவித்தலன்றோ செய்யப் பட்டது? அரசனுக்குத் தேசத்தில்வஸிப்பவர்கள் எப்பொழுது மே பிரியத்தைச் செய்யவேண்டும். அவர்கள் உன்னால் பரிபாலனம் செய்யப்பட்டன்றோ கவலையற்றவர்களாக வஸிக்கிறார்கள்? இது இவ்வாறிருக்க, ஸாமான்யமனிதன்போல நீ சோகத்தைப் பாராட்டுதல் தகாது. நீ பிராயோபவேசம்செய்வதில் உன்னுடைய ஸஹோதரர்கள் துயரத்தை அடைகிறார்கள். அரசனே! ஆகையால், பிராயோபவேசம் போதும். துக்கத்தில் முழுகியிருக்கிற இவர்க ளனைவரையும் கரையேற்றுவதற்காக எழுந்திரு; புறப்படு. உனக்கு மங்களம். ஸஹோதரர்களைத் தேறுதலடையச் செய்வாயாக.

இருநூற்றைம்பத்தோராவது அத்யாயம்.

கோஷயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(கண்ணன் பலவாறு வேண்டியதும், துரியோதனன் பிராயோப வேசத்தை விடாமலிருந்ததும்.)

வைசம்பாயனர் சொல்லுகிறார்: ஜனமேஜயனே! இப்பொழுது உனக்கே மனத்தளர்ச்சியையும் அப்படியே அல்பபுத்தியையும் காரியங்களில் விவேகமில்லாமை யையும் அறிகிறேன். தர்மங்களை அறிந்தவனே! பகைவர்களைக் கொல்பவனே! நிபுணனென்று பகைவர்களின் வசத்தை அடைந்த நீ, பாண்டவர்களால் விடுவிக்கப்பட்டவனாகிறா யென்பதில் என்ன ஆச்சர்யம்? குருவம்சத்திலுதித்தவனே! அறியப்படாதவர்களானா லும் அறியப்பட்டவர்களானாலும் சேனையிற்சேர்ந்து பிழைப்பவர் களும் அப்படியே தேசத்தில் வஸிப்பவர்களும் அரசனுக்கு விருப்பத்தைச் செய்யவேண்டும். தூரவர்களான மனிதர்கள் பகைவர்களுடையபடையைப் பெரும்பாலும் கலக்கி யுத்தங்களில் பிடிக்கப்படுகிறார்கள்; தம்படைவீரர்களால் விடுவிக்கவும்படுகிறார் கள். அரசர்களுடைய தேசத்தில் சேனையில்சேர்ந்து பிழைக்கிற மனிதர்களெல்லாரும் ஒன்றுசேர்ந்து உள்ளபடி ராஜகாரியத்திற்காக முயலவேண்டும். அரசனே! இப்படியிருக்க, உன்னுடையதேசத்தில் வஸிப்பவர்களான் பாண்டவர்களால் கிஞ்சியலாகச் சத்துருக் களிடத்தினின்று விடுவிக்கப்பட்டவனாக இருக்கிறாய். அந்தவிஷயத்

தில் புலம்புவான் ஏன்? அரசனே! உன்சேனையோடு யுத்தத்திற் காகச்செல்லுகின்ற ராஜஸ்ரேஷ்டனுன் உன்னைப் பாண்டவர்கள் பின்புறத்தில் தொடர்ந்துவராமலிருந்தது ஸரியன்று. சூரர்களும் பலசாலிகளும் யுத்தங்களில் புறங்காட்டிஓடாதவர்களுமான அந்தப் பாண்டவர்கள் முந்தியே ஸபையில் உனக்கு அடிமையாகிவிட்டார் கள். அவர்களுடைய சிறந்தபொருள்களை நீ இப்பொழுதும் அனுபவிக்கிறாய். (ஆயினும்) பாண்டவர்கள் உயிரோடிருக்கிறார் கள்; பார். அவர்கள் பிராயோபவேசம் செய்யவில்லை. மிக்க புஜபலமுள்ளவனே! ஆகையால், நீ இப்படிப்பட்ட துக்கத்தைப் பாராட்டலாகாது. வேந்தனே! எழுந்திரு. உனக்கு மங்களம். நீ கவலையடையத்தக்கவனல்லை. அரசே! தேசவாசிகள் அரசனுக்கு அவசியம் பிரியத்தைச்செய்யவேண்டும். அந்தவிஷயத்தில் புலம்பு வதேன்? பகைவர்களை நாசம்செய்பவனே! ராஜேந்திரனே! என்னுடைய இந்தவாக்கியத்தை நீ இவ்வண்ணம் செய்யாமற் போவாயாகில், உன்னுடைய பாதங்களுக்குப் பணிவிடைசெய்து கொண்டு .இவ்விடத்திலிருப்பேன். உன்னைப்பிரிந்து நான் உயிரோடிருக்கவிரும்பவில்லை. புருஷஸ்ரேஷ்டனை நீ அப்படி ப்ராயோபவேசம் செய்வாயாகில் அரசர்களுக்குப் பரிஹஸிக்கத் தக்கவனுவாய்' என்று சொன்னுன். கர்ணனுல் இவ்வாறு சொல்லப்பட்ட துரியோதனராஜன் அப்பொழுது ஸ்வர்க்கத்தை அடைவதில் ,நிச்சயமுள்ளவனுகி எழுந்திருப்பதற்கு மனத்தைச் செலுத்தவேயில்லை.

இருநூற்றைம்பத்திரண்டாவது அத்யாயம்.

கோஷயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(சகுனிமுதலியவர்களால் பலவாறு தேற்றப்பட்டும் துரியோதனன் பிராயோபவேச நிச்சயத்தினின்று திரும்பாமலிருக்கையில் பாதா ளத்தில்வஸிக்கின்ற தைத்யர்களும் தானவர்களும் அவனை அழைத்துவருவதற்காக ஒரு பிசாசத்தை உண்டுபண்ணி யதும், அது துரியோதனனைப் பாதாளத்திற்கு அழைத்துக்கொண்டுபோனதும்.)

அரசரே! பிராயோபவேசத்திலிருப்பவனும் (அவமானத் தைப்) பொறுதவனுமான துர்யோதனராஜனை அப்பொழுது

ஸுபலனுடைய குமாரனை சகுனியானவன், இன்சொற்கூறிக் கொண்டு, 'கௌரவ! கர்ணனால் நன்றாக உரைக்கப்பட்டதன்றோ? அதனை நீ கேட்டாயா? என்னால் (பாண்டவர்களிடத்திலிருந்து) பறிக்கப்பட்ட அப்படிப்பட்ட பெருஞ்செல்வத்தை மதிமயக்கத்தால் என்இழக்கிறாய்? ராஜஸ்ரேஷ்டனே! நீ புத்திக்குறைவினால் பிராணனைவிடவிரும்புகிறாய். அறிவுமுதிர்ந்தவர்களை நீ அடுக்கவில்லையென்பதை இப்பொழுதுதான் அறிகிறேன். எவன் மிக அதிகப்படுகின்ற ஸந்தோஷத்தையோ துக்கத்தையோ அடக்கவில்லையோ அவன் ஐஸ்வர்யத்தைப்பெற்றால் ஜலத்தில்போடப்பட்ட சுடாத மண்பாண்டம்போல அழிந்துபோகிறான். மிக்கபயமுள்ளவனும் மென்மைத்தன்மையுள்ளவனும் சக்தியற்றவனும் காரியங்களைத் தாமதமாகச்செய்பவனும் அவதானமில்லாதவனும் சூது குடிவேட்டைமுதலிய விசனங்கள்காரணமாக ஸ்திரீமுதலியவிஷயங்களால் கவரப்பட்டவனுமான அரசனுக்கு அடுத்தவர்கள் அன்புடன் ஊழியம்செய்யார். நன்மை செய்யப்பெற்ற உனக்கு எப்படி விபரீதமாகச் சோகமுண்டாகலாம்? பார்த்தர்களால் செய்யப்பட்ட நல்லகாரியத்தை நீ சோகத்தைஅடைந்து கெடுத்துவிடாதே. ராஜேந்திரனே! எந்தவிஷயத்தில் உன்னால் ஸந்தோஷம் பாராட்டப்படத்தக்கதோ பாண்டவர்களும் பூஜிக்கப்படத்தக்கவர்களோ அந்தவிஷயத்தில் சோகத்தைப் பாராட்டுகிறாய். உன்னுடைய இந்தக்காரியம் விபரீதமாக இருக்கிறது. தயைசெய்வாயாக. உயிரை இழக்காதே. ஸந்தோஷமுள்ளவனாக நன்றியை நினைப்பாயாக. பார்த்தர்களுக்கு ராஜ்யத்தைக்கொடு. கீர்த்தியையும் தர்மத்தையும் அடைவாயாக. இந்தக்காரியத்தை நீ நன்றாக அறிந்தால் நன்றிமறந்தவனாகமாட்டாய். பாண்டவர்களோடு ஸ்நேஹாதர ஸ்நேகத்தைச்செய்துகொண்டு அவர்களை நல்லநிலைமையிலிருக்கும்படிசெய்து அவர்களுக்குத் தங்கள்பிதாவைச்சேர்ந்ததான ராஜ்யத்தைக் கொடுத்துவிடு. பிறகு, ஸுகத்தை அடைவாய்' என்று கூறினான்.

துரியோதனன், சகுனியினுடைய வசனத்தைக்கேட்டு, கால்களில் விழுந்திருப்பவனும் வீரனும் தமையனிடத்திலுள்ள அன்பினால் வாட்டமுள்ளவனுமான துச்சாஸனனைப்பார்த்து, பகைவர்களை நாசம்செய்பவனான அவனை நன்கு திரண்டிருக்கிறஇருகைகளாலும் எடுத்துநிறுத்தி அன்புடன் நன்றாகத்தழுவிக்கொண்டு உச்சியில் முகர்ந்தான். அந்தத்துரியோதன

ராஜன், கர்ணனும் சகுனியுமாகிய இவர்களின் வசனங்களை நன்குகேட்டு அப்பொழுது (ஜீவித்திருப்பதில்) மிக்கவைராக்கியத்தை அடைந்து லஜ்ஜையினால் சூழப்பட்ட மனமுள்ளவனாக ராஜ்யலாபத்தில் அதிகமான [1] நைராச்யபத்தை அடைந்தான். துர்யோதனன், நண்பர்களுடைய அந்தவசனத்தைக் கேட்டுத் தீனத்தன்மையுள்ளவனாக, 'தர்மத்தினாலும் தனத்தினாலும் சௌக்கியத்தினாலும் ஐச்வர்யத்தினாலும் ஆஜ்ஞையினாலும் போகங்களாலும் எனக்குச் செய்யவேண்டுவது ஒன்றுமேயில்லை. என்னுடைய ஸங்கல்பத்தைக் கெடுக்காதீர்கள். போங்கள். பிராயோபவேசத்தில் என்னுடைய இந்தப்புத்தியானது நிச்சயமுள்ளதாயிருக்கிறது. எனக்குப் பூஜ்யர்களும் குருக்களுமாயிருக்கிற நீங்கள் எல்லாரும் நகரத்திற்குச் செல்லுங்கள்' என்று சொன்னான். இவ்வண்ணம் உரைக்கப்பட்டவர்களான அந்தச் சகுனி கர்ணன்முதலியவர்கள், பகைவர்களைவருத்துபவனான துர்யோதனனைப்பார்த்து, 'ராஜேந்திரனே! பாரத! உனக்கு எந்தக் கதியோ அது எங்களுக்குமுண்டாகட்டும். உன்னை இழந்தவர்களாக நாங்கள் எவ்வண்ணம் பட்டணத்தில் நுழைவோம்?' என்று மறுமொழிகூறினர்கள். நண்பர்களாலும் அமைச்சர்களாலும் பிராதாக்களாலும் உறவினர்களாலும் பலவிதமாகச் சொல்லப்பட்டும், துரியோதனன் பிராயோபவேசநிச்சயத்திலிருந்து அசைக்கப்படவில்லை. திருதராஷ்டிரனுடைபகுமாரனும் அரசர்களுள்சிறந்தவனுமான துரியோதனன் நிச்சயத்தினால் தர்ப்பங்களைப்பரப்பித் தீர்த்தத்தை ஆசமனம்செய்து பரிசுத்தனாகிப் பூமியில் நன்கு உட்கார்ந்தவனும் தர்ப்பங்களாலும் மரவுரிகளாலும் செய்தவஸ்திரத்தை உடுத்தவனும் சிறந்தநியமத்தைக் கைக்கொண்டவனும் மௌனவிரதத்துடன் கூடியவனுமாகி ஸ்வர்க்கத்தை அடையவேண்டுமென்கிற விருப்பத்தினால் ஸமீபத்தில் (தன் தேகத்தை எரிப்பதற்காகக்) காஷ்டங்களுடைய ஸமூகத்தை [2] மனத்தினால் ஸங்கல்பித்து ஸ்நானமானதை

[1] ஆசையின்மை.

[2] 'உநவெஸாவவிதிம் கூ்ருவா' என்பது மூலம்; இங்ஙனம் பொருள்செய்து, 'அவசியம் மரிக்கவே வேண்டுமென்று நிச்சயித்து என்பது கருத்து' என்பது பழையவுரை. 'உநவெஸாவவிதிம்' என்று பாடங்கொண்டு, 'மௌனவ்ரதமாக ஜபிக்கவும் பூஜிக்கவும் தொடங்கினேன்' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

விலக்கி ப்ராயோபவேசத்தில் மிக்க உறுதியுள்ள புத்தியை ஏற்படுத்திக்கொண்டு இருந்தான்.

பிறகு, அவனுடைய அந்த நிச்சயத்தை அறிந்து பாதாளத்தில் வஸிக்கிறவர்களும் பயங்கரமான உருவமுள்ளவர்களுமான அந்தத் தைத்யர்களும் தானவர்களும் தங்களுடைய பக்ஷத்திற்கு நாசமுண்டாகுமென்று அறிந்து துர்யோதனனை அழைப்பதற்காக அப்பொழுது [1] பலஅக்னிகளால் செய்வனவான [2] நவ்குண்டீ முதலிய கிரியைகளைச் செய்தார்கள். மந்திரங்களில் தேர்ந்தவர்கள் [3] உபநிஷத்துக்களால் சொல்லப்பட்டனவையும் மந்திர ஜபங்களோடு கூடினவையுமான அந்த எல்லாக் கிரியைகளையும் பிருஹஸ்பதியினாலும் சுக்கிராசார்யராலும் சொல்லப்பட்டவையும் அதர்வணவேதத்தில் சொல்லப்பட்டவையுமான மந்திரங்களால் அப்பொழுது செய்தார்கள். வேதவேதாங்கங்களில் கரைகண்டவர்களும் மிகவுறுதியான விரதமுள்ளவர்களுமான பிராம்மணர்கள் மனத்தை நன்குஅடக்கி, அக்நியில் பால்ரூபமான ஹவிஸை மந்திரத்துடன் ஹோமம்செய்தார்கள். பிறகு, தானவர்களுடைய அத்வர்யுக்கள் கிரியைகளை நடைபெறச்செய்தனர். அரசரே! அந்தயாகத்தில் கர்மாவின்முடிவில் மிக்க ஆச்சர்யகரமானதும் கொட்டாவிவிடுகின்றதுமான ஒருபெண்பேய் தோன்றியது; 'நான் என்ன செய்யக்கடவேன்?' என்றும் சொல்லியது. தைத்யர்கள் மிகமகிழ்ந்த மனத்தோடு அந்த [4] க்ருத்யையைப் பார்த்து, 'ப்ராயோபவேசம் செய்திருக்கிற திருதராஷ்டிரபுத்திரனான துர்யோதனராஜனை இங்கே கொண்டுவா' என்று சொன்னார்கள்; அந்தக்ருத்யையானது, 'அப்படியே' என்று

---

[1] 'கூடாநிவைதாந ஸாஹஸம்' என்பது மூலம்; 'பல அக்நிகளால் செய்யத்தக்க நவகுண்டீ முதலியவற்றைச்செய்தல்; அவை அதர்வணவேதமந்திரங்களால் செய்யப்படுவன; மற்ற மூன்று வேதங்களால் செய்யப்படுவனவல்ல' என்பது பழையவுரை.

[2] ஒன்பது அக்நிகுண்டங்களமைத்துச் செய்யும் ஒருவித யாகம்.

[3] ஆரண்யகத்தில் சொல்லப்பட்டவையும், 'ஸவ்ரும் வ்ருஷ்ய ஹ்ருதயம்வ்ருஷ்ய ஸிரோஹிவ்ரஜ யஜ்ஞீம் வ்ருஷ்ண்ய' என்பது முதலிய மந்திரங்களால் தெரிவிக்கப்பட்டவையும் பகைவரைக் கொல்லுதற்கானவையும் இந்த மந்திரங்களின் ஜபம் ஹோமம் முதலியவையுமான கிரியைகளை' என்பது பழையவுரை.

[4] 'ஏவினதைச்செய்யும் தேவதை' என்பது பழையவுரை.

களுமாகி ஜனங்களுக்கு அழிவை உண்டுபண்ணுவார்கள். மகாத் மாக்களான அந்த ஐந்துபாண்டவர்களும் எதிர்த்துப் போர்புரி வார்கள். தெய்வபலத்தையுடையவர்களும் மகாபலசாலிகளுமான அவர்கள் இவர்களை வதம்செய்வார்கள். அரசனே! அஸுர ராக்ஷ ஸர்களுடைய கூட்டத்தினர்கள் க்ஷத்திரியஜாதிகளில் தோன்றி யுத்தத்தில் பராக்ரமஞ்செய்து உன்னுடைய பகைவர்களோடு போர்புரிவார்கள். மகாபலசாலிகளான அந்த வீரர்கள் உன்னு டைய பகைவர்களைக் கதாயுதங்களாலும் உலக்கைகளாலும் சூலங்களாலும் பற்பல சஸ்திரங்களாலும் அடிப்பார்கள். வீரனே! அர்ஜுனனிடத்திலிருந்து உண்டான எந்தப்பயம் உன்னுடைய மனத்தினுள் இருக்கிறதோ அந்தப் பயவிஷயத் திலும் எம்மால் அர்ஜுனனுடைய வதோபாயமானது ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. கொல்லப்பட்ட நரகாஸுரனுடைய ஆத்மா வானது கர்ணனுடைய மூர்த்தியை அடைந்திருக்கிறது. வீரனே! அந்த வைரத்தை நினைத்துக்கொண்டவனாகக் கேசவனோடும் அர் ஜுனனோடும் கர்ணவடிவங்கொண்ட நாகன் போர்புரிவான். அடிப் பவர்களுள் சிறந்தவனும் மகாரதனும் பகைவரை வெல்வதில் வல்ல வனுமான அந்தக் கர்ணன் யுத்தத்தில் அர்ஜுனனையும் உன்னு டைய சத்துருக்களனைவரையும் ஜயிப்பான். வஜ்ரபாணியான இந்திரன், இதை அறிந்து அர்ஜுனனைக் காப்பதற்காகக் கபடத் தால் கர்ணனுடைய குண்டலங்களையும் கவசத்தையும் அபஹரிப் பான். ஆகையால், எங்களாலும் இந்த விஷயத்தில் லக்ஷிக்கணக் கான அஸுரர்களும் ராக்ஷஸர்களும் ஏவப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் [1] ஸம்சப்தகர்களென்று பிரஸித்திபெற்றிருக்கிறார்கள். பிரஸித்தர்களான அவர்கள் வீரனான அர்ஜுனனை யுத்தத்தில் கொல்லுவார்கள். நீ விசனப்படாதே. அரசனே! பகைவர்க ளில்லாத இந்தப் பூமியானது உன்னால் அனுபவிக்கத்தக்க தன்றோ? ஆகையால், நீ வியஸனமடையாதே. இந்தத் துக்கம் உனக்குத் தகாது. கௌரவ! நீ அழிந்தால் எங்களுடைய பக்ஷமும் குறைவடைந்துவிடும். வீரனே! நீ போ. எவ்விதத்தா லும் நீ வேறு எண்ணத்தைச் செய்யலாகாது. நீ எங்களுக்கு எப்பொழுதும் கதியாக இருக்கிறாய். தேவதைகளுக்குப் பாண் டவர்கள் கதி' என்று சொன்னார்கள். பாரதரே! கானவர்

[1] வெல்வது அல்லது இறப்பது என்று சபதம்செய்து போர்புரியும் வீரர்கள். துரோணபர்வம் 62-ம் பக்கம் குறிப்பிற்காண்க.

களுள் சிறந்தவர்களான அஸுரர்கள் இவ்வாறு சொல்லி ராஜ ப்ரேஷ்டனான அந்தத் துரியோதனனைத் தழுவிக்கொண்டு (எவ ராலும்) வெல்லமுடியாதவனான அவனைப் புத்திரனைத்தேற்றுவது போலத் தேற்றி அவனுடைய புத்தியை நிலைபெறச்செய்து பிரிய வசனங்களையும் சொல்லி, 'போகலாம்' என்று அனுமதி கொடுத்து, 'ஜயத்தை அடைவாயாக' என்றும் சொன்னார்கள். அவர்களால் அனுப்பப்பட்ட மிக்க புஜபலமுள்ள துர்யோதனனை அதே க்ருத்யையானது அப்பொழுது அவன் பிராயோபவேசம் செய்துகொண்டிருந்த இடத்திலேயே கொண்டுவந்து சேர்த்தது. அந்தக்ருத்யையானது அந்த வீரனை அந்த இடத்தில் கொண்டு வந்துவிட்டு அவனைப்பூஜித்து அரசனை அவனால் அனுமதி கொடுக்கப்பட்டு அந்த இடத்திலேயே மறைந்துபோயிற்று.

பாரதரே! அது மறைந்துபோனபிறகு, துர்யோதனராஜன் இந்த விருத்தாந்தங்களனைத்தையும் ஸ்வப்னம்கண்டதுபோல எண்ணினான். தானவர்களால் சொல்லப்பட்ட அந்த வாக்கியங் களை நன்றாக ஆலோசித்து, 'யுத்தத்தில் பாண்டவர்களை ஜயிப் பேன்' என்று துஷ்டபுத்தியுள்ள துர்யோதனனுக்கு எண்ண முண்டாயிற்று. அவன் கர்ணனையும் ஸம்சப்தகர்களையும் பகை வர்களைக்கொல்பவனான அர்ஜுனனுடைய வதத்தில் நோக்குள்ள வர்களென்றும் வல்லமையுள்ளவர்களென்றும் எண்ணினான். பரதஸ்ரேஷ்டரே! கெட்டபுத்தியுள்ளவனான அந்தத் துர்யோதன னுக்குப் பாண்டவர்களை ஜயிக்கும் விஷயத்தில் இவ்விதம் திடமான ஆசை உண்டாயிற்று. நாசகனுடைய அந்தராத்மாவினால் பிரே ரிக்கப்பட்ட மனமுள்ள கர்ணனும் அப்பொழுது அர்ஜுனனைக் கொல்வதில் க்ரூரமானபுத்தியைச் செலுத்தினான். வீரர்களான அந்த ஸம்சப்தகர்களும், ராக்ஷஸர்களால் பிரேரிக்கப்பட்ட சித்த முள்ளவர்களும் ரஜோகுணத்தாலும் தமோகுணத்தாலும் ஆக்கி ரமிக்கப்பட்டவர்களுமாகிப் பல்குனனுடைய வதத்தைச்செய்ய விருப்பமுற்றார்கள். அப்பொழுது, பீஷ்மர் துரோணர் க்ருபர் முதலிய வீரர்களும் தானவர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட மனத் துடன்கூடினவர்களாகப் பாண்டுவின் புத்திரர்களிடம் முன்போல் அப்படி அன்புள்ளவர்களாக இருக்கவில்லை. க்ருத்யையினால் அழைத்துக்கொண்டுபோய் இராக்காலத்தில் தானவர்களால் இந்தத் துரியோதனராஜனுக்கு எந்தவிஷயம் சொல்லப்பட்டதோ அதை இவன் ஒருவனுக்கும் சொல்லவில்லை. ஸூர்யகுமாரனும்

மிக்க தோள்வலிமையுடையவனுமான அந்தக் கர்ணன் விடியற் காலத்தில் அரசனான துர்யோதனனை அடைந்து புன்சிரிப்புடன் இருகரங்களையும் குவித்துக்கொண்டு, 'மரித்த மனிதன் பகை வர்களை ஜயிக்கிறதில்லை. உயிரோடிருப்பவன் நன்மைகளைப் பார்க்கிறான். கௌரவ! மரித்தவனுக்கு நன்மைகள் எங்கிருந்து உண்டாகும்? வெற்றி எங்கிருந்து உண்டாகும்? துயரத்திற்கோ பயத்திற்கோ மரணத்திற்கோ இது ஸமயமன்று' என்று சொல்லி, இருகைகளாலும் அவனைக்கட்டிக்கொண்டு, 'வேந்தே! எழுந்திரு. ஏன் படுத்திருக்கிறாய்? பகைவரைக் கொல்பவனே! யாது காரணத்தால் சோகத்தை அடைகிறாய்? வல்லமையால் சத் துருக்களை மிகவாட்டி வெற்றிபெற்றவனை நீ எவ்வாறு மரிப் பதற்குத் தகுதியுள்ளவன்? அல்லது, அர்ஜுனனுடைய பராக் கிரமத்தைப்பார்த்து உனக்குப் பயமுண்டாயிருக்கலாம். நான் உண்மையாக ப்ரதிஜ்ஞை செய்கிறேன். பதின்மூன்றுவர்ஷம் சென்றபிறகு, நான் யுத்தத்தில் அர்ஜுனனைக் கொல்வேன். இது ஸத்யம். ஆயுதத்தைத்தொட்டு ஆணை இடுகிறேன். ஜனங் களுக்கு அதிபதியே! நான் பார்த்தர்களை உனக்கு வசப்பட்டவர் களாகச் செய்வேன்' என்று சொன்னான்.

கர்ணனால் இவ்விதம் உரைக்கப்பட்ட துர்யோதனன், க்ஷத்ரி யர்களுடைய அப்படிப்பட்ட வசனத்தினாலும் துச்சாஸனன் முதலியவர் களுடைய வந்தனத்தாலும் பிராயோபவேசத்திலிருந்து எழுந் திருந்தான். புருஷச்ரேஷ்டனான துர்யோதனன் க்ஷத்ரியர்களு டைய அந்த வசனத்தைக்கேட்டு, மனத்தில் உறுதிசெய்துகொண்டு, பிறகு, ரதங்களாலும் யானைகளாலும் குதிரைகளாலும் காலாட் களாலும் நெருங்கிய சேனையை நகரத்தைக் குறித்துச் செல்வதற் காக வரிசைப்படுத்தினான். அவனுடைய பிரயாணத்தில் சேனை யானது கங்கையின் வெள்ளத்துக்கு ஒப்பாக விளங்கியது. வெள்ளைக்குடைகளாலும் கொடிகளாலும் மிக்க வெண்ணிறமுள்ள சாமரங்களாலும் ரதங்களாலும் யானைகளாலும் காலாட்களாலும் நெருங்கிய சேனையானது, நெருங்கிய மேகங்களில்லாதகாலத்தில் அன்னப்பறவைகளின் வரிசைகளால் நாற்புறங்களிலும் வியாபிக் கப்பட்டதும் வட்டமிடுகின்ற ஸாரஸபட்சிகளால் பிரகாசிக்கிறது மான சரத்காலத்தைச்சார்ந்த ஆகாயம்போல அதிகமாகப் பிரகாசித்தது. ராஜேந்திரனே! திருதராஷ்டிரனுடைய புத்திர னும் ஜனங்களுக்கு அதிபதியுமான அந்தத் துர்யோதனன்

பிராம்மணர்களால், 'ஜய, ஜய' என்னும் ஆசீர்வசனங்களால் சக்ரவர்த்திபோலத் துதிக்கப்படுகின்றவனும் ஜனங்களுடைய அஞ்சலி வரிசைகளை ஏற்றுக்கொள்ளுகின்றவனும் நிகரில்லாத காந்தியினல் ஜ்வலிக்கின்றவனுமாகக் கர்ணனைத் தேடும் சூதாடியான சகுனியோடும் முந்திச் சென்றனன். குருஸ்ரேஷ்டர்களான துச்சாஸனன் முதலிய எல்லாத் தம்பிமார்களும் பூரிஸ்ரவஸும் ஸோமதத்தனும் மகாராஜனை பாஹ்லீகனும் சென்றுகொண்டிருக்கின்ற அந்த ராஜஸ்ரேஷ்டனை ரதங்களோடும் பலவிதமான வடிவங்களுள்ள குதிரைகளோடும் சிறந்த யானைகளோடும் பின்தொடர்ந்து சென்றார்கள். ராஜேந்திரரே! துர்யோதனனை முந்திச்செல்பவனைக் கொண்ட எல்லாக்கௌரவர்களும் அப்பொழுது மிக்க மனக்களிப்புள்ளவர்களாகச் சிறிது காலத்தில் தங்களுடைய பட்டணத்தில் பிரவேசித்தார்கள்" என்று கூறினர்.

இருநூற்றைம்பத்துநான்காவது அத்யாயம்.

கோஷயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் துர்யோதனனிடம் பாண்டவர்களைப் புகழ்ந்து அவர்களோடு நட்பைச் செய்விக்க முயன்றதும், கர்ணனை நிந்தித்ததும், துரியோதனனுடைய அநுமதியினல் கர்ணன் திக்விஜயத்திற்காகப் புறப்பட்டதும்.)

ஜனமேஜயர், "மகாத்மாக்களான ஆந்தப் பாண்டவர்கள் அந்த வனத்தில் இவ்வண்ணமிருக்கும்பொழுது, பெரியவில்லைக் கையில் தாங்கியவர்களும் மிகச் சிறந்தவர்களுமான திருதராஷ்டிரபுத்திரர்களும் ஸூர்யகுமாரனை கர்ணனும் மிக்க பலசாலியான சகுனியும் பீஷ்மரும் துரோணரும் கிருபரும் யாதுசெய்தனர்? அதனை எனக்குச் சொல்லக்கடவீர்" என்று வினவ, வைசம்பாயனர் சொல்லலானர்.

"பார்த்தர்கள் இவ்வாறு சென்றபின், அவர்களால் விடுவித்து அனுப்பப்பட்ட துர்யோதனன் ஹஸ்தினபட்டணத்திற்கு வந்தவுடன், பீஷ்மர் துர்யோதனனைப் பார்த்து, 'மகாராஜனே! ஐயா! முன்பு, கோவனத்தைக்குறித்துப் புறப்படும் பொழுது உனக்கு என்னல் கூறப்பட்டது. என்னுடைய அந்த

வசனமானது உன் மனத்துக்குப் பிடிக்கவில்லை. (அதனால்) நீ அதனைச்செய்யவில்லை. வீரனே! அதனால், நீ பகைவர்களால் வலிந்து பிடிக்கப்பட்டாய். தர்மங்களை அறிந்த பாண்டவர்களால் விடுவிக்கப்பட்டவனாக இருக்கிறாய். உனக்கு வெட்கமில்லையா? பிரஜைகளுக்கு ரக்ஷிகனே! காந்தாரீநந்தன! அப்பொழுது, கர்ணன், போர்வீரர்களுடன்கூடின நீ பார்த்துக்கொண்டிருக்கையிலேயே, கந்தர்வர்களிடம் பயந்தவனாக யுத்தத்திலிருந்து ஓடினான். ராஜஸ்ரேஷ்டனே! ஸைனிகர்களுடன்கூடின நீ அலறி அழைக்கும் பொழுது, பின்புறத்தில் அடிக்கடி திரும்பிப்பார்த்துக்கொண்டு அந்தயுத்தத்தினின்று கர்ணன் ஓடினான். மிக்கதோள்வலியுள்ளவனே! உன்னால் மகாத்மாக்களான பாண்டவர்களுடையவல்லமையும் தர்ப்புத்தியுள்ளவனும் ஸுதபுத்திரனுமான கர்ணனுடையவல்லமையும் பார்க்கப்பட்டன. தர்மத்தில் அதிகவிருப்பமுள்ளவனே! தனுர்வேதத்திலும் சௌர்யத்திலும் கர்மத்திலும் கர்ணன் மகாத்மாக்களானபாண்டவர்களுடைய நாலில் ஒருபாகத்துக்கும் ஒப்பாகான். ஸந்தியை அறிந்தவர்களுள் சிறந்தவனே! ஆகையால், இந்தக்குலத்தின் அபிவிருத்தியின்பொருட்டு மகாத்மாக்களான அந்தப்பாண்டவர்களோடு நட்பை நான் தக்கதென்று நினைக்கிறேன்' என்று சொன்னார்.

அரசரே! பீஷ்மரால் இவ்வண்ணமுரைக்கப்பட்ட துரியோதனராஜன், உரக்கச்சிரித்துவிட்டு, உடனே சகுனியுடன் கூடி அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டுவிட்டான். அந்தத் துரியோதனன் புறப்பட்டதைத் தெரிந்துகொண்டு கர்ணன் துச்சாஸனன் முதலிய சிறந்த வில்லாளிகள் மகாபலசாலியான அவனைப் பின்தொடர்ந்தார்கள். வீரரே! கௌரவர்களுக்குப்பிதாமஹரான பீஷ்மர், அவர்கள் அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டதைக்கண்டு லஜ்ஜையினால் மனமுருக்க மடைந்து தம்மாளிகைக்குச்சென்றார். மஹாராஜரே! பாரதரே! பீஷ்மர் போனபிறகு, ஜனங்களுக்குத் தலைவனான துரியோதனன் மீண்டும் அந்தஇடத்திற்குவந்து மந்திரிகளோடுசேர்ந்து, 'நமக்கு எது நன்மையைப்பயக்கக்கூடியதாக இருக்கும்? செய்யவேண்டியது எது மிச்சமிருக்கிறது? எவ்வாறு அந்தக்கார்யம் நம்மால் நன்குசெய்யப்பட்டதாகும்?' என்று ஆலோசனைசெய்தான். கர்ணன், 'துர்யோதன! குருவம்சத்தில் பிறந்தவனே! நான் சொல்வதைத் தெரிந்துகொள்வாயாக. பீஷ்மர் எப்பொழுதும் நம்மை இகழ்கிறார்; பாண்டவர்களைப் புகழ்கிறார்; மிக்க தோள்வலிமையுள்ள

வனே! உன்னிடத்திலிருக்கின்ற பகைமையால் என்னையும் பகைப் பவராகிறார். அரசனே! உன்னிடம் நாள்தோறும் என்னை நிந்திக் கிறார். பாரத! பகைவர்களை அழிப்பவனே! அரசனே! பாண்டவர் களுடையபுகழ்ச்சியைப்பற்றியும் உன்னுடைய இகழ்ச்சியைப்பற்றி யும் பீஷ்மரால் உன்எதிரில் சொல்லப்பட்ட அவருடைய அந்த வசனத்தை அப்படிப்பட்ட நான் பொறுக்கவில்லை. அரசனே! மேலைக்காரர்களோடும் படைகளோடும் வாகனங்களோடும்சேர்ந்து யுத்தத்திற்குப்புறப்பட எண்ணங்கொண்டிருக்கிற எனக்கு அனு மதிகொடுப்பாயாக. அரசனே! மலைகளோடும் வனங்களோடும் பெருங்காடுகளோடும்கூடின பூமியை ஜயிப்பேன். மஹாபலசாலி களான நான்குபாண்டவர்களால் பூமியானது ஜயிக்கப்பட்டது. அந்தப்பூமியை உனக்காக நான் ஒருவனே ஜயிப்பேன்; ஸந்தேக மில்லை. குருவம்சத்தில்பிறந்தவர்களுள் அதமரும் மிக்கதுர்ப் புத்தியுள்ளவருமான பீஷ்மர் நன்றாகப்பார்க்கட்டும். எவர் இகழத் தகாதவனானென்னை இகழ்கிறாரோ, புகழத்தகாதவனான அர்ஜு னைப் புகழ்கிறாரோ அவர் என்னுடையபலத்தை இப்பொழுது பார்க்கட்டும்; தம்மைநிந்தித்துக்கொள்ளட்டும். அரசனே! எனக்கு அனுமதிகொடுப்பாயாக. உனக்கு ஜயமானது நிச்சயமன்றோ? அரசனே! உன்னிடத்தில் ஸத்தியமாக ப்ரதிஜ்ஞைபண்ணுகிறேன். ஆயுதத்தைத் தொடுகிறேன்' என்றுசொன்னான்.

மேன்மையே! பரதர்களுள்சிறந்தவரே! கர்ணனுடைய அந்த வச னத்தைக்கேட்டு, அரசனானதுரியோதனன், அதிகப்ரீதியுடன் கர்ண னைப்பார்த்து, 'மிக்க பலசாலியான நீ என்னுடைய ஹிதங்களில் எப் பொழுதும் என்னத்தனை இருந்தாலால், நான் பாக்கியவானாக இருக் கிறேன்; அனுக்ரஹிக்கப்பட்டவனாக இருக்கிறேன். என்னுடைய பிறப்பு இப்பொழுது பயனுள்ளதாயிற்று. வீரனே! நீ எல்லாச்சத்ருக் களுடைய நாசத்தையும் எண்ணுகிறபடியாதலால் புறப்படுவாயாக. உனக்கு மங்களம். என்னை நோக்கி (வேண்டியவற்றைக்) கட்டளை யிடுவாயாக' என்று சொன்னான். பகைவர்களை அழிப்பவரே! சிறந்தபுத்தியுள்ளவனான துரியோதனனால்இவ்வுண்ணம் உரைக்கப் பட்ட கர்ணன் அப்பொழுது பிரயாணத்துக்கு உரிய (வண்டிகள் கடைவீதிகள்முதலிய) எல்லாவற்றையும் கட்டளையிட்டான். பெரிய வில்லைக் கையில் தாங்கியவனான கர்ணன் கல்லதிதியில் கல்லமுகூர்த் தத்தில் சுபமான தேவனைதியுடன்கூடின நக்ஷத்திரத்தில் பிராம்ம ணர்களால்பூஜிக்கப்படுகிறவனாகவும் மங்களகரமான பரிசுத்தவஸ்

துக்களால் ஸ்நானம்செய்தவனுகவும் வாக்குக்களாலும் நன்கு துதிக்கப்பட்டவனுகவும் தேரின்ஒலியினுல் சராசரங்களுடன் கூடின மூவுலகங்களையும் ஒலியிடும்படிசெய்துகொண்டு திக்குவிஜயத்திற்காகப் புறப்பட்டான்.

இருநூற்றைம்பத்தைந்தாவது அத்யாயம்.

கோஷயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(திக்கு விஜயத்திற்குப் புறப்பட்ட கர்ணன் எல்லா அரசர்களையும் வசப்படுத்தி மீண்டும் றெஸ்தினபட்டணத்திற்கு வந்தது.)

பரதர்களுள்சிறந்தவரே! பிறகு, பெரிதானவில்லைக்கையில் தாங்கின கர்ணன், பெரியசேனையினுல் சூழப்பட்டவனுக, த்ருபதனுடைய அழகியநகரத்தை முற்றுகைபோட்டான். ராஜஸ்ரேஷ்டரே! வீரனான இத்தத்ருபதனைப் பெரியயுத்தத்தினுல் தனக்குவசப்படும்படிசெய்தான்; ஸ்வர்ணங்களையும் வெள்ளிகளையும் பற்பல ரத்தினங்களையும் கப்பமாகக்கொடுக்கும்படியும் செய்தான். ராஜேந்திரனே! அந்தத்ருபதனைஜயித்து அவனை அனுசரித்துவந்தவர்களனைவரையும் தனக்கு வசப்பட்டவர்களாகச் செய்தான்; அவர்களைத் தனக்குக் கப்பம் கொடுக்கும்படியும் செய்தான். பிறகு, வடதிசையை அடைந்து அரசர்களைத் தன் வசப்படுத்தினன். பகைவர்களோடுபோர்புரிகின்ற ராதாபுத்திரனான கர்ணன் பகுதத்தனைஜயித்து மலைகளுக்கரசனுக இடைய மலையின்மீது ஏறினன். அங்கே அவன் எல்லாத்திசைகளிலுமுட் சென்று எல்லா அரசர்களையும் வசமாக்கிக்கொண்டான். அவன் இமயமலையில் வஸிப்பவர்களனைவரையுமட் ஜயித்துக் கப்பத்தைக் கொடுக்கும்படி செய்தான்; கோபாலகுலத்திலிருந்த அரசர்களையும் வென்றான். பிறகு, அந்த இமயமலையிலிருந்து கீழே இறங்கிக் கீழ்த்திசையில் விரைவாகச் சென்றான். அவன் அங்கதேசத்தையும் வங்கதேசத்தையும் கலிங்கதேசத்தையும் பாண்டியதேசத்தையும் மிதிலாதேசத்தையும் மகததேசத்தையும் கர்க்கசண்டத்தையும் ஜயித்து வசப்படுத்திக்கொண்டு ஆவரதேசத்தையும் யோத்யதேசத்தையும் அஹிக்ஷத்ரதேசத்தையும் ஜயித்தான். கீழ்த்திசையை நன்றுக ஜயித்து அப்படியே வத்ஸதேசத்தை அடைந்தான். வத்ஸதேசத்தை ஜயித்துக் கேவலனையும் மற்றும்

திகாவதியையும் மோஹன பட்டணத்தையும் த்ரிபுரியையும் கோஸலையையும் ஜயித்தான்.. ஸஹதேவனுடைய புத்திரனான கர்ணன் இந்தத் தேசங்களனைத்தையும் ஜயித்து எல்லாத் தேசத்தரசர்களிடமிருந்தும் கப்பத்தைப் பெற்றுக்கொண்டு தென்திசையை அடைந்து மஹாரதர்களை ஜயித்துத் தென்னாட்டிலுள்ள வீரர்களுள் ருக்மியோடு போர்புரிந்தான். அந்த ருக்மியானவன் ஸங்குலயுத்தத்தைச் செய்து ஸஹதேவபுத்திரனைப் பார்த்து, 'ராஜேந்திர! உன்னுடைய விக்கிரமத்தாலும் பலத்தாலும் ப்ரீதியுள்ளவனாக இருக்கிறேன். உனக்கு இடையூற்றை நான் செய்யமாட்டேன். க்ஷத்திரியதர்மத்தைப் பாதுகாத்தேதன். எவ்வளவு ஸ்வர்ணத்தை நீ விரும்புகிறாயோ அவ்வளவை நான் அன்புடன் கொடுக்கிறேன்' என்று சொன்னான். அந்தக் கர்ணன் ருக்மியுடன்சேர்ந்து பாண்டியநாட்டையும் ஸ்ரீசைலத்தையும் அடைந்தான். அந்தக் கர்ணன் யுத்தத்தில் தனித்திருக்கிற நீலனென்கிற அரசனையும் வேணுதாரியின் புத்திரனையும் மற்றுமுள்ள சிறந்த அரசர்களையும் ஜயித்தான். தென்திசையிலுள்ள அரசர்களனைவரையும் கப்பங்களைக் கொடுக்கும்படி செய்தான். மகாபலசாலியான ஸஹதேவபுத்திரன், பிறகு, சிசுபாலனுடைய புத்திரனை அடைந்து அவனை ஜயித்தான். அவனுக்குப் பக்கத்துணையாக வந்த அரசர்களையும் தன் வசத்திலிருக்கச் செய்தான். பரதர்களுள் சிறந்தவரே! ஸாமோபாயத்தால் அவந்திதேசத்தரசர்களையும் தன்வசத்திலிருக்கச்செய்து விருஷ்ணிகளுடன்சேர்ந்து மேல்திசையையும் ஜயித்தான். வருணனை அதிபதியாகக்கொண்ட மேல்திசையை நாடி மேற்குத்தேசத்திலிருப்பவர்களான யவனராஜர்களையும் பர்ப்பர மன்னர்களையும் ஜயித்துக் கப்பம்கொடுக்கும்படி செய்தான். வீரனும் நீதிபரிபாலனத்துகிறவனும் ஸஹதேவனுமான கர்ணன், கீழ்நாடுகளுடனும் மேல்நாடுகளுடனும் தென்னாடுகளுடனும் கூடின பூமிமுழுமையையும் ஜயித்துச் சிரிக்கிறவன்போலிருந்து கொண்டு அனுபாலமாகவே மிலேச்ச அரசர்களையும் காட்டரசர்களையும் மலையில்வஸிப்பவர்களையும் பத்ரர்களையும் ரோஹிதகர்களையும் ஆக்ரேயர்களையும் மாளவர்களையும் எல்லாக் கூட்டங்களையும் ஜயித்து மகாரதர்களான நக்னஜித்முதலிய வீரர்களுடைய கணங்களையும்ஜயித்துச் சகர்களையும் யவனர்களையும் ஜயித்தான். மஹாரதனும் புருஷஶ்ரேஷ்டனுமான அந்தக்கர்ணன் இவ்வண்ணம் பூமிமுழுமையையும் ஜயித்துத் தன்வசத்திலிருக்கும்படி

செய்துகொண்டு ஹஸ்தினபட்டனத்திற்கு வந்தான்.

மகாராஜரே! ஜனங்களுக்கு அதிபதியான துரியோதனன், யுத்தத்தில் விஜயத்தினல் பிரகாசிப்பவனும் வந்திருக்கின்ற மகாவீரனுமான அந்தக் கர்ணனைப் பிராதாக்களோடும் பிதாவோடும் உறவினர்களோடும் எதிர்கொண்டுபோய் விதிப்படி அர்ச்சித்தான். ஜனங்களுக்கு ஈச்வரனை துரியோதனன் பிரீதிபுள்ளவனாக அவனுடைய ஜயத்தை (நகரில்) பறையறைவித்தான். அவன், 'பீஷ்மரிடமிருந்தும் துரோணரிடமிருந்தும் க்ருபரிடமிருந்தும் பாஹ்லீகரிடமிருந்தும் எதனை நான் அடையவில்லையோ அதனை அடைந்தவனாகிறேன். உனக்கு மங்களம். அது உன்னிடத்திலிருந்தன்றோ என்னல் அடையப்பட்டது? கர்ண! அதிகமாகப்பேசுவதனல் யாது பயன்? என்னுடைய வசனத்தைக்கேட்பாயாக. மிக்கபுஜபலமுள்ளவனே? மிக்கசிறப்புவாய்ந்தவனே! நாதனை உன்னல் நாதனுள்ளவனாக இருக்கிறேன். புருஷச்ரேஷ்டனே! அப்படிப்பட்ட பாண்டவர்களனைவரும் மேலும் மேலும் விருத்தியடைந்துவருகிற மற்ற அரசர்களும் உன்னுடைய ஸாமர்த்தியத்தில் பதினுறில் ஒரு பாகத்துக்கும் ஈடாகார். கர்ண! பெரியவில்லைக் கையில்தாங்கியவனே! அப்படிப்பட்ட நீ இந்திரன் அதிதியைப் பார்ப்பதுபோல அந்தத் திருதராஷ்டிரனையும் புகழ்பெற்றவளான காந்தாரியையும் பார்' என்றான். பிரஜைகளுக்கு அதிபதியே! பிறகு, ஹஸ்தினபட்டனத்தில் கலகல என்னும் ஒலியும், ஆ! ஆ! என்னும் ஒலியும் பலவாகத்தோன்றின. ஜனங்களுக்கு அதிபதியே! அந்த நகரத்தில் இந்தக்கர்ணனைச் சிலர் புகழ்ந்தார்கள்; சிலர் இகழ்ந்தார்கள். சில அரசர்கள் பேசாமலிருந்தார்கள். ராஜேந்திரரே! பூபதியே! சஸ்திரங்களைத் தரித்தவர்களுள் சிறந்தவனான கர்ணன், பர்வதங்களோடும் வனப்ரதேசங்களோடுங்கூடியதும் ஸமுத்திரங்களுள்ளதும் வீடுகளைச்சார்ந்த பூந்தோட்டங்களுடன் கூடியதும் பற்பல தேசங்களாலும் பட்டணங்களாலும் நகரங்களாலும் நிறைந்ததும் நீர்ப்பாங்கான தரைகளால் நிறைந்திருக்கின்ற தீவுகளால் நிரம்பியதுமான பூமியை இவ்வண்ணம் ஜயித்துச் சிறிது காலத்தினுள் அரசர்களைத் தன் வசத்திலிருக்கச்செய்து குறைவற்ற பொருள்களை எடுத்துக்கொண்டு துரியோதனராஜனை வந்தடைந்தான். மன்னரே! பகைவர்களை அடக்கும் திறமையுள்ளவரே! வீரனான அந்தக்கர்ணன் அரண்மனையில் உள்ளே பிரவேசித்துக் காந்தாரியுடன் சேர்ந்திருக்கிற திருதராஷ்டிரனைக் கண்டான்.

புருஷச்ரேஷ்டரே! தர்மங்களை அறிந்த கர்ணன், புத்திரன்போல அவனுடைய இருகால்களையும் பிடித்து வணங்கினன். திருதராஷ்டிரனும் அன்புடன் தழுவிக்கொண்டு விடப்பட்டான். பாரதரே! அந்த ஸமயம் தொடங்கி, துரியோதனராஜனும் ஸுபலனுடைய புத்திரனை சகுனியும், யுத்தத்தில் கர்ணனுல் பார்த்தர்களை ஜயிக்கப்பட்டவர்களாக எண்ணினர்கள்.

இருநூற்றைம்பத்தாறுவது அத்யாயம்.

கோஷயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(துரியோதனன் ராஜஸூய யாகத்தைச் செய்விக்கும்படி பிராம்மணர்களை வேண்டியதும், அவர்கள் காரணங்களைச் சொல்லி ராஜஸூயயாகம் செய்வதை மறுத்து அவனை வேறு யாகத்தைச் செய்ய ஏவியதும்.)

அரசரே! ஜனங்களுக்குத் தலைவரே! பகைவீரர்களை நாசம் செய்பவனும் ஸுதபுத்திரனுமான கர்ணன், பூமியை ஜயித்துத் துரியோதனனைப்பார்த்து, 'துரியோதன! கேளாய! நான் உனக்குச்சொல்லும் வசனத்தைத் தெரிந்துகொள். பகைவர்களை அடக்குபவனே! என் சொல்லைக்கேட்டு அப்படியே எல்லாவற்றையும் நீ செய்யவேண்டும். வீர! அரசர்களில் சிறந்தவனே! இப்பொழுது உன்னுடைய பூமியானது பகைவர்களில்லாததாக இருக்கிறது. பகைவரைப்பழித்தவனும் பெரிய மனமுள்ளவனுமான நீ இந்திரன்போல இந்தப்பூமியைப் பரிபாலனம் செய்வாயாக' என்று வசனத்தை உரைத்தான். 'கர்ணனால் இவ்வாறு உரைக்கப்பட்ட துரியோதனராஜன், மீண்டும் கர்ணனைப்பார்த்து, 'புருஷச்ரேஷ்டனே! எனக்கு நீ உதவிபுரிபவனாகவும் அன்புள்ளவனாகவுமிருக்கிறாயே அவனுக்குக் கிடைக்க அரியது ஒன்றுமில்லை. நீ என்னுடைய க்ஷேமத்திற்காகவே கல்லமுயற்சியுள்ளவனாக இருக்கிறாய். ஆனல், எனக்கு ஓர் அபிப்பிராயமிருக்கிறது. அதனை உள்ளபடி கேட்பாயாக. ஸுதநந்தன! அப்பொழுது பாண்டவனுடைய யாகங்களுள் சிறந்த ராஜஸூயத்தைக்கண்டு எனக்கு ஆவலுண்டாயிற்று. அந்த ஆவலை நீ நிறைவேற்றி வைப்பாயாக' என்று சொன்னேன். இவ்விண்ணப்பஞ்செய்யப்பட்ட கர்ணன், பிறகு, அரசனை நோக்கி, 'அரசர்களுள் உத்தமனே! அரசர்

களனைவரும் இப்பொழுது உனக்கு வசப்பட்டிருக்கிறார்கள். குருஸ்ரேஷ்டனே! பிராம்மணர்களை அழைக்கலாம். சாஸ்திரவிதிப்படி ஸம்பாரங்களையும் யாகத்திற்குவேண்டிய உபகரணங்களையும் சேகரிப்பாயாக. அரசனே! பகைவர்களை அடக்குகிறவனே! சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி வேதங்களின் கரைகண்டவர்களும் நன்கு அழைக்கப்பட்டவர்களுமான ரித்விக்குக்களும் சாஸ்திரப்படி உனக்கு யஜ்ஞத்தைச் செய்விக்கக் கடவர். பரதஸ்ரேஷ்டனே! மிகுதியான அன்னபானங்களுடன் கூடியதும் மிக நிரம்பின குணங்களோடுகூடியதுமாக உன்னுடைய மஹாயாகமும் தொடங்கப்படலாம்' என்றுசொன்னன்.

பிரஜைகளுக்குப்பதியே! கர்ணனல் இவ்வண்ணமுரைக்கப்பட்ட துரியோதனன் புரோஹிதரை அழைத்து, 'நிரம்பின சிறந்த தக்ஷிணைகளையுடைய ராஜஸூயமென்கிற சிறந்த யாகத்தைச் சாஸ்திரப்படியும் நியாயப்படியும் முறைப்படியும் செய்வீராக' என்று சொன்னன் அரசரே! இவ்வாறுசொல்லப்பட்ட அந்தப்ராம்மணோத்தமர் அந்தச்சமயத்தில் அங்குவந்திருந்த பிராம்மணர்களோடுகூடி அரசனைப்பார்த்து, 'ராஜஸ்ரேஷ்டனே! கௌரவஸ்ரேஷ்டனே! யுதிஷ்டிரர் உயிரோடிருக்கும்பொழுது உன்னுடைய குலத்தில் அந்தராஜஸூயமென்கிற சிறந்தயாகமானது செய்வதற்குஸாத்தியப்படாதது. வேந்தே! உன்னுடையபிதாவான திருதராஷ்டிரரும் நீண்ட ஆயுளுள்ளவராக ஜீவித்திருக்கிறார். அரசர்களுள்உத்தமனே! அதனாலும், இந்தயாகமானது உனக்கு விலக்கானது. பிரபுவே! ராஜஸூயத்திற்குஸமமாகப் பெரியதான வேறு ஒருயாகமிருக்கிறது. ராஜேந்திரனே! நீ அதனால் தேவதைகளைப் பூஜிப்பாயாக. என்னுடைய இந்தவசனத்தைக் கேள். அரசனே! உனக்குக் கப்பம்கொடுக்கிற இந்த அரசர்கள் உனக்கு ஸுவர்ணத்தையும் சிற்பிகளால்செய்யப்பட்டிருக்கிற (அலங்கார முதலிய) வஸ்துக்களையும் சிற்பவேலைசெய்யப்பட்டிராதவஸ்துக்களையும் கப்பங்களாகக் கொடுக்கட்டும். ராஜஸ்ரேஷ்டனே! ஆகலால், இப்பொழுது உனக்குக் கலப்பை செய்யப்படலாம். பாரத! அதனால் உன்னுடைய யாகசாலை அமைத்தற்குரியபூமியானது உழப்படலாம். மன்னவர்களுள் மிக்கமேன்மைவாய்ந்தவனே! அந்த இடத்தில் ஏராளமான அன்னங்களுள்ளதும் (மந்திரங்களால்) நன்கு பரிசுத்திசெய்யப்பட்டதும் எல்லாப்பக்கங்களிலும் தடையற்றதுமான யாகமானது நியாயப்படி நடக்கலாம்.

உன்னால் செய்யப்படப்போகிற வைஷ்ணவமென்று பிரஸித்திபெற்ற இந்தயாகமானது ஸத்புருஷர்களுக்குத் தகுந்தது. புராணபுருஷரான விஷ்ணுவைத்தவிர வேறுஒருவரும் இந்தயாகத்தால் தேவதைகளைப் பூஜித்ததில்லை. இந்தமகாயாகமானது யாகங்களுள் சிறந்த ராஜஸூயத்திற்குச் [1] சமமானது. பாரத! எங்களுக்கு இந்த யாகம் ருசிக்கிறது; உனக்கும் நன்மையானது. இது இடையூறின்றி நடைபெறும். உன்னுடைய ஆசையும் ஸபலமாகும். மிக்க பாகுபலமுள்ளவனே! ஆகையால், உன்னுடைய இந்தயாகம் தொடங்கப்படலாம்' என்று கூறினர். அந்த ப்ராம்மணர்களால் இவ்வாறுசொல்லக்கேட்ட அரசனை துர்யோதனன், கர்ணனையும் சகுனியையும் பிராதாக்களையும்பார்த்து, 'பிராம்மணர்களுடைய இந்தவசனம் முழுமையும் எனக்கு ருசிக்கிறது; ஸம்சயமில்லை. உங்களுக்கு ருசிக்குமாகில் தாமதியாமல் சொல்லுங்கள்' என்கிற இந்தவசனத்தை உரைத்தான். இவ்வாறுசொல்லக்கேட்ட அவர்கள் எல்லோரும், அரசனைப்பார்த்து, 'அப்படியே' என்றுசொன்னார்கள். பிறகு, அரசன் சிற்பிகளைக் கிரமப்படி கட்டளையிட்டான். கலப்பையைச் செய்வதிலும் எல்லாச்சிற்பிகளும் கட்டளையிடப்பட்டார்கள். ராஜஸ்ரேஷ்டனே! எல்லாம் சொல்லியபடி கிரமமாகச் செய்யப்பட்டன.

இருநூற்றைம்பத்தேழாவது அத்யாயம்.

கோஷயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(துர்யோதனன் யாகத்தை முடித்தபிறகு யாகத்துக்கு வந்திருந்த பிராம்மணர்களையும் அரசர்களையும் மரியாதை செய்து அனுப்பிவிட்டுத் தன் நகரத்தில் பிரவேசித்தது.)

பிறகு, சிற்பிகள், அரசனைப்பார்த்து, 'எல்லாம் செய்யப்பட்டுவிட்டன' என்று சொன்னார்கள். அரசரே! பாரதரே! அறிவிற்சிறந்தவரான விதுரரும் திருதராஷ்டிரனிடத்தில் க்ரதுக்களுள் சிறந்ததான வைஷ்ணவயாகத்தைச் செய்வதற்குத் தக்க ஸமயம் வாய்த்திருப்பதாகவும் ஸன்னத்தமாக இருப்பதாகவும் அதிகவிலேமதிப்புள்ள பொன்மயமான கலப்பையும் முழுதும் செய்து முடிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். பிரஜைகளுக்குப்பதியே! அரசர்களுள் சிறந்த திருதராஷ்டிரமகாராஜன், இந்த

---

[1] 'ஸ்பர்த்ததி' என்பது மூலம்.

வசனத்தைக்கேட்டு, ஸர்வோத்தமமான யாகத்தைச் செய்யக் கட்டளையிட்டான். பிறகு, அளவில்லாத தனங்களுடன் கூடியதும் நன்முக ஸம்ஸ்கரிக்கப்பட்டிருப்பதுமான யாகமானது நடக்கத் தொடங்கியது. காந்தாரீபுத்திரனை துரியோதனன் சாஸ்திரப் படியும் க்ரமப்படியும் தீக்ஷிதனுனன். திருதராஷ்டிரனும் பெரும் புகழுள்ளவரான விதுரரும் பீஷ்மரும் துரோணரும் க்ருபரும் கர்ணனும் கீர்த்தியுள்ளவளான காந்தாரியும் மிக்க மனக்களிப் புற்றவர்களானுர்கள். ராஜேந்திரரே! (துரியோதனன்) அரசர் களையும் அப்படியே பிராம்மணர்களையும் அழைப்பதற்காக விரை வாகச் செல்பவர்களான தூதர்களையும் அனுப்பினன். அந்தத் தூதர்கள், கட்டளையிடப்பட்டவண்ணம், விரைவாகச் செல்லும் வாகனங்களுடன் புறப்பட்டார்கள். அந்தத் தூதர்களுள் புறப் படுகின்ற ஒரு தூதனைப்பார்த்து, துச்சாஸனன், அப்பொழுது, 'தூத! விரைவாக த்வைதவனத்திற்குப் போ. பாபபுருஷர் களான பாண்டவர்களையும் அந்த வனத்தில் வஸிக்கின்ற பிராம்மணர்களையும் நியாயப்படி அழைப்பாயாக' என்று சொன்னன். அந்தத்தூதன், த்வைதவனம் சென்று எல்லாப் பாண்டவர்களையும் அடைந்து நமஸ்கரித்து, 'மஹாராஜரே! கௌரவர்களுள் மிக்கசிமன்மைவாய்ந்தவனும் அரசர்களுள் சிறந்த வனுமான துரியோதனன் தனதுதிறமையால் தேடப்பட்ட பொருட்குவியலைப்பெற்று யாகம்செய்கிறன். அந்தயாகத்திற் காக அரசர்களும் பிராம்மணர்களும் அந்த அந்த இடங்களிலிருந்து செல்லுகின்றார்கள். அரசரே! நான்னை மகாத்மாவான கௌரவ னல் அனுப்பப்பட்டேன். ஜனங்களுக்குத் தலைவனன துரியோ தனராஜன் உங்களை அழைக்கிறன். அரசனுடைய மனத்தினல் விரும்பப்பட்டிருக்கிற அந்தயாகத்தை நீங்கள் பார்க்கக்கடவீர்' என்று கூறினன்.

பிறகு, ராஜஸ்ரேஷ்டரான யுதிஷ்டிரராஜர், அந்தத் தூத னுடையவசனத்தைக்கேட்டு, 'முன்னேர்களுடைய புகழைப் பெருக்குகிற துரியோதனராஜன் தெய்வாதீனமாக யாகங்கு ளுள் முக்கியமான வைஷ்ணவயாகத்தினல் தேவனைகளை ஆரா திக்கிறன். நாங்களும் வருவோம்; ஆனல், எவ்விதத்தாலும் இப்பொழுது வரமுடியாது. பதின்மூன்றுவர்ஷகாலம் முடி. வடையுமளவும் நாங்கள் வனத்தில்வஸிக்கக்கடவோமென்கிற எங் களுடையசபதத்தை நாங்கள் பாதுகாக்கவேண்டும்' என்று சொன்

னர். தர்மராஜருடைய இந்தவசனத்தைக்கேட்டு, பீமன், தூதனை நோக்கி, 'தர்மங்களால் பிரகாசிக்கிற யுதிஷ்டிரராஜர் அஸ்திரங் களாலும் சஸ்திரங்களாலும் எப்பொழுது அந்தத் துரியோதனனை ஜ்வலிக்கின்ற அக்நியில் விழும்படிசெய்வரோ அப்பொழுது வரு வார். பாண்டுநந்தனரான யுதிஷ்டிரமகாராஜர் பதின்மூன்றுவது வர்ஷத்திற்குமேல் திருதராஷ்டிரபுத்திரர்களிடமுள்ள கோபமாகிற ஹவிஸை எப்பொழுது யுத்தமாகிற யாகத்தில் ஹோமம்செய் வாரோ அப்பொழுது நாங்கள் வருவோம் என்று நீ அந்தத்துரி யோதனனுக்குச் சொல்' என்று சொன்னன். வேந்தரே! மற் றப்பாண்டவர்கள் அப்ரியமான வசனம் யாதொன்றையும் சொல்ல வில்லை. தூதனும், நடந்தவண்ணம் இந்த வரலாற்றைத் துர் யோதனனிடம் தெரிவித்தான். மகாபாக்யசாலியே! பிறகு, புருஷஸ்ரேஷ்டர்களான பற்பலதேசாதிபதிகளும் பிராம்மணர் களும் துரியோதனனுடைய நகரத்தைநோக்கி வந்தார்கள். சாஸ் திரப்படியும் விதிப்படியும் முறைப்படியும் அர்ச்சிக்கப்பட்டவர் களான அந்த அரசர்கள் அதிகஸம்தோஷத்தையுடையவர்களும் ப்ரீதியுள்ளவர்களுமானர்கள். ராஜஸ்ரேஷ்டரே! திருதராஷ் டிரனும், எல்லாக்கௌரவர்களாலும் சூழப்பட்டவனாகவும் அதிக ஸம்தோஷமுள்ளவனாகவும் விதுரரைப்பார்த்து, 'விதுர! எப்படி எல்லாஜனங்களும் யஜ்ஞவாடத்தில் மிருஷ்டான்ன போஜனம் செய்தவர்களும் ஸுகமுள்ளவர்களுமாகி மகிழ்வார்களோ அப்படி நீதியானது ஏற்படுத்தப்படவேண்டும்' என்று சொன்னன். பகைவர்களை அடக்குகிறவரே! கற்றறிந்தவரும் தர்மங்களை அறிந் தவருமான விதுரரோ அதனை அறிந்து எல்லா வர்ணத்தார்களை யும் சாஸ்திரப்படி பூஜித்தார். விதுரர், ஸந்தோஷமுள்ளவராக, உண்ணவும் பருகவும் தக்க அன்னபானங்களாலும் நறுமணம் பொருந்திய புஷ்பங்களாலும் பலவித வஸ்திரங்களாலும் எல்லா ரையும் ஸந்தோஷமடையச் செய்தார். வீரனான ராஜஸ்ரேஷ்டனின் சாஸ்திரப்படியும் முறைப்படியும் அவப்ருதத்தைச்செய்து எல்லா ருக்கும் இன்சொற்கூறியும் பலவித தனங்களைக் கொடுத்தும் ஆயி ரவர் ஆயிரவராக அரசர்களையும் பிராம்மணர்களையும் தத்தம் இருப்பிடங்களுக்கு அனுப்பினன். துரியோதனன் எல்லா அரசர் களையும் அனுப்பிவிட்டுத் தம்பிமார்களால் சூழப்பட்டுக் கர்ணனுட னும் சகுனி முதலியவர்களுடனும் சேர்ந்து ஹஸ்தினபட்டணத் தில் பிரவேசித்தான்.

ஸ்ரீ மஹாபாரதம்.

இருநூற்றைம்பத்தேட்டாவது அத்யாயம்.

கோஷயாத்ராபர்வம். (தொடர்ச்சி.)

(துர்யோதனனுடையஸ்தையில் கர்ணன் அர்ஜுனனுடையவதத்தை ப்ரதிஜ்ஞைசெய்ததும், பாண்டவர்கள் சார்கள்முகமாக அதைக் கேட்டதும்.)

மகாராஜரே! நகரத்தில் பிரவேசிக்கிறவனும் ப்ரஜைகளைப் பாதுகாப்பதினின்று கழுவாதனும் சிறந்தவில்லாளியும் அரசர்களுள் மிகுச்சிறந்தவனுமான துரியோதனனை ஸ்தோத்ரர்களும் ஜனங்களும் ஸ்தோத்திரம் செய்தார்கள். ஜனங்கள் பொரிகளையும் சந்தனப்பொடிகளையும் அரசன்மீது வாரிஇறைத்து, 'அரசனே! உன்னல் தொடங்கப்பட்ட இந்தயாகமானது பாக்கியவிசேஷத்தால் இடையூறில்லாமல் முடிவடைந்தது' என்று சொன்னார்கள். அந்த நகரத்தில் நடந்ததைப்பற்றிப்பேசுகிறவர்கள், அந்த அரசனைப் பார்த்து, 'உன்னல் செய்யப்பட்ட இந்தயாகமானது யுதிஷ்டிரரால் செய்யப்பட்ட யாகத்திற்கு ஸமமாகாது' என்று கூறினார்கள்.

அந்த நகரத்தில் உசிதமாகப்பேசத்தெரியாத சிலர், அந்தத்துர்யோதனமகாராஜனைப்பார்த்து, 'உன்னல் செய்யப்பட்ட இந்தயாகமானது யுதிஷ்டிரரால் அனுஷ்டிக்கப்பட்ட அந்தராஜஸூயயாகத்தின் பதினாறில் ஓர் அம்சத்துக்கும் ஈடாகாது' என்று இவ்வண்ணம் உரைத்தார்கள். அந்தநகரத்தில் துர்யோதனனுடைய நண்பர்கள், 'சிறந்தபுத்தியுள்ளவனான துர்யோதனமகாராஜனல் செய்யப்பட்ட இந்தயாகமானது எல்லாயாகங்களுக்கும் மேற்பட்டிருக்கிறது' என்று சொன்னார்கள். 'நகுஷனுடைய புத்திரனான யயாதியும் மாந்தாதாவும் பரதனும் இந்தயாகத்தைச் செய்து பரிசுத்தர்களாகி எல்லாரும் ஸ்வர்க்கத்தை அடைந்தார்கள்' என்றும் சொன்னார்கள். பரதர்களுள் சிறந்தவரே! துர்யோதனராஜன், நண்பர்களுடைய மங்களகரமான இந்தவசனங்களைக் கேட்டுக்கொண்டு ஸந்தோஷத்துடன் பட்டணத்தில் நுழைந்து தன்அரண்மனையிலும் பிரவேசித்தான். அரசனே! பிராதாக்களுக்கு ஆனந்தத்தை உண்டுபண்ணுகிறவனான துர்யோதனன் அரண்மனையில்பிரவேசித்தபிறகு, மாதாபிதாக்கள், பீஷ்மர் த்ரோணர் கிருபர் முதலிய பெரியோர்கள், சிறந்தபுத்தியுள்ளவரான விதுரர் இவர்களுடைய பாதங்களில் தண்டனிட்டு இனைய

ஸஹோதரர்களால் அபிவர்தனம் செய்யப்பட்டவனும் அந்தத் தம்பிமார்களால் சூழப்பட்டவனுமாக முக்கியமான ஆஸனத்தில் உட்கார்ந்தான். ஸுதபுத்திரனகர்ணன், அப்பொழுது எழுந் திருந்து, அந்தத் துர்யோதனமகாராஜனைப் பார்த்து, 'பரதர்களுள் மேன்மைவாய்ந்தவனே! தொடங்கப்பட்ட இந்த உன்னுடைய மகாயாகமானது பாக்கியவிசேஷத்தால் முடிவடைந்தது. புருஷர் களுள்சிறந்தவனே! யுத்தத்தில் பாண்டவர்கள் கொல்லப்பட்ட பிறகு, உன்னால் அப்படிப்பட்ட ராஜஸூயயாகமானது செய்யப் படும்பொழுது, நான் மீண்டும் உன்னைப்பூஜிப்பேன்' என்று சொன் னேன். மகாராஜனும் பெரும்புகழுள்ளவனுமான துர்யோதனன், அந் தக் கர்ணனைப்பார்த்து, 'கரஸ்ரேஷ்டனே! உன்னால் கூறப்பட்ட இந்த விஷயம் உண்மை. வீர! துராத்மாக்களான பாண்டவர்கள் கொல்லப்பட்டபிறகு, ராஜஸூயமென்கிற மகாயாகமும் என்னால் செய்யப்பட்டபொழுது, நீ மறுபடியும் இவ்வண்ணம் என்னைப் புகழு வாய்' என்று சொன்னேன். மகாராஜரே! பாரதரே! கௌரவ ராஜன் இவ்வண்ணம் உரைத்துக் கர்ணனைத்தழுவிக்கரண்டு ராஜ ஸூயமென்கிற சிறந்தயாகத்தைச் சிந்திக்கலானான். அரசர் களுள் மிகச்சிறந்தவனான அந்தத் துர்யோதனராஜன், பக்கத்தி லிருக்கிறவர்களும் கர்ணனையும் சகுனியையும் தலைவர்களாகக் கொண்டவர்களுமான கௌரவர்களைப்பார்த்து, 'கௌரவர்களே! எப்பொழுது பாண்டவர்களனைவரையும் கொன்று பெரும்பொரு ளால் செய்யத்தக்க ராஜஸூயமென்கிற சிறந்தயாகத்தைச் செய் வேனோ?' என்று சொன்னான். அப்பொழுது, கர்ணன், அந்தத் துரியோதனனைப்பார்த்து, 'ராஜகுஞ்சர! என்சொல்லைக் கேள். அர்ஜுனன் கொல்லப்படுகிறவரையில், நான் • கால்களை அலம்பு கிறதில்லை; மாம்ஸத்தையும் பக்ஷிக்கிறதில்லை; மதுவில்லாமல் உண்கிற விரதத்தைக் கைக்கொள்ளுவேன். எவனால்யாசிக்கப் பட்டாலும் நான் இல்லை என்கிறசொல்லைச் சொல்லமாட்டேன்' என்று சொன்னான்.

பிறகு, கர்ணனால் யுத்தத்தில் அர்ஜுனனுடையவதம் பிரதிஜ்ஞைசெய்யப்பட்டவுடன், மகாவில்லாளிகளும் மகாரதர்களு மான திருதராஷ்டிரபுத்ரர்கள் பேராரவாரம் செய்தார்கள். அப் பொழுது, ஸுதபுத்திரனால் பிரதிஜ்ஞையில் நின்று பல்குண னுடையவதம்சொல்லப்பட்டவுடன், திருதராஷ்டிரனுடையபுத்திரர் கள் பாண்டவர்களை ஜயிக்கப்பட்டவர்களாகவே நினைத்தார்கள்.

ராஜேந்திரரே! துர்யோதனனும் கரஸ்ரேஷ்டர்களை அவரவர்க ளிருப்பிடத்திற்கு அனுப்பிவிட்டு, நிதிகளுக்கதிபதியும் பிரபுவுமான குபேரன் சைத்ரரதமென்கிற பூந்தோட்டத்தில் பிரவேசிப்பதுபோல அரண்மனையில் நுழைந்தான். பாரதரே! மகாராஜரே! பீஷ்மர் த்ரோணர்முதலிய அந்தமகாவில்லாளிகளனைவரும் தங்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றார்கள். பெரியவிற்களையுடைய பாண்டவர்களும் துதர்களுடையசொற்களால் நன்கு தூண்டப்பட்டவர்களாகவும் அந்தவிஷயத்தையே சிந்திப்பவர்களாகவும் ஓரிடத்திலும் ஒரு ஸமயத்திலும் ஸுகத்தை அடையவில்லை. ராஜஸ்ரேஷ்டரே! விஜயனுடைய வதத்தைக்குறித்துக் கர்ணனால் செய்யப்பட்ட பிரதிஜ்ஞைச்செய்தி மீண்டும் சாரர்களால் பாண்டவர்களுக்கு அறி விக்கப்பட்டது. அரசரே! இதைக்கேட்டு, தர்மபுத்திரர், மிகப் பயந்தவரும், 'யாதுசெய்யத்தக்கது?' என்று ஆலோசிப்பவரும் கீழ்நோக்கும் முகமுள்ளவருமாக நெடுநேரம் இருந்தார்; கர்ணனை உடைக்கத்தகாதகவசமுள்ளவனென்றும் அத்புதமான பராக்கிரம முடையவனென்றும் எண்ணித் தமக்குநேர்ந்திருக்கிற கிலேசங்களை நினைத்து ஆறுதலை அடையவில்லை. சிந்தையினுல்கவரப்பட்டிருக்கிற மகாத்மாவான அந்தயுதிஷ்டிரருக்கு அனேக துஷ்டமிருகங்களால் வியாபிக்கப்பட்ட த்வைதவனத்தை விடுவதற்கு எண்ணம் உண் டாயிற்று. துரியோதனராஜனும், பிராதாக்களோடும் அப்படியே வீரர்களான பீஷ்மரோடும் த்ரோணரோடும் கிருபரோடும்சேர்ந்து பூமியை ஆண்டுவந்தான். துர்யோதனன் யுத்தத்தில் பிரகாசிக்கின்ற ஸுதபுத்திரனான கர்ணனோடும் சூதாடியான சகுனியோடும் சேர்ந்து எப்பொழுதும் ப்ரீதியுள்ளவனும் அரசர்களுக்கு ப்ரியத் தைச்செய்வதில் எப்பொழுதும் பற்றுதலுள்ளவனுமாகி ஏராள மான தக்ஷிணைகளோடுகூடின யாகங்களால் பிராம்மணர்த்தமர் களைப் பூஜித்தான். அரசரே! பகைவர்களைத்தவிக்கச்செய்பவ னும் வீரனுமான அந்தத்துரியோதனன் தனத்தைத் தானத்தையும் போகத்தையும் பலனுகக்கொண்டதென்று மனத்தினல் நிச் சயித்து, ப்ராதாக்களுக்கு ப்ரியத்தைச் செய்தான்" என்று சொன்னர்.

கோஷயாத்ராபர்வம் முற்றிற்று.

இருநூற்றைம்பத்தோன்பதாவது அத்யாயம்.

ம் ரு க ஸ் வ ப் ந ோ த் ப வ ப ர் வ ம்.

(பாண்டவர்களால் கொல்லப்பட்டவைபோக மிச்சமிருக்கிறமிருகங்கள் யுதிஷ்டிரரிடம் ஸ்வப்னத்தில்வந்து தங்கள்குலத்தில் மிச்சம் வைப் பதற்காக வேறிடம்செல்லும்படி வேண்டியதும், யுதிஷ்டிரர் தம்பிமார்களிடம் தாம் ஸ்வப்னத்தில் கண்டதைச் சொல்லி மீண்டும் காம்யகவனம் சென்றதும்.)

ஜனமேஜயர், "மகாபலசாலிகளான பாண்டுபுத்திரர்கள் துரியோதனனை விடுவித்துவிட்டு அந்த த்வைதவனத்தில் யாது செய்தனர்? அதனை எனக்குச்சொல்லக்கடவீர்" என்று வினவ வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினர்.

"பிறகு, த்வைதவனத்தில் இரவில் படுத்து உறங்கிக்கொண் டிருக்கிற குந்தீபுத்திரரான யுதிஷ்டிரரை மிருகங்கள் கண்ணீரால் தடைப்பட்டகுரலுடன் தூக்கத்தின்முடிவில் (தம்மைமீக்) காணும் படி செய்தன. ராஜேந்திரரானஅவர், நடுங்குகின்றவைகளும் அஞ்சலிபந்தம் செய்துகொண்டிருப்பவைகளுமான அந்த மிருகங் களைப் பார்த்து, 'சொல்லவிரும்பியிருப்பதைச் சொல்லுங்கள். நீங்கள் யார்? எதைவிரும்புகிறீர்கள்?' என்று சொன்னர். கீர்த்தி யுள்ள குந்தீபுத்திரரான யுதிஷ்டிரரால் இவ்வாறு சொல்லப்பட் டவைகளும் கொல்லப்பட்டவைகள்போக மிச்சமிருப்பவைகளு மான மிருகங்கள் அங்கே யுதிஷ்டிரரைப் பார்த்து, 'பரதரே! நாங்கள் த்வைதவனத்தில் கொல்லப்பட்டவைகள்போக மிகுந் திருக்கின்ற மிருகங்கள். மகாராஜரே! நாங்கள் அடியோடு நாச மடைபோமலிருப்போமாக. நீங்கள் (வேறிடத்துக்கு) வாஸம் மாற்றுதலைச் செய்துகொள்ளுங்கள். சூரர்களும் எல்லாருமே அஸ்திரங்களைக் கற்றறிந்தவர்களும் பிராகாக்களுமான நீங்கள் வனத்தில் வஸிக்கின்ற மிருகங்களுடைய குலங்களைச் சிறிதே மிகுந்திருக்கும்படி செய்துவிட்டீர்கள். பரதர்களாளரே! மிச்ச மிருக்கிற நாங்கள் சிலரே வித்தாக இருக்கின்றோம். ராஜேந்திரரே! யுதிஷ்டிரரே! உம்முடைய அருளால் விருத்தியடையக்கடவோம்' என்று மறுமொழி சொல்லின. நடுங்குகின்றவைகளும் மிகப் பயந்தவைகளும் வித்துமாத்திரமாக மிகுக்கப்பட்டவைகளுமான அந்த மிருகங்களைப்பார்த்து மிக்க துக்கத்தால் பீடிக்கப்பட்ட

வரும் பிரஜைகளை ஆனந்தமடையச்செய்பவரும் எல்லாப் பிராணி களுக்கும் ஹிதத்தைச் செய்வதில் பற்றுள்ளவரும் தர்மராஜரு மான யுதிஷ்டிரர், 'அப்படியே ஆகட்டும். அதனை நீங்கள் சொல்லு கிறபடியே செய்வேன்' என்று சொன்னர். இவ்வண்ணம் விடியற் காலத்தில் கனவுகண்டு விழித்தவரும் அரசர்களுள் உத்தமரு மான அந்த யுதிஷ்டிரர், மிருகங்களின்மீது கருணையுள்ளவராக, ஒன்று சேர்ந்திருக்கிற எல்லாப்ராதாக்களையும் பார்த்து, 'இரவில் நித்திரையின் முடிவுக்காலத்தில், கொல்லப்பட்டவைபோக மிகுந் திருக்கிற மிருகங்களால், 'நாங்கள் எண்ணிக்கையினால் குறைந்து விட்டோம். உமக்கு மங்களம். எங்கள்மீது தயைசெய்யக்கட வீர்' என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறேன்' என்று சொன் னர். அவர்கள், தர்மநந்தனரைப்பார்த்து, 'மிருகங்கள் உண்மை சொல்லின. நாம் வனத்தில்வஸிக்கின்ற மிருகங்களின்மீது தயை பாராட்டவேண்டும். ஒருவருஷம் எட்டுமாதகாலமாக இந்த மிரு கங்களைக்கொன்று நாம் உபயோகித்துவந்தோம். பல மிருகங்க ளுள்ளதும், காடுகளுள் உத்தமமானதும் பாலிவனத்தின் தொடக் கத்திலிருப்பதும் த்ருணபிந்து என்னும் ஸரஸுக்கு அருகிலிருப் பதுமான காம்யகவனம் ரமணீயமாக இருக்கிறது. அதில் விளை யாடிக்கொண்டு, மிகுதியிருக்கிற இந்த வனவாஸத்தை ஸுகமாகப் போக்குவோம்' என்று சொன்னர்கள். அரசரே! பிறகு, தர்மங்களை அறிந்தவர்களான அந்தப்பாண்டவர்கள் அந்தத்வைத வனத்தில் உடன்வஸித்துக்கொண்டிருந்தவர்களான அந்தப்ராம் மணர்களோடு சேர்ந்தவர்களாகவும் இந்திரஸேனன் முதலிய வேலைக்காரர்களால் பின்தொடரப்பட்டவர்களாகவும் அப்பொ ழுது காம்யகவனத்தைக்குறித்து விரைவாகச்சென்றார்கள். அவர் கள் நல்லஸுகத்தைக் கொடுப்பவைகளும் நல்லஉணவுப்பொருள் களுள்ளவைகளும் சுத்தமானஜலத்தையுடையவைகளுமான மார்க் கங்களால் சென்று புண்யமானதும் தபஸிகளோடு சேர்ந்ததுமான காம்யகவனத்திலுள்ள ஆச்ரமத்தைக் கண்டார்கள். குருவம்சத்தி லுதித்தவர்களும், பரதச்ரேஷ்டர்களுமான அவர்கள், பிராம்ம ரிஷிகளால் சூழப்பட்டவர்களாக, புண்யசாலிகள் ஸ்வர்க் கத்தில் நுழைவதுபோல அந்தக் காம்யகவனத்தில் அப்பொழுது நுழைந்தார்கள்.

இருநூற்றறுபதாவது அத்யாயம்.

வ் ரீ ஹி த் ரௌ ணி க ப ர் வ ம்.

(ஒருஸமயம் காம்யகவனத்தில் பாண்டவர்களிடம் வந்த வியாஸர் யுதிஷ்டிரரிடம் தானத்தின் பெருமையைக் கூறியது.)

பரதர்களுள் சிறந்தவரே! வனத்தில் வஸிக்கின்ற மகாத்மாக்களான அந்தப் பாண்டவர்களுக்கு ப்ரயாஸத்தால் பதினைரு வருஷங்கள் சென்றன. ஸுகத்திற்கே தகுந்தவர்களும் உத்தம புருஷர்களுமான அந்தப் பாண்டவர்கள், கணிகிழங்குகளைப் புஜிக்கின்றவர்களாகவும், 'அனுபவிக்கவேண்டிய காலம்' என்று நினைத்துக்கொண்டவர்களாகவும் கடுமையான துக்கத்தைப் பொறுத்தார்கள். நீண்ட கைகளுள்ளவரும் ராஜரிஷியுமான அந்த யுதிஷ்டிரரோ, பிராதாக்களுக்கு நேர்ந்திருக்கிற மிகப்பெரிய துக்கம் தமது செய்கையாகிய குற்றத்தினால் உண்டானதென்பதை எண்ணி மார்பில் இருப்புமுளைகள் பாய்ச்சப்பட்டாற்போல ஸுகமாக உறங்கவில்லை. பாண்டுநந்தனரான யுதிஷ்டிரர், அந்தச் சூதாடும் தருணத்தில் சூதர்ட்டத்திற்குக் காரணமாக இருந்த சகுனி முதலியவர்களுடைய கெட்ட எண்ணத்தை ஆலோசிப்பவரும் ஸுமுகபுத்திரனுடைய கடும்சொற்களை நன்கு நினைப்பவரும் பெருமூச்சுவிடுகின்றவரும் தைன்யத்தையடைந்தவருமாகிப் பெரிய கோபமாகிறவிஷத்தை வெளிவிடாமல் அடக்கிக்கொண்டிருந்தார். அர்ஜுனனும் இரட்டைப்பிள்ளைகளான நகுலஸஹதேவர்களிருவரும் கிருஷ்ணையுள்ளவளான த்ரௌபதியும் எல்லாரைக் காட்டிலும் பலத்தில் மிக்கவனும் மகாதேஜஸ்வியுமான அந்தப் பீமனும், மூத்தவராகப் பிறந்திருப்பவரும் தர்மங்களை அறிந்தவருமான யுதிஷ்டிரரை அப்பொழுது வெறுப்போடு பார்க்கின்றவர்களாகப் பொறுக்கமுடியாத துக்கத்தைப் பொறுத்தார்கள். புருஷச்ரேஷ்டர்கள் வனவாஸகாலத்தைச் சிறிது மிகுந்திருப்பதாக எண்ணி உத்ஸாஹத்தாலும் கோபத்தாலும் செய்கைகளாலும் தேகங்களை வேறுதேகங்கள்போலவே செய்தார்கள். சிறிது காலம் சென்றபிறகு, ஸத்யவதியின் புதல்வரும் மகாயோகியுமான வியாஸர் பாண்டவர்களைப் பார்க்க விருப்பமுள்ளவராக வந்தார்.

குந்தியின்புதல்வரான யுதிஷ்டிரர், வந்திருக்கிற அந்த வியாஸரைப்பார்த்து எதிர்கொண்டுசென்று, மகாத்மாவான அந்த மஹ

னைய விதிப்படி வரவேற்றார். உட்கார்ந்துகொண்டிருக்கிற அந்த வியாஸமஹரிஷியை, ஸமீபத்திலுட்கார்ந்திருப்பவரும் ரிஷி வசனத்தைக் கேட்க விருப்பமுள்ளவரும் இந்திரியங்களை அடக்கினவரும் பாண்டவர்களை, ஆனந்தமடையச் செய்பவருமான யுதிஷ்டிரர் தமது நல்லொழுக்கத்தினல் ஸந்தோஷமடையச்செய்தார். மஹரிஷியான வியாஸர், இளைத்திருப்பவர்களும் வனத்தில் அங்குண்டான பொருள்களால் ஜீவிக்கின்றவர்களுமான அந்தப் பாண்டவர்களைப்பார்த்துக் கருணைகூர்ந்து கண்ணீரால் தடைப்பட்ட குரலுடன் பின்வருமாறு கூறலானர்.

'மகாபாகுபலமுள்ளவனே! தார்மிகர்களுள் சிறந்தவனே! யுதிஷ்டிரா! கேள். கடுந்தவம் புரியாதவர்கள் உலகத்தில் பெரிய ஸுகத்தை அடையமாட்டார்கள். மனிதன் ஸுகதுக்கங்களை மாறிமாறி அனுபவிக்கிறன். புருஷச்ரேஷ்டனே! ஒருவனுவது கடைசிவரையில் துக்கத்தை அனுபவிக்கமாட்டான். விவேகியான மனிதனே சிறந்த புத்தியுடன்கூடியவனுகவும் [1] உதயாஸ்தமயங்களை அறிந்தவனுகவும் ஸந்தோஷத்தையடைகிறதுமில்லை; துக்கத்தை அடைகிறதுமில்லை. மனிதன் தானுகவந்த ஸுகத்தை அனுபவிக்கின்றவனுகவும் தானுகவந்த துக்கத்தைப் பொறுக்கிறவனுகவும் இருந்துகொண்டு, பயிரிடுகிறவன் பயிரின் பலன்களை அனுபவிப்பதுபோல் அந்த அந்தக் காலங்களில் கிடைத்ததை அனுபவிக்கவேண்டும். தவத்தைவிடச் சிறந்தது ஒன்றுமில்லை. ஞானத்தினல் பிரம்மத்தை அடைகிறன். பாரத! தவத்தினல் ஸாதிக்கத்தகாதது ஒன்றுமில்லையென்று அறிவாயாக. மகாராஜனே! புண்யகர்மங்களுடன்கூடின மனிதர்களுக்கு ஸத்யம், மனமொழிமெய்களின் ஒற்றுமை, கோபமில்லாமை, அனுபவிக்கத்தக்க வஸ்துக்களை எல்லாருக்கும் பேதமின்றிப் பகுத்தளித்தல், தமம், சமம், அஸூயையில்லாமை, ஹிம்ஸைசெய்யாமை, தூய்மை, இந்திரியங்களினடக்கம் ஆகிய இவைகள் ஸாதனங்கள். அதர்மத்தில் ருசியுள்ளவர்களும் மூடர்களும் விலங்குகளுடைய நடையில்பற்றுள்ளவர்களுமான ஜனங்கள் கஷ்டமான பிறப்பை அடைந்தவர்களாக ஸுகத்தை அடைகிறதில்லை. இவ்வுலகில் எந்த வினை செய்யப்படுகிறதோ அதன்பயன் மறுமையில் அனுபவிக்கப்படுகிறது. வேரில் (தண்ணீரால்) நனைக்கப்பட்ட மரத்துக்குக்

[1] 'உயிர்வாழ்க்கையின் 'உயர்வுகளையும் தாழ்வுகளையும்' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

கிலேகளில் பலன் காணப்படுகிறது. ஆகையால், சரீரத்தைத் தவத்தோடும் நியமத்தோடும் சேர்க்கவேண்டும். அரசனே! காலம் நேர்ந்தபொழுது, ஸந்தோஷமுள்ள மனத்தையுண்டைய வனுகவும் மாத்ஸர்யமில்லாதவனுகவும் நன்கு பூஜித்தும் நேரில் நமஸ்கரித்தும் சக்திக்குத்தக்கபடி (ஸத்பாத்திரத்தில்) தானம் செய்யவேண்டும். உண்மை பேசுகிறவன் நீண்டவாழ்நாள்களை யும் ஸ்ரமமில்லாமையையும் மனமொழிமெய்களின் ஒற்றுமையை யும் அடைவான். கோபத்தையும் பொருமையையும் விட்டவன் சிறந்த ஸுகத்தை அடைவான். இந்திரியங்களை அடக்கினவனும் சாந்தியை ப்ரதானமாகக்கொண்டவனும் அடிக்கடி கிலேசத்தை அடைகிறதில்லை. மனத்தை அடக்கினவன் அயலானிடத்திலிருக் கிற ஸம்பத்தைப்பார்த்துப் பரிதாபத்தை அடையான். போக்ய வஸ்துக்களை எல்லாருக்கும் விச்வாஸமின்றிப் பகுத்தளிப்பவனும் கொடையாளியுமான மனிதன் சிறந்த போகத்துடன்கூடியவனும் நல்ல ஸுகமுள்ளவனும் குறிம்னைசெய்யாதவனுமாகிறான்; சிற ந்த ஆரோக்கியத்தையும் அடைகிறான். பூஜிக்கத்தக்கவனைப்பூஜிப் பவன் மகாகுலத்தில் பிறப்பை அடைகிறான்; இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் அளத்தற்கரிய ஸுகத்தை அடைகிறான். இந் திரியங்களை அடக்கினவன் விசனங்களோடு சேர்க்கையை அடை கிறதில்லை. நன்மையையே நாடின புத்தியுள்ள மனிதன் இம்மண் ணுலகில் உயிர்துறந்தபிறகு, அந்தப்புத்தியின் ஸம்பந்தத்தால் நல்லபுத்தியுள்ளவனுகவே பிறக்கிறான்' என்று சொன்னர்.

யுதிஷ்டிரர், 'பகவானே! மகாமுனிவரே! தானதர்மங்கள் (காயக்லேசத்தால் செய்யத்தக்க க்ருச்சிரம் சாந்திராயனம் முத லியனவையான) தவம் இவற்றினுள் பரலோகம் சென்றவனுக்கு எது மிகச்சிறந்தது? எது செய்வதற்கு அரியதென்று சொல்லப்படு கிறது?' என்று வினவ, வியாஸர், 'ஐயா! பூமியில் தானத்தைக் காட்டிலும் செய்யமுடியாதது ஒன்றுமில்லை. பொருளில் ஆசை பெரியதாக இருக்கிறது. அந்தப்பொருள் கஷ்டத்தால் அடை யப்படுகிறது. அரசனே! இந்த விஷயம் உலகத்தை ஸாக்ஷி யாகக்கொண்டதாக நேரிலேயே காணப்படுகிறது. பிரியமான உயிரில் (ஆசையை) விட்டுப் போர்க்களத்தில் புகுகிறார்கள்; அப்படியே பெருங்கடலையும் கப்பலால் கடக்கிறார்கள்; அப் படியே அரண்யத்தையும் தாண்டிச்செல்லுகிறார்கள். சிலமனிதர் கள் வேளாண்மையையும் பசுக்காத்தலையும் செய்கிறார்கள். சில

மனிதர்கள் தனத்தில் விருப்பமுள்ளவர்களாகப் பிறருக்கு அடிமைப்படுகிறார்கள். ஆகையால், கஷ்டத்தால்தேடப்பட்டிருக்கிற தனத்தைத்தியாகம்செய்வது எவ்விதத்தாலும் முடியாததே. ஆகையால், தானம் எவ்விதத்தா'லும் செய்ய மிகஅரியதென்று நான் எண்ணுகிறேன். இந்தவிஷயத்தில் ஒருவிசேஷம் அறியத்தக்கது. நியாயத்தால் ஸம்பாதிக்கப்பட்ட தனத்தைப் பரிசுத்தியுடன்தக்க ஸமயத்திலும் தக்க இடத்திலும் தக்கபாத்திரத்தில் தானம்செய்ய வேண்டும். எவன் அநீதியினல்தேடப்பட்ட தனத்தால் தானதர்மங்களைச் செய்கிறானே அந்தக்கர்த்தாவை அந்தத்தானதர்மங்கள் மஹாபயத்தினின்று ஒருகாலும் பாதுகாக்கமாட்டா. யுதிஷ்டிர! காலத்தில் தக்கபாத்திரத்தில் பரிசுத்தமனத்துடன் கொடுக்கப்பட்டபொருள் சிறிதாக இருந்தாலும், பரலோகம்சென்றபின், அந்தமனிதனுக்கு மகாபலன்களைக் கொடுக்கிறதாக எண்ணப்பட்டிருக்கிறது. தர்மத்தை அனுஸரித்த ப்ரத்தையானது பிரகாசமுள்ளது; பரிசுத்தமானது; உலகங்களைத் தரிக்கிறது; விரும்பியவைகளை உண்டுபண்ணுகிறது; சிறந்தகர்மபலன்களைப் பயக்கிறது; ஸம்ஸாரமாகிய ஸமுத்திரத்தைக் கடக்கச் செய்கிறது. மகான்களால் சிரத்தையினல் தர்மம் தரிக்கப்படுகிறது; பொருளில் லோக்கமுள்ளவர்களால் தரிக்கப்படுகிறதில்லை. தனமுள்ளவர்களாக இருந்தும், ப்ரத்தையில்லாத அரசர்கள் நரகத்தை அடைந்தார்கள். தரித்திரர்களாக இருந்தும் ப்ரத்தையுள்ளமுனிவர்கள் ஸ்வர்க்கத்தை அடைந்தார்கள். [1] முத்கலர் தேசத்திலும் காலத்திலும் ஸத்பாத்திரத்தில் பதக்குநெல்லை ப்ரத்தையுடன் தானம் செய்து பரமபதத்தை அடைந்தார். இந்தவிஷயத்திலும் முத்கலர் பதக்குநெல்லை ஸத்பாத்திரத்தில் தானம்செய்ததனல் நல்லபயனை அடைந்தாரென்கிற இந்தப் பழமையான இதிஹாஸத்தை எடுத்துச்சொல்லுகிறார்கள்' என்று சொன்னர்.

[1] இவருக்கு மௌத்கல்யரென்றும் பெயர் காணப்படுகிறது.

இருநூற்றறுபத்தோராவது அத்யாயம்.

வ் ரீ ஹி த் ரௌ ணி க ப ர் வ ம். (தொடர்ச்சி.)

(முத்கலருடைய சித்தத்தைப் பரீக்ஷிப்பதற்காகத் துர்வாஸமுனிவர் ஆறு தடவை யாசித்தும், முத்கலர் மனம்வேறுபடாமல் அவ்வப்போது அன்னமளித்து அவரை மகிழ்வித்ததும், அவருடைய மகிமை யினுல் விமானத்துடன் வந்த தேவதூதன் சரீரத்துடன் முத்கலரை ஸ்வர்க்கத்துக்கு அழைத்ததும், முத்கலர் அந்தத் தேவதூதனேநோக்கி ஸ்வர்க்கம் எப் படியிருக்குமென்பதைச் சொல்லும்படி வேண்டினதும்.)

யுதிஷ்டிரர், 'பகவானே! மகாத்மாவான அந்த முத்கலரால் பதக்குநெல்லானது எவ்வண்ணம் தானம் செய்யப்பட்டது? எந்த விதியினுல் யாருக்குக் கொடுக்கப்பட்டது? எனக்குச் சொல்வீராக. மனிதர்களுடைய தர்மங்களை நேரில் காண்பவரான ஈச்வரர் எந்த மனிதனுடைய செய்கைகளால் ஸந்தோஷமடைகிறாரோ நல்ல தர்மங்களை அனுஷ்டிப்பவனென அவனுடைய பிறப்பைப் பய னுள்ளதென்று நான் நினைக்கிறேன்' என்று வினவ, வியாஸர், 'அரசனே! குருக்ஷேத்திரத்தில் முத்கலரென்னும் முனிவர் [1] ஸிலத் தாலும் உஞ்சத்தாலும் ஜீவனம்செய்பவரும் தர்மத்திலேயே மனத்தைச்செலுத்தினவரும் பொறிகளை நன்கு அடக்கினவரும் ஸத்யவாதியும் அஸூயையில்லாதவருமாயிருந்தார். அதிதி களைப்பூஜிக்கிற விரதத்தையுடையவரும் நல்லசெய்கைகளையுடைய வரும் [2] காபோதிவ்ருத்தியுள்ளவரும் மகாதபஸ்வியுமான முத் கலர் (பசுமுதலியவற்றாலல்லாமல்) இஷ்டிகளாலேயே நிறைவேற் றத்தக்க யஜ்ஞத்தை நன்கு செய்துவந்தார். புத்திரர்களோடும் புத்ரிகளோடும் மனைவியோடும்கூடின அந்தமுத்கலர் பதினைந்து நாள்களுக்கு ஒருமுறை ஆஹாரம்செய்துகொண்டுவந்தார். காபோதிவ்ருத்தியினுல் பதினைந்துநாள்களில் ஒரு [3] த்ரோண அள

---

[1] கதிர்நெற்றுமுதலியவையாகப் பொறுக்கிவந்து அவற்றைக்கொண்டு ரிப்பது ஸிலவ்ருத்தி; தான்யமணிகளை ஒவ்வொன்றாகப் பொறுக்கி எடுத்துவந்து அவற்றால் ஜீவிப்பது உஞ்சவ்ருத்தி; சாந்திபர்வம் 1359-ம் பக்கம், ஆச்வமேதிகபர்வம் 246-ம் பக்கம் குறிப்புக்களிற்காண்க.

[2] சாந்திபர்வம் 555-ம் பக்கம், ஆச்வமேதிகபர்வம் 248-ம் பக்கம் குறிப்புக்களிற் காண்க. [3] பதக்கு அதாவது இரண்டு மரக்கால்.

வுள்ள தான்யத்தைச் சேர்ப்பார். மத்ஸரமில்லாதவரான அந்த முத்கலர் அந்தநெல்லினுல் தர்சத்தையும் பௌர்ணமாஸத்தையும் செய்து தேவதைகளையும் அதிதிகளையும் பூஜித்து மிகுந்தகனுல் தேகயாத்திரையைச் செய்துகொண்டிருந்தார். மஹாராஜனே! மகிமைபொருந்தியவனும் மூவுலகங்களுக்கும் தலைவனுமான இந்திரன், தேவர்களோடுசேர்ந்து ஒவ்வொரு பர்வத்திலும்நடக்கிற தர்ச பௌர்ணமாஸ இஷ்டிகளில் ஹவிர்ப்பாகத்தைப் பெற்றுக்கொண்டான். அந்தமுத்கலர், பர்வகாலத்தில்செய்யத்தக்க வைதிககர்மாவைச்செய்து முனிவ்ருத்தியுடன் கூடியவராக மிக்கஸந்தோஷமுள்ள மனத்தோடு அதிதிகளுக்கு அன்னத்தை அளித்தார். ப்ரீதியுடன் அன்னத்தைக் கொடுப்பவரும் மஹாத்மாவும் மாத்ஸர்யமில்லாதவருமான முத்கலரிஷியினுடைய பதக்களவுள்ள நெல்லால் செய்யப்பட்ட அந்த அன்னமானது, அதிதிகளைக் கண்டவுடன் வளர்ந்துவந்தது. அந்த அன்னத்தைக் கற்றறிந்தவர்களான நூற்றுக்கணக்கான பிராம்மணர்கள் போஜனம்செய்தார்கள். அந்த அன்னமானது ரிஷியினுடைய தானசுத்தியினுல் விருத்தி அடைந்துவந்தது. அரசே! திகம்பரரான தூர்வாஸ மகரிஷியானவர் தார்மிகரும் விரதத்தை நன்குஅனுஷ்டிப்பவருமான அந்தமுத்கலருடைய வரலாற்றைக்கேட்டு அவரிடம் வந்து சேர்ந்தார். பாண்டவ! பைத்தியம்பிடித்தவன்போல நிலைஇல்லாத வேஷத்தைத்தரித்தவரும், தலைமயிரில்லாதவரும் பலவிதமான கடுஞ்சொற்களைச் சொல்பவரும் பிரம்மஸ்வரூபத்தை மனனம்செய்பவரும் முனிகளுள் மிகச்சிறப்புவாய்ந்தவருமான தூர்வாஸமஹரிஷியானவர், அந்தமுத்கலரென்னும் பிராம்மணரிடம் வந்து, 'முனிகளுள் சிறந்தவரே! என்னை அன்னத்தைவிரும்பிக்கொண்டு உம்மிடம்வந்திருப்பவனாக அறியக்கடவீர்' என்று சொன்னர். முத்கலர் தூர்வாஸமுனிவரைப்பார்த்து, 'உமதுவரவு நல்வரவாகுக' என்றுகூறினர். விரதத்தைத்தரித்தவரும் அதிதிகளிடத்தில் அன்புள்ளவருமான அந்தமுத்கலர் பாத்யத்தையும் ஆசமனீயத்தையும் ஸமர்ப்பித்து மிக்கஸ்ரத்தையைக்கைக்கொண்டு தவத்தினுல்தேடப்பட்ட அந்த உத்தமமான அன்னத்தைப் பசியுள்ளவரும் உன்மத்தருமான தூர்வாஸமகரிஷிக்குக் கொடுத்தார். பிறகு, பசியுள்ளவரும் உன்மத்தருமான அந்தத்தூர்வாஸமுனிவர் ருசியுள்ள அந்த அன்னத்தை முழுமையும் புசித்தார். முத்கலரும் அவருக்கு எல்லாஅன்னத்தையும் அளித்தார்.

மூனிவர், எல்லாஅன்னத்தையும் புஜித்து, பிறகு, உச்சிஷ்டமான அன்னத்தைத் தம்முடைய அங்கத்தில் பூசிக்கொண்டார்; வந்தபடி திரும்பியும் சென்றார். [1] இவ்விதமே இரண்டாவதுபர்வம் வந்தபோதும் துர்வாஸர் வந்து உஞ்சவ்ருத்தியினல் ஜீவிப்பவரும் சுற்றறிந்தவருமான முத்கலருடைய அன்னமனைத்தையும் புஜித்தார். அத்த முத்கலமுனிவரோ ஆகாரமில்லாதவராகவே மீண்டும் தான்யங்களைப் பொறுக்கிச் சேர்த்தார். பசியானது அந்தமுத்கலரை வேறுபாட்டை அடைவிக்கத் திறமையுள்ளதாகவில்லை. புத்திரர்களோடும் புத்திரிகளோடும் தாரத்தோடும் உஞ்சவிருத்தியினல் ஜீவிக்கிற பிராம்மணோத்தமரான முத்கலரைக் கோபமாவது மாத்ஸர்யமாவது அவமானமாவது பரபரப்பாவது அடையவில்லை. அவ்வாறு உஞ்சவ்ருத்தியை ஸ்வபாவமாக உடையவரும் முனிகளுள் மிகவும் சிறந்தவருமான முத்கலரிடம் துர்வாஸமகரிஷியானவர் நிச்சயத்துடன்கூடியவராகப் பர்வகாலந்தோறும் தவறுமல் ஆறுதரம் வந்தார். முனிவரான அந்தமுத்கலருடைய மனத்துக்கு ஒருவேறுபாடும் காணப்படவில்லை. சுத்தஸத்வகுணமுள்ளவரான முத்கலருடைய சுத்தமானமனத்தை அந்தத்துர்வாஸமகரிஷியானவர் மாசற்றதென்று கண்டார். பிறகு, மகிழ்ச்சியடைந்தவரான அந்தத் துர்வாஸமுனிவர் அப்பொழுது அந்தமுத்கலரைப்பார்த்து, 'உலகத்தில்உமக்கொப்பான மாத்ஸர்யமில்லாத கொடையாளி ஒருவருமில்லை. பசியானது தர்மசிந்தனையை விலக்குகிறது; தைர்யத்தையும் கவர்ந்துகொள்ளுகிறது. நாவானது விஷயங்களை அனுஸரிப்பதாக ரஸங்களைக்குறித்து மனிதனை இழுக்கமேவசெய்கிறது. பிராணன்கள் ஆகாரங்களால் நிலைபெறுகின்றன. சஞ்சலமான மனமானது எவ்விதத்தாலும் அடக்கமுடியாதது. மனத்துக்கும் இந்திரியங்களுக்கும் விஷயங்களில் பிரவ்ருத்தி இல்லாமல் தியானிக்கத்தக்க பிரம்மத்தினிடத்திலேயே அசைவற்று இருத்தல் தவம் என்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரமத்தால் ஸம்பாதிக்கப்பட்ட பொருளை நல்லமனத்தோடு [2] கொடுப்பதென்பது கஷ்டமானது. ஸாதுவே! அதுமுழுமையும் உம்மால் உள்ளபடி அனுஷ்டிக்கப்பட்டது. உம்மோடு சேர்க்கைபெற்று மகிழ்ச்சியுற்றவரும் அனுக்ரஹிக்கப்பட்டவருமாகிறோம். இந்திரியஜயம், தைர்யம், போக்யவஸ்துக்களை எல்லாருக்கும் தன்னேடுஸமமாகப் பங்கிட்டுக்கொடுத்தல், தமம், சமம், தயை, ஸத்யம், தர்மம் இவையனைத்தும் உம்மி

---

[1] அதிகபாடமான ஒரு ஸ்லோகம் விடப்பட்டது. [2] வேறுபாடம்.

டத்தில் நிலைபெற்றிருக்கின்றன. தர்மத்தால் சராசரங்களுடன் கூடின எல்லா உலகங்களும் தரிக்கப்படுகின்றன. தைர்யத்தை யுடைப்யவரே! உம்மால் அந்தத் தர்மங்கூட மனத்திலுல் தரிக்கப் படுகிறது. சுத்தஸத்வகுணத்தால் நிறைந்தமனிதன் உம்மைத் தவிர வேறு ஒருவனும் இல்லை. உம்முடையகர்மங்களால் உலகங் கள் ஜயிக்கப்பட்டன. உத்தமகதியை அடைந்தவராக இருக்கிறீர். ஆச்சர்யம். ஸ்வர்க்கத்தில் வஸிப்பவர்களால் மிகவும்பரிதான உம் முடைய தானமானது விசேஷமாகப் புகழ்ந்துகூறப்பட்டது. விரதத் தைதங்குஅனுஷ்டித்தவரே! நீர் சரீரத்துடன்கூடியவராக ஸ்வர்க் கத்தை அடைவீர்' என்று சொன்னர். அந்தத் துர்வாஸமுனிவர் அப்பொழுது இவ்வண்ணம் சொல்லிக்கொண்டிருக்கையிலேயே, தேவதூதன், ஹம்ஸங்களும்ஸாரஸங்களும்பூட்டியதும் [1] கிண்கிணித் திரள்களாலமைந்த மாலைகளையுடையதும் நினைத்தவண்ணம் செல் லுகிறதும் விசித்திரமானதும் திவ்யகந்தமுள்ளதுமான விமானத் துடன் முத்கலரிடம் வந்தான். அந்தத்தேவதூதன், அந்தப்ரம்ம ரிஷியைப்பார்த்து, 'முனிவரே! நல்லகர்மங்களால் ஜயிக்கப்பட்ட இந்தவிமானத்தில் ஏறும். சிறந்தஸித்தியை அடைந்தவராகஇருக் கிறீர்' என்று சொன்னன். இவ்வண்ணம் சொல்லுகின்ற அந்தத் தேவதூதனைப்பார்த்து, முத்கலரிஷியானவர், 'ஸ்வர்க்கவாஸிக ளுடைய குணங்கள் உன்னுல்சொல்லப்படவிரும்புகிறேன். அங்கே வஸிப்பவர்களுடையகுணங்கள் எவை? தவம் எது? நிச்சயம் எது? தேவதூதனே! அந்தஸ்வர்க்கத்தில் ஸுகமா? அல்லது கஷ்டமா? நற்குலத்திற்குத்தக்க நன்னடையுள்ள ஸாதுக்கள், 'ஸாதுக்களுடைய நேசம் ஏழு [2] பதங்களால் அடையப்படுகிறது' என்று சொல்லுகிறார்கள். பிரபுவே! மித்ரத்தன்மையைமுன் னிட்டு உன்னை நான் கேட்கிறேன். இந்த விஷயத்தில் எது உண் மையோ, எது நன்மையோ, அதை ஆலோசியாமல் கூறுவாயாக. நீ சொல்வதைக்கேட்டு உன்வசனத்திலுல் அப்படி நிச்சயத்தைச் செய்வேன்' என்று கூறினர்.

[1] யமணிகள். [2] சொற்கள் அல்லது காலடிகள்.

இருநூற்றறுபத்திரண்டாவது அத்யாயம்.

வ் ரீ ஹி த் ரௌ ண் கி க ப ர் வ ம். (தொடர்ச்சி.)

(தேவதூதனிடமிருந்து ஸ்வர்க்கலோகம் நிலையற்றதென்றறிந்த முத்கலர் ஸ்வர்க்கத்தைவிரும்பாமல் தேவதூதனைத் திருப்பி யனுப்பியதும், வியாஸர் முத்கலோபாக்கியானத்தை முடித்துத் தமதாஸ்ரமம் சென்றதும்.)

தேவதூதன், 'மஹரிஷியே! தாங்களே வந்திருப்பதும் விரும்பத்தக்கதும் மிகச்சிறந்ததுமான ஸ்வர்க்கலோகத்தைப்பற்றி நீர் அறிவில்லாதவர்போல ஆலோசிக்கிறீராதலால், நீர் அகார்யத்தில் புத்தியைச்செலுத்தினவர். ஸ்வர்க்கமென்று பெயருள்ள இந்த உலகமானது எல்லா உலகங்களையும் காட்டிலும் மேலானது. முனிவரே! ஸ்வர்க்கத்தைக்குறித்து மேலேசெல்லுகின்ற நல்லவழியானது அடிக்கடி விமானங்களால் ஸஞ்சரிக்கத்தக்கது. முத்கலரே! தவம்செய்யாதவர்களும் பெரியயாகங்களால் தேவதைகளை ஆராதியாதவர்களும் பொய்சொல்லுகிறவர்களும் நாஸ்திகர்களும் அங்கே செல்வதில்லை. தர்மத்தில் மனத்தைச் செலுத்தினவர்களும் மனத்தை அடக்கினவர்களும் சாந்தியுள்ளவர்களும் இந்திரியங்களை அடக்கினவர்களும் மாத்ஸர்யமில்லாதவர்களும் தானதர்மத்தில் நோக்குள்ளவர்களும் சூரர்களும் குணங்களால் பிரஸித்திபெற்றவர்களுமான மனிதர்கள் சமமும் தமமுமாகிய சிறந்ததர்மத்தைச்செய்து அந்தஸ்வர்க்கத்தை அடைகிறார்கள். பிராம்மணரே! ஸாதுக்களானமனிதர்களால் அடையப்பட்ட புண்ணிய புருஷர்களுடைய உலகங்களையும் அடைகிறார்கள். மௌத்கல்யரே! தேவர்கள், ஸாத்தியர்கள், விஸ்வேதேவர்கள், மஹரிஷிகள், யாமர்கள், தாமர்கள், கந்தர்வர்கள், அப்ஸரஸ்ஸுகள் ஆகிய இந்தத் தேவகணங்களுடைய ஆலயங்களுள்ள உலகங்கள் தனித்தனியாகவும் பலவாகவும் பிரகாசமுள்ளவைகளாகவும் விரும்பிய பொருள்கள் நிரம்பினவைகளாகவும் தேஜோமயமாகவும் மங்களகரமாகவுமிருக்கின்றன. முத்கலரே! அந்த ஸ்வர்க்கத்தில் முப்பத்துமூவாயிரம்யோஜனம் விஸ்தாரமுள்ள பொன்மயமான மேருவென்கிற சிறந்த பர்வதமும் தேவோத்யானங்களும் இருக்கின்றன. முத்கலரே! அந்தஸ்வர்க்கத்தில் எல்லாராலும் விரும்பப்படத்தக்க பழங்களடர்ந்த மரங்களால் எல்லாப்பக்கங்களிலும்

பிரகாசிக்கின்றவைகளும் மிக அழகியவைகளும் மகிழ்ச்சியைச் செய்பவைகளுமான உத்யானங்கள் இருக்கின்றன. புண்ணிய கர்மங்களைச் செய்தவர்களுக்குப் புண்யமான நந்தனம் முதலிய உத்யானங்கள் விளையாட்டிடங்கள். அங்கே பசிதாகங்கள் இல்லை; வாட்டம் இல்லை; சீதோஷ்ணங்களும் இல்லை. அப்படியே, பயமும் இல்லை. அந்தஸ்வர்க்கலோகத்தில் அருவருப்பை உண்டுபண்ணுகிறபொருளாவது அமங்களமாவது ஒருரோகமாவது இல்லை. ஸ்வர்க்கத்தில் எல்லாவிதத்திலும் ஸுகமான தொடுகையுள்ளவையும் மனத்துக்கு இன்பத்தைவிளைவிக்கின்றவையுமான நறுமணமுள்ள (காற்றுக்கள்) எங்கும் வீசுகின்றன. முனிவரே! அந்த ஸ்வர்க்கத்தில் காதுகளாலும் மனத்தினாலும் அறியத்தக்க இனிமையானசப்தங்கள் எல்லா இடங்களிலும் கேட்கப்படுகின்றன. சோகமாவது முதுமையாவது களைப்பாவது அழுகையாவது அந்த இடத்திலில்லை. முனிவரே! இப்படிப்பட்ட அந்தஉலகத்தையடைவது தன்கல்வினைப்பயனைக் காரணமாகக்கொண்டது. மனிதர்கள் தம்முடைய நல்வினைகளால் அங்கே செல்லுகின்றார்கள். மௌனக்கல்யரே! அந்தஸ்வர்க்கத்தில் வாஸம் செய்பவர்களுக்குத் தேஜோமயமானசரீரங்கள் வினைகளாலேயே உண்டாகின்றன; தாய்தந்தைகளால் உண்டுபண்ணப்படுகின்றனவல்ல. முனிவரே! அந்தஸ்வர்க்கத்திலிருப்பவர்களுக்கு வேர்வையாவது துர்க்கந்தமாவது மலமாவது மூத்திரமாவது இல்லை. முனிவரே! அந்தஸ்வர்க்கத்தில் அவர்களுடைய வஸ்திரங்களைப் புழுதியானது மங்கச்செய்கிறதில்லை. தேவலோகத்து மணமுள்ளவைகளும் மனத்தைக்கவருகின்றவைகளுமான அவர்களுடையமாலைகள் வாடுகிறதில்லை. பிராம்மணரே! இப்படிப்பட்ட அந்ததேவர்கள் விமானங்களால் தாங்கப்படுகிறார்களன்றே? மகாமுனிவரே! ஸ்வர்க்கத்தைப் புண்யங்களால் அடைந்தவர்கள் பொறுமையையும் சோகத்தையும் வாட்டத்தையும் விட்டுவிலகினவர்களாகவும் மோகத்தாலும் மாத்ஸர்யத்தாலும் விடப்பட்டவர்களாகவும் அங்கே ஸுகமாக வஸிக்கிறார்கள். முனிவர்களுள் சிறந்தவரே! அப்படிப்பட்ட அந்த உலகங்களுக்கு மேன்மேல் திவ்யமானவைபும் குணங்களோடுகூடியவையுமான இந்திரனுடைய லோகங்கள் இருக்கின்றன. அந்த லோகங்களுக்கு அப்புறத்தில் தேஜோமயமாகவும் மங்களகரமாகவுமிருக்கிற பிரம்மதேவருடைய உலகமிருக்கிறது. பிராம்மணரே! அந்த உலகத்திற்குத் தங்களுடைய நல்வினைகளால் பரிசுத்தர்களான ரிஷிகள்

செல்லுகிறார்கள். அந்த உலகத்தில் தேவர்களுக்கும் தேவதை களான ருபுக்களென்று பிரஸித்திபெற்ற மற்றவர்கள் இருக்கின் றார்கள். அந்த லோகத்தில் எவர்களைத் தேவர்கள் ஆராதிக்கி றார்களோ அவர்களுடைய லோகங்கள் மிகப்புகழப்படுகின்றன. அந்த உலகங்கள் ஸ்வயம்பிரகாசமுள்ளவைகள்; உத்தமமான ஒளி யுள்ளவைகள்; விரும்பினவைகளைக் கொடுப்பவைகள்; மேன்மை வாய்ந்தவைகள். அவர்களுக்கு ஸ்திரீகளால் செய்யப்படும்தாபம் இல்லை. அவர்களுக்குப் போகங்களிலும் ஐஸ்வர்யங்களிலும் மாத்ஸர்யம் இல்லை. அவர்கள் ஆகுதிகளால் ஜீவிக்கிறதில்லை; அமிருதபானம் செய்கிறதில்லை. அவர்கள் அப்படிப்பட்ட திவ்ய சரீரமுள்ளவர்கள்; (இந்திரியங்களால் காணத்தக்க) வடிவமைந்த சரீரமுள்ளவர்களல்லர்; அஸௌக்கியமில்லாதவர்கள். அவர் கள் ஸுகத்திலேயே விருப்பமுள்ளவர்கள். அவர்கள் தேவர் களுக்குத்தேவர்கள்; சாஸ்வதமாக இருப்பவர்கள். அவர் கள் கற்பங்கள் மாறுதலடையுங்காலங்களிலும் மாறுபாடின்றி அப்படியே இருக்கிறார்கள். மூப்பும் மரணமும் அவர்களுக்கு எங்கிருந்துவரும்? அவர்களுக்கு ஸந்தோஷமும் ப்ரீதியும் ஸுகமும் இல்லை. முனிவரே! துக்கமும் ஸுகமும் அவர்களுக் கில்லை. விருப்புவெறுப்புக்கள் எங்கிருந்துவரும்? மௌத்கல்யரே! சிறந்த அந்தக்கதியானது தேவர்களாலும் விரும்பப்பட்டது. நிகரற்றதும் அடைதற்கரிதுமான ஸித்தியானது காமத்திற்கு வசப்பட்டிருப்பவர்களால் எவ்விதத்திலும் அடையமுடியாதது; அணுகவும்முடியாதது. இந்தலோகங்கள் முப்பத்துமூன்று; மற்ற உலகங்கள் கற்றறிந்தவர்களால் சிறந்தநியமங்களாலும் விதியை முன்னிட்ட தானங்களாலும் அடையப்படுகின்றன. தானத்தால் உண்டுபண்ணப்பட்ட அப்படிப்பட்ட இந்தஸம்பத்தானது உம் மால் ஸுகமாக அடையப்பட்டிருக்கிறது. தவத்தினால் பிரகாசிக் கின்ற ஒளியுடன்கூடினநீர் ஸுக்ருதங்களால் அடையப்பட்டிருக் கிற அந்தஸம்பத்தை அனுபவிப்பீராக. பிராம்மணரே! இது ஸ்வர் க்க ஸுகம். அப்படியே உலகங்கள் பலவிதமானவைகள். ஸ்வர்க் கத்தினுடையகுணங்கள் உமக்குக் கூறப்பட்டன. தோஷங்களையும் என்னிடத்திலிருந்து தெரிந்துகொள்ளும்.

(இவ்வுலகில்) செய்த வினையின்பயனே அவ்வுலகில் அனுபவிக் கப்படுகிறது. அங்கே வேறுவினையானது செய்யப்படுகிறதில்லை; அடிமேல் அறுந்துபோகும்படி (வினையானது) மிகுதியின்றி அனுப

விக்கப்படுகிறது. அந்தக் கர்மபலானுபவத்தின்முடிவில் பூமியில் விழுதலென்பதே இந்தஸ்வர்க்கத்திலுள்ள தோஷமென்று என்னல் எண்ணப்பட்டிருக்கிறது. முத்கலரே! மிகப்ரகாசிக்கின்ற ஐஸ்வர்யங்களைப்பார்த்து ஸுகம் நிரம்பின மனத்தையுடையவர்களாயிருந்து பிறகு கீழேவிழுந்து கீழானஸ்தானத்திலிருப்பவர்களான அவர்களுக்கு மகிழ்ச்சியின்மையும் பரிதாபமும் வருவதென்பது பொறுக்க முடியாதது. ஸ்வர்க்கத்தினின்று கீழே விழுகின்றவர்களுக்குப் புத்திமயக்கமும் ரஜோகுணம் மிகுதலும் மலர்மாலைகள் வாடுதலும் உண்டாகின்றன. அதனால், கீழே விழப்போகிறவனுக்குப் பயம் வந்துவிடுகிறது. மௌத்கல்யரே! பிரம்மாவினுடைய வாஸஸ்தானமான ஸத்யலோகம்வரையில், பயங்கரமான இந்தத்தோஷங்கள் இருக்கின்றன. ஸ்வர்க்கலோகத்தில் ஸுக்ருதம் செய்தவர்களான மனிதர்களுக்குக் குணங்கள் பதினாயிரக்கணக்காக இருக்கின்றன. முனிவரே! ஸ்வர்க்கத்தினின்று நழுவினவர்கள் கல்வினப்பயன்களில் மிகுதியுள்ளவற்றின் ஸம்பந்தத்தால் மானிடஜாதியில் மீண்டும் பிறக்கிறார்களென்னும் இது எல்லாக்குணங்களையுங்காட்டிலும் சிறந்த வேறு ஒருகுணம். அதிலும், மஹாபாக்கியமுள்ளவன் மஹாகுலத்தில் பிறக்கிறான். அந்த மஹாகுலத்தில் பிறந்திருந்தும் நல்ல அறிவுடையவனாக இராவிடில் அதிலிருந்து அதமமானகதியை அடைகிறான். இந்த மண்ணுலகில் எந்த வினை செய்யப்படுகிறதோ அது பரலோகத்தில் அனுபவிக்கப்படுகிறது. பிராம்மணரே! இது கர்மபூமியென்றும் அது பலபூமியென்றும் எண்ணப்பட்டிருக்கின்றன' என்று சொன்னான்.

முத்கலர், 'தேவதூதனே! உன்னால் ஸ்வர்க்கத்திற்கு இந்தப் பெரியதோஷங்கள் கூறப்பட்டன. வேறு எந்த உலகம் தோஷமில்லாததாகவே இருக்கிறதோ அந்த உலகத்தை எனக்குச்சொல்வாயாக' என்று வினவ, தேவதூதன், 'பிராம்மணரே! எதைச் சுத்தமானதென்றும் பழுதையானதென்றும் சிறந்த ஒளியென்றும் ப்ரம்மமென்றும் அறிகிறார்களோ அப்படிப்பட்ட விஷ்ணுவினுடைய நிகரில்லாத ஸ்தானமானது பிரம்மலோகத்திற்கு மேலே இருக்கிறது. பிராம்மணரே! விஷயங்களில் மனத்தைச் செலுத்தினவர்களும் டம்பம், தோராசை, க்ரோதம், மோகம், த்வேஷம் ஆகிய இவைகளால் கவரப்பட்டவர்களும் அங்கே செல்லுகிறதில்லை. (என்னுடையதென்கிற) மமகாரமில்லாதவர்களும் (நான் என்கிற) அஹங்காரமில்லாதவர்

களும் ஸுகதுக்கங்களில்லாதவர்களும் இந்திரியங்களை நன்கு அடக்கினவர்களும் தியானயோகத்தில் பற்றுதலுள்ளவர்களுமான மனிதர்கள் அங்கே செல்லுகின்றார்கள். முத்கலரே! எதைப் பற்றி என்னை நீர் கேட்டீரோ அந்த்விஷயம் முழுதும் உமக்கு என்னால் உரைக்கப்பட்டது. ஸாதுவே! உம்முடையதனையினால் காமதியாமல் நன்கு செல்வோம்' என்று சொன்னன். மௌத்கல்யர் இந்தவாக்கியத்தைக்கேட்டு, புத்தியினால் ஆலோசித்தார். முனிவர்களுள் மிக்க மேன்மைவாய்ந்த மௌத்கல்யர் நன்றாக ஆலோசித்து, தேவதூதனைப்பார்த்து; 'தேவதூத! உனக்கு வந்தனம். அப்பா! ஸுகமாகத் திரும்பிச்செல். அதிக தோஷங்களோடுகூடின ஸ்வர்க்கத்தாலாவது ஸுகத்தாலாவது எனக்குச் செய்யத்தக்கது யாதொன்றுமில்லை. விழுதலில் முடிவாகக்கொண்ட ஸ்வர்க்கத்தில் அதிகதுக்கமுண்டாகிறது. மிக்க கொடுமையான பரிதாபமும் சேர்கிறது. ஸ்வர்க்கத்தை அடைந்திருப்பவர்கள் இங்கே விழுகிறார்கள். ஆகையால், ஸ்வர்க்கத்தை நான் விரும்பவில்லை. எந்த இடத்தில்சென்று சோகத்தையும் மனவருத்தத்தையும் சலனத்தையும் மனிதர்கள் அடைகிறதில்லையோ, அந்த அழிவற்ற ஸ்தானத்தையே நான் தேடப்போகிறேன்' என்று சொன்னார். அந்தமுனிவர் தேவதூதனைப்பார்த்து இவ்வண்ணம் வாக்கியத்தை உரைத்து அவனை அனுப்பிவிட்டு [1] ஸிலோஞ்சவ்ருத்தியைவிட்டு உத்தமமான ஓழிவை அடைந்தார். புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் ஸமமாகக் கருதுகின்றவரும் மண்ணுங் கட்டியையும் கல்லையும் பொன்னையும் ஸமமாக எண்ணுகின்றவருமாகிச் சுத்தமான ஜ்ஞானயோகத்தால் எப்பொழுதும் ப்ரம்மத்தியானத்தில் நிலைபெற்றிருந்தார். இந்திரிய ஸமூகங்களை அடக்கி ஜீவாத்மாவினிடத்தில் மனத்தைச் சேர்ப்பித்தார். சேர்க்கப்பட்டமன முள்ள ஜீவாத்மாவைப் பரமேச்வரனிடத்தில் சேர்த்தார். தியானயோகத்தால் வலிமையை அடைந்து சிறந்த புத்தியையுமடைந்து அழிவற்றதும் நிர்வாணம் (=மோக்ஷம்) என்று சொல்லப்படுவதுமான சிறந்த ஸித்தியைப்பெற்றார். குந்தீகனே! ஆகையால், நீயும் சோகத்தைப்பாராட்டத் தகுதியுள்ளவன் அல்லை. ஐச்வர்யத்தால் நிறைந்த ராஜ்யத்தினின்று கழுவின நீ தவத்தினால் அதனை அடைவாய். ஸுகம் முதலியுண்டாகிறது. அதற்கு அடுத்தது துக்கம். துக்கத்திற்கு அடுத்தது ஸுகம்.

[1] 965-ம் பக்கம் குறிப்பிற் காண்க.

சக்கரத்தின்முனையை அடைந்திருக்கிற ஆரங்கள்போல ஸுகதுக்கங்கள் மனிதனை மாறி மாறி அடைகின்றன. அளவுகடந்த விக்கிரமமுள்ளவனே! பதின்மூன்று வருஷத்திற்குமேல், தகப்பன் பாட்டன்முறையாக ஆளப்பட்டுவந்திருக்கிற ராஜ்யத்தை அடைவாய். உனக்கு மனத்திலுள்ள வருத்தமானது விலகட்டும்' என்றுசொன்னர். சிறந்த புத்தியுள்ளவரான அந்த வியாஸபகவான் பாண்டவர்களுக்கு ஆனந்தத்தை உண்டுபண்ணுகிற யுதிஷ்டிரரைப் பார்த்து இவ்வண்ணமுரைத்து மீண்டுமே தவஞ்செய்வதற்காக ஆச்ரமத்தை நோக்கிச் சென்றார்" என்றார்.

வைரிக்ரௌணிக பர்வம் முற்றிற்று.

இருநூற்றறுபத்துமூன்றுவது அத்யாயம்.

த்ரௌபதீஹரண பர்வம்.

(ஒரு ஸமயம் பதினாயிரம் சிஷ்யர்களுடன் துர்வாஸமகரிஷியானவர் துர்யோதனனிடம் சென்றதும், துர்யோதனன் அவரை உபசரித்து மகிழ்வித்து அவரைப் பிராம்மணர் முதலியவர்களும் த்ரௌபதியும் போஜனம் செய்தபிறகு போஜனத்திற்காகப் பாண்டவர்களிடம் செல்லவேண்டினதும், அவர் அவனுக்கு வரங்கொடுத்துப் பாண்டவர்களிடம் சென்றதும்.)

ஜனமேஜயர், "மகாமுனிவரே! மகாத்மாக்களான அந்தப் பாண்டவர்கள், இவ்வண்ணம் வனத்தில் வஸித்துக்கொண்டு, ரிஷிகளோடுகூட விசித்திரமான கதைகளால் ஆநந்தத்தை அடைகின்றவர்களாகி அன்னத்தை விரும்பிவருகிற பிராம்மணர்களை, த்ரௌபதியின் போஜனம்வரையில் வளர்ந்துவருகின்றதும் ஸூர்யனால் கொடுக்கப்பட்டதுமான அக்ஷயபாத்திரத்திலுள்ள அன்னத்தாலும் அரண்யத்திலுள்ள மிருகங்களின் பற்பலவிதமான மாம்ஸங்களாலும் திருப்தியடையச் செய்துகொண்டிருக்கும்பொழுது, துச்சாஸனன், கர்ணன், சகுனி இவர்களுடைய அபிப்பிராயத்தில் நிலைபெற்றிருப்பவர்களும் கெட்ட எண்ணமுள்ளவர்களும் கெட்டகடையுள்ளவர்களும் திருதராஷ்டிரபுத்ரர்களுமான துரியோதனன்முதலிய அனைவரும் அந்தப்பாண்டவர்களிடம் எவ்விதம் இருந்தார்கள்? மகிமைபொருந்தியவரே! வைசம்பாயனரே! எனக்கு இதனை உரைப்பீராக" என்று வினவினர்.

வைசம்பாயனர், "மகாராஜரே! நகரத்தில் வஸிப்பவர்கள் போலக் காட்டில் ஸுகமாக வாஸம்செய்கின்ற அந்தப் பாண்டவர்களுடைய அப்படிப்பட்ட ஜீவனத்தைக் கேட்டுத் துர்யோதனன் அப்படி வஞ்சனையில் நுண்ணறிவுள்ளவர்களான அந்தக் கர்ணன் துச்சாஸனன்முதலியவர்களுடன் அந்தப் பாண்டவர்களிடம் கெடுதியைச் செய்வதற்கு விருப்பமுள்ளவனானன். கெட்ட எண்ணமுள்ளவர்களான அந்தத் திருதராஷ்டிரகுமாரர்கள் பல உபாயங்களால் அந்தப்பாண்டவர்களுக்குக் கெடுதியைச் செய்வதற்காகச் சிந்தித்துக்கொண்டிருக்கையில், தர்மத்தில் மனத்தைச் செலுத்தினவரும் சிறந்த தவமுள்ளவருமான மிகப்பெரிய புகழுள்ளவருமான துர்வாஸரென்கிற மஹரிஷியானவர் தம்மிச்சையினால் பதினாயிரம் சிஷ்யர்களோடுகூடியவராகத் துர்யோதனனை அடைந்தார். வந்தவரும் அதிககோபமுள்ளவருமான துர்வாஸமுனிவரைப்பார்த்துச் சிறந்த செல்வமுள்ளவனும் நன்கு கற்பிக்கப்பட்ட தன்மையுள்ளவனுமான துர்யோதனன் வணக்கத்தோடும் மனத்தின் அடக்கத்தோடும் தம்பிமார்களுடன் சேர்ந்து முனிவரைத்தான் செய்யும் ஆதித்தியத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று பிரார்த்தித்து அழைத்தான்; வேலைக்காரன்போல நின்றுகொண்டு தானே முனிவரை விதிப்படி பூஜைசெய்தான். அந்த முனிஸ்ரேஷ்டர் சிலதினங்கள் அந்த இடத்திலிருந்தார். மஹாராஜரே! துர்யோதனராஜன் அந்தமுனிவருடைய சாபத்திற்குப் பயந்து ஆலஸ்யமில்லாமல் அல்லும்பகலும் அந்தமுனிவருக்குப் பணிவிடையைச் செய்தான். அந்தத் துர்வாஸமகரிஷியானவர், 'அரசனே! நான் பரிபுள்ளவனாக இருக்கிறேன். எனக்குச் சீக்கிரமாக அன்னத்தைக்கொடு' என்றுசொல்லிவிட்டு நீராடச் சென்றார்; நெடுநேரங்கழித்துத் திரும்பிவந்தார். வந்தவுடன், 'நான் போஜனம்செய்யமாட்டேன். எனக்கு இப்பொழுது பசிஇல்லை' என்றுசொல்லிவிட்டு மறைந்துபோய்விட்டார்; திடீரென்றுவந்து, 'விரைவுடன் நம்மைப்புஜிப்பிப்பாயாக' என்று சொன்னர். அந்தமுனிவர் ஒருசமயத்தில் நடுஇரவில் எழுந்திருந்து வஞ்சனையில் நிலைபெற்றவராகி முன்போல அன்னத்தைச்செய்வித்து அந்த அன்னத்தைப் போஜனம்செய்யவில்லை; அந்த அன்னத்தை இகழ்வுமிகழ்ந்தார். அவர் அவ்விதமிருந்தும் துர்யோதனராஜன் வேறுபாட்டையும் கோபத்தையும் அடையாமலிருந்தபொழுது, முனிவர் மகிழ்ச்சியுள்ளவரானார். பரதவம்சத்தில்

உதித்தவரே! தவத்தின் பெருமையால் எவ்விதத்தாலும் அவமதிக்கமுடியாதவரான துர்வாஸமுனிவர் அந்தத்துர்யோதனனைப்பார்த்து, 'நான் வரன்களைக்கொடுப்பவனாகவிருக்கிறேன். உன் மனத்திலிருக்கிற வரத்தை வேண்டிக்கொள். உனக்கு மங்களம். நான் ப்ரீதியை அடைந்திருக்கையில், எது தர்மத்தைவிட்டு விலகாததோ அது உன்னால் அடையத்தகாததாகாது' என்று சொன்னர். பரமாத்மாவைத்தியானிப்பவரான அந்த மஹரிஷியினுடைய இந்தவசனத்தைக்கேட்டு, அந்தத்துர்யோதனன் தன்னை மீண்டும் பிறந்தவனாக எண்ணினன். முனிவர் ஸந்தோஷமுள்ளவரானபோது வரம்கேட்கவேண்டுமென்று கர்ணன் துச்சாஸனன்முதலியவர்களால் முந்தியே ஆலோசிக்கப்பட்டிருந்தது. அரசரே! தூர்ப்புத்தியுள்ள துர்யோதனன் பின்வருமாறு வரம்கேட்கத்தக்கதென்று நிச்சயித்து, அதிகஸந்தோஷத்தோடுகூடியவனாக, முனிவரைப்பார்த்து, 'பிராம்மணரே! தேவரீர் சிஷ்யர்களோடுகூட எனக்கு அதிதியாகவந்ததுபோலவே, எங்கள்குலத்தில் மஹாராஜனும் மூத்தவனும் மிக்க சிறப்புடையவனும் வனத்தில் வஸிப்பவனும் தர்மாத்மாவும் தம்பிமார்களால்சூழப்பட்டவனும் உத்தமகுணங்களுள்ளவனும் கண்ணடையுள்ளவனுமான யுதிஷ்டிரனுக்கு அதிதியாகக்கடவீர். என்னிடத்தில் தேவரீருக்கு அனுக்ரஹமிருக்குமேயாகில், ராஜபுத்திரியும் மெல்லியதன்மையுள்ளவளும் சிறந்த கீர்த்தியுள்ளவளும் சிறந்த நிறமுள்ளவளுமான திரௌபதியானவள் பிராம்மணர்களையும் எல்லாப்பர்த்தாக்களையும் புஜிப்பித்துத் தானும் போஜனம்செய்து களைப்பாறிக்கொண்டு ஸுகமாக உட்கார்ந்திருக்கும்பொழுது, தேவரீர் அந்த இடத்திற்குச் செல்வீராக' என்ற வரத்தை வேண்டினன். பிராம்மணோத்தமரான துர்வாஸமகரிஷியும் துர்யோதனனைப்பார்த்து, 'உன்னிடத்திலுள்ள ப்ரீதியினால் அப்படியே செய்வேன்' என்று இவ்வண்ணமுரைத்து வந்தபடியே சென்றார். துர்யோதனன் மிக்க ஸந்தோஷமுள்ளவனாகக் கர்ணனுடைய கையைத் தன் கையினால்பிடித்துக்கொண்டு தன்னை அப்பொழுது விருப்பம் நிறைவேறினவனாகவும் எண்ணினன். கர்ணனும் ப்ராதாக்களுடன் சேர்ந்திருக்கின்ற துர்யோதனராஜனைப்பார்த்து ஸந்தோஷத்துடன், 'கௌரவ! பாக்கியவிசேஷத்தால் விருப்பம் நிறைவேறியது. தெய்வாதீனமாக நீ விருத்தியடைகிறாய். பாக்கியவிசேஷத்தால் உன்னுடைய ப்ரகைவர்கள் தாண்டமுடியாத துயரக்கட

வில் முழுகிவிட்டார்கள். பாண்டுபுத்திரர்கள் துர்வாஸருடைய கோபத்தினலுண்டானதெருப்பில் விழுந்துவிட்டார்கள். அவர்கள் தங்களுடையபாவங்களாலேயே எவ்விதத்தாலும் தாண்ட முடியாத அந்தகாரத்தை அடைந்தார்கள்' என்று சொன்னன். அரசரே! இவ்வண்ணம் வஞ்சனையில் நுண்ணறிவுள்ளவர்களான அந்தத் துர்யோதனன்முதலிய துராத்மாக்கள் சிரித்துக்கொண்டு மனத்தில் மகிழ்ச்சியுள்ளவர்களாகத் தத்தம் வீடுகளைக் குறித்துச் சென்றார்கள்.

இருநூற்றறுபத்துநான்காவது அத்யாயம்.

த்ரௌபதீஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(துர்வாஸர் அகாலத்தில் பாண்டவர்களை அடைந்து அன்னத்தை வேண்டியதும், த்ரௌபதிவேண்ட ஸ்ரீ கிருஷ்ணன்வந்து துர்வாஸர் செய்தியறிந்து தம்பசிக்கு அன்னம் வேண்டி அன்னபாத்திரத்தை வருவித்து அதிலோட்டியிருந்த கீரையையும் பருக்கையையும் புஜித்து அதனல் துர்வாஸருக்கும் சிஷ்யர்களுக்கும் திருப்தியை உண்டுபண்ணியதும் பீமன் போஜனத்திற்காகத் துர்வாஸரை அழைக்கவே அவர் சிஷ்யர்களுடன் வெட்கி ஓடியதும்.)

பிறகு, துர்வாஸமஹரிஷியானவர் ஒரு ஸமயத்தில் அந்த வனத்தில் பாண்டவர்கள் ஸுகமாக இருக்கிறார்களென்றும் க்ருஷ்ணையும் போஜனம் செய்துவிட்டு ஸுகமாக வீற்றிருக்கிறாளென்றும் அறிந்து, பதினாயிரம் சிஷ்யர்களால் சூழப்பட்டவராகப் பாண்டவர்களை நோக்கிவந்தார். வருகின்ற அந்த அதிதியைக் கண்டு, ஸ்ரீமானும் (தர்மத்தினின்று) நழுவாதவருமான யுதிஷ்டிர ராஜர் தம்பிமார்களோடுகூட எதிர்கொண்டுசென்றார். இருகரங்களையும் குவித்து அவரை நமஸ்கரித்துச் சிறந்த ஆஸனத்தில் நன்றாக வீற்றிருக்கச்செய்து சாஸ்திரவிதிப்படிபூஜித்து ஆதித்தியத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று அவரைக் கேட்டுக் கொண்டார். 'பகவானே! ஆஹ்னிகத்தைச் செய்துவிட்டுச் சீக்கிரம் வருவீராக' என்றும் சொன்னர். தோஷமில்லாதவரான அந்த முனிவரும், 'சிஷ்யர்களுடன்கூடின என்னை எவ்

பீமஸேனனைப்பார்த்து, 'முனிவர்களைப் போஜனம்செய்வதற்காகச் சீக்கிரம் அழைத்துவா' என்றும் சொன்னர். ராஜஸ்ரேஷ்டரே! பிறகு, பெரும்புகழுள்ளவனான பீமஸேனன் ஸ்நானம் செய்வதற்காகத் தேவநதியைநோக்கிச் சென்ற தூர்வாஸர்முதலிய அந்த ரிஷிகளனைவரையும் போஜனத்தின்பொருட்டு அழைப்பதற்காக விரைந்துசென்றான். ஜலத்திலிறங்கினவர்களும் [1] அகமர்ஷண ஸூக்தங்களை ஜபிக்கின்றவர்களுமான அந்த முனிவர்கள் அன்ன ரஸத்துடன்கூடின ஏப்பங்களைக்கண்டு அதிகதிருப்தியுடன் அந்த ஜலத்தினின்று கரையேறி ஒருவரைஒருவர் பார்த்துக்கொண்டார்கள். அந்த எல்லாமுனிவர்களும், தூர்வாஸமஹரிஷியைப்பார்த்து, 'பிராம்மணோத்தமரே! அரசனை அன்னத்தைச் செய்விக்கச்சொல்லி நாம் ஸ்நானத்திற்காக வந்தோம். இப்பொழுது நாம் கழுத்துவரையில் அன்னத்தால் நிறைந்து திருப்தியுள்ளவர்களாயிருக்கிறோம். எதை நாம் புஜிக்கப்போகிறோம்? வீணாக நம்மால் சமையல் செய்விக்கப்பட்டது. அந்தவிஷயத்தில் என்ன செய்யக்கடவோம்?' என்று சொன்னார்கள். தூர்வாஸர், 'சமையல் வீணாக்கப்பட்டதனால் ராஜரிஷிக்குப் பெரிய குற்றம் செய்யப்பட்டது. பாண்டவர்கள் க்ரூரமானகண்ணால் பார்த்தமாத்திரத்தில் நம்மை எரிக்காமலிருக்கமாட்டார்கள். பிராம்மணர்களே! உயர்ந்தபுத்தியுள்ளவரும் ராஜரிஷியுமான அம்பரீஷருடைய மகிமையை நினைத்து, ஹரியினுடைய பாதத்தை அடுத்திருக்கிற பக்தனிடத்திலிருந்து மிகவும்பயப்படுகிறேன். பாண்டவர்களெல்லாரும் மகாத்மாக்கள்; தர்மத்தையே சரணாகக்கொண்டவர்கள்; சூரர்கள்; வேதவித்தையை நன்குகற்றறிந்தவர்கள்; வேதவ்ரதங்களை அனுஷ்டிப்பவர்கள்; தவத்தில்நிலைபெற்றிருப்பவர்கள்; ஸகாசாரத்தில் பற்றுள்ளவர்கள்; நித்யம் வாஸுதேவரையே கதியாக அடைந்தவர்கள். அவர்கள் கோபித்துக்கொள்வார்களாகில், நெருப்பு பஞ்சுக்குவியலை எரிப்பதுபோல நம்மை மிச்சமின்றி எரித்துவிடுவார்கள். ஆகையால், சிஷ்யர்களே! இவர்களிடம் சொல்லிக்கொள்ளாமலே நீங்கள் விரைவாக ஓடிவிடுங்கள்' என்று சொன்னர்.

இவ்வாறு குருவானமுனிவரால் அப்பொழுது சொல்லப்பட்ட அந்தப்பிராம்மணர்களெல்லாரும் பாண்டவர்களிடமிருந்து மிகப்பயந்தவர்களாகப் பத்துத்திசைகளிலும் ஓடினர்கள். பீமஸேனன் தேவநதியில் முனிஸ்ரேஷ்டர்களைக் காணாமல் அந்த

[1] பாவங்களைப்போக்கும் வேதமந்திரங்களின் தொகுதி.

கதியினுடைய துறைகளில் இங்குமங்கும் தேடிக்கொண்டு திரிந்தான். அந்த இடத்திலிருக்கிற தாபதர்களிடமிருந்து அவர்கள் ஓடிவிட்டார்களென்பதைக்கேட்டு, பிறகு, யுதிஷ்டிரரிடம்வந்து அந்தச் செய்தியைத் தெரிவித்தான். பிறகு, அந்தப்பாண்டவர்களனைவரும் அவர்கள் திரும்பிவருதலை விரும்பிச் சிறிதுகாலம் எதிர்பார்த்துக்கொண்டு மனஅடக்கத்துடன் இருந்தார்கள். 'நடுஇரவில் திடீரென்றுவந்து அவர் நம்மை வஞ்சிப்பார். தெய்வத்தாலேற்படுத்தப்பட்டிருக்கிற இந்தக்கஷ்டத்தினின்று எவ்வாறு கரையேறுவோம்?' என்று கவலையுற்று அடிக்கடி பெருமூச்சுவிடுகின்ற பாண்டவர்களைக்கண்டு இணைபிரியாதலக்ஷ்மியுடன் கூடின ஸ்ரீகிருஷ்ணன் நேரில்வந்து அவர்களைப்பார்த்து, 'பார்த்தர்களே! மகாகோபமுள்ளவரான ரிஷியினிடத்தினின்று உங்களுக்குநேர்ந்த ஆபத்தை அறிந்து திரௌபதியினால் சிந்திக்கப்பட்ட நான் விரைவுடன் வந்தேன். அந்தத் துர்வாஸரிஷியினிடத்தினின்று உங்களுக்குப் பயம் சிறிதுமில்லை. உங்களுடைய தேஜஸால் பயந்து முந்தியே அவர் ஓடிவிட்டார். தர்மத்தில் நிலைபெற்றவர்களாக இருக்கிறவர்கள் ஒருஸமயத்திலும் வருத்தமடைகிறதில்லை. உங்களிடம் விடைபெற்றுச்செல்வேன். உங்களுக்குத் தவறுமல் மங்களமுண்டாகட்டும்' என்று சொன்னார்.

கேசவரால் சொல்லப்பட்ட வசனத்தைக்கேட்டு திரௌபதியுடன்கூடின பார்த்தர்கள் நல்லநிலைமையை அடைந்தவர்களானார்கள். மனக்கவலை நீங்கினவர்களாக அந்தக்கிருஷ்ணனைப்பார்த்து, 'கோவிந்தரே! பிரபுவே! பெருங்கடலில் முழுகுகிறவர்கள் தெப்பத்தை அடைந்து கடலைக்கடப்பதுபோலத் தாண்டமுடியாத ஆபத்தை அடைந்து நாதரான உம்மால் அந்த ஆபத்தைத் தாண்டினோம். க்ஷேமமாகச் செல்லக்கடவீர். உமக்கு மங்களம்' என்று அனுமதி கொடுக்கப்பட்டவராகத் தம்தகரிணைக்குறித்துச் சென்றார். மகாபாக்யமுள்ளவரே! பிரபுவே! பாண்டவர்களும் திரௌபதியுடன் மிக்கமனக்களிப்படைந்து காடுகள்தோறும் விளையாடிக்கொண்டு வஸித்துவந்தார்கள். அரசரே! உம்மால் இப்பொழுது நான் எதைப்பற்றி வினவப்பட்டேனோ அது உமக்கு உரைக்கப்பட்டது. வனத்தில் வஸிக்கின்ற பாண்டவர்களிடம் தராத்மாக்களான திருதராஷ்டிரகுமாரர்களால் செய்யப்பட்ட இவ்விதத் தீங்குகள் பயனற்றவைகளாயின.

இருநூற்றறுபத்தைந்தாவது அத்யாயம்.

த்ரௌபதீஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(பாண்டவர் ஐவரும் வேட்டைக்குப் போயிருக்கையில் பரிவாரங் களுடன் சென்ற ஜயத்ரதன் வழியில் அவர்களுடைய ஆச்ரமத் தில் நுழைந்ததும், அவன் திரௌபதியைப் பார்த்து மனங் கலங்கி அவளுடைய வரலாற்றை அறிய விரும்பிக் கோடிகாச்யனை அனுப்பியதும்.)

ஏராளமான மிருகங்களோடுகூடின அந்தக்காம்யகவனத்தில் திரிகின்றவர்களும் மகாரதர்களுமான அந்தப் பரதச்ரேஷ்டர்கள் தேவர்கள் ஸ்வர்க்கத்தில் விளையாடுவதுபோல விளையாடினர்கள். இந்திரனுக்கொப்பானவர்களும் பகைவர்களைக் கொல்பவர்களும் வேட்டையாடுவதையே ஸ்வபாவமாகக் கொண்டவர்களுமான பாண்டவர்கள் எல்லாப்பக்கங்களிலும் பலவிதமான வனப்ரதேசங் களையும் பருவத்தால் ரமணீயமாக இருப்பவைகளும் நன்கு பூத் திருப்பவைகளுமான வன ஸமூகங்களையும் பார்த்துக்கொண்டு அந்தப் பெரிய வனத்தில் சிறிதுகாலம் விளையாடினர்கள். பிறகு, பகைவர்களைவாட்டுபவர்களான அந்தப் புருஷச்ரேஷ்டர்களெல்லா ரும் பிராம்மணர்களுக்காக வேட்டையாடும்பொருட்டு மஹரிஷியும் ஜ்வலிக்கின்ற தவமுள்ளவருமான த்ருணபிந்துவும் புரோகித ரான தௌம்யருமாகிய இவர்களுடைய கட்டளையினல் த்ரௌள பதியை ஆச்ரமத்தில் இருக்கச் செய்து ஒரேஸமயத்தில் நான்கு திசைகளிலும் சென்றார்கள். பிறகு, மிக்ககீர்த்தியுள்ளவனும் விருத்த க்ஷத்ரனுடைய குமாரனும் அந்த ஸிந்துதேசாதிபதியுமான ஜயத் ரதன் அப்பொழுது விவாஹம் செய்துகொள்ள வேண்டுமென்கிற விருப்பமுள்ளவனுக ஸால்வதேசத்தைக்குறித்துச் சென்றுகொண் டிருந்தான். அவன் அரசர்களுக்குத்தக்க பெரியவையான குடை, சாமரம், சேனைகள், வாகனங்கள் முதலிய பரிவாரங்களால் சூழப் பட்டவனுக அனேக மன்னர்களோடு காம்யகவனத்தை அடைந் தான். ஜனங்களில்லாத அந்தக் காட்டில் ஆச்ரமத்தின் வாயிலில் நிற்பவளும் நல்லபுகழுள்ளவளும் பாண்டவர்களுடைய அன்புள்ள மனைவியும் சரீரத்தால் அதிகமாகப் பிரகாசிப்பவளும் உத்தமமான ரூபத்தைத் தரிக்கின்றவளும் கருமையான மேகத்தை விளங்கச் செய்கின்ற மின்னல்போல்க் காட்டிடங்களை விளங்கச் செய்கின்ற வளுமான திரௌபதியைப் பார்த்தான். 'இவள் அப்ஸரஸோ?

தேவகன்னியோ? அல்லது, தெய்வத்தினால் ஏற்படுத்தப்பட்ட மாயையோ?' என்று நினைத்து எல்லாரும் கைகுவித்துக்கொண்டு சிறந்த அழகுள்ளவளான அந்தப் பாஞ்சாலியைக் கண்டார்கள். பிறகு, ஸிந்துதேசத்திற்கு அரசனும் வ்ருத்தக்ஷத்ரனுடைய குமாரனுமான அந்த ஜயத்ரதன், ஆச்சர்யத்தை அடைந்து, தோஷமில்லாத அங்கங்களுள்ளவளான அந்த த்ரௌபதியைப் பார்த்துக் கெட்ட எண்ணமுள்ளவனாகவும் காமனால் மதிமயக்க முற்றவனாகவும் கோடிகாஸ்யனென்கிற அரசனை நோக்கி, 'தோஷமில்லாத அங்கங்களுள்ள இந்தமாது யாரைச்சேர்ந்தவள்? ஒருகால், இவள் மானிடப் பெண்ணேயிராமற்போனால் அதிக ஸௌந்தர்யமுள்ளவளான இவளைப்பார்த்து எனக்கு விவாஹரூபமான பிரயோஜனம் யாதொன்றும் ஏற்படாது. நான் இவளை எடுத்துக்கொண்டே என்னுடைய வீட்டுக்குச் செல்லப்போகிறேன். அப்பா! போ. இவளைப்பற்றித் தெரிந்துகொள். இவள் எவனுடைய மனைவி? இந்த இடத்திற்கு எங்கிருந்து வந்திருக்கிறாள்? அழகிய புருவங்களுள்ள இந்த மாது, முட்களால் நிறைந்த இந்த வனத்திற்கு எதற்காக வந்திருக்கிறாள்? [1] சிறந்த இடையுள்ளவளும் லோகஸுந்தரியும் நீண்ட கடைக்கண்களையுடையவளும் அழகிய பற்களுள்ளவளும் மெலிந்த இடையுள்ளவளுமான இந்தப் பெண் இப்போழுது என்னை ப்ரீதியோடு அடைவாளா? இந்த உத்தம ஸ்திரீயை அடைந்து நான் விருப்பம் நிறைவேறினவனாவேனா? கோடிகா! போ. இவளுக்கு நாதன் யார் என்றே அறிவாயாக' என்று சொன்னான். குண்டலங்களை அணிந்த அந்தக் கோடிகாஸ்யன், அந்த வசனத்தைக் கேட்டு, அப்பொழுது ரதத்தினின்று கீழே குதித்து, நாயானது பெண்புலியினருகிற் செல்வதுபோல, அந்தப் பெண்ணினருகிற் சென்று பின் வருமாறு வினவலானான்.

இருநூற்றறுபத்தாறுவது அத்யாயம்.

த்ரௌபதீஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(கோடிகாஸ்யன் திரௌபதியை அணுகி அவளுடைய தகப்பன் கணவன் குலமுதலியவைகளை வினவியது.)

கோடிகன், 'அழகிய புருவங்களுள்ளவளும், காற்றினால் மிக அசைக்கப்படுகின்றதும் இரவில் மிகவும் பிரகாசத்துடன் கூடியது;

---

[1] 'வராரோஹா' என்பது மூலம்.

மான அக்னிஜ்வாலேபோலப் பிரகாசிப்பவளுமான நீ யார்? கடப்பமரத்தின் கிளையை வணக்கிக்கொண்டு ஏன் ஆச்ரமத்தில் நிற்கிறாய்? நீ மிக்க அழகுள்ளவளாக இருக்கிறாய். அரண்யங்களில் எப்படி பயப்படாமலிருக்கிறாய்? நீ தேவஸ்த்ரீயோ? இயக்கியோ? தானவப் பெண்ணே? சிறந்த அப்ஸரஸோ? சிறந்த கைத்யப் பெண்ணே? நல்லதேகமுள்ள நாகராஜ கன்னிகையோ? காட்டில் ஸஞ்சரிக்கின்ற ராக்ஷஸ ஸ்த்ரீயோ? நீ தேவராஜனுடைய பத்னியோ? வருணனுடைய பத்னியோ? யமன், சந்திரன், குபேரன், [1] தாதா, விதாதா, பிரபுவான சூரியன், இந்திரன் இவர்களுடைய மாளிகையினின்று நீ இந்த அரண்யத்திற்கு வந்திருக்கிறாயோ? நாங்கள் எவர்களென்பதை நீ கேட்கவில்லை. இந்த வனத்தில் உன்னுடைய நாதனை நாங்கள் அறியவில்லை. கல்யாணி! உன்னுடைய கௌரவத்தை வளரச்செய்துகொண்டு வினவுகிறோம். உன்னுடைய பிரபுவான பிதாவையும் உறவினர்களையும் பதியையும் குலத்தையும் ஜாதியையும் இந்த வனத்தில் செய்கிற காரியத்தையும் சொல்வாயாக. சிறந்த தொடையுள்ளவளே! நான் ஸுரதனென்கிற அரசனுடைய குமாரன். மனிதர்கள் என்னைக் கோடிகாம்ய னென்று அறிகிறார்கள். நான் இந்திரியங்களை அடக்கினவன்; ஸத்தியத்தில் பற்றுள்ளவன்; ஞானத்தினால் முதிர்ந்தவர்களை உபாஸித்தவன். குருக்களைப் பூஜிப்பவன். பொன்போன்ற மேனியுள்ளவளே! குண்டத்தில் ஹோமம் செய்யப்பட்டிருக்கிற அக்னி போல ரதத்தில் பிரகாசித்துக்கொண்டிருப்பவனும் கமலங்கள் போல அகன்றும் மலர்ந்துமிருக்கிற கண்களுள்ளவனுமான இந்த வீரன் திரிகர்த்ததேசத்து அரசன்; சுஷர்மங்கரனென்கிற பெயருள்ளவன். பெரிய வில்லைக் கையிலேந்தியவனும் இவனைக்காட்டிலும் வேறுக இருப்பவனுமான இந்த வீரன் மிக்க சிறப்புடைய வனான குளிந்தாதிபதியினுடைய புத்திரன். அகன்றும் நீண்டுமிருக்கிற கண்களுள்ளவனும் கல்லமலர்களைச் சூட்டிக்கொண்டிருப்பவனும் பர்வதத்தில் நித்யவாஸம் செய்பவனுமான இந்த ராஜகுமாரன் உன்னைப் பார்க்கிறான். அழகிய மேனியுள்ளவளே! கருமை நிறமுள்ளவனும் யௌவனமுள்ளவனும் இனிய தோற்றமுள்ளவனும் புஷ்கரிணியின் ஸமீபத்திலிருக்கிறவனும் பகைவர்களைக் கொல்பவனுமான இந்த வீரன் இக்ஷ்வாகு குலத்தரசன்;

---

[1] 'தாதா—பிரஜாதிபதி' என்றும், 'விதாதா—கஸ்யபர்' என்றும் கூறுவது பழையவுரை.

ஸோமனுடைய புத்திரன். கல்யாணி! எவனுடைய படையெடுப்புத் தோறும் ஸௌவீரதேசத்தைச் சார்ந்தவர்களான அங்காரகன், குஞ்சரன், குப்தகன், சத்ருஞ்சயன், ஸஞ்சயன், ஸுப்ரவ்ருத்தன், ப்ரபங்கரன், ப்ரமரன், ரவி, சூரன், ப்ரதாபன், குகணன் என்கிற பன்னிரண்டு ராஜகுமாரர்கள் த்வஜத்துடன் கூடினவர்களாக யாகங்களில் ஜ்வலிக்கின்ற அக்னிகள்போல அனைவரும் சிவந்த குதிரைகள் பூட்டின ரதங்களிலேறிக்கொண்டு செல்லுகிறார்களோ, எவனை ஆறுயிரம் தேராளிகளும் யானைகளும் குதிரைகளும் [1] பதாதிகளும் பின்தொடர்ந்து செல்லுகிறார்களோ அப்படிப்பட்ட இந்த [2] ஸௌவீரதேசாதிபனை ஜயத்ரதனென்பவன் உன்னால் கேட்கப்பட்டிருக்கலாம். தளராத மனமுள்ளவர்களான வலாஹகன், அநீகவிதாரணன் முதலிய அவனுடைய மற்றப்ராதாக்களும், மிகச் சிறப்புற்றவர்களும் யௌவனமுள்ளவர்களும் பலசாலிகளுமான இந்த ஸௌவீரவீரர்களும் அரசனை ஜயத்ரதனைப் பின்தொடர்ந்து செல்லுகின்றார்கள். தேவகணங்களால் நாற்புறங்களிலும் பாதுகாக்கப்பட்ட இந்திரன்போல இந்தத் துணைவீரர்களால் பாதுகாக்கப் பட்டவனாக ஜயத்ரதராஜன் அருகிற்செல்லுகிறான். அழகிய கூந்தலுள்ளவளே! நீ யாருடைய பார்யை? யாருடைய புதல்வி? அறியாதவர்களான எங்களுக்கு இந்த விஷயத்தை வெளிப்படுத்து வாயாக' என்று கூறினன்.

இருநூற்றறுபத்தேழாவது அத்யாயம்.

த்ரௌபதீஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(திரௌபதி தன்னுடைய பிறப்பு முதலியவற்றைக் கோடிகாஸ்யனுக்குக் கூறியது.)

பிறகு, சிபிகளுள் சிறந்தவனான அந்தக் கோடிகாஸ்யனால் வினவப்பட்ட ராஜபுத்ரியான திரௌபதியானவள் அவனைப் பார்த்து மெதுவாகக் கிளையை விட்டுவிட்டு வேண்பட்டினாலாகிய மேலாடையை நன்கு இழுத்துப் போர்த்துக்கொண்டு, 'ராஜபுத்திரனே! என்னைப்போன்றவள் உன்னுடன் பேசுதற்குத் தகுதியுள்ளவளாகாளென்பதை நான் புத்தியினால் தெரிந்துகொண்டிருக்கி

---

[1] 'கால்களாலேயே எப்பொழுதும் செல்லும் தன்மையுடையவர்கள்' என்பது பழையவுரை. [2] இது ஸிந்துதேசத்தைச் சார்ந்தது.

றேன். ஆயினும், இந்த இடத்தில் இந்தச்சமயத்தில் உனக்கு மறு மொழி கூறுவதற்கு வேறு ஆண்பிள்ளையாவது பெண்பிள்ளை யாவது இல்லை. நான் இப்பொழுது தனிமையாக இருக்கிறேன். அதனால், உனக்கு மறுமொழி சொல்லவேண்டியவளாகிறேன்.

[1] ஐயா! இதனை நீ தெரிந்துகொள்வாயாக. ஸ்வதர்மத்தில் நிலை பெற்றிருக்கிற நான் அரண்யத்தில் தனித்திருந்துகொண்டு தனித் திருக்கிற உன்னோடு எவ்வாறு பேசுவேன்? மனிதர்கள் கோடி காம்யனென்கிற பெயருள்ளவனென்று அறிகின்ற நீ ஸுரத னுடைய புத்திரனென்பது எனக்குத்தெரியும். சிபிவம்சத்தில் பிறந் தவனே! ஆகையால், நான் அப்படியே உனக்கு என்னுடைய பந் துக்களையும் பிரஸித்தமான குலத்தையும் சொல்லுகிறேன். சைப்ய! நான் த்ருபதராஜனுடைய புத்திரி. மனிதர்கள் என்னை க்ருஷ்ணையென்னும் பெயருள்ளவளென்று அறிவார்கள். அப் படிப்பட்ட நான் காண்டவப்ரஸ்தத்திலிருந்தவர்களாக உன்னால் கேட்கப்பட்ட ஐந்து புருஷர்களைப் பதிகளாக வரித்திருக்கிறேன். யுதிஷ்டிரரும், பீமஸேனரும், அர்ஜுனரும், மாத்ரீபுத்திரர்களும் புருஷச்ரேஷ்டர்களுமான (நகுலஸஹதேவர்களுமாகிய) அவர்கள் என்னை இந்தக் கானகத்திலிருக்கச்செய்து வேட்டையாடுவதற்காக நான்கு திக்குக்களையும் பகுத்துக்கொண்டு சென்றிருக்கிறார்கள். அரசர் கீழ்த்திசையையும் பீமஸேனர் தென்திசையையும் அர்ஜு னர் மேல்திசையையும் நகுல ஸஹதேவர்கள் வட திசையையும் குறித்துச் சென்றிருக்கிறார்கள். தேராளிகளில் சிறந்தவர்களான அவர்கள் இந்த இடத்தைவிட்டுச் சென்று நெடுநேரமாகிவிட்டது. அவர்கள் இந்த இடத்திற்கு வரும் நேரமாகிவிட்டதென்று நினைக் கிறேன். வாகனங்களைவிட்டு இறங்குங்கள். அவர்களால் உப சரிக்கப்பட்டு இஷ்டப்படி செல்லுவீர்கள். அதிதிகளிடத்தில் ப்ரீதி யுள்ளவரும் மகாத்மாவுமான தர்மபுத்திரர் உங்களைப்பார்த்து ப்ரீதியுள்ளவராவார்' என்று சொன்னாள். சந்திரன்போன்ற முக முள்ளவளும் பிரஸித்திபெற்றவளுமான அந்த த்ருபதராஜகுமாரி யானவள் சைப்யகுமாரனைப் பார்த்து இவ்வளவுமாத்திரம் சொல்லிவிட்டு, அவர்களுக்கு ஆதித்யம் செய்யவேண்டிய தன்கட மையை நினைத்து அந்தச் சிறந்த பர்ணசாலையில் பிரவேசித்தாள்.

[1] 'ஹே' என்பது மூலம். இது மரியாதையாக அழைக்கும் ஒரு சொல்.

இருநூற்றறுபத்தெட்டாவது அத்யாயம்.

த் ரௌ ப தீ ஹ ர் ண ப ர் வ ம். (தொடர்ச்சி.)

(கோடிகாஶ்யனிடத்தினின்று திரௌபதியின் வரலாற்றை அறிந்த ஜயத்ரதன் அவளை அணுகித் தனக்கு மனைவியாதும்படி வேண்டியது.)

பாரதரே! அந்த அரசர்களனைவரும் அவ்வாறு உட்கார்ந்திருக்கும்பொழுது, கோடிகாஶ்யன் ஸிந்துராஜனிருப்பிடத்தைக் குறித்து விரைவாகச் சென்றான்; திரௌபதியினால் சொல்லப்பட்டவையும் அர்த்தத்துடன் கூடினவையுமான அனைத்தையும் தெரிவித்தான். கோடிகாஶ்யனுடைய சொல்லைக்கேட்டு ஜயத்ரதன் அவனைப்பார்த்து, 'சைப்ய! இவள் வாய்திறந்து பேசும் பொழுதே என் மனம் ரமிக்கிறதே. பெண்களுக்நாயகமான இவளிடமிருந்து எவ்வாறு நீ திரும்பினாய்? மிக்க புஜபலமுள்ளவனே! இந்தமங்கையைப் பார்த்த என் மனத்துக்கு மற்றப் பெண்கள் பெண்குரங்குகள்போலத் தோன்றுகிறார்கள். இதனை உனக்கு உண்மையாகச் சொல்லுகிறேன். பார்த்ததினாலேயே அவளால் என் மனம் அதிகமாகக் கவரப்பட்டது. சைப்ய! அந்தக் கல்யாணி மானிடப் பெண்ணையிருந்தால் அவளைப்பற்றி நன்றாகச் சொல்' என்று வினவ, கோடிகாஶ்யன், 'சிறந்த கீர்த்தியுள்ளவளான இந்தப்பெண் த்ருபதராஜகுமாரி; கிருஷ்ணை என்கிற பெயருள்ளவள். பாண்டுபுத்திரர்களனைவருக்கும் மிகவும் மனத்துக்கு இனிய மஹிஷி. பதிவ்ரதையான இவள் எல்லாப் பார்த்தர்களுக்கும் மதிப்புக்குரிய மனைவி. ஜயத்ரத! நீ அவளோடுசேர்ந்து ஸௌவீரதேசத்தை நோக்கிச்செல்வாயாக'' என்று சொன்னான்.

இவ்வாறு சொல்லக்கேட்டவனும் ஸௌவீரதேசத்துக்கும் ஸிந்துதேசத்துக்குமதிபதியும் கெட்ட எண்ணமுள்ளவனுமான ஜயத்ரதன், 'த்ரௌபதியை நான் பார்க்கிறேன்' என்று மறுமொழி கூறினான். ஆறுவீரர்களுடன்சேர்ந்து ஏழாமவனாக இருக்கிற அந்த ஜயத்ரதன், சிங்கமிருக்கும்குகையில் ஓநாய் நுழைவதுபோலப் புண்யமான ஆஶ்ரமத்தில் நுழைந்து, திரௌபதியைப்பார்த்து, 'சிறந்த இடையுள்ளவளே! உனக்கு மங்களம். உன்னுடைய பர்த்தாக்கள் [1] ஆரோக்யமுள்ளவர்களாக இருக்கிறார்களா? எவர்

---

[1] இது க்ஷத்ரியர்களை க்ஷேமம் விசாரிக்கும் முறை; 581-ம் பக்கம் குறிப்பிற் காண்க.

களுடையக்ஷேமத்தில் நீ விருப்பமுள்ளவளாக இருக்கிறாயோ அவர்களும் அரோமயமுள்ளவர்களாக 'இருக்கிறார்களா?' என்று வினவினான். திரௌபதியானவள், 'அரசனே! உன்னுடைய நாட்டிலும் கோசத்திலும் சேனையிலும் க்ஷேமமமா? செல்வத்தால் நிறைந்த சிபிதேசத்தையும் ஸிந்துதேசத்துடன் ஸௌவீரதேசத்தையும் இன்னும் உன்னுலடையப்பட்ட மற்றத்தேசங்களையும் நீ ஒருவனே தர்மத்தினுல் பாதுகாக்கிறாயா? குருவம்சத்திலுதித்தவரும் குந்தியின்புதல்வருமான யுதிஷ்டிரமகாராஜர் க்ஷேமமாக இருக்கிறார். நான் ஸுகமாக இருக்கிறேன். இந்தயுதிஷ்டிரருடைய பிராதாக்களும் மற்ற எவர்களைப்பற்றிக் குசலப்ரஸ்னம் பண்ணுகிறாயோ அவர்களும் ஸுகமாக இருக்கிறார்கள். ராஜகுமார! பாத்யத்தையும் இந்தஆஸனத்தையும் பெற்றுக்கொள்வாயாக. ஆண்மான்களையும் பெண்மான்களையும் உனக்குக் காலையாகாரமாகக் கொடுக்கிறேன். குந்தீபுத்திரரானயுதிஷ்டிரர் உனக்கு ஏணமான்குட்டிகளையும் புள்ளிமான்களையும் ங்யங்குமான்களையும் ஹரிணமான்களையும் சரபங்களையும் முயல்களையும் காடிகளையும் ருருமான்களையும் சம்பரமான்களையும் கவயங்களையும் பலமிருகங்களையும் பன்றிகளையும் காட்டெருமைகளையும் இன்னும் வேறுஜாதிமிருகங்களையும் தாமாகவே கொடுப்பார்' என்று சொன்னுள். ஜயத்ரதன், 'என்னுடைய காலைச் சாப்பாட்டுக்குக் குறைவொன்றுமில்லை. உன்னால் எனக்கு எல்லாம் கொடுப்பதற்கு விரும்பப்பட்டிருக்கிறது. வா; என் ரதத்தில் ஏறு; ஸுகத்தையே அடை. செல்வத்தை இழந்தவர்களும் ராஜ்யத்தை இழந்தவர்களும் தரித்திரர்களும் புத்தியில்லாதவர்களும் காட்டில் வஸிப்பவர்களுமான பாத்தர்களை அனுஸரிப்பதற்கு நீ தகுதியுள்ளவளல்லை. கற்றறிந்த ஸ்திரீகள் செல்வத்தை இழந்தவனைப் பர்த்தாவாக உபயோகித்துக்கொள்ளுகிறதில்லை. செல்வத்தைத்தருப்பவனைச் சேரவேண்டும். செல்வத்துக்கு அழிவு வரும் பொழுது அவனிடத்தில் வஸிக்கக்கூடாது. உன்னுடைய பர்த்தாக்கள் செல்வமற்றவர்களானார்கள். அதேக வர்ஷகாலங்களாக ராஜ்யத்தினின்றும் விலகிவிட்டார்கள். பாண்டுபுத்திரர்களிடத்திலுள்ள பக்தியினுல் நீ கிலேசத்தை அனுபவிக்கவேண்டாம். அழகிய பின்தட்டுக்களையுள்ளவளே! எனக்கு நீ பார்யையாகிவிடு; இவர்களை விட்டு விடு. ஸுகத்தை அடைவாயாக. நீ என்னுடன்கூடி ஸிந்துதேசத்தையும் ஸௌவீரதேசத்தையும்

முழுமையும் அடைவாயாக' என்று சொன்னான். ஸிந்துராஜனால் இவ்வாறு மனம் நடுங்கக்கூடிய வசனத்தை உரைக்கக் கேட்ட திரௌபதியானவள், புருவநெரித்தலுடன்கூடின முகமுள்ளவளாக அந்த இடத்தினின்று விலகினாள். அழகிய இடையுள்ள திரௌபதியானவள் ஸைந்தவனுடைய அந்த வாக்கியத்தை அவமதித்தும் மறுத்தும், 'இப்படியன்று; வெட்கத்தையடை' என்று அவனைப் பார்த்து உரைத்தாள். இகழத்தகாதவளான அந்த க்ருஷ்ணையானவள் பார்த்தாக்களுடைய வரவை விரும்புகின்றவளாக அந்த ஸைந்தவனுடைய சொற்களுக்கு மறுமொழி உரைத்துக்கொண்டு அதிகமாகக் காலதாமதம்செய்தாள். திரௌபதி, 'மகாபாகுபலமுள்ளவனே! நீ இவ்வண்ணம் சொல்லாதே. நீ நியாயத்தை விட்டு விலகாதமார்க்கத்தை நினைக்கவில்லை. துச்சலையென்பவள் பாண்டவர்களுக்கும் தார்த்தராஷ்டிரர்களுக்கும் இளையஸஹோதரி. ராஜகுலத்தைத்தாங்குபவனே! அந்தத் துச்சலைக்கு நீ கணவன். எனக்கும் நீ முறையினால் பிராதா. மகாரதனே! உன்னால் நான் பாதுகாக்கப்படத்தக்கவள். தர்மிஷ்டர்களுடைய குலத்தில் பிறந்திருக்கிற நீ தர்மத்தைப் பார்க்கவில்லை' என்று சொன்னாள். இவ்வண்ணம் சொல்லக்கேட்ட ஸிந்துராஜன், பிறகு, திரௌபதியைப்பார்த்து, 'நீ அரசர்களுடைய தர்மத்தை அறியவில்லை. வித்வான்கள் இந்த உலகத்தில் ஸ்திரீகளையும் ரத்தினங்களையும் எல்லாருக்கும் பொதுவென்று சொல்லுகிறார்கள். அரசர்கள் ஸஹோதரிகளையும் ஸஹோதரிகளின் புத்திரிகளையும் அப்படியே பிராதாக்களின் மனைவிகளையும் ஸுகமாக எடுத்துக்கொள்ளுகிறார்கள். அரசர்களிடத்தினின்று பிறந்திருப்பவர்களான அந்தப்பெண்களும் அந்தவிஷயத்தில் அப்படியே செய்கிறார்கள்' என்று மறுமொழி உரைத்தான்.

இருநூற்றறுபத்தொன்பதாவது அத்யாயம்.

த் ரௌ ப தீ ஹ ர ண ப ர் வ ம். (தொடர்ச்சி.)

(த்ரௌபதி தன்னிடம் காதல்கொண்ட ஜயத்ரதனை நிந்தித்ததும், தன் முன்தானையை வலியப் பிடித்திழுத்த அவனை விலக்கித் தள்ளியதும், பின்னும் அவன் விடாமலிழுக்க அவள் அந்தாதத்தில் வறினதும்.)

திருபதராஜகுமாரியானவள், பிறகு, கோபத்தால் சிவந்ததும் வாடியதும் அழகியதும் சிவந்த கண்களுள்ளதும் வளைந்து

மேலேறிய புருவங்களுள்ளதுமான முகத்தால் சீறிக்கொண்டு ஸௌவீரதேசாதிபதியான அந்த ஜயத்ரதனைப்பார்த்து மீண்டும் உரைக்கலானுள். 'மூடா! சிறந்த கீர்த்தியுள்ளவர்களும் கொடிய விஷம்போன்றவர்களும் மஹேந்திரனுக்கொப்பானவர்களும் தம் முடைய காரியங்களில் விடாமுயற்சியுள்ளவர்களும் யக்ஷர்கள் ராக்ஷஸர்கள் இவர்களுடைய கூட்டங்களிலும் (சண்டையில்) அசைவற்று நிற்பவர்களுமான மஹாரதர்களைப்பற்றி இகழ்வான வசனங்களைச் சொல்லுகின்ற நீ எவ்வாறு லஜ்ஜையுய அடை யாமலிருக்கிறாய்? சிறந்தவீரனே! (பாவத்தினின்று நெடுந்தூரம் விலகிச் செல்பவர்களான) ஆர்யர்கள் காட்டில் ஸஞ்சரிப்பவனுக இருந்தாலும் வீட்டில் மனைவியுடன் சேர்ந்திருப்பவனுயிருந்தாலும் கல்விநிரம்பின தவசியைப்பற்றி ஒருவிதமான தோஷத்தையும் சொல்லமாட்டார்கள். நல்லமனிதர்கள் அவனை இவ்வண்ணம் ப்ரீதியுடன் அடைகிறார்கள். பெரியபடுகுழியில் விழுகின்ற உன்னை இப்பொழுது கையில்பிடித்துத் தடுக்கக்கூடிய மனி தன் இந்த அரசர்கூட்டத்தில் உனக்கு ஒருவனுமில்லை என்று நான் நினைக்கிறேன். நீ தர்மராஜரை ஜயிப்பதற்கு விரும்பு வது தண்டத்தைமட்டும் ஆயுதமாகக்கொண்டு மதப்பெருக் குள்ளதும் மலையின் சிகரத்திற்கொப்பானதும் இமயமலையின் தாழ்வரையில் ஸஞ்சரிப்பதுமான யானையை யானைக்கூட்டத்தி னின்றுவிலக்கி இழுப்பதுபோலிருக்கிறது. நன்றுக உறங்கிக் கொண்டிருப்பதும் அதிகபலமுள்ளதுமான சிங்கத்தைக் காலால் மிதித்துக்கொண்டு அதன் முகத்தினின்று இமைமயிர்களை அறியா மையால் பிடித்திழுக்கிறாய். கோபித்துக்கொண்டிருக்கிற பீமஸேன னை நீ பார்த்தவுடன், ஓடிவிடுவாய். கோபங்கொண்டவரும் உக்கிர மானவருமான அர்ஜுனனை எதிர்த்துப்போர்புரியப்போகிற நீ மஹாபலமுள்ளதும் மிக்கதோரமானதும் மிகவளர்ந்ததும் இள மைப்பருவத்திலிருப்பதும் மலைகளின்குகைகளில் உறங்கிக்கொண் டிருப்பதும் கொடியதுமான சிங்கத்தைக் கால்நுனியினல் மிதிக் கிறாய். கடைசியில் பிறந்தவர்களும் புருஷச்ரேஷ்டர்களுமான நகுலஸஹதேவர்களோடு யுத்தம்செய்யவிரும்புகிற நீ மதங்கொண்ட வலுகிக் கடுமையானமுகமுள்ளவைகளும் இரண்டுநாவுள்ளவைகளு மான இரண்டுகருநாகங்களைக் காலால் வாலில் மிதிக்கிறாய். மூங்கி லும் வாழையும் சோரையும் எவ்வாறு தம்நாசத்தின்பொருட்டுப் பலிக்கின்றனவோ, தம்நன்மையின்பொருட்டுப் பலிக்கிறதில்லையோ,

பெண்ணண்டு (எவ்வாறு தன்னாசத்தின்பொருட்டுக்) கர்ப்பத்தை (த்தரிக்கிறதோ) அவ்வாறே அந்தப்பாண்டவர்களால் எல்லாப்பக் கங்களிலும் பாதுகாக்கப்படுகின்ற என்னை (உன்விநாசத்தின் பொருட்டு) எடுக்கப்போகிறாய்' என்றுசொன்னாள்.

ஜயத்ரதன், 'கிருஷ்ணையே! நான் அறிவேன். அந்தராஜ குமாரர்கள் எவ்வித ஸ்வபாவமுள்ளவர்களென்பது என்னால் அறியப்பட்டிருக்கிறது. உன்னால் இப்பொழுது இவ்விதமான இந்தப் பயத்தை உண்டுபண்ணுகிறவசனத்தால் நாங்கள் பயத்தை அடையச்செய்வதற்கு ஸாத்தியப்படாதவர்கள். கிருஷ்ணையே! நாங்கள் எல்லாரும் [1]எட்டுக்கர்மங்களோடும் [2]ஒன்பது சக்தி முதலியவைகளோடும்கூடிய சிறந்தகுலங்களில் பிறந்திருக்கிறோம். சௌர்யம் முதலிய [3]ஆறுகுணங்களால் நாங்கள் மேம்பாடுள்ளவர் களாக இருக்கிறோம். திரௌபதி! பாண்டுபுத்திரர்களை ஆறுகுணங் களால் விடுபட்டவர்களாக எண்ணுகிறோம். அப்படிப்பட்ட நீ விரைவாக யானையின்மீதாவது ரதத்தின்மீதாவது ஏறுவா யாக. நாங்கள் பேச்சினல்மாத்திரம் தடுக்கப்பட முடியாதவர்க ளன்றோ? நீ தீனமான வசனத்தைச்சொல்லி ஸௌவீராராஜனை என்னுடைய அருளை மீண்டும் பிரார்த்திப்பாயாக' என்று சொன்னான். திரௌபதி, 'நான் மகாபலமுள்ளவள். ஆனல், இப் பொழுது, ஸௌவீராராஜனை உன்னல் பலமில்லாதவள்போல எண் ணப்பட்டிருக்கிறேன். கல்ல பிரஸித்திபெற்றவளான நான் இப் பொழுது மீறப்படுவதனல் ஸௌவீராராஜனைக்குறித்துத் தீனமான வசனத்தை உரைக்கமாட்டேன். ஒருரதத்தில் சேர்ந்து வீற்றிருப் பவர்களான க்ருஷ்ணன் அர்ஜுனர் இருவரும் எவருடைய வழியை அனுஸரித்துச் செல்லுவார்களோ அப்படிப்பட்ட த்ரௌள

[1] 'திருஷ்டி, வர்த்தகம், துர்க்கம், அணைகட்டுதல், யானைபிடித்தல், சுரங்கமெடுத்தல், கப்பம் வாங்குதல், பாழ்நிலங்களில் குடியேற்றுதல் ஆகிய எட்டும் அரசர்களுக்குப் பொருள் வருவாய்க்கு வழிகள்' என்பது பழையவுரை.

[2] 'பிரபுசக்தி, மந்த்ரசக்தி, உத்ஸாஹசக்தி, பிரபுவித்தி, மந்த்ர வித்தி, உத்ஸாஹவித்தி, பிரபுதயம், மந்த்ரோதயம், உத்ஸாஹோதயம் ஆகிய ஒன்பதும் ரூபத்தாலும் நிறமையாலும் பயலுலும் அந்தக்குலங் களில் என்றும் குடிகொண்டிருக்கின்றன' என்பது பழையவுரை.

[3] 'சௌர்யம், தேஜஸ், ஸ்தைர்யம், ஔதார்யம், தானம், ஐஸ்வர்யம்' என்பது பழையவுரை.

பதினை இந்திரன்கூட எவ்விதத்தாலும் அபஹரிக்கச் சக்தியுள்ள வனுகான். அப்படிப்பட்ட திரௌபதிவிஷயத்தில் அல்பனான வேறு ஒரு மனிதன் என்னசெய்யமுடியும்? சத்துருவீர்களைக் கொல்பவரும் ரதத்திலிருப்பவரும் பகைவர்களுடைய மனங்களைத் தூன்பமடையச் செய்பவருமான கிரீடியானவர் கோடைக்காலங்களில் உலர்ந்த காட்டை எரிக்கிற நெருப்புப்போல என்னிமித்தம் உன்னுடைய சேனையில் புகுந்து நாசம்செய்வார். அந்தகவீர்களுடனும் வ்ருஷ்ணிவீர்களுடனும்கூடின கிருஷ்ணனும் பெரியவிற்களைப் பிடித்தவர்களான எல்லாக் கேகயர்களும் இந்த எல்லா ராஜகுமாரர்களும் மிகக்களித்த தோற்றமுள்ளவர்களாக என்னுடையவழியைப் பின்தொடருவார்கள். நாண்கயிற்றில் வைத்து நன்றாக இழுத்துவிடப்பட்டவைகளும் மேகம்போலக் கர்ஜிக்கின்றவைகளும் காண்டீவத்தினின்று விடுபட்டவைகளும் அதிக வேகமுள்ளவைகளும் அச்சந்தருபவைகளுமான அம்புகள், தனஞ்சயருடைய கையில் நன்றாக மோதி மிக்க கோரமாக ஒலிக்கும். காண்டீவத்தினின்று விடுபட்டவைகளும் விட்டிற்பூச்சிகளின் கூட்டங்கள் போல மிக்கவேகத்துடன் கூடியவைகளுமான பெரிய பாணஸமூகங்களையும் வீர்யசாலியான அர்ஜுனரையும் எப்பொழுது நீ பார்ப்பாயோ அப்பொழுது நீ உன்புத்தியை நிந்தித்துக்கொள்ளுவாய். சங்கவாத்திய முழக்கத்துடன்கூடியவரும் உள்ளங்கையுறையில் நாண்கயிறு மோதுவதனாலுண்டாகும் சப்தமுள்ளவரும் அடிக்கடி உரக்கச் சிங்கநாதம் செய்பவரும் காண்டீவத்தை வில்லாகக் கொண்டவருமான அர்ஜுனர் எப்பொழுது உன்னுடைய மார்பில் அம்புகளைப்போடுவரோ அப்பொழுது உன்னுடையமனமானது எப்படியாகுமோ? அதம! கதாயுதத்தைக் கையிலெடுத்துக்கொண்டு உன்னை எதிர்த்தோடிவருகின்ற பீமஸேனரையும் பொறுமையினாலுண்டான கோபமாகிற விஷத்தைக் கக்கிக் கொண்டு பகைவர்களிருக்கிற திசைகளைக்குறித்து எதிர்த்து விரைவாகவருகின்ற மாத்ரீபுத்திரர்களான நகுலஸஹதேவர்களையும் பார்த்து நெடுங்காலம் மனவருத்தத்தை அடைவாய். நான் மிக்க மேன்மைபெற்றவர்களான கணவர்களை மனத்தால்கூட ஒரு பொழுதும் எவ்விதத்தாலும் மீறி நடக்கிறதில்லையென்கிற ஸத்தியத்தினால், இப்பொழுது நீ பார்த்தர்களால் வசப்படுத்தப்பட்டு எல்லாப்பக்கங்களிலும் இழுக்கப்படுகின்றதைப் பார்ப்பேன். நான் க்ரூரனான உன்னால் வலிந்து இழுக்கப்பட்டாலும் பயத்தை

அடையமாட்டேன். நான் கௌரவர்களுள் மிகச் சிறந்த வீரர் களான பார்த்தர்களோடு சேர்ந்து மீண்டும் காம்யகவனத்தை வந்தடைவேன்' என்று சொன்னாள்.

இவ்வாறு சொல்லக்கேட்ட அந்தஸிந்துராஜனே விசாலமான கண்களுள்ள அந்தத்திரௌபதியைப்பார்த்து, 'திரௌபதி! நான் உன்னைப் பலாத்காரமாக இழுக்கவில்லை. என்தேரில் விரைவாக ஏறு' என்றான். விசாலமானகண்களுள்ள அந்தத்திரௌபதி, பிடிக்கஎண்ணங்கொண்ட அவர்களைப்பார்த்து அதட்டுகின்றவ ளாகவும் பயந்தவளாகவும், 'என்னைத்தொடாதீர்கள்' என்று சொன்னாள். அவள் புரோகிதரான தௌம்யரை அலறி அழைத் தாள். ஜயத்ரதன் அந்தத்திரௌபதியை மேலாடையில் பிடித் தான். அவள் அவனை விலக்கித்தள்ளினாள். அந்தத்திரௌபதியி னால் நன்குவிலக்கித் தள்ளப்பட்ட சரீரமுள்ள அந்தப் பாபி யான ஜயத்ரதன் அடியற்றமரம்போல விழுந்தான். மிக்கவேகத் துடன் கூடின ஜயத்ரதனால் வலிந்து பிடித்திழுக்கப்படுகின்ற ராஜ புத்திரியான கிருஷ்ணையானவள் அடிக்கடி பெருமூச்சுவிட்டுக் கொண்டும் பொறுத்துக்கொண்டும் தௌம்யருடைய சரணங் களில் தண்டனிட்டு ரதத்திலேறினாள். தௌம்யர், 'ஜயத்ரத! மகாரதர்களான பார்த்தர்களை ஜயிக்காமல் இவளை நீ கொண்டுபோதல் முடியாது. பழமையான க்ஷத்திரியதர்மத்தைப் பார்ப்பாயாக. அல்பமான கார்யத்தைச் செய்து தர்மராஜனை முதன்மையாகக் கொண்ட வீரர்களான பாண்டவர்களை அடைந்தவுடன் நீ தீமை யின்பயனை அடைவாய். ஸம்சயமில்லை' என்று கூறினர். தௌம் யர் இவ்வாறு சொல்லிவிட்டு, கொண்டுபோகப்படுகிறவளும் சிறந்த கீர்த்தியுள்ளவளுமான அந்த ராஜபுத்திரியை அப்பொழுது காலாட் கூட்டங்களின் தலைவை அடைந்தவராகப் பின்தொடர்ந்தார்.

இருநூற்றெழுபதாவது அத்யாயம்.

த்ரௌபதீஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(பாண்டவர்கள் கேட்டநிமித்தங்களைக்கண்டுவிபத்துநேருமென்ற ஸந்தே கத்துடன் விரைவாக ஆச்ரமத்துக்குவந்ததும், திரௌபதிக்கு நேர்ந் ததை வேலைக்காரியினால் அறிந்து ஜயத்ரதனைத் தொடர்ந்து சென்று அவனைச் சண்டைக்கழைத்ததும்.)

விற்பிடித்தவர்களும் பூமியில் மிக்கசிறப்புவாய்ந்தவர்களு மான பார்த்தர்கள் தனித்தனிஸஞ்சரிக்கின்றவர்களாக எல்லாத்

திசைகளையும் நன்முகச்சூழ்ந்துகொண்டு மான்களையும் பன்றிகளையும் எருமைகளையும் கொன்று, பிறகு, ஒன்றுசேர்ந்தவர்களாஞர்கள், பிறகு, மான்களாலும் துஷ்டமிருகங்களின் கூட்டங்களாலும் பரவப்பெற்றதும் பறவைகளின் ஒலிகளால் எதிரொலியிடுவதுமான பெரியகானகத்தை அடைந்திருக்கிற அந்தத்தம்பிமார்களை நோக்கி யுதிஷ்டிரர் பேசுகின்ற மிருகங்களுடைய சொற்களைக் கேட்டுப் பின்வருமாறு உரைக்கலானர். 'இந்தமிருகங்களும் பக்ஷிகளும் கொடிய துயரத்தையும் பெரும்பயத்தையும் பகைவர்களால் ஏற்படக்கூடிய அவமானத்தையும் தெரிவிக்கின்றனவைகளாக ஸூர்யனால் பிரகாசிக்கின்றதிசையை நோக்கிவந்து குரூரமாகப் பேசுகின்றன. சீக்கிரம் திரும்புங்கள். நமக்கு மிருகங்கள்போதும். என்மனமானது பரிதாபத்தை அடைகிறது; எரிக்கவும்படுகிறது. தேகத்தில் இந்திரியங்களுக்கெல்லாம் பதியான முக்யப்ராணனைது தீனஸ்வபாவத்துடன்கூடியதாக என்புத்தியை மயக்கிக்கொண்டு மிகநடுங்குகிறது. எனக்கு இச்சமயத்தில் இப்படிப்பட்ட காம்யகவனமானது, கருடனால் சிறந்த ஸர்ப்பம் பிடிக்கப்பட்ட தடாகம்போலவும் 'அரசனுடனழிந்த ராஜ்யம்போலவும் குடிகாரர்களால்கள்குடிக்கப்பட்ட குடம்போலவும் தோன்றுகிறது' என்றார். அந்த வீரர்கள் அக்னிபோலவும் காற்றுப்போலவும் கொடியவேகமுள்ளவைகளும் அதிக வேகத்தையுடையவைகளுமான ஸிந்துதேசத்தில் பிறந்த குதிரைகளோடு சேர்த்துப் பூட்டப்பட்டவையும் பெரியவையுமான கல்லரதங்களால் சுமக்கப்படுகின்றவர்களாக அப்பொழுது ஆஸ்ரமத்தைநோக்கி வருவாராயினர். திரும்பிவருகின்ற அவர்களுடைய இடப்புறத்தில்வந்து கரியானது அதிகமான சத்தத்துடன் பேசியது. அரசரான தர்மநந்தனர், அதனை நன்முகஆலோசித்து, பீமனையும் தனஞ்ஜயனையும் பார்த்து, 'மிக்க இழிவானஜாதியில் பிறந்த இந்த கரியானது நம்முடைய இடப்புறத்தில்வந்து பேசுவதனால் பாவிகளான கௌரவர்களால் நம்மை அவமதித்துப் பலாத்காரத்தால் வெளிப்பட்டையாகவே தீமை செய்யப்பட்டுவிட்டது' என்று சொன்னர். பெரியகாட்டில் வேட்டையாடி, பிறகு, திரும்பிவந்து அந்த வனத்தில் பிரவேசிக்கின்ற அந்தப் பார்த்தர்கள் அப்பொழுது அழுதுகொண்டிருப்பவளும் பிராணநாயகியான திரௌபதிக்கு ஊழியம்செய்பவளும் சிறுமியுமான [1] காத்ரேயினையென்பவளைக் கண்டார்கள். இந்திர

[1] வளர்ப்புத்தாயின் மகளை என்றும் கொள்ளலாம்.

ஸேனன், விரைவாக எதிரில்வந்து ரதத்தினின்று குதித்து, பிறகு, அவளைநோக்கி ஓடினன். 'அரசரே! இந்திரஸேனன் மிகுந்த மனவருத்தமடைந்தவனாக அப்பொழுது அந்தத் தாத்ரேயிகையைப் பார்த்து, 'ஏன் நீ பூமியில் விழுந்து அழுகிறாய்? ஏன் உன்னுடைய முகமானது நிறம்குன்றி வறட்சியை அடைகிறது? மிக்க கொடுமைகளைச்செய்கின்ற பாவிகளால் ராஜபுத்திரியான திரௌபதியானவள் துன்புறுத்தப்படாமலிருக்கிறாளா? பாண்டுவின் குமாரர்கள் ஞானகம் சென்றிருக்கையில் இந்தக்காட்டில் பகைவர்களால் தீமை செய்யப்படாமலிருந்ததா?' என்றுவினவினன். மனங்கலங்கின தாத்ரேயிகையானவள், வேகத்துடன் தன்னருகில்வந்த ஸாரதியான இந்திரஸேனனை நன்றுகப் பார்த்து, மிக்ககஷ்டத்துடன் மார்பில் அடித்துக்கொண்டு, அப்பொழுது, 'தேவியானவள் கவரப்பட்டாள்' என்று உரக்க அலறினள். இந்திரஸேனன், 'இகழத்தகாத ரூபமுள்ளவளும் விசாலமான கண்களையுடையவளும் குருஸ்ரேஷ்டர்களான பாண்டவர்களுக்குச் சரீரம்போன்றவளுமான ராஜபத்னியை ஸமயம் பார்த்து எந்தமனிதன் தன் அழிவின்பொருட்டுக் கவர்ந்தான்? தேவியானவள் பூமியினுள் சென்றாலும் ஸ்வர்க்கத்தை அடைந்தாலும் கடலினுள் சென்றாலும் அவளுடைய இருப்பிடத்தில் பார்த்தர்கள் செல்லுவார்கள். தர்மராஜர் அப்படியன்றோ ஸந்தாபத்தை அடைகிறார்? இப்படிப்பட்டவர்களும் பகைவர்களை அழிக்கின்றவர்களும் துன்பங்களைப் பொறுப்பவர்களும் பகைவர்களால் ஜயிக்கமுடியாதவர்களுமான பாண்டவர்களுக்கு ப்ராணனுக்கு ஸமமாக இருப்பவளும் மிகவும் இஷ்டமானவளும் நிகரில்லாத ரத்தினம்போன்றவளுமான பாஞ்சாலியை எந்த மூடன் கவரவிரும்புவான்? பாண்டவர்களுக்கு வெளியில் ஸஞ்சரிக்கின்ற மனமாகஇருக்கிற திரௌபதியை இச்சமயத்தில் இந்தஇடத்தில் நாதனையுடையவளென்று அறியவில்லை. கூருள்ளவைகளும் கோரமானவைகளும் சிறந்தவைகளுமான பாணங்கள் இப்பொழுது எவனுடைய சரீரத்தைப் பிளந்துகொண்டு பூமியில் பிரவேசிக்கப்போகின்றனவோ? பயந்தவளே! அந்தக்ருஷ்ணையைப்பற்றி நீ வியஸனப்படாதே. கிருஷ்ணையானவள் இப்பொழுது திரும்பிவரப்போகிறளென்று அறிவாயாக. பார்த்தர்கள் எல்லாப்பகைவர்களையும் மிச்சமில்லாமல் கொன்று, பிறகு, யஜ்ஞஸேனனுடைய குமாரியான கிருஷ்ணையுடன் திரும்பி வருவார்கள்' என்று சொன்னன்.

பிறகு, தாத்ரேயிகையானவள் அழகிய முகத்தைத் துடைத்துக்கொண்டு ஸாரதியான இந்திரஸேனனைப்பார்த்து, 'இந்திரனுக்கோப்பான ஐவரையும் அலக்ஷ்யம்செய்து கிருஷ்ணையானவள் ஜயத்ரதனல் வலிந்து கவரப்பட்டாள். புதியவழிகள் இதோ இருக்கின்றன. அப்படியே ஓடிக்கப்பட்ட மரங்களும் வாடவில்லை. (தேர்களைத்) திருப்புங்கள். சீக்கிரமாகப் பின்தொடர்ந்து செல்லுங்கள். ராஜபுத்திரியானவள் (அதிக) தூரம்செல்லவில்லையன்றோ? இந்திரனுக்கொப்பான நீங்களனைவருமே பெரிய அழகிய கவசங்களைப் பூட்டிக்கொள்ளுங்கள். அதிகவிலைமதிப்புள்ள விற்களையும் அம்புகளையும் கையிற் பிடியுங்கள். சீக்கிரம் (இந்த) வழியிற் செல்லுங்கள். கிருஷ்ணையானவள் அதட்டுதலாலும் கண்டபயத்தாலும் மதிமயக்கமடையும்படி செய்யப்பட்டவளும் நன்றுகமயங்கின மனமுள்ளவளுமாகி வறட்சியடைகிற முகத்துடன், சிறந்த நெய்யினால் நிறைந்த [1] ஸ்ருக்கைச் சாம்பலில்சேர்ப்பதுபோலத் தகுதியற்ற ஒருவனுக்குத் தன்தேகத்தைக் கொடுத்துவிடப்போகிறாள். பார்த்தர்களே ! உமதுநெருப்பில் ஹவிஸானது ஹோமம் செய்யப்படப்போகிறது. இடுகாட்டில் மாலையானது எறியப்படப்போகிறது. பிராம்மணர்கள் மிகமயங்கியிருக்கும் தருணத்தில் யாகத்தை அடைந்திருக்கிற ஸோமரஸமானது நாயினால்நக்கப்படப்போகிறது. காராம்பசுவின்பாலினது தாரையானது தோற்பையில் வார்க்கப்படப்போகிறது. முயலுங்கள். நரியானது பெரிய காட்டில் வேட்டையை உத்தேசித்து அலைந்துதிரிந்து தாமரைஓடையில் இறங்கப்போகிறது. மந்திரங்களுடன்கூடின ஆகுதிகளால் பூஜிக்கப்பட்ட ஹோமாக்கினிவேதியில் காக்கையானது உட்கார்ப்போகிறது. மகாயாகத்தில் நன்றுக ஸ்வரத்துடன் உச்சரிக்கப்பட்ட ஸ்ருதியைப் பாமரன்கெடுப்பதுபோல இந்த ஜயத்ரதன் (திரௌபதியைக்) கெடுக்காமலிருக்கவேண்டும். நல்ல மூக்குள்ளதும் அழகிய கண்களுள்ளதும் சந்திரனுடைய ஒளிபோல மாசற்றிருப்பதும் தெளிவுள்ளதும் மங்களகரமாயிருப்பதுமான உங்களுடைய காதலியின் முகத்தை, தீவினைசெய்கிறஒருவன், யாகத்திலிருக்கிற புரோடாசத்தை நாய்தொடுவதுபோலத் தொட்டுவிடப்போகிறான். இந்தவழிகளைச் சீக்கிரமாகத் தொடர்ந்து செல்லுங்கள். இங்கேயே உங்களுக்கு நேரமானது விரைந்துசெல்லவேண்டாம். அரசர்களே ! பாவியான ஜயத்ரதன் இங்கிருந்து அதிக

[1] ஸ்ருக் = ஹோமம் செய்வதற்கு ஸாதனமான கரண்டி.

தூரம்செல்வதற்குள் சீக்கிரம் ஓடுங்கள். புருஷச்ரேஷ்டர்களே! பகைவர்களுடையபக்கத்திலிருந்து லக்ஷ்மியைப்போன்ற ப்ராண நாயகியான திரௌபதியை மீட்டுக்கொண்டுவாருங்கள்' என்று சொன்னாள்.

யுதிஷ்டிரர், 'கல்யாணி! திரும்பி இருப்பிடம் போவாயாக. பேச்சை அடக்கிக்கொள். நம்மிடம் குரூரமான சொற்களைச் சொல்லாதே. பலத்தால் மதங்கொண்டிருக்கிற அரசர்களோ ராஜ புத்திரர்களோ மரணத்தை அடைவார்கள்' என்று சொன்னார். பாண்டவர்கள் இவ்வளவுமட்டில் சொல்லிவிட்டு, அந்தவழிகளையே அனுஸரிக்கின்றவர்களாகவும், அடிக்கடி பெருமூச்சுவிடுகின்றவர் களாகவும், பெரியவிற்களினின்று அம்புகளை எய்வதற்காக நாண் கயிற்றை இழுக்கின்றவர்களாகவும், சீக்கிரமாகச் சென்றார்கள். பிறகு, குதிரைகளின் குளம்புகளால் தூற்றிவிடப்பட்டதும் மேலே எழுந்ததுமான அந்த ஜயத்ரதனுடைய சேனையின் புழுதியையும், காலாட்களின் நடுவிலிருந்துகொண்டு, 'பீம! பார்த்த!' என்று அடிக்கடி அலறி அழைக்கின்ற தௌம்யரையும் கண்டார்கள். அந்த ராஜகுமாரர்கள் மனந்தளர்ந்தவர்களாக, 'நீர் ஸுகமாக வாரும்' என்று தௌம்யரை நல்வார்த்தைகளால் தேறுதலடையச்செய்து, பகைஞர்க்கத்தக்க மாம்ஸத்தில் மிக்க ஆவலுள்ள கழுகுகள்போல வேகத்துடன் அந்த ஸைன்யத்தை நோக்கி ஓடினார்கள். யஜ்ஞஸேனனுடைய குமாரியாகிய கிருஷ்ணையை அவமதித்ததினால் மிகுந்தகோபமுள்ளவர்களும் மஹேந்த்ரனுடையவல்லமைபோன்ற வல்லமையுள்ளவர்களுமான அந்தப்பார்த்தர்களுக்கு ஜயத்ரதனை யும் அவனுடைய தேரிலிருக்கிற அன்பிற்குரியபாஞ்சாலியையும் பார்த்தது கோபமானது அதிகமாக ஜ்வலித்தது. பிறகு, பெரிய விற்களைக் கையில் பிடித்தவர்களான பிருஹத்க்ஷத்ரனும் தனஞ் சயனும் சுகுலனும் ஸஹதேவர்களும் யுதிஷ்டிரராஜரும் விந்து, ராஜனான ஜயத்ரதனை உரத்த சத்தத்துடன் கூவி அழைத்தார்கள். பிறகு, பகைவர்களுக்குத் தினாவடக்குமுண்டாயிற்று.

இருநூற்றெழுபத்தோராவது அத்யாயம்.

த்ரௌபதீஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(திரௌபதியானவள் ஜயத்ரதனுக்கு யுதிஷ்டிரர்முதலியவர்களை அடையாளங்களுடன் குறிப்பிட்டுக் காட்டியது.)

பிறகு, பீமஸேனனையும் அர்ஜுனனையும் பார்த்துக் கோபம் மூண்ட க்ஷத்திரியர்களுடைய மிகவும் கோரமான சப்தமானது வனத்தில் அப்பொழுது உண்டாயிற்று. கெட்ட எண்ணமுள்ள வனான ஜயத்ரதராஜன், குருஶ்ரேஷ்டர்களான அந்தப் பாண்ட வர்களுடைய கொடிகளின் நுனிகளைப்பார்த்துச் சக்தி ஒடுங்கின வனாகித் தேரிலிருக்கிறவளும் காந்தியுள்ளவளுமான பாஞ் சாலியைநோக்கி, 'இதோ ஐந்து பெரிய தேராளிகள் வரு கின்றனர். கிருஷ்ணையே! இவர்களை உன்னுடைய பதிகளென்று நினைக்கிறேன். அழகிய கூந்தலுள்ளவளே! தெரிந்தவளான நீ தேரிலிருக்கிற பாண்டவர்களைத் தனித்தனியாக எனக்குக் கூறுவாயாக' என்று தானே சொன்னான்.

திரௌபதி, 'மூட! ஆயுளுக்குநாசத்தை உண்டுபண்ணுகிற மிக்க கோரமான காரியத்தைச்செய்து நாசமடையப்போகிற உனக் குப் பெரிய விற்களைத் தரித்தவர்களான பார்த்தர்களை அறி வதனால் யாது பயன்? வீரர்களான இந்த என்னுடைய பதி கள் வந்துவிட்டார்கள். உங்களுள் யுத்தத்தில் இப்பொழுது ஒருவராவது மிகுந்திருக்கப் போகிறதில்லை. வினவப்பட்டிருக்கிற என்னால் சாகப்போகிற உனக்கு எல்லாம் சொல்லத்தக்கதே. இது தர்மம். எனக்கு, தம்பிமார்களுடன்கூடின தர்மராஜரைப் பார்த்தபின் மனவருத்தமாவது உன்னிடத்தில் பயமாவதுஇல்லை. எவருடைய த்வஜத்தின் நுனியில் நன்றாக அமைக்கப்பட்ட நந்தம் உபநந்தமென்கிற மிருதங்கங்கள் இனிமையான ஒலியுடன் ஒலிக் கின்றனவோ தம்முடைய அறம்பொருள்களின் நிச்சயத்தை அறிந்தவரான இவரை நல்ல காரியங்களைச் செய்கிற ஜனங்கள் எப்பொழுதும் அனுஸரிக்கிறார்கள். சுத்தமான பொன்போன்ற நிறமுள்ளவரும் உயர்ந்த மூக்குள்ளவரும் மெலிந்த தேகமுள்ள வரும் அகன்ற கண்களையுடையவருமாக இங்குக் காணப்படுகிற இந்தப் புருஷஶ்ரேஷ்டரைக் கௌரவர்களுள் மிக்க மேன்மை

வாய்ந்தவரும் தர்மதேவதையின் புதல்வரும் என்னுடைய பதியுமான யுதிஷ்டிரரென்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். மூட! தர்மத்தை அனுஷ்டிப்பவரும் வீரரும் பகைவனுயிருந்தாலும் சரணமென்றடைந்தவனுக்கு உயிரைக்கொடுப்பவருமான இந்த யுதிஷ்டிரரை உன் க்ஷேமத்தைக்கருதி ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு அஞ்சலிபந்தம் செய்துகொண்டு விரைந்து சரணமடைவாயாக. மேலும், நீண்டகைகளுள்ளவரும் ஆச்சாமரம்போல வளர்ந்திருப்பவரும் பற்களால் உதட்டை நன்கு கடித்துக்கொண்டிருப்பவரும் சொரிந்தலால் ஒன்று சேர்க்கப்பட்ட புருவங்களுள்ளவரும் ரதத்திலிருப்பவரும் நீ பார்க்கிற ஆண்சிங்கமுமான இவர் என்னுடைய கணவரான விருகோதரர். நல்ல பலமுள்ளவைகளும் நன்றுகப் பழக்கப்பட்டவைகளும் அபரிமிதமான மதகபலமுள்ளவைகளுமான உத்தமஜாதிக் குதிரைகள் இந்தச்சூரனைச் சுமந்து செல்லுகின்றன. இவருடைய செய்கைகள் மனிதன்செய்கைகளை மீறி இருப்பவைகள். அதனால், இவருக்குப் பூமியில் பீமனென்று பிரஸித்தி ஏற்பட்டிருக்கிறது. இவரிடம் தீங்கிழைத்தவர்கள் மிச்சமிருக்கமாட்டார்கள். இவர் ஒருபொழுதும் வைரத்தை மறக்கமாட்டார். வைரத்திற்கு முடிவை நன்றுகச்செய்தே பிறகு சாந்தியை அடைகிறார். ஆகலால், (வீணை) வருந்திக்கொண்டிருக்கமாட்டார். விற்பிடித்தவர்களுள் சிறந்தவரும் சிறந்தகதாயுதமுள்ளவரும் கீர்த்திபுள்ளவரும் இந்திரியங்களை அடக்கினவரும் பெரியோர்களுடன் பழகினவரும் புருஷஸ்ரேஷ்டரும் யுதிஷ்டிரருக்குப்ராதாவும் சிஷ்யருமான இவர் என்னுடைய கணவரான தனஞ்சயர். எவர் காமத்தாலும் பயத்தாலும் சிறாதசையினாலும் தர்மத்தைவிடமாட்டாரோ, கொடியசெய்கையையும், செய்யமாட்டாரோ அக்னிக்கு ஸமமான தேஜஸுள்ளவரும் பகைவர்களின் (எதிர்ப்பைத்) தாங்குபவரும் பகைவர்களை நாசம் செய்பவருமான அப்படிப்பட்ட இந்தவீரர் குந்தியின் புதல்வரான அர்ஜுனரென்று சொல்லப்படுகிறார். விவேகமற்ற மனமுள்ளவனே! எவர் அறம் பொருள்களின் நிச்சயத்தை அறிந்தவரோ, பயத்தால் துன்பமடைந்தவர்களுடைய பயத்தைப் போக்குபவரோ, கற்றறிந்தவரோ, பந்துக்களிடத்தில் பிரீதிபுள்ளவரோ, சஸ்திரங்களைத் தரித்தவர்களுள் மிக்க மேன்மையாய்ந்தவரோ, பெரிய யுத்தங்களில் ஒருவராலும் தடுக்கமுடியாத வீர்யமுள்ளவரோ, பூமியில் எவருடையரூபத்தை உத்தமமென்று சொல்லுகிறார்களோ, தங்களை

அனுஸரிக்கின்ற எவரை எல்லாப்பாண்டவர்களும் உயிரைக்காட்டி லும் பெரியவராக எண்ணிப் பாதுகாக்கிறார்களோ, எவர் கத்திக ளால் சண்டை செய்வதில் மிக்க நிறமையுள்ளவரும் லாகவமுள்ள ஆச்சர்யகரமான கைகளையுடையவரும் மகாணும் சிறந்தபுத்தி யுள்ளவரும் [1] ஸஹதேவரைத் தம்பியாகவுடையவருமாயிருக்கி றாரோ, யுத்தத்தில் அஸுரதேசனைகளில் இந்திரனுடைய செய் கையைப்போல எவருடைய செய்கையை இப்பொழுது பார்க்கப் போகிறாயோ அப்படிப்பட்ட இந்தவீரர் என்னுடைய பதியான நகுலர். [2] சூரரும், அஸ்திரங்களில் நல்ல தேர்ச்சிபெற்றவரும், சிறந்தபுத்தியுள்ளவரும், உதாரமான மனமுள்ளவரும், அரசரான தர்மநந்தனருக்குப் பிரியத்தைச் செய்பவரும், அக்னியும் சந்திர னும் ஸூர்யனும்போன்ற ஒளியுள்ளவரும், பாண்டவர்களுள் கடைசியில் பிறந்தவரும், அன்புக்குரியவரும், புத்தியிலும் அப்படியே கற்றவர்களின் கூட்டத்திலும் பேசுவதிலும் ஒப்பில் லாதவரும், நிச்சயந்தை நன்கு அறிந்தவரும், சூரரும், எப்பொழு தும் பகைவர்கள் செய்த அபகாரத்தைப் பொறுதவரும், சிறந்த புத்தியுள்ளவரும், மிகுந்த அறிவுள்ளவருமான இவர் என்னுடைய கணவரான ஸஹதேவர். இவர் பிராணன்களை இழந்தாலுமிழப் பார்; நெருப்பில் புகுந்தாலும் புகுவர்; தர்மத்தைவிட்டு விலகியிருக் கிறவிஷயத்தைச் சொல்லவேமாட்டார். இந்தவீரபுருஷர் எப் பொழுதும் உதாரமனமுள்ளவர்; க்ஷத்ரியதர்மத்தில் பற்றுள்ள வர்; குந்திக்குப் பிராணனைக்காட்டிலும் அதிகப்ரியமானவர். உன் னுடைய இந்தச்சேனை ரதத்தினங்களால் எங்கும்நிறைக்கப்பட்டதும் ஸமுத்திரத்தின்மத்தியில் சுறுமீனுடையமுதுகில் மோதிச் சிதறிப் போகின்றதுமான சுப்பல்போலப் பாண்டுபுத்திரர்களால் எல்லா யுத்தவீரர்களும்கொல்லப்பட்டுக் கலக்கப்படுவதைப் பார்ப்பாய். எவர்களை நீ அறியாமையால் அவமதித்து அநியாயத்தில் பிரவ்ருத் தித்தாயோ அப்படிப்பட்ட இந்தப்பாண்டுபுத்திரர்கள் இவ்வண் ணம் உனக்கு உரைக்கப்பட்டார்கள். புண்படுத்தப்படாத தேகத் துடன் இவர்களிடத்தினின்று விடுபடுவாயாகில் மீண்டும் பிறப் பையும் உயிரையும் அடைந்தவனுவாய்' என்று சொன்னுள். பிறகு, ஐந்துஇந்திரர்களுக்கு ஒப்பான அந்த ஐந்துபார்த்தர்களும், பயந்தவர்களும் அஞ்சலி செய்கின்றவர்களுமான அந்தக்காலாட்

[1] 'ஸஹதேவத்விதிய:' என்று பாடம் கொள்ளப்பட்டது.

[2] இரட்டித்து வருகிறது.

கலை விட்டுவிட்டுக் கோபமூண்டவர்களாகச் சேனையை எல்லாப் பக்கங்களிலும் தடுத்துக்கொண்டு இடைவிடாத சரமாரியினால் உண்டான இருளால் மூடினார்கள்.

இருநூற்றெழுபத்திரண்டாவது அத்யாயம்.

த்ரௌபதீஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர்முதலியவர்களுக்கு ஜயத்ரதன்முதலியவர்களோடு யுத்தமும், துணைவீரர்கள் கொல்லப்படவே ஜயத்ரதன் திரௌபதியை விட்டுவிட்டு ஓடியதும், பீமனும் அர்ஜுனனும் கடுஞ்சொற்சொல்லிக்கொண்டு ஜயத்ரதனைத் துரத்தியதும்.)

அரசனை னைந்தவன், 'எதிர்த்து நில்லுங்கள்; அடியுங்கள்; வினைவாக எல்லாப்பக்கங்களிலும் எதிர்த்து ஓடுங்கள்' என்று அந்த அரசர்களைத் தூண்டினான். பிறகு, யுதிஷ்டிரருடன்கூடின பீமனையும் அர்ஜுனனையும் கருல ஸஹதேவர்களையும் பார்த்து னைனிகர்களுடைய மிக்கதீகாமான சந்தமானது அப்பொழுது போர்க்களத்தில் தோன்றியது. பலம்மிகுந்திருக்கிற புலிகள் போன்றவர்களான அந்தப்புருஷஸ்ரேஷ்டர்களைக்கண்டு, சிபிகளுக்கும் ஸிந்துதேசத்துவீரர்களுக்கும் க்ரிகர்த்தர்களுக்கும் துயர முண்டாயிற்று. பீமன் பொற்புள்ளிகளுள்ளதும் மிக நீண்டதும் முழுதும் உருக்கினால் செய்ததுமான கதாயுதத்தை எடுத்துக்கொண்டு காலனைப்போலிருக்கிற னைன்யவினாசனாக்கி எதிர்த்து விரைவாகச்சென்றான். பிறகு, கோடிகாஸ்யன், பீமன் ஜயத்ரதன் இருவருடைய மத்தியில் பிரவேசித்துப் பெரியதேர்க்கூட்டத்தால் பீமசேனனைச்சூழ்ந்துகொண்டு, அவ்விருவருக்கும் இடைவெளியை உண்டுபண்ணினான். வீரர்களுடையகைகளால் பிரயோகிக்கப்பட்ட அனேகசக்திகளாலும் தோமரங்களாலும் காராசங்களாலும் அடிக்கப்பட்டாலுஞ்சும் பீமன் அசையவில்லை. பீமன் னைந்தவனுடைய ஸைன்யமுகத்தில் பாகனுடன்கூடின ஒரு யானையையும் பதினான்குகாலாட்களையும் கதையினால் கொன்றான். அர்ஜுனன் ஸௌவீரதேசாதிபதியான ஜயத்ரதனைப் பிடிக்க எண்ணங்கொண்டு படைமுகத்தில் சூரர்களும் மகாரதர்களுமான ஐந்நூறு மஹாகாட்டுவீரர்களைக் கொன்றான். அரசரான யுதிஷ்டிரர்

அப்பொழுது யுத்தத்தில் பகைவர்களை அடிப்பவர்களும் மிகவும் சிறந்தவர்களுமான நூறு ஸௌவீரர்களைத் தாமே கொடிப் பெர்ழுதில் கொன்றார். நகுலன் அந்த யுத்தத்தில் கத்தியை எடுத் துக்கொண்டு ரதத்தினின்று துள்ளிக் குதித்துப் பதாதிகளுடைய தலைகளைக் கொய்து போர்க்களத்தில் அடிக்கடி விதைகளைப்போல விதைப்பவனைக்கக் காணப்பட்டான். ஸஹதேவனை பகைவர்களால் நிறைந்த படையைத் தேரினால் எதிர்த்துச்சென்று மரங்களிலி ருந்து மயில்களைக் கீழே விழச்செய்வதுபோல யானைகளினின்று போர்வீரர்களைக் கீழே விழும்படி செய்தான். பிறகு, த்ரிகர்த் தன் வில்லுடன்கூடியவனைகப் பெரிய ரதத்தினின்று கீழே இறங் கிக் கதையினால் அந்த அரசரான யுதிஷ்டிரருடைய நான்கு குதிரைகளையும் அப்பொழுது கொன்றான். குந்தியின் புதல் வரும் அரசருமான தர்மராஜர், பதாதியாகத் தம்மை எதிர்த்து வருகின்ற அந்த த்ரிகர்த்தனை ஓர் அர்த்தசந்த்ரபாணத்தால் மார்பிலடித்தார். மார்பு பிளக்கப்பட்ட அந்த வீரன், வாயினால் இரத்தத்தை வெளியில் கக்கிக்கொண்டு, வேர் அறுக்கப்பட்ட மரம் போல, கீழில் விழுந்தான். குதிரைகள் கொல்லப்பட்ட தர்ம ராஜர், இந்திரஸேனனுடைய ரதத்தினின்று துள்ளிக்குதித்து ஸஹ தேவனுடைய பெரிய ரதத்தை அடைந்தார். சேகிதானன் மகா முகன் இருவரும் நகுலனை எதிர்த்துத் தடுத்து இரண்டு பக்கங் களிலும் கடுமையான அம்புமழைகளை அவன்மீது பொழிந்தார் கள். மாரிகாலத்து மேகங்கள்போல அம்பு மழைகளைப் பொழிகின்ற அவ்விருவரையும் மாத்ரீபுத்ரனான நகுலன் நூ வொரு விபாடபாணத்தால் அடித்தான். பிறகு, யானையின் மீதேறியிருப்பவனும் யானையை நடத்துபவனும் விதர்ப்பை அரசி வனும் த்ரிகர்த்தராஜனுமான ஸுரதன் யானையினால் நகுலனு டைய ரதத்தைத் தூக்கி எறியச்செய்தான். நகுலனோ, பயமில் லாமல் கத்தியையும் கேடகத்தையும் கையில்கொண்டு அந்த ரதத் திலிருந்து உயர எழும்பி வட்டமாகச் சுற்றிப் பூரிசவை அடைந்து மலைபோல அசைவற்று நின்றான். பிறகு, ஸுரதன், கோபத்தை அடைந்தும் அதிகமாக மேலில தூக்கப்பட்டிருந்த துதிக் கையையுடையதுமான அந்தக் கஜராஜனை நகுலனைக் கொல்வதற் காகத் தூண்டினான். நகுலன் தன்னுடைய ஸமீபத்தில் வரு கின்ற அந்த யானையினுடைய கொம்புகளுடன்கூடின துதிக் கையை அடியில் கத்தியினால் நன்கு அறுத்தான். நிங்நாதிகளால்

அலங்கரிக்கப்பட்ட அந்த யானையானது பெரிய சத்தத்துடன் வீரிட்டுக்கொண்டு தலைகீழாகப் பூமியில் விழுந்து மாவுத்தனை நசுங் கும்படி செய்தது. மகாரதனும் சூரனுமான அந்த மாத்ரீபுத் திரன், அந்தப் பெரிய காரியத்தைச் செய்து, பீமசேனனுடைய ரதத்தை அடைந்து, ஸுகத்தை அடைந்தான். பீமனே, யுத்தத் தில் எதிர்த்துவருகின்ற கோடிகாய்யனென்கிற அரசனுடைய குதிரைகளை ஓட்டுகின்ற ஸாரதியினுடைய தலையைக் கத்தியினல் அறுத்தான். அந்த அரசன், பாகுபலமுள்ள பீமனல் ஸாரதி கொல்லப்பட்டதை அறியவில்லை. ஸாரதி கொல்லப்பட்ட அவனு டைய குதிரைகள் யுத்தத்தில்ஓங்காங்கு ஓடின. பகைவர்களை அடிப் பவர்களுள் உத்தமனும் பாண்டுநந்தனனுமானபீமன், ரதத்தை இழந்தவனும் ஸாரதி கொல்லப்பட்டவனுமான அந்தக் கோடிகாய் யனை எதிர்த்துவந்து, கைப்பிடியுடன்கூடின பிராஸாயுதத்தால் கொன்றான். தனஞ்சயன் கூர்மையுள்ள அர்த்தசந்திரபாணங் களால் ஸௌவீரவீரர்கள் [1] பன்னிருவருடைய விற்களையும் தலை களையும் அறுத்தான். அதிரதனான தனஞ்சயன் யுத்தத்தில் அம்பு களுக்கு இலக்காக வந்திருக்கின்ற சிபிகளையும் இக்ஷ்வாகுக்களுள் முக்கியமானவர்களையும் த்ரிகர்த்தர்களையும் ஸைந்தவர்களையும் கொன்றான். ஸவ்யஸாசியினல் கோடிகளுடன்கூடின அனேகயா னைகளும் த்வஜங்களுடன்கூடின அனேகமகாரதங்களும் நாசம் பண்ணப்பட்டவைகளாகக் காணப்பட்டன.. தலையில்லாத உடல் களும் உடலில்லாத தலைகளும் போர்க்களமுழுவதையும் தரையை நன்றாக மூடிக்கொண்டிருந்தன. அந்தப்போர்க்களத்தில் காய் களும் கழுகுகளும் பருந்துகளும் காகங்களும் பாருண்டங் களும் நரிகளும் கங்கைகளும் கொல்லப்பட்டிருக்கிறவீரர்க ளுடைய மாம்ஸங்களாலும் இரத்தங்களாலும் திருப்தியடைந்தன. இவ்வண்ணம், கோபத்துடன்கூடின அர்ஜுனனென்கிறநரநாராயப ணனது காண்டீவமென்கிறகாற்றினல் தூண்டப்பட்ட கூர்மையுள்ள அம்புகளாகிற ஜ்வாலைகளால் ஜயத்ரதனுடைய சேனையாகிற விறகை விரைவாக எரித்தது. வேந்தே! பிரஜைகளுக்குத் தலை வனே! அந்தப்போர்க்களத்தில் விழுந்திருக்கிற சக்கரங்கள், நுகங் கள், அம்புத்தூணிகள், கொடித்தூணிகள், ரதங்களோடுகூடின கொடிகள், ஏர்க்கால்கள், முக்கோணைகள், த்ரிவேணுக்கள், அச்சுக்கள், பூட்டாம வார்கள், கொடாடாக்கள், குண்டலங்களையும் தலைப்பாகை

[1] ஒரு சொல் விடப்பட்டது.

களையும்தரித்தவையும் விழுந்திருப்பவையுமான தலைகள், தோள் வளைகளுடன்கூடின கைகள், கிரீடங்கள், ஹாரங்கள், குடைகள், விசிறிகள், கேடகங்கள், கவசங்கள், அறுக்கப்பட்ட விற்கள், பட்டஸங்கள், சக்திகள், கத்திகள், தோமரங்கள், உருட்டுக்கடிகள் ஆகிய இவற்றின் குவியல்கள் ஆங்காங்குக் காணப்பட்டன. மலைபோல விழுந்திருக்கின்ற வீரர்களுடன்கூடின யானைகளாலும், அப்படியே ஆயுதங்கள் பிடித்த குதிரைவீரர்களோடுகூட இரண்டாகப்பிளக்கப்பட்ட குதிரைகளாலும், அடித்துப்புரட்டித்தள்ளப்பட்ட ரதங்களாலும், கொல்லப்பட்டகாலாட்களாலும் ரணபூமியான்து நடந்து செல்லக்கூடாததும் மாம்ஸங்களுடன் கலந்த ரத்தச்சேறுள்ளதுமாயிற்று.

அந்தவீரர்கள் கொல்லப்பட்டபடன், ஸிந்துராஜனை ஜயத்ரதன், கிருஷ்ணனையிட்டுவிட்டு, மிகவேகமாய்ஓடுவதில்நோக்கங் கொண்டவனானன். அந்த ஜயத்ரதன் நெருங்கியிருக்கிற அந்தஸைன்யத்தில் அந்தத்திரௌபதியை பலத்தினின்று இறக்கி விட்டு அச்சமயத்தில் பிராணனைப்பாதுகாப்பதில் விருப்பமுள்ள வனாக வன்த்தில் ஓடினன். தர்மராஜரோ தௌம்யரை முன்னிட்ட திரௌபதியைப்பார்த்து, அப்பொழுது, வீரனான மாத்ரீபுத்திரனால் ரதத்திலேற்றுவிக்கப்பட்டாள். ஜயத்ரதன் ஓடிப் போனவுடன், அந்தயுத்தகளத்தினின்று ஓடுகின்ற அந்த ஸைன்யத்தைப் பீமஸேனன் (தன்பெயரைச்) சொல்லிச்சொல்லி நாராசங்களால் கொன்றான். ஸவ்யஸாசியோ, அந்த ஜயத்ரதன் ஓடுவதைக்கண்டு, அவனுடையசேனவீரர்களைக் கொல்லுகின்ற பீமனைத் தடுத்தான். அர்ஜுனன், 'எவனுடைய கெட்டநடையினால் எவ்விதத்தாலும் அடையத்தகாத இந்தத்துன்பம் இந்தத்ரௌபதிக்கு அடைந்ததோ அந்தஜயத்ரதனை இந்தபுத்தபூமியில் காணவில்லை. மூடனும் வஞ்சகனும் துஷ்டனும் திரௌபதிக்குத்துன்பத்தை உண்டுபண்ணினவனுமான அந்தஜயத்ரதனோடு நீ நடுவாயாக. உனக்கு மங்களம். (மற்றப்) போர்வீரர்களை அடித்துக்கொல்லுவதால் உனக்கு யாதுபயன்? இந்தக்கார்யம் பயனற்றது. நீதான் எப்படி எண்ணுகிறாய்?' என்று சொன்னான். சிறந்தபுத்தியுள்ள அர்ஜுனனால் இவ்விதஞ்சொல்லப்பட்டவனும் பெருகிற திறமையுள்ளவனுமான பீமஸேனனோ, யுதிஷ்டிரனை அடைந்து, 'பகைவர்கள், சிறந்தவீரர்கள் கொல்லப்பட்டுப் பெரும்பான்மையாகத் திசைகளில் ஓடிவிட்டார்கள். ராஜரே! நீங்கள் திரௌபதியை அழைத்துக்கொண்டு இந்த இடத்திலிருந்து திரும்

புங்கள். ராஜஸ்ரேஷ்டரே! நகுலஸஹதேவர்களுடனும் மகாத் மாவான தௌம்யருடனும் ஆஸ்ரமத்தை அடைந்து திரௌ பதியை ஸமாதானப்படுத்தும். மூடனும் அல்பனுமான ஸைந் தவராஜன், பாதாளத்தை அடைந்திருந்தாலும், அவனுக்கு இந்திரன் ஸாரதியாக இருந்தாலும், உயிரோடு என்னிடமிருந்து விடுபடமாட்டான்' என்கிற வசனத்தை உரைத்தான். யுதிஷ் டிரர், 'மிக்கபுஜபலமுள்ளவனே! ஸைந்தவன் கெட்டஎண்ண முள்ளவனாக இருந்தாலும் துச்சலையையும் சிறந்த கீர்த்தி யுள்ளவளான காந்தாரியையும் உத்தேசித்துக் கொல்லப்படத் தக்கவனல்லன்' என்று சொன்னர். வெட்கப்படுகிறவரும் சிறந்த அறிவுள்ளவரும் பொறிகள் கலங்கினவருமான திரௌபதி யானவள் அந்த வசனத்தைக் கேட்டுக் கோபங்கொண்ட வளாகிப் பர்த்தாக்களான பீமார்ஜுனர்களிருவரையும் பார்த்து, 'எனக்குப் பிரியத்தைச் செய்வதாயிருந்தால் மனிதர்களுள் அதமனும் பாவியும் கெட்டபுத்தியுள்ளவனும் குலத்தைக் கெடுக்கிறவனும் அபசதனுமான அந்த ஸைந்தவனைக் கொல்ல வேண்டும். எவன் பார்யையை அபஹரித்தவனோ, எவன் தீர்க்க வைரமுள்ளவனோ, எவன் ராஜ்யத்தைப் பறித்துக்கொண்ட பகை வனோ அவன் யுத்தத்தில் கெஞ்சினாலும் எவ்விதத்தாலும் விடத்தகாதவன்' என்று பயங்கரமாக உரைத்தாள். இவ்வாறு சொல்லப்பட்டவர்களும் புருஷஸ்ரேஷ்டர்களுமான அவ்விருவரும் ஸைந்தவனிருந்த இடத்திற்குச் சென்றார்கள்.

யுதிஷ்டிரராஜர் புரோஹிதரோடு கிருஷ்ணனை அழைத்துக் கொண்டு திரும்பினர். அவர் வனத்தில் தூரந்து நிலைகுலைந்திருக் கிற ரிஷிகளுடைய ஆஸனங்களோடும் பாய்களோடுங்கூடியதும் மார்க்கண்டேயர் முதலிய பிராம்மணர்களால் விபாபிக்கப்பட்டிருப்ப தமான ஆஸ்ரமத்தைக் கண்டார். பிராதாக்களான நகுல ஸஹ தேவர்களுடைய மத்தியத்தை அடைந்தவரும் பார்யையோடு சேர்ந்திருப்பவரும் மகாப்ராஜ்ஞருமான யுதிஷ்டிரர், திரௌபதி யைப்பற்றி விபஸனப்படுகின்றவர்களும் திரௌபதியைக் கண்ட தனால் மனவமைதி அடைந்தவர்களுமான அந்தப் பிராம்மணர் களோடு சேர்ந்தார். அந்தப் பிராம்மணர்கள், அந்த ஸைந்தவர் களையும் ஸௌவீரர்களையும் ஜயித்து மறுபடியும் மீட்டுக்கொண்டு வரப்பட்ட திரௌபதியையும் திரும்பிவந்த அந்த யுதிஷ்டிரராஜ ரையும் பார்த்து ஸந்தோஷமடைந்தார்கள். அந்தத் தர்மராஜர்

அவர்களால் சூழப்பட்டு அவ்விடத்திலேயே உட்கார்ந்தார். கோபமுள்ளவளான கிருஷ்ணையானவள் நகுல ஸஹதேவர் களோடுகூட ஆச்ரமத்தினுள் சென்றாள். அந்தப் பீமஸேன னும் அர்ஜுனனும் பகைவன் ஒரு குரோசதூரத்திலிருக்கிறா னென்பதைக் கேட்டுத் தாங்களே குதிரைகளை நடத்திக்கொண்டு வேகத்துடனே ஓடினார்கள். அதிரதனான அர்ஜுனன் இந்த யுத்தத்தில் ஒரு க்ரோசதூரம் சென்ற ஸைந்தவனுடைய தேர்க் குதிரைகளைக் கொன்றதாகிய அந்த மிக்க அத்புதமான காரியத் தைச் செய்தான். திவ்யாஸ்திரங்களால் நிறைந்த அந்த அர்ஜுனன் ஸங்கடம் நேர்ந்தகாலத்திலும் மனங்கலங்காமல் அஸ்திர மந்திரங் களால் அபிமந்திரணம்செய்யப்பட்ட பாணங்களால் செய்தற்கரிய காரியத்தைச் செய்தான். பிறகு, வீரர்களான பீமன் தனஞ்சயன் இருவரும், குதிரைகளைப்பறிகொடுத்தவனும் பயந்தவனும் ஸஹாய மற்றவனும் மனங்கலங்கினவனுமான ஸைந்தவனை எதிர்த்து ஓடி னர்கள். ஸைந்தவனோ, அப்படித் தன்குதிரைகள் கொல்லப் பட்டதைக்கண்டு, மிகதுக்கமுள்ளவனாக ரதத்தினின்று கீழே குதித்துக் கால்களாலேயே ஓடுவானாயினன். மிக்க வீரச்செயல் களைச் செய்கின்ற தனஞ்சயனைக்கண்டு ஸைந்தவன் ஓடுவதில் விருப்பம் வைத்தவனாக வனத்தைக்குறித்து ஓடினான். மிக்க புஜ பலமுள்ள பல்குனன் ஓடுவதில் அதிக பராக்கிரமசாலியான ஸைந் தவனைப்பார்த்துப் பின்தொடர்ந்து சென்றுகொண்டு, 'ராஜபுத் திர! இந்த வீரத்தன்மையினால் எவ்வாறு ஸ்திரீயைப் பலாத்காரம் செய்யவிரும்புகிறாய்? திரும்புவாயாக. ஓடுவது உனக்குத் தகுந்த தன்று. உன்னைப் பின்தொடர்ந்துவந்த வீரர்களை எவ்வாறு பகைவர்களுடைய மத்தியில்விட்டு ஓடுகிறாய்?' என்றுசொன்னான். பார்த்தனால் இவ்வண்ணம் சொல்லப்படுகின்ற ஸைந்தவன் திரும்ப வில்லை. பலசாலியான பீமன், அவனை, 'நில், நில்' என்று சொல் லிக்கொண்டு விரைந்து ஓடினான். கருணையுள்ளவனான அர்ஜு னன், 'அவனைக்கொல்லாதே' என்று பீமனைப்பார்த்துச் சொன் னான்.

இருநூற்றெழுபத்துமூன்றுவது அத்யாயம்.

ஜயத்ரத விமோகூண பர்வம்.

(பீமன் ஜயத்ரதனை மயிரில் பிடித்துக் கீழேதள்ளித் தலையில் உதைத்து அவனுக்கு ஐந்து குடுமிவைத்துக் கட்டிக்கொண்டு வந்ததும், யுதிஷ்டிரர் அவனை விடுவித்ததும், ஜயத்ரதன் தவத்தினால் மஹாதேவரிடம் வரம்பெற்றதும்.)

ஜயத்ரதனை, ஆயுதங்களைக் கையிலெடுத்துக்கொண்டு தன்னைத்தொடர்ந்துவருகின்ற பிராதாக்களான பீமார்ஜுனர்களைப் பார்த்து மிக்க துன்பமுற்றவனும் தப்பிப்பிழைப்பதில் விருப்பமுள்ளவனும் ஜாக்கிரதையுள்ளவனுமாக விரைவாக ஓடினான். கோபமுள்ள பீமஸேனனை கொடிகளால் சூழப்பட்டிருக்கிற புதரில் ரத்தினங்களால் பிரகாசிக்கின்ற கிரீடம் நழுவிவிழ ஓடுகின்றவனும் வனத்தின் மத்தியில் பதுங்குகின்றவனும் புதரில் ஒடுங்குகின்றவனும் பயத்தால் மனக்குழப்பமுள்ளவனுமான அந்த ஜயத்ரதனைத் தேடிக்கொண்டு ரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட ரதத்திலிருந்து விரைவாகக் கீழே இறங்கி ஓடி அவனை மயிரில்பிடித்தான். பீமன் அவனை மேலேதூக்கிப் பூமியில்போட்டுத் தேய்த்தான். அரசனுடைனைவனைக் கழுத்திற்பிடித்துக் கீழேதள்ளினான். மிக்க புஜபலமுள்ள அந்தப் பீமன், உயிரோடிருப்பவனும் மேலே எழும்புவதற்கு விருப்பமுள்ளவனும் புலம்பத் தொடங்குகிறவனுமான அந்த ஜயத்ரதனுடைய தலையில் மீண்டும் காலால் உதைத்தான். பீமன் அவனை இரண்டுமுழங்கால்களால் நன்றாக இடித்துக் கைப்பிடியினால் குத்தினான்.

அரசனுடைனைவன் கல்லடியினால் துன்புறுத்தப்பட்டு பயக்கத்தை அடைந்தான். பல்குனன் சோகத்துடன்கூடின பீமஸேனனை, 'சகோதரனே! அரசரான யுதிஷ்டிரர் துச்சலைக்காக உன்னைப் பார்த்து என்னசொல்லுவர்?' என்றுசொல்லி விலக்கினான். பீமன், 'துன்பத்தை அடையத்தகாதவளான கிருஷ்ணாவுக்குத் துன்பத்தை உண்டுபண்ணினவனும் பாவச்செயலுள்ளவனும் மனிதரில் இழிந்தவனுமான இந்தஜயத்ரதன் என்னிடத்தினின்று உயிர்த்தப்பிப்பிழைப்பதற்குத் தகுதியுள்ளவனல்லன். யுதிஷ்டிரராஜரோ எப்பொழுதும் கருணையுள்ளவர். நீயும் சிறுபிள்ளைப்புத்தியினால் எப்பொழுதும் என்னைத் தொந்தரை செய்கிறாய். நான் என்ன செய்யக்கூடும்?'

என்று சொன்னன். இவ்வாறு சொல்லிவிட்டு, விருகோதரன் அப் பொழுது ஒன்றும் சொல்லாமலிருக்கிற அந்தஜயத்ரதனுக்கு அர்த்தசந்திரபாணத்தால் தலையில் ஐந்துகுடுமிகளை ஏற்படுத்தி னன். பிறகு, விருகோதரன் அரசனை ஜயத்ரதனை விகா ரப்படுத்தி, 'மூட! நீ உயிரோடிருக்க விரும்புகிறுயாகில் அதற்கு உபாயத்தைச் சொல்லுகின்ற என்னிடமிருந்து கேள். ஜனக்கூட் டங்களிலும் ஸபைகளிலும், 'நான் பாண்டவர்களுக்கு அடிமைப் பட்டேன்!' என்று சொல்லவேண்டும். இப்படிச் சொல்லுவாயா கில் உயிரைக் கொடுப்பேன். இதுதான் யுத்தத்தில் ஜயித்தவன் செய்யவேண்டிய முறை' என்று சொன்னன். கஷ்டத்தை அனுப விக்கிற ஜயத்ரதராஜன், யுத்தத்தில் பிரகாசிப்பவனும் புருஷ ஸ்ரேஷ்டனுமான பீமனைப்பார்த்து, 'இப்படியே ஆகட்டும்' என்று சொன்னன். பிறகு, குந்திநந்தனனான விருகோதரன் பல விதமாகப்புரளுகிறவனும் பிரஜ்ஞை இல்லாதவனும் புழுதிபடிந்த தேகமுள்ளவனுமான அந்த ஜயத்ரதனைக் கயிற்றினால்கட்டித் தேரில் ஏற்றினன். பிறகு, பீமன், அவனை ரதத்தில் ஏற்றிவைத்துக் கொண்டு, அப்பொழுது அர்ஜுனன் தொடர்ந்துவர, மூத்தவரும் ஆஸ்ரமத்திலிருப்பவருமான யுதிஷ்டிரரை வந்தடைந்தான்.

பீமனை, அந்த நிலைமையிலிருக்கிற ஜயத்ரதனை யுதிஷ்டிர ருக்குக் காண்பித்தான். அரசர் அவனைப் பார்த்து உரக்கச்சிரித்து, 'விட்டுவிடு' என்றும் சொன்னர். பீமன், அரசரைப்பார்த்து, 'பால புத்தியுள்ளவனான இந்த ஜயத்ரதன் பாண்டவர்களுக்கு அடிமை யாக இருத்தலை அடைந்தான் என்று திரௌபதிக்குச்சொல்லும்' என்று சொன்னன். பிறகு, தமையனரான தர்மநந்தனர், அந்தப் பீமனைப்பார்த்து, 'உனக்கு நாம் பிரமாணமாயிருந்தால், இழி வானசெய்கையுள்ள இவனை விட்டுவிடு' என்று நயமுள்ளசொல் லைச் சொன்னர். திரௌபதியும், யுதிஷ்டிரரைப் பார்த்துவிட்டு, பீமனை நோக்கி, 'அரசரான யுதிஷ்டிரருக்கு அடிமையான இந்த ஜயத்ரதனை விட்டுவிடுங்கள். உம்மால் ஐந்து குடுமிகளுள்ளவனு கச் செய்யப்பட்டுவிட்டான்' என்று சொன்னள். பிராதாவினாலும் கிருஷ்ணையினாலும் இவ்வாறு சொல்லப்பட்ட பீமனை, மகாபாவி யும் பிரஜ்ஞையில்லாதவனுமான ஜயத்ரதனை அவிழ்த்துவிட்டான். விடப்பட்ட அந்த அரசனை ஜய்த்ரதன், மனவருத்தத்துடன், அருகில் வந்து யுதிஷ்டிரராஜரை அபிவாதனம் செய்து அப்பொ ழுது முதியவர்களான அந்த முனிவர்களையும் அபிவாதனம் செய்

தான். கருணையுள்ளவரும் தர்மநந்தனரும் அரசருமான யுதிஷ்டிரர், அப்படிப்பட்ட நிலைமையிலிருப்பவனும் ஸவ்யஸாசியினல் பிடிக்கப்பட்டிருப்பவனுமான அந்த ஜயத்ரதனைப் பார்த்து, 'அடிமைதீர்ந்தவனுகச் செல். விடப்பட்டாய். இவ்விதமான கெட்ட காரியத்தை மீண்டும் ஓரிடத்திலும் செய்யாதே. ஸ்திரீகளிடத்தில் ஆசையுள்ள உன்னை நிந்திக்கவேண்டும். நீ அல்பன்; [1] அல்பர்களைத் துணைவர்களாக உடையவன். கெட்டபுத்தியுள்ளவனே! உன்னைவிட வேறான எந்தப்புருஷாதமன் தர்மவிரோதமானதும் உலகத்தால் தூஷிக்கப்படுவதுமான இப்படிப்பட்ட காரியத்தைச் செய்வான்?' என்றார். பரதஸ்ரேஷ்டரான தர்மராஜர் கெட்டகாரியத்தைச் செய்தவனான அந்த ஜயத்ரதனை மரித்தவனைப் போல் எண்ணி நன்றாக உற்றுப்பார்த்துக் கருணைபாராட்டினர். 'ஜயத்ரத! தர்மத்தில் உனக்குப் புத்தி விரும்தியடையட்டும். அதர்மத்தில் மனத்தைச் செலுத்தாதே. குதிரைகளோடும் ரதங்களோடும் காலாட்களோடும் க்ஷேமமாகச் செல்' என்று சொன்னர்.

பாரதரே! இவ்வாறு சொல்லப்பட்ட அரசன் துக்கத்தால் அதிகமனவருத்தமுள்ளவனுகவும் ஒன்றும் பேசாமல் தலைகுனிந்தவனுகவும் வெட்கத்துடன் கங்காத்வாரம்சென்றான். அவன் விரூபாக்ஷரும் உமாபதியுமான மகாதேவரைச் சரணமடைந்து பெருந்தவம்புரிந்தான். அவன் விஷயத்தில் விருஷபத்துவஜரும் ப்ரீதியுள்ளவரானர். ப்ரீதியுள்ளவரான முக்கண்ணர் ஜயத்ரதனுடைய பூஜையைத் தாமே நேரில்தோன்றிப் பெற்றுக்கொண்டார். மகாதேவர் அந்த ஜயத்ரதனுக்கு வரத்தையும் கொடுத்தார். அவனும் பெற்றுக் கொண்டான். அதனைக் கேட்டக்கடவீர். அரசனை ஜயத்ரதன், 'ரதங்களுடன் கூடின பாண்டவர்களைவரையும் யுத்தத்தில் ஜயிக்கக் கடவேன்' என்று மகாதேவரைப் பிரார்த்தித்தான். மகாதேவர் அவனைநோக்கி, 'அது முடியாது' என்று சொன்னர். 'பதரிகாஸ்ரமத்தில் தவம்புரிந்தவனும் நாராயணரை ஸஹாயமாகக்கொண்டவனும் எல்லா உலகங்களாலும் ஜயிக்கப்படாதவனும் தேவர்களாலும் எதிர்க்கமுடியாதவனும் நரனென்று பெயருள்ள ஸுரேச்வரனும் மகா பாகுபலமுள்ளவனுமான அர்ஜுனனைத் தவிர ஜயிக்கத்தகாதவர்களும் கொல்லத்தகாதவர்களுமான அந்த மற்றப் பாண்டவர்களை யுத்தத்தில் நீ தடுப்பாய்; என்னல் அந்த அர்ஜுனனுக்கு ஒப்பற்ற திவ்யமான பாசுபதாஸ்

---

[1] வேறு பாடம்.

பார்த்து ஜலத்தில் விளையாடுவதில் மிக்கவிருப்பமுள்ள வராஹரூபத்தை நினைத்தார். பிரபுவான விஷ்ணுவானவர், நான்குவேதமயமாக, இருப்பதும் வேதங்களால் சொல்லப்பட்டயஜ்ஞரூபமாக இருப்பதும் பத்துயோஜனதூரம் அகன்றதும் நாறுயோஜனதூரம் நீண்டதும் பெரியமலைபோன்ற தேகத்தின்காந்தியுள்ளதும் கூரியதெற்றிப்பற்களுள்ளதும் அதிக காந்தியுள்ளதும் பெரிய மேகக்கூட்டத்தின் இடிமுழக்கம்போன்ற முழக்கமுள்ளதும் கார்மேகம்போன்றதுமான பன்றியின் வடிவத்தையெடுத்து யஜ்ஞவராஹராகி ஜலத்தில் இறங்கினர். ஒருதெற்றிப்பல்லால் பூமியை மேலேதூக்கி அதன் ஸ்தானத்தில் நிலை பெற்றிருக்கச்செய்தார். மிக்கதோள்வலிமையமைந்த பிரபுவான விஷ்ணுவானவர் மீண்டுமே கழுத்துக்குக்கீழ் மனுஷ்யசரீரமுள்ளதும் கழுத்துக்குமேல் ஸிம்மசரீரத்துடன்கூடியதுமான அபூர்வமான சரீரத்தை எடுத்துக்கொண்டும் ஒருகையினல் மற்றொருகையை முறுக்கிக்கொண்டும் தைத்யராஜனுடைய ஸபையை அடைந்தார். தைத்யர்களுக்கு ஆதிபுருஷனும் [1] தேவசத்துருவும், திதியின் புதல்வனும், அபூர்வதேகத்துடன்கூடின விஷ்ணுவைப்பார்த்துக் கோபத்தால் கண்கள் நன்குசிவந்தவனும், சூலத்தைக்கையிலெடுத்தவனும், மாலையை அணிந்தவனும், வீரனுமான ஹிரண்யகசிபுவானவன் மேகமுழக்கம்போன்ற கர்ஜனத்துடன் கூடியவனுகவும் கருமையானமேகங்களின் கூட்டத்திற்கு ஒப்பானவனுகவும் ஸிம்மத்தை எதிர்த்தோடிவந்தான். பிறகு, அதிகபலசாலியும், மனுஷ்யசரீரத்துடனும் ஸிம்மசரீரத்துடனும் கூடினதுமான சிங்கத்தினல் மேலேபாய்ந்து கூர்மையுள்ள நகங்களினல் ஹிரண்யகசிபுவானவன் நன்றுகடி பிளக்கப்பட்டான். பகவானும் செந்தாமரைமலர்போன்ற கண்களுள்ளவரும் பிரபுவுமான ஸ்ரீமந்நாராயணர், சத்துருக்களைக்கொல்பவனான தைத்யராஜனை இவ்வண்ணம்கொன்று மீண்டும் உலகங்களுக்கு நன்மையைச்செய்வதற்காகக் கஸ்யபருக்குப் புத்திரராக அதிதியினல் கர்ப்பத்தில் தாங்கப்பட்டார். ஆயிரம்வருஷகாலம் நிரம்பினபிறகு, உத்தமமானகர்ப்பத்தை அதிதிதேவியானவள் ஈன்றுள். ஸூர்ய பிரகாசமில்லாததினத்திலிருக்கிற மேகத்திற்கு ஒப்பான தேககாந்தியுள்ளவரும் பிரகாசிக்கின்றகண்களுள்ளவரும் குட்டையான வடிவத்தையுடையவரும் தண்டமுள்ளவரும் கமண்டலு

---

[1] பொருள் இரட்டித்தலால் இரண்டு சொற்கள் விடப்பட்டன.

வைத்தரித்தவரும் ஸ்ரீவத்ஸமென்கிற மச்சத்தால் மார்பில் அலங்கரிக்கப்பட்டவரும் ஜடைகளுள்ளவரும் யஜ்ஞோபவீதத்தைத் தரித்தவரும் பாலனுடையவடிவத்தைத் தரித்தவருமான பகவான் நாராயணர், அப்பொழுது அஸுரராஜனை பலிசக்கரவர்த்தியி னுடைய யாகசாலையை அடைந்தார். அந்த வாமனவடிவத்தைத் தரித்தவரான பகவான், பிருஹஸ்பதியைத் துணைக்கொண்டு பலி பின் யாகத்தில் பிரவேசித்தார். பலியானவன், குட்டையானசரீர முள்ள அவரைப்பார்த்து, மிக்கமனக்களிப்படைந்து, 'பிராம்மணா! உன்னைப்பார்த்தகணல் ப்ரீதியுள்ளவனாக இருக்கிறேன். நீ சொல். உனக்கு எதை நான் கொடுக்கக்கடவேன்?' என்று வினவினான். பலியினால் இவ்வாறு வினவப்பட்ட தேவரான வாமனர் பலியைப்பார்த்து, 'ஸ்வஸ்தி (=மங்களம்)' என்று சொல்லிவிட்டுப் புன்சிரிப்புடன், 'தானவர்களுக்குப்பதியே! இப் பொழுது எனக்கு என்காலால் மூன்றடி அளவுள்ள பூமியைக்கொடு' என்று சொன்னார். பலியானவன் மனமகிழ்ந்து அளவு கடந்த தேஜஸுள்ள பிராம்மணருக்கு அவர்கேட்டவண்ணம் கொடுத்தான். பிறகு, காலடிகளால் பூமியை அளக்க எண்ணங் கொண்டபோது, ஹரிக்குத் திவ்யமாயும் மிக்க அத்புதமாயுமிருக்கிற உருவம் உண்டாயிற்று. கலங்கச்செய்யமுடியாதவரான அவர், மூன்று காலடிகளால் பூமியை விரைவாகக் கவர்ந்துகொண்டார். சாஸ்வதரும் தேவருமான விஷ்ணுவானவர் பூமியை இந்திரனுக்குக் கொடுக்கவும்செய்தார். இந்த வாமனருடைய அவதாரமும் உனக்குச் சொல்லப்பட்டது. அந்த வாமனவதாரத்தால் தேவர்கள் அபிவிருத்தி அடைந்தார்கள். விஷ்ணுவினால் பலியினிடத்திலிருந்து மீட்கப்பட்டு இந்திரனுக்குக் கொடுக்கப்பட்டபடியால், உலகமும் வைஷ்ணவமென்று சொல்லப்படுகிறது. அவர் தேவர்களைத் தண்டிப்பதற்காகவும் தர்மத்தைக்காப்பதற்காகவும் யதுக்களின்வீட்டில் மானிடர்களுள் அவதரித்திருக்கிறார். இவ்வண்ணம் அவதரித்திருக்கிற அந்தப் பகவானை விஷ்ணுவானவர் க்ருஷ்ணனென்று சொல்லப்படுகிறார்.

ஸைந்தவ! ஆதியந்தமில்லாதவரும் பிறப்பில்லாதவரும் தேவரும் பிரபுவும் உலகங்களால் நமஸ்கரிக்கப்பட்டவருமான பகவானுடைய செய்கைகளை வித்வான்கள் கானம்செய்கிறார்கள். எவரை ஒருவராலும் ஜயிக்கப்படாதவரென்றும் கிருஷ்ணனென்றும் சங்கத்தையும் சக்கரத்தையும் கதையையும் தரித்தவரென்றும் ஸ்ரீவத்ஸ

மென்கிற மறுவையுடையவரென்றும் பீதாம்பரதாரியென்றும் சொல்லுகிறார்களோ அந்தக் கிருஷ்ணரல் அஸ்திரங்களை அறிந்தவர் களுள் சிறந்தவனை அந்த அர்ஜுனன் பாதுகாக்கப்படுகிறான். ஒப் பற்ற ஆற்றலுள்ளவரும் ஸ்ரீமானும் செந்தாமரைமலர்போன்ற கண்க ளுள்ளவருமான பகவான் துணையாக இருந்து ஒரே ரதத்தில் பார்த் தனே ரதிகளை வைத்துக்கொண்டு சத்துருவீரர்களைக் கொல்லப் போகிறார். அந்தப் பகவானுடைய உதவியினல், பிறரால் தாங்க முடியாத அந்த அர்ஜுனன் தேவர்களாலும் ஜயிப்பதற்கு ஸாத்தியப் படாதவனாக இருக்கிறான். அவ்வாறிருக்க, மனுஷ்யத் தன்மை யுள்ள எந்த மனிதன் யுத்தத்தில் பார்த்தனை ஜயிப்பான்? வேந் தனே! அவனொருவனை விட்டுவிட்டு யுதிஷ்டிரனுடைய எல்லாச் சேனையும் பகைவர்களான நான்கு பாண்டவர்களையும் ஒரு தினம் ஜயிப்பாய். ஆகையால், நீ அர்ஜுனனைத் தவிர மற்றப் பாண்டவர்களைத் தடுப்பாய். புருஷஶ்ரேஷ்டனே! என்னல் இந்த வரம் உனக்குக் கொடுக்கப்பட்டது' என்று சொன்னர். ராஜ ஶ்ரேஷ்டனே! ஸிந்துராஜனைப்பார்த்து இவ்வண்ணமுரைத்து எல் லாப் பாவங்களையும் அபஹரிப்பவரும் உமையவளுக்குப்பதியும் பசுபதியும் (தக்ஷனுடைய) யாகத்தை அழித்தவரும் முப்புரங்களை நாசம்செய்தவரும் பகனுடைய கண்களைக் கீழ்தள்ளினவரும் உமையவளைத் துணையாகக்கொண்டவரும் பகவானும் முக்கண்ண ருமான பரமசிவன், சூள்ளர்களும் பெரிய ரூபத்தைத் தரித்தவர் களும் கூனர்களும் உக்கிரமான காதுகளும் கண்களுமுள்ளவர் களும் கோரரூபிகளும் பலவித ஆயுதங்களைக் கையிலெடுத்திருப்ப வர்களுமான பாரிஷதர்களால் சூழப்பட்டவராக, அந்த இடத்தி லேயே மறைந்தார். இவ்வண்ணமுரைக்கக்கேட்ட அரசனு னைந்தவன் தன் வீட்டையே நோக்கிச் சென்றான். பாண்டவர் களும் அப்படியே அந்தக் காம்யகவனத்தில் வஸித்தார்கள்" என்று சொன்னர்.

ஜயத்ரத விமோக்ஷண பர்வம் முற்றிற்று.

இருநூற்றெழுபத்துநான்காவது அத்யாயம்.

ர ா ம ோ ப ா க்ய ான ப ர் வ ம்.

(யுதிஷ்டிரர், தமக்கோப்பான துக்கமுள்ளவன் உலகத்திலிருக்கிறனுவென்று மார்க்கண்டேயரை வினவியது.)

ஜனமேஜயர், "இவ்வண்ணம் அதிகதுன்பத்தை அடைந்து கிருஷ்ணை மீட்கப்பட்ட பிறகு, புருஷச்ரேஷ்டர்களான பாண்டவர்கள் யாதுசெய்தனர்?" என்று வினவ, வைசம்பாயனர், "தர்மராஜரான யுதிஷ்டிரர், ஜயத்ரதனை ஜயித்து க்ருஷ்ணையை இவ்வண்ணம் விடுவித்து முனிவர்களுடைய கணங்களோடு வீற்றிருந்தார். பாண்டவர்களுடைய விருத்தாந்தங்களைக் கேட்பவர்களும் அனுதாபத்தை அடைகிறவர்களுமான அந்த மஹரிஷிகளின் மத்தியில் பாண்டுநந்தனரான யுதிஷ்டிரர், மார்க்கண்டேயரைப் பார்த்து, பின்வருமாறு வினவலானார். 'பகவானே! தேவரிஷிகளுள் நீர் பிரஸித்திபெற்றவர்; சென்றதையும் வருவதையும் அறிந்தவர். என் உள்ளத்திலுள்ள ஸந்தேகத்தை வினவுகிறேன். (அதனைப்) போக்குவீராக. இந்த த்ருபதனுடையபுத்திரியோ யாகவேதியின் மத்தியிலிருந்து உதித்தவள்; மனிதகர்ப்பத்தினின்று உண்டானவளல்லள்; மஹாபாக்கியவதி; மஹாத்மாவான பாண்டுவின் மருமகள். மஹிமையுடைய காலமும், தெய்வமும், பிராணிகளுக்கு அவசியம் வருவனவான நன்மை தீமைகளும் மீறமுடியாதவை. அவற்றுக்கு மாறுதலில்லையென்று எண்ணுகிறேன். எங்களுக்கு மனைவியும் தர்மங்களை அறிந்தவளும் தர்மங்களை அனுஷ்டிப்பவளுமான பாஞ்சாலியை, சூதனைப் பொய்யான திருட்டுக்குற்றம் அடைவதுபோல, இப்படிப்பட்ட அபகரிக்கப்படுதலென்னும் துன்பமானது எவ்வாறு அடைந்தது? த்ரௌபதியினல் ஒரு பாவமும் செய்யப்படவில்லை; ஒரு ஸமயத்திலாவது இகழப்பட்ட கார்யம் செய்யப்பட்டதில்லை. பிராம்மணர்கள் விஷயத்திலேயே மிக்க தர்மம் நன்கு செய்யப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட த்ரௌபதியை, மூடபுத்தியுள்ள ஜயத்ரதராஜன் பலாத்காரமாகக் கவர்ந்தான். அவளைக் கவர்ந்ததனல் ஸஹாயர்களோடு கூடின பாவியான ஜயத்ரதன் தலையில் மயிர்சிறைத்தலையும் யுத்தத்தில் தோல்வியையும் அடைந்தான். அந்த ஸைந்தவனுடைய சேனையைக் கொன்று எங்களால் அப்படியே த்ரௌபதி மீட்டுக்

கொண்டுவரப்பட்டாள். எங்களால் எதிர்பார்க்கப்பட்டிராத அப் படிப்பட்ட மானவிகவரப்படுதலாகிய துக்கமும் இந்தத் துக்ககர மான வனவாஸமும் வேட்டையாடி ஜீவிப்பதும் பந்துக்களைப் பிரிந்து வேறிடத்தில் வஸித்தலும் அடையப்பட்டன. வீணுகத் தவவேஷம் பூண்டவர்களான எங்களால் காட்டில் வஸிப்பவர் களுடன் சேர்ந்து காட்டிலுள்ள மிருகஜாதிகளின் இந்த வதமும் செய்யப்படுகிறது. என்னைடொத்த மிக்க பாக்கியஹீனனான ஒரு மனிதன் உலகத்திலிருக்கிறானு? எங்கேயாவது தேவரீரால் முன்னம் பார்க்கப்பட்டிருக்கிறானு? அல்லது, கேட்கப்பட்டிருக் கிறானு?' என்று வினவினர்.

இருநூற்றெழுபத்தைந்தாவது அத்யாயம்.

ராமோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர் யுதிஷ்டிரரைக்குறித்து ராமோபாக்கியானத் தைச் சொல்லத் தொடங்கியதும், ராமர்முதலியவர்களுடைய அவதாரமும், ராவணனுடைய உத்பத்தியைக் கூறுமுறை யில் துபோனுடைய உத்பத்தியும்.)

மார்க்கண்டேயர், 'பரதஸ்ரேஷ்டனே! ராமரால் நிகரில்லாத துக்கம் அடையப்பட்டது. அவருடைய (பார்யையான) ஜானகி யானவள், மிக்க பலசாலியும் கெட்ட எண்ணமுள்ளவனும் ராக்ஷ ஸர்களுக்கு அரசனுமான ராவணனென்கிற ராக்ஷஸனால் மாயை யைக் கைக்கொண்டு பலத்தினால் ஜடாயுவென்கிற கழுகைக் கொன்று ஆச்ரமத்திலிருந்து அபஹரிக்கப்பட்டாள். ராமர் ஸுக்ரீவனுடைய பலத்தை அடுத்துக் கடலுக்கு அணைகட்டிக் கூர்மையுள்ள பாணங்களால் லங்கையை எரித்து அவளை மீட்டுக் கொண்டு வந்தார்' என்று சொன்னர்.

யுதிஷ்டிரர், 'பகவானே! ராமர் எந்தக் குலத்தில் பிறந்தவர்? எவ்விதமான வீர்யமுள்ளவர்? எவ்விதமான பராக்கிரமமுள்ளவர்? ராவணன் யாருடைய புத்திரன்? அவனுக்கு அந்த ராமரோடு என்ன வைரம்? பகவானே! இவை அனைத்தையும் எனக்கு நன்கு சொல்லக்கடவீர். உம்மால் எல்லாம் உள்ளபடி நேரில் காணப் பட்டிருக்கின்றன. புகழத்தக்க செய்கைகளுள்ள ராமருடைய சரித்திரத்தைக் கேட்க விரும்புகிறேன்' என்று சொல்ல, மார்க்

கண்டேயர், 'இக்ஷ்வாகுவம்சத்தில் தோன்றினவனும் மகானுமான அஜனென்கிற ஒரு வேந்தன் இருந்தான். அவனுக்கு எப்பொழுதும் வேதாத்தியயனம்செய்பவனும் சுத்தனுமான தசரதனென்கிற ஒரு புத்திரனிருந்தான். அவனுக்கு அறம் பொருள்களை அறிந்தவர்களான ராமன், லக்ஷ்மணன், மிக்க பலசாலியான பரதன், சத்துருக்னன் என்கிற நான்கு புத்திரர்கள் உண்டானார்கள். கௌஸல்யை என்பவள் ராமனுடைய மாதா. கைகேயியானவள் பரதனுடைய தாயார். ஸுமித்ரைக்குப் பகைவர்களை வாட்டுபவர்களான லக்ஷ்மணனும் சத்துருக்னனும் புத்திரர்கள். பிரபுவே! ஜனகன் விதேகதேசத்து அரசன். பிரம்மதேவர் தாமே எந்த ஸீதையென்பவளை (ஸங்கல்பத்தினாலேயே) ராமருக்கு அன்புக்குரிய மனைவியாகப் படைத்தாரோ அவள் அந்த ஜனகனுடைய புதல்வி. ராமர் ஸீதை இவர்களின் இந்தப் பிறப்பானது உனக்கு உரைக்கப்பட்டது. ஜனங்களுக்கு ஈச்வரனே! ராவணனுடைய பிறப்பையும் உனக்கு விரிவாகச் சொல்லுவேன்.

தாமாகத் தோன்றினவரும் எல்லா உலகங்களையும் படைப்பவரும் பிரபுவும் மிக்க தவமுள்ளவருமான பிரம்மதேவர் ராவணனுக்கு நேரே பாட்டனார். அந்தப் பிரம்மதேவருக்கு புலஸ்த்யரென்கிற அன்புள்ள புத்திரர் மனத்திலிருந்து உண்டானார். அவருக்குக் கோ என்கிற பார்யையினிடத்தில் வைச்ரவணனென்கிற பிரபுவான புத்திரன் பிறந்தான். அவன் பிதாவை விட்டுவிட்டுப் பிதாமஹரை அடைந்தான். அரசனே! பிதாவான புலஸ்தியர் வைச்ரவணன்மீதுண்டான கோபத்தால் தம் ஸ்வரூபத்தை யோகபலத்தால் விச்ரவஸென்கிற வேறு தேகமாகப் படைத்தார். அந்தப் புலஸ்த்யருடைய சரீரத்தின் பாதியினால் வைச்ரவணன்மீதுண்டான கோபத்தைத் தீர்ப்பதற்காகக் கோபத்துடன்கூடின அந்த விச்ரவஸென்கிற பிராம்மணர் உண்டானார். பிரபுவான பிதாமஹரோ ப்ரீதியுள்ள மனத்துடன் வைச்ரவணனுக்கு அமரத்தன்மையையும் தனங்களுக்கு ஈச்வரனுக இருத்தலையும் லோகபாலனுக இருத்தலையும் ஈச்வரரோடு நட்பையும் நளகூபரனென்கிற புத்திரனையும் ராக்ஷஸர்களுடைய கணங்களோடுகூடின லங்கை என்கிற ராஜதானியையும் நினைத்தவண்ணம் செல்லுகின்ற புஷ்பகமென்கிற விமானத்தையும் யக்ஷர்களுக்கு அதிபதியாக இருத்தலையும் அரசர்களுக்காசனையிருக்கும் பெரும் பதத்தையும் கொடுத்தார்.

இருநூற்றெழுபத்தாறுவது அத்யாயம்.

ராமோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(விஸ்ரவஸானவர் முன்றுமஹிஷிகளிடம் ராவணன் முதலியவர்களை உண்டுபண்ணியதும், ராவணன் தம்பிகளுடன் சேர்ந்து தவத்தினால் ப்ரம்மாவினிடம் வரம்பெற்றுப் புஷ்பகவிமானத்தைக் கவர்ந்துகொண்டு குபேரனே லங்கையைவிட்டு ஓட்டித் தான் அங்கு வஸித்ததும்.)

புலஸ்தியருடைய கோபத்தினால் அவருடைய பாதித் தேகம் எந்த முனிவராயிற்றோ விஸ்ரவஸென்கிற பிரஸித்திபெற்றவரும் கோபத்துடன்கூடினவருமான அந்த முனிவர், வைஸ்ரவணனைப் பார்த்தார். ராக்ஷஸேஸ்வரனான குபேரன், அந்த விஸ்ரவஸென்கிற பிதாவைக் கோபத்துடனிருக்கிறரென்று அறிந்தான். வேந்தனே! அவரைத் தெளிவிப்பதற்காக எப்பொழுதும் முயன்றான். அந்த ராஜராஜனான தரவாஹனன் லங்கையில் வாஸம் செய்தான். அவன் பிதாவுக்கு மூன்று ராக்ஷஸஸ்த்ரீகளை வேலைக்காரிகளாகக் கொடுத்தான். பரதஸ்ரேஷ்டனே! ஆடுவதிலும் பாடுவதிலும் வல்லவர்களான அவர்கள் எப்பொழுதும் மகாத்மாவான அந்த விஸ்ரவஸ்ரிஷியை ஸந்தோஷமடையச் செய்வதற்கு முயன்றார்கள். பிரஜைகளுக்கு அதிபதியே! அரசனே! அழகிய இடையுள்ளவர்களான புஷ்போத்கடையும் ராகையும் மாலினியும், அன்யோன்யம் போட்டியோடு, நன்மையை அடைவதில் விருப்பமுள்ளவர்களாக ரிஷிக்குப் பணிவிடை செய்து வந்தார்கள். மஹாத்மாவும் பகவானுமான அந்த விஸ்ரவஸானவர் அவர்களிடம் ஸந்தோஷமடைந்து ஒவ்வொருத்திக்கும் அவளவள் விரும்பினவண்ணம் லோகபாலர்களுக்கொப்பான புத்ரர்களை வரன்களாகக் கொடுத்தார்.. புஷ்போத்கடையினிடம் ராக்ஷஸர்களுக்கு ஈச்வரர்களும் பூமியில் பலத்தால் ஒப்பற்றவர்களுமான தசக்ரீவன் கும்பகர்ணன் என்கிற இரண்டுபுத்ரர்கள் உண்டானார்கள். மாலினியானவள் விபீஷணனென்கிற ஒருபுத்ரனை ஈன்றாள். ராகையினிடத்தில் கரன் சூர்ப்பணகை என்கிற ஓர் ஆணும் ஒரு பெண்ணும் உண்டாயினர். விபீஷணனே ரூபத்தால் எல்லாரைக்காட்டிலும் மேலானவனாக இருந்தான். அந்த விபீஷணன் மகாபாக்யசாலியும் தர்மங்களைப் பாதுகாப்பவனும் நல்ல கர்மானுஷ்டானத்தில் பற்றுள்ளவனுமாயிருந்தான். தசக்ரீவனே எல்லாரைக்காட்டிலும் சிறந்தவனும்

ராக்ஷஸர்களுக்கு அரசனும், அதிக உத்ஸாஹமுள்ளவனும் அதிக வீர்யமுள்ளவனும் அளவற்ற பலமும் பராக்கிரமமுமுள்ளவனுமானன். கும்பகர்ணனென்கிற ராக்ஷஸனே, மாயாவியும் யுத்தத்தில் ஸமர்த்தனும் பயங்காரமானவனும் யுத்தத்தில் பலத்தால் எல்லாரைக்காட்டிலும் மேலிட்டவனுமானன். காரனென்கிற ராக்ஷஸன் வில்லில் அதிகவல்லமையுள்ளவனும் பிராம்மணர்களைப் பகைப்பவனுமானன். அப்பொழுது, சூர்ப்பணகையானவள் பயங்கரியும் ஸித்தர்களுக்கு இடையூற்றை உண்டுபண்ணுகிறவளுமாயிருந்தாள். எல்லாரும் வேதத்தை அறிந்தவர்கள். எல்லாரும் சூரர்கள்; விரதங்களை நன்கு அனுஷ்டித்தவர்கள்; பிதாவோடுகூடக் கந்தமாதன பர்வதத்தில் பற்றுதலுள்ளவர்களாக வாஸம் செய்துவந்தார்கள்; பிறகு, அந்தப்பர்வதத்தில் பிதாவோடுகூட நன்றாக வீற்றிருப்பவனும் இணையில்லாத செல்வப்பெருக்குடன் கூடியவனும் நரவாஹனனுமான வைச்ரவணனைக் கண்டார்கள்.

பிறகு, அவர்கள் கோபமுள்ளவர்களாகவும் தவம்புரிவதற்கு நிச்சயங்கொண்டவர்களாகவும் கடுந்தவத்தினால் அப்பொழுது பிரம்மாவை ஸந்தோஷமடையும்படி செய்தார்கள். தசக்ரீவன் வாயுவைப் பக்ஷிக்கின்றவனும் நான்கு அக்னிகளின் மத்தியிலிருந்துகொண்டு சூரியனிடத்தில் கண்களை வைத்தவனும் நன்றாக இந்திரியங்களையும் மனத்தையும் அடக்கினவனுமாக ஆயிரம் வர்ஷகாலம் ஒருகாலால் நின்று தவம்புரிந்தான். கும்பகர்ணன் தரையில் படுத்தவனும் ஆகாரமில்லாதவனும் கடுமையான விரதத்தையுடையவனுமாகத் தவம்புரிந்தான். அதிதஸமயத்தில், புத்திமானும் உதார எண்ணமுள்ளவனுமான விபீஷணன், உபவாஸத்தில் பற்றுதலுள்ளவனும் எப்பொழுதும் மந்திரங்களை ஜபிப்பதிலேயே பற்றுதலுள்ளவனுமாக உலர்ந்த இலைகளையே ஆகாரமாக உட்கொண்டு கடுந்தவம்புரிந்தான். கரனும் சூர்ப்பணகையும், ஸந்தோஷமுள்ள மனத்துடன், தவத்தைச் செய்கின்ற அந்த ராவணன்முதலியவர்களுக்குப் பணிவிடையையும் பாதுகாவலையும் செய்தார்கள். ஒருவராலும் அவமதிக்கமுடியாதவனான தசகண்டன் ஆயிரம் வருஷம் நிரம்புந்தோறும் (ஒவ்வொரு தலைவிதம்) தன்தலைகளை அறுத்து அக்னியில் ஹோமம் செய்தான். அதனால், உலகங்களுக்குப் பிரபுவான பிரம்மதேவர் ஸந்தோஷமடைந்தார். பிறகு, பிரம்மதேவர் தாமே அவர்களிடம் சென்று அவர்களனைவரையுமே வரங்கொடுப்பதாகத் தனித்

தனி ஆசைகாட்டித் தவத்தினின்று தடுத்தார். பிரம்மா, 'அருமையான புத்திரர்களே! உங்கள்விஷயத்தில் நான் ப்ரீதியுள்ளவனாக இருக்கிறேன். திரும்புங்கள். வரன்களைக் கேளுங்கள். சாகாம லிருப்பதொன்றைத்தவிர, எது எது இஷ்டமோ அது அது அப்படி அப்படியே உண்டாகட்டும். பெரியபதத்தை அடைய் வேண்டுமென்கிற எண்ணத்தால் எந்த எந்தத் தலையானது அக்னியில் ஹோமம்செய்யப்பட்டதோ அந்த அந்தத்தலை முழுமையும் அப்படியே உன்னுடைய தேகத்தில் உன்னிஷ்டப்படி உண்டாகும். உன்தேகத்தில் விகாரமும் உண்டாகாது. நினைத்தவண்ணம் ரூபங்களைத் தரிப்பவனுவாய். யுத்தத்தில் சத்துருக்களை ஜயிப்பாய். ஸம்சயமில்லை' என்று சொன்னர். ராவணன், 'கந்தர்வர்கள், தேவர்கள், அசுரர்கள், யக்ஷர்கள், ராக்ஷஸர்கள், நாகர்கள், கின்னரர்கள், பூதங்கள் இவர்களிடத்திலிருந்து எனக்கு அவமானம் உண்டாகக் கூடாது' என்று வேண்டினன்.

பிரம்மதேவர், 'உன்னால் சொல்லப்பட்ட கந்தர்வர்கள் முதலான இந்த வீரர்களனைவரிடத்தினின்றும் உனக்குப் பயம் இல்லை. மனிதனைத்தவிர மற்றவர்களிடத்தினின்று உனக்கு நன்மையுண்டாகும். என்னால் அது அவ்வாறு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது' என்று கூறினர். இவ்வண்ணம் உரைக்கக்கேட்ட தசக்ரீவன் அப்பொழுது ஸந்தோஷமுள்ளவனனன். கெட்ட புத்தியுள்ள அந்த ராக்ஷஸன் மனிதர்களை மதிக்கவில்லை. பிறகு, பிரபிதாமஹர், 'அப்படியே கும்பகர்ணனைப்பார்த்து, 'வரத்தைப் பெற்றுக்கொள். உனக்கு மங்களம். ப்ரீதியுள்ளவனாக இருக்கிறேன்' என்று மீண்டும் மீண்டும் சொன்னர். தமோகுணத்தால் கவரப்பட்ட புத்தியுள்ளவனான அந்தக் கும்பகர்ணன் பெரிய தூக்கத்தை வரித்தான். பிரம்மா, 'அப்படியே ஆகும்' என்று சொல்லிவிட்டு, விபீஷணனை அடைந்து, 'புத்ர! நீ வரத்தைக் கேள். ப்ரீதியுள்ளவனாக இருக்கிறேன்' என்று அடிக்கடி சொன்னர். விபீஷணன், 'அதிகமான ஆபத்தை அடைந்திருந்தபோதிலும் என்புத்தியானது அதர்மத்தில் செல்லவேண்டாம். பகவானே! குருவின் உபதேசமில்லாமலே பிரம்மாஸ்திரமானது எனக்குத் தோற்றவேண்டும்' என்று கேட்டுக்கொண்டான். பிரம்மா, 'சத்துருக்களை நாசம்செய்பவனே! ராக்ஷஸஜாதியில் பிறந்திருந்தாலும் உன்னால் அதர்மத்தில் புத்தியானது வைக்கப்படவில்லையாதலால் உனக்கு மரணமில்லாமையைக் கொடுத்தேன்.

என்றூர். பிரஜைகளுக்குப்பதியே! ராக்ஷஸனான தசக்ரீவனே, வரத்தைப் பெற்று யுத்தத்தில் குபேரனை ஜயித்து அவனை லங்கையைவிட்டு ஓடச்செய்தான். பகவானான அந்தத் தனே சுவரன் லங்கையைவிட்டுக் கந்தர்வர்களாலும் யக்ஷர்களாலும் பின் தொடரப்பட்டவனாக ராக்ஷஸர்களோடும் கிம்புருஷர்களோடும் கந்தமாதனத்தில் பிரவேசித்தான். ராவணன் அந்த வைஶ்ரவண னுடைய புஷ்பகவிமானத்தையும் பலாத்காரத்தால் கைப்பற்றிக் கொண்டான். அந்தக் குபேரன், அவனை நோக்கி, 'இந்த விமானம் உன்னைச்சுமக்காது. எவன் உன்னை யுத்தத்தில் கொல்லுவனோ அவனையே இந்தவிமானம் சுமக்கும். மேலும், குருவையும் என்னையும் அவமதித்ததனால் நீ விரைவாக நாசமடைவாய்' என்று சபித்தான். மஹாராஜனே! தர்மாத்மாவான விபீஷ ணனே, தார்மிகர்களுடைய வழியைநினைத்துக்கொண்டு நிகரற்ற செல்வத்துடன்கூடிக் குபேரனை அனுஸரித்தான். சிறந்த புத்தி யுள்ளவனும் ப்ராதாவும் பகவானுமான அந்தத் தனேசுவரன் மகிழ்ச்சியுடன் அந்த விபீஷணனுக்கு யக்ஷராக்ஷஸ ஸேனைகளுக் குத் தலைமையைக் கொடுத்தான். ராக்ஷஸர்களும் மனிதர்களைத் தின்னுகின்ற மகாபலமுள்ள பிசாசங்களும் எல்லாரும் ஒன்று சேர்ந்து ராவணனை அரசனாகப் பட்டாபிஷேகம் செய்தார்கள். நிறைந்தவண்ணம் உருவத்தையெடுப்பவனும் ஆகாயத்தில் ஸஞ்ச ரிப்பவனும் பலத்தால் அடங்காத மனமுள்ளவனுமான தசக் ரீவன், தைத்யர்கள் தானவர்கள் இவர்களுடைய சிறந்த பொருள் களை வலிமைசெய்து கவர்ந்தான். உலகத்திலுள்ளோர்களைத் தன் கொடிய செய்கைகளால் ராவம்செய்ய(=அலற)ச் செய்ததனால் ராவணனென்று சொல்லப்படுகிறான். தசக்ரீவன் தன் இஷ்டப் படி பலத்தைப்பெற்றுத் தேவர்களுக்குப் பயத்தை உண்டு பண்ணினான்.

C 52.56

THE KUPPUSWAMY SASTRI
RESEARCH INSTITUTE,
64, R. H. ROAD, MADRAS-4

இருநூற்றெழுபத்தெட்டாவது அத்யாயம்.

ராமோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(தசரதன் ராமருக்கு இளவரசுப் பட்டம்கட்ட முயன்றதும், மந்தரையினால் கோபமூட்டப்பட்ட கைகேயியின் சொல்லால் ராமர் ஸீதையுடனும் லக்ஷ்மணனுடனும் கானகம் சென்றதும் லக்ஷ்மணன் சூர்ப்பணகையின் மூக்கையரிந்ததும், ராமர் யுத்தத்திற்கு வந்த கரன்முதலியவர்களைக் கொன்றதும், ராவணன் ராமருக்குத் தீமை செய்ய விரும்பி மாரீசனிடம் சென்றதும்.)

யுதிஷ்டிரர், 'பகவானே! தேவரீரால் தனித்தனியாக ராமர் முதலியவர்களுடைய பிறப்பானது சொல்லப்பட்டது. பிராம்மணரே! அவர்கள் வனத்துக்குச் சென்றதற்குக் காரணத்தைக் கேட்க விரும்புகிறேன். சொல்லக்கடவீர். பிராம்மணரே! தசரதகுமாரர்களும் வீரர்களும் பிராதாக்களுமான ராமரும் லக்ஷ்மணனும் கீர்த்தியுள்ளவளான ஸீதையும் எவ்வாறு கானகத்திற்கு அனுப்பப்பட்டார்கள்?' என்று வினவ, மார்க்கண்டேயர், 'அரசனே! நற்காரியங்களில் பற்றுள்ளவனும் தர்மத்தில் பற்றுள்ளவனும் எப்பொழுதும் ஞானவ்ருத்தர்களை உபாஸிப்பவனுமான தசரதன், புத்திரர்கள் பிறந்ததனால் மகிழ்ச்சியுள்ளவனானன். அந்தத் தசரதனுடைய அந்தப் புத்திரர்கள் நாளடைவில் அதிக பலமுள்ளவர்களும் வேதங்களிலும் ரஹஸ்யங்களுடன்கூடின தனுர் வேதங்களிலும் கரையை அடைந்தவர்களுமாக வளர்ந்தார்கள். அரசனே! அவர்கள், பிரம்மசர்யத்தை நிறைவேற்றிச் தாரங்களை மணந்துகொண்டார்கள். தசரதன் ராமரைப் பார்த்து ப்ரீதியுள்ளவனும் ஸுகமுள்ளவனுமானன. அநத புத்திரர்களுள் ராமர் மூத்தவராயிருந்தார்; பிரஜைகளை (த்தம் குணங்களால்) மகிழ்வித்தார். சிறந்த புத்தியுள்ள ராமர், மனத்தைக் கவருந் தன்மையுடையவராதலால், பிதாவின் உள்ளத்தை ஆனந்திக்கச் செய்தார்.

பாரத! பிறகு, நல்ல புத்தியுள்ள அந்தத் தசரதராஜன் தான் வயது முதிர்ந்தவனானதை எண்ணி, ராமருக்கு இளவரசுப்பட்டத்தில் அபிஷேகம் செய்விப்பதற்காக மந்திராலோசனை முறையை அறிந்தவர்களான மந்திரிகளோடும் புரோஹிதர்களோடும் ஆலோ

சனை செய்தான். மந்திரிகளுள் சிறந்தவர்களான அவர்களனைவரும் (முடிசூட்டுதற்கு) அது சகுந்தலமயமென்று நினைத்தார்கள். சிவந்த கண்களுள்ளவரும் நீண்டபுஜங்களுள்ளவரும் மதயானைபோல நடப்பவரும் வலம்புரிச்சங்கம்போன்ற கழுத்துள்ளவரும் அகன்றமார்புள்ளவரும் கறுத்தும் சுருண்டுமிருக்கிற தலைமயிர்களையுடையவரும் காந்தியினால்ஜ்வலிப்பவரும் வீரரும் பலத்தில் இந்திரனைக்காட்டிலும் குறைவில்லாதவரும் எல்லாத்தர்மங்களின் கரையையும் அடைந்தவரும் புத்தியில்பிருஹஸ்பதிபோன்றவரும் பிரஜைகளால் எல்லாவிதத்தாலும் அன்புகாட்டப்பெற்றவரும் எல்லாவித்தைகளிலும் ஸமர்த்தரும் இந்திரியங்களை அடக்கினவரும் பகைவர்களின் கண்களையும் மனத்தையும் கவர்பவரும் துஷ்டர்களைச் சிக்ஷிப்பவரும் கர்மசாரிகளைப்பாதுகாப்பவரும் சிறந்த தைர்யமுள்ளவரும் ஒருவராலும் மீறப்படமுடியாதவரும் (சத்துருக்களை) ஜயிப்பவரும் சத்துருக்களால் வெல்லப்படாதவரும் கௌஸல்யைக்கு ஆநந்தத்தைவிருத்திசெய்பவரும் குலத்தைஸந்தோஷிக்கச் செய்பவருமான புத்திரரைப்பார்த்து, தசரதராஜன், மிக்க மகிழ்ச்சியை அடைந்தான். [1] உனக்கு மங்களம். மகாதேஜஸ்வியும் சிறந்தவீர்யமுள்ளவனுமான தசரதன், ராமருடையகுணங்களைச் சிந்தித்து மகிழ்ச்சியுடன் புரோகிதரைப்பார்த்து, 'பிராம்மணரே! இன்று இரவில் புஷ்யநக்ஷத்திரமானது பரிசுத்தமான யோகத்தை அடையப்போகிறது. அபிஷேகத்திற்குரிய ஸாமக்ரிகளைச் சேகரிக்கவேண்டும். ராமனையும் என்னிடம் அழைத்துவரவேண்டும். எந்தப் புஷ்ய நக்ஷத்திரத்தில் புத்திரனை ராமன் மந்திரிகளோடும் பட்டணத்து ஜனங்களோடும் சேர்ந்து என்னுல் யௌவராஜ்யத்தில் அபிஷேகம் செய்விக்கத்தக்கவனோ அந்த நக்ஷத்திரமானது நாளைத்தினமே வரப்போகிறது' என்று சொன்னான். பிறகு, மந்தரையானவள், இவ்வாறான தசரதராஜனுடைய வசனத்தைக்கேட்டுக் கைகேயியிடம் சென்று, 'கைகேயி! இப்பொழுது அரசனால் உன்னுடைய பெரிதான தர்ப்பாக்கியமானது விலையிடப்பட்டது. தர்ப்பாக்கியமுள்ளவளே! கோபம் மிகுந்த கருநாகமானது மறைந்திருந்து உன்னைக் கடிக்கிறது. எந்தக்கௌஸல்யையினுடையபுத்திரன் அபிஷேகம் செய்விக்கப்படப்போகிறானோ அவளல்லவோ நல்ல பாக்கியவதி?

[1] இந்த வாக்கியத்தை இங்ஙனம் யுதிஷ்டிரருக்காக்குவது பழைய வுரை; புரோஹிதருக்காக்குவது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

எவளுடையபுத்திரன், ராஜ்யத்தை அடையவில்லையோ அப்படிப் பட்ட உனக்கு ஸௌபாக்கியமேது?' என்று ஸமயத்தில் இந்த வசனத்தை உரைத்தாள். எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டவளும் யாகவேதிபோல் மெல்லியஇடையுள்ளவளும் உத்தமமான ரூபத்தைத்தரிக்கிறவளுமான அந்தக்கைகேயியான வள், அந்தமந்தரையின் சொல்லை அறிந்துகொண்டு, ஏகாந்தத்தில் பர்த்தாவைஅடைந்து நகைப்பவள்போலவும் அழகியபுன்னகை யுடன் [1] அச்சத்தை விளைவிப்பவள்போலவும், 'சொல்தவறாத வரே! நீர் எனக்கு முன்பு விரும்பிய ஒன்றைக்கொடுப்பதாக (ச்சொல்லியிருக்கிறீர்). அரசரே! அதனை இப்பொழுது கொடுத்து அப்படிப்பட்ட கஷ்டத்தினின்று (உம்மை) விடுவித்துக்கொள் வீராக. வரத்தைக்கொடுப்பவரே! அரசரே! எனக்குக்கொடுத்த அந்தவரத்தை இப்பொழுது ஸத்தியமாகச்செய்யும்' என்று இனி மையான சொல்லைச்சொன்னாள்.

அரசன், 'உனக்கு ஸந்தோஷத்தோடு வரத்தைக்கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எதை விரும்புகிறாயோ அதைப் பெற்றுக்கொள்வாயாக. இப்பொழுது கொல்லப்படத்தகாதவன் எவன் கொல்லப்படவேண்டும்? கொல்லப்படத்தக்கவன் எவன் இப் பொழுது விடப்படவேண்டும்? இப்பொழுது எவனுக்கு நான் தனத்தைக் கொடுக்கவேண்டும்? எவனுடையபொருள் இப்பொழுது பறிக்கப்படவேண்டும்?' இந்தப்பூமியில் பிராம்மணர்களுக்கு உரியதைத்தவிர் வேறுனசொத்து ஒருசிறிது எனக்கு இருக்கிறது. பூமியில் அரசர்க்கரசனாக இருக்கிறேன்; நான்குவர்ணத்தார்களையும் காப்பவனாக இருக்கிறேன். கல்யாணி! உன்னால் எந்தவஸ்து விரும் பப்பட்டதோ அதை விளம்பமில்லாமல் 'சொல்வாயாக' என்று சொன்னான். அந்தக்கைகேயி, அரசனுடைய வசனத்தை நன்றாகத் தெரிந்துகொண்டும் அவனைக் கட்டுப்படுத்திக்கொண்டும் தன்னுடைய பலத்தை அறிந்துகொண்டும், பிறகு, அரசனை அவனைப்பார்த்து, 'ராமனுடைய பட்டாபிஷேகத்துக்காக எந்தஸாமக்ரிகள் உம்மால் சேகரிக்கப்பட்டிருக்கின்றனவோ அவைகளைப் பரதனடையவேண் டும். ராமன் வனம் செல்லவேண்டும். ராமன் மரஉரியையும் மான்தோலையும் உடுத்துச் சடைதரித்துத் தாபஸவேஷம்பூண்டு பதினான்குவருஷகாலம் தண்டகாரண்யத்தை அடைந்திருக்க

[1] 'காதலிக் காட்டுகிறவள்போலவும்' என்பது வேறுபாடத்தின் பொருள்.

வேண்டும்' என்று சொன்னுள். பரதஸ்ரேஷ்டனே! அந்த அரசன் அப்ரியமானதும் பயங்கரமாகத் தோன்றியதுமான அந்தவரத் தைக்கேட்டுத் துக்கத்தால் பீடிக்கப்பட்டவனாக ஒன்றும் பேசாம லிருந்துவிட்டான். சிறந்த வீர்யமுள்ள ராமர், பிதாவினிடம் கைகேயி அவ்வாறு சொன்னதையறிந்து, 'தர்மாத்மாவான அரசர் சொல்தவறுதவராகட்டும்' என்றெண்ணி வனத்துக்குப் புறப்பட் டார். ஸ்ரீமானான லக்ஷ்மணன், அப்பொழுது கையில்விற்பிடித்தவ னாக அவரைப் பின்தொடர்ந்து சென்றான். விதேஹராஜனான ஜன கனுடையகுமாரியும் (ராமருடைய) பார்யையுமான ஸீதையும், அவ ரைப் பின்தொடர்ந்து சென்றாள். உனக்கு மங்களம். அப் பொழுது, ராமர் அங்கிருந்து வனத்திற்குப் போனவுடன், தசரத ராஜன் சரீரத்துக்குரிய காலகதியை அடைந்தான். ராமர் கானகம் சென்றுரென்றும் தசரதன் உயிர் துறந்தானென்றும் அறிந்து ராஜமஹிஷியும் இழிகுணமுள்ளவளுமான கைகேயியானவள் பர தனையடைந்து, 'தசரதர் ஸ்வர்க்கத்தை அடைந்துவிட்டார். ராமலக்ஷ்மணர்கள் காட்டில் இருக்கிறார்கள். விசாலமானதும் பகையற்றதுமான ராஜ்யத்தை நீக்ஷேமமாகப் பெற்றுக்கொள்.' என்று சொன்னுள்.

தர்மாத்மாவான அந்தப் பரதன் அந்தக் கைகேயியைப்பார்த்து, 'குலத்தைக்கெடுத்த பாவியே! பொருளில் பேராசைகொண்ட உன்னுல் பதியைக்கொன்றும் இந்தக் குலத்தை நாசம்செய்தும் என் தலையில் அபகீர்த்தியை விழச்செய்தும் கொடியகாரியம் செய்யப்பட்டுவிட்டது. கஷ்டம். என்னுடைய தாயே! நீ விரும்பினதை அடைந்தவளாக இரு' என்று சொல்லி உரக்க அழுதான். அந்தப் பரதன் எல்லாக்குடிகளுக்குமெதிரில் தன் நடையை ஸந்தோஷத்துக்கு இடமில்லாததாகச் செய்துகொண்டு பிராதாவான ராமரைத் திருப்பி அழைத்துவருவதில் விருப்ப முள்ளவனுகப் பின்தொடர்ந்து சென்றான். அந்தப் பரதன், அதிக துக்கமுள்ளவனுகக் கௌஸல்யையும் ஸுமித்திரையையும் கைகேயி யையும் முன்னுல் புறப்பட்டுப் போகும்படிசெய்து, சத்துருக்கன னோடு கூடியவனுகி வஸிஷ்டரோடும் வாமதேவரோடும் ஆயிரக் கணக்கான மற்றப் பிராம்மணர்களோடும் பட்டணத்து ஜனங்க ளோடும் நாட்டு ஜனங்களோடும் ராமரை அழைத்துவரவேண்டு மென்கிற விருப்பத்தால் வாகனங்களோடு சென்றான். அந்தப் பரதன், சித்ரகூடத்திலிருப்பவரும் லக்ஷ்மணனோடு சேர்ந்திருப் பவரும் தவசிகளுடைய வேஷத்தைத் தரித்தவரும் வில்லேந்திய

வ்ருமான ராமரைக் கண்டான். அந்தப் பரதன் ரகுகுலத்தில் பிறந்தவர்களுள் உத்தமரான ராமரை நமஸ்கரித்துக் கைகளைக் குவித்துக்கொண்டு அரசனுடைய மரணத்தையும் கோஸலநாடு அரசனில்லாமலிருப்பதையும் தெரிவித்தான்; 'நாதரே! நீர் உம்முடைய ராஜ்யத்தை அடையக்கடவீர்' என்றும் சொன்னான். அந்த ராமர் அவனுடைய சொல்லைக்கேட்டு அதிக துக்கமுள்ளவராக ஸ்நானம்செய்து தேவனுக்கு ஸமானரான பிதாவுக்கு உதகக் கிரியையைச் செய்தார். அப்பொழுது, அந்த ராமர், பிராதாவினிடம் வாத்ஸல்யமுள்ள பிராதாவான பரதனைப்பார்த்து, 'பகைவர்களை வாட்டுபவனே! என்னுடைய பாதுகைகள் ராஜ்யத்தை ஆளுகிறவைகளாகும்' என்று சொன்னார். அப்பொழுது, பரதன், அந்த ராகவரை நமஸ்கரித்து, 'இப்படியே ஆகட்டும்' என்று சொன்னான். பிதாவின் சொல்லைச்செய்பவரான ராமரால் அனுப்பப்பட்ட பரதன், அவருடைய பாதுகைகளை முன்னிட்டுக்கொண்டு நந்திக்ராமத்தில் ராஜ்யபரிபாலனத்தைச் செய்தான். ராமரோ, பட்டணத்து ஜனங்களும் நாட்டு ஜனங்களும் மீண்டும் வருவார்களென்று ஸ்மேதகித்துத் தண்டகாரண்யத்தில் நுழைந்து சரபங்காஸ்ரமத்தை அடைந்தார். தண்டகாரண்யத்தை அடைந்த அவர், சரபங்கரைப் பூஜித்து அழகிய கோதாவரிநதியை அடுத்து அப்பொழுது அங்கு வஸித்துவந்தார். பிறகு, அங்கு வஸித்துக்கொண்டிருக்கிற அந்த ராமருக்கு ஜனஸ்தானத்தில் வஸிக்கின்ற காரணத்தினால் பெரியவைரமானது சூர்ப்பணகையினால் உண்டுபண்ணப்பட்டது. தர்மத்தில் அதிக விருப்பமுள்ள ராகவர், ரிஷிகளைக் காப்பதற்காகப் பூமியில் பதினாலாயிரம் அரக்கர்களைக் கொன்றார். சிறந்த புத்தியுள்ளவரான ராகவர், மிகுந்த பலசாலிகளான தூஷணனையும் கரனையும் கொன்று மீண்டும் தபோவனங்களை ஸுகமுள்ளவையாகச் செய்தார். அந்தராக்ஷஸர்கள் கொல்லப்பட்டபிறகு, மூக்கும் உதடும் அறுக்கப்பட்ட சூர்ப்பணகையானவள் மீண்டும் பிராதாவான ராவணனுக்கு இருப்பிடமான லங்கையை நோக்கிச் சென்றாள். பிறகு, துக்கம்மேலிட்டவளான ராக்ஷஸியானவள் 'இரத்தம் உலர்ந்திருக்கிற முகத்துடன் ராவணனை அணுகித் தமையரான அவனுடைய கால்களில் விழுந்தாள். அப்படி விகாரப்படுத்தப்பட்ட அவளைப்பார்த்து, ராவணன் மிக்க கோபம்மூண்டு பற்களால் பற்களைக் கடித்துக்கொண்டு ஆஸனத்திலிருந்து எழுந்தான். அந்த ராவணன், தன்மந்திரிகளை விட்டு

விட்டு ஏகாந்தமான இடத்தில் அந்தச் சூர்ப்பணகையைப்பார்த்து, 'கல்யாணி! என்னை நினைக்காமலும் அவமதித்தும் எவனால் இவ் வண்ணம் செய்யப்பட்டாய்? எவன் கூருள்ள சூலாயுதத்தை எடுத்து எல்லா அவயவங்களிலும் குத்திக்கொள்ளுகிறான்? எவன் தலையில் நெருப்பை வைத்துக்கொண்டு கவலையற்று ஸுகமாகத் தூங்குகிறான்? இப்பொழுது எவன் மிக்க கோரமான ஸர்ப்பத்தைக் காலால் தீண்டுகிறான்? மதங்கொண்ட எவன் பிடரிமயிர்களுடன் கூடின சிங்கத்தைத் தெற்றிப்பற்களில் தொட்டுக்கொண்டு நிற்கி றான்?' என்று சொன்னாள்.

இவ்வாறு சொல்லுகின்ற அந்த ராவணனுடைய கண்களினின்று அக்னிஜ்வாலைகள் இரவில் எரிக்கப்படுகின்ற மரத்தினுடைய துவாரங் களிலிருந்து வெளிப்படுவதுபோல வெளிப்பட்டன. ஸஹோதரி யான சூர்ப்பணகையானவள், ராமருடைய பராக்கிரமம், கரதூஷணர் களோடு கூடின ராக்ஷஸர்களுடைய தோல்வி ஆகிய அவை அனைத் தையும் அவனுக்கு உரைத்தாள். பிறகு, பந்துக்களுடைய வதத் தைக் கேட்டு, காலனால் தூண்டப்பட்டவனை ராவணன், ராம ருடைய வதத்தை விரும்பி, மனத்தினால் மாரீசனை நினைத்தான். பிறகு, அந்த ராவணன், செய்யவேண்டிய காரியத்தை நிச்சயித்து ரகசியத்தில் தகுந்த பாதுகாவலைச்செய்து மாரீசனை அடைவதற்காக உப்புஸமுத்திரத்திற்கு மேலே ஆகாயத்தில் எழும்பினான். அவன், த்ரிகூடத்தையும் கால்பர்வதத்தையும் தாண்டி, மகரங்களுக்கிருப்பிட மானதும் ஆழ்ந்த தண்ணீருள்ளதுமான மஹோததியைக் கண்டான். அவன் அதைத்தாண்டி அதற்கு அப்புறத்திலுள்ள மகாத்மாவான சூலபாணிக்குப்பிரியமான இருப்பிடமாயிருக்கிற கோகர்ணத்தைக் கவலையற்று அடைந்தான். தசானனன், முன்பு ஒரு ஸமயத்தில் கோபங்கொண்ட ராமபயத்தாலேயே ரகசியமானவனும், பிழைத்திருப்பதில் பிரியமுள்ளவனும், முன்னே தனக்கு மந்திரியாயிருந்தவனுமான மாரீசனை அந்தக் கோகர்ணத்தில் அடைந்தான்.

இருநூற்றெழுபத்தொன்பதாவது அத்யாயம்.

ராமோபாக்யான பர்வம். (தொடர்ச்சி.)

(ராவணன் ஸந்யாஸியாகி மான்வடிவமெடுத்த மாரீசனேடு ராமந டைய ஆச்ரமம் வந்ததும், ராமர் மானைப்பிடிக்கத் தொடர்ந்து சென்று அதனை ராக்ஷஸனென்றறிந்து கொன்றதும், அவன் ஸீதையையும் லக்ஷ்மணனையும் கூவி இறந்ததும், ஸீதையின் கடுஞ்சொல்லால் லக்ஷ்மணன் ராமரைத் தேடிப்போனதும், ராவணன் ஸீதையைத் தூக்கிச் சென்றதும்.)

பிறகு, மாரீசனே, வந்திருக்கிற ராவணனைக் கண்டு பரபரப் புள்ளவனுகக் கிழங்கு வேர்முதலிய பூஜைக்குரிய பொருள்களால் அவனைப் பூஜித்தான். வீற்றிருக்கின்றவனும் இளைப்பாறின வனும் வாக்கியங்களை அறிந்தவனுமான ராவணனை நோக்கி உடனுட்கார்ந்திருப்பவனும் வாக்கியங்களை அறிந்தவனுமான அந்த மாரீசனென்கிற ராக்ஷஸன் வணக்கமுள்ள வாக்கியத்தைப் பின் வருமாறு உரைக்கலானுன். 'உன்னுடைய நிறமானது இயற்கைப் படி இருக்கவில்லையே. உன்னுடைய பட்டணத்தில் க்ஷேமமா? (மந்திரிகள்முதலிய) எல்லா வேலைக்காரர்களும் உனக்கு முன்போல ப்ரீதியோடு வேலைசெய்கிறார்களா? ராக்ஷஸஸ்வர! இங்கே வருவதற்குக் காரணம் யாது? என்ன காரியம்? செய்ய மிக அரிய தாக இருந்தாலும் அந்தக்கார்யத்தைச் செய்யப்பட்டதென்றே நீ அறிந்துகொள்வாயாக' என்று கூறினுன். ராவணன் கோபத் தோடும் பொறுமையோடுங்கூடினவனுக அந்த ராமருடைய செய்கை அனைத்தையும் செய்யவேண்டியவைகளையும் சுருக்கமாகவே அவனிடம் சொன்னுன். மாரீசனே, சுருக்கமாகவே அந்த வசனத் தைக்கேட்டு, ராவணனை நோக்கி, 'நீ ராமனை அணுகாதே. நான் அந்த ராமனுடைய வீர்யத்தை அறிந்திருக்கிறேன். மகாத்மா வான அந்த ராமனுடைய பாணவேகத்தைத் தாங்குவதற்கு எவன் திறமையுள்ளவன்? எனது ஸந்யாஸத்துக்கு அந்தப் புருஷ ஸ்ரேஷ்டனே காரணம். கெட்ட எண்ணமுள்ள எவனுல் விநா சத்துக்கு வாயிலாக இருக்கிற இந்தவிஷயம் உனக்கு உரைக்கப் பட்டது?' என்று சொன்னுன். பிறகு, ராவணன், கோபத்துடன் கூடியவனுகவும் பயமுறுத்துகின்றவனுகவும் அந்த மாரீசனைப்

பார்த்து, 'நம்முடைய சொற்படி செய்யாமற்போனால் உனக்கு மரணமும் நிச்சயமாக உண்டாகும்' என்று சொன்னன். மாரீசன், 'மரணம் அவசியம் நேருவதாயிருக்கையில் மேலானவனிடமிருந்து மரணமேற்படுவது சிறந்தது. ஆகையால், இந்த விஷயத்தில் இவனுடைய விருப்பத்தைச் செய்வேன்' என்று ஆலோசித்தான். பிறகு, மாரீசன், ராக்ஷஸர்களுள் சிறந்தவனான அந்த ராவணனை நோக்கி, 'உனக்கு என்ன உதவி என்னால் செய்யத்தக்கது? நான் உனக்கு வசப்பட்டவனில்லாவிடினும் அதைச் செய்வேன்' என்று மறுமொழி கூறினன். தசக்ரீவன், அந்த மாரீசனைப் பார்த்து, 'போ. ரத்தினமயமான கொம்புகளுள்ளதும் ரத்தினங்களால் விசித்திரமான மயிர்களுள்ளதுமான மானாகி ஸீதையை ஆசைப்படச்செய். ஸீதையானவள் உன்னைப்பார்த்து நிச்சயமாக ராமனை வேவுவாள். ராமன் விலகிச்சென்றவுடன் ஸீதையானவள் என் வசப்படுவாள். அவளை நான் எடுத்துக்கொண்டு போய்விடுவேன். பிறகு, கெட்டபுத்தியுள்ள அந்த ராமன் மனைவியின் பிரிவினால் உயிரோடிருக்கமாட்டான். இந்த உதவியை எனக்குச் செய்வாயாக' என்று சொன்னன். இவ்வாறு சொல்லக் கேட்ட மாரீசன், மிக்கமனவருத்தமுள்ளவனாகத் தனக்கு (எள்ளுந்) தண்ணீரும் இறைத்துவிட்டு, முன்னால் செல்லுகின்ற ராவணனைப் பின்தொடர்ந்துசென்றான்.

பிறகு, புகழப்பட்டசெய்கைகளுள்ள அந்த ராமருடைய ஆச்ரமத்தை அடைந்து அவ்விருவரும் முன்பு ஆலோசித்தபடியே எல்லாவற்றையும் செய்தார்கள். ராவணனை, மொட்டைத்தலையுள்ளவனும் கமண்டலுவையுடையவனும் த்ரிதண்டத்தைத் தரித்தவனுமான ஸந்யாஸியாகியும் மாரீசன் மானாகியும் அந்த இடத்தை அடைந்தார்கள். பொன்மான்வேஷத்தைத் தரித்திருப்பவனான மாரீசன் விதேஹராஜகுமாரியான ஜானகியைத் தன்னைப்பார்க்கும்படி செய்தான். தெய்வத்தினால் தூண்டப்பட்ட அந்தஸீதையானவள், அந்த மானைப்பிடிப்பதற்காக ராமனைத் தூண்டினாள். ராமர் அவளுக்குப் பிரியத்தைச் செய்பவராகி வில்லை எடுத்துக்கொண்டு (ஸீதையைப்) பாதுகாப்பதற்காக லக்ஷ்மணனை வைத்துவிட்டு மானைப்பிடிக்கும் விருப்பத்துடன் விரைந்து சென்றார். அந்த ராமர் விற்பிடித்தவரும் தூணிகட்டிக்கொண்டவரும் கத்தியும் உடும்புத்தோலால்செய்யப்பட்ட விரலுறையுமுள்ளவருமாகி [1] ருத்ரர் ருக்ஷத்ரமானைத் தொடர்ந்ததுபோல

[1] 'பிரம்மதேவர் தமது குமாரியைக் காமத்தினால் மான்உருவெடுத்துத்

(மாரீச) மானைப் பின்தொடர்ந்தார். அந்த ராக்ஷஸன் மறைந்தும் மறுபடியும் அவருக்கெதிரில் தோன்றியும் (அவரை) நெடுந்தூரம் இழுத்துவிட்டான். பிறகு, ராமர் அவனைத் தெரிந்துகொண்டார். ஸமயத்தில்தோன்றுகிற புத்தியையுடையவரான ராமர் அவனை ராக்ஷஸனென்று அறிந்து வீணுகாத ஓர் அம்பை எடுத்து மான் உருவத்துடனிருக்கிற அவனை அடித்தார். ராமபாணத்தாலடிக்கப் பட்ட அவன், அப்பொழுது, ராமருடையகுரலை அமைத்துக் கொண்டு, 'ஆ! ஸீதையே! லக்ஷ்மணா!' என்று இவ்வண்ணம் துன்பக்குரலுடன் அலறினன். பிறகு, வைதேஹியானவள் அவனுடைய அந்தத் தீனமான சொல்லைக் கேட்டாள். அதனால், அந்தஸீதை கீழே விழுந்தாள். பிறகு, லக்ஷ்மணன் அவளைப் பார்த்து, 'பயந்தவளே! உனக்கு ராமர்விஷயத்தில் பயம் வேண் டாம். எவன் ராமரை அடிப்பான்? நீ, பர்த்தாவான ராமர் ஒரு முகூர்த்தகாலத்தில் புன்னகையுடன் வரக்காண்பாய்' என்று சொன்னன். இவ்வாறு சொல்லக்கேட்டவளும் சுத்தமான நடை யையே பூஷணமாகக்கொண்டவளுமான அவள் பெண்தன்மையால் தாக்கப்பட்டு மிகஅழுகின்றவளாகி லக்ஷ்மணன்மீது ஸந்தேகம் கொண்டாள். ஸாத்வியும் பதிவ்ரதையுமான அவள் அந்த லக்ஷ் மணனைப்பார்த்துக் கடுமையாகப் பேசத்தொடங்கினள். 'மூடனே! நீ மனத்தினல் விரும்புகிற இந்த விருப்பம் கைகூடாது. நான் கத்தியை எடுத்துக்கொண்டு என்னை நானே மாய்த்துக்கொள்வேன். மலையின் சிகரத்திலிருந்தாவது விழுவேன்; தீயிலாவது புகுவேன். பெண்புலியானது ஆண்நரிக்குட்டியை அடைவதுபோல நான் பர்த்தாவான ராமரைவிட்டு அகமனன உன்னை எவ்விதத்தாலும் அடையமாட்டேன்' என்று சொன்னள்.

இப்படிப்பட்ட வசனத்தைக்கேட்டு ராகவருக்கு ப்ரியனும் நன் னடையுள்ளவனுமான லக்ஷ்மணன், காதுகளைப் பொத்திக்கொண்டு, ராமர் சென்ற வழியினல் புறப்பட்டான். விற்பிடித்தவனன அவன் ராமருடைய காலடியைப்பிடித்துக்கொண்டு நடந்தான். லக்ஷ்மணன் அப்பொழுது கோவைப்பழம்போன்ற உதடுள்ள ஜானகியைப் பார்மல் சென்றன். இதனிடையில், சாம்ப லால் மூடப்பட்ட நெருப்புப்போலக் கொடிய உருவத்தை

தொடர்ந்தார். பரமசிவன் அந்த மிருகத்தின் (=மானின்) சிர் ஷத்தை (=தலையை) வெட்டினர்; அது ஆகாயத்தில் மிருகசிர்ஷநக்ஷத்ர மாயிற்று' என்பது பழையவுரை.

நல்ல உருவத்தால் மறைத்துக்கொண்ட ராவணனென்கிற ராக்ஷஸன் காணப்பட்டான். பாவச்செயலில் நிச்சயங் கொண்ட ராவணன், ஸந்யாஸிவேஷத்தால் மறைக்கப்பட்டவனும் புகழத்தக்கவளான அந்த ஜானகியை அபஹரிக்க எண்ணமுள்ளவனுமாகி அருகில் வந்தான். தர்மங்களை அறிந்தவளான அந்த ஜானகியானவள், வந்திருக்கிற அவனைப்பார்த்து அப்பொழுது பழங்களும் கிழங்குகளுமாகிய உணவுப்பொருள் முதலியவற்றால் (அவனுக்கு) ஆதித்யம் செய்தாள். பிறகு, காமியான ராக்ஷஸேந்திரன் அவை அனைத்தையும் அலக்ஷியம்செய்து தன்னுடையதான (ராக்ஷஸ) உருவத்தை எடுத்துக்கொண்டான்; ஸீதையை நோக்கி, 'ஸீதையே! நான் ராக்ஷஸர்களுக்கு அரசன்; ராவணனென்று பிரஸித்திபெற்றவன். ஸமுத்திரத்திற்கு அக்கரையிலிருக்கிற அழகியதான லங்கை என்கிற பெயருள்ள பட்டணம் என்னுடையது. அங்கே, நீ மானிடமங்கையரின் மத்தியில் என்னோடுகூட விளங்குவாய். அழகிய பின்தட்டுக்களுள்ளவளே! எனக்கு நீ மனைவியாகக்கடவாய். தவசியான ராகவனை விட்டுவிடு' என்று நல்வார்த்தையாகச் சொன்னான். பிறகு, அழகிய பின்தட்டுக்களுள்ள ஜானகியானவள் இவைமுதலான அவனுடைய வாக்கியங்களைக்கேட்டுச் செவிகளைப் பொத்திக்கொண்டு, 'இது முறை அன்று' என்று (பின்வரும்) வசனத்தை உரைக்கலானாள். 'சக்ரவாகங்களுடன்கூடின ஆகாயமானது விழுந்தாலும்விழும். பூமியானது துண்டுதுண்டாகச் சிதறிப்போனாலும்போகும். ஸமுத்திரத்தில் ஜலமானது வறண்டு போனாலும்போகும். சந்திரன் குளிர்ந்த கிரணங்களுள்ளவனுயிருந்தலை விட்டாலும்விடுவான். ஆதித்யன் உஷ்ணமான கிரணங்களுள்ளவனுயிருந்தலை விட்டாலும்விடுவான். நெருப்பானது உஷ்ணமாக இருந்தலைவிட்டுக் குளிர்ச்சியை அடைந்தாலுமடையும். நான் ரகுநந்தனரை ஒருகாலும் விடமாட்டேன். பெண்யானையானது, மதம் பெருகுகின்ற கபோலங்களுள்ளதும் காட்டில் ஸஞ்சரிக்கின்றதும் புள்ளிகளையுடையதுமான பெரிய ஆண்யானையை அடைந்துவிட்டு, எவ்வாறு பன்றியைத்தொடும்? ஒரு ஸ்த்ரீயானவள் இலுப்பைப் பூவிலிருந்து இறக்கப்பட்ட சாராயத்தையும் தேனிலிருந்து இறக்கப்பட்ட சாராயத்தையும் குடித்துவிட்டுக் காடியில் எப்படி ஆசை வைப்பாள்? இதனை நினைத்துப்பார்' என்றாள். அவள், அவனைப்பார்த்து இவ்வண்ணமுரைத்த

விட்டு, பிறகு, கோபத்தால் உதடுகள் துடிக்க அடிக்கடி கைகளை உதறிக்கொண்டு ஆச்ரமத்தில் நுழைந்தாள். அழகிய பின்தட்டுக் களையுடையவளான அவளை, ராவணன் எதிரில் ஓடி மறைத் தான். பயங்கரமான சூலால் வெருட்டி ப்ரஜ்ஞையை இழந்த வளான (ஜானகியைத்) தலைமயிர்களில் பிடித்தான்; பிறகு, ஆகாய மார்க்கத்தில் செல்வதற்கு ஆரம்பித்தான். பிறகு, (பிரஸ்ரவண மென்கிற) மலையில் வஸிப்பவனை ஜடாயுவென்கிற கழுகரசன், 'ராம! ராம!' என்று கதறுகிறவளும் கொண்டுபோகப்படுகிற வளும் இரங்கப்படத்தக்கவளுமான அவளைக் கண்டான்.'

இருநூற்றெண்பதாவது அத்யாயம்.

ராமோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(சீதையை எடுத்துக்கொண்டு செல்லுகின்ற ராவணன் வழியில் போர்புரிந்த ஜடாயுவைக் கொன்று லங்கையில் நுழைந்ததும், திரும்பி வருகின்ற ராமர் நடுவழியில் வந்த லக்ஷ்மண னுடன் தமதாச்ரமஞ் சென்றதும், சீதையைக் காணுமல் இருவரும் தேடிச்செல்லுகையில் ராமர் கபந்தனைக் கொன்றதும், அவன் கந்தர்வனாகி அவர்களை ஸுக்ரீவ னிடம் செல்லச் சொல்லியதும்.)

கழுகுகளுக்கு அரசனும் மகாவீரனும் ஸம்பாதிக்கு ஸஹோ தரனும் அருணனுக்குக் குமாரனுமான ஜடாயுவானவன் தசரத னுக்கு நண்பனாக இருந்தான். அவன், அப்பொழுது ராவண னுடைய மடியை அடைந்திருப்பவளும் (தசரதனது தோழமையால் தனக்கு) மருமகளுமான ஸீதையைக் கண்டான். பக்ஷிராஜன் கோபத்துடன் கூடியவனாக ராக்ஷஸேச்வரனை ராவணனை எதிர்த்து விரைவாகச் சென்றான். பிறகு, கழுகுகளுக்கரசனை ஜடாயு, அந்த ராவணனைப் பார்த்து, 'ராக்ஷஸ! மைதிலியை விடு; விடு. நான் உயிரோடிருக்கையில் நீ எப்படி ஸீதையை அபஹரிப் பாய்? மைதிலியை விடாமல் போவாயாகில் நீ உயிரோடு என்னிட மிருந்து விடுபடமாட்டாய்' என்று சொன்னான். இவ்வாறு சொல்லிவிட்டு, சிறகுகளின் அடிகளாலும் மூக்கின் குத்துக்களா லும் பலமுறை காயப்படுத்தப்பட்ட அந்த ராக்ஷஸராஜனை கங்

களால் அதிகமாகக் கிழித்தான். ராமருக்கு ப்ரியத்தையும் ஹிதத்தையும் விரும்புகிற ஜடாயுவினுல் அடிக்கப்படுகின்ற அந்த ராவணன், மலையானது அருவிகளைப் பெருக்குவதுபோல இரத்தத்தை அதிகமாகப் பெருக்கினுன். அந்த ராவணன் கத்தியை எடுத்து அந்தப் பறவையினுடைய இரண்டு சிறகுகளையும் வெட்டினுன். அந்த ராக்ஷஸன் கழுகரசனைப் பிளந்து விழுந்த மலைச்சிகரம்போல வெட்டித் தள்ளிவிட்டு ஸீதையை மடியில் வைத்துக்கொண்டு மேலே எழும்புவதற்கு முயன்றுன். வைதேஹியானவள் ஆச்ரம மண்டலத்தையோ தடாகத்தையோ நதிகளையோ பார்க்குமிடந் தோறும் தன்னுடைய ஆபரணங்களைப் போட்டாள். அவள் ஒரு மலையின் சிகரத்தில் ஐந்து வானர்ாதிபதிகளைக் கண்டாள். உதார மனமுள்ள மைதிலியானவள் அந்த இடத்தில் (தனது) திவ்யமான ஒரு பெரிய வஸ்திரத்தை எறிந்தாள். காற்றினுல் அடித்துக் கொண்டுபோகப்பட்ட அந்த நல்ல பீதாம்பரமானது மேகங்களுடைய மத்தியில் மின்னல்போல அந்த ஐந்து வானரேந்திரர்களுடைய மத்தியில் விழுந்தது. ஆகாயத்தில் ஸஞ்சரிக்கின்றவனுன ராவணன், ஆகாச ஸஞ்சாரியான தேவன்போல அதிசீக்ரமாகச் சென்றுன். பிறகு, அழகியதும் அனேக கோட்டைவாசல்களுடன் கூடியதும் மனத்தைக்கவருகின்றதும் மதில்களாலும் கொத்தளங்களாலும் நெருங்கியதும் விச்வகர்மாவினுல் படைக்கப்பட்டதுமான லங்காநகரியைக் கண்டான். ராக்ஷஸேச்வரன் ஸீதையுடன் லங்காபுரியில் புகுந்தான்.

இவ்வண்ணம் வைதேஹியானவள் கொண்டுபோகப்பட்டதும், ராமர் பெரியமானைக் கொன்று திரும்பி வருகையில் தூரத்தில் தம்பியான லக்ஷ்மணனைக் கண்டார். அவர், பிராதாவான அந்த லக்ஷ்மணனைப் பார்த்து, 'ராக்ஷஸர்களால் வியாபிக்கப்பட்ட காட்டில் எவ்வாறு வைதேஹியை விட்டு வந்தாய்?' என்று நிந்தித்தார். அவர், மான் வடிவம் பூண்ட ராக்ஷஸனுல் (தாம்) இழுக்கப்பட்டதையும் தம்பி வந்ததையும் நினைத்துப் பரிதாபத்தை அடைந்தார். ராமரோ, 'லக்ஷ்மண! வைதேஹியானவள் உயிரோடிருக்கிறுளா? அவளை நான் பார்ப்பேனு?' என்று அவனை நிந்தித்துக்கொண்டே விரைவாக அருகில் வந்தார். லக்ஷ்மணன், விதேஹராஜகுமாரியான ஸீதை சொல்லிய தகாத இழிவான வசனமனைத்தையும் ராமரிடத்தில் தெரிவித்தான். ராமர் எரிக்கப்படுகின்ற உள்ளத்துடன் ஆச்ரமத்தை நோக்கிச் சென்றார். அந்த ராமர், அப்பொழுது, கொல்லப்

பட்டிருப்பதும் மலைபோன்றதுமான கழுகைக் கண்டார். பிறகு, அவர் லக்ஷ்மணனோடுகூடியவராக அந்தக் கழுகைப் பார்த்து ஸந்தேகத்துடன் வில்லை உறுதியாக இழுத்துக்கொண்டு அதனை நோக்கி ஓடினர். தேஜஸ்வியான அது, சேர்ந்திருக்கிற அந்த ராம லக்ஷ்மணர்களைப் பார்த்து, 'உங்களுக்கு மங்களம். நான் கழுகுகளுக்கு அரசன். தசரதனுக்குத் தோழன்' என்று சொல்லிற்று. அதனுடைய அந்த வசனத்தைக்கேட்டு, அவ்விருவரும், சிறந்த விற்களை நாணேத்தளர்த்திவிட்டு, 'இவன் யார்? நம்முடைய பிதாவின் நாமதேயத்தைச் சொல்லுகிறான்' என்று சொன்னார்கள். பிறகு, அவர்கள் அந்தப் பறவை இருசிறகுகளும் அறுக்கப்பட்டிருப்பதைக் கண்டார்கள். கழுகோ 'ஸீதைநிமித்தம் ராவணனிடத்திலிருந்து தனக்கு நேர்ந்த வதத்தை அவ்விருவருக்கும் தெரிவித்தது. ராகவர், கழுகைப்பார்த்து, 'ராவணன் எந்தத்திசையை நோக்கிச் சென்றான்?' என்று கேட்டார். கழுகானது, தலை அசைத்தல்களால் தெரிவித்துவிட்டு உயிரையும் துறந்தது. ராகவர், 'தென் திசையில்' என்று அதன் குறிப்பினல் தெரிந்துகொண்டு, 'இது பிதாவுக்கு நண்பன்' என்று நன்குமதித்து (அதற்கு) ஸம்ஸ்காரத்தைச் செய்வித்தார். பிறகு, பகைவர்களைத் தவிக்கச்செய்பவர்களான அவ்விருவரும் தர்ப்பாஸனங்களும் பாய்களும் புரண்டுகிடப்பதும் கலசங்கள் உடைக்கப்பட்டிருக்கிறதும் சூன்யமானதும் அனேக நரிகளால் வியாபிக்கப்பட்டதுமான ஆச்ரமஸ்தானத்தைப்பார்த்துத் துக்கமும் சோகமும் மேலிட்டவர்களும் வைதேஹி கொண்டுபோகப்பட்டதனல் பீடிக்கப்பட்டவர்களுமாகித் தென்திசையை நோக்கித் தண்டகாரண்யத்தில் பிரவேசித்தார்கள். ராமர் லக்ஷ்மணனோடுகூட அந்தப் பெருங்காட்டில் நான்கு பக்கங்களிலும் ஓடுகின்ற மிருகங்களின் கூட்டங்களைக் கண்டார்; மூள்கின்ற காட்டுத்தீயின் சப்தம்போலக் கோரமான பிராணிகளுடைய சப்தத்தையும் கேட்டார். ஒரு முகூர்த்தகாலத்தினுள் கோரமான காட்சியுள்ளவனும் மேகமடர்ந்த மலைபோலிருப்பவனும் ஆச்சாமரம்போன்ற தோள்களுள்ளவனும் நீண்டபுஜங்களுள்ளவனும் மார்பில் விசாலமான கண்களுள்ளவனும் பெரியவயிறுள்ளவனும் பெரியவாயுள்ளவனுமான கபந்தனைக் கண்டார்கள். பிறகு, அந்த ராக்ஷஸன் [1] தற்செயலாகக் கையில் லக்ஷ்மணனைப் பிடித்தான். பாரத! பிறகு, லக்ஷ்மணன் உடனே துயரம்

[1] 'சிறிதும் ஸ்ரமமில்லாமல்' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

அடைந்தான். அந்தக் கபந்தன், ராமரைப்பார்த்துக்கொண்டே லக்ஷ்மணனைத் தன்வாயிருக்குமிடத்துக்கு இழுத்தான். லக்ஷ்மணன், துயரமடைந்தவனாக, ராமரைப்பார்த்து, 'என்னுடைய இந்த நிலைமையைப் பாரும். வைதேஹியை(ப் பிறன்) கவர்ந்ததும், என்னுடைய இந்தவிபத்தும், உமக்கு அரசாட்சியினின்று நழுவுதலும், பிதாவின் மரணமும் (எவ்விதம் பொறுக்கத்தக்கவை?) வைதேஹியுடன் சேர்ந்து கோஸலநாட்டை அடைந்து தகப்பன் பாட்டன்மார்களுடைய பிரஸித்தமான ராஜ்யத்தில் நீர் நிலை பெற்றிருப்பதை நான் பார்க்கப்போகிறதில்லை. எவர்கள் பாக்கிய சாலிகளோ, அவர்கள், தர்ப்பங்களுடனும் பொரிகளுடனும் வன்னித்துளிர்களுடனும் பட்டாபிஷேகம் செய்யப்பட்ட ஆர்யரான உங்களுடைய முகத்தை மேகங்களில்லாத ஆகாயத்திலிருக்கிற சந்திரமண்டலத்தைப்போலப் பார்ப்பார்கள்' என்றான். சிறந்தபுத்தி சாலியான அந்தலக்ஷ்மணன் இப்படிப் பலவாறு புலம்பினான். பிறகு, ஆபத்துக்களில் கலங்காத ராமர், அந்த லக்ஷ்மணனைப்பார்த்து, 'புருஷஶ்ரேஷ்ட! நீ துயரப்படாதே. வீர! ஸுமித்திரையின் ஆநந்தத்தை விருத்திபண்ணுகிறவனே! நான் உயிரோடிருக்கையில் ஒருவனும் உன்னை அவமதிப்பதில் சக்தியுள்ளவனாகான். இவனுடைய வலக்கையை வெட்டிவிடு. இடக்கை என்னால் வெட்டப்பட்டுவிட்டது' என்று சொன்னார். இவ்வண்ணம் சொல்லுகின்ற ராமரால் அந்தக் கபந்தனுடைய கையானது மிக்ககூர்மையுள்ள கத்தியினால் எள்ளுக்கட்டைபோல (அவ்வளவு எளிதாக) அறுத்துத் தள்ளப்பட்டது. பிறகு, பலசாலியான லக்ஷ்மணனும், நிற்கின்ற பிராதாவான ராகவனைப்பார்த்துக் கத்தியினால் அந்தக் கபந்தனுடைய வலக்கையை வெட்டினான். மறுபடியும் லக்ஷ்மணன் அந்த ராக்ஷஸனை வலாவில் நன்றாக அடித்தான். பிறகு, மிகப்பருத்தவனான கபந்தன் உயிர்போய்ப் பூமியில் விழுந்தான். அவனுடைய தேகத்தினின்று வெளிப்புறப்பட்டுத் திவ்யமான தோற்றமுள்ள ஒருபுருஷன் ஆகாயத்தில் ஸூர்யன்போல ஆகாயத்தையடைந்து ஜ்வலித்துக்கொண்டு காணப்பட்டான். நன்றாகப்பேசுகிறவரான ராமர், அவனைப்பார்த்து, 'நீ யார்? விருப்பத்துடன் கேட்கின்ற எனக்குச் சொல்வாயாக. இது என்ன விசித்திரம்? எனக்கு ஆச்சர்யமாகத் தோன்றுகிறது' என்று வினவினார். அவன், அவரைப்பார்த்து, 'அரசரே! நான் விஶ்வா

வஸுஎன்கிற கந்தர்வன். பிராம்மணசாபத்தால் ராக்ஷஸர்களால் அடையப்பட்ட பிறப்பை அடைந்தேன்." ஸீதையானவள், ராவணனால் கொண்டுபோகப்பட்டு லங்கையில் வைக்கப்பட்டிருக்கிறாள். ஸுக்ரீவனே நீர் அடைவீராக.' அவன் உமக்கு உதவியைச் செய்வான். நல்லஜலமுள்ளதும் அன்னங்களோடும் காரண்டவங்களோடும் சேர்ந்திருப்பதுமான பம்பை என்கிற பெரியகுளமானது இதோ ரிசியமூகபர்வதத்தினருகிலிருக்கிறது. வானராஜனும் பொன்மாலையை அணிந்தவனுமான வாலியின் தம்பியான ஸுக்ரீவன் நான்குமந்திரிகளுடன் அங்கு வஸிக்கிறான். அவனோடு சேர்ந்து உம்முடைய துக்கத்திற்குக் காரணத்தைத்தெரிவிக்கக்கடவீர். உம்மோடு ஒத்த நிலைமையிலிருக்கிற அந்தஸுக்ரீவன் உதவிசெய்வான். இவ்வளவுமட்டும் நம்மால் சொல்வதற்கு முடியும். ஜானகியைப் பார்ப்பீர். ராவணனுடைய இருப்பிடமானது வானராராஜனான ஸுக்ரீவனுக்கு நிச்சயமாகத்தெரிந்திருக்கும்' என்று சொன்னான். மிக்கதாந்தியுள்ள அந்தத் திவ்யபுருஷன் இவ்வண்ணம் உரைத்துவிட்டு மறைந்தான். மகாசூரர்களான ராமலக்ஷ்மணர்களிருவரும் ஆச்சர்யத்தை அடைந்தார்கள்.

இருநூற்றெண்பத்தோராவது அத்யாயம்.

ராமோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(ராமர் ஸுக்ரீவனோடு நட்பைச்செய்து வாலியைக் கொன்றதும், ராவணன் ஸீதையை அசோகவனத்தில்வைத்து அவளை வசப்படுத்துவதற்காக ராக்ஷஸிகளை ஏவியதும், அங்கே த்ரிஜடையானவள் தான் கண்ட கனவைச் சொல்லி ஸீதையைத் தேற்றியதும்.)

பிறகு, ஸீதை கவரப்பட்டதனாலுண்டான துக்கத்தால் பீடிக்கப்பட்ட ராமர், ஸமீபத்திலிருப்பதும் ஏராளமான தாமரை மலர்களும் உத்பலமலர்களுமுள்ளதுமான பம்பாஸரஸை அடைந்தார். அவர், மிக்ககுளிர்ச்சியானதும் ஸௌக்கியத்தை உண்டுபண்ணுகிறதும் அமிருதம்போன்றதுமான காற்றினால் அந்தவனத்தில் வீசப்பட்டவராகி மனத்தினால் காதலியை நினைத்தார். ராஜஸ்ரேஷ்டரான அந்தராமர் அந்த இடத்தில் தம் பிராணநாயகியை நினைத்துக்கொண்டு புலம்பினார். பிறகு, மன்மதபாணங்களாலடிக்கப்பட்டு ஸந்தாபத்தை

அடைந்திருக்கிற அந்தாமரைப்பார்த்து, லக்ஷ்மணன், 'பகைவர்களுடைய கர்வத்தைப்போக்குகிறவரே! பலமுள்ள மனிதனை வியாதி தொடத்தகாததுபோலப் பெரியோர்களுடன் பழகியிருக்கிற உம்மை இப்படிப்பட்ட எண்ணமானது தொடுதற்குத்தகுதியுள்ளதன்று. ஜானகி, ராவணன் இவர்களுடையசெய்தியானது உம்மால் அறியப்பட்டுவிட்டது. அந்த ஜானகியை நீர் முயற்சியாலும் புத்தியாலும் அடைவீராக. மலையிலிருப்பவனும் வானர ஸ்ரேஷ்டனுமான ஸுக்ரீவனை அடைவோம். நான் சிஷ்யனும் வேலைக்காரனும் துணைவனுமாயிருக்கையில் நீர் மனக்கவலை அடையவேண்டாம். தேறுதலடைவீராக' என்று சொன்னான்.

அந்தராகவர் லக்ஷ்மணனால் இவ்வண்ணம் பலவிதமான வாக்கியங்களால் (தேறுதல்) சொல்லப்பட்டுத் தம்நிலைமையை அடைந்தார்; (அடுத்துச்செய்யவேண்டிய) காரியத்தையும் செய்யத் தொடங்கினர். வீரர்களும் பிராதாக்களுமான ராமலக்ஷ்மணர்களிருவரும் பம்பாஜலத்தில் ஸ்நானம்செய்து, பித்ருக்களுக்குத் தர்ப்பணமும்செய்து புறப்பட்டார்கள். வீரர்களான அவ்விருவரும் ஏராளமான கிழங்குகளும் பழந்தரும்மரங்களுமுள்ள ரிசியமூகத்தை அடைந்து மலைப்புச்சியில்தங்கியிருக்கிற ஐந்துவானர்களையும் அப்பொழுது பார்த்தார்கள். ஸுக்ரீவன் சிறந்தபுத்தியுள்ளவரும் மந்திரியும் இமயமலைபோலிருப்பவருமான ஹனுமானென்கிற வானரவீரரை அவர்களிடம் அனுப்பினான். ராமலக்ஷ்மணர்கள் முதலில் அவரோடு ஸம்பாஷித்து, பிறகு, ஸுக்ரீவனை அடைந்தார்கள். அரசனே! ராமர், அப்பொழுது, ஸுக்ரீவனோடு நட்புச்செய்துகொண்டார். பிறகு, ஸுக்ரீவன், ஸீதை அபஹரிக்கப்பட்டதைக்கேட்டு வாலியினால் செய்யப்பட்ட துக்ககரமான காரியங்களனைத்தையும் அதிக தேஜஸ்வியான ராமருக்குச்சொன்னான்; கொண்டுபோகப்படுகிற ஸீதையானவள் வானர்களுடையமத்தியில் போட்ட வஸ்திரத்தை, காரியம் தெரிவிக்கப்பட்ட பிறகு, ராமருக்குக் காண்பித்தான். ராமர் நம்பிக்கையை உண்டுபண்ணுகிற அந்த வஸ்திரத்தைப்பெற்று, வானராதிபதியான ஸுக்ரீவனைப் பூமியில் வானர அரசாட்சியில் தாமே அபிஷேகம் செய்வித்தார். ராமரும், யுத்தத்தில் வாலியின்வதத்தை ப்ரதிஜ்ஞைபண்ணினார். அரசனே! ஸுக்ரீவனும் வைதேஹியை மீட்டுக் கொண்டுவருவதாக ப்ரதிஜ்ஞைசெய்தான். இவ்வண்ணம் சபதத்தைச் செய்துகொண்டு ஒருவரிடத்திலொருவர் நம்பிக்கை

யுள்ளவர்களாக எல்லாரும் கிஷ்கிந்தையை அடைந்து (வாலியுடன்) யுத்தத்தில் விருப்பமுள்ளவர்களாக இருந்தார்கள். ஸுக்ரீவன் கிஷ்கிந்தையை அடைந்து [1] ஜனக்கூட்டத்தினுடைய சப்தத்துக் கொப்பான சப்தத்துடன் கர்ஜித்தான். வாலியானவன் அவனுடைய அந்தக் கர்ஜனத்தைப் 'பொறுக்கவில்லை. தாரையானவள், 'ஸுக்ரீவன் கர்ஜிப்பதனால் அவன் கல்லபலத்துடன் கூடியிருக்கிறானென்று நினைக்கிறேன். ஸஹாயபலமுள்ளவனாக வந்திருக்கிறான். நீர் (சண்டைக்காகப்) புறப்படுதல் தகாது' என்று அந்த வாலியைத் தடுத்தாள். பிறகு, பொன்மாலையை அணிந்தவனும் நன்றாகப் பேசுகிறவனும் வானரங்களுக்கு அரசனும் கணவனுமான வாலியானவன், சந்திரன்போன்ற முகமுள்ள அந்தத் தாரையைநோக்கி, 'நீ எல்லாப்பிராணிகளுடைய சப்தத்தையும் அறிந்தவள். புத்தியினால் ஆராய்ந்து பார். எனக்குத் தம்பியென்று சொல்லப்படுகிற இந்த ஸுக்ரீவன் எவனால் துணைவலியுள்ளவனாக வந்திருக்கிறான்?' என்று வினவினான். சந்திரன்போன்ற ஒளிபொருந்தியவளும் அறிவுடையவளுமான தாரையானவள் ஒருமுகூர்த்தநேரம் ஆலோசித்துத் தன்கணவனைப்பார்த்து, 'வானராதிபரே! எல்லாவற்றையும் கேட்பீராக. மனுவினை இழந்தவனும் மகாவீர்யமுள்ளவனும் தசரதனுடைய குமாரனும் வில்லாளியுமான ராமன், ஸுக்ரீவனிடு ஒத்தபகைவரையும் நண்பரையுமுடையனாமையை அடைந்திருக்கிறான். மகாபாகுபலமுள்ளவனும் பகைவர்களால் ஜயிக்கப்படாதவனும் மேதாவியும் ஸுமித்ரையின் புத்திரனும் இந்த ராமனுக்குப்ராதாவுமான லக்ஷ்மணன், ராமனுடைய காரியத்தின் பயன்களைகூடும்பொருட்டு ஸன்னத்தனாக இருக்கிறான். மயிந்தனும் த்விவிதனும் வாயுபுத்திரனான ஹனுமானும் கரடிகளுக்கரசனான ஜாம்பவானும் ஸுக்ரீவனுக்கு மந்திரிகளாக இருக்கிறார்கள். இவர்களெல்லாரும் மகாத்மாக்கள்; நல்ல புத்தியுள்ளவர்கள்; மகாபலசாலிகள்; ராமனுடைய வீர்யத்தை அடுத்திருப்பவர்கள்; உம்மை அழிப்பதற்கு ஸாமர்த்தியமுள்ளவர்கள்' என்று உரைத்தாள். வானராதிபனான வாலியானவன் ஹிதமாக உரைக்கப்பட்ட அந்தத்தாரையின் அந்தவசனத்தை மறுத்து, அஸூயையுள்ளவனாகி, அந்தத்தாரையை ஸுக்ரீவனிடத்தில் நாடின மனமுள்ளவளென்று ஸந்தேகித்தான். அந்த வாலியான

[1] 'மஹியருவிபோல' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

வன், தாரையைப்பார்த்துக் கடிந்துசொல்லிவிட்டுக் குகையின் வாயிலிலிருந்து வெளியில் புறப்பட்டான். அவன், மால்யவானென் கிற மலையினருகிலிருக்கிற ஸுக்ரீவனைப்பார்த்து, 'சக்தியற்ற வனே! உயிரில் ஆசையுள்ளவனுன நீ என்னல் பலமுறை வெல்லப் பட்டாய். கெட்டபுத்தியுள்ளவனே! நீ எவ்வாறு யுத்தத்தில் மீண்டும் விடுபட்டுச் செல்லப்போகிறாய்?'. என்று சொன்னன். இவ்வண்ணமுரைக்கப்பட்ட ஸுக்ரீவன், பிராதாவைப்பார்த்து, கோந்தவிஷயத்தைப் பகைவரைக் கொல்பவரான ராமருக்குத் தெரிவிப்பவன்போல, 'அரசனே! உன்னல் ராஜ்யமும் மனைவியும் கவரப்பட்ட எனக்கு உயிர்வாழ்வதில் என்னபெருமையென் றெண்ணி வந்திருக்கிறேனென்பதை நீ அறி' என்று சொன்னன்.

இவ்வாறு பலவிதமாகப் பேசிவிட்டு, பிறகு, அந்த வாலியும் ஸுக்ரீவனும் ஆச்சாமரங்களையும் பனைமரங்களையும் கற்களையும் ஆயுதங்களாகக்கொண்டு போரில் எதிர்த்தார்கள். இருவரும் ஒருவரை ஒருவர் அடித்தார்கள். இருவரும் பூமியில் விழுந்தார்கள். இருவரும் விசித்திரமாகத் துள்ளிக்குதித்தார்கள்; முஷ்டிகளால் நன் ருகக் குத்தினர்கள். நகங்களாலும் பற்களாலும் காயப்படுத்தப் பட்ட அந்த இரண்டுவீரர்களும் இரத்தத்தால் நனைக்கப்பட்டவர் களாகிப் பூத்திருக்கிற பலாசமரம்போல அப்பொழுது விளங்கி னர்கள். யுத்தத்தில் அவ்விருவருள்ளும் ஒருவிதமான வேற்று மையும் காணப்படாமற்போனபொழுது, ● ஹனுமான் ஸுக்ரீவ னுடைய கழுத்தில் மாலையைப்போட்டார். அப்பொழுது, கழுத் தில் மாட்டப்பட்டிருக்கிற மாலையினல் அந்தவீரன், மேகமாலையி னல் சூழப்பட்டதும் மிக்க ஒளிபொருந்தியதுமான மலயமென் கிற பெரியமலைபோல விளங்கினன். பெரியவில்லேந்திய ராமர் ஸுக்ரீவன் அடையாளமிடப்பட்டதைக்கண்டு வாலியை உத்தே சித்துக் குறிபார்த்துச் சிறந்த வில்லை இழுத்தார். அப்பொழுது அந்த வில்லினுடைய ஒலியானது யந்திரத்தின் ஒலிபோல விளங் கியது. அப்பொழுது, அம்பினல் மார்பிலடிக்கப்பட்ட வாலி யானவன் அதிகமாகப் பயந்தான். மார்புபிளக்கப்பட்ட அந்த வாலியானவன், வாயினல் இரத்தத்தைக் கக்கிக்கொண்டு, லக்ஷ் மணனேடு எதிரில்நிற்கிற ராமரை அச்சமயத்தில் கண்டான். அவன் ராமரை நிந்தித்து மூர்ச்சையடைந்து பூமியில் விழுந்தான். தாரையானவள் ஆகாயத்தினின்று கழுவிவிழுந்திருக்கிற சந்திரன் போலப் பூமியில் விழுந்திருக்கிற அந்த வாலியைக் கண்டாள்.

வாலி கொல்லப்பட்டபிறகு, ஸுக்ரீவன், கிஷ்கிந்தையையும் சந்திரனுக்கு ஸமமான முகமுள்ளவளும் கணவனையிழந்தவளுமான அந்தத்தாரையையும் அடைந்தான். சிறந்தபுத்தியுள்ள ராமரோ, ஸுக்ரீவனால் பூஜிக்கப்பட்டு மங்களகரமான மால்யவானென்கிற மலையின்மேல் நான்குமாதகாலம் வாஸம்செய்தார்.

காமத்துக்கு வசப்பட்ட ராவணனும் லங்காபுரியை அடைந்து, அசோகவனத்தினிடையில் நந்தனவனத்திற்கொப்பானதும் முனிவர்களின் ஆச்ரமம்போன்றதுமான ஒருமாளிகையில் ஸீதையை இருக்கும்படி செய்தான். பிறகு, விசாலமானகண்களுள்ள அந்த ஸீதையானவள், பர்த்தாவைநினைத்து உடம்புமெலிந்தவளும் தவசிவேஷத்தைத் தரித்தவளும், உபவாஸத்தையும் தவத்தையும் மேற்கொண்டவளும் பழங்களாலும் கிழங்குகளாலும் ஆகாரம் செய்பவளுமாக முனிவர்களின் ஆச்ரமம்போன்ற அசோக வனத்தினருகில் துயரத்துடன் வாஸம்செய்தாள். ராக்ஷஸர்களுக்கு அதிபதியான ராவணன், அங்கே ஸீதையைக்காப்பதற்காக, ப்ராஸங்களையும் கத்திகளையும் சூலங்களையும் கோடாலிகளையும் உலக்கைகளையும் எரிகொள்ளிகளையும் தரித்துக்கொண்டிருக்கிறவர்களான இரண்டு கண்களுள்ளவளும் மூன்றுகண்களுள்ளவளும் நெற்றியில் கண்ணுள்ளவளும் நீண்ட நாக்குள்ளவளும் நாக்கில்லாதவளும் மூன்று கொங்கைகளுள்ளவளும் ஒருகாலுள்ளவளும் மூன்று சடைகளுள்ளவளும் ஒருகண்ணுள்ளவளுமாகிய இப்படிப்பட்ட ராக்ஷஸிகளை ஏற்படுத்தினான். அந்த ராக்ஷஸிகளும், ஜ்வலிக்கின்ற கண்களுள்ளவர்களும் ஓட்டகத்தின்நாமம்போல மேல்நோக்கின தலைமயிருள்ளவர்களுமான மற்றராக்ஷஸிகளும், இரவும் பகலும் அயராதவர்களாக ஸீதையைச் சூழ்ந்துகொண்டிருந்தார்கள். பயங்கரமான குரலுள்ளவர்களும் குரூரர்களுமான அந்தப்பிசாசுகளை, கடுமையைத் தெரிவிக்கிற குரலுடன் நீண்டகண்களுள்ள அந்தஜானகியை, 'நம்முடையமகாராஜனை அவமதித்து இவ்விடத்தில் உயிரோடிருக்கிற இவளைத் தின்னுவோம். இவளைப்பிளந்து எள்ளளவெள்ளளவாகப் பங்கிட்டுக்கொள்வோம்' என்று எப்பொழுதும் வெருட்டினார்கள். இவ்வண்ணம் அதட்டுகின்றவர்களும் அடிக்கடி பயமுறுத்துகின்றவர்களுமான அந்தராக்ஷஸிகளைப்பார்த்து, பர்த்தாவைப்பிரிந்த சோகத்தால் நலுங்குகவரப்பட்ட ஜானகியானவள், பெருமூச்சுவிட்டுக்கொண்டு, 'ராக்ஷஸிகளே! என்னை விரைவாகத்தின்னுங்கள்.

செந்தாமரைமலர்போன்ற கண்களுள்ளவரும் கறுத்துச்சுருண்ட தலைமயிர்களையுடையவருமான அந்தராமரைவிட்டு ஜீவித்திருப்பதில் எனக்கு ஆசையில்லை. நான் இப்பொழுதே ஆகாரமில்லாதவளும் உயிரில் ஆசையில்லாதவளுமாகி உலர்ந்தமேட்டுத்தரையை அடைந்திருக்கிற கொடிபோல் என்னுடைய அங்கங்களை வறளச் செய்யப்போகிறேன். ராகவரைத்தவிர வேறுபுருஷனை நான் அடையமாட்டேனென்று அறியுங்கள். இது ஸத்யம். அடுத்துச்செய்யவேண்டியதைச் செய்யுங்கள்' என்று இந்த வசனத்தை உரைத்தாள். அவளுடைய அந்தவசனத்தைக்கேட்டுக் கடுமையான சத்தத்துடன்கூடின அந்தராக்ஷஸிகள் அவை அனைத்தையும் ஆதியோடந்தமாக ராக்ஷஸராஜனிடம் சொல்வதற்குச் சென்றார்கள்.

அவர்களெல்லாரும் சென்றபிறகு, தர்மங்களை அறிந்தவளும் ப்ரியவசனங்களைச் சொல்லுபவளுமான த்ரிஜடை என்கிறராக்ஷஸியானவள், ஸீதையைப்பார்த்து, 'ஸீதையே! உனக்கு ஒரு விஷயத்தை உரைப்பேன். தோழீ! என்னிடம் நம்பிக்கை வைக்கக் கடவாய். அழகியதாடைகளுள்ளவளே! பயத்தை விட்டுவிடு. இந்த என்வசனத்தைக் கேட்பாயாக. நல்ல புத்தி சக்தியுள்ளவனும் வயதுமுதிர்ந்தவனும் ராமருக்கு ஹிதத்தைத் தேடுவதில் நோக்குள்ளவனுமான அவிந்த்யனென்கிற ராக்ஷஸ ஸ்ரேஷ்டன் உன்னைத் தேறுதலடையச்செய்து ஸந்தோஷப்படுத்தி, 'ஸீதையானவள், 'பலசாலியும் உன்னுடையபர்த்தாவுமான ராமர் லக்ஷ்மணனோடுகூட ஸௌக்யமாக இருக்கிறார். ஸ்ரீமானுனராகவர் இந்திரனுக்கொப்பான பலமுள்ள வானராஜனை ஸுக்ரீவனோடு நட்பைச் செய்துகொண்டார். உன்னை மீட்டுக்கொண்டுபோவதில் நல்லமுயற்சியுள்ளவராக இருக்கிறார். பயந்தவளே! உலகத்தாலிகழப்பட்ட ராவணனிடமிருந்து உனக்குப் பயம் வேண்டாம். பெண்ணே! களகூபாசாபத்தால் நீ காப்பாற்றப்பட்டிருக்கிறாய். முற்காலத்தில் இந்தப்பாவியான ராவணன் ரம்பைனென்கிற மாதைப் பலாத்காரித்து அனுபவித்ததனால் சபிக்கப்பட்டிருக்கிறானன்றோ? இந்திரியங்களுக்கு வசப்பட்டவனை ராவணன் வசப்படாதபெண்ணை நெருங்குவதற்குச் சக்தியுள்ளவனுகான். உன்னுடையபர்த்தா ஸுக்ரீவனால் பாதுகாக்கப்பட்டு விரைவாக வரப்போகிறார். லக்ஷ்மணனோடுகூடின புத்திமானுனராமர் உன்னை இந்த ஆபத்திலிருந்து விடுவிப்பார்' என்று என்வசனத்தால் சொல்லப்படத்தக்கவள்' என்று சொல்லி

உன்க்காக என்னை அனுப்பினன். மிக்க கோரமான்வை களும் தீமையைத் தெரிவிக்கின்றவைகளுமான ஸ்வப்னங்களும் கெட்டபுத்தியுள்ள இந்த, ராவணனுக்கும் புலஸ்த்யகுலத்துக் கும் அழிவின்பொருட்டு என்னல் காணப்பட்டன. இந்த ராக்ஷ ஸன் பயங்கரனுகவும் கெட்டமனமுள்ளவனுகவும் இகழத்தக்க காரியங்களைச் செய்கிறவனுகவும் இருக்கிறன். இயற்கையாலும் நடைக்குற்றத்தாலும் எல்லாருக்கும் பயத்தை விருத்திபண்ணுகிற வனுக இருக்கிறன். காலத்தால் கெடுக்கப்பட்டபுத்தியுள்ளவனும் எல்லாத் தேவர்களோடும் விரோதத்தைப்பாராட்டுகிறவனுமான ராவணனுடைய விநாசத்திற்கு அறிகுறிகள் என்னல் ஸ்வப்னத் தில் காணப்பட்டன. தசானனன் எண்ணெய் தேய்த்துக்கொண்ட வனுகவும் தலைமயிரில்லாதவனுகவும் சேற்றிலமிழ்கிறவனுகவும் அடிக்கடி கழுதைகள்பூட்டப்பட்ட ரதத்தில் கூத்தாடுகிறவன் போல நின்றுகொண்டிருந்தான். கும்பகர்ணன்முதலிய இவர்கள் ஆடையில்லாதவர்களாகவும் தலைமயிருதிர்ந்தவர்களாகவும் சிவந்த புஷ்பங்களைச்சூடிச் சிவந்த மேற்பூச்சுள்ளவர்களாகவும் தென் திக்கையை நோக்கிச் செல்லுகின்றார்கள். விபீஷணன் ஒருவனே வெண்மையான குடைபிடித்தவனுகவும் வெள்ளைத் தலைப்பாகை யுடையவனுகவும் வெண்ணிறமுள்ளபுஷ்பங்களை அணிந்தவனுகவும் வெள்ளைச் சந்தனப்பூச்சுள்ளவனுகவும் வெண்ணிறமுள்ளமலையின் மீது ஏறிஇருந்தான். இந்த விபீஷணனுடைய நான்கு மந்திரி களும் வெண்ணிறமுள்ள புஷ்பங்களையும் சந்தனங்களையுமணிந்த வர்களாக வெண்ணிறமுள்ளமலையின்மீது ஏறி இருந்தார்கள். (இந்த ஐவரே) இந்த மஹாபயத்தினின்று விடுபடப்போகிறார்கள். ராமருடைய அஸ்திரத்தினல் கடல்சூழ்ந்த பூமியானது எல் லாப்பக்கங்களிலும் சூழப்பட்டது. உன்னுடைய பர்த்தா கீர்த்தி யினல் பூமிமுழுமையையும் நிரப்பப்போகிறார். லக்ஷ்மணனும் [1] யானையின் தொடையின்மீதேறினவனுகவும் தேனையும் பாயஸத் தையும் புஜிப்பவனுகவும் எல்லாத்திசைகளையும் எரிக்க எண்ணங் கொண்டவனுகவும் என்னல் காணப்பட்டான். அழுகின்றவளாக வும் இரத்தத்தால்நனைந்த மேனியுள்ளவளாகவும் புலியினல் பாது காக்கப்பட்டவளாகவும் வடதிசையைநோக்கிச் செல்பவளாகவும் நீ அடிக்கடி என்னல் பார்க்கப்பட்டாய். வைதேஹி! ஸீதையே! நீ

[1] 'எலும்புக்குவியலின் மேலிருந்து' என்பது வேறுபாடத்தின் பொருள்.

தம்பியுடனிருக்கும் பர்த்தாவான ராகவரோடு சேர்ந்து சீக்கிரம் ஸந்தோஷத்தை அடைவாய்,' என்று சொன்னாள். மான்குட்டியின் கண்போன்ற கண்களுள்ளவளும் சிறுமியுமான ஸீதையானவள், அந்தத்ரிஜடையினுடைய அப்படிப்பட்ட இந்தவசனத்தைக்கேட்டு, மீண்டும் பர்த்தாவோடு சேருவதில் ஆசையுள்ளவளானாள். பயங்காரமான உருவமுள்ளவர்களும் மிக்க உக்கிரஸ்வபாவமுள்ளவர்களுமான அந்தப் பிசாசிகள் வந்து முன்போல த்ரிஜடையுடன் கூட உட்கார்ந்துகொண்டிருக்கிற அந்த மைதிலியை அப்பொழுது கண்டார்கள்.

இருநூற்றெண்பத்திரண்டாவது அத்யாயம்.

ர ா ம ோ ப ா க் ய ா ன ப ர் வ ம். (தொடர்ச்சி.)

(ராவணன் ஸீதையினருகில்வந்து பலவாறு ஆசைகாட்டியும் அவள் மறுத்து அவனை அவமதித்ததும், அவன் திரும்பிச்சென்றதும்.)

பிறகு, பர்த்தாவைவிட்டுப் பிரிந்த சோகத்தால் பீடிக்கப்பட்டவளும் எளிமையுற்றவளும் அழுக்கடைந்த ஆடையை உடுத்தவளும் (தாலிக்கயிற்றில் கோக்கப்பட்ட) மணிமாத்திரமான அலங்காரமுள்ளவளும் அழுகிறவளும் பதிவ்ரதையும் ராக்ஷஸிகளால் காக்கப்படுகிறவளும் கல்லில் உட்கார்ந்திருப்பவளுமான அந்த ஸீதையை மன்மதபாணத்தால் பீடிக்கப்பட்ட ராவணன் கண்டு கிட்டேநெருங்கினான். யுத்தத்தில் தேவர்களாலும் அஸுரர்களாலும் கந்தர்வர்களாலும் யக்ஷர்களாலும் கிம்புருஷர்களாலும் ஜயிக்கப்படாத ராவணன், மன்மதனால் துன்பமடையச்செய்யப்பட்டவனாக, அசோகவனத்தை அடைந்தான். திவ்யவஸ்த்ரம் தரித்தவனும் நல்ல ஔஷதம்பொருந்தியவனும் சுன்னமாகக் கடையப்பட்ட ரத்தினங்களிழைத்த குண்டலங்களுள்ளவனும் விசித்ரமான புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட மகுடந்தரித்தவனும் உருவெடுத்துவந்திருக்கிற வஸந்தன்போன்றவனும் [1] முயற்சியினால் அலங்கரிக்

---

[1] வேறுபாடங்கொண்டு, 'ராவணன் முயற்சியினால் அலங்கரிக்கப்பட்டு, இந்த்ரனுடைய நந்தனவனத்திலுள்ள கல்பகவிருக்ஷம்போல விளங்கினான். ஆனால், எல்லா அலங்காரங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தும், சுடுகாட்டினிடையிலுள்ள மேடை கட்டிய மரம்போல அச்சத்தையே விளைவித்தான்' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

கப்பட்டிருந்தும் கல்பகவ்ருக்ஷத்திற்கு ஸமானனுக இல்லாதவனும் அலங்கரிக்கப்பட்டிருந்தும் இடுகாட்டிலுள்ள மேடைகட்டினமரம் போலப் பயத்தை உண்டுபண்ணுகிறவனுமான அந்தராக்ஷஸன், மெல்லிய இடையுள்ள அந்த ஸீதையின் ஸமீபத்தில் ரோஹிணியை அடைந்திருக்கிற சனிக்ரஹம்போலக் காணப்பட்டான். மன்மதனுடைய பாணத்தால் அடிக்கப்பட்டிருக்கிற அந்த ராவணன் அழகிய இடையுள்ளவளும் பயந்திருக்கிற பெண்மான் போன்றவளும் தேகபலமில்லாதவளுமான அவளை அழைத்து, 'ஸீதையே! இவ்வளவுமட்டும் போதுமானது. பர்த்தாவிஷயத்தில் அன்பு செய்யப்பட்டது. மெலிந்த மேனியையுடையவளே! என் விஷயத்தில் தயைசெய்வாயாக. நீ அலங்கரித்துக்கொள். [1] சிறந்த இடையுள்ளவளே! விலையேறப்பெற்ற வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் அணிந்துகொண்டு என்னுன் அன்புடன் அடைவாயாக. என்னுடைய எல்லா ஸ்திரீகளுள்ளும் நீ மேன்மைபெற்றவளாக இரு. என்னிடம் தேவகன்னிகைகளும் கந்தர்வஸ்திரீகளும் தானவகன்னிகைகளும் தைத்யஸ்திரீகளும் இருக்கிறார்கள். அங்கன்ற கண்களுள்ளவளே! இப்பொழுது என்வசத்திலுள்ள அந்த எல்லாஸ்திரீகளுக்கும் நீ தலைவியாக இருப்பாயாக. பதினன்கு கோடி பிசாசஸ்த்ரீகள் என்வசனத்தில் கட்டுப்பட்டு நிற்கிறார்கள். பயங்கரமான செய்கையுள்ளவர்களும் மனிதர்களைத்தின்பவர்களுமான ராக்ஷஸர்கள் பிசாசிகளுடைய எண்ணிக்கையைவிட இரண்டு மடங்குள்ளவர்களாக இருக்கிறார்கள். என்னுடைய சொற்படி நடக்கிற யக்ஷர்கள் அதைவிட மூன்றுமடங்காக இருக்கிறார்கள். சிலரே, தனுதிபனும் என்பிராதாவுமான குபேரனை அடைந்திருக்கிறார்கள். கல்யாணீ! அழகிய தொடைகளுள்ளவளே! மதுபான கோஷ்டியை அடைந்திருக்கிற என்னை எப்பொழுதும் கந்தர்வஸ்திரீகளும் அப்ஸரஸுகளும் என்பிராதாவை உபாஸிப்பதுபோல உபாஸிக்கிறார்கள். நானும் விச்ரவஸென்கிற முனிவரான பிரம்மரிஷியின் ஸாக்ஷாத் புத்திரன். லோகபாலர்களுள் [2] ஐந்தாமவனென்று எனக்குக் கீர்த்தி பிரஸித்தமாக இருக்கிறது. கோபமுள்ளவளே! தேவராஜனுக்கிருப்பதுபோலவே எனக்கும் திவ்யமான பக்ஷ்யபோஜ்யங்களும் பற்பலவிதமான பானங்களும்

---

[1] மூலம் வேறு.

[2] நான்கு திக்குக்கு நால்வர் முக்யமானவர். ராவணன் சிறப்பினுல் தன்னை ஐந்தாமவன் என்றான்.

இருக்கின்றன. வனவாஸத்தை உண்டுபண்ணின உன்னுடைய பாபச்செயலானது நாசமடைப்பட்டும். அழகிய இடையுள்ளவளே! மந்தோதரியைப்போலவே நீ எனக்கு மனைவியாக இரு' என்கிற இந்த வாக்கியத்தை உரைத்தான்.

அந்த அரக்கனால் இவ்வாறு உரைக்கப்பட்டவளும் அழகிய முகமுள்ளவளுமான வைதேஹியானவள், அப்புறம்திரும்பிக்கொண்டு ஒரு துரும்பை நடுவில்போட்டு, அந்தராக்ஷஸனை உத்தேசித்துப் பின் வருமாறு உரைக்கலானாள். மிக்க அழகிய இடையுள்ளவளும், சிறுமியும், சேர்ந்திருப்பனவைகளும் சாயாமலிருப்பனவைகளுமான இரண்டு கொங்கைகளின்மீதும் அமங்களகரமான கண்ணீரால் ஒழிவில்லாமல் பொழிகின்றவளும், துக்கத்தால் மிக்கமயக்கத்தை அடைந்தவளும், பதியைத் தெய்வமாகக் கொண்டவளுமான அந்த வைதேஹியானவள், அதிகபிரயாஸத்தால் மனத்தை நிலைநிறுத்திக்கொண்டு, அல்பனை அந்தராவணனைக்குறித்து, 'ராக்ஷஸேஸ்வர! அடிக்கடிசொல்லுகிற உன்னுடைய துக்ககரமான இப்படிப்பட்ட வாக்கியமானது, பாக்கியமில்லாதவளான என்னால் கேட்கப்பட்டது. (சொந்தமனவியை அடைவதாகிற) [1] மங்களகரமான லக்ஷணமுள்ளவனே! உனக்கு மங்களம். மனத்தைத் திருப்பு. நான் அன்யருடைய மனவியாக இருக்கிறேன். எப்பொழுதும் பதிவ்ரதையானநான் உன்னால் அடையத்தகாதவள். ராக்ஷஸ! மானிடப்பெண்ணாகியநான் உனக்கு உபயோகிக்கத்தக்க மனைவியுமல்லேன். ஸ்வாதீனப்படாதவளைப் பலாத்காரித்து என்னப்ரீதியைஅடைவாய்? உன்னுடைய பிதாபிரம்மதேவருக்கொப்பானவர்; பிராம்மணர்; பிரம்மாவின் புதல்வர். லோகபாலனுக்கொப்பான நீ எவ்வாறு தர்மத்தைப் பரிபாலனம் செய்யாமலிருக்கிறாய்? ராஜராஜனும் மஹேஶ்வரருக்குத்தோழனும் பிரபுவுமான அந்தத்தனேஶ்வரனைப் பிராதாவென்று சொல்லிக்கொண்டு நீ இந்தவிஷயத்தில் எவ்வாறு வெட்கப்படாமலிருக்கிறாய்?' என்று சொன்னாள். மெலிந்ததேகமுள்ள ஸீதையானவள், இவ்வாறு சொல்லிவிட்டு, கழுத்தையும் முகத்தையும் வஸ்திரத்தினால் மூடிக்கொண்டு, இருகொங்கைகளுக்குமுங்க மிக அழுதாள். அழுகின்ற அந்தப்பெண்ணரசியினுடைய நீண்டதும் நன்றுகப்பின்னப்பட்டதும் மிகக்கருமையானதும் பளபளப்புள்ளதுமான பின்னலானது தலையில் கருநாகம்போலக் காணப்பட்டது. தர்ப்புத்தியுள்ள ராவணன், ஸீதையால் சொல்லப்பட்டதும் அதிகநிஷ்டுரமாயுள்ளது

---

[1] வேறு பாடம்.

மான அந்தவாக்கியத்தைக்கேட்டு, ஸீதையால் மறுக்கப்பட்டிருந்தும் மீண்டுமே பின்வருமாறு வசனத்தைச் சொல்லலானான். 'ஸீதையே! மன்மதன் என்னுடைய அங்கங்களை வேண்டியபடி ஹிம்ஸிக்கட்டும். விருப்பமில்லாதவளும் அழகிய இடையுள்ளவளும் அழகிய புன்னகையுள்ளவளுமான உன்னுடன் நான் சேரமாட்டேன். நீ இன்னமும் எமக்கு ஆகாரமாக இருக்கிற மனிதனை ராமனையே அனுஸரிக்கிறாய். நான் என்ன செய்யக்கூடும்?' என்றுசொன்னான். அந்த ராக்ஷஸராஜன், இகழத்தகாத அங்கங்களுள்ளவளான அந்த ஸீதையைப்பார்த்து இவ்வண்ணமுரைத்து அந்த இடத்திலேயே மறைந்தவனாகி, இஷ்டமான திசையைநோக்கிச்சென்றான். ராக்ஷஸிகளால் சூழப்பட்டவளும் சோகத்தால் பீடிக்கப்பட்டவளுமான வைதேஹியானவள், த்ரிஜடையினால் தேற்றப்படுகின்றவளாகி அந்த இடத்திலேயே வஸித்தாள்.

இருநூற்றெண்பத்துமூன்றுவது அத்யாயம்.

ராமோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(ராமர் ஸுக்ரீவன்வரானமையால் அவனிடம் லக்ஷ்மணனைஅனுப்பியதும், லக்ஷ்மணன் ஸுக்ரீவனோடு ராமரிடம்வந்து அவன் ஸீதையைத் தேடுதற்காக வானரர்களை அனுப்பினதைத் தெரிவித்ததும், ஸீதையைக் கண்டுவந்த ஹனுமான், அங்கதன் முதலியவர்களோடு மதுவனத்தை அழித்து, ராமருக்கு ஸீதையின் வரலாறு முதலியவற்றைத் தெரிவித்துச் சூடாமணியையுங் கொடுத்ததும்.)

லக்ஷ்மணனோடு சேர்ந்திருக்கிற ராகவர், ஸுக்ரீவனால்பாதுகாக்கப்பட்டு மால்யவானென்கிறமலையின்மீது வஸித்துக்கொண்டிருக்கையில், ஆகாசம் மாசற்றிருப்பதைக் கண்டார். பகைவர்களைக் கொல்பவரும் மஹாபிலிருப்பவரும் தர்மாத்மாவுமான அந்தராமர், நிர்மலமான ஆகாயத்தில் மாசற்றிருப்பதும் க்ரஹங்களாலும் (அச்வினிமுதலிய) நக்ஷத்திரங்களாலும் மற்ற நக்ஷத்திரங்களாலும் பின்தொடரப்பட்டதுமான சந்திரனைக்கண்டு, அல்லி கருநெய்தல் தாமரை ஆகிய மலர்களுடைய வாஸனையை எடுத்துக்கொண்டு வீசுகின்ற குளிர்ந்த காற்றினால் விரைந்து எழுப்பப்பட்டவரும், ராக்ஷஸனுடையவீட்டில் சிறையிடப்பட்டிருக்கிற ஸீதையை

நினைத்து மனவருத்தமடைந்தவருமாக, அதிகாலையில் வீரனை லக்ஷ்மணனைப்பார்த்து, 'லக்ஷ்மண! போ. கிஷ்கிந்தையிலிருக்கும் வானராராஜனை ஸுக்ரீவன் சிற்றின்பங்களில் மயங்கியவனும், நன்றிமறந்தவனும், தன் கார்யங்களில் ஸாமர்த்தியமுள்ளவனுமாயிருக்கிறான்; (அதனை) அறி. ரகுகுலத்தைத் தாங்குபவனே! மிக்கபுஜபலமுள்ளவனே! லக்ஷ்மண! குலர்தமனை எந்தமூடன் என்னுல் ராஜ்யத்தில் அபிஷேகம் செய்விக்கப்பட்டானே, எவனை எல்லா வானரங்களும் கொண்டைமுசுறுகளும் காடிகளும் (அரசனுக) அடைகின்றனவோ, எவனுக்காக அப்பொழுது கிஷ்கிந்தையின் உபவனத்தில் உன்னோடு கூடின என்னுல் வாலி கொல்லப்பட்டானே, இப்படிப்பட்ட நிலைமையை அடைந்தவனை எந்தமூடன் என்னை இப்பொழுது அறியவில்லையோ அவனை நான் பூமியில் வானரர்களுள் அதமனென்றும் நன்றிமறந்தவனென்றும் நினைக்கிறேன். இந்தஸுக்ரீவன், மிகவும் அல்பமானபுத்தியினுல், உபகாரம் செய்தவனை என்னை அவமதித்துச் சபதத்தைக்காப்பதை நிச்சயமாக அறியவில்லை என்று நினைக்கிறேன். முயற்சி செய்யாமல் காமஸுகத்தில் முழுகினவனுகப் படுத்திருப்பானுகில், அவனை நீ வாலிபோனவழியினுல் எல்லாப்பிராணிகளுமடைகிற கதியை அடையச்செய். லக்ஷ்மண! அப்படியின்றி, வானராதிபதியான ஸுக்ரீவன் நம்முடைய காரியத்தில் முயற்சியுள்ளவனுக இருந்தால், அவனைக்கூட்டிக்கொண்டே வீரனாக வா. தாமதியாதே' என்று சொன்னர்.

பிராதாவால் இவ்வண்ணமுரைக்கப்பட்ட லக்ஷ்மணன், குருவான அவருடைய வாக்கியத்திலும் ஹிதத்திலும் பற்றுதலுள்ளவனுக, அழகியதும் நாணேற்றப்பட்டதும் அம்புடன்கூடியதுமான வில்லை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்; கிஷ்கிந்தையின் வாயிலை அடைந்து தடுக்கப்படாதவனுக உள்ளே சென்றனன். அவன் கோபத்துடனிருப்பதை அறிந்து, அரசனை ஸுக்ரீவன் எதிர்கொண்டு வந்தான். மனவடக்கமுள்ளவனும் வானர்களுக்கு அதிபதியுமான ஸுக்ரீவன் மனைவியோடு மகிழ்ச்சியுடன் அவனுக்குத்தகுந்த பூஜையினுல் அவனை வரவேற்றனன். ஓரிடத்தினின்றும் பயமில்லாதவனை லக்ஷ்மணன் அந்த ஸுக்ரீவனை நோக்கி ராமருடைய வசனத்தை உரைத்தான். ராஜேந்திரனே! வானராதிபனை அந்த ஸுக்ரீவன், வேலைக்காரர்களுடனும் மனைவியுடனும்கூடி வணக்கமுள்ளவனுகக் கைகூப்பிக்கொண்டு அந்த லக்ஷ்மணன் சொன்ன வசனம்

களெல்லாவற்றையும் கேட்டு ப்ரீதியுள்ளவனுகிப் புருஷச்ரேஷ்டனை லக்ஷ்மணனைப்பார்த்து, ‘லக்ஷ்மணரே! நான் தூர்ப்புத்தியுள்ளவனல்லேன்; நன்றிமறந்தவனுமல்லேன்; தையில்லாதவனுமல்லேன். ஸீதையைத் தேடும்விஷயத்தில் நான் செய்த முயற்சியைக் கேளும். நன்கு கற்பிக்கப்பட்டவர்களான வானரர்களனைவரும் என்னல், திக்குக்களில் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். வீரரே! காடுகளுடனும் மலைகளுடனும் பட்டணங்களுடனும் கூடியதும் கடலால் சூழப்பட்டதும் கிராமங்களுடனும் நகரங்களுடனும் சுரங்கங்களுடனும்கூடியதுமான இந்தப்பூமியில் தேடும்படி சென்ற அந்த எல்லா வீரர்களுக்கும் ஒரு மாஸத்தில் மீண்டு வந்துசேரவேண்டுமென்று காலம் குறிக்கப்பட்டிருக்கிறது. அந்த மாதமானது ஐந்துநாள்களால் நிரம்புவதாயிருக்கிறது. அதற்குப் பிறகு, ராமரோடுகூடினநீர் மிக்கப்ரியமான வசனத்தைக் கேட்பீர்’ என்று சொன்னன்.

சிறந்த புத்தியுள்ளவனும் வானரர்களுக்கு அரசனுமான அந்த ஸுக்ரீவனுல் இவ்வாறு சொல்லப்பட்ட லக்ஷ்மணன், கோபத்தைவிட்டு மனேஸ்தைர்யமுள்ளவனுக ஸுக்ரீவனைக் கௌரவித்தான். அந்த லக்ஷ்மணன் ஸுக்ரீவனேடுகூடி மால்யவானென்கிற மலையின் மீது வஸிக்கின்ற ராமரை அடைந்து அந்தக்காரியம் தொடங்கப்பட்டதைத் தெரிவித்தான். தெற்குத்திக்கை அடையாத ஆயிரக்கணக்கான வானரபுங்கவர்கள் இவ்வண்ணம் மூன்று திசைகளையும் தேடித் திரும்பிவந்தார்கள். அங்கே அவர்கள், ராமரிடத்தில், ‘கடல் சூழ்ந்த பூமியைத் தேடினேம். வைதேஹியையாவது ராவணனையாவது நாங்கள் காணவில்லை’ என்று சொன்னர்கள். மனவருத்தமுற்றவரான ராமர், தென்திசையிற்சென்ற வானரபுங்கவர்களிடத்தில் ஆசையுள்ளவராகப் பிராணனைத் தரித்திருந்தார். இரண்டு மாதகாலம் சென்றபிறகு, (மதுவனத்தைக்காக்கிற) வானர்கள், ஸுக்ரீவனை அணுகித்வரையுள்ளவர்களாக, ‘வானரச்ரேஷ்ட! செழிப்பானதும் பெரிதும் வாலியினுலும் உன்னுலும் பாதுகாக்கப்பட்டதுமான மதுவனத்திலுள்ள (தேனை) வாயுகுமாரனன ஹனுமான் குடிக்கிறன். வாலிபுத்திரனன அங்கதனும் தென்திசையில்தேடுவதற்காக உன்னல் அனுப்பப்பட்ட மற்ற வானரச்ரேஷ்டர்களும் குடிக்கிறார்கள்’ என்று தெரிவித்தார்கள். அவன், அந்த வானர்களுடைய அநீதியைக்கேட்டு, ‘காரியத்தை ஸாதித்தவர்களான வேலைக்காரர்களுடைய செய்கையன்றே இது? ஆதலால்

நான் காரியத்தை நிறைவேற்றினவன்' என்று எண்ணினான். மேதாவியான அந்த வான்ராதிபதியானவன், அந்த விருத்தாந்தத்தை ராமருக்குத் தெரிவித்தான். ராமரும், அனுமானத்தால், 'மைதிலியானவள் காணப்பட்டுவிட்டாள்' என்று எண்ணினார். அனுமான் முதலிய அந்த வானரர்கள் களைப்பாறினவர்களாக ராமலக்ஷ்மணர்களுடைய ஸந்நிதானத்தில் வானரராஜனை அவனை அணுகினர்கள். பாரத! ராமர், ஹனுமானுடைய நடையையும் முகத்தின்நிறத்தையும் பார்த்து, ஸீதை பார்க்கப்பட்டாளென்று மீண்டும் நம்பிக்கையை அண்டந்தார். ஹனுமானைத் தலைவனாகக் கொண்ட அந்த வானரர்கள், விருப்பம் நிறைவேறினவர்களாக, முறைப்படி ராமரையும் ஸுக்ரீவனையும் லக்ஷ்மணனையும் நமஸ்கரித்தார்கள். நமஸ்கரித்தவர்களான அவர்களைப்பார்த்து, ராமர், அம்புடன்கூடினவில்லை எடுத்துக்கொண்டு, 'என்னை உயிரோடிருக்கும்படிசெய்வீர்களா? உங்களுடையகார்யம் நிறைவேறியதா? நான் யுத்தத்தில் சத்துருக்களைக்கொன்று ஜனகநந்தினியை மீட்டுக்கொண்டு மறுபடியும் அயோத்தியில் ராஜ்யபரிபாலனம்செய்வேனா? மனைவியை இழந்தவனும் பகைவர்களால் அவமதிக்கப்பட்டவனுமான நான் வைதேஹியை விடுவிக்காமலும் யுத்தத்தில் பகைவர்களைக் கொல்லாமலும் உயிரோடிருக்கப் பிரியப்படவில்லை' என்று சொன்னர். இவ்வாறு சொல்லிய ராமரைப்பார்த்து, வாயுபுத்திரனை ஹனுமான், 'ராமரே! உமக்கு நான் ப்ரியத்தைச் சொல்லுகிறேன். கண்டேன் அந்த ஸீதையை. மலைகளோடும் காடுகளோடும் சுரங்கங்களோடும் கூடியதான தென் திசையை முழுமையும் தேடிக் களைப்பையடைந்து, குறிப்பிடப்பட்ட காலமும்சென்றபிறகு, ஒரு பெரியகுகையைக் கண்டோம். நாங்கள் பலயோஜனைதூரம் நீண்டதும் இருளடர்ந்ததும். அழகிய காடுகளுள்ளதும் புகமுடியாததும் கதண்டுகளால்வியாபிக்கப்பட்டதுமான அந்தக்குகையில் நுழைந்தோம். மிகநீண்ட வழியைக் கடந்து சென்ற பிறகு, ஸூர்யனுடைய ஒளியைக் கண்டோம்; அந்தக்குகையிலேயே நடுவில் ஒரு திவ்யமான மாளிகையையும் கண்டோம். ராகவரே! அந்த வீடானது மயனென்கிற அஸுரனுடையதாம். அப்பொழுது, அந்தமாளிகையில் ப்ரபாவதி என்கிற தவப்பெண் தவம்புரிந்துகொண்டிருந்தாள். அவளால் கொடுக்கப்பட்ட போஜ்யங்களையும் பலவிதபானங்களையும் சாப்பிட்டுப் பலத்தை அடைந்தவர்களாகி, பிறகு, அவளால் காண்பிக்

கப்பட்டவழியினுல் அந்த இடத்திலிருந்து வெளிப்புறப்பட்டு உப்புக்கடலுக்குப்பக்கத்திலிருக்கிற ஸஹ்யபர்வதத்தையும் மலய பர்வதத்தையும் தர்த்துரமென்கிறபெரியமலையையும் கண்டோம். பிறகு, மலயமலையின்மீதேறி ஸமுத்திரத்தைப் பார்க்கின்றவர்க ளான நாங்கள், மனவருத்தமுள்ளவர்களும் விசனமுள்ளவர்களும் ஸ்ரமத்தை அடைந்தவர்களும் பிழைத்திருப்பதில் சிறிதும் ஆசையில்லாதவர்களுமாயினும். பலதேயாஜனதூரம் அகன்றதும் திமிகளுக்கும் முதலைகளுக்கும் மீன்களுக்கும் இருப்பிடமுமான பெருங்கடலை நினைந்து அதிகதுக்கத்தை அடைந்தோம். அப்பொ ழுது, நாங்கள் பிராயோபவேசத்தில் நிச்சயமுள்ளவர்களாக அங்கே உட்கார்ந்திருந்தோம். பிறகு, எங்களுடைய கதைகளின் முடிவில், ஜடாயுவென்கிற கழுகினுடைய பிரஸ்தாவம் வந்தது. பிறகு, மலையின் சிகரம்போலப் பிரகாசிப்பதும் கோரமானரூப முள்ளதும் பயங்கரமானதும் வேறொரு கருடன்போலிருப்பது மான ஒரு பக்ஷியைக் கண்டோம். அது எங்களைத் தின்னக்கருதி யது. பிறகு, அது, எங்களிடம்வந்து, 'ஐயா! என்பிராதாவான ஜடாயுவின்கதையைச் சொல்லுகிறேன, இவன் யார்? நான் ஸம் பாதி என்கிற பிரஸித்திபெற்ற பக்ஷிராஜன். அந்த ஜடாயுவுக்கு நான் தமையன். நாங்களிருவரும் அன்யோன்யம் போட்டியுடன் ஆகாசத்தில் சூரியனிருக்குமிடத்தில் ஏறினோம். அதனல், இந்த என்சிறகுகளிரண்டும் எரிக்கப்பட்டன. ஜடாயுவினுடைய சிறகுகள் எரிக்கப்படவில்லை. ஆதலால், என்னுடைய இளையதம்பியும் கழு கரசனுமான அந்த ஜடாயு நெடுங்காலத்திற்குமுன் பார்க்கப்பட் டான். நான் சிறகுகளெரிக்கப்பட்டு இந்தப் பெரியமலையில் விழுந் தேன். என்ப்ராதாவும் வீரனுமான ஜடாயுவைப் பார்ப்பதற்குச் சக்தியற்றவனுக இருக்கிறேன்' என்கிற வசனத்தைச் சொல்லி யது. இவ்வண்ணம் பேசுகின்ற அந்த ஸம்பாதிக்கு, 'ப்ராதாவான வன் கொல்லப்பட்டான்' என்று தெரிவித்தோம். உங்களுடைய இந்த வ்யஸனமும் சுருக்கமாகவே தெரிவிக்கப்பட்டது. அரசரே! பகைவரையடக்குபவரே! அப்பொழுது, அந்த ஸம்பாதியான வன், மிகவும் அப்ரியமான செய்தியைக்கேட்டுத் துயரமுற்று மீண்டும் எங்களைப்பார்த்து, 'அந்தராமன் யார்? ஸீதை எப் படிப்பட்டவள்? ஜடாயு எவ்வாறு கொல்லப்பட்டான்? வானர ச்ரேஷ்டர்களே! இவை அனைத்தையும் கேட்கவிரும்பு கிறேன்' என்று வினவினன். நான் அந்த ஸம்பாதியினிடம்

உமக்குவந்திருக்கிற இந்தத் துயரமனத்தையும் எங்களுடைய உண்ணுவிரதத்தின் காரணத்தையும் விஸ்தாரமாகச் சொன்னேன். அந்தப் பக்ஷிராஜன், 'ராவணன் என்னால் அறியப்பட்டிருக்கிறான். அவனுடைய லங்கை என்கிற பெரியபட்டணம் ஸமுத்திரத்தின் அக்கரையில் த்ரிகூடபர்வதத்தின் பள்ளத்தாக்கில் காணப்பட்டது. அந்த இடத்தில் வைதேஹியானவள் இருப்பாள். இந்த விஷயத்தில் எனக்கு ஸந்தேகமில்லை' என்கிற இந்தவாக்கியத்தால் எங்களைத் தேறுதலடையச்செய்தான். பகைவனைத்தவிக்கச் செய்பவரே! இவ்வாறான அந்தஸம்பாதியின் வசனத்தைக்கேட்டு நாங்கள் எழுந்திருந்து விரைவுடன்கூடியவர்களாக ஸமுத்திரத்தைத்தாண்டும்விஷயத்தில் ஆலோசனைசெய்யலானோம். ஒருவனுவது ஸமுத்திரத்தைத்தாண்டும்விஷயத்தில் நிச்சயம்கொள்ளாமற் போனபொழுது,' நான் பிதாவான [1] வாயுவினுட்புகுந்து ஜலராக்ஷஸியைக்கொன்று நூறுயோஜனவிஸ்தாரமுள்ள மகா ஸமுத்திரத்தைத் தாண்டினேன். அந்தலங்கையில் ராவணனுடைய அந்தப்புரத்தில் பதிவ்ரதையும் உபவாஸத்தையும் தவத்தையும் இயற்கையாகக்கொண்டவளும் பார்த்தாவைப்பார்ப்பதில் அதிக ஆவலுள்ளவளும் ஜடையுள்ளவளும் அழுக்கினால் பூசப்பட்ட மேனியையுடையவளும் மெலிந்திருப்பவளும் எளிமையுறறவளும இராகபபடாதகுணவளுமான ஸீதையானவள என்னால் பார்க்கப்பட்டாள். நான் அவளைத் தனித்தனியான லக்ஷணங்களால் ஸீதை என்று அறிந்து கிட்ட அணுகி ஜனங்களில்லாத இடத்திலிருக்கிறவளும் பூஜிக்கத்தக்கவளுமான ஸீதையின் எதிரில்சென்று, 'ஸீதையே! வாயுவின்குமாரனும் வானரனுமான நான் ராம தூதன். உன்னைப்பார்ப்பதில் விருப்பமுள்ளவனாக ஆகாயமார்க்கத்தால் இவ்விடம் வந்தேன். ராஜபுத்திரர்களும் பிராதாக்களுமான ராமலக்ஷ்மணர்கள் எல்லாவானரங்களுக்கும் அரசனான ஸுக்ரீவனால் பாதுகாக்கப்பட்டு க்ஷேமமாக இருக்கிறார்கள். ஸீதையே! லக்ஷ்மணனோடுகூட ராமர் க்ஷேமத்தை உனக்குக் கூறினர். ஸுக்ரீவன் ஸகாவாக இருப்பதால் உன்னை க்ஷேமத்தைவினவுகிறான். உன்னுடைய பர்த்தா எல்லாவானரர்களுடனும் சீக்கிரம் வரப்போகிறார். தேவி! என்னிடம் நம்பிக்கைவைப்பாயாக. நான் வானரன். ராக்ஷஸனல்லேன்' என்று சொன்னேன். ஸீதையானவள், ஒருமுகூர்த்தகாலம் ஆலோசித்து

[1] வாயுவின் பலத்தைக்கொண்டு என்பது.

என்னைப்பார்த்து, 'நான் அவிந்த்யனுடையவசனத்தினால் உன்னை ஹனுமானென்று அறிவேன். மகாபாகுபலமுள்ளவனே! அவிந்த்யனென்கிற ராக்ஷஸன் ஞானவ்ருத்தர்களால் (யோக்கியனென்று) ஒப்புக்கொள்ளப்பட்டவன். அவன் உன்னைப்போன்ற மந்திரிகளால் சுக்ரீவன் சூழப்பட்டிருப்பதாகச் சொன்னான்' என்றாள். ஸீதையானவள் என்னைப்பார்த்து, 'போகலாம்' என்று சொல்லி, எந்த மணியினால் புகழப்பட்டவளான அவள் இவ்வளவுகாலம் உயிரோடிருக்கும்படி செய்யப்பட்டாளோ அப்படிப்பட்ட இந்தமணியையும் கொடுத்தாள். புருஷச்ரேஷ்டரே! உம்மால் சித்திரகூடமென்கிற பெரியமலையில் காக்கையைக் குறிவைத்து ப்ரம்மாஸ்திரமந்திரத்தினால் அபிமந்திரணம்செய்து ஒரு சீழ்கம்புல்லானது பிரயோகிக்கப்பட்டதென்றும் அதனால் கெட்டமனமுள்ள காகமானது ஒருகண் பொட்டையாக்கப்பட்டு உயிரோடு விடப்பட்டதென்றும் இந்தக்கதையை உம்முடைய ஞாபகத்திற்காகவும் நம்பிக்கைக்காகவும் சொன்னாள். நான் என்னை இப்படிப்பட்டவனென்று ஸீதையை அறியும்படிசெய்து, பிற்கு, அந்தலங்காபட்டணத்தை எரித்துவிட்டு இவ்விடம் வந்தேன்' என்று தெரிவித்தார். ராமர் ப்ரியத்தைச்சொல்லுகிற அந்த ஹனுமானைப் பாராட்டினர்.

இருநூற்றெண்பத்துநான்காவது அத்யாயம்.

ராமோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(வானரஸேனாபதிகள் தங்கள் சேனைகளுடன் ராமரையும் ஸுக்ரீவனையும் அண்டைந்ததும், அவர்களுடன் ராமர் கடற்கரையை அடைந்து ஸமுத்திரராஜனை ஆராதிப்பதற்காகத் தர்ப்பசயனத்தில் படுத்ததும், ஸாகரராஜன் ஸ்வப்னத்தில்வந்து நளனுல் அணையைக் கட்டிக்கொள்ளும்படி சொல்லியதும், ராமர் சரணாகதிசெய்த விபீஷணனுக்கு லங்கையை யாளப் பட்டாபிஷேகம் செய்து சேனைகளுடன் லங்கை சென்றதும்.)

பிறகு, அவர்களோடுகூடி அந்த இடத்திலேயே நன்குவீற்றிருக்கின்ற ராமரிடத்தில் அப்பொழுது ஸுக்ரீவனுடைய கட்டளையினால் வானரச்ரேஷ்டர்கள் வந்துசேர்ந்தார்கள். நல்ல

காந்தியுள்ளவனும் வாலிக்கு மாமனுமான ஸுஷேணன் பல சாலிகளான ஆயிரம்கோடிவானரர்களால் சூழப்பட்டு ராமரை வந்தடைந்தான். மகாவீர்யமுள்ளவர்களான கஜன் கவயன் என்கிற வானரஸ்ரேஷ்டர்கள் தனித்தனி நூறுகோடிவானரர்களால் சூழப்பட்டவர்களாகக் காணப்பட்டார்கள். மகாராஜனே! பயங்கரமானதோற்றமுள்ள கவாக்ஷனென்கிற கோலாங்கூலன் அறுபதினாயிரம்கோடி வானரசேனைகளை அழைத்துக்கொண்டு ராமரிடம் வருகின்றவனைக் காணப்பட்டான். கந்தமாதனத்தில் வஸிப்பவனும் பிரஸித்தனுமான கந்தமாதனன் வானரர்களுடைய நூறுயிரம்கோடி சேனைகளை அழைத்துவந்தான். மேதாவியும் அதிக பலசாலியுமான பனஸன் என்கிற வானரன் ஐம்பத்தேழுகோடி வானரர்களை அழைத்துவந்தான். நல்லதேஜஸுள்ளவனும் வானரர்களுள் வயதுசென்றவனும் மிக்க வல்லமையுள்ளவனுமான கதிமுகனென்பவன் பயங்கரமான சௌர்யமுள்ள வானரர்களுடைய பெரும்படையை நடத்திவந்தான். ஜாம்பவான், கருமைநிறமுள்ளவைகளும் முகத்தில் புண்ட்ர (ம்போன்ற அடையாள) முள்ளவைகளும் பயங்கரமான செய்கையையுடையவைகளுமான நூறுயிரங்கோடிக்கரடிகளுடன் காணப்பட்டான். மகாராஜனே! இவர்களும் இன்னும் மற்ற வானர யூதபதிகளுடைய யூதபதிகளும் எண்ணமுடியாதவர்களாக ராமகார்யநிமித்தம் வந்துசேர்ந்தார்கள். மலைகளின் சிகரங்கள் போன்ற மேனியையுடையவர்களும் சிங்கங்கள்போலக் கர்ஜிக்கின்றவர்களும் ஆங்காங்கு ஓடுகின்றவர்களுமான வானரசேனவீரர்களுடைய முருங்கிய ஒலியானது கேட்கப்பட்டது. சிலர் மலைகளின் சிகரங்களுக்கு ஒப்பானவர்கள். சிலர் எருமைபோன்றவர்கள். சிலர் சரத்காலத்து மேகம்போன்றவர்கள். சிலர் ஜாதிலிங்கம்போலச் சிவந்த முகமுள்ளவர்கள். சிலர் மேலேபாய்கின்றவர்களும் கீழே விழுகின்றவர்களும் துள்ளிக்குதிக்கின்றவர்களும் புழுதியை மேலே எழுப்பிவிடுகின்றவர்களுமாக நான்குபக்கங்களிலிருந்தும் வந்தார்கள். நிறைந்திருக்கிற ஸமுத்ரம்போன்ற அந்தவானரப்பெருஞ்சேனையானது, அப்பொழுது, ஸுக்ரீவனுடைய அனுமதியினால் அந்தப்பர்வதத்தில் இருப்பிடத்தை அமைத்துக்கொண்டது. பிறகு, எல்லாப்பக்கங்களிலிருந்தும் அந்த வானரஸ்ரேஷ்டர்கள் வந்து சேர்ந்தவுடன், அப்பொழுது, ஸ்ரீமானான ராகவர் ஸுக்ரீவனோடுகூடிச் சிறந்ததிதியில் நல்லநக்ஷத்ரத்தில் புகழப்பட்ட

முகூர்த்தத்தில் அணிவகுக்கப்பட்டிருக்கிற அந்தச்சேனையால் உலகங்களை மேல்கீழாகப் புரளச்செய்கிறவர்போலப் புறப்பட்டார். வாயுகுமாரனை ஹனுமான் ஸைன்யத்திற்கு முகமானான். ஒருவரிடத்தினின்றும் பயமில்லாத லக்ஷ்மணன் ஸைன்யத்தின் பின்பக்கத்தைப் பாதுகாத்தான். உடும்புத்தோலால் செய்யப்பட்ட விரலுறை கட்டிக்கொண்டவர்களான ராமலக்ஷ்மணர்கள் அந்த இடத்தில் மற்றக்ரஹங்களால் சூழப்பட்ட சந்திரஸூர்யர்கள்போல வானரயூதபதிகளால் சூழப்பட்டுச் சென்றார்கள். ஆச்சாமரங்களையும் பனைமரங்களையும் ஆயுதமாகக்கொண்ட அந்த வானரப்படையானது, ஸூர்யோதயகாலத்தில் விளைந்த மிகப்பெரிய செந்நெல் வயல்போல விளங்கியது. நளனும் நீலனும் அங்கதனும் க்ராதனும் மைந்தனும் துவிவிதனும் பாதுகாக்கப்பட்ட மிகப்பெரிய சேனையானது ராகவருடைய கார்யஸித்தியின் பொருட்டுச் சென்றது. பலஷ்டமானவையும் சிறந்தவையும் மிக்க கிழங்குகளும் பழங்களுமுள்ளவையும் மிகுதியான மதுக்களும் மாம்ஸங்களுமுள்ளவையும் ஜலமுள்ளவையும் அழகியவையுமான மலைகளின் தாழ்வரைகளில் ஒரு துன்பமுமில்லாமல் வஸிக்கின்ற அந்தவானரசேனையாது உவர்நீர்க்கடலை அணுகியது. இரண்டாவது கடல்போன்றதும் அதிகமான த்வஜங்களுள்ளதுமான அந்தச்சேனையானது, அப்பொழுது, கடற்கரையிலுள்ள காட்டை அடைந்து அங்கு வஸித்தது.

பிறகு, ஸ்ரீமானான ஸ்ரீராகவர், வானரயூதபதிகளின் மத்தியில் ஸுக்ரீவனைப்பார்த்து, 'கடலைத்தாண்டும் விஷயத்தில் என்ன உபாயமானது உங்களால் எண்ணப்பட்டிருக்கிறது? இந்தச் சேனையோ பெரிது; ஸாகரமோ எவ்விதத்தாலும் தாண்டமுடியாதது' என்று ஸமயத்துக்கேற்ற இந்தவசனத்தைச்சொல்லினர். அந்தஸமயத்தில், ஸமர்த்தர்களென்கிற எண்ணங்கொண்டு சில வானரர்கள், 'வானரர்கள் கடலைத்தாண்டுவதில் வல்லவர்கள்; ஆனல், முழுமையையும்தாண்டுவதில் வல்லவர்களாகார்' என்று சொன்னர்கள். சிலர் ஓடங்களால் தாண்டமுயன்றார்கள். சிலர் பலஷ்டமான தெப்பங்களால் தாண்ட முயன்றார்கள். ராமரோ, அவர்களனைவரையும், 'இவை ஸரியல்ல' என்று மறுத்து, இன்சொல்லாக, 'வீரர்களான வானரர்களனைவரும் நூறுயோஜனை அகலமுள்ள ஸமுத்திரத்தைத்தாண்டுவதில் சக்தியுள்ளவர்களாகார். உங்களுடைய இந்த எண்ணமானது

நிச்சயமாக நிலைபெறுது. சேனையைக் கடலைக் கடப்பிப்ப தற்கு அப்படிப் பல படகுகளுமில்லை. நம்மைப்போன்றவன் வணிகர்களுக்குத் துன்பத்தை எவ்வாறு செய்வான்? பகை வன் மிகுதியான நம்முடைய ஸைன்யத்தை ஸமயம்பார்த்து அடிப்பான். இந்த ஸமயத்தில் தெப்பங்களாலும் படகு களாலும் ஸமுத்திரத்தைத் தாண்டுவதென்பது எனக்கு ருசிக்க வில்லை. நானே இந்தக் கடலை உபாயத்தை அறிதற்காக ஆராதிக்கப்போகிறேன். உண்ணுவிரதமுள்ளவனைப் [1] பிரதிசய னம் செய்வேன். அப்படிச் செய்வதனால் ஸமுத்திரராஜன் எனக்குத் தரிசனம் கொடுப்பான். அவன் வழியைக் காட்டிக் கொடாவிடில் தடையற்றவையும் நெருப்பையும் காற்றையும் மீறி ஜ்வலிக்கின்றவையுமான மகாஸ்திரங்களால் நான் இந்த ஸமுத் திரத்தை எரிப்பேன்', என்று கூறினர். ராகவர், இவ்வண்ண முரைத்து, பிறகு, லக்ஷ்மணனுடன்கூடினவராக ஆசமனம்செய்து சாஸ்திரவிதிப்படி தர்ப்பப்படுக்கையில் ஸமுத்திரராஜனை நோக்கிப் பிரதிசயனம் செய்தார்.

பிறகு, நதங்களுக்கும் நதிகளுக்கும் பர்த்தாவும் ஜல ஜந்துக்களுடைய கூட்டங்களால் சூழப்பட்டவனும் காந்தி யுள்ளவனும் ஆனந்தமுள்ளவனுமான ஸாகரனை ராகவருக்கு ஸ்வப்னத்தில் தன்னைக் காண்பித்தான். நாறுநாறுக ரத்தி னங்களின் சுரங்கங்களால் நிரம்பிய ஸமுத்திரராஜன், ராக வரை, 'கௌஸல்யையை மாதாவாகக்கொண்டவனே!' என்று

[1] 'ப்ரதிஶிஷ்யாத்' என்பது மூலம்; பிரதிசயனம் செய்வேன்' என்பது பொருள்; பிரதிசயனம் = ஒருகாரியத்தின்பொருட்டு அது ஸித்தியாகிறவரையில் அதற்குரிய தெய்வஸந்நிதியில் ஆஹாரமின்றிப் படுப்பது;, ஸ்ரீராமாயணத்தில் வானரர்கள் செய்ததைக் கூறுமிடத்து, ப்ராயோபவேசம் என்ற சொல்லும் அதன் பரியாயபதங்களுமே உப யோகிக்கப்பட்டுள்ளன. பிரதிசயனமும் பிராயோபவேசமும் ஒன் றென்பதே பண்டிதர் பலருடைய கொள்கை. பரதன்செய்தது பிரத்யுப வேசம். 'பிரத்யுபவேசம் = காரியம் செய்யவேண்டியவருடைய வீட்டு வாயிலில் அந்தக்காரியம் ஆகும்வரையில் ஆகாரமின்றி முகத்தைமூடிக் கொண்டு புரளாமல் ஒருக்கணித்துப் படுப்பது' என்பது ஸ்ரீராமாயணம் திலகவ்யாக்யானம். அங்கங்கேஉள்ள சொல்லாற்றலால் இந்த மூன்றும் சிறிது சிறிது வேறுபாடுடையன என்று தோன்றுகிறது. விவரத்தை வல்லார்வாய்க் கேட்டுணர்க.

அழைத்து, 'மதுரமான இந்த வசனத்தை (க் கேள்.) புருஷோத்தமனே! சொல். இச்சமயத்தில் உனக்கு என்ன உதவியைச் செய்யக்கடவேன்? நான் இக்ஷ்வாகுவம்சத்தானால் உண்டுபண்ணப்பட்டவன். ராம! தவறுத பராக்கிரமமுள்ளவனே! உனக்கு நான் ஞாதியாக இருக்கிறேன்' என்று சொன்னன். ஸமுத்திரனால் இவ்வண்ணமுரைக்கப்பட்ட ராமர், பிறகு, 'நதங்களுக்கும் நதிகளுக்கும் பதியே! எந்த வழியினால் சென்று, குலத்தைக்கெடுத்தபாவியும் என்னுடைய மனைவியைக் கவர்ந்தவனும் ராக்ஷஸனுமான அந்தத் தசக்ரீவனை உற்றினர்களுடன் கொல்வேனே அந்தவழியை என்னுடைய ஸைன்யத்திற்கு நீ கொடுக்க விரும்புகிறேன்.' இப்படி யாசிக்கின்ற எனக்கு நீ வழியைக்கொடாமற்போனால் திவ்யாஸ்திர மந்திரங்களால் அபிமந்திரணம் செய்யப்பட்ட அம்புகளால் உன்னை வறளச்செய்வேன்' என்று சொன்னர். இவ்வாறு சொல்லுகின்ற ராமனுடைய வசனத்தை ஸமுத்திரராஜன் கேட்டு மனவருத்தமடைந்து கரங்களைக்குவித்து நின்றுகொண்டு ராமரைப்பார்த்து, 'உனக்குத் தீங்கை நான் செய்யவிரும்பவில்லை. நான் உனக்குத் தடையைச்செய்கிறவனுமல்லேன். ராம! என்னுடைய இந்த வசனத்தைக்கேள். கேட்டுச் செய்யத்தக்கதைச் செய். சேனைசெல்லுவதற்கு உன்னுடைய கட்டளையினால் வழியைக் கொடுப்பேனுகில் மற்றவர்களும் வில்லின்பலத்தால் என்னை இவ்வாறு கட்டளையிடுவார்கள். 'ராகவ! இந்த வானரசேனையில் த்வஷ்டாவென்கிற விச்வகர்மாவுக்குப் புத்திரனும் நல்லபலமுள்ளவனும் சில்பிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டவனுமான நளனென்கிற வானரன் இருக்கிறான்; அவன் கட்டையையோ புல்லையோ கல்லையோ எதை எதை என்மீது போடுவனே அவையெல்லாவற்றையும் நான் தாங்கிக் கொண்டிருப்பேன். அது உனக்கு அணையாகும்' என்று சொன்னன். இவ்வண்ணமுரைத்து அவன் மறைந்துபோகவே, ராமர் நளனைப்பார்த்து, 'நள! நீ ஸமுத்திரத்தில் அணையைக்கட்டு. நீ வல்லவனென்று என்னால் எண்ணப்பட்டிருக்கிறாய்' என்று சொன்னர். எது நளசேதுவென்று பூமியில் இன்றும் பிரஸித்திபெற்றிருக்கிறதோ பத்துயோஜனம் அகன்றதும் நூறுயோஜனம் நீண்டதுமான அந்த அணைக்கட்டை ராகவர் அந்த உபாயத்தால் செய்வித்தார். ராமருடைய கட்டளையை முன்னிட்டு மலைக்கொப்பான அணையானது ஸமுத்திரத்தால் தாங்கப்படுகிறது.

அந்த இடத்திலிருக்கும்பொழுது, ராமரைத் தர்மாத்மாவும் ராக்ஷஸராஜனுக்கு ப்ராதாவுமான விபீஷணன் நான்குமந்திரிகளோடு வந்தடைந்தான். உதாரமனமுள்ள ராமர் அந்த விபீஷணனை நல்வரவுகூறி ஏற்றுக்கொண்டார். ஸுக்ரீவனுக்கு மாத்திரம், 'இவன் ராவணனுடைய ஒற்றனாக இருப்பனே' என்கிற சந்தேகம் உண்டாயிற்று. ராகவர், உண்மையான செய்கைகளாலும் நல்லநடைகளாலும் குறிப்புக்களாலும் உண்மையாகவே விபீஷணன் விஷயத்தில், ஸந்தோஷமுள்ளவரானமையால், அவனைக் கௌரவித்தார்; எல்லாராக்ஷஸர்களுக்கும் அரசனாயிருத்தலில் விபீஷணனை அபிஷேகம் செய்வித்தார்; விபீஷணனை ஆலோசனை சொல்லுகிற மந்திரியாகவும் லக்ஷ்மணனுக்குத் தோழனாகவும் செய்தார். விபீஷணனுடைய அபிப்ராயப்படி அந்தராமர், ஸைன்யங்களுடன்கூடி அந்த அனை வழியாகவே மகாஸமுத்திரத்தைத் தாண்டினார்; சென்று, பிறகு, லங்காநகரியின் பெரியவையும் பலவுமான உத்யானவனங்களை வானரர்களால் பலவாறு ஒடித்து நாசம் செய்வித்தார். ராவணனுடைய அமாத்யர்களாகும் சாரர்களுமான சுகன் ஸாரணனென்கிற இரண்டு ராக்ஷஸர்கள் வானரவடிவத்தோடு அந்த இடத்தில் இருந்தார்கள். அவர்களை விபீஷணன் பிடித்தான். அந்த ராக்ஷஸர்கள் ராக்ஷஸரூபத்தை அடைந்தபொழுது, ராமர், (அவர்களை) வானரசேனைக்குக் காண்பித்து, பிறகு, விட்டுவிட்டார். பிறகு, சூரரான அங்காராமர், பெரிய வானரப்படையை உபவனத்தில் வைத்துவிட்டு, ராவணனிடத்திற்கு அங்கதனைத் தூதனுப்பினர்.

இருநூற்றெண்பத்தைந்தாவது அத்யாயம்.

ரா,மோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(அங்கதன் ராமருடையகட்டளையை ராவணனிடம் தெரிவித்துமீண்டதும், ராமருடைய கட்டளையினல் வானரர்கள் லங்காநகரத்தை இடித்து அரக்கர்களோடு போர்புரிந்ததும், ராமர் தம் சேனைகளைத் தனித்தனிவகுத்துப் போர்செய்யக் கட்டளையிட்டதும்.)

ரகுவீரர், மிகுதியான உணவுப்பொருள்களும் தண்ணீருமுள்ளதும் பலவகைக்கிழங்குகனிகளுள்ளதுமான அந்த வனத்தில் சேனையை இறக்கிவைத்து யுத்தமுறைப்படி எல்லாப்பக்கங்

களிலும் பாதுகாத்தார். ராவணன் லங்கையில் யுத்தசாஸ்திரப் படி யந்திரமுதலியவற்றை அமைத்தான். திடமான மதில்களும் கோட்டைவாசல்களுமமைந்ததான லங்கையானது, இயற்கை யாகவே, ஜயிக்கமுடியாததாக இருந்தது. ஆழ்ந்த ஜலமுள்ளவை களும் பயங்கரமான மீன்களாலும் முதலைகளாலும் நிரம்பினவை களும் கருங்காலிமுள்ளிகளால் நிறைக்கப்பட்டவைகளும் தாண்ட முடியாதவைகளுமான ஏழு அகழ்கள் இருந்தன. [1] கதவுகளா லும் யந்திரங்களாலும் பகைவர்களால் பிரவேசிக்கமுடியாதவை களும், மூத்திரம் முதலியவை விடுவதற்கு ஸாதனமான குழாய் களோடும் (பகைவர்கள்மீது தூக்கிஎறியத்தக்க உருண்டைக்) கற்களோடும் கூடியவைகளும், 'பாம்படைத்த குடங்களை வைத் திருக்கும் போர்வீரர்களுள்ளவைகளும், விஷப்பொடிகளுள்ளவை களும், உலக்கைகளோடும் எரிகொள்ளிகளோடும் நாராசங்களோ டும் தோமரங்களோடும் கத்திகளோடும் கோடாலிகளோடும் கூடியவைகளும், சதக்னிகளுள்ளவைகளும், தேன்மெழுகுபூசின முத்காயுதங்களையுடையவைகளும், காலாட்களால் நிறைந்தவை களும், எண்ணிறந்த யானைகளோடும் குதிரைகளோடும் கூடியவை களுமான [2] ஸ்தாவரகுல்மங்களும் ஜங்கமகுல்மங்களும் பட்டணத் தில் கோட்டைவாசல்களெல்லாவற்றிலும் இருந்தன. பிறகு, அங்கதனே லங்கையின் கோட்டைவாயிலை அடைந்து ராவண னுக்குத் தெரிவிக்கப்பட்டுப் பயமில்லாமல் உள்ளே சென்றான். மிக்கபலசாலியான அங்கதன் அனேக ராக்ஷஸக்கூட்டங்களின் மத்தியில் மேகவரிசைகளால் சூழப்பட்ட சூரியன்போலப் பிரகாசித் தான். சொல்வன்மையுள்ள அந்த அங்கதன் மந்திரிகளால் சூழப்பட்ட ராவணனை அடைந்து அனுமதிபெற்று ராமர் சொல்லி யனுப்பின செய்தியைச் சொல்லத் தொடங்கினான். 'அரசனே! கோஸலநாட்டுக்கு இறைவரும் பெரியபுகழ் படைத்தவருமான ர்ராகவர், உன்னைக்குறித்து, ஸமயத்துக்கேற்ற இந்த வாக்கியத்தைச் சொல்லுகிறார். மிகவும் கெட்டபுத்தியுள்ளவனே! அதனை ஏற்றுக் கொள். 'தேசங்களும் நகரங்களும், அரசியல் பற்றுதலுள்ளவனும்

---

[1] வேறு பாடம்.

[2] 'குல்மம் = நகரைக்காப்பதற்காகப் பகைவரறியாமல் மறைந்திருக்கு மிடம்; ஸ்தாவரகுல்மங்கள் = மஹா ஸ்தம்பங்கள்; அவை புருஜங்களென்னப் படும்; ஜங்கமகுல்மங்கள் = ஸைன்ய முதலியவைகள்; அவை அலங்கமென்னப் படும்' என்பது பழையவுரை.

புத்தித்தேர்ச்சியில்லாதவனுமான அரசனை அடைந்தால், அரீதியினால் கவரப்பட்டு அழிந்துவிடுகின்றன. ஸீதையைப் பலாத்காரத்தால் கவர்ந்த உன் ஒருவனால் என்விஷயத்தில் அபராதம் செய்யப்பட்டது. அந்த அபராதமானது, அபராதிகளல்லாத மற்றவர்களுடைய வதத்துக்குங்காரணமாகப்போகிறது. பலமும் கொழுப்பும் மேலிட்ட உன்னால், முற்காலத்தில், வனத்தில் ஸஞ்சரிக்கின்ற ரிஷிகள் பீடிக்கப்பட்டதும், தேவர்கள் அவமதிக்கப்பட்டதும், ராஜரிஷிகள் கொல்லப்பட்டதும், ஸ்திரீகள் அழும்பொழுதே கவரப்பட்டதுமான உன்னுடைய அநியாயத்துக்குப் பயன் இதோ வந்துவிட்டது. உன்னை மந்திரிகளோடுகூடக் கொல்லப்போகிறேன். போர்புரிவாயாக. ஆண்பிள்ளையாக இரு. ராக்ஷஸ! மனிதனான என் வில்லினுடைய வல்லமையைப் பார். ஜனகநந்தினியான ஸீதையை விட்டுவிடு. என்னிடத்திலிருந்து ஒருபொழுதும் நீ விடுபடமாட்டாய். இந்த உலகத்தைக் கூர்மையுள்ள பாணங்களால் ராக்ஷஸர்களில்லாததாகச் செய்வேன்' என்று சொன்னர்' என்றான்.

இவ்வாறு சொல்லுகின்ற அந்தத்தூதனுடைய கடுமையான வசனத்தைக்கேட்டு, அரசனான ராவணன் கோபம்மூண்டு அதனைப் பொறுக்கவில்லை. பிறகு, அரசனுடையகுறிப்பை அறிந்தவர்களான நான்குராக்ஷஸர்கள், புலியைப் பறவைகள் பிடிப்பதுபோல (அங்கதனை) நான்கு அங்கங்களில் பிடித்துக்கொண்டார்கள். அவ்வாறு அங்கங்களில்பிடித்துக்கொண்டிருக்கிற அந்தராக்ஷஸர்களை அங்கதன் தூக்கிக்கொண்டே ஆகாயத்தில் எழும்பி உப்பரிகையின் மேலிடத்தில் புகுந்தான். வேகத்தோடு மேலே எழும்புகிற அங்கதனிடத்திலிருந்து அந்தராக்ஷஸர்கள் பூமியில்விழுந்து நல்ல அடியினால் துன்பம் உண்டுபண்ணப்பட்டவர்களும் மார்பு நன்கு பிளக்கப்பட்டவர்களும் ஆனர்கள். ராக்ஷஸர்களால் நன்குபிடிக்கப்பட்ட அந்த அங்கதன், அந்த உப்பரிகையின் உச்சியிலிருந்து லங்காபுரியைத்தாண்டி ஸுவேலபர்வதத்தின் ஸமீபத்தில் குதித்தான். தேஜஸ்வியான அங்கதன், பிறகு, கோஸலதேசாதிபதியாகிய ராகவரை அடைந்து எல்லாவற்றையும்தெரிவித்து அவரால் கொண்டாடப்பெற்றுக் களைப்பாறினான். ராகுநந்தனர், பிறகு, காற்றுப்போன்றவேகமுள்ள வானரர்கள் அனைவருங் கூடிச் செய்த முயற்சியினால் லங்கையின்மதிலை இடிக்கச்செய்தார்; லக்ஷ்மணன், விபீஷணனையும் ஜாம்பவானையும் முன்னிட்டுக்கொண்டு,

அணுகமுடியாததான நகரத்தின் தெற்குவாயிலை இடித்தான். அப்பொழுது, [1] காபம்போலுச் சிவந்தமேனியையுடையவர்களும் யுத்தத்தில் ஜயசாலிகளுமான நூறுயிரங்கோடி வானரர்களோடு லங்கையை எதிர்த்துவந்தார். நீண்டபுஜங்களும் தொடைகளும் கைகளும் கணுக்கால்களுமுள்ளவைகளும் சாம்பல்நிறமுள்ளவைகளுமான மூன்றுகோடிக்கரடிகள் யுத்தஸன்னத்தமாக இருந்தன. மேலேபாய்கின்றவர்களும் கீழேகுதிக்கின்றவர்களும் விழுகின்றவர்களுமான வானரர்களால் தூற்றிவிடப்பட்டபுழுதியினல் ஒளிகெடுக்கப்பட்டு அப்பொழுது ஸூர்யன் காணப்படவில்லை. அரசனே! ஸ்த்ரீகளுடனும் வயதுமுதிர்ந்தவர்களுடனும்கூடின அந்த அரக்கர்கள் செந்நெற்கதிரிலிருக்கும் பூப்போன்றவர்களும் வாகைப்பூவின் நிறமுள்ளவர்களும் பாலஸூர்யனுக்கு ஸமானர்களும் சணல்போல வெளுத்தசிவப்புள்ளவர்களுமான வானரர்களால் எல்லாப்பக்கங்களிலும் மஞ்சள்நிறமுள்ளதாகச் செய்யப்பட்டிருக்கிற மதிலை ஆச்சர்யமடைந்தவர்களாக நாற்புறங்களிலும் பார்த்தார்கள். அந்தவானரர்கள் ரத்தின ஸ்தம்பங்களையும் [2] கர்ணட்ட கிருஹங்களுடைய சிகரங்களையும் பிளந்தார்கள்; முனைகள் உடைத்து நொறுக்கப்பட்ட யந்திரங்களையும் எறிந்தார்கள். அவர்கள், பெரிய ஆரவாரத்தோடுகூடியவர்களாகச் சக்கரங்களுள்ளவைகளும் உருண்டைக் கற்களுடன்கூடியவைகளுமான சதக்னிகளை எடுத்துப் புஜவேகத்தால் லங்கையின்மேல் எறிந்தார்கள். அப்படியே, பிராகாரத்திலிருந்த ராக்ஷஸக்கூட்டங்கள் வானரர்களால் நூறுநூறுக எதிர்த்தடிக்கப்பட்டு ஓடின. பிறகு, அரசனுடைய கட்டளையினல், நினைத்தவண்ணம் ரூபத்தை எடுப்பவர்களும் விகாரமான வடிவமுள்ளவர்களுமான ராக்ஷஸர்கள் லக்ஷம் லக்ஷமாகக்கூடிப் புறப்பட்டார்கள். அவர்கள் ஆயுதவர்ஷங்களைப்பொழிந்து வானரங்களை ஓடும்படிசெய்து பிராகாரத்தைப் பிரகாசிக்கச்செய்கின்றவர்களாகி அதிக ஆச்சர்யத்தை அடைந்தார்கள். உளைந்துக்குவியல்போன்றவர்களும் பயங்கரமான தோற்றமுள்ளவர்களுமான ராக்ஷஸர்களால் அந்தப்பிராகாரமா

---

[1] 'கைம்மணிக்கட்டுக்கும் சுண்டுவிரலுக்கும் இடைப்பட்ட உள்ளங்கையின்கீழ்ப்புறம்' என்பது பழையவுரை; 'ஓட்டகக்குட்டி' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

[2] 'குறுக்காகச் செல்லும் வாகனம்போலக் கல்முதலியவற்றுல் கட்டப்பட்ட ஒருவகை வீடு' என்பது பழையவுரை.

னது மீண்டும் வானரங்களில்லாததாகச் செய்யப்பட்டதாயிற்று. அனேக வானராதிபதிகள் சூலங்களால் அங்கங்கள் பிளக்கப்பட்டுக் கீழேவிழுந்தார்கள். அந்த இடத்தில் ராக்ஷஸர்கள் கோட்டை வாயிலிலுள்ள தூண்களால் பிளக்கப்பட்டு விழுந்தார்கள். வீரர்களான ராக்ஷஸர்களுக்கு வானரர்களோடு நகங்களாலும் பற்களாலும் ஒருவரையொருவர் கிழிக்கின்றவர்களாகவும் கடிக்கின்றவர்களாகி மயிர்பிடிச் சண்டை நடந்தது. இரண்டுபக்கத்திலும் அட்டஹாஸம்செய்பவர்களான வானரர்களும் ராக்ஷஸர்களும் அந்த யுத்தத்தில் கொல்லப்பட்டுக் கீழே விழுந்தும் ஒருவரை ஒருவர் விடவில்லை. ராமரோ, மேகம்போல அம்புகளின் ஸமூகங்களைப் பொழிந்தார். அந்த அம்புக்கூட்டங்கள் லங்கையை அடைந்து அந்த ராக்ஷஸர்களைக் கொன்றன. திடமான வில்லையுடையவனும் ஸ்ரமத்தை ஜயித்தவனுமான லக்ஷ்மணனும் நாராசங்களால் குறிப்பிட்டுக் குறிப்பிட்டுத் தூர்க்கத்திலிருக்கிற ராக்ஷஸர்களைக் கீழே விழச்செய்தான். லங்கையில் யுத்தம் செய்யப்பட்ட பிறகு, சேனைகளுக்கு ராகவருடைய கட்டளையினல் குறிப்பிட்ட ராக்ஷஸர்களை அடித்து ஜயத்தை மிகுதியாகவுடைய போர் நிறுத்தலானது உண்டாயிற்று.

இருநூற்றெண்பத்தாறுவது அத்யாயம்.

ர ா ம ோ ப ா க் ய ா ன ப ர் வ ம். (தொடர்ச்சி.)

(ராமர் லக்ஷ்மணர் முதலியவர்களுக்கு ராவணன் இந்திரஜித் முதலியவர்களோடு தீவந்துவயுத்தம்.)

பிறகு, லங்காபட்டணத்திலிருக்கிற அந்த வானரஸ்ரேஷ்ரானவர்களை, டர்வணன், பதனன், ஜம்பன், கரன், க்ரோதவசன், ஹரி, ப்ரருஜன், அருஜன், ப்ரகஸன் ஆகிய இவர்கள் முதலிய ராவணனுடைய வேலைக்காரர்களான பிசாசங்களும் அற்ப ராக்ஷஸர்களுமாகிய இவர்களுடைய கூட்டங்கள் பல எதிர்த்துச் சென்றன. பிறகு, எதிர்த்து வருகின்றவர்களும் கண்ணுக்குப் புலப்படாதவர்களும் கெட்ட எண்ணமுள்ளவர்களுமான அவர்களுடைய அந்தர்தான சக்தியின் வதத்தை அதை அறிந்தவனான விபீஷணன் செய்தான். அரசனே! காணப்படுகின்ற அவர்கள் எல்லாரும், பலசாலிகளும் நெடுந்தூரம் பாய்கின்றவர்களுமான வானரர்களால் அடிக்கப்பட்டு உயிர்போய்ப் பூமியில் விழுந்தார்கள். பிறகு,

(அதனைப்) பொறுத ராவணன் ஸைன்யங்களுடன் கூடியவனுக யுத்தத்திற்குப் புறப்பட்டான். யுத்த சாஸ்திரத்தின் முறையை அறிந்தவனும் வேறுஒரு சுக்கிராசார்யர்போலிருப்பவனுமான ராவணன், கோரமான ராக்ஷஸப்படைகளாலும். பிசாசப்படைகளாலும் சூழப்பட்டவனுகச் சுக்கிரநீதியில் சொல்லப்பட்டபடி சேனையை அணிவகுத்துக்கொண்டு வானரர்களை எல்லாப்பக்கங்களிலும் சூழ்ந்துகொண்டான். ராகவரோ, அணிவகுத்துக்கொண்டு யுத்தத்திற்காக வெளிப்பட்டு வருகிற ராவணனை (ப்பார்த்து) ப்ருஹஸ்பதியினல் சொல்லப்பட்ட முறையை உபயோகித்து எதிரணிவகுத்துக்கொண்டு காணப்பட்டார். பிறகு, அந்தஇடத்தில் ராவணன் ராமரோடு எதிர்த்துப் போர்புரிந்தான். அப்படியே, லக்ஷ்மணனும் இந்திரஜித்தோடு போர்புரிந்தான். ஸுக்ரீவன் விரூபாக்ஷனேடும் நிகர்வடன் தாரனேடும் நளன் பௌண்ட்ரனேடும் படுசன் பனஸனேடும் அந்த இடத்தில் போர்புரிந்தார்கள். எவன் எவன் எவனை எவனை எதிர்த்து யுத்தம் செய்யத்தக்கவனென்று எண்ணினனோ அவன் அவன் அவனேடு அவனேடு எதிர்த்தான். யுத்தகாலத்தில் ஒவ்வொருவனும் தன் தன் தோள் வலிமையையே துணையாகக்கொண்டு போர்புரிந்தான். அந்த யுத்தமானது, பயமுள்ளவர்களுக்குப் பயத்தைவளர்ப்பதாகவும் மயிர்க்கூச்சலை உண்டுபண்ணுகிறதாகவும் முற்காலத்தில்நடந்த தேவாஸுரயுத்தம்போலக் கோரமாகவளர்ந்தது. ராவணன், சக்திகள் சூலங்கள் கத்திகள் இவற்றின்மழைகளால் ராமரைத் துன்புறுத்தினன். ராகவரும் தீட்டப்பட்டவைகளும் கூர்மையுள்ளவைகளும் உருக்கினற்செய்தவைகளுமான அம்புகளால் ராவணனை அடித்தார். அப்படியே, லக்ஷ்மணன் மர்மஸ்தானங்களைப் பிளக்கிறபாணங்களால் முயற்சியுள்ள இந்திரஜித்தை அடித்தான். இந்திரஜித்தும் அனேகபாணங்களால் லக்ஷ்மணனைப் பிளந்தான். அஞ்சாதவிபீஷணன் ப்ரஹஸ்தன்மீதும் ப்ரஹஸ்தன் விபீஷணன்மீதும் பறவைகளின்இறகுகள் கட்டப்பட்டவைகளும் கூர்மையுள்ளவைகளுமான அம்புகளைப் பொழிந்தார்கள். பல முள்ள அந்த மகாஸ்திரங்களுக்குச் சராசரங்களுடன்கூடின மூவுலகங்களுக்கும் துன்பம்உண்டுபண்ணக்கூடிய எதிர்ப்பு நேர்ந்தது.

இருநூற்றெண்பத்தேழாவது அத்யாயம்.

ர ா மோ ப ா க் ’ய ா ன ப ர் வ ம். (தொடர்ச்சி.)

(ராவணன் பிரஹஸ்தனும் தூம்ராக்ஷனும் கொல்லப்பட்டதைக் கேட்டுத் துயருற்று யுத்தத்திற்காகக் கும்பகர்ணனை அனுப்பியது.)

பிறகு, ப்ரஹஸ்தன், விபீஷணனை விரைவாக எதிர்த்துவந்து யுத்தத்தில் கடுமையாகக்கர்ஜித்துக் கதாயுதத்தால் அடித்தான். பயங்கரமானவேகத்துடன்கூடிய அந்தக்கதையினலடிக்கப்பட்ட வனும் புத்திமானும் மிக்கபாகுபலமுள்ளவனுமான அந்தவிபீஷணன், இமயமலைபோல மிகவுறுதியாக இருந்துகொண்டு, அசையாமலிருந்தான். பிறகு, விபீஷணன், பெரியதும் நாறுமணிகளுடன் கூடியதுமான மகாசக்தியை எடுத்து அபிமந்திரித்து அவனுடைய தலையைக் குறித்து எறிந்தான். அந்த ராக்ஷஸன், வேகத்தோடு விழுகின்றதும் வஜ்ராயுதத்தின் வேகம்போன்ற வேகமுள்ளது மான அந்தக்கதையினல் தலைதள்ளப்பட்டுக் காற்றினல் முறிக்கப்பட்ட மரம்போலக் காணப்பட்டான். யுத்தத்தில் அந்த ப்ரஹஸ்தனென்கிற ராக்ஷஸன் கொல்லப்பட்டதைக்கண்டு தூம்ராக்ஷன் அதிகவேகத்தோடு வானரர்களை எதிர்த்தோடினன். பிறகு, மேகத்துக்கொப்பானதும் பயங்கரமானதோற்றமுள்ளதும் வருகின்றதுமான அவனுடையஸைன்யத்தைக் கண்டஅளவில், யுத்தத்தில் வானரவீரர்கள் விரைவாகச்சிதறிவிட்டார்கள். பிறகு, அந்த வானரஸ்ரேஷ்டர்கள் விரைவாகச் சிதறி ஓடுகின்றதைக் கண்டு, வானரர்களுள் சிறந்தவனும் வாயுவின் புத்திரனுமான ஹனுமான் வெளிப்புறப்பட்டான். அரசனே! அந்த ஹனுமான் யுத்தத்தில் ஸன்னத்தனாக நிற்கின்றதைக்கண்டு வானரர்கள் எல்லாரும் அதிக விரைவுடன் திரும்பினர்கள். பிறகு, அன்யோன்யம் எதிர்த்தோடுகின்ற ராமராவண ஸைன்யங்களுடைய ஆரவாரமானது நெருங்கியதாகவும் மயிர்க்கூச்சலை உண்டுபண்ணுகிறதாகவும் தோன்றியது. கோரமானதும் ரக்தச்சேறுள்ளதுமான அந்தயுத்தம் நடந்துவரவே, தூம்ராக்ஷன் அந்த வானரசேனையைப் பாணங்களால் ஓடும்படி அடித்தான். சத்துருக்களை ஜயிப்பவனும் வாயுவின்புத்திரனுமான அந்த அனுமான் எதிர்த்துவருகின்ற அந்த ராக்ஷஸவீரனைப் பலத்தால் எதிர்த்தான். யுத்தத்தினல் ஒருவனையொருவன் ஜயிக்க எண்ணங்கொண்ட அந்த வானர

வீரனுக்கும் ராக்ஷஸவீரனுக்கும், இந்திரனுக்கும் ப்ரஹ்லாதனுக்கும் நடந்ததுபோல, கோரமானயுத்தம் நடந்தது. ராக்ஷஸன் கதைகளாலும் பரிகங்களாலும் ஹனுமானை அடித்தான். அனுமானும் அடிக்கட்டைகளையும் கிளைகளையுமுடைய மரங்களால் ராக்ஷஸனை அடித்தான். பிறகு, கோபங்கொண்ட வாயுபுத்திரனை ஹனுமான் மிக்ககோபத்துடன் அந்தத் தூம்ராக்ஷனைக் குதிரைகளோடும் ரதத்தோடும் ஸாரதியோடுங்கூடக் கொன்றான்.

பிறகு, ராக்ஷஸவீரனை அந்தத்தூம்ராக்ஷன் கொல்லப்பட்டதைக்கண்டு, மற்ற வானரர்கள் பயமற்றவர்களாக ராக்ஷஸஸைனிகர்களைக் கொன்றார்கள். பலசாலிகளும் ஜயத்தினல்பிரகாசிப்பவர்களுமான வானரர்களால் ஹிம்ஸிக்கப்படுகின்ற அந்த அரக்கர்கள் எண்ணம் நிறைவேறுதவர்களாகப் பயத்தினல் லங்கையைக் குறித்து ஓடினர்கள். முறிய அடிக்கப்பட்டவர்களும் மாண்டவர்கள்போக மிகுந்திருக்கிறவர்களுமான அந்த அரக்கர்கள், பட்டணத்தைநோக்கி ஓடி அரசனை ராவணனுக்கு எல்லாவற்றையும் நடந்தவண்ணம் தெரிவித்தார்கள். ராவணன், அந்த ராக்ஷஸர்களிடத்திலிருந்து யுத்தத்தில் ப்ரஹஸ்தனும் சிறந்தவில்லாளியான தூம்ராக்ஷனும் சேனைகளோடும் ராக்ஷஸர்களோடும் கொல்லப்பட்டதைக்கேட்டு, மிகநீண்ட பெருமூச்சைவிட்டுச் சிறந்த ஆஸனத்திலிருந்து எழுந்து, 'கும்பகர்ணனுடைய செய்கைகளுக்கு ஸமயம் வந்துவிட்டது' என்று சொன்னன். இவ்வண்ணம் உரைத்து, படுத்திருப்பவனும் அதிகமான உறக்கத்தையே ஸ்வபாவமாகக்கொண்டவனுமான கும்பகர்ணனை மிக்கபெரியசத்தத்துடன் கூடிய பற்பலவிதவாத்தியங்களால் எழுப்பும்படிசெய்தான். பிறகு, பயமடைந்தவனும் ராக்ஷஸராஜனுமான ராவணன், அதிகப்ரயத்தனத்தால் கும்பகர்ணனைவிழிக்கச்செய்து, உறக்கத்தைவிட்டவனும் கவலையற்றவனும் தன்நிலைமையிலிருப்பவனும், மகாபலசாலியுமான அந்தக்கும்பகர்ணனைப்பார்த்து, 'கும்பகர்ண! உனக்கு இப்படிப்பட்ட தூக்கம் இருத்தலாலும், நீ மகாபயங்கரமாயும் கொடியதாயுமிருக்கிற இந்தக்காலத்தை அறியவில்லையாதலாலும், நீ பாக்கியசாலியாக இருக்கிறாய். இதோ ராமன் வானரர்களோடுகூட அணையினல் கடலைத் தாண்டி இங்கே நம்மனைவரையும் அவமதித்துப் பெரியநாசத்தைச் செய்கிறான். ஜனகனுடைய புதல்வியும் ஸீதை என்கிற பெயருள்ளவளுமான இவனுடையமனைவி என்னல் கவரப்பட்டாள். அவளை மீட்டுக்

கொண்டுபோவதற்காக அந்தராமன் பெருங்கடலில் அணைகட்டி இங்கே வந்திருக்கிறான். அவனால், ப்ரஹஸ்தன்முதலான நம்முடைய பந்துஜனங்கள் பலர் கொல்லப்பட்டார்கள். பகைவர்களை அழிப்பவனே! உன்னைத்தவிர அவனைக்கொல்பவன் வேறு ஒருவனுமில்லை. பலசாலிகளுள்சிறந்தவனே! அப்படிப்பட்ட நீ இப்பொழுது கவசம்பூண்டு எதிர்த்துச்செல்.' பகைவர்களை அடக்குபவனே! யுத்தத்தில் ராமன்முதலிய எல்லாப் பகைவர்களையும் கொல். தூஷணனுடைய தம்பிமார்களான அந்த வஜ்ரவேகனும் ப்ரமாதியும் பெரியசேனையோடுசேர்ந்து உன்னைப் பின்தொடருவார்கள்' என்று சொன்னான்.

ராக்ஷஸராஜன், பலசாலியான கும்பகர்ணனைநோக்கி இவ்வண்ணம் சொல்லிவிட்டு, வஜ்ரவேகனையும் ப்ரமாதியையும் செய்யப்படவேண்டிய காரியத்தில் கட்டளையிட்டான். தூஷணனுடைய தம்பியர்களான அந்தவீரர்கள் ராவணனைப்பார்த்து, 'அப்படியே' என்று சொல்லிவிட்டு, கும்பகர்ணனை முன்னிட்டுக்கொண்டு பட்டணத்திலிருந்து விரைவாக வெளிப்புறப்பட்டார்கள்,

இருநூற்றெண்பத்தெட்டாவது அத்யாயம்.

ர ா ம ோ ப ா க் ய ா ன ப ர் வ ம். (தொடர்ச்சி.)

(லக்ஷ்மணனால் கும்பகர்ணனும் ஹனுமானால் வஜ்ராவேகனும் நீலனால் ப்ரமாதியும் கொல்லப்பட்டது.)

பிறகு, கும்பகர்ணன், தன்வீரர்களுடன்கூடினவனாகத் தட்டணத்தினின்று புறப்பட்டுத் திடமானமுஷ்டியுடன்கூடியதும் எதிரில்நிற்பதுமான அந்த வானரஸைன்யத்தைக் கண்டான். ராமனைப்பார்ப்பதில் விருப்பத்தால் அந்தச்சேனையைப் பார்க்கின்ற அந்தக் கும்பகர்ணன், வில்லைக்கையில்பிடித்து ஸந்தத்தமாகநிற்கிற லக்ஷ்மணனைக் கண்டான். வானரர்கள் அவனை விரைவாக எதிர்த்துவந்து எல்லாப்பக்கங்களிலும் சூழ்ந்துகொண்டனர். பிறகு, பயங்கரர்களானவானரர்கள் மலைகளையும் மரங்களையும் ஆயுதங்களாகக்கொண்டு சிங்கநாதங்களைச் செய்தனர்; பருத்த உருவங்களுள்ள பலமரங்களால் அடிக்கவும் அடித்தார்கள். சில வானரர்கள் பெரியபயத்தைவிட்டு நகங்களால் துன்பமடையச்செய்தார்கள். அந்தவானரர்கள் யுத்தமார்க்கங்களால் பலவாறு போர்புரி

கின்றவர்களாகிப் பயங்கரமான பலவித ஆயுதங்களால் ராக்ஷஸேந்திரனை கும்பகர்ணனை அடித்தார்கள். அடிக்கப்படுகின்ற அந்தக் கும்பகர்ணன், சிரித்துக்கொண்டு, பலன் சண்டப்பலன் வஜ்ரபாகு வென்கிற வானரர்களைத் தின்றான். ராக்ஷஸனை கும்பகர்ணனுடைய அப்படிப்பட்ட துன்பத்தை உண்டுபண்ணுகிற செய்கையைக்கண்டு பயந்தவர்களான தாரன் முதலிய வானரர்கள் அப்பொழுது பெருங்கூச்சலிட்டார்கள். ஸுக்ரீவன் உரக்கக் கூச்சலிடுகின்ற வானரசேனையிலுள்ள ஸைனிகருடைய சப்தத்தைக் கேட்டு, பயமில்லாதவனுக்கக் கும்பகர்ணனை எதிர்த்தோடினான். பிறகு, உதாரமானமனமுள்ள வானரஸ்ரேஷ்டன் வேகத்தோடு கும்பகர்ணனை எதிர்த்துப் பலத்துடன் அவன்தலையில் மரத்தால் அடித்தான். மகாத்மாவும் மகாவேகமுள்ளவனுமான அந்த ஸுக்ரீவன் கும்பகர்ணனுடைய தலையில் அடித்து மரத்தைச் சின்னபின்னமாகச் செய்தானேயல்லாமல் கும்பகர்ணனைத் துன்பமடையச் செய்தானில்லை. பிறகு, அந்த ராக்ஷஸன், மரத்தின் அடியினால் தாக்கம்தெளிந்து சிங்கநாதஞ்செய்து இருகைகளாலும் வலிந்து ஸுக்ரீவனைத் தூக்கிக்கொண்டுபோனான். ராக்ஷஸனை கும்பகர்ணனால் ஸுக்ரீவன் கொண்டுபோகப்படுவதைக்கண்டு வீரனை லக்ஷ்மணன் மித்திரர்களை ஆனந்தமடையச் செய்கின்றவனுக ராக்ஷஸனை எதிர்த்தான். பகைவீரர்களைக் கொல்பவனான அந்த லக்ஷ்மணன் எதிர்த்துவந்து மகாவேகமுள்ளதும் பொன்மயமானதுங்கமுள்ளதுமான பெரிய அம்பைக் கும்பகர்ணன்மீது பிரயோகித்தான். அந்தப் பாணமானது அவனுடைய கவசத்தையும் தேகத்தையும் பிளந்து ரக்தத்தால் பூசப்பட்டதாகிப் பூமியைப் பிளந்துகொண்டு சென்றது. அப்படி, மார்பு பிளக்கப்பட்ட கும்பகர்ணன் வானராதிபதியை விட்டுவிட்டு மிக்க வேகத்தை அடைந்து லக்ஷ்மணனை, 'நில், நில்' என்று சொன்னான். சிறந்த வில்லாளியும் கல்லை ஆயுதமாகக்கொண்டவனுமான கும்பகர்ணன் பெரியகல்லை ஓங்கிக்கொண்டு லக்ஷ்மணனை எதிர்த்தோடினான். லக்ஷ்மணன் வேகமாகத் தன்னை எதிர்த்துவருகின்ற அவனுடைய மேலேதூக்கப்பட்ட இருகைகளையும் மூன்றுகூர்மையான இரண்டு க்ஷுரப்ரங்களால் வெட்டினான். அவன் நான்கு கைகளுள்ளவனானான். கற்களை ஆயுதங்களாகக்கொண்ட அவனுடைய அந்த எல்லாப்புஜங்களையும் லக்ஷ்மணன் அஸ்திரலாகவத்தைக் காண்பித்துக்கொண்டு க்ஷுரங்களால் அறுத்தான். அவன் பருத்த

சரீரமுள்ளவனும் பலகால்களும் தலைகளும் கைகளுமுள்ளவனும் ஆனான். லக்ஷ்மணன் மலைகளின்குகியலுக்கொப்பான அந்தக் கும்பகர்ணனை ப்ரம்மாஸ்திரத்தினால் பிளந்தான். மகாவீர்ய முள்ளவனான அந்தக்கும்பகர்ணன், யுத்தத்தில் திவ்யாஸ்திரத்தால் அடிக்கப்பட்டு, துளித்திருந்து பேரிடிகளாற்பால் எரிக்கப்பட்ட மரம்போலக் கீழேவிழுந்தான்.

உயிர்போய்க் கீழேவிழுந்திருக்கின்றவனும் வ்ருத்தனுக்கொப் பானவனும் பலசாலியுமான அந்தக்கும்பகர்ணனைக்கண்டு ராக்ஷஸர்கள் பயத்தால் ஓடினார்கள். அவ்விதம் ஓடுகின்ற அந்தயுத்த வீரர்களைப்பார்த்து மிக்ககோபங்கொண்டவர்களும் தூஷணனுடைய தம்பிமார்களுமான அந்த்வஜ்ரமேவகனும் ப்ரமாதியும் அவர் களை நிலைத்துநிற்கச்செய்து, பிறகு, லக்ஷ்மணனை எதிர்த்துச் சென் றார்கள். லக்ஷ்மணன், எதிர்த்துவருகின்றவர்களும் மிகுந்த கோப முள்ளவர்களுடான அவ்விருவரையும் உரக்கக்கர்ஜித்துப் பாணங் களால் எதிர்த்தடித்தான். குந்தீநந்தன! பிறகு, தூஷணனுடைய தம்பிமார்களிருவருக்கும் புத்திபூர்வனை லக்ஷ்மணனுக்கும் மிக நெருங்கியதும் மயிர்க்கூச்சலை உண்டுபண்ணுகிறதுமான யுத்தம் நேர்ந்தது. அந்தலக்ஷ்மணன் பெரிய அம்புமழையை ராக்ஷஸர்க ளின்மீதுபொழிந்தான். அவ்விருவீரர்களும் மிக்கநோபங்கொண்டு அந்தலக்ஷ்மணன்மீதும் சரமாரியைப் பொழிந்தார்கள். வஜ்ர மேவகன் ப்ரமாதி இருவருக்கும் மிக்கபுஜபலமுள்ள லக்ஷ்மண னுக்குப் மிக்கபயங்கரமானயுத்தமானது ஒருமுகூர்த்தகாலம் இவ்வாறு நடந்தது. பிறகு, வாயுபுத்ரனான ஹனுமான் மலை யின்சிகரத்தை எடுத்துக்கொண்டு எதிர்த்து விரைவாகவந்து வஜ்ரமேவகனென்கிற ராக்ஷஸனுடைய உயிரை வாங்கினான். மகா பலசாலியான நிலனென்கிறவானரனும் தூஷணனுடைய தம்பி யான ப்ரமாதியைக்குறித்து எதிர்த்து ஓடிவந்து பெரிய கல்லினால் அவனைப் பொடியாக்கினான். பிறகு, பரஸ்பரம் எதிர்த்தேபோடிவருகின்ற ராமராவண னென்யங்களுக்குத் தீமையை விளைவிக்கிற யுத்தமானது மீண்டும் நடக்கத் தொடங்கியது. வனத் தில்வளர்ந்த வானரர்கள் ராக்ஷஸர்களை நூற்றுவர் நூற்றுவராக் கொன்றனர். ராக்ஷஸர்களும் வானரர்களைக் கொன்றார்கள். அந்த யுத்தத்தில் பெரும்பாலும் ராக்ஷஸர்களே கொல்லப்பட் டார்கள்; வானரர்களோ கொல்லப்படவில்லை.

இருநூற்றெண்பத்தொன்பதாவது அத்யாயம்.

ராமோபாக்யான பர்வம். (தொடர்ச்சி.)

(லக்ஷ்மணனுக்கும் இந்திரஜித்துக்கும் யுத்தமும், அங்கதனுல் இந்திரஜித்தினுடைய ரதமானது நொறுக்கப்பட்டவுடன் மாயையினுல் அந்த இந்திரஜித்தானவன் மறையவே ராமரும் அந்த இடம் வந்ததும்.)

பிறகு, யுத்தத்தில் தூஷணவீரர்களோடுகூடின கும்பகர்ணனும் மகாவில்லாளியான ப்ரஹஸ்தனும் அதிக சௌர்யமுள்ள தூம்ராக்ஷனும் கொல்லப்பட்டதைக்கேட்டு, ராவணன், வீரனும் புத்திரனுமான இந்திரஜித்தைப்பார்த்து, 'பகைவர்களை நாசம்செய்பவனே! ராமனையும் லக்ஷ்மணனையும் ஸுக்ரீவனையும் கொல்வாயாக. ஸத்புத்திர! வஜ்ரத்தைத்தரித்தவனும் இந்திராணியின் கணவனுமான இந்திரனை யுத்தத்தில்ஜயித்து உன்னுல் பிரகாசிக்கிற கீர்த்தியானது அடையப்பட்டிருக்கிறதன்றே? பகைவர்களைக் கொல்பவனே! சஸ்திரங்களைத்தரித்தவர்களுள் சிறந்தவனே! மறைந்துகொண்டோ வெளிப்படையாக இருந்துகொண்டோ வரங் கொடுக்கப்பெற்ற திவ்யமான அம்புகளால் என்னுடைய பகைவர்களைக் கொல்வாயாக. குற்றமற்றவனே! ராமலக்ஷ்மணரும் ஸுக்ரீவனுமாகிய இவர்கள் உன்னுடைய அம்புகள் காக்குவதைத் தாங்கச் சக்தியுள்ளவர்களாகார். அப்படி இருக்க, அவர்களைப் பின்தொடர்ந்து வந்திருப்பவர்கள் சக்தியற்றவர்களென்பதில் ஐயமென்ன? தோஷமற்றவனே! தோள்வலியமைந்தவனே! ப்ரஹஸ்தனுலும் கும்பகர்ணனுலும் யுத்தத்தில் காணுக்குச்செய்யப்படாத பூஜையை நீ செய்வாயாக. புத்திர! நீ முற்காலத்தில் இந்திரனைஜயித்து என்னை மகிழ்வித்ததுபோல இப்பொழுது கூர்மையுள்ளபாணங்களால் சேனைவீரர்களுடன்கூடின பகைவர்களைக்கொன்று என்னை மகிழ்விப்பாயாக' என்று சொன்னன்.

அரசனே! இவ்வண்ணமுரைக்கப்பட்ட அந்த இந்திரஜித்தானவன், 'அப்படியே' என்று சொல்லிவிட்டுக் கவசம்பூண்டு தேரின்மீதேறி யுத்தத்திற்காக விரைந்துசென்றான். பிறகு, ராக்ஷஸஸ்ரேஷ்டன் தன்பெயரைக் கேட்கும்படிசெய்து யுத்தத்திற்காக நல்ல லக்ஷணங்களுள்ள லக்ஷ்மணனை அழைத்தான். லக்ஷ்மணன், அப்பொழுதுகூடியவில்லை எடுத்து நாணேற்றையினுல் பகைவரைப் பயமடையும்படிசெய்துகொண்டு, சிங்கமானது அற்ப

மிருகத்தை எதிர்த்துப்போவதுபோல, அந்த இந்திரஜித்தை எதிர்த்து விரைவாகச் சென்றான். ஜயத்தில்விருப்பமுள்ளவர் களும் திவ்யாஸ்திரங்களை நன்றாக அறிந்தவர்களும் ஒருவரோ டொருவர் போட்டிபோடுகிறவர்களுமான அவர்களுக்கு அப் பொழுது மிகப்பெரும்போர் நேர்ந்தது. பலசாலிகளுள் சிறந்த னை இந்திரஜித்தோ, இந்த லக்ஷ்மணனைப் பாணங்களால் மீறமுடி யாமற்போனபொழுது மிக்கமுயற்சியைச் செய்தான்; பிறகு, மகாவேகமுள்ள தோமரங்களால் இவனை அடித்தான். அந்த லக்ஷ்மணன், வருகின்ற அந்தத்தோமரங்களைக் கூர்மையுள்ள பாணங்களால் துண்டாடினான். கூரியபாணங்களால் அறுக்கப் பட்ட இந்திரஜித்தினுடைய அந்தத்தோமரங்கள் யுத்தத்தில் நாறு நாறுகத் துணிக்கப்பட்டுப் பூமியில் விழுந்தன. நல்லகாந்தியுள்ள வனும் வாலியின் புத்திரனுமான அங்கதன், மரத்தை ஓங்கிக் கொண்டு மிக்கவேகத்துடன் அந்த இந்திரஜித்தை எதிர்த்தோடி வந்து, அவன்தலையில் அடித்தான். பரபரப்பில்லாதவனும் சிறந்த வீரனுமான இந்திரஜித்தானவன் பிராஸத்தால் அவனுடைய மார்பில் அடிக்க விரும்பினான். அவனுடைய அந்தப் பிராஸத்தை லக்ஷ்மணன் துண்டாடினான். ராவணகுமாரனை இந்திரஜித்தான வன், பக்கத்தில்வந்திருக்கிறவனும் வீரனும் வானரஶ்ரேஷ்டனு மான அந்த அங்கதனை இடவிலாவில் கதையினால் அடித்தான். பலசாலியான அங்கவாலிபுத்திரன், அந்த அடியைப் பொருட்டாக எண்ணுமல், கோபத்தினால் அப்படியே அந்த இந்திரஜித்தின்மீது ஆச்சாமரத்தின் அடிக்கட்டையை எறிந்தான். பார்த்த! இந்திர ஜித்தின் வதத்தை உத்தேசித்து அங்கதனால் கோபத்துடன் எறியப்பட்ட அந்தமரமானது, குதிரைகளுடனும் ஸாரதிகளுட னும்கூடிய இந்திரஜித்தினுடைய ரதத்தை நாசம்செய்தது. அர சனே! பிறகு, ஸாரதியை இழந்தவனான ராவணகுமாரன் குதிரை கள் கொல்லப்பட்ட ரதத்தினின்று துள்ளிக்குதித்து மாய யினால் அவ்விடத்திலேயே மறைந்தான். அதனைமானைகளுள்ள அந்தராக்ஷஸன் மறைந்ததை அறிந்து ராமர் அந்த இடத்திற்கு வந்து அந்தப்படையை எல்லாப்பக்கங்களிலும் பாதுகாத்தார். அந்த இந்திரஜித்தானவன், பிறகு, வரன்கொடுக்கப்பெற்ற பாணங் களால் அப்பொழுது ராமரையும் மகாபலசாலியான லக்ஷ்மணனை யும் எல்லா அங்கங்களிலும் குறிவைத்து அடித்தான். சூரர்களான ராமலக்ஷ்மணர்களிருவரும், அப்பொழுது மாயையினால் மறைந்த

வனும் கண்ணுக்குப் புலப்படாமலிருக்கிறவனுமான அந்த இந்திரஜித்துடன் பாணங்களால் போர்புரிந்தார்கள். அவன் புருஷச்ரேஷ்டர்களான அவர்களுடைய எல்லா அங்கங்களிலும் கோபத்தால் நாற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் அம்புகளை மீண்டும் பிரயோகித்தான். கண்ணுக்குப்புலப்படாதவனும் ஒழிவற்று அம்புகளைத் தொடுப்பவனுமான அந்த இந்திரஜித்தைத் தேடுகின்றவர்களாக வானரர்கள் பெரியகற்களை எடுத்துக்கொண்டு ஆகாயத்தில் பிரவேசித்தார்கள். ராக்ஷஸனான அந்த இந்திரஜித்தானவன், கண்ணுக்குப்புலப்படாமலிருந்துகொண்டு, அந்தவானரர்களையும் ராமலக்ஷ்மணர்களையும் அம்புகளால் அடித்தான். அந்த இந்திரஜித்தானவன், மாயையினால் மறைந்துகொண்டு, (ராமலக்ஷ்மணர்களை) அதிகமாக அடித்தான். அம்புகளாலடிக்கப்பட்டவர்களும் வீரர்களும் பிராதாக்களுமான அந்த ராமலக்ஷ்மணர்கள் இருவரும் ஆகாயத்தினின்று ஸூர்யசந்திரர்கள் விழுவதுபோலப் பூமியில் விழுந்தார்கள்.

இருநூற்றுத்தொண்ணூற்றுருவது அத்யாயம்.

ராமோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(விபீஷணன் ராமலக்ஷ்மணர்களுடைய மயக்கத்தைப்போக்கியதும், ஸுக்ரீவன் அவர்களுடையதேகங்களில் தைத்திருக்கிற பாணங்களை மறைளஷதியினால் எடுத்ததும், துபோதாதன் கொண்டுவந்த ஜலத்தால் ராமர்முதலியவர்கள் கண்களை அலம்பிக்கொண்டதும், அவர்களுக்கு இந்திரியங்களுக்குப் புலப்படாத்போருள்களைக் காண்கிற சக்தி உண்டானதும், லக்ஷ்மணன் இந்திரஜித்தைக் கொன்றதும், ஸீதையைக் கொல்ல முயன்ற ராவணனை அவிந்தியன் திருப்பியதும்.)

. பிராதாக்களான் அந்த ராமலக்ஷ்மணர்களிருவரும் கீழே விழுந்ததைக்கண்டு, ராவணகுமாரன், வரம்பெற்ற அம்புகளால் அப்பொழுது மீண்டும் கட்டினான். யுத்தரங்கத்தில் இந்திரஜித்தினால் அம்புவலையினால் கட்டப்பட்டிருக்கிற அந்த வீரர்களான புருஷச்ரேஷ்டர்களிருவரும் கூட்டிலடைக்கப்பட்ட கிளிகள்போல விளங்கினர்கள். பூமியில் விழுந்திருப்பவர்களும் எல்லா அங்கங்களிலும்

பாணங்களால் நிறைக்கப்பட்டவர்களுமான ராமலக்ஷ்மணர்களைப் பார்த்து வானரராஜனை • ஸுக்ரீவன் ஸுஷேணன், மைந்தன், துவிவிதன், குமுதன், அங்கதன், ஹனுமான், நீலன், தாரன், கவன் ஆகிய வானரர்களோடுகூட அவர்களைச்சூழ்ந்துகொண்டு தகுந்த உபசாரம்செய்தான். பிறகு, (வேறோரிடத்தில்) வெற்றிபெற்றுவந்த விபீஷணன், அந்த இடத்தை அடைந்து, மிக்க மயக்கமடைவிக்கப் பட்டிருக்கிற அந்த வீரர்களைப் பிரஜ்ஞாஸ்திரத்தினல் நினைவை அடையும்படி செய்தான். ஸுக்ரீவன், திவ்யமந்திரத்தால் அபி மந்திரணம் செய்யப்பட்ட விசல்யை என்கிற மஹௌஷதியினல் இவர்களை ஒருக்ஷணநேரத்தில் (உடம்பில்) பாணங்களில்லாதவர் களாகவும் செய்தான். அந்தப்புருஷச்ரேஷ்டர்கள் பிரஜ்ஞையை அடைந்தவர்களாகவும் சல்யங்களற்றவர்களாகவும் எழுந்திருந் தார்கள். இந்த மகாரதர்களிருவரும் கோடிப்பொழுதில் கவ தீர்ந்தவர்களுமானார்கள். பார்த்த! பிறகு, விபீஷணன், இக்ஷ் வாகுகுலத்தனரான ராமரைத் துன்பம் நீங்கினவராகக்கண்டு, அஞ்சலிபந்தம்செய்துகொண்டு, 'பகைவரை அடக்குகிறவரே! குபேரனுடைய கட்டளையால் இந்தயக்ஷன் தீர்த்தத்தைஎடுத்துக் கொண்டு கைலாஸத்திலிருந்து உம்மிடம் வந்திருக்கிறன். பகை வர்களைத்தவிக்கச் செய்பவரே! மகாராஜரே! மறைந்திருக்கின்ற பிராணிகளைக் காண்பதற்காகக் குபேரன் உமக்கு இந்தத்தீர்த்த தைக் கொடுக்கிறன். இந்தத்தீர்த்தத்தால் கண்களை அலம்பிக் கொண்டால் தேவரீர் மறைந்திருக்கிற எல்லாப்பிராணிகளையும் பார்ப்பீர். எவனுக்கு இந்தத்தீர்த்தத்தைக் கொடுப்பீரோ அவ னும் பார்ப்பான்' என்று சொன்னன். ராமர், 'அப்படியே ஆகட்டும்' என்று மந்திரங்களால் குணமுண்டுபண்ணப்பட்ட அந்தத்தீர்த்தத்தை வாங்கிக் கண்களை அலம்பிக்கொண்டார். பெரியபுனமுள்ள லக்ஷ்மணனும் கண்களை அலம்பிக்கொண்டான். ஸுக்ரீவனும் ஜாம்பவானும் ஹனுமானும் அங்கதனும் மைந்த னும் த்விவிதனும் நீலனும் மற்றும் பெரும்பாலான வானர ச்ரேஷ்டர்களும் கண்களை அலம்பிக்கொண்டார்கள். விபீஷணர் சொல்லியது சொல்லியபடியே நேர்ந்தது. யுதிஷ்டிர! அவர்களு டைய கண்கள் க்ஷணநேரத்தில் ஸாதாரணக்கண்களால் பார்க்கக் கூடாதவிஷயங்களைப் பார்க்கச் சக்தியுள்ளவைகளாயின.

அப்பொழுது வெற்றிபெற்ற இந்திரஜித்தானவன் தன்னு டைய செய்கையைப் பிதாவுக்குத்தெரிவித்து விரைவுடன் யுத்த

முனைக்கு மீண்டும் வந்தான். அதிககோபமுள்ளவனும் மீண்டுமே யுத்தம்செய்யவிரும்பி வந்திருப்பவனுமான இந்திரஜித்தைக் குறித்து லக்ஷ்மணன் விபீஷணனுடைய அபிப்ராயத்தில் நிலை பெற்று எதிர்த்துச்சென்றான். பிறகு, மிக்ககோபம்கொண்ட லக்ஷ்மணன், விபீஷணனால் ஸங்கேதம் செய்யப்பட்டு ஜயத்தால் பிரகாசிப்பவனுன அந்த இந்திரஜித்தை நித்யக்கடன்களைச் செய்துமுடிப்பதற்குள்ளாகவே கொல்ல எண்ணம்கொண்டு பாணங்களால் அடித்தான். அப்பொழுது, ஒருவரைஒருவர் ஜயிப்பதில் விருப்பமுள்ளவர்களான அவ்விருவருக்கும் இந்திரனுக்கும் பிரஹ்லாதனுக்கும் யுத்தம் நடந்ததுபோல மிகவும் விசித்திரமும் ஆச்சர்யகரமுமான யுத்தம் நடந்தது. இந்திரஜித், லக்ஷ்மணனை மர்மஸ்தானங்களைப் பிளக்கின்றனவைகளும் கூர்மையுள்ளவைகளுமான பாணங்களால் அடித்தான். லக்ஷ்மணனும், நெருப்புப்போன்ற பாணங்களால் இந்திரஜித்தை அடித்தான். லக்ஷ்மணனுடைய பாணங்கள் தாக்குவதனால் கோபம்மூண்ட இந்திரஜித்தானவன் லக்ஷ்மணனைக்குறிவைத்து ஸர்ப்பங்கள்போன்ற எட்டுப்பாணங்களைப் பிரயோகித்தான். மித்திரர்களை ஆனந்தமடையச் செய்கின்ற ஸுமித்ராபுத்ரனை லக்ஷ்மணன் அந்த இந்திரஜித்தினுடைய பாணங்களை நெருப்புப்போலத்தாக்குகின்றவைகளும் இறகு கட்டினவைகளுமான மூன்று நாராசங்களால் தடுத்தான். லக்ஷ்மணனும் ராக்ஷஸன்மீது மீண்டும் எட்டுப்பாணங்களைப் பிரயோகித்தான். வீரனான லக்ஷ்மணன் இந்திரஜித்தை அப்படி அடித்தான். அதைச்சொல்லுகின்ற என்னிடத்தினின்று கேட்பாயாக. ஒரு பாணத்தால் வில்லுடன்கூடின அவனுடைய ஒரு கையைத் தேகத்திலிருந்து கீழே விழச்செய்தான்; இரண்டாவது பாணத்தால் மற்றொருகையையும் கீழேவிழும்படி செய்தான்; தீட்டப்பட்டதுனியுள்ளதும் பிரகாசிப்பதுமான, மூன்றுவது பாணத்தால் நல்லமூக்குள்ளதும் ஜ்வலிக்கின்ற குண்டலங்களணிந்ததுமான அவனுடைய தலையையும் கொய்தான். தோள்பூட்டுக்கள் அறுக்கப்பட்டவனும் தலைமில்லாமுண்டமாகக் காணப்படுகின்றவனுமான அவன், வேர் அறுக்கப்பட்ட மரம்போலப் பூமியில் விழுந்தான். பலசாலிகளுள் சிறந்தவனைலக்ஷ்மணன் அஸ்திரங்களால் அவனைக்கொன்று ஸாரதியையும் கொன்றான்.

அப்பொழுது, குதிரைகள் அந்தரத்தை லங்கையினுள் இழுத்துச்சென்றன. ராவணன், புத்திரனல்விடுபட்ட அந்தரத்தைப்

பார்த்தான். அந்தராவணன், புத்திரன்மாண்டதைக்கேட்டுப் பயத்தினால் மனங்கலங்கினவனாகவும் சோகத்தாலும் மோகத்தாலும் பீடிக்கப்பட்டவனாகவும் வைதேஹியைக்கொல்வதற்கு முயன்றான். அசோகவனத்திலிருப்பவளும் ராமனைப்பார்ப்பதில் மிகுந்த ஆவலுள்ளவளுமான அந்த ஸீதையைக்குறித்துக் கெட்ட எண்ணமுள்ளராவணன் கத்தியை எடுத்துக்கொண்டு வேகத்தோடு ஓடினான். கெட்டபுத்தியை உடையவனான அவனுடைய அந்தப்பாப நிச்சயத்தைப்பார்த்து அவிந்தியன், மிக்கமோகமுள்ள அந்தராவணனைத் தணியச்செய்தகாரணத்தைக் கேள். அவிந்தியன், 'ராவண! பிரகாசிக்கின்றமகாராஜ்யத்திலிருக்கிற நீ ஸ்த்ரீயைக் கொல்லுவது தகாது. இவள் சிறையில்வைக்கப்பட்டு உன்வசத்திலிருத்தலால் கொல்லப்பட்டவளே. தேகத்தைப்பிளந்தகனல் இவள் கொல்லப்பட்டவளாகமாட்டாளென்பது என்னுடைய எண்ணம். இவளுடையபர்த்தாவையே கொல்வாயாக. அவன் கொல்லப்பட்டால் இவள் கொல்லப்பட்டவளாவாள். மகிமை வாய்ந்த இந்திரன்கூட விக்கிரமத்தில் உனக்கு ஈடாகான். உன்னால் அடிக்கடி இந்திரனுடன்கூடினதேவர்கள் யுத்தத்தில் பயமுடையும்படி செய்யப்பட்டிருக்கிறார்கள்' என்றான். அவிந்த்யன் கோபங்கொண்ட ராவணனை இப்படிப் பலவானனவாக்கியங்களால் அப்பொழுது தணியச்செய்தான். அவனும் அந்தவசனத்தை ஏற்றுக்கொண்டான். அந்தராவணன் புறப்பட்டுப்போவதில் புத்தியைச்செலுத்தி ஸாதனியைப்பார்த்து, 'என்னுடையரதத்தை ஸஜ்ஜம்செய்' என்று அப்பொழுது கட்டளையிட்டான்.

இருநூற்றித்தொண்ணூற்றேராவதி அத்யாயம்.

ராமோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(ராவணன் இந்திராஜித்தின் வதத்தினால் கோபங்கொண்டு தானே யுத்தத்திற்காக ராமரை எதிர்த்துச்சென்றதும், அப்பொழுது இந்திரன் ராமருக்குத் தன்ரதத்தை அனுப்பியதும், மாயையினால் யுத்தம்செய்கின்ற ராவணனை ராமர் பிரம்மாஸ்திரத்தால் கொன்றதும்.)

பிறகு, ராவணன், ப்ரியபுத்திரன் கொல்லப்படவே, கோபங்கொண்டவனாக ள்வர்ணத்தாலும் ரத்னங்களாலும் அலங்

கரிக்கப்பட்டிருக்கிற ரதத்திலேறிக்கொண்டு புறப்பட்டான். அந்த ராவணன், பயங்கரமானஉருவமுள்ளவர்களும் பற்பல ஆயுதங்களைக் கையில் பிடித்தவர்களுமான ராக்ஷஸர்களால் சூழப்பட்டவனாக வானரயூதபதிகளை நொறுக்கிக்கொண்டு ராமரை எதிர்த்தேதாடிவந்தான். எதிர்த்துவருகின்றவனும் மிக்ககோபமுள்ளவனுமான அந்த ராவ்ணனை மைந்தனும் நீலனும் நளனும் அங்கதனும் ஹனுமானும் ஜாம்பவானும் ஸைன்யங்களோடுகூடியவர்களாகச் சூழ்ந்து கொண்டார்கள். அந்தக்கரடிகளும் சிறந்த வானரர்களும் அந்த ராவணஸைன்யத்தை அவன் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே மரங்களால் அடித்து நாசம்செய்தார்கள். பிறகு, தன்னுடைய ஸைன்யம் பகைவர்களால் கொல்லப்படுவதைப்பார்த்து மாயாவியும் ராக்ஷஸர்களுக்கு அதிபதியுமான ராவணன் மாயையை உண்டுபண்ணினான். பிறகு, அம்புகளையும் சக்திகளையும் ரிஷ்டிகளையும் கையிற்கொண்ட ராக்ஷஸர்கள் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் அவனுடைய தேகத்தினின்று வெளிப்பட்டவர்களாகக் காணப்பட்டார்கள். ராமர் அந்த ராக்ஷஸர்களனைவரையும் திவ்யாஸ்திரத்தால் கொன்றார். பிறகு, அந்த ராக்ஷஸாதிபதியான்னவன் மறுபடியும் மாயையை உண்டுபண்ணினான். பாரத! தசானனன் ராமருடையரூபங்களையும் லக்ஷ்மணனுடையரூபங்களையும் எடுத்துக்கொண்டு ராமரையும் லக்ஷ்மணனையும் எதிர்த்தேதாடிவந்தான். பிறகு, ராமரையும் லக்ஷ்மணனையும் தன்புறத்திக்கிருண்டிருந்த அந்தராக்ஷஸர்கள் அப்பொழுது விற்களையெடுத்துக்கொண்டு ராமரை எதிர்த்துவந்தார்கள். இக்ஷ்வாகுநந்தனனான [1] லக்ஷ்மணன், ராக்ஷஸராஜனுடைய அந்தமாயையைப் பார்த்துப் பரபரப்பில்லாதவனாக ராமரைநோக்கி, 'நம்மைப்போல் உருவமெடுத்துவருகிற இந்தப்பாவிகளான ராக்ஷஸர்களைக் கொல்வீராக' என்று வீரம்பொருந்தியசொல்லைச் சொன்னான். ராமர் தம் உருவம்போன்ற உருவெடுத்திருக்கிற அவர்களையும் மற்ற ராக்ஷஸர்களையும் கொன்றார்.

பிறகு, இந்திரனுடைய ஸாரதியான மாதலியானவன் பச்சைநிறமுள்ள குதிரைகள் பூட்டப்பட்டதும் ஸூர்யன்போல ஜ்வலிக்கின்றதுமான ரதத்தோடு யுத்தத்தில் ராமரை வந்தணுகினான். மாதலி, 'பச்சைக்குதிரைகள் பூட்டப்பட்டதும் ஜயத்தைக்கொடுப்பதுமான இந்திரனுடைய இந்த உத்தம

[1] வேறுபாடம்.

ரதமானது அவனுடைய கட்டளையிலுல் உமக்காக இங்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. காகுத்ஸ்தரே! புருஷஸ்ரேஷ்டரே! இந்திரன் இந்த உத்தம ரதத்திலுல் யுத்தத்தில் தைத்யர்களையும் தானவர்களையும் நூற்றுவர் நூற்றுவராகக் கொன்றான். புருஷஸ்ரேஷ்டரே! ஸாரதியாகிய என்னுல் நடத்தப்பட்டிருக்கிற இந்த ரதத்திலுல் சீக்கிரம் ராவணனைக் கொல்வீராக. காலதாமதம் செய்யாதீர்' என்று சொன்னான். இவ்வாறு சொல்லப்பட்ட ராகவர், மாதலியின் உண்மையான வசனத்தில், 'இது ராக்ஷஸனுடைய மாயை' என்று ஸந்தேகப்பட்டார். அப்பொழுது, விபீஷணன், அவரைக்குறித்து, 'புருஷஸ்ரேஷ்டரே! இது துராத்மாவான ராவணனுடைய மாயையன்று. அதிக காந்தியுள்ளவரே! ஆகையால், இந்த இந்திரரதத்தில் சீக்கிரமாக ஏறும்' என்று சொன்னான். பிறகு, காகுத்ஸ்தர், ஸந்தோஷத்துடன் விபீஷணனைப்பார்த்து, 'அப்படியே' என்று சொல்லி ரதத்தின்மீதேறிக் கோபமுள்ளவராகித் தசக்ரீவனை ரதத்தால் எதிர்த்தார். ராவணன் எதிர்க்கப்பட்டவுடன், பிராணிகள் ஆ! ஆ! என்னும் ஒலியைச் செய்தன. அப்படியே ஆகாயத்தில் படகவாத்தியகோஷங்களுடன்கூடினவைகளும் தேவலோகத்தவைகளுமான சிங்கநாதங்களும் தோன்றின. ராவணனுக்கும் ராஜகுமாரரான ராமருக்கும் அப்படிப் பெரும்போர் நடந்தது. அந்தயுத்தமானது வேறு ஒப்புமையில்லாததாக அவ்விருவர்களுக்குமே அப்படி நடந்தது. அந்த ராக்ஷஸன் மிக்க கோரமானதும் இந்திரனுடைய வஜ்ராயுதம்போலப் பிரகாசிப்பதும் [1] பிரம்மதண்டம்போன்றதும் ஓங்கப்பட்டதுமான சூலத்தை ராமர்மீது எறிந்தான். ராமர் அந்தச்சூலத்தைக் கூர்மையான பாணங்களால் விரைவாக வெட்டினர். செய்தற்கரிய அந்தச்செய்கையைக்கண்டு ராவணனைப் பயம் வந்தணுகியது. பிறகு, அவன் கோபங்கொண்டு ராமர்மீது ஆயிரமாயிரமாகவும் பதினாயிரம் பதினாயிரமாகவும் கூர்மையான பாணங்களையும் பற்பல சஸ்திரங்களையும் விரைவாகப் பிரயோகித்தான். பிறகு, புசுண்டிகளையும் சூலங்களையும் உலக்கைகளையும் கோடாலிகளையும் சக்திகளையும் பலவித வடிவமுள்ள சதக்ன்னிகளையும் கூர்மையுள்ள கஷ்டர்ங்களையும் பிரயோகித்தான். ராக்ஷஸனுடைய தசக்ரீவனுடைய பற்பல விதமான அந்த மாயையைக்கண்டு எல்லா வானரர்களும் பயத்தினுல்

[1] பிராம்மணசாபம்; ஸபாபர்வம் 25-ம் பக்கம், உத்தியோகபர்வம் 217-ம் பக்கம் குறிப்புக்களிற் காண்க.

எல்லாத்திக்குக்களிலும் ஓடினார்கள். பிறகு, ராகவர் கல்ல இறகுகளுள்ளதும் கூரியவாயுள்ளதும் பொற்புங்கமுள்ளதும் உத்தமமுமான பாணத்தை அம்புத்தூணியிலிருந்து எடுத்து ப்ரம் மாஸ்திரமந்திரத்தோடு சேர்த்தார். ராமரால் பிரம்மாஸ்திரத் தால் அபிமந்திரணம் செய்யப்பட்ட அந்தப் பாணத்தைப் [1] பார்த்து இந்திரனே முதன்மையாகக்கொண்ட தேவர்களும் கந்தர்வர் களும் ஸந்தோஷித்தார்கள். தேவர்களும் அஸுரர்களும் கின்ன ரர்களும் பிரம்மாஸ்திரப்ரயோகத்தால் சத்துருவான ராக்ஷஸ னுடைய ஆயுளைச் சிறிதே மிகுதியுள்ளதென்று எண்ணி னர்கள். பிறகு, ராமர் ஒப்பற்ற தேஜஸுள்ளதும் ராவண னுக்கு மரணத்தை உண்டுபண்ணுகிறதும் கோரமானதும் பிரயோகிக்கப்பட்ட பிரம்மதண்டம்போன்றதுமான அப்படிப் பட்ட பாணத்தைப் பிரயோகித்தார். பாரத! ராமரால் அதிக மாக இழுத்துவிடப்பட்ட அந்தப் பாணத்தினால் ரதத்தோடும் குதிரைகளோடும் ஸாரதியோடும்கூடின ராவணன் பெரிய ஜ்வாலையுடன்கூடின அக்னியினால் எல்லாப்பக்கங்களிலும் பற்றப் பட்டு நன்றாக எரிந்தான். பிறகு, காரியத்தை எளிதில் செய்கிற ராமரால் ராவணன் கொல்லப்பட்டதைக் கண்டு, கந்தர்வர்களுட னும் சாரணர்களுடனும்கூடின தேவர்கள் சந்தோஷமுள்ளவர் களானார்கள். மகாபாக்கியசாலியான அந்த ராவணனை ஐந்து பூதங்களும் விட்டன. அந்த ராவணன் பிரம்மாஸ்திர தேஜஸினால் எல்லா உலகங்களினின்றும் தழுவிவிழும்படி செய்யப்பட்டான். அவனுடைய சரீர தாதுக்களும் மாம்ஸமும் ரக்தமும் பிரம்மாஸ் திரத்தினால் எரிக்கப்பட்டு நாசமடைந்தன; சாம்பல்கூடக் காணப் படவில்லை.

[1] வெட்டித்தலால் ஒரு சொல் விடப்பட்டது.

இருநூற்றுத்தொண்ணூற்றிரண்டாவது அத்யாயம்.

ரா மோ பாக்யான பர்வ ம். (தொடர்ச்சி.)

(ராவணன் கொல்லப்பட்டபிறகு அவிந்த்யன் ஸீதையை ராமரிடம் அழைத்துவந்ததும், ஸீதை ராமர் தன்னை ஏற்றுக்கொள்ளாமையால் பூமியில் விழுந்ததும், ஆகாயத்தில் பிரம்மா முதலியவர்கள் ஸீதையினுடைய நன்னடையைக்கூறி அவளை ஏற்றுக்கொள்ளும்படி ராமருக்குச் சொல்லியதும், ராமர், ஸீதை லக்ஷ்மணன் முதலியவர்களோடு அயோத்திக்குப் புறப்பட்டதும், பரதனிடம் ஹனுமானைத் தூதனுப்பி நந்திக்கிராமம் வந்து பரதன் முதலியவர்களோடு அயோத்திக்கு வந்ததும், வஸிஷ்டர் முதலியவர்கள் ஸீதையோடு ராமருக்கு முடிசூட்டியதும், ராமர், ஸுக்ரீவன் விபீஷணன் முதலியவர்களுக்குத் தக்க வெதுமதியளித்துத் திருப்பி அனுப்பிவிட்டு அயோத்தியை ஆண்டதும்.)

அந்த ராமர், அல்பனும் தேவசத்துருவும் ராக்ஷஸர்களுக்கு அரசனுமான ராவணனைக்கொன்று, நண்பர்களோடும் லக்ஷ்மணனோடுங்கூட அதிக ஸந்தோஷத்தை அடைந்தவரானர். பிறகு, தசக்ரீவன் கொல்லப்பட்டமை, ரிஷிகளை முன்னிட்டவர், களான தேவர்கள் ஜயத்தோடுகூடின ஆசீர்வசனங்களால் மிக்க தோள்வலியமைந்த அந்த ராமரை அர்ச்சித்தார்கள். தேவ லோகத்திலுள்ள எல்லாத்தேவர்களும் கந்தர்வர்களும் புஷ்ப வர்ஷங்களாலும் வாக்குக்களாலும் தாமரைமலர்போன்ற கண்க ளுள்ள ராமரைத் துதித்தார்கள். அவர்கள், யுத்தத்தில் ராம ரைப் பூஜித்து வந்தபடியே திரும்பிச் சென்றார்கள். (விரதத்தி னின்று) நழுவாதவரான! அந்த ஆகாசமானது மஹோத்ஸவ முள்ளதுபோல ஆயிற்று. பிறகு, மிக்க கீர்த்தியுள்ளவரும் பிரபு வும் பகைவர்களுடைய பட்டணங்களை ஜயிப்பவருமான ராமர் தசக்ரீவனைக் கொன்று லங்கையை விபீஷணனுக்குக் கொடுத்தார். பிறகு, நல்ல புத்திமானான அவிந்த்யனென்கிற வயதுமுதிர்ந்த மந்திரியானவன் விபீஷணனுக்குப் பின்னே செல்லுகிற ஸீதையை முன்னிட்டுக்கொண்டு வெளியில் புறப்பட்டான். மஹாத்மாவும் தீனத்தன்மையை அடைந்திருப்பவருமான ரகு வீரரைப் பார்த்து, 'மஹாத்மாவே! நல்லொழுக்கமுள்ளவரும்

பட்டமஹிஷியுமான ஜானகியைப் பெற்றுக்கொள்ளும்' என்று சொன்னான். ராமர், இந்தவசனத்தைக்ஃ கேட்டு, அந்த உத்தம ரதத்திலிருந்து இறங்கி, கண்ணீரால் மூடப்பட்டிருக்கிற ஸீதை யைக் கண்டார். அழகிய எல்லா அங்கங்களுமுள்ளவளும் பல்லக்கிலிருப்பவளும் சோகத்தால் மெலிந்திருப்பவளும் எல்லா அங்கங்களும் அழுக்கினால் அதிகமாக வியாபிக்கப்பட்டிருப் பவளும் சடையுள்ளவளும் கருமையான ஆடையுள்ளவளு மான அந்த வைதேஹியைப்பார்த்து ராமர் ராவணனுடைய ஸ்பர்சத்தால் ஸந்தேகமுள்ளவராக இங்கிதத்தை முழுமை யையும் காண்பித்து, அவளுக்கு ப்ரியத்தையும் தெரிவித்து, 'வைதேஹி! போ. நீ விடுபட்டாய். எது செய்யத்தக்கதோ அது என்னால் செய்யப்பட்டது. கல்யாணி! நீ என்னைப் பதியாகப் பெற்று ராக்ஷஸன் வீட்டில் ஜனனை அடையவேண்டாம் என்கிற எண்ணத்தால் அந்த ராக்ஷஸன் என்னால் கொல்லப்பட்டான். தர்மநிச்சயத்தை அறிந்தவனான என்போன்றவன் எவ்வாறு ஒரு ஸமயத்தில் அயலான் கைவசப்பட்டிருந்த பெண்ணை ஒரு முஹூர்த்த காலமாவது ஏற்றுக்கொள்வான்? மைதிலி! நன்னடையுள்ளவளாக இருந்தாலும், அல்லது, கெட்ட நடையுள்ளவளாக இருந்தாலும், நாயினால் நக்கப்பட்ட ஹவிஸைப்போலிருக்கிற உன்னுடன் நான் இப்பொழுது கூடிவாழ்வதற்கு விரும்பவில்லை' என்று சொன்னார். பிறகு, பாலையான அந்த ஸீதையானவள் க்ரூரமான அந்த ராமவசனத்தைக்கேட்டு மனவருத்தமுற்று, வெட்டப்பட்ட வாழைபோல, உடனே கீழேவிழுந்தாள். இவளுக்கு முன்பு ஸந் தோஷத்தாலுண்டாயிருந்த முகத்தின் காந்தியானது, மூச்சுக்காற்றி னால் கண்ணாடியிலிருக்கும் காந்தி நாசமடைவதுபோல, ஒருக்ஷணத் தில் நாசமடைந்தது. பிறகு, அந்த வானரர்கள் எல்லாரும் அந்த ராமவசனத்தைக்கேட்டு, லக்ஷ்மணனோடுகூட உயிர்துறந்தவர்கள் போல அசைவற்றவர்களானார்கள்.

பிறகு, பரிசுத்தமான சித்தமுள்ளவரும் நான்கு முகங்க ளுள்ளவரும் தாமரைமலரில் பிறந்தவரும் உலகங்களைப் படைப் பவருமான பிரம்மதேவர் விமானத்தோடுவந்து ராகவருக்குக் காட்சியளித்தார். இந்திரனும், அக்னியும், வாயுவும், யமனும், வருணனும் யக்ஷர்களுக்கு அதிபதியும் ஐச்வர்யமுள்ளவனுமான குபேரனும், தோஷமில்லாதவர்களான ஸப்தரிஷிகளும் தோன் றினார்கள். திவ்யமானதும் பிரகாசிக்கின்றதுமான தேகத்

துடனகூடின தசரதராஜனும ஸர்வோத்தமமானதும் ஹம்ஸங்களோடுகூடியதும் பிரகாசிக்கின்றதுமான விமானத்தோடு ஆகாயத்தில் தோன்றினன். பிறகு, தேவர்களாலும் கந்தர்வர்களாலும் நெருங்கியதான ஆகாசம் முழுவதும் நக்ஷத்திரங்களால் அலங்கரிக்கப்பட்ட சரத்காலத்திலுள்ள ' ஆகாசவெளிபோல விளங்கியது, பிறகு, புகழ்பெற்றவளும் மங்களகரியுமான வைதேஹியானவள் அவர்களுடைய மத்தியில் எழுந்திருந்து அகன்றமார்பையுடைய ராமரைப்பார்த்து, ' ராஜபுத்திரரே! உம்மீது நான் கோபங்கொள்ளவில்லை. ஸ்த்ரீபுருஷர்களுடையு கதியானது என்னால் அறியப்பட்டிருக்கிறதன்றோ? இந்த என் சொல்லையும் கேளும். எப்பொழுதும் சென்றுகொண்டேயிருக்கிற வாயுபகவான் பிராணிகளுடைய தேகத்தினுள் ஸஞ்சரிக்கிறன். நான் பாவத்தைச் செய்திருப்பேனுகில் அவன் என்னுடைய பிராணனைப்போக்கட்டும். நான் பாவத்தைச் செய்கிறேனுகில் அக்னியும் ஜலமும் ஆகாசமும் பூமியும் வாயுவும் என்னுடைய பிராணனைப் போக்கட்டும். வீரரே! நான் உம்மைத்தவிர வேறுஒருவனைக் கனவிலும் நினையாமலிருந்தது உண்மையானால் முன்பு தெய்வத்தால் கொடுக்கப்பட்ட நீரே எனக்குப் பதியாக இருக்கக்கடவீர்' என்று சொன்னுள்.

பிறகு, ஆகாயத்தில், மங்களகரமானதும் மகாத்மாக்களான அந்த வானரர்களுக்கு அதிக ஆனந்தத்தை உண்டுபண்ணுகிறதும் புண்யமானதும் உலகங்களைக்காக்ஷியாயிருப்பதுமான வாக்கானது தோன்றியது. வாயு, ' ஓ! ஓ! ரர்கவ! நான் எப்பொழுதும் சென்றுகொண்டிருக்கிற வாயுவாகிறன்; இஃது உண்மை. அரசனே! மைதிலி தோஷமற்றவள். பார்யையுடன் சேர்ந்துகொள்வாயாக' என்றன். அக்னி, ' ரகுநந்தன! நான் பிராணிகளுடைய சரீரத்திலுள் இருக்கிறன். ராம! மைதிலியானவள் அறிவுவளவும் குற்றம்செய்தவளல்லள்' என்றன். வருணன், ' ராகவனே! பிராணிகளுடைய தேகங்களில் ரஸங்கள் என்னால் உண்டுபண்ணப்பட்டிருக்கின்றனவன்றோ? நான் உன்னை நோக்கிச் சொல்லுகிறன். மைதிலியை ஏற்றுக்கொள்' என்றன். யமன், ' ராகவ! நான் தர்மஸ்வரூபியாக இருக்கிறன். உலகங்களிலுள்ள ஜனங்களின் நல்லவையும் தீயவையுமான செய்கைகளுக்கு ஸாக்ஷியாகவுமிருக்கிறன். பாவமில்லாத இந்த ஸீதையை ஏற்றுக்கொள்' என்றன். பிரம்மா, ' புத்திர! ஸாதுவே! கன்னடைபுள்ளவனே! ராம! ராஜ

ன் தர்மங்களோடுகூடின உன்னிடத்தில் இது ஆச்சரிய மன்று. என்னுடைய இந்த வசனத்தைக்கேள். வீரனே! தேவர் களுக்கும் கந்தர்வர்களுக்கும் நாகர்களுக்கும் யக்ஷர்களுக்கும் தானவர்களுக்கும் மஹரிஷிகளுக்கும் சத்துருவான இவன் உன் னால் கொல்லப்பட்டான். இவன் முற்காலத்தில் என்னுடைய அனுக்ரஹத்தினால் எல்லாப் பிராணிகளாலும் கொல்லத்தகாத வ னானன்; ஒருகாரணத்தை உத்தேசித்துச் சிறிதுகாலம் உபே க்ஷிக்கப்பட்டான். கெட்ட எண்ணமுள்ள அந்த ராவணனால் தன்னுடைய வதத்திற்காக ஸீதை அபஹரிக்கப்பட்டாள். நளகூபர சாபத்தால் இவனுக்கு ரக்ஷஸ் என்னால் ஏற்படுத்தப்பட்டது. 'விருப்பமில்லாமலிருக்கிற அயலான் மனைவியை இவன் தொடு வனேயாகில் நிச்சயமாக இவனுடைய தலையானது நூறு துணுக் காக வெடித்துப்போகும்' என்று அவன் முற்காலத்தில் சொல் லப்பட்டிருக்கிறான். இந்த ஸீதைவிஷயத்தில் உனக்கு ஐயம் வேண்டாம். விசாலமான புத்தியுள்ளவனே! இவளை நீ பெற்றுக் கொள். அளவிறந்த தேஜஸுள்ளவனே! பெரிதான தேவகார்யம் உன்னால் செய்யப்பட்டது' என்றார். தசரதன், 'குழந்தாய்! ப்ரீதியுள்ளவனாக இருக்கிறேன். உனக்கு மங்களம். நான் உன் னுடைய பிதாவான தசரதன். புருஷோத்தம! நான் அனுமதி கொடுக்கிறேன். ராஜ்யத்தை ஆள்வாயாக' என்றான். ராமர், 'ராஜேந்திரரே! நீர் என்னுடைய பிதாவானால் நான் உம்மை அபிவாதனம் செய்கிறேன். உம்முடைய கட்டளையினால் அழகிய தான அயோத்தியாநகரியைக் குறித்துச் செல்வேன்' என்றார். பரதஸ்ரேஷ்டனே! பிதாவான தசரதன், மீண்டும் அதிக ஸந் தோஷத்துடன் ராமனைப்பார்த்து, 'ராம! சிவந்த கடைக்கண்க ளுள்ளவனே! அயோத்திக்குப்போ. (தசசத்தை) ஆள்வாயாக. மிக்ககாந்தியுள்ளவனே! இப்பொழுது பதினைன்கு வர்ஷங்கள் நிறைந்துவிட்டன' என்று சொன்னார்.

பிறகு, ராமர் தேவர்களை நமஸ்கரித்து நண்பர்களால் கொண் டாடப்பட்டு இந்திராணியோடு மகேந்திரன் கூடியதுபோலப் பார் யையுடன் கூடினார். பகைவர்களைத் தனிக்கச்செய்பவரான ராமர், பிறகு, அந்த அவிந்த்யனுக்கு வரன்கொடுத்தார். த்ரிஜடை என்கிற ராக்ஷஸிக்கும் பொருளையும் கௌரவத்தையும் கொடுத்தார். பிறகு, பிரம்மதேவர் இந்திரனை முதன்மையாகக்கொண்ட தேவர் களோடுசேர்ந்து ராமரைப் பார்த்து, 'கௌஸல்யையைத் தாயாகக்

கொண்டவனே! எந்தவரன்களை இப்பொழுது நான் உனக்குக் கொடுக்கக்கடவேன்' என்று வினவினர். ராமர் தர்மத்தில் நிலைத் திருத்தலையும் பகைவர்களால் தோல்வியுண்டாகாமையையும் அரக்கர்களால் கொல்லப்பட்ட வானரர்கள் உயிரோடு மீண்டு எழுந்திருப்பதையும் வரன்களாகக்கேட்டார். மகாராஜனே! பிறகு, பிரம்மாவினுல், 'அவை அப்படியே ஆகட்டும்' என்கிறவசனம் சொல்லப்பட்டவுடன், அந்த வானரர்கள் பிராஜ்ஞையை அடைந்த வர்களாக உயிரோடெழுந்தார்கள்.

மகாபாக்கியவதியானஸீதையும், 'புத்திர! ஹனுமானே! (உலகில்) ராமகீர்த்தியுள்ள அளவும் உனக்கு வாழ்நாள் உண்டு. மஞ்சள்நிறமான கண்களுள்ளவனே! என் அருளால் உண்டுபண் ணப்பட்ட தேவபோகங்கள் எப்பொழுதும் உன்னை அடையும்' என்று ஹனுமானுக்கு வரத்தைக் கொடுத்தாள். பிறகு, சிறந்தசெய்கைகளையுடைய அவர்கள் பார்த்துக்கொண்டிருக் கும்பொழுதே, இந்திரனைத்தலைவனுகக்கொண்ட தேவர்களனை வரும் அந்தர்த்தானமடைந்தார்கள். ஜானகியுடன் சேர்ந்திருக் கிற ராமரைப்பார்த்து இந்திரனுடையஸாரதியான மாதலி யானவன் அதிகப்ரீதியுள்ளவனுக நண்பர்களுடையமத்தியில், 'ஸத்தியபராக்கிரம! உன்னல் தேவர்களுக்கும் கந்தர்வர்களுக்கும் யக்ஷர்களுக்கும் மனிதர்களுக்கும் அஸுரர்களுக்கும் நாகர் களுக்குமுண்டாயிருந்த இந்தத்துக்கம் போக்கப்பட்டது. பூமி யுள்ளவரையில் தேவர்களும் அஸுரர்களும் கந்தர்வர்களும் யக்ஷர்களும் ராக்ஷஸர்களும் பன்னகர்களும் மற்ற உலகத்து ஜனங் களும் உன்னைப் புகழ்ந்துபேசுவார்கள்' என்கிற இந்தவச னத்தைச் சொன்னன். இவ்வண்ணமுரைத்துச் சஸ்திரங்களைத் தரித்திருப்பவர்களுள் சிறந்தவரான ராமனை நன்குபூஜித்து விடை பெற்றுக்கொண்டு சூரியன்போலப்ரகாசிக்கின்ற அந்தரதத்தோடு சென்றனன். பிறகு, ராமர் லக்ஷ்மணனுடன் ஸீதையைமுன்னிட் டுக்கொண்டு ஸுக்ரீவனைத் தலைவனுகக்கொண்ட எல்லாவானரர்க ளோடும்கூடினவராக விபீஷணனை வைத்துக்கொண்டு லங்கையில் ராக்ஷஸியைச்செய்து மீண்டும் அந்த ஸேதுவினுல் ஸமுத்திரத்தைத் தாண்டினர். பிறகு, பிரபுவும் தர்மாத்மாவுமான அந்த அரசர், முக்யமந்திரிகளால் சூழப்பட்டவராக, ஆகாசத்தில் ஸஞ்சரிக்கின்ற தும் அதிகமாகப்பிரகாசிப்பதும் நினைத்தவண்ணம் செல்லுகிறது மான புஷ்பகவிமானத்தால் சென்று, கடற்கரையில் முன்பு தாம்

படுத்திருந்த இடத்தில் எல்லாவானரர்களோடும் தங்கினர். பிறகு, அவர் அந்தவானரர்களை அழைத்துப் பூஜித்து அப்பொழுது ரத்தினங்களால் ஸந்தோஷமடையச்செய்து எல்லாரையும அனுப்பினர். அந்தவானரஸ்ரேஷ்டர்களும் அந்தக்கோபுச்சங்களும் கரடிகளும் புறப்பட்டுப்போன பிறகு, ராமர் ஸுக்ரீவனோடுசேர்ந்து மறுபடியும் கிஷ்கிந்தையை அடைந்தார். அடிப்பவர்களுள் சிறந்தராமர் விபீஷணனுல் பின்தொடரப்பட்டவராகவும் ஸுக்ரீவனோடுசேர்ந்தவராகவும் அப்பொழுது புஷ்பகவிமானத்தால் வைதேஹிக்கு வனத்தைக் காண்பித்துக்கொண்டே கிஷ்கிந்தையை அடைந்து, காரியத்தை நிறைவேற்றினவனை அங்கதனை இளவரசனுகப் பட்டாபிஷேகம் செய்வித்தார்.

பிறகு, ராமர் அந்தவானரர்களோடும் லக்ஷ்மணனோடுமே வந்தவழியினுல் தமதுபட்டணத்தை நோக்கிச்சென்றார். பல தேசங்களுக்குப் பதியாகிய அந்த ஸ்ரீராமர் அயோத்தியாபட்டணத்தை நெருங்கிப் பரதனிடம் ஹனுமானைத் தூதனுக விரைந்து அனுப்பினர். (பரதனுடைய) குறிப்பனைத்தையும் கண்டு அந்தப்பரதனுக்கு ப்ரியத்தைத் தெரிவித்து வாயு குமாரன் மீண்டுவந்தவுடன், ராமர் நந்திக்ராமத்தை அடைந்தார். லக்ஷ்மணனோடுகூடியவரான அந்தராமர், அங்கே அழுக்குப்படிந்த மேனியையுடையவனும் மரவுரியை உடுத்தவனும் நந்திக்கிராமத்தை அடைந்திருப்பவனும் சத்துருக்னனோடு சேர்ந்திருப்பவனும் முன்னிலையில் பாதுகைகளைவைத்துக்கொண்டு ஆஸனத்தில் இருப்பவனுமான பரதனைக் கண்டார். பரதஸ்ரேஷ்டனே! சிறந்தவீர்யமுள்ளவரும் லக்ஷ்மணனோடிருப்பவருமான ஸ்ரீ ராகவர் பரதனோடும் சத்துருக்னனோடும்சேர்ந்து ஸந்தோஷத்தை அடைந்தார். பிறகு, தமையனோடுசேர்ந்தவர்களான பரதசத்ருக்னர்களிருவரும் அப்பொழுது வைதேஹியின் தர்சனத்தினுல் ஸந்தோஷத்தை அடைந்தார்கள். பரதன், வந்திருக்கிற அந்த ஸ்ரீராமருக்குத் தன்னிடத்தில் அடைக்கலமாகவைக்கப்பட்டிருந்த ராஜ்யத்தைப் பரமஸந்தோஷத்துடனும் அதிக உபசரணையுடனும் திருப்பிக்கொடுத்தான். பிறகு, சூரரான அந்த ஸ்ரீராமருக்கு (ப்ரெஸிடேயோரால்) [1] ஸம்மதிக்கப்பட்ட தினத்தில் ப்ராவணநக்ஷத்திரத்தில் வஸிஷ்டரும் வாமதேவரும் சேர்ந்து பட்டாபிஷேகம் செய்தார்கள். பட்டாபிஷேகம்செய்யப்பட்ட அந்த ராமர் வானரர்

---

[1] வேறுபாடம்.

களுள் மிகச்சிறந்தவனும் நண்பர்களோடுகூடினவனுமான ஸுக்ரீவனுக்கும் புலஸ்தியவம்சத்திலுதித்தவனான விபீஷணனுக்கும் வீடுகளுக்குப்போகும்படி அனுமதிகொடுத்தார். ப்ரீதியுடன்கூடியவர்களும் ஸம்மோஷத்தோடு சேர்ந்தவர்களுமான அவர்களைப் பல பலரத்தினங்களைக் கொடுத்துக் கௌரவித்துச் செய்யவேண்டிய கார்யத்தை அவர்கள் மனத்தில் ஊன்றி நிற்கும்படிசெய்து வருத்தத்துடன் அனுப்பினார். [1] அந்த ராகவர் அந்தப்புஷ்பகவிமானத்தையும் பூஜித்து ப்ரீதியுடன் அதனைக் குபேரனுக்கே கொடுத்தார். பிறகு, அந்தராகவர் தேவர்களோடும் ரிஷிகளோடுங்கூடினவராகக் கோமதீநதியினருகில் மூன்றுமடங்கு தக்ஷிணைகளுள்ளவைகளும் தடையற்றவைகளுமான நூறு அச்வமேதங்களைச் செய்தார்.

இருநூற்றுத்தொண்ணூற்றுமூன்றுவது அத்யாயம்.

ராமோபாக்யானபர்வம். (தொடர்ச்சி.)

(மார்க்கண்டேயர், வருந்துகிற யுதிஷ்டிரருக்கு ராமோபாக்யானத்தைக் கூறிக் காரணங்களைக்காட்டித் துயரத்தைப் போக்கியது.)

மிக்கபாகுபலமுள்ளவனே! அளவற்றதேஜஸ்ஸுள்ள ராமரால் முற்காலத்தில் வனவாஸத்தாலுண்டுபண்ணப்பட்டதும் அதிக உக்ரமாயிருப்பதுமான இந்தத்துயரம் இவ்வண்ணம் அடையப்பட்டது. புருஷச்ரேஷ்ட! பகைவரை வாட்டுபவனே! துயரப்படாதே. நீ க்ஷத்ரியனாக இருக்கிறாய். தோள்வலிமையைப் பொறுத்ததும் ப்ரத்யக்ஷப்ரபாவனுடன் கூடியதுமான வழியில் நீ நிலைபெற்றிருக்கிறாய். உன்னிடத்தில் பாவமானது அணுவளவும் காணப்படவில்லை. இந்திரனுடன்கூடின தேவரிஷிகளும் இந்தவழியில் இருப்பார்கள். தேவர்களோடு ஒன்றுசேர்ந்து வஜ்ரபாணியான இந்திரனால் வருத்தனும் ஒருவராலும் ஜயிக்கமுடியாத கமுசியும் தீர்க்கஜிஹ்வையென்கிற ராக்ஷஸியும் கொல்லப்பட்டார்கள். இவ்வுலகில் ஸஹாயமுள்ளவனிடத்தில் எல்லாக்கார்யங்களும் ஸித்திக்கின்றன. எவனுக்குத் தனஞ்சயன் பிராதாவோ அவனுக்கு யுத்தத்தில் ஜயிக்கப்படாதது எது இருக்கிறது? பயங்கரமான பராக்ரமமுள்ள இந்தப் பீமனை பலசாலிகளுள் மேன்மைபெற்றவன். மாத்ரீபுத்ரர்களான குலஸஹிதவர்கள் வீரர்கள்; சிறந்த வில்லாளிகள்; யௌவன

---

[1] பொருள் இரட்டித்தலால் இரண்டு சொற்கள் விடப்பட்டன.

முள்ளவர்கள். பகைவர்களேவர்ட்டுபவனே! இந்த ஸ்ஹாயர்களோடு சேர்ந்திருக்கிற நீ ஏன் துயரப்படுகிறாய்? இவர்கள் தேவகணங்களோடுகூடின இந்திரனுடைய சேனையைக்கூடஜயிப்பார்கள். பரதர்களுள்சிறந்தவனே! நீயும், சிறந்தவில்லாளிகளுமும் தேவர்கள் போன்ற உருவமுள்ளவர்களுமான இந்தஸஹாயர்களால் யுத்தத்தில் எல்லாச்சத்துருக்களையும் ஜயிப்பாய். பலசாலியும் வீர்யத்தால் மதங்கொண்டவனும் தூராத்மாவுமான ஸைந்தவனால் இந்தஇடத்திலிருந்து அபஹரிக்கப்பட்டவளும் துருபதராஜகுமாரியுமான இந்தக்ருஷ்ணை இந்த மகாத்மாக்களால் ஒருவராலும் செய்யமுடியாத காரியங்களைச்செய்து மீட்கப்பட்டதையும் ஜயத்ரதராஜன் வெல்லப்பட்டு உன்வசத்தை அடைந்ததையும் பார். அரசனே! ஸஹாய்மில்லாமலிருந்த ராமரால் வேறுஜ்ஞாதியைச்சார்ந்த குரங்குகளையும் கருமையான முகமுள்ள கரடிகளையும் நண்பர்களாகக்கொண்டு பயங்கரமான பராக்ரமமுள்ள ராக்ஷஸனை,சசக்ரீவனை யுத்தத்தில் கொன்று வைதேஹியானவள் மறுபடி மீட்டுக் கொண்டுவரப்பட்டாள். குருஸ்ரேஷ்டனே! ஆகையால், இவை அனைத்தையும் புத்தியினல் அடிக்கடி நினைத்துப்பார். பரதஸ்ரேஷ்டனே! நீ துயரப்படாதே. பகைவர்களைக் கொல்பவனே! உன்னைப்போன்ற மகாத்மாக்கள் துயரத்திற்கு ஆளாகமாட்டார்கள்' என்று சொன்னர். பேரறிவையுடையவரான மார்க்கண்டேயரால் இவ்வண்ணம் தேற்றப்பட்ட அரசர், துக்கத்தைவிட்டு, மனதைதர்யத்துடன் மீண்டும் அந்தமார்க்கண்டேயரைநோக்கிப் பின்வருமாறு கூறலானர்.

ராமோபாக்யானபர்வம் முற்றிற்று.

இருநூற்றுத்தொண்ணூற்றுநான்காவது அத்யாயம்.

பதிவ்ரதாமாஹாத்ம்யபர்வம்.

(மார்க்கண்டேயர் யுதிஷ்டிரருக்கு ஸாவித்திரியின் உபாக்யாந்தைச் சொல்லத்தொடங்கியதும், மத்ராராஜனுக்கு ஸாவித்திரியின் அனுக்கிரஹத்தினல் ஸாவித்ரி யென்கிற கன்னிகை பிறந்ததும், அந்தப் பெண் பிதாவின் கட்டளையினல் மந்திரிகளோடு ராஜரிஷிகளுடைய ஆச்ரமங்களில் தனக்குத் தகுந்த வரனைத் தேடியதும்.)

யுதிஷ்டிரர், 'மகாமுனிவரே! எப்படி இந்த த்ருபதராஜகுமாரியைப்பற்றித் துயரப்படுகிறேனோ அப்படி என்னைப்பற்றியும்

இந்தத்தம்பிமார்களைப்பற்றியும் கபடத்தால் என்னிடத்திலிருந்து கவரப்பட்ட ராஜ்யத்தைப்பற்றியும் நான் துயரப்படவில்லை. தூராத்மாக்களான துர்யோதனன் முதலியவர்களால் சூதாட்டத்தில் தூண்டப்பட்ட நாங்கள் க்ருஷ்ணையினால் கரையேற்றிவிடப்பட்டோம். அவள், மறுபடியும், காட்டிலிருந்தும் ஜயத்ரதனால் வலிந்து கவரப்பட்டாள். மகாபாக்கியவதியும் பதிவ்ரதையுமான இந்தத்துருபதகுமாரியைப்போன்ற ஓர் உத்தமஸ்திரீயானவள் உம்மால் 'இதற்குமுன் பார்க்கப்பட்டிருக்கிறாளா? அல்லது, கேட்கப்பட்டிருக்கிறாளா?' என்றுவினவினர்.

மார்க்கண்டேயர், 'அரசனே! யுதிஷ்டிர! குலஸ்த்ரீகளுடைய இந்த மகாபாக்கிய முழுமையும் ஸாவித்திரியென்கிற ராஜகன்னிகையினால் அடையப்பட்டவிதத்தைக் கேட்பாயாக. மத்ரதேசத்தில் தர்மாத்மாவும் பரமதார்மிகனும் பிராம்மணர்களுக்கு ஹிதத்தைச் செய்பவனும் மகாத்மாவும் ஸத்தியஸந்தனும் இந்திரியங்களை ஜயித்தவனும் யாகம்செய்பவனும் தானங்கள்செய்பவனும் திறமைவாய்ந்தவனும் பட்டணத்து ஜனங்களுக்கும் நாட்டுஜனங்களுக்கும் பிரியமானவனும் எல்லாப்பிராணிகளுக்கும் நன்மைசெய்வதில் பற்றுள்ளவனுமான அச்வபதி என்கிற ஓர் அரசன் இருந்தான். பொறுமையுள்ளவனும் உண்மையையே சொல்பவனும் இந்திரியங்களை அடக்கினவனுமான அந்த அரசன் குழந்தைகளில்லாமலிருந்தான்; வயது அதிகமானதினால் மனவருத்தத்தை அண்டினான். ராஜஸ்ரேஷ்ட! அவன் புத்திரனை அடைவதற்காகக் கடுமையானநியமத்தை அனுஷ்டிப்பவனும் காலத்தில் மிதமான ஆகாரத்தை உட்கொள்பவனும் பிரம்மசர்யமுள்ளவனும் இந்திரியங்களையடக்கினவனும் ஸாவித்ரீமந்த்ரத்தினால் லக்ஷம் ஆஹுதிசெய்து, (பகலில் எட்டாகப்பகுந்து அதன்) ஆறுவது ஆறுவது காலத்தில் மிதமாகப்புஜிப்பவனுமாயிருந்தான்; இந்த நியமத்துடன் பதினெட்டு ஆண்டுகள் இருந்தான். பதினெட்டாவது வர்ஷம் நிறைந்தபுடன், ஸாவித்ரீதேவி ஸந்தோஷமடைந்தாள்; அரசனே! அப்பொழுது ப்ரத்யக்ஷமாய்த்தோன்றி அந்த அரசனுக்குக் காட்சியளித்தாள். பொற்றகைக்கொடிபோலவளான அந்தஸாவித்ரியானவள் அக்னிஹோத்ரத்திலின்று எழுந்திருந்து அதிகஸந்தோஷத்துடன் அந்த அச்வபதிராஜனைப்பார்த்து, 'வேந்தே! உன்னுடைய சுத்தமானபிரம்மசர்யத்தாலும் அடக்கத்தாலும் நியமத்தாலும் பக்தியினாலும் எல்லாவித்தத்தாலும் உன்விஷயத்

தில் ஸந்தோஷமுள்ளவளாக இருக்கிறேன். அய்வபதியே! மத்ராஜனே! விரும்பினவரனைப் பெற்றுக்கொள்வாயாக. தர்மங்களில் தவறுதலை நீ எவ்விதத்தாலும் செய்யலாகாது' என்று இந்தவசனத்தை உரைத்தாள்.

அய்வபதி, 'தர்மத்தை அடையவேண்டுமென்கிற விருப்பத்தால் என்னால் குழந்தை உண்டாவதற்காக இந்தக்காரியம் செய்யப்பட்டது. தேவி! குலத்தை விருத்திபண்ணுகிறவர்களான அனேகபுத்திரர்கள் எனக்கு உண்டாகவேண்டும். பிராம்மணர்கள் ஸந்தானத்தைச் சிறந்ததர்மமென்று எனக்குச் சொல்லியிருக்கிறார்கள். என்விஷயத்தில், நீ மகிழ்ச்சியுள்ளவளாக இருந்தால், இந்தவரத்தை நான் விரும்புகிறேன்' என்றுசொன்னன். ஸாவித்ரி, 'அரசனே! உன்னுடைய இந்த அபிப்பிராயத்தை முன்னியே அறிந்து பகவானான பிரம்மதேவர் உனக்குப் புத்திரனைக்கொடுப்பதற்காக உரைக்கப்பட்டிருக்கிறார். இனிய குணம் வாய்ந்தவனே! உன்னிடத்தில் அவருக்குள்ள அருளினால் நான் ஸ்வயம்மே ஏற்பாடுசெய்துவிட்டேன். நல்லதேஜஸ்ஸுள்ள ஒருகன்னிகையானவள் சீக்கிரமாகவே உண்டாவாள். இந்த விஷயத்தில் நீ எவ்விதத்தாலும் எவ்விதமான உத்தரமும் சொல்லலாகாது. பிரம்மதேவருடைய கட்டளையினால் ஸந்தோஷமுள்ளவளாக உனக்கு இதனைச்சொல்லுகிறேன்' என்று சொன்னள். அந்த அரசன், ஸாவித்ரியின் வசனத்தை, 'அப்படியே' என்று அங்கீகரித்து மீண்டும் அவளைத்துதித்து அருள்புரியும்படி பிரார்த்தித்து, 'இது விரைவில் நடைபெறுக' என்று சொன்னன். ஸாவித்ரி மறைந்தபின் அரசன் தன் பட்டணத்திற்குச் சென்றான்.

அந்த வீரன் பிரஜைகளைத் தர்மத்தால் பரிபாலனம்செய்துகொண்டு தன்ராஜ்யத்தில் வஸித்துவந்தான். சிறிதுகாலம் சென்றபின், தவறுமல் விரதத்தை அனுஷ்டிப்பவனான அந்த அரசன் மூத்தவளான தர்மபத்தினியிடம் கர்ப்பத்தை உண்டுபண்ணினான். பதிதர்களுள் சிறந்தவனே! மனுவின் புதல்வியான அந்தராஜபுத்திரியின் கர்ப்பமானது அப்பொழுது வளர்பிறையில் ஆகாயத்தில் சந்திரன்வளர்வதுபோல வளர்ந்தது. அவள், (பிரஸவத்துக்குரிய) காலம்வந்தவுடன், தாமரைமலர் போன்ற கண்களுள்ள ஒரு கன்னியைப் பெற்றாள். அந்த ராஜபுங்கவன் ஸந்தோஷமுள்ளவனாக அந்தப் பெண்ணுக்கு (ஜாதகர்ம

முதலிய) . கிரியைகளைச் செய்தான். ஸாவித்ரிமந்திரத்தினால் ஹோமம்செய்யப்பட்டவளும் ப்ரீதியுள்ளவளுமான ஸாவித்ரியினால் கொடுக்கப்பட்ட அந்தப்பெண்ணுக்கு பிராம்மணர்களும் பிதாவும் ஸாவித்ரி என்றே பெயரிட்டார்கள். அந்தராஜபுத்திரியானவள், லக்ஷ்மிதேவியே வடிவெடுத்துவந்ததுபோல வளர்ந்து வந்தாள். சிறிதுகாலத்தில் அந்தக் கன்னியானவள் யௌவனப் பருவத்தை அடைந்தவளானாள். அழகிய இடையையுடையவளும் பருத்த பின்தட்டுக்களுள்ளவளும் பொற்பாவைபோன்றவளுமான அந்தப்பெண்ணை ஜனங்கள் பார்த்து, 'தேவகன்னியே இந்தப் பெண்வடிவத்துடன் வந்திருக்கிறாள்' என்று நன்கு எண்ணினார்கள். தாமரையிதழ்போன்ற கண்களையுடையவளும் காந்தியினால் ஜ்வலிக்கின்றவள்போன்றவளுமான அந்தப் பெண்ணை (அவளுடைய)[1] காந்தியினால் திருப்பப்பட்டவனாகி ஒருவனுவது (மனஸில் யாக) வரிக்கவில்லை. பிறகு, அவள் பர்வகாலத்தில் நீராடி உபவாஸமிருந்து தேவதையை வந்தனம்பண்ணி விதிப்படி அக்னியில் ஹோமம்செய்து பிராம்மணர்களை வேதமந்திரங்களைச் சொல்லும்படி செய்தாள். பிறகு, தேவதைக்குச் சூட்டிக்களைந்தவையான புஷ்பங்களைப் பெற்றுக்கொண்டு, உருவெடுத்த ஸ்ரீதேவிபோல மகாத்மாவான பிதாவினிடம் வந்தாள்.[2] சிறந்த இடையுள்ள அந்த ஸாவித்ரியானவள் பிதாவினுடையபாதங்களில் வணங்கி அந்தநிர்மால்யமலர்களை அரசனை பிதாவிடம் முந்திக்கொடுத்து இருகரங்களையும் குவித்துக்கொண்டு அவனுடைய பக்கத்தில் நின்றாள். யௌவனப்பருவத்திலிருப்பவளும் தேவகன்னிகைபோலப் பிரகாசிப்பவளுமான அந்தத் தன்னுடைய புத்ரி வரன்களால் வேண்டப்படாமலிருத்தலைப்பார்த்து, அரசன் துக்கமுள்ளவனானான்.

அவன், 'பெண்ணே! இதுஉனக்கு (க்கன்னிகா) தானகாலம். ஒருவனுவது என்னிடத்தில்வந்து கேட்கவில்லை. குணங்களால் உனக்குத் தகுந்த கணவனை நீயே வரிப்பாயாக. உன்னால் விரும்பப்பட்டவனை எனக்குத்தெரிவி; நான் நன்குஆராய்ந்து கொடுப்பேன். நீ உன்னிஷ்டப்படி ஒருவனை வரிப்பாயாக. தர்மசாஸ்திரங்களில் பிராம்மணர்களால் சொல்லப்படுவது என்னால் கேட்கப்பட்டிருக்கிறதன்றோ? கல்யாணி! நீயும் அதன்படிசொல்லு

---

[1] அவளுடையகாந்திக்குத் தான் இணையில்லாமையாலென்பது.

[2] 'வராரோஹா' என்பது மூலம்.

கின்ற என்னுடையவசனத்தைத் கேள். (கருத்தரிமயத்தில் பெண் ணைத் தக்கவானுக்குக்) கொடாத பிதா இகழப்படத்தக்கவன். ருதுகாலத்தில் மனைவியை அடையாத பதியும் இகழப்படத்தக் கவன். பிதா பரலோகம்போனபிறகு, தாயைக்காப்பாற்றாதபுத் திரனும் இகழப்படத்தக்கவன். இந்த என்னுடையவசனத்தைக் கேட்டுக் கணவனைத்தேடுவதில் நீ விரைவுசெய். தேவதைகளுக்கு நான் இகழப்படத்தகாதவனுகும்படிசெய்' என்று சொன்னுன். பெண்ணையும் பிராயமுதிர்ந்த மந்திரிகளையும் பார்த்து, இவ்வண்ண முரைத்து, 'பிரயாணத்துக்குவேண்டிய வாகனமுதலியவைகளும் உடன்செல்லவேண்டும்' என்று கட்டளையிட்டான். பெரியமன முள்ள அந்த ஸாவித்ரியானவள் வெட்கமுள்ளவளாகப் பிதாவின் அடிகளில் வணங்கி அவனுடைய சொல்லை நன்கு அறிந்து ஆலோ சியாமல் புறப்பட்டாள். அவள் பொன்னலாகிய தேரிலேறிக் கொண்டு வயதுமுதிர்ந்தவர்களான மந்திரிகளால் சூழப்பட்டு ராஜரிஷிகளுடைய அழகிய தபோவனங்களை அடைந்தாள். ஐயா! அங்கே பூஜ்யர்களான முதியவர்களுடைய பாதங்களில் வந்தனம் செய்துகொண்டு வரிசையாக எல்லா வனங்களையும் அடைந் தாள். ராஜபுத்திரியானவள் இவ்வண்ணம் எல்லாத் தீர்த்தங்க ளிலும் பிராம்மணஸ்ரேஷ்டர்களுக்குப் பொருள்களை ஏராளமாகக் கொடுத்துக்கொண்டு அந்த அந்த இடத்தை அடைந்தாள்.

இருநூற்றுத்தொண்ணூற்றைந்தாவது அத்யாயம்.

பதிவ்ரதாமாஹாத்ம்யபர்வம். (தொடர்ச்சி.)

(அஸ்வபதி நாரதருடன் பேசிக்கொண்டிருக்கையில், ஸாவித்ரி வந்து அவ்விருவரையும் வணங்கி ஸத்யவானைக் கணவனுகநிச்சயித்ததைத் தெரிவித்ததும், அரசன் ஸத்யவான் அற்பாயுளுள்ளவனென் பதை நாரதரால்அறிந்து வேறொருவனைவரிக்கும்படி ஸாவித் ரிக்குச் சொல்லியும் அவள் ஸத்யவான்விஷயத்தில் உறுதியாயிருந்ததும், அரசனும் அவளுடைய நிர்ப் பந்தத்தாலும் நாரதர்சொல்லாலும் அவளை ஸத்யவானுக்கே கொடுக்க நிச்சயித்ததும்.)

பாரத! பிறகு, மத்ரதேசாதிபனன அரசன் (ஒருஸமயம்) நாரதருடன்சேர்ந்து ஸபையின்நடுவில் பேசிக்கொண்டு உட்

கார்ந்திருந்தான். ஸாவித்ரியானவள், பிறகு, எல்லாத்தீர்த்தங்களையும் அப்படியே எல்லா ஆச்ரமங்களையும் அடைந்து மந்திரிகளோடு பிதாவின் வீட்டுக்குத் திரும்பி வந்தாள். அழகிய அந்த ஸாவித்திரியானவள், நாரதரோடு உட்கார்ந்துகொண்டிருக்கிற பிதாவைப்பார்த்து, இருவருக்குமே, தலையினல் பாதங்களில் வந்தனம்பண்ணினுள். நாரதர், 'அரசனே! உன்னுடைய இந்தப் பெண் எங்கே போயிருந்தாள்? எவ்விடத்திலிருந்து வந்தாள்? அப்பா! யௌவனப்பருவத்தை அடைந்திருக்கிற இந்தப் பெண்ணை ஏன் தகுந்தவானுக்குக் கொடாமலிருக்கிறாய்?' என்று வினவ, அச்வபதி, 'மஹரிஷியே! இந்தக்காரியமாகவே அனுப்பப்பட்டிருந்த இந்தப்பெண் இப்பொழுதுதான் வந்தாள். மஹரிஷியே! இவளால் வரிக்கப்பட்ட பர்த்தாவை இவளிடமிருந்து கேளும்' என்றான.

'விஸ்தாரமாகச்சொல்' என்று பிதாவினல் ஏவப்பட்ட அந்த அழகிய ஸாவித்ரியானவள் அவனுடைய வசனத்தை ஏற்றுக்கொண்டு அப்பொழுதே, 'ஸால்வதேசத்தில் தர்மாத்மாவும் த்யுமத்ஸேனனென்கிற பெயருள்ளவருமான ஒரு க்ஷத்திரியர் பூமிக்கு அரசராயிருந்தார். பிரஸித்தரான அந்த த்யுமத்ஸேனர், பிறகு, குருடானர். புத்திமானன அவர் கண்களை இழந்து சிறுவரான ஒருபுத்திரருடனிருந்தமையால், இந்த ஸமயத்தில் அவருடைய ராஜ்யமானது ஸமீபத்தில் வஸிக்கின்ற பழம்பகைவனல் கவரப்பட்டது. அவர் சிறுகுழந்தையையுடைய மனைவியுடன் கானகம் சென்றார். பெரியகாட்டை அடைந்த த்யுமத்ஸேனர் பெரியவிரதமுள்ளவராகத் தவம்புரிந்தார். அவருக்குப் பட்டணத்தில் பிறந்தவரும் தபோவனத்தில் வளர்ந்துவருகிறவருமான ஸத்யவானென்கிற பெயருள்ள புத்ரர் எனக்கு ஒத்தகணவராக மனத்தினல் வரிக்கப்பட்டார்' என்று இங்ஙனம் கூறினுள். நாரதர், ''அரசனே! அந்தோ! கஷ்டம்! ஸாவித்ரியினல் பெரிய தவறு செய்யப்பட்டது. அறியாதவளான இந்தப் பெண்ணல் ஸத்யவான் குணசாலியாயிருந்தமையால் கணவனுக வரிக்கப்பட்டான். இந்த ஸத்யவானுடையபிதா ஸத்யத்தைச் சொல்லுகிறான்; மாதாவும் ஸத்யத்தையே சொல்லுகிறாள். அதனல், பிராம்மணர்கள் இவனுக்கு ஸத்யவானென்று பெயரிட்டார்கள். இந்தச் சிறுவனுக்குக் குதிரைகள் பிரியமானவை. இவன் மண்ணல் குதிரைகளைச் செய்கிறான்; சித்திரத்திலும் குதிரைகளை எழுதுகிறான்.

அதனால், சித்திராம்வன் என்றும் சொல்லப்படுகிறான்' என்று சொல்ல, அரசன், 'இப்பொழுது அந்த ராஜகுமாரன் தேஜஸ்வியாக இருக்கிறானா? சிறந்த புத்தியுள்ளவனா? பொறுமையுள்ளவனா? சூரனா? ஸத்யவாதியா? பிதாவினிடத்தில் அன்புள்ளவனா?' என்று வினவினான். நாரதர், 'ஸத்யவான் சூரியனைப்போன்ற தேஜஸ்ஸுள்ளவன்; புத்தியில் ப்ருஹஸ்பதிக்கொப்பானவன்; மஹேந்திரன் போன்ற வீரன்; பூமிபோலப் பொறுமையுள்ளவன்' என்று சொன்னார். அச்வபதி, 'ராஜகுமாரன் கொடையாளியா? பிராம்மணர்களுக்கு நன்மையைச் செய்பவனா? ஸத்யவாக்கியமுள்ளவனா? சிறந்த அழகுள்ளவனா? பெருந்தன்மையுள்ளவனா? இனிய தோற்றமுள்ளவனா?' என்று வினவினான். நாரதர், 'பலசாலியான த்யுமத்ஸேனகுமாரன் தனது சக்திக்குத்தக்கபடி கொடுப்பதில் ஸங்கல்பத்தில் புத்திரனான ரந்திதேவனுக்கு ஒப்பானவன்; உசீநரகுமாரனான சிபியைப்போலப் பிராம்மணர்களுக்கு நல்தானம் செய்பவனும், உண்மைசொல்பவனும்; யயாதிபோலப் பெருந்தன்மையுள்ளவன்; சந்திரன்போல இனியதோற்றமுள்ளவன். ரூபத்தினால் அச்வினீதேவர்களைத் தனித்தனி ஒத்தவன். அவன் பேசுந்திறமையுள்ளவன். அவன் தேஜஸ்வி; நல்லபுத்தியுள்ளவன்; பொறுமையுள்ளவன். அவன் மனத்தை அடக்கினவன். அவன் மிருதுஸ்வபாவமுள்ளவன். அவன் சூரன். அவன் மெய்ம்மையுடையவன்; இந்திரியங்களை அடக்கினவன்; நல்லநடத்தையுடையவன். அவன், (குணமுள்ளவற்றிலும் குற்றத்தை ஏற்றிக்கூறுதலாகிய) அஸூயை இல்லாதவன். அவன் அகார்யத்தில் வெட்கமுள்ளவன். அவன் காந்தியுள்ளவன். தவத்திற்சிறந்தவர்களும் ஒழுக்கத்திற்சிறந்தவர்களும், சுருக்கமாக, 'எப்பொழுதும் அவனிடத்தில் உள்ளும்புறமும் ஒத்திருத்தல் இருக்கிறது; தைர்யம் அவனிடத்திலேயே நிலைபெற்றிருக்கிறது' என்று சொல்லுகிறார்கள்' என்றார்.

அச்வபதி, 'பகவானே! அந்த ஸத்யவானைத் தேவரீர் எல்லாக் குணங்களோடும் கூடியவனென்று எனக்குச் சொல்லுகிறீர். அவனிடத்தில் எவையேனும் தோஷங்கள் உண்டாயின், அவைகளையும் எனக்குச் சொல்வீராக' என்று வினவ, நாரதர், 'ஓர் ஒரு தோஷமானது அவனுடைய எல்லாக்குணங்களையும் மீறிநிற்கிறது. அந்தத் தோஷமானது முயற்சியினால் தாண்டமுடியாதது. அவனுக்கு ஒரு தோஷமே இருக்கிறது. வேறுதோஷம் இல்லை. அந்த ஸத்யவான் இன்றுமுதல் ஒருவருஷத்துடன் ஆயுள்முடிந்தவனாகத்

தேகத்தை இழக்கப்போகிறான்' என்று சொன்னார். அரசன், 'ஸாவித்ரி! வர். கல்யாணி! வேறுவரனை வரி. போ.. நீ வரனை வரித்திருக்கிற ஸத்யவானுடைய எல்லாக்குணங்களையுமீறிக் கொண்டு ஒருபெரிய தோஷமிருக்கிறது. தேவர்களால் பூஜிக்கப் பட்ட நாரதபகவான், 'அற்பஆயுளுள்ள அந்தஸத்யவான் ஓர் ஆண்டில் தேகத்தைஇழப்பான்' என்று என்னிடத்தில் சொல்லுகிறார்' என்று சொன்னான்.

ஸாவித்ரி, '[1] (தந்தை முதலியோரால் கிடைத்த பொருளை ஸஹோதரர்கள் நியாயப்படி) [2] பங்கிட்டுக்கொள்வது ஒரேதடவை; கன்னிகை (தந்தை முதலியோரால்) கொடுக்கப்படுவது ஒரே தடவை; (பசு முதலியவற்றைத்) தானம் செய்வதும் ஒரே தடவை; இந்த மூன்றும் ஒவ்வொரு தடவையே என்கிறார் கள். நீண்டஆயுளுள்ளவனை குறைந்த ஆயுளுள்ளவனை குணமுள்ளவனை குணமில்லாதவனை என்னுல் கணவன் ஒரு தடவை வரிக்கப்பட்டுவிட்டான். நான் இரண்டாமவனை வரிக்கமாட்டேன். மனத்தினுல் நிச்சயம்செய்து, பிறகு, வாக்கினுல் சொல்லப்படுகிறது. பிறகு, சொன்னவண்ணம் அது செய்கையினுல் அனுஷ்டிக்கப்படுகிறது. ஆகையால், எனக்கு மனமானது பிரமாணம்' என்றுசொன்னுள். நாரதர், 'புருஷ ச்ரேஷ்டனே! உன்னுடைய புத்திரியாகிய ஸாவித்ரியின்புத்தி ஸ்திரமானது. இந்தத்தர்மத்தினின்று 'இவள் எவ்விதத்தாலும் திருப்பப்படமுடியாதவள். ஸத்யவானிடத்திலுள்ள குணங்கள் வேறுமனிதனிடத்திலில்லை. ஆகையால், உன்னுடையபெண்ணை அந்தஸத்யவானுக்குக்கொடுப்பதே எனக்கு ருசிக்கிறது' என்று சொன்னர். அரசன், ''இவளுடைய இந்தநிச்சயம் அசைக்கப்பட முடியாததென்று தேவரீரால் உரைக்கப்பட்டது. தேவரீருடைய வசனம் உண்மை. இதனை இப்படியே செய்வேன். பகவானுனை தேவரீர் எனக்குக்குருவன்றே?' என்றுசொன்னன். நாரதர், 'உன்பெண்ணை ஸாவித்ரியைக்கொடுப்பதில் தடைவேண்டாம். நான் செல்வேன். உங்களனைவருக்கும் மங்களம் உண்டாகுக' என்று சொன்னர். ' இவ்வண்ணம்கூறி நாரதர் ஆகாயத்தில்

---

[1] இந்த ச்லோகம் மனுஸ்மிருதியிலுள்ளது; அத். 9. ச்லோ 47.

[2] 'மரம் கல் முதலியவற்றின் துண்டு ஒரேமுறை விழுகிறது' என்பது பழையவுரை.

எழும்பி ஸ்வர்க்கத்திற்குச் சென்றார். அரசனும் புத்திரியின் விவாஹமங்களத்தை ஸித்தஞ்செய்வித்தான்.

இருநூற்றுத்தொண்ணூற்றுரண்டாவது அத்யாயம்.

பதிவ்ரதாமாஹாத்ம்யபர்வம். (தொடர்ச்சி.)

(அச்வபதி தர்மஸேனனுடைய ஆச்ரமத்திற்குப்போய் ஸத்ய வானுக்கு ஸாவித்திரியைக்கொடுத்து விவாஹத்தைநிறைவேற் றித் தன் நகரத்திற்குவந்தது.)

பிறகு, அந்த அச்வபதிமகாராஜன் கன்னிகையை ஸத்யவா னுக்குக்கொடுப்பதில், அந்தவிஷயத்தையே சிந்திக்கிறவனாகி விவா ஹத்திற்குவேண்டிய அந்த உபகரணங்களனைத்தையும் சேகரித் தான். பிறகு, அரசன் முதியவர்களான எல்லாப்பிராம்மணர் களையும் ரித்விக்குக்களையும் ஸபையோர்களையும் புரோஹிதர்களை யும் அழைத்துக்கொண்டு நல்லநாளில் கன்னியுடன் புறப்பட் டான். அந்த அரசன், பரிசுத்தமான வனத்திலுள்ள த்யுமத் ஸேனனுடைய ஆச்ரமத்தை அடைந்து கால்களாலேநடந்து பிராம்மணர்களோடு அந்தராஜரிஷியை அணுகினன். அந்த ஆச்ரமத்தில் மகாபாக்கியமுள்ளவனும் ஆச்சாமரத்தினடியிலிருப் பவனும் தருப்பையினாலாகிய ரிஷிகளுக்குரிய ஆஸனத்தில் உட் கார்ந்திருப்பவனும் கண்ணில்லாதவனுமான த்யுமத்ஸேனராஜனை அப்பொழுது கண்டான். அந்த அரசன், அந்தராஜரிஷிக்குத் தக்கபடி பூஜையைச்செய்து நல்லநியமமுள்ளவனாகி வாக்கினால், 'நான் அச்வபதி' என்று தன்னைத் தெரிவித்துக்கொண்டான். தர்மங்களை அறிந்தவனான அந்தத்யுமத்ஸேனராஜன் அந்த அச்வபதிக்கு அர்க்கியத்தையும் ஆஸனத்தையும்கொடுத்துக் [1] கோவையும் (கொடுப்படாதாகத்) தெரிவித்து, 'வந்ததற்குக் காரணம் யாது?' என்று அந்த அரசனை வினவினன். அவன் அந்த த்யுமத் ஸேனனுக்கு ஸத்யவானை உத்தேசித்துத் தன்னுடைய எல்லா அபிப் ராயங்களையும் செய்யவேண்டிய விஷயத்தையும் முழுமையுமே தெரி வித்தான். 'ராஜரிஷியே! அழகியவளான ஸாவித்ரி என்கிற என் னுடையபெண் இதோ இருக்கிறாள். தர்மங்களை அறிந்தவரே! நீர் இந்தப்பெண்ணை உமக்கு மருமகளாக நமக்குரியமுறைப்படி வண்ணிடத்தினின்று பெற்றுக்கொள்ளும்' என்றுசொன்னான்.

---

[1] பெரியோர்கள் வரும்பொழுது மதுபர்க்கத்துடன் கொடுக்கப் படுவது; ஸபாபர்வம் 74-ம் பக்கம் குறிப்புக்களிற் காண்க.

த்யுமத்ஸேனன், 'நாங்கள் ராஜ்யத்தினின்று நழுவினவர்களும் வனவாஸத்தை அடைந்தவர்களும் நியமமுள்ளவர்களும் தவஞ் செய்பவர்களுமாகத் தர்மத்தை அனுஷ்டிக்கிறோம். துன்பப்படத் தகாதவளான உம்முடையருமாரியானவள் ஆச்ரமத்தில் இந்த வனவாஸத்துன்பத்தை எவ்வாறு ஸஹிப்பாள்?' என்றுசொல்ல, அச்வபதி, 'உண்டாவனவும் அழிவனவுமான ஸுகத்தையும் துக்கத்தையும் என்பெண்ணும் நானுமே அறிந்திருத்தலால், என் னைப்போன்றவனிடத்தில் இப்படிப்பட்ட வாக்கியம் பொருத்த முள்ளதாகாது. அரசரே! நல்ல நிச்சயத்துடனே உம்மிடம் வந்திருக்கிறேன். ஸ்நேஹத்தினால் நமஸ்கரிக்கின்ற என்னுடைய ஆசையை நீர் கெடுக்கலாகாது. அன்புடன் உம்மை நோக்கி வந்திருக்கிற என்னை நீர் மறுப்பது தகாது. ஏனெனில், எனக்கு நீர் ஸம்பந்தத்திற்குத் தகுந்தவர்: உமக்கும் நான் ஒத்தவன். ஆதலால், என்னுடைய பெண்ணை ஸத்யவானுக்கு மனைவியும் உமக்கு மருமகளுமாக ஏற்றுக்கொள்ளும்' என்று வேண்டி னன். த்யுமத்ஸேனன், 'முன்னியே உம்மோடு ஸம்பந்தமானது என்னால் விரும்பப்பட்டிருந்தது. நான் இப்பொழுது ராஜ் யத்தை இழந்தவனாக இருக்கிறேன். ஆகலால், இது ஆலோ சிக்கப்பட்டது. என்னால் முன்னியே விரும்பப்பட்டிருந்த என்னுடைய இந்த அபிப்ராயமானது இப்பொழுதே நிறை வேறட்டும். நீர் என்னால் விரும்பப்பட்ட அதிதியாக இருக்கிறீர்' என்று சொன்னான்.

பிறகு, இரண்டு அரசர்களும், ஆச்ரமத்தில்வஸிக்கின்ற எல் லாப் பிராம்மணர்களையும் வருவித்து, முறைப்படி விவாகத்தை நடைபெறச்செய்தார்கள். அந்த அச்வபதி கன்னிகையைத் தகு திப்படி வேண்டிய ஸ்திரீதனங்களோடு ஸத்யவானுக்குக் கொடுத்து ஒப்பற்ற மகிழ்ச்சியுடனே தன் வீட்டைக்குறித் துச்சென்றான். ஸத்யவானும் எல்லாக்குணங்களுமுள்ள அந் தப்பெண்ணை மனைவியாகக்கொண்டு ஸந்தோஷமடைந்தான். ஸாவித்ரியும் மனத்தினால் விரும்பப்பட்ட அந்த ஸத்யவானைக் கணவனாக அடைந்து ஸந்தோஷித்தாள். அந்த ஸாவித்ரியான வள், தன்தை நகரத்திற்குச் சென்ற பிறகு, எல்லா ஆபரணங்களை யும் கழற்றிவைத்துவிட்டு மாவுரிகளையும் காஷாயவஸ்திரங்களை யுமே தரித்துக்கொண்டாள். பணிவிடைகளாலும் குணங்களா லும் ஸ்நேஹத்தாலும் இந்திரியங்களுடைய அடக்கத்தாலும்

எல்லாருக்கும் வேண்டியவற்றைச் செய்வதாலும் ஸந்தோஷத்தை உண்டுபண்ணினாள். வஸ்திரம் முதலிய சரீரத்துக்குச்செய்யும் எல்லா உபசாரணைகளாலும் மாமியாரையும், [1] தேவபூஜைகளாலும் வாக்கினுடைய அடக்கத்தாலும் மாமனாரையும், அப்படியே இன்சொல்லாலும் காரியத்திறமையாலும் அடக்கத்தினாலும் ஏகாந்தோபசாரங்களாலும் பர்த்தாவையும் ஸந்தோஷிக்கச் செய்தாள். பாரத! இவ்வண்ணம் அந்த ஆச்ரமத்தில் அப்பொழுது வஸித்துக்கொண்டிருக்கிற அவர்களுக்குத் தவஞ்செய்துகொண்டே சிலகாலம் சென்றது. வாட்டமடைகின்றவளும், அல்லும் பகலும் நின்றுகொண்டேயிருப்பவளுமான ஸாவித்திரிக்கு நாரதரால் சொல்லப்பட்ட வாக்கியம் மனத்தில் இருந்துகொண்டே வந்தது.

இருநூற்றுத்தொண்ணூற்றேழாவது அத்யாயம்.

பதிவ்ரதாமாஹாத்ம்யபர்வம். (தொடர்ச்சி.)

(நாரதரால் குறிப்பிடப்பட்ட மரணதினத்தில் ஸத்யவான் கோடாலியை எடுத்துக்கொண்டு வனத்திற்குச் சென்றதும், சாவித்திரியும் அவனைத் தொடர்ந்து சென்றதும்.)

வேந்தே! பிறகு, அனேக தினங்களடங்கின காலம் செல்லவே, ஒரு ஸமயத்தில், ஸத்யவான் மரிக்க வேண்டிய காலம் வந்தது. (நாட்களை) எண்ணிக்கொண்டிருக்கிற ஸாவித்ரிக்கு, நாட்கள் செல்லச்செல்ல, நாரதரால் சொல்லப்பட்ட வாக்கியமும் உள்ளத்தில் உறுதிபெற்று வந்தது. ஸாவித்திரியானவள், நான்காவது நாள் பர்த்தா மரிக்கும் நாளென்று நன்றாக ஆலோசித்து, மூன்று நாள்களால் நிறைவேற்றத்தக்க ஒரு விரதத்தை உத்தேசித்து இரவும் பகலும் நியமத்தில் நிலைபெற்றிருந்தாள். பாரத! த்ரயோதசியில் உபவாஸாரம்பம். பிரதமையில் பாரணை செய்கிறது. இந்த விரதத்தினால் பர்த்தாவுக்கு ஆயுள்விருத்தியடைகிறது. அந்த ஸாவித்ரியினுடைய அந்த நியமத்தைக்கேட்டு அரசன் (த்யுமத்ஸேனன்) மிகவும் மனவருத்தமுள்ளவனாகி எழுந்திருந்து, ஸாவித்திரியை இன்சொற் கூறிக்கொண்டு, 'ராஜபுத்ரி! உன்னால் மிகக்கடுமையான இந்தக்காரியம் தொடங்கப்பட்டிருக்கிறது. மூன்றுநாள்கள் போஜன

---

[1] 'தெய்வத்தைப்பூஜிப்பதுபோலப் பூஜிப்பதனாலும்' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

மில்லாமலிருப்பதென்பது ஒருவராலும் அனுஷ்டிக்கமுடியாதது' என்றுசொன்னான். ஸாவித்ரி, 'பிதாவே! நீங்கள் மனவருத்தப்பட வேண்டாம். நான் விரதத்தைச்செய்துமுடிப்பேன். இது விடா முயற்சியினல் செய்யப்பட்டதன்றே? (காரியம்நிறைவேறுதற்கு) விடாமுயற்சியே காரணம்' என்றுசொன்னாள். த்யுமத்ஸேனன், 'நான், 'விரதத்தை விட்டுவிடு' என்று உன்னைப்பார்த்துச்சொல்வ தற்கு எவ்விதத்தாலும் சக்தியுள்ளவனல்லேன். என்னைப்போன் றவன், 'விரதத்தை முடிவுபெறச்செய்' என்கிற பொருத்தமான வசனத்தைச் சொல்லவேண்டும்' என்றுசொன்னான்.

பெரியமனமுள்ள த்யுமத்ஸேனன் இவ்வண்ணமுரைத்துவிட் டுப் பேசாமலிருந்தான். நிற்கின்ற ஸாவித்ரியானவள், கட்டை யானவள்போலக் காணப்பட்டாள். பரதர்களுள்சிறந்தவனே! பர்த்தாவின் மரணமானது நாளை நேர்வதாக இருக்கையில், துக் கத்தையுடையவளும் நின்றுகொண்டே இருப்பவளுமான ஸாவித் ரிக்கு அந்த இரவானது மிக்கவருத்தத்துடன் சென்றது. கீர்த்தி யுள்ளவளான ஸாவித்ரியானவள், ஸ்நானம்செய்து சுத்தமாக இருந்துகொண்டு, 'நாரதரால்குறிப்பிடப்பட்ட அந்தப் பர்த்தா வின் மரணதினம் இன்று' என்று நிச்சயித்து, ஜ்வலிக்கின்ற அக்னியில் ஹோமம்செய்து, ஸூர்யன் உதித்து நான்குமுழ உயரம் மேலேவந்தவுடன் காலைக்கடன்களைச்செய்து விரதத்தை முடித்து, பிறகு, எல்லாப்பிராம்மணர்களையும் வயதுமுதிர்ந்தவர் களான மாமியாரையும் மாமனாரையும் வரிசையாக நமஸ்கரித்து, இருகரங்களையும் குவித்துக்கொண்டு நியமத்துடன் நின்றாள். தபோவனத்தில்வஸிக்கின்ற அந்த எல்லாத்தபஸிகளும் ஸாவித்ரி யின்பொருட்டு மங்களமங்கல்யத்தைக் கொடுக்கக்கூடியனவும் ஹிதமானனவையும் மங்களகரமானனவையுமான ஆசீர்வாதங்களைச் செய்தார்கள். தியானயோகத்தில் பற்றுதலுள்ளவருமான தவமுள் ளவருமான ஸாவித்ரியானவள், 'மனத்தினல் இவ்வண்ணம் ஆகட் டும்' என்று அந்த ஆசீர்வசனங்களனைத்தையும் ஏற்றுக்கொண் டாள். ராஜகுமாரியானவள், அந்தக்காலத்தையும் அந்த முஹூர்த் தத்தையும் எதிர்பார்க்கின்றவளும் நாரதரால் சொல்லப்பட்ட வசனத்தைச் சிந்திக்கின்றவளுமாகி மிகுந்த துக்கத்தை அடைந் தாள். பாதவம்சத்திலுதித்தவர்களுள் மிகச்சிறந்தவனே! பிறகு, மாமியார் மாமனர்களிருவரும் ஏகாந்தமான இடத்திலிருக்கிற அந்தராஜகுமாரியைப்பார்த்து, 'விரதம் எப்படி உபதேசிக்கப்

பட்டதோ அப்படியே அது உன்னால் நிறைவேற்றப்பட்டது. ஆகாரம்செய்துகொள்ளுகிற ஸமயம் வந்துவிட்டது. அடுத்துச் செய்யவேண்டியதைச்செய்' என்று அன்புடன் சொன்னாள். ஸாவித்ரி, 'ஸூர்யன் அஸ்தமயத்தை அடைந்த பிறகு, விருப்பம்நிறைவேற்றப்பட்டதான் புஜிக்கவேண்டும். இது என்மனத்திலுள்ள எண்ணம். என்னால் சபதமும் செய்யப்பட்டிருக்கிறது' என்றுசொன்னாள். இவ்வண்ணம் போஜனத்தைக்குறித்து ஸாவித்ரியானவள் பேசிக்கொண்டிருக்கும்பொழுதே, ஸத்யவான் தோளில் கோடாலியைவைத்துக்கொண்டு காட்டிற்குப் புறப்பட்டான்.

ஸாவித்ரி, பர்த்தாவைப்பார்த்து, 'நீர் ஒருவராகச் செல்லலாகாது. நான் உம்மோடுகூடவருவேன். எனெனில், உம்மை விட்டுப்பிரிதலை நான் பொறுக்கமாட்டேன்' என்று சொன்னாள். ஸத்யவான், 'நீ இதற்குமுன் காட்டில் சென்றதில்லை. பெண்ணே! வழியும் துன்பமானது. விரதத்தாலும் உபவாஸத்தாலும் இளைத்தவளான நீ கால்களால் எவ்வாறு நடப்பாய்?' என்றான். ஸாவித்திரி, 'உபவாஸத்தால் எனக்கு வாட்டமில்லை; களைப்புமில்லை. காட்டுக்கு வருவதில் விருப்பமுள்ள என்னை நீர் தடுக்கலாகாது' என்று சொன்னாள். ஸத்யவான், 'உனக்குவருவதில் விருப்பமிருந்தால், உன் விருப்பப்படி செய்வேன். என்னுடைய பெற்றோர்களிடம் விடைபெற்றுக்கொள். இந்தத்தோஷம் என்னை அணுகாது' என்று சொன்னான்.

'பெரியவிரதமுள்ள அந்தஸாவித்ரியானவள் மாமனாரையும் மாமியாரையும் நமஸ்காரம்செய்து, 'இதோ என்பர்த்தா பழங்களைக் கொண்டுவருவதற்காகப் பெருங்காட்டிற்குச் செல்லுகிறார். உங்களிருவர்களாலும் அனுமதிகொடுக்கப்பட்டு இவரோடு போக விரும்புகிறேன். இப்பொழுது பிரிதல் எனக்குத் தகாதது. குருவின் அக்னிஹோத்ரத்திற்குவேண்டியவைகளைக் கொண்டுவருவதற்காகப் புறப்பட்டிருந்தலால், உங்களுடையபுத்திரர் தடுக்கப்படத்தக்கவரல்லர்; வேறுகார்யத்துக்காக வனத்துக்குப்புறப்பட்டால் தடுக்கப்படத்தக்கவராகலாம். நான்வந்து கொஞ்சம்குறைய ஒருவருஷகாலம் ஆகிவிட்டது. நான் ஆச்ரமத்திலிருந்து இதுவரையில் வெளியில்சென்றதில்லை. மேலும், பூத்திருக்கிறகாட்டைப் பார்ப்பதற்கு எனக்கு மிக்க ஆசையிருக்கிறது' என்றுசொன்னாள். த்யுமத்ஸேனன், 'இந்த ஸாவித்ரியானவள், அவளுடைய பிதாவினால் எனக்கு மருமகளாகக் கொடுக்கப்பட்டகாலமுதல்,

இதுவரையில், (தனக்கென ஒன்றையும்) பிரார்த்தித்ததாக எனக்கு நினைவில்லை. ஆகையால், 'இந்தப்பெண் விரும்பினதை விரும்பின படி அடையட்டும். பெண்ணே! ஸத்யவானுடையவழியில் கவனம் வைப்பாயாக' என்றுசொன்னார்.

மாமியார் மாமனாரிருவராலும் அனுமதிகொடுக்கப்பட்ட வளரும் புகழுள்ளவளுமான அந்தஸாவித்ரியானவள் துயரப்படு கின்ற மனத்துடன் சிரிப்பவள்போலப் பர்த்தாவோடு சென் ரூள். விசாலமானகண்களுள்ள அந்த ஸாவித்ரியானவள் விசித் திரமானவையும் எங்கும் அழகாயிருப்பவையும் மயில்களின் கூட்டங்களாலடையப்பட்டவையுமான காடுகளைக் கண்டாள். ஸத்யவான், ஸாவித்ரியைப்பார்த்து, 'பரிசுத்தமாக ஓடுகின்ற நதி களையும் பூத்திருக்கிற சிறந்தமரங்களையும் பார்' என்று இனிய சொல்லைச் சொன்னான். குற்றமற்ற ஸாவித்ரியானவள் எல்லா நிலைமைகளிலும் பர்த்தாவை நன்குபார்த்துவந்தாள்; காலத்தில் நாரதமுனிவருடையவசனத்தை நினைத்து அந்தஸத்யவானை மாண்டவனுகவே எண்ணினாள். அவள், உள்ளத்தை இரண்டு போலச் செய்துகொண்டு, அந்தக்காலத்தை எதிர்பார்க்கின்றவ ளாகவும் பர்த்தாவை அனுஸரிக்கின்றவளாகவும் மெல்ல நடந்து சென்றாள்.

இருநூற்றுத்தொண்ணூற்றெட்டாவது அத்யாயம்.

பதிவ்ரதாமாஹாத்ம்யபர்வம். (தொடர்ச்சி.)

(ஸத்யவான் பழங்களைப்பறித்து வைத்துவிட்டுக் கட்டையைப்பிளந்த தும், அவன் தலைவலிபொறுக்கமுடியாமல் ஸாவித்திரியின்மடியில் தலைவைத்துப்படுத்ததும், அருகில் யமனைப்பார்த்த ஸாவித்ரி அவனுடைய வரவுக்குக் காரணத்தை வினவியதும், யமன் தான்வந்தகாரணத்தைக் கூறிப் பாசத்தால் ஸத்திய வானைக் கட்டி அவனுடைய தேகத்தினின்று அவனை இழுத்துக்கொண்டு சென்றதும், ஸாவித்ரி யமனைப் பின்தொடர்ந்து சென்று துதித்ததும், அவன் அவளுக்கு வரங்களைக்கொடுத்து ஸத்யவானை அவிழ்த்து விட்டதும், ஸத்யவான் ஸாவித்ரி யோடு திரும்பிவந்ததும்.)

பிறகு, மிக்கசக்தியுள்ள அந்தஸத்யவான் மனைவியுடன் பழங்களைப்பறித்துக் கூடையை நிரப்பினான்; பிறகு, கட்டை

கீளப் பிளந்தான். கட்டடையப்பிளக்கின்ற அந்தஸத்யவானுக்கு வேர்வை உண்டாயிற்று. அந்த ஸ்ரமத்தினால் அவனுடைய தலையில் வலி உண்டாயிற்று. ஸ்ரமத்தினால் பீடிக்கப்பட்ட அந்த ஸத்யவான், ப்ரியமான மனைவியை அணுகி, 'இந்தக்கட்டடையைப் பிளந்ததனால் எனக்குத் தலைவலி உண்டாயிற்று. ஸாவித்ரியே! அங்கங்கள் சோர்வடைகின்றன. ஹ்ருதயமானது பரிதாபத்தை அடைகிறதுபோலும். மிதமாகப்பேசுகிறவளே! என்னை நிலைமை தப்பினவன்போலக் காண்கின்றேன். நான், இந்தத்தலையைச் சூலங்களால் குத்தப்பட்டிதைப்போலக் காண்கிறேன். திசைகளனைத்தும் சுற்றுகின்றனபோலும். என்னுடைய மனமானது சக்கரத்தில் ஏறி இருக்கிறது. 'கல்யாணி! ஆதலால், தூங்குவதற்கு விரும்புகிறேன். எனக்கு நிற்கச்சக்தியில்லை' என்று சொன்னான். அந்தஸாவித்ரி கிட்டவந்து பர்த்தாவை அடைந்து மடியில் அவனுடையதலையை வைக்கும்படிசெய்து பூமியில் உட்கார்ந்தாள். பிறகு, தவமுள்ள அந்தஸாவித்ரியானவள் நாரதருடையவசனத்தை ஆலோசிக்கின்றவளாக அந்தத்தினத்தையும் அந்தமுகூர்த்தத்தையும் அந்தக்ஷணத்தையும் அந்தவேளையையும் நினைத்துக்கொண்டாள். 'கஷ்டம்! அந்தக்காலம் இதோவந்துவிட்டதே' என்று கவலையுற்றவளான அந்தப்பதிவ்ரதை, ஒருமுகூர்த்தகாலத்திற்குள்ளாகவே, சிவப்புவஸ்திரம் உடுத்தவனும் கிரீடந்தரித்தவனும் கல்லிதகமுள்ளவனும் சூரியனுக்கொப்பான ஒளியுள்ளவனும். கருமைநிறமுள்ளவனும் சிவந்தகண்களையுடையவனும் பாசத்தைக்கையில்வைத்திருப்பவனும் பயத்தைஉண்டுபண்ணுகிறவனுமான ஒரு புருஷன் ஸத்தியவானுடைய பக்கத்தில் அவனையே உற்றுப்பார்த்துக்கொண்டு நிற்பதைக் கண்டாள்.

ஸாவித்ரியானவள், அவனைக்கண்டு உடனே எழுந்திருந்து கணவனுடையதலையை மெதுவாகக் கீழேவைத்துவிட்டு, கைகுவித்துக்கொண்டவளும் துன்பமுற்றவளும் உள்ளத்தால்மிகநடுங்குகின்றவளுமாகி, 'உம்மைத் தேவனென்று அறிகிறேன். இந்தச்சரீரமானது மானிடர்க்குரியதாயில்லை. தேவசேர! உம்மை அறியவிரும்புகிறேன். சொல்லும். நீர் யார்? எதைச்செய்யவிரும்புகிறீர்?' என்றுவினவினாள். யமன், 'ஸாவித்ரி! நீ பதிவ்ரதையாயிருக்கிறாய். அப்படியே, தவமுடையவளுமாயிருக்கிறாய். அதனால், உன்னோடு பேசுகிறேன். கல்யாணி! நீ என்னை யமனென்று அறி. உன்னுடைய பர்த்தாவும் ராஜகுமாரனுமான இந்த ஸத்யவான்

ஆயுள் முடிந்தவனுக இருக்கிறான். நான் அவனைப் பாசத்தால் கட்டிக்கொண்டுபோவேன். இதனை நான் செய்ய விரும்புகிறேன் என்று நீ அறிவாயாக' என்று சொன்னான்.

ஸாவித்ரி, 'பகவானே! மனிதர்களைக் கொண்டுபோவதற்கு உம்முடைய தூதர்கள் வருவார்களென்றன்றோ கேட்டிருக்கிறேன். பிரபுவே! அவ்வாறிருக்க, யாதுகாரணம்பற்றி நீரே நேரில் வந்திருக்கிறீர்?' என்று வினவினாள். இவ்வாறு சொல்லப்பட்ட பகவானை, யமதர்மராஜன், ஸாவித்ரிக்குப் பிரியத்தைச் செய்வதின்பொருட்டு, அவளை நோக்கித் 'தன் எண்ணம் முழுமையையும் உள்ளபடி சொல்லத்தொடங்கினான். 'இவன் தர்மத்தோடு கூடினவன்; நல்ல ரூபமுள்ளவன்; குணக்கடல்; என்னுடைய தூதர்களாலே கொண்டுபோவதற்குத் தகாதவன். ஆதலால், நானே நேரில் வந்தேன்' என்று சொன்னான். பிறகு, யமன் ஸத்யவானுடைய தேகத்திலிருந்து பாசத்தால் கட்டப்பட்டவனும் தனக்கு வசப்பட்டவனும் அங்குஷ்டமாத்திரனுமான புருஷனை வலித்து இழுத்தான். பிறகு, உயிர்வாங்கப்பெற்றதும் மூச்சுப்போனதும் ஒளிகெட்டதும் அசைவற்றதுமான அந்தச் சரீரமானது விரும்பத்தகாத தோற்றமுள்ளதாயிற்று. யமனை, அவனைக் கட்டிக்கொண்டு அங்கிருந்து தெற்குநோக்கிச் சென்றான். தவத்தையுடையவரும் அப்படிப்பட்ட நிலைமையை அடைந்திருக்கிற பர்த்தாவைப் பின்தொடர்பவரும் அழகிய இடையுள்ளவருமான நியமத்தாலும் விரதத்தாலும் கண்டு ஸித்தி பெற்றவரும் பிரகாசமுள்ளவருமான பதிவ்ரதையுமான ஸாவித்ரியும், தூரத்தால் பிடிக்கப்பட்டவளாகப் பர்த்தாவினுடைய சரீராகர்ஷணத்தைச் செய்து, யமனைப் பின்தொடர்ந்து சென்றாள். யமன், 'ஸாவித்ரி! திரும்பு; போ. இவனுக்குச் செய்யவேண்டிய பிரேதகர்மங்களைச் செய்வாயாக. பர்த்தாவிஷயத்தில் கடனாளியாகாதிருத்தல் உன்னால் சிரத்தைசெய்யப்பட்டது. நீ வரத்தைக்கேட்டு வாங்கிக்கொள்' என்று சொன்னான்.

ஸாவித்ரி, 'எந்த இடத்துக்கு என்பர்த்தா கொண்டுபோகப்படுகிறாரோ, அல்லது, தாம் எங்குப் போகிறாரோ, அந்த இடத்தில் நானும் செல்லவேண்டும். இதுதான் சாச்வதமான தர்மம். தவத்தினாலும் குருபக்தியினாலும் பர்த்தாவினிடத்திலுள்ள நேசத்தாலும் விரதத்தாலும் உம்முடைய அனுக்கிரஹத்தாலும் நான் வருவது தடுக்கப்படவில்லை. தத்துவார்த்தத்தைத்தண்டு நிற்க பண்டி-

தர்கள் ஸ்நேகத்தை [1] ஏழுபதங்களால் அடையத்தக்கதென்று சொல்லுகிறார்கள். ஆகையால், நட்பை முன்னிட்டு ஒருவிஷயத்தைச் சொல்லுவேன். அதனைக் கேட்பீராக. இந்திரியங்களை ஜயிக்காதவர்கள், வனத்தில் (கிருகஸ்தர்களுக்கும் வானப்ரஸ்தர்களுக்குமுரிய யஜ்ஞம்முதலிய வைதிக) தர்மத்தையும், (பிரம்மசாரிகளுக்குரிய குருகுல) வாஸத்தையும், (ஸர்வஸங்கபரித்யாகரூபமான) ஸந்யாஸத்தையும் அனுஷ்டிக்கிறதில்லை. ஆத்மஜ்ஞானத்திற்காகத் தர்மத்தைச் செய்யவேண்டுமென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஆகையால், ஸாதுக்கள் தர்மத்தை முதன்மையாகக் கூறுகிறார்கள். ஸாதுக்களுக்கு ஸம்மதமான ஓர் ஆச்ரம தர்மத்தால் எல்லாரும் அந்த ஜ்ஞானமார்க்கத்தை அடைகிறார்கள். ஆகையால், ஸாதுக்கள் ஆத்மஜ்ஞானத்திற்கு (கிருகஸ்த வானப்ரஸ்த) தர்மத்தை ப்ரதானமாகச் சொல்லுகிறார்கள். நான், (மேலிசொல்லப்பட்ட) இரண்டாவதான நைஷ்டிக ப்ரம்ம சர்யத்தையும் மூன்றுவதான ஸன்யாஸத்தையும் விரும்பவில்லை' என்றாள். யமன், 'நீ திரும்பு. (உதாத்தமுதலிய) ஸ்வரங்களோடும் உயிரெழுத்துக்களோடும் மெய்யெழுத்துக்களோடும் யுக்திகளோடும் கூடின உன்னுடைய இந்த வாக்கினால் ஸந்தோஷமுள்ளவனாக இருக்கிறேன். இச்சமயத்தில் இவனுடைய உயிரைத்தவிர வேண்டியவரத்தை வரிப்பாயாக. இகழப்படாதவளே! எல்லா வரங்களையும் உனக்குக் கொடுக்கிறேன்' என்று சொன்னான்.

ஸாவித்ரி, 'தர்மராஜரே! என்னுடைய மாமனார் தம்முடைய ராஜ்யத்தினின்று நழுவினவராகவும் அரண்யவாஸத்தை அடைந்தவராகவும் கண்களை இழந்தவராகவும் ஆச்ரமத்திலிருக்கிறார். அந்த அரசர் உம்முடைய அனுக்ரஹத்தினால் கண்களைப் பெற்றவராகவும் கல்லபலசாலியாகவும் அக்னிக்கும் ஸூர்யனுக்கும் ஒப்பானவராகவும் ஆகவேண்டும்' என்று பிரார்த்தித்தாள். யமன், 'இகழப்படாதவளே! நான் உனக்கு அந்த வரத்தைக் கொடுக்கிறேன். உன்னால் சொல்லப்பட்டது அப்படியே ஆகும். வழிநடையினால் உனக்கு வாட்டத்தைக் காண்கிறேன். திரும்பிச்செல். உனக்கு ச்ரமம் வேண்டாம்' என்று சொன்னான்.

ஸாவித்ரி, 'பர்த்தாவினுடைய ஸமீபத்தில் எனக்கு ச்ரமம் ஏது? பர்த்தா இருக்குமிடமே எனக்குச் சாச்வதமான கதி. எந்த இடத்திற்கு என்பதியைக் கொண்டுபோவீரோ அந்த இடமே

---

[1] அநுசாஸனபர்வம் 550-ம் பக்கம் குறிப்பிற்காண்க.

எனக்குக் கதி. தேவகாதரே! மீண்டும் என்னுடைய வசனத்தை நீர் அறிந்துகொள்ளும். ஸாதுக்களுடன் ஒருதரம் சேர்க்கையும் சிறந்ததென்று விரும்பப்படுகின்றது; ஸ்நேகத்தையோ ஆதரவினை விடச் சிறந்ததென்று சொல்லுகிறார்கள். ஸத்புருஷர்களோடு ஸ்நேகமானது வீணாகாது. ஆகையால், ஸாதுக்களுடைய கூட்டத்திலேயே வஸிக்கவேண்டும்' என்று சொன்னாள். யமன், 'பெண்ணே! உன்னால் சொல்லப்பட்ட வசனமானது மனத்துக்கு அனுகூலமானது; பண்டிதர்களுக்குப் புத்தியை விருத்திபண்ணக்கூடியது; நன்மைக்கு ஆதாரமாக இருக்கிறது. மறுபடியும், இந்த ஸத்யவானுடைய உயிரைத்தவிர வேறான இரண்டாவது வரத்தை வரிப்பாயாக' என்றான்.'

ஸாவித்ரி, 'முற்காலத்தில், பகைவர்களால் கவரப்பட்டதும் தம்முடையதுமான ராஜ்யத்தையே சிறந்த புத்தியை உடைய வரும் அரசருமான அந்த என்மாமனார் அடையவேண்டும். என்னுடைய மாமனார் ஸ்வதர்மங்களைவிடாமலிருக்கும்படி அருள் புரியவேண்டும். இரண்டாவதான இந்த வரத்தை உம்மிடத்திலிருந்து வரிக்கிறேன்' என்று சொன்னாள். யமன், 'ராஜகுமாரி! த்யுமத்ஸேனனாகாராஜன் தன்னுடைய ராஜ்யத்தைச் சீக்கிரமாகவே அடைவான். தன்னுடைய தர்மத்தினின்று தவறமாட்டான். நான்னால் உன்னிநாப்பம் நிறைவேற்றப்பட்டது. ஆதலால், திரும்பிச்செல். உனக்கு ஸ்ரமமுண்டாகவேண்டாம்' என்று சொன்னான்.

ஸாவித்ரி, 'உம்மால் இந்தப்ரஜைகள் நிதிப்படி ஸம்யமனம் (=அடக்குதல்) செய்யப்படுகின்றனர். இந்தப்ரஜைகளை நீர் நிந்தைசெய்து கொண்டுபோகிறீர். உமது இச்சையினால் கொண்டுபோகிறதில்லை. தேவரீர! அதனால், உமக்கு யமனுடைய தர்மத்தை பிரஸித்தமாக இருக்கிறது. நான்னால் சொல்லப்பட்ட இந்த வசனத்தையும் அறிந்துகொள்ளும். ஸப்தபதிகளினால் மட்டும் சிநேகமுண்டாகிறதில்லை. ஸத்புருஷர்களிடமும் சிநேகமுண்டாகிறது. ஸாதுக்களுடைய ஸமாகமம் ஸர்வதாபத்ரமான தர்மம். இந்த உலகமானது பெருநன்மையாக இவ்வண்ணமிருக்கிறது. மானிதர்கள் சக்தியினால் குறைந்தவர்கள். ஸத்புருஷர்களோ தம்மை வந்தடைந்திருக்கிற பகைவர்களிடமும் கருணைபுரிகிறார்கள்' என்று சொன்னாள். யமன், 'தாகங்கொண்டவனுக்குத் தண்ணீர் போல உன்னால் இந்த வாக்கியம் உபயோகப்படுத்தப்பட்டது. கல்யாணி!

இந்த ஸத்யவானுடைய உயிரைத்தவிர வேறு விரும்புகிற வரத்தை இந்த ஸமயத்தில் வரிப்பாயாக' என்று மிசான்னான்.

ஸாவித்ரி, 'என்னுடைய பிதாவான அச்வபதிமகாராஜர் புத்திரபாக்கியமில்லாதவர். அப்படிப்பட்ட என்பிதாவுக்குக் குலத்தின் ஸந்தானத்தை விருத்திசெய்கிற நூறு ஔரஸபுத்திரர்கள் உண்டாகவேண்டும். இந்த மூன்றுவது வரத்தை உம்மிடத்தி லிருந்து வரிக்கிறேன்' என்றாள். யமன், 'கல்யாணி! குலத்திற்கு இடையறுத தொடர்ச்சியை உண்டுபண்ணுகிறவர்களும் நல்ல ஒளி யுள்ளவர்களுமான நூறு புத்திரர்கள் உன்பிதாவுக்கு உண்டாகட் டும். ராஜபுத்திரி! என்னால், உன்னிருப்பம் நிறைவேற்றப்பட்டது. ஆதலால், திரும்புவாயாக. வழியினின்று நெடுந்தூரமல்லவோ வந்துவிட்டாய்' என்றான்.

ஸாவித்ரி, 'கணவருக்கருகிலிருத்தலால், எனக்கு இது தூர மன்று. என்மனமானது நெடுந்தூரம் ஓடுகிறதன்றே! (என் மனத்தில்) நீகான்றியதும் என்னால் சொல்லப்படுகின்றதுமான இந்த வார்த்தையை நீர் போய்க்கொண்டே கேட்பீராக. பிரதாப முள்ள நீர் விவஸ்வானுடைய (=ஸூர்யனுடைய) புத்ரர். அதனா லன்றே கற்றறிந்தவர்களால் வைவஸ்வதரென்று சொல்லப்படு கிறீர்! ஈச்வரரே! அந்தப்ரஜைகள் (பகை கட்டு என்னும் வேறு பாடில்லாத) ஸமமான உமது ஆட்சியினால் வசப்பட்டு நடக்கின் றன. அதனால், உமக்கு இந்த உலகத்தில் தர்மராஜரென்னப்படுதல் ஸித்தித்திருக்கிறது. ஸாதுக்களிடம் உண்டாகிறதுபோன்ற நம்பிக்கை தன்னிடத்திலும் உண்டாகிறதில்லை. ஆகையால், எல் லாரும் ஸாதுக்களிடம் ஸ்நேகத்தை விசேஷமாக விரும்புகிறார் கள். அன்பிருப்பதனால் எல்லாப் பிராணிகளுக்கும் நம்பிக்கை யென்பது உண்டாகிறது. ஆகையால், ஜனங்கள் ஸாதுக்களிடம் விசேஷமாக நம்பிக்கைவைக்கின்றார்கள்' என்று சொன்னாள். யமன், '(பெண்ணே!) கல்யாணி! உன்னால் சொல்லப்பட்டது போன்ற வசனத்தை உன்னைத்தவிர மற்றவர்களிடத்தினின்று நான் இதற்குமுன் கேட்டதில்லை. இதனால் நான் ஸந்தோஷமுள்ள வனாக இருக்கிறேன். இவனுடைய பிராணனைத்தவிர வேறான நான்காவது வரத்தைக் கேட்டுக்கொள்; போ' என்றான்.

ஸாவித்ரி, 'எனக்கும் ஸத்யவானுக்கும் குலத்தை உத்தார ணம் செய்கிறவர்களும் பலமும் சக்தியுமுள்ளவர்களுமான நூறு ஔரஸபுத்திரர்கள் உண்டாகவேண்டும். இந்த நான்காவது

வாத்தை உம்மிடத்தினின்று வரிக்கிறேன்' என்றாள். யமன், 'பெண்ணே! பலமும் சக்தியுமுள்ளவர்களும் ப்ரீதியை உண்டுபண்ணுகிறவர்களுமான நூறுபுத்திரர்கள் உனக்கு உண்டாவார்கள். ராஜகுமாரியே! உனக்குப் பரிச்ராமமுண்டாகவேண்டாம். திரும்பிப் போ. வழியினின்று நெடுந்தூரம் வந்துவிட்டாய்' என்றான்.

ஸாவித்ரி, 'என்னைப்போன்ற பதிவ்ரதைகளுக்கு எப்பொழுதும் பதியினிடத்திலிருந்து குழந்தைகளை உண்டுபண்ணிக்கொள்வதே ஸநாதன தர்மவ்ருத்தியாக இருக்கிறது. பெரியோர்கள் வரத்தைக்கொடுத்துவிட்டு என்கொடுத்தீதுமென்று வாட்டமடையமாட்டார்கள்; மனவருத்தத்தையுமடையமாட்டார்கள். ஸாதுக்களுக்கு ஸாதுக்களோடு ஸேர்க்கையானது பயனற்றதாகாது. ஸாதுக்கள் ஸாதுக்களிடத்தினின்று பயத்தை அடையமாட்டார்கள். அரசரே! ஸாதுக்கள் ஸத்தியத்தினால் ஸூர்யனை நடத்துகிறார்கள். ஸாதுக்கள் தபத்தினால் பூமியைத் தாங்குகிறார்கள். ஸாதுக்கள் சென்றதற்கும் இனிவருவதற்கும் சுதியாக இருக்கிறார்கள். ஸாதுக்களுடைய மத்தியில் ஸாதுக்கள் காரியம் நடைபெறுமையினால் வருந்துகிறதில்லை. 'இது பெரியோர்களால் ப்ரீதியோடு அடையப்பட்ட சாச்வதமான நடை' என்று அறிந்து ஸாதுக்கள் பிறருக்கு உபகாரத்தைச் செய்து அதற்கு ப்ரதிப்ரயோஜனத்தை எதிர்பார்க்கிறதில்லை. ஸத்புருஷர்களிடம் உண்டாகிற ஸம்தோஷம் ஸீணிக்கிறதில்லை; அர்த்தமும் அழிகிறதில்லை; கௌரவமும் அழிகிறதில்லை. இந்த மூன்றும் ஸத்புருஷர்களிடம் நிலைத்திருப்பதால் அவர்கள் கூப்பிடுவர்களாகிறார்கள்' என்று சொன்னாள். யமன், 'பதிவ்ரதையே! தர்மங்களோடு கூடியதும் மனத்துக்கு அனுகூலமானதும் நல்லபதங்களுள்ளதும் அதிகமான அர்த்தங்களையுடையதுமான வசனத்தைச் சொல்லச், சொல்லெனக்கு உன்னிடத்தில் உத்தமமான பக்தி உண்டாகிறது. நீகரில்லாதவரத்தைப் பெற்றுக்கொள்வாயாக' என்று சொன்னான்.

ஸாவித்ரி, 'கௌரவத்தைக் கொடுப்பவனே! (நீர் முன்னரே எனக்குக் கொடுத்த) புத்ரபௌத்ராதிகியென்னும் வரமானது தம்பதிகளின் சிறந்த சேர்க்கையின்றி [1] மற்ற ஸாதனங்

---

1 க்ருதஸ்ய வ்ருதஸ்ய' என்பது மூலம்; 'கொண்டவனல்லாத மற்றவரைக் கணவராக அடைந்து, மதயந்தி வல்லிஷ்டரைக்கொண்டு ஸந்ததியை அடைந்ததுபோல, நான் செய்விரும்பவில்லை' என்பது பழையவுரை. ஆதிபர்வம் 469, 710-பக்கங்கள் பார்க்க.

களிற்போல நிறைவேறுது.' ஆதலால், இந்தவாத்தையும் வேண்டு கிறேன். இந்தஸத்யவான் பிழைக்கவேண்டும். நான் இவ்வண் ணம் பதியைவிட்டிருந்தால் மரித்தவள்போன்றவளே. நான் பர்த்தாவைவிட்டுப்பிரிக்கப்பட்டு ஸுகத்தையும் ஸ்வர்க்கத்தை யும் ஸம்பத்தையும் உபேக்ஷோடிருப்பதையும் விரும்பவில்லை. எனக்கு நூறுபுத்திரர்கள் உண்டாவார்களென்கிறவரம் உம்மா லேயே கொடுக்கப்பட்டது. என்னுடையபதியோ உம்மால் கொண்டுபோகப்படுகிறார். வரத்தை வரிக்கிறேன். இந்த ஸத்ய வான் பிழைக்கக்கடவர். 'உம்முடையவசனம் ஸத்யமே ஆகுக' என்று சொன்னாள்.

தர்மராஜனும் வைவஸ்வதனுமான யமன், 'அப்படியே' என்றுசொல்லி மனமகிழ்ந்து அந்தப்பாசத்தை அழித்து விட்டு ஸாவித்திரியைப்பார்த்து, 'கல்யாணி! குலத்தை மகிழ் விப்பவளே! இதோ உன்னுடையபர்த்தா என்னால் அவிழ் த்துவிடப்பட்டான். பதிவ்ரதையே! நான் உன்னால் தர்மங்க ளோடும் நல்ல அர்த்தங்களோடும்கூடின வாக்கியங்களால் ஸந்தோஷத்தை அடையும்படி செய்விக்கப்பட்டேன். இந்த ஸத்ய வான், ரோகமில்லாதவனாக அழைத்துச்செல்லத்தக்கவன்; புரு ஷார்த்தங்கள் நிறைவேறினவனாவான்; உன்னோடுகூடி நானூறு வர்ஷங்கள் வாழ்நாளை அடைவான்; யஜ்ஞங்களால் தேவர்களைப் பூஜித்து உலகத்தில் தர்மத்தால் புகழை அடைவான்; உன் னிடத்தில் நூறுபுத்திரர்களை உண்டுபண்ணுவான். க்ஷத்திரியர் களான அவர்களனைவரும், அரசர்களும் பிள்ளைபோன்றவர்களும் வர்களும் பிரஸித்தியுள்ளவர்களும் (ஸாவித்திரர்களென்னும்) உன் பெயருள்ளவர்களும் இவ்வுலகில் சாச்வதர்களுமாயிருப்பார்கள். உன் பிதாவுக்கு உண்மாதாவான மாளவியினிடத்தில் நூறுபிள் ளைகள் உண்டாவார்கள். உன்னுடைபந்துமித்ரர்கள் மிலவர்க ளென்கிறபிரஸித்திபெற்றவர்களும் சாச்வதர்களும் புத்திரர்களு டனும் பௌத்திரர்களுடனும்கூடியவர்களும் தேவதைகளுக்கொப் பான க்ஷத்திரியர்களும் ஆவார்கள்' என்றான். பிரதாபசாலியான யமன், ஸாவித்ரிக்கு இவ்வண்ணம் வரத்தைக்கொடுத்து அவளைத் திரும்பிப்போகும்படிசெய்து தன்னுடையஇருப்பிடமேசென்றான்.

ஸாவித்ரியும், யமன்சென்றபிறகு, பர்த்தாவைத் திரும்ப அடைந்து தன்பர்த்தாவின் உயிரில்லாதசரீரமிருக்கிற இடம் சென்றாள். அவள் தூரயில் பர்த்தாவைப்பார்த்துக் கிட்ட

நெருங்கிக் கட்டி எடுத்துத் தன்மடியில் அவனுடைய தலையைத் தூக்கிவைத்துக்கொண்டு பூமியில் உட்கார்ந்தாள். அந்த ஸத்யவான், மீண்டும் நினைவை அடைந்து, தேசாந்தரம்போய்த் திரும்பி வந்தவன்போல அன்போடு ஸாவித்திரியை மறுபடியும் மறுபடியும் நிமிர்ந்துபார்த்து, 'நெடுநேரம் தூங்கிவிட்டேன். என்னகார ணத்தினல் நீ என்னை எழுப்பவில்லை? என்னை இழுத்த கறுத்த புருஷன் எங்கே?' என்று வினவினான். ஸாவித்ரி, 'புருஷச்ரேஷ்டரே! நீர் நெடுநேரம் என்மடியில் உறங்கினீர். பிரஜைகளை அடக்குகிறவரும் பகவானுமான அந்த யமதேவர் புறப்பட்டுப் போய்விட்டார். மகாபாக்கியமுள்ளவரே! களைப்பாறிவிட்டீர். ராஜகுமாரரே! விழித்துக்கொண்டீர். கூடுமானல், எழுந்திரும். இரவு இருளாலடர்ந்திருப்பதைப் பாரும்' என்றுசொன்னாள்.

ஸத்யவான், பிறகு, நினைவை அடைந்து, ஸுகமாகத் தூங்கின வன்போல எழுந்திருந்து எல்லாத்திசைகளையும் வனப்ரதேசங் களையும் பார்த்து, 'நல்ல இடையுள்ளவளே! பழங்களைக்கொண்டு வருதற்காக உன்னுடன் நான் புறப்பட்டேன். பிறகு, கட்டை யைப்பிளக்கையில் எனக்குத் தலைவலி உண்டாயிற்று. கல்யாணி! தலைவலியினல் வருத்தப்பட்டநான் நெடுநேரம் நிற்பதற்குச் சக்தியற்றவனாகி உன் மடியில் உறங்கினேன். இவையெல்லாம் எனக்கு நினைவிருக்கின்றன. உன்னல் கழுவிக்கொள்ளப்பட்ட என்னுடைய மனமானது நித்திரையினல் கவரப்பட்டது. பிறகு, கோரமான இருட்டையும் அதிகதேஜஸ்ஸுள்ள ஒரு புருஷனையும் பார்க்கிறேன். அழகிய இடையுள்ளவளே! அதனை நீ நன்றாக அறிகிறாயாகில் சொல். அது என்ன? என்னல் காணப்பட்டதுதான் கனவோ? அல்லது,' அது உண்மைதானே?' என்று ஸாவித்திரியை வினவினான். ஸாவித்ரி, பிறகு, அவனைப்பார்த்து, 'ராஜகுமாரரே! ராத்திரியானது விசேஷமாக விருத்தியடைகிறது. எல்லாவற்றையும் நடந்தபடி உமக்கு நாளைத்தினம் சொல்லுவேன். எழுந்திரும்; எழுந்திரும். உமக்கு மங்களம். நல்லவிரதமுள்ள வரே! உம்முடையமாதாபிதாக்களைப் பார்க்கக்கடவீர். சூரியன் அஸ்தமனத்தை அடைந்துவிட்டான். இந்த ராத்திரியானது நடுநிசியாகிறது. இதோ ராக்ஷஸர்கள் சந்தோஷத்துடன் பயங் கரமாகப்பேசிக்கொண்டு ஸஞ்சரிக்கின்றார்கள். காட்டில்திரிகின்ற மிருகங்களுடையகூக்குரல்களால் மிதிக்கப்படுகின்ற சருகுகளின் சத் தங்களும் கேட்கப்படுகின்றன. இதோ நரிகள் உக்கிரமாக என்

னுடைய மனத்தை நடுங்கச் செய்துகொண்டும் தென்மேற்குத் திசையை அடைந்து கோரமான ஓலிகளை வெளியிட்டுக்கொண்டும் உலாவிடுகின்றன' என்றாள்.

ஸத்யவான், 'வனமானது இருளால் மூடப்பட்டுப் பயங்கரமான தோற்றமுள்ளதாக இருக்கிறது. வழியை நீ அறியவும் முடியாது. நடந்துசெல்வதற்கும் சக்தியுள்ளவளாகமாட்டாய்' என்றுசொன்னான். ஸாவித்ரி, 'இவ்விடத்தினின்று நீர் செல்வதற்கு விரும்பாவிடில், எரிக்கப்பட்ட இந்தக்காட்டில் ஓர் உலர்ந்தமரமானது கீழேவிழாதல் இப்பொழுது எரிந்துகொண்டிருக்கிறது. அங்கே சிலசிலவிடங்களில் அக்னியானது காற்றினால் வீசப்பட்டுக் காணப்படுகிறது. அங்கிருந்து நெருப்பைக்கொண்டுவந்து இந்த இடத்தில் நாற்புறங்களிலும் மூட்டி எரியச்செய்வேன். இங்கே விறகுகளிருக்கின்றன. மனவருத்தத்தை விடும். உம்மை நோயுள்ளவராகக் காண்கிறேன். இருளால் மூடப்பட்டிருக்கிறகாட்டில் வழியையும் நீர் அறியமாட்டீர். காலைக்காலையில் காடு காணத்தக்கதாக இருக்கும்போது, உம்முடைய அனுமதியினால் செல்வோம். தோஷமற்றவரே! உமக்கு இஷ்டமிருக்குமாகில், இந்த ஓர் இரவுமுழுமையும் இங்கு வஸிப்போம்' என்றுசொன்னாள்.

ஸத்யவான், 'என்னுடைய தலைவலி போய்விட்டது. அங்ஙனங்கள் தத்தம் நிலைமையை அடைந்திருப்பதைக் காண்கிறேன். மாதாபிதாக்களோடு சேர்க்கையை உன்னுடைய உதவியால் உண்டாகவேண்டுமென்றுவிரும்புகிறேன். ஓ ருஸமயத்தில்வது யுகாலத்தில் நான் ஆச்ரமத்தினின்று இதற்குமுன் வெளியில்சென்றவனல்லன். காலைக்காலம் வராமலிருக்கும் பொழுதே என்னுடைய தாய் என்னைத் தேடுவாள். பகலிற்கூட நான் வெளியில்போயிருந்தால் என்னுடைய தாய்தந்தைகள் பரிதபிப்பார்கள். பிதா ஆச்ரமத்தில்வஸிப்பவர்களோடுகூட என்னைத் தேடுவானன்றோ? முற்காலத்தில் மிக்க துக்கத்தை அடைந்திருக்கிற மாதாபிதாக்களால், 'நீ காமந்தருவருகிறாய்' என்று பலவாறுக நான் நிந்திக்கப்பட்டிருக்கிறேன். இப்பொழுது என்நிமித்தமாக அவ்விருவருக்கும் என்னநிலைமை ஏற்பட்டிருக்குமோ என்று கவலைப்படுகிறேன். நான் காணப்படாதபொழுது அவ்விருவருக்கும் அதிகதுக்கம் உண்டாகும். முன்பு ஒருகாலத்தில் முதியோர்களான தாய்தந்தைகளிருவரும், இரவில் கண்

களில் நீர்பெருகுகின்றவர்களும் அதிக துக்கமுள்ளவர்களும் அன்புள்ளவர்களுமாகி, 'அருமைக்குழந்தாய்! உன்னைவிட்டு ஒரு முகூர்த்தகாலங்கூட நாங்கள் ஜீவித்திருக்கமாட்டோம். புத்திர! நீ ஜீவித்திருக்கும்வரையில்தான் எங்களுடைய ஜீவனம் நிச்சயம். பிராயம்முதிர்ந்த குருடர்களான எங்களிருவருக்கும் (நீ தான்) கண். உன்னிடத்தில் வம்சம் நிலைபெற்றிருக்கிறது. எங்களிருவருக்கும் பிண்டமும் கீர்த்தியும் ஸந்தானமும் உன்னைச்சார்ந்திருக்கின்றன' என்று என்னைப்பார்த்துப் பலமுறை சொன்னார்கள். தாய் முதியவள்; தந்தையும் முதியவர்; அவ்விருவருக்கும் நான் ஒன்றுமேகாலல்லவோ? அவ்விருவரும் ராத்திரியில் என்னைப் பாராமையால் என்ன நிலைமைய அடைவார்களோ? எந்த நித்திரையினால் என்னுடைய தந்தையும் அபகாரம்செய்யாதவளான என்தாயும் என்நிமித்தமாக ஸம்சயத்தை அடைந்தார்களோ, நானும் ஸம்சயத்தை அடைந்து கஷ்டமான ஆபத்தையும் அடைந்தேனோ, அந்தநித்திரையை வெறுக்கிறேன். மாதாபிதாக்களைவிட்டு நான் உயிரோடிருக்க விரும்பவில்லை. கண்ணில்லாத என்பிதா குழப்பமுள்ள புத்தியுடன் இந்தமயம் ஆச்ரமத்தில் வஸிக்கின்ற ஒவ்வொருவரையும் என்னைப்பற்றி விஸாரிப்பார்; இது நிச்சயம். கல்யாணி! நான் எப்படி பிதாவைப்பற்றியும், பர்த்தாவை அனுஸரித்தவளும் மிக்க துக்கமுள்ளவளுமான மாதாவைப்பற்றியும் துயரப்படுகிறேனோ அப்படி என்னைப்பற்றித் துயரப்படவில்லை. எனக்காக அவ்விருவரும் இப்பொழுது அதிகமான ஸந்தாபத்தை அடையமாட்டார்களா? உயிருடனிருக்கிற அவர்கள் என்னால் போஷிக்கப்படத்தக்கவர்களென்று நான் அவர்களுக்காகவே ஜீவிக்கிறேன். அவர்களுக்கு ப்ரியம் என்னால் செய்யத்தக்கதென்றும் நான் உயிரோடிருக்கிறேன். அவர்கள் எனக்கு முக்கியமான தெய்வங்கள்; என்னால் எப்பொழுதும் பூஜிக்கப்படத்தக்கவர்கள். அவர்கள் விஷயத்தில் இப்படிப்பட்ட இந்தப் பழமையான விரதமானது எப்பொழுதும் எனக்கு இருக்கிறது' என்று சொன்னாள்.

தர்மாத்மாவும் குருபக்தியுள்ளவனும் குருக்களுடைய ப்ரீதிக்குப்பாத்திரனுமான அந்த ஸத்யவான் இவ்வண்ணம் உரைத்துவிட்டுத் துக்கத்தால் பீடிக்கப்பட்டவளாக இருகைகளையும் உயர எடுத்துக்கொண்டு உரத்தகுரலுடன் அழுதான். பிறகு, அவ்வாறு அழுகின்றவனும் துயரத்தால் பீடிக்கப்பட்டவனு

மான பர்த்தாவைப்பார்த்து, தர்மத்தை அனுஷ்டிப்பவளான ஸாவித்ரியானவள், தன்னிருகைகளாலும் பர்த்தாவின் கண்ணீரைத் துடைத்து, 'என்னல் தவமானது செய்யப்பட்டிருந்தால், என்னல் தானமும் ஹோமமும் செய்யப்பட்டிருந்தால், என்னு டைய மாமியாருக்கும் மாமனாருக்கும் பர்த்தாவுக்கும் இந்த ராத்ரி யானது நல்லதாகட்டும். விளையாட்டுக்களிலும் பொய்யான சொல் என்னல் இதற்குமுன் சொல்லப்பட்டதாக எனக்கு நினைவில்லை. அந்த ஸத்தியத்தினல் என்னுடைய அந்த மாமனார் மாமியார் இருவரும் இப்பொழுது உயிரோடிருக்கவேண்டும்' என்று சொன் னள். ஸத்யவான், 'ஸாவித்ரி! மாதாபிதாக்களுடைய தர்ச னத்தை விரும்புகிறேன். விளம்பியாமல் செல்வாயாக. அந்த மாதாபிதாக்கள் உயிரோடிருப்பதை நான் பார்ப்பேனு? [1] சிறந்த இடையுள்ளவளே! மாதாவுக்காவது பிதாவுக்காவது தீங்கு நேர்ந் திருக்கக்கண்டால், நான் ஜீவித்திருக்கமாட்டேன். என்னைத் தொட்டு ஸத்யம்பண்ணுகிறேன். உனக்குத் தர்மத்தில் எண்ண மிருந்தால், நான் உயிரோடிருக்க நீ விரும்பினல், எனக்கு ப்ரியத் தைச்செய்ய வேண்டுமென்று உனக்கு விருப்பமிருந்தால், விரைவாக ஆச்ரமம் செல்வோம்' என்று சொன்னன்.

உத்தமியான ஸாவித்ரி, பிறகு, எழுந்திருந்து கூந்தல்களை முடிந்துகொண்டு கணவனை இருகைகளாலும் தழுவித் தூக்கி நிறுத் தினள். ஸத்யவானும் எழுந்திருந்து கையினல் அங்கங்களைத் துடைத்துக்கொண்டு எல்லாத்திசைகளையும் பார்த்துப் பழக்கூடை யைப் பார்த்தான். பிறகு, ஸாவித்ரியானவள், அந்த ஸத்யவானைப் பார்த்து; 'காலத்தினம் பழங்களைக் கொண்டுபோவீர். நான் யோக க்ஷேமார்த்தமான உம்முடைய இந்தக் கோடாலியைக் கொண்டு வருவேன்' என்று சொன்னள். அவள், 'பழம்நிறைந்த கூடைச் சுமையை ஒரு மரத்தின்கிளையில் தொங்கவிட்டுக் கோடாலியை எடுத்துக்கொண்டு பர்த்தாவின் ஸமீபத்தில் மீண்டும் வந்தாள். அழகிய தொடையுள்ளவளும் யானைபோல நடப்பவளுமான ஸாவித் திரி, இடத்தோளில் பர்த்தாவினுடைய கையை வைக்கும்படி செய்துகொண்டும் வலக்கையினல் அவனைக்கட்டிக்கொண்டும் சென்றுள். ஸத்யவான், 'பயந்தவளே! நடந்து பழக்கமிருப்ப தால் வழிகள் என்னல் அறியப்பட்டிருக்கின்றன. மரங்களின் நடுவில் காணப்படுகிற நிலவினலும் வழியைக் காண்கிறேன்.

---

[1] மூலம் வேறு.

கல்யாணி! எந்தவழியிலுல் வந்தோமோ, பழங்களும் பறிக்கப்பட்டனவோ, அந்த வழியில் வந்தபடி செல்வாயாக. ஆலோசியாதே. இந்தப் பலாசமரங்களடர்ந்த தோப்பில் வழியானது இரண்டாகப் பிரிகிறது. அதற்கு வடக்கே எந்தவழி இருக்கிறதோ அந்தவழியிலுல் விரைவாகச்செல். நான் ஸ்வஸ்தனாக இருக்கிறேன்; நல்ல பலமுள்ளவனாக இருக்கிறேன். மாதாபிதர்க்களிருவரையும் நான் பார்க்கவிரும்புகிறேன்' என்று சொல்லிக்கொண்டே விரைவுடன் ஆஸ்ரமத்தை நோக்கிச் சென்றான்.

இருநூற்றுத்தொண்ணூற்றொன்பதாவது அத்யாயம்.

பதிவ்ரதாமாஹாத்ம்யபர்வம். (தொடர்ச்சி.)

(கண்கிடைத்ததனுல் மகிழ்ச்சியும் புத்திரன் வராமையால் துயரழுங் கொண்ட த்யுமத்ஸேனன் புத்திரனைத்தேடியதும், ரிஷிகள் நல்ல நிமித்தங்களைத் தெரிவித்து அவனைத் தேற்றியதும், ஸாவித்ரியுடன் ஸத்யவான் ஆஸ்ரமத்திற்கு வந்ததும், ஸாவித்ரி நடந்த விருத்தாந்தத்தை ரிஷிகளுக்குச் சொல்லியதும்.)

இதே ஸமயத்தில், த்யுமத்ஸேனன் மகாபலசாலியும் கண்களைப் பெற்றவனுமாகி, பார்வைதெளிவுபடவே, எல்லாவற்றையும் பார்த்தான். பதார்களுள் சிறந்தவனே! அவன் பார்யையாகிய சைப்யையுடன் எல்லா ஆஸ்ரமங்களிலும் சென்று புத்திரனைத் தேடி அதிகமான துக்கத்தை அடைந்தான். அந்தத் தம்பதிகளிருவரும், அந்த இரவில் புத்திரனைத் தேடிக்கொண்டு, ஆஸ்ரமங்களையும் நதிகளையும் வனங்களையும் தடாகங்களையும் அடைந்தார்கள்; எதாவது ஒருசத்தத்தைக்கேட்டால் புத்திரனுடைய சத்தமோ என்கிற ஸந்தேகத்தால் அந்தச்சத்தமுண்டான இடத்தை நோக்கி, 'ஸாவித்ரியோடு ஸத்யவான் வருகிறான்' என்று பேசிக்கொண்டார்கள்; தர்ப்பங்களாலும் முட்களாலும் அங்கங்கள் கீறப்பட்டவர்களாக, பிளக்கப்பட்டனவைகளும் கடினமானவைகளும் கூர்மையுள்ளவைகளும் இரத்தம் பெருகுகின்றவைகளுமான பாதங்களால் பைத்தியம்பிடித்தவர்கள்போல ஓடினார்கள். பிறகு, ஆஸ்ரமத்தில் வஸிக்கின்ற அந்த எல்லாப் ப்ராம்மணர்களாலும் எதிரில் வந்து சூழ்ந்துகொண்டு நன்றாகத் தேறுதல்கூறி அவ்விருவர்களும் தங்களாஸ்ரமத்திற்கு அழைத்துக்கொண்டு வரப்பட்டார்கள்.

அந்த ஆச்ரமத்தில் பார்யையுடனிருக்கும் அந்த த்யுமத் ஸேனன், வயதுசென்ற தவசிகளால் சூழப்பட்டவனைப் பண்டை அர்சர்களுடைய கதைகளை அடுத்தவைகளான ஆச்சர்யகரமான பேச்சுக்களால் ஸமாதானப்படுத்தப்பட்டான். பிறகு, வயது சென்றவர்களான அவ்விருவரும் மறுபடியும் மனத்திற்கு ஆறுதலையடைவிக்கப்பட்டும் புத்திரனைப் பார்க்கவேண்டுமென்கிற விருப்பத்தால் அவனுடைய இளமைப்பருவம்தொட்டுள்ள சரித்திரங்களையும் ஸாவித்திரியின் தோற்றங்களையும் [1] ஒருவருக்கொருவர் நினைப்பூட்டுகின்றவர்களாகவும் மிக்க துக்கமுடையவர்களாகவும் சோகத்தை அடைந்தார்கள். துயரத்தால் வாட்டப்பட்ட அவ்விருவரும் 'ஆ! புத்ர! எங்கே இருக்கிறாய்? ஆ! பதிவ்ரதையே! மருமகளே! எங்கே இருக்கிறாய்?' என்று இரக்கமான சொல்லைச் சொல்லிக்கொண்டு மறுபடியும் அழுதார்கள்.

அங்கிருந்தவர்களுள், ஸத்யமானவாக்குள்ள ஸுவர்ச்சனென்கிற ஒருபிராம்மணர், அவ்விருவரையும்பார்த்து, 'இந்த ஸத்யவானுடைய மனைவியான ஸாவித்ரியானவள் தவமும் இந்திரியநிக்ரஹமும் ஆசாரமுமுள்ளவளாயிருத்தலால், இவன் ஜீவித்திருக்கிறான்' என்றார். கௌதமர், 'வேதங்கள் அங்கங்களுடன்கூடிய வைகளாக என்னால் அத்யயனம் செய்யப்பட்டன. பெரியதவமும் என்னால் சேர்க்கப்பட்டிருக்கிறது. [2] கௌமாராவஸ்தை தொடங்கியே ப்ரம்மசர்யமும் அனுஷ்டிக்கப்பட்டிருக்கின்றது. குருக்களும் அக்நியும், ஸந்தோஷப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். என்னால் மனவடக்கத்துடன் எல்லா விரதங்களுமே அனுஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. எப்பொழுதும் என்னால் விதிப்படி வாயுப்ரக்ஷணரூபமான உபவாஸமும் செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் தவத்தினால் பிறர்செய்யவிரும்பிய எல்லாவற்றையும் நான் அறிகிறேன். 'ஸத்யவான் உயிரோடிருக்கிறான்' என்று சொல்லுகிற இந்த வசனத்தை உண்மையென்று அறியுங்கள்' என்று சொன்னார். சிஷ்யன், 'என்னுடைய உபாத்யாயருடைய வாக்கிலிருந்து வெளிப்பட்ட சொல்லின்படியே ஸத்யவான் ஜீவித்திருக்கிறான். (இது) ஒருகாலும் பொய்யாகாது' என்று சொன்னான். ரிஷிகள், 'இந்த ஸத்யவானு

---

1 'கேதிந்யாந்யம் ஸ்மராஸ்தௌ' என்பது மூலம்.

2 'பிறந்ததுமுதல் ஐந்துவயதுவரையில்' என்று சிலரும், 'பதினைந்து வயதுவரையில்' என்று சிலரும் கூறுவர்; பதினாறுவது பிராயமுதல் முப்பதாவது பிராயம்முடிய என்பர் வைத்யநூலார்.

டைய மனைவியான ஸாவித்ரியானவள் ஸௌமங்கல்யத்தை உண்டு பண்ணுகிற எல்லா நல்ல லக்ஷணங்களோடுமே கூடியிருத்தலால் இவன் ஜீவித்திருக்கிறான்' என்றார்கள். பாரத்வாஜர், 'இந்த ஸத்ய வானுடைய மனைவியான ஸாவித்ரியானவள் தவமும் இந்திரிய நிக்கிரஹமும் ஆசாரமுமுள்ளவளாயிருத்தலால் இவன் ஜீவித்திருக் கிறான்' என்றார். தால்ப்யர், 'உமக்குக் கண் உண்டானமையாலும், ஸாவித்ரியானவள் விரதத்தைச் செய்து ஆஹாரம்செய்துகொள் ளாமலே கானகம் சென்றமையாலும், ஸத்யவான் ஜீவித்திருக் கிறான்' என்று சொன்னர். ஆபஸ்தம்பர், 'எதனல் மிருகங்களும் பக்ஷிகளும் தெளிந்திருக்கிற திசையில் உமக்குப் பூமிலம்பந்த மான பெருக்கத்தைச் சொல்லுகின்றனவோ அதனல் ஸத்யவான் உயிரோடிருக்கிறான்' என்று சொன்னர். தௌம்யர், 'எல்லாக் குணங்களுமுள்ளவனும் ஜனங்களுக்குப் பிரியமானவனும் லக்ஷணங் களெல்லாமுள்ளவனுமாக இருத்தலால், உம்முடைய புத்ரனை ஸத்யவான் தீர்க்காயுளுள்ளவனாக ஜீவித்திருக்கிறான்' என்றார்.

ஸத்யவாக்குள்ளவர்களான அந்தத் தபஸிகளால் இவ்வண் ணம் ஸமாதானம்செய்யப்பட்ட த்யுமத்ஸேனன், அவ்வ அவைகளை முழுமையும் ஆராய்ந்து உறுதியுள்ளவன்போலானன். பிறகு, ஒருமுகூர்த்தகாலம் கழிந்தவுடன், ஸாவித்ரியானவள், பர்த்தா வான ஸத்யவானோடு அதிகஸந்தோஷமுள்ளவளாக இரவிலேயே வந்து ஆச்ரமத்தில் புகுந்தாள். அந்த எல்லாப்ராம்மணர்களும் பார்த்தவுடன் எழுந்திருந்தார்கள்; ஸந்தோஷத்தையும் அடைந் தார்கள். அந்த ஸத்யவானுடைய மாதாவும் பிதாவும் அவனுடைய கழுத்தை நன்கு கட்டிக்கொண்டு அழுதார்கள். ப்ராம்மணர்கள், 'வேந்தே! புத்ரனோடு சேர்ந்தவனும் கண்களை அடைந்தவனு மான உன்னைப்பார்த்து நாங்களெல்லாரும் உன்னுடைய க்ஷேமத்தை விசாரிக்கிறோம். அரசனே! புத்ரனோடு சேர்க்கை, ஸாவித்ரி யின் தர்சனம், நீ கண்களை அடைந்தது இம்மூன்றினாலும். தெய்வாதீனமாக வ்ருத்தி அடைகிறாய். எங்களெல்லாராலும் எது சொல்லப்பட்டதோ அது அப்படியே ஆகும். இதில் ஸம்சயமில்லை. மேலும் மேலும் செல்வப்பெருக்கமானது உனக்கு விரைவாகவே உண்டாகும்' என்று சொன்னர்கள். குந்தீநந்தன! பிறகு, அந்தப் ப்ராம்மணர்களனைவருமே அந்த ஆச்ரமத்தில் அக்னியை நன்றாக ஜ்வலிக்கச்செய்து த்யுமத்ஸேனராஜனருகில் உட்கார்ந்தார்கள். சைப்யையும் ஸத்யவானும் ஸாவித்ரியும் ஒருபக்கத்தில் நின்றார்கள்.

அவர்கள் தூயாம் நீங்கி, அந்த எல்லாராலும் அனுமதி கொடுக்கப்பட்டு உட்கார்ந்தார்கள்.

பார்த்த! பிறகு, அரசனுடன் உட்கார்ந்த வனவாஸிகளான அந்த எல்லாரும், ஆவலுடன்கூடினவர்களாக ராஜபுத்திரனைப் பார்த்து, 'பிரபுவே! யாதுகாரணத்தால் பார்யையுடன் நீ முந்தியே வரவில்லை? ஏன் நடுநிசியில் வந்தாய்? உனக்கு என்ன கடை ஏற்பட்டது? ராஜபுத்திர! மாதாவும் பிதாவும் நாங்களும் வருத்தத்தை அடைவிக்கப்பட்டோம். என்னகாரணமென்று நாங்கள் அறியோம். அவை அனைத்தையும் நீ சொல்லக்கடவாய்' என்று வினவினர்கள். ஸத்யவான், 'பிதாவினால் அனுமதிகொடுக்கப்பட்டு நான் ஸாவித்ரியுடன் சென்றேன். பிறகு, காட்டில் விறகுகளைப் பிளக்கையில் எனக்குத் தலைவலி உண்டாயிற்று. வேதனையினால் நான் நெடுநேரம் தூங்கிவிட்டேனென்று எண்ணுகிறேன். இதற்கு முன் ஒருபொழுதும் நான் அவ்வளவுநேரம் தூங்கினவனல்லேன். உங்களனைவருக்குமே ஸந்தாபம் உண்டாகவேண்டாமென்கிற காரணத்தினால் நடுநிசியில் நான் இங்குவந்தேன். இந்த விஷயத்தில் வேறு காரணம் இல்லை' என்றுசொன்னான்.

கௌதமர், 'உன்பிதாவான த்யுமத்ஸேனனுக்கு அகஸ்மாத்தாகக் கண்கிடைத்திருக்கின்றது. இதற்குக் காரணத்தை நீ அறியாய். ஸாவித்ரி சொல்வதற்குத் தகுதியுள்ளவள். ஸாவித்ரி! கேட்கவிரும்புகிறேன். நீயன்றோ நன்மைதீமைகளை அறிவாய்? ஸாவித்ரி! தேஜஸினால் உன்னை ஸாவித்ரீதேவியைப் போலவன்றோ அறிகிறேன்? இந்தவிஷயத்தில் நீ காரணத்தை அறிகிறாய். ஆகையால், உண்மையைச்சொல். இதுவிஷயத்தில் உனக்கு ரஹஸ்யம் ஒன்றுமில்லாமலிருந்தால் எங்களுக்குத் தெளிவாகச் சொல்' என்றுவினவினர். ஸாவித்திரி, 'நீர் அறிந்தது சரிதான். உங்களுடையஸங்கல்பம் வேறுவிதமாகாது. எனக்கு ரஹஸ்யம் ஒன்றுமில்லையன்றோ? உண்மையையே என்னிடத்தினின்று கேட்கக்கடவீர். மஹாத்மாவான நாரதரால் என்பர்த்தாவுக்கு மரணம் கூறப்பட்டது. அந்தநாளும் இன்று வந்துவிட்டது. அதனால், நான் இவரை (த் தனியாக) விடவில்லை. உறங்கிக்கொண்டிருக்கிற இந்த என்பர்த்தாவின்பக்கத்தில் யமனர் கிங்கர்களோடு வந்தார். அவர், இவரைக்கட்டி, பித்ருக்களாலடையப்பட்ட திசையில் கொண்டுபோனர். பிரபுவான அந்தத் தேவரை நான் ஸ்துதியமான வசனத்தால் துதித்தேன். அவரால் எனக்கு ஐந்து வரன்கள்

கொடுக்கப்பட்டன. அவைகளை என்னிடத்தினின்றுகேளுங்கள். இரண்டுகண்களும் தம்ராஜ்யமுமாகிய இரண்டுவரன்கள் என்மாமனுருக்குக் கொடுக்கப்பட்டன. என்பிதாவுக்கு நூறுபுத்திரர்களுண்டாவதும் எனக்கு நூறுபுத்திரர்களுண்டாவதும் அடையப்பட்டன. என் கணவரான ஸத்யவான் நானூறுவருஷம் ஆயுளை அடைந்தார். பர்த்தாவினுடைய உயிருக்காக என்னால் இந்தவிரதம் செய்யப்பட்டது. இந்தக் காரணமனைத்தும் என்னால் விஸ்தாரமாக உங்களுக்கு நடந்தபடி சொல்லப்பட்டன. இந்த எனது பெரிய துக்கமானது முடிவில் ஸுகமாயிற்று' என்று சொன்னாள்.

ரிஷிகள், 'பதிவ்ரதையே! நற்குலத்தில்பிறந்தவளும் நல்லொழுக்கத்தையும் விரதத்தையும் புண்யத்தையுமுடையவளுமான உன்னால் இருள் மயமான மடுவில்முழுகுகின்றதும் வியஸனங்களால் எதிர்த்துத்தூத்தப்பட்டதுமான அரசனுடைய குலமானது மீண்டும் நன்கு மேலேதூக்கிவிடப்பட்டது' என்றுசொன்னார்கள். ஒன்றுசேர்ந்திருக்கின்ற ரிஷிகள், அந்த உத்தம ஸ்திரீயை அவ்வாறு புகழ்ந்தும் பூஜித்தும் புத்திரனுடன் கூடின அரசனிடம் விடைபெற்றுக்கொண்டு மகிழ்ச்சியுடன் தங்கள் வீடுகளுக்கு ஸுகமாக விரைந்து சென்றார்கள்.

மூன்றாறுவது அத்யாயம்.

பதிவ்ரதாமாஹாத்ம்யபர்வம் (தொடர்ச்சி.)

(ஸால்வதேசத்து ஜனங்கள் த்யுமத்ஸேனனிடம்வந்து அவனுடைய மந்திரியினுல் அவனுடையபகைவர்கள் கொல்லப்பட்டதைத் தெரிவித்து நகரத்தை மீண்டுவாவேண்டினதும், த்யுமத்ஸேனன் ஸாவித்ரியோடும் ஸத்யவானோடும் முனிவர்களைவணங்கித் தன் நகரத்திற்குவந்ததும்.)

அந்த இரவுகழிந்து ஸூர்யமண்டலமும் உதித்தவுடன், அந்த எல்லாத்தவசிகளும் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு ஒன்றுகூடினார்கள். மகரிஷிகள் ஸாவித்ரியினுடைய அப்படிப்பட்ட மகாபாக்கியமனைத்தையுமே த்யுமத்ஸேனனுக்கு அடிக்கடி சொல்லியும் திருப்தியை அடையவில்லை. பிறகு, ஸால்வதேசத்திலிருந்து எல்லா ஜனங்களும் அரசனை வந்தடைந்தார்கள்; அவனுடையமந்திரியினுலே அந்தப்பகைவன் கொல்லப்பட்டானென்ப

தையும் சொன்னார்கள். ஸஹாயர்களோடும் பந்துக்களோடும் பகைவன் மந்திரியினால் கொல்லப்பட்டானென்பதைச் சொல்லி, பகைவனுடைய படை துரத்தப்பட்டதையும் நடந்தவண்ணம் தெரிவித்தார்கள். 'எல்லாஜனங்களுக்கும், 'கண்ணுள்ளவரோ குருடரோ அந்த த்ருமத்ஸேனரே நமக்கு அரசராக இருக்கவேண்டும்' என்று தங்கள் அரசரைப்பற்றி ஒரே எண்ணம் இருக்கிறது. அரசரே! இந்த நிச்சயத்துடன் இங்கே நாங்கள் அனுப்பப்பட்டோம். இதோ வாகனங்களும் உம்முடைய நால்வகைச்சேனைகளும் வந்திருக்கின்றன... வேந்தே! புறப்படுவீராக. உமக்கு மங்களம். உம்முடைய ஜயமானது நகரத்தில் கோஷிக்கப்பட்டது. தகப்பன்பாட்டன்மார்களுடையதான ராஜ்யபதவியை அடைந்து நெடுங்காலம் ஸிம்மாஸனத்தில் வீற்றிருப்பீராக' என்றுசொன்னார்கள். கண்களை அடைந்தவனும் நல்லதேகத்தோடுகூடியவனுமான அந்த அரசனைக்கண்டு எல்லாரும் ஆச்சர்யத்தினால் மலர்ந்தகண்களுடன் முடியினால் வணங்கினார்கள்.

பிறகு, அரசன், ஆஸ்ரமத்தில் வஸிக்கின்றவர்களும் வயது முதிர்ந்தவர்களுமான அந்தப்பிராம்மணர்களை நமஸ்கரித்து, அவர்களனைவராலும் கௌரவிக்கப்பெற்று, நகரத்தைகுறித்துச் சென்றான். சைப்யையும் ஸாவித்ரியோடுகூட சேனையினால்சூழப்பட்டவளாக நல்லவிரிப்புக்களுள்ளதும் நல்லகாந்தியையுடையதும் மனிதர்களால் தூக்கப்பட்டதுமான பல்லக்கினால் நகரம்சென்றாள். பிறகு, புரோஹிதர்கள் த்ருமத்ஸேனனை ப்ரதியோடு ராஜ்யத்தில் பட்டாபிஷேகம்செய்தார்கள்; மகாத்மாவான இந்த த்ருமத்ஸேனனுடைய குமாரனை ஸத்யவானை இளவரசில் அபிஷேகம் செய்தார்கள். பிறகு, நீண்டகாலத்தில் ஸாவித்ரிக்குப் புகழை வளர்க்கிற அந்த நூறுபிள்ளைகள் உண்டானார்கள். அப்படியே, மத்ராதிபனான அச்வபதிக்கு மாளவியினிடம் சூரர்களும் போரில் பின்வாங்காதவர்களும் மிக்கபலசாலிகளும் ஒருகாய்வயிற்றில் பிறந்தவர்களுமான இவளுடைய நூறுதம்பிமார்கள் உண்டானார்கள். இவ்வண்ணம் ஸாவித்ரியினால் தான், தகப்பன், தாய், மாமியார், மாமனார், பர்த்தாவினுடையகுலம் ஆகிய அனைவரும் கஷ்டத்தினின்று கரையேற்றப்பட்டனர். அப்படியே, கல்யாணியும் சீலத்தால் நன்குமதிக்கப்பட்டவளுமான இந்தத்ரௌபதியும் குலஸ்த்ரீயான ஸாவித்ரீபோல உங்களனைவரையும் கரையேற்றுவாள்' என்றுசொன்னார். வேந்தரே! மஹாத்மாவான

அந்த மார்க்கண்டேயரால், இவ்வண்ணம் தேற்றப்பட்ட அந்த யுதிஷ்டிரர், துயரத்தையும் மனவருத்தத்தையும்விட்டு, அப் பொழுது காம்யகவனத்தில் வஸித்தார். எந்தமனிதன் உத்தம மான இந்த ஸாவித்ரியின் உபாக்யானத்தைப் பக்தியுடன் கேட் பனே அவன் ஸுகமுடையவனும் விரும்பின எல்லாம் கைகூடின வனுமாகித் துக்கத்தை அடையமாட்டான்" என்றுகூறினர்.

பதிவ்ராதாமாஹாத்ம்யபர்வம் முற்றிற்று.

மூன்றூற்றேராவது அத்யாயம்.

குண்டலாஹரணபர்வம்.

(ஸூர்யன் கர்ணனிடம் இந்திரன் கவசகுண்டலங்களை யாசிக்கவரவ தையும் அவற்றைக் கொடுக்கக்கூடாதென்பதையும் ஸ்வப்னத்தில் சொல்லியதும், கர்ணன் காரணங்களைக்கூறி அவைகளைக் கொடுப்பதாகப் பிரதிஜ்ஞைசெய்ததும்.)

ஜனமேஜயர், "பிராம்மணரே! (மந்திரங்களை) ஜபிக்கிற வர்களுள் சிறந்தவரே! 'உன்மனத்திலிருக்கிறதும் மிகப்பெரிதும் ஒருவரிடத்திலும் நீ சொல்லாததுமான பயத்தையும் தனஞ்சயன் இவ்விடத்திலிருந்து புறப்பட்டுப்போனவுடன் போக்குவேன்' என்று இந்திரன் சொல்லியதாகப் பாண்டுபுத்திரரான யுதிஷ்டிர, ரைக்குறித்து அப்பொழுது லோமசர் பெரியவரிக்கியமாகக்கூறிய தும் கர்ணனைப்பற்றியதும் பெரிதுமானபயம் என்ன இருந்தது? அந்தப் பயத்தைத் தர்மாத்மாவான யுதிஷ்டிரர் ஏன் ஒருவருக்கும் சொல்லாமலிருந்தார்?" என்றுவினவ, வைசம்பாயனர் சொல்ல லானார்.

"ராஜச்ரேஷ்டரே! நான், கேட்கின்ற உமக்கு இந்தக்கதை யைச் சொல்லுகிறேன். பரதர்களுள் சிறந்தவரே! என்னுடைய வசனத்தைக் கேளும். பன்னிரண்டுவருஷங்கள்சென்று பதின் மூன்றுவது வருஷம் வந்தவுடன், பாண்டவர்களுக்கு நன்மையைச் செய்பவனான இந்திரன், கர்ணனை யாசிப்பதற்காக முயன்றான். மகாராஜரே! மஹேந்திரனுடைய அபிப்பிராயத்தை அறிந்து, பிறகு, மிக்க ஒளியைப்பொருளாகவுடைய ஸூர்யன், குண்டலங் களை இந்திரனுக்குக்கொடாமலிருக்கும்படி செய்வதற்காகக் கர் ணனை அடைந்தான். ஆசைப்படத்தக்க விரிப்பினால் மூடப்பட்ட

தும் மிகச்சிறந்ததுமான படுக்கையில் படுத்திருப்பவனும் வீரனும் அதிகவிஸ்வாஸமுள்ளவனும் ட்ராம்மணர்களுக்கு நன்மைசெய்பவனும், ஸத்யவாதியுமான கர்ணனுக்கு இரவில் ஸ்வப்னமத்தியில் சூரியன் காட்சியளித்தான். பாரதரே! ஸூர்யன் புத்திரனிடமுள்ள அன்பினால் கர்ணனிடத்தில் கருணைமிகமேலிட்டவனும் யோகபலத்தினால் கல்பரூபமுள்ளவனும் வேதங்களை அறிந்தவனுமான பிராம்மணனாகிக் கர்ணனை அணுகி அவனுக்கு ஹிதத்தைச் செய்வதற்காக இன்சொல்லை முன்னிட்டு இந்தவசனத்தைக் கூறலானான். 'கர்ண! அப்பா! ஸத்தியத்தைப்பாதுகாப்பவர்களுள் சிறந்தவனே! மிக்கதாள்வலியமைந்தவனே! அன்பினால் மிக்கநன்மையைச்சொல்லுகின்ற என்னுடையவசனத்தை இப்பொழுது கேள். கர்ண! இந்திரன் பாண்டவர்களுக்கு நன்மையைச்செய்யவேண்டுமென்கிற விருப்பத்தால் குண்டலங்களைக் கவர எண்ணி ப்ராம்மணவேஷத்தோடு உன்னிடம் வருவான். நீ ஸாதுக்களால் யாசிக்கப்பட்டால் கொடுக்கவே கொடுக்கிறாயென்பதும் ஒருவரையும் நீ யாசிக்கிறதில்லையென்பதுமான உன்னுடைய இயற்கையானது அவனாலும் அப்படியே உலகத்தாராலும் அறியப்பட்டிருக்கிறது. ஐயா! நீ பிராம்மணர்களுக்குத் தனத்தையோ, அல்லது, வேறு எந்தவஸ்துவையோ யாசிக்கப்பட்டதைக் கொடுக்கவே கொடுக்கிறாயென்றும் ஒருவருக்காவது இல்லை என்று மறுக்கிறதில்லையென்றும் எல்லாருஞ் சொல்லுகிறார்கள். உன்னை இப்படிப்பட்டதன்மையுள்ளவனென்று தெரிந்துகொண்டு, இந்திரன், தானே உன்னுடைய குண்டலங்களையும் கவசத்தையும் யாசிக்க வரப்போகிறான். யாசிக்கின்ற அந்த இந்திரனுக்கு உன்னால் குண்டலங்கள் கொடுக்கத்தக்கவைகளல்ல. அவன், உன்னால் இயன்றவரை இன்சொல்சொல்லத்தக்கவன். இதுவே உனக்கு மிகநன்மையானது. ஐயா! குண்டலங்களுக்காக வந்ததைச்சொல்லாமலே குண்டலங்களைக்கவர எண்ணமுள்ள புரந்தரன், உன்னால் பல காரணங்களைச்சொல்லியும், வேறு பலவித தனங்களையும் ரத்தினங்களும் ஸ்த்ரீகளும் பசுக்களுமாகிய பலவகைப்பொருள்களையும் கொடுத்தும், பல உதாரணங்களைக்காட்டியும், மீண்டும் மீண்டும் நன்றாக மறுக்கத்தக்கவன். கர்ண! உன்தேகத்துடன் பிறந்திருக்கின்ற மங்களகாமானகுண்டலங்களை நீ கொடுப்பாயாகில் ஆயுளின் குறைவை அடைந்து மரணத்தை அடைவாய். சத்துருக்களுடையகர்வத்தைப்போக்குகிறவனே! நீ கவசத்தோடும் குண்டலங்

கமளாடும் சேர்ந்திருந்தால், யுத்தத்தில் பகைவர்களால்கொல்லப் படத்தகாதவனென்கிற என்னுடைவசனத்தை உண்மை என்று அறிவாயாக. பத்தினங்களாலிழைக்கப்பட்டிருக்கிற இந்த இரண்டும் அம்ருதத்திலிருந்து உண்டாயின. கர்ண! ஆதலால், உயிரானது உனக்குப் பிரியமாக இருந்தால் உன்னல் இவை காப்பாற்றப்படத்தக்கவை' என்றுசொன்னன்.

கர்ணன், 'சிறந்தரேகூத்தைக் காண்பித்துக்கொண்டு தேவரீர் என்னைநோக்கி இவ்வண்ணம் சொல்லுகிறீர். தேவரீர் யார்? பகவானே! இஷ்டப்படி சொல்லும். பிராம்மணவேஷத்தைத் தரித்திருக்கிற தேவரீர் யார்?' என்று வினவ, பிராம்மணன், 'ஐயா! நான் ஸூர்யன். நேசத்தால் (செய்யவேண்டிய காரியத்தை) உனக்குஎடுத்துரைத்தேன். என்சொற்படி நீ செய்வாயாக. இது உனக்கு மிக்கநன்மையானது' என்றுசொல்ல, கர்ணன், 'பிரபுவான [1] கோபதியே இப்பொழுது எனக்கு ஹிதத்தைத்தேடுகிறவரும் நடந்துகொள்ளவேண்டியதை எடுத்துக் கூறுகிறவருமாயிருத்தலால் எனக்கு மிக்கநன்மையே. என்னுடைய இந்தவசனத்தைக் கேளரும். வரங்களைக்கொடுப்பவரான உம்மை அருள்புரியும்படிவேண்டுகிறேன். நான் நேசத்தால் சொல்லுகிறேன். நான் தேவரீருக்கு அன்பனாகஇருந்தால் இந்தவிரதத்திலிருந்து தடுக்கப்படத்தக்கவனல்லேன். தேஜோநிதியான ஸூர்யபகவானே! என்னை யாசித்தால் நான் பிராம்மணோத்தமர்களுக்கு, உயிரையும் நிச்சயமாகக் கொடுப்பேனென்கிற என்னுடைய விரதத்தை இந்தஉலகம் முழுவதும் அறிந்திருக்கின்றது. ஆகாயத்தில் ஸஞ்சரிக்கின்றவர்களுள் சிறந்தவரே! தேவர்களுள் மேன்மைவாய்ந்தவரே! இந்திரன் பிராம்மணவேஷத்தால் மறைக்கப்பட்டுப் பாண்டவர்களுக்கு நன்மையைச்செய்வதற்காகக் கவசகுண்டலங்களை யாசிப்பதற்கு என்னிடம்வருவானாகில், குண்டலங்களையும் உத்தமமான கவசத்தையும் கொடுப்பேன். மூவுலகங்களிலும் பிரஸித்திபெற்ற என்னுடைகீர்த்தி ஒருகாலும் குன்றாது. என்னைப்போன்றவனுக்குத் தன்னுயிரைக்காப்பது அபகீர்த்தியை உண்டுபண்ணுகிறது. அது தகாதது. கீர்த்தியுடன் கூடினமரணம் உலகத்திலுள்ள எல்லாஜனங்களுக்கும் ஸம்மதமானது. அது தகுந்ததன்றோ? பலாஸுரனையும் வ்ருத்தாஸுரனையும்கொன்ற இந்திரன் பாண்டுபுத்திரர்களுக்கு நன்மையைச்செய்

[1] கிரணங்களுக்குப்பதி; ஸூர்யன்.

யும்பொருட்டு என்குண்டலங்களையாசிப்பதென்னும் பிக்ஷைக்காக என்னிடம்வந்தால் அப்படிப்பட்டநான், குண்டலங்களைக் கவசத்துடன் இந்திரனுக்குக் கொடுப்பேன். அது எனக்கு உலகத்தில் புகழை வளர்க்கும். அவனுக்கு அபகீர்த்தி உண்டாகும். கிரணங்களையுடையவரே! உயிரைக்கொடுத்தும் உலகத்தில் நான் புகழையன்றோ விரும்புகிறேன்? புகழுள்ளவன் ஸ்வர்க்கத்தை அனுபவிக்கிறான்; புகழைஇழந்தவன் நாசமடைகிறான். கீர்த்தியானது உலகத்தில் தாய்போல மனிதனை நன்கு உயிர்வாழச்செய்கிறது. அபகீர்த்தியோ, உயிருடனிருக்கும்மனிதனுக்கும் உயிரைவாங்கிவிடுகிறது. ஒளியைத்தனமாகக் கொண்டவரே! லோகநாதரே! கீர்த்தியானது மனிதனுக்கு ஆயுளென்கிற விஷயத்தில், பிரம்மதேவர், 'மனிதனுக்கு மறுமையுலகத்தில் (நற்பயனை அடைவதற்குக்) கீர்த்தியே பிரதானமானது. இந்தஉலகத்திலும் பரிசுத்தமான கீர்த்தியானது ஆயுளை வளர்க்கிறது' என்கிற (பொருளுள்ள) பழமையான ஸ்லோகத்தைத் தாமே கானம்செய்திருக்கிறரன்றோ? அப்படிப்பட்டநான், சரீரத்தோடுஉண்டான கவசகுண்டலங்களைக்கொடுத்து அழியாதகீர்த்தியை அடைவேன். பிராம்மணர்களுக்கு விதிப்படிதானத்தைக்கொடுத்தும் சாஸ்திரத்தில் சொல்லியமுறைப்படி யுத்தத்தில் சரீரத்தை ஹோமம்செய்தும் யுத்தத்தில் செய்யமுடியாதகாரியத்தைச் செய்து பகைவர்களை ஜயித்தும் சுத்தமானகீர்த்தியை அடைவேன். யுத்தத்தில், பயந்து 'உயிரைவேண்டுகிறவர்களுக்கு அபயம்கொடுத்தும் முதியவர்களையும் இளைஞர்களையும் பிராம்மணர்களையும் மகாபயத்திலிருந்து விடுவித்தும் உலகத்தில் ஸ்வர்க்கத்தைக்கொடுக்கக்கூடியதும் நிகரற்றதும் சிறந்ததுமான கீர்த்தியை அடைவேன். உயிரைக் கொடுத்தாவது என்னால் கீர்த்தியானது காப்பாற்றத்தக்கது. அதனை என்னுடைய விரதமென்று அறிவீராக. தேவரே! அப்படிப்பட்டநான் பிராம்மணவேஷம்பூண்ட இந்திரனுக்கு நிகரற்ற இந்தப் பிக்ஷையைக்கொடுத்து உலகத்தில் சிறந்தகீர்த்தியை அடைவேன்' என்றான்.

முந்நூற்றிரண்டாவது அத்யாயம்.

கு ண் ட ல ா ஹ ர ண ப ர் வ ம். (தொடர்ச்சி.)

(ஸுமீர்யன் மறுபடியும் காரணங்களைக்கூறி இந்திரனுக்குக் கவசத்தை யும் குண்டலங்களையும் கொடுக்கக்கூடாதென்று சொல்லியது.)

ஸுமீர்யன், 'கர்ணா! உனக்கும் நண்பர்களுக்கும் புத்திரர் களுக்கும் மனைவிகளுக்கும் மாதாவுக்கும் பிதாவுக்கும் தீமையை நீ செய்யாதே. மனிதர்களுள் சிறந்தவனே! மனிதர்களால் சரீரத்திற்கு விரோதமில்லாமல் இவ்வுலகில் யசஸையடைவதும் ஸ்வர்க்கத்தில் ஸ்திரமானகீர்த்தியும் விரும்பப்படுகின்றன. நீ பிராணனுக்கு விரோ தமாகச் சாஸ்வதமானகீர்த்தியை விரும்புகிறயாதலால், அது உன்னுடையபிராணனை எடுத்துக்கொண்டுபோய்விடும்; ஸம்சய மில்லை. புருஷஸ்ரேஷ்டனே! இவ்வுலகில் பிதாவும் மாதாவும் புத்தி ரர்களும் இன்னும் மற்றுள்ளஉறவினர்களும் உயிரோடிருக்கிற (புத் திரன்முதலிய) வர்களுடைய ஆலிங்கனம்முதலியவைகளால் உண் டாகிற ஸுகத்தையடைகிறார்களென்பதையும், அரசர்களும் (அவர் களுடைய) ஆண்மையினாலே அந்தப்பயனை அடைகிறார்களென்ப தையும் நீ தெரிந்துகொள். அதிககாந்தியுள்ளவனே! உயிரோடிருக் கிறமனிதனுக்குக் கீர்த்தியானது நன்மையை உண்டுபண்ணுகிறது. மாண்டு சாம்பலாய்ப்போன மனிதனுக்குக் கீர்த்தியினால் செய்யத் தக்கது என்ன இருக்கிறது? மரித்தவன் கீர்த்தியை அறிகிறதில்லை. உயிரோடிருப்பவன் கீர்த்தியை அனுபவிக்கிறான். மரித்தமனித னுக்குக் கீர்த்தியானது சவத்திற்கு மாலைபோன்றது. காலனே, நீ பக்தனாக இருக்கிறாயென்பதாலும், பக்தியுள்ளவர்கள் என்னால் ரக்ஷிக்கத்தக்கவர்களென்கிற இந்தக்காரணத்தாலும், ஹிதத்தில் விருப்பத்தால் உனக்கு இதனைச்சொல்லுகிறேன். பருத்தசோள் களுள்ளவனே! 'சிறந்தபக்தியோடு இவன் என்னை அடைந்தவன்' என்பதனாலேயே எனக்கும் அன்பு உண்டாயிருக்கிறது. அப் படிப்பட்ட நீ நான்சொன்னதைச் செய். இந்தவிஷயத்தில் தெய் வத்தால்வற்படுத்தப்பட்டதும் சிறந்ததுமான ஆத்மஸம்பந்தமான (ரஹஸ்யம்) ஒன்றிருக்கிறது. அதனாலும், இதனை உனக்குச் சொல் லுகிறேன்; ஐயமின்றிச்செய். புருஷஸ்ரேஷ்டனே! தேவரஹஸ்யம் உன்னால் (இப்பொழுது) அறியப்படத்தகாது. ஆகையால், அந்த ரகஸ்யத்தை நான் உனக்குச் சொல்லவில்லை; ஸமயம்வரும்போது,

நீ அறிவாய். சொன்னதையே நான் மறுபடியும் சொல்வேன். ராதாபுத்திர! நீ அதனை அறிந்துகொள். உன்னுடைய குண்டலங்களை வஜ்ரபாணியான இந்திரன் யாசித்தால் கொடாதே. மிக்ககாந்தியுள்ளவனே! நீ அழகிய இரண்டுகுண்டலங்களாலும் நிர்மலமான ஆகாயத்தில் விசாகநக்ஷத்திரங்களின் நடுவை அடைந்திருக்கிற சந்திரன்போலப் பிரகாசிக்கிறாய். உயிரோடிருக்கிற மனிதனுக்குக் கீர்த்தியானது நன்மையைப்பயக்கக்கூடியதென்கிற அதனை நீ தெரிந்துகொள். ஐயா! பாண்டவர்களுக்கு நன்மையைச்செய்வதில் முயற்சியுள்ளவனும், பிராம்மணவேஷத்தைத் தரித்தவனும் யாசிப்பவனுமான தேவராஜனைக் குண்டலங்களின் விஷயத்தில் நீ மறுத்துவிடவேண்டும். குற்றமற்றவனே! தேவராஜனுக்குக் குண்டலங்களிலுள்ள விருப்பத்தை நீ தகுந்தகாரணங்களுடன் கூடிய பலவிதவாக்கியங்களால் மறுபடியும், மறுபடியும் இப்படி வரை கெடுக்கவேண்டும். கர்ண! யுக்திகளால் பொருட்பொருத்தமுள்ளவைகளும் இனிமையால் அலங்கரிக்கப்பட்டவைகளுமான சொற்களால் புரந்தரனுடைய இந்தப்புத்தியைப் போக்கிவிடுவாயாக. புருஷச்ரேஷ்டனே! நீ எப்பொழுதும் ஸவ்யஸாசியுடன் போட்டிபோடுகிறாய். சூரனான ஸவ்யஸாசியானவன் யுத்தத்தில் உன்னோடு எதிர்க்கப்போகிறான்; இந்த அர்ஜுனனுக்கு இந்திரன் தானே பாணமாக இருந்தாலும், குண்டலங்களோடு சேர்ந்திருக்கிற உன்னை யுத்தத்தில் ஜயிப்பதற்கு வல்லமையுள்ளவனாகான். ஆகையால், கர்ண! யுத்தத்தில் அர்ஜுனனை ஜயிப்பதற்கு நீ விரும்பினால், அழகான இந்தக்குண்டலங்கள் உன்னால் இந்திரனுக்குக் கொடுக்கத்தக்கனவைகளல்ல' என்றான்.

மூன்றூற்றுமூன்றுவது அத்யாயம்.

குண்டலாஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(கர்ணன் இந்திரனுக்குக் கவசகுண்டலங்களைக் கொடுக்க அனுமதியை ஸூர்யனிடம் வேண்டினதும், ஸூர்யன் இந்திரனிடத்தினின்று சக்தியாயுதத்தைப்பெற்றுக்கொண்டு குண்டலங்களையும் கவசத்தையும் கொடுக்கும்படி சொல்லி அனுமதிகொடுத்ததும்.)

கர்ணன், 'தேவபதியே! என்னை நீர் எண்ணுகிறபடி நான் பகவானை உபாஸிப்பதில்லை. மிக்கதீக்ஷ்ணமான கிரணங்களுள்ளவரே!

எவ்விதத்தாலும் கொடுக்கத்தகாதது. எனக்கு ஒன்றுமில்லை. கோபதியே! பக்தியினால் எனக்கு எப்பொழுதும் எப்படி நீர் வேண்டினவராயிருக்கிறீரோ அப்படி எனக்கு மனிஷிகளும் புத்திரர்களும் என் ஆத்மாவும் நண்பர்களும் வேண்டினவர்களல்லர். இஷ்டர்களான பக்தர்களிடம் மகாத்மாக்கள் இஷ்டமான அன்பை வைக்கிறார்கள். பாஸ்கரரே! நீரும் அதனை அறிந்திருக்கிறீர்; ஐயமில்லை. 'கர்ணன் எனக்கு இஷ்டனும் பக்தனுமாவன்; தேவலோகத்தில் என்னைத்தவிரத் தனக்கு வேறு தெய்வம் இல்லையென்றறிகிறான்' என்றெண்ணிப் பகவானான நீர் என்னுடைய நன்மையைச் சொல்லுகிறீர். (உம்மை) மீண்டும் மீண்டும் தலைபால் வணங்கி அருள்வரச்செய்து மறுபடியும் யாசிக்கிறேனென்னும் இதனைக் கூறுகிறேன். தீக்ஷ்ணமான கிரணங்களுள்ளவரே! நீர் என்விஷயத்தில் பொறுத்தருள்வீராக. நான் பொய்யினின்று எவ்வாறு பயப்படுகிறேனோ அவ்வாறு யமனிடத்திலிருந்தும் பயப்படவில்லை. முக்கியமாக, தார்மிகர்களான எல்லாப்ராம்மணர்களுக்கும் எப்பொழுதும் என்னுயிரைக் கொடுப்பதான இந்த விஷயத்திலுங்கூட எனக்கு ஆலோசிக்கவேண்டியதில்லை. தேவரே! பாஸ்கரரே! நீர் பாண்டுவின் புதல்வனான பல்குனனைப்பற்றி என்னிடம் சொல்லுவதும் உம்முடைய மனத்திலுள்ளதும் ஸந்தாபத்தாலுண்டானதுமான துக்கம் விலகட்டும். கார்த்தவீர்யார்ஜுனன் போன்ற அர்ஜுனனை யுத்தத்தில் நான் ஜயிப்பேன். தேவரே! பரசுராமரிடத்தினின்றும் அப்படியே மகாத்மாவான துரோணரிடத்தினின்றும் அடையப்பட்ட என்னுடைய பெரிதான அஸ்திரபலமும் தேவரீராலும் அறியப்பட்டிருக்கிறது. தேவஸ்ரேஷ்டரே! நீர் என்னுடைய இந்த விரதத்துக்கு அனுமதிகொடுப்பீராக. யாசிக்கிற இந்திரனுக்கு என்னுடைய உயிரையும் கொடுப்பேன்' என்றுசொன்னான்.

சூரியன், 'ஐயா! மிக்கவஸிமை வாய்ந்தவனே! அழகிய இந்தக்குண்டலங்களை இந்திரனுக்கு நீ கொடுக்கிறதால் உன்னுடைய வெற்றிக்காக நீயும் அந்தஇந்திரனைக் கேட்டுக்கொள்வாயாக. நீ இந்திரனுக்குக் குண்டலங்களை ஓர் உடன்பாட்டுடன் கொடுக்கக்கடவாய். குண்டலங்களோடு சேர்ந்திருந்தால், நீ எல்லாப் பிராணிகளுக்கும் கொல்லத் தகாதவனாயிருக்கிறாயன்றோ? குழந்தாய்! அஸுரர்களை அழிப்பவனான இந்திரன் யுத்தத்தில் அர்ஜுனனால் உன்னுடைய நிராசத்தை வேண்டி உன்

னுடைய குண்டலங்களைக் கவர விரும்புகிறான். அப்படிப்பட்ட நீயும், தேவர்களுக்குத் தலைவனும் விரும்பியதைப் பெறுகின்ற வனுமான இந்த இந்திரனைப் பிரியமான ஸத்ய வசனங்களால் அடிக்கடி ஸந்தோஷிக்கச்செய்து, 'ஆயிரங் கண்களையுடையவனே! உனக்குக் குண்டலங்களையும் உத்தமமான கவசத்தையும் கொடுப் பேன். பகைவரைக் கொல்வதும் வீணுகாததுமான சக்தியாயுதத் தை நீ எனக்குக் கொடுப்பாயாக' என்று வேண்டிக்கொள். கர்ணு! இந்த உடன்பாட்டினுலேயே இந்திரனுக்குக் குண்டலங்களைக் கொடுப்பாயாக. அந்தச் சக்தியினல் யுத்தத்தில் சத்துருக்களைக் கொல்லுவாய். மிக்க புஜபலமுள்ளவனே! தேவராஜனுடைய அந் தச் சக்தியானது நூற்றுவர் நூற்றுவராகவும் ஆயிரவர் ஆயிர வ ராகவும் யுத்தத்தில் பகைவர்களைக் கொல்லாமல் மீண்டு கையை வந்து அடைகிறதில்லை' என்று சொன்னன். சூரியன் இவ்வண்ண முரைத்து உடனே மறைந்தான்.

அரசரே! கர்ணனே, கனவின் மத்தியில் அதிகத் துன்பமுள் ளவன்போல விழித்துக்கொண்டான். பாரதரே! அரசரே! பேசு கிறவர்களுள் சிறந்தவரே! பகைவர்களை வருத்துபவரே! கர்ணனே, நித்திரையைவிட்டு விழித்துக்கொண்டு கனவை நன்கு நினைத்து, 'குண்டலங்களுக்காக இந்திரன் என்னிடம் வந்தால் சக்தியை அவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்டு குண்டலங்களையும் கவசத் தையும் கொடுப்பேன்' என்று சக்தியைப் பெற்றுக்கொள்வதற்கு நிச்சயம்செய்தான். பரதஸ்ரேஷ்டரே! அவன் காலையிலெழுந்து செய்யவேண்டியவைகளைச்செய்து பிராம்மணர்களை ஸ்வஸ்திவாச னங்களைச் சொல்லும்படி செய்து வழக்கப்படி கார்யத்தைத் தொடங்கினன். ராஜஸ்ரேஷ்டரே! அப்பொழுது, விதிப்படி ஒரு முகூர்த்தகாலம் ஜபித்தான். பிறகு, ஜபத்தின்முடிவில் கர்ணன் சூரியனுக்கு ஸ்வப்னத்தைத் தெரிவித்தான். கர்ணன் இரவில் கண்டதும் இருவருக்கும் பேச்சு நடந்ததுமாகிய அனைத்தையும் நடந்தபடி வரிசையாக அப்பொழுது சூரியனுக்குச் சொன்னன். அதைக்கேட்டு, பகலானும் பிரகாசிப்பவனும் ராகுவை நாசம் செய்பவனுமான சூரியன், புன்னகையுடன் அந்தக்கர்ணனைப் பார்த்து, 'அப்படியே' என்று சொன்னன். பகைவீரர்களை அழிப்பவனான கர்ணன், பிறகு, அதனை உண்மை என்று அறிந்து, சக்தியையே விரும்பி இந்திரனை எதிர்பார்த்திருந்தான்" என்று கூறினர்.

———

மூந்நூற்றுநான்காவது அத்யாயம்.

கு ண் ட லா ஹ ர ண ப ர் வ ம். (தொடர்ச்சி.)

(குந்திபோஜன் துர்வாஸரைத் தன்னுடைய அரண்மனையில் வஸிக்கச்செய்து குந்தியை அவருக்குப் பணிவிடை செய்யச்சொல்லியது.)

ஜனமேஜயர், "ஸூர்யனுல் கர்ணனுக்கு இச்சமயத்தில் சொல்லப்படாத அந்த ரஹஸ்யம் யாது? அந்தக் குண்டலங்கள் எப்படிப்பட்டனை? கவசமும் எப்படிப்பட்டது? மிகச் சிறந்தவமே! அவனுக்குக் கவசமும் குண்டலங்களும் எங்கிருந்து கிடைத்தன? தபோதனரே! இவைகளை நான் கேட்கவிரும்புகிறேன்" என்றுவினவ, வைசம்பாயனர், "அரசரே! அந்தக்குண்டலங்களும் கவசமும் எப்படிப்பட்டவையென்பதையும், அந்த ஸூர்யனுடைய இந்தரஹஸ்யத்தையும் நான் சொல்லுகிறேன். அரசரே! தீக்ஷ்ணமான தேஜஸுள்ளவரும் மகானும் உயரமானவரும் மீசைதாடிகளையும் தண்டத்தையும் சடைகளையும் தரித்தவரும் இனியதேகாற்றமுள்ளவரும் குற்றமற்ற அங்கங்களுள்ளவரும் தேஜஸினுல்ஜ்வலிப்பவரும் தேன்போலப் பிங்கவர்ணமுள்ளவரும் இன்சொல்லுள்ளவரும் தவத்தையும் வேதாத்தியயனத்தையும் பூஷணமாகக்கொண்டவருமான ஒரு பிராம்மணர் முன்னொருகாலத்தில் குந்திபோஜமகாராஜனிடம் வந்தார். மிகப்பொருந்தவமுள்ள அந்தத் துர்வாஸர், குந்திபோஜராஜனைப்பார்த்து, '[1] மாத்ஸர்யமில்லாதவனே! உன்னுடைய வீட்டில்சாப்பிடுவதற்குப் பிக்ஷையைவிரும்புகிறேன். நீயாவது உன்னைப்பின்பற்றியவர்களாவது எனக்கு விருப்பமில்லாததைச் செய்யலாகாது. தோஷமில்லாதவனே! உன் மனத்துக்கு நிகிக்குமானல், இவ்வண்ணம் உன் வீட்டில் வஸிப்பேன். என்னிஷ்டப்படி போவேன்; அப்படியே வருவேன். வேந்தே! என்னுடைய படுக்கையிலும் ஆஸனத்திலும் ஒருவனும் அபராதியாகக்கூடாது' என்றுசொன்னர். குந்திபோஜன், அவரைப்பார்த்து, 'அப்படியே ஆகட்டும். இன்னும் சிறப்பாகவும் செய்வேன்' என்று ப்ரீதியுடன்கூடின இந்தவசனத்தை உரைத்தான்; மீண்டும் அந்த மஹரிஷியைப்பார்த்து, 'பேரறிவுள்ளவரே! புகழ்பெற்றவரும் சீலமும் ஒழுக்கமுமுள்ளவரும் உத்தமியும் இந்திரியங்களை

[1] மாத்ஸர்யம் = பிறர்நன்மையைப்பொறுமை.

அடக்கினவளும் பிறரை அவமதியாதவளுமான ப்ருதை என்கிற என்னுடைய பெண் இருக்கிறாள். அவள் அலக்ஷ்யம்செய்யாமல் பூஜையினால் உம்மை ஆராதிப்பாள். அவளுடைய சீலத்தாலும் நடையினாலும் ஸந்தோஷத்தை அடைவீர்' என்றுசொன்னான். இவ்வாறு அந்த ப்ராம்மணரைப்பார்த்துச் சொல்லிவிட்டு விதிப்படி அவரைப்பூஜித்து விசாலமான கண்களுள்ள ப்ருதைஎன்கிறபெண்ணிடம்போய், 'குழந்தாய்! மஹாபாக்யமுள்ள இந்தப்ராம்மணர் என்னுடையவீட்டில் வஸிப்பதற்கு விரும்புகிறார். என்னாலும் இவருக்கு, 'அப்படியே ஆகட்டும்' என்று உறுதிகூறப்பட்டது. பெண்ணே! ப்ராம்மணராதனமானது உன்னைப்பொறுத்திருக்கிறது. ஆகையால், என்னுடைய்வாக்கியத்தை நீ ஒருபொழுதும் கச்செய்யலாகாது. தவமுள்ளவரும் பகவானும் தவறுமல் வேதங்களை ஓதுகிறவரும் மிக்க தேஜஸ்ஸுள்ளவருமான இந்தப் ப்ராம்மணர் எதனைச்சொல்லுவரோ அதனை வெறுப்பின்றிக் கொடுக்கவேண்டும். ப்ராம்மணர்கள் சிறந்த தேஜஸன்றோ? ப்ராம்மணர்கள் சிறந்த தவமன்றோ? ப்ராம்மணர்களுடைய நமஸ்காரங்களால் ஸூர்யன் ஆகாயத்தில் விளங்குகிறான். ப்ராம்மணர்களைப் பூஜைசெய்யாமல் [1]தாண்டக்யனும் வீதாபியென்கிற மகாஸுரனும் அப்படியே தாலஜங்கனும் ப்ராம்மணசாபத்தால் கொல்லப்பட்டார்கள்; விந்தியமலையும் நஹுஷனும் ஸமுத்திரமும் துன்புறுத்தப்பட்டார்கள். குழந்தாய்! அப்படிப்பட்ட இந்தமகாபாரமானது இப்பொழுது உன்னிடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. நீ எப்பொழுதும் அடக்கத்துடன் ப்ராம்மணருக்கு ஆராதனத்தைச் செய்வாயாக. பெண்ணே! இளமை தொடங்கியே உன்னுடையமனம் ஒரேவழியில்செல்வதை நான் அறிவேன். இந்த அரண்மனையில் ப்ராம்மணர்களிடமும் எல்லாக் குருக்களிடமும் உறவினர்களிடமும் அப்படியே எல்லாவேலைக்காரர்களிடமும் நண்பர்களிடமும் ஸம்பந்திகளிடமும் மாதாக்களிடமும் என்னிடமும் நீ உள்ளபடி எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருக்கிறாய். தோஷமற்ற அங்கங்களுள்ளவளே! வேலைக்காரர்களிடம் நீ மன்னு நடந்துகொள்வதனால் இந்தப்பட்டணத்திலும் அந்தப்புரத்திலும் உன்மீது ஸந்தோஷமில்லாத மனிதர்கள் இல்லை. ப்ருதையே! சிறுமியென்றும் எனக்குப் பெண்ணாக இருக்கிறாய்

[1] 'மாஹார்ஹாந்' என்பது வேறுபாடம்; 'பூஜைக்குரிய ப்ராம்மணர்களை' என்பது பொருள்.

யென்றும் எண்ணிக் கோபமுள்ளவரான பிராம்மணருக்கு உன்னையே பணிவிடை செய்வதற்காக ஏற்படுத்தத்தக்கவளென்று நினைக்கிறேன். வ்ருஷ்ணிகளுடைய குலத்தில் நீ பிறந்தாய்; சூரனென்கிற மன்னனுக்கு ப்ரியமான புத்திரி. ப்ரீதியுள்ள உன்பிதா இளமைப் பருவத்திலிருந்த உன்னை முற்காலத்தில் தானே எனக்குக் கொடுத்தான். நீ வஸுதேவனுடைய ஸஹோதரி. என் பெண்களுள் நீ மிகவும் மேன்மைபெற்றவள். சூரனுல் (மூத்தகுழந்தை என்னுல் உனக்குக் கொடுக்கத்தக்கது) என்று ப்ரதிஜ்ஞைசெய்யப் பட்டபடி நீ கொடுக்கப்பட்டாய். அதனுல், எனக்கு நீ புத்திரியாகிறாய். அப்படிப்பட்ட குலத்திலன்றோ நீ பிறந்தாய்? என்னுடைய குலத்தில் நீ நன்றாக வளர்க்கப்பட்டாய். நதியானது ஒரு மடுவிலிருந்து மற்றொரு மடுவில் பாய்வதுபோல ஸுகத்தினின்று ஸுகத்தை அடைந்திருக்கிறாய். கல்யாணி! இழிகுலத்தில் பிறந்த பெண்கள் ப்ரயாஸத்தால் முக்கியமாக நிர்ப்பந்தத்துடன் பாதுகாக்கப்பட்டாலும் இளமைப்பருவத்தால் துஷ்டஸ்வபாவத்தைச் சேர்கிறார்கள். ப்ருதையே! உன் பிறப்போ ராஜகுலத்தில். உன்னுடைய அழகும் அத்புதமானது. பெண்ணே! மற்றும் வேண்டிய எல்லாவற்றுடனும் சேர்ந்து நிரம்பியிருக்கிறாய். பெண்ணே! ப்ருதையே! அப்படிப்பட்ட நீ செருக்கையும் டம்பத்தையும் தன்னைத்தானே மதித்தலையும் விட்டு வரங்களைக் கொடுப்பவரான பிராம்மணரை ஆராதித்து நன்மையைப் அடைவாய். கல்யாணி! தோஷமில்லாதவளே! இவ்வண்ணம் மஹரிஷிகளும் ஆராதிப்பார்களில் நிச்சயமாக மங்களத்தைத் அடைவாய். பிராம்மணர்க்கு கோபம்வருமாறு செய்யப்பட்டால் என்னுடைபகுலம் முழுமையும் எரிக்கப்படுமே; என்று சொன்னான்.

முந்நூற்றைந்தாவது அத்யாயம்.

குண்டலாஹரண பர்வம். (தொடர்ச்சி.)

(குந்தி கருத்துடன் பணிசெய்து துர்வாஸரை மகிழ்வித்தது.)

குந்தி, 'அரசரே! நான் நியமத்துடன் பூஜையினுல் பிராம்மணரை நீர் வாக்களித்தபடி ஆராதிப்பேன். நான் பொய்சொல்லவில்லை. பிராம்மணர்களைப் பூஜிக்கும் விருப்பமுடையேனென்னும் இதுவும் எனக்கு இயற்கையே. உம்முடைய விருப்பமும் செய்யவேண்டி

யதே. எனக்கும் நிகரில்லாத கன்மை உண்டு. பகவானை அவர் மாலையில் வந்தாலும் காலையில் வந்தாலும் இரவில் வந்தாலும் நடு ராத்ரியில் வந்தாலும் என்மீது [1]கோபம் கொள்ளமாட்டார். ராஜேந்திரரே! பிராம்மணர்களைப் பூஜிப்பதற்கு நான் ஏற்படுத்தப் படடதாகிய இது எனக்கு லாபம். புருஷஸ்ரேஷ்டரே! உம்முடைய கட்டளைப்படி நின்று கன்மையைச் செய்வேன். ராஜேந்திரரே! நீர் நம்பிக்கையுள்ளவராக் இரும். பிராம்மணோத்தமர் உம்முடைய வீட்டில் வசித்து அப்ரியத்தை அடையமாட்டார். இது உண்மை யென்று உமக்குச் சொல்லுகின்றேன். அரசரே! குற்றமற்றவரே! இந்த ப்ராம்மணருக்குப் ப்ரியமும் உமக்கு கன்மையுமான காரி யத்தில் முயல்வேன். உம்முடைய மனக்கவலை விலகட்டும். பூமிக்கு இறைவரே! மகாபாக்கியசாலிகளான பிராம்மணர்கள், பூஜிக்கப் பட்டார்களானால் (துன்பத்தினின்று) தாண்டுவிப்பதற்கும், விப ரீதமாக நடந்துகொள்ளப்பட்டால் வதஞ்செய்வதற்கும் வல்லவ ராவார்கள். அப்படிப்பட்ட நான் இதனை அறிந்து பிராம்மணோத் தமரை மகிழ்விப்பேன். அரசரே! என் நிமித்தமாகப் பிராம்ம ணோத்தமரிடமிருந்து துன்பத்தை நீர் அடையமாட்டீர். ராஜ ஸ்ரேஷ்டரே! முற்காலத்தில் ஸுகன்னியின் (செய்கை) காரண மாக ச்யவனர் தீங்கிழைப்பவரானதுபோலக் குற்றம் நேர்ந்தால் பிராம்மணர்கள் அரசர்களுக்குத் தீங்கிழைப்பவர்களும் ஆகின்ற னர். அரசரே! நீர் பிராம்மணோத்தமரிடம் சொல்லியபடியே போன் சிறந்த நியமத்தோடு அவரை உபசரிப்பேன்' என்று சொன் னாள். அரசன், 'இவ்வண்ணம் சொல்லுகின்ற குந்தியைப் பலதட வை தழுவிக்கொண்டும் புகழ்ந்தும், 'கல்யாணி! இகழத்தகாத வளே! என்னுடைய கன்மைக்கும் அப்படியே உன்னுடைய சுகத் துக்கும் குலத்தின் கன்மைக்குமாக இப்படி இப்படி நீ எல்லா வற்றையும் ஆலோசியாமல் செய்யவேண்டும்' என்று செய்யவேண் டியதைக் கட்டளையிட்டான். அதிக கீர்த்தியுள்ளவனும் பிராம் மணர்களிடம் அன்புள்ளவனுமான குந்திபோஜன், அந்தப் பெண் ணைப் பார்த்து இவ்வாறு கூறி, பிராம்மணரைப் பார்த்து, 'பிராம் மணரே! இந்தச் சிறுமியானவள் என்னுடைய புதல்வி; ஸுக மாக வளர்க்கப்பட்டவள். ஏதாவதொருகுற்றம் செய்துவிட்டா லும் அதனைத் தேவரீர் மனத்தில் வைக்கலாகாது. மகாபாக்கிய சாலிகளான பிராம்மணர்கள் பிராயம் முதிர்ந்தவர்களிடமும் சிறு

[1] கோபங்கொள்ளும்படி நடவேனென்பது.

வர்களிடமும் தவசிகளிடமும் அவர்கள் குற்றஞ்செய்தாலும் எப் பொழுதுமே பெரும்பாலும் கோபிக்கமாட்டார்கள். மிகப் பெரிய குற்றம் நேர்ந்தாலும் பிராம்மணர்கள் பொறுமை பாராட்டவேண் டும். பிராம்மணேந்தமரே! சக்திக்குத் தக்கபடியும் பெருமுயற் சிக்குத் தக்கபடியும் செய்யப்படுகிற பூஜையை 'ஏற்றுக்கொள்வீ ராக' என்று சொல்லிப் பிருதையைப் பிராம்மணரிடம் கொடுத் தான். பிராம்மணர், 'அப்படியே ஆகட்டும்' என்று சொல்லியபின், அந்த அரசன் ப்ரீதியுள்ள மனத்துடன் [1] ஸூர்ய கிரணத்துக் கும் சந்திரகிரணத்துக்கும் ஒப்பான ஒரு மாளிகையை இவருக் குக் கொடுத்தான். அந்த வீட்டில் அக்னிகிருகத்தில் அவருக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற காந்தியுள்ள ஆஸனத்தையும் அப்படியே ஆகாரமுதலிய எல்லாவற்றையும் கொடுத்தான். ராஜபுத்திரியோ, சோம்பலையும் தன்னைத்தானே மதிப்பதையும் விலக்கிவிட்டுப் பிராம்மணருடைய ஆராதனத்தில் அதிகமுயற்சியைச் செய்தாள். சுத்தியையுமுதன்மையாகக்கொண்டவளும் தர்மத்தில் பற்றுதலுள்ள வளுமான அந்த ப்ருதை அங்கே பிராம்மணரை அடைந்து விதிப்படி பூஜிக்கத்தக்க அவரைத் தேவதைபோல(ப் பூஜித்து) மகிழ்வித்தாள்.

முந்நூற்றுருவது அத்யாயம்.

குண்டலாஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(சூர்யனின்பணிவிடையினால் ஸந்தோஷமடைந்த துர்வாஸர் வரங் களைக்கேட்கச் சொல்லியதும், அவள் கேளாமலிருக்க, அவர் தாமே தேவதைகளை வசப்படுத்தும் மந்திரத்தை உபதே சித்து அரசனிடம் விடைபெற்று மறைந்ததும்.)

மகாராஜரே! பரிசுத்தவிரதமுள்ள அந்தக்கன்னியானவள், கடுமையான விரதமுள்ள பிராம்மணரைச் சுத்தமானமனத்தினால் ஸந்தோஷமடையச்செய்தாள். ராஜேந்திரரே! பிராம்மணேந்த மர், ஒரு ஸமயத்தில், 'காலையில்வருவேன்' என்று சொல்லிவிட்டு, பிறகு, ஸாயங்காலத்தில் வருவார்; பிறகு, மீண்டும் இரவில் வரு வார். அவரை எல்லாஸமயங்களிலும் அந்தக்கன்னியானவள் மிக அதிகமானபக்ஷபங்களாலும் போஜ்யங்களாலும் ஆஸனங்க

---

[1] 'ஹம்ஸ' என்பது மூலம்; 'அன்னப்பறவைக்கும்' என்பது இங்கி லீஷ் மொழிபெயர்ப்பு.

ளாலும் படுக்கைகளாலும் ஸப்பொழுதும் பூஜித்தாள். அவருக்கு அன்னம் முதலியவைகளாலும் அப்படியே படுக்கையிலுலும் ஆஸனத்தாலும் செய்யப்படுகிற உபசாரம் காலுக்குநாள் வளர்ந்து வந்தது; குறைவடையவில்லை. ஹரசரே! அப்பொழுது குந்தியானவள் பிராம்மணருடைய அதட்டுதல்களாலும் வைதல்களாலும் அப்படியே அப்ரியமானசொல்லாலும் (துன்புறுத்தப்பட்டும்) அவருக்கு வேண்டாததைச் செய்யவில்லை. அந்தப்பிராம்மணர் மறுபடியும் தூங்கும்பொழுது வருவார்; பெரும்பாலும் வராமலுமிருப்பார். அவர் கிடைக்க மிகவும்அரிதாக இருக்கிற அன்னத்தைக்கொடு என்றுசொல்வார். அவள் அவையெல்லாம் ஸித்தமாக இருக்கின்றனவென்றே அவருக்குத் தெரிவிப்பாள். ராஜேந்திரரே! இகழப்படாதவளும் உத்தமகன்னிகையுமான அந்தப்ருதையானவள், இந்திரியங்களை நன்றாக அடக்கிப் பிராம்மணோத்தமருக்குச் சிஷ்யன்போலவும் புத்ரன்போலவும் தங்கைபோலவும் அவரிஷ்டப்படிநடந்து மகிழ்ச்சியை விளைவித்தாள். பிராம்மணோத்தமர் அவளுடைய சமம் தமமுதலியகுணங்களாலும் பணிவிடையினாலும் ஸந்தோஷமடைந்தார்; மீண்டும், இவளுக்கு நன்மையைச் செய்வதற்காக்க தியானகாலத்தில் கருத்துடன் ஆலோசிப்பதில் மிக்கமுயற்சியைச் செய்தார். பாரதரே! பிதாவானவன், அவளைப்பார்த்து, 'புத்திரி! உன்னுடையபணிவிடையினால் பிராம்மணர் ஸந்தோஷிக்கிறாரா?' என்று காலையிலும் மாலையிலும் கேட்டுவந்தான். கீர்த்தியையுடையவளான அவள், 'அதிகமாக ஸந்தோஷிக்கிறார்' என்றே அவனுக்கு பதிலுமொழி உரைத்தாள். பிறகு, பெரியமனமுள்ள குந்திபோஜன் உத்தமமான ப்ரீதியை அடைந்தான். பிறகு, மந்திரஜபஞ்செய்பவர்களுள் சிறந்தவரும் ஸ்நேஹத்தில் பற்றுதலுள்ளவருமான அந்தப்பிராம்மணர், ஒருவருஷம் பூர்ணமாகியும் ப்ருதையினிடம் கெட்டசெய்கை ஒன்றையும் காணாமற்போனபொழுது, மனமகிழ்ந்தவராகி, இவளைப்பார்த்து, 'கல்யாணி! மங்களமானவளே! உன்னுடையபணிவிடையினால் மிக்கமகிழ்ச்சியடைகிறேன். கல்யாணி! எல்லாஸ்த்ரீகளையும் கீர்த்தியினால் மீறக்கூடியபலவகளரும் இவ்வுலகில் மனிதர்களால் எவ்விதத்தாலும் அடையமுடியாதவைகளுமான வரங்களை நீ வரிப்பாயாக' என்றுசொன்னர். குந்தி, 'வேதங்களை அறிந்தவர்களுள் உத்தமரே! என்விஷயத்தில் தேவரீரும் என் பிதாவும் அருளுள்ளவர்களாக இருக்கிறீர்களாதலால் என்ன

டைய எல்லாக்கார்யங்களும் செய்து முடிக்கப்பட்டவைகளே. பிராம்மணரே! எனக்கு வ்ரங்கள் வேண்டாம்' என்றுசொன்னாள். பிராம்மணர், 'கல்யாணி! சுத்தமான புன்னகையுள்ளவளே!. என்னிடத்தினின்றும் வரத்தை நீ விரும்பாவிட்டால், நீ தேவர்களை அழைப்பதற்காக இந்தமந்திரத்தைப்பெற்றுக்கொள். கல்யாணி! நீ இந்தமந்திரத்தினால் எந்தஎந்தத்தேவனை ஆவாஹனம்செய்வாயோ அந்தஅந்தத்தேவன் உன்வசத்திலிருக்கவேண்டியவனாவான். விருப்பமில்லாதவனே விருப்பமுள்ளவனே அந்தத்தேவன் [1] மந்திரத்தினால் பரபரப்புள்ளவனாகவும் வாக்கியங்களால் வேலைக்காரன்போல வணங்கினவனாகவும் உன்னுடையவசத்தில் வந்துசேருவான்' என்று சொன்னார். அரசரே! இகழப்படாதவளான அந்தக்குந்தியானவள் சாபபயத்தினால் அப்பொழுது அந்தப்பிராம்மணஶ்ரேஷ்டரை இரண்டாவதுதடவை மறுத்துச்சொல்வதற்குச் சக்தியற்றவளானாள். தேவந்தை! பிறகு, அந்தப்ராம்மணர் அப்பொழுது அதர்வசிரஸில் சொல்லப்பட்டிருக்கிற பிரஸித்தமான மந்திரத்தினாகுதியைக் குற்றமற்ற அங்கங்களுள்ள அந்தக்குந்திக்கு உபதேசித்தார். ராஜேந்திரரே! அந்தமந்திரத்தைக்கொடுத்துவிட்டு, குந்திபோஜனைப்பார்த்து, 'அரசனே! கன்னியினால் மகிழ்விக்கப்பட்டவனும் உன்னுடையவீட்டில் மிக்கதிருப்தியடைந்தவனும் எப்பொழுதும் நன்றாகப் பூஜிக்கப்பட்டவனுமாக ஸுகமாக வஸித்தேன். செல்வேன்' என்று சொல்லி மறைந்தார். அந்த அரசனே, அப்பொழுது அந்த இடத்திலேயே பிராம்மணர் மறைந்துபோனதைக்கண்டு ஆச்சர்யம் மேலிட்டவனானான்; ப்ருதையையும் மிகக்கொண்டாடினான்.

முந்நூற்றேழாவது அத்யாயம்.

*குண்டலாஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(ஒரு ஸமயம் குந்தியானவள் மந்திரத்தைப்பரீக்ஷிப்பதற்காக ஸூர்யனை அழைத்ததும், சூரியன்வந்து தன்னுடைய சோரவிரும்பாத குந்தியைப்பயமுறுத்தி இன்சொற்கூறியதும்.)

அந்தப் பிராம்மணோத்தமர் சென்று சிறிதுகாலம் சென்றபின், கன்னியாக இருந்த அந்தக்குந்தியானவள், 'மகாத்மா

---

[1] 'மந்திரங்களால் சாந்தமானவனும் வேலைக்காரன்போல வணங்கினவனும் ஆவான்' என்பது வேறுபாடத்தின்பொருள்.

வான அவரால் எனக்குக்கொடுக்கப்பட்ட இந்தமந்திரத்தொகுதி எப்படிப்பட்டது? அதனுடைய வலிமையை விரைவில் அறிவேன்' என்று மந்திரத்தொகுதியின் பலாபலங்களைச் சிந்தித்தாள். இவ்வண்ணம் ஆலோசிக்கின்ற அந்தப்ருதையானவள், தற்செயலாக ருதுவின்சின்னத்தைக்கண்டாள். [1] கன்னியாக இருக்கும்நிலைமையில் வீட்டுக்குவிலக்கான அந்தச்சிறுமியானவள் வெட்கினவளானாள். பிறகு, உப்பரிகையிலிருப்பவளும் [2] சிறந்த படுக்கையிலிருந்தவளுமான அந்தக்குந்தியானவள், கீழ்த்திசையில் உதிக்கின்ற சூரியமண்டலத்தைப் பார்த்தாள். அழகிய இடையுள்ள அந்தக்குந்தியானவள் அந்தஸூர்யனிடத்தில் மனத்தையும் கண்ணையும் வைத்தாள். அவள் ஸந்தியை அடைந்திருக்கிற சூரியனுடையரூபத்தினால் (போதுமென்கிற) திருப்தியை அடையவில்லை. அவளுக்குத் திவ்யதிருஷ்டி உண்டாயிற்று. அவள் அற்புதமானகாட்சியுள்ளவனும் கவசமணிந்தவனும் குண்டலங்களாலலங்கரிக்கப்பட்டவனுமான ஒரு தேவனைக் கண்டாள். அரசரே! மந்திரத்தைப்பற்றி அவளுக்கு(ப் பரீக்ஷிக்க)விருப்பம் உண்டாயிற்று. பிறகு, அவள் அந்தஸூர்யனை மந்திரத்தினால் அழைத்தாள்; அப்பொழுது, (கண்காது முதலிய) உறுப்புக்களை ஜலத்தினால்தொட்டு (=ஆசமனம்செய்து) ஸூர்யனை அழைத்தாள். வேந்தே! பிறகு, தேன்போலப் பிங்கவர்ணமுள்ளவனும் நீண்டகைகளையுடையவனும் சங்குபோன்ற கழுத்துள்ளவனும் தோள்வளைகளை அணிந்தவனும் கிரீடந்தரித்தவனுமான ஸூர்யன், சிரித்துக்கொண்டும் திசைகளை நன்குஜ்வலிக்கச்செய்துகொண்டும் விரைவாகவந்தான். ஸூர்யன் யோகத்தினால் தன்னுருவத்தை இரண்டாகச்செய்து (ஒருவடிவத்துடன்) வந்தான்; (மற்றொருவடிவத்தால்) காயவும்காய்ந்தான். பிறகு, சூரியன், குந்தியைப்பார்த்து, 'கல்யாணி! உன்னுடைய மந்திரத்தினால் வலிந்து அழைக்கப்பட்டேன் உன்வசத்தை அடைந்திருக்கிறேன். உனக்கு வசப்பட்டிருக்கிறேன் என்ன செய்யவேண்டும்?

[1] 'கந்யாஹாவெ' என்பது மூலம்; கன்னி = பத்துவயதுப்பெண் என்பதும், கல்யாணமாகாதபெண் என்பதும் பொருள். இங்கே, 'கல்யாணமாகாதபெண்' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

[2] 'ஸுஹாஹ-ஸுயஸெநாவிதா' என்பது மூலம்; 'சிறந்தபடுக்கைக்குத் தகுதியுள்ளவள் என்பதும், சிறந்தபடுக்கையில்படுத்துப்பழகினவள் என்பதும் பொருள்.

அரசியே! சொல்வாயாக. உனக்கு எது இஷ்டமோ அதை நான் செய்பவனாக இருக்கிறேன்' என்று மிக அழகிய இன்சொல் லுடன் கூறினான். குந்தி, 'பகவானே! எங்கிருந்து வந்தீரோ அவ்விடத்திற்குச் செல்லலாம். பகவானே! (மந்திரத்தைப் பரீ க்ஷிப்பதில்) ஆவலால் அழைக்கப்பட்டீர். தவறாகச் செய்வீராக' என்று சொன்னாள். சூரியன், 'மெல்லிய இடையுள்ளவளே! நீ என்னைப்பார்த்துச் சொல்லுகிறபடியே செல்வேன். ஆயினும், தேவனை என்னை அழைத்து வீணாகத் திருப்பி அனுப்புவது நியாயமன்று. நல்லபாக்கியமுள்ளவளே! ஸௌர்யனிடத்தினின்று வீர்யத்தினால் உலகத்தில் ஒப்பற்றவனும் கவசமுள்ளவனும் குண்டலங்களுள்ளவனுமான புத்திரன் உண்டாகவேண்டுமென்று உனக்கு எண்ணம். யானைபோல நடப்பவளே! அப்படிப்பட்ட நீ உன்னைக்கொடுத்தலைச் செய்வாயாக. பெண்ணே! நீ எண்ணின எண்ணம் உனக்குப் புத்திரன் உண்டாவான். கல்யாணி! அழகிய புன்னகையுள்ளவளே! உன்னிஷ்டி சேர்ந்துவிட்டு, பிறகு, நான் போகிறேன். பெண்ணே! நீ இப்பொழுது என்னுடைய ப்ரியமான சொல்லைச் செய்யாமல் போவாயாகில், மறுத்ததனால் கோபம்கொண்ட நான் பிராம்மணரையும் உன் தகப்பனையும் சபிப்பேன். உனக்காக அவர்களனைவரையும் காப்பேன். ஸந்தேகமில்லை. உன்னுடைய அதிதியை அநியாயமாக மூடனான உன் பிதாவைக் குறும் உன்னுடைய பிதாவையும் தாயையும் அறியாமல் உனக்கு மந்திரத்தைக்கொடுத்து பிராம்மணனுக்குப் இப்பொழுது கோபமான சாபம் விடுவேன். கல்யாணி! இந்தச்சொல்லை மறக்கவேண்டாம். இந்த பிரயோகமாத்திரத்தால், உன்னால் வருந்தக்கப் படாதிருக்கும் மனச்சோர்வு அதாவதுக்குப் பயந்துகொண்டு பயப்படாதிருக்கும். உனக்கு இந்தப் பிரயோகத்தின் தன்மையிலிருந்து இருக்கிறது. மனச்சோர்வு நீ பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே பூர்த்தியாகும் என்னால் உனக்குக் கும் மகாகர்வமுள்ளதாயிருக்கிறது' என்று சொன்னான். பிறகு, ராஜ புத்திரியான அவள் தன் தன் கன்னி மனோபாவத்தில் ஆசையுற்று ஸூர்யனோடேயும் பிரகாசிக்கிற எல்லாத் தேவர்களோடும் ஒன்பதுள்ளவற்றோடு மனோஹரமான மூன்றுலோகங்களையும் பார்த்தாள். சிறுமியான அந்தக் குந்திதேவியானவள், அந்தத் தேவர்களோடும் சூரியனையும் பார்த்துப் பயந்தவளாக, சூரியனை நோக்கி, 'தேவாதிதேவே! நீர் உம் முடைய மனோவாக்காயத்தை நோக்கிச் சிலவீர்யமாக இருந்த

லால் இந்த முறைத் தவறு ' (எனக்குத்) துக்கத்தையே விளைவிக் கிறது. பிதாவும் மாதாவும் ' இன்னும் மற்றப் பெரியோர்களும், இந்தச் சரீரத்தைக் கொடுப்பதில் அதிகார்முள்ளவர்களாக இருக் கிறார்கள். நான் தர்மத்தை அழிக்கமாட்டேன். உலகத்தில் ஸ்திரீகளுக்கு நன்னடையான்து சரீரரக்ஷையாகப் புகழப்படுகிறது. ஒளியைப் பொருளாகக்கொண்டவரே! என்னால் நீர் மந்திரபலத்தை அறிவதற்காக அழைக்கப்பட்டீர். பிரபுவே! 'சிறுமியானவள் பால்யத்தால் செய்துவிட்டாள்' என்று எண்ணி என்னுடைய இந்தக் குற்றத்தைப் பொறுக்கக்கடவீர்' என்று சொன்னாள். ஸௌர்யன், 'சிறுமி என்றெண்ணி உன்னிடத்தில் நல்லவார்த்தை சொல்லு கிறேன். வேறு ஒருத்தியினிடமும் நான் நல்லவார்த்தை சொல்ல மாட்டேன். குந்திபோஜனுடைய பெண்ணே! உன்னுடைய தேகத்தை எனக்குக் கொடு. பயந்தவளே! உன்னுடைய இந்தச் செய்கையினாலன்றோ கோபத்துக்குத் தணிவு உண்டாகும்? பயந் தவளே! பெண்ணே! மந்திரத்தாலழைக்கப்பட்ட நான் உன்னோடு சேராமல் உன்னால் வஞ்சிக்கப்பட்டவனாகத் திரும்பிச் செல்வது தகாதன்றோ? குற்றமற்ற அங்கங்களுள்ளவளே! உலகத்தில் நன்கு பரிகஸிக்கத்தக்க தன்மையை அடைவேன். அழகிய பின்தட்டுக் களுள்ளவளே! கல்யாணி! செல்லவே செல்வேன். நான் உன்னால் நிராகரிக்கப்பட்டுச் சென்றால் எல்லாத் தேவர்களாலும் அப்படி நிந்திக்கத்தக்கவனாவேன். அப்படிப்பட்ட நீ என்னோடு சேருவாயாக; என்னைப்போன்ற புத்திரனை அடைவாய். எல்லா உலகங்களிலும் மேன்மை பெற்றவளாவாய்; ஸம்சயமில்லை' என்று

முந்நூற்றெட்டாவது அத்யாயம்.

குண்டலாஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(குந்தியானவள் அரிதில் ஸம்மதித்ததும், ஸௌர்யன் மறுபடியும் கன்னி யாதும்படி வரங்கொடுத்து அவளிடத்தில் கர்ப்பத்தை உண்டுபண்ணியதும்.)

நல்லமனமுள்ள அந்தக் கன்னியானவள் பலவிதமான இன் சொல்லைக்கூறியும் ஸௌர்யனை ஸமாதானப்படுத்துவதற்குச் சக்தி யுள்ளவளாகவில்லை. அரசரே! சிறுமியான குந்தியானவள்

சூர்யனை மறுக்கமுடியாமற்போனபொழுது, 'அவனிடத்திலிருந்து வரும் சாபத்துக்குப்பயந்து, பிறகு, 'கோபங்கொண்டிருக்கிற இந்தச் சூரியனிடத்திலிருந்து நிரபராதியான என் பிதாவுக்கும் பிராம்மணருக்கும் என்னிமித்தம் எவ்வாறு சாபம் நேராமலிருக்கும்? (ஸூர்யன் முதலிய) தேஜஸ்ஸுகளும் துர்வாஸர் முதலிய ரிஷிகளும் [1] தீமையற்றவர்களானாலும், சிறுவன் ஸாதுவாயிருந்தாலும், அறியாமையால் பழக்கமிருக்கிறதென்று அவர்களை அணுகலாகாது. (அவருடைய) கையில் [2] பிடிபட்டு மிக்க பயத்தை அடைந்திருக்கிறேன். அப்படிப்பட்ட நான் இப்பொழுது நாளை வே என் தேகத்தைப் பிறருக்குக் கொடுக்கிறதென்கிற மிக்க தீச் செயலை எவ்வாறு செய்வேன்?' என்று நெடுநேரம் ஆலோசித்தாள். ராஜஸ்ரேஷ்டரே! பிரஜைகளுக்குப்பதியே! [3] சாபத்தினின்று பயந்தவளும் மனத்திலுல் பலவாறு சிந்திக்கின்றவளுமான அந்தக் குந்தியானவள், மோகம் மேலிட்ட அங்கங்களுள்ளவளும் அடிக்கடி புன்னகைசெய்பவளும் பந்துக்களிடம் பயந்தவளுமாகி அந்த ஸூர்யனைப்பார்த்து வெட்கத்தால் தழுதழுத்த சொல்லால், 'என் தகப்பனாரும் தாயாரும் மற்ற உறவினர்களும் உயிரோடிருக்கும்பொழுது இந்தச் சாஸ்திரத்தவறுதலானது எப்படி ஏற்படலாம்? தேவரே! சாஸ்திரவிதிக்கு விலக்கான சேர்க்கை உம்முடன் ஏற்படுமேயாகில் என் நிமித்தமாக இந்தக் குலத்திற்கு உலகத்தில் அபகீர்த்தியானது ஏற்படும்; ஸம்சயமில்லை. எவ்விதத்தாலும் அவமதிக்க முடியாதவரே! காய்பவர்களுள் சிறந்தவரே! 'நீர் இதைத் தர்மமென்று எண்ணினால், பந்துக்களால் கொடுக்கப்படாமலிருந்தும், தர்மத்தைச்செய்கிற நான் உமக்கு என்னுடைய தேகத்தைக்கொடுத்து உம்முடைய ஆசையை நிறைவேற்றுகிறேன். பிராணிகளுடைய தர்மமும் யசஸும் கீர்த்தியும் ஆயுளும் உம்மிடத்திலிருக்கின்றன' என்று சொன்னாள். ஸூர்யன், 'சுத்தமான புன்னகையுள்ளவளே! உன்னைக் கொடுக்கும்விஷயத்தில் உன்னுடைய பிதாவோ உன்னுடைய மாதாவோ பெரியோர்களோ அதிகாரிகளல்லர். உனக்கு மங்களம். என் சொல்லைக் கேள். பெண்ணே! சிறந்த காந்தியுள்ளவளே! காந்தியை (=விருப்பத்தை)ப் பொருளாகக்கொண்ட 'கந்' என்கிற தாதுவினால்

---

[1] வேறு பாடம்.

[2] 'க்ருஹீதவா' என்பது மூலம்; 'க்ருஹீதா' என்று மாற்றப்பட்டது.

[3] இரட்டித்தலால் ஒருசொல் விடப்பட்டது.

ஏற்பட்ட கன்னையென்னும் சொல்லானது, 'எல்லாரையும் விரும்புகிறள்' என்கிற பொருளை உணர்த்துவதனல் அழகிய இடையுள்ள கன்னியானவள் இவ்வுலகில் ஸ்வதந்த்ரமுள்ளவளாக இருக்கிறள். பெண்ணே! உன்னல் ஒருவிதமான அதர்மமும் செய்யப்படத்தாகாது. காமவுகாரணமாக நான அதாமத்தை எப்படி விரும்புவேன்? உத்தமமான காந்தியுள்ளவளே! எல்லா ஸ்த்ரீகளும் எல்லாப்புருஷர்களும் தடையற்றவர்கள். இதுவே பிராணிகளுக்கு இயற்கை; விவாஹநியமம் முதலியவை இதற்கு எதிரிடையானவையென்று சுருதிகள் சொல்லுகின்றன. அப்படிப்பட்ட நீ என்னை புணர்ந்தபின் மீண்டும் கன்னியாகிவிடுவாய். மஹாபாகுபலமுள்ள புத்திரனும் உனக்கு உண்டாவான்; ஸம்சயமில்லை' என்று சொன்னன்.

குந்தி, 'எல்லா இருள்களையும் போக்குபவரே! ரிஷிவரே! உமது மிடத்தினின்று எனக்குப் புத்ரன் குண்டலங்களுடன் கூடியவனும் கவசமுள்ளவனும் சூரனும் நீண்டகைகளுள்ளவனும் மஹாபலசாலியுமாக உண்டாவதேனயாகில் எனக்குப் புத்ரனை உண்டாக்குகவென்கிற இந்த உடன்பாட்டுடன் எனக்கு உம்மோடு சேர்க்கை உண்டாகட்டும்' என்று சொன்னள். ஸூர்யன், 'மிக்க தேஜஸ்வியுள்ளவனும் குண்டலங்களுடன் கூடியவனும் அற்புதமான கவசம்பூண்டவனுமான புத்ரன் உண்டாவான். கல்யாணி! அந்தப் புத்ரனுக்கு அம்ருதத்தாலான கவசம் குண்டலம் இரண்டும் தேகத்தோடு உண்டாகும்' என்று கூறினன்.

குந்தி, 'தேவரே! பகவானே! நீர் என்னிடத்தில் உண்டாக்கும் என்னுடைய புத்ரனுக்கு அம்ருதத்தினின்று உண்டான இந்தக் குண்டலங்களும் உத்தமமான கவசமும் இருக்குமேயாகில், சொன்னவண்ணம் உம்மோடு எனக்குச் சேர்க்கை உண்டாகட்டும். அந்தப் புத்ரன் உம்முடைய வீர்யமும் ரூபமும் பலமும் சௌர்யமும் உள்ளவனாகவும் தர்மத்துடன் கூடியவனாகவும் உண்டாகட்டும்' என்று வேண்டினன். ஸூர்யன், 'மந்தஸ்மிதம் பிரகாசிப்பவளே! அழகிய தொடைகளுள்ளவளே! அநிந்தியே! அதிதியினல் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற குண்டலங்களையும் இந்த உத்தமமான கவசத்தையும் அந்தப் புத்ரனுக்குக் கொடுப்பேன்' என்று கூறினன்.

குந்தி, 'பகவானே! தேவதேவ! நீர் சொல்லுகிறபடி எனக்குப் புத்ரனுண்டாவானுல் உம்மோடுகூட இவ்வண்ணம்

ங்காற்றசேர்க்கையை அடைவேன்' என்று கூறினாள். ஆகாயத்தில் ஸஞ்சரிப்பவனும் ராகுவுக்குச் சத்துருவும் யோகஸ்வரூபனுமான ஸூர்யன், 'அப்படியே' என்று சொல்லிவிட்டு, அந்தக் குந்தியினிடம் பிரவேசித்தான்; அவளின் காபியிலும் தொட்டான். பிறகு, அந்தக் கன்னியானவள் ஸூர்யனுடைய தேஜஸினால் நடுங்கினவள் போலானாள். அந்தக் குந்திதேவியானவள் மதிமயங்கிப் படுக்கையிலும் விழுந்தாள். ஸூர்யன், 'அழகிய பின்தட்டுக்களுள்ளவளே! நான் (உனது பிரார்த்தனையை) நிறைவேற்றிவிட்டேன். எல்லாச் சஸ்திரதாரிகளுள்ளும் சிறந்தவனான புத்திரனைப் பெறுவாய்; கன்னிகையுமாவாய்' என்று சொன்னான்.

ராஜேந்திரனே! பிறகு, 'வெட்கமுள்ளவளான அந்தச் சிறுமியானவள், அப்பொழுது, சீதரத்தைத் தொடங்குகிறவனும் மிக்க தேஜஸுள்ளவனுமான ஸூர்யதேவனைப்பார்த்து, 'அப்படியே ஆகுக' என்று உரைத்தாள். இவ்வாறு உரைத்தவளும் குந்தி போஜனுடைய குமாரியுமான அந்தக்குந்தியானவள், சூரியனைப் பார்த்து (புத்திரனை) வேண்டுகின்றவளும் லஜ்ஜையுடன்கூடியவளும் மயக்கத்தால் கவரப்பட்டவளுமாக, அசைகின்றகொடிபோலட், பரிதாபமான அந்தப்படுக்கையில் விழுந்தாள். உக்கிரமானகிரணங்களுள்ள சூரியன், அவளைத் தேஜஸினால் மயங்கச்செய்து யோகத்தால் அவளிடம் ப்ரவேசித்து அவளைத் தனக்கு வசப்பட்டவளாகச் செய்தான். சூரியன் (கன்னிக் கன்னமையை மீண்டும்கொடுத்தருளல்) அவளைத் தொடர்ந்துக்கு உள்பட்டவளாகச் செய்யவில்லை. பிறகு, சிறுமியான குந்திபானவள் நினைவை மறுபடியும் அடைந்தாள்.

முந்நூற்றொன்பதாவது அத்யாயம்.

குண்டலாஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(குந்தியினிடம் கர்ணன் கவசகுண்டலங்களுடனேபிறந்ததும், அவள்அந்தக் குழந்தையை ஒரு பெட்டியில்வைத்து அல்லாறியில்விட்டதும், அந்தப்பெட்டி முறையே சர்மண்வதியிலும் யமுனையிலும் கங்கையிலும் சென்று சம்பாநகரி சேர்ந்ததும்.)

ஜனமேஜய! குந்திக்கு [1] (வருஷத்திலுடைய) பதினோராவது மாதத்தைச்சார்ந்த கடைசிநாளில் அந்த ஸூர்யனிடத்தினின்று

[1] 'மாகமாதம் சுக்லபக்ஷப்ரதமையில்' என்பது பழையவுரை.

ஆகாயத்தில் சந்திரன் உண்டாவதுபோலக் கர்ப்பம் உண்டா யிற்று. அழகிய பின் தட்டுக்களுள்ளவளும் சிறுமியுமான அந்தக் குந்திதேவியானவள் பந்துக்களிடத்தினின்று உண்டான பயத் தினால் அந்தக் கர்ப்பத்தை மறைத்துத் தரித்துவந்தாள். இவளை ஜனங்கள் அறியவில்லை. கன்யாந்தப்புரத்தை அடைந்திருப்பவளும் ரஹஸ்யத்தைக்காப்பதில் வல்லவளுமான அந்தச்சிறுமியை வளர்ப்புத்தாயைத் தவிர வேறு ஒரு ஸ்திரீயும் அறியவில்லை. பிறகு, சிறந்த காந்தியுள்ள அந்தப்பெண் அந்தத்தேவனுடைய அருளால் உரியகாலத்தில் தெய்வம்போலப் பிரகாசிக்கின்ற ஒரு குழந்தையைப் பெற்றாள்.

பரதரே! அரசரே! அந்தப்பெண்ணானவள், அந்தச்சூரியன் சொன்னபடியே, கவசம்பூண்டவனும் ஸ்வர்ணத்தால் பிரகாசிக் கின்ற குண்டலங்களுள்ளவனும் சிங்கம்போன்ற கண்களையுடைய வனும் காளையினுடைய திமில்போன்ற தோள்களையுடையவனும் பிதாவான சூரியனைப்போலவே இருப்பவனுமான அந்தக்குழந் தையைப் பிறந்தவுடனே வளர்ப்புத்தாயோடு ஆலோசித்து விட்டு விட எண்ணி, 'சில்பிகளால் விரைவில் நன்கு இசைக்கப்பட்டதும் உறுதியானதும் ஜலத்தில் மிதப்பதற்காகப் பலவித மிதப்புக்க ளோடு சேர்த்துக் கட்டப்பட்டதும் அப்படியே மெதுவான தோல் களால் இவ்வண்ணம் நன்றாக விரிக்கப்பட்ட படுக்கையுள்ளதுமான ஒருபெட்டியைச் செய்வித்தாள். எல்லாப்பக்கத்திலும் நல்ல விரிப்பு விரிக்கப்பட்டதும் தேன்மெழுகினால் நன்றாகப்பூசப்பட்டதும் ஸுகமாயிருப்பதும் மழமழப்புள்ளதும் நன்றாகமூடப்பட்டிருப் பதுமான பெட்டியில் அந்தக் குழந்தையை நன்றாகவைத்து மிகப் புலம்பிக்கொண்டே அச்வநதியில் விட்டுவிட்டாள். அரசரே! கன்னிகையினால் கர்ப்பத்தைத்தரித்தலானது செய்யத்தகாத தென்று அறிந்திருந்தும், அந்தக்குந்தியானவள், புத்திரவாத்ஸல் யத்தினால் தீனமாகப் புலம்பினாள். அப்பொழுது, அச்வநதியில் ஜலத்தில் பெட்டியை விடுகின்ற குந்திதேவியானவள் அழுது கொண்டே சொல்லிய வாக்கியங்களைக் கேளும். அரசரே! குந்தி, 'அடா! குழந்தாய்! உனக்கு அந்தரிக்ஷத்திலுள்ளபிராணிகளிடத்தி னின்றும், பூமியிலுள்ள பிராணிகளிடத்தினின்றும், தேவலோகத்தி லுள்ள பிராணிகளிடத்தினின்றும் அப்படியே ஜலசரங்களிடத் தினின்றும் மங்களம் உண்டாகட்டும். வழிகள் உனக்கு மங்களகர மாகட்டும். உனக்கு விரோதிகள் உண்டாகவேண்டாம். குழந்

தாய்! அப்படியே, (த்ரோகசிந்தையுடன் எதிரில்) வந்தவர்களும் த்ரோகசிந்தை இல்லாதவர்களாகட்டும். உன்னை ஜலத்தில் ஜலாதிபதியானவருணராஜன் பாதுகாக்கட்டும். ஆகாயத்தில் அந்தரிக்ஷத்திலிருப்பவனும் அப்படியே எங்கும் செல்பவனுமான வாயுகாக்கட்டும். புத்ர! எனக்குத்தேவர்களின்முறையினால் உன்னைக் கொடுத்தவரும் தேஜஸ்விகளுள் சிறந்தவரும் உனக்குப் பிதாவுமான சூரியர் எல்லா இடங்களிலும் உன்னைக் காக்கட்டும். ஆதித்யர்களும் வஸுக்களும் ருத்ரர்களும் ஸாத்தியர்களும் விச்வேதேவர்களும் இந்திரனும் மருத்துக்களும் திக்குப்பாலகர்களும் திசைகளும் எல்லாத்தேவர்களும் நல்லகாலங்களிலும் ஸந்தகாலங்களிலும் உன்னைப் பாதுகாக்கட்டும். நீ தேசாந்தரத்திலிருந்தாலும் கவசத்தால் காட்டப்பட்ட உன்னை நான் அறிந்துகொள்வேன். புத்ர! நதியை அடைந்திருக்கிற உன்னைத் திவ்யத்ருஷ்டியினால் பார்ப்பவரும் ஒளியைப்போருளாகக்கொண்டவரும் பிரகாசிப்பவரும் உனக்குப் பிதாவுமான சூரியர் பாக்கியசாலி. தேவகுமார! புத்ர! நீ தாகம்கொண்டு எவளுடையபாலைக் குடிப்பாயோ, எவள் உன்னைப் புத்ரனாக அமைத்துக்கொள்வளோ, அவள் பாக்யவதி. எவள் ஆதித்யரைப்போலத் தேஜஸ்ஸுள்ளவனும் திவ்யகவசத்தைதாடுகூடியவனும் திவ்யகுண்டலங்களாலலங்கரிக்கப்பட்டவனும் தாமரைமலர்போல நீண்டும் அகன்றுமுள்ள கண்களையுடையவனும் தாமரைமலரின் சிவந்த இதழ்போல அதிககாந்தியுள்ளவனும் அழகிய நெற்றியுள்ளவனும் அழகிய மயிர்நுனிகளையுடையவனுமான உன்னைப் புத்ரனாக ஏற்பதைக்கொள்வளோ அவளால் என்ன நற்கனவு காணப்பட்டதோ? புத்ர! பூமியில் தவழ்கிறவனும் விளங்காத இனிமையான மழலைச்சொற்களைப் பேசுகின்றவனும் புழுதியினால் பூசப்பட்டிருப்பவனுமான உன்னைப் பாக்கியமுள்ளவர்கள் பார்ப்பார்கள். புத்ரனே! பின்னும் இளமைப்பருவத்தைக்கடந்து யௌவனத்தை அடைந்திருப்பவனும், இமயமலையின் காட்டிலுண்டானதும் பிடரிமயிர்களுள்ளதுமான சிங்கம்போன்றவனுமான உன்னைப் பாக்கியமுள்ளவர்கள் பார்ப்பார்கள்' என்று இப்படிப் பலவாறு தீனமாகப்புலம்பிப் பெட்டியை அப்பொழுது அம்மரத்தில் ஜலத்தில்விட்டுவிட்டாள். வேந்தே! தாமரைமலர்போன்ற கண்களுள்ளவளும் புத்ரனைப்பார்ப்பதில் அதிக ஆவலுள்ளவளுமான குந்தியானவள் நடுநிசியில் புத்ரசோகத்தால் பீடிக்கப்பட்டு அழுது

கொண்டு, பிதாவுக்குத் தெரிந்துவிடுமோ என்கிற பயத்தால் வளர்ப்புத்தாயுடன் சென்று பெட்டியை நதியில் விட்டுவிட்டுச் சோகத்தால் வருத்தமுற்று அந்த இடத்தினின்று மீண்டும் ராஜ மாளிகையில் பிரவேசித்தாள். அந்தப் பெட்டியோ அப்நதியிலிருந்து சர்மண்வதிநதியை அடைந்தது; சர்மண்வதியிலிருந்து யமுனையையும் அந்த யமுனையிலிருந்து கங்கையையும் அடைந்தது. பெட்டியை அடைந்திருக்கிற சிசுவானது அலைகளால் செலுத்தப் பட்டதாகக் கங்கையினின்று ஸுதஸூல் ஆளப்படுகிற சம்பாநகரியின் ஸமீபம் சென்றது. அம்நகரத்தினின்று உண்டான தும் தெய்வத் தன்மைபொருந்தியதும் குண்டலங்களுடன் கூடியதுமான கவசமும் தெய்வத்தாலுண்டுபண்ணப்பட்ட அதிர்ஷ்டமும் அந்தக் குழந்தையை உயிரோடிருக்கச் செய்தன. மகாராஜரே! இது மகாத்மாவான ஸூர்யனுடைய ரஹஸ்யம். ஸூர்யனிடத்தி னின்று உண்டான அந்தக் கர்ப்பமாளது குந்திரூலில் யிற்றில் தாங்கப்பட்டது.

முந்நூற்றுப்பத்தாவது அத்யாயம்.

குண்டலாஹரணபர்வம். (தொடர்ச்சி.

(மனைவியுடன் நீராடச்சென்ற அதிரதன் கங்கையில் மிதந்துவந்த பெட்டியை எடுத்து அதிலிருந்த குழந்தையைத் தனக்குப் புத்திர னாகப்பாவித்து நாமகரணமுதலியவைகளைச் செய்து வள ர்த்ததும், கர்ணன் பராக்ரமமுதலியவை யிடமிருந்து அஸ்திரங்களைப் பெற்றதும், துர்யோதனனுடைய நட்புச்செய்து கொண்டதும்.)

இந்த ஸமயத்தில், தேருக்கு அதிபதியாகிய அதிரதனென்கிற ஸூதன் மனைவியுடன் கங்கைக்குள் சென்றான். அரசரே! அவளுடைய பர்த்தாவின்பேரில் ராதை கர்ப்பமாள். குழந்தையில் பூமியில் கிரமப்பிரவேசம்பண்ணினாள். பகவானுக்குப்பிரியமான அவள் புத்திரனை அடையவிரும்பி; குழந்தை உண்டாவதற்காக விரதம் அதிகமான முயற்சியைச் செய்தாள். அவள், தற் செயலாக (வெள்ளத்தால்) கொண்டுவரப்படுகிறதாய் ரகஸ்யத் காகக் காயிறு கட்டப்பட்டதும் (குங்குமச்சேற்றின்) தூச்சிலால்

விளங்குவதும் கங்கையிலுடைய பேரலைகளின் சிற்றலைகளால் நன்கு அருகில்கொண்டுவரப்பட்டதும் இங்குமங்கும் அடிக்கடி மிகச் சுழலுகின்றதுமான பெட்டியைப் பார்த்தாள். வேந்தரே! பிறகு, அந்தப் பெட்டியானது, ஸுமதன் மனைவியுடன் ஜலத்திலிருந்த இடத்திற்குப் பலமான வெள்ளத்தினாலும் காற்றினாலும் கொண்டுவரப்பட்டது. அந்தப்பெண், பக்கத்தில் வந்த பெட்டியை ஆவலுடன் பிடித்தாள்; பிறகு, அதிரதனென்கிற ஸுமதனுக்குத் தெரிவித்தாள். அவன் அந்தப் பெட்டியைப் பிடித்து ஜலத்திற்குஸமீபத்தில் கரையில்எடுத்துவைத்து யந்திரங்களால் பெட்டியைத் திறக்கும்படிசெய்தான். அவன் அந்தப் பெட்டியில் பாலஸூர்யனுக்குஒப்பானவனும் பொன்மயமான கவசத்தைத்தரித்தவனும் ஜ்வலிக்கின்ற குண்டலங்களோடு கூடின முகத்தால் பிரகாசிப்பவனும் வாடினமுகமுள்ளவனும் அழுதுகொண்டிருப்பவனும் மிக்கபசியுள்ளவனுமான ஒரு குழந்தையைக் கண்டான். அந்தஸுமதனும் மனைவியுடன் சிறந்த காந்தியுள்ள உத்தமனை அந்தப்பாலகனைப் பார்த்து, ஆச்சர்யத்தினால் நன்றுகமலர்ந்திருக்கின்ற கண்களுடன், அந்தக்குழந்தையை மடியில்எடுத்துவைத்துக்கொண்டு மனைவியை நோக்கி, 'பயந்தவளே! பெண்ணே! கல்யாணி! நான் பிறந்ததுமுதல் (பார்த்தவற்றுள்) இதனை மிகஆச்சரியமாகக் காண்கிறேன். இந்தத் தேவகுமாரன் நமக்காக வந்திருக்கிறானென்று எண்ணுகிறேன். குழந்தைகளில்லாதவனை எனக்கு இந்தப்புத்திரன் நிச்சயமாகத் தேவர்களால் கொடுக்கப்பட்டான்' என்று சொன்னான்.

அரசரே! இவ்வாறுசொல்லிவிட்டு, அந்த அதிரதன், அந்தப் புத்திரனை தாதைகளிடம் கொடுத்தான். தாதைகளான்கள் திவ்ய நறுமணமுள்ளவனும் காமனைப்போன்ற உடம்புள்ளவனும் ஸுவர்ணமயினால் நூறுபரிமளமுள்ள அங்கதங்களோடு கூடினவனுமான அந்தக்குழந்தையை விரும்பினார்கள். பெற்றுக்கொண்டார்கள். பிறகு, தாதாவினிடத்தில் பால் பெருகியது; அது இந்தக்குழந்தையின் அதிர்ஷ்டத்தினால் என்பது நிச்சயம். (அவன்) இந்தப்பாலனை விரும்பி தேவஸ்திரீகளோடு கூடினவனாய் சிறந்தகால்லிலைபரப்பின மஞ்சத்தில் மகிழ்ச்சியுடன் படுத்துக்கொண்டான். அது விடாமல், அந்த அதிரதனுக்கு தேவ ஸ்திரீகளோடு உண்டானார்கள். அந்தப் பாலனுக்குக் குண்டலங்கள் காதுகளில் காணப்படவில்லை. குண்டலங்களோடு கூடின காணாமலே பார்த்து, அவர்கள் அந்தப்பாலனுக்குக் காணவில்லையே என்று பெரும்

இட்டார்கள். ஸ்வர்ணமயமான கவசமணிந்தவனும் ஸ்வர்ண மயமான குண்டலங்களுடன் கூடினவனுமான அந்தப்பாலகனைப் பார்த்து ப்ராம்மணர்கள் அவனுக்கு வஸுஷேணனென்றும் பெயரிட்டார்கள். அளவுகடந்த வல்லமையுள்ளவனும் வஸுஷேணனென்று பிரஸித்திபெற்றவனும் வ்ருஷனென்றே சொல்லப்படுகிறவனும் பிரபுவுமான அந்தக் குந்திபுத்திரன் இவ்விதமாக ஸோதபுத்திரனுதலை அடைந்தான். மிக்கவல்லமையுள்ளவனும் ஸோதனுடைய மூத்தகுமாரனுமான அவன் அங்கதேசத்தில் வளர்ந்தான். திவ்யகவசதாரியான அவன் குந்தியினுல் சாரன்வாயிலாக அறியப்பட்டவனுமானன். ஸோதனன அதிரதன் நாளடைவில் வளர்ச்சியுடைந்திருக்கிற அந்தப்புத்திரனைப் பார்த்து ஹஸ்தினபட்டணத்திற்கு அனுப்பினன்.

நிறமையுள்ளவனன அவனும், அந்த ஹஸ்தினபட்டணத்தில், பாணங்களையும் அஸ்திரங்களையும் கற்பதற்காகத் துரோணரை அடுத்தான்; துர்யோதனனேடு இவ்வண்ணம் ஸ்நேகத்தை அடைந்தான். அவன் துரோணரிடத்தினின்றும் க்ருபரிடத்தினின்றும் பரசுராமரிடத்தினின்றும் நான்குவிதமான அஸ்திரங்களின் தொகுதியை அடைந்து உலகத்தில் பிரஸித்திபெற்று ஒப்பற்றவில்லாளியாக இருக்கும் தன்மையை அடைந்தான். திருதராஷ்டிரபுத்திரனேடு நேசம்செய்துகொண்டு பாண்டவர்களுக்குத் தீங்குசெய்வதிலேயே பற்றுதலுள்ளவனுகி மகாபல'சாலியான அர்ஜுனனேடு யுத்தம்செய்வதற்கு எப்பொழுதும் விருப்பங்கொண்டிருந்தான். அரசரே! அந்தக் கர்ணனுக்கு ஏப்பொழுதுமே அர்ஜுனனேடு போட்டி இருந்தது. அர்ஜுனனுக்கும் கர்ணனேடு எப்பொழுதும் போட்டி இருந்து வந்தது. அதனல், அவ்விருவரும் எதிரிகளாயினர். மகாராஜரே! இது சூரியனுடைய ரஹஸ்யமாக இருந்தது. ஸம்சயமில்லை. சூரியனிடத்திலிருந்து உண்டானவனும் எதிராளிகளுடைய கசஷியில் பற்றுதலுடன் அப்ரியமான காய்யத்தைச் செய்து வந்தவனும் குண்டலங்களுடன் கூடியவனும் கவசத்தோடு சேர்ந்திருப்பவனுமான கர்ணனைக்கண்டு யுதிஷ்டிரர் அவனை யுத்தத்தில் கொல்லப்படத்தகாதவனென்று எண்ணி மனவருத்தத்தை அடைந்தார். ராஜேந்திரரே! கர்ணன், மத்தியான்னகாலம் வந்தவுடனே, ஸ்நானம் செய்து கைகளைக்குவித்துக்கொண்டு அதிக தேஜஸ்வியான திவாகரனைத் துதிக்கும்பொழுது, ப்ராம்மணர்

கள் தனத்திற்காக இந்தக் கர்ணனை அடைவார்கள். அந்த ஸமயத்தில், அவனிடம் பிராம்மணர்களுக்குக் கொடுக்கத்தகாதது ஒன்றுமில்லை. இந்திரன், பிராம்மணனாகி, 'பிஸைஷயைக் கொடு' என்று சொல்லிக்கொண்டு அருகில் வந்தான். கர்ணன் அவனைப்பார்த்து, 'நல்வரவா?' என்று வினவினான்.

முந்நூற்றுப்பதினேராவது அத்யாயம்.

குண்டலாஹரணபர்வம். (தொடர்ச்சி.)

(இந்திரன் பிராம்மணவேஷம்தரித்துக் கர்ணனிடம் வந்து, கவசகுண்டலங்களை யாசித்ததும், அவனை இந்திரனென்றறிந்த கர்ணன் அவனிடத்திலிருந்து சக்தியைப் பெற்றுக்கொண்டு கவசகுண்டலங்களைக் கொடுத்ததும்.)

பிராம்மண வேஷத்தால் மறைக்கப்பட்டவனும் அருகில் வந்தவனுமான தேவராஜனைப்பார்த்து, கர்ணன் நல்வரவு கூறினான்; அவனுடையமனத்தை அறியவில்லை. பிறகு, அதிரத்னுடைய குமாரனான கர்ணன், 'கழுத்தில் பொன்னாபரணங்களால் நிறைந்த யௌவனமதமுள்ள ஸ்த்ரீகளையோ அல்லது பசுமந்தைகளுடன்கூடின கிராமங்களையோ எவைகளை நான் உமக்குக்கொடுக்கவேண்டுமோ?' என்று அந்தப்பிராம்மணனை வினவினான். பிராம்மணன், 'பொன்னாபரணங்களைக் கழுத்திலணிந்த யுவதிகளையும் எனக்கு அன்னபானங்கொடுக்கக்கூடிய வேறுபொருள்களையும் நீ கொடுக்கவேண்டுமென்று நான் விரும்பவில்லை. அவைகளை யாசிப்பவர்களுக்குக் கொடு. குற்றமற்றவனே! நீ ஸத்யவ்ரதமுள்ளவனாக இருப்பாயாகில், உன்னிடமுள்ள பிறந்த இந்தக்கவசத்தையும் குண்டலங்களையும் எனக்கு அறுத்துக்கொடுப்பாயாக. பகைவனை வாட்டுபவனே! உன்னால் இந்தப்பிஸைஷ கொடுக்கப்பட நான் விரும்புகிறேன். இது எல்லா லோகங்களையுங்காட்டிலும் சிறந்த லாபமாக என்னால் எண்ணப்பட்டிருக்கிறது' என்று சொன்னான். கர்ணன், 'பிராம்மணரே! மனிஷையும் பசுக்களையும் வாழ்நாள் முழுதும் அனுபவிக்கத்தக்க நிலத்தையும் உமக்குக் கொடுப்பேன். குண்டலங்களோடுகூடின கவசத்தைத் கொடுக்கமாட்டேன்' என்றுசொன்னான். பரதஸ்ரேஷ்டரே! இவ்வண்ணம் கர்ணனால் பலவித்தவாக்கியங்களால் மறுக்கப்படுகின்று அந்தப்

பிராம்மணன் வேறுவரத்தை யாசிக்கவில்லை. கூடியவரையில் நல் வசனங்களால் ஸமாதானம் செய்யப்பட்டவனும் விதிப்படி பூஜிக் கப்பட்டவனுமான அந்தப்பிராம்மணஸ்ரேஷ்டன் வேறுவரத்தை விரும்பவில்லை. அரசரே! பிராம்மணேந்திரன் கர்ணனுடைய தேகத்தோடேதான்றின கவசத்தையும் குண்டலங்களையுந்தவிர வேறு ஒரு வரத்தையும் விரும்பாமற்போனபொழுது, கர்ணன், சிரித்துக்கொண்டு அந்தப்பிராம்மணனைப் பார்த்து, 'பிராம்ம ணரே! கூடவேதான்றியிருக்கிற கவசமும் குண்டலங்களும் அம்ருதத்தினின்று உண்டானவைகள். அதனால், உலகங்களில் கொல்லப்படத்தகாதவனாக இருக்கிறேன். அதனால், இவை களை நான் விடமாட்டேன். பிராம்மணேந்திரரே! விசாலமான தும் பகைவர்களில்லாததும் க்ஷேமத்தை உண்டுபண்ணுகிறது மான பூமியின் அரசாட்சியை நீர் என்னிடத்தினின்று நன்று கப்பெற்றுக்கொள்வீராக. பிராம்மணேந்திரரே! உடன்பிறந் திருக்கிற குண்டலங்களாலும் கவசத்தாலும் விடுபட்டிருக்கிற நான் பகைவர்களால் கொல்லத்தக்கவனாகிவிடுவேன்' என்று சொன்னான்.

பாகாஸுரனைக் கொன்றவனும் பகவானுமான இந் திரன் வேறுவரத்தை வரிக்காமற் போனபொழுது, கர்ணன், உரக்கச்சிரித்து அந்தப் பிராம்மணனைப்பார்த்து, 'தேவ தேவர்களுக்கெல்லாம் அதிபதியே! பிரபுவே! முந்தியே நீர் என்னால் அறியப்பட்டிருக்கிறீர். இந்திரரே! உமக்கு நான் பிரதி ப்ரயோஜனமின்றி வரனைக்கொடுப்பது நியாயமாகாது. நீர் தேவர்களுக்கு ஈச்வரன்றோ? மகிமைபொருந்திய உம்மால் என க்கு வரன் கொடுக்கத்தக்கது. பிராணிகளைப்படைக்கிற நீர் மற்றப் பிராணிகளுக்கும் ஈச்வராக இருக்கிறீர். தேவரே! குண்டலங் களையும் கவசத்தையும் உமக்குக்கொடுப்பேனுகில், பகைவர்களால் கொல்லத்தக்கதன்மையை அடைவேன். இந்திரரே! நீரும் எல்லா ராலும் நகைக்கத்தக்க நிலைமையை அடைவீர். சக்ரரே! ஆகை யால், இவைகளுக்குப் பிரதியாக சிவிறுன்னறக்கொடுத்துக் குண்ட லங்களையும் உத்தமமான கவசத்தையும் என்னிடத்தினின்று இஷ்டப்படி பெற்றுக்கொள்ளுரும். அப்படி இல்லாவிட்டால் நான் கொடுக்கமாட்டேன்' என்று சொன்னன்.

இந்திரன், 'நான் முந்தி உன்னிடம் வருவதற்குமுன்பே சூரிய னல் அறியப்பட்டேன். அவனால் எனக்கு இவ்வாறு இந்த மல்

லாம் சொல்லப்பட்டிருக்கின்றன; ஸம்சயமில்லை. ஐயா! கர்ண! நீ விரும்புவது உன்னிஷ்டப்படி ஆகுக. என்னுடைய வஜ்ராயுதத்தைத்தவிர மற்றதை உன்னிஷ்டப்படி வரிப்பாயாக' என்று சொன்னன். பிறகு, கர்ணன் மிகமகிழ்ந்து வாஸவனை அணுகி முழுமனத்துடன் எதிரில் நின்று 'பயனற்றதாகாத சக்தியாயுதத்தை வரித்தான். கர்ணன், 'வாஸவரே! கவசத்தையும் குண்டலங்களையும் பெற்றுக்கொண்டு, வீணாகாததும் ஸைன்யமுகத்தில் பகைவர்களுடைய கூட்டங்களை நாசம் செய்கிறதுமான சக்தியை எனக்குக் கொடும்' என்று வேண்டினன். அரசரே! பிறகு, வாஸவன் சக்தியைக்கொடுக்கும் விஷயத்தில் மனத்தினுள் ஒரு முகூர்த்தகாலம் நன்கு ஆலோசித்துக் கர்ணனைப்பார்த்து, 'கர்ண! சரீரத்தோடுதோன்றின குண்டலங்களையும் கவசத்தையும் எனக்குக் கொடுத்துவிடு. இந்த உடன்பாட்டினால் நீயும் என்னிடமிருந்து சக்தியைப் பெற்றுக்கொள்வாயாக. பயனற்றதாகாத இந்தச்சக்தியானது என்னுடையகையிலிருந்து விடுபடுமேயாகில் நூற்றுவர்நூற்றுவராகப் பகைவர்களைக் கொல்லுகிறது; மீண்டும், அஸுரர்களைக்கொல்லுகின்ற என்னுடைய கையை அடைகிறது. உன்னுடைய கையையடைந்திருக்கிற அப்படிப்பட்ட இந்தச் சக்தியாயுதமானது, பலமுள்ளவனும் கர்ஜிக்கின்றவனும் (பகைவரை) ஹிகவாட்டுபவனுமான ஒரு சத்துருவைக்கொன்று என்னையே வந்தடையவேண்டும்' என்றான்.

கர்ணன், 'நான், மஹாயுத்தத்தில் எவனிடத்தினின்று எனக்குப் பயமுண்டாகுமோ அப்படிப்பட்டவனும் கர்ஜிப்பவனும் பிரகாபத்தால் சத்துருக்களைத் தபிக்கச்செய்பவனுமான ஒரே சத்துருவைக் கொல்லவிரும்புகிறேன்' என்று சொன்னன். இந்திரன், 'யுத்தத்தில் பலசாலியும் கர்ஜிக்கின்றவனுமான ஒரு சத்துருவைக் கொல்லுவாய். நீ எவனொருவனை யுத்தம்செய்து கொல்லவேண்டுமென்று விரும்புகிறாயோ அந்தச்சூரன் மகாத்மாவினால் காப்பாற்றப்படுகிறான். ரிஷிகளைக் கற்றறிந்தவர்கள் எவனை யஜ்ஞவராகன் என்றும் பிரபாஸ ஜபிக்கப்பட்டதனென்றும் கபாலனென்றும் சிந்திக்கப்பட முடியாதவனென்றும் சொல்லுகிறார்களோ, அந்தக் நஸ்ஸினால் அந்தவீரன் காக்கப்படுகிறான்' என்று சொன்னன்.

கர்ணன், 'அஸுரர்களை நாசம்செய்பவரே! நீ சொல்லுவது சரியே. எவன் யுத்தகர்மத்தில் என்னை வதித்து நிற்பானோ

அவனைக்கொல்லேன். பகவானே! இப்படி இருந்தாலும் இருக்கட்டும். பிரதாபமுள்ள ஒரு வீரனைக்கெர்ல்வதில் வீணுகாத சக்தியை எனக்குக் கொடுப்பீராக. குண்டலங்களையும் கவசத்தையும் அறுத்து உமக்குக் கொடுப்பேன். அறுக்கப்பட்டிருக்கிற என்னுடைய அவயவங்களில் அருவருக்கப்படத்தக்கதன்மை உண்டாகக் கூடாது' என்று வேண்டினான். இந்திரன், 'கர்ண! நீ பொய்யை விரும்பவில்லையாதலால் உன்னுடைய அவயவங்களில் எவ்விதத்தாலும் அருவருக்கப்படத்தக்கதன்மையும் காயமும் உண்டாகா. பேசுகிறவர்களுள்ளிறந்தவனே! கர்ண! உன்னுடையபிதாவுக்கு எப்படிப்பட்ட நிறமும் ஒளியுமுண்டோ அப்படிப்பட்ட நிறத்தோடும் ஒளியோடும் நீ மறுபடியும் சேர்ந்தவனுவாய். வேறு ஆயுதங்களிருக்கும்பொழுது உயிருக்கு ஸந்தேகம் வராமலிருக்கையில், வீணுகாத இந்தச்சக்தியை அஜாக்ரதையாகப் பிரயோகித்தால் இது உன்மீதே விழும்' என்றுசொன்னன். கர்ணன், 'இந்திரரே! நீர் எனக்குச்சொல்லுகிறபடியே அதிகமானபிராணஸம்சயத்தை அடைந்தால் இந்த இந்திரசக்தியைப் பிரயோகிப்பேன். இது உண்மை. உமக்குச் சொல்லுகிறேன்' என்று சொன்னன்.

பிரஜைகளுக்குப்பதியே! பிறகு, மிகப்பிரகாசிக்கின்றசக்தியை வாங்கிக்கொண்டு கூர்மையானகத்தியையெடுத்து எல்லா அவயவங்களையும் அறுத்தான். பிறகு, தேவர்களும் மனிதர்களும் கானவர்களும் ஆகிய அனைவரும் தன்னையே அறுக்கிற கர்ணனைப்பார்த்து ஸிம்மநாதம் செய்தார்கள். இவனுடைய முகத்தில் ஒருவிகாரமும் உண்டாகவில்லை. பிறகு, கத்தியினல் சரீரத்தை அறுப்பவனும் அடிக்கடி மந்தஹாஸம்செய்பவனும் மனிதர்களுள் வீரனுமான கர்ணனைப்பார்த்துத் தேவதுந்துபிகள் முழங்கின. திவ்யமான பூமாரியும் அதிகமாகவிழுந்தது. பிறகு, அங்கத்தினின்று திவ்யகவசத்தை அறுத்து (ரக்தத்தால்) நனைந்திருக்கிற அந்தக்கவசத்தை அப்படியேஇந்திரனுக்குக் கொடுத்தான். அப்படியே, அந்தக்குண்டலங்களையும் அந்தக்காதினின்று அறுத்துக்கொடுத்தான்; அந்தச்செய்கையினல்[1] கர்ணன் ஆனன். பிறகு, தேவனை வஜ்ரபாணி, கத்தியினல் உடலறுக்கப்பட்ட கர்ணனைப்பார்த்து, ஸந்தோஷமுள்ளவனானன். பிறகு, இந்திரன் உரக்கச்சிரித்துக்கொண்டு, கர்ணனவஞ்சித்தும் உலகத்தில் கீர்த்தியோடுசேர்ந்தும், 'பாண்ட

[1] ஆதிபர்வம் 444-ம் பக்கம் குறிப்பிற்காண்க.

வர்களுடையகாரியம் செய்யப்பட்டது' என்று எண்ணினான். அதன் பிறகு, ஸ்வர்க்கத்தைநோக்கியே மேலே எழும்பிச்சென்றான். திருதராஷ்டிரகுமாரர்களனைவரும், கர்ணன் (கவசகுண்டலங்கள்) கவரப்பட்டதைக்கேட்டுத் தீனர்களாகிச் செருக்கழிந்தவர்கள் போலானர்கள். காட்டிலிருக்கின்றபார்த்தர்கள், ஸுதபுத்திரன் "அப்படிப்பட்ட நிலைமையை, அடைவிக்கப்பட்டதைக் கேட்டு ஸந்தோஷித்தார்கள்" என்று கூறினர்.

ஜனமேஜயர், "வீரர்களான அந்தப்பாண்டவர்கள் எங்கே இருந்தார்கள்? அவர்கள் அந்த ப்ரியமானசெய்தியை எங்கிருந்து கேட்டார்கள்? பன்னிரண்டாவதுவர்ஷம் சென்றபிறகு, எதைச் செய்தார்கள்? எனக்கு அவை அனைத்தையும் பகவானை தேவரீர் விரித்துச்சொல்லவேண்டும்" என்று வினவினர். வைசம்பாயனர், "அந்தப்பாண்டவர்கள் ஜயத்ரதனைத்துரத்தித் திரௌபதியை அடைந்து பதியை அடைந்து பிராமணர்களோடுகூட மார்க்கண்டேயரிடத்தினின்று பழமையான தேவர்கள் ரிஷிகளுடைய சரித்திரத்தை விஸ்தாரமாகக்கேட்டு, காம்யகவனத்திலுள்ள ஆச்ரமத்திலிருந்து ரதங்களும் உடன்வந்தவர்களும் ஸுதர்களும் சமையற்காரர்களுமாகிய எல்லாரோடும் திரும்பிவந்தார்கள். ஆண்மையிற் சிறந்தவர்களான அவர்கள் இவ்வண்ணம் வனவாஸத்தை முழுமையும் கடந்து, பிறகு த்வைதவனத்தை அடைந்தார்கள்" என்று கூறினர்.

துண்டலாஹரணபர்வம் முற்றிற்று.

முந்நூற்றுப்பன்னிரண்டாவது அத்யாயம்.

ஆரணேயபர்வம்.

(யுதிஷ்டிரர்முதலியவர்கள் த்வைதவனத்திற்குத் திரும்பிவந்ததும், அந்த ஒரு மானுனது ஒருபிராம்மணனுடைய அரணி தற்செயலாகக் கொம்பில்மாட்டிக்கொள்ள அதனேடு ஓடியதும், பிராம்மணன் வேண்டப் பாண்டவர்கள் அந்தமானைப் பின்தொடர்ந்ததும், மான் மறைய அவர்கள் களைத்து ஓர் ஆலமரத்தினடியில் உட்கார்ந்ததும்.)

ஜனமேஜயர், "பாண்டவர்கள் இவ்வண்ணம் பார்யையான கிருஷ்ணை கவரப்பட்டபொழுது மிக்கதுயரத்தை அடைந்து

அவளை மீட்டு, பிறகு யாது செய்தனர்?" என்று வினவ, வைசம்பாயனர், "(அடுத்தவரைக் காதீதலிலிருந்து) கழுவாதவரான யுதிஷ்டிரமகாராஜர் இவ்வண்ணம் நிகரில்லாத கஷ்டத்தை அடைந்து, கிருஷ்ணையை மீட்டுவந்து பிராதாக்களோடு காம்யகவனத்தை விட்டு, அழகியதும் ருசியான கிழங்குகனிகளுள்ளதும் பலவகையான பல மரங்களையுடையதுமான த்வைதவனத்தைத் மீண்டும்வந்தடைந்தார். அவ்விடத்தில், பாண்டவர்கள், மனைவியான கிருஷ்ணையுடன், எல்லாருமே பழங்களை உணவாகக்கொண்டவர்களும் மிதமான ஆகாரமுள்ளவர்களுமாக வஸித்தார்கள். தர்மாத்மாக்களும் அடக்கத்தை விரதமாகக்கொண்டவர்களும் பகைவர்களை வாட்டுபவர்களுமான குந்தீபுத்திரரான யுதிஷ்டிரராஜரும் பீமஸேனனும் அர்ஜுனனும் மாத்ரீபுத்திரர்களான நகுல ஸஹதேவர்களும் பிராம்மணருக்கு உபகாரம் செய்வதற்காகப் பராக்கிரமத்தைச் செய்து ஸுகத்தை முடிவாகக்கொண்ட பெரிதான துன்பத்தை அடைந்தார்கள். அந்த வனத்தில் வஸிக்கின்ற அந்தக் கௌரவ ஸ்ரேஷ்டர்கள் அடைந்ததும் ஸுகத்தைப் பிந்தினபலமாகக் கொண்டதுமான துன்பத்தை உமக்குச் சொல்லுவன்; கேளும்.

தவசியான ஒரு பிராம்மணனுண்டைய [1] அரணியுடன் கூடின [2] கடை கோலானது, (மரத்தில் தேகத்தை) உரைந்துகொள்ளுகின்ற ஒரு மானின் கொம்பில் மாட்டிக்கொண்டது. அரசரே! அதிக வேகமுள்ளதும் விரைவுபடுவதுமான அந்தப் பெரிய மானொன்று அதனை எடுத்துக்கொண்டு சீக்கிரமாகத் தாவி ஓடி ஆச்ரமத்திலிருந்து நெடுந்தூரம் போய்விட்டது. கௌரவர்களுள் மிகச் சிறந்தவரே! அவை கொண்டுபோகப்படுவதைக் கண்டு அந்தப் பிராம்மணன் அக்னிஹோத்ர ஸ்தானத்தை அடையும் விருப்பத்தால் விரைவுடன் அந்த இடத்தில் ஓடிவந்தான். அந்த வனத்தில் அந்தப் பாண்டவர்கள் வஸித்துக்கொண்டிருக்கையில் மகாரதரும் வனத்தில் தம்பிமார்களோடு உட்கார்ந்திருப்பவருமான அஜாத சத்ருவை விரைவாக அடைந்து, பிராம்மணன், பாஞ்சாலருக்குத்துடன், 'வேந்தரே! மரத்தில் மாட்டப்பட்டிருந்த அரணியுடன் கூடின [3] கடைகோலானது உரைந்துகொள்ளுகின்ற ஒரு மானினுடைய கொம்பில் மாட்டிக்கொண்டது. அரசரே! மிக்க வேகமுள்ள

---

[1] 'யாகத்தில் அக்னி யெடுப்பதற்காகக் கீழும் மேலும் வைத்துக் கடையப்படுகிற இரண்டு கட்டைகள்' என்பது பழையவுரை.

[2], [3] வேறு பாடம்.

பெரியமானுனது அதைக்கொம்பினுல் எடுத்துக்கொண்டு விரைவுபடு வதாகி ஆஸ்ரமத்திலிருந்து சீக்கிரமாகத் துள்ளிக்குதித்து ஓடிவிட் டது. அரசரே! பாண்டவர்களளே! அந்தப் பெரிய மானினுடைய காலடியைப் பார்த்துச் சென்று ஆதனை அடைந்து, அக்னிஹோத் திரம் தடைப்படாதபடி, அந்த அரணியுடன்கூடின, கடைகோலைக் கொண்டுவாருங்கள்' என்று சொன்னுன்.

பிறகு, பிராம்மணனுடைய வசனத்தைக்கேட்டு ஸந்தா பத்தை அடைந்த யுதிஷ்டிரர், பிராதாக்களோடு வில்லை எடுத்துக் கொண்டு ஓடினர். புருஷச்ரேஷ்டர்களான அந்தப் பாண்டவர்க ளனைவரும் கவசம்பூண்டு விற்பிடித்துப் பிராம்மணனுக்காக முயல் கின்றவர்களாகி மானைச் சீக்கிரமாகப் பின்தொடர்ந்து சென்றார் கள். மகாரதர்களான பாண்டவர்கள் அந்த வனத்தில் மான ஸமீ பத்தில் பார்த்துக் கர்ணிகளையும் நாளீகங்களையும் நாராசங்களை யும் தொடுத்தும் அதனை அடிக்கமாட்டாமற் போயினர். அவர்கள் அடிக்க முயன்றுகொண்டிருக்கும்பொழுதே பெரிய மானுனது மறைந்து போயிற்று. பெரிய மனமுள்ள பாண்டவர்கள் மானைக் காணுமல் கலைத்து வருத்தத்தை அடைந்தார்கள். அவர்கள் பசியினுலும் தாகத்தாலும் வருத்தப்பட்ட அங்கங்களுடன் புகமுடி யாத காட்டில் குளிர்ந்த நிழலுள்ள ஓர் ஆலமரத்தை அடைந்து உட்கார்ந்தார்கள். அவர்கள் உட்கார்ந்திருக்கும் ஸமயத்தில், நகுலன், தக்கமுள்ளவனுக அப்பொழுது குருநந்தனரும் மிகச் சிறந்தவரும் தமையனுருமான யுதிஷ்டிரரைப் பார்த்துக் கோபத் தால் பின்வருமாறு கூறலானுன். 'இந்தக் குலத்தில் அஸ்ரத்தை யினுல் ஒரு காலத்திலாவது தர்மமானது அழிந்ததில்லை. அர்த்த மும் அழிந்ததில்லை. அரசரே! எல்லாப் பிராணிகள்விஷயத்திலும் மறுத்துச் சொல்லாத நாம், (பிராம்மணனுடைய காரியத் தடையை நிமித்தமாகக்கொண்ட) சங்கடத்தை அடைந்தவர் களாகிவிட்டோமே; இதென்ன?' என்று கூறினுன்.

முந்நூற்றுப்பத்தின்மூன்றுவது அத்யாயம்.

ஆரணேயபர்வம். (தொடர்ச்சி.)

(பாண்டவர்கள் தாகம்கொண்டதும், யுதிஷ்டிரர் சொற்படி நகுலன் மரத்திலேறி ஒரு தடாகத்தைப் பார்த்ததும், தீர்த்தத்தைக் கொண்டு வருவதற்காக நகுலன் முதலியவர்கள் தடாகத்தை அடைந்து நீரைப்பருகி மரித்ததும், அவர்கள் திரும்பிவராமையால் யுதிஷ்டிரரும் தடாகத்துக்குச் சென்றதும்.)

யுதிஷ்டிரர், 'ஆபத்துக்களுக்கு எல்லை இல்லை; [1] பயனுமில்லை; காரணமுமில்லை. [2] தர்மமோ புண்யம் பாபம் இவ்விரண்டினுடைய பயனை ஸுகதுக்கங்களைப் பிரிக்கிறது' என்று கூறினர். பீமன், 'பிராதிகாமியானவன் திரௌபதியை வேலைக்காரியைப்போல ஸபையில் எப்பொழுது இழுத்துவந்தானோ அப்பொழுது என்னால் அவன் அந்த ஸபையில் கொல்லப்படவில்லை. அதனால், ஸங்கடத்தை அடைந்தோம்' என்றான். அர்ஜுனன், 'கடுமையானவைகளும் எரும்புகளைப் பிளக்கின்றவைகளும் ஸுதபுத்திரனால் சொல்லப் பட்டவைகளும் மிகப் பொறுக்கமுடியாதவைகளுமான சொற்கள் என்னால் பொறுக்கப்பட்டன. அதனால் ஸங்கடத்தை அடைந்தோம்' என்று சொன்னான். ஸஹதேவன், 'பாரதரே! சகுனியானவன் எப்பொழுது உம்மைச் சூதாட்டத்தால் ஜயித்தானோ அப்பொழுது என்னால் அவன் கொல்லப்படவில்லை. அதனால், ஸங்கடத்தை அடைந்தோம்' என்றான்.

பிறகு, யுதிஷ்டிரராஜர், நகுலனைப் பார்த்து, 'மாத்ரீபுத்ர! நீ மரத்தின்மீதேறிப் பத்துத்திசைகளையும் பார். ஸமீபத்தில் ஜலத்தையோ ஜலத்தை அடுத்திருக்கிற மரங்களையோ பார்ப்பாயாக. அப்பா! இந்த உன்னுடைய ப்ராதாக்கள் தாகங் கொண்டவர்களாகவும் களைத்தவர்களாகவும் இருக்கிறார்களென்றோ!' என்று சொன்னர். சிறந்த புத்தியுள்ள நகுலனோ, 'அப்படியே' என்று சொல்லிவிட்டுத் தமையனுடைய கட்டளையினால் உடனே எழுந்திருந்து மரத்தின்மீது விரைவாக ஏறி நான்குபக்கங்களிலும் பார்த்து, தமையனரை நோக்கி, 'வேந்தரே!

[1] 'நிஷ்டதம்' என்பது மூலம்; 'பலம்' என்பது பழையவுரை.

[2] 'ப்ராரப்த ரூபமான தர்மம்' என்பது பழையவுரை; 'தர்மதேவதை' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

ஜலத்தை அடுத்திருக்கிற ஏராளமானமரங்களைக் காண்கிறேன். ஸாரஸ பக்ஷிகளுடைய சத்தங்களையும் கேட்கிறேன். எந்த இடத்தில் ஸாரஸங்களுடைய சத்தமிருக்குமோ அங்கு ஜலமிருக்கும்; ஸம்சயமில்லை' என்று சொன்னான்.

பிறகு, ஸத்யத்தில் உறுதியுள்ள குந்தீபுத்திரரான யுதிஷ்டிரர், நகுலனைப்பார்த்து, 'அப்பா! நீ போ. அம்புப்பெட்டிகளால் விரைவாக ஜலத்தைக் கொண்டுவா' என்று சொன்னார். நகுலனே, 'அப்படியே' என்று சொல்லிவிட்டு, தமையனுடைய கட்டளை யினால் தீர்த்தமிருக்கிற இடத்தை நோக்கி விரைந்து ஓடித் தீர்த்தத்தை விரைவாக அணுகினான். அவன், ஸாரஸங்களால் சூழப்பட்ட நிர்மலமான ஜலத்தைக் கண்டு அதைக் குடிக்கவிருப்பமுள்ளவனாகி, பிறகு, ஆகாயத்தினின்று உண்டான சொல்லைக் கேட்டான். யக்ஷன், 'அப்பா! ஸாஹஸம் செய்யாதே. இது [1]முன்னமே என் வசத்திலிருக்கிறது. மாத்ரீநந்தன! என்னுடைய கேள்விகளுக்கு விடைகூறி, பிறகு, தண்ணீரைக்குடி; எடுத்துக்கொண்டும் போ' என்று சொன்னான். அதிக தாகமுள்ளவனான நகுலன் அந்த யக்ஷனுடைய வாக்கியத்தை அலக்ஷ்யம்செய்து குளிர்ந்த தீர்த்தத்தைக் குடித்தான்; குடித்துக் கீழே விழுந்தான்.

நகுலன் தாமதிக்கவே, குந்தியின் புதல்வரான யுதிஷ்டிரர், வீரனும் பகைவர்களை அடக்குகிறவனும் தம்பியுமான ஸஹதேவனைப் பார்த்து, 'ஐயா! ஸஹதேவ! உன்னுடைய தமையன் தாமதிக்கிறான். அந்த உன் ஸோதரனை அழைத்து வா; ஜலத்தையும் நீ கொண்டு வா' என்று சொன்னார். ஸஹதேவன், 'அப்படியே' என்று சொல்லி விட்டு, அந்தத் திசையைக் குறித்துச் சென்றான். அப்பொழுது, பூமியில் இறந்துகிடக்கிற தமையனை நகுலனைக் கண்டான். பிராதாவினுடைய சோகத்தால் மிக்க தாபத்தையடைந்தவனும் தாகத்தால் மிகப் பீடிக்கப்பட்டவனுமான ஸஹதேவன் தீர்த்தத்தை நோக்கி ஓடினான். பிறகு, ஆகாயத்தில் ஒரு வாக்கானது, 'ஐயா! ஸாஹஸத்தைச் செய்யாதே. இது முன்னமே என்வசத்திலிருக்கிறது. என்னுடைய வினாக்களுக்கு மறுமொழி கூறி இஷ்டப்படி தீர்த்தத்தைப் பானம் பண்ணு; எடுத்துக்கொண்டும் போவாயாக' என்று சொல்லியது. அந்த வாக்கிய

1 : வர்தவ்யோ ஹ்யஹம்' என்பது மூலம்; 'முன்னியதான நியமம்' என்பது பழையவுரை. 'முன்னமே என்வசத்திலிருப்பது' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

த்தை அலக்ஷ்யம் செய்துவிட்டுத் தாகம்கொண்ட ஸஹதேவன் குளிர்ந்த தீர்த்தத்தைக் குடித்தான்; குடித்துக்கீழே விழுந்தான்.

'பிறகு, குந்தீபுத்திரரான யுதிஷ்டிரர், விஜயனைப் பார்த்து, 'பகைவரை அழிப்பவனே! பீபத்ஸுவே! உன்னுடைய பிராதாக்கள் சென்று நெடுநேரமாயிற்று. அவர்களை அழைத்து வா. உனக்கு மங்களம். ஜலத்தையும் நீ கொண்டு வா. ஐயா! துக்கத்தில் அழுந்தியிருப்பவர்களான எங்களனைவருக்கும் நீ அல்லவோ ஆதாரமாக இருக்கிறாய்?' என்று சொன்னார். இவ்வாறு சொல்லப்பட்ட மேதாவியான அர்ஜுனன், அம்பு களையும் வில்லையும் எடுத்துக்கொண்டும் கத்தியைக் கட்டிக் கொண்டும் அந்தத்தடாகத்தை அடைந்தான். அவன் புருஷ ச்ரேஷ்டர்களான பிராதாக்களிருவரும் தீர்த்தம் கொண்டுவரச் சென்ற இடத்தில் இறந்துகிடப்பதைக் கண்டான். உயிர்துறந்து பூமியில் படுத்திருப்பவர்களும் தூங்குகிறவர்கள்போலிருப்பவர்க ளுமான அவ்விருவரையும் பார்த்து, குந்தீபுத்திரனும் புருஷ ச்ரேஷ்டனுமான அர்ஜுனன் மிகுந்த துயரத்துடன் வில்லை எடுத்துக்கொண்டு அந்த வனத்தைச் சுற்றிப்பார்த்தான். அந்த ஸவ்யஸாசியானவன் அந்தப்பெருங்காட்டில் ஒருபிராணியையும் காணவில்லை. அவன் தாகத்தால்பீடிக்கப்பட்டவனாகித் தீர்த் தத்தைநோக்கி ஓடினான். ஓடுகின்ற அந்த அர்ஜுனன், 'ஓ! கௌரவ்யனே! நீ குடிக்க விரும்புகிற இந்த ஜலமானது உன்னால் வலிந்து அடைவதற்கு இயலாதது. பாரத! என்னால்கேட்கப்படுகிற வினாக்களுக்கு நீ மறுமொழியை உரைப்பாயாகில், பிறகு, தீர்த்தத் தைக் குடிப்பாய்; எடுத்துக்கொண்டும்போவாய்' என்கிறசொல்லை ஆகாயத்தினின்று கேட்டான். தடுக்கப்பட்டவனான அர்ஜுனன், யக்ஷனைநோக்கி, 'கண்ணுக்குப்புலப்பட்டு நின்று தடு. என்னுடைய பாணங்களால் நன்குபிளக்கப்பட்டால் மீண்டும் இவ்வண்ணம் பேசமாட்டாய்' என்றுசொன்னான். பிறகு, பார்த்தன் இவ்வண் ணம் கூறிவிட்டுச் சப்தத்தைக்கேட்டு லக்ஷ்யத்தை அடிக்கிற சக்தியைக் காண்பிக்கின்றவனாகி அஸ்திரமந்திரங்களால் அபி மந்திரணம்செய்யப்பட்டிருக்கிற அம்புகளால் எல்லாத்திக்குக்களி லும் நன்குபொழிந்தான். பரதச்ரேஷ்டனான அந்த அர்ஜுனன், தாகத்தால் மிகப்பீடிக்கப்பட்டவனாகி வீணைகாதனைகளான கர்ணி களையும் நாளீகங்களையும் காராசங்களையும் அம்புகளையும் தொடுத்து ஆகாசத்தில் அநேக அம்புக் கூட்டங்களால் வர்ஷித்தான்.

யக்ஷன், 'பார்த்த! உன்னுடைய ஆயுதப்ரயோகங்களால் யாதுபயன்? என்னுடைய விஞ்க்களுக்கு விடை அளித்து விட்டுத் தண்ணீரைக் குடிப்பாயாக. விஞ்க்களுக்கு விடை அளிக்காமல் தீர்த்தத்தைப்பருகினால், உடனே இறப்பாய்' என்று சொன்னன். அர்ஜுனன், பாணங்கள் வீணனதைக்கண்டு தாகத்தால் அதிகம்வருத்தப்பட்டவனாக • இருப்பதனால், அந்த யக்ஷிவசனத்தை அலக்ஷ்யம்செய்தே தண்ணீரைக் குடித்து உடனே கீழேவிழுந்தான்.

பிறகு, குந்தீபுத்திரரான யுதிஷ்டிரர், பீமஸேனனைப் பார்த்து, 'சத்துருக்களைத் தவிக்கச்செய்பவனே! பாரத!, நகுல னும் ஸஹதேவனும் பீபத்ஸுவும் தீர்த்தத்திற்காக நெடுநேரம் முன்னியே சென்றார்கள். திரும்பிவரவில்லை. அவர்களை நீ அழைத்துவருவாயாக! உனக்கு மங்களம். நீ தீர்த்தத்தையும் கொண்டுவருவாயாக' என்று சொன்னர். பீமஸேனன், 'அப் படியே' என்றுசொல்லிவிட்டு, அந்தப்புருஷஸ்ரேஷ்டர்களான பிராதாக்கள் வீழ்த்தப்பட்டிருக்கிறவிடத்தை • அடைந்தான். மகாபாகுபலமுள்ளவனான பீமன், அவர்களைப்பார்த்துத் துக்க முள்ளவனாகவும் தாகத்தால் நன்குவருத்தப்பட்டவனாகவும், 'அது யக்ஷர்கள் ராக்ஷஸர்களுடையசெய்கை' என்று எண்ணினன். குந்தீபுத்ரனான அந்தப்புருஷாதகரன், அப்பொழுது, 'நிச்சயமாக இப்பொழுது போர்புரியவேண்டும். அதற்குள் தீர்த்தத்தைக் குடிப்பேன்' என்று எண்ணினன். பிறகு, புருஷஸ்ரேஷ்டனான அவன் தாகம்கொண்டவனாகத் தீர்த்தத்தைநோக்கி ஓடினன். யக்ஷன், 'அப்பா! ஸாஹஸம் செய்யாதே. இது முன்னமே என் வசத்திலிருக்கிறது. குந்திநந்தன! விஞ்க்களுக்கு விடை கூறிவிட்டு, பிறகு, ஜலத்தைப் பருகுவாயாக; எடுத்துக்கொண்டும் செல்வா யாக' என்றுசொன்னன். அளவுகடந்த வல்லமையுள்ள யக்ஷனால இவ்வண்ணம் சொல்லப்பட்ட பீமன், அந்தவிஞ்க்களுக்கு விடை அளிக்காமலே தண்ணீரைக்குடித்து உடனே கீழேவிழுந்தான்.

பிறகு, புருஷஸ்ரேஷ்டரும் குந்தியின்புதல்வரும் பிரபுவுமான தர்மராஜர் மிக்க கவலையுற்றுத் தமக்குத்தாமே ஆலோசனைசெய் தார். பிறகு, அவர், பிராதாக்கள் நெடுநேரம் முன்சென்றதை யும் வராமல் தாமிருப்பதையும் அறிந்து, பலவாறாக மீண்டும் மீண் டும் உரைக்கலானார். 'இந்தக்காடு ரக்ஷிக்கப்பட்டதோ? அவர்கள் போர்க்கப்படுவார்களோ? உயிர்துறந்திருப்பார்களோ? ஒரு மகா

பூதத்தை அடித்து அதனுல்சபிக்கப்பட்டு அவர்கள் கீழேவிழுந் திருப்பார்களோ? அல்லது, அந்த வீரர்கள் சென்றஇடத்தில் தீர்த்தத்தைக்காணுமல் வனத்தில் தீர்த்தத்தைத்தேடிக்கொண்டு தாமதிக்கிறூர்களோ? நெடுநேரம் சென்றுவிட்டதே. யாதுகார ணம்? புருஷச்ரேஷ்டர்களான என்தம்பிகள் வரவில்லையே? இவர்கள் இருக்குமிடத்தைப்பார்ப்பதற்கு நான் செல்லுகிறேன்' என்று நிச்சயம்செய்து ' மகாபுத்திசாலியான யுதிஷ்டிரர் எரிக் கப்படுகின்றமனத்துடன் எழுந்திருந்து, ஜனங்களுடையசத்த மில்லாததும் புள்ளிமான்களாலும் பன்றிகளாலும் பறவைகளா லும் அடையப்பட்டதும் ஒளிபொருந்திய பசுமைநிறமுள்ள மரங் களால் பிரகாசிக்கின்றதும் வண்டுகளாலும் பறவைகளாலும் எல் லாப்பக்கங்களிலும் ஓசைபுள்ளதாகச்செய்யப்பட்டதும் மெல்லிய இளம்புற்களால் நிரம்பிய இடங்களுள்ளதும் மனத்தைக்கவரு கின்றதுமான பெருங்காட்டில் நுழைந்தார். அந்தக்காட்டில் செல்லுகின்ற ஸ்ரீமானுன யுதிஷ்டிரர், பொன்மயமான இதழ்க ளுள்ள மலர்களால் அலங்கரிக்கப்பட்டதும் விஸ்வகர்மாவினுல் ஸ்ருஷ்டிக்கப்பட்டதுபோன்றதும் தாமரைக்கொடிகளின் கூட்டங் களாலும் ஸிந்துவாரங்களாலும் பிரம்புகளாலும் தாழைகளாலும் அலரிகளாலும் அசமரங்களாலும் சூழப்பட்டதுமான அந்தக் குளத்தைக் கண்டார். பிறகு, ஸ்ரீமானும் பிராதாக்களைப்பார்ப்ப தில் ஆவலுள்ளவருமான தர்மபுத்திரர் ஸ்ரமத்தால்பீடிக்கப்பட்டு, அந்தக்குளத்தை அடைந்து பார்த்தவுடன் ஆச்சரியத்தை அடைந்தார்.

முந்நூற்றுப்பதினுன்காவது அத்யாயம்.

ஆரணேயபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் குளக்கரையில் படுத்திருக்கிற பிராதாக்களைப்பார்த்துப் புலம்பியழுது தண்ணீரைப்பருகழயன்றதும், யக்ஷன் தடுத்துத் தன் னுடைய வினுக்களுக்குவிடையளிக்கும்படி சொல்ல, யுதிஷ்டிரர் விடையளித்ததும், யக்ஷன் மகிழ்ந்து அவர்களைப் பிழைப்பித்ததும்.)

அந்த யுதிஷ்டிரர், இறந்துகிடப்பவர்களும் யுகத்தின் முடி வுக்காலத்தில் தழுவிவிழுந்திருக்கிற லோகபாலர்கள் போன்றவர்க

ரும் இந்திரனுக்கும் குபேரனுக்கும் ஒப்பாக இருப்பவர்களுமான தம்பிமார்களைக் கண்டார். மிக்கதோள்வலிமையுள்ள அந்தத் தர்மபுத்ரர், சித்றிக்கிடக்கின்ற வில்லும் பாணங்களுமுள்ளவனும் மரித்தவனுமான அர்ஜுனனையும், உயிர்துறந்து அசைவற்றுக் கிடக்கிற பீமசேனனையும் நகுலஸகதேவர்களையும் கண்டு, நீண்ட உஷ்ணமான பெருமூச்சுவிட்டுச் சோகத்தால் கண்ணீர்தளும்பு கின்றவரும் விழுந்திருந்கின்ற அந்தப்பிராதாக்களனைவரையும் பார்த்துக், கவலைபுற்றவருமாக மிகவும் விஸ்தாரமாகப் புலம்ப லானர்.

'அப்பா! மிக்கபுஜபலமுள்ளவனே! வ்ருகோதர! உன் னால், 'யுத்தத்தில் கதாயுதத்தினால் துரியோதனனுடைய்தொடை களைப் பிளப்பேன்' என்று பிரதிஜ்ஞை செய்யப்பட்டது. மகா பாகுபலமுள்ளவனே! மகாத்மாவும் கௌரவர்களுடைய கீர்த் தியை வளர்ப்பவனும் வீரனுமான நீ தள்ளப்படலீவ, எனக்கு அதுமுழுதும் இப்பொழுது வீணாகிவிட்டது. பிரதிஜ்ஞை செய் யப்பட்ட மனிதனுடையவாக்குக்கள் பொய்யாகலாம். உங்களைப் பற்றித் தேவர்கள் சொல்லியவாக்குக்கள் எவ்வாறு பொய்யாக லாம்? தனஞ்சய! நீ பிறந்தவுடன், தேவர்களும், உன்னைப்பற்றி மாகாவான குந்தியைப்பார்த்து, 'குந்தி! உன்னுடைய இந்தப் புத்திரன் இந்திரனைக்காட்டிலும் குறையாதவன்' என்று சொன் னர்கள். வடதிசையிலுள்ள பாரியாத்திர மலையில் எல்லாம் பிராணிகளும், 'இவர்களுடைய இழக்கப்பட்ட ஸம்பத்தை மீண்டும் சௌர்யத்தால் இவன் கொண்டுவருவான். இவனை யுத்தத்தில் ஒருவனுவது வெல்லமாட்டான். இவன் ஒருவனையாவது வெல் லாமலிருக்கமாட்டான்' என்று பாடின. அப்படிப்பட்ட இந்த மிக்கபலமுள்ள ஜிஷ்ணுவானவன் எவ்வாறு ம்ருத்யுவின் வசத்தை அடைந்தான்? நாங்கள் எவனை காதலை அடைந்து இந் தத் துக்கங்களைப் பொறுத்தோமோ அப்படிப்பட்ட இந்தத் தனஞ்சயன் என்னுடைய ஆசையை அடியோடு நாசம் செய்து பூமியில் படுத்திருக்கிறான். யுத்தத்தில் நிறமையுள்ளவர்களும் வீரர்களும் எப்பொழுதும் பகைவர்களை நாசம்செய்பவர்களும் மகாபலசாலிகளும் எல்லா அஸ்திரங்களாலும் எதிர்த்து அடிக் கப்படாதவர்களும் குந்தியின் புதல்வர்களுமான பீமசேனனும் தனஞ்சயனும் எவ்வாறு பகைவர்களுக்கு வசப்பட்டார்கள்? கீழேவிழுந்திருக்கிற இந்த நகுலஸஹதேவர்களைப் பார்த்தும்

வெடிக்காமலிருத்தலால், கெட்ட எண்ணமுள்ளவனென் னுடைய மனமானது நிச்சயமாக உருக்கினால் செய்யப்பட்டிருக் கிறது. சாஸ்திரங்களை அறிந்தவர்களே! தேசகாலங்களை அறிந் தவர்களே! தபோபலமுள்ளவர்களே! கர்மாக்களுள்ளவர்களே! புருஷஸ்ரேஷ்டர்களே! உங்களுக்குத்தக்கதான செய்கையைச் செய்யாமல் ஏன் படுத்திருக்கிறீர்கள்? பகைவர்களால் வெல்லப் படாதவர்களான நீங்கள் காயப்படாத சரீரங்களுள்ளவர்களும் நன்றாகத்துடைக்கப்படாதவிற்களுள்ளவர்களும் பிரஜ்ஞை இல்லா தவர்களுமாகப் பூமியில்கிடந்து ஏன் உறங்குகிறீர்கள்?" என்றார்.

மகாபுத்திசாலியான யுதிஷ்டிரர், மலையினுடைய தாழ்வரை கள் ஊறங்குவதுபோல ஸுகமாக உறங்குகின்ற பிராதாக்களைப் பார்த்து, நன்றாக வேர்த்தவரும் வருத்தத்தை அடைந்தவருமாகி, கஷ்டமான நிலைமையை அடைந்தார். தர்மாத்மாவான அந்த அரசர், 'இது இவ்வண்ணமே' என்று சொல்லிவிட்டு, துயரக்க டலின் நடுவில் நிற்பவரும் மனக்குழப்பமுள்ளவருமாகிக் காரணத்தை ஆலோசித்தார். தேசகாலங்களின்பாகுபாட்டை அறிந்த வரும் மிக்கதேர்வலிமையுள்ளவரும் காரணத்தைச்சிந்திக்கின்ற வரும் பேரறிவாளருமான யுதிஷ்டிரர் இன்னது செய்யத்தக்க தென்பதை அறியவில்லை. பிறகு, தர்மாத்மாவும் [1] தர்மநந்தனரு மான யுதிஷ்டிரர் அப்பொழுது மனத்தை நன்றாக அடக்கி இவ் வண்ணம் பலபடப் புலம்பி 'வீரர்கள் எவனால் வீழ்த்தப்பட்டார் கள்?' என்று புத்தியினால் நன்றாக ஆலோசிக்கலானார். 'இவர்க ளுக்கு ஆயுதங்களால் அடியில்லை. இந்த இடத்தில் வேறு (ஒருவனுடைய) காலடியுமில்லை. என் பிராதாக்களைக்கொன்ற இந் தப்பிராணியை ஒருபெரிய பூதமாயிருக்கலாமென்று நினைக்கிறேன். மகாத்மாக்களான பிராதாக்களுக்கு ஓரிரவைமயத்தில் நேர்ந் திருக்கிற கோரமான துன்பத்தைப்பற்றி மனத்தை ஓரிடத்தில் செலுத்தி ஆலோசிப்பேன். நிலைப்பாருகியாலதை பார்ப்பேன். துர் யோதனனால் இதுரஹஸ்யமாகச் செய்யப்பட்டிருக்குமோ? எனக்குக் காய்யம் அகாய்யம் இரண்டிலும் ஸமமாகவே இருக்கின்றனவோ எப்பொழுதும் கபடபுத்தியுள்ளவனை அந்தக் காந்தாரராஜனால் இது செய்யப்பட்டிருக்குமோ? பாவச்செயலுடையவனும் கெட்ட புத்தியுள்ளவனுமான அந்தர்சகுனிவிஷயத்தில் எந்த வீரன் நம் பிக்கைவைப்பான்? அல்லது, கெட்ட மனமுள்ள அவனுடைய

[1] பொருள் இரட்டித்தலால் ஒரு சொல் விடப்பட்டது.

ரஹஸ்யமான ஆட்களால் இது செய்யப்பட்டிருக்குமோ?' என்று மகாபுத்திசாலியான தர்மநந்தனர் பலவாறு ஆலோசித்தார். 'ஆசார்யரான துரோணரைப்பார்த்து நான் என்ன சொல்லுவேன்? கிருபரைப்பார்த்து என்ன சொல்லுவேன்? பீஷ்மரைப் பார்த்து நான் என்ன சொல்லுவேன்? நீதியில் ப்ருஹஸ்பதிபோன்ற விதுரரைப்பார்த்து நான் என்ன சொல்லுவேன்? எப்பொழுதும் துக்கத்தை அடைந்திருப்பவளும் புத்திரர்களிடத்தில் மிக்க அன்புள்ளவளுமான மாதா, பிராதாக்களால் விடுபட்டிருக்கிற என்னைப்பார்த்து, 'இந்திரனுக்கொப்பான பராக்கிரமமுள்ளவர்களும் வீரர்களுமான எல்லாப்ராதாக்களுடனும் காட்டுக்குச்சென்ற நீ எவ்வாறு ஒருவனாக வந்தாய்?' என்று கேட்டால், அவளைப்பார்த்து நான் என்ன சொல்வேன்? இந்தத் தண்ணீர் யாருடையது? விஷத்தினால் கெடுக்கப்பட்டிருக்குமோ? உயிர்துறந்தவர்களாக இருந்தும் இவர்களுக்கு விகாரமுண்டாகவே இல்லையே? என் ப்ராதாக்களுடைய முகவர்ணங்கள் தெளிவாக இருக்கின்றன. ஒவ்வொருவரும் மகாப்ரவாஹத்தின் வேகமுள்ளவர்களான இந்தப் புருஷச்ரேஷ்டர்களைக் காலம் வந்தபோது முடிவைச்செய்கிற யமனைத் தவிர, வேறு எவன் எதிர்த்து யுத்தம் செய்வான்?' என்று ஆலோசித்தார். இந்த நிச்சயத்தோடு அந்தத் தண்ணீரில் இறங்கினர். அந்தத் தீர்த்தத்தைப் பருகவும் எண்ணின அவர், அச்சமயத்தில் ஆகாயத்திலிருந்து பின்வரும் சொல்லைக் கேட்டார்.

யக்ஷன், 'நான் பாசியையும் மீன்களையும் பக்ஷிக்கிற கொக்கு. என்னால் உன்னுடைய தம்பிமார்கள் யமனுக்கு வசப்படுத்தப்பட்டார்கள். ராஜபுத்ர! நான் கேட்கிற விஷயத்துக்கு நீ விடை அளிக்காமற்போனால் நீ (இவர்களோடு) ஐந்தாமவனாய்ப் போ. ஐயா! ஸாஹஸம் செய்யாதே. இது முன்னமே என்வசத்திலிருந்திருந்தது. குந்திநந்தன! விஷயங்களுக்கு விடைகளைக்கூறிய பிறகு, தண்ணீரைப் பருகுவாயாக; எடுத்துக்கொண்டும் செல்வாயாக' என்று சொன்னான். யுதிஷ்டிரர், 'நீ ருத்ரர்களுக்குத் தலைவனோ? வஸுக்களுக்குத் தலைவனோ? மருத்துக்களுக்குத் தலைவனோ? எந்தத்தேவன்? நான் வினவுகிறேன். இது பக்ஷியினால் செய்யப்பட்டதன்று. துறுமவான், பாரியாத்ரம், விந்தியம், மலயம் இந்த நான்கு பர்வதங்களும் எவனால் வல்லமையினால் பூமியில் விழும்படி செய்யப்பட்டன? பலசாலிகளுள் சிறந்தவனே! சிறந்த வில்லாளி

களான என்னுடைய நான்கு ஸஹோதரர்களையும் கொன்றமை யால், உன்னால் மிகப்பெரியகாரியம் செய்யப்பட்டது. எவர்களைத் தேவர்களும் கந்தர்வர்களும் அஸுரர்களும் ராக்ஷஸர்களும் மகா யுத்தத்தில் எதிர்த்துத்தாங்கமாட்டார்களோ அவர்கள் விஷயத்தில் அதிக ஆச்சரியமான காரியம் உன்னால் செய்யப்பட்டது. நீ செய்யவேண்டியதை நான் அறியேன். உன்னுடைய விருப்பத்தை யும் நான் அறியேன். அதிகமான ஆவலும் மகாபயமும் எனக்கு உண்டாகிவிட்டன. பகவானே! நான் பயத்தினால் மனங்கலங்கின வனும் மிக்க தீவலியுள்ளவனுமாயிருத்தலால் வினவுகிறேன். இந்த இடத்தில் இருக்கிற நீ யார்?' என்று வினவினர்.

யக்ஷன், 'நான் யக்ஷன்; உனக்கு மங்களம். நான் ஜலத்தில் ஸஞ்சரிக்கிற பறவையல்லேன். உன்னுடைய இந்தப் பிராதாக்களை வரும் என்னால் முந்தித் தடுக்கப்பட்டார்கள்; பிறகு, கொல்லப் பட்டார்கள்' என்று சொன்னன். அரசரே! பிறகு, பேசுகிற யக்ஷனுடைய அமங்களகரமானதும் க்ரூரமான அக்ஷரங்களுள் ளதுமான அந்த வாக்கைக்கேட்டு அந்த யுதிஷ்டிரர் அப்பொழுது நடுக்கமடையவில்லை; உறுதியாக இருந்தார். பரதஸ்ரேஷ்டரான தர்மநந்தனர், பயங்கரமான கண்களுள்ளவனும் பருத்த தேகமுள்ள வனும் பனைமர அளவு உயரமுள்ளவனும் நெருப்புக்கும் ஸூர்ய னுக்குமொப்பானவனும் எவ்விதத்தாலும் ஜயிக்கமுடியாதவனும் மலைபோலிருப்பவனும் கரையில்நிற்பவனும் மேகம்போன்ற கம்பீர நாதத்தினால் வெருட்டுகின்றவனும் பெரொலியுள்ளவனுமான யக்ஷனைக் கண்டார்.

'யக்ஷன், பிராதாக்களுடைய சோகத்தால் தன்முகப் பீடிக்கப் பட்டவரான யுதிஷ்டிரரைப்பார்த்து, 'அரசனே! இந்த உன் னுடைய பிராதாக்கள் என்னால் அடிக்கடி தடுக்கப்பட்டும், பலாத் காரத்தால் தீர்த்தத்தை எடுக்க எண்ணம்கொண்டார்கள். அதனால், என்னால் கொல்லப்பட்டார்கள். அரசனே! இவ்விடத்தில் பிராணனை விரும்புகிறவனால் தீர்த்தம் பருகத்தக்கதன்று. பார்த் தனே! நீ ஸாஹஸத்தைச் செய்யாதே. இது முன்னமே என் வசத்திலிருக்கிறது. குந்தீநந்தன! விடைக்களுக்கு விடை அளித்து, பிறகு, நீரைப் பருகுவாயாக; எடுத்துக்கொண்டும் செல்வாயாக' என்று சொன்னன். யுதிஷ்டிரர், 'யக்ஷ! நான் உன் வசத்திலிருக்கிற தீர்த்தத்தை விரும்பவில்லை. புருஷஸ்ரேஷ்டனே! தற்புகழ்ச்சியைப் பெரியோர்கள் எப்பொழுதும் கொண்டாடுகிறதில்லை. என்னுடைய

அறிவுக்குத்தக்கபடி உன்னுடைய விஞக்களுக்கு விடை அளிப்பேன். என்னை வினவுவாயாக' என்று கூறினர்.

யக்ஷன், [1]'எவன் ஆதித்யனை உதிக்கச்செய்கிறான்? எவர்கள் அவனுக்கு இருபக்கங்களிலும் ஸஞ்சரிக்கிறார்கள்? எவன் அவனை அஸ்தமனத்தை அடையச்செய்கிறான்? எதில் அவன் நிலைபெற்றிருக்கிறான்?' என்று வினவ, யுதிஷ்டிரர், '[2] பிரம்மம் [3] ஆதித்யனை உதிக்கச் செய்கிறது. [4] தேவர்கள் அவனுக்கு இருபுறத்திலும் ஸஞ்சரிக்கின்றார்கள். தர்மமானது அவனை [5] அஸ்தமனத்தை அடையச்செய்கிறது. அவன் ஸத்தியத்தில் நிலைபெற்றிருக்கிறான்' என்றார்.

[1] பின்வரும் விஞவிடைகளுக்கு வெளிப்படையாகத் தோற்றுகிற பொருள் தவிரப் பலவற்றுக்கு அத்வைதபரமாகவும் பழையவுரை பொருள் கூறுகிறது. அது கூறுகிறபடியே பெரும்பாலன இங்கே ஏற்ற இடங்களில் எழுதப்படுகின்றன.

பின்வரும் விஞக்களும் விடைகளும் ஆத்மதத்வத்தை நிச்சயிக்கத் தொடங்கியுள்ளன. 'ஆத்மாவை அறிந்தவன் துக்கத்தைத் தாண்டுகிறான்' என்று வேதம் கூறுகிறபடி, ஆத்மஜ்ஞானம் பயனுள்ளதென்று கேள்விப் படுவதனால் அது லபித்திப்பதற்குப் பலவிதமான ஸாதனங்கள் நிரூபிக்கப் படுகின்றன.

[2] ப்ரம்ம = வேதம். [3] ஆதித்யன் = ஜீவன். சப்தமுதலியவைகளைக் காதுமுதலியவைகளால் (ஸ்ரோத்ரம்) அறிகிறான். ஆதலால், ஜீவன் ஆதித்யனென்று சொல்லப்படுகிறான். அந்த ஜீவன், 'வெண்மையாயிருக்கிறேன்; குருடனுயிருக்கிறேன்' என்பது முதலிய அனுபவத்தால் தேகம் முதலியவைகளாகவே விளங்கிக்கொண்டும் மதவாதிகளால் பல விதமாக மாறுபடுத்திக் கூறப்பட்டும் இருக்கிறான். அவனை வேதமானது சரீரமுதலியவற்றைக் காட்டிலும் வேறானவனென்று காட்டுகிறது. 'வேதத்தை அறியாதவன் ஆத்மாவை அறியான்' என்று வேதமே கூறுதலால், வேதமே ஆத்மாவையறிவதில் பிரமாணமென்பது.

[4] வேதத்தால் எல்லாருமே ஆத்மாவை அறிகிறார்களாவெனின், இல்லை. தேவாஃ = சமஸ்தலிப குணங்கள்; அவை அந்த அறிகிறவனுக்கு உதவியாகும்.

[5] ஸ்வம் = தன்னிருப்பிடம்; அதாவது ஸ்வஸ்தவாக்யம் = பாவமில்லாமை, விஜரகும் = மூப்பில்லாமை, விசோககும் = சோகமின்மை, விஜிகுத்ஸகும் = மரணமின்மை, ஸ்விஜிவிதிஸகும் = பசியில்லாமை, ஸ்விபாஸகும் = தாகமின்மை, ஸத்யகாமகும் = விரும்பியது நிறைவேறுதல், ஸத்யஸங்கல்பகும் = நினைத்தது ன

யசுஷன், 'எதனல் மனிதன் ஸ்ரோத்ரியனகிறன்? எதனல் மகத்தை அடைகிறன்? எதலுல் மனிதன் துணையுள்ளவனு கிறன்? அரசனே! எதனல் மனிதன் புத்திமானகிறன்?' என்று வினவ, யுதிஷ்டிரர், '[1] வேதம் ஓதுவதனல் [2] ஸ்ரோத்ரிய னகிறன். [3] தவத்தினல் மகத்தை அடைகிறன். [4] தைர்யத்தினல் [5] துணையுள்ளவனகிறன். [6] பெரியோர்களை அடுத்தலால புத்திமானு கிறன்' என்றார்.

கூடுதல் ஆகிய எட்டுக்குணங்களுள்ளதும் அதற்குக் காரணமுமான ஏற்ருத யாகாசம் ப்ரத்யகாத்மா. அந்த இடத்துக்குக் கர்மரூபமும் உபாஸனு ரூபமுமான, தர்மமானது தான் நேரிலோ பரம்பரையாகவோ இந்த ஜீவனைக்கொண்டுபோகிறது. அவன் இவ்வாறு சொல்லப்பட்டபடி ஸ்வரூபமான ஸகுண ப்ரம்மத்தன்மையை அடைந்து அதன் நிவ்ருத்தி யினல் எல்லாவற்றின் நிவர்த்திக்குமிடமான சுத்த சித்ரூபமான ஸத்யத் தில் நிலைபெற்றவனகிறன் என்பது. முதலில் சாஸ்திரத்தினல் அறி வுண்டாகிறது. அதனல், சமாதி குணங்களை அடைந்தவனுக்குத் தேஹாதி களில் ஆத்மா என்று தோன்றுகிற அத்யாஸம் (= விபரீதஜ்ஞானம்) நீங்கு கிறது. பிறகு, ஸ்வர்க்கமென்று சொல்லப்படும் ஸகுண ப்ரம்மதர்சனம் உண்டாகிறது. பிறகு, கேவலீபாவம் என்பது.

[1] ஜீவன் சுத்தசித்தில் நிலைபெறுதற்கு வேதம் காரணமென்பது சொல்லப்பட்டது. அந்த விஷயத்தில் ப்ரத்யகூமான காரணம் கூறப் படுகிறது.

[2] ஸ்ரோத்ரிய := வேதமோதினவன்; 'ஸ்ருதேஉ' என்றதனல், ஆசார்ய முகமாக வேதார்த்தத்தை நன்கு அறிந்துகொள்வதனல் ஸ்ரோத்ரியனகிறன்; அக்ஷரங்களைமட்டும் அறிவதனலன்று என்பது.

[3] யுக்தியினல், அதாவது கேட்டபொருளை நன்கு மனனஞ்செய்வ தனல் ப்ரம்மத்தை அறிகிறன். மஹத் = ப்ரம்மம். ப்ரமாணத்திலும் ப்ரமேயத்திலும் அவநம்பிக்கை நீங்கிப் ப்ரம்மத்தை நிச்சயிக்கிறன்.

[4] த்ருதி = நிதித்யாஸனம். 'த்ருத்யா யா தாரயதே' என்று கீதையில் சொல்லப்பட்ட ஸாத்விகத்ருதியான நிதித்யாஸனத்தினல் என்பது.

[5] 'த்விதீயவான்' என்பது மூலம்; தலைமையில்லாமை முதலிய குணங் களுள்ளதும் அவித்தையினலுண்டானதும் முன்னிருந்ததுமான ஜீவரூபத் தைக்காட்டிலும் வேறுனதும், வித்தையினல் அடையத்தக்கதும், இரண்டா வதுமான ப்ரத்யகாத்ம ரூபமுள்ளவன் ஆகிறன்.

[6] இந்த ஸ்ரவணமுதலிய மூன்றையும் நிச்சயிப்பதான புத்தியானது குருவின் உபதேசத்தினலேயே நிகழக்கத்தக்கதென்பது.

ஸ்ருதி வாக்யங்கள், ஸ்ரவண முதலிய மூன்றும் ஆசார்யனையுடையவ ருத்தலும் ஆத்ம தர்சனத்துக்கு ஸாதனமென்று கூறுகின்றன.

யக்ஷன், 'பிராம்மணர்களுக்குத் தேவத்தன்மை எது? ஸாதுக்களுக்கிருப்பதுபோல அவர்களுக்குத் தர்மம் எது? அவர்களுக்கு மனுஷ்யத்தன்மை எது? அஸத்துக்களுக்குப் போல அவர்களுக்கு அதர்மம் எது?' என்றுவினவ, யுதிஷ்டிரர், '[1] இவர்களுக்கு வேதாத்யயனமானது [2] தேவத்தன்மை. ஸாதுக்களுக்குப்போல இவர்களுக்குத் [3] தவமானது தர்மம். மரணம் இவர்களுக்கு [4] மனுஷ்யத்தன்மை. அஸத்துக்களுக்குப் போல இவர்களுக்குப் [5] பரநிந்தை அதர்மம்' என்றார்.

யக்ஷன், 'க்ஷத்திரியர்களுக்குத் தேவத்தன்மை எது? ஸத்துக்களுக்குப்போல இவர்களுக்குத் தர்மம் எது? இவர்களுக்கு மானிடத்தன்மை எது? அஸத்துக்களுக்குப்போல இவர்களுக்கு அதர்மம் எது?' என்று வினவ, யுதிஷ்டிரர், 'இந்த க்ஷத்திரியர்களுக்குப் பாணங்களும் அஸ்திரங்களும் தேவத்தன்மை. ஸத்துக்களுக்குப்போல இவர்களுக்கு யஜ்ஞமானது தர்மம். இவர்களுக்குப் பயமானது மனுஷ்யத்தன்மை. அஸத்துக்களுக்குப் போல இவர்களுக்கு (த்தன்பழிற்றவர்களைக்) கைவிடுதல் அதர்மம்' என்று கூறினர்.

யக்ஷன், [6] 'யஜ்ஞத்திற்குரிய முக்கியமான ஸாமம் எது? யஜ்ஞத்திற்குரிய முக்கியமான யஜுஸ் எது? இவர்களுடைய யஜ்ஞத்தை எது வரிக்கிறது? யஜ்ஞமானது எதை மீறாமலிருக்கிறது?' என்று வினவ, யுதிஷ்டிரர், '[7] உயிரே யஜ்ஞத்திற்குரிய முக்கியமான

[1] பின்வரும் மூன்று விடை ஸ்லோகங்களால் ஸ்ரவணம் முதலியவற்றின் அதிகாரத்துக்கு ஹேதுவைச் சொல்லுகிறார்.

[2] ஸ்வர்க்க லோகத்தை அடைவிப்பது.

[3] தவம் = சமம் முதலியன. அவை ஸாதுக்களின் ஆசாரம்; இதுவும் முன் சொன்ன வேதாத்யயனமும் கொள்ளத்தக்கவை.

[4] தேக முதலியவற்றில் அபிமானம்; அது மரணம். பிறப்பிறப்புக்களைக் கொடுப்பது.

[5] தேவர்கள் பிராம்மணர்கள் முதலியவர்களை நிந்திப்பது. இது அஸாதுக்களின் ஆசாரம். இதுவும் முன் சொன்ன தேகமுதலியவற்றில் அபிமானமும் விடத்தக்கவை.

[6] இதையும்விட நெருங்கின காரணத்தைச் சொல்லுகிறார்.

[7] யாகங்களில் ஸாமமும் யஜுஸும் உபகாரம் செய்வதுபோலப் பிராணனும் மனமும் அடக்கப்பட்டால் ஞானயஜ்ஞத்துக்கு உபகாரம் செய்பவையாகின்றன.

ஸாமம். மனமானது யஜ்ஞத்திற்குரிய முக்கியமான யஜுஸ். [1] ரிக்கொன்றே யஜ்ஞத்தை வஹிக்கிறது. [2] யஜ்ஞம் அந்த ரிக்கை மீறுடலிருக்கிறது' என்றார்.

யக்ஷன், 'பயிரிடுகிறவர்களுக்கு எது சிறந்தது? விதைப்பவர்களுக்கு எது சிறந்தது? பிரதிஷ்டையை விரும்புகிறவர்களுக்கு எது சிறந்தது? பெறுகிறவர்களுக்கு எது சிறந்தது?' என்று வினவ, யுதிஷ்டிரர், [3] 'பயிரிடுகிறவர்களுக்கு மழை சிறந்தது. [4] விதைப்பவர்களுக்கு விதை சிறந்தது. [5] பிரதிஷ்டையை விரும்புகிறவர்களுக்குப் பசுக்கள் சிறந்தவை. [6] பெறுகிறவர்களுக்குப் புத்திரன் சிறந்தவன்' என்று கூறினர்.

யக்ஷன், 'இந்திரியங்களால் விஷயங்களை அனுபவிக்கிறவனும் சிறந்த புத்தியுள்ளவனும் உலகத்தாரால் (செல்வமுள்ளவனென்று) பூஜிக்கப்பட்டவனும் எல்லாப் பிராணிகளுக்கும் ஸம்மதனுமான எந்த மனிதன், மூச்சுவிட்டுக்கொண்டிருந்தும் உயிரில்லாமலிருக்கிறான்?' என்று வினவ, யுதிஷ்டிரர், '[7] என்னுடைய தேவதைகள், அதிதிகள், வேலைக்காரர்கள், பித்ருக்கள், தான் இந்த ஐவர்களுக்கும் (ஹவிஸ் முதலியவைகளைக்) கொடுக்கவில்லையோ அவன் மூச்சுவிட்டுக்கொண்டிருந்தாலும் உயிரில்லாதவனே' என்று கூறினர்.

[1] ரிக்கு = வேதவாக்கு; யஜ்ஞம் = ஆத்மஜ்ஞானம். வேதமே ஞானத்தை உண்டாக்குகிறது என்பது.

மனம், வாக்கு, பிராணன் இந்த மூன்றும் ஆத்மஹிதத்துக்காகப் பிரம்மாவினால் ஸ்ருஷ்டிக்கப்பட்டன என்பது.

[2] அது வேதவாக்கைக் கடப்பதில்லை யென்பது.

[3] சமமுதலியவையும் பிராணஜயமுதலியவையும் செய்யமுடியாமற் போனால், பிரத்யக்ஷமான யாகமுதலியவைகளே செய்யவேண்டுமென்பது சொல்லப்படுகிறது.

கூவடதாம = தேவர்களுக்கு யாகஞ் செய்கிறவர்களுக்கு மழை பலன். ஸகலலோகங்களுக்கும் உபகாரகமாயிருத்தலால் பலனென்றார்.

[4] நிவடதாம = பித்ருதர்ப்பணம் செய்பவர்களுக்கு என்பது. வீஜம் = நிலம் தோட்டமுதலியன. இவை தமக்கே உபகாரகமான பலன்.

[5] இவ்வுலக வாழ்க்கையில் மேம்பாடு.

[6] ஸந்ததியை விரும்புகிறவர்களுக்கு.

[7] இதனால் மேலேசொன்ன ஸாதனத்தினின்றும் நழுவினவனை நிந்திக்கிறார்.

யக்ஷன், 'பூமியைக்காட்டிலும் கனமானது எது? ஆகாயத்தைக்காட்டிலும் உயர்ந்தது எது? காற்றைக்காட்டிலும் விரைவுள்ளது எது? புல்லைக்காட்டிலும் அதிகமானது எது?' என்று வினவ, யுதிஷ்டிரர், 'தாய் பூமியைக்காட்டிலும் கனமானவள். அப்படியே, பிதா ஆகாயத்தைக்காட்டிலும் உயர்ந்தவர். மனமானது காற்றைக்காட்டிலும் விரைவானது. கவலை புல்லைக்காட்டிலும் [1] அதிகமானது' என்று சொன்னார்.

யக்ஷன், 'எது தூங்கும்பொழுது கண்களை மூடாமலிருக்கிறது? எது பிறந்தும் அசைவற்றிருக்கிறது? எதற்கு ஹ்ருதயம் இல்லை? எது வேகத்தால் வ்ருத்தி அடைகிறது?' என்று வினவ, யுதிஷ்டிரர், '[2] மீன் தூங்கும்பொழுது கண்களை மூடாமலிருக்கிறது. [3]முட்டை பிறந்தும் அசைகிறதில்லை. [4] கல்லுக்கு ஹ்ரு

---

[1] 'பஹுதரம்' என்பது மூலம். 'அற்பமானது' என்பது பழைய உரை; 'பஹுதரம்' இழிவின் மிகுதியைக் காட்டியது. மேல்சொல்லிய ஸாதனத்துக்கும் அசக்தன் மாத்ருபித்ருசுஸ்ரூஷையையும் மனத்தை அடக்குதலையும் புல்லினும் இழிவான கவலையை விடுதலையும் செய்யவேண்டும் என்பது.

[2] மனத்தை அடக்கிவிட்டால் சூன்யமே மிஞ்சுமன்றே என்று ஆசங்கித்து அப்படி அன்றென்பதைத் தெரிவிக்கிறார். மீன் = ஜீவன். இரண்டு கரைகள்போன்ற ஜாக்ரத்ஸ்வப்னங்களிலோ இம்மை மறுமைகளிலோ அலைவதால் ஜீவன் மீன்போன்றவனாகிறான்.

தன்கூடான ஸத்ரூபமான ப்ரம்மத்தை அடைந்தபோது ஆத்மா மனம்போல அறிவற்றவனாவதில்லை; அறிபவன் நித்யனாதலால் அறிவுக்கு அழிவில்லை என்பது.

[3] ஜீவன் அழிவற்றவனாதலால் பிறப்பதுமில்லை. ஆதலால், பிறக்கிறவன் யார்?' என்று ஆசங்கித்துக் கூறுகிறார். முட்டை பிண்ட வடிவமான ப்ரம்மாண்டம்; அது பிறந்தும் அசைகிறதில்லை. அதாவது, புருஷனால் பிரவர்த்திக்கும்படி செய்யப்பட்டே, அகங்காரம் முதலிய ஜடவஸ்துக்களின் ஸமூகம் சேஷ்டிக்கிறது என்பது கருத்து.

[4] ஆனால், பிறந்ததும் பிறவாததுமாகிய இந்த இரண்டின் சேர்க்கை துக்கத்தைத் தருவது. அதன் நிவர்த்திக்கு உபாயம் கூறுகிறார். கல் = சரீரமற்றவன்; அதாவது, ஸ்தூலம் சூக்ஷ்மம் காரணம் என்கிற மூன்று சரீரங்களிலும் அத்யாஸமற்றயோகிக்குச் சோகத்துக்கு இருப்பிடமான ஹ்ருதயம் இல்லையென்பது.

தயம் இல்லை. [1] நதியானது வேகத்தால் வ்ருத்தி அடைகிறது' என்றார்.

யக்ஷன், 'தேசாந்தரம் போகிறவனுக்கு யார் தோழன்? வீட்டிலிருப்பவனுக்கு யார் தோழன்? நோயாளிக்கு யார் மித்திரன்? சாகப்போகிறவனுக்கு யார் நண்பன்?' என்று வினவ, யுதிஷ்டிரர், 'தேசாந்தரம் போகிறவனுக்கு [2] வித்தை தோழன். வீட்டிலிருப்பவனுக்கு மனைவி தோழி. நோயாளிக்கு வைத்தியன் மித்ரன். சாகப்போகிறவனுக்கு [3] தானம் நண்பன்' என்று கூறினர்.

யக்ஷன், 'எல்லாப் பிராணிகளுக்கும் யார் அதிதி? எந்தத் தர்மம் 'சாஸ்வதமானது? ராஜேந்திரனே! எது அம்ருதம்? இந்த உலகமனைத்தும் எப்படியிருக்கிறது?' என்று வினவ, யுதிஷ்டிரர், [4] 'அக்னியானது எல்லாப்பிராணிகளுக்கும் அதிதி. [5] ஸோம மாகும் பசுவின்பால் அம்ருதம். மோக்ஷஹேதுவான தர்மம் ஸநாதனமான தர்மம். இந்த உலகமனைத்தும் [6] வாயுவே' என்றார்.

---

[1] அப்படியானால், அவர்கள் ஸமாதியினின்று எப்படி எழுந்திருப்பார்கள் என்பதற்குச் சொல்லுகிறார். நதி = சித்தநதி; அது வேகத்தினால் வளர்கிறது. அதாவது ஸுஷுப்தியில் இருப்பவனுக்கு ஸ்வப்னம் தோன்றுவதுபோல ஸமாதியிலிருந்து எழுந்திருப்பவனுக்கு இந்த ப்ரபஞ்சம் பார்க்கும் காலத்தில்மட்டும் உண்டாகிறதென்பது.

[2] 'ஸார்த்த:' என்பது வேறுபாடம். வழிப்போக்கர்களின் கூட்டம் என்பது பொருள்.

[3] யாத்ரை செய்பவருக்கு வழிப்போக்கர்கள் துணையாவதுபோல மரிப்பவனுக்குத் தானம் துணை. மனத்தையடக்கச் சக்தியில்லாதவனுக்குத் தானமே சிறந்ததென்பது கருத்து.

தானம், சித்தசுத்தியின் வழியாக யாகாதிகளில் ப்ரவர்த்திக்கச் செய்தும் யாகாதிகள் சித்தத்தை ஒருவழிப்படுத்தி ஸமஷ்டி உபாஸனையில் ப்ரவர்த்திக்கச்செய்தும் உபகாரகமாகின்றன என்பதைச் சொல்லினர்.

[1] அக்னி = கார்ஹபத்யம், ஆஹவனீயம், தக்ஷிணம் என்பன.

[5] இரண்டாவது மூன்றுவது விஷயங்கள் பொருத்தம் நோக்கி முன் பின்னாகமாற்றி விடைகூறப்பட்டன. 'ஸோமமென்னப்படும் பசுவின் பாலைக்கொண்டு ஹோமம் செய்வது ஸநாதன தர்மம். அது அம்ருதம் = மோக்ஷஹேது' என்பது பழையவுரை.

[6] அந்த மோக்ஷ விஷயத்தில் வழியைச் சொல்லுகிறார். இந்த உருண்டையான ப்ரம்மாண்டத்தை உருவமாகக் கொண்ட வாயுவின் ரூபத்தை அடைவதே மோக்ஷத்திற்கு வழி.

யக்ஷன், 'எவன் ஒருவனுக ஸஞ்சரிக்கிறான்? பிறந்தவன் எவன் மறுபடியும் பிறக்கிறான்? 'பனிக்கு எது மருந்து? எது (எல்லாவற்றையும் அடக்கக்கூடிய) பெரிய பாத்ரம்?' என்று வினவ, யுதிஷ்டிரர், [1] 'ஸூர்யன் [2] ஒருவனுக ஸஞ்சரிக்கிறான். [3] சந்திரன் மறுபடியும் பிறக்கிறான். [4] அக்னியானது பனிக்கு மருந்து. [5] பூமியானது' (எல்லா வஸ்துக்களையும் அடக்கிக்கொண்டிருக்கிற) பெரிய பாத்ரம்' என்று சொன்னர்.[6]

யக்ஷன், [7] 'தர்மம் எதில் முக்யமாக நிலைபெறுகிறது? புகழ்

[1] மேலேசொன்ன இலக்கணம் அமைந்த வாயுவுக்கும் அழிவுசேருங் காலத்தில் எது மிஞ்சுகிறதென்பதைச் சொல்லுகிறார்.

ஸூர்யன் = ஆத்மா. விளக்கக்கூடிய பொருள்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஸூர்யன் பிரகாசிப்பதுபோல, ஜாக்ரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி ஆகிய மூன்று அவஸ்தைகளும் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சித்தத்தைப்பிரகாசிக்கச்செய்கிற ஆத்மா பிரகாசிக்கிறான்.

[2] பிறிதொன்றன் உதவியின்றித் தானே பிரகாசிக்கிறானென்பது.

[3] ஆனால், ப்ரபஞ்சம் எதனால் விளங்குகிறதென்பதை விளக்குகிறார். சந்திரன் என்பது மனம். மனம் அவித்தையினாலுண்டாகி ஸுகதுக்கத்தைக் கொடுக்கும் உலகத்தைக் கல்பிக்கிறது. மனத்தின் ஸங்கல்பத்தினால் அறியப்படுகிறதென்பது.

[4] அந்த அவித்தையின் நிவ்ருத்திக்கு உபாயம் சொல்லுகிறார். அக்னி = வேதவாக்கு. தத்வமஸி முதலிய வாக்கிய, ஸூர்யனைமறைக்கும் பனிபோல ஆத்மாவை மறைக்கும் அவித்யாஜாட்யத்தை நிவர்த்திசெய்யும் மருந்து.

[5] பூமி = சரீரம். அதுவே வித்தையையும் அவித்தையையும் வைக்கும் பெரியபாத்ரம். அதாவது, இவ்வுலகிலேயே பிறப்பிறப்புக்களில் கட்டுப்படுவதாகிய பத்தநிலைமையைக் காண்பதுபோல அவற்றில் கட்டுப்படாத முக்தநிலைமையையும் காணும் இடமாவது.

[6] இங்கே முதல் இரண்டு வினாவிடைகளால் ப்ரம்மவித்யா ஸாதனமானது ஸாதனங்களுடன் சுருக்கிச் சொல்லப்பட்டது. பிறகு, ஏழு வினாவிடைகளால் த்வம் என்ற பதத்தின் பொருள் சோதிக்கப்பட்டது. பிறகு, மூன்று வினாவிடைகளால், தத் என்ற பதத்தின் பொருள் ஸாதனங்களுடன் சோதிக்கப்பட்டது. பிறகு, வேறுமுறையாக ஸாதனங்களையே விதித்து, தத், த்வம் என்ற பதப்பொருள்களின் வேறுபாடின்மை, 'தத்வமஸி' 'அஹம்ப்ரம்மாஸ்மி' முதலிய மஹா வாக்யங்களால் நிரூபிக்கப்படுவதைப் பின் ஒன்பது வினாவிடைகளால் விளக்குகிறார்.

[7] 'தர்ம்யம்' என்பது மூலம்.

ளிடம் கொடுப்பது?' என்று வினவ, யுதிஷ்டிரர், 'தர்மத்துக்காகப் பிராமணர்களிடம் கொடுப்பது. புகழ்க்காக நடனிடத்திலும் நர்த்தகனிடத்திலும் கொடுப்பது. வசப்படுத்துவதற்காக வேலைக்காரர்களிடம் கொடுப்பது. பயநிவிர்த்திக்காக அரசர்களிடம் கொடுப்பது' என்றார். [1]

யக்ஷன், 'எதனல் உலகமானது மூடப்பட்டிருக்கிறது? எதனல் (உலகம்) பிரகாசிக்கிறதில்லை? யாதுகாரணத்தால் (மனிதன்) மித்திராளை விடுகிறான்? எதனல் (மனிதன்) ஸ்வர்க்கத்தை அடைகிறதில்லை?' என்று வினவ, யுதிஷ்டிரர், [2] 'உலகம் அஜ்ஞானத்தால் மூடப்பட்டிருக்கிறது. [3] தமோகுணத்தால் ப்ரகாசிக்க

[1] அப்படிக் கொடுப்பதிலும், பிராம்மணனுக்குக் கொடுப்பது உலக க்ஷேமத்துக்காகச் செய்யப்படும் (யாக முதலிய காரியமாகிய) தர்மத்துக்குக் காரணமாதலால் உபகாரகமாகிறதென்பதும், வேறிடங்களில் கொடுப்பது அப்படி உபகாரகமாகிறதில்லையென்பதும் சொல்லப்பட்டன.

[2] தானத்தின் வன்மையாலேயே கர்ம முதலியவைகளை ஜயித்து மனத்தை அடக்குகிறவனுக்கே முற்றிலுமுள்ள துக்கநாசமாகிய மோக்ஷம் வருகிறதென்றும் அப்படியானல் முன்சொல்லிய த்ரயீதர்மத்தினல் என்ன பலன் என்றும் ஆசங்கித்துச் சொல்லுகிறார்.

ஜராமரணங்களுக்கும் சோகமோகங்களுக்கும் இருப்பிடமான ஸ்தூல ஸூக்ஷ்ம சரீரங்கள் அஜ்ஞானத்தின் காரியங்கள்.

லோகம் = ஆத்மா. பாம்பு என்ற விபரீதஜ்ஞானத்தினல் ரஜ்ஜு மறைக்கப்படுவதுபோல ஆத்மா மறைக்கப்படுகிறது. ஆதலால், அஜ்ஞானம் நாசமடைவதற்கு த்ரயீதர்மத்தை விசாரம் அனுஷ்டிக்க வேண்டும்.

தூக்கத்தில் ஸ்தூல ஸூக்ஷ்ம சரீரங்களில்லாமையால் அஜ்ஞான நாசம் ஏற்படுகிறதே? ஆகையால், த்ரயீதர்மத்துக்கு என்று ஆசங்கித்துக் கூறுகிறார்.

[3] தமஸ் = மூல அஜ்ஞானம். அதனல், ஆத்மா தூக்கத்திலும் மறைக்கப்பட்டிருக்கிறது; பிரகாசிக்கவில்லை. ஆகையால், மூன்று சரீரங்களையும் லயமடையச் செய்யவேண்டும். ஞானத்துக்கும் அஜ்ஞானத்துக்கும் விரோதமானதால், அஜ்ஞானத்தினல் ஏற்பட்ட ஸம்ஸாரமானது மனத்தை அடக்குவதால்மட்டும் நசிப்பதில்லை. ஆதலால், விபரீதஜ்ஞானமெல்லாம் நீங்கி, கயிறென்று அறிந்தே ஸர்ப்பபயம் அடியோடு அழிவதுபோல மூன்று சரீரங்களிலுமுள்ள அத்யாஸ நிவிருத்தியினல் ஆத்மஸ்வரூபத்தை அறிந்தே ஸம்ஸாரத்துக்கு அடியோடு நாசம் ஏற்படுகிறது என்பது கருத்து.

வில்லை. (மனிதன்) [1] லோபத்தினால் மித்ரர்களை விடுகிறான்; பற்று தலால் ஸ்வர்க்கத்தை அடைகிறதில்லை' என்றார்.

யக்ஷன், 'மனிதன் எவ்வாறுனல் மாண்டவனுவான்? ராஜ்ய மானது எவ்வாறுனல் உயிரில்லாததாகும்? ஸ்ராத்தம் எவ்வா றுனல் அழிந்ததாகும்? யஜ்ஞமானது எவ்வாறுனல் பயனில்லாத தாகும்?' என்று வினவ, யுதிஷ்டிரர், [2] 'மனிதன் தரித்திரனுனல் மாண்டவனே. [3] ராஜ்யம் அரசனில்லாததானல் உயிரில்லாதது. ஸ்ராத்தம் வேதாத்யயனம்செய்த பிராமணர்களை வைத்துச் செய்யாததானல் அழிந்ததாகும். யாகம் தக்ஷிணையில்லாததானல் பயனில்லாதது' என்றார்.

யக்ஷன், 'பார்த்த! எது திக்கு? எது ஜலம்? எது அன்னம்? எது விஷம்? ஸ்ராத்தத்திற்கு எது காலம்? சொல். பிறகு, தண்ணீரைப் பருகு; எடுத்துக்கொண்டும் செல்' என்று சொல்ல, யுதிஷ்டிரர், [4] 'ஸாதுக்கள் [5] திக்கு. ஆகாசம் [6] ஜலம். [7] பசுவா

[1] ஆகையால், லோபத்தையும் பற்றையும்விட்டு ஞானத்தை அடைய வேண்டும் என்கிறார்.

[2] லோபத்தையும் பற்றையும் விடாமையாலுண்டாகும் குற்றத்தைக் கூறுகிறார். தரித்ரன் = லோபசித்தமுள்ளவன். அவன் தானதிகளில் நிறமையில்லாமையால் இறந்தவனே.

[3] அதற்கு த்ருஷ்டாந்தம் அரசனை இழந்த ராஜ்யம் போன்றதென்பது; இங்கு, அரசன் பிராணன்; ராஜ்யம் அது வஹிக்கும் சரீரம்; ஆகவே பிராணனை யிழந்த சரீரம் உவமை.

[4] லோபம் முதலியவற்றை விடுவதாலும் தானதிகளைச் செய்வதா லும் சமாதி குணாங்களையுடையவனும் ஸ்ரவணாதிகளைச் செய்தவனுமான் புருஷனால் அறியவேண்டிய ப்ரம்ம ஆத்ம ஐக்யத்தைச் சொல்லுகிறார். ஸந்த: = ஸாதுக்கள்; வேதத்தையே ப்ரமாணமாகக் கொண்டவர்கள்.

[5] திக் = வழி; திக் = உபதேசிப்பவர்கள்; ஆசார்ய உபதேசத்தினாலேயே ப்ரம்மத்தை அறியவேண்டுமென்பது பொருள்.

[6] ஜலம் = அதன் காரியமான பிண்டப்ரம்மாண்டமும் அதில் அபி மானியான ஜீவனும். அதனால், ஸமஷ்டியும் வ்யஷ்டியுமான ஜீவன் சொல்லப்பட்டது. இங்கே, ஆகாசம் என்பது அவ்யாக்ருதம் என்றும் காரணமும் அதன் அபிமானியாகிய ஈச்வரனும். 'ஆகாசமே ஜலம்' என்று வேதம் கூறுதலால் இரண்டிற்கும் அபேதம் கூறப்பட்டது.

[7] வேறுபடுத்துகிற உபாதிகள் விளங்கிக்கொண்டிருக்கும்போது இரண்டிற்கும் அபேதம் எப்படி கூடுமென்று ஆசங்கித்துக் கூறுகிறார். கௌ: = இந்த்ரியங்களும் அவைகளினாலே க்ரஹிக்கக்கூடிய சப்தம்

னது அன்னம். [1] ப்ராம்மணனுடைய பொருள் விஷம். [2] ப்ராம் மணனே ஸ்ராத்தத்துக்குக் காலம். [3] யக்ஷ! நீ தான் எவ்வாறு எண்ணுகிறாய்?' என்றார்.

யக்ஷன், 'தவமானது எந்த லக்ஷணமுள்ளதென்று சொல்லப் படுகிறது? எது தமமென்று சொல்லப்படுகிறது?, எது சிறந்த பொறுமையென்று சொல்லப்படுகிறது? எது வெட்கமென்று சொல்லப்படுகிறது?' என்று வினவ, யுதிஷ்டிரர், [4] 'தன்னுடைய தர்மத்தில் நிலைபெற்றிருத்தல் தவமென்று சொல்லப்படுகிறது. மனத்தை அடக்குதல் தமமென்று சொல்லப்படும். (லோகம் துக்கமுதலிய) துவந்த்வங்களைப் பொறுத்துக்கொண்டிருத்தல் சிறந்த "பொறுமையென்று சொல்லப்படும். அகார்யத்தினின்று திரும்புதல் [5] லஜ்ஜையென்று சொல்லப்படும்' என்றனர்.

யக்ஷன், 'அரசனே! எது ஞானமென்று சொல்லப்படு கிறது? எது சமமென்று சொல்லப்படுகிறது? எது சிறந்த

முதலிய விஷயங்களும்; அன்னம் = லயம் அடையும்படி செய்யத்தக்கன. உபாதிகள் பொய்யானமையால் ரஜ்ஜுஸர்ப்பம்போல லயமடையச் செயவது எளிதிற் செய்யத்தக்கது என்பது கருத்து.

[1] 'ப்ராம்மணம்' என்பது மூலம். 'ப்ரார்த்தநா' என்பது வேறு பாடம்; 'யாசித்தல்' என்பது அதன்பொருள். ப்ரார்த்தனை = ஆசை. அது விஷம்; எனென்றால், அது ஜனனமரணத்துக்குக் காரணம். ஆகை யால், ஆசையைவிட்டுக் குருவின் உபதேசத்தினால் ப்ரபஞ்சத்தை லயப் படுத்தி ஜீவஸ்வரூபத்துக்கும் பரமாத்மஸ்வரூபத்துக்கும் அபேதத்தை ஸாக்ஷாத்காரம் செய்யவேண்டும் என்பது கருத்து.

[2] ப்ராம்மணன் = ப்ரம்மத்தை அறிந்தவன். ஸ்ராத்தம் = ஸ்ரத்தை யோடு கொடுப்பது; யோக்யர்கள் கிடைக்கும்போதே தர்மத்தைச் செய்ய வேண்டும்; ஞானத்தைக் கற்கவேண்டும் என்பது.

[3] இதுவரை ஸாதனங்களுடன் பிரம்மவித்தை சொல்லி முடிக்கப் பட்டது.

'யக்ஷன் வேறான ஞானஸாதனங்களையும் அவற்றின் லக்ஷணங்களையும் கேட்க விரும்பித் தம்பிமார்களை எழுப்புதல் முதலிய பூர்ணவரனைக் கொடுக்கவில்லை' என்று யுதிஷ்டிரர் ஆலோசித்து, அவனைக் கேட்கிறார்.

'இவ்வளவு விடைகளால் உன் கேள்விகளுக்கு ஸமாதானம் உண் டாயிற்று' என்பது கருத்து.

[4] ஞானத்துக்கு ஸாதனமான தவமுதலிய எட்டுக் குணங்களுக்குப் இரண்டு ஸ்லோகங்களால் லக்ஷணங்கூறுகிறார்.

[5] அகார்யத்தினின்று திரும்புதற்குக் காரணமான குணம்:

கருணை என்று சொல்லப்படுகிறது? எது ருஜுஸ்வபாவமென்று சொல்லப்படுகிறது' என்று வினவ, யுதிஷ்டிரர், 'உண்மைப் பொருளை நன்கு அறிதல் ஞானம். சித்தத்தில் மிக்க சாந்தியுடைமை சமம். எல்லாருக்கும் ஸுகத்தை விரும்புதல் தயை. எங்கும் ஸமமான எண்ணம் ஆர்ஜவம்' என்று கூறினர்.

யக்ஷன், 'மனிதர்களால் வெல்லமுடியாத பகைவன் யார்? எது முடிவில்லாத வியாதி? எப்படியிருப்பவன் ஸாது என்று எண்ணப்படுகிறான்? எப்படியிருப்பவன் அஸாது என்று எண்ணப்படுகிறான்?' என்று வினவ, யுதிஷ்டிரர், [1]'கோபமானது எவ்விதத்தாலும் ஜயிக்கமுடியாத பகைவன். பேராசையானது முடிவில்லாத வியாதி. எல்லா ப்ராணிகளிடமும் ஹிதமாயிருப்பவன் ஸாது. தயையற்றவன் அஸாதுவாக எண்ணப்படுகிறான்' என்று விடையளித்தார்.

யக்ஷன், 'வேந்தனே! எது மோஹமென்று சொல்லப்படுகிறது? எது மானமென்று சொல்லப்படுகிறது? எது ஆலஸ்யமென்று அறியத்தக்கது? எது சோகமென்று சொல்லப்படுகிறது?' என்று வினவ, யுதிஷ்டிரர், [2]'தர்மத்தை அறியாமை மோஹமென்று சொல்லப்படுகிறது. நான் என்னும் அகங்காரம் மானமென்று சொல்லப்படுகிறது. தர்மத்தைச் செய்யாமை ஆலஸ்யமென்று அறியத்தக்கது. அஜ்ஞானமானது சோகமென்று கூறப்படுகிறது' என்று சொன்னார்.

யக்ஷன், 'ரிஷிகளால் எது உறுதியான நிலைமையென்று சொல்லப்படுகிறது? எது தைர்யமென்று கூறப்படுகிறது? எது சிறந்த ஸ்நானமாகக் கூறப்படுகிறது? இவ்வுலகில் எது தானமென்று சொல்லப்படுகிறது?' என்று வினவ, யுதிஷ்டிரர், 'ஸ்வதர்மத்தில் நிலைத்திருத்தல் உறுதியான நிலைமையென்று கூறப்படுகிறது. பொறிகளை அடக்குதல் தைர்யமென்று கூறப்படுகிறது. மனத்திலுள்ள அழுக்கைப் போக்குவது ஸ்நானமென்று சொல்லப்படுகிறது. ப்ராணிகளை ரக்ஷிப்பது தானமென்று சொல்லப்படுகிறது' என்று கூறினர்.

---

[1] க்ரோதம் லோபம் நிர்த்தயை இவைகளை விட்டு ஸர்வபூதங்களுக்கும் ஹிதனையிருக்கவேண்டும் என்பது கருத்து.

[2] மூன்று ஸ்லோகங்களால் மோஹமுதலியவற்றிற்கு லக்ஷணங்களைக் கூறுகிறார்.

யக்ஷன், 'எந்த மனிதன் பண்டிதனுக அறியத்தக்கவன்? எவன் நாஸ்திகனென்று சொல்லப்படுகிறான்? எவன் மூர்க்கன்? எது காமம் (=இச்சை) ஆகும்? எதுமத்ஸரமென்று எண்ணப்படுகிறது?' என்று வினவ, யுதிஷ்டிரர், 'தர்மங்களை அறிந்தவன் பண்டிதனென்று அறியத்தக்கவன். [1] நாஸ்திகன் மூர்க்கனென்று சொல்லப்படுகிறான். பிறப்பிறப்புக்குக் காரணமானது காமமென்று கூறப்படுகிறது. மனக்கொதிப்பானது மத்ஸரமென்று எண்ணப்பட்டிருக்கிறது' என்று கூறினர்.

யக்ஷன், 'எது அஹங்காரமென்று சொல்லப்படுகிறது? எது டம்பமென்று சொல்லப்படுகிறது? எது அப்படிப்பட்ட சிறந்த [2] தெய்வமாகச் சொல்லப்படுகிறது? எது அப்படிப்பட்ட [3] பிசுனஸ்வபாவமென்று கூறப்படுகிறது?' என்று வினவ, யுதிஷ்டிரர், 'பெரிதான அஜ்ஞானமானது அஹங்காரமென்று கூறப்படுகிறது. [4] தர்மத்தைத் தான் அனுஷ்டிப்பதாக எல்லாருக்கும் தெரிவித்தல் டம்பமென்று சொல்லப்படுகிறது. தான பலமானது தெய்வமென்று சொல்லப்படுகிறது. அபலனைத் தூஷிப்பது பிசுனஸ்வபாவமாகும்' [5] என்று சொல்லினர்.

யக்ஷன், 'தர்மமும் அர்த்தமும காமமும் ஒன்றோடொன்று விரோதமுள்ளனவை. எப்பொழுதும் விரோதமுள்ள இவைகளுக்கு ஓரிடத்தில் சேர்க்கை எவ்வண்ணமுண்டாகும்?' என்று வினவ, யுதிஷ்டிரர், '[6] எப்பொழுது [7] தர்மமும் மனைவியும்

[1] பரலோகமில்லையென்று சொல்லுபவன் நாஸ்திகன்; அவனே மூர்க்கனுதலால், ஐந்துவிளக்களுக்கு நான்கு விடைகளை கூறப்பட்டன.

[2] அதிருஷ்டம்.

[3] பிசுனன் = கோள் சொல்லுகிறவன், புறம்கூறுபவன்.

[4] 'தர்மோத்யதஜனாச்ரய:' என்பது மூலம். தர்மஞ் செய்தலைக் கொடிகட்டித்தெரிவிப்பது.

[5] அகங்காரம் டம்பம் பிசுனத்தன்மை ஆகிய இவற்றைவிட்டு, தெய்வத்துக்கு அடங்கிக் கிடைத்ததைக்கொண்டு திருப்தியடைந்து டம்பமில்லாமல், பயனில் இச்சையில்லாத தர்மத்தை அனுஷ்டிக்க வேண்டுமென்பது.

[6] 'அர்த்தமும் காமமும் தர்மத்துக்கு விரோதமாகையால் தர்மம் அனுஷ்டிக்க முடியாதது அன்றோ' என்று ஆசங்கித்துக் கூறுகிறார்.

[7] தர்மம் = அக்னிஹோத்ரம் முதலியன. அந்தத் தர்மம் ஸந்யாஸம் போல மனைவியோடு சேர்ந்திருப்பதற்கு விரோதமாவதில்லை. மனைவி

ஒருவருக்கொருவர் வசப்பட்டு நடப்பார்களோ அப்பொழுது கர்மார்த்தகாமங்கள் மூன்றுக்கும் சேர்க்கை உண்டாகிறது' என்றனர்.

யக்ஷன், 'பரதர்களுள் சிறந்தவனே! அழிவில்லாத நரகம் எந்த மனிதனால் அடையப்படுகிறது? இந்த விஷயவினவுகின்ற எனக்கு விரைவில் விடையளிப்பாயாக' என்று வினவ, யுதிஷ்டிரர், [1]'பொருள் சிறிதுமில்லாதவனென யாசகப்ராம்மணனைத் தானே கூப்பிட்டு, பிறகு இல்லையென்று எந்தமனிதன் சொல்லுகிறானே அவன் [2]அழிவில்லாத நரகத்தை அடைகிறான். எவன் வேதங்களிலும் தர்மசாஸ்திரங்களிலும் பிராம்மணர்களிடமும் தேவர்களிடமும் பித்ருகாரியங்களிலும் பொய்யைச் சொல்வானே அவன் அழிவில்லாத நரகத்தை அடைவான். தனமிருக்கும்போழுதே போகசாதனங்களில் பிறருக்குக் கொடாமலும் தானும் அனுபவியாமலும் (யாசிப்பவனுக்குக் கொடுப்பதாகச் சொல்லி,) பிறகு, இல்லை என்று எவன் சொல்வானே அவன் அழிவில்லாத நரகத்தை அடைவான்' [3]என்று விடைகூறினர்.

யக்ஷன், 'அரசனே! பிராம்மண்யமானது குலத்திலேயா, ஒழுக்கத்திலேயா, வேதமோதுவதனாலேயா, சாஸ்திரஜ்ஞானத்திலேயா எதனாலுண்டாகிறது? இதனை நன்றாக நிச்சயித்துச் சொல்வாயாக' என்று வினவ, யுதிஷ்டிரர், 'யக்ஷனே! ஐயா! கேள். பிராம்மண்யத்தில் குலமும் [4]வேதமோதலும் தானுதிகளில் தடைசெய்யாமல் தர்மவிரோதியாகாமலிருப்பானாலல் தர்மம் அர்த்தங்களை உண்டாக்கும். மனவி விரும்பியதைச் செய்வாள். அதனால், தர்மார்த்த காமங்கள் சேர்க்கைபெறும். ஆகையால், க்ருஹஸ்தனுக்கும் தர்மத்தின்வழியாக மோக்ஷத்தில் அதிகாரமுண்டென்பது சொல்லப்பட்டது.

[1] அழிவில்லாத நரகத்துக்குக் காரணமான அஸாரத்தன்மையைக் கூறுகிறார்.

[2] அழிவில்லாத நரகமாவது நித்யஸம்ஸாரியாயிருத்தல்; அதாவது ஜனனமரணங்களில் இடைவிடாமல் உழல்வது.

[3] இங்கே விஷயத்தின் இழிவு தோன்ற ஒரு விஷயத்துக்கு மூன்று வகையாக விடைகூறப்பட்டது.

[4] ஸ்வாத்யாயம் = வேதமோதுதல்; வேதத்தில் மூலபாடத்தை ஓதுவது. ச்ரவணம் = சாஸ்திரப்பயிற்சி; வேதத்தின் பொருளை அறிதல்; வேதத்தை அதன் அர்த்தத்தோடு தெரிந்துகொள்ளுதல் என்பது கருத்து.

சாஸ்திரப்பயிற்சியும் காரணமாகா; ஒழுக்கமே காரணம். ஸம்சயமில்லை. ஆதலால், பிராம்மணனுல் ஒழுக்கமானது முயற்சியினுல் பெரிதும் பாதுகாக்கத்தக்கது. ஒழுக்கம் குன்றுத (பிராம்மணன்) குறைவுடையான். ஒழுக்கத்தினுல் கெட்டுப்போனவன் கெட்டுப் போனவனே. படிக்கிறவர்கள், படிப்பிக்கிறவர்கள், இன்னும் மற்றுமுள்ள சாஸ்திரசிந்தைசெய்பவர்கள் ஆகிய எல்லாரும், [1]வ்யஸனமுள்ளவர்களாக இருப்பார்களையாகில், மூடர்களை. எவன் [2]கிரியைகளைச் செய்கிறானே அவன்தான் பண்டிதன். நான்கு வேதங்களையும் அத்தியயனம் செய்தவனுக இருந்தாலும் கெட்ட நடையுள்ளவன் சூத்ரனைக்காட்டிலும் கீழ்ப்பட்டவனுகிறன். அக்னிஹோத்ரத்தில் பற்றுதலுள்ளவனுகவும் இந்திரியங்களை அடக்கினவனுகவுமிருப்பவன் பிராம்மணனுக எண்ணப்படுகிறன்' என்று கூறினர்.

யக்ஷன், 'இன்சொற்சொல்லுபவன் எதை அடைகிறன்? ஆலோசித்துக் கார்யத்தைச் செய்பவன் எதை அடைகிறன்? அநேகர்களை மித்திரர்களாகச் செய்துகொள்பவன் எதை அடைகிறன்? தர்மத்தில் பற்றுதலுள்ளவன் எதை அடைகிறன்? சொல்வாயாக' என்று வினவ, யுதிஷ்டிரர், 'இன்சொற் சொல்லுபவன் (எல்லார்க்கும்) அன்பனுகிறன். ஆலோசித்துக் கார்யத்தைச் செய்பவன் மிக்க ஜயத்தை அடைகிறன். அநேகர்களை மித்திரர்களாகச் செய்துகொள்பவன் ஸுகமாக வஸிக்கிறன். தர்மத்தில் பற்றுதலுள்ளவன் நல்ல கதியை அடைகிறன்' என்றார்.

யக்ஷன், 'எவன் ஸந்தோஷத்தை அடைகிறன்? எது ஆச்சர்யம்? எது வழி? எது தினமும் நடக்கிற நிகழ்ச்சி? இந்த நான்கு வினுக்களுக்கும் விடைகொடுப்பாயாக. மாண்டவர்களான உன்னுடைய பிராதாக்கள் உயிரோடு எழுந்திருப்பார்கள்' என்று வினவ, யுதிஷ்டிரர், [3]'ஜலத்தில் ஸஞ்சரிக்கிற யக்ஷனே! எந்த மனிதன் கடனில்லாதவனுகவும் தேசாந்தரப்ரயாணமில்லாதவனுகவும் பகலில் [4]ஐந்தாவதுகாலத்திலோ ஆறுவதுகாலத்திலோ

---

[1] அதுவே பரமப்ரயோஜனமென அதிலேயே பற்றி நிற்றல்.

[2] கற்றபடி நடப்பவன்.

[3] கர்மா, உபாஸ்தி, ஞானம் இந்த மூன்றுக்கும் நெருங்கியஸாதனம் வைராக்யமென்பதை நான்கு ஸ்லோகங்களால் கூறுகிறார்.

[4] ஒரு பகலை எட்டாகப் பகுத்து அதில் ஐந்தாவது காலத்திலோ ஆறுவது காலத்திலோ என்பது.

கிரையையாவது தன் வீட்டில் சணமத்துப் புஜிப்பதே அவன் தான் ஸந்தோஷத்தை அடைகிறான். இவ்வுலகில் [1] நாள்தோறும் பிராணிகள் யமனுடைய வாஸஸ்தானத்தைக்குறித்துச் சென்று கொண்டே இருக்கின்றன. மிகுதி உள்ளவைகள் (தாங்கள்) ஸ்திரமாக இருத்தலே விரும்புகின்றன. இதைக்காட்டிலும் அதிகமான ஆச்சரியம் வேறு எது இருக்கிறது? யுக்தியானது நிர்ணயமில்லாதது. [2] வேதங்களோ ஒன்றோடொன்று மாறுபட்டவை. எந்த ரிஷியினுடைய மதத்தை ப்ரமாணமாகக் கொள்வோமோ அந்த ரிஷி ஒருவரல்லர். தர்மத்தின் உண்மையானது மறைவான இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. எந்த வழியினால் [3] பெரியோர்கள் சென்றுகொண்டிருக்கிறார்களோ அதுதான் நாம் செல்லவேண்டிய வழி. [4] பூமியானது (சமையல் செய்யக்கூடிய) பெரிய பாண்டம். ஆகாயம் (அதற்குத் தகுந்த) மூடி. காலமானது, ஸ்தாவரஜங்கமங்களான எல்லா வஸ்துக்களையும் (அதில் போட்டு) இரவுபகலாகிற விறகை வைத்து ஸூர்யனாகிற அக்நியை மூட்டி மாதங்களும் ருதுக்களுமாகிற கரண்டிகளால் நன்றாகக் கிளறிப் பக்குவம் பண்ணுகிறதென்பதுதான், தினமும் நடந்து வருகிற நிகழ்ச்சி [5]' என்று கூறினர்.

யக்ஷன், 'சத்துருக்களைத் தவிக்கச்செய்பவனே! உன்னுடைய விருப்பம் [6] உள்ளபடி விரித்து விடையளிக்கப்

---

[1] ஒவ்வொருநாளும் தேகம் அழிவுள்ளதென்பதை நன்றாகநினைத்து, கிடைத்திருக்கிற ஸுகானுபவங்களையும் விட்டு மோக்ஷத்தை அடைவதற்கு விரைந்து முயலவேண்டுமென்பது.

[2] வேதங்கள் மாறுபடுதலாவது ஒன்றுக்கொன்று விரோதமான பொருளைச் சொல்லுவன என்பது. அவற்றை விளங்கவுரைக்கும் ரிஷிகளும் அப்படிப்பட்டவர்களே. அளவுபடாத தர்மசாஸ்திரம் முதலிய வித்தைகளில் சிரமப்படாமல் பஹுஜ்ஞனஸம்மதமான மார்க்கத்தையே அனுஸரிக்கவேண்டும் என்பது பொருள்.

[3] 'மஹாஜந:' என்பது மூலம். பாகவதம் 6-ம் ஸ்கந்தம், 3-ம் அத்யாயம், 25-ம் ஸ்லோகத்தின் வ்யாக்யானத்தில், 'மஹாஜந:' என்னும் பதத்துக்கு, 'மநு முதலானவர்கள்' என்று ஸ்ரீதரர் பொருள்செய்திருத்தல் காண்க.

[4] 'அஸ்மிந் மஹாமோஹமயே கடாஹே' என்பது வேறுபாடம்.

[5] மநுவி முதலியவர்கள் அநுபவிக்கப்பட்டாலும் நிலையுள்ளவர்களல்லர் என்று நினைத்து எல்லா விஷயங்களிலிருந்தும் வைராக்யத்தையே அடையவேண்டுமென்பது.

[6] 'யதாத்யயம்' என்பது வேறுபாடம்.

பட்டன. [1] எவன் புருஷன்? எவன் எல்லாப்பொருளுமுள்ளவன்? இப்பொழுது விரித்துக் கூறுவாயாக' என்று வினவினன். யுதிஷ்டிரர், [2] 'நல்வினையினால் (உண்டாகிற) புகழ்ச்சொல் பூமியிலும் ஸ்வர்க்கத்திலும் [3] பரவுகிறது. அந்தச் சொல்லானது எதுவரையில் இருக்கிறதோ அதுவரையில் ஒருவன் புருஷனென்று சொல்லப்படுகிறான். எந்த மனிதனுக்கு விருப்பு வெறுப்புக்கள் ஸுகதுக்கங்கள் சென்றது வருவது ஆகிய இரட்டைகள் ஸமமாக இருக்கின்றனவோ [4] அவனும் புருஷனென்று சொல்லப்படுகிறான். [5] எந்த மனிதன் எல்லா வஸ்துக்களிடத்திலும் ஸமபுத்தியுள்ளவனும் ஆசையற்றவனும் சாந்தமான மனமுள்ளவனும் மிக்க தெளிவுள்ளவனும் எப்பொழுதும் பிரம்மத்தைத் தியானிப்பவனுமாயிருக்கிறானோ அந்த மனிதனை எல்லாப்பொருளுமுள்ளவனென்று கூறப்படுகிறான்' என்றார்.

யக்ஷன், 'அரசனே! புருஷனும் எல்லாப்பொருளுமுள்ளவனும் உன்னால் விரித்துக் கூறப்பட்டனர். ஆகையால், நீ ப்ராதாக்களுள் [6] எவனொருவனை விரும்புகிறாயோ அவன் பிழைக்கட்டும்', என்றான். யுதிஷ்டிரர், 'எவன் கறுத்த நிறமுள்ளவனும் சிவந்த கண்களுள்ளவனும் உயர்ந்து வளர்ந்த பெரிய ஆச்சாமரம்

---

[1] 'எவன் ஜீவித்திருப்பவன்? எவன் எல்லா விருப்பங்களையும் அடைந்தவன்?' என்பது.

[2] பயனில் பற்றில்லாமலோ பற்றுடனே செய்யும் புண்யகர்மாவினால் உண்டாகும் புகழ் ஸ்வர்க்கத்திலும் பூமியிலும் பரவுகிறது. அந்தக் கீர்த்தியுள்ளவரையில் அவன் ஜீவிக்கிறான் என்பது பொருள்.

பிறகு, பூர்வவாஸனைக்கு ஒத்த கர்மாக்களைச் செய்கிறான். அவைகளில் நிஷ்காமனாக இருந்தால் படியில் ஏறுகிற முறையாக மோக்ஷத்தை அடைகிறான். ஸகாமனாக இருந்தால் இறங்குகிறமுறையாக வாஸனாக்ஷயத்தினால் மிகவும் மிகவும் கட்டப்படுகிறான் என்பது ஆராயத்தக்கது.

[3] 'ஸ்ப்ருசதி' என்பது மூலம். 'தொடுகிறது' என்பது சொற்பொருள்.

[4] ப்ரம்மஜ்ஞானியே எல்லாப்பொருளும் உள்ளவன். ஸமிவை ஸவ-ருயநீ நரஃ' என்பது வேறுபாடம்.

[5] இந்த ஸ்லோகம் வியாக்யான பாடத்திலில்லை.

[6] யக்ஷன் புத்திரருடைய ஞானத்தைப் பரீக்ஷித்துத் தர்மத்தின் நிலைமையைப் பரீக்ஷிப்பதற்காக, 'எவன் ஒருவன் பிழைக்கட்டும்' என்று கேட்கிறான்.

போன்றவனும் அகன்ற மார்புள்ளவனும் நீண்ட கைகளையுடைய வனுமாக இருக்கிறானே அந்த நகுலன் உயிரோடு எழுந்திருக்க வேண்டும்' என்று கூறினர்.

யக்ஷன், 'இந்தப் பீமஸேனன் உனக்கு அன்பன். இந்த அர் ஜுனன் உங்களுக்குக் கதி. வேந்தனே! நீ யாது காரணத்தால் மாற்றாந்தாயின் மகனை நகுலன் பிழைப்பதை விரும்புகிறாய்? எவனுக்குப் பதினாயிரம்யானைகளுக்கு ஸமமான பலமிருக்கிறதோ அப்படிப்பட்ட பீமஸேனனைவிட்டு யாதுகாரணத்தால் நகு லன் பிழைப்பதை விரும்புகிறாய்? அப்படியே, மனிதர்கள் இந்தப்பீமஸேனனை உனக்கு அன்பனைக் கூறுகின்றனர். அப்படி இருக்க, எந்த [1] ஸாமர்த்தியம் காரணமாக மாற்றாந்தாயின் மகன் பிழைப்பதை விரும்புகிறாய்? எவனுடைய தோள்வலி மையை எல்லாப் பாண்டவர்களும் அடுத்திருக்கிறார்களோ அந்த அர்ஜுனனைவிட்டு என் நகுலன் பிழைப்பதை விரும்புகிறாய்?' என்று வினவினன்.

யுதிஷ்டிரர், 'தர்மமே, கெடுக்கப்பட்டால் (மனிதனைக்) கொல்லுகிறது. தர்மமே, பாதுகாக்கப்பட்டால் (மனிதனைப்) பாதுகாக்கிறது. ஆகையால், தர்மத்தை நான் விடவில்லை. தர்மம் கெடுக்கப்பட்டு எங்களைக் கொல்லவேண்டாம். [2] வேற்றுமையில் லாமை ஸத்யத்தைக்காட்டிலும் சிறந்த தர்மமென்று என்னால் எண்ணப்பட்டிருக்கிறது. ஆகையால், வேற்றுமையில்லாமையை நான் செய்யவிரும்புகிறேன். யக்ஷ! நகுலன் பிழைக்கட்டும். மனிதர்கள் என்னை எப்பொழுதும் தர்மசீலனென அரசனென்று நினைக்கிறார்கள். ஸ்வதர்மத்திலிருந்து நான் சலிக்கமாட்டேன். யக்ஷ! நகுலன் பிழைக்கட்டும். என்பிதாவுக்குக் குந்தியும் மாத் ரியுமாகிய இருவரும் மனைவியர். இருவர்களும் புத்திரனுள்ளவர் களாக இருக்கவேண்டும் என்று என்னுடைய மதியானது நிச்சயிக் கிறது. எப்படி குந்தியோ அப்படியே மாத்ரி. அவ்விருவருள் எனக்கு வேற்றுமை இல்லை. இரண்டு தாயார்களுக்கும் ஸமமா யிருத்தலை விரும்புகிறேன். யக்ஷ! நகுலன் ஜீவிக்கட்டும்' என்று கூறினர்.

1 'கூநாஹாவம்' என்பது மூலம்; பெருமை அல்லது சிறப்பு; 'நகுலனிடமுள்ள ஸாமர்த்தியம்' என்பது பழையவுரை.

2 'ஆந்ருஸ்ம்ஸ்யம்' என்பது மூலம்; 'அவைஷம்யம்' என்பது பழையவுரை.

யக்ஷன், 'பரதஸ்ரேஷ்டனே! உன்னுல் அர்த்தத்தையும் காமத்தையும்காட்டிலும் பக்ஷபாதமில்லாமலிருத்தல் சிறந்ததென்று எண்ணப்பட்டதாதலால், உன்னுடைய ஸ்ல்லாத் தம்பிமார்களுலும் ஜீவிக்கட்டும்' என்றுன் [1].

மூன்றூற்றுப்பதினேந்தாவது அத்யாயம்.

ஆரண்யபர்வம். (தொடர்ச்சி.)

(யக்ஷன் யுதிஷ்டிரருக்குத் தான் தர்மதேவனென்பதைத் தெரிவித்து அவரைச் சோதிப்பதற்காக அரணிமுதலியவற்றைத் தானே கொணர்ந்ததாகக் கூறி அவருக்கு வரன்களைக் கொடுத்தது.)

பிறகு, அந்தப்பாண்டவர்கள் யக்ஷனுடைய வசனத்திலுல் எழுந்திருந்தார்கள். எல்லாருக்கும் பசியும் தாகமும் அந்த க்ஷணத்தில் விலகிவிட்டன. யுதிஷ்டிரர், 'குளத்தில் ஒருகாலை வைத்துக்கொண்டு நிற்பவனும் சத்துருக்களால் ஜயிக்கப்படாத வனுமான உன்னை நான் கேட்கிறேன். நீ யார்? நீ தேவனே. நீ யக்ஷனுக எனக்குத் தோன்றவில்லை. நீ வஸுக்களுள் ஒருவனே? அல்லது, ருத்திரர்களுள் ஒருவனே? அல்லது, தேவர்களுள், மிகச்சிறந்த வஜ்ரபாணியான தேவராஜனே? லக்ஷம் சூரர்களை எதிர்த்துப்போர்புரிய வல்லமையுள்ளவர்களான இந்த என்னுடைய ப்ராதாக்கள் எல்லாரும் எவனுல் கீழே வீழ்த்தப்பட்டார்களோ அப்படிப்பட்ட யுத்தவீரனை நான் காணவில்லை. ஸுகமாகத் தூங்கி எழுந்தவர்களுடைய இந்திரியங்கள் தெளிவாயிருப்பதைப்போல இவர்களுடைய இந்திரியங்கள் தெளிவாயிருப்பதைக் காண்கிறேன். நீர் எங்களுடைய ஒப்பற்ற நண்பரோ? அல்லது, எங்களுடைய பிதாவோ?' என்று வினவினர்.

யக்ஷன், 'ஐயா! நான் உன்னுடைய தகப்பனை தர்மதேவன். மெதுவான பராக்கிரமமுள்ளவனே! பரதர்களுள் சிறந்தவனே!

---

[1] இப்படி தர்மதேவதை யுதிஷ்டிரருடைய ஞானத்தையும் அஜ்ஞானத்தையும் பரீக்ஷிப்பதற்காக நூற்றிருபத்துநான்கு கேள்விகள் கேட்டது. யுதிஷ்டிரர் அவற்றுக்கெல்லாம் தக்கபடி விடைகூறினர். அந்த யுதிஷ்டிரர் கூறிய விடைகளெல்லாம் வேதத்தையும் ஸ்மிருதிகளையும் ஆதாரமாகக் கொண்டவைகளாயிருத்தலால் அவருக்கு அவைகளிலுள்ள சிறந்த பாண்டித்யம் நன்கு விளங்கும்.

உன்னைப்பார்க்கக்கருதி இங்கேவந்தேன்னென்று என்னை அறிந்து கொள். புகழும் ஸத்யமும் பொறிகளின்டக்கமும் தூய்மையும் கபடமின்மையும் அகார்யத்தில் வெட்கமும் சபலமில்லாமையும் கொடையும் தவமும் பிரம்மசர்யமும் என்னுடைய சரீரங்கள். அஹிம்ஸையையும் ஸமத்வத்தையும் சாந்தியையும் தவத்தையும் சுத்தியையும் மத்ஸரமில்லாமையையும் • எனக்கு வாயில்களாக அறிந்துகொள். நீ எனக்கு ப்ரியனை புதல்வனல்லையோ? பாக்கிய விசேஷத்தால் ஆத்மாவையறிய ஸாதனமான சமம், தமம், ஓழிவு, பொறுமை, மனவமைதி இந்த ஐந்திலும் பற்றுதலுள்ளவ னாக இருக்கிறாய். முன்செய்த நல்வினையினால் [1] ஆறு ஊர்மிகளும் ஜயிக்கப்பட்டன. அவற்றுள், இளம்பிராயத்தில் வருகிற (பசி தாகம்) இரண்டும் நடுவயதில்சேர்கிற (சோகம்மோகம்) இரண்டும் பரலோகத்தை அடையச்செய்கின்ற (ஜராமரணம்) இரண்டும் ஒழிந்துவிட்டன. நான் தர்மராஜன். உனக்கு மங்களம். உன் ஸ்வபாவத்தை அறியக்கருதி இங்குவந்தேன். உன்னுடைய ஸமத்வபுத்தியினால் ஸந்தோஷமடைகிறேன். குற்றமற்றவனே! உனக்கு வரங்களைக் கொடுப்பேன். ராஜஸ்ரேஷ்டனே! குற்றமற்ற வனே! நான் உனக்கு வரங்களைக் கொடுப்பவனாக இருக்கலால் வரங்களைக் கேட்டுக்கொள். எந்த மனிதர்கள் என்னுடைய பக் தர்களோ அவர்களுக்குக் கெட்ட கதி இல்லை' என்றான்.

யுதிஷ்டிரர், 'பேசுகிறவர்களுள் சிறந்தவரே! எவருடைய அரணியானது மானால் கவரப்பட்டதோ அவருடைய அக்னிகள் லோபமடையாமலிருக்கவேண்டும். இது என்னுடைய முதல் வர மாகுக?' என்றார். தர்மதேவன், 'குந்தீநந்தன! தோஷமில்லா தவனே! அந்த ப்ராம்மணனுடைய இந்த அரணீஸம்புடமானது, உன்னுடைய ஸ்வபாவத்தை அறியும்விருப்பத்தால் மிருகவேஷம் கொண்ட என்னால் கவரப்பட்டது' என்றான். பகவானான தர்ம தேவன், 'கொடுப்பேன்' என்றே உத்தரமளித்து, 'தேவனுக்கொப் பானவனே! நீ வேறுவரத்தை வரிப்பாயாக. உனக்கு மங்களம்' என்றும் சொன்னான். யுதிஷ்டிரர், 'பன்னிரண்டு வருஷங்கள் காட் டில் கழிந்தன. பதின்மூன்றுவது வருஷம் வந்துவிட்டது. அந்தப் பதின்மூன்றுவது வருஷத்தில் வஸிக்கின்ற எங்களை மனிதர்கள் ஒருகாலும் அறியாமலிருக்கவேண்டும்' என்று வேண்டிக்கொண் டார். பகவானான தர்மதேவன், 'கொடுப்பேன்' என்றே உத்தர

---

1 'ஷட்பதி' என்பது மூலம்; 'ஷடூர்மிகள்' என்பது பழையவுரை.

மனித்தான்; மீண்டும்[1] உண்மையான பராக்ரமமுள்ள யுதிஷ்டிரரைத் தேறுதலடையச்செய்தான். 'பாரத! நீங்களனைவரும் உங்களுடைய ரூபத்தோடுகூடவே இந்தப்பூமியில் ஸஞ்சரித்தாலும் உங்களை மூவுலகத்தவருள்ளும் ஒருவனுவது அறியப்போகிறதில்லை. குருவம்சத்தைத் தாங்குபவர்களே! நீங்கள் என்னுடைய அனுக்ரகத்தினால் இந்தப் பதின்மூன்றுவதுவருஷம் முழுவதும் விராடநகரத்தில் மறைந்தும் ஒருவராலும் அறியப்படாமலும் ஸஞ்சரிப்பீர்கள். உங்களுள் எவன்எவனுக்கு மனத்தினால் எவ்விதஎவ்வித உருவம்எண்ணப்பட்டிருக்கிறதோ அவ்வித அவ்வித உருவத்தை நீங்களனைவரும் இஷ்டப்படி தரிப்பீர்கள். உன்னுடைய ஸ்வபாவத்தை அறியவேண்டுமென்ற விருப்பத்தால் மிருகவேஷம்பூண்ட என்னால் அபகரிக்கப்பட்ட அரணியுடன் கூடின[2] இதனைப்பிராமணனுக்குக் கொடுங்கள்.' அன்பனே! வேறு வரத்தை வரிப்பாயாக. உனக்கு இஷ்டமான வரத்தை நான் கொடுக்கக்கடவேன். புருஷஶ்ரேஷ்டனே! அப்படி வரன்களைக்கொடுக்கின்ற நான் உன்விஷயத்தில் (போதுமென்ற) திருப்தியை அடையவில்லை. புத்ரா! ஒப்பற்றதும் பெரிதுமான மூன்றுவது வரத்தைக் கேள். வேந்தனே! நீயும் விதுரனும் என்னுடைய அம்சத்தினால் உண்டானவர்களல்லீரோ?' என்று சொன்னான்.

யுதிஷ்டிரர், 'சாஶ்வதமானவரும் தேவர்களுக்கெல்லாம் தேவருமான தேவரீர் என்னால் நேரில் பார்க்கப்பட்டீர். தந்தையே! நீர் ஸந்தோஷமுள்ளவராக எந்தவரத்தைக் கொடுக்கிறீரோ அந்தவரத்தை நான் பெற்றுக்கொள்வேன். பிரபுவே! நான் எப்பொழுதும் லோபத்தையும் மோகத்தையும் கோபத்தையும் ஜயிக்கக்கடவேன். தானத்திலும் தவத்திலும் ஸத்யத்திலும் என் மனமானது எப்பொழுதும் பற்றுதலுள்ளதாயிருக்கவேண்டும்' என்று வேண்டினர். தர்மதேவன், 'பாண்டவா! இயற்கையிலேயே இந்தக் குணங்களுள்ளவனுயிருக்கிறாய். நீ தர்மஸ்வரூபியே. இன்னும் நீ சொன்னவண்ணம் உனக்கு எல்லாம் உண்டாகும்' என்று சொன்னான்.

உலகங்களைப் பாதுகாப்பவனான தர்மபகவான் இவ்வாறு சொல்லி மறைந்துவிட்டான். கம்பீர ஸ்வபாவமுள்ளவர்களும் ஸுகமாக உறங்கினவர்களும் வீரர்களுமான பாண்டவர்களனை

[1] ஸத்யத்தையே பராக்ரமமாகவுடையவீர் எனினுமாம்.

[2] வேறு பாடம்.

வருமே ஒன்று சேர்ந்து ஆச்ரமத்தையடைந்து களைதீர்ந்து தவசியான அந்த ப்ராம்மணனுக்கு அரணீஸம்புடத்தைக் கொடுத்தார்கள்.

(பாண்டவர்கள்) எழுந்ததும் பிதாவும் புத்ரரும் சேர்ந்ததும் புகழைப் பெருக்குவதும் பரிதுமான இந்தக் கதையைப் படிக்கிறவன், ஜிதேந்திரியனும் தன்வசமுள்ளவனும் புத்திரர்களும் பௌத்ரர்களுமுள்ளவனும் நூறு வருஷகாலம் ஆயுளைப்பெற்றவனும் ஆவான். இந்த நல்ல கதையை அறிகின்ற மனிதர்களுடைய மனமானது, எப்பொழுதும் அதர்மத்திலும் மித்ரபேதத்திலும் பிறர்பொருளைக் கவர்வதிலும் பாதாங்களைத் தொடுவதிலும் அற்பத்தனத்திலும் பற்றுதலுள்ளதாகாது" என்று சொன்னர். [1]

ஆரணேய பர்வம் முற்றிற்று.

வன பர்வம் முற்றிற்று.

---

[1] இங்கே நீலகண்ட வியாக்யானத்துடன் கூடிய பம்பாய்ப் பதிப்பில், மேலே ஓர் அத்யாயம் உள்ளது. அதிலுள்ள ஸ்லோகங்கள், கிருஷ்ணசாரியர் பதிப்பு விராடபர்வம் முதல் அத்யாயத்தில், 10 வது ஸ்லோக முதல் சில பாடபேதங்களுடன் காணப்படுகின்றன. அந்த அத்யாயத்தின் கடைசியில் பின்வரும் பலஸ்ருதியும் இந்தப் பர்வத்திலடங்கிய முக்கிய கதைகளின் பெயர்களும் உள்ளன. அவை இருமாறு :—

பலஸ்ருதி.

இந்த ஆரண்யபர்வத்தை ஒருவன் கேட்டால் மஹா பாபங்களிலிருந்து விடுபடுகிறான்; பொருளில்லாதவன் பொருளை அடைகிறான்; புத்ரர்களுடனும் பௌத்ரர்களுடனும் கூடினவனாகிறான்; ஸ்த்ரீயானாலும் புருஷனானாலும் சுத்தமாகவும் மனவடக்கத்துடனுமிருந்து (இதனைக் கேட்டால்) எந்த எந்த இஷ்டத்தை வேண்டுகிறார்களோ அதை அதை அடைகிறார்கள்; ஸம்சயமில்லை. அரண்யபர்வத்தைக் கேட்டாலும் படித்தாலும் பிராம்மணர்களை ஆடைகளையும் பசுக்களையும் பொன்களையும், ரத்னங்களையும் கொடுத்து நன்கு பூஜித்துப் பாயஸ முதலியவற்றால் புஜிப்பிக்கவேண்டும். பிராம்மணர்கள் திருப்தியடைந்தால் பாண்டு குமாரர்களும் பிரம்மாவும் விஷ்ணுவும் ருத்ரரும் இந்திரனும் தேவக் கூட்டங்களும் பூதங்களும் முனிவர்களும் பெண்தெய்வங்களும் பித்ருக்களின் கூட்டங்களும் திருப்தியடைகிறார்கள். இதனைச் சொல்லுபவனை ஆண்டைகளாலும் அன்னங்களாலும் பொன்னாபரணங்களாலும் சக்திக்குத் தக்கபடி பூஜிக்கவேண்டும். படிப்பவனுக்கும் படிப்பிப்பவனுக்கும் கறக்க வெண்கலப்பாத்திரமுள்ளதும் வெள்ளிகட்டிய குளம்புள்ளதும் பொன்

கட்டிய கொம்புள்ளதும் மற்றும் ஆபரணங்களை அணிந்ததுமான கபிலப் பசுவை முக்யமாகக் கொடுக்கவேண்டும். பாண்டவர்களுடைய திருப்திக் காகப் பிராம்மணனுக்கு அன்னமளிக்கவேண்டும். ஆரண்யகமென்னும் கதையைக் கேட்கும் நரோத்தமன் விரும்பின எல்லாவற்றையும் அடைந்து பின்பு ஸ்வர்க்கலோகத்தையும் அடைவான். இப்படி ஆரண்யபர்வத்தைக் கேட்டலின் மஹிமையும் தானத்தின் முறையும் முற்றுப்பெற்றன.

இந்தப்பர்வத்திலடங்கியவை.

பாண்டவர்கள் வனத்துக்குப் புறப்பட்டது; நகரமாந்தர் உடன்சென்றது; நகரமாந்தர்பேச்சும் அவர்களைத் திருப்பியனுப்பியதும்; பிராம்மணர்கள் உடன்சென்றது; யுதிஷ்டிரர்கவலை; சௌனகர்பேச்சு; தௌம்யர் உபதேசித்த ஸ்தோத்ரம்; ஆதித்ய அஷ்டோத்தர சதநாமங்கள்; விதுரர் அஸ்தினாபுரத்தை விட்டுப்போனது; விதுரர் திரும்பிவந்தது; திருதராஷ்டிரன் வருந்தியது; திருதராஷ்டிரனிடம் வியாஸர் வரவு; ஸுரபிக்கும் இந்திரனுக்கும் ஸம்வாதம்; அர்ஜுனன் பேச்சு; பீமஸேனன் பேச்சு; யுதிஷ்டிரருக்கு வியாஸதர்சனம்; அர்ஜுனன் சென்றது; லோகபாலர்கள் வரவு; வித்யாலாபம்; சஸ்திரப்ராப்தி; கிராதயுத்தம்; இந்திரலோககமனம்; நளோபாக்யானம்; சூதாடும் வித்தையை அறிந்தது; நாரதர் வரவு; புலஸ்தியதீர்த்தயாத்ரை; லோம்சர் வரவு; அவருடன் தீர்த்தயாத்ரை சென்றது; அகஸ்தியர் பிரபாவம்; விந்தியமலையின்கதை; வாதாபியை அழித்தது; கடலை வற்றச் செய்தது; காலேயவதம்; ஸகரபுத்ரர் அழிவு; கங்காவதாரம்; ரிஸ்யஸ்ருங்கோபாக்யானம்; வ்ருஷ்ணிகளும் பாஞ்சாலர்களும் வந்தது; பலராமரின் பேச்சு; வாஸுதேவரின் பேச்சு; பர்சுராமர் சரிதம்; ஸுகன்யோபாக்யானம்; சேனகபோதோபாக்யானம்; அஷ்டாவக்ரோபாக்யானம்; கந்தமாதனப்ரவேசம்; உத்பாதம்; கடோத்கசன் தூக்கிச்சென்றது; ஜடாஸுரவதம்; ஆர்ஷ்டிஷேணாச்ரமத்தில் வாஸம்; அனுமானைப் பீமன் ஸந்தித்தது; ஸௌகந்திகமலர் கொணர்ந்தது; யக்ஷயுத்தம்; குபேரனை ஸந்தித்தது; நிவாதகவசவதம்; அர்ஜுனன் வரவு; சஸ்திரங்கண்டது; அஜகரத்தின் கதை; காம்யகத்துக்கு வருதல்; வாஸுதேவரும் ஸத்யபாமையும் வருதல்; நாரதர் வரவு; மார்க்கண்டேயர் வரவு; மார்க்கண்டேயஸமாஸ்யை நடைபெறுதல்; பிராம்மண மஹிமை; துந்துமாரோபாக்யானம்; ஸரஸ்வதிக்கும் தார்க்ஷ்யருக்கும் ஸம்வாதம்; மனுசரிதம்; மண்டூகோபாக்யானம்; பதிவ்ரதோபாக்யானம்; தர்மவ்யாதோபாக்யானம்; மதங்கைடபோபாக்யானம்; திரௌபதி ஸத்யபாமாஸம்வாதம்; கோஷயாத்ரையும் துரியோதனன் செயலும்; மார்க்கண்டவர்ணனை; இந்திரத்யும்நோபாக்யானம்; ஆங்கிரஸோபாக்யானமும் ஸ்கந்தஜனனமும்; துரியோதனன் வேள்வி; வியாஸதர்சனம்; மிருகஸ்வப்னதர்சனம்; வ்ரீஹித்ரௌணிகம்; த்ரௌபதிஹரணம்; துர்வாஸவுபாக்யானம்; ராமோபாக்யானம்; ஸாவித்ரி உபாக்யானம்; குண்டலாஹரணம்; அரணி ஸம்பந்தமான யக்ஷப்ரஸ்னங்கள். (ஆக அஉ.)